உபநிஷத் நாடகமாலா

(उपनिषन्नाटकमाला)

[ஈச-கேந-கட-பிரச்ந-முண்டக-மாண்டுக்ய-
தைத்திரீய-ஐதரேய மந்திரங்களின்
பொழிப்புரை கருத்துரைகளுடன்]

V. S. மணி, B.A., B.L.,
மிட்டாத[illegible]
[illegible]புரம், கடையநல்லூர்.

உ

உபநிஷத் நாடகமாலா

(उपनिषन्नाटकमाला)

[ஈச–கேந–கட–பிரச்ந–முண்டக–மாண்டுக்ய–
தைத்திரீய–ஐதரேய மந்திரங்களின்
பொழிப்புரை கருத்துரைகளுடன்]

ஸ்ரீ தக்ஷிணாம்நாய சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி
ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய
ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அவர்கள்
அருளிய ஸ்ரீமுகத்துடன்

அகில பாரத சங்கர ஸேவா ஸமிதி
பொதுக்காரியதர்சி
ஸ்ரீ K. V. சுப்பரத்னம் அய்யர்
(அட்வகெட், ஈரோடு)
அவர்களின் முகவுரையுடன் கூடியது

V. S. மணி, B. A., B. L,
மிட்டாதார்,
கிருஷ்ணாபுரம், கடையநல்லூர்.

1974

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம்.



ஸ்ரீ தக்ஷிணாம்னாய சிருங்ககிரி
ஸ்ரீ சாரதாபீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு
ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்

श्रीः
विद्याशंकर

Name of Hara encompass; World be Free from suffering
www.shaivam.org

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य पदवाक्यप्रमाण पारावारपारीण यमनियमासन प्राणायाम प्रत्याहारधारणाध्यान समाध्यष्टाङ्ग योगानुष्ठाननिष्ठ तपश्चक्रवर्त्यना-द्यविच्छिन्न श्रीशङ्कराचार्य गुरुपरंपराप्राप्त षड्दर्शनस्थापनाचार्य व्याख्यानसिंहा-सनाधीश्वर सकल निगमागमसारहृदय सांख्यत्रयप्रतिपादक वैदिकमार्ग प्रवर्तक सर्वतन्त्र स्वतन्त्रादिराजधानी विद्यानगर महाराजधानी कर्णाटकसिंहासन प्रतिष्ठापनाचार्य श्रीमद्राजाधिराजगुरु भूमण्डलाचार्य ऋष्यशृङ्गपुरवराधीश्वर तुङ्गभद्रातीरवासि श्रीमद्विद्याशङ्कर पादपद्माराधक श्रीजगद्गुरु

श्री चन्द्रशेखरभारती स्वामि गुरुकरकमलसञ्जात

श्रीजगद्गुरु

शृङ्गेरी श्रीमदभिनवविद्यातीर्थस्वामिभिः

अनुगृहीतं

श्रीमुखम्

உலகில் ஒவ்வொரு பிராணியும் சிறிதும் துக்கம் இல்லாத சாஸ்வதமான எல்லையற்ற ஆனந்தத்தை அடையவேண்டும் என்றே விரும்புகிறது. ஜன்மா, ஜரை, மரணம் முதலியவை நீங்கி பேரானந்தம் அடைவதற்கு ஜீவப்பிரம்ஹ ஐக்ய சாக்ஷாத்காரத்தைப் பெறவேண்டும் என்று கூறி வேதத்தின் கடைசி பாகமான உபநிஷத்துகள் இத்தகைய ஞானத்தின் ஸ்வரூபத்தையும் இதை அடைவதற்கு உபாயங்களையும் விரிவாக உபதேசிக்கிறது. 108 உபநிஷத்துகள் பிரசித்தமாயிருந்தாலும் அவற்றில் முக்கியமான பத்து உபநிஷத்துக்களுக்கு ஸ்ரீ சங்கரபகவத்பாதாச்சாரியார் பாஷ்யம் இயற்றியுள்ளார்கள். பாஷ்யங்களுடன் உபநிஷத்துக்களை வாசித்து அவற்றின் கருத்துகளை

அறிந்து அவற்றைத் திரும்பத்திரும்ப சிந்திப்பதால் குருவின் முகமான உபதேசம் அபரோக்ஷமாகும். ஸம்ஸ்கிருத பாஷையில் அதிக பரிசயமில்லாதவர்களும் உபநிஷத்துக்களின் கருத்துக்களை நன்கு அறிந்துகொள்ளுவதற்காக ஈசம் முதலான எட்டு உபநிஷத்துக்களை கிருஷ்ணபுரம் மிட்டாதார் ஸ்ரீ V. S. மணி அய்யர் தமிழில் நாடக உருவில் அமைத்துள்ளார். துரூஹமான பரதத்வத்தை அறிந்துகொள்வதில் ஏற்படும் கிலேசத்தை நீக்குவதற்காகவே உபநிஷத்துக்களில் பற்பல கதைகள் மூலம் தத்வம் விளக்கப்பட்டு உள்ளது. மேலும் ஸுலபமாக சிரமமில்லாமல் தெரிந்துகொள்வதற்காக நாடக உருவில் கதைகளைச் சேர்த்து இதை எழுதி இருக்கிறார். ஒரு ஆசார்யரையும் அவருக்கு உதவியாக ஆசிரியர் ஒருவரையும் பல சிஷ்யர்களையும் அமைத்து ஒவ்வொரு சிஷ்யர் கேட்கும் கேள்விகளுக்கு அவ்விருவரும் சமாதானம் கூறும் ரீதியில் குரு சிஷ்ய ஸம்வாத ரூபமாக அமைந்துள்ள இந்த நாடகங்களில் அநேகமாக எல்லா மந்திரங்களின் பொழிப்புரையும் விளக்க உரையும் பாஷ்யத்திலுள்ள விசேஷ கருத்துக்களும் உள்ளன. இந்த கிரந்தத்தை பார்த்து நாங்கள் மிகவும் ஸந்தோஷம் அடைந்தோம். எல்லோரும் இப்புஸ்தகங்கள் மூலம் உபநிஷத் அர்த்தங்களை நன்கு அறிந்துகொள்ள வேணுமாயும், ஸ்ரீ V. S. மணி அய்யரும் மேலும் மேலும் இம்மாதிரியான உபநிஷத் நாடகங்களை எழுதி உபநிஷத் அர்த்தத்தைச் சிந்தித்து ஸ்ரீ சாரதா சந்திரமௌளீஸ்வரர் கிருபையால் ஸகல சிரேயஸ்ஸையும் அடையுமாறு ஆசீர்வதிக்கிறோம்.

இதி நாராயணஸ்மரணம்.

ஸ்ரீங்கேரி,
23—2—74.

श्रीः

समर्पये पितुः पादपद्मयोर्भक्तिपूर्वकम् ।
मालामेतां चोपनिषन्नाटकानामहं मुदा ॥



ஸ்ரீ C. வேம்பய்யர் அவர்கள்

என் அருமைத் தந்தையின் பாதகமலங்களில்
இந்நூலைப் பணிவன்புடன் ஸமர்ப்பிக்கிறேன்.

முகவுரை

நமது ஸனாதன தர்மத்தை உலகுக்கு எடுத்துக்காட்டுவது உபநிஷத்துக்களேயாகும். மொத்தம் 108 உபநிஷத்துக்கள் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அவைகளில், ஈச, கேன, கட, பிரச்ன, முண்டக, மாண்டுக்ய, தைத்திரீய, ஐதரேய, சாந்தோக்ய, பிருஹதாரண்யகங்கள் ஆகிய 10 உபநிஷத்துக்கள் பொறுக்கிய முக்கியமானவை. இவைகளுக்கு ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பாஷ்யம் எழுதி இருக்கிறார்கள். இது தவிர சுவேதாசுவதரம், ந்ருசிம்ம பூர்வதாபினி, ந்ருசிம்ம உத்தரதாபினி, மஹாநாராயண உபநிஷத் இவைகளும் முக்கியமானவைகளாகக் கருதப்படுகிறது. சுவேதாசுவதர உபநிஷத்துக்கு ஆதி ஆசார்யாள் எழுதியதாக ஒரு பாஷ்யம் பூனா ஆநந்தாசிரமம் பிரஸ்ஸிலும், கோரக்பூர் கீதா பிரஸ்ஸிலும், அச்சாகி இருக்கிறது. ந்ருசிம்ம பூர்வதாபினி உபநிஷத்துக்கு ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதர் எழுதிய பாஷ்யம் ஸ்ரீரங்கம் ஸ்ரீவாணீ விலாஸ் பிரஸ்ஸில் அச்சாகியுள்ளது. இதுவும் ந்ருசிம்ம உத்தரதாபினி உபநிஷத்துக்கு ஸ்ரீ வித்யாரணியர் எழுதிய பாஷ்யமும் பூனா ஆனந்தாச்ரமம் பிரசுரங்களில் வெளி வந்துள்ளன.

மேலேகண்ட முதல் 10 உபநிஷத்துக்களின் சங்கர பாஷ்யம் ஸம்ஸ்கிருதம் படித்தவர்களுக்கு, அதுவும் சாஸ்திர ஞானம் உள்ளவர்களுக்குத்தான் நன்கு விளங்கும். அதை அப்படியே தமிழாக்கம் செய்தபோதிலும் சாமான்ய ஜனங்கள் அதை எளிதில் புரிந்துகொள்ள முடியாது. இதை எல்லோருக்கும் புரியும்படி செய்யவேண்டியது நம்முடைய முக்கியமான கடமை என்பதை சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் அவர்கள் பல இடங்களில் சொல்லி வந்திருக்கிறார்கள். இந்தப் பெரும் கைங்கரியத்தை திருநெல்வேலி ஜில்லா கிருஷ்ணபுரம் மிட்டாதார் ஸ்ரீ V. S. மணி அய்யர் ஏற்று மிகவும் சுலபமான வழியில் இதைச் செய்திருக்கிறார்.

கடினமான வேதாந்த சாஸ்திரத்தை நாடகரூபமாக விளக்கும் வழியை ஆரம்பித்துவைத்த, கி. பி. 14-வது

நூற்றுண்டில் இருந்த கிருஷ்ணமிச்ரர் என்பவர் ''பிரபோத சந்திரோதயம்'' என்ற தம் நாடகத்தில் எல்லா மதங்களையும் அவைகளின் தத்துவங்களையும் தக்க நாடக பாத்திரங்கள் மூலம் விளக்கி முடிவில் அத்வைத மதத்தை ஸ்தாபித்திருக்கிறுர். இந்த நாடகத்தைப் படித்தால் வேதாந்த சாஸ்திர அப்பியா ஸத்துக்குத் தேவையான எல்லா விஷயங்களையும் வெகு சுலப மாக அறிந்துகொள்ள முடியும். இந்த வழியை அனுசரித்து ஸ்ரீ நிகமாந்த மகாதேசிகர் ''ஸங்கல்ப ஸூர்யோதயம்'' என்ற நாடகம் எழுதி அதில் எல்லா மதங்களையும் நாடக பாத்திரங்கள் மூலம் தெளிவாக்கி முடிவில் விசிஷ்டாத்வைத மதம்தான் சித்தாந்தம் என்று தீர்மானிக்கிறுர். அதேபோல ''சைதன்ய சந்திரோதயம்'' என்று வங்காளத்தில் உள்ள சைதன்ய பிரபுவின் மதத்தை சித்தாந்தமாகக் கொண்ட ஓர் நாடகம் இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் இருந்த நல்லாகவி என்பவர் ''ஜீவன் முக்தி கல்யாணம்'' என்ற நாடகத்தை இயற்றியுள்ளார். இது ஸ்ரீ சங்கர குருகுல பத்திரிகையில் தொடர்ந்து வெளிவந்து ஸ்ரீரங்கம் ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்ஸில் அச்சிடப்பட்டுள்ளது. நாடகங்கள் மூலம் பல உபதேசங்களை யும் தர்மங்களையும் தெரியப்படுத்த பல கவிகள் கையாண்டு இருப்பதை மேலே சொன்னவர்கள் வேதாந்த சாஸ்திரத்துக் கும் உபயோகப்படுத்தி இருக்கிறுர்கள். உபதேசம் செய்வதற்கு உபயோகப்படும் பல வழிகளில் இதுவும் ஓர் நல்ல வழி என்று தெரிகிறது.

நாடக ரூபமான விளக்கத்தின் மூலம்தான் ஸ்திரீகள் முதல் எல்லோரும் விஷயத்தை நன்கு உணர்ந்துகொள்ள முடியும். அதனுல் நாடகம் த்ருச்யகாவியம் (பார்க்கப்படும் காவியம்) என்று சொல்லப்படுகிறது. ஒரு நாடகத்தை புத்தகத்தில் தவிர நாடக மேடையிலும் கண்டு தத்துவத்தை அறியக்கூடும். இந்த வழியைக் கையாண்டு V. S. மணி அய்யர் அவர்கள் எட்டு உபநிஷத்துக்களை நாடக ரீதியில் வெகு சுவாரஸ்யமான முறையில் எழுதி இருக்கிறுர். அவைகள் ஸ்ரீ சங்கர க்ருபாவில் மாதா மாதமாக சில வருஷங்கள் பிரசுரிக்கப்பட்டன. இன்னமும் பிரசுரமாகவேண்டியவை சாந்தோக்யம் பிருஹ தாரண்யகம் ஆகிய இரண்டுதான். அவைகளையும் சீக்கிரம் எழுதி முடிக்கும் வேலையில் ஸ்ரீ V. S. மணி அய்யர் ஈடுபட்டுள்ளார் என்பது சந்தோஷாஸ்பதமானதே! ஸ்ரீ V. S.

மணி அய்யர் எழுதிய உபநிஷத் நாடகங்களில் கேன உபநிஷத், கட உபநிஷத் இரண்டும் பள்ளிச் சிறுவர்களால் நாடகமாக நடிக்கப்பட்டு இருக்கின்றன.

ஸ்ரீ சங்கர கிருபாவில் மாதா மாதம் வெளியான மேலே சொன்ன நாடக கட்டுரைகளை ஒன்றுக சேர்த்து ஒவ்வொரு உபநிஷத்தாகவோ ஒட்டுமொத்தமாகவோ பிரசுரித்தால் நன்ருக இருக்கும் என்று பல அன்பர்கள் என்னிடம் கேட்டார்கள் ஆனுல் அதற்குத் தேவையான பண உதவி இன்மையினுல் அவ்வேலையை இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

9—4—74 தேதியில் ஸ்ரீ V. S. மணி அய்யர் அவர்களுக்கு ஷஷ்டிதமாப்த பூர்த்தி வைபவம் சிறப்பாக நடக்கப்போகிறது. அந்த விசேஷ வைபவத்தின்போது வெளியிடுவதற்காக என் ஆப்த நண்பர் ராஜபாளையம் தொழிலதிபர் ஸ்ரீ P. R. ராம சுப்பிரமணிய ராஜா அவர்கள் மேலே சொன்ன எட்டு உபநிஷத்துக்களையும் மறு அச்சுப்போட்டு ஒரே நூல்வடிவில் வெளிக்கொண்டு வந்துள்ளார். இது மிகவும் சிலாக்கியமான பொது ஜன ஸேவையாகும்.

ஸ்ரீ V. S. மணி அய்யர் நல்ல ஸம்ஸ்கிருத ஞானமும் பொது அறிவும் வாய்ந்தவர். சிருங்கேரி ஜகத்குருவிடம் அபார பக்தி உடையவர். வக்கீல் தொழிலிலிருந்ததால் விஷயங்களை நன்கு ஆராய்ந்து தெளிவாக எடுத்துரைக்கும் விசேஷ சக்தி வாய்ந்தவர். மிகவும் சாந்தமும் அவையடக்கமும் வாய்ந்தவர். தான் செய்யும் தர்மத்தை பகட்டாக வெளியில் காட்டும் விருப்பமில்லாதவர். பல ஸ்தாபனங்களிலும் இருந்துகொண்டு பல புத்தகங்கள் பிரசுரமாவதற்குக் காரணமாக இருப்பவர். இந்த சிறந்த கைங்கரியத்தினுல் சிருங்கேரி ஜகத்குரு அவர்களின் கிருபாகடாக்ஷத்துக்குப் பாத்திரமானவர். தன்னுடைய ஷஷ்டிதமாப்தபூர்த்தி தினம் இப் புத்தகம் வெளியிட சம்மதம் தந்ததும் மிகவும் ஸாத்விகமானதே! இதைப் படித்தால் ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதாளின் பாஷ்யம் நன்ருக விளங்கும். அந்த பாஷ்யத்தை ஒட்டியே ஸ்ரீ மணி அய்யர் நாடகத்தை எழுதி இருக்கிருர். ஆசார்ய பாஷ்யத்தில் எங்கு நமக்கு சந்தேகம் வருகிறதோ, அந்த இடங்களில் நாடகத்தில் அபூர்வமான விளக்கம் காணப்படுகிறது.

இந்த நாடகத்தைப் படிக்கும்போது நாமும் புராண காலத்திற்கே அழைத்துச் செல்லப்பட்டு சம்பவங்களோடும் சூழ்நிலைகளோடும், கதாபாத்திரங்களோடும் ஒன்றிப்போகிற நடை அமைந்துள்ளது. ஸம்ஸ்கிருதம் நன்ருகப் படித்தவர் களுக்கும் இந்த நாடகத்தைப் படித்தால் ஆசார்ய பாஷ்யம் எளிதில் ஞாபகத்துக்கு வரும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த புத்தகத்தை தெலுங்கு கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம் முதலிய பல பாஷைகளிலும் மொழியாக்கம் செய்தால் இந்தியாவில் உள்ள எல்லோருக்கும் பேருதவியாகும் என்பதில் ஐயமில்லை. அதுவே நாம் செய்யும் சிரேஷ்டமான குரு கைங்கர்யமாகும்.

என் நண்பர் ஸ்ரீ ராமசுப்பிரமணிய ராஜா அவர்கள் என்னை இதற்கு முன்னுரை எழுதும்படி கேட்டதற்கு என் நன்றியைத் தெரிவிப்பதுடன் பொது மக்கள் இதைப்படித்து நல்ல பயனை அடையவேண்டும் என்றும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஈரோடு,
1—3—74.

K. V. சுப்பரத்தினம்,
(வக்கீல்)
ஆசிரியர், ஸ்ரீ சங்கர கிருபா.

|| ஸ்ரீ: ||

ரிஷிகேசம்

ஸ்ரீ சுவாமி சிவாநந்தர் அவர்கள்

உபநிஷத் நாடகங்களை மொழிபெயர்க்க

இந் நூலாசிரியருக்கு அருளிய

ஆசிச்செய்தி

For translation

Sri V.S. Mony Iyer

May Lord bless you

With regards, prem & om

Sivananda

5. 4. 50

முன்னுரை

1950-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் என்று நினைக்கிறேன். தேதி ஞாபகம் இல்லை. அன்று ஒரு சுபதினம். ரிஷிகேசம் ஸ்ரீ சிவானந்த ஸரஸ்வதி சுவாமிகள் அவர்களிடமிருந்து உபநிஷத் டிராமா என்ற ஆங்கில புஸ்தகம்-அதைத் தமிழில் மொழிபெயர்க்கும்படி அவர்கள் சொந்த கையெழுத்துடன் கிடைத்தது. சுவாமிகள் அவர்கள் ஆசி கிடைத்ததால் மிகவும் மகிழ்ச்சியுற்று மொழி பெயர்க்க முயன்றேன். அந்த எண்ணம் ஈடேறவில்லை. ஆனால் ஓர் அனுகூலம் கிடைத்தது. உபநிஷத்துக்களை மூலத்தில் வாசிக்கவேண்டும் என்ற அவா பிறந்தது. 'அண்ணா' அவர்கள் எழுதிய உபநிஷத் ஸாரம் என்ற புத்தகங்களை வாங்கிப்படித்தேன். அதைப்படித்தவுடன் ஆங்கில நூலை மொழிபெயர்ப்பதைவிட வடமொழியிலிருந்தே மொழி பெயர்ப்பது சிலாக்கியமாகத் தோன்றியது. எளிதாகக் கூட இருக்கும் என்று எண்ணினேன். காலம்கடந்துபோனதே தவிர, முயற்சி நடைபெறவில்லை. ஒரு சமயம் சென்னைக்குப் போயிருந்தபோது சுவாமி சின்மயானந்தா அவர்களுடைய உபநிஷத் சொற்பொழிவுகளைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. கேனோபநிஷத்பற்றி அன்று விரிவுரையாற்றிக்கொண்டிருந் தார்கள். நமக்கு முன்னால் குருவும் சீடர்களுமாய் நாடகத்தில் நடிப்பதுபோலவே எனக்குத் தோன்றியது. எந்த விதத்திலும் ஓர் உபநிஷத் நாடகம் எழுதவேண்டும் என்ற தீர்மானத்துடன் ஊருக்கு வந்தேன். ஆனாலும் ஒன்றும் நடைபெறவில்லை.

சிருங்ககிரி ஜகத்குரு அவர்கள் விஜயயாத்திரை வந்து விட்டுத் திரும்பினார்கள். சுவாமிகளைத் தரிசிக்கும்போதெல்லாம் 'உபநிஷத் நாடகம் எழுதவேண்டும், அருள்புரியவேண்டும்' என்று மானசீகமாய் வேண்டிக்கொண்டேன். சுவாமிகள் யாத்திரை வந்து போன பிறகு பொது ஜனங்களுக்கு ஒரு புத்துணர்ச்சியும் விழிப்பும் ஏற்பட்டது. அகில பாரத சங்கர ஸேவா ஸமிதி நிறுவப்பட்டு பல ஸத் காரியங்கள் நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவற்றில் மிகவும் முக்கியமானது 'ஸ்ரீ சங்கர க்ருபா' என்ற மாதப் பத்திரிகை வெளியிடுவதாகும்,

அந்தப் பத்திரிகைக்கு உடனே சந்தாதாரராகச் சேர்ந்து கொண்டேன். மாதந்தோறும் ஸ்ரீ சங்கர க்ருபா வீட்டைத் தேடி வரலாயிற்று. குரு கிருபை வந்த பிறகு நினைத்த காரியம் கைகூடக்கேட்பானேன்? கேனோபநிஷத் நாடகத்தில் முதல் காட்சி எழுதி ஸ்ரீ சங்கர க்ருபா ஆசிரியருக்கு அனுப்பினேன். அடுத்த மாதம் ஸ்ரீ சங்கர க்ருபா பத்திரிகை வந்தபொழுது ஆவலுடன் எடுத்து ஏமாற்றம் வந்துவிடக்கூடாதே என்ற எண்ணத்துடனும் இஷ்ட தேவதையை பிரார்த்தித்துக் கொண்டும் ஸத்குருவை ஸ்மரித்துக்கொண்டும் பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டினேன். என்ன ஆச்சரியம்? என் கண்களை நம்பமுடியவில்லை. கேனோபநிஷத் நாடகம் வெளியாகி யிருந்தது. மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன்.

அதிகம் சொல்வானேன்? தொடர்ச்சியாக உபநிஷத் நாடகங்கள் வெளிவரத் தொடங்கின. தென்காசியிலுள்ள என் நண்பர் வழக்குரைஞர் ஒருவர் "you have become a play wright overnight" என்று புகழ்ந்தார்கள். எல்லாம் ஜகத்குரு அவர்களின் கிருபை என்று விடையளித்தேன். அன்று ஸ்ரீ சங்கர க்ருபாவுக்கு ஆசிரியராக இருந்த ஸ்ரீ K. R. வெங்கடராமன் அவர்கள் உத்ஸாகம் அளித்தார்கள். அவ்வப்பொழுது கருத்துக்கள் கூறி ஊக்குவித்தார்கள். உதவி ஆசிரியர் ஸ்ரீ K. S. வெங்கடராம சாஸ்திரிகள் அவர்களும் பலவிதமாக உத்ஸாகப்படுத்தினார்கள்.

மஹா ஸன்னிதானம் அவர்கள் இரண்டாவது முறையாக விஜய யாத்திரை வந்தார்கள். அப்பொழுது அவர்களிடம் உபநிஷத் நாடக விபரம் தெரிவிக்கப்பட்டவுடன் என்னை அழைத்து சிலாகித்துப் பேசி, ஊக்கமளித்து நல்லாசி அருளினார்கள். பிறகு எங்கே பார்த்தாலும் பிறருக்கு இந்த விபரம் சொல்லி என்னை அறிமுகப்படுத்தினார்கள். இப் பொழுதும் ஸ்வாமிகள் அவர்கள் கருணையுடன் ஸ்ரீமுகம் எழுதித்தந்திருக்கிறார்கள். இதை நான் எனது பெறற்கரிய பாக்கியமாகக் கருதுகிறேன். அவர்களுக்கு எனது அனந்த கோடி நமஸ்காரங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வைஷ்ணவர்கள், திருவாய்மொழிக்கு ஈன்ற தாய் நம்மாழ்வார் என்றும், செவிலித்தாய் ராமானுஜர் என்றும்

சொல்வார்கள். அதுபோல் உபநிஷத் நாடகங்களுக்கு நான் பெற்ற தாயாக இருந்தபோதிலும் அதை நன்ருகப் பேணி வளர்த்து ஸ்ரீ சங்கர க்ருபாவில் வெளி வருவதற்குக் காரணமாய் இருந்த ஸ்ரீ K. S. வெங்கடராம சாஸ்திரிகள் அவர்களை வளர்ப்புத் தாயாகச் சொல்லலாம். மீண்டும் அந்த வளர்ப்புத் தாய் மிகவும் சிரம சாத்யமான காரியத்தைச் செய்திருக்கிருர்கள். பொறுப்பான பல நற்காரியங்களில் ஈடுபட்டபோதிலும் இந்த நற்பணியையும் செய்துள்ளார்கள். சரவணப்பொய்கையில் அவதரித்த ஆறு குழந்தைகளையும் உமாதேவியார் ஒன்று சேர்த்து ஸ்கந்தமூர்த்தியாகச் செய்ததுபோல் ஸ்ரீ சங்கர க்ருபாவில் பரவிக்கிடந்த 8 உபநிஷத் நாடகங்களையும் ஒன்று சேர்த்து ஒரே புஸ்தக ரூபமாக 'உபநிஷத் நாடகமாலா' என்ற பெயரில் பிழையின்றி சிறப்பான முறையில் அச்சிடுவதற்கு வேண்டிய எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டு அதைத் திறம்பட நடத்திக்கொடுத்து உதவி செய்திருக்கிருர்கள். அதற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வெளியீட்டிற்கு முகவுரை வழங்கிய ஸ்ரீ K. V. சுப்பரத்னமய்யரவர்களுக்கும் குறிப்பிட்ட காலத்தில் நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த ஸ்ரீரங்கம் ஸ்ரீ வாணீ விலாஸ் அச்சகத்தாருக்கும் என் நன்றி உரித்தாகுக! இந் நூலை வெளியிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள என் அருமை நண்பர் ராஜபாளையம் ஸ்ரீ P. R. ராமசுப்பிரமணிய ராஜா அவர்களுக்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

''தாரிணை விருப்பமாக தலைதனில் முடிக்குந்தோறும்
நாரிணை பொல்லா தென்றே ஞாலத்தார் தள்ளுவரோ''

என்றபடி பூவோடு சேர்ந்த நார்போல் நானும் மணம் பெற்றேன்.

கிருஷ்ணபுரம்,
9—4—1974.

நமஸ்காரம் அன்புடன்,
V. S. மணி ஐயர்.



V. S. மணி அய்யர், B. A., B. L.
நூலாசிரியர்.

விஷய அட்டவணை

சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமுகம்

முகவுரை

ஸ்ரீ சிவாநந்தர் ஆசிச்செய்தி

முன்னுரை

1. ஈசாவாஸ்யோபநிஷத் ... 1—58
2. கேனோபநிஷத் ... 59—92
3. கடோபநிஷத் ... 93-222
4. பிரச்னோபநிஷத் ... 223-340
5. முண்டகோபநிஷத் ... 341-478
6. மாண்டூக்யோபநிஷத் ... 479-526
7. தைத்திரீயோபநிஷத் ... 527-690
8. ஐதரேயோபநிஷத் ... 1—73

உ

ஸ்ரீ குருப்யோ நம:

உபநிஷத் நாடகமாலா – 1

ஈசாவாஸ்ய உபநிஷத்

(நாடகம்)

நாடக பாத்திரங்கள்

1. வைசம்பாயனர்—மிதிலைக்கருகில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்யும் மஹரிஷி

2. யாஜ்ஞுவல்க்கியர்—ஷையாரின் பிரதான சிஷ்யர் மருமகனும் கூட

3. போதாயனர், த்ரிசங்கு, வைகானஸர், மாஹாசமஸ்யர் — வைசம்பாயனரின் சிஷ்யர்கள்.

4. பாலகன் — ஷையாரின் மருமான் சிறுவன்.

5. கண்வர், தத்யங் ஆதர்வணர் — யாஜ்ஞுவல்க்கியரின் சிஷ்யர்கள்.

6. ஸுபோதர் — தத்யங் ஆதர்வணரின் குமாரர்.

மந்திரிகள், ராஜசேவகர்கள், ரிஷிபத்தினிகள், ஆசிரமவாஸிகள் மற்றும் பலர்.

நிகழுமிடம்:—முதல் அங்கமும் மூன்ருவது அங்கமும் மிதிலாபுரியிலும் பக்கத்திலுள்ள ஆசிரமங்களிலும், இரண்டாம் அங்கம் மஹாமேருவிற்கு பார்சுவ பிரதேசங்களிலும்.

ஈசாவாஸ்யோபநிஷத்

(நாடகம்)

முதலாவது அங்கம்

காட்சி I

(திரை விலக)

[வைசம்பாயனரின் ஆசிரமம், தர்ப்பாஸனத்தில் மஹரிஷி அமர்ந்திருக்கிறார். சிஷ்யர் யாஜ்ஞவல்க்கியர் பக்கத்தில் பய பக்தியோடு நின்று விசிறிக் கொண்டிருக்கிறார்.]

வைசம்பாயனர் :— குழந்தாய்! த்ரிசங்கு வந்து விட்டானா?

யாஜ்ஞவல்க்கியர் :— இல்லை. மாமா!

வைசம்பாயனர் :— நேற்றே வந்திருக்கவேண்டுமே! இன்னும் வராததால் எனக்குக் கொஞ்சம் கவலையாகத் தான் இருக்கிறது.

யாஜ்ஞவல்க்கியர் :— ஸ்வாமீ! மஹா மேருவிற்குப் போய்விட்டு வரவேண்டாமா? வழியில் ஸரஸ்வதி நதிக் கரையிலிருக்கும் ஆசிரமங்களில் தங்கிவரலாமல்லவா!

வைசம்பாயனர் :— வத்ஸா! நீ சொல்வது சரிதான். வழியில் அவன் சொந்த ஊர் இருக்கிறது. தாய்நாட்டுப் பாசம் விடுமா? அவனைப் போகச்சொல்லாமல் வேறு ஒருவனை அனுப்பியிருக்கவேண்டும். மஹா மேருவில் நடந்த விருத்தாந்தங்களை அறிய ஆவல் உண்டாகிறது. காலை முதல் என் இடக்கண்ணும் இடது தோளும் துடிக்கின்றன. ஏதோ நிகழப்போகும் கெட்ட காரியங்களுக்கு அறிகுறிகள் தென்பட்ட வண்ணமிருக்கின்றன.

(த்ரிசங்கு பிரவேசிக்கிறார்)

வைசம்பாயனர்:—வா! குழந்தாய்! (நமஸ்கரித்த சிஷ்யர் த்ரிசங்குவை அன்போடு அணைத்து அருகில் அமர்த்திக் கொள்ளுகிறர்.) என் மனம் அலைபாய்கிறது. மஹா மேருவில் நடந்த நிகழ்ச்சிகளை உடன் கூறுவாய்.

த்ரிசங்கு :— வஸிஷ்டர் முதலிய ஸப்தரிஷிகளும் வந்திருந்தார்கள். ஜனகமகாராஜாவின் குலகுரு ஸதானந்தரும் வந்திருந்தார். வேதவியாஸர் தலைமை யில் மஹரிஷிகளின் மஹாசபை கூடியது. விசுவாமித்ர மகரிஷியும் தேவலருமாகச் சேர்ந்து வருகை தராதவர் கள் யார் யார் என்று கவனித்தனர்.

வைசம்பாயனர் :— யார் யார் வரவில்லை?

திரிசங்கு :— குருநாதரே, தங்களைத் தவிர எல்லோரும் வந்திருந்தார்கள்.

வைசம்பாயனர் :— பின் என்ன நடந்தது?

த்ரிசங்கு :— வராதவர் பெயர் தலைவரிடம் கூறப் பட்டது. தலைவர் வேதவியாஸரும் ஸபையில் என்ன செய்யவேண்டும் என்று அபிப்ராயம் கேட்டார்கள். அப்பொழுது நான் அருகில் சென்று வணக்கமாக குருநாதர் வரமுடியாமல் போனதற்குள்ள காரணங்களை விளக்கமாகத் தெரிவித்தேன். அப்போது துர்வாஸர் எழுந்து பலமாக ஆக்ஷேபித்து, ''மிதிலையிலிருந்து ஸதானந்தர் வந்திருக்கிறர். பக்கத்து ஆச்ரமத்தி லிருக்கும் வைசம்பாயனர் வராமலிருந்தது குற்றமே'' என்று வாதித்தார். தலைவர் எவ்வளவோ நயமாகப் பேசியும் ஸபை அங்கீகரிக்கவில்லை. ஏகமனதாகச் சாபம் கொடுத்துவிட்டது.

வைசம்பாயனர்:— அவர்களைச் சொல்லக் குற்றமில்லை. சாபத்தையும் முன்கூட்டியே தெரிவித்திருந்தார்களே. ஏதோ கெட்டகாலம் எனக்குப் போகமுடியாமல் போய் விட்டது. அது இருக்கட்டும் த்ரிசங்கு! என் நண்பர் வசிஷ்டர் ஒன்றும் சொல்லவில்லையா?

த்ரிசங்கு :— அவரும் தங்கள் சார்பில் வாதாடினுர். ஆனுல் விசுவாமித்திரர் எழுந்து எதிர்வழக்காடினுர். உடன் தலைவர் குறுக்கிட்டு ஸமாதானப்படுத்தினுர்.

வைசம்பாயனர் :— கடைசியில் ஏதாவது சாப விமோசனம் விதித்தார்களா?

த்ரிசங்கு :— ஆமாம் சாந்திராயண விரதங்களை அனுஷ்டித்து சாபத்தைப் போக்கிக்கொள்ளலாம் என்று விதித்தார்கள்.

வைசம்பாயனர் :—குழந்தைகளே! சாபமோ மிகக் கொடிது. இன்னும் ஏழு நாட்களுக்குள் பிரம்மஹத்தி தோஷம் என்னைப் பிடிக்கும், எனக்கு வயது அதிகமாகிவிட்டது. இந்த வயோதிக நிலையில் என்னுல் எப்படி இந்தக் கடினமான விரதங்களை அனுஷ்டிக்க முடியும்? விமோசனமில்லாமல் சாபத்தை அனுபவிக்க வேண்டியது தான்.

த்ரிசங்கு :—ஸ்வாமீ! கவலை வேண்டாம். அதற்கும் தங்கள் நண்பரான வசிஷ்டபகவான் ஒரு உபாயம் சொல்லி அனுப்பியிருக்கிருர்.

வைசம்பாயனர் :—அதுவென்ன? உடன் கூறுவாய்!

த்ரிசங்கு :—குருநாதரே, வயோதிகத்தினுல் தங்களுக்குச் சக்தியில்லாத பக்ஷத்தில் தங்களுக்குப் பதிலாக மற்றவர்களைச் சாந்திராயண விரதங்களை அனுஷ்டிக்கச் செய்தால் சாபம் விலகிவிடும் என்று வழி வகுத்தார்கள்.

யாஜ்ஞவல்க்கியர் :—ஸ்வாமீ! வசிஷ்டரின் மகிமையே மகிமை! எந்த தர்மசங்கடத்திற்கும் நியாயமான நிவர்த்தி நியமித்தருளும் நிர்மலரல்லவா அவர்!

வைசம்பாயனர் :-அதுமட்டுமா குழந்தாய்! என்னிடம் அவருக்குள்ள அன்பும் அபிமானமும் அளவிடற்கரியது. சபையில் அவர் இருக்கும்வரை எனக்கு விரோதமாக

ஒன்றும் நடவாது என்று நம்பித்தான் நானே போகவில்லை. ஆனால் விதிவசம் விசுவாமித்திரரும் துர்வாசரும் எதிர்க்கவே அவரால் ஒன்றும் செய்ய இயலவில்லை.

யாஜ்ஞவல்க்கியர் :— குருநாதரே! அவ்விருவரும் ஏன் எதிர்க்கவேண்டும்? தங்களுக்கு வேண்டாதவர்களா என்ன?

வைசம்பாயனர் :— அவர்களிருவரும் எனக்குத் தெரிந்தவர்களே! ஆனால் வசிஷ்டர் எனது ஆருயிர் நண்பர். விசுவாமித்திரருக்கு வசிஷ்டர் என்ன சொன்னாலும் அதை எதிர்ப்பதுதான் வழக்கமாயிற்றே! துர்வாஸர் முன்கோபி. அதிகக் கண்டிப்பும் கட்டுப் பாடும் உடையவர். ஆகையால் அவர் செய்கதிலும் தவறு ஒன்றுமில்லை. எல்லாம் என் வினைப்பயன்.

யாஜ்ஞவல்க்கியரும் த்ரிசங்குவும்:— (சேர்ந்து) ஐயனே! வருத்தம் வேண்டாம். நாங்கள் வேண்டியபடி விரதங்களை அனுஷ்டித்து சாபக்கேட்டை நீக்குகிறோம். உத்தரவு கொடுங்கள்.

வைசம்பாயனர் :—குழந்தைகளே! அதைப் பின்னால் கவனிப்போம். இன்று அரண்மனைக்கு யார் போக வேண்டும்?

யாக்ஞவல்க்யர் :— மாமா! போதாயனர் போக வேண்டும்.

வைசம்பாயனர் :— அவன் இன்னும் வரவில்லையே! காலையிலேயே உன் மாமி அவனை கோமதீதீரத்துக்கு அனுப்பினாள். ஆகையினால் நீ போய் வா யாஜ்ஞ வல்க்கியா!

யாஜ்ஞவல்க்கியர் :— உத்தரவுப்படி செய்கிறேன்.

வைசம்பாயனர் :— குழந்தாய்! அக்னிஹோத்ர சாலையிலிருந்து பிரஸாதங்களை எடுத்துக்கொண்டு

உடன் போய் வா! பிரஸாதங்களை மகாராஜாவுக்குக் கொடுத்துவிட்டு வந்துவிடு. மந்திராக்ஷதை மறவாமல் எடுத்துச் செல்வாயாக.

யாக்ஞுவல்க்யர் :—மாமா, போய்வருகிறேன்.

(வணங்குகிறார்)

வைசம்பாயனர் :— வத்ஸா! ஞாபகமாக எல்லா பிரஸாதங்களையும் எடுத்துக்கொள்! அபிஷேக தீர்த்தம் விபூதி மந்திராக்ஷதை மறந்துவிடாதே. பாலகன் அரண்மனையைப் பார்க்கவேண்டுமென்று சொன்னான் அவனையும் கூட அழைத்துப்போ.

யாஜ்ஞுவல்க்கியர் :— ஸ்வாமீ! ஆகட்டும்! போய் வருகிறேன். (போகிறார்)

த்ரிசங்கு :— ஐயனே! அடியேன் என்ன செய்ய வேண்டும, கட்டளையிடுங்கள்.

வைசம்பாயனர் :— (யோசித்து) வத்ஸா, யாஜ்ஞு வல்க்கியன் போய்விட்டானா பார்! அவன் அரண மனைக்குப் போனால் அனர்த்தம் ஒன்றும வரலாகாது. இன்றுவரை அவனை அனுப்பாமல தான் இருந்தேன்! அவன் அவசர புத்திக்காரன.

த்ரிசங்கு :— (வெளியில் போய்வந்து) அவர் போய் விட்டார் ஸ்வாமீ! பின்னால் பாலகனும் போகிறான். கூப்பிடவா?

வைசம்பாயனர் :— வேண்டாம் போகட்டும். வருவது வந்தே தீரும். விதியை வெல்ல யாரால் முடியும்? மாத்தியாந்ஹிக ஸ்னானத்துக்குப்போவோம். வா என் கையைப் பிடித்துக்கொள். (சீடன் கரத்தைப் பிடித்துக் கொண்டு எழுந்திருக்கிறார்)

(திரை விழுகிறது)

காட்சி 2

(திரை விலக)

[மிதிலாபுரியில் ஜனகமஹாராஜாவின் அரண்மனையில் கொலுமண்டபம், மத்தியில் ஸ்வர்ண சிம்மாஸனம் போடப் பட்டிருக்கிறது. இருமருங்கிலும் உயர்ந்த ஆஸனங்களில் மந்திரி பிரதானிகள் வீற்றிருக்கிறனர். ஸேவகர்கள் ஆயுதங்கள் தரித்துக் காவல் புரிகின்றனா. யாஜ்ஞவல்க்யரும் பாலகனும் ப்ரவேசிக்கின்றனர்.]

யாஜ்ஞவல்க்கியர் :— தம்பி பாலகா, எல்லாம் பார்த்தாயா! அரண்மனையில் அரசச் செல்வங்கள், கண்ணைக் கவரும் பட்டாடைகள், களிநடம் புரியும் கவலையில்லாத மனிதர்கள், உலகமே நாடகமேடை என்ற உண்மையை உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காட்டுகிறதல்லவா!

பாலன் :— அண்ணு! தாங்கள் சொல்வது சரிதான். ஆனல் எனக்கு இந்த ஆடம்பரம் கட்டோடு பிடிக்க வில்லை.

யாஜ்ஞவல்க்கியர் :— பின் எதற்காக இங்கே வர வேணடுமென்று மாமாவிடம கூறினுய்? இதோ ராஜசபைக்கு வந்துவிட்டோம். எல்லாம் சுற்றிப் பார்ப்போம்.

பாலகன் :— அண்ணு, நான் நினைத்தேன் விதேஹ மஹாராஜர் வாழுமிடம் வேறு விதமாக இருக்குமென்று! ஆனல் மற்ற அரண்மனைகளைப்போலவே இங்கும் காண்கிறேன். ஒரு பிரம்மஞானி அரசு புரியும இடமாகத் தெரியவில்லையே இது! ராஜ ஸபையில ஏன் ஆயுதம தாங்கிய படர்கள் நிறகவேணடும?

யாஜ்ஞவல்க்கியர்:—குழந்தாய், நீ சொல்வது சரியல்ல. நாய் வேஷம் போட்டால் குரைக்கத்தான்வேண்டும். அரசராயிருக்கும் வரை அந்த வாழ்வுக்குரிய தருமங்களைக் கடைப்பிடிக்கத்தானே வேண்டும்! ஸபையில் ராஜாவைக் காணவில்லையே!

(மந்திரியிடம் சென்று வினவுகிறார்.)

நான் மஹரிஷி வைசம்பாயனரின் பிரதம சிஷ்யர். மஹாராஜாவிற்காக மங்களாக்ஷதையும் பிரஸாதங்களும் கொண்டு வந்திருக்கிறேன். பிரஸாதங்களைக்கொடுக்க வேண்டும். மகாராஜா எங்கே?

பாலகன் :—தாங்கள் யார்? அரசர் எப்போது வருவார்?

மந்திரி :— வாருங்கள். இப்படி அமருங்கள்; நான் இந்த ராஜ்யத்தின் முதன் மந்திரி. மகாராஜா அவர்கள் தியானத்தில் இருக்கிறார்கள். ஸமாதி கலைந்த பின்னர் தான் ஸபை கூடும்.

யாஜ்ஞுவல்க்கியர் :— எங்களுக்கு அதுவரையில் காத்திருக்க முடியாதே. உடன் திரும்பவேண்டு மென்பது குருவின் ஆணை. ஆனால் இங்கு காலதாமதம் ஏற்படுகிறது. என்ன செய்வது?

மந்திரி :— ஸ்வாமி! நேற்று பிரஸாதம் கொண்டு வந்த சிஷ்யர். அரசரைக்கண்டு மந்திராக்ஷதை கொடுத்துவிட்டுத்தான் போனார்.

பிரதானி :— அரண்மனையில் விருந்தும் உண்டபின் தான் சென்றார்,

பாலகன்:— இன்று வந்தவர்கள் வேறு, நேற்று வந்தவர் வேறு. எங்களுக்கு உடனே போகவேண்டும்.

மந்திரி :— அப்படியானால் பிரஸாதங்களை நாங்கள் வாங்கிக்கொள்ளுகிறோம். கொடுத்துவிட்டு—

யாஜ்ஞுவல்க்கியர்:— மந்திரி அவர்களே! நாங்கள் மகரிஷியின் மந்திராக்ஷதையை மகாராஜாவின் கையில் தான் கொடுப்போம். இல்லாவிடில்-(யோசித்து, தம்பியை அருகில் அழைத்துக் காதோடுபேசி) இப்படிச் செய்தால் என்ன?

பாலகன்:— அண்ணு, அதுதான் நல்லது. அப்படியே செய்வோம்!

யாஜ்ஞுவல்க்கியர்:— ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சிஷ்யன் மகாராஜாவிற்கு மந்திராக்ஷதை கொண்டு போய்க்கொடுத்து வர வேண்டுமென்ற ஏற்பாட்டின் படி நான் இன்று வந்தேன். உங்கள் அரசரைப் பார்க்க முடியவில்லை. எங்களுக்கு அவசரமாக திரும்பிப் போக வேண்டும். பிரஸாதங்களை ஸிம்மாஸனத்தில் வைத்து விட்டுப்போகிறேன்.

பிரதானி:— ஸ்வாமீ! தங்கள் அபிப்பிராயப்படி செய்யலாம். ஆனுல்—

பாலகன்:— ஆனுல் என்ன?

மந்திரி:—இது தெய்வீகமான ஸிம்மாஸனம். ஜனக மகாராஜாவின் பரம்பரையைச் சேர்ந்தவர் தவிர வேறு ஒருவரும் ஏறலாகாது.

யாஜ்ஞுவல்க்கியர் :—நீங்கள் ஏறச்சொன்னுலும் நான் ஏறமாட்டேன். ஸ்வர்ணத்தைத் தொடுவது பாபம். நான் தீண்டமாட்டேன். தம்பி பாலகா, இந்த பிரஸாதங்களை ஸிம்மாஸனத்தில் வைத்து விட்டுவா. போவோம்.

(பாலகன் கைகளில் வாங்கிக்கொண்டு ஸிம்மாஸனத்தின் பக்கத்தில் போகிருன். அப்போது அசரீரி கேட்கிறது—'ஜனக மகாராஜாவின் ஸிம்மாஸனத்தை உத்தரவில்லாமல் தொடுபவர்கள் ஏழு நாட்களுக்குள் இறந்து போவார்கள்' என்று. இதைக்கேட்டு சபையோர்கள் கலங்கித்தவிக்கின்றனர். மந்திரி பாலகனைப் போகக்கூடாதென்று தடுக்கிருர். யாஜ்ஞுவல்க்கியர் மௌனமாக நிற்கிருர்)

பாலகன்:—ஆறிலும் சாவு நூறிலும் சாவு. மரணத்திற்குப் பயந்து முன்வைத்தகாலைப் பின்வைக்க மாட்டேன். அண்ணு, மரணம் இந்த உடம்புக்குத் தானே! ஆத்மாவுக்கு அழிவேது? (பிரஸாதங்களை ஸிம்மாஸனத்தில் வைத்துவிட்டு இறங்குகிருன்)

யாக்ஞுவல்க்யர் :—தம்பி! ஏதோ பயங்கரமான எதிர் கால நிகழ்ச்சி நம்மை எதிர் நோக்கி வந்துகொண்டிருக்கிறது.

பாலகன் :— அண்ணு, இந்த அசரீரி உளறிய வாக்கை தாங்கள் நம்பிவிட்டீர்களா?

யாஜ்ஞுவல்க்கியர் :— தம்பி, எனக்கு இனம் தெரியாத-இயம்ப இயலாத- இடுக்கண் வரும்போல் தோன்றுகிறது. மலை உச்சியிலிருந்து கீழே அதல பாதாளத்துக்குத் தள்ளப்படுவதுபோல், விதி நம்மை இழுத்துச்செல்கிறது.

பாலகன் :— அண்ணு, தாங்கள் இந்த அற்ப விஷயத்துக்கு இப்படி திடுக்கிடலாமா? இவ்வளவு நாட்களாக மாமாவிடம் படித்த வேதாந்த பாடங்கள் என்ன பயனைக் கண்டன?

யாக்ஞுவல்க்யர் :— குழந்தாய், இளங்கன்று பயம் அறியாது என்பார்கள். விளையப்போவது விதியின் விளையாட்டு. நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. உடனேபோய் குருநாதரிடம் நடந்தவைகளைக் கூறுவோம். அவரது திருவடியே நமக்குப் பாதுகாப்பு. (தனக்குள்) இங்கு பாலகனுக்கு மரணம் நேரும்படி சாபம். அங்கு குருநாதருக்கு பிரம்மஹத்தி தோஷம் உண்டாக சாபம். என்ன நடக்குமோ? யாருக்குத் தெரியும்? ஒரே அந்தகாரம். குருவே ஒளி தந்து வழிகாட்டவேண்டும். நான் கொஞ்சம் அவசரப் படாமல் - நிதானமாக நடந்துகொண்டிருந்தால் இப்படி நேர்ந்திராதல்லவா! எப்படியாவது பாலகனைக் காப்பாற்றியாகவேண்டும்? ஐயனே, நீரே சரண் (வெளியே) குழந்தாய், போவோம். வேகமாய்ச் சென்று மாமாவிடம் நிகழ்ச்சிகளை உரைப்போம்.

பாலகன் :— அண்ணு! அப்படியே போவோம்.

(போகிறுர்கள்)

(திரை விழுகிறது.)

காட்சி 3

(திரை விலக)

[வைசம்பாயனர் ஆசிரமம். மஹரிஷியும் மற்ற சிஷ்யர்களும் உட்கார்ந்து உரையாடிக்கொண்டிருக்கின்றனர்.]

வைசம்பாயனர் :—வத்ஸர்களே! யாஜ்ஞவல்க்கியன் போய்வந்த சமாசாரங்களைக் கேட்டது முதல் என் மனம் மிகுந்த வேதனைப்படுகின்றது. பாலகனை அவன் தாயார் என்னிடம் ஒப்புவிக்கும்போது கவனமாக காப்பாற்றி வளர்ப்பதாக வாக்குக் கொடுத்திருந்தேன். ஆனால் இன்னும் நான்கைந்து நாட்களில் யமன் வாயில் ஒப்புவிக்கப்போகிறேன். அந்தோ விதியே!

மாஹாசமஸ்யர் :—குருநாதரே! தாங்கள் இப்படி மனோதிடம் இழக்கலாகாது. மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள்.

போதாயனர் :— ஸ்வாமி! ''ஸ்மாரயே த்வாம் ந சிக்ஷயே'' தங்களுக்குத் தெரியாத விஷயம் ஒன்றும் இல்லை. ஞாபகப் படுத்துகிறேன். ஆத்மாவுக்கு அழிவில்லை. ஜீர்ணமான வஸ்திரங்களைக் களைந்துவிட்டு மனிதன் புதுப்புது ஆடைகளை அணிவதுபோல், ஆத்மாவும் பழைய சரீரங்களை உதறிவிட்டு வேறு புது உடம்புகளைப் பெறுகிறது. இப்படி பாம்பு சட்டையை உரிப்பதுபோல் சரீரங்கள் விடப்படுகின்றன என்று நேற்றுக்கூட உபதேசித்தீர்களே ஸ்வாமி! கலக்கம் வேண்டாம். தைரியமாயிருங்கள்.

வைசம்பாயனர் :-எல்லாம் இந்த யாஜ்ஞவல்க்கியனால் தானே வந்தது. அவன் ஒரு அடங்காப்பிடாரி. அவனை அரண்மனைக்கு அனுப்பியிராவிட்டால் இது ஒன்றும் நேர்ந்திராது அல்லவா ?

[யாஜ்ஞவல்க்கியர் வருகிறார். குருவை வணங்குகிறார். பக்கத்தில் நிற்கிறார். வைசம்பாயனர் உட்கார் என்றுகூடச் சொல்லவில்லை.]

த்ரிசங்கு :— குருநாதரே! நாம் இப்படி வருத்தப் படுகிறேமேதவிர பாலகன் பயப்படவேயில்லை. பட்டாபி ஷேகத்துக்கு அழைக்கப்பட்டிருக்கும் அரசகுமாரனைப் போல் கம்பீரமாக உலவுகிருன்.

மாஹாசமஸ்யர் :— அதுமட்டுமா? எல்லாரிடமும் இந்த விருத்தாந்தத்தைக் கூறி விடைபெற்று வருகிருன்.

போதாயனர் :— அடுத்த ஊருக்குப் போகும் வித்தி யார்த்தியைப் போல் துள்ளிக்குதித்து ஓடிக்கொண்டிருக் கிருன்.

யாஜ்ஞவல்க்கியர் :— என் தம்பி உங்களைப் போல் தொடைநடுங்கியல்ல. பயமென்பதே அறியாதவன். ஆத்மஞானிக்கு அச்சமுண்டோ?

வைசம்பாயனர் :— அடே யாஜ்ஞவல்க்கியா! போதும் நிறுத்து உன் அதிகப்பிரசங்கத்தை. இங்கே யார் உன்னை அழைத்தார்கள்?

யாஜ்ஞவல்க்கியர் :— மாமாவின் மருங்கில் வர மரு மகனுக்கு எப்போதும் உரிமையுண்டு.

வைசம்பாயனர் :— அடே பிராஹ்மண பந்துவே! உனக்கும் எனக்கும் உறவு நேற்றேடு முடிந்துவிட்டது. என் அருமை மருமகன் பாலகனைப் படுகுழியில் தள்ளி விட்டாயே, அந்த நேரத்திலேயே பந்துத்வம் போய் விட்டதடா!

(பாலகன் பிரவேசிக்கிருன். யாஜ்ஞவல்க்கியரும் ஏதோ கோபமாகப் பேச எத்தனிக்கிருர். ஆனல் பாலகன் தடுக்கவே நிறுத்திக் கொள்ளுகிருர்.)

த்ரிசங்கு :— குருநாதரே! ஸாயங்கால அக்னிஹோத் திரத்திற்கு நேரமாகிவிட்டது. உள்ளே போவோமா!

வைசம்பாயனர் :— அப்படியே செய்வோம். வாருங்கள் உள்ளே போவோம்.

(எழுந்திருக்கிறார், அப்போது அரண்மனையிலிருந்து ராஜ சேவகன் வந்து வணக்கம் செய்து தெரிவிக்கிறான் குருநாதர் உட்காருகிறார்.)

ராஜசேவகன் :— பகவானே, மகரிஷியே! நமஸ்காரம் நேற்று ஸிம்மாசனத்தில் தங்கள் சிஷ்யர் வைத்து விட்டுப்போன மந்திராக்ஷதை முளைத்து விதானமாக வளர்ந்திருக்கிறது. அரசர் பார்த்து அதிசயப்பட்டார். அந்த சிஷ்யரை உடனே கையோடு அழைத்துவர என்னை அனுப்பியிருக்கிறார். தயவு செய்து ஸ்வாமி, அவரை என்னுடன் அனுப்பவேண்டும்.

வைசம்பாயனர்:—ராஜசேவகனே! (யாஜ்ஞவல்கியரைச் சுட்டிக்காட்டி) அவன் அதோ நிற்கிறான். வந்தால் அழைத்துப்போகலாம்.

ராஜசேவகன் :— (யாஜ்ஞவல்க்கியர் அருகில் சென்று வணங்கி) ஸ்வாமி! வணக்கம். அரண்மனை எங்கும் தங்களைப்பார்க்க ஜனங்கள் ஆவலுடன் கூடியிருக்கிறார்கள். தங்களைக் கையோடு அழைத்துவர அரசர் ஆணையிட்டிருப்பதுடன் ரதமும் அனுப்பியிருக்கிறார். தயவு செய்யவேண்டும்.

யாஜ்ஞவல்க்கியர் :— ராஜபடனே! நீ போய் உன் அரசனிடம் கூறுவாய், என்னால் வரமுடியாதென்று. நான் என் குருநாதருக்கு அடிமையே தவிர அரச னுக்குக் கீழ்ப்பட்டவனல்ல. இப்போது என்னால் அரண்மனைக்கு வரமுடியாது. வேண்டுமானால் அரசர் இங்கே வரட்டுமே.

பாலகன் :— அண்ணா! இந்தச் சூழ்நிலையில் அரசன் இங்கு வந்தாலும் பார்க்கமுடியாது. ராஜசேவகனே! நீ வெறும்கையுடன் திரும்பிச்செல்ல நேர்ந்ததுபற்றி வருத்தமே.

[ராஜசேவகன் எல்லோரையும் வணங்கிவிட்டுப் போகிறான்.]

வைசம்பாயனர் :— அடே யாஜ்ஞவல்க்கியா? நாம் எல்லோரும் ஜனகமகாராஜாவின் பிரஜைகள். அரசன் ஆணைக்குக் கீழ்ப்படியவேண்டியது நம் கடமை. முக்கியமாய் பிராம்மணர்களையும் அவர்கள் தர்மத்தையும் காப்பவன் அரசனேயாகும். அவனது சேவகனை அவமதித்ததும் அரசனை அவமதித்ததுபோல் குற்றமேயாகும்.

யாஜ்ஞவல்க்கியர் :— குருநாதரே! நான் போகவேண்டுமென்பது தங்கள் விருப்பமானால் உத்தரவு கொடுத்திருந்தால் உடனே போயிருப்பேனே!

வைசம்பாயனர் :— உன்னை சிஷ்யன் என்று கூறிக் கொள்ளவே நான் வெட்கப்படுகிறேன்.

யாஜ்ஞவல்க்கியர் :— ஐயனே! அடியேன் அறிந்து யாதொரு தவறுதலும் செய்யவில்லை. அறியாமல் செய்திருக்கும் பிழைகளைப் பொறுத்தருள வேண்டுகிறேன். (ஸாஷ்டாங்கமாக விழுந்து வணங்குகிறான்)

வைசம்பாயனர் :— (கோபம் கொதித்து எழ) அடே என் முன் நில்லாதே! போய்விடு. முதலில் என் சிஷ்யர்களை அவமதித்தாய். பின் அரசனை அவமதித்தாய். என் கோபத்தைக் கிளப்பாதே. என் கோபாக்கினிக்கு ஆஜ்யமாக என் முன் நில்லாதே. உடன் போய்விடு.

பாலகன் :— (அருகில் சென்று வணங்கி) மாமா, கோபித்துக் கொள்ளாதீர்கள். தங்களுக்கு உற்ற பந்துவும் பிரதம சிஷ்யனுமான அண்ணன் எங்கு போவான்? அவனை மன்னித்து ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் காலில் விழுந்து கெஞ்சுகிறேன். (ஸாஷ்டாங்கமாக விழுந்து காலைப் பிடித்துக் கொள்ளுகிறான்) மன்னித்தேன் என்று கூறினால் ஒழிய காலை விடமாட்டேன்.

வைசம்பாயனர் :— விடு விடு காலை! எனக்கு அக்னிஹோத்ரசாலைக்குப் போகவேண்டும்.

[காலை உதறிக்கொண்டு எழுந்திருக்கிறார். அதைத் தாங்காத பாலகன் "ம்ருத்யோர்மா அம்ருதம் கமய" என்று கூறிக்கொண்டு அமரனாகிறான். யாஜ்ஞவல்க்கியர் கையில் எடுத்துக்கொண்டு உள்ளே போகிறார். ஆசிரமத்திற்குள்ளே ரிஷிபத்னிகள் ஆசிரமவாஸிகளின் அழு குரல் கேட்கிறது. வைசம்பாயன மஹரிஷியையும் அந்தக்ஷணமே பிரம்மஹத்தி பிடித்துக்கொள்கிறது. பயங்கரமான கருத்த உருவமும் சிவந்த சடைகளும் நெருப்புப்போன்ற கண்களுமுடைய ஒரு கோரஸ்வருபமாக மாறுகிறார் மஹரிஷி]

வைசம்பாயனர் :— அந்தோ! இது என்ன கோரமான ரூபம். சரி, பாலகன் சாபத்தினால் இறந்துவிட்டான். நான் அதற்குக் காரணமானேன். சாபத்தால் என்னையும் பிரம்மஹத்தி பிடித்துக்கொண்டது. எல்லா வற்றிற்கும் இந்த அதமன் யாஜ்ஞவல்க்கியனே காரணம்

[உள்ளேயிருந்து அவர் பத்தினி வந்து உருவத்தைப் பார்த்துவிட்டு இவர் என் கணவரல்ல என்று கூறிக்கொண்டே பயந்து ஓடுகிறாள். மற்ற சிஷ்யர்களும் அதிக பயமடைந்து அருகில் வராமல ஒதுங்கி நிற்கிறார்கள். த்ரிசங்கு இரண்டும் கெட்ட நிலையில் தயங்கி நிற்கிறான். யாஜ்ஞவல்க்கியர் மட்டும் தைரியமாக, குருவின் பக்கத்தில் சென்று வேண்டிய சுச்ருஷை செய்கிறார்.]

வைசம்பாயனர் :— ஹா! ஹா!! தேஹமெல்லாம் ஒரே கொதிப்பாகக் கொதிக்கிறதே. ஐயோ அப்பா! அனல்போல் காய்கிறது. தாகம், தாகம் மரண தாகமா! தண்ணீர் கொடுங்கள்.

(யாஜ்ஞவல்க்கியர் விசிறியால் வீசுகிறார். குளிர்ந்த தண்ணீர் கொண்டுவந்து கொடுத்து உதவுகிறார். சிறிதும் அருவருப்பின்றி சந்தோஷமாகப் பக்கத்தில் நின்று பணிவிடை செய்கிறார். அதைப் பார்த்து தைரியம்கொண்டு மற்ற சிஷ்யர் களும் ஆசிரமவாஸிகளும் பயம் நீங்கி அருகில் வருகிறார்கள்.)

(திரை விழுகிறது)

காட்சி 4

(திரை விலக)

[வைசம்பாயனரின் ஆசிரமம். சிஷ்யர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கின்றனர்.]

வைகானஸர் :—போதாயனரே! கேட்டீரா அதிசயத்தை?

போதாயனர் :—என்ன அதிசயம்? விபரமாகக்கூறும்.

மாஹாசமஸ்யர் :—நம் ஆசிரமத்தில்தான் ஒருநாளு மில்லாத திருநாளாய் அற்புதங்கள் நிகழ்கின்றனவே. அதைத்தான் சொல்லுவார்.

வைகானஸர் :— நண்பரே, நீர் சொல்லுவதும் ஒரு விதத்தில் சரிதான். முக்கியமான சிஷ்ய தர்மங்கள் அறிந்தவரும், கல்வியில் சிறந்த மேதாவியும், குருவுக்குப் பணிவிடை செய்வதில் அக்ரகண்யருமாகிய யாஜ்ஞுவல்க்கியருக்கும் மஹரிஷி வைசம்பாயனருக்கும் ஏற்பட்டிருக்கும் பூசலைத் தவிர வேறு அதிசயமு முண்டோ? ஆனல் நான் இப்போது அதைக் குறிப்பிட வில்லை.

போதாயனர் :— பின் எதைக் குறிப்பிடுகிறீர்? சுற்றி வளைக்காமல் சொல்லலாமே.

வைகானஸர் :— நேற்று பாலகனின் அந்திமக்கிரியைகள் நடந்து முடிந்தவுடன், அவன் திவ்ய சரீரம் பெற்று, ஸ்வர்க்கலோகத்திலிருந்து வந்த விமானத்தில் ஏறிச் சென்ருனும். தேவர்கள் புஷ்பமாரி வர்ஷிக்க, தேவ துந்துபி முழங்க இந்த அற்புதம் நிகழ்ந்தது.

மாஹாசமஸ்யர் :— அப்படியா! நல்ல சேதி தான். 'சிறுவயதில் இறப்பவர்களை தேவர்கள் விரும்புகிருர்கள்' என்ருெரு பழமொழி கேட்டிருக்கிறேன். அது பாலகன் விஷயத்தில் நிஜமாயிற்று.

வைகானஸர் :— நம் குருநாதர் மிகவும் கஷ்டப் படுகிறூர்கள். கூடிய சீக்கிரம் நாம் எல்லோரும் விரதங் களை அனுஷ்டித்து, அவர் துன்பத்தை நீக்கவேண்டும்.

மாஹாசமஸ்யர் :— நம் கடமை அது தானே! ஆனால் குரு ஆக்ஞையிடாமல், அனுமதி அளிக்காமல், விரதங் களை ஆசரிக்கமுடியாதே!

போதாயனர் :— நாமே குருநாதரிடம் சென்று அனுமதி கேட்கவேண்டும். காலவிளம்பம் கூடாது.

வைகானஸர் :— நண்பர்களே, குருநாதர் அவர்களே இதோ வருகிறூர்கள்.

(மகரிஷி வைசம்பாயனர் மெதுவாக நடந்து வருகிறூர். இரு மருங்கிலும் த்ரிசங்குவும் யாஜ்ஞவல்க்கியரும் நின்று கொண்டு தாங்கிவருகின்றனர்.)

த்ரிசங்கு :— ஸ்வாமி, மெதுவாக வாருங்கள்.

போதாயனர் :— (தனக்குள்) நல்ல மரத்திலும் புல்லுருவி பாய்ந்துவிட்டதே? எல்லாம் சரியாக வேண்டும்.

யாஜ்ஞவல்க்கியர் :— குருநாதரே, இந்த ஆஸனத்தில் அமருங்கள்.

வைசம்பாயனர் :—அந்தோ விதியே! என்ன கர்மம் இது! சிஷ்யர்களே, இந்த சங்கடத்தை உடன் நீக்கி யாக வேண்டும். அதற்கு உங்கள் எல்லோருடைய உதவியும் வேண்டும்.

சிஷ்யர்கள் :— உத்தரவு கொடுங்கள் ஐயனே! சிரமேற்கொண்டு உடன் செய்கிறோம்.

வைசம்பாயனர் :— என் அத்யந்தப் பிரியமான சீடர் களே, உங்கள் மறுமொழி கேட்டு மிகவும் மகிழ்ச்சி. இப்போதே பாதி ஸ்வஸ்தமடைந்தது போன்ற ஸௌக்யம் ஏற்பட்டுவிட்டது.

வைகானஸர் :—சீக்கிரம் ஆணையிடுங்கள் குருநாதரே.

வைசம்பாயனர் :— என் பிரியமான சீடர்களே! கவனமாய்க் கேளுங்கள். எனக்கு வந்திருக்கும் பிரம்மஹத்தி தோஷம் நீங்குவதற்கு ஒரே வழிதான் உண்டு. அதுதான் என் ஆருயிர் நண்பர் வஸிஷ்டர் சொல்லியனுப்பியது. எனக்காக நீங்கள் விரதமிருந்து இந்தத் தோஷத்தை நீக்கவேண்டும். வேருென்றையும் நினையாமல்—புத்தியைச் சலனமடைய விடாமல்—வெகு ஜாக்கிரதையாக இருந்து விரதங்களை அனுஷ்டியுங்கள்.

போதாயனர் முதலிய சீடர்கள் :— அப்படியே ஆகட்டும் ஐயனே. தங்கள் கட்டளைப்படி இன்றே தொடங்குகிறோம். ஆசீர்வதியுங்கள்.

யாஜ்ஞுவல்க்கியர் :— ஸ்வாமீ, இந்த அல்ப தேஜஸ் உள்ள பிராம்மணர்களை ஏன் வருத்தவேண்டும்? அடியேன் ஒருவனே அந்த விரதத்தைச் செய்கிறேன்.

வைகானஸர் :— நண்பரே, அகந்தை வேண்டாம். நாங்களும் உம்மைப்போல் மஹரிஷியின் சீடர்களே. அவர்களுடைய நோயை நீக்குவதில் உமக்குக் குறையாத அக்கரை எங்களுக்குமுண்டு அத்தொண்டில் எங்களுக்கும் பங்கு உண்டு.

போதாயனர் :— யாஜ்ஞுவல்க்கியருக்கு வித்யாகர்வம் அதிகப்பட்டுவிட்டது. ஆத்மஞானிக்கு அஹங்காரம் அழிவைத் தரும்.

யாஜ்ஞுவல்க்கியர் :— நண்பர்களே! நான் கர்வத்தினுல் அப்படிச் சொல்லவில்லை. உண்மையைத்தானே கூறினேன்.

வைசம்பாயனர் :— (கோபத்துடன்) அடே! எதுவடா உண்மை? இந்த பிராமணர்கள் அல்ப தேஜஸுள்ளவர்களென்று சொன்னுயே, அதுவா உண்மை?

யாஜ்ஞவல்க்கியர் :— ஐயனே கோபம் வேண்டாம். பலபேர்கள் சேர்ந்து விரதங்கள் செய்யும்போது யாருக்காவது ஒருவருக்கு விரதலோபம் வரலாம். ஆகையினுல் அடியேன் ஒருவனுகச் செய்ய அனுமதி வேண்டினேன்.

வைசம்பாயனர் :— பிராம்மணர்களை அவமானம் பண்ணுகிருய். இவர்கள் அல்பமான வீர்யமுள்ளவர்களானுல் இவர்களது குருவாகிய நானும் அல்ப தேஜஸுள்ளவன் என்றுதானே அர்த்தம்?

யாஜ்ஞவல்க்கியர் : (காதுகளைப் பொத்திக்கொண்டு) சிவ சிவ! நான் அப்படி ஒருக்காலும் நினைக்கவில்லை. ஸ்வப்பனத்திலும் அவ்விதம் நினைக்கமாட்டேன். என் நிழலை மிதித்தவனும் கூட குருத்துரோகியாகமாட்டான்.

வைசம்பாயனர் :—போதுமடா! நிறுத்து உன் அதிகப் பிரசங்கத்தை. என் உத்தமமான சிஷ்யர்களைப் பழித்தாய். அன்று ராஜாவின் அதிருப்திக்குப் பாத்திரமானுய். என் அருமை மருமகன் பாலகனுக்கு சாபம் வாங்கி வைத்தாய். இப்படிப்பட்ட சிஷ்யன் எனக்கு வேண்டாம்.

யாஜ்ஞவல்க்கியர் :—(அடிபணிந்து) ஐயனே, க்ரோதம் வேண்டாம். ஸமாதானமடையுங்கள். தேவரீரிடத்தில் அதிகமான பக்தியினுல், அன்பினுல், இப்படிச் சொன்னேனே அல்லது வேறில்லை. "அதிஸ்நேஹ: பாபசங்கீ" யான் ஏதாவது தவறுதலாகச் சொல்லியிருந்தால் மன்னித்துவிடுங்கள். இச்சமயத்தில் இப்படி கோபப்படுவதை தங்கள் உடம்பு தாங்காது.

வைசம்பாயனர் :—போடா! உன்னுடைய ஸமாதானங்கள் ஒன்றும் தேவையில்லை. என்னுடைய ஆக்ஞையை மீறிப்பேசிக்கொண்டே போகிருய். இப்படிப்பட்ட நீ எனக்கு சிஷ்யனுக இருக்கத் தகுதியுள்ளவனில்லை. ஆதலால் என்னிடம் நீ கற்ற வேதங்களைக் கக்கிவிடு.

போதாயனர் முதலிய சீடர்கள் :— ஐயனே க்ஷமித்துக் கொள்ளுங்கள். நண்பரே! வெளியில் போய்விட்டு வாரும். எதிர்த்துப்பேசி கோபத்தைக்கிளறவேண்டாம்.

யாஜ்ஞவல்க்கியர் :— (கோபத்துடன்) வீணுகக் கோபிக்கும் உம்மாலேயும் எனக்கு ஒன்றும் ஆக வேண்டியதில்லை. உம்மிடம் ஓதிய வேதமும் எனக்கு வேண்டாம். இதோ திரும்பத் தந்துவிடுகிறேன்.

(திரைக்குள் போய்த் திரும்ப வந்து)

உதிரத்திறைல் பூசப்பட்ட ருபமுள்ளவைகளான யஜுர்வேதங்களைக் கக்கிவிட்டேன். உண்ட சோற்றைக் கக்குவதுபோல் வெளியே தள்ளிவிட்டேன், எடுத்துக் கொள்ளும். நீரும் இந்த சீடர்களும் ஸுகமாய் வாழுங்கள். நான் போய்வருகிறேன்.

(இந்தக் கொடுமையான ஸம்பவத்தைக் கண்ட சீடர்கள் திகைத்த நிற்கின்றனர். மஹரிஷியும் ஒருக்ஷணம் ஸ்தம்பித்து விட்டார். பிறகு எல்லோரும் சாந்தி அடைந்தனர்.)

வைசம்பாயனர் :— ஹே யாஜ்ஞவல்கியா! நீ சுகமே போய்வா. பிரம்மராதருடைய பிள்ளையே! நீ வாழ்வாயாக. இப்போது நான் குருவாகவும் மாமனுக வும் இருந்து உன்னை ஆசீர்வதிக்கவில்லை. ஒரு பிராம்மணுக இருந்து ஆசி வழங்குகிறேன். நீ சுகமே போய்வா! பிரம்மஹத்தி பிடித்த பின்னும் எனக்கு பிராம்மண தேஜஸ் இருக்கிறதென்றே நினைக் கிறேன். ஆகையால் நீ விரும்பியவிதமே வாழ்வில் வெற்றிபெறுவாய்.

யாஜ்ஞவல்க்கியர் :— ஆசார்யனே, போய்வருகிறேன். நடந்ததை மன்னித்தும், மறந்தும் ஆசி வழங்கியதற்கு அநந்தகோடி நமஸ்காரம். (ஸாஷ்டாங்கமாக வணங்கி எழுந்திருந்து) போய்வருகிறேன் நண்பர்களே, உங்களுக்கும் வணக்கம். (மனம்போனபடி போய் விடுகிருர்.)

வைசம்பாயனர்:— என் பிரிய சிஷ்யர்களே, புகைந்த கொள்ளி புறம்போனது நல்லதுதான். அவன் கக்கிய வேதத்தை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். அவனுக்கு நான் பல அரிய விஷயங்களை உபதேசம் செய்திருந்தேன் அவைகள் வீண்போகலாகாது. நீங்கள் அதை உண்ணுங்கள்.

சிஷ்யர்கள்:— அவர் கக்கியதை எப்படி உண்ணுவது? வழி சொன்னால் செய்கிறோம்.

வைசம்பாயனர்:— சிஷ்யர்களே, நீங்கள் இதை இப்படியே உண்ணுவது தகாது. தித்திரிப் பறவைகளின் உருவம்கொண்டு சாப்பிடுங்கள். அதுவே சாலவும் சிறந்தது. (சிஷ்யர்கள் திரைக்குள் போய் திரும்ப வந்து)

சிஷ்யர்கள்:— ஆசாரியனே, நாங்கள் தங்கள் கட்டளைப்படியே தித்திரி பக்ஷிகளாக ஆகி நண்பர் கக்கிய வேதங்களை பாக்கியில்லாமல் உண்டுவிட்டோம்.

வைசம்பாயனர்:— குழந்தைகளே! நீங்கள் தித்திரி பக்ஷிகளாக ஆகி உண்டதால் இந்த யஜுஸுக்களுக்கு 'தைத்திரீயசாகை' என்ற பெயர் ஏற்பட்டு விளங்கும். உங்களுக்கும் தைத்திரீயர் என்ற நாமம் சித்திக்கும். எனக்கு அதிக சந்தோஷம் வரும்படி நீங்கள் நடந்து கொண்டதால், உங்கள் புகழ் எங்கும் பரவும். இந்த யஜுர்மந்திரங்களுக்கு மற்றவைகளைவிட அதிகமாக கர்மாக்களில் விநியோகமேற்படும். என்னுடைய பூர்ணமான ஆசீர்வாதம் எப்போதும் உங்களுக்கு உண்டு.

சிஷ்யர்கள்:— தங்களுடைய பிரம்மஹத்தி தோஷம் நீங்குவதற்கான விரதங்களை ஆரம்பிக்க அனுமதி அளியுங்கள்.

வைசம்பாயனர்:— சரி குழந்தைகளே, இன்றே தொடங்கலாம். (த்ரிசங்குவின் கையைப் பிடித்துக்கொண்டு உள்ளே போகிறார்.)

போதாயனர் :— வைகானஸரே! யாஜ்ஞுவல்க்கியர் பிரிந்துபோனது வருத்தமாகத்தானிருக்கிறது.

மாஹாசமஸ்யர் :—பத்து வருஷங்களுக்கு மேல் சேர்ந்து வாழ்ந்தபின் பிரிந்துபோனுல் கஷ்டமாகத் தானே இருக்கும்.

வைகானஸர் :— எப்படியோ தொடங்கி, என்னவெல்லாமோ நடந்து, கடைசியில் எங்கோ போய் முடிந்து விட்டது.

போதாயனர் :— என்ன செய்வது? விதி யாரை விட்டது? பெரியவர்களுக்குக் கோபம் வந்தாலும் அதனுல் உலகத்திற்கு க்ஷேமம் உண்டாகும் என்று சொல்லுவார்கள்,

மாஹாசமஸ்யர் :— நீர் சொல்லுவது சரிதான் நான் அப்படிக் கூறக் கேட்டிருக்கிறேன். "நாரதர் கலகம் நன்மையில் முடியும்" என்று.

வைகானஸர் :— இந்த அஸம்பாவிதங்கள் இத்துடன் முற்றுப்பெறட்டும்.

போதாயனர் :— மேகங்கள் கலைந்துவிட்டன. சூரியன் பிரகாசிக்கின்ருன். அவன் ஸர்வ மங்களங்களையும் அருள் செய்வான்.

த்ரிசங்கு :— (வந்துகொண்டே) நண்பர்களே! குருநாதர் உங்களை அழைத்து வரச்சொன்னுர். விரதம் தொடங்க கோமதியில் நீராடிவிட்டு வரச்சொன்னுர்.

மற்றவர்கள் :—இதோ வந்துவிட்டோம்

(போகிருர்கள்)

(திரை விழுகிறது)

முதலாவது அங்கம் முற்றிற்று.

இரண்டாவது அங்கம்

காட்சி I

(திரை விலக)

[மஹாமேரு மலையின் கிழக்குப் பார்சுவத்தில் யாஜ்ஞவல்க்யரின் ஆசிரமம் தென்படுகிறது. திரைக்குள் நிழற்காட்சியாக யாஜ்ஞவல்கியர் பஞ்சாக்கினி மத்தியில் ஒற்றைக் காலில் நின்று சூரிய பகவானை நோக்கி தவம் செய்யும் அற்புதமான காட்சி தெரிகிறது. வெளியே, ஒரு வடவிருக்ஷத்தினடியில் உட்கார்ந்து யாஜ்ஞவல்கியரின் சிஷ்யர்கள் இருவர் ஸம்பாஷித்துக்கொண்டிருக்கின்றனர்]

காண்வர் :— நண்பரே, நாம் இங்கு வந்து ஒரு வியாழ வட்டம் சென்றுவிட்டது!

தத்யங் ஆதர்வணர் :—ஆமாம்! தோழரே. இப்பொழுது குருபகவான் துலாத்தில் ஸஞ்சரிக்கிறார். அப்பொழுதும் வியாழன் துலாத்தில்தான் இருந்தார். எனக்கு இன்றைக்குப் போலிருக்கிறது நாமிருவரும் வைசம்பாயன மகரிஷியின் ஆசிரமத்திற்குப் போய்ச் சேர்ந்ததும்—

காண்வர் :— அப்போது யாஜ்ஞவல்க்கியர் வெளியே வருவதற்கும் சரியாயிருந்தது. அவரைப் பின்பற்றி வனம், வனாந்தரங்கள், காடுகள், நாடுகள் கடந்து இந்த மேரு மலைக்கு வந்தோம். இங்கு நம் குருவாகிய யாஜ்ஞவல்க்யர் தவம் செய்து வருகிறார்கள். நாமும் சுச்ரூஷை செய்து வருகின்றோம்.

தத்யங் ஆதர்வணர் :—ஆமாம், குருகுலவாஸம் செய்து யஜுர்வேத அத்தியயனம் செய்ய வைசம்பாயன மகரிஷியின் ஆசிரமத்திற்கு வந்தோம். ஆனால் நமக்கு வேறு விதமான பணி கிடைத்திருக்கிறது. நமது குரு புதிதான வேதங்களை அறிவதற்காக, வேதவியாஸர் உபதேசிக்காத, ஆகையினால் வைசம்பாயன

மகரிஷிக்குத் தெரியாத யஜுஸுகளை அறிய கடுந்தவம் புரிகிறார். அவருக்குப் பணிவிடை புரியும் பாக்கியம் நமக்குக் கிட்டியிருக்கிறது.

காண்வர் :— நண்பரே! நடப்பது எல்லாம் நன்மைக்கே. பிரம்மராதருடைய புத்திரரான யாஜ்ஞ வல்க்கியரும் ஸாமான்யமான முனிவரல்ல இவர் தவம கட்டாயம் வெற்றி பெறும். அயாதயாமங்களை இவர் அறிவார். நமக்கும் உபதேசிப்பார். அதிருக்கட்டும், போன மாதம் மிதிலைக்குச் சென்று நேற்றுத் திரும்பி வந்தீரே, ஏதாவது விசேஷமுண்டோ?

தத்யங் ஆதர்வணர்:—மிதிலாபுரியிலிருக்கும் வயோதிகர் களான என் மாதாபிதாக்களைப் பார்த்துவிட்டு வரும் வழியில் போதாயனரை ராஜவீதியில் சந்தித்தேன். இங்குள்ள விருத்தாந்தங்களையெல்லாம் கூறினேன் ஆவலுடன் கேட்டார் அங்கு நடந்த ஸம்பவங்களையும் விடாமல் கூறினார்.

காண்வர் :— நண்பரே, நமது பரமகுருவான வைசம்பாயனருக்கு பிரம்மஹத்திதோஷம் நீங்கி விட்ட தல்லவா?

தத்யங் ஆதர்வணர் :— நமது குருவான யாஜ்ஞ வல்கியர் சென்ற பிறகு மற்ற சீடர்கள் எல்லாரும சேர்ந்து விரதங்களை அனுஷ்டித்ததாகவும், அதன் பயனாக மகரிஷியின் தோஷம் நீங்கி பழையபடி பூர்ண மான பொலிவுடன் விளங்குவதாகவும் கூறினார்.

காண்வர் :— பிறகு என்னென்ன விசேஷங்கள் சொன்னார்?

தத்யங் ஆதர்வணர் :—நண்பரே! காத்தியாயனர் முதலிய முனிகுமாரர்கள் சிஷ்யர்களாகச் சேர்ந்திருப்ப தாகவும் யஜுர்வேதத்தை 27 சாகைகளாகப் பிரித்து சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்து வருவதாகவும் கூறினார். ஒரு அதிசயமான நிகழ்ச்சியைப் பற்றியும் நவின்றார்.

காண்வர் :— அதென்ன அற்புதம்? என் மனம் அறியத் துடிக்கிறது. சீக்கிரமாகச் சொல்லும்.

தத்யங் ஆதர்வணர் :— ஜனக மகாராஜாவுக்கு ஸகல லக்ஷணங்களும் பொருந்திய குமாரன் அவதரித்திருக்கிறனம்.

காண்வர் :— தோழரே! குமாரன் பிறப்பதில் அதிசயமென்ன இருக்கிறது? சந்தோஷமான செய்தி என்று கூறும்.

தத்யங் ஆதர்வணர் :— காண்வரே, மகிழ்ச்சி தரும் ஸம்பவம் தான். அதில் அதிசயமும் கலந்திருக்கிறது. எப்படியென்றுல் குழந்தை பிறந்ததிலிருந்தே ப்ரஹ்ம தேஜஸ்ஸுடன் விளங்குகிறுனம். வைசம்பாயனரின் மருமகனுன மரணமடைந்த பாலகனேப்போன்ற முகச்சாயல் இருக்கின்றதாம். பாலகனே ராஜகுமாரனுக அவதாரம் பண்ணியிருக்கிறதாக எல்லாரும் பேசிக்கொள்ளுகிறுர்களாம்.

காண்வர் :— சாதாரண ஜனங்கள் பலவிதமாகப் பேசுவார்கள். ஆனுல் அரசன், மஹரிஷி, ராஜகுரு இவர்கள் என்ன அபிப்பிராயம் தெரிவிக்கிறுர்கள்?

தத்யங் ஆதர்வணர் :— அவர்களும் அதை நம்புகிறுர்கள். உபநயனம் ஆனபின் ராஜகுமாரனே வைசம்பாயனரின் ஆசிரமத்துக்கே குருகுலவாஸத்துக்கு அனுப்பப்போவதாக ஸதானந்தரே மஹரிஷியிடம கூறினுராம்.

காண்வர் :— ரொம்பவும் ஆச்சரியமும், ஆனந்தமும் விளேவிக்கும்படியான செய்திகள் தான். மாத்யான்ஹிக காலம் நெருங்கிவிட்டது. ஸ்னனத்துக்குப்போவோமா?

தத்யங் ஆதர்வணர் :— ஆகட்டும்.

(இருவரும் எழுந்திருக்கிறுர்கள்)

(திரை விழுகிறது.)

காட்சி 2

[திரை விலக நிழற்காட்சியாக யாஜ்ஞவல்க்கியர் தவம் செய்வது தென்படுகிறது. எதிரே சூரிய பகவான் தரிசனம் கொடுக்கிறார். யாஜ்ஞவல்க்கியர் சூரிய பகவானை நமஸ்கரித்து துதிக்கின்றார்.]

யாஜ்ஞவல்க்கியர் :— ஹே சூரிய பகவானே, உமக்கு நமஸ்காரம். மோக்ஷத்திற்கு வழியானவரே, அளவற்றதான ருக், யஜுஸ், ஸாமங்களின் உருவமாக விளங்குபவரே, உமக்கு வணக்கம். வெய்யிலுக்கும் மழைக்கும் காரணமானவரே! உலகம் முழுவதற்கும் காரணமானவரே, எனது பிரணாமங்களை ஸமர்ப்பிக்கின்றேன். கலை, காஷ்டை, நிமிஷம் முதலான காலங்களை அறிவிப்பவரே, பிரணவஸ்வரூபமானவரே, நமஸ்காரம். தன் கிரணங்களாலேயே சந்திரனைப் போஷித்து, தேவதைகளையும், பித்ருக்களையும் ரக்ஷிப்பவரே, ஆதித்ய பகவானே, வணங்குகிறேன்,

சூரியபகவான் :—முனிவரே! உம்முடைய தவத்தால் ஸந்தோஷம் அடைந்தேன். உமக்கு வேண்டும் வரத்தைக் கேளும்.

யாஜ்ஞவல்க்கியர் :—பகவானே, உம்மை முன்னும் பின்னும் பார்சுவங்களிலும் வணங்குகிறேன். வைசம்பாயன மகரிஷிக்குத் தெரியாத யஜுர்வேதங்களை எனக்கு பிரஸாதிக்கவேண்டும். கிருபை பண்ண வேண்டும்.

சூரியபகவான் :— யாஜ்ஞவல்க்கிய முனிவரே, மிகவும் மகிழ்ச்சி. நல்ல வரம் கேட்டீர், தந்தேன். நான் இப்போது உமக்கு உபதேசிக்கப்போகும் மந்திரங்களை வேதவியாஸர் வைசம்பாயனருக்கு உபதேசம் செய்யவில்லை. ஆகையினால் அவருக்குத் தெரியாது. ஹயக்கிரீவ மூர்த்தியாக இருந்து வேதங்களை உபதேசிப்பது சிலாக்கியம். ஆகவே அவ்விதமாகவே குதிரை முகத்தோடு ஆவிர்பவித்து அத்தியயனம் சொல்லி வைக்கிறேன்.

யாஜ்ஞவல்க்கியர் :— பகவானே, தங்கள் சித்தம் அடியேன் பாக்கியம்.

(சூரியபகவான் மறைந்த குதிரை முகத்துடன் திரும்பவும் தோன்றுகிருர்)

சூரியபகவான் :— என் பிரியமான சிஷ்யரே, கவனமாகக்கேளும். இப்போது நான் உமக்கு கூறப்போகும் மந்திரங்களுக்கு சுக்லயஜுர்வேதம் என்று பெயர். இவைகளை ஆதியில் பிரஜாபதியிடமிருந்து ஸாஞ்ஜீவியின் புத்திரரான மாண்டுகாயனி முதலிய முனிவர்கள் பெற்று பரம்பரையாக அத்தியயனம் பண்ணப்பட்டவையாகும். இப்போது இவற்றை நீர் அடைந்து உலகில் விளங்கும்படி செய்யப்போகிறீர். இதனுல் உம் புகழ் பார் உள்ளளவும், கார் உள்ளளவும், மலை உள்ளளவும், நிலையாகப் பேசப்படும்.

யாஜ்ஞவல்க்கியர் :— ஆசார்ய பகவானே, தங்கள் கடாக்ஷத்தால் அடியேனும் கடைத்தேற அருள் புரிய வேண்டும் தங்கள் ஆசியால் அடையமுடியாததும் உண்டோ? தயவு புரியவேண்டும் காத்துக்கொண்டிருக்கிறேன்.

சூரியபகவான் :—முனிவரே ! உம் தவமும் குருபக்தியும், மேதையும், வினயமும், போற்றுதற்குரியனவேயாகும். ஆனைக்கும் அடிசறுக்கும் என்பதுபோல நீர் வைசம்பாயன மகரிஷியிடம் மனஸ்தாபப்பட்டு வந்தது உலகத்திற்கும் ஒரு விதத்தில் நன்மையே. எனக்கும் ஒரு பெரிய சுமையின் பாரம் இறங்கிவிடும். கற்ற வித்யையைக் கற்கப் பாத்திரமான சீடன் கிடைப்பதை விட ஒரு குருவிற்கு மகிழ்ச்சி தரும் விஷயமுமுண்டோ! இல்லை ! இல்லவேயில்லை.

யாஜ்ஞவல்க்கியர் :— ஐயனே, எல்லாம் எமையாளும் ஈசன் செயல். இறைவனையும் குருவையும் வேருக ஒரு நாளும் மதித்ததில்லை.

சூரியபகவான்:-அப்படியா சீடரே, மிகவும் சந்தோஷம்

யாஜ்ஞவல்க்கியர் :— குருநாதரே, எப்போதாவது ஈசுவரனுக்கும் ஆசாரியனுக்கும் ஏற்றத்தாழ்வு குறிக்க வேண்டிய ஸந்தர்ப்பம் நேருமாயின் அப்போதும் குரு நாதருக்கே ஏற்றம் கூறுவேன். இது திண்ணம் இது என் பூஜ்ய பிதாவான பிரம்மராதர் அருளிய உபதேச மாகும். ஸ்வாமி, உபதேசிக்கும்படி வேண்டுகிறேன்.

சூரியபகவான் :— ஸௌம்யரே, கவனமாகக் கேளும்.

ओं पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥

ओं शान्तिः शान्तिः शान्तिः ।

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம், பூர்ணாத் பூர்ணமுதச்யதே ।
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே ॥

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।

(இதை யாஜ்ஞவல்க்கியரும் திரும்பச் சொல்லுகின்றார். தொடர்ந்து உபதேசம் செய்கிறார் சூரியபகவான்)

(திரை விழுகிறது.)

காட்சி 3

(திரை விலக)

[மகாமேரு பர்வதத்தில் யாஜ்ஞவல்க்கிய முனிவரின் ஆசிரமம். தர்ப்பாஸனத்தில் முனிவர் பிரம்ம தேஜஸ் பொலிய வீராஸனத்தில் உட்கார்ந்திருக்கிறார். இரு பக்கங்களிலும் கண்வர், தத்யங் ஆதர்வணர் முதலிய சீடர்கள் அமர்ந்திருக்கின்றனர். உரையாடல் நடைபெறுகிறது.]

யாஜ்ஞவல்க்கியர் :—என் பிரிய சிஷ்யர்களே, எனக்கு சூரியபகவான் கருணை கூர்ந்து உபதேசித்த வேதத்திற்கு "சுக்ல யஜுர்வேதம்" என்றும் "வாஜஸநேய ஸம்ஹிதை" என்றும் நாமங்கள் உண்டு. வாஜி என்றால் குதிரை. குதிரை வடிவத்தில் வந்து ககன்

உபதேசித்ததால் இப்பெயர் பெற்றது. இந்த வேதத்தை அத்தியயனம் செய்கிறவர்களுக்கு வாஜஸனேயர் என்னும் பெயர் உண்டாகப்போகிறது.

காண்வர் :— யாராவது ஒருவர் கேட்டால் நம்ப முடியாத ஆச்சரிய சம்பவங்கள் குருவின் வாழ்க்கையில் நடைபெறுகின்றன. நான் கூட இருந்ததினுல்தான் பிழைத்தேன், நம்புகிறேன்.

யாஜ்ஞவல்க்கியர் :— குழந்தைகளே, உலகில் நடக்கக் கூடாதது ஒன்றுமில்லை. ஆசாரிய பக்தியும், விடா முயற்சியும் இருக்கவேண்டும். அப்போது மனிதனுல் சாதிக்க முடியாதது ஒன்றுமேயில்லை.

தத்யங்ஆதர்வணர் :— விசுவாமித்திர மஹரிஷியின் அதி அற்புதமான சரிதங்களை என் பிதாமஹரிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கிறேன். அவைகளைவிட அதிசயமானது குருநாதரின் சரித்திரம்

யாஜ்ஞவல்க்கியர் :— சிஷ்யர்களே! எல்லாம் குரு நாதாள் அனுக்ரஹம். ப்ரத்யக்ஷமாக எல்லோருக்கும்-பண்டித பாமர வித்யாஸமில்லாமல், ஏன்! புண்ய சாலிகள், பாபிகள் என்ற பேதம் இல்லாமல் – காட்சி அளித்துப் போஷித்து அவரவர் கர்மாக்களைச் செய்யத் தூண்டி, பிரபஞ்சத்தை நடத்திவரும் – இயக்கிவரும் – ஸூர்யபகவானுக்கு வேருக ஒரு தெய்வமுமுண்டோ?

காண்வர் :— ஸ்வாமி! எனது நண்பர் தத்யங்ஆதர்வணர், தன் பெற்றோரைப் பார்ப்பதற்கு ஊருக்குப் போக விரும்புகிருர். தங்களிடம் கூற ஸங்கோசப்படுகிருர்.

யாஜ்ஞவல்க்கியர் :— குழந்தாய், நீ ஸுகமே போய் வா. மிதிலைக்குச் சென்று உன் மாதாபிதாக்களை வணங்கி அவர்களுக்குப் பணிவிடைசெய்து வாழ்வாயாக. அத்யயனத்தை ஒருநாளும் கைவிடாதே. உரிய காலத்தில் உன் பெற்றோர் விருப்பப்படி நல்ல குலத்திலுதித்த கன்னிகையை மணந்து கிருஹஸ்தனுக வாழ்ந்துவருவாயாக.

தத்யங் ஆதர்வணர் :—(எழுந்து குருவை வணங்கி) ஸ்வாமீ, தங்களைப் பிரிந்து போவது எனக்கு மிகவும் மனதிற்கு கிலேசத்தைக் கொடுக்கிறது. ஆயினும் பெற்ரேரின் கட்டளையை மீறவும் முடியவில்லை. தர்ம சங்கடமான நிலை. இருதலைக்கொள்ளி எறும்புபோல் என் உள்ளம் ஊசலாடுகிறது.

யாஜ்ஞவல்க்கியர் :— வத்ஸா! வருத்தம் வேண்டாம். உன் பிரிவு எனக்கும் வருத்தம் தரவில்லையா என்ன? ஆயினும் அதை அடக்கிக்கொள்கிறேன். காண்வன் என்னேடு இருப்பான்: அவன் நைஷ்டிக பிரம்மசாரியாகவே இருப்பான். நீ ஊருக்குப்போய் இல்லறத்தை ஏற்று சுகமாக வாழ்வாயாக. மற்ற மூன்று ஆசிரமத்தார்களும், அதாவது பிரம்மசாரி, வானப்பிரஸ்தர், ஸன்னியாசி இவர்கள் மூவரும் கிருஹஸ்தனையே ஆச்ரயித்து வாழவேண்டியிருக்கிறது. ஆகவே இல்லறமும் நல்லறமேயாகும்.

தத்யங் ஆதர்வணர் :— ஸ்வாமீ, வணக்கம். போய் வருகிறேன். நண்பர்களே, உங்களுக்கும் என் நமஸ்காரங்கள். வருகிறேன்.

(எல்லோரையும் வணங்கி விடைபெற்றுச் செல்கிருர். எல்லோரும பிரிவு துக்கம் தாங்காமல் கண்ணீரைத் துடைத்துக்கொள்கின்றனா. சிறிது தூரம் சென்றபின் திரும்பி வந்து) ஸ்வாமீ, இனி தங்களைப் பார்ப்பது எப்போது?

யாஜ்ஞவல்க்கியர் :— ஸௌம்யா! மஹா மேருவில் எனக்கு இன்னம் கொஞ்சகாலம்கூட வேலையிருக்கிறது. இந்த சுக்ல யஜுர் வேதத்தை 15 சாகைகளாகப் பிரித்து சிஷ்யர்களுக்குச் சொல்லிவைத்து அவர்களையும் அழைத்துக்கொண்டு மிதிலைக்கு வருவேன். அப்போது வந்து உன்னை ஆசீர்வதிக்கிறேன். ஸுகமாய்ப் போய் வா. என் பூர்ணமான ஆசீர்வாதம உனக்கும் உன் பரம்பரைக்கும எப்போதும் உண்டு. (தத்யங் ஆதர்வணர் நமஸ்காரம் செய்துவிட்டுப் போகிருர்.)

காண்வர்:— குருநாதரே, ஒரு விண்ணப்பம் கேட்கலாமோ?

யாஜ்ஞுவல்க்கியர்:— குழந்தாய்! ஏன் தயக்கம்? எது வேண்டுமானாலும் கேட்கலாம். நான் தான் கோபத்தை வென்றுவிட்டேனே!

காண்வர் :— தாங்கள் மிதிலை போனால் வைசம்பாயனரைப் பார்ப்பீர்களா?

யாஜ்ஞுவல்க்கியர்:—கட்டாயம் தரிசிப்பேன். எங்களுக்குள் இருக்கும் மனஸ்தாபம் தீர்ந்து அளவளாவிக் கொள்ளுவோம். நான் வினயமாக வணங்குவேன். ஆசீர்வதித்து அவரும் என்னை அணைத்துக் கொள்ளுவார். இதில் உனக்கு சிறிதும் ஸந்தேஹம் வேண்டாம். பெரியவாளின் கோபம் உடன் தணிந்து விடும்.

காண்வர் :— ஸ்வாமி! அதி பிரச்னம் கேட்டதற்கு மன்னித்துவிடுங்கள். ஏதோ மனதில் தோன்றியதைக் கேட்டுவிட்டேன்.

யாஜ்ஞுவல்க்கியர் :— இதில் தவறுதல் ஒன்றுமில்லை. காலதேவன் எல்லாத் துயரங்களையும் பூசல்களையும் போக்கிவிடுகிறான். காலப்போக்கில் கோபம், தாபம், துக்கம், வஞ்சம் எல்லாம் மறைந்து மண்ணாகிவிடுகின்றது. மனிதர்கள் மன்னிக்கவும மறக்கவும் கற்றுக் கொள்ளுகின்றனர்.

காண்வர் :— குருநாதரே, மாத்யாந்ஹிக ஸ்நானத்துக்குப் போகலாமா? காலம் நெருங்கிவிட்டதென்று நினைக்கிறேன்.

யாஜ்ஞுவல்க்கியர் :— சீடர்களே, போவோம் வாருங்கள். பேசிக்கொண்டிருந்ததில் பொழுது போனதே தெரியவில்லை.

(எல்லோரும் எழுந்து போகிறார்கள்.)

(திரை விழுகிறது)

இரண்டாவது அங்கம் முற்றும்.

மூன்றாவது அங்கம்

காட்சி I

(திரைக்குள்ளே)

ईशिता सर्वभूतानां सर्वभूतमयश्च यः ।
ईशावास्येन संबोध्यं ईश्वरं तं नमाम्यहम् ॥

(ஈசிதா ஸர்வபூதானும் ஸர்வபூதமயச்ச ய: l
ஈசாவாஸ்யேந ஸம்போத்யம் ஈச்வரம் தம்
நமாம்யஹம் ll)

என்ற பாடல் கேட்கிறது. திரை விலக, தத்யங்ஆதர்வணரின் இல்லம். அவரும் அவருடைய குமாரர் ஸுபோதரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கின்றனர்.)

தத்யங்ஆதர்வணர் :— குழந்தாய் ஸுபோதா, நீ ஆசைகளை அடக்கியிருக்கிருய். இல்லறத்தானின் நியமங்களை வழுவாமல் அனுஷ்டித்து வருகிருய். அத்துடன் மோக்ஷ இச்சை உள்ளவனுகவும் இருக்கிருய். எல்லாவற்றிற்கும் மேலாக என்னையே சரணடைந்திருக்கிருய். உனக்கு மகிழ்ச்சியுடன் உபதேசம் செய்கிறேன்.

ஸுபோதர் :— தந்தையே, எல்லாம் தங்கள் ஆசீர்வாதம். தாங்கள் மஹரிஷி யாஜ்ஞவல்கியரிடமிருந்து கற்ற வேதங்களை அடியேனுக்கு அருளவேண்டும். அவர் சரித்திரத்தைத் தாங்கள் கூறியது முதல் எனக்கு அவர் உபதேசங்களைக் கேட்க ஆவலாயிருக்கிறது. நிலவுக்கு ஏங்கும் சகோரம் போலவும், மழைக்குத் தவிக்கும் சாதகம் போன்றும் நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

தத்யங் ஆதர்வணர் :— வத்ஸா! அப்படியே உனக்குத் தத்துவங்களைக் கூறுகிறேன். கவனமாகக்கேள். முதலில் சாந்தி பாடம் சொல்லுவோம்.

ओं पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥

ओं शान्तिः शान्तिः शान्तिः ।

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே I
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே ॥

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

(இருவரும் சொல்லுகின்றனர்)

ஸுபோதர் :-குருநாதரே! இந்த சாந்தி மந்திரத்தின் பொருளை விளக்கும்படி வேண்டுகிறேன்.

தத்யங் ஆதர்வணர் :— ஸௌம்யனே! முதலில் பதங்களின் பொருளைக் கூறிவிட்டுப் பின்னால் தத்துவத்தை விளக்கமாகக் கூறுகிறேன். அது பூர்ணம் இதுவும் பூர்ணம். பூர்ணத்திலிருந்து பூர்ணம் உதயமாயுள்ளது பூர்ணத்திலிருந்து பூர்ணத்தை எடுத்த பின்னும் பூர்ணமே எஞ்சி நிற்கின்றது. மூன்றுவிதமான அமைதியும் நிலவட்டும்.

ஸுபோதர் :— ஸ்வாமீ! பூர்ணத்திலிருந்து பூர்ணத்தை எடுத்தால் ஒன்றும் மிஞ்சி நிற்காதே! முழுமையாக எப்படி மிஞ்சியிருக்கமுடியும்? தாங்கள் கூறுவது கணித சாஸ்திரத்துக்கு முரணாக இருக்கின்றதே.

தத்யங் ஆதர்வணர்:—அப்பனே! பரம்பொருள் கணித நூல் நியதிக்கு அடங்காது. விளக்கமாகக் கூறுகிறேன். கேள். அது பூர்ணம். அது என்பது பரப்ரஹ்மத்தைக் குறிக்கிறது. ஜகத்காரணமான அது பூர்ணம் எங்கும் நிறைந்துள்ளது. எல்லாமாக உள்ளது. அதைக் காட்டிலும் வேறாக ஒன்றுமில்லை. இதுவும் பூர்ணம். இது என்பது காரிய ப்ரஹ்மத்தைக் குறிக்கும் அதாவது நாமரூப உபாதிகளுடன் கூடிய ஜீவசைதன்யமும் பூர்ணம் தான். பூர்ணமான காரண ப்ரஹ்மத்திலிருந்து

தான் பூர்ணமான காரிய ப்ரஹ்மம் வெளிவந்திருக்கிறது. உபாதிகளான நாம ரூபங்கள் பூர்ணமாக இல்லா விட்டாலும் அதை விலக்கி சைதன்ய ஸ்வரூபத்தை மட்டும் பார்த்தால் ஜீவாத்மாவும் பூர்ணம் தான். உபநிஷத்துக்களாலும் ஸத்குருவின் உபதேசத்தாலும், பரமாத்மாவிடமிருந்து தன்னை வேறுபடுத்திக்காட்டுகிற அவித்யையால் தோன்றும் நாமரூப உபாதிகளின் தன்மையை நன்கு ஆராய்ந்து அவைகளை விலக்கி தன் ஸ்வரூபத்தை மட்டும் நன்கு கவனித்துப் பார்த்தால் பூர்ணத்தன்மை நன்கு விளங்கும். அப்பொழுது தன்னை பரப்ரஹ்மமாகவே பார்ப்பான். வெவ்வேருக காட்டிக் கொண்டிருந்த அவித்யையும உபாதிகளும் விலகி விட்டால் பூர்ணமான ஒரே வஸ்து தான் எஞ்சி நிற்கும். மஹாவாக்யங்களின் கருத்தை இந்த மந்திரத்தில் காணலாம்.

ஸுபோதர்:— முவ்வகையிலும் சாந்தி நிலவுக என்று சொன்னீர்களே, அதன் பொருளையும் விளக்கிக் கூற வேண்டும்.

தத்யங் ஆதர்வணர் :— ஆதிதைவிக, ஆதிபௌதிக, ஆத்யாத்மிகமான இடையூறுகள் ஏற்படலாம். எதிர் பாராத காரணங்களாலும், அறிந்துள்ள காரணங் களாலும் இடையூறுகள் நேரலாம். பிறிதொருவகை நம்முள்ளேயிருந்து எழலாம். அதற்காக, அவைகளால் நமது பாடம் தடைபடாமலிருக்க, மும்முறை சாந்தி சொல்லப்பட்டது. இன்று ஈசாவாஸ்யோபநிஷத்தைத் தொடங்குகிறேன்.

ओं ईशावास्यमिदं सर्वं यत्किंच जगत्यां जगत् ।
तेन त्यक्तेन भुञ्जीथा मा गृधः कस्यस्विद्धनम् ॥

ஓம் ஈசாவாஸ்யமிதம் ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்।
தேந த்யக்தேன புஞ்ஜீதா மா க்ருத: கஸ்யஸ்வித் தனம்॥

(குரு சொல்ல சீடனும் உடன் சொல்லுகிருன்)

தத்யங் ஆதர்வணர்:— குழந்தாய், மந்திரத்தின் அர்த்தம் சொல்லுகிறேன். நிலையற்ற இவ்வுலகில் தோன்றி மறையும் சராசரப் பொருட்கள் எல்லாம் ஈசனுல் வியாபிக்கப்பட்டு இருக்கின்றது. அதாவது எல்லாப் பொருள்களும் ஆண்டவனிடத்திலேயே தங்கியிருக்கின்றன. ஆகவே எல்லாவற்றையும் தியாகம் செய்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். ஒருவர் பொருளையும் நீ இச்சிக்காதே.

ஸுபோதர்:— தந்தையே, இந்த ஜகத்தில் எந்த எந்த வஸ்துக்கள் இருக்கின்றனவோ அவை யாவும் ஈசுவர பாவனையினுல் மறைக்கவேண்டும் என்பதை அறிந்துகொண்டேன். தியாகத்தால் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்பதன் தாத்பர்யம் என்ன?

தத்யங் ஆதர்வணர் :— எல்லாம் பரமாத்மாவின் ஸ்வரூபம். ஒவ்வொன்றிலும் அவர் இருக்கிருர். அவரன்றி ஒன்றும் கிடையாது என்று தெரிந்து கொண்டாயல்லவா ? அந்த எண்ணம் திடமாய் விட்டால் 'புத்திரன்' முதலிய ஏஷணுத்ரயங்களை தியாகம் செய்ய அதிகாரம் உண்டாகிறது. எல்லாவற்றிலும் ஆசாபாசங்களை விட்டுத் தியாகம் செய்து விட்டு உயிரை ரக்ஷிப்பதற்கு மட்டும் அவசியமானதை ஈசுவரன் கொடுத்ததென்று ஏற்றுக்கொண்டு வாழ வேண்டும். எவருடைய பொருளுக்கும் ஆசைப்படாதே ஜகத் உபாதியை விலக்கிவிட்டு ஈசுவரனை மட்டும் பஜி. நீ ஒருவருடைய தனத்திலும் (அது உன்னுடையதாயிருந்தாலும் சரி, அல்லது பிறருடையதாயிருப்பினும் சரி அதில்) ஆசை வைக்காதே.

ஸுபோதர் :— பிறர் பொருளை இச்சிக்கவேண்டாம், என்பது சரி. ஆனுல் தன் தனத்தில் பிரியம் வைத்தால் என்ன தவறு?

தத்யங் ஆதர்வணர் :—குழந்தாய், நான் சொன்னதை நீ சரியாகச் சிந்தித்துப்பார் ? தனம் உன்னுடையது

எப்படியாகும்? எல்லாம் ஆத்மா. எல்லாப்பொருளும் ஈசுவரமயம். ஆகையினுல் உன் தனமென்றும் பிறர் தனமென்றும் சொல்வதே சரியல்ல பொருளில் ஆசை கூடாது என்பதே முக்கியம். எவருக்கும் சொந்தமான பொருள் ஒன்றும் கிடையாது இவ்வுலகில் நம்முடன் நிலேத்திருப்பது ஒன்றுமில்லே. எல்லாம் அநித்தியமே. ஆகவே இந்த சூழ் நிலேயில் யார் விரும்புகிறது? எதை? எதற்காக என்று ஆலோசித்துப் பார்க்கவேண்டும் மகனே!

ஸுபோதர்:—தந்தையே, இப்போது புரிந்து கொண்டேன். ஸத்தியத்தை உணர்ந்த மனிதன் அன்றட வாழ்க்கையில் நடக்கவேண்டிய விதத்தை அறிந்து கொண்டேன்.

தத்யங்ஆதர்வணர்:—மகனே! இந்த ஞானமார்க்கம் எல்லாருக்குமே ஏற்பட்டதன்று. துறவறம் ஏற்றுக் கொண்டவர்களுக்கே முற்றிலும் பயன்படும்.

ஸுபோதர்:—ஸ்வாமீ! அப்படி ஞானமார்க்கத்தில் நடப்பதற்கு முடியாதவர்கள் என்ன செய்யவேண்டும்? எப்படி வாழ்க்கை நடத்தவேண்டும்?

தத்யங்ஆதர்வணர்:—குழந்தாய், ஞானமார்க்கத்தில் அதாவது நிவிருத்தி மார்க்கத்தில் போகும் பிரயாணிக்கு அதிகமான ஆற்றலும் மனேதிடமும் தேவை. துறவு உள்ளம் வேண்டும். இவை எல்லோருக்கும் வாய்ப்பது அரிது. இந்த குணங்கள் இல்லாதவர்கள் கர்மமார்க்கத்தில் பழகவேண்டும். இப்போது மந்திரத்தைக் கூறுகிறேன்.

> कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेच्छतँ समाः ।
> एवं त्वयि नान्यथेतोऽस्ति न कर्म लिप्यते नरे ॥

குர்வந்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேத்சதம் ஸமா:।
ஏவம் த்வயி நான்யதேதோஸ்தி ந கர்ம லிப்யதே நரே॥

(இருவரும் சொல்லுகின்றனர்) குழந்தாய், முதலில் பதவுரையைக் கேள். இவ்வுலகில் வாழ விரும்புவோன், விதித்த கருமங்களைச் செய்துகொண்டே நூறாண்டு வாழ விரும்பட்டும். மானிடனே, இதுவே உனக்கு வழி கருமப்பற்றுத் தொடராமலிருப்பதற்கு இதைவிட வேறு வழியில்லை.

ஸுபோதர்:— தந்தையே, விஹித கர்மங்கள் எவை? விளக்கமாகக் கூறவேண்டும். கர்மமார்க்கத்தில் ஈடுபட்டவன் எதற்காக நூறாண்டுகள் வாழவிரும்ப வேண்டும்?

தத்யங் ஆதர்வணர் :— அவரவர் வர்ணத்துக்கும் ஆசிரமத்துக்கும் கட்டளையிடப்பட்ட கர்மாக்களை அவசியம் செய்யவேண்டும். ஒருவனுக்கு புருஷாயுஸ் நூறு என்று வேதம் கூறுகிறது. அவன் நூருண்டு வரையிலும் வாழலாம். தனக்கு ஏற்பட்ட ஆயுளுள்ளவரை என்பது இதன் கருத்து. பலனைக்கருதாமல் கர்மாக்களை மட்டுமே செய்து வரவேண்டும் பலனைக் கோரவில்லையாகையால் பலன்கள் உன்னை அடையாது. அவற்றுக்கும் உனக்கும் ஒரு ஸம்பந்தமுமில்லை. இந்தப்படி உனக்கு கிடைத்திருக்கும் ஆயுள் பூராவும் நடந்து வரவேண்டும். நூருண்டு வாழ்ந்தாலும் தன் கடமையைச் செய்துகொண்டே வாழ்வதாக உறுதி கொள்ள வேண்டும். இப்படி நீண்டகாலம் பற்றற்ற வாழ்க்கையை மேற்கொண்டால் படிப்படியாக விருப்பங்கள், வெறுப்புக்கள், சுயநலங்கள், பொருமை பேராசை முதலிய தீமைகள் தொலைகின்றன. மனம் பரிசுத்தமடைகிறது. பிறகு ஆத்மீக உறுதியுடன் ஞான மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டிய பக்குவத்தை நாளடைவில் அடையலாம்.

ஸுபோதர்:— குருநாதரே! எனக்கு ஒரு ஸந்தேஹம் ஞானமார்க்கத்தையோ அல்லது கர்மமார்க்கத்தையோ பின்பற்றுதவர்களின் கதி என்ன? இவ்விரண்டு வழிகளினின்றும் தவறியவர்களின் விஷயம் என்ன? அவர்கள் கதி யாது?

தத்யங் ஆதர்வணர் :— வத்ஸா ! சரியான கேள்வி. கவனமாகக் கேள்.

असुर्या नाम ते लोका अन्धेन तमसाऽऽवृताः ।
ताँस्ते प्रेत्याभिगच्छन्ति ये के चात्महनो जनाः ॥

அஸுர்யா நாம தே லோகா அந்தேன தமஸாऽऽவ்ருதா:
தாம்ஸ்தே ப்ரேத்யாபிகச்சந்தி யே கே சாத்மஹனோ
ஜனா: ll

அதாவது, நிவிருத்தி மார்க்கத்திலும் பிரவிருத்தி மார்க்கத்திலும் ஈடுபடாமல் மனம்போனபடி நடப்பவர்கள் ஆத்மஹத்தி செய்கிறவர்களுக்கு ஒப்பாவர். அவர்கள் செல்லும் - இறந்தபின் போகும்- உலகங்கள் காரிருள் சூழ்ந்த ஆசுர உலகங்களாம்.

ஸுபோதர் :— கேட்டால் புரிகிறதுபோல் தோன்றுகிறது விபரமாக விளக்கவேண்டும்.

தத்யங் ஆதர்வணர் :- மனிதனுக பிறந்தபின், ஞான வாழ்க்கை அல்லது தீவிரமான தொடர்ந்த கர்ம வாழ்க்கை இவைகளில் ஒன்றைப் பின்பற்றியாக வேண்டும். இல்லாதவரை அவன் மிருகத்துக்கு ஸமானமேயாகும். அவர்கள் தற்கொலை செய்து கொண்டவர்களேயாவர். அவர்கள் நிச்சயமாக இருண்ட பாதாளத்தில் விழுந்து தவிப்பார்கள். பண்பாடுகளிலும் ஆத்மீக உயர்விலும் பயங்கர வீழ்ச்சியை அடைவார்கள். இறந்துபோனவரிடத்தில் உயிர் உணர்ச்சி காணப்படாததுபோல் அஜ்ஞானியிடம் ஆத்மா இருக்கும் அடையாளமே செயலில் காண முடியாது. அவர்கள் ஆத்ம ஞானம் இல்லாதவர்கள். அஜ்ஞானமாகிற இருளால் மறைக்கப்பட்டிருக்கிருர்கள். அவர்கள் இறந்தபின் அசுர யோனிகளை அடைந்து மீண்டும் ஸம்ஸாரத்தில் பிரவேசிக்கிருர்கள். இப்படிக் கீழ்நோக்கியே போய்க்கொண்டு இருப்பார்கள். அவரது துஷ்கர்மாக்களுக்கு ஏற்ப ஸ்தாவரம் வரையுள்ள பிறவிகளை அடைவார்கள்.

ஸுபோதர்:— தந்தையே, நன்ருக விளங்கிவிட்டது. இப்பிரபஞ்சத்தில் வாழவேண்டிய விதமும், அப்படி வாழாதவர் அடையும் பலனும் பூர்ணமாகத் தெரிவித்தீர்கள். மேலும் நான் அறியவேண்டியவற்றைச் சொல்லுங்கள்.

ரிஷிபத்னி :— (ப்ரவேசித்து) வைசுவதேவத்திற்கு எல்லாம் ஸித்தமாயிருக்கிறது. உள்ளே வரலாமே!

தத்யங் ஆதர்வணர் :— குமாரா! இன்று இத்துடன் நிறுத்திக்கொள்வோம். நாளை ப்ரம்ஹதத்துவத்தைப் பற்றி உபதேசிக்கிறேன். உள்ளே போகலாம். ப்ரியே!

(இருவரும் எழுந்திருக்கிருர்கள்)

(திரை விழுகிறது)

காட்சி 2

(திரை விலக)

[தத்யங் ஆதர்வணரின் இல்லம் தெரிகிறது. முன் காட்சியைப்போல் தந்தையும் தனயனும் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருக்கின்றனர்.]

ஸுபோதர் :—என் அருமைத் தந்தையே, வணக்கம் ஒரு மனிதன் ஆன்மீக மார்க்கத்தையும் உலக ஸம்பந்தமான நன் முயற்சிகளையும் புறக்கணித்து, சோம்பேறியாக வாழ்ந்தால் அம்மூடன் தன்னையே அழித்துக் கொள்கிருன் என்று நேற்று கூறினீர்கள். இன்று பரம் பொருளைப்பற்றி கேட்க ஆவலுள்ளவனுயிருக்கின்றேன். தயவுசெய்து விளக்கமாகச் சொல்லவேண்டும்.

தத்யங் ஆதர்வணர் :—குழந்தாய் உன் இஷ்டம்போல் உபதேசிக்கிறேன். ஆனுல் எல்லையற்றதை எல்லையுள்ள மொழியினுல் விளக்குவது கஷ்டமே. ஆயினும் கூடிய வரை முயற்சிக்கின்றேன். நீயும் அவைகளைக் கேட்டு மனதில் வாங்கிச் சிந்தனை செய் பலன் அடைவாய்.

ஸுபோதர்:—ஸ்வாமீ அப்படியே ஆகட்டும்

தத்யங் ஆதர்வணர் :—ஸௌம்யா !

अनेजदेकं मनसो जवीयो नैनद्देवा आप्नुवन्पूर्वमर्षत् ।
तद्धावतोऽन्यानत्येति तिष्ठत्तस्मिन्नपो मातरिश्वा दधाति ॥

அநேஜதேகம் மனஸோ ஜவீயோ நைனத்தேவா
ஆப்னுவன் பூர்வமர்ஷத் ।
தத்தாவதோ ऽன்யானத்யேதி திஷ்டத்தஸ்மின்னபோ
மாதரிச்வா ததாதி ॥

(இருவரும் சொல்லுகின்றனர்.)

தத்யங் ஆதர்வணர் :—வத்ஸா ! ஆத்மா அசைவற்றது ஒன்றாயிருப்பது. மனதைவிட வேகமுள்ளது. தேவர்களும் அதை அடையமுடியாது. ஏனெனில் அவர்கள் அங்கேபோய்ச் சேருவதற்கு முன்னாலேயே அது அங்கே இருக்கிறது. அது நிலையாக இருந்துகொண்டே தாவி ஓடி வருபவர்களைக் கடந்து முன்னால் சென்றுவிடுகிறது. அதன இருப்பினாலேயே வாயுதேவன் எல்லா இயக்கங்களையும தாங்குகிறான்.

ஸுபோதர் :— தந்தையே! எல்லாம் ஒரே புதிராக இருக்கிறதே! அசைவற்றது என்கிறீர்களே! அது ஜடப்பொருளா? நின்றுகொண்டே எப்படி வேகமாகப் போக முடியும்? ஒவ்வொரு குணத்தையும் விளக்கமாக கூறவேண்டும்.

தத்யங் ஆதர்வணர் :— பரப்ரஹ்மம் அசைவற்றது என்றால சக்தியற்றது என்று அர்த்தமில்லை. எங்கும வியாபித்திருக்கும தன்மையைக் குறிப்பிடுவதாகும. அங்கு இங்கு எனாதபடி எங்கும பரந்திருக்கும் ஆத்மா ஒட்டபாட்டமற்று அசைவற்றுத்தானே இருக்கும. ஒரு இடத்தில மட்டும் இருப்பவன்தான் அசைய முடியும். தான் இல்லாத இடத்திற்குச் செல்லமுடியும். எங்குமிருக்கும் பரமாத்மாவுக்கு இல்லாத இடமேயில்லை. அது எப்படி அசையமுடியும? எங்கு செல்லமுடியும? ஆத்மா மனதைவிட வேகமானது. உலகில் மனமே

அதிக வேகமுள்ளது. அதைவிட வேகமென்றால் மனதிற்கும் எட்டாதது என்றுதான் பொருள். தேவர்களும் அதை அறிந்தாரில்லை. இங்கே தேவர்கள் என்றால் இந்திரியங்கள் என்று பொருள். அது சீக்கிரம் செயல்படுகின்ற இந்திரியங்களைத் தாண்டி முன்னே சென்றுவிடுகிறது. இந்திரியங்கள் போகுமிடங்களிலெல்லாம் ஆத்மா காண்கிறது. இதைக்கொண்டு இந்திரியங்களுக்கு முன்னதாக வேகமாக அவைகளைத் தாண்டி ஆத்மா வந்துவிட்டதென்று கூறப்படுகிறது. தான் மாறுபடாமல் இருந்துகொண்டு, வாயுதேவனைக் கொண்டு உலகில் எல்லா செயல்களையும் நடைபெறச் செய்கின்றது. ஆத்மாவே மூலாதாரம். அதன் ஸந்நிதியில் இருந்துகொண்டு, அதனிடம் சக்தியைப் பெற்றுக்கொணடு மாதரிச்வன் அதாவது பிராணவாயு ஜீவர்களை ஆட்டிவைக்கின்றது.

ஸுபோதர் :— தந்தையே! ஒருவாறு புரிந்துகொண்டேன். ஆத்மா சலனமற்றது மனதிற்கும் எட்டாதது. புலன்களையும் கடந்தது. ஓடும் பிறரைத் தான் எங்கும்இருந்தவாறே அது பின்தங்கச்செய்துவிடுகிறது. அதன் அருள் பெற்றே உயிர் ஆட்டிவைக்கிறது.

தத்யங் ஆதர்வணர் :—சபாஷ் ஸௌம்யனே! அடுத்த மந்திரத்தைக்கேள்.

तदेजति तन्नैजति तद्दूरे तद्वन्तिके ।
तदन्तरस्य सर्वस्य तदु सर्वस्यास्य बाह्यतः ॥

ததேஜதி தந்நைஜதி தத்தூரே தத்வந்திகே ।
ததந்தரஸ்ய ஸர்வஸ்ய தது ஸர்வஸ்யாஸ்ய பாஹ்யத: ॥

(இருவரும் சொல்லுகின்றனர்.)

அது சலிக்கிறது. சலியாமலுமிருக்கிறது. அது ஆத்ம ஞானமில்லாதவர்களுக்கு வெகு தூரத்திலும் ஞானிகளுக்கு சமீபத்திலுமிருக்கிறது. அது இந்த எல்லா ஜகத்துக்கும் உள்ளேயும் வெளியிலுமிருக்கிறது.

ஸுபோதர்:—முந்தின சுலோகத்தின் விவரணம் தான் இதுவும். அது அசையும் பொருளாயும் அசையாப் பொருளாயும் இருக்கிறது. ஆத்மா சரீரம் முதலான உபாதிகளுடன் கலந்தே காணப்படுகிறது. சரீரம் அசைவதைக்கொண்டு ஆத்மாவையும் அசைவதாகச் சொல்லுகிருேம். உபாதி ஸம்பந்தமற்ற சுத்தமான ஆத்மா அசையாப்பொருள். ஞானிகளாகிற மெய்யர்களுக்கு மிக அருகிலும், அக்ஞானிகளாகிற பொய்யர்களுக்கு அதிக தூரத்திலும் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் அகத்தேயும் புறத்தேயும் இருப்பது ஆத்மா. நன்ருகப் புரிந்துகொண்டேன் தந்தையே மேலும் கூறுங்கள்.

தத்யங் ஆதர்வணர்:—ஆத்மாவை அறிவது அவ்வளவு சுலபமல்ல. ஆத்ம ஞானியின் லக்ஷணங்களைக்கூறுகிறேன். ஒப்பிட்டுப்பார்த்துக்கொள்.

यस्तु सर्वाणि भूतान्यात्मन्येवानुपश्यति ।
सर्वभूतेषु चात्मानं ततो न विजुगुप्सते ॥

யஸ்து ஸர்வாணி பூதானி ஆத்மன்யேவானுபச்யதி ।
ஸர்வ பூதேஷு சாத்மானம் ததோ ந விஜுகுப்ஸதே ॥

(இருவரும் கூறுகின்றனர்)

தத்யங் ஆதர்வணர்:—எவன் அனைத்தையும் ஆத்மாவினிடத்திலேயே பார்க்கிருனே, அனைத்திடத்தும் ஆத்மாவைப் பார்க்கிருனே, அவன் எதையும் வெறுப்பதில்லை. நமக்குப் பலவாருகத் தோன்றும் உலகப் பொருள்கள் எல்லாவற்றையும் அவன் ஆத்மாவாகக் காண்கிருன் அதாவது ஆத்மாவைக்காட்டிலும் வேருன பொருள் ஒன்றுகூட இருப்பதாகவே அவன் காண்பதில்லை. இந்த சரீரத்திற்கு மட்டுமல்லாமல் எல்லாவற்றிற்கும் தன்னையே ஆத்மாவாகக் காண்கிருன். இவன் எதிலும் அலுப்பதோ சலிப்பதோ இல்லை. தன்னைக்காட்டிலும் வேருன

பொருளில் குற்றம் கண்டால் இவை ஏற்படும். பரிசுத்தமான தன்னைத் தவிர வேறு ஒன்றையும் காணாதவனுக்கு எப்படி வெறுப்பு ஏற்படும்? மேலும் கூறுகிறேன், கேள்

यस्मिन्सर्वाणि भूतान्यात्मैवाभूद्विजानतः ।
तत्र को मोहः कः शोक एकत्वमनुपश्यतः ॥

யஸ்மின் ஸர்வாணி பூதான்யாத்மைவாபூத் விஜானத:।
தத்ர கோ மோஹ: க: சோக ஏகத்வமனுபச்யத:॥

(இருவரும் சொல்லுகின்றனர்)

தத்யங் ஆதர்வணர்:—எப்போது இருக்கும் அனைத்தும் ஆத்மாவாகவே ஆய்விட்டதோ, அப்போது ஒற்றுமையைக் கண்ட அவனுக்கு மயக்கமேது? துக்கமேது? ஆத்ம ஞானி எப்படியிருப்பான் தெரியுமா? எவன் துன்பத்திலும் இன்பத்திலும் ஸமமாக இருக்கிறானோ? விருப்பையும் வெறுப்பையும் ஒன்றாகக் கருதுகிறானோ அவனே உண்மையான ஆத்மஞானி. எல்லாம் பரமாத்மாவின் ஸ்வரூபமாகையினால் ஒன்றையும் நிந்திக்கமாட்டான் அவன். அவனுக்கு ஸமதிருஷ்டி ஏற்பட்டு விட்டதால் அஞ்ஞானம், துக்கம் யாதும் அவனை நாடாது.

ஸுபோதர்:— தந்தையே, ஒப்பிட்டுப்பார்த்து அஜகஜாந்தர வித்தியாஸம் காண்கிறேன். தாங்கள் கூறும் ஒருமைக் காட்சியுள்ள சோக மோஹமற்ற ஞானி எங்கே? அடியேன் எங்கே? இன்னும் ஞானியின் குணகணங்களை விவரித்துச் சொல்லவேண்டும் ஸ்வாமீ!

தத்யங் ஆதர்வணர்:— குழந்தாய், கவனமாகக் கேள். 'ஜுகுப்ஸா' – வெறுப்பு – இகழ்ச்சி எப்போது உண்டாகிறது? தன் அமைப்பிற்கும் விருப்பத்திற்கும் குணத்திற்கும் மாறுபாடாக வெளியில் – உலகில் – நடக்கும் போது அதற்கு எதிர்ப்பாக வருத்தம், வெறுப்பு, பகை முதலிய உணர்ச்சிகளில் ஏதாவதொன்று பிறக்கிறது,

அந்த அருவருப்பான உணர்ச்சியே ஜுகுப்ஸா என்று கூறப்படுகிறது. ஆகையால் இந்த உணர்ச்சியை நீக்கிவிட்டால், அவன் எங்கும் ஒற்றுமையைக் காண்கிறான். தன்னைவிட மாறானதொன்று இருக்கிறதென்ற எண்ணமே வெறுப்புக்கும் பயத்துக்கும் காரணமாகிறது. எங்கும் ஆத்மதத்வத்தைக் கண்டுவிட்டால் மற்றது மறைந்துவிட்டால் இந்த இகழ்ச்சியும் ஜுகுப்ஸையும் மறைந்துவிடுகிறது அவனுக்கு எல்லா ஜீவராசிகளும் தன்னுடைய ஆத்மாவாகவே ஆகிவிட்டபிறகு எவ்வாறு மருட்சிக்கு உள்ளாவான்? எல்லா இடங்களிலும் ஒருமையைக் காணும் விஞ்ஞானியைத் துயரம் எவ்வாறு வந்தடையும்?

ஸுபோதர்:— குருநாதரே! தெரிந்துகொண்டேன். என் அறிவு திடப்படுவதற்காக ஆத்மாவைப்பற்றி மீண்டும் கூற வேண்டுகிறேன்.

தத்யங் ஆதர்வணர்:—மிகவும் சந்தோஷம். மறுபடியும் சொல்லுகிறேன்.

स पर्यगाच्छुक्रमकायमव्रणमस्नाविरꣳ शुद्धमपापविद्धम् ।
कविर्मनीषी परिभूः स्वयंभूर्याथातथ्यतोऽर्थान्व्यदधाच्छाश्वतीभ्यः समाभ्यः ॥

ஸ பர்யகாச்சுக்ரமகாயமவ்ரணமஸ்னாவிரகும் சுத்த-
மபாபவித்தம் ।
கவிர் மனீஷீ பரிபூ: ஸ்வயம்பூர் யாதாதத்யதோ
ऽர்த்தான் வ்யததாச்சாச்வதீப்ய: ஸமாப்ய: ॥

(இருவரும் சொல்லுகின்றனர்.)

பதவுரை கூறுகிறேன் முதலில். அந்த ஆத்மா எங்கும் வ்யாபித்தவன். பிரகாசமானவன். சரீரம் இல்லாதவன், புண்படாதவன், நாடிகளில்லாதவன், சுத்தமானவன். பாபமற்றவன், எல்லாமறிந்தவன், மனதை ஆள்பவன், அனைத்தையும் கடந்தவன்,

தானுகவே ஏற்பட்டவன், நித்தியர்களாயிருக்கும் பிரஜாபதிகளுக்கும் செய்யவேண்டிய காரியங்களைப் பகுத்துக்கொடுப்பவன்.

ஸுபோதர்:— தந்தையே! ஆத்மா ஸர்வ வியாபி, தேஜஸ் உள்ளவர் என்பதைப் புரிந்துகொண்டேன். காயமில்லை, புண் இல்லை, நரம்பில்லை முதலிய வார்த்தைகளின் பொருளை விளக்கவேண்டும்.

தத்யங் ஆதர்வணர் :— வத்ஸா, அவன்-இந்த ஆத்மா எங்கும் நிறைந்து இருக்கிருன். பிரகாசமாயிருக்கிருன். அகாயம் என்ருல் உடலற்றது, அதாவது லிங்கசரீர மற்றது என்று பொருள். புண் அற்றது, நரம்பு இல்லாதது என்ருல் ஸ்தூல சரீரம் ஆத்மாவுக்கு இல்லை என்று அர்த்தம். பௌதிக சரீரத்தில்தானே புண் ஏற்பட முடியும். தேகமிருந்தால் தானே வியாதி வர முடியும். பரிசுத்தமானவன் அதாவது அவித்யை இல்லாதவன் என்றதால் காரண சரீரமுமில்லையென்ருகிறது. இதுவரை இது அல்ல என்ற எதிர்மறை மொழிகளால் சுட்டிக்காட்டப்பட்டது ஆத்மா. மேலே கவி முதலிய சொற்களால் ஒரு கோர்வையாக ஆத்மாவின் குணங்கள் காட்டப்படுகின்றன கவி என்ருல் க்ராந்ததர்சீ முக்காலமும் பார்க்கிறவன். ஆத்மாவே காண்பவன். காண்பதும் கேட்பதும் நுகருவதும், ருசிப்பதும், கண்களும் செவிகளும் நாசியும் நாக்கும் அல்ல. அதன் செயல்களை செய்விப்பவன் ஆத்மாவே. அது போலவே எல்லாவற்றையும் அறிவதும் ஆத்மாவே. வேருெரு பொருள் காரணமாகவும் தான் கார்யமாகவும் தோன்ருததால் ஆத்மா 'தான்தோன்றி ஸ்வயம்பூ' அது தானேயன்றி மற்ற காரணங்களால் ஏற்படாதது. ஏவப்படாதது அதுவே முதல் காரணம். யாவற்றிற்கும் மேலாக இருப்பவன் தானே உண்டானவன் ஆத்மாவே ஸர்வக்ஞன். அதுவே உசிதமான கர்மம், பலன், ஸாதனம் இவைகளை அனுஸரித்து சாசுவதமாயிருக்கும் ஸம்வத்ஸரம் என்ற பிரஜாபதிகளுக்கு யோக்யதைக்குத்

தக்கபடி கர்மாக்களை வகுத்துக்கொடுக்கிறது. சிருஷ்டி கர்த்தாக்களுக்கு அவர்களின் முறைப்படி காரியங்களைப் பங்கிட்டுக் கொடுத்ததும் ஆத்மாவே. ஆகையினுல் தான் அதன் ஸத்திய பலத்தினுலேயே கிரஹங்களின் சலனம், பருவகாலங்களின் கிரமம் இயற்கையின் வேலை இவைகள் உலக முழுவதும் கோடிக்கணக்கான வருஷங்களாக முறையாக நடந்துகொண்டு வருகின்றன. இப்படி நியமம் பிறழாது ஆட்டிவைக்கும் அதிகாரம், சக்தி, ஸாமர்த்தியம், ஆத்மாவைச் சேர்ந்ததுதான்.

ஸுபோதர்:-அப்பா, அதிசயமான பல தத்துவங்களை அறிந்துகொண்டேன் இன்று. தனிமையை நாடி, இதுபற்றிச் சிந்திக்க விழைகின்றேன். அனுமதி வேண்டுகிறேன்.

தத்யங் ஆதர்வணர்:— எனக்கும் ஔபாஸனத்துக்கு நேரமாய்விட்டது. இன்றையபாடம் இத்துடன் நிறுத்திக்கொள்ளுவோம். ஆன்மவிருத்தியில் தானே உழைத்துத்தான் முன்னேறவேண்டும். நன்ருக மனனம் செய்து சிந்தித்துப் பார்ப்பாயாக. (எழுந்திருக்கிருர்கள்)

(திரை விழுகிறது.)

காட்சி 3

(திரை விலக)

[முன் காட்சியைப்போல் பிதாவும் புத்திரனும் அமர்ந்து ஸம்பாஷணை செய்துகொண்டிருக்கின்றனர்.]

ஸுபோதர்:— பூஜ்யபிதாவே, நமஸ்காரம். எனக்கு ஒரு ஸந்தேஹம். ஞானமார்க்கம், பக்திமார்க்கம், கர்மமார்க்கம் என்று தாங்களே வித்வத் ஸதஸ்ஸுகளில் பேசக் கேட்டிருக்கிறேன். ஞானம், கர்மம் இரண்டையும்பற்றித்தானே எனக்கு இதுவரை உபதேசித்திருக்கிறீர்கள். உபாஸனையைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே. ஏன் ?

தத்யங் ஆதர்வணர் :— வத்ஸா! ஸாதுவான கேள்வி தான். "விஹிதமான கர்மாவைச் செய்துகொண்டு நூறு ஆண்டுகள் வாழவேண்டும்" என்று நான் ஆரம்பத்தில் கூறினேனல்லவா. அதில் பக்தியுமடக்கம் தான்.

ஸுபோதர் :— அப்படியானல் கர்மாவை மட்டும் செய்வது நலமா? உபாஸனை மாத்திரம் நல்ல பயன் தருமா? அல்லது இரண்டும் சேர்ந்து ஸமுச்சயமாகவே செய்யப்படவேண்டுமா?

தத்யங் ஆதர்வணர் :- குழந்தாய் உபாஸனையில்லாமல் கர்மானுஷ்டானம் செய்தாலும், கர்மானுஷ்டானம் இல்லாமல் தெய்வபக்தி செய்தாலும் பயனில்லை. ஆகாசத்தில் பறக்கும் பறவைக்கு இரண்டு பக்கத்திலும் இறக்கைகள் வேண்டாமா? ஒரு சிறகை மட்டும் வைத்துக்கொண்டு உயரே பறக்கமுடியுமா? ஆகவே மோக்ஷ இச்சையுள்ளவன் முதலில் கர்மம், பக்தி இரண்டையும் விடக்கூடாது. இனி மந்திரத்துக்கு வருவோம். (இருவரும் சொல்லுகின்றனர்)

अन्धं तमः प्रविशन्ति येऽविद्यामुपासते ।
ततो भूय इव ते तमो य उ विद्यायाँ रताः ॥

அந்தம் தம: ப்ரவிசந்தி யேऽவித்யாமுபாஸதே ।
ததோ பூய இவ தே தமோ ய உ வித்யாயாம் ரதா: ॥

எவர்கள் அவித்யையை உபாஸிக்கிறார்களோ அவர்கள் காரிருளில் புகுகின்றனர். எவர்கள் வித்யையில் மட்டும் ஆசை வைத்திருக்கிறார்களோ அவர்கள் இன்னும் அதிகமான இருளில் புகுகின்றவர்களைப் போலாவர். குழந்தாய், இங்கே வித்யை என்பது உபாஸனையையும அவித்யை கர்மாவையும் குறிக்கிறது. எவர்கள் செய்யவேண்டிய கர்மாக்களை விட்டு தேவதைகளைப்பற்றிய உபாஸனை மார்க்கத்திலேயே ஆசை வைத்திருக்கிறார்களோ அவர்களும் அதிகமான இருளில்

அதாவது ஸம்ஸாரத்தில் பிரவேசிக்கிருர்கள். அது போலவே தேவதாஞானமில்லாமல் கர்மாவை மட்டும் அனுஷ்டிக்கிறவர்களும் இருளில் ஆழ்ந்துவிடுகிருர்கள்.

ஸுபோதர் :— கர்மமும் பக்தியும் தரும் பலன்களில் வித்யாஸம் உண்டா? ஸமுச்சயமாக அனுஷ்டிப்பதால் யாது நன்மை பயக்கும்?

தத்யங் ஆதர்வணர் :— குழந்தாய்! பலன்களைக் கூறு கிறேன். கேள்.

अन्यदेवाहुर्विद्ययाऽन्यदाहुरविद्यया ।
इति शुश्रुम धीराणां ये नस्तद्विचचक्षिरे ॥

அந்யதேவாஹுர்வித்யயாऽந்யதாஹுரவித்யயா I
இதி சுச்ரும தீராணும் யே நஸ்தத்விசசக்ஷிரே II

(இருவரும் சொல்லுகின்றனர்)

வித்யையால் பெறப்படும் பலன் வேறு, அவித்யையால் பெறப்படும் பலன் வேறு என்று நமக்கு உண்மையை விளக்கிக்காட்டிய தீரர்களிடமிருந்து நாம கேட்டிருக்கிரும். இந்த உண்மை இப்பொழுது புதிதாக வெளியிடப்பட்டதல்ல. எத்தனையோ தலைமுறை தலை முறையாக குரு சிஷ்ய பரம்பரையாக வந்து எல்லா ஆன்ருேர்களாலும் அங்கீகரிக்கப்பட்டது.

ஸுபோதர் :- குருநாதரே, ஸமுச்சயமாக அனுஷ்டிப் பதின் பலனைக் கூற வேண்டுகிறேன்.

தத்யங் ஆதர்வணர் :—

विद्यां चाविद्यां च यस्तद्वेदोभयं सह ।
अविद्यया मृत्युं तीर्त्वा विद्ययाऽमृतमश्नुते ॥

வித்யாம் சாவித்யாம் ச யஸ்தத்வேதோபயம் ஸஹ I
அவித்யயா ம்ருத்யும் தீர்த்வா வித்யயாऽம்ருதமச்நுதே II

(இருவரும் சொல்லுகின்றனர்)

எவன் வித்யை, அவித்யை இரண்டையும் சேர்த்தே ஒரே புருஷன் அனுஷ்டிக்கவேண்டுமென்று தெரிந்துகொண்டு அவ்விதமே அனுஷ்டிக்கிருனே, அவன் அவித்யையினுல் சாவைத்தாண்டி வித்யையினுல் சாகாத்தன்மையை அடைகிருன். பக்தி கர்மா இவற்றினது கலவை மிகவும அவசியம் என்று இந்த உபநிஷத் வற்புறுத்துகிறது. அவித்யையாகிய உலகில் வித்யை அன்றிச் செயல்புரிய முடியாது கிரமமாக அவன் முக்தியையும் அடைவான். அக்நிஹோத்ராதி விஹித கர்மாக்களைச் செய்து மரணத்தைத் தாண்டி, தேவதா உபாஸனையால் தேவதாத்ம பாவத்தை அடைகிருன். வியவஹாரத்திலுள்ள ஞானம், கர்மம் இரண்டுமே இங்கே மரணம் எனப்படுகிறது. தேவதாத்ம பாவமே அமிருதம் எனக் குறிக்கப்பட்டது.

ஸுபோதர் :—தந்தையே, கர்மத்தின் முக்கியத்துவத்தையும் உபாஸனையின் அவசியத்தையும் அறிந்துகொண்டேன். உருவமுள்ள தேவனை உபாஸிப்பது சிறந்ததா? அல்லது உருவமில்லாததை உபாஸிப்பது நல்லதா? விளக்கமாகக் கூறவேண்டுகிறேன்.

தத்யங் ஆதர்வணர் :— குழந்தாய், கூறுகிறேன். கவனமாகக் கேள். பக்தர்களிடையே உருவமற்றதும் உருவமுள்ளதுமான தெய்வத்தை வழிபடுவதைக் குறித்து தர்க்கங்கள் இன்று நேற்று ஏற்பட்டவையல்ல. எப்போதும் இந்த வாதங்கள் இருந்துவந்திருக்கின்றன. ஆகவே இதைப்பற்றி வேதம் தீர்மானமாகச் சொல்லுகிறது. கேட்பாயாக.

अन्धं तमः प्रविशन्ति येऽसंभूतिमुपासते ।
ततो भूय इव ते तमो य उ संभूत्या ᳚रताः ॥

அந்தம் தம: ப்ரவிசந்தி யேऽஸம்பூதி முபாஸதே ।
ததோ பூய இவ தே தமோ ய உ ஸம்பூத்யாம் ரதா: ॥

(இருவரும் கூறுகின்றனர்)

முதலில் பதவுரையைக் கேள். எவர்கள் அஸம்பூதியை உபாஸிக்கிருர்களோ அவர்கள் அந்தகாரத்தில் வீழ்கின்றனர். எவர்கள் ஸம்பூதியில் ஆசை வைத்தவர்களோ அவர்கள் இன்னும் இருண்ட காரிருளில் புகுகின்றவர்போலாவர்.

ஸுபோதர்:— ஸ்வாமீ! ஸம்பூதியென்று சொல்வது எதை குறிக்கிறது? அஸம்பூதி என்ருல் என்ன?

தத்யங் ஆதர்வணர்:— ஸம்பூதி - வெளிப்பட்டுத் துலங்குவது, கார்யபிரஹ்மம், அஸம்பூதி வெளிப்பட்டுத் துலங்காதது-காரணமான அவ்யாகிருதம் அஸம்பூதியை அதாவது மூலப்ரக்ருதியை மட்டுமோ, ஸம்பூதியை அதாவது காரியப்ரஹ்மமான ஹிரண்ய கர்ப்பரை மட்டுமோ உபாஸிக்கிறவர்கள் இருளிலேயே மூழ்கிப்போகிருர்கள். ஆகவே இரண்டையும் சேர்த்தே வழிபடவேண்டும். ஒன்றையொன்று தாழ்ந்ததாக நிந்திக்கக்கூடாது.

अन्यदेवाहुः सम्भवादन्यदाहुरसंभवात् ।
इति शुश्रुम धीराणां ये नस्तद्विचचक्षिरे ॥

सम्भूतिं च विनाशं च यस्तद्वेदोभयं सह ।
विनाशेन मृत्युं तीर्त्वाऽसंभूत्याऽमृतमश्नुते ॥

அந்யதேவாஹு: ஸம்பவாதந்யதாஹுரஸம்பவாத் ।
இதி ஶுச்ரும தீராணாம் யே நஸ் தத் விசசக்ஷிரே ॥

ஸம்பூதிம் ச விநாசம் ச யஸ் தத் வேதோபயம் ஸஹ ।
விநாஶேன ம்ருத்யும் தீர்த்வா (அ) ஸம்பூத்யாऽம்ருத-
மச்நுதே ॥

(இருவரும் கூறுகின்றனர்)

ஸம்பூதியை வழிபடுவதால் பெறப்படுவது வேறு. அஸம்பூதியை உபாஸிப்பதால் அடைவது வேறு என்று

நமக்கு உண்மையை விளக்கிய ஞானிகள் கூறக்கேட்டு இருக்கிறோம். ஆனால் எவன் இரண்டையும் சேர்த்து அறிகிறானோ அவனே உண்மை ஞானி. அவன் ஸம்பூதியால் சாவைத் தாண்டி அஸம்பூதியால் சாகாத் தன்மையை எய்துகிறான். உருவமற்றது உருவமுள்ளது இரண்டையும் வழிபடுபவன், உருவமுடையதை வழி படுவதன் மூலம் மரணத்தை வென்று உருவமற்றதை வழிபடுவதன் மூலம், அமரத்துவத்தை அடைகிறான். இந்த மந்திரத்தினால் பக்தி ஞானம் இவற்றுக்கிடையி லுள்ள தர்க்கம் வீண் என்று நிரூபிக்கப்பட்டது. ஒன்று மற்றதைப் பூர்த்திசெய்கிறது. ஒன்று மற்றொன்றிற்கு முரணானதல்ல. பெயரும் உருவமுமுடைய கடவுளிடம் பக்தி பண்ணி, முடிவில் உயர்ந்த தியானத்தில் நிலை பெறவேண்டும் முடிவில் உருவமற்றதை தியானித்து ஸமாதியிலிருக்க முதலில் உருவமுள்ளதை வழிபட வேண்டும். பக்தி, ஞானம் இரண்டையும் விவேகத் துடன் ஒன்றுசேர்த்து அனுஷ்டிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். எவன் அப்படிச் சேர்த்து அறிகிறானோ அவன் ஸம்பூதியால் அனைச்வர்ய–அதர்ம காமாதி தோஷங்களாலுண்டான மிருத்யுவைத் தாண்டி, அஸம்பூதியால் ப்ரக்ருதிலயமென்னும் அமிருதத்தை அடைகிறான்.

ஸுபோதர் :— தந்தையே, தங்களுடைய அமிர்த வர்ஷத்தால்–திவ்ய உபதேசத்தால்-மிகுந்த நலன் அடைந்தேன். மேலும் நான் அறியவேண்டியதை உபதேசிக்கவேண்டுகிறேன்.

தத்யங் ஆதர்வணர் :— அனேகமாக இந்த உபநிஷத் நிறைவு பெற்றுவிட்டது. இனி துதிப்பாடல்களை பாடி சூரியபகவானை வணங்கி ஸமாப்தி செய்யவேண்டியது தான். கேட்டு நலன் பெற்றதாகக் கூறினாய் இதுவரை கேட்ட பாகங்களைச் சுருக்கமாகக் கூறு, பார்ப்போம்.

ஸுபோதர் :— என் அருமைப்பிதாவே, அது அடியேனால் ஸாத்தியமாகுமா ?

தத்யங்ஆதர்வணர்:— பழக்கத்தால் தானே சரியாக வரவேண்டும். ''அப்பியாஸம் செய்வதை ஆசிரியனும் செய்யான்'' என்பது பழமொழி. நான் ஆசீர்வதிக் கிறேன் நீ தைரியமாக மொழிவாயாக.

ஸுபோதர் :— ஸ்வாமி, கூறுகிறேன். (சிறிதுநேரம் யோசித்து எழுந்து 'அபிவாதயே' சொல்லி நமஸ்காரம் செய்கிருர்.) எங்கும் நீக்கமற-எல்லாப் பொருள்களிலும் உள்ளவன் ஈசுவரன் என உணரவேண்டும். பற்றுகளைத் துறந்து ஈசுவரார்ப்பணமாகக் கடமைகளைச் செய்து வாழ்தலே நல்வாழ்வாம். அதை மறந்து சோம்பேறி களாக வாழ்வோர் இருளடைந்த நரகங்களுக்குச் செல்வர். அவர்களுடைய இஹலோக வாழ்க்கையே கொடிய நரகத்துக்கு ஒப்பானதே. ஆத்மா, மனமொழி இந்திரியங்களுக்கு எட்டாதது. உள்-வெளி, பக்கம்-தூரம், ஒன்று-பல என்ற பேதங்கள் ஆத்மாவை உணரும் போது மறைந்துவிடுகின்றன. அனைத்தையும் ஆத்மா விலும், அனைத்திலும் ஆத்மாவையும் காண்பவனே உண்மை ஞானி. அவனுல் எதில் வேற்றுமையைப் பார்க்கமுடியும்? அவன் எதை வெறுப்பான். அவனுக்கு மயக்கமேது? துன்பமேது? ஆத்மஞான மில்லாத கருமமும் உபாஸனையும் முக்திக்குப் பயன் படாது. கருமமும் பக்தியும் ஸமுச்சயமாக அனுஷ்டிக்கப் பட்டால் பேறு பெறலாம். இல்லாவிடில் அக்ஞான இருளில் அழுந்தவேண்டியதுதான். அதுபோலவே உருவமில்லாத மூலப்பிரகிருதியை மட்டும் உபாஸித்த லும் நாமரூபங்களுடன் கூடிய காரிய ப்ரஹ்மத்தை மட்டும் உபாஸித்தலும் பலன் தராது. இருளிலேயே மூழ்கவேண்டியதுதான். ஆனுல் கர்மத்தையும் உபா ஸனையையும் அதிலும் காரிய ப்ரஹ்ம உபாஸனையையும் ப்ரக்ருதி உபாஸனையையும், ஒருங்குசேர்த்துத் தக்க முறையில் ஸாதகன் அனுஷ்டித்தால் படிப்படியாய் அவன் முன்னேறுவான். இறுதியில் மோக்ஷமடைவான். அப்பா! நான் கூறியதில் தப்பிதமிருந்தால் மன்னிக்க வேண்டுகிறேன்.

தத்யங்ஆதர்வணர் :— குழந்தாய், ரொம்ப நன்ருகச் சுருங்கசொல்லி விளங்கவைத்தாய். உன்னைப் புத்திரனுக வும் அதிலும் சிஷ்யனுகவும் அடைந்ததில் மிகவும் பெருமைப்படுகிறேன். இனி துதிப்பாடல்களைச் சொல்லு கிறேன் கேள். கூடவே பாடுவாய்.

हिरण्मयेन पात्रेण सत्यस्यापिहितं मुखम् ।
तत्त्वं पूषन्नपावृणु सत्यधर्माय दृष्टये ॥

ஹிரண்மயேன பாத்ரேண ஸத்யஸ்யாபிஹிதம் முகம் ।
தத் த்வம் பூஷன்னபாவ்ருணு ஸத்யதர்மாய
த்ருஷ்டயே ॥

पूषन्नेकर्षे यम सूर्य प्राजापत्य व्यूह रश्मीन् समूह ।
तेजो यत्ते रूपं कल्याणतमं तत्ते पश्यामि योऽसावसौ
पुरुषः सोऽहमस्मि ॥

பூஷன்-னேகர்ஷே யம ஸூர்ய ப்ராஜாபத்ய
வ்யூஹ ரச்மீன் ஸமூஹ ।
தேஜோ யத்தே ரூபம் கல்யாணதமம் தத்தே பச்யாமி
யோऽஸாவஸௌ புருஷ: ஸோऽஹமஸ்மி ॥

ஹே சூரியதேவனே! எங்களை போஷித்துக் காப்பவனே! பொன்மயமான வட்டிலால் ஸத்தியத்தின் முகம் மறைக்கப்பட்டிருக்கிறது. ஸத்தியத்தை நாடும் என்னுடைய பார்வைக்கு நீ அந்தத் திரையை நீக்கி யருள்வாயாக.

உலகை—இந்த விசுவத்தைப்-போஷிக்கும் ஆண்டவனே தனி வெளியில் சஞ்சரிப்பவனே, அனைத்தையும் நியமனப்படி அடக்கி ஆள்பவனே, சூரியனே, பிரம்மபுத்திரனே, உன் கிரணங்களைச் சுருக்கி உன் உள் ஒளியைக் காட்டுவாய் உன்னுடைய உத்தமமான மங்களவடிவத்தை நான் பார்க்கும்படி அருள்வாய். இந்த உன்னுடைய சூரியமண்டலத்தில் உறையும் புருஷனும் நானேதான்.

ஸுபோதர்:—தந்தையே, சூரியபகவானைக் குறித்து இவ்வளவு உருக்கமான பிரார்த்தனையை நான் கேட்டதே இல்லை. அவரே ஸர்வலோகங்களையும் போஷிக்கிருர். ஒரு விஞடியாவது சூரியன் இல்லாவிட்டால் இந்த உலகம் என்னுவது?

தத்யங் ஆதர்வணர் :—இந்தப் பிரார்த்தனையை மரணப் படுக்கையில் இறந்துகொண்டிருக்கும் ஒருவன் செய்யும் பிரார்த்தனையாகச் சொல்லுகிருர்கள். மரணப் படுக்கையில் உள்ள ஒரு கிழவனின் துதியாக மட்டும் நினைக்கவேண்டாம். நான் எனும் அகந்தையே இங்கு மரிக்கும் தறுவாயில் இருப்பதாகக் கூறப்படுகிறது. முன சொன்னபடி வாழ்க்கை நடத்தியவனின் அகங்காரம் கடைசியில் அவன் தியானத்திலிருக்கும்போது இறந்து போகவேண்டியதுதானே, அச்சமயம் அது புரியும் கடைசி பிரார்த்தனை இதுவாகும். எல்லைக்குட்பட்ட அறிவுக்குப் பின்னுல் உள்ள பூர்ணமான பரிசுத்தமான அறிவை அக்ஞானம் மறைத்துக்கொண்டு இருக்கிறது. அந்த உண்மையை-பிரஹ்மத்தை-அடையும் வழியில் ஜ்யோதிர்மயமாகிய மறைப்பு இருக்கிறது. ஸத்ய தர்மனுகிய நான் பார்க்கும் பொருட்டு-அந்த மார்க்கத்தில் செல்லும்பொருட்டு-திரையை விலக்கு அல்லது வழியைத் திறந்துவிடு. இந்த உருக்கமான பிரார்த்தனைக்கு இணங்கி திரை விலகியதும் நான் உம்முடைய சிறந்த உருவத்தைக் காண்கிறேன். கண்டதும் வியப்படைகிறேன். ஏனெனில் நான் அங்கே என்னையே கண்டுகொள்கிறேன். நானே அவர்! உள்ளே உள்ள புருஷன்.

ஸுபோதர் :— பிரஹ்மத்தை அறிந்தவன் பிரஹ்மமாகவே ஆகிருன். இந்த உண்மை அடிக்கடி உபநிஷதங்களில் சொல்லப்படுகிறது. மனிதனுல் பிரஹ்மத்தைக் காணமுடியாது. ஆனுல் அது அனுபவிக்க இயலாத இன்மைத் தன்மையல்ல. அது ஒரு உறுதியான ஸத்யம். அதை அனுபவிக்கவும்

வாழவும் முடியும். ஆனால் மனிதனாலல்ல. பிரஹ்மத்தை அறிந்தவன் மனிதனல்ல. அவன் பிரஹ்மமேதான். அவன் தற்காலிகமாக-பிராரப்த கர்மாவினால் கிடைத்த மனித உடலுடன் நடமாடுகிறான். உண்மையில் அவன் பிரஹ்மமேதான். பிரஹ்மத்தை பிரஹ்மமானாலேயே அறியமுடியும்.

தத்யங்ஆதர்வணர் :—குழந்தாய், மற்ற இரண்டு துதிப்பாடல்களையும் கேள்.

वायुरनिलममृतमथेदं भस्मान्तꣳ शरीरम् ।
ओं क्रतो स्मर कृतꣳस्मर क्रतो स्मर कृतꣳस्मर ॥

வாயுரநிலமம்ருதமதேதம் பஸ்மாந்தꣳ சரீரம் ।
ஓம் க்ரதோ ஸ்மர க்ருதꣳ ஸ்மர க்ரதோ ஸ்மர
க்ருதꣳ ஸ்மர ॥

अग्ने नय सुपथा राये अस्मान् विश्वानि देव वयुनानि विद्वान् ।
युयोध्यस्मज्जुहुराणमेनो भूयिष्ठां ते नम उक्तिं विधेम ॥

அக்நே நய ஸுபதா ராயே அஸ்மான் விச்வானி
தேவ வயுனானி வித்வான் ।
யுயோத்யஸ்மஜ்ஜுஹுராணமேனோ பூயிஷ்டாம்
தே நம உக்தும் விதேம ॥

(இருவரும் சொல்லுகின்றனர்)

மூச்சுக்காற்று வெளியிலுள்ள அழியாத வாயுவில் லயிக்கட்டும். பிறகு இந்த உடல் சாம்பலாக முடியட்டும். ஓங்காரஸ்வரூபியே, என்னை நினைப்பீர். என்னால் செய்யப்பட்டதை நினைப்பீர். ஸங்கல்ப ஸ்வரூபியே, என்னை நினைப்பீர். என்னால் செய்யப் பட்டதை நினைப்பீர். அக்நியே, வினையால் விளைந்த செல்வத்தை அனுபவிக்க நல்ல பாதையில் எங்களை அழைத்துச் செல்வீர். தேவனே, எல்லா எண்ணங்களையும் நீர் அறிவீர். மறைந்திருந்து கெடுக்கும்

பாவத்தை நாசம் செய்வீர். நமஸ்கார வசனங்களை ஸமர்ப்பித்து உம்மைப் பூஜிக்கிருேம்.

ஸுபோதர் :—அப்பா! இந்தத் துதிகளும் மரணுவஸ்தையிலிருக்கும் ஒருவன் சொல்லவேண்டியவைகள் தான். மரணமடைபவரின் பிராணன் ஸர்வாத்மகமாக இருக்கப்பட்ட பரந்த வெளிவாயுவை அடைய வேண்டியதுதானே. மூச்சுப் போனபின் சரீரமும் பஸ்மாவாகப் போகவேண்டியதே. அப்பொழுது ஜீவாத்மா ஓங்காரத்தை ஸ்மரிக்கவேண்டும். ஏற்கனவே தன்னுல் செய்யப்பட்டிருக்கும் வினைகளையும் ஸ்மரிக்க வேண்டும். அப்போது அக்னியாகிற பரதேவன் எல்லாவற்றையும் (ஸங்கல்பங்களையும் செயல்களையும்) அறிந்தவராதலால், பலானுபவத்தின் பொருட்டு நல்வழியில் நடத்திச் செல்லவேண்டும். அவர் எங்களுடைய பாபங்களையும் தொலைக்கவேண்டும். அவருக்கு எங்கள் சிறந்த நமஸ்காரங்கள் பல உரித்தாகுக. என்ன உயர்ந்த பிரார்த்தனை! மனதையும் மனிதனையும் கைதூக்கிவிடும் பிரார்த்தனை.

தத்யங் ஆதர்வணர் :—குழந்தாய், இந்த பிரார்த்தனைக்கு வேறுவிதமாகவும் பொருள் சொல்லலாம். கேள். ''ஏ உறுதியான ஸங்கல்பமுள்ள ஜீவனே, ஈசுவரன் பெயரைச் சொல்லிக்கொண்டிரு. அவர் செயலை நினை. ஏ ஜீவனே, உன் ஸங்கல்பத்தை விட்டு அவர் செயலை நினை. ஏ மார்க்கபந்துவான ஒளியுடன் விளங்கும் அக்நியே, உலகில் எல்லாத் தத்துவங்களும் உமக்குத் தெரியும். எம்மை சுலபமான வழியில் பேரானந்தம் துய்க்க அழைத்துப்போம். கோணல் மாணலாகச் செல்லும் பாவத்தை அகற்றும். உம்மை மிகவும் பணிவாக மீண்டும் மீண்டும் வேண்டிக் கொள்கிருேம். மரணப்படுக்கையில் இருப்பதால் இப்பொழுது பணிவிடை ஒன்றும் செய்ய முடியாது, 'நமஸ்காரம்' என்ற வார்த்தையைத்தான் கூறமுடியும்.

ஸுபோதர் :-என் அருமைத் தந்தையே, உமக்குப் பல நமஸ்காரங்கள். இன்றும் என்றும் என்னை நல்வழியில் நடத்திச்செல்லும். மேலும் நான் நடக்கவேண்டியதற்கு உபதேசிக்கவேண்டும்.

தத்யங் ஆதர்வணர் :— வத்ஸா, உன் புத்தியையும் கிரஹிக்கும் சக்தியையும் மிகவும் மெச்சுகிறேன். என்னை விட ஞானத்தில் நீ மிஞ்சிவிட்டாய். 'கற்கக் கசடறக் கற்றபின் நிற்க அதற்குத் தக' என்றபடி இந்த உபநிஷத் காட்டிய வழியில் வாழ்ந்து நலம் பெறுவாய். நலம் பெருக்குவாய். ஓம் ததாஸ்து. சாந்தி பாடம் சொல்லுவோம்.

ॐ पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண முதச்யதே ।
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே ॥

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

திரை விழுகிறது.

மூன்றும் அங்கம் முற்றும்.

ஈசாவாஸ்யோபநிஷத் நாடகம் முற்றிற்று.

உ

ஸ்ரீ குருப்யோ நம:

உபநிஷத் நாடகமாலா – 2

கேனோபநிஷத்

(நாடகம்)

நாடக பாத்திரங்கள்

1. ஜைமினி :— ஒரு மஹரிஷி. இமயமலைச்சாரலில் ஸரஸ்வதீ நதிக்கரையில் ஆசிரமம் அமைத்துக்கொண்டு பக்குவம் அடைந்த சீடர்களுக்கு பிரஹ்மஞானத்தை உபதேசிப்பவர். பிரஹ்மநிஷ்டர். ஸாமவேதி.

2. தலவகாரர்
3. கௌதமர்
} —பிரஹ்மசாரிகள். குருகுலவாஸம் செய்து, ஞான உபதேசம் பெறும் சிஷ்யர்கள்.

4. உமாதேவி :— ஸ்ரீ பராசக்தி — ஸ்ரீ பரமேசுவரரின் பத்தினீ.

5. யக்ஷன் :— ஒரு பயங்கரமான பூதம்.

6 இந்திரன் :— தேவர்களின் அரசன். அமராவதி காவலன்.

7. வாயு
8. அக்னி
} — தேவர்கள்.

9. ஸூத்திரதாரன் :— நாடகத்தை அறிமுகம் செய்பவன்.

இன்னும் ஆசிரமவாஸிகள், தேவர்கள், மான்குட்டிகள், கன்றுகள், மயில்கள், குயில்கள், கிளிகள் முதலியன.

நிகழும் இடம் :— இமயமலைப் பிராந்தியம்.

கேனோபநிஷத்

(நாடகம்)

முதலாவது அங்கம்

காட்சி I

[குருவந்தனம் திரைக்குள்ளே வாத்திய இசையுடன் நடக்கிறது. அதற்குப்பின் ஸூத்திரதாரன் பிரவேசம்.]

श्रुतिस्मृतिपुराणानामालयं करुणालयम् ।
नमामि भगवत्पादशङ्करं लोकशङ्करम् ॥

ச்ருதிஸ்ம்ருதிபுராணனும் ஆலயம் கருணலயம் I
நமாமி பகவத்பாத சங்கரம் லோகசங்கரம் II

ஸூத்திரதாரன்:—மெய்யன்பர்களே! நமஸ்காரம். நாங்கள் நினைத்ததற்கு மேலாகவே பெரியோர்கள் குழுமி இருக்கிறார்கள். சரித்திர, புராண, இதிஹாஸ, ஸமூக ஸம்பந்தமான கதைகளைத்தான் மஹாஜனங்கள் ரஸிப்பார்கள்; வேதாந்த விஷயங்களில் சிரத்தை இராது என்ற தப்பெண்ணம் அடியோடு மாய்க்கப் பட்டுவிட்டது.

அறிஞர்களே! நாங்கள் நடத்தும் இச்சிறு நாடகத்தைக்கண்டு களித்து எங்களுக்கு ஆசி வழங்குங்கள். மேன்மேலும் இத்தகைய பணியில் ஈடுபட உற்சாகம் ஊட்டுங்கள். இப்பிரபஞ்ச வாழ்க்கையில் நாம் எல்லோரும் இன்பம் தேடி அலைகிறோம். ''சுகம் எங்கே? எதில்? எப்போது'' என்றே ஒவ்வொரு ஜீவனும் ஓடிக்கொண்டிருக்கிறான். தன்னுடைய நிழலைத் தானே பிடிக்க முயலும் குழந்தையைப் போலே, முயற்சியில் படுதோல்வியுற்று ஏமாற்றம் அடைகிறோம்.

எல்லாம் அறிந்த ஞானவான்களே! உண்மையான இன்பம் பிரஹ்மத்தை அறிவதிலேயே இருக்கிறது. 'கெட்டுப்போன பிரஹ்மத்தை கேநத்தில் தேடு' என்பது பழமொழி. முக்கியமான பத்து உபநிஷத்துக்களிலும் மிகவும் சுருக்கமாக இருந்தாலும், பிரஹ்ம ஞானத்தை உள்ளங்கை நெல்லிக்கனியென காட்டித் தரவல்லது இந்த கேனோபநிஷத். ஆகையினால் ஸ்ரீ சிருங்ககிரி மஹா ஸன்னிதானத்தின் ஆசீர்வாதத்துடனும், தங்களுடைய அன்புடனும் இந்நாடகத்தைச் சமர்ப்பிக்கிறோம். குற்றம் நீக்கிக் குணம் நாடிக் குசலமாயிருக்க அருளவேண்டும்.

இதோ நாடகம் ஆரம்பமாகிறது. திரை விலகுகிறது ஆம்! உங்கள் அஞ்ஞானத் திரையும்தான்—ஜாக்கிரதையுடன், விழிப்புடன், நன்கு கவனியுங்கள். லாபம் உங்களுக்கே!

[திரை தூக்கப்பட, ஆசிரமக் காட்சி தென்படுகிறது. இமயமலைச்சரிவில், ஸரஸ்வதீ நதிக்கரையில் பெரிய ஆசிரமம். காலை நேரம். உள்ளே வேதகோஷங்கள் செவிக்கு விருந்தளிக்கின்றன. ஆசிரமவாசிகள் பரபரப்பு இல்லாமல் அங்கும் இங்கும் சென்று தங்கள் தங்கள் காரியங்களை கவனிக்கின்றனர். வெளியே ஒரு பெரிய ஆலமரத்தின் அடியில் ஜைமினி மஹரிஷி பத்மாஸனம் போட்டுக்கொண்டு, மான் தோலில் கம்பீரமாக வீற்றிருக்கிறார். அவருக்கு இருமருங்கிலும் சிஷ்யர்கள் நிற்கின்றனர். ஒருபுறத்தில் ஹோமம் நடக்கிறது. எங்கும் சாந்தி நிலவுகிறது. மயில் ஆட, கிளிப்பேச்சுத் தாளம் போட, கோகிலம் இன்னிசை பாடுகிறது. பாட்டில் மனதைப் பறிகொடுத்த மான்குட்டிகள், பசுங்கன்றுகள் வந்து தம் பக்கத்தில் நிற்பதைக் கவனிக்கவில்லை. வேதாந்த பாடம் கேட்டு நெட்டுருப்பண்ணிய ஒரு சுகம் தன் காதலிக்கு அதைச் சொல்லித்தருகிறது.]

(எல்லோரும் சேர்ந்து மங்களாசரணம் செய்கின்றனர்.)

"ஓம்! பிரஹ்மம் எம்மைக் (குருவையும் சீடர்களையும்) காத்து ரட்சிப்பதாக! நாம் பேரின்பத்தை நுகர

அருள்புரிவதாக! நாங்கள் சேர்ந்து ஒற்றுமையுடன் (பிரஹ்மத்தை அறிய) முயலுவோமாக! எமது கல்வி தேஜஸ்ஸுடன் விளங்குவதாக! நாம் எப்போதும் ஒருவருக்கொருவர் துவேஷம் இல்லாமல் இருப்போமாக!

நாம், ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதைவிக அரிஷ்டங்களிலிருந்து விடுபட்டு சாந்தி அடைவோமாக அமைதியும் இன்பமும் மூவுலகத்திலும் பெருகட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஓம்! என்னுடைய எல்லா அவயவங்களும், வாக்கு, பிராணன், கண், காது மற்றும் எல்லாப் புலன்களும், பலமும் நல்ல திறமையும் பெற்று இயங்குவனவாக. எல்லாம் உபநிஷத்தில் விளங்கும் பிரஹ்மமே. நான் பிரஹ்மத்தைவிட்டு நீங்கலாகாது. பிரஹ்மமும் என்னை விட்டு நீங்கலாகாது. அதை ஒருநாளும் நான் நிராகரித்தல்கூடாது. இந்த உறவு விடாது நிலைபெற வேண்டும். இந்த உறவு நீங்காது இருக்கவேண்டும். ஆத்மாவில் மகிழ்ந்து வாழ்பவரின் உபநிஷத் தருமங்கள் எல்லாம் என்னிடத்தில் நிலைபெறட்டும். அந்தத் தருமங்கள் என்னிடத்தில் நிலைபெற்று விளங்க வேண்டும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

[மங்களாசரணம் முடிந்தபின் சீடர்கள் குருவுக்கு "அபிவாதயே—அஸ்மி போ:" என்று வணக்கம் செலுத்துகிறார்கள். குருவும் அவர்களை, "தீர்க்காயுஷ்மான் பவ ஸௌம்ய" என்று ஆசீர்வதிக்கிறார். பின்பு குருவின் அனுமதியுடன் சீடர்கள் உட்காருகிறார்கள்.]

ஜைமினி:— குழந்தைகளே! உங்களுக்கு ஸகல மங்களங்களும் உண்டாகட்டும். பாடம் துவக்குவோம். வத்ஸா கௌதம, முதல் பிரச்னம் நீயே கேள்.

கௌதமர்:—ஸ்வாமி, நேற்றையப் பாடங்களைச் சிந்தித்ததில் சரியாக விளங்கவில்லை. என் மனம்

எவனால் தூண்டப்பட்டு விஷயங்களில் பிரவேசிக்கிறது? எனக்கு இஷ்டமில்லாமலிருந்தாலும்கூட எவனாலோ விரும்பப்பட்டும் ஏவப்பட்டும் என் மனம் இயங்கு கிறதே; அவன் யார்? எவனால் ஏவப்பட்டுப் பிராணன் தன் தொழிலை செய்கிறது. நான் அயர்ந்து தூங்கும் போதும் என் பிராணன் தன் வேலையை ஒழுங்காகச் செய்கிறதே! அதன் நியாமகன் யார்? எந்தத் தெய்வம் கண்ணையும் காதையும் ஏவுகிறது? எவனால் தூண்டப்பட்டு நாக்குப் பேசுகிறது? எவனால் உயிர்ப் பிக்கப்பட்ட வாக்குகளை நாம் பேசுகிறோம்? எவனால் தூண்டப்பட்டு ஜனங்கள் இம்மாதிரி பேசுகிறார்கள்? இப்போது நடக்கும் ஸம்பாஷணைக்குக் காரணம்தான் எவன்? எவனுடைய ஆக்ஞையால் ஏவப்பட்டு நாம் தொழில்படுகிறோம்? இதைக் கொஞ்சம் விவரமாக, விளக்கமாகக் கூற வேண்டுகிறேன்.

ஜைமினி :— அப்பா! குழந்தாய்! உன் பிரச்னம் ஸாதுவானது. நன்று, மிகவும் நன்று. சுருங்கச் சொல்லி விளங்கவைக்கிறேன், கேள்.

செவிக்குச் செவியாகவும், மனத்துக்கு மனதாகவும், சொல்லுக்குச் சொல்லாகவும், உள்ளதுவே, பிராண னுக்குப் பிராணனாயும், கண்ணுக்குக் கண்ணாகவும், இருக்கிறது. அதை அறிந்த தீரர்கள் எல்லாப்பற்றுக் களையும் இங்கேயே ஒழித்து, இந்த உலகத்தை விட்டு, அமரத்தன்மை எய்துகின்றனர்.

காதின் சக்திக்குக் காரண சைதன்யமாயும், மனசுக்கும் புத்திக்கும் வாக்குக்கும் நியாமகனாயும், இருப்பது பிரஹ்மமே. அதுவே கண்ணுக்குக் கண்ணாயும், பிராணனுக்குப் பிராணனாயும் நாக்குக்கு நாக்காகவும் விளங்குகிறது. அதுவே அவைகளைச் செயல்பட தூண்டுகிறது. கண் காது முதலிய அழியும் புலன்களில் ஆத்ம புத்தியை விட்டு—அந்த இந்திரியங் களின் உள்ளுறையும் நித்தியமான சைதன்யம் ஆத்மா

என்று கண்டவர்கள் மரணத்தை வெல்லுகிறுர்கள்; சாகாத்தன்மையை அடைகின்றனர். அங்கே கண் எட்டாது; வாக்குச் செல்லாது. மனமும் போக முடியாது. அதை நாம் உள்ளபடி அறியமாட்டோம். ஆகவே அதைப்பற்றி உபதேசிக்கவும் தெரியவில்லை. எங்கள் பூர்வாசார்யாளும், 'அது அறிந்த பொருளைவிட வேறு; அறியாத பொருளையும்விட அப்பாற்பட்டது' என்றுதான் சொல்லிப் போந்தார்கள். அது தன்னுல் தானே விளங்கி நிற்கும். கண்ணுல் பார்க்கமுடியாது. ஏனெனில் கண்ணுக்கு வெளி உருவங்களைக் காணும் சக்தியைக் கொடுப்பது அதுவேயல்லவா? அப்படியே தான் காதும் பிரஹ்மத்தினிடமிருந்து பிச்சை வாங்கித் தான் பிழைக்கிறது. அதுபோலவே ஏனைய எல்லா இந்திரியங்களும் பிரஹ்மத்தினிடமிருந்து சக்தி பெற்றுத் தான் இயங்குகின்றன. செயல்படுகின்றன. ஆகையினுல் தான் அவைகளால் பிரஹ்மத்தை அறியமுடியவில்லை.

தலவகாரர்:—பூஜ்ய குருவே! விளங்குகிறது. மேலும் சொல்லுங்கள்.

கௌதமர்:—ஆனுல் ஒரு ஸந்தேஹம். ஸ்வாமி! மனஸுக்குமா பிரஹ்மம் எட்டாது? மனம் வீர்யம் நிறைந்ததல்லவா! அது மற்ற இந்திரியங்களைவிடப் பன்மடங்கு சக்தியுள்ளதல்லவா!

ஜைமினி:—குழந்தாய்! அது மனதுக்கு எட்டாதது தான். பிரஹ்மம்தானே மனதுக்கு ஆக்ஞையிடும் அதிஷ்டான சக்தி. மனது ஜடம்தானே. அதனுல் பிரஹ்மத்தை எப்படி அறியமுடியும்? மனஸ் ஸாம் ராஜ்யத்தின் மன்னன் பிரஹ்மம். இந்திரியங்கள் வேலை யாட்கள். மனம் தளபதி. புத்தி மந்திரி. பிரஹ்மத்தின் ஆக்ஞையால்தான் புலன்கள் தொழில்படுகின்றன. ஆகையினுல் புலன்களால் பிரஹ்மத்தைப் பார்க்க முடியாது. அறிய முடியாது.

தலவகாரர்:—அப்படியானால் பிரஹ்மத்தை அறிய வழியே கிடையாதா? அருளவேண்டும் ஸ்வாமி!

ஜைமினி:—பிரஹ்மத்தை ஒருவாறு ஸமாதியில்தான் அறிந்துகொள்ள முடியும். தர்க்கத்தினாலும் அதிகக் கல்வியினாலும் அறியமுடியாது. எதைச் சொல்லால் விளக்கமுடியாதோ, ஆனால் எது சொல்லுக்கு விளக்கம் கொடுக்கிறதோ அதுவே பிரஹ்மம் என்று அறிவாயாக. எதை ஒருவன் மனத்தால் உணருவதில்லையோ, ஆனால் மனம் எதனால் உணரப்பெறுகிறதோ அதுவே பிரஹ்மம் என்று நீ உணர்ந்துகொள். எதைக் கண்ணால் பார்ப்பதில்லையோ, ஆனால் கண்களை எதனால் பார்க்கிறானோ, அதுவே பிரஹ்மம் என்று நீ அறி. எதைச் செவியால் கேட்பதில்லையோ, ஆனால் காது எதனால் கேட்பதாகிறதோ, அதுவே பிரஹ்மம் என்று நீ அறிந்துகொள். எதை நாசியால் முகர்வதில்லையோ, ஆனால் மூக்கு எதனால் முகருகிறதோ அதுவே பிரஹ்மம் என்று நீ அறிவாய். இதுபோலவே மற்ற இந்திரியங்களுக்கும் அறிந்துகொள்வாயாக. எதை இங்கே ‘இது பிரஹ்மம்’ என்று உபாஸிக்கிறார்களோ அது பிரஹ்மம் அன்று. எதை நீ அறிந்துவிட்டதாக எண்ணுகிறாயோ அது பிரஹ்மம் அன்று; ஏனெனில் நீ அறிந்ததாய் எண்ணியவுடன் அது உன் மனசுக்கும் புத்திக்கும் எட்டிவிடுகிறதே! ஆகவே அது பிரஹ்மம் ஆக முடியாதே! ஆகையால் அது பிரஹ்மம் அன்று.

கௌதமர்:—தாங்கள் சொன்னவை எல்லாம் ரொம்ப ஆச்சரியமாக இருக்கின்றன ஸ்வாமி! பிரஹ்மம் அறியாத பொருள்களுக்கும் அப்பாற்பட்டது என்று சொன்னீர்களே, அறியாத பொருள்களைப்பற்றித் தெரிந்துகொள்ள முடியுமா?

ஜைமினி:—வத்ஸா! உன் கேள்வியிலிருந்து நீ மிகவும் கவனமாய்க் கேட்பது தெரிகிறது. அறியாத பொருள்களைப்பற்றியும் தெரிந்துகொள்ள முடியும்.

உதாஹரணமாக என் வயது உங்களுக்குத் தெரியாது. ''வயது அறியோம்'' என்று தெரியாத விஷயத்தை நீங்கள் அறிகிறீர்கள். அதுபோலவே அறியாத பொருள் களைப் பற்றியும் நாம் அறியமுடியும். அந்த ஞானத்துக்கும் அப்பாற்பட்டது தான் பிரஹ்மம். அது அறிந்த பொருள் களைவிட வேறு. நாம் அறிகிற நாமரூப குணமுள்ள பொருள்களை விட அது வேறு. அது உருவமும் அன்று ஆனால் அருவமும் அன்று. உருவமுடைய பொருள் களிலிருந்து வேறுபட்டது. ஆனால் அருவத்துக்கும் அப்பாற்பட்டது. அது வ்யக்தமும் இல்லை; அவ்யக்தமும் இல்லை. அறியமுடியாதது. அறிந்ததாக நினைத்திடில் அது பிரஹ்மம் அன்று. பிரஹ்மத்தை அறிந்துவிட்ட தாக எண்ணுவதே பிசகு.

குழந்தைகளே! மாத்யான்ஹிக காலம் நெருங்கி விட்டது. அனுஷ்டானத்திற்குச் செல்வோம் வாருங்கள்

[சீடர்கள் எழுந்து குருவை வணங்குகிறார்கள். எல்லோரும் சேர்ந்து]

''ஸர்வம் பிரஹ்மமயம்—எல்லாம் பிரஹ்மமே
ஸத் சித் ஆனந்தம்—எல்லாம் இன்பமே
ஓம் பிரஹ்மம் ஓம் பிரஹ்மம் ஓம் பிரஹ்மம்!
ஓம் சாந்தி: ஓம் சாந்தி: ஓம் சாந்தி:''

(என்று பாடுகின்றனர்)—திரை விழுகிறது.

காட்சி 2

(திரை தூக்கப்படுகிறது)

[ஆசிரமக் காட்சி:—ஆசிரமத்தின் மற்றொரு புறத்தில் ஜைமினி புலித்தோலின்மேல் வீராஸனத்தில் வீற்றிருக்கிறார். ஒரு பக்கத்தில் மான்குட்டி வந்து நிற்க அதற்குப் புல் எடுத்து ஊட்டுகிறார். மற்றொரு பக்கத்தில் பூனையும் கிளியும் உட்கார்ந்து விளையாடிக்கொண்டிருக்கின்றன. ஆசிரமத்தின் உள்ளிருந்து தோத்திரப் பாடல்களின் இன்னிசை, பசு நெய்யின் மணத்துடன் கலந்து வெளிவந்து எங்கும் பரவுகிறது.

கௌதமர், தலவகாரர் இன்னும் சில சிடர்கள் பிரவேசித்து,

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुर्गुरुर्देवो महेश्वरः ।
गुरुः साक्षात्परं ब्रह्म तस्मै श्रीगुरवे नमः ॥

"குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணுர் குருர் தேவோ
மஹேச்வர: I
குரு: ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம: II"

என்று சொல்லிக்கொண்டு குருவை வணங்கி, ஸாஷ்டாங்கமாகத் தண்டன் ஸமர்ப்பிக்கிறுர்கள். ஜைமினியும் ஆசீர்வாதம் செய்துவிட்டு எழுந்திருக்க எல்லோரும் சேர்ந்து.

ओं नमो ब्रह्मादिभ्यो ब्रह्मविद्या सम्प्रदायकर्तृभ्यो वंशऋषिभ्यो नमो गुरुभ्यः ।

यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै ।
तं ह देवमात्मबुद्धिप्रकाशं मुमुक्षुर्वै शरणमहं प्रपद्ये ॥

ओं शान्तिः शान्तिः शान्तिः ।

ஓம் நமோ ப்ரஹ்மாதிப்யோ ப்ரஹ்மவித்யாஸம்ப்ரதாய கர்த்ருப்யோ வம்சரிஷிப்யோ நமோ குருப்ய: I

"யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்
யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை I
தம் ஹ தேவ-மாத்ம-புத்தி-ப்ரகாசம்
முமுக்ஷுர் வை சரணமஹம் ப்ரபத்யே II"

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

[என்று மங்களாசரணம் செய்கின்றனர். எல்லோரும் தங்கள் தங்கள் இடங்களில் அமருகின்றனர்.]

ஜைமினி:— குழந்தைகளே! உங்களுக்கு வேதமாதா ஸகல கல்யாண குணங்களையும் அருளுவாளாக. கௌதமா! முன்பு சிரவணம் செய்த விஷயங்களைப் பற்றிச் சிந்தனை செய்தாயா?

கௌதமர்:— ஸ்வாமி, எண்ணுந்தோறும் ப்ரஹ்ம சிந்தனை வியப்பை ஊட்டுகிறது. ஒரு சமயம் நன்ருய், தெள்ளத்தெளிய — தெரிந்ததுபோல் தோன்றுகிறது. அடுத்த கணத்திலேயே ஒன்றும் விளங்காமல்-மனத்துக்கும் அகப்படாமல்-ஓடிவிடுகிறது.

தலவகாரர் :— தங்கள் உபதேசங்களைக் கேட்டது முதல் அதையே நினைத்து மனனம் செய்துவந்தேன். நன்ருய் விளங்குகின்றன. ப்ரஹ்மத்தை நான் அறிந்து கொண்டேன்.

ஜைமினி:—சிஷ்யர்களே! துவக்கத்திலேயே உங்களை ஒன்று எச்சரிக்க விரும்புகிறேன். எல்லாம் அறிந்ததாய் எண்ணிவிடாதீர்கள். நீங்கள் தெரிந்துகொண்டதாய் எண்ணுவது மிகவும் சொல்பமே. தலவகாரா! வத்ஸா! நன்ருகத் தெரிந்துகொண்டேன் என்று நீ எண்ணுவதில் இந்த ப்ரஹ்மத்தின் எந்த ரூபத்தை (இங்கு) அறிந்திருக்கிருயோ அது அற்பம் என்பது நிச்சயம். இந்த ப்ரஹ்மத்தின் எந்த ரூபத்தைத் தேவதைகளிடம் அறிந்திருக்கிருயோ அதுவும் அப்படியே அற்பம்தான். ஆகையினுல் ப்ரஹ்மம் உனக்கு இன்னும் விசாரிக்கவேண்டிய நிலையிலேயே இருக்கிறது. மனனம் செய்து நன்ருக ஸாங்கோபாங்கமாக விசாரித்து அறியவேண்டியதாகவே இருக்கிறது. இன்னும் நீ பூர்ண மாக அறிந்தபாடில்லை.

தலவகாரர் :—குருநாதா! எனக்கு ஒன்றும் தீர்மான மாகத் தெரியவில்லை. விதை ஊன்றிய தாங்களே மேலும் தண்ணீர் விட்டு வளர்க்கவேண்டும். தங்கள் உபதேசமாகிற அமிருத மழையினுல், வளம் அடைந்து ஞானக் கனியை நாங்கள் பெற அருளவேண்டும் ஸ்வாமி.

ஜைமினி:—ஓர் ஏழை நாட்டுப்புறத்தான், ராஜ தானிக்குச் சென்றதும், அரசர் வாழும் அரண்மனைக்குப் போகிருன். அங்கே முன் வாசற் பூஞ்சோலையைக்

கண்டு மகிழ்வுற்று மாளிகையைக் கண்டதாக மயக்கம் அடைகிறான். தோரணவாயிலில் கண்ட அலங்காரங்களைப் பார்த்தே பிரமித்துவிடுகிறான். அரண்மனைக்கு உள்ளிருக்கும் செழிப்பையும் அணிகளையும் சுகபோகங்களையும் கேளிக்கைகளையும் அறிந்து பழகி உணரவேண்டுமேயல்லாது விவரித்துச் சொல்ல முடியாது. அதுபோலவேதான் பிரஹ்ம ஸாக்ஷாத்காரமும். முதல் பாடத்திலேயே அறிந்து விட்டதாய்ப் பிரமை தட்டும். அதில் கலங்கிவிடாதீர்கள். நம்பி மோசம் போகாமல் ஜாக்கிரதையாக இருந்து தொடர்ந்து ஆத்மவிசாரணை செய்யவேண்டும்.

கௌதமர் :—பூஜ்ய குருவே! கவனமாகவே கேட்டு வருகிறோம். மேலும் விஸ்தாரமாகவே சொல்லுங்கள்.

ஜைமினி :—வளருகின்ற ஒரு கொடி கதிரவனை நாடுவதுபோலவும், ஜலம் பள்ளத்தாக்கைப் பார்த்து ஓடுவதுபோலவும், மனிதனுடைய மனமும் பரம்பொருளையே நாடுகிறது. ஆனால் அந்த ப்ரஹ்மமோ இந்திரியங்களால் அறியமுடியாதது. நாம் பிரமாணங்களால் தெரிந்துகொள்வது எல்லாம் பரோக்ஷ ப்ரஹ்மத்தைப் பற்றித்தான்.

கௌதமர் :—அப்படியானால் ப்ரஹ்மத்தை அபரோக்ஷமாக அறிவது எப்படி? அதையே ஆரம்பத்தில் கற்பது நலம் அல்லவா?

ஜைமினி:—குழந்தாய் தலவகாரா, இந்தப்பூனைக்குக் குடிப்பதற்குக் கொஞ்சம் பால் கொண்டுவா.

(தலவகாரர் உள் சென்று ஒரு தொன்னையில் கொஞ்சம் பாலுடன், வந்து பூனைக்குப் பக்கத்தில் வைக்கிறார். அந்தப் பூனையும் பாலைப்பருகக் குருவின் அனுமதியை எதிர்பார்க்கிறது)

ஜைமினி :—வத்ஸா, நான் பால் மட்டும்தானே கொண்டுவரச்சொன்னேன். தொன்னையை எதற்காகக் கொண்டுவந்தாய்? தொன்னையை நீக்கிவிட்டு பாலை மட்டும் கொண்டுவா.

தலவகாரர் :— (குழப்பத்துடனும் வியப்புடனும்) ஸ்வாமி, அது எப்படிச் சாத்தியமாகும்? தொன்னையில்லாமல் க்ஷீரம் எப்படிக் கொண்டுவரமுடியும்? பாத்திரம் இல்லாமல் பாலைக்...கொண்டுவர...முடியாதே.

ஜைமினி :— சரி போகட்டும்! ஹே மார்ஜாலமே! பாலைக் குடித்துவிட்டுச் கிளியுடன் சுகமாய் விளையாடு. வத்ஸா! தலவகாரா! எப்படிப் பாத்திரமில்லாமல் பாலை எடுக்கமுடியாதோ அது போலவே ப்ரஹ்மத்தையும் உங்கள் புத்தியில் கொண்டுவர-அறிவிக்க-ஒரு பாத்திரம் தேவை. அவைகள் தாம் முந்தின பாடங்களில் சொன்ன இந்திரியக் கூட்டங்கள் (கண்ணுக்குக் கண்ணாகவும் முதலியவை). ஸகுண ப்ரஹ்மமான தேவதா மூர்த்திகளும் அப்படியே தான் நிர்குணமான ப்ரஹ்மத்தைக் காட்டத் துணைபுரிகின்றன. ஆகையினால் அவைகளை அறிந்தவுடன், உண்மையை அறிந்து விட்டதாகப் பெருமிதம் அடையாதீர்கள்.

தலவகாரர் :— பின் உண்மையை அறிவது எப்படி?

ஜைமினி:—நன்றாய் விசாரணை செய்தால் ஸமாதியில் தெரியும்.

[சிறிது நேரம் எல்லோரும் மௌனமாகத் தியானத்தில் இருக்கின்றனர். பிறகு பேச்சு மறுபடியும் ஆரம்பமாகிறது.]

தலவகாரர்:— இப்போது ப்ரஹ்மம் அறியப்பட்டது என்று நினைக்கிறேன். எப்படியென்றால் "நான் நன்றாகத் தெரிந்துகொண்டேன் என்று (இப்போது) நினைக்கவில்லை. அறியவில்லையென்றோ, அறிந்தேன் என்றோ எண்ணவில்லை. எங்களில் எவன் 'அறியவில்லையென்றோ' 'அறிந்தேன் என்றோ' எண்ணவில்லை என்று இதை உணர்ந்தவனோ அவன்தான் அதை (ப்ரஹ்மத்தை) உணர்ந்தவன்; நன்கு தெரிந்தவன். அது அறியாத பொருள்களுக்கும் அப்பாற்பட்டதென்றும், அறிந்த பொருள்களைவிட வேறு என்றும் நான் அறிகிறேன். ஆனால் அறியவுமில்லை.

கௌதமர் :— ஸ்வாமீ! என்னை அறியேன் நான்; என்னை அறிந்தேன் நான், என்று சொல்லுவது முன்னுக்குப் பின் முரண் அல்லவா? அது நகைப்புக்கும் இடம் அல்லவா!

ஜைமினி:—வத்ஸா! கௌதமா! அதில் நகைப்புக்கு இடம் எங்கேயிருக்கிறது. அறிபவன் அறியப்படுவது என இருபொருள் இன்மையால்-அனுபூதி உண்மையில் இரண்டும் அற்றதால்-தலவகாரர் கூற்று முற்றும் சரியே!

கௌதமர் :— குருநாதா! இன்னும் கொஞ்சம்கூட விளக்கமாக அருளவேண்டும்.

ஜைமினி:—''எனக்கு நன்ருகத் தெரியுமென்று நான் எண்ணவில்லை.'' நாமரூபங்கள் உள்ள பொருள்களை அறிவதுபோல் ப்ரஹ்மத்தைத் தெரிந்துகொள்ள முடியாது. இந்தக் கமண்டலம், ஜலபாத்திரம், மரவுரி முதலிய சாமான்களை அறிவதற்கும், ப்ரஹ்மத்தை அறிவதற்கும் வித்யாசம் உண்டு. ஜாதி, குணம், கிரியை, ஸம்க்ஞை முதலிய தர்மங்கள் இல்லாதது ப்ரஹ்மம். அகண்டமானது அது. சிறியது பெரியது; குட்டை நீளம், பிறப்பு இறப்பு, நிறம், உருவம், பெயர் முதலிய விகாரங்களும் குறிகளும் அதற்கு இல்லை. அதை அறிந்ததாய்ச் சொல்வது வீண் பிரமை. ஆகவே ப்ரஹ்மத்தை எனக்கு நன்ருகத் தெரியுமென்று எண்ணவில்லை. அது முற்றிலும் சரியே.

பிறகு அடுத்த வாக்கியத்துக்கு வருவோம். ''மீண்டும் விசாரித்தபின் இப்போது அறியப்பட்டதென்று நினைக்கிறேன்'' இதன் பொருள் என்னவென்ருல், ஸமாதியில் ப்ரஹ்மத்தைத் தெளிவாக அறியமுடியும் என்பதுதான். ப்ரஹ்மத்தைப்பற்றித் தெரிந்துகொள்வது முடியாது. ஆனுல் ப்ரஹ்மமாகத் தெரிந்துகொள்ளலாம். கடலிலுள்ள நீரைக் காய்ச்சி உப்பு எடுத்து அந்த உப்பாலேயே ஒரு பொம்மை செய்து ஒரு நூலில் பிணைத்து, கடலில் போட்டுக்

கொஞ்சம் கழித்து நூலை வெளியில் எடுத்தால் பொம்மை இருக்குமா? அதுபோலவே ஸமாதியில் ப்ரஹ்மத்துடன் இரண்டறக் கலந்து விட்டால் அதை வர்ணிக்க முடியுமா? பால் பாயஸம் நன்ருயிருக்கிறது என்று வால்மீகியைப் போன்ற மஹாகவி வந்து வர்ணித்தாலும், அந்த பாயஸத்தை உண்ட ருசி கிடைக்கப் பெறுமா? ஒவ்வொருவரும் தனித்தனியே தியான ஸமாதியில் அமர்ந்து அதை அனுபவிக்கவேண்டும். அப்போதுதான் அபரோக்ஷமாக ப்ரஹ்மஞானம் அடைவீர்கள்.

தலவகாரர்:— இந்த ப்ரஹ்மஞானத்தால் பெறும் பேறு என்னவோ? அதையும் விபரமாகக் கூற வேண்டும்.

ஜைமினி:— அந்த ப்ரஹ்மம் அமதம் (அறியப் படாதது) என்பது எவன் மதமோ (கொள்கையோ) அவனுல் அது அறியப்பட்டதாம். அறியப்பட்டது என்பது எவன் மதமோ அவன் அறியவில்லையாம். அறிவாளிகளுக்கு அது அறியப்படாதது. அறிவீனர்களால் அறியப்பட்டதாய்க் கருதப்படுவது. 'ஒவ்வொரு போதத்திலும் விளங்கும் அது, அறியப்படாமல் அறியும் வஸ்துவாக நிற்கிறது" என்பது முடிவான மதம் (கருத்து).

அதனுல் அதை அப்படித்தெரிந்தவன் சாகாத் தன்மையை அடைகிருன். அமரத்வம் கிட்டுகிறது. ஆத்மாவிடமிருந்து உண்மையான வீரியத்தை அவன் பெறுகிருன். அந்த ப்ரஹ்ம வித்யையாலேயே சாகா நிலையை எய்துகிருன். இங்கேயே (இப்போதே) ஒருவன் உண்மையை அறிந்தால் அவன் அழியாமல் இருக்கிருன். இங்கே அறியாவிட்டால் பெரும் அழிவு ஏற்படுகின்றது அவனுக்கு. பொருள் தோறும் ஆத்மாவை ஆராய்ந்து கண்டுகொண்ட தீரர்களே இவ்வுலகத்தை விட்டு அமரர்கள் ஆகின்றனர். இந்த ஆத்மாவைப் பலமில்லாதவன் அடையமுடியாது. உண்மையான

பலம் ஆத்ம பலம்தான். அந்த பலத்தாலேயே அமிருத நிலை ஏற்படும்.

அது உங்கள் பிறப்புரிமை. அதை உடனே நீங்கள் அடையலாம். அதை அறிந்தால் (என்ன இல்லாவிட்டாலும்) நீங்கள் எல்லாம் பெற்றவர்கள்—உடையவர்கள்—ஆகிறீர்கள். அதை இழந்துவிட்டால் (வேறு என்னவெல்லாம் பெற்றிருந்தபோதிலும்) பெரும் நஷ்டம் அடைவீர்கள். ஒன்றும் இல்லாதவராகவே கணிக்கப்படுவீர்கள். ஆகையினால் புத்திசாலிகள், இந்திரிய வாழ்க்கையை நீத்து, எல்லாப் பொருள்களிலும் ப்ரஹ்மத்தைக்கண்டு அமரத்வம் அடைகிறார்கள்.

சிஷ்யர்கள்:— (எல்லோரும் எழுந்து) குருநாதரே! தங்கள் உபதேசத்தால் நாங்கள் தன்யர்களானோம். அநேக கோடி நமஸ்காரம்.

(பிறகு எல்லோரும் சேர்ந்து பாடுகின்றனர்)

“சிதானந்தரூபம், சிவோஹம், சிவோஹம்,
சுத்தம், பூர்ணபோதம் ஸாக்ஷாத்காரம்
பேதத்தை நீக்கு, பயத்தை ஒழி
ப்ரம்ஹத்தைச் சமாதியில் உணர்வாய்
அங்கே அடங்கித்துயில்வாய்
அபேதத்தில் ஆனந்தம் காணுவாய்
அக்ஞானம் விலகி இன்பம் அடைவாய்.
சிதானந்தரூபம், சிவோஹம், சிவோஹம்”

(திரை விழுகிறது.)

காட்சி 3

[ஸ்ரீ ஜைமினி மகரிஷியின் ஆசிரமத்திலிருந்து கைலாஸத்திற்குப் போகும் வழி. அடர்ந்த காட்டினூடே போகும் கொடி வழியில் கௌதமரும், தலவகாரரும், பேசிக்கொண்டே நடந்து வருகின்றனர். அவர்கள் தலையிலும் தோள்களிலும் மூட்டைகள் வைத்திருக்கிறார்கள்.]

கௌதமர் :—நண்பரே, நாளை குலபதி கௌசிகர் அவர்கள் வருகிறார்கள். அவரை வரவேற்பதற்கு வேண்டிய ஸமித்து, தர்ப்பை முதலிய சாமான்கள் கொண்டுவர வந்தோம். நேரம் அதிகமாகிவிட்டதே! வழி தப்பி விட்டோமா?.

தலவகாரர் :-இல்லை, நம் குருநாதர் சொன்ன வழியில்தான் நாம் போய்க்கொண்டு இருக்கிறோம். நாளைய விருந்துக்குவேண்டிய அளவு கந்தமூல பலங்களையும் சேகரித்துவிட்டோம். இதோ அந்த ஸப்தஸால விருக்ஷங்கள். அவற்றைக் கடந்ததும் கடம்பவனம் வருகிறது.

கௌதமர் :—மித்ரரே! நினைவிருக்கிறது, அதற்குப் பக்கத்தில்தானே சென்ற வருஷம் வனபோஜனம் நடந்தது.

தலவகாரர் :—ஆமாம். அன்று எவ்வளவு இன்பமாக இருந்தது. நம் வாழ்க்கையிலேயே பொன் நாளாகக் கொண்டாடவேண்டிய நாள் அது. ஏனென்றால் அன்றையதினம் தேவகுரு பிருஹஸ்பதி பகவான்கூட வந்திருந்தாரல்லவா?

கௌதமர் :— ஆம் வந்திருந்தார்கள். நாம் எல்லோரும் அவர் பாதாரவிந்தங்களில் வணங்கி ஆசியும் பெற்றோம். எல்லாம் நம் ஆசார்யர் அவர்கள் அனுக்கிரஹந்தான்.

[திரைக்குப்பின் கோலாஹல சப்தம் கேட்கிறது "அமரர் வெல்க, அசுரர் ஒழிக, தேவேந்திரன் வெல்க—" என்ற கோஷங்களும் வாத்திய சப்தமும் கேட்கின்றன.]

தலவகாரர் :—நண்பரே! என்ன சப்தம் கேட்கிறது? இதோ பாரும் நம் ஆசிரமத்துக் குயில் பறந்து வருகிறது.

கௌதமர் :— சிநேகிதரே, இது நம் கோகிலம் தான். ஆகையினால் நாம் ஆசிரமத்தை நெருங்கிவிட்டோம்

என்பதும் சரியான வழியில் வந்துகொண்டிருக்கிறோம் என்பதும் நிச்சயம்.

[திரைக்குப்பின் சப்தம் அதிகமாகக் கேட்கிறது. இருவரும் பிரமித்து மூட்டைகளுடன் ஒரு பெரிய ஆலமரத்திற்குப் பின்னால் மறைந்து ஒரு பாறையின் மீது உட்கார்ந்து கொள்ளுகின்றனர். குயிலும் அந்த மரக்கிளையில் உட்காருகிறது.

தேவர்கள் மிகவும் உற்சாகத்துடன், அலங்கார உடைகள் அணிந்து, தேவதுந்துபி முழங்க, ஜயபேரிகைகள் கொட்ட, அணி வகுத்து வருகின்றனர். தேவேந்திரன் கம்பீரமாக நடந்து வருகிறான். மேல் அணிந்திருக்கும் பட்டு உத்தரீயம் தென்றலில் கொடிபோல் பறக்கிறது. கற்பகத்தருவின் வாச மலர்கள் அவன் மேல் தூவப்பட்டுக் கீழே விழுகின்றன. எங்கும் நறுமணம் கமழ வெண் கொற்றக்குடை நிழல்காட்ட, சாமரங்கள் இருபுறமும் வீசப்படாநிற்க, அமராவதி காவலன் அசுரர்களை ஜயித்து அந்த வெற்றியில் மதிமயங்கி அகங்காரத்துடன் பவனி வருகிறான்]

கௌதமர் :—(ஒரு புறமாக) நண்பரே! இது என்ன அமர்க்களம்.

தலவகாரர் :—ஸஹோதரரே! தேவர்கள் தேவாஸுர யுத்தத்தில் ஜயம் அடைந்துவிட்டார்கள். அதனால் மிகுந்த கர்வம் கொண்டு கோஷிக்கிறார்கள். வெற்றி பெற்றவர்கள் தம்மை மறப்பது இயற்கைதானே.

கௌதமர் :—ஆனாலும் தேவர்களுக்கு இவ்வளவு கர்வம் கூடாது. தனக்குத்தானே நிகர் என்று அல்லவா இந்திரன் நடக்கிறான். கடவுளைக் கூட மறந்துவிட்டார்கள் போலும்! தேவர்கள் முகத்தில் தேஜஸுக்குப்பதிலாக ஆணவம் அல்லவா தாண்டவமாடுகிறது! அமரர் அகத்தில் ஆணவமா? நன்று! நன்று! இது எங்கே போய்முடியுமோ.

தலவகாரர் :— எல்லாம் சுபமாகத்தான் முடியும். கவலை வேண்டாம் உமக்கு! கொஞ்சம் பேசாதிரும், அவர்கள் ஏதோ கூறுகிறார்கள், கவனிப்போம்.

கௌதமர் :— ஆகட்டும் அப்படியே. நம் குயில்கூடப் பாடுவதை நிறுத்திவிட்டுக் கவனமாகக் கேட்கிறது. பாரும்.

தேவர்கள் :— எங்கள் மன்னர் வாழ்க!

அக்னி :— எங்கள் வீரத்தோள்கள் வெற்றி பெற்றன. தேவேந்திரனுக்கு ஜே! வீரம் வெல்க!!

வாயு :— படைப்பலத்தால் பகைவரை முறியடித்தோம். பராக்கிரமம் வாழ்க. முகில் ஊர்தியின் மகுடம் மாண்புடன் ஓங்குக!

தேவேந்திரன் :— புஜபலத்தினுல் புன்மையாளரைப் புறமுதுகிட்டு ஓடச்செய்தோம். வாழ்க எங்கள் வெற்றி! ஓங்குக தேவர் கொற்றம்!!

வாயு :— அமராவதி காவல்! அசுரர்கள் பூண்டே அற்றுவிட்டது. அவர்களை வேரோடு களைந்துவிட்டோம்.

அக்னி :—அதுமட்டுமா! வெந்நீரையும் ஊற்றினேம். இனிமேல் நம் அரசர் தேவேந்திரன் பகை அற்று ஏக சக்ராதிபதியாய் மூவுலகத்தையும் ஆண்டு வருவார். வாழ்க அவர் நாமம்! வெல்க அவர் கொற்றம்! தேவேந்திரனுக்கு ஜே!

[எல்லோரும் கோஷமிடுகின்றனர். அந்தக் கோஷங்கள் அண்டங்களெல்லாம் நடுங்கும்படி பயங்கரமாகவும், மிகவும் உச்சஸ்தாயியிலும் இருக்கின்றன. ஆனுல் அப்போது அங்கே ஒரு அற்புதம் நிகழ்கிறது. அந்த சப்தத்தையும் உள்ளடக்கும் பெரிய த்வனியுடன் ஒரு பயங்கரமான பூதம் (யக்ஷன்) தோன்றுகிறது. தேவர்கள் முன்னிலையில் தோன்றிய யக்ஷன் பூஜிக்கத்தகுந்தவனுய் விளங்கியும், தேவர்கள் மதியீனத்தால் அதை உணரவில்லை. யக்ஷன் ப்ரத்தியக்ஷமானவுடன் கௌதமரும் தலவகாரரும், பயந்து நடுநடுங்கி ஒருவரை ஒருவர் கட்டிக்கொள்ளுகின்றனர். முதலில் பீதியால் கண்களை மூடிக்கொண்டு சற்று நேரம் கழிந்து சுய நிலையை அடை

கின்றனர். குயிலும் பயந்து கதறிக்கொண்டு ஆசிரமத்தை நோக்கிப் பறக்கிறது]

தேவர்கள் :— (அக்னிதேவனை நோக்கி) ஹே ஜாத தேவனே (தோன்றிய பொருள்கள் எல்லாவற்றையும் அறியும் ஆற்றல் படைத்தவனே), இந்த யக்ஷவடிவம் என்ன என்று அறிந்துவருவாயாக! இந்த சமயம் இது இந்த இடத்தில் ஆவிர்பவிக்கக் காரணம் என்ன? அசுர மாயையா? எல்லாம் சரியாகத் தெரிந்துவா!

அக்னி :— அமரர்களே! அப்படியே ஆகட்டும். இதோ ஒரு நொடியில் போய் (மாயமாலங்களை) அறிந்து வருகிறேன். (யக்ஷனை நோக்கிப் பெருமிதத்துடன் செல்கிருன்)

யக்ஷன் :— நீ யார்?

அக்னி :— நான் ஜாதவேதன்; அக்னியென்றும் சொல்வார்கள். தோன்றியதை எல்லாம் தோன்றியபடி அறியும் ஆற்றல் உள்ளவன் என பிரசித்திபெற்றவன்.

யக்ஷன் :— அப்படிப்பட்ட உன்னிடம் என்ன வீர்யம் உள்ளது? உன் சக்தியின் பரிணமம் என்ன? பரிமாணம் எவ்வளவு?

அக்னி :— (புன்னகையுடன்) சிறு பாலனைப்போல் கேள்வி கேட்கிருயே! என் வீர்யத்தை அறியாதவர் உண்டோ? இந்த உலகில் உள்ளது எல்லா வற்றையும் எரிக்கும் சக்தி என்னிடம் உள்ளது. எதையும் எப்பொருளையும் நான் எரித்துவிடுவேன்.

(யக்ஷன் ஒரு சிறு புல்லை எடுத்து முன்வைக்கிறது. காலை வேளையானதால் அந்தப் புல்லின் நுனியில் ஒரு பனித்துளி வைரம்போல் பளிச்சென மின்னிக்கொண்டிருக்கிறது.)

யக்ஷன் :—ஹே அக்னி பகவானே! ஸகலத்தையும் எரிக்கும் திறமை உள்ளவனே, இந்தச் சிறு புல்லை எரிப்பாயாக!

(அக்னி மிக விரைவில் அதன்மேல் பாய்ந்தும் அதை எரிக்கமுடியவில்லை)

அக்னி :— (தனக்குள்) பிரளயகாலாக்னியின் உஷ்ணத்துடன் தாக்கியும் இந்தச்சிறு புல் எரியவில்லையே. என்னால் இந்தப்பூதம் என்னவென்று தெரிந்துகொள்ள முடியவில்லையே. அபஜயமே இல்லாத எனக்குத் தோல்வி வந்துவிட்டதே! அவமானம், வெட்கம். பயங்கரமான பூதத்தை நினைத்தாலே பீதியாக இருக்கிறது. என் அறிவும் மழுங்கி விட்டது. ஜாதவேதன் என்ற என்னுடைய பிருது இன்று முதல் பொருளற்றதான வெறும் வெற்றுச் சொல்லாகிவிட்டது நம் அரசரிடம் செல்லுவேன். அமராவதி காவலனிடம் சென்று அடைக்கலம் புகுவேன்.

(அக்னி தோல்வியுற்று தலைகவிழ்ந்து கொண்டு தேவர்கள் பக்கம் ஓடி வருகிறான். தேவேந்திரன் அவனை அணைத்துக் கொண்டு ஆச்வாசப்படுத்துகிறான்.)

தலவகாரர் :— (ஒரு புறமாக) கௌதமரே, பார்த்தீரா ஒரு விந்தையை. இந்த அக்னியினால் அந்தப் புல்லில் உள்ள பனித்துளியைக்கூட உலர்த்த முடியவில்லையே!

கௌதமர் :— ஆம் நண்பரே, இது மிகுந்த அற்புதம் தான். அக்னிக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்!

தேவர்கள் :— அக்னியே, நடந்தது என்ன. ஏன் இப்படி அலங்கோலமாக ஓடி வருகிறாய்?

அக்னி :— என்னால் அந்த யக்ஷ வடிவம் என்ன என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. அது என் முன்னால் வைத்த சிறு துரும்பையும்கூட என்னால் எரிக்க முடியவில்லை. நான் பராஜயம் அடைந்து விட்டேன். மேல் யோசித்து ஆவன செய்யுங்கள்.

தேவர்கள் :— வாயுவே! நீர் சென்று இதன் உண்மையைத் தெரிந்து வாரும். நீர் போகாத இடம் இல்லை. புகாத புலன்கள் இல்லை. தெரியாத விஷயமும் இராது. ஆகவே கொஞ்சம் தயவுபண்ணிப் போய் வாரும்.

வாயு :— அங்ஙனமே ஆகட்டும். இதோ ஒரு நிமிஷத்தில் சென்று அறிந்து வருவேன். வெற்றியுடன் வருவேன். கவலை வேண்டாம்.

(வாயுதேவன் அந்த யக்ஷனை நோக்கி ஓடிவருகிறான்)

யக்ஷன் :— (வாயுவை நோக்கி) நீ யார்? எங்கு வந்தாய்?

வாயு :— ஹே பயங்கரப் பூதமே! நான் வாயுதேவன். மாதரிச்வா எனப் பிரசித்திபெற்றவன். ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவன்.

யக்ஷன் :— அப்படியா, வெகு சந்தோஷம். உன் வரவு நல்வரவு ஆகுக! அப்படிப்பட்ட உன்னிடம் என்ன வீர்யம்-சக்தி-உள்ளது? உள்ளபடியே உரைப்பாய்! முன்வந்த அக்னியைப்போல் முடியாத காரியத்தைச் சொல்லி, வீணாகக் கஷ்டப்படாதே!

வாயு :— உலகில் எது உண்டோ, அது எல்லாவற்றையும் நான் தூக்கக்கூடும். அவைகளைத் தூக்கி எறிவேன். மலைகளை எடுத்து மறிப்பேன். தூக்கி வீசுவேன். இமயத்தையும் மேருவையும் பந்தாடுவேன். என்னுல் உனக்கு என்ன உதவி வேண்டுமோ தயங்காமல் கேள்! செய்கிறேன்.

யக்ஷன் :— வந்தனம். விசேஷமாக ஒன்றும் செய்ய வேண்டாம். இந்தச் சிறு புல்லைத் தூக்கு. அது போதும்.

வாயு :— இது என்ன பிரமாதம்! உன் மூர்த்தியின் அளவுக்கு மூளையில்லாமல் போய்விட்டதே உனக்கு. என்ன பரிதாபம்?

யக்ஷன் :—வாயுதேவா! பரிகாசம் பின்னுல். முதலில் வேலையைக் கவனி.

(வாயு ஊழிக்காற்ருக — பிரசண்டமான வேகத்துடன் அந்தப் புல்லின்மேல் பாய்ந்தும் அதை அசைக்கவும் முடியவில்லை).

கௌதமர் :— (ஒரு புறமாக) நண்பரே! பார்த்திரா! அந்தத் துரும்பு நகரவேயில்லை. மேருவைப் பந்தாடிய வாயுதேவனுக்கு அது அசைந்துகொடுக்கவேயில்லையே! இது என்ன ஆச்சரியம்!

தலவகாரர் :—சகோதரரே! இதில் அதிசயம் ஒன்றும் இல்லை. அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது. இது தெரியாதா உமக்கு!

கௌதமர்:— வாஸ்தவம். இந்தப்பனித்துளி மஹாவிஷ்ணுவின் மார்பில் கௌஸ்துபமணிபோல் பச்சைப் புல்லில் இன்னும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறதே!

வாயு :— (தனக்குள்) இந்த அற்புதமான சக்தி வாய்ந்த பூதத்தைபபற்றி என்னுல் ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லையே. எனக்கும் படுதோல்விதான். நினைக்க நினைக்க எனக்கு பயமாக இருக்கிறது. அதோடு லஜ்ஜை வேறு. திரும்பிவிடுவோம். (தேவேந்திரனிடம் ஓடி வருகிருன்) "அமரர்கள் ஏறே, அடைக்கலம் தருவாய். அசுர குலாந்தகா! அபயம் அருள்வாய். அந்த யக்ஷன் யார் என்ரோ, அதன் செய்கை என்ன என்ரோ என்னுல் அறிய முடியவில்லை. நம் ஸஹோதரன் அக்னியைப்போல் நானும் தோல்வியுற்றுத் திரும்பிவிட்டேன். மேல் ஆகவேண்டிய காரியங்கள், தேவர்களால் சிந்தித்துச் செய்யப்பட வேண்டும்.

(அமரர்கள் எல்லோருமாகக் கொஞ்நேரம் ஆலோசனை செய்கின்றனர். மந்திராலோசனை முடிந்ததும்)

தேவர்கள் :— (தேவேந்திரனைப் பார்த்து) எங்கள் பேரரசே! இப்போது அசுரரை வென்று வெற்றிவிழாக் கொண்டாடும் வேளையில்-பூஜை வேளையில் கரடி நுழைந்தது போல், இந்த யக்ஷன் குறுக்கிட்டிருக்கிறன். இது அசுரமாயையா? அல்லது சுக்கிராச்சாரியாரின் சூழ்ச்சியா என்றுகூட நம்மால் அறியமுடியவில்லை. எந்த ஆபத்திலும் தாங்களே எங்களுக்கு வழிகாட்டி, வெற்றிப்பாதையில் நடத்திச் செல்லுகிறீர்கள். இப்போதும் இந்த உண்மையைக் கண்டறிந்து வேண்டியது செய்யவேண்டும். புருஹூதா! போய் வரவேணும்.

தேவேந்திரன் :—அமரர்காள்! அச்சம் வேண்டாம். கவலையை ஒழியுங்கள். நான் இந்த க்ஷணமே போய் இதன் உண்மையை அறிய முயற்சிக்கிறேன்.

வாயுவும், அக்னியும் :—அமராவதி காவல! தாங்கள் மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும். அந்தப் பூதம் பீமமானது. பீகரமானது. பீஷ்மமான சக்தியை உடையது. ஸர்வ ஜாக்கிரதையுடன் போக வேண்டும் ஸ்வாமி!

தேவேந்திரன் :—அங்ஙனமே ஆகுக. விழிப்புடன் செல்லுவேன். என்னல் இயன்றபடி முயற்சி செய்து உண்மைகாண முயல்வேன்.

(தேவேந்திரன் அதை நோக்கிக் கர்வமின்றி நிதானமாகச் செல்லுகிறன். அங்கிருந்த பூதம் (யக்ஷ வடிவம்) உடனே மறைந்துவிட்டது எல்லோரும் ஆச்சரியத்தில் மூழ்கி நிற்கின்றனர்.

தேவர்கள் :—மகவன், தாங்கள் திரும்பிவிடுங்கள். அந்தப் பயங்கர யக்ஷன் மறைந்துவிட்டான். ஸ்வர்க்கம் செல்லுவோம்.

அக்னி :— அமரேந்திரரே! தங்களைப் பார்த்துப் பயந்து பூதம் ஓடிவிட்டது. திரும்புங்கள் போவோம்.

விருந்துக்கு நேரமாகிறது. அதிதிகள் வந்து காத்திருப்பார்கள். போவோம்.

வாயு :-ஸஹஸ்ராக்ஷரே, திரும்பிப்போவோம் வாருங்கள். பேடிபோல் — எதிர்நிற்கமுடியாமல் — மறைந்துபோன பூதத்தைத்தேடி மேலும் செல்ல வேண்டாம். நடனக்கேளிக்கைகள் ஆரம்பமாக வேண்டும். ஊர்வசி, ரம்பை, திலோத்தமை முதலான எல்லோரும் தங்கள் வரவுக்கு ஏங்கிக்கிடக்கின்றனர். அவர்களுக்கு ஏமாற்றம் அளிக்கலாகாது. உடனே போவோம்.

தேவேந்திரன்:— தேவர்களே! நீங்கள் சொல்வது சரியல்ல. நான் முன்வைத்த காலைப் பின் வைக்க மாட்டேன். நீங்கள் வேண்டுமானல் போங்கள். நான் இதன் உண்மையை அறியாமல் வரமாட்டேன். இன்னும் அருகில் போய் கிட்ட நெருங்கி — நன்ருய்க் கூர்ந்து கவனித்து வருவேன். இதில் ஏதோ சூக்ஷ்மம் இருக்கிறது.

(தேவேந்திரன் வணக்கத்துடன் ஆனல் கம்பீரமாக, யக்ஷன் நின்றிருந்த இடத்தை நெருங்குகிருன். அப்போது அங்கேயே — ஆகாயத்தில் இமவான் புத்திரியும் மிகுந்த அழகால் பிரகாசிப்பவளுமான உமாதேவி ப்ரத்யக்ஷமாகிருள். ஸகலவிதமான அலங்காரங்களுடன், உருக்கிய தங்கம்போல் ஒளிவிடும் மேனியவளாய் உமாதேவி பிரகாசிக்கிருள். உமாதேவி தோன்றியதும். அந்தத் தேஜஸ்ஸின் ஒளியைத் தாங்க முடியாமல் தலவகாரரும், கௌதமரும் மூர்ச்சையாகிக் கீழே விழுகின்றனர் தேவேந்திரன் மட்டும் அருகில் சென்று ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து விண்ணப்பம் செய்து கொள்கிருன்).

தேவேந்திரன் :— கோமளவல்லித்தாயே! கோடி நமஸ்காரம்.

“ஈசுவரி, மஹேசுவரி பாஹி மாம்
மாதேசுவரி ராஜேசுவரி ரக்ஷ மாம்
உமாதேவி மஹாதேவி பாஹி மாம்

வித்யாதேவி துர்காதேவி ரக்ஷ மாம்
பயஹாரிணி பவதாரிணி பாஹி மாம்
ஸர்வகாரணி தயாபூரணி ரக்ஷ மாம்''

(என்று பாடி வணங்குகிருன்)

ஜகதம்பிகே! அடியேனைக் காத்தருள்வாய். இப்போது மறைந்த யக்ஷவடிவம் யார்? அது எதற்காகத் தோன்றியது? இப்போது மறையவேண்டிய காரணம் என்ன? அக்னியும் வாயுவும் தோல்வி அடையக் காரணம் என்ன?

(மறுபடியும் பாதாரவிந்தங்களில் விழுந்து வணங்குகிருன்)

உமாதேவி:—குழந்தாய், இந்திரா! எழுந்திரு. எல்லாம் உனக்கு விளக்கமாகக் கூறுகிறேன்.

''இந்த யக்ஷவடிவம் அந்தப் பிரஹ்மமேயாகும். தேவாசுர யுத்தத்தில், பிரஹ்மம் தேவர்களுக்காக ஜயித்தது. இந்த விஜயம் பிரஸித்தமாயிருந்தும் ப்ரஹ்மத்தின் அந்த விஜயத்தில் தேவர்கள் பெருமிதம் எய்தினர். பிரஹ்மத்தை மறந்து, ''இந்த விஜயம் எங்களுடையது. இந்தப் பெருமை எங்களுடையது'' என்று அக்ஞானத்தில் மூழ்கிக் கோஷமிட்டீர்கள். உங்களுடைய அந்தத் தவருன எண்ணத்தை ப்ரஹ்மம் உணர்ந்து உங்களிடையில் யக்ஷ வடிவமாகத் தோன்றியது. தோன்றியும் நீங்கள் அதன் மஹிமையை உணரவில்லை. ஸ்ரீபரமேசுவரனுடைய யோக மஹிமையால் தோற்றுவிக்கப்பட்ட அந்த அற்புதமான வடிவம் பூஜிக்கத் தகுந்ததாய் விளங்கியும் தேவர்கள் மந்த புத்தியால் அதை உணரவில்லை. பிரஹ்மத்தின் முன்னிலையில் அக்னியும் வாயுவும் சக்தி இழந்தது நியாயமே.

தேவேந்திரன்:— ஹே ஜகத் ஜனனி! எனக்கு அஹங்காரம் அறவே ஒழிந்துவிட்டது. அன்னை பராசக்தியே! அருள் செய்வாய் அம்மா! அபராதங்களையெல்லாம் பொறுத்துக்கொண்டு கருணை புரிவாய்.

உமாதேவி :— தேவேந்திரா, உன் பக்திக்கு மெச்சினேம். பிரஹ்மஞானமே சிறந்த ஞானம். அபேதத்தால் பயத்தை ஒழிப்பாய். நீங்கள் அடைந்த விஜயம் ப்ரஹ்மத்தால் உண்டானதே. அந்த ப்ரஹ்மத்தின் விஜயத்தில் தான் நீங்கள் பெருமை கொள்ள வேண்டும். தற்பெருமை கொள்ளுவது அறிவீனம். அந்தப் பிரஹ்மம் 'தத்வனம்' என்று பெயர் பெற்றது. அதைத்தெரிந்து, தீமைகளை ஒழித்து எல்லையில்லாத உயர்ந்த ஸ்வர்கலோகத்தில் மற்ற தேவர்களுடன் நிலை பெற்றிருப்பாயாக. உனக்கு ஸர்வ மங்களங்களும் உண்டாகும்.

(உமாதேவி அந்தர்த்தனமாகிருள். தேவேந்திரன் சந்தோஷமாகத் திரும்புகிருன். தேவர்களிடம் வந்து விபரங்களை விளக்கமாகச் சொல்லுகிருன்.)

தேவர்கள் :—(பரபரப்புடன்) எங்கள் அரசே! தாங்கள் சுகமாய்—சந்தோஷமாய்—வந்ததுகண்டு மகிழ்ச்சி. ஸ்ரீ உமாதேவியின் அருளால் நாம் தன்யர்களானேம்.

தேவேந்திரன் :— தேவர்களே! ஆணவம் வேண்டாம். அஹங்காரத்தை விடுவோம். அன்னையை மறவோம். என்றும் பிரம்மத்தியானத்தில் இருப்போம். வேதமாதாவின் கருணையே கருணை. "குபுத்ரோ ஜாயேத, க்வசிதபி குமாதா ந பவதி" என்றபடி அகிலாண்டேச்வரி உமாதேவி — ஹைமவதி — என்றும் நமக்கு இரங்குவாள். ஆசீர்வதிப்பாள். அவளைப் போற்றி வணங்குவோம்.

ईश्वरि महेश्वरि रक्ष माम् ।
मातेश्वरि राजेश्वरि पाहि माम् ॥

"ஈசுவரி மஹேசுவரி ரக்ஷ மாம்
மாதேசுவரி ராஜேசுவரி பாஹி மாம்"

(எல்லோரும் சேர்ந்து பாடுகிருர்கள்)

(திரை விழுகிறது)

காட்சி 4

[திரை தூக்கப்பட, சென்ற காட்சி நடைபெற்ற அதே இடத்தில், தலவகாரரும், கௌதமரும் மூர்ச்சை தெளிந்து எழுந்து உட்காருகின்றனர்.]

தலவகாரர் :—கௌதமரே! நாம் பார்த்ததும் கேட்டதும் வியப்பிலும் வியப்பல்லவா! ஒரே அதிசயம்தான்! மனதுக்கு எவ்வளவு சாந்தி ஏற்பட்டிருக்கிறது.

கௌதமர் :—ஆமாம், நண்பரே! யக்ஷனின் அந்த அற்புத வடிவத்தை எண்ணி எண்ணி எனக்கு இப்போதும் மஹத்தான வியப்பு உண்டாகிறது. மேலும் மேலும் நினைத்து ஆனந்தமும் அடைகிறேன்.

தலவகாரர் :—ஆம்; பல யோகிகளும், முனிவர்களும் கூடக் காணமுடியாத தரிசனம் நமக்குக் குருவின் அருளால் கிடைத்தது. குருநாதர் இருக்கும் திசை நோக்கித் தெண்டன் ஸமர்ப்பிப்போம்.

[இருவரும் ஆசிரமம் இருக்கும் திக்கு – அவிபெறும் அழல் தூபம் ஆகாயத்தை நோக்கி உயரும் திசை-நோக்கிக் கைகூப்பி வணங்குகிறார்கள். அதே சமயம் அங்கு ஜைமினி மகரிஷி, ஆசிரமவாசிகள், சிஷ்யர்கள், மயில்கள், மான்கள், கிள்ளைகள், குயில்கள் புடை சூழ அங்கே எழுந்தருளுகிறார். சீடர்கள் இருவரும் எழுந்து ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கிறார்கள். குருவும் ஆசீர்வாதம் செய்து அணைத்துக்கொள்கிறார். எல்லோரும் பெரிய வட விருக்ஷத்தின் அடியில் உட்காருகின்றனர்.]

மகரிஷி :—குழந்தைகளே! நீங்கள் வரத் தாமதமானவுடன் ஆசிரமவாஸிகள் எல்லோரும் கலவரம் அடைந்துவிட்டார்கள். அவர்களை சமாதானம் செய்வதற்குள் நம்முடைய குயிலும் அங்கு வந்து சேர்ந்தது. உடனே எல்லோருமாகப் புறப்பட்டு வந்தோம்.

மற்ற சிஷ்யர்கள் :—நண்பர்களே! உங்களைக்காணாமல் நம் அருமைத் தாயார் (குருபத்னீ) மிகவும் கவலைப்

பட்டார்கள். பிறகு குருநாதரின் வாக்குகளால் சாந்தி அடைந்தார்கள்.

ஜைமினி:—வத்ஸா கௌதம! குழந்தாய் தலவகாரா! நீங்கள் பாக்கியசாலிகள். நான் சொன்ன உபதேசங்களுக்கு விளக்கம்போன்றவை இப்போது நீங்கள் கண்டதும் கேட்டதும். அந்த யக்ஷவடிவம் பரப்ரஹ்மம் என்று நீங்கள் தெரிந்துகொண்டிருப்பீர்கள். வாயு செல்வச் செருக்கின் அதிஷ்டானம். கல்விச் செருக்கின் இருப்பிடம் அக்னி. (ஜாதவேதன்-எல்லாம் அறிவேன் என்ற அஹங்காரம்) இந்திரன்-என்பவன்-மனதுக்குத் தேவன்.

கௌதமர் :— ஒரு கதைபோல் இருந்ததில் எவ்வளவு தத்துவம் அடங்கியிருக்கிறது

ஜைமினி:— பரப்ரஹ்மத்தினிடம் சென்ற வாயுவுக்கும் அக்னிக்கும் அவமானம் கிடைத்ததில் ஆச்சரியம் இல்லை. ஆணவத்துடன் சென்றனர். யார் என்று அறியப்போனவர்கள் அந்தக் கேள்விகூடக் கேட்க முடியாமல் ஊமையாயினர். யக்ஷன் அவர்களை நோக்கி 'நீங்கள் யாவீர்' என்று கேட்டபின் தான் அவர்களால் பேசவே முடிந்தது.

தலவகாரர் :-ஆமாம் ஸ்வாமி. யக்ஷன் ஸன்னிதானத்தில் சிறு துரும்பையும் அசைக்க முடியவில்லையே அவர்களால்.

கௌதமர்:— எந்த ப்ரஹ்மத்தால் தூண்டப்பட்டு நாக்குப் பேசுகிறதோ, வாக்குகள் உயிர்ப்பிக்கப்படுகின்றனவோ, அந்த ப்ரஹ்மத்தின் முன்னிலையில் அவர்களால் செயலாற்ற முடியாமல் போனது சரிதானே.

ஜைமினி :— நீங்கள் சொல்வது சரி. தேவேந்திரன்-மனஸ்தத்துவம்-உண்மையை அறிய, அஹங்காரத்தை விட்டு, மமகாரத்தை மாற்றி, விவேகத்துடனும் வைராக்யத்துடனும் கிட்டினான். அவனுக்குக் கருணை

செய்ய வேதமாதா இரங்கினள். ஸ்ரீ உமாதேவி ஆவிர்ப்பவித்தாள்.

சிஷ்யர்கள் இருவரும்:—அப்போதுதான் நாங்கள் மூர்ச்சை அடைந்தோம். ஸ்வாமி, அதற்குப் பின் நடந்த விவரங்களை எல்லாம் தாங்கள் ஞான திருஷ்டியால் அறிந்து சொல்லவேண்டும்.

ஜைமினி:—என் பிரிய சிஷ்யர்களே! கேளுங்கள், விளக்கமாகக் கூறுகிறேன். ஹைமவதி இந்திரனைப் பார்த்து "தேவாஸுர யுத்தத்தில் ஜயித்தது ப்ரஹ்மம். அதில் தேவர்கள் தாங்கள் ஜயம் பெற்றதாய்க் கர்வம் கொண்டார்கள். அந்த அறியாமையை நீக்கித் தேவர்களுக்குப் பாடம் புகட்ட, ப்ரஹ்மமே யக்ஷவடிவு கொண்டுவந்தது. தேவேந்திரா! நீ பெருமையைய விட்டு, புலன்களை அடக்கி, மலங்களை நீக்கி, மாசு அகற்றி, வாசனைகளை எடுத்து தியானத்தில் அமர்ந்து ப்ரஹ்மத்தை அறிவாய்" என்று உபதேசித்தாள்.

கௌதமர்:—குருநாதரே, பிறகு?

ஜைமினி:—அதன் பின்னரே அது ப்ரஹ்மம் என்று இந்திரன் அறிந்துகொண்டான். எக்காரணத்தால் அக்னியும், வாயுவும், இந்திரனும் இந்தப் பிரஹ்மத்தினிடம் நெருங்கிச் சென்று கண்டார்களோ-மேலும் இதை ப்ரஹ்மம் என்று முதன்மையாகத் தெரிந்துகொண்டார்களோ-அக்காரணத்தால் இந்தத் தேவர்கள் மற்றத் தேவர்களைவிடச் சிறந்தவர்களாயினர்.

தலவகாரர்:— இந்த அமரர்கள் மேலும் மேலும் முதன்மை பெற்று விளங்கட்டும்.

ஜைமினி:—இந்திரன் இதை நெருங்கி உமாதேவியின் உபதேசத்தால் இதை ப்ரஹ்மம் என்று முதன்மையாக அறிந்துகொண்டான். அதனுல் இந்திரன் மற்ற தேவர்களைவிடச் சிரேஷ்டமானவன் ஆயினன்; சிறந்தவன் ஆயினன். அதைப்பற்றிய உபதேசம் இது:—

இந்தப் பிரஹ்மம் மின்னல் வெளிச்சம் போன்றதாம். இமைகொட்டுதல் போன்றதாம். இருண்ட மேகத்தினிடை மின்னலைப்போல் உள்ளத்தினுள்ளே தியானிக்கும்போது தோன்றி மறைவதாம். இது அதிதைவதம். மின்னல் தோன்றி நிலைத்திருப்பது ஒருகண நேரமாயினும், நல்ல பிரகாசமாயும் தெளிவாகவும் எங்கும் பரந்தும் காணப்படுவதுபோல ப்ரஹ்மமும் தோற்றம் அளிக்கும். ஒரு கலைப் பொழுதாயினும் கலக்கமின்றிக் காணமுடியும். கண் இமை கொட்டுவது எள்ளளவும் பிரயாசை இல்லாமல் தன்னிச்சையில்லாமல் நிகழ்கிறதோ, அதுபோலவே ப்ரஹ்மமும் தோன்றி மறையும். நிர்விகல்ப ஸமாதியில்-தியானத்தில் - ஒருவிதப் பிரயாசையுமின்றி விளக்கம் பெற முடியும். இந்தவிதமாகத்தான் ப்ரஹ்மம் தேவதைகளில் பிரகாசிக்கிறது.

கௌதமர் :— தாங்கள் முன் உபதேசித்த ''இந்த ப்ரஹ்மத்தின் எந்த ரூபத்தைத் தேவதைகளிடம அறிந்திருக்கிருயோ, அதுவும் மிக அற்பம-ஸ்வல்பம்''— என்ற வாக்கியத்தின தத்துவத்தை இப்போது சரியாகப் புரிந்துகொண்டேன் ஸ்வாமி.

ஜைமினி :— இப்படிப்பட்ட பிரஹ்மத்தை மனம் சென்றடைவதுபோலவும், பிரஹ்மதத்தை மனம் வெளிப் படுத்துவதுபோலவும், இம்மனதைக்கொண்டு ஸாதகன் அடிக்கடி அருகில் நெருங்கி இதை ஸ்மரிப்பதுபோலவும், மனதில் ஸங்கல்பமேற்படும பொழுதும் ப்ரஹ்மத்தை அறிவதுபோலவும் தோன்றுகிறது. அதாவது ப்ரஹ்மம் மனதிற்கு எட்டாததாயிருந்தாலும் மனதில் ஏற்படும ஸங்கல்பம், நினைவு முதலான விருத்திகளைக்கொண்டு ஒருவாறு ப்ரஹ்மத்தைப் புரிந்துகொள்ளலாம். இது அத்யாத்மமான உபதேசம்.

தலவகாரர் :— மனதுக்கு மனதாயும், அதற்கும் எட்டாததாயும் இருக்கும் ப்ரஹ்மம், ஸகல பிராணி

களுக்கும் பிரத்யகாத்மாவாயிருப்பதால், அத்யாத்மம் என்று சொல்லுவது பொருத்தமேயாகும்.

ஜைமினி :— அந்த ப்ரஹ்மம் 'தத்வனம்' என்னும் பெயர் பெற்றது. எல்லோராலும் பஜிக்கத் தகுந்தது, பூஜிக்கத் தக்கது என்பது தத்வனம் என்ற பதத்தின் பொருள். எவனொருவன் அதை இப்படி தியானிக்கிறானோ அவனை எல்லாப் பிராணிகளும் விரும்புகின்றன. வாஞ்சையுடன் நேசிக்கின்றன.

கௌதமர் :— எல்லோருக்கும் அந்தராத்ம ஸ்வரூபமாய் விளங்கும் ப்ரஹ்மத்தைத் தத்வனம் என்று உபாஸனை செய்வதும் ஞானத்தை அடையும் மார்க்கமேயாகும்.

ஜைமினி :—பரப்ரஹ்மத்தின் இரகசியத்தை (தெரிந்த மட்டிலும்) தெளிவாகக் கூறினேன். இனி இந்த ஞானத்தையடைய உபாயங்களைக் கூறுகிறேன். தவம், அடக்கம், கர்மம் என்பவை அந்த ப்ரஹ்மவித்யையின் பாதங்கள். காலை ஊன்றி மனிதன் நிற்பதுபோல இவைகளிருந்தால்தான் ப்ரஹ்மவித்யை நிலைத்து இருக்கும். வேதங்கள் மற்ற எல்லா அங்கங்களுமாகும். ஸத்தியம் அதன் உறைவிடம். எவன் இதை இவ்வாறு அறிகிறானோ அவன் தீமைகளையெல்லாம் அறவே ஒழித்து, எல்லையில்லாததும், உயர்ந்ததுமான, ஸ்வர்க்கலோகத்தில் (ஆனந்தரூபமான ப்ரஹ்மத்தில்) நிலைபெறுகிறான்.

சிஷ்யர்கள் :—ஸ்வாமி, தாங்கள் அன்புடனும் ஆதரவுடனும் உபதேசித்தபடி அடக்கத்துடனும், பக்தியுடனும் தவம் செய்தும், சிரவணமனன நிதித்தியாஸனங்கள் செய்தும் ப்ரஹ்மத்தை அறிய முயலுகிறோம். எவர்களிடத்தில் சூதும், பொய்யும், வஞ்சனையும் இல்லையோ அவர்களிடம் இது உறைகின்றதால் அப்படி வாழ்க்கை நடத்த முயற்சி செய்கிறோம். அம்முயற்சியில் தங்களுடைய ஆசியால் வெற்றியும் பெறுவோம்.

ஜைமினி :— எனது பிரிய சீடர்களே! ஸ்ரீ உமாதேவி தேவேந்திரனுக்குச் சொன்னதும், நான் உங்களுக்கு உபதேசித்ததும் பரோக்ஷமான ஞானமேயாகும். இனி இந்தப் பிரஹ்மத்தைப்பற்றி அபரோக்ஷமான ஞானத்தைப் பெற்றுப் பிரஹ்மமாகவே ஆகும் பேற்றை உங்களுக்கு வேத மாதா கருணை கூர்ந்து அளிப்பாள். உங்களுக்கு என்னுடைய பரிபூர்ண ஆசீர்வாதம். ஸர்வ மங்களங்களும் உண்டாகட்டும்.

[சிஷ்யர்கள் எல்லோரும் எழுந்து குருநாதரை வணங்குகிறார்கள். குருவும் தனித்தனியாக ஆசீர்வாதம் செய்கிறார். பிற்பாடு எல்லோரும் சேர்ந்து]

“ஓம் எங்களுடைய அங்கங்களும், வாக்கு, பிராணன், கண், காது முதலிய இந்திரியங்களும் திறனாக விளங்கட்டும். ப்ரஹ்மம் ஒரு நாளும் எம்மை விட்டு நீங்கலாகாது. நாங்களும் ப்ரஹ்மத்தை விட்டு விலகலாகாது. இந்த உறவு விடாமல் நிலைபெற்று விளங்கட்டும். ஆத்மாவில் மகிழ்ந்து வாழ்பவர்களிடம் உள்ள உபநிஷத் தர்மங்கள் எல்லாம் எங்களிடத்தில் விளங்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்”.

ஜைமினி :— குழந்தைகளே, நேரமாகிறது. ஆசிரமத்திற்குப் போவோம் வாருங்கள். ஓம் தத்ஸத்.

(எல்லோரும் போகின்றனர்)

ஸூத்ரதாரன் :— (பிரவேசித்து) பெரியோர்களே! அநேக கோடி நமஸ்காரம். இவ்வளவு நேரம் பொறுமையுடனும் விழிப்புடனும் இருந்து இச்சிறு நாடகத்தைக் கண்டு எங்களுக்கு உற்சாக மூட்டியதற்கு எங்கள் மனமார்ந்த நன்றி. காதுகளால் நல்லதைக் கேட்கவேண்டும். கண்களால் நல்லதையே காணவேண்டும். எப்படிப் பெருக்கெடுத்து ஓடும் ஆறுகள் நாமருபங்களை இழந்து ஸமுத்திரத்துடன் ஒன்றுபட்டு இரண்டறக் கலக்கின்றனவோ அப்படியே, நாமும் பிரஹ்மத்தை அறிந்து பிரஹ்மமாகவே

ஆகவேண்டும். பாவத்தை ஒழித்து, சோகத்தைத் தாண்டி, உயர்ந்த நிலையை அடையவேண்டும். அமரத் தன்மையை அடையவேண்டும். இந்த நாடகத்தைப் பார்ப்பவர்களில் ஒருவருக்காவது மூலமான உபநிஷத்தைக் கற்கவேண்டும் என்ற ருசியை உண்டாக்குவோமானால் நாங்கள் கிருதார்த்தர்களாவோம். பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

ॐ शान्तिः शान्तिः शान्तिः ।

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

(எல்லோரும் சேர்ந்து பாடுகின்றனர்)

''ஓம் சங்கர, ஓம் சங்கர ஓம் சங்கர ஓம்''

ஸர்வம் ப்ரஹ்ம மயம், ரேரே, ஸர்வம் ப்ரஹ்மமயம்
தேஹோ நாஹம், ஜீவோ நாஹம், ப்ரத்யகபின்ன
ப்ரஹ்மைவாஹம்;
பரிபூர்ணோஹம், பரமார்த்தோஹம்,
ப்ரஹ்மைவாஹம் ப்ரஹ்மாஹம். (ஸர்வம்)

ஆனந்தோஹம், ஆனந்தோஹம், ஆனந்தம்
ப்ரஹ்மானந்தம்.
வியாபக சேதன ஆத்ம சிவோஹம்
வ்யக்த அவ்யக்த ஸ்வரூப சிவோஹம்
ஸாக்ஷிஸ்வப்ரகாச நிர்மலோஹம்
நித்யமுக்த நிராகார நிர்குண சிவோஹம். (ஆன)

(திரை விழுகிறது.)

கேனோபநிஷத் நாடகம் முற்றும்.

Name of Hara encompass: World be Free from suffering
www.shaivam

உ

ஸ்ரீ குருப்யோ நம:

உபநிஷத் நாடகமாலா – 3

கடோபநிஷத்

(நாடகம்)

நாடக பாத்திரங்கள்

1. யமதர்மராஜன் — ம்ருத்யு தேவதை, யமலோகத்திற்கு அதிபதி.
2. சித்ரகுப்தன் — யமலோகத்தில் முக்யாதிகாரி.
3. கௌதமர் — இமயப் பிராந்தியத்தில் வஸிக்கும் ஓர் மஹரிஷி.
4. வஸுமதி — ஷி யாரின் தர்மபத்னீ.
5. நசிகேதஸ் — ஷி யார்களின் புதல்வன் இளங்குமரன்.
6. அக்நிவேசர்
7. ஸத்யாஷாடர் } — ஷி யாரின் நண்பர்கள் பிரம்மசாரிகள்.
8. பாசஹஸ்தன்
9: வஜ்ரதந்தன் } — யமனின் தூதுவர்கள்
10. கோரருபன்
11. சோணிதாக்ஷன் } — யமபடர்கள்.
12. ஸூத்திரதாரன் — நாடகத்தை அறிமுகப் படுத்திக் காட்சிகளுக்கு விளக்கம் தருபவர்.
13. ஸைரந்திரி — ஷி யாரின் உதவி நடிகை.

[இன்னும் ஆச்ரமவாசிகள், ரிஷிகள், ரிஷிபத்னிகள், தானம் பெறும் பிராம்மணர்கள், யானைகள், தேர்கள், குதிரைகள், பசுக்கள் முதலிய தானப் பொருள்கள், காவலாளிகள், சிரவணர்கள் நரகவாசிகள், தேவர்கள் முதலியவர்கள்.]

இடம் :— முதல் அங்கமும் நான்காவது அங்கமும் பூலோகத்திலும், 2 & 3 அங்கங்கள் வானுலகத்திலும் நடைபெறுகின்றன.

கடோபநிஷத்

(நாடகம்)

முதலாவது அங்கம்

காட்சி 1

[திரைக்குள்ளே மங்களாசரணம் - மெல்லிய இசையுடன் எல்லோரும் சேர்ந்து பாடுகின்றனர்.]

ओं पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥

'ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே'

[முதல் திரை தூக்கப்படுகிறது. ஸூத்திரதாரரும் ஸைரந்திரியும் இருபக்கங்களிலிருந்தும் எதிர்நோக்கிய வண்ணம் பிரவேசிக்கிறார்கள்.]

ஸூத்திரதாரர் :— ஸஹோதரி! வணக்கம். நாடக மேடையின் ஜோடனை தீர்ந்துவிட்டது. அணி, அலங்காரங்கள் முடிந்துவிட்டன. நடிகர்கள், வேடம் புனைந்து தயாராகிவிட்டார்களா?

ஸைரந்திரி :— நமஸ்காரம். ஆமாம் ஐயனே, எல்லாம் ஸித்தமாகிவிட்டன. நடிகர்கள் எல்லோரும் தயாராகத் தங்கள் தங்கள் பாத்திரங்களைத் தத்ருபமாக நடிக்க மிகுந்த ஆவலுடன் இருக்கின்றனர். தங்கள் கட்டளையையும் இங்கே குழுமியிருக்கும் பெரியோர்களின் ஆசியையும் எதிர்நோக்குகிறார்கள்.

ஸூத்திரதாரர் :—ரஸிகர்கள் குழாமும் நாளுக்கு நாள் வளர்பிறைச் சந்திரனைப்போல் விருத்தியடைந்து வருகிறது-நம்முடைய உபநிஷத் நாடகங்களைக் கண்டு களிக்க.

ஸைரந்திரி :—ஸ்வாமி! இன்று என்ன நாடகம் நடத்த உத்தேசமோ? அதற்குள் பெயரை மறந்து விட்டேன்.

ஸூத்திரதாரர் !—செல்வி! பரவாயில்லை. மீண்டும் ஒருமுறை கூறுகிறேன். இன்று நாம் பெரிய மஹான் களின் முன்னிலையில் ஸமர்ப்பிக்கப்போகும் நாடகத் துக்குக் 'கட-வல்லீ' என்று பெயர்.

ஸைரந்திரி :— என்ன! நாமம் விசித்திரமாக இருக் கிறதே! உபநிஷத் கதையென்று சொன்னீர்களே. தற்கால நவீனங்களின் பெயர்போல் தொனிக்கிறதே!

ஸூத்திரதாரர் : — நவீனம் ஒன்றும் இல்லை. ஸஹோதரி! 'கடோபநிஷத்' நாடகம்தான் நடத்தப் போகிறோம். இதில் ஆறு வல்லிகள் இருக்கின்றன. இது கிருஷ்ண யஜுர்வேதத்தில் கடசாகையைச் சேர்ந்த தாகையால் 'கடோபநிஷத்' என்றும், 'கடவல்லீ' என்றும் இதைக் கூறுவர். இதற்கு 'நசிகேதோ பாக்கியானம' என்று மற்றொரு பெயரும உண்டு.

ஸைரந்திரி :—மிகுந்த ஸந்தோஷம். ஐயனே! நாம் இன்னும் குறுக்கே நின்று காலவிரயம் செய்யவேண்டா மல்லவா? ரஸிகர்கள் ஆவலுடன் எதிர்பார்ததுக் கொண்டிருக்கிறார்கள்.

ஸூத்திரதாரர் :—நீ சொல்லுவது ரொம்ப சரி; நாம் உள்ளே போவோம். (ரசிகர்கள் குழாத்தை நோககி) ''ஐயன்மீர்! கோடி வணக்கம். வயதிலும் அறிவிலும சிறியவர்களாகிய நாங்கள் நடிக்கும் இந்த நாடகததைப் பார்த்து அதில் குறை நீக்கி, குணம் நாடி, குழந்தைகளை ஆசீர்வதிக்க வேண்டுகிறோம்''.

[போகிறார்கள் இருவரும். திரை விழுகிறது.]

காட்சி 2

[இமயமலைச் சாரலில், கங்கா தீரத்தில் ஔத்தாலக ஆருணியின் ஆசிரமத்துக்குப்போகும் மார்க்கம். இருமருங்கும் தேவதாரு விருக்ஷங்கள் நெருங்கிய காட்டுப்பிரதேசம். கொடி வழியில் அக்னிவேசரும், ஸத்யாஷாடரும் பேசிக்கொண்டு வருகிறார்கள். எங்கும் கஸ்தூரியின் நறுமணமும், பசு நெய்யின் வாசனையும் கலந்து வீசுகிறது. திரைக்குப் பின்னால் விருந்துக் கொண்டாட்டம் நடக்கும் தொனி கேட்கிறது.]

அக்னிவேசர் :— நண்பரே ! இன்றைய போஜனம் பிரமாதம். (தொந்தியைத் தடவிக்கொண்டு) பூஜ்யர் ஸ்ரீ கௌதமர் நடத்தும் விசுவஜித் என்னும் யாகத்தில் எல்லா வைபவங்களும் முதல்தரமாகவே அமைந்து விட்டன.

ஸத்யாஷாடர் :— ஆமாம் வாஜசிரவஸ் என்பவரின் குமாரர் என்ற பெயருக்கு ஏற்றபடி (வாஜம்-அன்னம்; அதனால் ஏற்பட்ட ச்ரவ:-புகழ்) அன்னக்கொடி கட்டி ஆயிரக்கணக்கான பேர்களுக்கு அன்னமளித்து அழியாத கீர்த்தியடைந்துள்ளார்.

அக்னிவேசர் :— இந்தப் பக்கத்திலேயே - ஏன்? நம் பரதகண்டத்திலேயே - இதுபோன்ற விருந்து நடக்கவில்லையாமே. 'ந பூதோ ந பவிஷ்யதி' என்று எல்லோரும் புகழ்ந்து பேசுகிறார்கள். ஆயிரம் வயிறு படைத்தாலும் உண்ண வயிறு போதாது என்பதுதான் என் அபிப்பிராயம்.

ஸத்யாஷாடர் :— மித்ரரே, உம்முடைய பெயருக்குக் தக்கபடி ஜாடராக்னியின் சக்தி அதிகம் இருக்கிறது உமக்கு. பிராம்மணர்கள் போஜனப்பிரியர்கள் என்று கூறுவதும் சரியாக இருக்கிறது.

அக்னிவேசர் :— நீரும் சாப்பிடுவதில் அப்படி ஒன்றும் அஸமர்த்தராகத் தெரியவில்லையே! அது போகட்டும், இன்னொரு விஷயம் கவனித்தீரா ?

ஸத்யாஷாடர் :— அது என்ன, சொல்லும்.

அக்னிவேசர் :-அது நம் சிநேகிதர் நசிகேதஸ்ஸைப் பற்றித்தான். இதுவரை அவர் கல்வியில் மட்டும்தான் கரைகண்டவர் என்று எண்ணினேன். இன்று பார்த்ததில் அவர் வைதிக தர்மங்களைச் சிரத்தை யுடனும், சிறப்புடனும் நடத்துவதிலும் சக்தியுள்ளவர் என்று தெரிகிறது. ஸந்தர்ப்பணை நடத்துவதிலும் திறமைசாலிதான். அதிதிகளை உபசரிப்பதிலும், முகமன் கூறி வரவேற்பதிலும் அவருக்கு அவரே நிகர்.

ஸத்யாஷாடர் :— நானும் அதைக் கவனித்தேன். தன் தந்தையாருக்கு உதவியாக அங்கும் இங்கும் ஓடி எல்லாக் காரியங்களையும் செவ்வையாக நடத்தினர். அவர் எல்லா இடங்களிலும் தென்பட்டுக்கொண்டிருந் தார். பிள்ளையென்ருல் இப்படியல்லவா இருக்க வேண்டும், பிதாவுக்கு உதவியாக.

அக்னிவேசர் :— ஆம் நண்பரே! நசிகேதஸ்ஸைப் போல் தந்தைக்கு ஏற்றபடி பணிபுரியும் தனயன் பூர்வஜன்ம ஸுகிருதத்தினல்தான் கிடைக்கும். எல்லோருக்கும் அந்தப் பாக்கியம் கிட்டாது.

ஸத்யாஷாடர் :— இல்லாவிட்டால் — நம்மைப்போல் 'சோற்றுக்கு முந்திக்கொள், வேலைக்குப் பிந்திக்கொள்' என்று காலம் கழிக்கும் சோம்பேறிகளைப் பெற்றிருந்தால் —இந்த யாகம் என்னவாகும்?

அக்னிவேசர் :— விசுவஜித் என்ற இந்த யாகம் பரிபூர்ணமாகாது. உசிதமான பலனும் கிட்டாது. நசிகேதஸ்ஸின் ஊக்கத்தால் — உழைப்பால் — தான் இது நிறைவேறிக் கொண்டிருக்கிறது. ஆனுலும் ஒரே ஒரு

ஸத்யாஷாடர் :— என்ன முடிக்காமல் நிறுத்திவிட்டீர்!

அக்னிவேசர் :— இல்லை. பெரிய இடத்து விஷயம் — நமக்கு ஏன் வம்பு? ஆனாலும் மனசு கேட்கவில்லை. கூறத்துவங்கினேன்.

ஸத்யாஷாடர் :— என்ன சொல்லுமே, ஆவலைக் கிளப்பிவிட்டு அணைக்கப்பார்க்கிறீர்! என்னிடம் சொன்னால், நான் வெளியில் முரசு அடிக்கப்போகிறேனா என்ன? சும்மா தைரியமாகச் சொல்லும்.

அக்னிவேசர் :— இல்லை—தானங்கள் கொடுப்பதில்— எல்லாம் நன்றாகச் செய்கிறார்கள்; இருந்தாலும் இன்னும் கொஞ்சம்கூட பெருந்தன்மையுடன் நடக்கலாம். அப்படி நடப்பது நலம். நன்றாகச் சோபிக்குமே. அதற்காகத்தான் கூறினேன்.

ஸத்யாஷாடர் :— நானும் கவனித்தேன். நீர் சொல்வது உண்மையே. பெரிய யக்ஞம். எத்தனையோ பெரிய — உயரிய — பலனை நாடி எவ்வளவோ பணச் செலவு செய்கிறார்கள். உடைமை எல்லாம் தானமாகக் கொடுக்கிறார்கள். ஆகையினால் நம் நண்பர் நசிகேதஸ் ஸிடம் சொல்லி வேண்டியது செய்வோம்.

அக்னிவேசர்:—வேண்டாம்! வேண்டாம்! நீர் இப்படி இழுத்து விடுவீர் என்றிருந்தால் நான் உம்மிடம் இதைப் பற்றிப் பேசியேயிருக்கமாட்டேன்.

ஸத்யாஷாடர் :— பயப்படவேண்டாம் நண்பரே! ஒரு குறை தென்பட்டால் அதைத் திருத்த முயல்வதில் என்ன தப்பு இருக்கிறது? புரியவில்லையே எனக்கு!

அக்னிவேசர் :— நாம் சொல்வதை, நசிகேதஸ் விகல்பமாக எடுத்துக்கொண்டால்? மௌனம் கலகம் நாஸ்தி. சும்மாயிருப்பதே நலம்.

ஸத்யாஷாடர் :— அது சரியல்லவே, நண்பருக்கு அழகு நலிவு உற்றபோது நலம் உரைத்தல். கொண்ட காதலியைவிட மித்ரனுக்குக் கடமைகள் அதிகம்,

கட்டாயம் நசிகேதஸ்ஸிடம் தெரிவித்து ஆவன செய்வோம். நம் நண்பரும் அப்படித் தவறுதலாக ஒன்றும் நினைக்கமாட்டார்.

அக்னிவேசர் :—சரி, உமது விருப்பப்படி நடப்போம். போவோம் வாரும்.

(போகிருர்கள், திரை விழுகிறது)

காட்சி 3

[திரை தூக்கப்பட, கெளதமரின் ஆச்ரமம் தென்படுகிறது. யாகவேதிகை நன்ருக அமைக்கப்பட்டிருக்கிறது. கெளதமர், வஸுமதி, ரிஷிகள், ரிஷிபத்னிகள் எல்லோரும் தம் தம் ஆஸனங்களில் அமர்ந்திருக்கின்றனர். ரித்விக்குகள் ஹோம குண்டத்தில் ஹோமம் செய்துகொண்டிருக்கிருர்கள். வேத மந்திரங்கள் உச்சரிக்கப்படுகின்றன. நசிகேதஸ் அஞ்ஜலி ஹஸ்தராகப் பிதாவின் பக்கத்தில் நிற்கிருன். ஸத்யாஷாடரும் அக்னிவேசரும் ஒரு பக்கத்தில் நிற்கிருர்கள். ஒவ்வொரு ப்ராம்மணராக வந்து தானம் வாங்கிக்கொண்டு போகிருர்கள்].

முதல் ரிஷி :— கெளதமரே! நீர் மிகவும் புண்ணியசாலி விசுவஜித் என்ற பிரஸித்தமான யாகத்தைச் செய்து விட்டீர். அக்ஷயமான புண்ய லோகங்களெல்லாம் உம்மால் ஜயிக்கப்பட்டு விட்டன.

கெளதமர் :— மஹரிஷியே! நமஸ்காரம். எல்லாம் தங்கள் அநுக்கிரஹம் தான்.

வஸுமதி:— ஆர்யபுத்திரா! தாங்கள் சொல்வது ஸாதுவானது. எல்லாம் இந்த மஹான்களின் அருள் தான். நமது குடும்பமே நற்கதி பெற்றது, அழியாத புகழும் அடைந்தோம்.

2-வது ரிஷி :— ஔத்தாலக ஆருணியே! எல்லாம் சிறப்பாக நடந்தது. அங்க தேசத்து அரசனின் அசுவமேத யாகத்தில் உமக்குக் கிடைத்த அசுவங்கள் பூராவும் அனந்தவீர்யர் என்ற பிராஹ்மணோத்தமருக்கு தானம் செய்தீர்கள்,

முதல் ரிஷி :— அதுமட்டுமா! காஷ்மீரத்திலிருந்து கிடைத்த விலையுயர்ந்த பட்டும், பொன்னும், கம்பளியும் எல்லாம் கௌரீ சங்கரர் என்ற வேதியருக்கு காணிக்கையாகக் கொடுத்தீர்கள்.

கௌதமர் :—ஆமாம். ஐயன்மீர்! பாண்டிய தேசத்திலிருந்து வந்துள்ள முத்துக்கள் அனைத்தும் பத்ம பாதருக்குக் கொடுத்தோம்.

2-வது ரிஷி :—அம்மா! வஸுமதி! உன் பாக்கியமே பாக்கியம். விசுவஜித் என்னும் இந்த சிரேஷ்டமான யாகத்தில் தீக்ஷித பத்னியாகி அவபிருதஸ்னானம் செய்யும் பாக்கியம் அடைந்தது உன் பூர்வபுண்ணிய விசேஷம்தான்.

வஸுமதி :—ஸ்வாமி, எல்லாம் என் பர்த்தாவின் ஆர்வமும் தங்கள் ஆசீர்வாதமும்தான் கூட்டுவித்தது.

2-வது ரிஷி :—கோகர்ணத்திலிருந்து கொண்டுவந்த பசுக்களைக் குருக்ஷேத்திரத்திலிருந்து வந்திருக்கும் ப்ராம்மணசிரேஷ்டருக்குத் தானம் கொடுத்தீர்கள்.

கௌதமர் :—விசுவஜித் என்ற இந்த யாகத்தில் தானங்கள் முடிந்துவிட்டன என்று நினைக்கிறேன். ப்ரியே! நம் உடைமையை எல்லாம் தானமாகக் கொடுத்தாய்விட்டது.

நசிகேதஸ் :–(தனக்குள்-ஒருபுறமாக) என் நண்பர்கள் சொன்னது சரியாகத்தான் இருக்கிறது. தானம் கொடுக்கும்போது பக்தி சிரத்தையையே காணவில்லையே. இந்தக் கிழட்டுப் பசுக்களைப் பெறுவதால் அந்தக் கௌசிகருக்கு என்ன லாபம்? (வெளிப்படையாக) பூஜ்ய பிதாவே! நமஸ்காரம். இந்தக் கிழட்டுப் பசுக்களைக் கொடுப்பதில் ஒரு பயனும் இல்லையே! தண்ணீர் குடிக்கவும் லாயக்கற்றவை இவை. பற்கள் பலமில்லாததால் புல்லும் தின்ன முடியாதவை. எல்லா இந்திரிய பலமும் அற்றுப்போனவை. பாலும் கறக்கமுடியாதபடி

வற்றிப்போனவை. அப்பா! இம்மாதிரி எலும்பும் தோலுமான, கறவை வற்றிய கோக்களைத் தானமாகக் கொடுப்பதால் புண்யலோகம் அடைய முடியாது. ஆனந்தம் அற்ற உலகங்களைத்தான் அடைவார்கள். இதில் ஸந்தேஹமில்லை.

வஸுமதி:—குழந்தாய், நசிகேதா! குறுக்கே ஒன்றும் பேசாதே!

நசிகேதஸ்:—இல்லை தாயே! இந்தக் கிழட்டுப் பசுக்களைக் கொடுத்ததால் கட்டாயம் பாபமே ஸித்திக்கும். அதற்குப் பிராயச்சித்தமாக - தானத்தில் ஏற்பட்ட தப்பு நீங்க-தங்களிடமிருக்கும் சிரேஷ்டமான பொருளைத் தானமாகக் கொடுக்கவேண்டும். அப்பா! அப்படிச் செய்வீர்களா?

கௌதமர்:—வத்ஸா! எல்லாம் தானம் கொடுத்தாய் விட்டதே! நம் உடைமைகளில் ஒன்றும் மீதமில்லையே. இன்னும் எதைக் கொடுப்பது?

நசிகேதஸ்:—அப்பா! நான் இருக்கிறேனே! உம்மிடமுள்ள சிரேஷ்டமான—விலைமதிக்கமுடியாத-உமக்கு அத்தியந்தப் பிரியமுள்ள பொருளைத் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். தந்தையே! என்னை யாருக்குத் தானமாகக் கொடுக்கப்போகிறீர்கள்?

வஸுமதி:— குழந்தாய் நசிகேதா! பேசாமல் இரு.

நசிகேதஸ்:— அப்பா! என்னை யாருக்குத் தானம் செய்யப்போகிறீர்கள்?

கௌதமர்:— குழந்தாய்! தக்ஷிணைகள் கொடுக்கும் சமயத்தில் இப்படித் தொந்தரவு செய்யாதே!

வஸுமதி:— நசிகேதா! என் அன்பே! இப்படி அசட்டுத்தனமாக கேள்வி கேட்காதே. உன் தகப்பனார் மிகுந்த கோபக்காரர் என்பதை நீ அறியாயா?

நசிகேதஸ்:— (கிட்டப்போய்) தந்தையே! என்னை யாருக்குத் தானம் கொடுக்கப்போகிறீர்கள்?

கௌதமர்:— (கோபத்துடன்) உன்னை யமனுக்குக் கொடுக்கிறேன்.

(இதைக் கேட்டதும் யாகசாலையிலுள்ள எல்லோரும் ஸ்தம்பித்து நிற்கிருர்கள். வஸுமதி மூர்ச்சையாகிருள். ஆசிரமப் பெண்கள், மூர்ச்சை தெளிவிக்கின்றனர். எல்லோரும் 'ஹா! ஹா! என்ன நேருமோ' என்று திக்பிரமையடைந்து விடுகின்றனர்.)

நசிகேதஸ்:— (மிகவும் ஸந்தோஷத்துடனும், முகமலர்ச்சியுடனும் தந்தையையும் மற்ருேரையும் வணங்கி) பெரியவர்களே! என் பிதா சொன்னதைக் கேட்டு ஒருவரும் வருத்தமடையவேண்டாம். பிறவி எடுத்தவர்கள் எல்லோரும் ஒருநாள் இல்லாவிட்டால் மற்ெருருநாள் மரணமடையவேண்டியதுதான். மரணம் ஒருவராலும் தவிர்க்கமுடியாதது.

வஸுமதி:— நாதா! குழந்தை என்னவெல்லாமோ உளறுகிருனே! அவனை மன்னித்துத் திரும்ப அழையுங்கள்.

கௌதமர்:—(சிறிதுநேரம் யோசித்து) முனிவர்களே! இந்த தர்மஸங்கடமான நிலைமையில் நான் செய்ய வேண்டியது என்ன? என் வாக்கும் பொய்யாகக் கூடாது. என் புத்திரனும் என்னைவிட்டுப் பிரியக் கூடாது. இதற்கு விதிப்படி வழிவகுத்து எங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுங்கள்.

வஸுமதி:— மஹான்களே! தாங்கள்தான் க்ருபை செய்யவேண்டும். எப்படியாவது என் ஒரே குழந்தையைக் காப்பாற்றுங்கள். பத்து வயதும் நிரம்பாத பாலகனைப் பலியிடப் பெற்ற தாய்க்கு மனம் வருமா! ஸ்வாமீ, எங்களை மன்னித்துக் கருணை புரியுங்கள். (முனிவர்களை ஸேவிக்கிருள்) குழந்தாய்

நசிகேதா! இப்படி என்னருகில் வா! (அணைத்துக் கொள்கிருள்)

அக்னிவேசரும் ஸத்யாஷாடரும் :— (மனக்கிலேசத்துடன்) இவையெல்லாம் எங்களால் விளைந்தது. நாங்கள் உம்மிடம் வந்து இதைக் கூருமலிருந்தால் உமக்கு இப்படிச் சிரத்தையின் ஆவேசம் உண்டாயிருக்குமா?

நசிகேதஸ் :— நண்பர்களே, வருந்தாதீர்கள். எல்லாம் ஈசன் ஆணைப்படி நடக்கிறது.

ரிஷிகள் :— எல்லோருக்கும் மங்களமுண்டாகட்டும் ஒருவருக்கும் பயம் வேண்டாம். குழந்தாய் நசிகேதா! நீ, உன் தாய்தந்தையரையும் ஏனையோரையும் துக்கத்தில் ஆழ்த்திவிட்டு வைவசுவத பட்டணம் போக லாகாது. உனக்குப் பதிலாக வேறு நரபசுவையோ, அல்லது ஒரு பெரிய-கரிய-மஹிஷத்தையோ யமதர்மனை உத்தேசித்து தானமாகக் கொடுத்துவிடலாம். அதற்கு சாஸ்திரத்தில் விதி இருக்கிறது.

வஸுமதி:—முனிவர்களே, உங்களுக்குக் கோடி நமஸ்காரம். இப்போதுதான் என் வயிற்றில் பாலை வார்த்தீர்கள்.

அக்னிவேசரும் ஸத்யாஷாடரும் :— மஹரிஷிகளே! எங்களை நசிகேதஸ்ஸுக்குப் பதிலாகக் கொடுத்து விடுங்கள். நாங்கள் எங்கள் நண்பருக்குப்பதிலாக யமனிடம் செல்லத்தயாராயிருக்கிறோம்.

வஸுமதி :— இப்படி வாருங்கள் குழந்தைகளே! நீங்களும் என் குழந்தைகள் தானே. நசிகேதன் வேறு நீங்கள் வேரு! நீங்கள் போய், பெரிய மஹிஷமாகத் தேடிப்பிடித்து வாருங்கள். உடனே போங்கள். அதைப் பலியிட்டுவிடுவோம்.

(அக்னிவேசரும் ஸத்யாஷாடரும் போக முயல, நசிகேதஸ் அவர்களைத் தடுத்து நிறுத்திவிடுகிருர்.)

நசிகேதஸ்:—பெரியோர்களே! தாயே! நண்பர்களே! என் அருமைத் தந்தையே! எல்லோருக்கும் என் நமஸ்காரங்கள். நான் சென்று வருகிறேன். எனக்குப் பதில் வேறு பொருள்களை ஈடாகக்கொடுக்க நான் சம்மதியேன். வேறு பொருள்களைத் தானமாக மற்றவர்கள் பெற்றால் அவர்கள் அவைகளால் லாபம் பெறலாம் அவைகளை யமனுக்குக் கொடுப்பதால் அவருக்கு என்ன லாபம்? எல்லாம் நிறைவுடைய யமதர்மராஜருக்கு நான் செய்வதற்குரியது என்ன இருக்கிறது? ஆயினும் என் தகப்பனார் தானமாகக் கொடுத்துவிட்டதால் நான் கட்டாயம் போயே தீருவேன். இப்போது என்னால் என் தகப்பனாருக்கு வேறு எதைச் செய்யமுடியும்? அது தான் அவர்கட்டளைப்படி யமனிடம் செல்வது. அது ஒன்றே சாலச்சிறந்தது. தந்தையின் வாக்கு பொய்யாக ஆகலாகாது.

கௌதமர்:—வத்ஸா, நான் அவசரத்தில் கோபத்தை அடக்கமுடியாமல் எதையோ உளறிவிட்டேன். அதற்காக நீ இவ்வளவுதூரம் பிடிவாதம் செய்ய வேண்டுமா?

வசுமதி:—குழந்தாய், போகவேண்டாம். இல்லா விடில் என்னையும் அழைத்துப்போ உன்கூட.

நசிகேதஸ்:—என் அருமைப் பெற்றோர்களே! வருந்தாதீர்கள். மனிதனுக்கு ஆறிலும் சாவு, நூறிலும் சாவு. தவிர்க்கமுடியாததுபற்றி வருந்துவதில் பயன் இல்லை. நம் முன்னோர்கள் எங்ஙனம இருந்தனர்? எப்படி வாழ்ந்தனர் என்பதை ஊன்றிப் பார்க்க வேண்டும். அப்படியே மற்றவர்களும் நாமும் இருக்க வேண்டும் என்பதை அறிந்து அப்படியே நடந்து கொள்ளுதல் வேண்டும். மனிதன் புல்பூண்டுகள்போல் அழிகிறான். புல்பூண்டு முளைத்தெழுவதுபோல் உண்டாகிறான். ‘‘புனரபி ஜனனம் புனரபி மரணம்’’ ஆகவே மரண பயத்தை விடுவோமாக. பவ பயங்களைப் போக்குவோம், பரமனடியைச் சிந்திப்போம். தந்தையே!

தங்கள் ஆசியுடன் செல்வேன். தங்கள் வசனம் ஸத்திய மாக்கப்படவேண்டும். பிதுர்வாக்கிய பரிபாலனம் சிரேஷ்டமான தர்மம். பிதாவே! என் அன்பார்ந்த அன்னேயே! பெரியோர்களே! நண்பர்களே! அடியே னுக்கு விடை கொடுங்கள். எல்லோரும் எனக்குச் சந்தோஷமாக உத்தரவுகொடுங்கள்.

கௌதமர் :— (கலங்கிய கண்களுடன்) வத்ஸா! குழந்தாய்! சுகமாய்ப் போய்வா! என் அபிவாதனங் களை யமதர்மராஜனுக்குத் தெரிவிப்பாய்!

வசுமதி:— குழந்தாய்! என் வாக்கைத் தட்டாதே! 'தாய் சொல்லிற்கு மேலாக ஒரு வாசகம் இல்லை' என்பதை நீ அறியாயா! போகாதே என் கண்ணே!

ஆச்ரம வாசிகள் :— நசிகேதா, நீ போகவேண்டாம்.

ரிஷிகள்:— நசிகேதன் எப்படிப் போவான்? யமன் அழைப்பு இல்லாமல், யமதூதர் வராமல் நசிகேதன் போவதைப் பார்ப்போம்!

ரித்விக்குகள்:— யமன் உலகு செல்வது, கொன்றை மரத்தில் ஏறிச் சிவபூஜைக்குக் கொன்றைப் புஷ்பம் பறிப்பது போல் எளிதல்லவே. ஆயிரக்கணக்கான யோஜனை தூரம் தாண்டி மேலே எப்படிச் செல்லுவான் யமராஜதானிக்கு இந்தச் சிறுவன்?

நண்பர்கள்:— நசிகேதா, அவர்கள் சொல்வது சரிதானே. நீ போகவேண்டாம். திரும்பிவிடு. நீ புல் ஊட்டி வளர்த்த ரிஷபம்-சிவப்பிரஸாத்-உன் பிரிவை ஆற்ருமல் கண்ணீர் விடுகிறது பார்!

(நசிகேதஸ், இவர்கள் சொல்வது ஒன்றையும் கவனி யாமல் யாக குண்டத்தையும், தாய் தந்தையர்களையும் மற்றப் பெரியவர்களையும் மும்முறை வலம் வருகிருன். எல்லாருக்கும் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கிருன். பின்பு ஆசமனம் செய்துவிட்டு ஸமித்தைக் கையில் தூக்கிப் பிடித்துக்கொண்டு சபதம் கூறுகிருன்.)

"நான், என் தாய் தந்தையருக்கும், ஏனை யோருக்கும் செய்யவேண்டிய கடமைகளைச் சரிவரச்

செய்து வந்திருந்தால் இப்போது என் லக்ஷியம் நிறைவேறட்டும். ஐயனே! யமதர்மனே! நான் பித்ரு ஸேவை என்ற தர்மத்தைச் சரிவரச் செய்தவனுகில், தவத்தை நியமத்துடன் அனுஷ்டித்தவனுகில், பிரம்மசர்ய விரதத்தை விதிப்படி தவருமல் அனுஷ்டித்தவனுனல், என் முழு மனத்துடன் மாதாவிற்கு சுச்ரூஷை செய்து வந்தேனுகில், இந்த தர்மானுஷ்டானங்களுக்கு ஏதாவது அதிருஷ்டமான பலன் உண்டானுல், அதன் நிமித்தமாக நான் இப்போதே உம்முடைய ராஜதானிக்கு வந்துசேரவேண்டும். நான் தினம் தவருமல் மூன்று காலங்களிலும் பக்தியுடன் காயத்ரீ தேவியைச் சரியாக உபாஸனை செய்தேனுகில், ஹே ஸூர்யதேவனே! அதன் பலனுக நான் இப்போதே உன் புத்திருடைய ராஜதானியை அடையவேண்டும். நான் அரை நொடியும் பிரம்மசர்யவிரத நெறிதவருமல் இருந்திருந்தால் என் லக்ஷ்யம் இப்போதே ஈடேறவேண்டும். இக்கணமே நான் யாதொரு தடங்கலும் இன்றி யமபுரம் அடையவேண்டும். உலக ஸாக்ஷியாக விளங்கும் ஸூர்ய புத்திரரே! உம்மைச் சரணடைகிறேன். உண்மையையே உயிராகக்கொண்டு, உண்மையையே உதவியாக நம்பி, உண்மையையே ஊன்றுகோலாக மதித்து, உண்மையையே உயர்ந்த மார்க்கமாக நான் எண்ணி வந்தது மெய்யானுல், உலகமறிய நீர் என்னை உடன் அழைத்துக்கொள்ளும். நான் என் தந்தையால் உமக்குத் தத்தம் செய்யப்பட்டவன்!, நீர் ஸ்வாமி, என் நாதன். நான் உமது அடிமை. ஏற்றுக்கொள்ளும் கிருபை கூர்ந்து. உடனே என்னைக் கூட்டிக்கொள்ளுமாறு விழைகிறேன்.''

(அப்போது அங்கே ஓர் அற்புதம் நிகழ்கிறது. எல்லாரும் பார்த்திருக்க நசிகேதஸ் மேலே கிளம்புகிருன். பார்த்துப் பிரமித்து நிற்கின்றனர் மற்ருேர். வஸுமதி மூர்ச்சையாகிருள் கௌதமர் முகவாட்டத்துடன் கீழே உட்காருகிருர்)

(திரை விழுகிறது.)

முதலாவது அங்கம் முற்றும்;

இரண்டாவது அங்கம்

காட்சி 1

[வானவெளியில் நசிகேதஸ் விரைந்துசெல்லும் காட்சி. இது நிழல் திரைக காட்சி (Shadow Play Turning Scenes களும் காட்டவேணும்). திரைக்குள் காட்சிகள் தென்பட, வெளியில் நின்று ஸூத்திரதாரரும் ஸைரந்திரியும் விளக்கம் கூறுகிருர்கள். திரை தூக்கப்பட்டவுடன் ஸூத்திரதாரரும் ஸைரந்திரியும் பிரவேசிக்கின்றனர்.]

(பாடுகின்றனர்)

ओं नमो भगवते वैवस्वताय मृत्यवे ब्रह्मविद्याचार्याय नचिकेतसे च ।

ஓம் நமோ பகவதே வைவஸ்வதாய ம்ருத்யவே ப்ரஹ்மவித்யாசார்யாய நசிகேதஸே ச

यस्मिन् सर्वं यतः सर्वं यः सर्वं सर्वदृक् सदा ।
सर्वभावपथातीतं स्वात्मानं तं स्मराम्यहम् ॥

யஸ்மின் ஸர்வம் யத: ஸர்வம் ய: ஸர்வம் ஸர்வத்ருக் ஸதா
ஸர்வபாவபதாதீதம் ஸ்வாத்மானம் தம் ஸ்மராம்யஹம்

ஸூத்திரதாரர் :— ஸஹோதரீ, பார்த்தாயா? தேவர்களும், வித்யாதரர்களும், அப்ஸரஸ்திரீகளும், ஸித்தர்களும், சாரணர்களும் ஸஞ்சரிக்கின்ற வானவழியில் நம் நசிகேதன் போகிருன். தன் ஒப்பற்ற கீர்த்தியுடன், மேகங்களை உராய்ந்துகொண்டு, அதிரதர்களின் தனுஸ்ஸிலிருந்து விடுபட்ட பிரம்மாஸ்திரம் போல் ஒளியுடன் செல்கிருன்.

ஸைரந்திரீ :— ஆமாம் ஐயனே! என்ன கம்பீரமாகப் போகிருன்! ஒரு தேவதையை உத்தேசித்து ஹோமத்தில் அர்ப்பணம் செய்த ஹவிஸ், எவ்வளவு

விரைவாக அக்னியால் கொண்டுபோகப்படுமோ, அத்தகைய வேகத்தில் நசிகேதன் எழும்பிச்செல்கிறான்.

ஸூத்ரதாரர் :— கதிரவன் வெப்பம் தணிந்து பொறுக்கும் உஷ்ணத்துடன் பிரகாசிக்கிறான். மந்த மாருதமும் மிகுந்த குளிர்ச்சியுடன் வீசுகிறது. முனிவர்களும் அமரர்களும் நசிகேதனைப் புகழ்ந்து உற்சாகம் ஊட்டுகிறார்கள்.

ஸைரந்திரீ :— காயத்ரீதேவியின் கிருபையே கிருபை. அந்த மந்திர ஜபத்திற்கு ஈடு இணை ஏது? அதன் மஹிமையாலன்றோ இதோ நசிகேதன் ஆகாய மண்டலத்தின் எல்லையைத் தாண்டி, மேலும் விரைந்து உயர உயரக் கிளம்பிப் போகிறான்!

ஸூத்ரதாரர் :— அதோ பார்! தேவர்களும் ஸித்தர்களும் இன்சுவைகொண்ட கந்தமூலபலங்களை ஸமர்ப்பித்து உபசரிக்கின்றனர். பிதுர்வாக்ய பரிபாலனம் சிரேஷ்டமான தர்மமல்லவா!

ஸைரந்திரீ :— ஐயன்மீர், இது என்ன? இப்போது மார்க்கமே இருண்டுவிட்டதே! கிரஹண காலமா? ஒரே புகைப்படலமாக இருக்கிறதே!

ஸூத்ரதாரர் :— இல்லை, கிரஹணம் இல்லை: நசிகேதன் இப்போது தூமமார்க்கத்தில்-பித்ருயாணம் வழியாகப் போகிறான். 'புகை, இரவு, கிருஷ்ணபக்ஷம் தக்ஷிணாயனத்தின் ஆறு மாதங்கள்' – இந்தவழியில் போகின்ற யோகி சந்திரனது ஒளியைப் பெற்றிருந்து, திரும்பவும் வருகிறான்.

ஸைரந்திரீ:— எனக்கு ஒரு ஸந்தேஹம். நசிகேதன் புண்ணிய புருஷன் ஆயிற்றே. தேவயானம் வழியாக அல்லவா போகவேண்டும்?

ஸூத்ரதாரர் :—அப்படி அன்று. ஜ்யோதி மார்க்கத்தில் சென்றவர்கள் மறுபடியும் திரும்பிவரமாட்டார்கள்.

நசிகேதன் யமதர்மனைச் சந்தித்துவிட்டு திரும்பிவரப் போகிறானல்லவா.

ஸைரந்திரீ:— ஸ்வாமீ! இவை என்ன மரங்கள்! இலைகள் எல்லாம் கூறிய கத்திபோல் இருக்கின்றனவே. பிரளயகாலம் போல் கதிரவன் காய்கிறானே. இதோ அழுதுகொண்டு அங்குஷ்ட அளவான சரீரங்களுடன் செல்லுவோர்கள் யாவர்! அவர்களை அதட்டி இழுத்துச் செல்லுவோர் யாவர்?

ஸூத்திரதாரர்:— செல்வீ! இந்தக் கடுரமான வனம் தான் யமலோகத்தைச்சார்ந்த அஸிபத்ர வனம் என்னும் கொடும் காடு. 240 காதவழி தூரம் பசிதாகத் துடன் இருக்கும் ஜீவர்களை (மரித்தவர்களை) யமதூதர் கள் இழுத்துச் செல்லுகிறார்கள். அச்சம் தரும் அஸிபத்ர வனத்தை அரை நொடிக்குள் தாண்டி விட்டான் நம் நசிகேதன். ஒருவிதமான இடையூறும் இன்றித் தாண்டிவிட்டான். யமதூதர்கள் பயந்து ஒதுங்கி வழி விட்டனர், பார்த்தாயா?

ஸைரந்திரி:— ஆமாம் ஐயனே! இது என்ன பிரம்மாண்டமான ஆறு ஒன்று குறுக்கிடுகிறதே! இதை எப்படித் தாண்டுவது? பார்ப்பதற்கே பயங்கரமாக இருக்கிறதே! இதில் நீர் இல்லாமல் ரத்தமும் சீழும் நிறைந்திருக்கின்றனவே! துர்கந்தம் பொறுக்க முடியாமல் வீசுகின்றதே! இந்த நதியைக் கடப்பது எப்படியோ?

ஸூத்திரதாரர்:— கல்யாணீ! கலங்காதே. இது தான் நூறு யோஜனை அகலமுள்ள வைதரணீ நதி. கோதானம் செய்திருந்தால், ஒரு பசு வந்து நதிக்கு அப்புறம் கடத்திவிடும். புண்ணிய கர்மா செய்தவர்களை, அநேகம் ஆயிரம் ஓடக்காரர்கள் வந்து, நதியைக்கடக்க உதவி செய்வதைப் பார்த்தாயா! பாபிகளை, நதியில் தள்ளி, பாதாளம் வரையிலும் அழுத்தித் துன்புறுத் துவதைக் காண்பாய்! நசிகேதன் இந்தத் துர்க்கடமான

வைதரணியைக் குளம்படியாக, என்ன அநாயாசமாகக் கடந்துவிட்டான்!

ஸைரந்திரீ:— அவனுக்கு உதவிசெய்ய ஒரு பசு வந்ததையும் கவனித்தேன். அது எவ்வளவு புஷ்டியாகவும் பலமுள்ளதாகவும் இருந்ததைக் கவனித்தீர்களா! ஸ்வாமீ!

ஸூத்திரதாரர்:— ஆமாம். அவன் பிதா துர்பலமான கோக்களைத் தானம் செய்தும், அவனுடைய ஸத்ய நிஷ்டையினுல், அவைகளைப் பன்மடங்கு அதிகப் பலம் உள்ளதாகச் செய்துகொண்டானல்லவா! இதோ பார், செல்வீ! சந்திர, ஸூர்ய மண்டலங்களைக் கடந்தும், புஷ்யம், சிரவணம் என்னும் நக்ஷத்திரக் கூட்டங்களை வலம் வந்தும் நசிகேதன் தாவிச்செல்லுவதைப் பார்.

ஸைரந்திரீ:— ஐயனே! இது என்ன ஆகாய வெளியில் ஒரே சிவப்பாக ஒளி வீசுகிறதே! அதோ யானையில் ஏறி வருவது யாரோ?

ஸூத்திரதாரர்:— அந்தச் சிவப்புக் கோளங்கள் அங்காரக மண்டலம். அந்தக் கிரஹங்களையும் தாண்டிச் செல்லும்போது, ஐராவதத்தில் ஏறித் தேவேந்திரன் வந்து ஆசி கூறுகிறுன். கொந்தளிக்கும் பெருங்கடலில் கப்பல் அநாயாசமாக யாதொரு தடங்கலும் இன்றிக் கம்பீரமாகச் செல்லுவதுபோல் நசிகேதன் விரைகிறுன்.

ஸைரந்திரீ:— இதோ தெரிகிற பட்டணம் குபேரனுடையதா? அல்லது அமராவதியா? தங்கமயமான மதில்களுடனும், வயிரத்தூண்களுடனும் அநேக சாளரங்களுடனும், ஜகஜ்ஜோதியாக விளங்கும் இந்த அரண்மனை யாருக்குச் சொந்தமோ? குளிர்ச்சியும் நறுமணமும் நிறைந்த காற்று வீசுகிறது. எங்கும் இன்னிசை கேட்கிறது. இது எந்தப் புண்ணிய லோகம் ஸ்வாமீ!

ஸூத்திரதாரர்:— செல்வீ! இதுதான் வைவஸ்வத பட்டணம். யமதர்மனின் ராஜதானி. 144 காதவழி

அகலமுள்ளது. கந்தர்வர்களும், அப்ஸரஸ்திரீகளும் கூடியதாய்ச் சோபிக்கிறது. ஆடல் பாடல் நிறைந்து விளங்கும் இவ்வரண்மனைதான் யமனுடையது. பக்கத்திலிருக்கும் மாளிகை சித்ரகுப்தனுடையது. சித்ரகுப்தன் எல்லா ஜீவர்களும் செய்யும் பாப புண்யங்களையும் கணக்குச் சிறிதும் தவருமல் இங்கிருந்துதான் எழுதிக்கொண்டிருக்கிருன். பிசகே உண்டாகாது. பூவுலகில் நடக்கும் எந்த விஷயமும் விபரமும் அவன் கண்களுக்குத் தப்பமுடியாது.

ஸைரந்திரீ :— ஐயனே! எனக்கு எல்லாம் ஆச்சர்யமாக இருக்கிறது. நசிகேதனும் அரண்மனை வாசலில் வந்து இறங்கிவிட்டாஞ? இந்த நாடக ஸம்பாஷணைகளைக்கூடவா சித்ரகுப்தன் எழுதிக்கொள்வான்?

ஸூத்திரதாரர் :— அதில் என்ன ஸந்தேஹம்? கட்டாயம் அவன் கணக்கில் சேரும். நசிகேதனும் கருடவேகத்தில் ஆகாயமண்டலத்தைவிட்டு, வாயு மார்க்கத்தைத் தாண்டி, கிரஹங்களை வலம் வந்து, ஆத்மச்சுடர் ஒளிவீசத் தேவதைகள் புண்ணிய தேஜஸுடன் பவனிவரும் பிரதேசங்களையும் கடந்து, உயர்ந்த கதியில் சென்று, வைவஸ்வத பட்டணத்தில் இறங்குவதைப்பார்! பாரிஜாத மலர்கள் நறுமணத்துடன் அவன்மீது விழுந்து வரவேற்கின்றன. காண்பாயாக! வானவெளியில் எங்கும் ஜயகோஷ ஆரவாரம். கூடியிருந்தவர் முகத்தில் எல்லாம் ஒரே களிப்பு! மனத்தில் ஒரே மகிழ்ச்சி!

ஸைரந்திரீ :— ஐயனே! நாமும் உள் சென்று மேல் நடப்பதைக் கவனிப்போம். வாரும்.

ஸூத்திரதாரர் :—ஸகோதரீ! அப்படியே செய்வோம்.

(போகிருர்கள் திரை விழுகிறது)

காட்சி 2

(திரை விலகுகிறது.)

[யமலோகம்: மாடமாளிகைகள் கூடகோபுரங்கள் நிறைந்த நகரம். அங்குள்ள கொடிகளும் தோரணங்களும் சூரிய கிரணங்கள்போல் ஜ்வலிக்கின்றன. எங்கும் சோலைகள், ரிஷிகளின மனம்போல் சுத்தமான தெளிந்த நீரோடைகள். நசிகேதஸ் ப்ரவேசித்து வீதிகளைச் சுற்றிவருகிருன். மகிழ்ச்சியுடன் நான்குபுறமும் நோக்குகிருன்.]

நசிகேதஸ் (தனக்குள்) :— என் பூஜ்ய பிதாவின் ஆசியினுலும் ஸ்ரீ காயத்ரீ தேவியின் அருளாலும் நான் வெகு சுலபமாக யமலோகம் வந்துவிட்டேன்; எனக்கு யாதொரு விதமான களைப்பும் இல்லை; இளைப்பும் இல்லை. ஒருவிதமான ஆயாஸமும் இல்லை. எல்லாவற்றிற்கும் திடநம்பிக்கையும் பகவத் கருணையும் தான் காரணம்; மனவலிமை இருப்பின் எதுதான் ஸாத்யமாகாது? யமலோகததை அடைவது என்பது, கொன்னை விருக்ஷத்தில் ஏறிச் சிவபூஜைக்குப் பூப்பறிப்பதுபோல் எவ்வளவு எளிதாகிவிட்டது. (நீரோடையில் இறங்கி ஆசமனம் செய்துகொளளுகிருன.)

மானஸ ஸரஸ்களையும்விட மிகப்பெரியவையான இந்தத் தடாகங்கள் எவ்வளவு கம்பீரமாகக் காட்சி அளிக்கின்றன. அவைகளின் மத்தியில் மணிமண்டபங்கள் தான் எத்தனை மாண்புடன் விளங்குகின்றன, நான் திசைமாறி யமலோகத்துக்குப் போகாமல் தேவேந்திரபுரிக்கு வந்துவிட்டேனு? இல்லை, அதோ வருகிறவர்களைப்பார்த்தால் யமதூதர்கள் மாதிரிதான் தெரிகிறது. கைகளில் பாசமும் உலக்கையும் தரித்திருக்கின்றனர். ஆனுலும் இவர்களைப் பார்த்தால் என் மனதில் பயம் ஒன்றும் தோன்றவில்லையே!

(பாசஹஸ்தன், வஜ்ரதந்தன், சோணிதாக்ஷன் முதலிய யமபடர்கள ப்ரவேசிக்கின்றனர்.)

வஜ்ரதந்தன்:— இது யார்? பார்த்தாயா? என்ன தேஜஸு! முகத்தில் என்ன காந்தி வீசுகிறது?

பாசஹஸ்தன் :—ஆமாம், எனக்கும் வியப்பாகத்தான் இருக்கிறது. எப்படி இவர் இங்கே வந்தார், நம் அழைப்பு இன்றி!

சோணிதாக்ஷன் :— ஆம், நம் அனுமதியின்றி எப்படிப் பிரவேசித்தார்? என்ன ஆச்சர்யம் இது!

நசிகேதஸ் (தனக்குள்) :— அநேக சாளரங்களுடனும் முத்துக்கோர்வைகளுடனும், வைரத் தூண்களுடனும், துகிற்கொடிகளுடனும் கம்பீரமாகத் தோற்றம் அளிக்கும் இந்த அரண்மனை யமதர்மராஜனுடையதுதான். செம்பொன்னை உருக்கிவிட்டதுபோல் ஒளிவீசும் படிகளின் வரிசைகள். படைகள் ஜாக்கிரதையாகக் காவல் புரிகின்றன.

வஜ்ரதந்தன் :— இவரைப் பார்த்தால் கடுமையான விரதங்களை அனுஷ்டிப்பவர்போல் தெரிகிறது. அருகில் போய் யார் என்று விசாரிப்போமே!

பாசஹஸ்தன் :— அப்படியே செய்வோம்.

(அருகில் நெருங்குகிறார்கள்)

நசிகேதஸ் :— அணிவகுத்த யமதூதர்கள் அங்குமிங்கும சென்றவண்ணம இருக்கின்றனர். என்னை நோக்கியும் சிலர் வருகின்றனர். இவர்களிடம் நான் வந்த காரியத்தைக் கூறுவேன்.

[நசிகேதஸ் அவர்களுக்கு முதலில் அபிவாதனம் செய்கிறான. பாசஹஸ்தனைத் தவிர மற்றவர்கள பதில் வணக்கம செய்கிறார்கள்].

வஜ்ரதந்தன் :— ஸ்வாமீ, தாங்கள் யாரோ! தங்களைப் பார்த்தால் பெரிய மஹானைப்போல் தோற்றமளிக்கிறீர்கள்! துருவ மண்டலத்தைவிட்டு இங்கே எழுந்தருளிய துருவ பகவானு! அல்லது எங்களுக்குக்

கருணைபுரிய விஜயம் செய்திருக்கும் ஸனகாதிகளில் ஒருவரா ?

சோணிதாக்ஷன் :— ஐயனே ! கைலாஸத் தாழ்வரைகளில் விளையாடிக்கொண்டிருக்கும் பாலசுப்பிரமணிய மூர்த்திதான் வழிதவறி வந்துவிட்டாரா ? தாங்கள் யார் என்று தெரிவிக்கவேண்டும் !

வஜ்ரதந்தன் :— பெரியவரே ! தங்கள் விஷயங்களை எங்களுக்குத் தெரிவிக்கலாமானால் நாங்கள் சந்தோஷமாகக் கேட்போம். கருணை செய்யவேண்டும்.

நசிகேதஸ் :— நீங்கள் யமதூதர்கள் என்று நினைக்கிறேன். நீங்கள் நினைப்பதுபோல் நான் தேவனும் அல்ல, யக்ஷனும் அல்ல, கந்தர்வனும் அல்ல. நான் மானிடனே. தேவ ஜாதியார் ஒருவரும் என்னை இங்கு அனுப்பவில்லை.

பாசஹஸ்தன் :— நண்பர்களே, நான் நினைத்தது சரியாகப்போய்விட்டது. நான் இன்று பூலோகத்திலிருந்து வரும்போது வழியில் இவரைப் பார்த்தது ஞாபகம் வருகிறது கருடவேகத்தில் சஞ்சரித்த இவரைப் பார்த்த பலர், "உல்கா" (கொள்ளிக்கட்டை கிரஹம்) என்று எண்ணி ஒதுங்கி வழிவிட்டதையும் கவனித்தேன்.

வஜ்ரதந்தன் :— ஆமாம். எனக்கும் இப்போது நினைவுக்கு வருகிறது.

பாசஹஸ்தன் :— வஜ்ரதந்தா ! ஆசாமி யார் என்று தெரிந்துவிட்டது. நம் பெயரைச் சொன்னாலே நடுங்கும் மனிதப் பதர்களில் ஒருவன் என்று தெரிந்த பின்னும், நீங்கள் எல்லோரும் இப்படி மெய்மறந்து நிற்கிறீர்களே, வெளியே விரட்டுவோம்.

சோணிதாக்ஷன் :— பொறு. அவர் வந்த காரியத்தையும் கேட்போம். ஸ்வாமீ ! தாங்கள் இங்கு எழுந்தருளியதற்குக் காரணம் என்னவோ ?

நசிகேதஸ் :— வேதவித்தாயும், வியாகரண பண்டித ராகவும், தானசீலராகவும் அநேகம் பெரிய யாகங்களைச் செய்தவராகவும் விளங்கும் வாஜசிரவஸர் என்ற பிராம்மணோத்தமரின் புதல்வன் நான். யமதர்ம ராஜனைக் காண்பதற்காக இங்கே வந்தேன். தாங்கள் கிருபை கூர்ந்து அடியேனை அவரிடம் அழைத்துச் செல்லவேண்டும்.

பாசஹஸ்தன் :— சபாஷ்! எங்கள் எஜமானருடைய பெயரில் முதல் எழுத்தைச் சொன்னவுடனேயே பயந்து கதிகலங்கும் இந்த மனிதப் புழுவுக்கு, அவரைப் பார்க்கவேண்டுமாம்! நன்ருக இருக்கிறது வேடிக்கை! நண்பர்களே! இவனை வெளியே விரட்டுவோம். அல்லது குப்பீபாக நரகத்தில் அடைத்துவைப்போம்.

வஜ்ரதந்தன் :— நண்பா! நீ எல்லாரிடமும் வால் ஆட்டாதே! கொஞ்சம் பதற்றத்தை குறைத்துக்கொள்.

சோணிதாக்ஷன் :— பாசஹஸ்தா! அடக்கமாக இரு! நீ முன் ஒரு தடவை அஜாமிளரிடம்போய் அவமானப் பட்டதை இதற்குள் மறந்துவிட்டாயா!

வஜ்ரதந்தன் :— அப்போது நமக்கு நம் மதிப்புக்குரிய மஹிஷவாஹனர் மொழிந்த மதி உரைகளை மறந்தனையோ! அஜாமிளரைப்போல் இவரும் ஒரு விஷ்ணு பக்தராக இருக்கலாம் அல்லவா!

சோணிதாக்ஷன் :— பெரிய மகான்தான்; சந்தேஹம் இல்லை. பாசஹஸ்தா, நமக்கு ஏன் வம்பு? வஜ்ர தந்தரும் மற்றவர்களும் இங்கே நிற்கட்டும். நாம் போய்ச் சித்ர குப்தரிடம் சொல்லுவோம்.

(இருவரும் போகின்றனர்)

வஜ்ரதந்தன்:— ஸ்வாமீ! எங்கள் நண்பன் பாச ஹஸ்தன் எப்போதுமே அவசரபுத்திக்காரன். அவனை மன்னித்துவிடுங்கள்.

நசிகேதஸ் :— அவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே மன்னிப்பதற்கு. புதிய ஆள் வந்தால் சந்தேஹம் கொள்வது இயல்புதானே! தங்கள் மஹாராஜா எங்கு போயிருக்கிறார்? எப்போது வருவார்?

வஜ்ரதந்தன் :— எங்கள் அரசர் ஸூர்யலோகத்திற்குப் போயிருக்கிறார். திரும்பிவர மூன்று நாட்களாகலாம். இதோ சித்ரகுப்தர் வருகிறார். (சித்ரகுப்தர் பிரவேசிக்கிறார்)

சித்ரகுப்தர் (தனக்குள், ஒருபுறமாக) :— மார்கண்டேயரைப்போல் தோன்றுகிறதே. வதனத்தில் என்ன ஒளி! மார்கண்டேயருக்கும் ஆயுள் முடிந்துவிட்டதா! அல்லது சிவாபராதம் செய்துவிட்டாரா! அல்லது சுயமாகவே மரணத்தை வரித்துக்கொண்டாரா! நம் கணக்கில் இல்லாதவரல்லவா! ஆயுள் முடியவில்லையே இவருக்கு! சுகப்ரஹ்மமூர்த்தியே உடையணிந்து நம்மை வாழ்விக்க எழுந்தருளியிருக்கிறாரா! அருகில் போய் விசாரிப்போம்.

(சித்ரகுப்தர் அருகில் வர இருவரும் பரஸ்பரம் வணக்கம் செலுத்திக்கொள்கின்றனர்.)

சித்ரகுப்தர் :— ஸ்வாமீ, தங்கள் வரவு நல்வரவாகுக. தேவேந்திரனைவிட்டுப் பிரிந்த உபேந்திரமூர்த்தியைப் போல் விளங்கும் உத்தமரே! ஸ்வாகதம்! தங்களுக்கு நாமதேயமாக இடப்பட்டதால் கௌரவிக்கப்பட்ட அக்ஷரங்கள் எவையோ? ஒப்புயர்வற்ற மேனி கொண்ட தங்களை இங்கே அனுப்பியவர்கள் யாவர்? ருத்ரர்களா? மருத்துக்களா? விஷ்ணு பகவானா? அஷ்டதிக்பாலகர்களில் எங்கள் எஜமானர் நீங்கலாக மற்ற எழுவர் அனுப்பினார்களா? விவரம் சொல்ல வேண்டும்.

நசிகேதஸ் :— நான் பூலோகத்திலிருந்து வந்திருக்கிறேன். என் பெயர் நசிகேதஸ். என்னைத் தேவர்கள் ஒருவரும் இங்கே அனுப்பவில்லை, என் பிதா அனுப்பினார்.

சித்ரகுப்தர்:— தாங்கள் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவரா! ரொம்ப சந்தோஷம். கர்மங்களைச்செய்து புண்யங்களைச் சம்பாதிக்க யோக்யதையுள்ள மனித ஜன்மமே மாண்புடையது என்பது எங்கள் அபிப்பிராயம் எந்தப் பிரம்மரிஷியின் வம்சம் தங்களால் விளங்குகிறது? எந்நாட்டு மக்கள் தங்களைப் பிரிந்து தவிக்கிறார்கள்? விவரமாகச் சொல்லுங்கள். தங்கள் பிதா இந்தச் சிறு வயதில் தங்களை இங்கே அனுப்பக் காரணம் என்ன? நாங்கள் அறிய அருள் புரிவீராக.

நசிகேதஸ்:— இமயமலைச் சாரலில் வசிக்கும், ஔத்தாலக ஆருணியின் வம்சத்தைச் சேர்ந்த விப்ரச் சிரேஷ்டரான கௌதமரின் புதல்வன் நான். அவருடைய ஜ்யேஷ்ட புத்திரன். விசுவஜித் என்னும் யாகத்தில் என் பிதாவால் யமனுக்குத் தத்தம் செய்யப் பட்டேன். அவரை நேரில் கண்டு வணக்கம் தெரிவிக்க வந்தேன். யமபுரியில் உங்களுக்கு, சகோதர முறையில் பூவுலகத்தார் சார்பாக ப்ரணாமம் செலுத்துகிறேன்.

சித்ரகுப்தர்:— ஸ்வாமி! உங்கள் வரவினால் இந்த யமபுரி ஒளி பெற்றது. நாங்களும் தன்யர்கள் ஆனோம். உவகையுடன் உங்கள் பாதங்களில் பணிந்து வேண்டிக் கொள்ளும் விண்ணப்பம் ஒன்று உண்டு. எங்கள் அரசர் தற்சமயம் இங்கே இல்லை. அவர் சூரிய லோகத் திலிருந்து திரும்பிவரும்வரை சுருங்கிய நாள்கள் மூன்றேதான். தாங்கள் அடியேனுடைய குடிசைக்கு எழுந்தருள வேண்டும். தங்களுடைய ஆசார அனுஷ்டானங்களுக்கு யாதொரு குறைவும் வராமல் பார்த்துக்கொள்ளுவோம்.

நசிகேதஸ்:— நமஸ்காரம் சித்ரகுப்தரே! அன்புக்கு மிகவும் நன்றி. உங்கள் இனிய வாசகமே எனக்குப் போதிய மரியாதை அளித்துவிட்டது.

சித்ரகுப்தர்:— தாங்கள் இஷ்டப்பட்டால் அதிதி மந்திரத்தில் தங்கியிருக்கலாம். வேண்டிய ஸௌகர்யங்

களும் உபசாரங்களும் செய்யக் காத்திருக்கிறோம். பிராம்மணோத்தமரே, கிருபை பண்ணவேண்டும்.

(பாரிஜாத மரத்தடியில் பத்மாஸனம் போட்டு, அமர்ந்து காயத்ரியை ஜபிக்கிறார் நசிகேதஸ். மற்றவர்கள் நமஸ்காரம் செய்துவிட்டுப் போகிறார்கள். பாசஹஸ்தனும், கடைசியில் வணங்கிச் செல்லுகிறான். திரை விழுகிறது.)

காட்சி 3

(திரை தூக்கப்படுகிறது)

[யமதர்மராஜரின் அரண்மனை தென்படுகிறது. தோரண வாயிலில் யமபடர்கள் சூலம், கத்தி, கேடயம் முதலிய ஆயுதங்களை ஏந்திக் காவல் புரிகின்றனர். (தர்மராஜர் திரும்பிவரும் ஆரவாரம் கேட்கிறது. திரைக்குள்) கோரரூபன் முதலிய படர்கள் சூழ, யமதர்மர் மஹிஷத்தில் உட்கார்ந்து பிரவேசிக்கிறார். சிலர் சங்கு ஊதுகின்றனர். சிலர் சாமரை வீசுகின்றனர். சிலர் குடை பிடிக்கின்றனர். அரண்மனை வாசலில் வந்து இறங்குகிறார் யமதர்மர். படர்கள் "தர்மராஜாவுக்கு ஜே! பாபிகளைத் தண்டித்துப் புனிதமாக்கும் அவர் தண்டம் வாழ்க! கர்மபலதாதாவுக்கு ஜே! அண்டசராசரங்களையும் அழிக்கும் ஆற்றல் படைத்த அந்தகர் வாழ்க! புண்ணிய மித்திரர் வாழ்க! ஓங்குக அவர் பாரபக்ஷமற்ற நியாயம்! நீதி வழங்கும் உத்தமர் வாழ்க!" என்று கோஷமிடுகின்றனர்.

அரண்மனைக் கதவைத் திறந்துகொண்டு யமதர்மரின் பத்தினியும், தோழிமார்களும், மற்றும் மந்திரிகளும் பிரவேசிக்கின்றனர். அவருக்கு அர்க்கிய பாத்திய பூஜை செய்யச் சாமக்ரிகளுடன் பணிப்பெண்கள் வருகிறார்கள்.]

யமபத்தினி :— ஆர்யபுத்திரா! நமஸ்காரம். வழியில் யாத்திரை சௌகரியமாக இருந்ததா! என் மாமனார் மாமியார்கள் க்ஷேமமா?

யமதர்மர் :— பிரியே! எல்லாம் சுகமாக இருந்தது. யாவரும் சுகமே. [யமபத்தினி கணவரின் கால்களைக் கழுவி பூஜைசெய்யத் தொடங்குகிறாள். அப்போது சித்திரகுப்தர் ஓடோடிவந்து கூறுகிறார்.]

சித்திரகுப்தர் :— மஹாராஜாவே! வருக! வருக! தாங்கள் இல்லாத சமயத்தில் [அங்கே ஓர் மூலையில் பாரிஜாத மரத்தடியில் ஜபம் செய்துகொண்டிருக்கும் நசிகேதஸ்ஸை சுட்டிக்காட்டியபடி] இவர் இங்கு வந்தார் பூலோகத்திலிருந்து. வாஜசிரவஸர் என்ற பிராம்மணோத்தமரின் குமாரர். நாமதேயம் நசிகேதஸ். தம் பிதாவால் தங்களுக்குத் தத்தம் செய்யப்பட்டுத் தங்களைக்காண ஆவலுடன் இங்கே வந்து மூன்று நாட்களாகக் காததிருக்கிறார், அன்ன ஆஹாரம் எதுவும் இன்றி! அதிதி பிராம்மண உருவமாக அக்கினியே வீட்டில் நுழைவதாக எண்ணி அந்த அதிதிக்கு அர்க்கிய பாத்திய ரூபமான சாந்தி உபசாரங்களை ஸாதுக்கள் செய்கிறார்கள். இல்லாதவரை அந்த வைசுவானரன் எல்லாவற்றையும் பொசுக்கி விடுவான். ஆகையினால் வைவசுவதரே! முதலில் தீர்த்தத்தைக் கொண்டுவாரும்! நசிகேதஸுக்கு அதிதி பூஜை செய்வீராக. தங்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. இருந்தாலும் ஞாபகப்படுத்துவது என் கடமை!

தர்மராஜர் :— சித்திரகுப்தரே! தாங்கள் கூறியது மிகவும் பொருத்தமேயாகும். [மனைவியை நோக்கி] பிரியே! நாம் இருவருமாகச் சென்று இந்தப் பிராம்மண குமாரனுக்கு அதிதி பூஜை செய்வோம்.

யமபத்தினி :— ஆர்யபுத்திரா! அவர் இருப்பதை நான் பார்க்கவில்லை. எந்த அறிவில்லாத மனிதனுடைய வீட்டில், ஒரு பிராம்மணன் சாப்பாடு இன்றித் தங்குகிறானோ, அவனுடைய ஆசைகளும், ஸங்கல்பங்களும் நல்லோர் இணக்கமும், நல்ல வார்த்தைகளும், தேவபூஜையும், மனித ஸேவையும், மக்கள், பசுக்கள் ஆகிய அனைத்தும் இஷ்டாபூர்த்தங்களாகிற சகலவிதமான நன்மைகளும் அக்கினி வடிவாகிய அந்த அதிதியால் பொசுங்கிவிடுகின்றன. அக்கினி பகவானே மானிட வடிவில் வந்தவர்தான் அதிதியென்பவர்.

தர்மராஜர் :—பிரியே! நீ சொல்வது ரொம்பவும் சரி! நம் வீட்டில் இந்தப் பிராம்மண குமாரர் பட்டினியாக இருந்ததால், நாம் நம்முடைய ஸர்வ புண்ணிய ஸம்பத்துக்களையும் இழந்துவிட்டோம். பாபத்தையும் அடைந்துவிட்டோம் நாம் இப்போதே அதிதியை உபசரித்துப் பரிஹாரம் தேடிக்கொள்வோம்.

(எல்லோரும் நசிகேதஸ் பக்கம் செல்லுகின்றனர். நசிகேதஸ் ஜபம் முடிந்து எழுந்திருக்கிறார். யமனைக் கண்டதும் தெரிந்துகொண்டு வணக்கம் தெரிவித்துப் பிரார்த்திக்கிறார்.)

நசிகேதஸ் :—

यमाय धर्मराजाय मृत्यवे च अन्तकाय च।
वैवस्वताय कालाय सर्वभूतक्षयाय च॥

औदुम्बराय दध्नाय नीलाय परमेष्ठिने।
वृकोदराय चित्राय चित्रगुप्ताय वै नमः॥

யமாய தர்மராஜாய ம்ருத்யவே ச அந்தகாய ச।
வைவஸ்வதாய காலாய ஸர்வபூதக்ஷயாய ச॥

ஔதும்பராய தத்னாய நீலாய பரமேஷ்டினே।
வ்ருகோதராய சித்ராய சித்ரகுப்தாய வை நம:॥

அபிவாதயே அஸ்மி போ:

(யமதர்மராஜர் ஆசீர்வதித்து விட்டு நசிகேதஸை எடுத்து அணைத்துக் கொள்ளுகிறார்!)

நசிகேதஸ் :— ஸ்வாமீ! தங்கள் தரிசனத்தால் நான் கிருதார்த்தனானேன். பித்ரு வாக்யத்தை ஸத்யமாகச் செய்வதற்கும், அவருடைய யாகம் பூர்ணமாவதற்கும், தங்களை நாடி வந்தேன் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும்!

யமதர்மர் :— குமாரா! நசிகேதா! உன் வரவு மங்களமாகுக. நாங்கள் எல்லோரும் ஸந்தோஷம்

அடைந்தோம். இந்த யமபுரியே புனிதம் அடைந்தது உன் வருகையினால்! स्वागतं ते द्विजोत्तम (ஸ்வாகதம் தே த்விஜோத்தம)

(யமதர்மரும் பத்தினியும் அர்க்யம் பாத்தியம் முதலிய உபசாரங்களுடன் பூஜை செய்கின்றனர்.)

நசிகேதா! பிராம்மணனே! வணங்கத்தக்க அதிதியாகிய நீ மூன்று தினங்கள் வரையிலும் என் வீட்டில் சாப்பிடாமல் இருந்துவிட்டாய். அந்தப் பாபத்தைப் போக்க உன்னை நான் நமஸ்கரிக்கிறேன் பிராம்மணனே, எனக்கு நன்மை உண்டாகவேண்டும். அதற்காக மூன்று இரவுகளுக்காக தனித்தனியே மூன்று வரங்களை நீ கேட்டு நான் கொடுக்கவேண்டும்! என் கிருஹத்தில் போஜனத்திற்கு உபசரிக்காமல் இருந்துவிட்டதற்காக, நான் உனக்கு மூன்று வரங்களை மனமுவந்து கொடுக்கிறேன். பெற்றுக்கொள்ளவேண்டும். எனக்கு மங்களம் உண்டாகவேண்டும். தங்கள் இஷ்டம்போல் கேட்டுக் கொள்ளலாம். கொடுக்கச் சித்தமாக இருக்கிறேன்.

யமபத்தினி :— நாதா! வந்தவரை எவ்வளவு நாழிகை வெளியில் நிற்கவைத்துப் பேசிக்கொண்டிருப்பது? உள்ளே போய் போஜனம் முடிந்து இளைப்பாறிக்கொண்டபின் தொடர்ந்து ஸம்வாதம் செய்யலாமே!

யமதர்மர் :— பிரியே! நீ சொல்வதும் நியாயமே. எல்லோரும் உள்ளே போவோம். பிராம்மணனே, உள்ளே வருவாயாக.

(எல்லோரும் அரண்மனைக்குள் போகின்றனர். திரை விழுகிறது.)

காட்சி 4

[யமதர்மரின் அரண்மனையில் உட்புறம் மிகவும் விசாலமானதும், சிற்ப வேலைகள் நிறைந்ததுமான ஒரு பளிங்கு மண்டபத்தில், ஓர் உயர்ந்த சிம்மாசனத்தில் யமதர்மராஜா

வீற்றிருக்கிறார் கிழக்கு நோக்கி. அவரது வலதுபக்கம் நசிகேதஸ் ஒரு சிறிய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார். கால தேவனின் இடதுபக்கத்தில் சிரவணர்கள் இருவர் உசிதமான ஆசனங்களில் அமர்ந்து இருக்கின்றனர். கோரரூபன் சூலம் தாங்கி, மண்டபத்துக்கு வெளியே நின்று காவல் புரிகிறான்.]

யமதர்மர் :— த்விஜோத்தம! நான் தந்த மூன்று வரங்களையும் நீ உடனே கேட்டுப் பெற்றுக்கொள்ளவும். நான் உனக்குக் கடனாளி ஆகிவிட்டேன். ருணத்திலிருந்து விமோசனம் அளிக்கவேண்டும். வரத்தைப் பெற்றுக்கொண்டு, பூலோகம் சென்று பெற்றோருடன் சேர்ந்து சுகமே வாழ்வாயாக.

நசிகேதஸ் :— (தனக்குள் ஒரு புறமாக) திரும்பிச் செல்லவா? போனாலும் என்னை என் பெற்றோர்கள் ஏற்றுக்கொள்வார்களா? இறந்தவன் வந்தால் பிசாசு என்று எண்ணி விரட்டுவார்கள் அன்றோ? ஒரு சமயம் என்னைத்தெரிந்துகொண்டாலும் என் பிதா கோபப்பட மாட்டாரா? தானம்செய்த பொருளைத் திரும்பிப்பெறத் தான் இசைவாரா? ஆகையினால் நான் கோரும் முதல் வரம் இந்தப் பிரச்னைகளைத் தீர்க்கும் படியாக இருக்கவேண்டும் (யோசித்து) ஆம் இப்படிக் கேட்கிறேன் (பின் யமனைப் பார்த்து) "ஹே மிருத்யு தேவரே! என் தகப்பனார் கௌதமர் என்னைக் குறித்து சாந்த சங்கல்பமுடையவராகவும், நல்ல மனமுடைய வராகவும் கோபம் இல்லாதவராகவும் ஆகட்டும். உம்மால் அனுப்பப்பட்ட என்னைப் பிரீதியுடன் ஏற்று ஆசீர்வதிக்கட்டும். நான் சென்றவுடன் என் பிதாவும் மாதாவும் மற்றவர்களும் என்னை அறிந்துகொண்டு, சந்தோஷத்துடன் வரவேற்று ஆசீர்வாதங்கள் செய்ய வேண்டும். இதையே மூன்றினுள் முதல் வரமாகக் கேட்கிறேன்.

யமதர்மர் :— குமாரா! ரொம்பவும் சந்தோஷம். அப்படியே ஆகட்டும். உன் தகப்பனார் ஔத்தாலக ஆருணி (நான் கொடுக்கும் இந்த வரத்தால்) கவலை

யினின்றும் விடுபட்டவராகவும், முன் போலவே ப்ரீதியுடையவராகவும் ஆவார். மரணத்தின் வாயிலினின்றும் விடுபட்ட உன்னை, ஆவலுடன் பார்த்து, கோபமில்லாதவராகவும் ஆவார். இதுவரை உன்னைப் பிரிந்த துக்கத்தினால் இரவில் நித்திரை வராமல் துயரப்பட்டுக் கொண்டிருக்கிறார். இனிமேல் இரவு நேரங்களில் சுகமாகத் தூங்குபவராகவும் ஆவார். ஆகையினால் நீ ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம் நீ திரும்பிச் சென்றவுடன், உன்னைக் கண்ட மாத்திரத்தில் பழைய ஞாபகத்துடனும் ப்ரீதியுடனும் உன்னை ஏற்று (உச்சி முகர்ந்து) ஸந்தோஷித்திருக்கப் போகிறார். குழந்தாய், இனி இரண்டாவது வரத்தைக் கேட்பாயாக.

நசிகேதஸ் (தனக்குள்) :— என்ன கேட்பது? இகத்திற்கு வேண்டியது மாதா பிதாக்களின் ஆசீர்வாதம் அதைப்பெற்றுக்கொண்டோம். இனிமேல் பரத்துக்கு வேண்டியதைக் கேட்போமே? (வெளியே) ஸ்வாமி! ஸ்வர்க்க லோகத்தில் சிறிதும் பயமில்லை. (ஏனென்றால்) அங்கே உம்முடைய வேலையான மரணம் ஒருவருக்குமில்லை. எல்லோரும் (ஒரே யௌவன பருவத்தில் இருப்பதால்) கிழத்தனத்தால் பயப்படுவதில்லை (அமிர்தம் உண்பதால்) பசி, தாகம் இரண்டையும் கடந்து சோகம் அற்றவனாய்ப் போகத்தில் ஆழ்ந்து இன்புறுகிறான் ஸ்வர்க்கவாசி. இப்படிப்பட்ட அதிசயமான அநேகவித சுக சௌகரியங்கள் உள்ள ஸ்தானமான ஸ்வர்க்கத்திற்கு ஸாதனமாயுள்ள அக்கினி வித்யையை எனக்கு உபதேசிக்கவேணும். அதுவே நான் கேட்கும் இரண்டாவது வரம். ஸ்வர்க்க லோகப் பிராப்திகரமாயுள்ள அக்கினி வித்யையை நீர் அறிவீர்! நான் மிகுந்த சிரத்தையுடன் கேட்கிறேன். எனக்கு அதைத் தயவு செய்து உபதேசித்தருள வேண்டும். நரை, திரை, மூப்பு, பிணி, பசிக் கொடுமை, தாகத்துன்பம் இன்னும் பலவகைத் துன்பங்கள் அற்றதும், எப்போதும் ஒரே போகத்தைத் தருவதும், அமிர்தத்தை அள்ளி அள்ளிக் கொடுப்பது

மான ஸ்வர்க்கலோக வாஸத்தை அடைந்தவர்கள் எய்தும் தெய்வீக நிலை எதுவோ அதை (அதற்கு ஸாதனமான அக்னி வித்யையை) இரண்டாவது வரத்தால் கோருகிறேன்.

யமதர்மர் :— நசிகேதா! நீ கேட்டது மிகவும் பொருத்தமானது. ஸ்வர்க்க ஸாதனமான அக்கினி வித்யையை நன்கு அறிந்தவன் நான். அதை உனக்குக் கூறுவேன் நீ அதைச் சிரத்தையுடன் நன்ருகப் புரிந்துகொள்வாயாக. ஏகாக்ர சித்தத்துடன் கேட்பாயாக. இந்த அக்கினி வித்யையானது, மிகவும் உத்கிருஷ்டமானது ஸ்வர்க்கத்தை அடைவதற்கு ஸாதனமாயுள்ளது. கவிர விராட்ருபமான அக்னி (உலகமனைத்தும்) நிலைபெறும் இடமாயும் உபாஸகர்களின் (புத்திக்) குகையில் நிலைபெற்றுள்ளதாயும் இருக்கிறது. அப்படி நீ அறிந்துகொண்டு அதை நீயும் குஹ்யமாகக் காப்பாற்றிவர வேண்டும்.

நசிகேதஸ் :—ரொம்பவும் சந்தோஷம். நான் அதை மிகவும் சிரத்தையுடன் காப்பாற்றுவேன்.

(பிறகு யமதர்மர் நசிகேதஸ்ஸுக்கு அக்னி வித்யையை உபதேசித்து இந்த அக்கினி சயனத்திற்கு, எவ்வளவு கற்கள், எப்படிப்பட்ட கற்கள், என்ன கணக்குடையவை, எங்ஙனம் பயன்படுபவை, என்பனவற்றைக் கூறி, வேள்விக்குண்டம் அமைக்கும் வழியையும், அக்னி கர்மாவைச் செய்யும் விதத்தையும், யமதர்மர் விளக்கமாக நசிகேதஸ்ஸுக்குக் கூறினர். அவரும் அதைக்கூறியவாறே திருப்பிச்சொன்னர்.)

யமதர்மர் :—(சிஷ்யரின் புத்திகூர்மையைக் கண்டு வியந்து சந்தோஷித்து) குழந்தாய்! உன் புத்திக்கு மெச்சினேன். இப்போது இங்கே மீண்டும் உனக்கு ஒரு வரம் தருகிறேன். உன் பேராலேயே இவ்வக்கினி வித்யை உலகில் பிரசித்தமாகட்டும். பல நிறங்களுடன் ஒலிக்கின்றதும் (கௌஸ்துப மணிபோல் ஜ்வலிப்பதுமான) இந்த இரத்தினஹாரத்தையும் பெற்றுக்கொள்வா

யாக. நான் தரும் இந்த நாலாவது வரத்தால், இந்த வித்யை நாசிகேதாக்னி என்று பிரசித்தி அடையப் போகிறது.

ச்ரவணர் (1) :— மஹாத்மாவான மஹாராஜாவே! இந்த நாசிகேதாக்னி சயனத்தால் கிடைக்கும் பலன்களை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்.

யமதர்மர் :— இந்த நாசிகேதவேள்வியை நன்கு அறிந்து மூன்று தடவை அனுஷ்டித்தவன், மாதா, பிதா, குருக்கள் சொற்படிக் கேட்பவன், வேதம், ஸ்மிருதி, சிஷ்டாசாரம் ஆகிய மூன்றுடன் தொடர்பு கொண்டு அத்யயன-யாக-தானங்களை அநுஷ்டித்தவன் பிறப்பு இறப்புகளைத் தாண்டுகிறான். அவன் ஜன்மம் ஒழிந்தவனாய் நற்கதி அடைகிறான். ஸ்வர்க்கத்தில் சுகியாக இருப்பான். அவனுக்கு ம்ருத்யு பயம் இல்லை.

ச்ரவணர் (2) :— ஆம் ஆம்! இந்த அக்கினியை முவ்வகையிலும் உணர்ந்து அதாவது இந்த அக்னி வித்யையை மூன்று முறை உபாசித்து (த்ரிணாசிகேத) என்ற பெயர் பெற்று, அதர்மம் அஞ்ஞானம், ராகம், துவேஷம் முதலிய பாசங்களையும்உதறிவிட்டு, சோகம் அற்றவனாய் ஸ்வர்க்கலோகத்தில் இன்புறுகிறான்.

யமதர்மர் :— அப்படி உபாசித்தவன், ஹிரண்ய கர்ப்பனிடம் தோன்றியவனாகவும், அனைத்தையும் அறிபவனாகவும், போற்றத்தக்கவனாயும் உள்ள விராட் ஸ்வரூபத்தை அறிந்து, ஆத்மாவாக உணர்ந்து அளவு கடந்த சாந்தியை எய்துகிறான். கர்மா-உபாஸனா பலனாக வைராஜஸ்தானத்தை யடைகிறான். ஹே நசிகேதா! நீ இரண்டாவது வரத்தால் எதை விரும்பினாயோ, அந்தச் சுவர்க்க ஸாதனமான அக்கினி வித்யை உனக்கு அளிக்கப்பட்டது. இதை ஜனங்கள் உன் பெயராலேயே வழங்குவார்கள். மூன்றாவது வரத்தைக் கேட்பாயாக!

நசிகேதஸ் (தனக்குள்):— இஹ பர சம்பந்தமாகக் கேட்டோம். மூன்ருவதாக என்ன கேட்பது? (ஆலோசிக்கிருர்)

யமதர்மர்:— குழந்தாய்! என்ன யோஜனை செய்கிருய்? மூன்ருவது வரத்தை வாங்கிக்கொண்டு என் கடனைத் தீர்க்க அருள் புரிவாய்.

நசிகேதஸ்:—பூஜ்யரே! பூதஉடலை விட்டுக் கிளம்பிப் போகும் ஜீவன் விஷயத்தில் 'இங்ஙனமாக இவன் இருக்கிருன்' என்று சிலரும், 'இங்ஙனம் இவன் இல்லை' என்று சிலரும், எதைப்பற்றி வாதிக்கின்றனரோ அதைப்பற்றிய உண்மையை உமது உபதேசத்தால் அறியக்கடவேன். வரன்களுள் இதுவே மூன்ருவது வரமாகும். யமதர்மராஜரே! இறந்துபோனவனுடைய சரீரம், இந்திரியம், மனம், புத்தி இவைகளிலிருந்து வேருக ஆத்மா, ஒன்று இருக்கிறது, அது ஒருவனுடைய மரணத்துக்குப்பின், வேறு தேகத்தை அடைகிறது என்று சிலரும், வேறு சிலர் அப்படி வேருன ஆத்மா ஒன்றும் இல்லை என்றும் கூறுகிருர்களே, இதன் தத்துவத்தை எனக்கு விளக்கித்தர வேண்டும். இது விஷயமாகப் பிரத்யக்ஷமாகவோ அனுமானங்களினுலோ தெரிந்துகொள்ள முடியவில்லை. நான் அதைத் தெளிவாக அறியவிரும்புகிறேன். கிருபை கூர்ந்து உபதேசிக்கவேண்டும் ஆத்ம இரகசியத்தை, ஐயனே! இதுவே என் கடைசி வரம்.

ச்ரவணர் (1):— (மற்ற ச்ரவணரிடம்) சகோதரரே! பார்த்தீரா. மூன்ருவது வரம், வாமனமூர்த்தியின் மூன்ருவது அடியையும் மிஞ்சிவிட்டது.

ச்ரவணர் (2):— ஆம்! இதற்கு நம் அரசர் என்ன சொல்லப்போகிருர் பார்ப்போம்.

யமதர்மர்:— (தனக்குள்) கடைசியில், கேட்கக் கூடாததைக் கேட்டுவிட்டானே! ஆத்மஞான உபதேசம் பெறப் பூர்ணமான யோக்கியதை இருக்

கிறதா இல்லையா என்று முதலில் பரீக்ஷிப்போம். சுக போகங்களைத் தருவதாகச் சொல்லி பிரலோபனம் செய்வோம். (வெளியே) ஹே நசிகேதா! இது என்ன அசட்டுக்கேள்வி? இந்த ஆதம தத்வ விஷயமாகத் தேவர்களுக்கே இன்னும் சந்தேகம் உள்ளது. அவர்களாலேயே எளிதில் அறிய முடியாத விஷயம் இது. இது மிகவும் சூக்ஷ்மமானது. ஆகையால் என்னைச் சொல்லச்சொல்லி நிர்ப்பந்தியாதே! இதை விட்டு விட்டு வேறு வரத்தைக்கேள். சந்தோஷமாகக் கொடுக்கிறேன். சாதாரண ஜனங்களால் அறிய முடியாதது இது. சந்தேகாஸ்பதமான பலனை இச்சிக்காதே. நிச்சயமான பலனைக் கொடுக்கக்கூடியதான வேறு ஒரு வரத்தைக்கேள். பணக்காரன், கடன்காரனைக் கஷ்டப்படுத்துவது போல் என்னை வற்புறுத்தாதே.

நசிகேதஸ் :— ஹே மிருத்யுதேவரே! தேவதைகளுக்கே புரியாமல் சந்தேகம் வரக்கூடிய அவ்வளவு அரிய விஷயம் என்றும், அறிவது சிரமஸாத்யம் என்றும் தாங்களே சொல்லுகிறீர்கள். அப்படிப்பட்ட கடினமான விஷயத்தை விளக்கிச்சொல்ல உம்மைத் தவிர வேறு ஒருவரும் கிடைக்கமாட்டார்கள். ஆகையினுல் தாங்கள் என் பேரில் கிருபை பண்ணிச் சொல்ல வேண்டும். இதற்குச் சமானமாக வேறு ஒரு வரமும் கிடையாது. இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடமாட்டேன்.

சிரவணர் (1) :— நசிகேதஸின் ஸ்திர புத்தியைக் கவனித்தீர்களா சகோதரரே!

ச்ரவணர் (2) :— ஆமாம். பிடித்த பிடியை விடாதவனுல்தானே ஆத்ம விஷயத்தில் முன்னேற முடியும்.

யமதர்மர் :— குமாரா! உனக்கு இந்த வரம் வேண்டாம். நூறு ஆண்டு வாழும் புத்திர பௌத்திரர்களையும், பல பசுக்கள், யானைகள், குதிரைகள், பொன்,

முதலியவைகளையும் கொடுக்கிறேன். விரும்பிப் பெற்றுக்கொள். இந்த பூமியில் பரந்த அரசை அளிக்கிறேன். கேட்டுக்கொள். இவ்வளவு கிடைத்தாலும் அல்பாயுஸாகப் போய்விட்டால் வியர்த்தம் அல்லவா? ஆகையினால் இந்தச் சுகபோகங்களைத் துய்ப்பதற்கு நீயும் எத்தனை வருஷங்கள் வாழ விரும்புகின்றாயோ அவ்வளவு காலம் வாழலாம். அதிக நாள் வாழ்ந்தாலும் கிழத்தனம் வந்துவிடுமோ என்று பயப்படவேண்டாம். மேலேசொன்ன எல்லாவிதமான செல்வங்களுடனும், பெரிய விசாலமான பூமண்டலத்தை ராஜ்யபாரம் செய்து கொண்டும், ஸமக்ரமான இந்திரிய கலாபங்களுடனும் இஷ்டமுள்ளபடி நீடுழி காலம் வாழ வரம் தருகிறேன். இது வேண்டாமானால் இதுபோன்ற வேறு எந்த வரத்தை நீ விரும்பினாலும் தருகிறேன்.

ச்ரவணர் (1) :— ப்ரஹ்ம வித்யையை உபதேசம் செய்யும முன் சிஷ்யனுக்கு யோக்யதை இருக்கிறதா என்று நம் மஹாராஜா பரிசோதிப்பதைப் பாரும்.

ச்ரவணர் (2) :— ஆம்! அங்ஙனம் மனதைத்தூண்டி விட்டுப் பின்னால் உபதேசம் செய்வதுதானே முறை. நெருப்பைத் தூண்டிவிட்டபின் ஹோமம் செய்வது போல.

நசிகேதஸ் :— ஸ்வாமீ! நான் கேட்ட வரத்தை எனக்குக் கொடுப்பதற்கு இஷ்டமிருந்தால் கொடுங்கள். வேறு ஒன்றைக்காட்டி மனதை மயக்கவேண்டாம். ஆத்ம தத்துவத்தை அடியேனுக்கு உபதேசிக்க தங்களைத் தவிர்த்தால் வலைபோட்டு அரித்தாலும் வேறு பண்டிதர்கள் கிடைக்கமாட்டார்கள். ஆகையினால் இதுவே பெறத்தக்கதாகும்.

யமதர்மர் :— (மறுபடியும் செல்வங்களைத் தருவதாகச் சொல்லி ப்ரலோபனம் செய்கிறார்.) ஹே நசிகேதா! அகண்டமான லோகாதிபத்யததை பெற்று சிரஞ்ஜீவியாக வாழ்வாயாக. ஸகலவிதமான அபீஷ்டங்களையும்

காமனைகளையும் தருகிறேன். மானுஷிகமானதும், தெய்விகமானதுமான சகலவிதமான போகங்களையும் பெற்று அனுபவிப்பாயாக. நான் ஏதோ சொல்லி ஏமாற்றுவதாக எண்ணாதே. நான் ஸத்ய சங்கல்பன். எல்லாம் சொன்னபடி தருவேன். மனுஷ்ய லோகத்தில் கிடைக்காத போகங்களையும் தருகிறேன். உன் இச்சைப்படி யதேஷ்டமாய்க்கேள். இந்த ரதங்கள், வாத்யங்கள், இந்த அப்ஸரஸ்திரீகள், இவை மனிதன் கனவில்கூட அநுபவிக்கக்கிட்டாது. நான் தருவதால் இவர்கள் உன்கூட வந்து உனக்கு ஸேவை செய்வார்கள். மங்கள வாத்தியங்களுடன் கூட இன்னிசை எழுப்பி, பாடி ஆடும் இந்த ரமணிகளைப் பார். நீ நாவு அசைத்தால் இவையெல்லாம் உனக்கே சொந்தம். இந்தப் பிரத்யக்ஷமான சுகபோகத்தை விட்டு உதறித்தள்ள உனக்கு உன்மத்தமா பிடித்திருக்கிறது? பிடிவாதம் வேண்டாம்! குமாரா! இவைகளைத் திருப்தியுடன் பெற்று வாழ்வாயாக. ஆனால் மரண சம்பந்தமான விஷயத்தை மட்டும் கேட்காதே. சாவுக்குப்பின் இருக்கிறதா? இல்லையா? என்ற பிரச்னையை மட்டும் கேட்காதே! வாயஸத்துக்கு எத்தனை பற்கள் என்பது முதலான பலனற்ற கேள்வியைப் போன்றது தான் நீ கேட்பதும். ஆகையினால் அதை விட்டுவிடுவாய்.

நசிகேதஸ்:— ஹே யமராஜரே! நீர் தருவதாகச் சொன்ன இரத்தின மாலைகள், அச்வங்கள், கோக்கள், ரதங்கள், கஜங்கள், பொன், பொருள்கள், அரசு, அப்ஸர ஸ்திரீகள் இவைகள் ஒன்றும் எனக்கு வேண்டாம். ஹே அந்தகரே! இவையெல்லாம் இன்றைக்கிருந்து நாளைக்கு அழிவனவே அன்றோ. இவைகள் தாம் அழிந்துபோவதுடன் இல்லாமல் மனிதனுடைய எல்லா இந்திரியங்களின் வலிமையையும் அழிப்பனவே அன்றோ. எவ்வளவு பலம் பொருந்திய புலன்களாக இருந்தாலும் போகத்தால் பொசுங்கித் தானே போகும். எவ்வளவு நீண்ட வாழ்வாயினும்

அல்பம் தான் என்பது எனக்குத்தெரியுமே. ஸகலத்தை யும் படைக்கும் பிதாமஹரின் ஆயுளும் மிகவும் சொற்பம் தானே. அப்படியிருக்க, தாங்கள் தருவதாகச் சொல்லும் தீர்க்காயுள் அல்பத்திலும் அல்பமாகத்தானே இருக்க முடியும். ஆகவே மாலை, ரதம், ஆடல், பாடல் எல்லாம் இங்கேயே உங்களுடன் இருக்கட்டும்.

யமதர்மர் :— ஹே நசிகேதா ! நான் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் நீ கேட்பதாக இல்லை. நான் உனக்கு நன்மையைத்தான் கூறுகிறேன்.

நசிகேதஸ் :— ஸ்வாமீ ! மனிதனுக்குத் தனம் கிடைத் தாலும் ஒருநாளும் அவன் திருப்தி அடைவதில்லை. எங்களுக்குப் பொருள் தேவைப்படும்பொழுது எங்க ளிடம் அபிமானமுள்ள தங்களை நேரில் கண்டு தரிசித்து பெற்றுக்கொள்கிறோம். அதைத் தனியாகப் பிரார்த்தித்து வரமாக வேண்டிப் பெறவேண்டியதில்லை. நீர் எங்களை ஆண்டு அனுக்கிரகிக்கும்வரை நீண்ட வாழ்வையும் பெற்று அநுபவிப்போம். தங்களை வந்து தர்சனம் செய்தபின் எவனாவது ஒருவன் அல்பாயு ளுடனும், அல்பதனத்துடனும் இருப்பானா ? இவை யாவும் நச்வரம். சாச்வதமன்று. தீர்க்க சுகத்தைத் தராதவைகள்.

ச்ரவணர் (1) :— நசிகேதஸ் காற்றினால் அசையாத, அலைவீசாத பெரிய ஸரோவரம்போல் இருக்கிறார்.

ச்ரவணர் (2) :— ஆமாம். முமுக்ஷுவுக்கு இருக்க வேண்டிய ஸாதன சதுஷ்டயங்களும், இவனிடம் பொருந்தியிருக்கின்றன. இனிமேல் உபதேசிக்க என்ன தடையோ ?

நசிகேதஸ் :— ஸ்வாமீ ! கொடுப்பதுபோல் காட்டி மறுபடியும் உம் வசமே திரும்பும் பொருளைத் தருகிறேன் என்கிறீர், வலது கையால் கொடுத்து இடது கையால் பறித்து விடுவதுபோல. இவையெல்லாம் உமதேயாகும்.

எங்களுக்குத் தந்ததுபோல் காட்டி ஒருநாள் உம் பாசத்தை வீசிக் கொண்டுபோய்விடுவீர். ஆகையினால் இவைகள் உண்மையில் கொடுத்த வரங்கள் ஆக மாட்டா! நீர்தான் ஆயுளையும் பொருள்களையும் அபஹரித்துச் செல்பவர். மூப்பும் மரணமும் இல்லாதவர்களிடம் சேர்ந்து, அதாவது அமரர்களைச் சேர்ந்து, அவர்களிடம் பெறக்கூடிய பெரும் பயன் எது என்று உணர்ந்தும், மூப்புக்கும் சாக்காட்டுக்கும் இரையாகி வாழும் மனிதன், இந்தச் சிற்றின்பங்களை விரும்பி ரமிப்பானா? குபுத்திகள் அப்படிச் செய்யலாம். அறிவாளி ஒருநாளும் அவற்றைப் பொருட்படுத்த மாட்டான்.

யமதர்மர் :— ஹே குழந்தாய் நசிகேதா! உனக்கு எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்கவில்லை. என் கடமையை நான் செய்துவிட்டேன். முடிவாக உன் அபிப்பிராயத்தைச் சொல்.

நசிகேதஸ் :— ஸ்வாமீ! தாங்கள் தருவதாகச் சொல்லுகிற போகங்கள் ஒன்றும் எனக்கு வேண்டாம். கம்பமதயானைக் கழுத்தகத்தின் மேல் இருந்து இன்பு அமரும் செல்வமும் இம்மண் அரசும், ஊன் ஏறு செல்வத்து உடற்பிறவியும் நான் வேண்டேன். ஆனை செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ வான் ஆளும் செல்வமும், மின் அனைய நுண்ணிடையார் உருப்பசியும் மேனகையும் அன்னவர் தம் பாடலொடு ஆடல் அவை ஆதரியேன். வான் ஆளும் மாமதிபோல் வெண்குடைக் கீழ் மன்னவர் தம் கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வமும் வேண்டேன். உம்பர் உலகு ஆண்டு ஒரு குடைக்கீழ், உருப்பசி தன் அம்பொற் கலை அல்குல் பெற்றாலும் ஆதரியேன். மிருத்யுதேவரே, எந்தப் பெரியதான பரலோக விஷயத்தில் ஜனங்கள் ஸம்சயிக்கின்றார்களோ அதைப்பற்றி எனக்கு நிச்சயமாகக் கூறியருளுதல் வேண்டும். எளிதில் புத்திக்கு எட்டாததாக மறைந்துள்ள அவ்விஷயத்தைப்பற்றிய வரத்தையன்றி

வேறு ஒன்றையும் நான் கேட்டு அறிய விரும்பவில்லை. வேண்டவில்லை. கிருபை கூர்ந்து உபதேசிக்க வேண்டுகிறேன்.

யமதர்மர் :—(தனக்குள்) இவன் உத்தம அதிகாரியே. உபசேம்பெற யோக்யதையுள்ளவன்தான். ஐயமில்லை. (வெளியே) ஹே குழந்தாய், இதுவரை உன்னைப் பரீக்ஷித்தோம். அதில் நீ தேறிவிட்டாய். இனி உனக்கு உபதேசம் செய்கிறேன்.

நசிகேதஸ் :— (எழுந்து வணங்கி) குருநாதரே, மிகவும் தன்யனுனேன். தாங்கள் சொல்வதை சிரத்தையுடன் கேட்கிறேன். (சித்ரகுப்தர் பிரவேசம்)

சித்ரகுப்தர் :— மஹாராஜா ! ஸபைக்கு எழுந்தருளும் ஸமயம் வந்துவிட்டது. தயவுசெய்து ப்ரஸ்தானம் செய்யவேண்டும்.

யமதர்மர் :— ஆகட்டும், போவோம். நசிகேதா ! நீயும் நம்முடன் ஸபைக்கு வரலாம்.

(எல்லோரும் போகின்றனர். திரை விழுகிறது.)

இரண்டாவது அங்கம் முற்றும்.

மூன்ருவது அங்கம்

காட்சி 1

(திரை தூக்கப்படுகிறது)

[யமராஜரின் ஸம்யமனி பட்டணத்தில் தைஜஸி என்ற புராண ப்ரஸித்தமான ஸபை தென்படுகிறது. அநேக ஆயிரம் வைரத்தூண்களுடனும், துகிற்கொடிகளாலும், முத்துக் கோவைகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு ஸ்வர்ணமயமாக விளங்குகிறது. சைத்யஸௌரப்யமுள்ள காற்று விசுகிறது. மெல்லிசையும் கேட்கப்படுகிறது. அம் மண்டபத்தின் நடுவே ஒரு பெரிய ஸிம்மாஸனத்தில் யமன் வீற்றிருக்கிருர். வஜ்ரதந்தன் முதலிய தூதர்கள் ஆயுதங்கள் தாங்கி ஒருபுறம் நிற்க, ஸமஸ்தமான ரோகங்களும் கோர ரூபம் தரித்து ஒருபுறம் நிற்கின்றன. அப்ஸர ஸ்திரீகள் சாமரை விசுகின்றனர். ஒரு பக்கத்தில் ச்ரவணர்களும் சித்ரகுப்தரும் உட்கார்ந்திருக்கின்றனர். நசிகேதஸும் ஓர் ஆஸனத்தில் வியப்பே வடிவாக அமர்ந்திருக்கிருன்.

பாசஹஸ்தன் ஒரு பாபியை இழுத்துவருகிருன். பின்ஞல் யமகிங்கரர்கள் அவனை நையப் புடைத்தவண்ணம் வருகின்றனர். அச்சீவன் அந்த ஸபையையும், யமதர்ம ராஜனையும் கண்டு பயந்து ஓலமிடுகிருன்.]

பாபஜீவன் :— ஐயோ! என்ன பாபம் செய்தேனே! இப்படி அடிக்கிருர்களே! கேள்விமுறை இல்லையா! வருகிற வழியில் துன்பங்கள் பட்டதற்கு முடிவே இல்லையே! நொந்த புண்ணில் வேல் கொண்டு குத்துவதுபோல், மண்ணுலகில் என் குழந்தைகுட்டிகளையும், மனைவியையும், நிலபுலங்களையும் பிரிந்து வந்தவனை ஆறுதல் சொல்லாமல் அடிக்கிருர்களே! பசி தாகம் தாங்கமுடியவில்லையே! என்னைக் காப்பாற்றுவாரில்லையா! ஐயோ அம்மாடீ!

யமதர்மர் :— சித்ரகுப்தரே! இந்த ஜீவன் செய்திருக்கும் அட்டூழியங்கள் என்னவோ? விபரமாகச் சொல்வீராக.

சித்திரகுப்தர் :—ஸ்வாமீ, (ஏட்டைப் புரட்டியவண்ணம்) இவன் மஹாபாபி. பஞ்சமஹாபாதகங்களைச் செய்தவன். மிகுந்த முற்கோபி ஈயாத லோபி. பரஸ்திரீகமனம் செய்தான் பல தடவைகளில். பொருள்களை அதர்மமான மார்க்கத்தில் சம்பாதித்து ஏழைகளைத் துன்புறுத்தினுன். வாக்கிஞல் இன்சொல்லே கூறி அறியாதவன்.

யமதர்மர் :— இவன் ஏதாவது புண்ணிய கர்மாக்கள் செய்திருக்கிருஞ?

சித்ரகுப்தர் :— இல்லவேயில்லை! கனவிலும் தர்மம் செய்தறியான்.

யமதர்மர் :— அப்படியாஞல் இந்த மஹாபாபியின் முகத்தில் விழிப்பதே பெரும் பாவம். இப்போதே இவனைக் கொண்டுபோய் தப்தகுண்டத்திலிடுங்கள். பின்பு உலக்கையால் அடியுங்கள். பழுக்கக் காய்ந்த இரும்புப் பதுமையை அணையச்சொல்லிச் சேர்த்து சங்கிலிகளால் கட்டுங்கள். உணவு கொடுக்காமல் தன் சதையை தின்னச்சொல்லுங்கள், மறுத்தால் இரும்புச் சலாகையில் கோர்த்து அக்கினியில் வாட்டுங்கள். பெரியோரை தூஷித்த பாவத்திற்காக, கிருமிகளைக் கொண்டு, நாக்கை அரிக்கச் செய்யுங்கள்.

யமபடர்கள் :— அப்படியே செய்கிருேம் ஸ்வாமீ.

பாபஜீவன் (பயந்து நடுங்கியபடி) :— ஐயோ தர்மராஜரே! அடியேனைக் காப்பாற்றும். கருணை காட்டும். எனக்கு ஒரே ஒருதரம் பாவமன்னிப்புத் தாரும். நான் திருந்திவிடுகிறேன். தயவுசெய்யுங்கள். என்னை ஹிம்ஸிக்கவேண்டாம்.

யமதர்மர் :— ஹே ஜீவனே! நான் பாரபட்சமற்ற நீதிமான். நடுக்கண்ட நியாயம் வழங்குபவன். விருப்புக்கும் வெறுப்புக்கும் என் மனதில் இடம் கிடையாது! இந்தக் கடுந்தண்டனைகள் உன்னைத்

திருத்துவதற்குத் தான். அடுத்த ஜன்மத்தில் உனக்கு ஸந்தர்ப்பம் தரப்படும். ஆகவே இப்போது நீ போகலாம்.

பாபஜீவன் :— இதுவா நீதி! என்ன நியாயம்! கருணை கலக்காத ஒரு நீதியும் நீதியா? பச்சாத் தாபம் பாபத்திற்குப் பரிஹாரமல்லவா? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! தலை சுற்றுகிறதே! (கீழே சாய்கிறான். தூதர்கள் அவனைச் சவுக்கால் அடித்து இழுத்துச்செல்கின்றனர். நசிகேதன் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறான்.)

(தர்மத்வஜன், ஒரு புண்யஜீவனை மரியாதையுடன் அழைத்துவருகிறான். புண்யஜீவன கண்களுக்கு எல்லாம் மங்களமாக கோரமில்லாமல் ஸௌம்யமாகத் தென்படுகின்றன. கோரங்கள் மறைந்து விடுகின்றன. யமதர்மரும் அழகான ரூபத்தில் பிரகாசிக்கிறார். அந்தப் புண்ணியாத்மாவைக் கண்டதும் எல்லோரும் எழுந்து வரவேற்கின்றனர். முகமன் கூறுகிறார்கள்.)

யமதர்மர் :— வாரும் புண்ணியாத்மாவே! உங்கள் வரவு நல்வரவு ஆகுக. இதோ இந்த ஆசனத்தில் அமருங்கள். (ஜீவன் உட்கார தர்மத்துவஜன் சாமரை வீசுகிறான்.)

ச்ரவணர் (1) :— (எழுந்து) தர்மராஜாவே, இவர் கர்மாக்களை எடுத்துச் சொல்ல எனக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. இவர் வேதசாஸ்திரங்களை நன்றாகக் கற்றவர். கற்றபடி ஒழுகினவர். ஸ்ரீமத் ராமாயண, பாரத, பாகவதங்களைக் கையாலெழுதியும், எழுதச் செய்தும் படிக்க விரும்புவோர்க்கு கொடுத்த பரம உபகாரி. இவர் வாசலில் சென்று யாசித்தவன் ஒருவனாவது வெறுங் கையோடு திரும்பியதில்லை.

ச்ரவணர் (2) :— இதுமட்டுமா! எல்லா ஏகாதசிகளிலும் உபவாசமிருந்திருக்கிறார். துவாதசியில் பிராஹ்மண போஜனம் செய்வித்திருக்கிறார். கிணறு குளங்கள் வெட்டச் செய்திருக்கிறார். நந்தவனங்கள்

ஏற்படுத்தியிருக்கிருர். பொது ஜனங்களுக்கு உபகாரமாக பல தான தர்மங்கள் செய்திருக்கிருர். மேலும் சாசுவதமாக நடக்கும் பொருட்டு தர்ம ஸ்தாபனங்கள் நிறுவியிருக்கிருர்.

புண்ணியஜீவன் :— (அடக்கத்துடன்) நான் என்ன விசேஷமாகச் செய்திருக்கிறேன். ஒன்றுமில்லை. என் கடமைகளைத்தானே செய்ய முயற்சித்தேன். அதுவும், பகவத்கிருபையாலும், பெரியோர்கள் ஆசியாலும், பொதுமக்கள் ஒத்துழைப்பாலும் இவ்வளவாவது நடந்தது. நிமித்தமாக நான் இருந்திருக்கலாமே தவிர வேறில்லை.

யமதர்மர் :— சித்ரகுப்தரே, இவர் பாபம் செய்து இருக்கிருரா? அதைப்பற்றி மௌனம் ஏனே?

சித்ரகுப்தர் :— அறிந்து ஒரு பாவமும் செய்ததில்லை. அறியாமல் சில சில்லறைக்குற்றங்கள் செய்திருக்கிருர். ஆனல் அவைகளுக்கு பிராயச்சித்தமாக, பரிஷத் விதாயகப்படி பாபங்களை எடுத்துரைத்து, மன்னிப்புக் கோரி, பெரியோர்கள் விதித்தபடி பிராயச்சித்தங்களை நல்ல மனதுடன் செய்தும், தாராளமாக ஏராளமான தானங்களை ஸத்பாத்திரங்களுக்குக் கொடுத்தும் புனிதம் அடைந்துவிட்டார்.

யமதர்மர் :— அப்படியா! ரொம்ப சந்தோஷம். ஒரு வேதவித்துக்கு கொடுக்கும் தக்ஷிணை போக்கடிக்காத பாபமும் உண்டோ?

சித்ரகுப்தர் :—எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போல் கடைசியில் இவருக்கு மரணமும் காசிக்ஷேத்திரத்தில் ஏற்பட்டது. ஸ்ரீ விசுவனதர் இவர் காதில் தாரகநாமத்தை உபதேசம் செய்தார். உடனே இங்கு விமானத்தில் வந்திருக்கிருர்.

யமதர்மர் :—மிகவும் மகிழ்ச்சி. இவர் வரவால் நம் நகரமே புனிதமடைந்தது. இவரை உபசரித்து ஸ்வர்க்க

லோகத்துக்கு அனுப்புவோம். இதோடு இன்று சபை கலையட்டும்.

(யமதர்மர் எழுந்திருந்து போகிறார். எல்லோரும் எழுந்து உடன் செல்லுகின்றனர். நசிகேதஸ்ஸு மட்டும் நின்று யோசிக்கிறான்)

நசிகேதஸ் (தனக்குள்) :— இங்கு நடப்பது எல்லாம் ஒரே விந்தை. இப்படித் தண்டனைகள் இருந்தும் மக்கள் ஏன் பாவம் செய்கிறார்கள்? தெரிந்தால் ஒருநாளும் செய்யமாட்டார்கள். (உலாவுகிறான்) ஆனால் புராணங்கள் இதைப்பற்றிச் சொல்லி முறையிடுகின்றனவே. அப்படி இருந்தும் பாபம் செய்யாமலிருக்கமுடியவில்லையே? தன்னை அறியாமலேயே-தன்னையே மீறி-பாபம் செய்யத்தூண்டுவது எது? அதைத் தவிர்க்க முடியாதா? புண்ணியம் செய்யத்தூண்டுவது யார்? எல்லாம் ஒரே புதிராக இருக்கிறது. யமதர்மராஜர்தான் சந்தேகங்களை நீக்கவேண்டும். அவர் உபதேசிப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார். அதுவே முதல் வெற்றிதான். இன்று வந்த பாபியை எப்படியாவது காப்பாற்ற முடியுமா? அவர் தைன்யமாக என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றார். அவர் பட்ட கஷ்டம் என் மனதை உருக்கிவிட்டது. (கண்ணீரைத் துடைத்துக்கொள்கிறான்) ஐயோ ரொம்ப சங்கடப்படுகிறார். எப்படியாவது காப்பாற்றவேண்டும். தர்மராஜர் விதி தவறமாட்டார். அவர் ஸர்வ ஸாக்ஷி, ஸமன். பாபிகளைச் சுத்தி செய்ய தண்டாயுதத்தை தரித்திருக்கிறார். ஆகையினால் அவரைக்கேட்டு பலனில்லை. பின் என்ன வழி? ச்ரவணர்களைக் கேட்போம், ஏதாவது உபாயம் சொல்லும்படி. அதுதான் சரி. போவோம்.

(போகிறான். திரை விழுகிறது)

காட்சி 2

(திரை தூக்கப்படுகிறது)

[யமதர்மரின் அரண்மனை. ஒரு விசாலமான மண்டபம். கிழக்குநோக்கி யமதர்மர் ஒரு பீடத்தில் வீற்றிருக்கிருர். பக்கத்தில் சிரவணர்கள் இருக்கிருர்கள் நசிகேதஸ்ஸும் வடக்குநோக்கி உட்கார்ந்திருக்கிருன்.]

நசிகேதஸ் :— பரமகுருவே தாங்கள் அடியேன்பேரில் கிருபைகூர்ந்து உபதேசிக்கவேண்டும்.

யமராஜர் :—வத்ஸா, அப்படியே உபதேசிக்கிறேன். நீ என்னுடைய அத்யந்த பிரியமான சிஷ்யன். சொல்லுகிறேன். கவனமாய்க்கேள்.

நசிகேதஸ் :— உத்தரவுப்படி, ஸ்வாமீ, ஜாக்கிரதையாகக் கேட்பேன்.

யமராஜர் :—குழந்தாய். ச்ரேயஸ் என்பது ஒன்று. ப்ரேயஸ் என்பது மற்ருென்று. ச்ரேயஸ் என்பது நன்மை; அதுதான் ஹிதம். ப்ரேயஸ் என்பது இனிமை; அதுதான் பிரியம். நன்மை வேறு, இனிமை வேறு. இனிமை அதற்கு முற்றும் வேருனது. அவை இரண்டும் மனிதன் உள்ளதைப்பற்றி, வெவ்வேறு விஷயங்களில் இழுத்துக் கட்டுப்படுத்துகின்றன. அவைகளில் ச்ரேயஸ்ஸைப் பின்பற்றியவனுக்குச் சிறந்த நன்மைகள் உண்டாகின்றன. ப்ரேயஸ்ஸைப் பின்பற்றியவன் புருஷார்த்தத்தினின்றும் நழுவுகிருன்.

நசிகேதஸ் :— ச்ரேயஸ்ஸையும் ப்ரேயஸ்ஸையும் பிரித்துப் பின்பற்றப் புருஷனுக்குச் சக்தி உண்டானுல் அவன் ஏன் ச்ரேயஸ்ஸை வரித்துக்கொள்ளவில்லை? சுபத்தை விட்டு அசுபத்தை வரிக்க-பின்பற்ற-காரணம் என்ன?

யமராஜர் :— இரண்டும் கலந்தே புருஷனை நாடி வருகின்றன. தீரன் அவைகளை நன்கு பரிசீலனைசெய்து

வேறுபாடுகளை உணர்கிருன். புத்திமான் நன்மையை உயர்ந்ததாகக் கருதி ச்ரேயஸ்ஸை வரிக்கிருன். நல்லதும் இனிமையும் தன் முன் நிற்கும்போது, தீரன் இரண்டையும் நன்ருக ஆராய்ந்து பார்த்து இனிமையைப் புறக்கணித்து நன்மையையே நாடுவான். மந்தபுத்தி உள்ளவன், பொருள் ஈட்டுவதிலும் அதைக் காப்பாற்றுவதிலும் நோக்கங்கொண்டு ப்ரேயஸ்ஸை வரிக்கிருன். மூடன் நன்மையைத் தள்ளிவிட்டு இனியதைப் பற்றிக்கொள்ளுகிருன். ஹம்ஸமானது, எப்படி ஜலத்திலிருந்து பாலைப் பிரித்து எடுக்கிறதோ அது போல புக்திசாலியும் ப்ரேயஸ்ஸை விட்டு ச்ரேயஸ்ஸை எடுத்துக்கொள்ளுகிருன். இந்த விவேகியின் செயலுக்கு நேர் விரோதமாக அல்பமதியுடையோன், யோக க்ஷேமாதிகளிலும் பசு, பார்யா, புத்ராதிகளிலும் பிரியம் வைத்து ப்ரேயஸ்ஸை நாடுகிருன்.

ஹே நசிகேதா, நீ பயப்படாதே. உள்ளத்தைக் கவரும் பிரியமான காமங்களை அற்பமென்று கண்டு விட்டொழித்தவன் நீ! ப்ரேயஸ்ஸில் இருக்கும் போகங்களை பற்றி நான் உனக்கு எவ்வளவோ எடுத்துச்சொல்லியும், தூண்டியும் அவைகளின் அழியும் தன்மையைக் கண்டு வெறுத்துத்தள்ளிஞய். நீ மகா விவேகி. எந்தப்போகங்களில் பல மனிதர்கள் ஆழ்ந்து மூழ்கி மடிகின்ருர்களோ, அந்த மாயப்பொருள் வழியை நீ அடையவில்லை. நீ பெரிய தீரன்.

நசிகேதஸ் :—ஸ்வாமீ! எனக்கு ச்ரேயஸ்ஸைப்பற்றி இன்னும் விவரமாகச் சொல்லுங்கள்.

யமராஜர் :—அவித்யையும் (ப்ரேயஸ்), 'வித்யை' (ச்ரேயஸ்) என்று உணரப்படுவதும், ஒன்றுக்கொன்று வெகுதூரம் வேறுபட்டவை. அவை இரண்டும் அந்தகாரம், பிரகாசம்போல மாறுபட்டவை. இவைகள் தரும் பலன்களுக்கும் வித்தியாஸம் உண்டு. விபரீத பலனுகவும் இருக்கும். ஒன்றின் பலன் மோக்ஷம்.

மற்ருென்றின் பலன் ஸம்ஸாரம். நசிகேதா, நீ வித்யா அபிலாஷி என்று அறிகிறேன். மிக உயர்ந்த பலனுகிய மோக்ஷத்திகுற் சாதனம் ச்ரேயஸ். குறுகிய பார்வை யாளருக்கு ப்ரேயஸ் பிரியமாய்த் தோன்றும். அவித்யை யில் பற்றுவிடாதவன் 'வித்யை'யை அடையமுடியாது. விலங்குகளைப்போல் மனிதனைப் பந்தப்படுத்தும் காம போகங்களை நீ விரும்பவில்லை. பலவகைப்பட்ட காம போகங்களும் உன்னை அசைக்கவில்லை. ஆகையினுல் உனக்குப் பரம ச்ரேயஸ் உண்டாகும். ஐயமே இல்லை.

நசிகேதஸ்:—தங்கள் அமிர்தமயமான வசனங்களைக் கேட்க மிகவும் சந்தோஷமடைகிறேன். குருவே, ப்ரேயஸ்ஸைப் பின்பற்றுபவர் கதியையும் விளக்கமாகச் சொல்லவேண்டும்.

ச்ரவணர் (1) :—நசிகேதஸின் கேள்வி மிகவும் ஸாது வானது. அவித்யையை-இனிமையை-விட்டுத் தள்ள அதன் துர்கதிகளை அறிவது அவசியம்தானே.

யமராஜர் :— மந்தபுத்தி உள்ளவர்கள் - மூடர்கள். குறுகிய மனப்பான்மையோடு சிற்றின்பங்களை விழைந்து ப்ரேயஸ்ஸை வரிப்பார்கள். அதில் ஆழ்ந்துபோன மூர்க்கர்கள், தாமே தீரர்கள் என்றும் பண்டிதர்கள் என்றும் எண்ணிக்கொண்டு தடுமாறித் தத்தளிப் பார்கள். பிறவிக் குருடர்களைப் பின் தொடர்ந்து செல்லும் குருடர்கள்போல் இவர்கள் சுற்றிச்சுற்றி வருவார்கள். இந்தப் புல்லறிவாளர் ஆத்ம நஷ்டம் அடைந்தவர்களாய், கொடுஞ் செயல் புரிபவர்களாய் உலகின் பகைவர்களாய், பிறந்து இறந்து உழலுவார் கள். மஹத்தான மோஹ அந்தகாரத்தால் குருடர்களாய், பிரமை அடைந்துவிட்டதால், பரலோக விஷயமும் ஆத்மஞானமும் இவர்களுக்கு விளங்காது. "இதுவே லோகம்; பரலோகம் ஒன்றும் கிடையாது" என்று எண்ணும் அந்த அவிவேகி, மீண்டும் மீண்டும் மிருத்யு வாகிய என்வசம் அகப்படுகிருன். திரும்பவும் ஆசூரப்

பிறவியில் தள்ளப்பட்டு 'புனரபி ஜனனம், புனரபி மரணம்' என்றபடி அல்லற்படுகிருன்.

ச்ரவணர் (2) :— இப்பெண்ணும், பொன்னும், மணியும், புத்திரனும், பூமியும் உள்ள, காணப்படும் லோகமே நித்தியம் என்றும், பரலோகம் இல்லை என்றும் எண்ணுபவர்கள், அவர்கள் விருப்பப்படியே ஜன்மம் எடுத்து உழலுவதும் நியாயம்தானே. "சம்சாரமோ, ஸாகரமோ?" என்று இதைத்தானே சொல்லுகிருர்கள்.

நசிகேதஸ் :— தாங்கள் சொல்வது ரொம்பவும் சரி. அதனுல்தான் நான் இந்தச் சம்சார துக்கத்திலிருந்து விடுபட ஆசைப்படுகிறேன். தங்களைப்போன்ற பெரியவர்களை ஆச்ரயித்து உண்மையை அறிய விரும்புகிறேன்.

யமராஜர் :—உன்னைப்போல் ஆத்மஞானத்தை அறிய விரும்பும் சிஷ்யன் கிடைப்பது அரிது. ஆயிரத்தில் ஒருவருக்கு இது தோன்றலாம். எதைப்பற்றிய கேள்வி கூட பலருக்குக் கிட்டுவதில்லையோ, கிட்டினுலும் எதைப் பலரும் அறியமுடியவில்லையோ, அதைப்பற்றிக் கூறுகிறவனும் அரிது. அதை அடையும் நிபுணனும் அரிதினும் அரிது. தாழ்ந்த - தகுதியற்ற - புருஷனுல் சொல்லப் பட்டால் ஆத்மா அறிந்துகொள்ளத் தக்கதன்று. நிபுணனுன ஆசார்யனுல் உபதேசிக்கப்பட்டு அதை அறிகிறவன் அனைத்தினும் அரிது. குசலனுன குருவால் தான் கற்பிக்கப்பட வேண்டும். ஏனென்றுல் ஆத்மா பலவிதமாய்ச் சிந்திக்கப்பட்டிருக்கிறது. பிரம்மத்தினிடம் அபேத புத்தி உள்ளவரால் உபதேசிக்கப்பட்டால் தான், விகற்ப சிந்தனைக்கு இடமில்லை.

நசிகேதஸ் :—குருவே, ஆத்ம சிந்தனை எதனுல் விகற்பம் அடைகிறது? விளக்கிச் சொல்லவேண்டும். அதைச் சரியாக அறிவது எப்படி?

யமராஜர் :— ஆத்மா அணுவுக்கும் அணுவாயிருப்பதால் அதை தர்க்கத்தால் அறியமுடியாது. சாதாரண மனிதர்களால் ஒருநாளும் அறியமுடியாது. ஏனெனில் சிலர் ''ஆத்மா இருக்கிறது'' என்றும், சிலர் ''ஆத்மா இல்லை'' என்றும் சொல்கிருர்கள். இந்த ''அஸ்தி, நாஸ்தி, கர்த்தா, அகர்த்தா, சுத்தமுள்ளது, சுத்தம் இல்லாதது'' என்று இப்படிப் பலவிதமாக வாய் படைத்தவர்கள் கூறுகிருர்கள். இவ்வாத்மா வியப்புக்கு உரியதென்று விழிக்கிருன் ஒருவன். இது என்ன விந்தையென்று விள்ளுகிருன் வேருெருவன். ஆச்சர்யம் என்று கேட்கிருன் ஒருவன். மற்றுமொருவன் இதைக் கேட்டும் அறிந்திலன். ''இதுவல்ல, அதுவல்ல, (நேதி, நேதி) என்ற முறையில்தான் ஆத்மாவைப் பற்றி உபதேசிக்க முடியும்.

ச்ரவணர் (1) :— ஆயிரக்கணக்கான மனிதர்களில் யாரோ ஒருவன் மன நிறைவின்பொருட்டு முயலுகிருன். அவரிலும் யாரோ ஒருவன் உள்ளபடி அறிகிருன். நசிகேதா! நீ அந்தப் பாக்யசாலி கோஷ்டியில் சேர்ந்தவனப்பா!

யமராஜர் :— என் பிரியத்துக்கு உகந்த நசிகேதஸ்! நீ அடைந்த இந்த ஸம்யக்ஞானம் தர்க்கத்தால் அடைய முடியாதது. நீ உண்மையான திடசித்தம் உடையவன். ஆச்சர்யம். உன்னைப்போல் கேட்கும் சிஷ்யன் எமக்கு இனியும் கிட்டட்டும். குழந்தாய்! சேமித்த செல்வம் அநித்யம் என்பதை நான் அறிவேன். நிலையற்ற பொருள்களால் நிலையுள்ளதான (ஆத்ம ஞானத்தை) செல்வத்தை அடையமுடியாது. ஆனலும் அநித்யமான பொருள்களால் நாசிகேதாக்னி என்னல் உபாசிக்கப்பட்டது. அதனல் (கல்பகாலம் வரை) நித்தியமான யமபதவியை நான் அடைந்தேன்.

நீயோவெனில் ஆசைகளின் பூர்த்திக்கு எல்லை நிலமானதும், உலகுக்கெல்லாம் உறைவிடமாயும்,

உபாஸனங்களின் முடிவான பலனும் பயமற்றதும், வெகுகாலம் நிலைத்திருப்பதும் எல்லோராலும் போற்றப் படுவதும் அளவுக்கு அடங்காததும் அணிமாதி ஐசுவர் யங்கள் நிறைந்ததும் மிகச்சிறந்ததுமான ஹிரண்யகர்ப பதவியைக்கூட அதன் தன்மையை நன்கு அறிந்து துச்சமென்று உதறித்தள்ளிவிட்டாய் பரப்ரஹ்மத்தையே யடையவேண்டுமென்ற தீவ்ரமான எண்ணத்தால் ப்ரஹ்மலோகாந்தமான பிரபஞ்சம் முழுவதிலும் உனக்கு பூர்ண வைராக்யம் ஏற்பட்டுவிட்டது. நீயே தீரன்.

ச்ரவணர் (2) :— அழியும் பொருள்களையும் ப்ரஹ்மத் துக்கு அர்ப்பிப்பதால் அழியாப் பலனைப் பெறுவதற்குச் சாதனமாகிறது.

நசிகேதஸ் :—ஸ்வாமீ ! தர்மராஜரே ! எது காரணத் துக்கும் காரியத்துக்கும் அப்பாற்பட்டதோ, எது காலங் களுக்கு மிஞ்சியதோ எது நன்மை தீமைகளுக்கு அப்பாற்பட்டதோ, எது உண்டானதற்கும் உண்டாகப் போவதற்கும் அப்பாற்பட்டதாயும் உள்ளதோ அதை எனக்குக் கூறி அருளவேண்டும்.

யமராஜர் :— வேதங்கள் எல்லாம் எந்தப் பொருளைப் போற்றுகின்றனவோ, தவங்கள் எல்லாம் எதை நாடு கின்றனவோ, எதை விரும்பி எல்லோரும் பிரம்ம சரியத்தை அனுஷ்டிக்கிறார்களோ அந்தப் பதத்தை உனக்குச் சுருக்கிக் கூறுகிறேன். அது 'ஓம்' என்பதே யாகும்.

(சிரவணர்கள் பாடுகிறார்கள்)

'ओं ओं ओं ओं ओं' 'ओं सत् ओं' 'ओं चित् ओं'
'ओं आनन्द ओं' 'ओं ओं भज ओं ओं'

"ஓம் ஓம் ஓம் ஓம் ஓம்" "ஓம் ஸத் ஓம்" "ஓம் சித் ஓம்" "ஓம் ஆனந்தம் ஓம்" "ஓம் ஓம் பஜ ஓம் ஓம்".

யமராஜர் :— இந்த ஓங்காரத்தை ஆலம்பனமாகவும் ப்ரதீகமாகவும் கொண்டு உபாஸிக்கப்படும் ஆத்ம வஸ்து பிறப்பதுமில்லை இறப்பதுமில்லை. இந்த ஆத்மா எதிலிருந்தும் உண்டாகவில்லை. இந்த ஆத்மாவி லிருந்தும் வேருென்றும் வாஸ்தவமாக உண்டாகவில்லை. ஆத்மா பிறப்பற்றது. அழிவற்றது. தேய்வில்லாதது. அனைத்துக்கும் முன் உள்ளது. சரீரம் அழியும்போது ஆகாசம்போல் அழியாமல் நிற்பது. எங்குமுள்ளது

நசிகேதஸ் :— ஆத்மா ஆகாயம்போல் எங்கும் நிறைந்து போக்குவரவு அற்றதாயின், ஒரு சரீரத்தை விட்டு மற்ருெரு சரீரத்தை அடைவது எங்ஙனம்?

யமராஜர் :— ஆம்! உண்மையில் ஆத்மாவுக்கு ஒரு சரீரத்தை விடுவதும், மற்ருென்றையடைவதும் இல்லைதான். ஸூர்யன் உதிப்பதுமில்லை அஸ்தமிப்பது மில்லை. ஆனுல் அவ்வாறு நமக்கு தோன்றவில்லையா? அதுபோல் பிறப்பு இறப்பு அற்ற ஆத்மாவும் பிரகிருதி ஸம்பந்தத்தால் சரீரத்தை விடுவதுபோலவும் மற்ருெரு சரீரத்தில் புகுவதுபோலவும் தோன்றுகிறது. சரீரத தையே ஆத்மா எனக்கொண்டு ஆத்மாவைக் கொலை காரனென்றும், கொல்லப்பட்டவனென்றும் எண்ணு பவரும் அறிவிலிகளே. ஏனெனில், ஆத்மா கொல்லு வதுமில்லை. கொல்லப்படுவதுமில்லை.

நசிகேதஸ் :— பரமகுருவே, ஆத்மஸ்வரூபத்தைப் பற்றி இன்னும் விளக்கமாகச் சொல்லவேண்டும்.

யமராஜர் — காண்பதற்கரியதும், அனைத்திலும் ஊடுருவி நிற்கும் மறைபொருளும், புத்திக் குஹையில் நிலைபெற்றதும், உடல்தோறும் வியாபித்திருப்பதும், பழமையான பொருளுமாகிய அந்த திவ்ய தேஜோ மயத்தை அத்யாத்ம யோகத்தால் உணர்ந்துகொள்ள வேண்டும். அப்படி உணர்ந்தவன் இன்ப துன்பக் கிளர்ச்சிகளை விட்டவனுகிருன்.

ச்ரவணர் (1) :— வத்ஸா, நசிகேதா, வெளி விஷயங்களிலிருந்து மனத்தைத் திருப்பி ஆத்மாவிடத்தில் செலுத்துவதுதான் அத்தியாத்மயோகம். அப்படி அநுஷ்டித்து ஆத்மாவின் உண்மைச் சொரூபத்தைத் தனக்குள் கண்டபிறகு மகிழ்ச்சியும் துக்கமும் இரண்டும் அற்றுப்போகும். பரம்பொருளுக்கு நன்மை ஏது? தீமை ஏது? நமது ஆசாபாசங்கள், சுகதுக்கங்கள் இவைகளுக்கு மத்தியில் இருந்தாலும் அவற்ருல் ஆத்மா தொடப்படுவதில்லை. அங்ஙனம் உள்ள ஆத்மாவைக் காண்பதே மோக்ஷம்.

யமராஜர்:—இதை ஆசார்யனிடம் கேட்டுத்தெரிந்து இதையே தன் ஸ்வரூபமாகக்கொண்டு ஸூக்ஷ்மமான இந்த ஆத்மாவை விவேகத்தால் சரீரம் முதலியவற்றிலிருந்து பிரித்து அறிந்து அதை அடைந்தவன் ஆனந்திக்கிருன். நசிகேதஸுக்கு மோக்ஷம் திறந்திருக்கிறது என்று எண்ணுகிறேன்.

நசிகேதஸ்:—தர்மராஜாவே, தாங்கள் சொல்லுவதை கேட்டபின் இந்த ஆத்மா, சரீரத்திலிருந்து முற்றும் வேறுபட்டது என்று நான் உணர்கிறேன். இதுவரை ஆத்மாவையும் சரீரத்தையும் ஒன்ருக நினைத்து அஞ்ஞானத்தில் மூழ்கி இருந்தேன். தங்களால் ஐயம் தீர்ந்தது. மேலும் எனக்குத் தெரியவேண்டியதைச் சொல்லுங்கள்.

யமராஜர் :— இந்த ஆத்மா அணுவுக்கு அணுவாயும் பெரியதுக்குப் பெரியதாயும் உள்ளது. ஒவ்வொரு ஜீவராசியின் உள்ளத்திலும் உறைவது. ஆசை நீங்கியவன் இந்த ஆத்மாவைக் காண்கிருன். அப்போது சோகம் நீங்கி அந்தக்கரணம் தெளிவாகிறது. அதனுல் ஆத்மாவின் பெருமையைத் தெரிந்து கொள்கிருன். தவிர, வேதங்களைக் கற்றதாலோ நுண்ணறிவாலோ விரிந்த கேள்வியாலோ இவ்வாத்மா ஒரு ஸாதகனுல் அடையப்படுவது அன்று.

நசிகேதஸ் :— ச்ரவணத்திஞலும் மேதா விலாஸத்திஞலும் அறியப்படாத ஆத்மாவை அறிவது எப்படியோ ?

யமராஜர் :—வேருென்றிலும் மனதைச் செலுத்தாது ஆத்மா ஒன்றையே (எந்த ஸாதகன்) பிரார்த்திக்கிருனே அப்போது (அவஞல் அது) அடையப்படும். அதாவது எந்த ஸாதகன் ஆத்மாவை அறிய ஆத்மாவையே சரண்புகுகிருனே, அந்த ஆத்மாவிஞலயே தன்னுடைய உண்மை ஸ்வரூபம் காட்டப்பட்டு அறிகிருன்.

நசிகேதஸ் :— ஸ்வாமீ, இதில் அதிகாரி பேதங்கள் உண்டோ ?

யமராஜர் :— பாபகர்மங்கள், துர்நடத்தைகள் இவைகளினின்றும் விலகாதவன், இந்திரியங்களை அடக்காதவன், மனதை ஒருமுகப்படுத்திச் சாந்தி எய்தாதவன், இவர்களால் இந்த ஆத்மாவை ஒருபோதும் அறியமுடியாது. அவர்கள் ஆத்மாவை அறிய அதிகாரிகளல்ல. எந்த ஆத்மாவுக்கு பிராஹ்மணரும் க்ஷத்திரியரும் அன்னம் போன்றவர்களோ, மிருத்யு ஊறுகாய் போன்றவனே அவ்வாத்மாவை எவஞல் அறியமுடியும்?

நசிகேதஸ் :— குருவே, ஆத்மஞானத்திலும் ஜாதி பேதம் உண்டோ ?

யமராஜர் :— வத்ஸா ! எல்லா தர்மங்களையும் போஷித்து உலகைக் காப்பவர்கள் பிராஹ்மணர்களும் க்ஷத்திரியர்களும்தான். இதஞல் இவர்களை முக்யமாகக் குறிப்பிட்டாலும் இப்பிரபஞ்சம் முழுவதும் ப்ரஹ்மத்திற்கு அன்னமாகிறது என்பதுதான் கருத்து. எல்லோரையும் அழிக்கும் மிருத்யுவும்கூட ஊறுகாய்போல பிரபஞ்சமாகிற அன்னத்தை சாப்பிடுவதற்கு உபகாரம் செய்து தானும் அழிந்துபோகிருன் ஸர்வபிரபஞ்சத்தையும் ஆத்மா தன்னுள் அடக்கிக்கொள்கிறது ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம் மூன்றிற்கும் ஆத்மாவே காரணம்

ச்ரவணர் (2) :— ரொம்ப சரி, வாழ்க்கை அன்னம் (ஓதனம்) என்றால், இடையிடையில் நிகழும் மரணம் ஊறுகாய் (உபஸேசனம்) தானே.

யமராஜர் :— நசிகேதா! கவனமாய்க் கேள் இந்த ஆத்மா பக்கத்தில் வீற்றிருக்கும்போதே வெகுதூரம் செல்லும். இங்கே கிடந்தவாறே எங்கும் ஓடும். இன்பம் நிறைந்தது. இன்பமில்லாதது.

நசிகேதஸ் :— இது என்ன! தாங்கள் சொல்வது பெரிய புதிராக இருக்கிறதே! கொஞ்சம் விளக்கமாகச் சொல்லவேண்டும்.

யமராஜர் :— இந்த ஆத்மா உண்மையில் சலனமில்லாமலிருந்தும் உபாதிகள்மூலம் வெகுதூரம் செல்லக் கூடியது. படுத்திருந்தாலும் எந்தப் பக்கமும் சென்று சேரக்கூடியது. சந்தோஷமும் அசந்தோஷமும் நிறைந்தது. இப்படிப்பட்ட ஆத்மாவை எங்களைப் போன்ற ஸூக்ஷ்ம புத்தியுள்ளவர்களைத் தவிர வேறு யாரால் அறியமுடியும்? இந்திரியங்கள் அடங்குவதையே படுத்திருப்பது என்பது குறிக்கிறது. அப்பொழுதும் ஸ்வரூபஞானம் உள்ளது. எல்லா விபரீத லக்ஷணங்களும் வேறுபட்ட பாவங்களும் உபாதிகள் மூலம் ஆத்மாவுக்குப் பொருந்தும்.

நசிகேதஸ் :—ஸ்வாமி, ஓம்காரத்தைப்பற்றி இன்னும் கொஞ்சம் விவரமாகக்கூறவேண்டும்.

யமராஜர் :— குழந்தாய், ஆத்மாவிற்கு ப்ரதீகமே ஓங்காரம். அந்த அக்ஷரமே பரப்ரஹ்மம். அதுவே அபரப்ரஹ்மம். இவ்வக்ஷரத்தை உபாஸித்து எதை (பரத்தையோ, அபரத்தையோ) அடைய விரும்புகிறானே அதை அவன் அடைவான். இதுவே சிரேஷ்டமான ஆலம்பனம். ப்ரஹ்ம ப்ராப்திக்கு ஏற்ற ஆலம்பனம் இதுவே. இதைக் கராவலம்பனமாகக் கொண்டவன் ப்ரஹ்மலோகத்தில் கொண்டாடப்படு

கிருன். இதுவரை கூறியதைச் சுருக்கமாகச் சொல் கிறேன் கேள். ஹே நசிகேதா, முன்பு எப்பொழுதாவது நான், நீ, இந்த சிரவணர்கள் ஆகியவர்களில் யாராவது இல்லாமல் இருந்ததில்லை. இக்கார்யங்கள் அழியும்போதும் நாம் இல்லாமற்போகமாட்டோம். இவ்வாத்மா ஒருபோதும் பிறப்பதுமில்லை, இறப்பது மில்லை. இது இல்லாதிருந்து பிறகு பிறந்ததல்ல. இருந்து பிற்பாடு இறந்ததுமல்ல. இவ்வாச்சர்யமான ஆத்மா பிறவாதது, இறவாதது, தேயாதது, வளராதது, சரீரம் கொல்லப்படும்பொழுது ஆத்மா அழிவதில்லை. நம்முடைய முயற்சியாலும் புத்திகூர்மை யாலும் ஆத்மாவை அடையமுடியாது. அவ்வாத்மா வையே எவன் வரிக்கிருனே, அவனுலேயே அதை அறியமுடியும்: அது சலனமில்லாதது. எங்கும் நீக்கமற பரவியிருப்பதால் – நிறைந்திருப்பதால் – சலிக்க இடமில்லையே! சரீரம் ஸுகத்தை அனுபவிக்கும் பொழுது அதுவும் சேர்த்து ஸந்தோஷப்படுவதுபோல் தோற்றமளிக்கிறது. ஆனல் அது ஸாக்ஷி நிலையில் இருப்பதால் ஸந்தோஷமடையவில்லை. துக்கமும் அவ்விதமே. ஓங்காரமே அதன் அடையாளமாகக் கொள்ளத்தக்கது. வத்ஸா, இன்று கேட்டதை எல்லாம் நன்ருகச் சிந்தனை செய்துபார். பாக்கி விஷயங்கள் அடுத்த ஸம்பாஷணையில். (நசிகேதஸ் எழுந்து வணங்குகிருன். எல்லோரும் சேர்ந்து பாடுகிருர்கள்.)

न जायते म्रियते वा विपश्चिन्नायं कुतश्चिन्न बभूव कश्चित् ।
अजो नित्यः शाश्वतोऽयं पुराणो न हन्यते हन्यमाने शरीरे ॥

नायमात्मा प्रवचनेन लभ्यो न मेधया न बहुना श्रुतेन ।
यमेवैष वृणुते तेन लभ्यस्तस्यैष आत्मा विवृणुते तनूं स्वाम् ॥

अणोरणीयान्महतो महीयानात्मास्य जन्तोर्निहितो गुहायाम् ।
तमक्रतुः पश्यति वीतशोको धातुप्रसादान्महिमानमात्मनः ॥

एतदालम्बनं श्रेष्ठमेतदालम्बनं परम् ।
एतदालम्बनं ज्ञात्वा ब्रह्मलोके महीयते ॥

ந ஜாயதே ம்ரியதே வா விபஸ்சிந்நாயம்
குதஸ்சிந் ந பபூவ கஸ்சித் I
அஜோ நித்ய: சாச்வதோऽயம் புராணோ
ந ஹந்யதே ஹந்யமானே சரீரே II

நாயமாத்மா ப்ரவசனேன லப்யோ ந மேதயா
ந பஹுநா ச்ருதேன I
யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ்தஸ்யைஷ
ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் II

அணோ ரணீயான் மஹதோ மஹீயாநாத்மாஸ்ய
ஜந்தோர் நிஹிதோ குஹாயாம் I
தமக்ரது: பச்யதி வீதசோகோ தாதுப்ரஸாதான்
மஹிமானமாத்மன: II

ஏதத் ஆலம்பனம் ச்ரேஷ்டமேததாலம்பனம் பரம் I
ஏதத் ஆலம்பனம் ஞாத்வா ப்ரஹ்மலோகே மஹீயதே ॥

(திரை விழுகிறது.)

காட்சி 3

[யமராஜதானிக்கு வெளிப்புறத்தில் ஒரு பெரிய பூஞ்சோலை ஒருபுறம் சித்திரசாலைகள். சங்கீதமேடைகள். மற்றொரு பக்கத்தில் லதாகிருஹங்கள், ஸபாமண்டபங்கள், நடுவில் ஒரு தடாகத்தின் மத்தியில் வசந்த மண்டபம். எங்கும் இன்ப மூட்டும் இன்னிசை ஒலிக்கிறது. பாரிஜாத மலர்களின் தெய்வீக நறுமணமும் கமழ்கின்றது. அந்த வஸந்தமண்டபத்தில் ஒரு பெரிய ஸிம்மாஸனம் போடப்பட்டிருக்கிறது. அதன் அருகில் தம் தம் ஆஸனங்களில் சிரவணர்களும் சித்ரகுப்தரும் உட்கார்ந்திருக்கிறார்கள். பாசஹஸ்தன் சூலம் தரித்து வாசலில் நின்று காவல் புரிகிறான். முதல் சிரவணரும் நசிகேதனும் பிரவேசிக்கிறார்கள்.]

ச்ரவணர் (1):— குழந்தாய் நசிகேதா, உனக்கு இந்த நகரவாசம் பிடித்திருக்கிறதா?

நசிகேதஸ்:— பெரியவரே! நன்ருகப் பிடித்திருக்கிறது. ஆனுல் இங்கே நடக்கும் காரியங்கள் எல்லாம் விசித்திரமாக தோன்றுகின்றனவே.

ச்ரவணர் (1):— அப்பா! வத்ஸா! உனக்குப் பூலோகத்திலிருக்கும் உன் தாய் தந்தையர்களின் ஞாபகம் வருகிறதா?

நசிகேதஸ்:— ஆரம்பத்தில் கொஞ்ச நாட்களுக்கு அதே நினைவும், அதனுல் மனச் சஞ்சலமும் துக்கமும் உண்டாயிற்று. தர்மராஜர் உபதேசம் துவக்கியபின் அந்த எண்ண அலைகள் அடங்கிவிட்டன. ஆனுல்—

ச்ரவணர் (1):—ஆனுல் என்ன? நிறுத்திவிட்டாயே! இப்போது உன் மனத்தை வாட்டும் துன்பம் எதுவோ?

நசிகேதஸ்:— ஸ்வாமீ, அன்று ராஜஸபைக்கு வந்திருந்தேனல்லவா. அங்கே அந்தப் பாபிக்கு விதித்த தண்டனைகளைப்பற்றிக் கேட்டதுமுதல் மனம் வருந்துகிறது.

ச்ரவணர் (1):— கஷ்டங்களைப் பார்த்தாலும் கேட்டாலும் கருணைகொள்வது ஸஹஜந்தான். அன்றே உன் கண்களில் நீர் வழிந்ததை நானும் பார்த்தேன். எனக்கும் உன்னைப்போல் சில ஸமயங்களில் வருத்தம் ஏற்படுகிறது. என்ன செய்யமுடியும்? ஸந்தர்ப்பத்தையும், கடமையையும், சூழ்நிலையையும் கண்டு மனத்தை திடப்படுத்திக்கொள்கிறேன். கல்லாக்கிக் கொள்கிறேன்.

நசிகேதஸ்:— ஐயனே, அந்தப் பாபஜீவனை நரக யாதனைகளிலிருந்து எப்படியாவது விடுவிக்கவேண்டுமென்ற எண்ணம் உண்டாகிறது. தாங்கள்தான் அதற்கு ஓர் உபாயம் கூறவேண்டும்.

ச்ரவணர் (1):— குழந்தாய்! நீ பேசுவது என்ன வென்றும் கேட்பது எதுவென்றும் தெரியாமல் வாய்க்கு வந்தபடி பிதற்றுதே. இங்கே எல்லாம் இறைவன் ஆணைப்படி இயங்குகின்றன. இந்தச் சட்டதிட்டங்களை எங்களால் மாற்றமுடியாது. ஒருவராலும் திருத்தி அமைக்கவும் முடியாது. (அக்கம் பக்கம் பார்த்து) ஏன்? யமதர்மராஜரும்கூட இங்கே கட்டுப்பாட்டுக்கு அடங்கித் தான் நடக்கிறார்.

நசிகேதஸ்:— ஸ்வாமீ, நான் எல்லாம் அறிவேன். யமதர்மர் இதற்கு ஒருநாளும் ஸம்மதிக்கமாட்டார். ஆயினும் நான் ஸங்கல்பம் செய்துவிட்டேன், அந்தப் பாபியைக் காப்பாற்றுவதாக. ஆகையால் தாங்கள் கிருபை பண்ணவேணும். மனமிருந்தால் வழிபிறக்கும்.

ச்ரவணர் (1):—அது நடக்காத காரியமப்பா! அந்த எண்ணத்தை விட்டுவிடு. இங்கே இறை ஆட்சி நடக்கிறது. இயற்கைக்கு விரோதமாக அதன் சட்டதிட்டங்களை மீறியவன் அதற்குரிய தண்டனைகளை அடைந்தே தீருவான். பூவுலகில் நடப்பதுபோல் மனிதன் அரசாட்சி அல்ல இஷ்டம்போல் மாற்றிக்கொள்ள. இங்கு எல்லோருக்கும் ஒரேவிதமான சட்டம். வித்தியாசம் இல்லை.

நசிகேதஸ்:—ஐயனே! தாங்கள் இப்படிச் சாக்குப் போக்குச் சொல்லக்கூடாது. எப்படியாவது வழிசொல்ல வேணும். இல்லாவிடில் உங்கள் காலை விடமாட்டேன். (கீழே விழுந்து காலைப் பிடித்துக்கொள்ளுகிறான். ச்ரவணரும் அவனைத்தூக்கி அணைத்துக்கொள்ளுகிறார்.)

ச்ரவணர் (1) (யோசித்து):— வத்ஸா, எழுந்திரு ஒரே ஒரு வழி புலப்படுகிறது.

நசிகேதஸ்:—ஆகா! அப்படியா! சொல்லுங்கள் விரைவில்.

ச்ரவணர் (1):—நசிகேதா, இது ரகசியமாக இருக்க வேண்டும். என் பெயர் எக்காரணத்தை முன்னிட்டும் வெளியில் வரக்கூடாது.

நசிகேதஸ்:—ஸ்வாமீ! சீக்கிரம் அருளுங்கள். மிகவும் ரகசியமாகக் காப்பாற்றுவேன்.

ச்ரவணர் (1):—(அருகில் அழைத்துக் காதில் மெதுவாக கூறுகிருர்.) இன்று உபதேசம் முடிந்தவுடன் இப்படி நீ தர்மராஜரிடம கேட்கவேண்டும்.

நசிகேதஸ் (ஸந்தேகக் குறியுடன்):—ராஜா ஒப்புக் கொள்வாரா? ஒப்புக்கொண்டாலும் நம் காரியம் நடந்தேறுமா?

ச்ரவணர்:—(1):—வத்ஸா, உனக்குச் சந்தேகம் வேண்டாம். ராஜா சரியென்று சொல்லிவிடுவார். பின் நடப்பதைப் பாரேன. கட்டாயம் உனக்கு வெற்றி கிட்டும்.

நசிகேதஸ்:—(ஸந்தோஷத்துடன்) தாங்கள் செய்த உதவியை என்றும் மறக்கமாட்டேன். அநேக கோடி வந்தனங்கள் ஸ்வாமீ. (வணங்குகிருன்)

பாசஹஸ்தன்:—(தனக்குள்) இந்த ஆஷாடபூதி எதற்காக சிரவணர் பாதங்களில் அடிக்கடி விழுகிருன்? எல்லாம் ஒரே கபட நாடகம். என் கையில் மட்டும் இவன் தனிமையில் அகப்பட்டால்—என்ன செய்வேன் தெரியுமா? ஹூம். (பற்களை நறநறவென்று கடிக்கிருன்)

ச்ரவணர் (1):—அப்பா நசிகேதா! இன்று இந்த வஸந்த மண்டபத்தில் வைததுத்தான் உனக்கு உபதேசம் நடக்கப்போகிறது. போவோம் வா!

நசிகேதஸ்:—எனக்கும் சொல்லி அனுப்பினுர்கள். இங்கே வந்துகொண்டிருந்தேன். தேடப்போன மூலிகை காலில் தட்டியதுபோல்—வழியில் தங்கள் தரிசனம் கிடைத்தது என் பாக்கியமே பாக்கியம!

(இருவரும் வஸந்த மண்டபத்தில் நுழைந்து ஆஸனங்களில் அமருகின்றனர். பாசஹஸ்தன் முறைத்துப் பார்க்கிறுன்.)

பாசஹஸ்தன் :— (தனக்குள்) இந்த மானிடப் புழுவுக்கு வந்த வாழ்வைப் பார்! நாயைக் குளிப்பாட்டி சிவிகையில் ஏற்றியிருப்பதுபோல்—இந்தப் பதருக்கு வந்த பவிஷைப் பார்! (தூ) சீசீ கேவலமாக இருக்கிறது. ஒரு காலம் வரும். (அப்போது ரதத்தின் மணி ஓசை கேட்கிறது.) நல்ல சகுனம் மணி நாதம் கேட்கிறது. நம் கையில் இவன் கட்டாயம் சிக்குவான் அப்போது தீர்த்துக்கட்டிவிடவேண்டும். நம் எஜமானர் வருகிற ரதத்தின் மணி ஓசைதான் இது. ("ஜய விஜயீபவ" என்று கோஷமிடுகிறுன். அதற்குள், ஐந்து குதிரைகள் பூட்டிய ரதத்தில் தர்மராஜர் பவனி வருகிறுர். ஸாரதி கடிவாளங்களை லாகவமாகப் பிடித்து தேரை நிறுத்துகிறுன். வேகமுள்ள குதிரைகளானுலும், ஸாரதிக்கு அடங்கி நிற்கின்றன. சித்ரகுப்தர் ஓடிவந்து கைலாகு கொடுக்க, தர்மராஜர் இறங்குகிறுர். ஸாரதி ரதத்தை ஒருபுறமாக நிறுத்துகிறுன். தர்மராஜர் வஸந்த மண்டபத்தில் ப்ரவேசித்து ஸிம்மாஸனத்தில் அமர்கிறுர். அவர் உட்கார்ந்த பின், எல்லோரும் வணங்கிவிட்டு தம் தம் ஆஸனங்களில் அமர்கின்றனர். பாசஹஸ்தன் வெண்சாமரை வீசுகிறுன்.)

யமராஜர் :—குழந்தாய் நசிகேதா, இதுவரை கேட்ட விஷயங்களைப்பற்றிச் சிந்தனை செய்தாயா? ஏதாவது சந்தேகங்கள் உண்டா? சங்கோசமில்லாமல் கேள்.

நசிகேதஸ் :—பரம குருவே, வணக்கம். நன்ருக மனனம் செய்தேன். எல்லாம் தெரிந்தது போலவும் ஆனுல் அதே சமயத்தில் ஒன்றுமே தெரியாதது போலவும் தான் தோன்றுகிறது. இன்னும் கொஞ்சம் விளக்கமாக, உபமானங்களுடன் சொன்னுல் அடியேனுக்குப் புரிந்துகொள்ள சுலபமாக இருக்கும்.

யமராஜர் :— அப்படியே ஆகட்டும். வத்ஸா! உனக்கு விளங்கவைக்கத்தானே இன்று ரதத்தில் வந்திருக்கிறேன். உதாஹரணத்துடன் கூறுகிறேன். கவனமாய்க்கேள்.

நசிகேதஸ்:— ஸ்வாமீ, ரொம்ப ஜாக்கிரதையாக கவனித்துக் கேட்கிறேன்.

யமராஜர்:— இவ்வுலகில் (ஒவ்வொரு சரீரத்திலும்) தான் செய்த கர்மங்களின் பலனை அனுபவித்துக் கொண்டு இருவர் இருக்கின்றனர். அவர்கள் இருவரும் ஹிருதய ஆகாசத்தில் புத்தி குஹையில் புகுந்து உறைகின்றனர். பிரம்மஞானிகளும் பஞ்சாக்னி உபாஸகர்களான கிருஹஸ்தர்களும், நாசிகேதாக்னி சயனம் மும்முறை செய்த தீரர்களும், இவ்விருவரையும் வெய்யிலுக்கும் நிழலுக்கும் ஒப்பிட்டுக் கூறுகின்றனர்.

ச்ரவணர் (1):— மஹாராஜாவே! இருவர்களில் ஒருவனுன ஜீவன் மட்டுமே கர்மபலனை அனுபவிப்பவனுக இருக்க, மற்ற ஈசுவரன் அநுபவியாதவன் அல்லவா. அப்போது இருவரும் உண்பதாகச் சொல்லுவது சரியா?

யமராஜர்:—'சத்ரி (ஶத்ரி) நியாயத்தை' அனுசரித்துச் சொன்னேன் அவ்விதம்.

நசிகேதஸ்:—சத்ரி நியாயம் என்றல் என்ன?

ச்ரவணர் (2):—ஒரு கூட்டத்தில் சிலர் குடை பிடித்துக்கொண்டும், சிலர் குடை பிடித்துக்கொள்ளாமலும் போனுலும் அக்கூட்டத்தைக் குறிப்பிடும்போது குடை பிடித்துப்போகிறவர்கள் என்று சொல்வதுதான் சத்ரி நியாயம்.

யமராஜர்:—ஜீவாத்மா பலன்களை அநுபவிக்க, ஈசுவரன் (பரமாத்மா) சாட்சியாக நிற்கிருன். ஜீவாத்மாவும் பரமாத்மாவும் நிழலும் வெய்யிலும் போல் என்பது உவமை. உண்மையில் வெய்யில் வேறு நிழல் வேறு அல்ல. வெய்யில் ஒளிப்பொருள். அந்த ஒளிக்கு ஏற்படும் குறைக்கு நிழல் என்று பெயர். வெய்யிலுக்கு ஏற்பட்ட தடையே நிழலை உண்டாக்குகிறது. வெய்யிலுக்கு (பரமாத்மாவுக்கு) வடிவம் இல்லை. நிழலுக்கு

வடிவம் உண்டு (ஜீவாத்மாவுக்குச் சரீரம் இருப்பது போல்). தடை நீங்கியவுடன், வெய்யிலும் நிழலும் ஒன்ருய்விடும். அதுபோல் அஞ்ஞானம் விலகியவுடன் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்ருய்விடும். இதுவே ஜீவப்ரஹ்ம ஐக்கியத்தின் ரத்னச்சுருக்கம்.

நசிகேதஸ் :— ஐயனே! தங்கள் உபதேசத்தால் மிகவும் தன்யனுனேன். மேலும் விபரமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

யமராஜர் :— இந்த ஜீவாத்மாவை, ரதி (ரதத்தில் வீற்றிருக்கும் யஜமானன்) யாகவும், சரீரத்தைக் தேராகவும் புத்தியைத் தேரோட்டியாகவும், மனதைக் கடிவாளமாகவும் நீ அறிவாய் இந்திரியங்கள்தான் குதிரைகள்: சப்தம் முதலான விஷயங்களே அவைகள் செல்லும் பாதைகள் என்று கூறுவர்.

ச்ரவணர் (1) :— என்ன அற்புதமான உவமை. நசிகேதா! இதோ நிற்கும் ரதத்தைத் திரும்பிப்பார். (நசிகேதஸ் ஆச்சர்யத்துடன் ரதத்தைப் பார்க்கிருன் யமராஜர் மீண்டும் கூறுகிருர்.)

யமராஜர் :— உடல் தான் தேர்: அதில் இருக்கும் இந்திரியங்கள் (ஐம்புலன்கள்) இதில் கட்டியிருக்கும் ஐந்து குதிரைகளுக்குச் சமானமாகும். இந்திரியங்கள் இழுத்துச்செல்லும் விஷயங்கள் தான் ரதம் ஓடும் பாதை. புலன்களைச் செலுத்தும் மனமே கடிவாளம். புத்தி தான் தேரோட்டி.

நசிகேதஸ் :— ஸ்வாமீ, தாங்கள் கூறிய உபமானம் நன்கு பொருத்தமாக இருக்கிறது. இந்தப் புலன்களை வசப்படுத்தி நம் லட்சியம் காண நாம் செய்ய வேண்டியதைப்பற்றி மேலும் விளக்கவேண்டும்.

யமராஜர் :— சரீரம், மனம், இந்திரியம் இவற்றுடன் கூடிய ஜீவனையே போக்தா என்று விவேகிகள் கூறு கின்றனர். மனதையடக்காதவனுக்கும், புத்தியில் விவேகமில்லாதவனுக்கும் இந்திரியங்கள் வசப்பட

மாட்டா! துஷ்டக்குதிரைகள் விவேகம் இல்லாத சாரதிக்கு அடங்காததில் ஆச்சரியமில்லையே. அதனுல் மனிதன் விவேகமுள்ள புத்தியைச் சாரதியாக அமைத்தும், அடக்கப்பட்ட மனத்தைக் கடிவாளமாகப் பிடித்தும், ஸம்ஸாரமாகிய கடுவழியில் தேரை செலுத்திஞல்-வாழ்க்கையை நடத்திஞல்-தான் சேரவேண்டிய முடிவை-அதாவது எங்கும் நிறைந்த பரம்பொருளுடன் ஒன்றுபட்ட பரமபதம் என்னும் நிலையை அடைகிருன். நான் அரண்மனையிலிருந்து புறப்பட்டு இந்த வஸந்த மண்டபத்துக்கு வந்ததுபோல் சுலபமாகவும் சீக்கிரமாகவும் யாதொரு கஷ்டம் இல்லாமலும் வைஷ்ணவமான ஸ்தானத்தை அடைந்தே தீருவான். ஆகவே நீ புத்திசாலியான சாரதியைப்போல் கடிவாளத்தைக் கொண்டு குதிரைகளை அடக்கி நடத்தப் பயிலுதல் வேண்டும். இல்லாதவரை - குதிரைகள் வசப்படாவிட்டால், கடிவாளத்தையும் சாரதியையும் இழுத்துக் கொண்டு, தான்தோன்றியாக, எங்கெங்கோ போய்க் கீழே தள்ளிவிடும். அதலபாதாளத்தில் விழுந்து விடுவான் தேருடன்கூட. லட்சியத்தை அடைய முடியாமல்போனதுமட்டுமின்றி வீண் அனர்த்தங்களும் வந்துசேரும். ஆகையிஞல் குழந்தாய்! நீ தேரோட்டப் பழகிக்கொள். இதுவே என் முக்கிய உபதேசம்.

நசிகேதஸ் :— வைஷ்ணவபதம் என்ருல் என்ன?

யமராஜர் :— விவேகியான சாரதி மனே நிக்ரஹத்துடனும் சித்தசுத்தியுடனும், தேரை ஓட்டி (வாழ்க்கை நடத்தி) ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டி பரமாத்மாவை அடைவிக்கிருன். ஸமஸ்த ஸம்ஸாரபந்தங்களினின்றும் முக்தி அடைந்து, ஸர்வவியாபகமான-வைஷ்ணவமான-(ஸர்வம் வாஸுதேவாத்மகமல்லவா)-பரம உத்க்ருஷ்டமான பதத்தை ஆத்மா அடைகிருன். மூடனுகிய தேரோட்டி மனம் போனபடி நடந்து, அபவித்ரனுய், அக்ஞானியாய், பரமபதத்தை அடைவிக்காமல் ஜனன மரண ரூபமான ஸம்ஸாரத்தையே அடைவிக்கிருன்.

நசிகேதஸ் :— ஸ்தூலமான இந்திரியங்களுக்கும் ஸூக்ஷ்மமான தத்துவங்களுக்கும் உள்ள தாரதம்யத்தை அறிய விரும்புகிறேன். அருளவேண்டும் பரமகுருவே!

யமராஜர் :— குழந்தாய்! இந்திரியங்களைவிட மேலானவை அவைகளுக்குக் காரணமான ஸூக்ஷ்மமான விஷயங்கள். அந்த ஸூக்ஷ்மமான விஷயங்களைவிட மேலானது மனம், அதைவிட மேலானது புத்தி. புத்தியைவிட மேலானது அதன் ஸமஷ்டியான ஹிரண்யகர்பர் என்ற மஹத்தத்துவம். அதைவிட மேலானது மூலப்ரகிருதி (அவ்யக்தம்). மூலப்ரகிருதிக்கும் மேலானவன் பரமபுருஷன். எங்கும் நிறைந்திருக்கிறபடியால் இவன் புருஷன் எனப்படுகிறான். இவனைவிட மேலான ஸூக்ஷ்மமான ஆத்மபூதமான பொருள் வேறு ஒன்றுமில்லை. இம்மூன்றும் கீழே கூறப்பட்ட இந்திரியம் முதலியவைகளில் ஓரளவு இருந்தபோதிலும் அவைகளின் எல்லையை அடைந்தவன் புருஷன் ஒருவனே. இவனையடைவது தான் மேலான உயர்ந்த நிலை. எங்கு சென்றபின் திரும்பிவர வேண்டாமோ அந்த உயர்ந்த உறைவிடம் அதுவே தான்.

ச்ரவணர் (2) :— எங்கே சென்றவர்கள் திரும்ப வருவது இல்லையோ எதை ஞாயிறும், திங்களும், தீயும் விளக்கம் செய்யமாட்டாவோ, அதுதான் பரமபதம்.

நசிகேதஸ் :— பரமகுருவே, இந்திரியங்கள் உடலினும் மேலானவை. அவற்றிற்கும் மேலானது மனம். புத்தி அதற்கும் மேலானது. புத்திக்கும் உயர்ந்தது ஆத்மாவென்று நன்றாக அறிந்து கொண்டேன். ஆனால் மற்றோர் ஸந்தேஹம் உண்டாகிறது. உலகில் ஒருவன் புதிதாக ஒரு இடம் சென்றால் பின்னால் அங்கிருந்து திரும்பி வருவதைப் பார்க்கிறோம். இதேபோல வைஷ்ணவ பதத்தையும் இங்கிருந்து சென்று அடைவதாகக் கூறுவதால் பின்னால் திரும்பி

வரத்தானே வேண்டும். அப்படியிருக்கத் திரும்பி வரமாட்டான் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்?

யமராஜர் :— நன்ருகக் கேட்டாய் நசிகேதா? எல்லா உயிர்களிலும் உள்ளே மறைந்திருக்கிருர் இந்தப் பரம புருஷன். வெளிப்படத் தோன்றுவதில்லை. ஆனல் நுண்ணறிவு உடையவர்களால் ஒருமுகப்படுத்தப்பட்ட சூக்ஷ்ம புத்தியால் பார்க்கமுடியும். விவேகியானவன் மனத்தில் புலன்களையும் மனத்தைப் பிரகாசரூபமான புத்தியிலும், புத்தியை ஞானத்திலும் ஒடுக்கி, அதை எல்லாம் ஒழிவடையும் பரமாத்மாவிடம் (பரம புருஷனிடம்) ஒடுக்கவேண்டும். அப்பொழுது அக் ஞானம் விலகி தன்னையே பரமாத்ம ஸ்வரூபமாக அறிந்துகொள்கிருன். அதைத்தான் உபசாரமாக பரமாத்மாவை சென்று அடைதல் என்று சொன்னேம். அதுவேதவிரப் போவதும் வருவதும் ஒன்றும் கிடையாது அப்பனே! நான் சொன்ன வழியில் முயற்சி செய். ஆத்மாவை அறிவாய்.

நசிகேதஸ் :— ஸ்வாமீ, விளக்கம் கூறக் கூறக் கடினமாய்த் தோன்றுகிறது. ஆத்மஞானம் பெறுவது சுலபமாகத் தோன்றவில்லையே!

ச்ரவணர் (1) :— அப்பனே! நீ சொல்வது சரிதான். ரதம் ஓடுவது சக்கரம் உருளுவதால். ரதம் சக்கரத்தை உருட்டப் பார்ப்பதுபோலாகும் நம் அறிவினுல் ஆத்மாவை அறியப்பார்ப்பது. அது கரடுமுரடான பாதைதான் தம்பி!

யமராஜர் :—(அவித்யையில் மூழ்கியிருக்கும்) ஜனங்களே! எழுந்திருங்கள்; விழித்துக்கொள்ளுங்கள். சிறந்த ஆசாரியர்களை அடைந்து ஞானத்தைப் பெறுங்கள். அந்த மார்க்கம் கத்தியின் நுனிபோல் கூர்மையானது. நடப்பதற்கும் கடப்பதற்கும் கடினமானது என்று ஞானிகள் கூறுகின்றனர்.

ச்ரவணர் (2) :— வேதமாதா கருணையோடு எழுப்புகிறுள், வைகறையில் தன் குழந்தையை துயில் உணர்த்தும் அன்புத் தாயைப்போல் – இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம் ?'

ச்ரவணர் (1) :— மோஹ நித்திரையிலிருந்து எழுந்திருங்கள். உறங்காதீர்கள் ஞானசூரியன் உதயமாகிவிட்டான். எல்லோருக்கும் சுப்பிரபாதம் கூறுகிருன் சூரியன்.

சித்ரகுப்தர் :— '' ஆற்ற அனந்தல் உடையாய்! இன்னம் துயிலுதியோ! தகவு அன்று. உறங்காது எழுந்திராய்! செங்கற்பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் தம்மைத் தூயோமாய் வந்து தூமலர் தூவித் தொழுது, யாம் வந்த காரியம் ஆராய்ந்து அருள் என்று அடிபணிந்து கேளாய்!'

யமராஜர் :— வத்ஸா நசிகேதா! ஸம்ஸார மாயை என்ற தூக்கத்திலிருந்து விழிப்பது எளிதல்ல. அதற்கு விடுபடவேண்டும என்ற தீவிரமான விருப்பம் உள்ளத்தில் பொங்கி எழவேண்டும். கத்தி முனையின் மேல் நடப்பவன் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கிருனே அவ்வளவு கவனத்துடன் இருக்க வேணடும. கொஞ்சம் தப்பினுலும் படுகாயம்தானே. ஆகவே இடை விடாமல் ஸர்வ ஜாக்கிரதையுடன் புலன்களையும் மனததையும் அடக்கி, நல்லொழுககத்தைச்—சீலத்தைக்—காப்பாற்றி மனதையும் மாசில்லாமல் செய்து, வேற்றுமை உணர்ச்சியை அறவே நீக்க வேண்டும். மயிரிழை தவறினுலும் துர்கதியை அடைந்து விடுவான். ஆகையினுல் உயர்ந்த ஆசாரியனை அடைந்து ஞானம் பெறவேண்டும். உறக்கம் நீங்கி எழுந்ததும் முதல் வேலையாக அதைச் செய்யவேண்டும். பினனுல் என்றோ, நாளைக்கு என்றோ ஒத்திப்போடக் கூடாது. இன்றே முயலவேண்டும். இன்னே செய்ய வேண்டும், இப்போதே அறியவேண்டும்.

நசிகேதஸ் :— தங்கள் உபதேச மொழிகளைக் கேட்டு மிகவும் பரிசுத்தனுனேன். மழை காணுமல் வாடிய பயிர்கள் வர்ஷதாரைகளால் செழிப்புற்றதுபோல், என் புத்தியும் செழித்தது. தாங்கள் கூறிய உபதேசப்படியே நடந்துவருவேன் ஸ்வாமி!

யமராஜர் :— சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தங்களுக்கு அப்பாற்பட்டதும், மாறுபாடில்லாததும் என்றும் உள்ளதும், ஆதி அந்தமில்லாததும், மஹத்தத்துவத் திற்கும் மேலானதும், நிலை பிறழாததும் எதுவோ அதுவே ஆத்மா. அதை அறிந்து மரணத்தின் வாயினின்றும் விடுபடுகிருன் முமுக்ஷு.

ச்ரவணர் (2) :— உனக்கும் மஹாராஜாவுக்கும் ஏற்பட்ட இந்த ஸம்வாதத்தை சொல்பவரும் கேட் பவரும் பிரம்ம லோகத்தில் சிறப்புற்று விளங்குவர். மேலும் சிராத்த காலத்தில் போஜனத்திற்கு உட்கார்ந் திருக்கும் பிராஹ்மணர்களின் முன்னிலையில் இதைப் படிப்பதாலும் பொருளை உரைப்பதாலும் அந்த சிராத்தம் பலனுடையதாக ஆகும்.

நசிகேதஸ் :— ஸ்வாமி, இன்று உரைத்த உபதேசங் களைப்பற்றிச் சுருக்கமாக மீண்டும் அறிவுறுத்த வேண்டுகிறேன்.

யமராஜர் :— ஆத்ம தரிசனம் பெறுவது புலன்களால் அடையும் போகங்களைப் பொருட்படுத்தாத தீரனுக்குத் தான் முடியும். மாசற்ற உள்ளமும் வேண்டும். ஆசைகளை ஒழித்து, பற்றுக்களை களையவேண்டும். அரணிக்கட்டைக்குள் நெருப்பு மறைந்திருப்பதுபோல் ஆத்மா உடலுக்குள் மறைந்து உறைகிறது. ஒளியும் எரிக்கும் சக்தியும் கொண்ட அக்கினி மரக்கட்டைக்குள் எவ்வாறு ஒளிந்திருக்கிறதோ, அவ்வாறே பிரகாசம் பொருந்தியதும், அழிவில்லாததுமான ஆத்மா உடலுக்குள் அடங்கி மறைந்து நிற்கிறது. உடலைத் தேராகவும், புலன்களைத் தேர் இழுக்கும் குதிரைகளாக

வும் மனத்தைக் கடிவாளமாகவும், புத்தியைத் தேரோட்டியாகவும், விஷயாநுபவங்களைத் தேர் செல்ல வேண்டிய பாதையாகவும் உருவகப்படுத்திச் சொன்னேன். ரதத்தில் இருக்கும் எஜமானனே ஆத்மா அந்த யாத்திரை சரியாக முடியவேண்டுமானால் சாரதி குதிரைகளை நன்றாக இழுத்து ரதத்தை ஜாக்கிரதையாக ஓட்டவேண்டும். இல்லாதவரை குதிரைகள் கண்டவாறு ஓடிப் பிறப்பும் இறப்புமாகச் சுற்றிச் சுற்றிப் போய்க் கொண்டிருக்கும்படி நேரும். ஆகையினால் மேலும் தூங்காமல் விழித்தெழுந்து, நல்லாசிரியனைப் பெற்று ஆத்மஞானம் அடையவேண்டும். நம் லட்சியம் நிறைவேறும் வரை நிற்கக்கூடாது. மேலும் மேலும் முயல வேண்டும். அந்த ஞானமார்க்கம் சிறந்ததானாலும் சுலபமல்ல. கத்தி முனையில் நடப்பதுபோன்றது. ஆத்மாவிற்கு சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம் கந்தம் ஒன்றும் இல்லை. அதற்கு ஆரம்பமும் முடிவும் இல்லை. இப்படி ஆத்ம தத்துவத்தை அறிந்து ம்ருத்யுபாசத்தினின்றும் விடுபடவேண்டும்.

நசிகேதஸ் :— குருவே! ஒரு விண்ணப்பம்.

யமராஜர் — குழந்தாய், என்ன வேண்டும் சொல்?

நசிகேதஸ் :— ஸ்வாமீ! எனக்கு இந்த நகரத்தைச் சுற்றிப்பார்க்க மிகவும் ஆவலாயிருக்கிறது. மாடமாளிகை கூடகோபுரங்களையும், நந்தவனங்களையும் காண என் மனம் விழைகின்றது. அனுமதி தர வேண்டும்.

ச்ரவணர் (1) :— (தனக்குள்) நசிகேதன் சிறுவனாக இருந்தாலும் நல்ல ஸம்பிரதாயத்துடன் புதிய உல்லேகத்துடன் கேட்கிறான்.

யமராஜர் :— யார் அங்கே? ஏ பாசஹஸ்தா, நாளைக் காலையில் இவரைக்கூட்டிப்போய் நம் ஊர் காட்சிகளை எல்லாம் காட்டிவா!

பாசஹஸ்தன் :— மகாராஜாவே உத்தரவுப்படி நரகத்திற்கும் கூட்டிப்போகவேண்டுமா?

யமராஜர் :— வேண்டாம். பாசஹஸ்தா! நரகம் நீங்கலாக நம் நகரத்தை எல்லாம் சுற்றிக்காட்டி வா?

நசிகேதஸ் :— குருவே! எனக்கு நரகத்தைப் பார்ப்பதில் குதூகலம் மிகுந்துள்ளது. அனுமதிக்க வேண்டுகிறேன்.

யமராஜர் :— நீ எதற்காக நரகத்தைப் பார்க்க விரும்புகிருய்? உன்னைப்போன்றவர்கள் செல்லக்கூடிய இடம் அல்லவே அது. கனவிலும் கூட உனக்கு அந்தக் காட்சிகள் காணவேண்டாமே! வேண்டாம் நசிகேதா.

நசிகேதஸ் :— ஸ்வாமி எனக்கு நரகத்தையும் கட்டாயமாகக் காணவேண்டும். அருள்புரியும்.

யமராஜர் :— உன் விருப்பத்தைக் கெடுக்க வேண்டாம். ஹே பாசஹஸ்தா! இவரை அழைத்துப் போய் எல்லா நரகங்களையும் காண்பித்துவிட்டுப் பத்திரமாய் அரண்மனைக்குக் கூட்டிவா. ஜாக்கிரதை.

பாசஹஸ்தன்:— மஹாராஜாவே! அப்படியே தங்கள் உத்தரவுப்படி செய்கிறேன். (தனக்குள்) நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது இவனை ஒழித்துக்கட்ட.

(எல்லோரும் சேர்ந்து பாடுகிருர்கள்)

आत्मानं रथिनं विद्धि शरीरं रथमेव तु ।
बुद्धिं तु सारथिं विद्धि मनः प्रग्रहमेव च ॥

इन्द्रियाणि हयानाहुर्विषयांस्तेषु गोचरान् ।
आत्मेन्द्रियमनोयुक्तं भोक्तेत्याहुर्मनीषिणः ॥

उत्तिष्ठत जाग्रत प्राप्य वरान्निबोधत ।
क्षुरस्य धारा निशिता दुरत्यया दुर्गं पथस्तत्कवयो वदन्ति ॥

ஆத்மாநம் ரதினம் வித்தி சரீரம் ரதமேவ து ।
புத்திம் து ஸாரதிம் வித்தி மன: ப்ரக்ரஹமேவ ச ॥

இந்த்ரியாணி ஹயாஞஹுர் விஷயாம்ஸ்தேஷு
கோசரான் ।
ஆத்மேந்த்ரிய மனோயுக்தம் போக்தேத்யாஹுர்
மநீஷிண: ॥

உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்ய வராந் நிபோதத ।
க்ஷுரஸ்ய தாரா நிசிதா துரத்யயா துர்க்கம்
பதஸ் தத் கவயோ வதந்தி ॥

(திரை விழுகிறது.)

மூன்றாவது அங்கம் முற்றும்

நான்காவது அங்கம்

காட்சி 1

(திரை தூக்கப்படுகிறது)

[யமலோகத்தில் நரகத்துக்குச் செல்லும் வழி. பாசஹஸ்தனும் நசிகேதஸும் உரையாடிக்கொண்டு வருகிறார்கள்.]

பாசஹஸ்தன் :— பிராஹ்மண குமாரா! உமக்கு அநேகமாக எல்லா இடங்களையும் சுற்றிக் காண்பித்து விட்டேன்.

நசிகேதஸ் :— மிக்க வந்தனம் ஐயா! கலைக் கூடங்கள், அரண்மனைகள் உப்பரிகைகள், ஆயுத சாலைகள், இடை வீதிகள், தோப்புத்துரவுகள், பூஞ் சோலைகள், வாஹனசாலைகள் எல்லாம் பார்த்து விட்டேன். நரகம் நெருங்கிவிட்டதா?

பாசஹஸ்தன் :— இப்போது நேராக அங்கேதான் போய்க்கொண்டிருக்கிறோம்.

நசிகேதஸ் :— ராஜ தூதரே! இன்னும் போகும் வழியிலுள்ள அதிசயங்களைப்பற்றியும் விவரமாகச் சொல்லவேண்டுகிறேன்.

பாசஹஸ்தன் :— அப்படியே ஆகட்டும். இப்போது நாம் தாண்டி வந்தது சித்திரகுப்தரது மாளிகை. அதற்குத் தென் பக்கத்திலுள்ள கிருஹத்தில் வைசூரியும் சூலை நோய்களும் வசிக்கின்றன. வடக்கில் தெரிவது வயிற்றுவலியின் மாளிகை. அதோ கிழக்கே சற்றுத் தூரத்தில் தெரியும் வீட்டில்தான் அதிஸாரமும் ஜுரமும் குடிகொண்டிருக்கின்றன. மேற்குப்பக்கத்திலுள்ள மனையில் சன்னியும் மயக்க நோயும் வசிக்கின்றன.

நசிகேதஸ் :— இவைகள் செய்யும் பணிகள் என்னவோ? நான் அறியலாமா?

பாசஹஸ்தன் :— இந்த நோய்கள் தர்மராஜாவின் ஆக்ஞையின் பேரில் ஜீவர்களைத் தாக்கி மரணமடையச் செய்கின்றன. ஒரு ஜீவனுக்கு ஆயுள் முடியும் சமயம் இங்கே கொண்டுவருவதற்கு நிமித்தங்களாகப் பயன் படுகின்றன இம்மாதிரியான பல ரோகங்கள். ஏனென்றால் நமன் பழியேற்க மாட்டான் அல்லவா? இதோ வந்துவிட்டோம் நரக துவாரத்துக்கு.

காட்சி மாற்றம் (Turning Scene Shadow Play

[நிழல் திரைக் காட்சியில் நரகம் காணப்படுகிறது. திரைக்குப் பின்னால் நரகபூமியைச் சுற்றிப் பிரம்மாண்டமான கோட்டை சுவர்கள். அணிவகுத்த யமபடர்கள் காவல் காத்து நிற்கின் றனர். நரக பூமியில் ஒரே துர்க்கந்தம். கிங்கரர்கள் ஜீவர்களைப் பலவிதமாக ஹிம்சிக்கும் கூக்குரல் கேட்கிறது. தள்ளு, குத்து, அடி, பிடி, இழு, கிள்ளு, பறி, உதை, கொல்லு, நறுக்கு, பிழி, நசுக்கு, மோது, பிள, செருகு போன்ற கிங்கரரின் இடியோசை போன்ற குரல்கள் கேட்கின்றன. 'ஐயோ, அவதியே, கஷ்டமே, அநியாயமே பொறுக்க முடிய வில்லையே, தாங்கமுடியவில்லையே' என்று ஜீவர்கள் பதை பதைத்துத் துடிதுடித்து அழும் பேரோசையும் கேட்கிறது. நரகத்துவாரத்தில் சோணிதாக்ஷன் நிற்கிறான்.]

நசிகேதஸ் :— பாசஹஸ்தரே ! உள்ளேபோவோமே. அன்று சபையில் அழுது அரற்றிய ஜீவன் எங்கிருக்கிருன்? அவனை நான் உடனே பார்க்கவேண்டும்.

பாசஹஸ்தன் :— உன் இஷ்டப்படி உள்ளே போய்ப் பார்க்கலாம். அதற்குத்தானே நான் இவ்வளவுதூரம் சிரமம் எடுத்துக்கொண்டேன். அதிருக்கட்டும் இவைகளைப் பார்ப்பதில் உனக்குப் பயம் தோன்றவில்லையா ?

நசிகேதஸ் :— கடுகளவுகூட எனக்கு பீதி இல்லை. ஆனல் ஜீவர்கள் விஷயத்தில் கருணை உண்டாகிறது. அவர்களைக் காப்பாற்றவேண்டும் என்ற அவா உதிக்கிறது. சரி போவோம். தாமதம் வேண்டாம்.

(பாசஹஸ்தன் சைகைகாட்டச் சோணிதாக்ஷன் அருகில் வருகிருன்)

பாசஹஸ்தன் :— (சோணிதாக்ஷனிடம் தனிமையாக) இவனுக்கு நரகயாதனைகளைப் பார்க்கவேண்டுமாம். கும்பீபாகத்தில் அடைத்துவிடு. கதவுகளைத் திற.

சோணிதாக்ஷன் :— எதற்கு இந்த வீண் வம்பு? இவரோ நமது அரண்மனை விருந்தாளி. பின் விளைவுகளுக்கு யார் பொறுப்பு ?

பாசஹஸ்தன் :— நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் நசிகேதன் விருப்பப்படிதானே செய்கிரேம். தவிர எல்லாவற்றையும் காட்டும்படி மஹாராஜாவின் உத்தரவும் இருக்கிறது.

சோணிதாக்ஷன் :— அப்படியே செய்கிறேன். (நசிகேதனைப் பார்த்து) வாருங்கள் உள்ளே போகலாம். (உள்ளேபோகிருர்கள்.)

சோணிதாக்ஷன் :— நசிகேதரே, இதுதான் வந்ஹி குண்டம். இதோ தெரிவது சிலேஷ்ம குண்டம். இது தான் தாமாந்த நரகம், நித்யகர்மாநுஷ்டானம் செய்

யாதவர்களை இங்கே 100 வருஷங்கள் இருக்கச்செய்து புகையை குடிக்கச் செய்கிருர்கள். தலைகீழாக ஜீவர்கள் தொங்கி அவஸ்தைப் படுவதைப் பாரும்.

பாசஹஸ்தன் :— இதோ வந்துவிட்டது கும்பீபாகம் என்னும் கொடிய நரகம். விபசாரிகளை அடைத்து வைப்பது இங்கேதான். 86 நரகங்களையும்விட இங்கே ஹிம்சை அதிகமாக இருக்கும். இங்கேதான் நீ தேடிய ஜீவன் இருக்கிருன். போய்ப் பார்.

நசிகேதஸ் :— ஆஹா அப்படியா ? இவையெல்லாம் மிகவும் அதிசயமாக இருக்கின்றனவே ஆனல் பயங்கர மாகவும் தோன்றுகின்றன. என் மனதில் பீதியைவிட தயைதான் அதிகமாகத் தோன்றுகிறது. (கீழே குனிந்து பார்த்து) அவனைக் காணவில்லையே !

பாசஹஸ்தன் :— லக்ஷம் புருஷப் பிரமாண ஆழம் உள்ளது இந்த கும்பீபாகம். ஆகையினல் வெளியில் விளிம்பிலிருந்து பார்த்தால் தெரியாது. உள்ளேபோய்த் தேடிப்பார். (என்று சொல்லி நசிகேதஸ்ஸைப் பிடரியில் பிடித்துக் கும்பிபாக நரகத்துக்குள் தள்ளுகிருன்.)

சோணிதாக்ஷன் :— அடாடா ! என்ன காரியம் செய்தாய். மிகுந்த அக்கிரமம். ஒரு புண்ணிய புருஷனை நரகத்தில் தள்ளினல் என்ன விளையுமோ ? யார் கண்டது ? நம் மஹாராஜாவின் கோபத்துக்குப் பாத்திரமாகிவிட்டாய்.

பாசஹஸ்தன் :— சும்மா இரு ! நசிகேதஸ் விரும்பிய படிதானே செய்தேன். "அவனுக்கு உதவினேன் அந்த ஜீவனைப் பார்க்க" என்று கூறித் தப்பித்துக் கொள்வேன். (கீழே குனிந்து பார்த்து) அவனைக் காண வில்லையே. ஹா ? ஹா ! நரகத்தைப் பார்க்கவேண்டும் ! பார்க்கவேண்டும், என்று உரைத்த நாவை இதற்குள் தேள்களும் பூரான்களுமாகப் பறித்திருக்கும். இப்படிப் பேசிய நானுக்குச் சரியான தண்டனைதான்.

(என்று கைகொட்டிச் சிரித்து ஆர்ப்பரிக்கிருன்.)

(நசிகேதஸ் உள்ளே விழுந்தவுடன் ஒரு அற்புதம் நிகழ்கிறது. யமகிங்கரர் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே எல்லாரும் அதிசயிக்கும்படி, நரகில் நின்ருர்கள் காண, நரகமே சொர்க்கமாகிறது. அந்தப் பிரம்மஞானியின் தரிசனத்தாலேயே, பாபிகள் எல்லோரும் பரிசுத்தம் அடைகிருர்கள். அவன் பாதம் பட்டதாலேயே நரகபூமியும் புண்ணியலோகம் ஆகிறது. யமதூதர்கள், கிங்கரர்கள் (பாசஹஸ்தன் உள்பட) எல்லோரும் ஓடி ஒளிகிருர்கள்.)

காட்சி மாற்றம். Turning Scene.

(தேவதுந்துபி முழங்குகிறது. பாரிஜாதமலரின் வாசனை எங்கும் வீசுகிறது. நல்ல இனிமையான ஸ்வரசுத்தமான இன்னிசை ஒலிக்கிறது. கந்தருவர்கள் யாழ் இசைக்க அரம்பையர் நடனமாடுகின்றனர். ஐராவதத்தில் ஏறி தேவேந்திரன் முப்பத்து முக்கோடி தேவர்கள், ரிஷிகள் சூழப் பவனிவருகிருன். புஷ்பமாரி பொழிகிறது. தேவமகளிர் மங்களத்திரவியங்களை ஏந்தித் தீபங்களுடன் ஜீவர்களைச் சொர்க்கத்துக்கு அழைத்துப்போகிருர்கள். தருமத்துவஜனும் கூட இருந்து எல்லோரையும் அனுப்புகிருன்.)

தேவர்கள் :—புண்யசாலிகளே! வாருங்கள். உங்கள் உலகத்துக்கு உவந்து எழுந்தருளுங்கள். நெடுவரைத் தோரணம் எங்கும் நட்டுத் தங்கள் வரவை. மகிழ்ச்சியுடன் எதிர் நோக்குகிருேம்.

வசுக்கள் :—வாருங்கள், வாருங்கள் உங்கள் வரவால் நாங்கள் மிகவும் சந்தோஷமடைந்தோம். முகமன் கூறி, பாரிஜாதம், கல்யாண சௌகந்திகம் முதலிய மலர்களை தூவுகின்றனர்.)

ருத்திரர்கள் :— இப்படி எழுந்தருளுங்கள், இதுதான் வழி.

ஆதித்யர்கள் :— வரவேண்டும், வரவேண்டும் நல்வரவு ஆகுக. (ஆரவாரம் செய்கின்றனர்.)

முனிவர்கள் முன்னே செல்கின்றனர். கின்னரர் கீதங்கள் பாடுகின்றனர். சிலர் சங்கை எடுத்து ஊதுகின்றனர்.

அரம்பையர் :— வானகம் ஆள்வோர் வந்தனர். (வாழ்த்துகிறார்கள்.)

(மருத்துக்களும் வசுக்களும் ஸ்தோத்திரம் சொல்லினர். பல்லாண்டு பாடினர். முடியுடைவானவர் எதிர்கொண்டு அழைக்க, தேவேந்திரன் வந்து பாதங்களைக் கழுவுகிறான் பூர்ணகும்பத்துடன் ஸப்தரிஷிகள் நின்று ஸ்வாகதம் கூற, சசிதேவி, ஊர்வசி முதலிய அரம்பையர்கள் ஹாரத்தி சுற்றுகின்றனர். நசிகேதனைப் புகழ்ந்தவண்ணம் எல்லா ஜீவர்களும சொர்க்கம அடைகின்றனர்.)

காட்சி மாற்றம். Turning Scene.

(நசிகேதஸ் மட்டும் நிற்கிறான்.)

நசிகேதஸ் :— என்ன ஆச்சரியம். எனக்கு ஒன்றும் சரியாக விளங்கவில்லையே. கண்டதெல்லாம் கனவா? அல்லது நினைவா?

(சிரவணர்கள் வருகிறார்கள்.)

ச்ரவணர் (1) :—அப்பா நசிகேதா, உன் மகிமையே மகிமை. உன்னுடைய புண்ணிய விசேஷத்தால் எல்லா ஜீவர்களும் சொர்க்கம் சென்றார்கள்.

தர்மத்துவஜன் :— ஸ்வாமீ ! மஹாராஜாவும் இப்போது இங்கே எழுந்தருளப்போகிறார்கள்.

ச்ரவணர் (2) :— குழந்தாய் நசிகேதா! இன்னும் கொஞ்சநாட்களுக்கு எங்கள் கிங்கரர்களுக்கு வேலையே இராது.

ச்ரவணர் (1) :—சகோதரரே ! இங்கும் பூலோகத்தை போல வேலையில்லாத் திண்டாட்டம் வந்துவிடுமல்லவா?

நசிகேதஸ் :— (முதல் சிரவணர் பாதங்களில் விழுந்து) ஸ்வாமீ ! எல்லாம் உங்கள் ஆசியினால் தான் நடந்தது. தாங்கள் கூறியது மிகவும் சிறந்த உபாயம். அதில் வெற்றியும் கிடைத்தது. உங்களுக்கு மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன். வணக்கம்.

(அப்போது பாசஹஸ்தன், மிகுந்த அவமானத்துடன், முகம் வெளுத்து, அங்கம் குன்றி, வெட்கத்துடன் வந்து நசிகேதன் காலில் விழுகிறுன்.)

பாசஹஸ்தன் :— ஸ்வாமீ! என் பிழைகளைப் பொறுத்தருளவேண்டும். நான் செய்த அபராதம் மிகக் கொடியது. பஞ்சமாபாதகத்தினும் கொடியது. பிராஹ்மணோத்தமரே! அறிவும், வாய்மையும், தூய்மையும் அன்பும், இன் அருளும், பொறையும், ஞானமும், கல்வியும், பெருந்தவமும், நெறியும், மானமும், தீரமும் உடைய செம்மலே, நின் தாள் வணங்குகிறேன். அபயம் அருளும். அண்ணலே! அடியேனை மன்னித்துக் காப்பாற்றவேண்டும்.

நசிகேதஸ் :— பாசஹஸ்தரே, எழுந்திரும். எல்லாம் பகவத் சங்கல்பப்படி நடந்தன. நாம் எல்லாம் கருவிகள் தானே. இந்த நாடகத்தில் உம் பங்கை நீர் சரிவர நடத்தினீர். அவ்வளவுதான் வருந்தவேண்டாம்.

ச்ரவணர் (1) :— பாசஹஸ்தா! ஆதியிலேயே உன் அவசரபுத்தியை விடச்சொன்னோம். நீ கேட்கவில்லை. அதுவும் ஒரு காரியத்துக்கு நல்லதாய்ப் போயிற்று. நீ இல்லாவிடில் நம் நசிகேதஸ் நரகத்துக்கு வந்திருப்பாரா? எல்லாப் பாபிகளுக்கும் சொர்க்கப்பிராப்தி கிட்டி இருக்குமா?

ச்ரவணர் (2) :— அல்லது நசிகேதன் மகிமையையும் பெருமையையும் நாம் அறிந்திருக்கமுடியுமா? நடப்பது எல்லாம் நன்மைக்கே-அதில் ஐயமில்லை.

நசிகேதஸ் :— இந்தப் பிரபஞ்சமாகிற சொக்கட்டானில் உருட்டப்படும் காய்கள் தாமே நாம் எல்லாரும்.

(யமதர்மர் பரிவாரங்களுடன் வருகிறுர். நசிகேதன் அபிவாதனம் செய்ய மிகுந்த சந்தோஷத்துடன் வாரி அணைத்துக்கொள்ளுகிறுர்.)

யமதர்மர் :— அப்பா ! வத்ஸா ! உன் பெருமைகள் உரைக்கமுடியாதவை. ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும் சொல்ல முடியாதவை. எங்கள் சிற்றறிவுக்கு எட்டாதவை. நீ பிரம்மஞானி. பாகவதோத்தமன். பக்தசிகாமணி. எல்லாம் மங்களமாக முடிந்துவிட்டது. உன்பேரில் எனக்கு அளவிட முடியாத அன்பும் சந்தோஷமும் உண்டாகிறது.

நசிகேதஸ் :— (மிகுந்த லஜ்ஜையுடன்) குருநாதரே ! எல்லாம் உங்கள் ஆசீர்வாத மகிமைதான்.

(தர்மராஜர் ஜாடை காட்ட ச்ரவணர்கள் நசிகேதனை அழைத்துக்கொண்டு போகிறார்கள். யமதர்மர் தம் படர்களையும், தூதர்களையும், கிங்கரர்களையும் அருகில் அழைத்து அவர்கள் காதில் இரகசியமாகக் கூறுகிறார்.)

யமதர்மர் :— என் அருமைத் தூதுவர்களே ! காரியத்திலேயே கண்ணாயிருக்கும் கிங்கரர்காள் ! ஒரு முக்யமான விஷயம் கேளுங்கள்.

படர்கள் எல்லோரும் :— உத்தரவு மஹாராஜா ! கவனமாகக் கேட்கிறோம்.

யமதர்மர் :—நம் தொழிலுக்கு இன்று வந்த ஆபத்தை கவனித்தீர்களா ? நீங்கள் இனிமேல் வெகு ஜாக்கிரதையுடன் நடக்கவேண்டும். பகவத்பக்தர்கள், பிரஹ்ம ஞானிகள் இருக்கும் திசைக்கே நீங்கள் போகக்கூடாது.

யமபடர்கள் :— அப்படியே ஸ்வாமி, ஆனால் அதற்கு என்ன காரணம் ?

யமன் :—நான் அவர்களுக்கு ஒரு நாளும் பிரபுவல்ல. என் ஆக்கினையும் அதிகாரமும் அவர்களிடத்தில் செல்லாது. இன்று பிரத்தியக்ஷமாகப் படித்த பாடத்தை என்றும் ஞாபகத்தில் வைத்திருங்கள். மறந்து விடாதீர்கள்.

யமபடர்கள் :— மறக்கமாட்டோம். மஹாராஜாவே ஒருநாளும் மறக்கமாட்டோம்.

யமதர்மர் :— படர்களே, மிகவும் சந்தோஷம் என் பயம் நீங்கியது. நீங்கள் பிசகுசெய்தால் உங்களுக்கு மட்டுமன்றி எனக்கும் ஆபத்துத் தான். ஏன்! நம் லோகத்துக்கே அழிவு வரும்; நிச்சயம். பிரம்மஞானிகளையும், பகவத் பக்தர்களையும் கண்டால் வெகு தூரத்தில் விலகிப்போய் விடுங்கள். என் உபதேசப்படி சர்வஜாக்கிரதையுடன் உங்கள் தொழிலை நடத்தி வாருங்கள். (யமதர்மர் போகிறார்.)

(படர்கள் பாடுகின்றனர்)

நசிகேதா! ஓம் நசிகேதா!
நரகத்தை வென்றாய் நசிகேதா!
நால்வேத வித்தகா! நசிகேதா
நாங்கள் பணிந்தோம்! நசிகேதா
அஹிம்சா மூர்த்தியே! நசிகேதா
அன்பின் சிகரமே! நசிகேதா
அறத்தை வளர்த்தாய்! நசிகேதா
மறத்தைத் தொலைத்தாய்! நசிகேதா
பிரஹ்ம ஞானியே! நசிகேதா
பாகவ தோத்தமா! நசிகேதா

(எல்லாரும் போகிறார்கள்)

(திரை விழுகிறது.)

காட்சி 2

[யமதர்மரின் அரண்மனையில் ஒரு விசாலமான மண்டபம். அங்கு சிறந்த ஆசனத்தில் தர்மராஜர் வீற்றிருக்கிறார். ஒரு பக்கத்தில் சிரவணர்களும் மற்றொருபுறத்தில் நசிகேதஸும் ஆஸனங்களில் உட்கார்ந்திருக்கின்றனர். ஸம்பாஷணை தொடர்ந்து நடைபெறுகிறது.]

யமதர்மர் : வத்ஸா! நசிகேதா! இதுவரை கூறியவைகளை நன்ருகச் சிந்தித்து அனுபூதிக்குக் கொண்டு வந்திருப்பாயென்று நினைக்கிறேன்.

நசிகேதஸ் :—குருநாதரே! தாங்கள் கூறிய உபதேச மொழிகளைக் கவனமாகக் கேட்டுவருகிறேன். மனனம் செய்துகொண்டும் இருக்கிறேன். மிக உத்கிருஷ்டமான உபதேசங்களை மேலும் அருளும்படி பிரார்த்திக்கிறேன்.

யமதர்மர் :— என் பிரிய சிஷ்யனே! உனக்கு ஏதாவது ஸந்தேஹம் தோன்றினுல் கேட்கலாம்.

நசிகேதஸ் :— ஸ்வாமீ! ஸர்வவியாபியாக எல்லாப் பூதங்களிலும் மறைந்திருக்கும் ஆத்மாவை ஏகாக்ர புத்தியுடன்தான் பார்க்கமுடியும் என்று அருளிச் செய்தீர்கள். ஆனுல் ஏகாக்ர புத்தியை அடைவது துர்லபமாக இருக்கிறதே. ஏகாக்ர சித்தம் கிட்டுவது எப்படி? அதற்குத் தடையாக இருப்பது எது?

ச்ரவணர் (1) :— நல்ல கேள்வி! பிரதிபந்தம் தெரிந்தால் தானே அதன் நிவர்த்திக்கு வழிகோல இயலும்.

யமதர்மர் :— குழந்தாய்! மிகவும் ஸந்தோஷம். விளக்குகிறேன். கவனமாகக்கேள். பரமேசுவரன் இந்திரியங்களை வெளிநோக்கு உடையவகைச் சிருஷ்டித்துள்ளார். ஆகையினுல் மனிதன் வெளித்தோற்றங்களையே பார்க்கிருன். பஹிர்முகமாகப்போகும் இந்திரியங்கள் வெளியிலுள்ள இன்பநுகர்ச்சிகளை விரும்பி, அந்த அனுத்மபூத விஷயங்களைத் தொடர்ந்து செல்லுகின்றன. எவனே ஒரு தீரன் (ஆயிரத்தில் ஒருவன்) சாகா நிலையை விரும்பி இந்திரியங்களை வெளியே போகவிடாமல் தடுக்கிருன். அதன்மூலம் பரிசுத்தமான மனதால் அந்தத் தீரன், பிரத்யகாத்மாவைப் பார்க்கிருன்.

ச்ரவணர் (2) :— அந்தப் புத்திமான், நதிப்பிரவாஹத்திற்கு எதிர்நோக்கி நீந்துவதுபோல், பலாத்காரமாக

இந்திரியங்களை வெளிப்பார்வையிலிருந்து திரும்பச் செய்கிறான் சுபாவத்திற்கு எதிராக வெற்றி காண்கிறான்,

நசிகேதஸ் :— ப்ரத்யகாத்மா என்றால் என்ன ?

யமதர்மர் :— எல்லாவற்றிற்கும் உள்ளே ஸ்வஸ்வரூபமாக இருந்து எல்லா விஷயங்களையும் பிரகாசப்படுத்தும் ஆத்மாவிற்குத்தான் ப்ரத்யகாத்மா என்று பெயர். இந்த தன் ஸ்வரூபத்தை தீரன், இந்திரியங்களைத் தடுத்து ஏகாக்ரசித்தத்தால் பார்க்கிறான். தான் விரும்பியபடியே சாகா நிலையை அடைகிறான். அதாவது அமிருதத்வம் அடைகிறான். ஆனால் அறிவில்லாதவர்கள் — அல்பபுத்தியுள்ளவர்கள் — என்ன செய்கிறார்கள் தெரியுமா ? அவர்கள் வெளியில் இன்பம் காண விழைந்து ஓடிச்சென்று விரிந்து கிடக்கும் மரண வலையில் விழுகின்றனர்.

ச்ரவணர் (1) :— ஆசைகளால் இழுக்கப்பட்டுச் சென்று காலதேவனால் பரப்பிவைக்கப்பட்ட மிருத்யுவாகிற வலையில் விழுந்து அந்தப் பாசத்தில் கட்டுப்பட்டு அல்லற்படுகின்றனர்.

யமதர்மர் :— ஆனால் ஏகாக்ரசித்தமுள்ள தீரர்களோ, அழிவற்ற உண்மைப்பொருளை அறிந்து விட்டதால், இந்த வலையைப் பார்த்து மயங்குவதில்லை. நிலையற்ற இவ்வுலகில் - இந்த வாழ்க்கையில் - நிலையானதென்று எதையும் கருதுவதும் இல்லை. நிலையுள்ளதாக எதையும் நாடுவதும் இல்லை.

ச்ரவணர் (2) :— ஆம் அவர்களுக்கு ஒரு கர்மத்தைச் செய்ததால் பயனும் இல்லைதான். செய்யாததாலும் பயன் இல்லை. அவர்களுக்கு எல்லாப் பொருள்களிலும் பலனைக் கருதி நாடத் தகுந்ததாகவும் ஒன்றும் கிடையாது. ஏனெனில் அவர்கள் ப்ரத்யகாத்மாவை அனுபூதியில் கண்டு அடங்கியவர்களாயிற்றே !

ச்ரவணர் (1) :— அந்தப் புத்திசாலிகள் அநித்தியமான பதார்த்தங்களில் இச்சையை விட்டொழித்து,

புத்ரன், வித்தம் முதலிய தூண்டில்களிலிருந்து தூர இருக்கின்றனர்.

நசிகேதஸ் :—குருநாதரே! ஏகாக்ரசித்தம் அடையும் மார்க்கத்தை அறிந்துகொண்டேன். மேலும் சொல்லுங்கள்.

யமதர்மர் :— சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தவடிவமான இந்திரிய நுகர்ச்சிகளை எந்த அறிவால் மனிதன் அநுபவிக்கிருனே; அந்த அறிவே ஆத்மாவாகும். அந்த ஆத்மாவால் அறியமுடியாதது ஒன்றும் இல்லை. எப்படி இருக்கமுடியும்? அந்த ஸர்வக்ஞ ஆத்மாவே நீ கேட்டதும் ஆகும். அதற்குப் புறம்பாக உள்ளது எது? ஒன்றும் இல்லை. இதுவே (இந்தசாக்ஷியாகவும் ஸர்வக்ஞனகவும் ஸர்வவியாபியாகவும் இருக்கும் ஆத்மாவே) அது (நீ கேட்டது.)

ச்ரவணர் (2) :— எது உன்னல் கேட்கப்பட்டதோ, எது தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் அப்பாற்பட்டதோ, எதை விட உயர்ந்தது வேறு ஒன்றும் இல்லையோ அதுவே இது எது தேவர்களுக்கும் ஸந்தேகாஸ்பதமோ, அதுவே நீ கேட்டது (இது)

யமதர்மர் :—இந்தத் தத்துவத்தை ஒரு திருஷ்டாந்தம் மூலம் நன்ருக விளங்கவைக்கிறேன்.

நசிகேதஸ் :— அப்படியே செய்யவேண்டும்; ஸ்வாமீ, தாங்கள் சொல்வது புதிராக இருக்கிறது. உதாஹரணத்தினல் விசதமாக, விபரமாக அறியலாம் அல்லவா?

யமதர்மர் :— ஒருவன் கனவிலும் நனவிலும் தூக்கத்திலும் காண்பதும் இந்த ஆத்மாவாலேயே. ஸ்வப்னவஸ்தையிலும் ஜாக்ரதவஸ்தையிலும் ஸுஷுப்தியிலும் ஆத்மாவே பார்க்கிறது என்ற உண்மையை அறிந்த தீரன் ஒருநாளும் துக்கிப்பதில்லை. மூன்று அவஸ்தைகளிலும், மூன்று காலங்களிலும் ஆத்மாதான்

சாஸகனாக (எஜமானனாக) இருக்கிறது என்று அறிந்த தீரன் தன் யோகக்ஷேமத்தில் இச்சை வைப்பதில்லை.

ச்ரவணர் (1) :— பிராணன் முதலியவைகளைத் தாங்கிக்கொண்டு கர்மபலனை அநுபவிக்கின்ற ஜீவனை சோதித்துப் பார்த்து உண்மையில் அவன் ஸ்வரூபம் முக்காலத்தையும் ஆளுகின்ற பரமாத்மாவே என்று அறிந்ததும் அவன் பயத்திலிருந்து விடுதலை பெறுகிறான். ஆத்மாவை நித்தியமென்றும் இரண்டு அற்றது என்றும் அறிந்தபின் பயம் எதற்கு? ரக்ஷணை தான் எதற்கு? எதை எதிலிருந்து ரக்ஷிக்கவேண்டும்? இப்படி நிச்சயமாக ஆத்மதத்வத்தை அறியவேண்டும். நீ கேட்டதும் இதுவே.

யமதர்மர் :— ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தில் ஜலம் முதலிய பஞ்சபூதங்கள் உண்டாகுமுன்னமே, பிரஹ்மத்தினின்றும் முதலில் உண்டானவன் ஹிரண்யகர்ப்பன். அவன் ஸமஷ்டியானபடியால் தேவர் முதலான எல்லா பிராணிகளின் சரீரங்களிலும் புகுந்து ஹிருதய ஆகாசத்தில் இருந்துகொண்டு சப்தாதிகளையறியும ஜீவ ஸ்வரூபமாக அவனே விளங்குகிறான். ப்ரஹ்மத்திலிருந்து உண்டான ஹிரண்யகர்ப்பனைப் பார்க்கிறவன் ப்ரஹ்மத்தையே பார்க்கிறான். அதுவே நீ கேட்ட பொருள்.

ச்ரவணர் (2) :—கண், காது முதலிய எல்லாப் புலன்களும் அந்தப் பரம்பொருளின் சக்தியாலேயே தொழிலாற்றுகின்றன. பார்ப்பதும் கேட்பதும் மற்றும் எல்லாச் செய்கைகளும் புலன்களின் வழியாக அந்த ஆத்மாவையே அடைகிறது.

ச்ரவணர் (1) :— குழந்தாய்! ஒரு பொருளைக் காண்பது கண் அல்ல. கேட்பது செவியல்ல. பரம்பொருள் தான். நீ கேட்ட ஆத்மவஸ்துதான் காண்பதும் கேட்பதும் எல்லாம். இதுபோலவே மற்ற இந்திரியங்களும்.

யமதர்மர்:— தாயின் கருவில் மறைந்து வளரும் சிசுவைப்போல், உயிர்களின் உள்ளத்தில் ஆத்மா மறைந்து உறைகிறது. அரணிக்கட்டையின் மத்தியில் மறைந்து நிற்கும் அக்கினிபோலவும் பரம்பொருள் மறைந்து நிற்கிறது.

ச்ரவணர் (2) :— கர்பிணியின் உதரத்திலிருந்து கருவானது உசிதகாலத்தில் வெளிப்படுவதுபோல, உத்தம அதிகாரிக்குப் பக்குவம் வந்தவுடன் உரிய காலத்தில் ஆத்மா வெளியாகிறது.

ச்ரவணர் (1) :—கருவுற்ற தாய்மார்கள் சுத்த அன்ன பானுதிகளால் கர்ப்பத்தைச் செவ்வையாகக் காப்பாற்றி வளர்ப்பதுபோல், யக்ஞம் செய்யும் யோகிகளும், நெய் முதலிய ஹோம ஸாமக்ரிகளால் அக்கினியை வளர்ப்பார்கள். அரணிக்கட்டையில் நின்றும் தோன்றி வளர்க்கப்பட்ட அக்கினிதேவனையே விராட் ஸ்வரூபமாக ஹ்ருதயத்தில் வைத்துத் துதிப்பார்கள். அப்பேர்பட்ட அந்த அக்கினியையே பரம் பொருளாக நீ அறிவாய்!

யமதர்மர் :— அரணியிலிருந்து தீயைக் கடைந்து எடுப்பதுபோல் உள்ளத்திலிருந்து ஆத்மாவையும் கடைந்து எடுக்கவேண்டும். அப்போது காணலாகும்.

நசிகேதஸ் :—அந்த அக்கினிக்கும் ஆத்மவஸ்துவுக்கும் ஸாம்யம் சொல்வது நன்ருக விளங்கவில்லை. என் சிற்றறிவுக்கு எட்டும் வண்ணம் கொஞ்சம் விவரமாகக் கூறவேண்டுகிறேன்.

யமதர்மர் :—எல்லா மரக்கட்டையிலும் ஒரே தன்மையான நெருப்புத்தான் மறைந்து இருக்கிறது. உராய்ந்ததும், நன்ருகத் தேய்த்ததும் அக்கினி வெளி வருகிறது. அதுபோல் எல்லா உயிர்களிலும் ஆத்மா இருக்கிறது. அக்கினியானது, தான் பற்றி எரியும் பொருளின் வடிவத்தைக்கொண்டு தோன்றுகிறது. தீபத்தில் விட்டிருக்கும் எண்ணெக்கும் திரிக்கும்

ஏற்றவாறு, மங்கலாகவும் அல்லது ஒளியுடனும் பிரகாசிக்கிறது. அந்த அக்கினியே அடுப்புத்தீயாகவும், உலைநெருப்பாகவும், ஹோமாக்கினியாகவும், விளக்காகவும் தீபவர்த்தியாகவும், காட்டுத்தீயாகவும், ஜாடராக்கினியாகவும் விளங்குகிறது. எரியும் பொருளுக்கு ஏற்றவாறு உருவம் கொள்ளுகிறது அக்கினி. அதுபோலவே ஆத்மாவும் பல வடிவங்களாகத் தோற்றுகிறது. அதுவும் உண்மைத் தன்மையை ஒருநாளும் தான் இழக்காமல், பற்பல சரீரங்களில் பல பலவிதமாகக் காட்சி அளிக்கிறது.

ச்ரவணர் (2):—நெருப்புக்கு இரையாகும் பொருளும் நெருப்பும் கடைசியில் லயமடைவதுபோல் எல்லாம் பரப்ரஹ்மத்தில் லயமடையும்.

யமதர்மர் :— எல்லா தேவதைகளின் ஸமஷ்டி உருவம் ஹிரண்யகர்ப்பர். அவரிடமிருந்துதான் பிரதி தினம் ஸூர்யன் வெளிக்கிளம்புகிறான் உதயமாகிறான். அங்கேயே மறைகிறான். அஸ்தமிக்கிறான். வண்டியின் குடத்தில் ஆரக்கால்கள்போல் எல்லா தேவர்களும் அவரிடமே உள்ளனர் இவ்வாறு ஸர்வஸமஷ்டியான ஹிரண்யகர்ப்பரும் ப்ரஹ்ம ஸ்வரூபம்தான். ப்ரஹ்ம ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறாக ஒரு பொருளும் உலகில் இல்லை.

நசிகேதஸ் :— ஸ்வாமீ! தங்கள் வசனங்களை கேட்டு மிகவும் தன்யனானேன். மேலும் கேட்க ஆசைப்படுகிறேன்.

யமதர்மர் :— நாம் காண்பது அனைத்தும் ஒன்றே. ஆத்மா தவிர வேறொன்றும் இல்லை. அனைத்திலும் ஆத்மா ஒன்றே. இங்கிருப்பதே அங்கும். அங்கிருப்பதே இங்கும். இங்கு எல்லாச் சரீரங்களிலும் தோன்றும் ஒரே ஆத்மாவும் அங்கு ஜகத்காரணமான பரமாத்மாவும் ஒன்றே. இரண்டுக்கும் சிறிதும் வேற்றுமை இல்லை. இதை அறிந்துகொள்ளாமல் வெவ்வேறு வஸ்துவாகப்

பார்க்கிறவன் ஜனன மரணச் சுழலில் சிக்கி திரும்பத் திரும்ப சாகிருன்.

ச்ரவணர் (1) :— அண்டத்தில் இருப்பதே பிண்டத்திலும், பிண்டத்தில் இருப்பதே அண்டத்திலும். இப்படி நான், நீ, அது, அவன், இது, இவன் என்று வேறுபட்ட பொருளாக நினைத்து அவதிப்படவேண்டாம். பேத புத்தியை, வேற்றுமை உணர்ச்சியை மனத்திலிருந்தே நீக்கிவிடவேண்டும்.

ச்ரவணர் (2) :— பரம்பொருள் தவிர வேறு ஒன்றும் இல்லை என்ற ஞானம் அடையாத வரையில் மரணமும் சம்சாரச் சக்கரமும் விலாது. இதை நன்ருக மனத்தில் பதியவைத்துக்கொள்ளவேண்டும். பேதத்தை ஒழித்தால் ஞானசூரியன் உதயமாவான். பிரிவுபட்டு நிற்கும் எல்லா உயிர்களிலும் பிளவுபட்டு நிற்கும் எல்லா உள்ளங்களிலும் பிரிவு அற்றதும் நாசம் அற்றதும் நித்தியமானதுமான ஒரே ஆத்மாதான் காணப்படும். அப்போது ஜீவன், ஈசுவரன் என்ற வேற்றுமைஇல்லை. தேவன், மனிதன் என்ற வித்யாசம் இல்லை. குரு, சிஷ்யன் என்ற பேதமும் இல்லை. கல்வியும் சிக்ஷையும் பெற்ற அறிஞனும், யாதும் கல்லாத மூடனும் ஒன்ருகவே தோன்றுவான். மேலோன், கீழோன் என்ற உணர்ச்சி அற்றுப்போகும்.

நசிகேதஸ் :— நன்ருய்ப் புரிந்துகொண்டேன். எங்கும் ஒருமையைக் காண்பவர் இன்பம் பெறுவர். அல்லாதவர் துன்பம் அடைவர். ஒருமை காணுமல் வேற்றுமை காண்போருக்கு ஒருநாளும் இல்லை இன்பமே.

யமதர்மர் :— வத்ஸா! ரொம்ப நன்ருகக் கூறினுய் அங்குஷ்டமாத்திரமான சிறு உருவம்கொண்டு புருஷோத்தமன் இதய குகையில் இருக்கிருன். கட்டைவிரல் அளவினனுக அந்தப் புருஷன் புகையில்லாத ஜோதி போல ஒளிவீசுகிருன். நடந்ததற்கும் நடக்கப்

போவதற்கும் நடப்பதற்கும் அவனே ஈசுவரன். எல்லாச் சுகதுக்கங்களும் அவன் நிலையைப் பொருந்தியிருக்கும். இதை அறிந்தவனுக்குக் காப்பும் தேவையில்லை. கவலையும் வேண்டியதில்லை. அவனே இன்றைக்கு உள்ளவன். நாளைக்கும் உள்ளவன். இரண்டினுக்கும் எஜமானன் அவனே. அவனே நாம் இப்போது ஆராயும் பரம்பொருள்.

ச்ரவணர் (1) :— ஒவ்வொரு விநாடியிலும் மாறுபட்டு வரும் உடலில், ஒரே தன்மையுடன், மாருமல் இருக்கும் பொருளும் அவனே. அந்தப் புருஷோத்தமனே ஆத்மா.

ச்ரவணர் (2) :— க்ஷணபங்குர வாதமும், அநாத்ம வாதமும் கண்டிக்கப்பட்டன இப்போது. கணத்துக்குக் கணம் மாறுபடும் உணர்ச்சிகள் முதலியவைகள் அடங்கிய தொகுப்பை ஒரு தனிப்பொருளாக வைத்துக் கொள்ள முடியாது. அதனல் அது ஆத்மா இல்லை. தவிர மரணம் வந்ததும் உடல் அழிகிறது. அதனுல் அதுவும் ஆத்மா இல்லை என்று இரண்டுவாதங்களும் இங்கே மறுக்கப்பட்டன. சரீரம், இந்திரியம், மனம் முதலிய எல்லாவற்றைக்காட்டிலும் வேருன ஆத்மா நித்யமாக ப்ரஹ்மஸ்வரூபமாக இருக்கிருன் அவனை ஆசார்ய உபதேசம், உபநிஷத் விசாரம் இவைகளைப் பெற்ற மனதால் தான் அறியமுடியும் இதை யறிந்து விட்டால் அவித்யை விலகி எல்லா வேற்றுமைகளும் நீங்கிவிடும் இதை யறியாதவரை வேற்றுமைகள் தோன்றிக்கொண்டேயிருக்கும் இவன் திரும்பித் திரும்பி பிறவியையும் சாவையும் அடைவான்.

யமதர்மர் :— எங்ஙனம் உயர்ந்த பர்வதங்களில் பெய்த மழையானது பலவாருகப் பிரிந்து, தாழ்வரைகளில் பல திசைகளில் பிரவகிக்கிறதோ அதுபோல், ஒரே ஆத்மாவும் பல பல ஜீவன்களாகத் தோற்றமளிக்கிறது. இதைப்பார்த்து உண்மையை அறியாமல், அறிவிலி வேற்றுமையைக் காண்கிருன். நதியின்

தண்ணீரைப் பார்த்துவிட்டு மழையை மறந்து விடுகிறுன் மூடன். அதுபோல் ஜீவர்களைக் காணும் மந்த புத்தியுள்ளவன் அவைகளுக்குக் காரணமான ஆத்மாவைக்காண மறந்துவிடுகிறுன். ஒரே பரம் பொருளைப் பின்னமாகப் பார்த்து வேற்றுமை உணர்ச்சியை வளர்த்துக்கொள்கிருன்.

ச்ரவணர் (1) :—பரமேசுவரரின் கருணை வடிவமான மழையை மறந்துவிட்டோம். அதன் பயனுல் உண்டான காவேரி, கங்கை, அளகநந்தா, ஸரஸ்வதி, நர்மதை என்று பின்னப்படுத்திப் பார்த்துக்கொண்டிருக்கிருேம். அதுபோல் ஆத்மாவை அறவே மறந்துவிட்டு அனேக விதமான நாமரூப பேதங்களை உண்மையென்று மயங்கி நம்பியிருக்கிருேம். இது மிகுந்த மடத்தனம்; இதை விலக்கவேண்டும்.

யமதர்மர் :— சுத்தமான ஜலத்தில் விடப்பட்ட சுத்த ஜலம் ஒன்ருகக் கலந்துவிடும். ஏகரஸமாய் ஒன்றி விடும். அதைப்போல் உண்மை ஞானத்தை உணர்ந்த முனியும் தன் ஆத்மாவைப் பரம்பொருளுடன் ஒன்ருக்கி விடுகிருன். ஹே கௌதமா! அந்த ஏகத்வத்தை நீயும் அடைந்துவிட்டாய். எல்லோரும் குதர்க்கம் பொருந்திய பேத திருஷ்டியையும் நாஸ்திக புத்தியையும் விட்டு விட்டு, வேதமாதாவின் உபதேசத்தில் நம்பிக்கையுடன் ஆத்மஞானத்தை அடையவேண்டும்.

ஆகையினுல் நசிகேதா! புலன்களின் வெளி நோக்கிச் செல்லும் சுபாவத்தை வென்று உள்நோக்கிப் பார்க்கவேண்டும். ஆத்மாவின் இறவாத தன்மையை உணர்ந்து அழியும் இன்பத்தை விரும்பாமல், வேற்றுமைத் திருஷ்டியையும் விலக்கவேண்டும். முக்காலத்திலும் இருப்பது ஆத்மா ஒன்றே அது உள்ளத்தில், தாயின் கர்ப்பத்தில் இருக்கும் கருப்போலும் அரணியில் உறையும் தீ போலும் மறைந்து இருக்கிறது. அது கட்டைவிரல் அளவாகவுள்ள தீபக் கொழுந்துபோல் உனக்குள்ளும் இருக்கிறது. உண்டா

யிருப்பது உண்டாகப்போவது இரண்டிற்கும் அதுவே எஜமானன். நாம் காண்பது அனைத்தும் ஒன்றே. இந்த ஞானம் அடைந்தால் சம்சாரசக்கரம் நம்மை அண்டாது. பர்வதத்தில் பெய்த மாரியானது பல ஆறுகளாகப் பிரிந்து ஓடுவதுபோல் பரமாத்மாவும் பலவாகத் தோற்றமளிக்கிறது. நீ வேற்றுமையை விலக்கி உண்மையை உணர்ந்து சுத்தமான ஜலத்துடன் ஸ்வச்சமான ஜலம் கலந்து ஒன்ருவதுபோல் ஆத்மாவிடம் ஒன்ருகவேணும்.

நசிகேதஸ் :—ஸ்வாமி! மிகவும் சந்தோஷம். தங்கள் உரைகளுக்கு நன்றி. வந்தனம்.

யமதர்மர் :— குழந்தாய், இத்துடன் இன்றைய சம்பாஷணையை நிறுத்திக்கொள்வோம்.

ச்ரவணர்கள் :— மஹாராஜாவின் சித்தம். எங்கள் பாக்கியம்.

(எல்லோரும் எழுந்திருந்து பாடுகிருர்கள்)

अंगुष्ठमात्रः पुरुषो ज्योतिरिवाधूमकः ।
ईशानो भूतभव्यस्य स एवाद्य स उ श्वः । एतद्वै तत् ॥

यथोदकं दुर्गे वृष्टं पर्वतेषु विधावति ।
एवं धर्मान् पृथक् पश्यंस्तानेवानुविधावति ॥

அங்குஷ்டமாத்ர: புருஷோ ஜ்யோதிரிவாதூமக: ।
ஈசானோ பூதபவ்யஸ்ய ஸ ஏவாத்ய ஸ உ ச்வ: ।
ஏதத்வை தத் ॥

யதோதகம் துர்கே வ்ருஷ்டம் பர்வதேஷு விதாவதி
ஏவம் தர்மான் ப்ருதக் பச்யன் தாநேவாநுவிதாவதி ॥

(திரை விழுகிறது)

காட்சி 3

(திரை விலக)

(முன் காட்சியைப்போல் எல்லோரும் வீற்றிருக்கச் சப்டாஷணே தொடர்ந்து நடைபெறுகிறது.)

நசிகேதஸ் :— குருநாதரே! நமஸ்காரம். தங்கள் மாணிக்க வாசகங்களைக் கேட்கக்கேட்க நான் பேரானந்தம் அடைகிறேன். மேலும் அனுக்ரஹம் செய்யவேண்டும்.

யமதர்மர் :— வத்ஸா! இந்த ஆத்மாவை அறிவதில் மிகுந்த சிரமம் உள்ளது. ஆகையினுல் இன்னெரு விதத்தில் இன்று விளக்குகிறேன். பிறப்பில்லாதவனும் எப்பொழுதும் ஒரே மாதிரியான அறிவுள்ளவனுமான இந்த ஆத்மா பதினெரு வாயில்களுள்ள பட்டணத்தில் எழுந்தருளியிருக்கிருன். இந்த உடலைக் கேவலமாக எண்ணுதே. இதை பரமாத்மா என்ற அரசன் வசிக்கும் நகரமாக நினைப்பாயாக. ஆனுலும் சரீரத்தையே ஆத்மாவாக எண்ணுபவன், நகரத்தையே அரசனுக எண்ணுபவனுக்கு ஒப்பாவான்.

ச்ரவணர் (1) :— கண்கள் 2, செவிகள் 2, நாசித் துவாரம் 2, வாய் 1, நாபி 1, மல மூத்ர விஸர்ஜனத் துவாரம் 2, சிரஸ்ஸில் ப்ரஹ்மரந்திரம் 1 ஆக 11 துவாரங்களுள்ள இந்தச் சரீரம் பதினெறு கோட்டைவாசல்களுள்ள ராஜதானிக்கொப்பாகும். இங்கு உள்ள ஆத்மாவே ராஜதானியில் கொலு வீற்றிருக்கும் அரசனுவான். அவன் பிறப்பு இல்லாதவன். ருஜுவான அறிவுடையவன். அவனைப் பக்தியுடன் சரண் அடைந்து தைரியமாக இருப்பாய். துக்கம் இல்லை ஒருநாளும்.

யமதர்மர் :—அந்த ஆத்மாவைச் சிந்தித்து உணர்ந்த பின் ஒருவனும் துக்கமடையமாட்டான். பிறப்பு, இறப்பு இவைகளினின்றும் விடுபட்டு முக்தனுக நிற்கிருன். இதுதான் அது; நீ கேட்டது.

ச்ரவணர் (2) :— ஆசைப் பற்றுக்களைத் துறந்து மனத்தால் எல்லாக் கர்மங்களையும் விட்டு, இந்தப் புரியில் வாழும் ஆத்மாவைத் தியானித்து, ஒன்றும் செய்யாமலும் செய்விக்காமலும் இருப்பவனே தீரன். அவனே ஜீவன் முக்தன். ஜனனமரணம் இல்லாதவன்.

யமதர்மர் :— நசிகேதா! இந்த ஆத்மாவைச் சரீர ரூபமான புரத்தில் மட்டும் வசிப்பதாக எண்ணிவிடாதே. அவன் எங்கும் இருக்கிறான். அவன் எங்கும் செல்லுகிறான். அவன் கதிக்குத் தடையே கிடையாது. ஆகாயத்தில் சூரியனாகச் செல்லுகிறான். வசுவும் (எல்லோரையும் வஸிக்கும்படி செய்பவன்) அவனே. வாயு ரூபத்தில் அந்தரிக்ஷத்தில் இவனே சஞ்சரிக்கிறான். யாகவேதியில் துதிக்கப்படும் அக்கினிதேவனும் அவனே. கலசத்தில் வைக்கப்படும் ஸோமரஸமும் அவன் தான். வீட்டில் விருந்தாளியாக எழுந்தருளும் பிராஹ்மணனும் அவனே. மனிதன் உள்ளத்திலும் தேவர் உள்ளத்திலும் அவனே இருக்கிறான். ஸத்தியத்திலும் உறைகிறான். யாகபலனாகவும் ஆகிறான். நீரில் உண்டாகும் சங்கம், சிப்பி முதலிய எல்லாப் பிராணிகளும் பொருள்களும் அவன் தான். பிருதிவியில் உற்பவிக்கும் சகலமும் அவனே. மலைகளில் உண்டாகிப் பிரவகிக்கும் நதிகளும் நதங்களும் அவன் தான். இப்படி ஸர்வாத்மாவாக இருந்தும் வேற்றுமை இல்லாதவன். அனைத்திலும் அடங்கப்பெற்ற மஹத் பொருள்-பரம்பொருள். அது ஒன்றே உண்மைப் பொருள்

ச்ரவணர் (1) :— குழந்தாய்! இதன் சுருக்கம் என்னவென்றால் ஜகத்பூராவும் ஸர்வ வியாபகமான ஆத்மா தான். அது ஒன்றே. ஆத்மாவில் பேதம் இல்லை என்பதாகும்.

நசிகேதஸ் :— ஸ்வாமி! எங்கும் நிறைந்த ஆத்மா புரமாகிற சரீரத்திலும் இருக்குமானால், மனிதன்

ஜீவிப்பதும் அந்த ஆத்மாவின் சக்தியால்தானே இருக்கவேண்டும்?

யமதர்மர் :— கௌதமா! நீ சொல்வது ரொம்ப சரி. பிராணனாலோ அபானனாலோ எந்த மனிதனும் ஜீவித்திருக்கவில்லை. இவ்விரண்டுக்கும் எது ஆதாரமோ அதனால் தான் ஜீவித்திருக்கின்றான். உடலில் மூச்சை மேல்நோக்கி இழுப்பதும் ஆத்மாவே. அந்த மூச்சை மறுபடி கீழ் இறங்கச் செய்வதும் ஆத்மா தான். சரீரத்தின் மத்தியில் வாமன உருவத்துடன்— இதயத்தில் வீற்றிருந்து - இந்திரியங்களால் உபாசிக்கப் பட்டு நிற்பதும் ஆத்மாவே.

ச்ரவணர் (2) :— ஆத்மா உள்ளமாகிற கோயிலில் (சரீரமாகிற ராஜதானியில் இதயம் அரசன் வாழும் இடம்) கொலுவிருக்க, அரசாட்சிசெய்ய, எல்லா அகப்புலன்களும் அவனை அனுசரித்து உபசரித்துப் பஜித்து நிற்கின்றன.

யமதர்மர் :— உடலுக்குள் தங்கியிருக்கும் ஆத்மா வெளியேறிவிட்டால், அதற்குச் சவம் என்று பெயர். அதைப் பார்! என்ன மிச்சமிருக்கிறது? அரசன் உத்தரவின்பேரில் தொழில்செய்துவந்த புலன்கள் அடங்கிச்செயல் அற்றுவிடுகின்றன. அவன் போனபின் அங்கே என்ன இருக்கிறது? நகரத்தின் ஸ்வாமி சென்றபின் புரவாஸிகள் துர்த்தசையை அடைவது போல் இந்திரியங்களும் பலஹீனமாய் க்ஷீணித்து விடுகின்றன. எதுவின்றிப் புலன்கள் சக்தியற்றுப் போகின்றனவோ, பிராணவாயுவும் அபானவாயுவும் எதனை ஆதாரமாகப் பற்றி இயங்குகின்றனவோ அதுவே ஆத்மா. அதுவே இது. நாம் ஆராயும் பொருள்.

நசிகேதஸ் :— குருநாதரே! பிராணி மரணம் அடைந்ததும் ஆத்மா என்னவாகிறது?

யமதர்மர் :— ஹே கௌதமனே! கேளாய் கவனமாக; மிகவும் ரகசியமானதும் பழமையானதுமான பிரஹ்மத்தைப்பற்றி மீண்டும் கூறுகிறேன். இதை அறியாமையால் ஜீவாத்மா மரணத்துக்குப் பின் எங்ஙனம் உழல்கிறது என்றும் கூறுகிறேன். எப்படி இந்த ஆத்மா ஜனன மரண ரூபமான ஸம்ஸாரத்தை அடைந்து கஷ்டப்படுகிறது என்பதைக் கேட்பாயாக. சாவு வந்ததும் சரீரத்தை விட்டுப்பிரியும் ஆத்மா, அது வரை செய்யப்பட்ட கர்மங்களுக்கும், அடைந்த அறிவுக்கும் ஏற்றபடி வேறு தேஹங்களைத்தேடிப் பிராணிகளின் கர்ப்பத்தில் புகும். அந்தப்படி யோனியை அடைந்து மறு பிறப்பு எடுக்கும்.

ச்ரவணர் (1) :— உடலைவிட்ட சிலர் வேறு உடல்களைப் பெறுகின்றனர். சிலர் தாவர நிலையை அடைகின்றனர், அவரவர்கள் கருமத்துக்கும் ஞானத்துக்கும் தக்கவாறு. நல்ல கருமத்தைச் செய்கிறவர்கள் நல்ல பிறப்பைப் பெறுகிறார்கள். கெட்ட கருமத்தைச் செய்கிறவர்கள் கெட்ட யோனிகளை அடைந்து சீரழிகின்றனர்.

ச்ரவணர் (2) :— ஸத்துவகுணமுடையவர் மேலே செல்லுகின்றனர் - உயர்ந்த ஜன்மங்களை அடைகின்றனர். யோகிகள் வீட்டிலும் ஸ்ரீமான்கள் வீட்டிலும் ஜனித்து, ஞானத்தை வளர்த்து, நல்ல ஸத்கர்மாக்களைச் செய்து முக்திக்கு வழி தேடுகின்றனர். ராஜஸ குணமுள்ளவர்கள் மத்தியில் நிற்கின்றனர். தாமஸர்கள் கீழே செல்லுகின்றனர். மிகுந்த கடையான அவலமான, அதமமான, பிறப்புக்களைப் பெற்று உழல்கின்றனர். மரணத்திற்குப்பின் தேஹாதிகளைக் காட்டிலும் வேறான ஆத்மா இருக்கிறதா இல்லையா என்று நீ கேட்டாயே அதற்கு இதுதான் நேரிடையான பதில்.

யமதர்மர் :— சரீரத்தில் எல்லாம் தூங்கும்போது எவன் பலவிதமான ஆசைப்படும் பொருள்களைத் தயார் செய்துகொண்டு விழித்துக்கொண்டிருக்கிறானோ

அவனே சுத்தமான பிரம்மம். அவனே அமிருதம் எனப்படுகிறான் அவனிடமே உலகங்களெல்லாம் நிலை பெறுகின்றன. அவனை மீறிச் செல்பவன் எவனும் இல்லை. இதுவே அது. நாம் ஆராயும் பரப்பிரம்மம்.

ச்ரவணர் (1) :— அந்த மரணமற்ற பொருளைக் கடந்து எதுவும் செல்லமுடியாது. அதுதான் ஆத்மா. எல்லா உலகங்களும் அதை ஆச்ரயித்து நிற்கின்றன அதைக்காட்டிலும் வேறான பொருளே இல்லை.

யமதர்மர் :—எங்ஙனம் ஒரே நெருப்பு உலகப்பொருள்களில் புகுந்து அந்தந்தப் பொருள்களின் உருவத்துக்குத் தக்கவாறு பல உருவம் உடையதாக ஆகிறதோ அங்ஙனமே அந்தராத்மாவும் உண்டாகும் உயிர்கள் அனைத்திலும் புகுந்து அந்த அந்த உருவங்களுக்குத் தக்கவாறு உருவுடையதாக ஆகிறது. அவைகளுக்கு வெளியிலும் அது உள்ளது. அதன் நாமங்கள் அனந்தம். ரூபங்கள் அனந்தம். நீ எந்த நாமரூபத்துடன் அறிய விரும்புகிறாயோ அந்த நாமரூபத்தில் அதுபுலப்படும்.

ச்ரவணர் (2) :— பலவேறு வடிவங்களில் காணப் படினும் பரம்பொருள் ஒன்றே. அது பல உடல்களைப் பற்றி நின்று வெவ்வேறாகத் தென்படுகிறது. ஆயினும் உள் நிற்கும் பொருள் ஒன்றே. அதுவே பிரஹ்மம். அது எல்லாவற்றிலும் விளங்கியபோதிலும் அவற்றிற்கு அப்பால்பட்டது. அது வேறு, வடிவங்கள் வேறு.

யமதர்மர் :—குழந்தாய்! இன்னும் ஒரு திருஷ்டாந்தம் கூறுகிறேன், கேள். ஒரே வாயுவானது சரீரத்திற்குள் புகுந்து அந்தந்த இடத்திற்குத் தக்கபடி பிராணன் முதலான பல பெயர்களை அடைவது போல ஆத்மாவும் பல வகையான சரீரங்களில் புகுந்து பல நாமரூபங்களை அடைகிறது.

ச்ரவணர் (1) :— சரீரத்தில் வெவ்வேறாக கூறப்படும் அவைகளெல்லாம் வாயுதான். அந்த வாயு உள்ளே

மட்டுமல்ல, வெளியிலும் இருக்கிறது இதுபோல ஒரே ஆத்மா உள்ளும் வெளியும் எங்கும் இருக்கிறது.

யமதர்மர் :— இதுவரை பிரஹ்மத்தின் ஒருமையைப் பற்றிக் கூறினேன். இனி அதன் மாசிலாத்தன்மையை விளக்குகிறேன்.

நசிகேதஸ் :—உதாரணங்களுடன் சொல்லச் சொல்ல நன்ருகப்புரிகிறது ஸ்வாமீ!

யமதர்மர் :— உலகுக்கு எல்லாம் கண்ணுகவுள்ள சூரியன், கண்ணுக்கு ஏற்படும் தோஷங்களால் எங்ஙனம் பற்றப்படுவதில்லையோ, அங்ஙனமே உண்டான உயிர்கள் அனைத்திலும் விளங்கும் அந்தராத்மா, உலகத்துன்பங்களால் பற்றப்படாமல் அவைகட்கு அப்பால் உள்ளது. சுத்தமான பொருள்களைக் காணவும் சூரியன் உதவுகிருன். அது போல் அசுத்தமான பொருள்களையும் காட்டுகிருன். ஆனல் அந்த அசுத்தங்கள் அவனை அடைவதில்லை. அதுபோல் ஸர்வபூதங்களிலும் ஒரே ஆத்மா விளங்கிய போதிலும் அவற்றின் சுகதுக்கங்களால் ஆத்மா பாதிக்கப்படுவதில்லை. அவற்றிற்கு அப்பால் நிற்கிறது. அது சுத்தமாகவே இருக்கிறது.

நசிகேதஸ் :— எல்லா உடல்களிலும் இருப்பது அதுவே என்ருல், அவ்வுடல்கள் படும் துக்கம் அனைத்தும் அதைப் பீடிக்கவேண்டாமா?

யமதர்மர் :— அது வேண்டாம். சுகதுக்கங்கள் உயிரைத்தீண்டும், பாதிக்கும். ஆயினும் உயிருக்கே காரணமான மெய்ப்பொருளை—அந்தராத்மாவை—தீண்டாது அஞ்ஞானத்தால் உண்டான வேற்றுமை உணர்ச்சி நீங்கியவுடன் ஆத்மாவின் பரிசுத்தத் தன்மை தானுகவே விளங்கும்.

ச்ரவணர் (2) :—பழுதையைப் பாம்பாகவும், சிப்பியை வெள்ளியாகவும், அக்ஞானத்தால் நினைத்து அவதியுறு

கிறேம். உண்மை தெரிந்தவுடன் பிராந்தி நீங்க, பழுதையும் சிப்பியும் தெரிய, பாம்பும் வெள்ளியும் மறைந்துவிடுகின்றன. எவ்வளவு நினைத்தாலும் என்ன செய்தாலும் பழுதை பாம்பாக மாறமுடியாது. சிப்பியும் வெள்ளியாகாது. பாம்பின் குணங்களும் வெள்ளியின் குணங்களும் பழுதைக்கும் சிப்பிக்கும் ஒருநாளும் ஏற்படாது.

யமதர்மர் :—உண்டாகும் பொருள்கள் அனைத்துக்கும் அந்தராத்மாவும் ஆண்டவனுமாகிய ஒருவனே, ஒன்றேயாகிய தன் வடிவைப் பலவாகச் செய்கிறுன். அவனை எந்த தீரர்கள் தங்களிடம் காண்கிறுர்களோ அவர்களுக்கே அழிவிலாச்சுகம் உண்டு பிறர்க்கு இல்லை.

ச்ரவணர் (1) :— ஆத்மா ஒன்றே. அவனே எல்லாவற்றிற்கும் எஜமானன். அவன் சுதந்திரன். ஸர்வ வியாபி அவனுக்குச் சமானமாயும், அவனில் பெரியவனுயும் வேறு ஒருவரும் இல்லை. ஸர்வ ஜகத்தும் அவன் அதீனமே. அவனே எல்லாவற்றிற்கும் அந்தராத்மாவாக விளங்குகிறுன். ஏகமூர்த்தியான அவனே, அனேக மூர்த்தியாகவும், சதமூர்த்தியாகவும், மஹா மூர்த்தியாகவும், விசுவமூர்த்தியாகவும், தீப்த மூர்த்தியாகவும் அவ்யக்தமாகவும் விளங்குகிறுன்.

ச்ரவணர் (2) :— எல்லாம் அவன் அதீனமே. அவனுக்கு ஆதாரம் வேறு இல்லை. அவன் மனதில் தோன்றுவதைக்கொண்டு மனத்தை அவனுக்கு ஆதாரமாகக் கூறமுடியாது. கண்ணுடியில் காணும் முகத்துக்குக் கண்ணுடி ஆதாரமாகாதே. அவனை ஞானியானவன் தன் உள்ளத்திற்குள் காண்பான். அவ்வாறு கண்டவன் முடிவற்ற இன்பம் எய்துவான். அல்லாதவனுக்கு இன்பமில்லை. துன்பத்தில் சிக்கி அலைவான்.

யமதர்மர் :— தவிரவும் நிலையில்லாப் பொருள்களிடை நிலை உள்ளவனுகவும் அறிவுள்ள உயிர்களின் அறிவாயும்

அவனே இருக்கிறுன். எல்லாருடைய ஆசைகளேயும் அவன் ஒருவனுய் நின்றே நிறைவேற்றுகிறுன். அப்படிப்பட்டவனே எந்தத்தீரர்கள் தங்களிடம் உறை பவனுய்க் காண்கிறுர்களோ அவர்களுக்கே அழிவிலாச் சாந்தி உண்டு. பிறர்க்கில்லே.

ச்ரவணர் (1) :— உலகில் எல்லாப் பொருள்களும் அழிந்துபோகும் தன்மையுள்ளவை. அவைகளில் இருந்து கொண்டே அழியாமல் இருப்பவன் ஆத்மா ஒருவனே. அக்னி ஜலத்திற்கு உஷ்ணம் கொடுப்பது போல் எல்லா பிராணிகளுக்கும் அறிவைக்கொடுத்து அந்த அறிவு ரூபமாக விளங்குபவனும் அவனே. ஸர்வேச்வரனுன அவன் தான் எல்லா பிராணிகளுக்கும் அனுக்ரஹம் செய்து இஷ்டங்களே நிறைவேற்றுகிறுன். இவனேத் தன் உள்ளத்தில் காண்பவருக்குத்தான் நிலேயான சாந்தியும் ஆனந்தமும் உண்டாகும். மற்ற வருக்கு இல்லே.

ச்ரவணர் (2) :— இந்த ஞானத்தில் உறுதி பெற்றவன் எல்லா உயிர்களிடத்தும் தன்னேயும், எல்லா உயிர்களேயும் தன்னிடத்தும் காண்கிறுன். அப்படிப் பட்ட ஞானிக்கு ஆத்மாவும் மறைவதில்லே. ஆத் மாவுக்கு அவனும் மறைவதில்லே. உள்ளது ஒன்றே என்ற உறுதியுடன் இருப்பவன் எந்த அவஸ்தைகளில் இருப்பினும் ஆத்மாவிடத்திலேயே இருக்கிறுன். சாந்தி பெறுகிறுன், இன்பம் எய்துகிறுன், உபரதியை அடைகிறுன்.

யமதர்மர் :— இப்படி அவன் எய்தும் இன்பம் சுட்டிக் காட்டமுடியாதது. அந்த ஆன்மசுகம் தானே ஒளிரும் சுடர்போன்றதா? அல்லது பிறவொளியால் பிரகாசிக்கும் பொருளா? அதை எங்ஙனம் புத்தியால் அறிவோம். இந்த கேள்விகளுக்கு விடை காணவேண்டும். இதை நான் எவ்வாறு கண்டு பிறருக்கு விவரித்துச் சொல்ல முடியும்?

ச்ரவணர் (1) :— அந்த உத்தமமான ஆன்மசுகம் குறிப்பிட்டுக் காட்ட முடியாததாயினும் பிரத்தியக்ஷமாக விளங்குவதாகவே ஞானிகள் கருதுகின்றனர். அந்தப் பெருஞ்சுடரைச் சூரியனும் சந்திரனும் தீயும் விளக்கமாட்டா. தானே ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது என்பது திண்ணம். அதுவே எல்லாவற்றையும் பிரகாசிப்பிக்கிறது.

யமதர்மர் :— ஆமாம் அதுதான் சரியான விடை. அங்கே சூரியன், சந்திரன், தாரகைகள் மின்னல் இவைகளால் உண்டாகும் ஒளி உபயோகமில்லை. இந்தத் தெய்வீகமான ஒளிப்பிழம்புகளே உபயோகம் இல்லாவிட்டால், நாம் வைத்து வளர்க்கும் தீ எம்மாத்திரம் ? இந்த அக்னி அதை எங்ஙனம் பிரகாசிக்கச்செய்யும் ? ஸ்வயம்பிரகாசமுள்ள ஆத்மாவைப் (அவனை) பின்பற்றியே அனைத்தும் பிரகாசிக்கின்றது. அவனுளியாலேயே இவை அனைத்தும் விளங்குகின்றன.

ச்ரவணர் (2) :— ஆத்மா தானுகவே ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது. விசேஷரூபத்தில் பிரகாசிக்கின்றது. தானும் பிரகாசித்துக்கொண்டு மற்றெல்லாவற்றையும் விளக்குகிறது. அனைத்தின் ஒளியும் அப்பரம்பொருளிடமிருந்து கடன் பெற்ற ஒளியேயாகும். எல்லாம் அந்த ஒளியின் எதிர் ஒளிதான். நம் உள்ளத்தில் தங்கி நிற்கும் அந்தராத்மாவும் பரம்பொருளின் பிரகாசமே.

யமதர்மர் :— குழந்தாய் நசிகேதா ! சுருக்கமாகக் கூறுகிறேன் கேள். இந்த உடலாகிற புரியில் உள்ளமாகிற அரண்மனையில் வீற்றிருக்கும் அரசன் போன்றவனே பரம் பொருள். அவன் உன் உள்ளத்திலும் இருக்கிறுன். அதே சமயத்தில் நீ காணும் புறப்பொருள்கள் அனைத்திலும் நீக்கமற நிற்கிறுன். எங்கும் அவனே. எல்லாம் அவனே. எவையும் அவன் சக்தியாலேயே தொழில்படுகின்றன. நீ மூச்சுவிடுவது அவன் செயலே. ஒருவன் இறந்தபின்

ஆத்மா புண்ணியபாவங்களுக்குத் தக்கவாறு மறு பிறப்பை அடைகிறது. அது எல்லாவற்றிலும் இருந் தாலும் அவைகளுக்கு அப்பால் நிற்கிறது. ஜீவனின் சுக துக்கங்கள் அதைத் தீண்டுவதில்லை. சூரியனுனவன் தன் கிரணங்களால் பழங்களை பழுக்கவைக்கிருன். இனிப்பான பழம் இனிக்கிறது. கசப்பான கனி இனிப்ப தில்லை. அந்தப்பழத்தின் தித்திப்பும் கசப்பும் அதைப் பழுக்கச்செய்யும் ரவியைச் சேர்வதில்லை. அதுபோல் ஆத்மாவும் மாசற்று விளங்குகிறது. இப்படி எல்லாப் பொருள்களிடத்தும் நிற்கும் பரம்பொருளை அறிந்தவனே தீரன். அவனை அறிந்தவனே ஞானி. தனக்குள்ளும் அவன் இருப்பதை உணர்ந்ததும் வீடுபெறலாம். இன்பமும் சாந்தியும் ஒருங்கே எய்தலாம். அந்த அந்தராத்மா தன் ஒளியாலேயே விளங்குகிறது, ஞாயிறு, திங்கள், நக்ஷத்திரங்கள், மின்னல்கொடி முதலிய தெய்வீகமான பிரகாசப்பிழம்புகள் ஆத்மாவை விளக்கா. அங்கே அவற்றின் ஒளி தேவையில்லை. சூரியனுக்கு முன் மின்மினிபோல்தான், ஆத்மாவின் பிரகாசத்துக்கு முன் இந்தக் கிரஹங்களின் ஒளி ஜ்வலிப்பதில்லை. அந்தப் பரம்பொருளிடமிருந்து இரவல் வாங்கிய பிரகாசத்தால்தான் இவைகள் ஒளிர் கின்றன. இப்படிப்பட்ட ஜோதியை அறிந்து துன்பத்தைவிட்டு இன்பம் பெறுவாயாக.

நசிகேதஸ் :— ஸ்வாமீ! என் உள்ளத்தில் நின்று ஒளிரும் அந்தராத்மாவும் பரமாத்மாவின் பிரகாசமே என்று அறிந்தேன். மிகவும் சந்தோஷம்.

யமதர்மர் :— சரி. இத்துடன் இன்றைய உரையாடலை நிறுத்திக்கொள்வோம்.

(முதலில் யமதர்மர் எழுந்திருக்க மற்றவர் எல்லோரும் எழுந்திருக்கின்றனர். எல்லோரும் சேர்ந்து பாடுகின்றனர்.)

१ पुरमेकादशद्वारमजस्यावक्रचेतसः ।
अनुष्ठाय न शोचति विमुक्तश्च विमुच्यते । एतद्वै तत् ॥

२ न प्राणेन नापानेन मर्त्यो जीवति कश्चन ।
इतरेण तु जीवन्ति यस्मिन्नेतावुपाश्रितौ ॥

३ न तत्र सूर्यो भाति न चन्द्रतारकं
नेमा विद्युतो भान्ति कुतोऽयमग्निः ।
तमेव भान्तमनुभाति सर्वं
तस्य भासा सर्वमिदं विभाति ॥

புரமேகாதசத்வாரம் அஜஸ்யாவக்ரசேதஸ: ।
அநுஷ்டாய ந சோசதி விமுக்தஸ்ச விமுச்யதே
ஏதத்வை தத் ॥

ந ப்ராணேந நாபாநேந மர்த்யோ ஜீவதி கச்சன ।
இதரேண து ஜீவந்தி யஸ்மிந்நேதாவுபாச்ரிதௌ ॥

ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம்
நேமா வித்யுதோ பாந்தி குதோயமக்நி: ।
தமேவ பாந்தமநுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி ॥

(திரை விழுகிறது)

காட்சி 4

(திரை விலகுகிறது)

[முன் காட்சிகளைப்போல் எல்லோரும் உட்கார்ந்திருக்க உபதேசம் தொடர்ச்சியாக நடக்கிறது.]

யமதர்மர் :—வத்ஸா, இன்று உனக்கு வேறு ஒரு விதத்தில் பிரஹ்மத்தை விளக்குகிறேன். கேள்.

நசிகேதஸ் :—ஸ்வாமி, கவனமாகக் கேட்கிறேன்.

யமதர்மர் :— இந்த சம்சாரத்தை மேலே வேரும் கீழே கிளைகளும் உள்ள அசுவத்த விருக்ஷத்திற்கு ஒப்பிடலாம். இந்த அசுவத்த மரம் மிகவும் புராதனமானது.

அதன் மூலமே சுத்தம். அதுவே ப்ரஹ்மம். அதுவே அமிர்தம். அதனிடத்திலேயே எல்லா உலகங்களும் நிலைபெறுகின்றன. அதை உல்லங்கனம் செய்பவன் ஒருவனும் இல்லை. இதுவே அது. நாம் ஆராயும் பரம்பொருள்.

நசிகேதஸ் :— அரசமரத்தை உதாஹரணமாகச் சொல்லுவதன் தாத்பரியம் என்னவோ ?

யமதர்மர் :— அச்வத்தம் என்னும் பதத்திற்கு ச்வ: = நாளை அ = இல்லை என்று பொருள். ஆகவே நாளை ஸ்திதி இல்லாதது அச்வத்தம். அதுவே ஸம்ஸாரம்.

ச்ரவணர் (1) :— நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு. அதாவது நேற்று இருந்தது இன்று இல்லை என்னும் பெருமை உடையது.

யமதர்மர் :— இந்த ஸம்ஸார விருக்ஷத்துக்கு வேர் – அதாவது மூலம்-ப்ரஹ்மமே. கிளைகள், லிங்கசரீரங்களாகும். ஞானேந்திரிய விஷயங்களான சப்தம் முதலியவைகள் தளிர்களாகும். ச்ருதி, ஸ்ம்ருதி முதலியவை இலைகளாகும். யக்ஞம், தானம், தவம் முதலியவை புஷ்பங்களாகும். சுகதுக்க அனுபவங்கள் ரஸமுள்ள கனிகளாகும். கர்மாதிவாசனைகளே விழுதுகளாகும். இது மறுபடியும் மறுபடியும் தோன்றி, வளர்ந்து, அழிந்து ஒரு சக்கரமாகச் சுழல்கின்றது. அதை நீக்கவேண்டுமானால் அஸங்கம் (பற்றின்மை) என்னும் வாளால் அந்த விருக்ஷத்தை வெட்டித் தள்ள வேண்டும். அப்பொழுது ஸம்ஸாரத்தினின்றும் விடுதலை அடைவான். இல்லாவிடில் மறுபடியும் உடல்களை அடைந்து உழல்வான். இந்த மரத்தை முறித்துவிட்டு அதன் மூலமாகிற பிரஹ்மத்தைக் காண்பதே யோகம். இந்த ஞானத்தாலேயே சாகாதவனாகிறான். இந்தப் பிரஹ்மத்தின் ஆக்ஞையின்கீழ் எல்லா ஜகத்தும் சேஷ்டிக்கிறது. அதனுடைய ஓங்கிய வஜ்ராயுதத்தின்

தாக்குதலுக்குப் பயந்தே உலகம் தொழில்படுகிறது. எல்லாம் அதன் ஆட்சிக்கு அடங்கித்தான் நடக்கிறது. இதை அறிந்தவன் ஆத்மாவுடன் கலந்து அமரத்வம் அடைவான்.

ச்ரவணர் (2) :— அந்த மஹத்தான சக்திக்குப் பயந்தே தீ எரிகிறது. அதற்கு அஞ்சியே ரவியும் காலம் தாழ்த்தாமல் தோன்றி உஷ்ணத்தோடு பிரகாசிக்கிருன். மழை பெய்வதும் காற்று வீசுவதும் அந்த ஆட்சிக்குக் கீழ்ப்பட்டுத்தான். காலன் உயிரைக்கொள்வதும் அந்தப் பரம்பொருளின் செங்கோலுக்கு அடங்கித்தான்.

ச்ரவணர் (1) :— எல்லா இயற்கையும் அதன் ஆதி பத்தியத்துக்கு அஞ்சித்தான் நடக்கிறது. லோகபாலர் களான, இந்திரன், வாயு, காலன், அக்னி, சூர்யன் இவர்கள் அதன் ஆக்ஞைக்கு அடங்கியே ஓடி ஓடிச் செயலாற்றுகின்றனர். ப்ரஹ்மத்தின் பேரிலுள்ள பயத் தாலேயே, சேவகர்கள்போல் இவர்கள் தொழில் புரிகின்றனர் ஆகவே ப்ரஹ்மமே நியந்தா, யஜமானன்.

யமதர்மர் :—இங்கேயே இந்தச் சரீரம் விழும் முன்பே ஒருவன் ஆத்மாவை அடையமுயலவேண்டும். அப்படிச் செய்யாமலோ அல்லது முயன்றும் முடிவுபெருமலோ அசக்தனுய்ப்போவான் எனில் பிற்பாடு அவன் ஸ்தாவர ஜங்கமங்களில் மீண்டும் சரீரத்தை அடைகிருன். ஆகவே இப்போதே ஆத்மஞானம் அடையவேண்டும் இங்கேயே — இம்மானிடப் பிறவியிலேயே.

நசிகேதஸ் :— இந்தப் பூவுலகத்துக்கு என்ன விசேஷம்? குருநாதரே! வானுலகத்தில் தேவர்கள், பிதுருக்கள் உறையும் இடங்களில் ஆத்மஞானம் பெற முயலலாகாதா?

யமதர்மர் :— மனிதப் பிறவியில் பிரஹ்மத்தைக் கண்ணுடியில் நம் முகத்தைத் தெளிவாகப் பார்க்க முடிவதுபோல் மிகவும் தெளிவாகவும் அனுயாசமாகவும்

பார்க்கமுடியும். பித்ருக்களின் உலகத்தில் கனவில் தென்படுவதுபோல் தெரியும். கந்தருவலோகத்தில் நீர் நிலையில் பிரதிபிம்பம் காணப்படுவதுபோலக்காணலாம். பிரஹ்மலோகத்தில் வெயிலும் நிழலும்போல் ஆத்மா அறியப்படுகிறது. ஆகவே மானிட உலகில் காணப் படுவதே தெளிவாக இருப்பதால், அங்கேயே ஆத்ம தரிசனம் அடைவது சாலச்சிறந்தது. மற்ற உலகங் களில் எளிதல்ல.

ச்ரவணர் (2):— இந்தப் பூலோகம் கர்மபூமி. மற்ற உலகங்கள் போகபூமிகள். இங்கே செய்யப்படும் கர்ம பலன்களைத் துய்ப்பதற்கே மற்ற உலகங்கள் இருக் கின்றன. ஆகவே தவங்கள் செய்வதற்கும் யோகங்கள் செய்வதற்கும் பிரஹ்மவிசாரம் செய்வதற்கும் ஏற்ற இடம் பூலோகம்தான். இதில் ஐயமில்லை.

ச்ரவணர் (1):— இங்கே-இப்பூலோகத்தில் அதாவது மானிடப் பிறவியில் ஆத்மாவின் தரிசனம் ஸ்பஷ்ட மாகக் காணப்படுகிறது பித்ரு லோகத்தில் அஸ்பஷ்டமாகத்தென்படுகிறது. அதுபோலவே கந்தர்வ லோகத்திலும் தெளிவில்லாமலே தென்படு கிறது. ஆனல் பிரஹ்மலோகத்தில் வெய்யிலும் நிழலும் போல் அத்யந்த ஸ்பஷ்டமாகக் காணலாகும்.

நசிகேதஸ்:— அப்படியானல் பிரஹ்மலோகத்தில் முயல்வது நல்லதல்லவா.

யமதர்மர்:— மிகச்சிறந்த கர்மாக்களையும் தியானங் களையும் செய்துதான் பிரஹ்மலோகம் அடையமுடியும். பிரஹ்மலோகம் செல்வதே கஷ்டமாக இருக்கும்போது அங்கே சென்று பிரஹ்மவிசாரம் செய்வது மிகவும் துர்லபமானது- ஆகவே மநுஷ்ய லோகத்திலேயே— மானிடப் பிறவியிலேயே—ஆத்ம தர்சனத்துக்குப் பிரயத்தினம் செய்வதுதான் நம்முடைய கர்தவ்யமாகும்,

நசிகேதஸ் :— ஸ்வாமீ, அந்த ஆத்மதர்சனம் பெறும் வழியையும், அதனல் பெறும் பயனையும் விளக்க வேண்டுகிறேன்.

யமதர்மர் :— வத்ஸா! நாம் அடையும் இன்ப துன்ப உணர்ச்சிகள் புலன்களின் வழியாகவே உண்டாகின்றன. விழித்திருக்கும்போது உண்டாகி, தூங்கும் பொழுது முற்றும் மறைந்துபோவதால், புலன்கள் மூலப்பொருள் அல்ல என்றும், அவைகளுக்கு ஆதாரமான, ஆனல் அவைகளினின்றும் வேறுபட்ட பொருள் ஒன்று உண்டு என்றும் தெரியவரும். அதுவே ஆத்மா. புலன்கள் மூலம் ஏற்படும் உணர்ச்சிகள் ஆத்மாவிலேயே உற்பவித்து அதிலேயே லயமடைகின்றன. உடலையும் புலன்களையும் தவிர்த்து வேருெரு பொருள் உண்டு என்று அறியவேண்டும். அப்படி ஞானமடைந்தவன் துயரத்தைக் கடந்து நிற்பான். ஆத்மா இந்திரியங்களிலிருந்து வேறுபட்டதாயினும் எங்கோ வெகுதூரத்தில்—தொலைவில் இருப்பதாக எண்ணிவிடாதே. அது எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்கும் அந்தராத்மா. இந்திரியங்களைவிட மனம் சிறந்தது. அதைக் கடந்தது புத்தி. அந்த ஸத்வம் என்ற புத்திக்கும் மேல்பட்டது மஹத்: அதற்குப் புத்தி தொண்டுசெய்கிறது. அந்த மஹத்திற்கு மேல் அவ்யக்தப் பொருள். அதைக் கடந்து நிற்பதே புருஷோத்தமன். அவன் எங்கும் பரவி அலிங்கமாக இருக்கிருன். அவனையறிந்த மானிடன் முக்தியடைகிருன். சாகா நிலையையுமடைகிருன்.

நசிகேதஸ் :— முக்தி அடைவதைப் பின்னும் சாகா நிலையை அடைவதை முன்னும் அல்லவோ வைக்க வேண்டும்?

யமதர்மர் :—நல்ல ஸாதுவான கேள்வி நசிகேதா! மிகவும் ஸந்தோஷம். இலக்கணத்துக்கு அடங்காத புருஷோத்தமனை - ஸம்ஸார தர்மங்கள் ஒன்றும் இல்லாதவனை - ஆசார்யர் மூலமாகவும் சாஸ்திரங்கள்

மூலமாகவும் அறியவேண்டும். அறிந்தவுடன் ஜீவனுடன் இருக்கும்போதே அக்ஞானம் முதலான இதய முடிச்சுகளிலிருந்து விடுதலை அடைகிறான். இதுவே ஜீவன் முக்தி. அதன்பின் சரீரத்தைவிட்டு அமரத்துவம் அடைகிறான்.

நசிகேதஸ் :— ஒரு லக்ஷணத்துக்கும் எட்டாத புருஷோத்தமனை எட்டுவது எங்ஙனம் ?

யமதர்மர் :— அவனை எவனும் கண்ணால் காண்பதில்லை. அவன் உருவம் கண்முன் நிற்காது. மற்றப் புலன்களாலும் அறியமுடியாது. நிச்சயமான புத்தியாலும் மனத்தாலுமே அவனை அறிந்து அடையலாம். இதை அறிந்தவர்கள் இறவாத்தன்மை எய்துகின்றனர்.

ச்ரவணர் (2) :— பார்வைக்கு அடங்காத ஆத்மாவை-ஒருவர் கண்களுக்கும் த்ருஷ்டிகோசரமாகாத ஆத்மாவை — இதயத்தில் கலக்கமின்றி நிறுத்தப்பட்ட புத்தியாலும், சஞ்சலமற்ற மனத்தாலும் காணலாம். ஸங்கல்பம் ஒன்றுமின்றி மனதை அடக்கி, புத்தியையும் கட்டுப்படுத்தி இதய ஸ்தானத்தில் நிறுத்தித் தியானம் செய்தால் ஆத்மாவை அறியலாம். அந்த ஆத்மாவையே பிரஹ்மம் என்று தெரிந்தவன் அமரன் ஆகிறான்.

யமதர்மர் :— இந்தப்படி புத்தியையும் மனத்தையும் அடக்க யோகம் பயிலவேண்டும். ஞானேந்திரியங்கள் ஐந்தும் மனத்துடன் அசையாது நிற்கப்பயிலவேண்டும். அப்போது புத்தியும் தொழில் அற்றுப்போகும். மனம் உள்நோக்கிக் குவியும். அதையே உயர்ந்த நிலையான யோகம் என்பர். அந்த நிலையை அடைந்தவன் இந்திரியங்களின் வசமாகி மயங்காமல் ஜாக்கிரதையாக இருப்பான்.

ச்ரவணர் (1) :— புலன்களைத் திடமாக அடக்கி, மனமும் புத்தியும் சஞ்சலமற்று நின்றால் அதுவே யோக நிலையாகும். அதைத்தான் உயர்நிலை என்று சொல்வார்

கள். அந்த நிலையில் மனம் ஸர்வ அனர்த்தங்களி லின்றும் பிரிந்து, ஆத்மாவுடன் கூடுகிறது. அதுவே யோகம். அப்போது ஸாதகன் பிரமாதம் இல்லாமல் கவனத்துடன் இருத்தல் வேண்டும். ஏனெனில் யோகத்தால் உயர்வு ஏற்படுவதுடன் அதை நிறை வேற்றுவதில் மிகுந்த அபாயங்களும் உள்ளன.

சிரவணர் (2):— புலன்கள் மனதை இழுத்துச் செல்லும். மனம் புத்தியை இழுக்கும். ஆகையால் ஜாக்ரதையாக இருந்து புத்தியையும் மனதையும் அடக்கி புலன்களையும் அடக்கவேண்டும். ஆமை யானது தன் அங்கங்களை உள்ளே இழுத்துக்கொள்வது போல் யோகியானவன் இவைகளை அடக்கவேண்டும். இந்தப் பரமமான நிலையை எய்தினுல் ஆத்மாவைக் காணலாம். ஆனால் அந்தக் காட்சி ஸூர்யனைப்போல் தோன்றி மறையும். யோக நிலையில் எப்பொழுதும் இருப்பது மிகவும் கடினம்.

யமதர்மர் :— ஸாதகன் யோக நிலையையடைவான். ஆத்மாவைக் காண்பான். மறுபடியும் உலகத்திற்குத் திரும்பிவருவான். மறுபடியும் அவ்வுயர்ந்த நிலையைப் பெறலாம். திரும்பவும் நழுவவிடலாம். இப்படிச் சரீர யாத்திரை உள்ளவரையில் நடக்கும். ஆகையால் யோகநிலையடைந்தவன் ஸர்வஜாக்ரதையுடன் அதை நழுவவிடாமல் காப்பாற்றிவரவேண்டும். அவ்வான்மா வாக்காலும் மனதாலும் கண்ணாலும் அடையமுடியாதது. எனினும் ஆத்மவஸ்து உண்டு என்று கூறும் ஞானி களிடமிருந்துதான் அதையறியவேண்டும். வேறு வழி யில்லை.

சிரவணர் (1):— நம்மிடமுள்ள ஞானக் கருவிகள் ஒன்றினாலும் ஆத்மாவையறியமுடியாமல் போனாலும் கூட இப்பரந்த உலகிற்குக் காரணமாக ஸத்வஸ்து ஒன்று உள்ளது. அது இல்லாவிடில் இவ்வுலகம் தோன்றியிருக்க முடியாது என்பதை முதலில் தெரிந்து

கொள்ளவேண்டும். இந்த ஜகத்காரண வஸ்துவை முதலில் தெரிந்துகொண்டவனுக்குத்தான் அதன் உண்மை தத்வம் அதாவது நிர்குண ஸ்வரூபம் புலப்படும். பரமாத்மாவை ஒருவன் இல்லையென்று கருதினல் அவன் இல்லாதவனுகவே ஆகிவிடுகிருன். அவன் ஆத்மாவையடைவது எங்ஙனம்?

ச்ரவணர் (2) :— இந்த மெய்ப்பொருள் வாக்கு, எண்ணம், காட்சி இவைகளுக்கப்பாற்பட்டது. தன் தன் உள்ளத்தில் இதைக் கண்டே 'ஆம் உண்டு" என்று சொல்லவேண்டும். வேறுவிதத்தில் உணர முடியாது. ஐம்புலன்களுக்கும் மூலகாரணமான வஸ்துவை அந்தப் புலன்களால் எப்படிப் பார்க்க முடியும்? முடியாது. உண்டு என்று எண்ணிய ஒரு ஸாதகன் ஆரம்பதசையில் ஸ்குணப்ரஹ்மத்தையே காண விரும்புகிருன். ஆயினும் கடைசியில் நிர்குணமான அருவுருவுகளுக்கு அப்பாற்பட்டது, நினைவுக்கும் வசனத்துக்கும் எட்டாததுமான பிரஹ்மத்தையே அறிகிருன். அதுவும் அது தானுகவே காட்டிக் கொடுத்தலால், தானே வெளிப்படுதலால்.

யமதர்மர் :— இப்படிப் பலவாருக ஆராய்ந்தபின் நாம் அனைத்துக்கும் காரணமான பரம்பொருள் ஒன்று உண்டு என்ற முடிவுக்கு வந்திருக்கிருேம். இந்த எண்ணம் உறுதியானல் அதைக்காணவும் பெறலாம். இந்த ஊனக்கண்ணுல் அல்ல. சாதாரண முறையில் அது திருஷ்டிக்குக் கோசரமாகாது. மனத்தாலும் கருத முடியாது. எந்த மொழியாலும் பேசமுடியாது. எப்போது இவன் இருதயத்தில் பொதிந்துள்ள ஆசைகள் எல்லாம் ஒழிகின்றனவோ அப்போது சாகும் இயல்புள்ள மனிதன் சாகாதவனுகிருன். பிரம்மத்தை அநுபவிக்கிருன். ஆனந்தம் அடைகிருன். அணைந்த தீபம்போல் சகல பந்தங்களும் நிவர்த்தியாய் விட்டதால் பிரஹ்மத்தை அடைகிருன். பிரஹ்மமாகவே ஆகிருன்.

ச்ரவணர் (1) :— இதயத்தைப் பற்றி நிற்கும் விருப்பங்கள் (வெறுப்பும் அடங்கும்) நீங்கியவுடன் மனிதன் இறவாநிலை பெற்று பிரஹ்மமாகிறான். ஆத்ம ஸாக்ஷாத்காரத்துக்குமுன் அவன் மரண தர்மத்திற்கு அடங்கியிருந்தான். ஆத்மஞானம் உண்டானவுடன் அக்ஞானம், ஆசை, கர்மங்கள் முதலியவைகளின் உருவம்கொண்ட ம்ருத்யு நாசமடைய அவன் அமரனாகிறான்.

நசிகேதஸ் :— ஆசைகள் மட்டும் ஒழிந்தால் போதுமா? வாஸனைகளும் வேருடன் மாயவேண்டும் அல்லவா?

யமதர்மர் :— ஆம்! இதயத்தைக் கட்டுப்படுத்தும் முடிச்சுகளும் இங்கேயே அவிழ்ந்து போகின்றன. எல்லாக்கிரந்திகளும் (முடிச்சுகள்) அவிழ்ந்தவுடன் மரண தர்மத்தைவிட்டு விடுதலை பெற்று இறவாத நிலையை அடைகிறான். இதுவே ஸகல வேதாந்தங்களின் உபதேசமும் ஆகும்.

ச்ரவணர் (2) :— முடிச்சுகள் என்பது பற்றுக்களும் மோகங்களும். இவைகள் நீங்கப் பந்தம் நீங்கும், ஆசைகளும நீங்கும். வாசனைகளும் அழியும். அவன் பிரஹ்மத்தை அடைவான்.

யமதர்மர் :— "நான் இந்த சரீரம், இது எனது தனம், நான் ஸுகமாயிருக்கிறேன்?" என்பன போன்ற, அக்ஞானத்தினால் தோன்றும் அனுபவங்களைத் தள்ளி விடவேண்டும். அவைகளை விலக்கிவிட்டு, "நான் அஸம்ஸாரியான பிரஹ்மமே" என்று எண்ணவேண்டும். அப்போது, இதயத்தைப் பந்தப்படுத்தும் முடிச்சுகள் அறுக்கப்படும். அவனும் அமரனாவான். தவிரவும் இதயத்தில் 101 நாடிகள் இருக்கின்றன. அதில் ஒன்று தலையின் உச்சி நோக்கிப் பாயும். அதன் வழியே மேலே சென்றால் சாசுவதமான பிரஹ்மலோகத்தை

அடையலாம். மற்ற நாடிகளெல்லாம் மீண்டும் ஜனன மரணத்துக்கே காரணமாகின்றன.

ச்ரவணர் (1):— 101 நாடிகளுள் ஸுஷும்நா என்ற ஒரு நாடிதான் பிரஹ்மலோகத்தை அடைவிக்கிறது. மற்றவை பற்பல ஆசைகளைப் பற்றிநிற்கும். அவைகள் வகுத்த வழி சென்று ஜீவன் வெளியேகினுல் விடுதலை இல்லை. அதாவது ஆசைகளையும் பற்றையும் விடாமல் உயிர்நீத்தால் மறுபடியும் ஜனனமும் மரணமும் அடைந்து உழலவேண்டியதுதான். ஆனுல் பிரஹ்மத்தை நாடி உச்சித் தலை வழி செல்லும் நாடி மூலம் வெளியேகினுல் பிரஹ்மலோகம் சென்று அவருடன் பிரஹ்மத்தை அடையலாம். ஆனுல் இதுவும் ஸகுணப் பிரஹ்மஸ்வரூபத்தை தியானம் செய்யும் உபாஸகனுக்குத்தான்.

யமதர்மர்:— உடலில் உறையும் அந்தராத்மாவான புருஷோத்தமன் கட்டைவிரல் அளவு உள்ளவனுக எப்பொழுதும் ஜனங்களின் இதயத்தில் வீற்றிருக்கிருன். புல்லிலிருந்து ஈர்க்கை உருவியெடுப்பதுபோல் உடலிலிருந்து அவனைப் பிரித்தெடுக்கவேண்டும். அவனையே சுத்தனென்றும் அமிருதனென்றும் அறியவேண்டும். இவ்வாறு அறிந்தவன் ஓரிடமும் செல்வதில்லை. இங்கேயே முக்தனுகிவிடுகிருன்.

ச்ரவணர் (2):—புருஷோத்தமன் தன் உருவத்தையும் சக்தியையும் குறுக்கிக்கொண்டு மனிதன் உள்ளத்தில் எப்போதும் என்றும் இருக்கிருன். பாம்பு சட்டையை உரித்துக்கொண்டு வெளிப்படுவதுபோல், உறுதியான மனோநிலையுடன், அவனை மூடி மறைக்கும் பற்றுக்களை ஒவ்வொன்ருகக் கழற்றிக் கழற்றித் தள்ளிப் பரம் பொருளைக் காணவேண்டும். மாசற்றதும் மரணம் இல்லாததுமான பிரம்மம் அதுவேகாண். அதுவேகாண்.

நசிகேதஸ்:—(எழுந்திருந்து தர்மராஜருக்கு அபிவாதனம் செய்து சொல்லுகிருன்). குருநாதரே! தங்களருளால்

நான் ஞானமடைந்துவிட்டேன். எனது மோஹங்கள் ஒழிந்துவிட்டன. இதய முடிச்சுகளும் அற்றுவிட்டன. ஐயங்கள் நீங்கி நான் மிகவும் உறுதியாகப் பிரஹ்மத்தில் நிலைத்திருக்கிறேன். உமது சொற்படி நடந்துவருவேன். உமக்குப் பன்முறை நமஸ்காரம் செய்கிறேன்.

யமதர்மர் :— அப்பா! குழந்தாய் நசிகேதா! இந்த உபதேசத்தை உனக்கு ஸந்தோஷத்துடன் வரமாக அருளினேன். இதை நீ தவமில்லாதவனுக்கும், பக்தி இல்லாதவனுக்கும், ஸேவை செய்யாதவனுக்கும், என்னை இகழ்பவனுக்கும் (என்னை என்பது இங்கே ஆத்மாவைக் குறிக்கிறது) சொல்லவேகூடாது யார் இதைச் சரியான அதிகாரிகளுக்கு உபதேசிக்கிருனே அவன் பரமமான கதியையடைகிருன். இதில் ஐயமில்லை.

ச்ரவணர் (1) :— இவ்வத்யாத்ம தத்வத்தையறிந்த எவனும் பிரஹ்மத்தையடைந்து எல்லா மலங்களும் நீங்கப்பெற்று சாவையும் தாண்டுகிருன்.

(எல்லோரும் எழுந்து பாடுகின்றனர்.)

ऊर्ध्वमूलोऽवाक्शाख एषोऽश्वत्थः सनातनः ।
तदेव शुक्रं तद्ब्रह्म तदेवामृतमुच्यते ।
तस्मिँल्लोकाः श्रिताः सर्वे तदु नात्येति कश्चन । एतद्वै तत् ॥

यदिदं किंच जगत्सर्वं प्राण एजति निःसृतम् ।
महद्भयं वज्रमुद्यतं य एतद्विदुरमृतास्ते भवन्ति ॥

भयादस्याग्निस्तपति भयात्तपति सूर्यः ।
भयादिन्द्रश्च वायुश्च मृत्युर्धावति पञ्चमः ॥ ३ ॥

नैव वाचा न मनसा प्राप्तुं शक्यो न चक्षुषा ।
अस्तीति ब्रुवतोऽन्यत्र कथं तदुपलभ्यते ॥

यदा सर्वे प्रभिद्यन्ते हृदयस्येह ग्रन्थयः ।
अथ मर्त्योऽमृतो भवत्येतावद्ध्यनुशासनम् ॥

अङ्गुष्ठमात्रः पुरुषोऽन्तरात्मा सदा जनानां हृदये संनिविष्टः ।
तं स्वाच्छरीरात्प्रवृहेन्मुञ्जादिवेषीकां धैर्येण ।
तं विद्याच्छुक्रममृतं तं विद्याच्छुक्रममृतमिति ॥

सह नाववतु । सह नौ भुनक्तु । सह वीर्यं करवावहै ।
तेजस्वि नावधीतमस्तु मा विद्विषावहै ॥

ओं शान्तिः शान्तिः शान्तिः ।

ஊர்த்வ மூலோऽவாக்சாக ஏஷோऽச்வத்த: ஸநாதந: ।
ததேவ சுக்ரம் தத் ப்ரஹ்ம ததேவாம்ருதமுச்யதே ।
தஸ்மின் லோகா: ச்ரிதா: ஸர்வே தது நாத்யேதி
கஸ்சந । ஏதத் வை தத் ॥

யதிதம் கிம் ச ஜகத் ஸர்வம் ப்ராண ஏஜதி நிஸ்ஸ்ருதம் ।
மஹத் பயம் வஜ்ரமுத்யதம் ய ஏதத் விதுரம்ருதாஸ்
தே பவந்தி ॥

பயாதஸ்யாக்நிஸ் தபதி பயாத் தபதி ஸூர்ய: ।
பயாதிந்த்ரஸ்ச வாயுஸ்ச ம்ருத்யுர் தாவதி பஞ்சம: ॥

நைவ வாசா ந மநஸா ப்ராப்தும் சக்யோ ந சக்ஷுஷா ।
அஸ்தீதி ப்ருவதோऽந்யத்ர கதம் ததுபலப்யதே ॥

யதா ஸர்வே ப்ரபித்யந்தே ஹ்ருதயஸ்யேஹ க்ரந்தய: ।
அத மர்த்யோऽம்ருதோ பவத்யேதாவத்த்யநுசாஸநம் ॥

அங்குஷ்டமாத்ர: புருஷோऽந்தராத்மா
ஸதா ஜநாநாம் ஹ்ருதயே ஸந்நிவிஷ்ட: ।
தம் ஸ்வாத் சரீராத் ப்ரவ்ருஹேன்
முஞ்ஜாதிவேஷீகாம் தைர்யேண ।

தம் வித்யாத் சுக்ரமம்ருதம் தம் வித்யாத்
சுக்ரமம்ருதமிதி ॥

ஓம் ஸஹ நாவவது । ஸஹ நௌ புநக்து । ஸஹ வீர்யம் கரவாவஹை । தேஜஸ்வி நாவதீதமஸ்து மா வித்விஷாவஹை ।

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

(திரை விழுகிறது)

காட்சி 5

(திரை விலகுகிறது)

[தர்மராஜாவின் அரண்மனை வாசல். ஒரு விமானம் புஷ்பங்களால் நன்கு அலங்கரிக்கப்பட்டு வீதியில் நிற்கிறது. யமதர்மர், யமபத்னீ முதலியவர்களிடம் நசிகேதஸ் பிரியா விடைபெறும் காட்சி. நசிகேதஸ் எல்லோரையும் தனித் தனியாக வணங்குகிறுன்.

நசிகேதஸ் :—குருநாதரே! தாயே! பெரியோர்களே! உங்கள் எல்லாருக்கும் என் அபிவாதனங்கள். நான் தெரிந்தும் தெரியாமலும் ஏதாவது அபசாரங்கள் செய்து இருந்தால் அவைகளை க்ஷமித்து என்னை ஆசீர்வதித்து அனுப்புங்கள். விடை தாருங்கள்.

யமதர்மர் :— வத்ஸா! உனக்கு ஸர்வமங்களங்களும் உண்டாகட்டும். வேதம் உள்ள அளவும், வேதகீதம் உள்ள அளவும், நாதம் உள்ள அளவும், நா உள்ள அளவும், நின் நற்கீர்த்தி, நாநிலம் எங்கும், நால் திசைகளிலும் முழங்கட்டும் விடை தந்தனம். சுகமாக இந்த விமானத்தில் ஏறிப்போவாயாக. சித்திரகுப்தரே, நீர் கூடப்போய் விட்டுவாரும்.

தர்மராஜரின் பத்னீ :— குழந்தாய், உன்னை என்னுல் மறக்கவேமுடியாது. நீ இங்கே இருந்தது சில நாட்களே ஆயினும் பல யுகங்கள் இருந்து பழகியது போல்

எங்களுடன் அந்நியோன்னியமாகவும் நெருங்கியும் பழகி ஒன்றிவிட்டாய். உன்னைப்பிரிவது மிகவும் சங்கடமாகத்தான் இருக்கிறது. ஆனாலும் உன்னை நினைத்து வாடும் உன் பெற்றோர்களை எண்ணும் போது நீ பூவுலகத்துக்கு உடன் போகவேண்டியது அவசியமும் அவசரமும் தான். என் அன்பும் அபிமானமும் உனக்கு எப்போதும் இருக்கும். உன் பாக்கிய சாலியான மாதாவிடம் என் வணக்கத்தைத் தெரிவிப்பாய்.

நசிகேதஸ் :— அப்படியே ஆகட்டும் அம்மணீ !

யமதர்மர் :— குழந்தாய் ! முதல் நாளிலேயே உனக்குப் பரிசாகத் தந்த ரத்நஹாரத்தைக் கண்டத்தில் அணிந்துகொள். (முகத்தில் அணிவிக்கிறார்) ச்ரவணர்களே ! பார்த்தீர்களா ! உபேந்திரமூர்த்தியின் மார்பில் ஒளிரும் கௌஸ்துபமணிபோல் அதிக சோபையுடன் விளங்குகிறது இந்த மணிமாலை.

ச்ரவணர்கள் :— ஆமாம் ! மஹாராஜா ! நசிகேதா, நீ பூலோகம் சென்றவுடன் எங்கள் பணிவான நமஸ்காரங்களை உன் தந்தைக்குத் தெரிவிப்பாயாக. எங்கள் மனமார்ந்த ஆசிகள் உனக்கு எப்போதும் உரித்தாகும். நீ கற்ற பிரஹ்மவித்யையை, நம் மஹாராஜாவின் கட்டளைப்படியே, தகுந்த அதிகாரிக்கு உபதேசம் செய்வாயாக.

சித்திரகுப்தர் :— ப்ராஹ்மணோத்தமரே ! நீங்கள் சென்றபின் இந்தப் பட்டணமே சோபை இழந்துவிடும். நிலவு இல்லாத நிசிபோலும், மின்னல் இல்லாத முகில் போலும் இந்த நகரம் சீர் அழிந்துவிடும். உம்மைப் பிரிவதில் எனக்கும் வருத்தம்தான். ஆயினும் என் செய்வது ? க்ஷேமமாகப் போய்ச்சேருங்கள். நானும் விமானத்தில் கூடவந்து வழி அனுப்புகிறேன்.

பாசஹஸ்தன் முதலிய யமபடர்கள் :— ஸ்வாமீ ! எங்கள் அன்பார்ந்த வணக்கங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

நாங்கள் அறிந்தும் அறியாமலும் செய்திருக்கும் பிழைகளை எல்லாம் பொறுத்தருளவேண்டும். எங்களை ஆசீர்வாதம் பண்ணவேண்டும். (எல்லாரும் நசிகேதஸை வணங்குகிறார்கள்)

நசிகேதஸ் :— குருநாதரே! என் அருமைத்தாயே! மெய்யன்பர்களே, தூதுவர்களே, நான் புறப்படுகிறேன். எனக்கு விடைகொடுங்கள்.

(என்று கூறி சித்ரகுப்தருடன் விமானத்தில் ஏறுகிறான். அப்போது யமபடர்கள ஜயகோஷமிடுகின்றனர்)

யமபடர்கள் :— நசிகேதஸுக்கு ஜே!

பாசஹஸ்தன் :— ஜய விஜயீ பவ! நசிகேதஸ் புகழ் ஓங்குக. (யமராஜ பத்னீ கண்ணைப் புடவைத் தலைப்பால் துடைத்துக்கொள்கிறாள்.)

மற்றவர்கள் :— நசிகேதன் நாமம் வாழ்க; நாசிகேதாக்னி வளர்க; நசிகேதஸுக்கு ஜே! ஜய விஜயீ பவ; (புஷ்பமாரி தூவுகின்றனர்),

(விமானம் புறப்படுகிறது. திரை விழுகிறது.)

நான்காவது அங்கம் முற்றும்.

ஐந்தாவது அங்கம்

காட்சி 2

(திரை தூக்கப்படுகிறது)

[இமாசலப் பிரதேசத்தில் வாஜ சிரவஸ்ஸின் ஆசிரமம். திண்ணையில் வாஜசிரவஸ்ஸும் வஸுமதியும் சோகமே உருவாக அமர்ந்து உரையாடிக்கொண்டிருக்கின்றனர். அர்ஜுன மரத்தடியில் கட்டியிருக்கும் விருஷபக் கன்றுக்கு அக்னிவேசர் புல் ஊட்டுகிறார். பக்கத்தில் பூச்செடிகளுக்கு ஸத்யாஷாடர் நீர் ஊற்றுகிறார். ஆசிரமமும் அதைச் சூழ்ந்துள்ள இடமும் சோபை இழந்து காட்சி அளிக்கின்றன. ரவி உதயமாய்ச் சுமார் 10 நாழிகையிருக்கும்.]

வஸுமதி :— ஆர்ய புத்திரரே! புத்திரனைப்பிரிந்திருக்க என்னால் முடியாது. உயிரை விட்டாவது அவனைக் காணத் தவிக்கிறது என் உள்ளம். என் பிராண நாதரே! உங்கள் உத்தரவுக்கு எதிர்நோக்கும் ஏழைக்கு இரங்கி அனுமதிதரவேண்டும்.

வாஜசிரவஸ் :— பிரியே! என்னை இங்கே தவிக்கவிட்டு நீ போவது நியாயமா? தர்மபத்னிக்கு இது அழகு அல்லவே. மானிட வாழ்க்கையில் பிறப்பும் இறப்பும் விதிப்படி நிகழ்கின்றன. அது பொய்யாகுமா?

வஸுமதி :— சென்றுபோன இந்த மூன்று வருஷங்களிலும் அவன் வருவானென்று எதிர்பார்த்தேன். அவன் வரவில்லை. ஒவ்வொரு நாளும் ஏமாற்றமே. இலவுகாத்த கிளியானேன். நான் கொடிய நரகவேதனையில் சிக்குண்டு துன்புறுவது உங்களுக்குத் தெரியவில்லையா ஸ்வாமி!

வாஜசிரவஸ் :— வஸுமதி, எனக்கு மட்டும் துக்கம் இல்லையா? நான் உன் முன்னிலையில் துயருற்றால் உன்னால் தாங்கமுடியாதே என்றுதான் அடக்கிக் கொண்டிருக்கிறேன். நான் இரவில் தூங்கி வெகு நாட்களாகிவிட்டன.

வஸுமதி:— என் பிராணநாதரே! தாங்கள் ராத்ரியில் நித்ரையில்லாமல் கண்விழித்துக் கஷ்டப்படுவதை அடியாள் அறிவேன். நமக்கும் நம் புத்ரனுக்கும் யமன் ரூபமாகவல்லவா விசுவஜித் என்னும் யாகம் முளைத்தது. நன்ருயிருக்கிறது யாக பலன்?

வாஜசிரவஸ்:— (கோபத்துடன்) வஸுமதி! என்ன சொன்னுய்! நிதானம் இழக்காதே. வருவது வந்தே தீரும். நம்மால் ஆவது ஒன்றும் இல்லை. இதற்காக மனம் போனபடி பிதற்ருதே. உடைந்த மனதைத் தேற்றிக்கொள். ஹே நசிகேதா! ஸத்தியவிரதா! என் தர்மம் வீண் போய்விட்டதா? அதிருஷ்டவசத்தால் நேற்று இரவில் நன்ருகத்தூங்கினேன். அப்போது ஒரு நல்ல கனவு கண்டேன. வஸுமதி, நீயும் அதைக் கேள். எல்லோரும் வாருங்கள்! (ஆசிரமவாசிகள் அருகே வருகின்றனர்.) நம் குமாரனை வெருவும் கூற்றம் பண்ணெடு பல புகழ்ந்து பேசினுன். வரம் அருளினுன். விமானததில் ஏற்றி இங்கே அனுப்பினுன்! நம் புத்திரன் விமானத்தில் ஏறி பவனியாக வருவதையும் கண்டேன். பின் திடீரெனக் கண் விழித்தேன். பிராஹ்ம முஹூர்த்தம் ஆய்விட்டிருந்ததால் உடனே அனுஷ்டானங்களுக்கு வெளியே சென்றேன்.

அக்னிவேசர்:— குருநாதரே! விடியற்காலையில் கண்ட கனவு கட்டாயம் பலிக்குமல்லவா!

ஸத்யாஷாடர்:— நசிகேதஸ் இல்லாமல் இந்த ஆசிரமமே சூன்யமாகத்தோன்றுகிறது.

அக்னிவேசர்:— நம் நண்பர் இல்லாத பிரதேசங்கள் வெறிச்சோடியிருக்கின்றன. மணம் இல்லாத மலர் போலவும், நரம்பு இல்லாத யாழ்போலவும், வேதவிதி இல்லாத யக்ஞம் போலவும் ஒளியற்றுக்கிடக்கின்றன.

ஸத்யாஷாடர்:— என் மனத்தில் ஏதோ ஒன்று சொல்லுகிறது—அவர் இன்று வருவார் என்று. யக்ஞேசுவரா! அதை உண்மையாகச் செய்வாய்.

வஸுமதி :— ஐயோ ! என் செல்வம் வரவில்லையே ! என்னால் துயரம் தாங்கமுடியவில்லையே. சோகம் நெஞ்சை அடைக்கிறதே.

(மூர்ச்சையாகிறாள். ஆச்ரமவாஸிகள் சைத்யோபசாரம் செய்ய, எழுந்து ஆசமனம் செய்து, விபூதி இட்டுக்கொண்டு தியானிக்கிறாள். உடனே சட்டென சுபசகுனங்கள் தோன்றுகின்றன.)

வஸுமதி:— எனது பிராண நாதரே ! என் முகம் மலர்ந்து இடது கண்ணும் புஜமும் துடிக்கின்றன. இடது தொடையும் போட்டி போட்டுக்கொண்டு துடிக்கிறது. மனமும் நிர்மலமாகப் பிரஸன்னமாக இருக்கிறது. வன தேவதைகளே ! கருணை புரியுங்கள். என் குமாரனை என்னிடம் சேர்த்துவையுங்கள். ஸ்வாமி, எனது இடது தோளும் நன்றாகத் துடிக்கிறது. கட்டாயமாக நம் புததிரன் இப்போது வந்துவிடுவான். அதில் ஐயமில்லை.

வாஜசிரவஸ்: — பிரியே ! நீ கூறுவது முற்றும் சரியே! நானும் நற்குறிகளைக் காண்கிறேன். என்னுடைய வலக்கண்ணும் வலது தோளும் வலது தொடையும் துடிக்கின்றன. நாம் அனுஷ்டித்த தர்மம் பயனற்றுப் போகாது. நம் நசிகேதன் இப்போதே வருவான். இது திண்ணம்.

அக்னிவேசர் :— இதோ மேல் கிளையில் இருக்கும் பறவையும் இனிமையான குரல் எழுப்பி பந்துவின் வரவை உணர்த்துகிறது பாருங்கள் !

ஸத்யாஷாடர் :— அதுமட்டுமா ! (மேலே பார்த்து) இதோ கருடன் பறந்து வட்டமிடுகிறான். நம் தோழர் இதோ வந்துவிட்டார்.

(ஒருபுறத்தில் கொஞ்சதூரத்தில் விமானம் நிற்கிறது. நசிகேதன் கீழே இறங்குகிறார். நசிகேதன் கைகூப்பி வணங்கச் சித்ரகுப்தரும் பதிலுக்கு வணக்கம் தெரிவிக்கிறார். விமானம் சித்ரகுப்தருடன் மறைகிறது. நசிகேதஸ் ஆச்ரமத்தை

நோக்கி ஓடிவருகிறார். அக்நிவேசர் அவனை அழைக்கச் செல்கிறார். விருஷபக் கன்றும் கட்டை அறுத்துக்கொண்டு ஓடுகிறது.

ஸத்யாஷாடர் :— (ஆனந்தமேலீட்டால் ஆடிப் பாடுகிறார்.)

1. வந்தனன் எம்முடை மாதவப் பயன்
வந்தனன் எம்முடை வழிபடும் தெய்வம்
வந்தனன் எம்முடை ஆவி வாழ்வுற
வந்தனன் எம்முடை வண்ணத் தோழனே.

2. ஐயன் வந்தனன்! ஆரியன் வந்தனன்
கௌதமன் வந்தனன், களிப்புற வந்தனன்
தூயவன் வந்தனன், தோழன் வந்தனன்
கோதிலான் வந்தனன், குவலயம் வாழ்வுற.

பெற்றோர் :— வத்ஸா! குழந்தாய்!

நசிகேதஸ் :— அம்மா! அப்பா!

(பெற்றோர் பாதங்களில் விழுந்து வணங்கும் நசிகேதனை இருவரும் எடுத்து அணைத்து உச்சிமோந்து ஆனந்தபாஷ்பத்தால் நீராட்டுகின்றனர்.)

வாஜசிரவஸ் :— வஸுமதி, நம் குமாரன் முகத்தைப் பார்த்தாயா? ராஹுவினின்றும் வெளிப்பட்ட பூர்ண சந்திரனைப்போல் புத்தொளியுடனும், அன்றலர்ந்த செந்தாமரைபோலும் விளங்குகிறது அவன் திருமுக மண்டலம்.

அக்னிவேசர் :— ஆம் என்ன தேஜஸ்! என்ன காம்பீர்யம்!

ஸத்யாஷாடர் :— மூன்று வருஷங்களில் நம் நண்பர் என்னமாக மாறிவிட்டார்! அமிருதம் சாப்பிட்டிருக்கிறார் போல் இருக்கிறது.

வஸுமதி:— "அனேக காலம் வருத்தத்துடன் வாழ்ந்த எந்தத் துர்ப்பாக்கியனுக்கும் புலகாலம்

கழித்தாவது ஒருநாள் வருத்தம் தீர்ந்து ஆனந்தம் உண்டாவது ஸஹஜம்'' என்னும் முதுமொழி என் விஷயத்தில் உண்மையாயிற்று இன்று. நசிகேதா! என் செல்வமே! என் ஆருயிரே! வருக நீ அருகே; மதுரவாசகம் தருக நீ, என் இரு செவி தழைக்க; தழுவுக உன் உடலம்; தேன் உறப்பவளவாய் வழங்குக.

(நசிகேதஸ் எல்லோருக்கும் வணக்கம் செலுத்தித் தோழர்களைத் தழுவிக்கொள்கிறார். எல்லோரும் சேர்ந்து ஆச்ரமத்திற்குள் போகிறார்கள். நசிகேதஸ் மட்டும் வெளிவந்து விருஷபக்கன்றைத் தடவிக்கொடுத்துவிட்டு உள்ளே பிரவேசிக்கிறார்.)

(திரை விழுகிறது)

காட்சி 2

(திரை விலகுகிறது)

[கங்கா தீரத்தில் பெரிய பந்தல் போடப்பட்டு மாவிலைத் தோரணங்களாலும், வாழைமரங்களாலும், தென்னை ஓலைத் தளிர்களாலும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. ஓர் உயர்ந்த பீடம் போடப்பட்டு அதில் வாஜசிரவஸ்ஸும் அவர் பத்னியும் உட்கார்ந்திருக்கின்றனர். பக்கத்தில் நசிகேதஸும் மற்றும் சிஷ்யர்களும் நிற்கின்றனர். கீழே ஒருபுறத்தில் தர்பாஸனத்தில் முனிபுங்கவர்களும், பிராஹ்மணோத்தமர்களும், தீக்ஷிதர்களும் உட்கார்ந்திருக்க, மற்றொரு பக்கத்தில் ரிஷிபத்னிகளும், தீக்ஷிதர்களின் பத்னிகளும் மற்றும் பெண் மணிகளும் அமர்ந்திருக்கின்றனர். சிஷ்யர்களும் சிறுவர்களும் அடக்கமாகவும் கட்டுப்பாடுடனும் அமர்ந்திருக்கின்றனர். பந்தலுக்கு வெளியிலும் ஜனங்கள் கூடி நிற்கின்றனர். பெருங்கூட்டமாக இருந்தாலும் நிச்சப்தமாயும் அமைதியாயும் இருக்கிறது. பூர்ணகும்பங்கள், புஷ்பங்கள் முதலிய மங்களத் திரவியங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.]

முதல் ரிஷி :—(எழுந்து) பெரியோர்களே! இன்று இங்கு விஜயம்செய்திருக்கும் எல்லோருக்கும் ஸ்வாகதம். நாம் இங்கே கூடியிருக்கும் காரணம் நீங்கள் அறிந்ததே.

நம் எல்லோருடைய அன்புக்கும் அபிமானத்துக்கும் பாத்திரனுன சிரஞ்ஜீவி குமாரன் நசிகேதஸையும் அப்படிப்பட்ட ஸத்புத்திரனைப் பெற்றெடுத்து, உலகத்துக்கு ஈந்த பாக்கியசாலிகளான குலபதி வாஜசிரவஸ் தம்பதிகளையும் கௌரவித்து ஆசீர்வதிப்பதற்கேயாகும். என் மனப்பூர்வமான மங்களாசம்ஸைகள் அவர்களுக்கு உரித்தாகும்.

பிரம்மரிஷி :— இன்று நம் மனித உலகத்துக்கே நன்னுள். இமயத்தில் பொறித்துவைக்கவேண்டிய பொன்னுள். யம உலகத்திலிருந்து மீண்டுவந்த நசிகேதனை கௌரவிப்பது நம்மையே கௌரவித்துக் கொள்வது ஆகும். அவன் அடைந்த வெற்றியானது மனிதனின் வெற்றியாகும். அதன் பயன் மானிட ஸமுதாயம் பூராவுக்கும் சொந்தமானதே. அவன் புகழ் வாழ்க.

தீக்ஷிதர் :— அவனுக்குத் தர்மராஜதானியில் நடந்த உபசாரங்களையும், கிடைத்த வரங்களையும் கேட்கக் கேட்க ஆச்சர்யமும் மகிழ்ச்சியும் உண்டாகின்றன. "நாசிகேதாக்னி சயனத்தை"ச் செய்தே நாம் இனி ஸ்வர்க்கபோகம் அடையலாம். நம் நன்றியும் ஆசியும் அவனுக்கு என்றும் உரித்தாகுக. மும்முறை அந்த வேள்வியைச் செய்தால் அடையமுடியாத லோகங்கள் உண்டோ? அதன் பெருமையே பெருமை!

ரிஷி (2) :— இஹத்துக்கும் பரத்துக்கும் வேண்டிய வரங்களைப் பெற்றதுடன் அல்லாமல் நசிகேதன் பிரஹ்ம ஞானமும் பெற்ருன். அவன் திரும்ப வந்தது நம் பாக்யமே. நம்மிடமுள்ள கருணையினுல் அக்நிவேசருக்கும் ஸத்யாஷாடருக்கும் கடோபநிஷத்தை உபதேசித்திருக்கிருன். இனிமேல் குரு சிஷ்ய பரம்பரையாக நாம் எல்லோரும் பெற்றுப் பயனடையலாம். இந்த ஸ்வர்ணுவஸரத்தை நாம் கைநழுவ விடாமல், நம் குழந்தைகளையும் வாஜசிரவஸின் குருகுலத்திற்கு சிக்ஷைக்காக உடன் அனுப்பவேண்டும். எல்லோரும்

ஞானமடைந்து உய்யட்டும். என் மனப்பூர்வமான ஆசீர்வாதங்கள்.

முனிபுங்கவர்:—நம் செல்வன் சிரஞ்ஜீவி நசிகேதஸின் வாய்மொழியாகவே தர்மராஜரின் உபதேசத்தைக் கேட்க விரும்புகிறது எங்கள் உள்ளம். இங்கே கூடியிருக்கும் பெண்மணிகளுக்கும், பாலர்களுக்கும் எளிதில் புரியும்படியாகவும் சுருக்கமாகவும் உரைக்கும்படி விரும்புகிறேன். குழந்தாய்! நசிகேதா! இப்படி வருவாய். பீடத்தில் ஏறி நின்றுகொண்டு உரை நிகழ்த்துவாய்.

எல்லோரும் :— ஆம் அதுதான் சரி. நசிகேதஸ் பீடத்தில் ஏறினல் தான் எல்லோரும் காணமுடியும். ஏறி வந்து அமிர்தமாரியைப் பொழிவாயாக.

(நசிகேதஸ் முதலில் எல்லோருக்கும் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கிறுன். பிறகு தாய்தந்தையரையும் வணங்குகிறுன். தன் குருவான யமன் இருக்கும் திசையை நோக்கிப் பிரணமம் செய்து மனதினுல் தியானித்துவிட்டு ஸபையை நோக்கி, கூச்சமில்லாமலும், மெதுவாகவும், எளிய நடையில் பேசுகிறுன்.)

நசிகேதஸ் :— பெரியோர்களே, தாய்மார்களே! நண்பர்களே! எல்லோருக்கும் மனமார்ந்த வணக்கம். வேதவித்தகரும், வியாகரணகேசரிகளும், மீமாம்ஸா விற்பன்னர்களும், தர்க்கப் புலிகளும் கூடியுள்ள இச்சபையில் என்னைப் பேசச்சொல்வது என்பேரில் உங்களுக்குள்ள அபிமானத்தையே காட்டுகிறது. எனக்கு என்ன தெரியும்? பெரிய ஆலவிருக்ஷத்தின் அடியில் சிறிய செடி முளைக்குமா? வாகீசர்களான உங்களுக்கு முன்னிலையில் நான் மூகனுகவேண்டியது தானே!

ஆயினும் உங்களன்பால் தூண்டப்பட்டு அதையே தாரகமாகப் பிடித்துக்கொண்டு இதோ உங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து உங்கள் முன்னிலையில்

நிற்கிறேன். என்னை இனி பேசச் செய்யவேண்டியது உங்கள் அனுக்ரஹத்தின் பொறுப்பேயாகும்! என் குருக்களையும் இஷ்டதேவதைகளையும் தியானித்துக் கொண்டு நிற்கிறேன். அவர்கள் அருள்புரியட்டும்!

"எந்த ஆச்சர்யமான, ஒரே விதையானது தன் நிலை மாருமலிருந்துகொண்டு, வேருெருவராலும் விதைக்கப்படாமலும், தண்ணீர் பாய்ச்சப்படாமலும் தானுகவே, பற்பல விதமான வடிவமும் குணமுமுள்ள ஜீவர்களாகிற பயிர்களை, எப்பொழுதும் உண்டுபண்ணு கிறதோ, அந்தப் பீஜத்திற்கு நமஸ்காரம். எது காலங் களாலும் அவஸ்தைகளாலும் மாறுபடாமலும், எல்லா வற்றிற்கும் உபாதான நிமித்த காரணமாகவும் இருக் கிறதோ, அந்த ஆத்ம வஸ்துவைத் தியானிப்போமாக.

அருமறை அந்தத்துள்ள அறிவாகிய ஆத்மாவே, அடியேன் அகத்திருந்து, அருள்மாரியைப் பொழியுமாக. நாம் எல்லோரும் அதில் திளைத்து இன்புறுவோமாக.

காணுகிற காட்சியாய், காண்பதெல்லாம் காட்டு வதாய் காணுகின்ற கண்ணுமாய், மாண் உயர்ந்து நிற்பதே ப்ரஹ்மம். கருவுற்ற தாயின் வயிற்றில் கரு மறைந்து உறைவதுபோல், அரணிக்கட்டையில் தீ ஒளிந்திருப்பதுபோல் நம் உள்ளங்களில் ஆத்மா மறைந்து நிற்கிறது. அது உசிதகாலத்தில் சிசு வெளி யாவதுபோல் வெளிப்படும். தீயைக்கடைந்து எடுப்பது போல் உள்ளத்தைக்கடைந்து எடுக்கவேண்டும். அதனிடம் உறவு வேண்டும் என்ற எண்ணமாகிற மத்தை நட்டு, ஞானமாகிற கயிற்றினுல் முறுக வாங்கிக் கடைய முன் நிற்கும். (முறுக வாங்கிக் கடைவது- ப்ரஹ்ம விசாரம் செய்வதாகும்.) அந்த ஆத்மா ஓர் அரசன் போல் நம் உள்ளமாகிற கோட்டையில் இருந்து செங்கோல் ஓச்சுகிறது. அது பிறப்பும் இறப்பும் அற்றது. அதற்குப்பயந்தே சூரியன் பிரகாசிக்கிருன். வாயு காற்றை வீசுகிருன். அனைத்துக்கும் அதுவே

எஜமானன். மழைபெய்வதும் அந்த ஆதிபத்தியத்துக்கு அடங்கியேதான். கூற்றுவன் உயிர்களைக்கொண்டு செல்லுவதும் அதற்கு அஞ்சியேதான். எல்லாக் காரியங்களும் அதனுலேயே நடக்கின்றன. அதை ஒருவராலும் மீறமுடியாது.

மலைமேல் பெய்த மழையானது பலவாருகப் பிரிந்து பல ஆறுகளாய் ஓடுவதுபோல் பரம்பொருளும் பல ஜீவன்களாக பிரிகிறது. இதைப் பார்த்துவிட்டு நாம் ஒற்றுமையை மறக்கலாகாது. நதிகளில் பெரியது, சிறியது, ஆழமானது, ஆழமே இல்லாதது, வாய்க்கால் கள் என்று பலவிதமாக இருந்தபோதிலும் அவைகள் எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்பது ஜலம். அதுபோல் ஆத்மாவும், குட்டையன், பெரியவன், மந்திரி, சேவகன், ஆண், பெண், மிருகம், மரம் எல்லாவற்றிலும் கூடவே உளதாகிக் கலந்து நிற்கிறது. நடப்பதற்கும், நடக்க இருப்பதற்கும், நடந்துபோனதற்கும் அதுவே எஜமானன். தூக்கத்திலும் விழிப்பிலும் அதுதான் செயல்படுகிறது. அது கட்டைவிரல் பிரமாணத்தில் உருவைச் சுருக்கிக்கொண்டு உள்ளத்தில் இருந்து நம்மை ஆட்டுவிக்கிறது. அனைத்துக்கும் காரணமாயும் ஆதாரமாயும் இருக்கும் பரம்பொருளை நாம் அறிய வேண்டும். அதற்கு வழி என்ன?

நூல் அறிவினுல் அதை அடையமுடியாது. வேதங் களைத் திரும்பத்திரும்ப ஓதி நெட்டுருப்பண்ணியதால் மட்டும் இந்த ஆத்மாவை அடையமுடியாது. பண்டிதர் களாலும் இதைப் புரிந்துகொள்ள முடியாது. குங்குமப்பூப் பொதி சுமக்கும் விலங்கிற்கு அதன் வாசனை தெரியுமோ? சிற்றின்ப சுகங்களையும், இகத்தில் கிடைக்கும் சுகபோகங்களையும் அதுபோல் பரத்தில் வரவிருக்கும் போகமாயங்களையும் விட்டால் தான் ஆத்மாவைக் காணமுடியும். அதுவே நிலையான பேரின்பம்.

'ஓம்' என்னும் மந்திரத்தைத் தியானிப்பது இதற்கு ஒரு வழியாகும். இந்த ஓம் என்னும் மந்திரம் வேதம் முழுவதன் ஸாரமுமாகும். இம்மந்திரத்தைப் பற்றிக்கொண்டு நன்றாக ஜபித்து நற்கதியடையலாம். வேர் மேலும், கிளை கீழுமாக சாகோபசாகையாகப் பரந்திருக்கும் இந்த ஸம்ஸாரமாகிற அரசமரத்தையும், பற்றின்மையாகிற கத்தியால் வெட்டிவிடவேண்டும். நம் புலன்களெல்லாம் எப்பொழுதும் வெளிநோக்கியே செல்கின்றன. இன்பத்திற்காக வெளியில் சென்று அலைகின்றன. உள்நோக்கிச் சென்று அந்தராத்மாவை உணரும் சக்தியை அவை பெறவில்லை. நாம் அதை அவைகளுக்குக் கொடுக்கவேண்டும். அதுவே தீர மாகும். வெளிநோக்கும் ஸ்வபாவத்தை வென்று உள் நோக்கிப் பார்க்கவேண்டும். அப்பொழுது எல்லாப் புலன்களும் (கர்மேந்திரியங்களும் ஞானேந்திரியங் களும்) அடங்கிவிடும். மனம் சஞ்சலமறும். புத்தியும் கலங்காது. இதுவே யோகம். அப்போது ஆத்ம ஞானம் உதயமாகும். இப்பொருளைப் பார்க்க வேறு ஒளிகள் தேவையில்லை. அது ஸ்வயம்ப்ரகாச வஸ்து. அனைத்தின் ஒளியும் அதன் ஒளியே.

நம் உடலை ஒரு ரதமாக வைத்துக்கொண்டால் அதில் வீற்றிருக்கும் எஜமானனே ஆத்மா. சாரதியே புத்தி. மனமே கடிவாளம். குதிரைகள் ஐம்புலன்கள் சரியாக ஓட்டிய வண்டி ஊர்போய்ச் சேருவதுபோல், நாம் இந்த உடலாகிற வண்டியைச் சரியாக ஓட்டக் கற்றுக்கொள்ளவேண்டும். கடிவாளமாகிற மனதைச் சரியாகப்பிடித்து இழுத்தும், புலன்களாகிற குதிரைகளை அடக்கியும், ரதத்தை ஓட்டினுல் பரமபதத்தை அடையலாம். இல்லாவிடில் ஸம்ஸாரத்தில் சுற்றிச் சுற்றி அலையவேண்டியதுதான். ஆகவே நாம் (அக் ஞானத் துயில்) தூக்கத்தைவிட்டு எழுந்திருப்போமாக! மேலோரை அணுகி உபதேசம் கேட்போமாக. கூரான கத்திமுனையின்மேல் நடப்பதுபோல் யோகமார்க்கம்

கடினமாயினும் நாம் மனம் தளராமல் ஞானம்பெற முயல்வோமாக.

ஆத்மாவை அறியவேண்டும் என்ற தீவிர விருப்பத்துடன், உள்ளம் கரைந்து, அதைத்தவிர உள்ள வேறு விருப்பங்களை ஒழித்து, ஆசை, கலக்கம் மயக்கம் முதலியன தீர்ந்து, மனமும் அடங்கிச் சுத்தப்பட்டு, விஷய வாசனைகளும் ஒழிந்தால் யோகநிலை தானுக உண்டாகும். அப்போது வேற்றுமை உணர்ச்சி நீங்கி விடும். இதயத்தைக் கட்டுப்படுத்தும் முடிச்சுக்கள் அறுக்கப்படும் உபாஸகன் சுஷும்னு நாடிவழியாக வெளியேறி ப்ரஹ்மலோகம் செல்வான் ஞானியோ வெனில் சுத்தமான நீருடன் சுத்தமான நீரைக் கலப்பது போல், பரம்பொருளை உள்ளத்திலே கண்டு வேற்றுமை அற்று அதனுடன் ஒன்றி இங்கேயே முக்தனுய்விடுவான்.

இந்த ஆத்மாவானது கண்ணுல் பார்க்கமுடியாதது. வாயால் பேசமுடியாதது. மனத்தால் எண்ண முடியாதது ஆகவே நான் சொல்லுவதாகவும் நீங்கள் கேட்டு அறிவதாகவும் நினைப்பதே சரியல்ல. புலன்களுக்கு அடங்கப்பெருத பொருளை நான் எப்படிச் சொல்ல முடியும்? அதை நீங்கள் எங்ஙனம் கேட்க முடியும்? மனதிற்கும் அப்பாற்பட்டதை மனத்தில் கருதித் தியானிப்பது எப்படி? ஆத்மா தானுகவே பிரகாசித்தால்தான் தெரியமுடியும் அதைக்காண முயல்வது என்பதெல்லாம் உபசார வார்த்தைகள் தாம். பற்றுக்கள் அறுதலே விடுதலைக்கு வழி. குற்றம்களைந்து குணம் நாடி அடியேனை ஆசீர்வதியுங்கள். பெரியோர்களே! நமஸ்காரம்."

(நசிகேதஸ் மீண்டும் ஒருமுறை ஸாஷ்டாங்கமாக வணங்கிவிட்டுக் கைகட்டி வாய்புதைத்து நிற்கிருன்.)

முதல் ரிஷி :— வத்ஸா! உன் ப்ரவசனம் மிகவும் நன்ருக இருந்தது. உள்ளங்கை நெல்லிக்கனியெனக்

காட்டித் தந்தாய் உண்மைப் பொருளே! நீ சிரஞ் ஜீவியாக வாழ்வாயாக.

முனிபுங்கவர் :— குமாரா! உன் ப்ரஸங்கத்தைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தோம். இதை ராஜஸபையில் நிகழ்த்தியிருந்தால் கனகாபிஷேகம் செய்திருப்பார்கள். ஏழைகளாகிற எங்களிடம் என்ன இருக்கிறது உனக்குத் தர? இதோ இந்த மான்தோலை வெகுமதியாக வைத்துக்கொள்வாயாக.

பிரம்மரிஷி :— அப்பா, இந்தத் தர்ப்பாஸனத்தை நான் தருகிறேன். வாங்கிக்கொள்வாயாக.

தீக்ஷிதர் :— குழந்தாய்! இந்தா யக்ஞேசுவரப் பிரசாதம். இன்று காலமேசெய்த இஷ்டியின் திவ்யமான பிரசாதம். தரித்துக்கொள்.

ரிஷி (2) :— நசிகேதா! நச்வரமான ஸம்ஸாரத்தை நசிப்பிக்கும் மார்க்கமும் நித்யமான ஆத்மாவை அடையும் மார்க்கமும் நிதர்சனமாகக் காட்டினாய் நீ. இந்தக் கமண்டலுவை என் புரஸ்காரமாக வைத்துக் கொள்வாயாக.

(எல்லாவற்றையும் நசிகேதஸ் பணிவுடன் வாங்கிக் கொள்கிறான். பெண்மணிகள் வந்து, மங்களாட்சதை தூவி, ஹாரத்தி சுற்றுகின்றனர்.)

(திரை விழுகிறது)

காட்சி 3

(திரை விலகுகிறது)

[கௌதமரின் ஆசிரமப் பக்கம். ஸைரந்திரியும் ஸூத்திர தாரரும் வருகிறார்கள்.]

ஸூத்திரதாரர் :— வண்ணமகளே! இத்துடன்-இந்தக் காட்சியுடன்-நம் நாடகம் நிறைவுபெறுகிறது. ரஸிகர்கள் இதை எப்படி ரசித்தார்களோ தெரியவில்லை!

ஸைரந்திரி :— ஐயனே! அவர்கள் முகத்தில் கேள்விக் குறியைத்தான் நான் காண்கிறேன்.

ஸூத்திரதாரர் :— ஆம். நானும் கவனித்தேன். ஒரு புது முயற்சியை ரசிப்பதற்கு ஸஹ்ருதயம் வேண்டும். அபிமானம் உள்ளவர்கள்தான் ரசித்திருப்பார்கள்.

ஸைரந்திரி:— இந்த நாடகத்தின் கருத்து நன்றாக விளங்கியிருக்குமா எல்லோருக்கும்? இல்லாவிடில் அதற்கு வழி என்ன?

ஸூத்திரதாரர் :— திரும்பத்திரும்ப 3, 4 தரம் படிக்க வேண்டும். அதோடு மூல உபநிஷத்தையும், அதற்கு ஸ்ரீ ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் எழுதி யிருக்கும் பாஷ்யத்தையும் படிக்கவேண்டும். பிற்பாடு—

ஸைரந்திரி :— என்ன! பட்டியல் பெரிதாக இருக்குமோ?

ஸூத்திரதாரர் :— செல்வீ, இராது. பகவத்கீதையை யும் படித்துவிட்டால் ஆத்மஞானம் அடைந்துவிடலாம்.

ஸைரந்திரி :— ஐயனே! எவ்வளவோ அறநூல்கள்-ஞானப் பொக்கிஷங்கள்-இருக்கக் கீதையை எடுத்துக் கூறக் காரணமென்ன? இதற்கும் கீதைக்கும் அப்படி என்ன ஸம்பந்தம்? சொல்லுங்கள்.

ஸூத்திரதாரர் :— வண்ண மகளே! இந்தக் கடோப நிஷத் தாய்க் கிரந்தம். பகவத்கீதை சேய்க் கிரந்தம். கீதாபவன் என்னும் மாளிகை, இந்தக் கடத்தின் அஸ்திவாரத்தின் மேல்தான் எழுப்பப்பட்டிருக்கிறது. கடவல்லியில் ரதத்தின் உருவகம் வருகிறதே அதுதான் கீதைக்குச் சிறந்த தோற்றுவாயாக அமைகிறது. தேர்த் தட்டில் கண்ணன் இருந்து அர்ச்சுனனுக்கு உபதேசிக்கிருன் அல்லவா? தவிரவும் கடவல்லியிலிருந்து அநேகம் சுலோகங்கள் கீதையில் அப்படியே எடுத்தாளப் பட்டிருக்கின்றன.

ஸைரந்திரி :— அப்படியா! எனக்கு இதுவரையில் தெரியாது.

ஸூத்திரதாரர் :— உன்னைப்போல் அறியாதவர் பலர். அவர்களுக்கும் அறிவுச்சுடர் கொடுத்து நல்வாழ்வு வாழ்விக்கவே நம் "சங்கர க்ருபா" அரும்பாடு படுகிறது. கீதைக்கும் கடவல்லிக்கும் இத்தகைய நெருங்கிய தொடர்பு இருக்கிறது. ஆகையினுல்தான் இந்த நாடகம் நன்ருக விளங்க, கீதையையும் வாசிக்கச் சொன்னேன். அப்படிப் படித்தால் எல்லோரும் பிரஹ்மஞானம் அடைவார்கள்.

ஸைரந்திரி :— அடுத்த நாடகம் எதுவோ? ரசிகர் களுக்கு முன் கூட்டியே அறிவிப்பது நலமல்லவா!

ஸூத்திரதாரர் :— அடுத்தபடியாக "பிரச்ன உபநிஷத்" என்ற நாடகம் நடத்தவேண்டும். ரசிகப் பெருமக்கள் ஊக்கமும் ஆதரவும் ஆசியும் தரவேண்டும். இந்த உபநிஷத் நாடகத்தைக் கேட்டவர், படித்தவர், கேட்பித்தவர் எல்லோரும் பிறவிக்கடல் நீந்து, பரம முக்தியும் பெறுவார்கள். வேதமாதா பெற்ற தாயினும் ஆயிரம் மடங்கு கருணை கூர்ந்து, ஞானத்தை வாரி வழங்குகிருள் மக்கள் உய்ய.

ஸைரந்திரி :— மெய்யன்பர்களே! ரஸிகர்களே! உங்களுக்கு எது வேண்டும்? ஓதுநூலின் ஒரு கவி யாயினும் தீது அறக் கற்றுல் உயர்கதியைப் பெறலாம். இம்மைக்கும் மறுமைக்கும் நலம் தரும். முடிவில் பிறப்பையும் அறுக்கும். உபநிஷத்தை எல்லோரும் படிக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஸூத்திரதாரர் :— அன்பர்களே, வணக்கம். தற்போதைக்குத் தங்களிடம் விடைபெற்றுக்கொள் கிறோம். தங்கள் ஆதரவும் ஆசியும் என்றும் எங்களுக்கு உண்டு என்ற விசுவாஸத்துடன் விடைபெற்றுக் கொள்கிறோம்.

ஸைரந்திரி :— ஸபையோர்களே! நமஸ்காரம். விடை கொடுங்கள். அடுத்த நாடகம் வரைக்கும்தான் நம் பிரிவு. பெரியோர்களே! எங்களை ஆசீர்வதியுங்கள் வணக்கம்.

(திரை விழுகிறது)

கடோபநிஷத் நாடகம் முற்றும்.

உ

ஸ்ரீ குருப்யோ நம:

உபநிஷத் நாடகமாலா – 4

பிரச்னோபநிஷத்

(நாடகம்)

நாடக பாத்திரங்கள்

1. பிப்பலாதர் — ஹரித்துவாரத்தில் கங்கைக்கரையில் ஆச்ரமம் அமைத்துக்கொண்டு, ஆத்மவிசாரம் செய்யும் பிரஹ்ம ரிஷி.

2. ஸுமந்து — வேதம் அறிந்தவர். பிப்பலாதரின் நண்பர்.

3 பரத்வாஜர் — பிரயாகையில் வஸிக்கும் முனிவர்.

4. ஸுகேசர் — பரத்வாஜரின் புத்திரர்.

5. ஸத்யகாமர் — சிபியின் புத்திரர், ஒரு ரிஷி.

6. ஸெளர்யாயணி — கர்க கோத்திரத்தில் பிறந்த ஒரு ரிஷி.

7. கௌஸல்யர் — ரிஷி அச்வலரின் புதல்வர்.

8. பார்கவர் விதர்ப்ப தேச வாசி.

9. கபந்தீ — ரிஷி கத்யரின் குமாரர்.

10. ஹிரண்யநாபன்— கோஸல தேசத்து ராஜகுமாரன். ஸுகேசரின் நண்பன்.

மற்றும் ஆசிரமவாசிகள், ரிஷிபத்னிகள், ரத ஸாரதி முதலியோர்.

இடம் :— முதல் அங்கம் பிரயாகையிலும், சுற்றுப் புறங்களிலும்.

மற்ற அங்கங்கள் ஹரித்துவாரத்திலும், அதன் பக்கங்களிலும்.

பிரச்னோபநிஷத்

(நாடகம்)

முதலாவது அங்கம்

காட்சி 1

(திரைக்குள் பாடல்)

इतः पूर्णं ततः पूर्णं पूर्णात्पूर्णं परात्परम् ।
पूर्णानन्दं प्रपद्येऽहं सद्गुरुं शंकरं स्वयम् ॥

இத: பூர்ணம் தத: பூர்ணம் பூர்ணாத் பூர்ணம் பராத்பரம் ।
பூர்ணாநந்தம் ப்ரபத்யேऽஹம் ஸத்குரும் சங்கரம் ஸ்வயம் ॥

(திரை தூக்கப்பட)

[பிரயாகையில் பாரத்வாஜ முனிவரின் ஆச்ரமம். வெளிப்புறத்தில் ஒரு பெரிய அச்வத்த வ்ருக்ஷத்தின் அடியில், தர்பாஸனங்களில் ரிஷிகள் அறுவர் (ஸுகேசர் முதலியோர்) அமர்ந்து உரையாடிக்கொண்டிருக்கின்றனர். ஸுகந்தமான காற்று வீசுகிறது. அக்நிஹோத்ர சாலையிலிருந்து நெய்யின் மணம் புகையுடன் கலந்து வருகிறது. பக்ஷிஜாலங்களின் சப்தத்திற்கு எதிரொலிபோல வெகு தொலைவிலிருந்து கங்கை, யமுனை, ஸரஸ்வதீ நதிகளின் ஸங்கமத்தினால் உண்டான ஒலியும் கேட்கிறது.]

ஸத்யகாமர்:— நண்பர் ஸுகேசரே! நாங்கள் எல்லோரும் மஹோதய புண்யகாலத்தில் புண்ய தீர்த்த ஸ்னானம் செய்ய இங்கு வந்தோம். பகவத்கிருபையால், ஜன்மாந்தர ஸுகிருதத்தால் தங்கள் ஆச்ரமத்தில் தங்கினோம். நல்ல ஸத்ஸங்கம் சேர்ந்தது. புராண இதிஹாஸ படனங்கள் என்ன! வேத மந்திர ரஹஸ்யங்களைப் பற்றிய சர்ச்சைகள் என்ன! இப்படியாக நல்ல விதமாக நாட்கள் கழிந்துபோனதே தெரியவில்லை. ஊருக்குப்போக விடை தரவேண்டும்.

ஸௌர்யாயணீ :— நன்றாகச் சொன்னீர் நண்பரே! இவ்விடத்தில் பெற்ற உபசாரணைகளும் அன்பும் எங்கும் கிடைக்காது. அமிருததத்திலும் இனிய உணவும், இன் சொல் உபசரிப்பும் நம்மை ஆனந்தக்கடலில் ஆழ்த்தி விட்டன. இவற்றிற்குக் கைம்மாறு செய்ய நம்மிடம் ஒன்றுமே இல்லை.

ஸுகேசர் :— ஸ்நேஹிதர்களே! ரிஷிவர்யர்களே! அளவுக்கு மிஞ்சிப் புகழுரை வேண்டாம். தாங்கள் அவ்வளவு ஒன்றும் அதிக நாட்கள் இங்கு தங்கிவிடவும் இல்லை. நாங்களும் எங்களால் இயன்ற அளவு கடமை களைத்தான் செய்தோம். இந்த ஆச்ரமம் உங்கள் கிருஹம்தான். அடுத்துவரும் இஷ்டிக்கும் எல்லோரும் கட்டாயம் இருக்கவேண்டும். பிற்பாடு போவதுபற்றி யோசிக்கலாம்.

பார்கவர் :— தோழரே! உம்மைப்போல் சிறந்த நண்பர் கிடைப்பது அரிது. இங்கு வந்ததும் தங்கள் நட்பு கிடைத்ததும எங்கள் பாக்யமே. கூடியசீக்கிரம் விதர்பதேசம் சென்று என் பிதாவிடம் இங்கு நடந்த வைபவங்களையெல்லாம் சொல்லவேண்டும்.

கௌஸல்யர் :— தாராளமாகப் போய்ச் சொல்லும், பார்கவரே! ஆனால் ஒரு விஷயம்—

பார்கவர் :— அது என்ன? சீக்கிரம் உரையுங்கள்.

கௌஸல்யர் :— பரத்வாஜ ஆச்ரமத்தில் காமதேனு வந்து எல்லோருக்கும் உபசாரம் செய்கிறது, வேண்டியதை எல்லாம் தருகிறது. ஸகலவிதமான போகபோக்கியங்களையும் நினைத்த மாத்திரத்தில் கொடுக்கிறது, என்ற அத்புதங்களையெல்லாம் விதர்ப்ப அரசன் காதில் போடவேண்டாம்.

பார்கவர் :— சொன்னால் என்னவாம்? கேட்டு, அரசனும் சந்தோஷப்படுவான். நமது தோழர்

ஸுகேசரின் பெயரும், அவருடைய பிதாவின் புகழும் ஆஸேது ஹிமாசலம்வரை பரவவேண்டியதுதானே.

ஸௌர்யாயணீ :— அவர் புகழ் மட்டுமா! வேதத்தில் விதித்த கர்மானுஷ்டானங்களைச் செய்தால் என்ன பலன் கிடைக்கிறது என்பதும், அக்னிஹோத்ர சாலையின் மகிமையும் மாண்பும் சேர்ந்தல்லவா பரவுகிறது.

கௌஸல்யர் :— நான் அதற்குச் சொல்லவில்லை!

பார்க்கவர் :— பின் எதற்காகச் சொன்னீர்களாம்!

கௌஸல்யர் :— அந்த அரசன் கேட்டு ஸந்தோஷப் பட்டால் ஸரி. துரதிருஷ்டவசமாக, பொருமை கொண்டு காதிபுத்திரனைப்போல் காமதேனுவை அபஹரிக்க எண்ணினால் என்ன நேரும்! வீண் மனஸ்தாபங்களும் சண்டை சச்சரவுகளும் உண்டாகுமே என்றுதான் சொன்னேன்.

ஸுகேசர் :— பிரஹ்ம பலம், க்ஷத்ரிய பலத்தைவிடப் பதின்மடங்கு உயர்ந்தது என்ற உண்மை மறுமுறையும் ஸ்தாபிக்கப்படும். அதனால் நல்லதுதானே!

கபந்தீ :— ஸ்நேஹிதர்களே! நாம் இதுவரை கர்மானுஷ்டானம், போஜனம், நித்திரை இவைகளிலேயே மனதைச் செலுத்தி வந்திருக்கிறோம். வெறும் கர்மடர்களாய்க் காலங்கழித்துவிட்டோம். என் மனதில் சாந்தியே ஏற்படவில்லை.

ஸத்யகாமர் :— கபந்தி சொல்வது ரொம்பவும் ஸரி. வேதங்களை நன்றாக அத்யயனம் செய்தும் அதில் கர்ம காண்டத்தில் காட்டியிருக்கும் கர்மாக்களை ஸரிவர அநுஷ்டித்தும் வந்திருக்கிறோம். அதன் பயனாக மறுமையில் கிடைக்கவிருக்கும் ஸ்வர்க்க போகத்தையே பெரும் பேராக எண்ணியிருக்கிறோம். இது அறியாமை அல்லவா!

கபந்தீ :— உண்மைதான். அபர பிரஹ்மத்தையே ஸத்யமென நம்பி பரப்ரஹ்ம விசாரணை செய்யாமலே இருந்துவிட்டோம். காலத்தை வீணுகக் கழித்து விட்டோம்.

கௌஸல்யர் :— ஸ்நேஹிதர்களே! எனக்கு ஒரு வழி தோன்றுகிறது.

கபந்தீ :— அது என்ன?

கௌஸல்யர் — அபரப்ரஹ்ம நாட்டம் உடையவர்களாய், அபரப்ரஹ்மத்தில் நிஷ்டை உடையவர்களாய் வாழ்ந்துவருகிறோம். பரப்ரஹ்மத்தை நாடாமல் இருந்து விட்டோம். அதற்கு ப்ராயச்சித்தமாக ஒரு ப்ராஜாபத்ய க்ருச்ரம் அனுஷ்டித்து பரிசுத்தம் அடையவேண்டும். உங்கள் எல்லோருக்கும் அபிப்பிராயம் இருந்தால் செய்வோம்.

கபந்தீ :— மறுபடியும் கர்மவாஸனை உம்மை விடவில்லையே. ஞானத்தைப் பெற ஒரு தகுந்த ஆசார்யரைச் சரண்புகுவதைத்தவிர, சாந்திராயணவ்ரதமோ மற்ற தானதர்மங்களோ ஒன்றும் பிரயோஜனப்படாது.

கௌஸல்யர் .— அப்படியானல் யாரிடம் போக வேண்டும்?

கபந்தீ :— கையில் வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவாருண்டோ? காலில் தட்டும் மூலிகையை நீக்கிவிட்டுக் கானகம் சென்று தேடுவாரும் உண்டோ?

ஸௌர்யாயணீ :— நண்பரே! குரு பக்கத்திலேயே இருக்கிறரா? அவர் யார்? விளக்கமாக, விபரமாகக் கூறும்.

கபந்தீ :— பெரிய மஹானுகிய பரத்வாஜ மஹரிஷியிடமே பாடம் கேட்போமே!

எல்லோரும் :— அப்படியே செய்வோம்! அப்படியே செய்வோம்!!

ஸுகேசர் :— நீங்கள் எல்லோரும் என் பிதாவிடம் பாடம் கேட்கப்போவது அறிந்து மிகவும் சந்தோஷம். நானும் உங்களோடு சேர்ந்துகொள்ளுகிறேன். நாம் எல்லோரும் சேர்ந்து சந்தோஷமாக வாழ்வோம். (கொஞ்சம் யோசித்து) என் தந்தையை அணுகி அனுமதி கேட்கிறேன்.

கபந்தீ :— அப்படியே செய்யும். இப்போதே கேட்போமா? "சுபஸ்ய சீக்ரம்" என்பார்கள் பெரியோர்கள்.

ஸுகேசர் :— என் பிதா, குலபதி ஆங்கிரஸின் ஆச்ரமத்திற்கு விஜயம்செய்திருக்கிறார்கள். வந்தவுடன் ப்ரார்த்திப்போம்.

கௌஸல்யர் :— சரி, ஸந்தியாவந்தனத்திற்கு ஸமயம் நெருங்கிவிட்டது. நதிக்கரைக்குப் போவோம்.

எல்லோரும் :— அப்படியே. (போகிறார்கள்)

(திரை விழுகிறது)

காட்சி 2

(திரை தூக்கப்படுகிறது)

[பரத்வாஜ ஆசிரமத்தின் வெளிப்புறக்காட்சி. ஸுகேசர் மட்டும் தனித்து நின்று, பட்சிகளுக்குத் தானிய மணிகளைத் தூவிக்கொண்டிருக்கிறார். ஒவ்வொரு சகுந்தமாக நெருங்கி வந்து பொறுக்கித் தின்கின்றன. சில கையில் வந்தும், சில தோளில் குதித்தும், உட்கார்ந்து உட்கார்ந்து பறக்கின்றன சில பறவைகள் தலைக்குமேலே வட்டம் இடுகின்றன.]

ஸுகேசர் :— (தனக்குள்) இயற்கைக் காட்சி இன்று எவ்வளவு அற்புதமாக இருக்கிறது. இந்தச் சுகந்தம்

வீசும் பூஞ்சோலைக்குத் தேவேந்திரனின் கற்பகக்காவும் ஈடாகாது. இந்தப் பூமி இவ்வளவு செழிப்பாகவும், ஸந்தோஷகரமாகவும் விளங்குவதற்குத் தர்மமே காரணம். கோஸல தேசத்து ராஜா நீதி தவறாது செய்யும் அரசாட்சிக்கு தர்மமே அடிப்படைக்காரணம். அம்மன்னரின் மாண்பே மாண்பு. அவர் நீடுழிவாழ்க. செங்கோல் ஓங்குக. அவர்தம் புதல்வன், ராஜபுத்திரன் —ஹிரண்யநாபன்-குருகுலவாஸத்திற்குப் பின் இங்கு விஜயம் செய்யவே இல்லையே. படிக்கும் நாட்களில் என்னிடத்தில் எவ்வளவு வாஞ்சையுடன் இருந்தான். அரசாங்கவேலைகள் அதிகமாக இருப்பதால் என்னை மறந்துவிட்டான் போலும். இன்று திடீரென அவன் ஞாபகம் வருவானேன்? (ரதம் தூரத்தில் வரும் ஓசை கேட்கிறது உற்றுக்கேட்கிறார்.) யார் வருகிறார்கள் இந் நேரத்தில் இங்கு! (ரதம் நெருங்குகிறது) அதோ ரதம் வருகிறது யார் இருக்கிறார்கள்? (உற்றுப் பார்க்கிறார்) கோஸல தேசத்து அரசர்களின் கோவிதாரக்கொடி பட்டொளி வீசிப்பறக்கிறதே! வருவது யாரோ? அரசனா? அல்லது என் ஆருயிர் நண்பனா?

(ரதம் அருகில்வந்து சடாரென நிற்கிறது. ஹிரண்ய நாபன் வெளியில் குதிக்கிறான்.)

ஸுகேசர் :— வருக! வருக. நல்வரவாகுக.

ஹிரண்யநாபன் :— நண்பரே, எல்லோரும் நலம் தானே! (இருவரும் தழுவிக் கொள்கின்றனர்.)

ஸுகேசர் :— தோழரே! இப்போதுதான் உம்மைப் பற்றி நினைத்தேன். உடன் வந்துவிட்டீர். உமக்கு ஆயுள் நூறுதான்.

ஹிரண்யநாபன் :—பிராம்மணோத்தமரே! நமஸ்காரம். உம்மைப் பார்ப்பதற்கே ஓடோடி வந்தேன்.

ஸுகேசர் :— வாரும் உள்ளே. அர்க்கிய பாத்ய பூஜையை ஏற்றுக்கொள்ளும்.

ஹிரண்யநாபன் :— நண்பரே! அதிகம் தங்க நேரம் இல்லை. அமிழ்தினும் இனிய உமது வசனத்தையே அதிதி பூஜையாக ஏற்றுக்கொண்டுவிட்டேன். (பரபரப்பாக) நான் உம்மிடம் ஒரு விஷயம் கேட்கவந்திருக்கிறேன். ஒளியாமல் சொல்வீரா?

ஸுகேசர் :— பூர்வபீடிகை பிரமாதமாக இருக்கிறதே இதற்குமுன் நீர் கேட்டதை நான் கூருமல் இருந்ததில்லையே. தெரிந்தால் கட்டாயமாக உரைப்பேன்.

ஹிரண்யநாபன் :— தெரியாத விஷயமாக இராது. உமக்குத் தெரியாத சங்கதியும் உண்டோ? உமது பிதா பெரிய மேதாவி. அவரிடமிருந்து எல்லாம் அறிந்திருப்பீர் நீர்?

ஸுகேசர் :—தோழரே, போதும் முகஸ்துதி, காரியத்திற்கு வாரும். கேள்வியைக் கேளும்.

ஹிரண்யநாபன் :— நான் கேட்டபடி சொல்லுவதாக ஒப்புக்கொள்ளவில்லையே இன்னும். விஷயத்தின் பிராதான்யம் என் மனதில் ஸந்தேகத்தை எழுப்புகிறது. சொல்லட்டுமா கேள்வியை?

ஸுகேசர் :— "ஸம்சயாத்மா வினச்யதி" என்று நம் குருநாதர் அடிக்கடி சொல்லுவாரே! மறந்தீரா? கேளும் கூசாமல்.

ஹிரண்யநாபன் :— பாரத்வாஜரே! பதினறு கலைகள் உள்ள புருஷனை உம்மிடம் அறிய விரும்புகிறேன்.

ஸுகேசர் :— நான் அறியேன்!

ஹிரண்யநாபன் :— (நம்பாமல்) உமக்குத் தெரியாமல் இராது. மறைக்காமல் தயவுசெய்து சொல்லும்.

ஸுகேசர் :— நண்பரே! உண்மையாகவே எனக்கு தெரியாது. தெரிந்தால் சொல்லாமல் இருப்பேனு?

ஹிரண்யநாபன் :— முநிகுமாரரே! பூராவும் விவரமாகச் சொல்லாவிட்டாலும் ஒரு கோடியாவது காண்பியும். நான் உம்முடைய ஆருயிர் ஸ்நேஹிதன் அல்லவா?

ஸுகேசர் :— ராஜபுத்திரரே! என்னை நம்பும்.

ஹிரண்யநாபன் :— தோழரே! உமக்குத் தெரியாது என்பதில் எனக்கு நம்பிக்கை வரவில்லையே. இந்தக் கேள்விக்கு விடை சொல்லும். உமக்கு வேண்டியது தருகிறேன். பாதி ராஜ்யம் வேண்டுமானாலும் தருகிறேன்.

ஸுகேசர் :— (தமக்குள்) இந்தத் தர்ம சங்கடத்துக்கு என்ன செய்வது அறியாத விஷயத்தை அறிந்ததாகச் சொல்லவா? அங்ஙனம் கூறுவது அறமல்லவே. (வெளியில்) நண்பரே! பொய் சொல்பவன், வேர், தண்டு, கிளையுடன் கருகி நசித்துப்போவான். நான் பொய் சொல்லமாட்டேன். இளைஞரே, என்னை நம்பும். நீர் என்ன நினைத்துக்கொண்டாலும் சரி! பதினறு கலையுள்ள புருஷனைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. லவலேசமும் அறியேன். இது ஸத்தியம்.

(ராஜகுமாரன் பதில் பேசாமல் கோபத்துடனும், லஜ்ஜையுடனும் தேர் ஏறுகிறுன். ஸாரதியும் ரதத்தை வேகமாகச் செலுத்துகிறுன். தேர் பார்வையினின்றும் மறையும்வரை ஸுகேசர் உலாவுகிறுர்.)

ஸுகேசர் :— (தமக்குள்) என் நண்பன் வருத்தத்துடன் போவது மனதை உறுத்துகிறது. அவனது கேள்விக்கு விடை அறிந்து சொல்லவேண்டும். பிதாவிடம் கேட்போம். (போகிறுர்)

(திரை விழுகிறது)

காட்சி 3

(திரை தூக்கப்படுகிறது)

[பரத்வாஜ ஆச்ரமத்திலிருந்து கோஸல தேசத்திற்குப் போகும் வழி. ஒரு ரதம் வேகமாக வந்து திடீரென்று நிற்கிறது. தேரினுள்ளிருந்து ராஜகுமாரன் ஹிரண்யநாபன் குதிக்கிருன். தட்டிலிருந்து ஸாரதியும் இறங்குகிருன்.]

ஸாரதி:— (கைகூப்பியவாறு) மஹாராஜா! எதற்காகத் தேரை நிறுத்தும்படி உத்தரவிட்டீர்கள்? ஏன் அவஸரமாகக் கீழே இறங்கியிருக்கிறீர்கள்?

ஹிரண்யநாபன்:— தேர்ப்பாகனே! நீ இப்படியே ரதத்தை ஓட்டிக்கொண்டு ஊருக்குப் போ. நான் என் கேள்விக்கு விடை தெரியாமல் ஊருக்கு வரமாட்டேன். விவரங்களை என் பெற்ருேர்களுக்கு வணக்கத்துடன் அறிவிப்பாய்.

ஸாரதி:— ஸ்வாமீ! தாங்கள் கூறுவது விந்தையாக இருக்கிறதே! இந்த அல்பவிஷயத்துக்கு இப்படி அமைதி இழக்கலாமா? பட்டிணம் போவோம. ஆர அமர ஆலோசித்து ஆவன செய்வோம்.

ஹிரண்யநாபன்:— ஸாரதியே! அப்படியல்ல. இது மிகவும் முக்கியமானது. என் ஆருயிர் நண்பன் மறுதது விட்டதால் என் மனதும் கட்டுக்கடங்காமல் தவிக்கிறது. இந்த அரிதான — மஹத்தான — வினுவிற்கு விடை தெரியாமல் திரும்பேன்.

ஸாரதி:— மஹாராஜா, தாங்கள் இப்படிச் சொல்வது ஸரியன்று. தங்கள் நண்பர் சொல்ல மறுத்துவிட்டதாக எண்ணுவது ஒருகால் தவறுதலாக இருக்கலாம். அவருக்கே அதன் உண்மை தெரியாதிருக்கலாம்! ஆகையினுல் நாம் ஊருக்குப் போவோம். வேறு ஆசாரியர்கள், பிரம்மஞானிகள் இல்லையா? அவர்களை அடுத்து ஞானம் பெறுவோம். அஷ்டாவக்கிரர் என்ன,

யாக்ஞவல்க்யர் என்ன! இவர்களைச் சரண் அடைந்து சாந்தி பெறுவோம். துயரத்தை விடுங்கள்.

ஹிரண்யநாபன் :— அன்பார்ந்த தேரோட்டியே! நீ கூறுவதுபோல் நானும் சிலஸமயம் நினைக்கிறேன். ஆனால் பாமும் சந்தேகப்பேய் குடிபுகுந்து விட்டது. பரத்வாஜ மஹரிஷியின் மஹிமையைப்பற்றி எண்ணும் போது ஸம்சயம் வலுவடைகிறது. தவிற என் மனத்துக்குள் ஏதோ ஒன்று கூடியசீக்கிரம் விடை கிடைக்கும் என்று அறிவுறுத்துகிறது.

ஸாரதி :— யஜமானரே! அங்ஙனமாயின் சரி. இப்போதே திரும்புவோம். வழியில் விதேஹ ராஜ்யம் சென்று ஜனகமஹாராஜனிடத்தில் கேட்டுச் சந்தேகம் தெளிந்துகொண்டு ஊருக்குப்போவோம்.

ஹிரண்யநாபன் :— ஏ ஸாரதீ! நான் சொல்லச் சொல்ல நீ மறுத்துக் கூறுகிறாய். நான் இதன் உண்மையை அறியாமல் இங்கிருந்து அரண்மனை திரும்பமாட்டேன். இது நிச்சயம். நீ போகலாம்.

ஸாரதி :— ஸ்வாமீ! என்னை மன்னிக்கவேண்டும். பிடிவாதம் வேண்டாம். வயோதிகத் தாய்தந்தையரை வருத்தத்தில் ஆழ்த்துவது ஸரியல்ல. என்னுடன் திரும்பிவிடுங்கள். (காலில் விழுந்து மன்றாடிக் கேட்டுக் கொள்கிறான்.)

ஹிரண்யநாபன் :— அன்பார்ந்த தேர்ப்பாகா! என் கால்களை விடு. வெற்றி அல்லது விபரீதம்! முன் வைத்த காலைப் பின் வைக்கமாட்டேன். இது ஸத்யம். உன் உடைகளை எனக்குக் கொடுத்துவிட்டு என் உடைகளை அணிந்துகொண்டு நீ பட்டிணம் போ. இது என் உத்தரவு. (வேண்டா வெறுப்புடன் ஸாரதி அவ்வண்ணமே செய்கிறான்.) தேரோட்டியே! நீதான் என்னுடைய உண்மையான நண்பன். ஸுகமாகப் போய்வா.

ஸாரதி :— மஹாராஜாவே, விடைபெற்றுக்கொள்கிறேன். தங்கள் ஆக்ஞைப்படி இதோ போகிறேன். கூடியசீக்கிரம் திரும்பிவிடுங்கள். தங்கள் வரவைக் கதிரவனை நோக்கும் கமலத்தைப்போல் எதிர்பார்த்திருப்பேன். ஏ வனதேவதைகளே! ராஜகுமாரரை ரக்ஷியுங்கள். அவருக்கு ஸர்வ மங்களங்களும் உண்டாகட்டும். (ரதத்தில் ஏறிக்கொண்டு போகிருன். குதிரைகளும் பிரிவாற்ருமையைத் தெரிவிப்பதுபோல் கனைத்துக் கொண்டு இழுக்கின்றன. ரதம் ஊர்ந்து செல்கிறது.)

ஹிரண்யநாபன் :— ஸாரதி வேடம் எனக்கு மிகவும் பொருத்தமாகத்தான் இருக்கிறது. உலகத்தில் உண்மை நண்பர்களும் இருக்கத்தான் இருக்கிருர்கள். இந்தக் குதிரைகளுக்கு இருக்கும் விசுவாசம், நன்றிகூடச் சில சமயங்களில் உயர்ந்த வர்ணத்தாரிடம் காண முடிகிறதில்லை! இந்த ஸாரதிக்குத்தான் என்னிடம் எவ்வளவு பாசம். அக்கறை! வேதாந்த வினுவிற்கு விடை கிடைக்கும் முன் உலக அநுபவம் நன்ருகக் கிடைத்துவிடும் போல் இருக்கிறது. (யோசிக்கிருன்) நேரே பரத்வாஜ ஆச்ரமம் போய் நடப்பதைக் கவனிப்போம். ஸுகேசருடைய நடவடிக்கையிலிருந்து உண்மைகளை அறிந்துகொள்ளலாம். அரசிளங்குமரனுகப் போனேன். அறிவுபெற முடியவில்லை. மாறுவேடத்தில் போகிறேன். பலன் கிட்டுமா? அடக்கம் அன்பு பணிவுடன் செல்வேன். வெற்றி பெறுவேன். அவசரத்திலும் அதிகாரத்திலும் ஆணவத்திலும் நம்பிக்கை வைத்து முன் சென்றேன். தோல்வியுடன் திரும்பினேன்! இப்போது என் வலக்கண் துடிக்கிறது. வாயஸம் வலமாகிறது. ஜயமுண்டு, பயமில்லை மனமே! (வழியில் சுனையில் இறங்கிக் கால், கை, முகம் கழுவிக்கொள்கிருன். ஆசமனம் செய்துகொண்டு தெளிந்த நீரில் தன் முகத்தின் பிரதிபிம்பத்தைப் பார்க்கிருன்.) இந்த வேடத்தில் தத்ரூபமாகத் தேரோட்டியாகவே தோன்றுகிறேன் என் நண்பர் ஸுகேசராலேயே என்னை அடையாளம் கண்டு கொள்ள முடியாது. ஹே மனமே! ஜாக்கிரதையாக

இரு! இனிமேல் நீ ராஜகுமாரன் அல்ல. ஓர் ஏழைத் தேர்ப்பாகன். ஞாபகம் இருக்கட்டும். சாயம் வெளுத்து விடாமல் கவனமாக நடக்கவேண்டும். பெயர் கேட்டால் என்னவென்று சொல்ல? (ஆலோசித்து) சரி. 'அசுவகோஷன்' என்று கூறுவோம். நல்ல நாமம். என் இஷ்ட தெய்வங்களே! வனதேவதைகளே! எனக்கு வெற்றி அளியுங்கள். உங்களுக்கு அநேககோடி நமஸ்காரங்கள். (தயங்கியவாறு செல்கிருன்)

(திரை விழுகிறது)

காட்சி 4

(திரை தூக்கப்படுகிறது)

[பரத்வாஜ ஆசிரமம் வெளிப்பக்கம். இயற்கை அழகு பொலிகிறது. விசாலமான ஆலமரத்தின் அடியில் வியாக்ர சர்மாஸனத்தில் பகவான் பரத்வாஜர் பத்மாஸனத்தில் வீற்றிருக்கிருர். ஸுகேசர் முதலிய அறுவரும் அஞ்ஜலிபந்தம் செய்துகொண்டு அருகே நிற்கின்றனர்.]

பரத்வாஜர் :— குழந்தைகளே! ஸர்வ மங்களங்களும் உண்டாகட்டும்! கபந்தியே! என்ன விசேஷம்! ஏதோ சொல்ல எண்ணுவதை எழில் வதனம் எடுத்துக்காட்டுகிறதே? பயப்படாமல் கூறுவாய்!

கபந்தீ :— குருநாதரே! நமஸ்காரம்! பரப்பிரம்ம ஞானம் பெறவேண்டும். தாங்கள் கிருபை செய்து உபதேசித்து அருளவேண்டும்.

மற்றவர் எல்லோரும் :— ஸ்வாமி! எங்கள் விருப்பமும் அதுவேதான். தாங்கள் அனுக்கிரகம் செய்யவேண்டும்.

(ஹிரண்யநாபன் மாறுவேடத்தில் வந்து மரத்திற்குப் பின்னல் மறைந்து நிற்கிருன்! ஒருவரும் அவனைக்காணவில்லை.)

ஸுகேசர் :— என் அருமைத் தந்தையே! நான் காலையில் கேட்டேனல்லவா! அந்த வினவிற்கும் விடை அருளவேண்டும்!

பரத்வாஜர் :— என் அன்பார்ந்த குழந்தைகளே! மங்களானி பவந்து! உங்கள் பிரச்னம் மிகவும் முக்ய மானது. பெரிய விஷயம். காவியங்கள் சாஸ்திரங்கள் படிப்பதுபோல் நினைத்தவுடன் எண்ணிய இடத்தில், விரும்பிய காலத்தில், கற்கக்கூடிய விஷயம் அல்ல இது. மிகுந்த தபஸ், பிரம்மசரிய அனுஷ்டானம், குருகுல வாஸம் எல்லாம் நிறைந்த சிஷ்யர்களுக்கே உபதேசிப்பது வழக்கம்! ஆகையினால் இப்போது.........

ஸத்யகாமர் :— ஸ்வாமீ! தாங்கள் உத்தரவு கொடுங்கள் இப்போதே இந்த க்ஷணமே விரத அனுஷ்டானங்களைத் துவக்குகிறோம்.

ஹிரண்யநாபன் :— (மெதுவாக தனக்குள்) என் நண்பர் காலையில் கேட்டது என்னவென்று தெரியவில்லையே? என் ஐயம் தவறுதலாக இருக்குமோ? ஸுகேசர் முகம் வாட்டமுற்றிருக்கிறதே. போகப்போகப் பார்ப்போம்.

பரத்வாஜர் :— குழந்தைகளே! இப்போது அதற்குச் சமயமில்லை. நான் பகவான் வால்மீகி முனிவரது ஆசிரமத்துக்கு உடன் போகப்போகிறேன். ஆகையால் இங்கே இருந்து உங்களுக்குப் பாடம் சொல்ல ஸாத்யமில்லை.

பார்கவர் :— அங்ஙனமாயின் நாங்களும் தேவரீருடன் கூட வருகிறோம். தமஸா நதிக்கரையில் இருந்து கொண்டு தாராளமாகப் பாடம் கேட்கிறோம்.

பரத்வாஜர் :— வத்ஸா! அது வேண்டாம். நான் இப்போது அங்கே பெரிய தேவகார்யமாகப் போகிறேன், சிஷ்யனாகத் தொண்டுசெய்ய.

சிஷ்யர்கள் அறுவரும் :— (ஆச்சர்யக்குறியுடன்) என்ன! என்ன! தாங்கள் சீடராகவா? ஸ்வாமீ! எங்களால் நம்பமுடியவில்லையே!

பரத்வாஜர் :— குழந்தைகளே! இது விந்தையிலும் விந்தைதான். ஒரு தேவரஹஸ்யம் அது. உலகிற்கு ஒரு மஹத்தான காவ்யத்தைக் கொடுப்பதற்காக இந்தத் தெய்வத் திருப்பணியில் ஈடுபடச்செல்கிறேன். ஆதிகாவ்யத்தை ஆன்மகோடிகளுக்கு அளிக்க அறிவிற் சிறந்த அவ்வால்மீகி முநிவருக்கு அருமைச் சீடனாக அடிபணிந்து தொண்டாற்றப்போகிறேன். ஆகையால் நீங்கள் கூட வருவது ஸரியாகாது. ஸந்தர்ப்பம் ஸரியாயிராது.

கபந்தீ :— ப்ரபோ, தங்களுடைய அம்ருதமயமான வார்த்தைகளைக் கேட்டு ஆனந்தம் அடைந்தோம். நாங்கள் செய்யவேண்டியதற்குக் கட்டளையிடுங்கள்.

பரத்வாஜர் :— ப்ரியமுள்ள சீடர்களே! நீங்கள் பகவான் பிப்பலாதரிடம் செல்லுங்கள். அவர் பெரிய மஹான். சிறந்த ஞானி. அவர் உங்களுக்கெல்லாம் விரிவாகத் தெளிவாக உபதேசிப்பார்.

ஹிரண்யநாபன் :— (தனக்குள்) எல்லாம் விநோதமாக இருக்கிறது! அரசன் தேரோட்டி ஆகிறான்! குலபதி சீடனாக மாறுகிறார்! விடை கிடைக்குமுன் பல அனுபவங்கள் கிடைத்துவிடும்போல் இருக்கிறது!

கபந்தீ முதலிய ஐவரும் :— தங்கள் சித்தம் எங்கள் பாக்யம். நாங்கள் எப்போது புறப்படவேண்டும்?

பரத்வாஜர் :— குழந்தைகளே! இன்று நல்ல நாள் தான். 'சுபஸ்ய சீக்கிரம்' என்பார்கள். புறப்படுங்கள் இன்றே. ஸுகேசா! உன் தாயாரிடம் சென்று இவர்களுடைய பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யச்சொல்லுவாயாக!

ஸுகேசர் :— (தயங்கி நிற்கிறார்)

பரத்வாஜர் :— குழந்தாய்! உன் விஷயம் மறந்து விட்டேன். நீயும் இவர்களுடன் சென்று வரலாம்.

ஸுகேசர் :— (தனக்குள்) என் நண்பனின் செயல் என் மனத்தில் உறுத்திக்கொண்டேயிருக்கிறது. விடை கேட்போம் தந்தையிடம் (வெளியில) அன்பார்ந்த தந்தையே! நான் காலையில் கேட்ட 16 கலையுள்ள புருஷனைப்பற்றி எனக்கு விபரமாகக் கூறினால் மன ஸமாதானத்துடன் சென்றுவருவேன்.

ஹிரண்யநாபன் :— (தனக்குள்) நான் என் ஆருயிர் நண்பரைச் சந்தேகித்ததே தவறு! மன்னிக்க முடியாத பெரும் தீங்கு இழைத்துவிட்டேன் அவருக்கு! நேரில் சென்று பாதங்களில் வணங்கி மன்னிப்புக்கோர வேண்டும் இப்போது சந்தர்பம் சரியில்லை. ஹே மனமே! சந்தோஷப்படு! உன் கேள்விக்கு விடை இப்போது கிடைத்துவிடும் பகவான் பரத்வாஜர் திருவாய் மலர்ந்து அருளுவார்கள்! தாரையைப் பருகக் காதுகளைத் தீட்டிக் கொள்.

பரத்வாஜர் :— ஸுகேசா! கவலை வேண்டாம். நீயும் உன் சினேகிதர்களுடன் இன்றே செல்வாயாக! உன் கேள்விக்கும் மகரிஷி பிப்பலாதரே விடை பகர்வார்! எல்லோருக்கும் பரிபூர்ணமான ஆசீர்வாதம்.

ஸுகேசர் :— அருமைப் பிதாவே! அங்ஙனமே செய்கிறேன். வணக்கம். இப்போதே பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்கிறேன், (உள்ளே போகிறார்.)

ஹிரண்யநாபன் :— (தனக்குள்) என்ன ஏமாற்றம்? கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே! சிறந்த நண்பரைப்பற்றித் துரோகமாக நினைத்ததற்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும். அதோ உள்ளே போகிறார்களே! ஓடிப்போய் மன்னிப்புக் கோரவும் முடியவில்லையே! ஐயோ துரதிர்ஷ்டமே!

பரத்வாஜர் :— சிஷ்யர்காள், நானும் இன்று தமஸா நதிக்கரைக்குப் போகிறேன். நீங்களும் பகவான் பிப்பலாதரை அடைந்து ப்ரஹ்மஞானம் பெற்றுத்

தேஜஸுடன் வாருங்கள். என்னுடைய அன்பார்ந்த நமஸ்காரத்தைப் பிப்பலாதருக்குத் தெரிவியுங்கள்.

(எல்லோரும் உள்ளே போகிறார்கள்)

ஹிரண்யநாபன் :— (வெளியில் வந்து) சாண் ஏறினால் முழம் சறுக்குகிறது. என்ன செய்வது.? இப்போது பகவான் பிப்பலாதரிடம் போகவேண்டி இருக்கிறது விடைகாண? இப்படியே போவதா ? அல்லது சுயரூபத்தில் போகவா ? அரச ஆடம்பரம் வேண்டாம். இந்த வேடத்துக்கு ஒரு யோகம் அடிக்கிறது. ஆகவே இப்படியே போவோம். ரிஷி பிப்பலாதர் எங்கிருக்கிறார்கள் ? ஆம் ! ஹரித்துவாரத்தில் இருப்பதாக வசிஷ்டர் சொன்னாரே ! அங்கே முன்னமேயே சென்று வழியில் இவர்களுக்காகக் காத்திருப்போம் : அதுதான் சரி. போவோம்.

"ஜயமுண்டு பயமில்லை மனமே" (பாடிக்கொண்டு போகிறான்.)

(திரை விழுகிறது)

முதலாவது அங்கம் முற்றும்.

இரண்டாவது அங்கம்

காட்சி 1

(திரை விலகுகிறது)

[ஹரித்துவாரத்துக்குப் போகும் வழியில் ஒரு ஆலமரத்தின் அடியில் ஹிரண்யநாபன் உட்கார்ந்து யோசித்தவண்ணம் இருக்கிறுன்.]

ஹிரண்யநாபன் :— இங்கு வந்து வெகு நேரமாகி விட்டதே! ரிஷி குமாரர்களைக் காணுேமே! இந்தப் பாதை கரடு முரடு என்று எண்ணி வேறு வழியாகப் போய் விட்டார்களா! பிரம்மஞானம் அடைய முயலுபவர்கள் ஸுகத்தை கவனிப்பார்களா? இந்த மார்க்கம் தானே குறுக்கு வழியென்று அந்தக் குடியானவனும் சொன்னுன். சீக்கிரம் லக்ஷியததை அடையவேண்டி இப்படித்தானே அவர்களும் வருவார்கள் (எழுந்து உலாவுகிறுன்) இந்திராதி தேவர்களே! வனதேவதைகளே! எனக்கு அருள் புரியவேண்டும்! இதோ காலடிச் சப்தம் கேட்கிறது. வருகிறுர்களே! (ஸுகேசர், கபந்தீ முதலிய அறுவரும் பிரவேசிக்கிறுர்கள்.) இதோ வந்து விட்டார்கள்! முதலில் வணக்கம் செலுத்துகிறேன். பிறகு கூடவர அனுமதி கேட்கவேண்டும்.

(பாதங்களில் ஸாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்த ஹிரண்யநாபனை முதலில் நின்ற கபந்தீ தூக்கி ஆசீர்வதிதது வினவுகிறுர். ஸுகேசர் இதைக் கவனியாமல் பக்கத்தில் மலர்ந்திருந்த ஜபுஷ்பீ மலர்களைப் பறித்துக் கொண்டிருக்கிறுர்.)

கபந்தீ :— நீ யார்? உன் பெயரென்ன? எங்கிருந்து வருகிறுய்?

ஹிரண்யநாபன் :— ஸ்வாமீ, என் பெயர் அசுவகோஷன். க்ஷத்ரியன். கோஸல தேசத்திலிருந்து வருகிறேன்.

கௌஸல்யர் :— அசுவகோஷா! எனக்கும் கோஸல தேசம்தான். உன்னைக் கண்டதில் பரம திருப்தி. நாட்டில் எல்லோரும் ஸுகம்தானே? நீ அங்கு என்ன செய்கிறாய்?

ஹிரண்யநாபன் :— எனக்குத் தேர் ஓட்டத்தெரியும். அரண்மனையில் இருக்கிறேன்.

கௌஸல்யர் :— அப்படியானால் என் தந்தை அச்வலரை (ராஜகுருவை) பார்த்திருப்பாயே!

ஹிரண்யநாபன் :— ஆமாம். தங்களை எங்கேயோ பார்த்த ஞாபகம் வந்தது. இப்போது தெளிவாகிறது. அரண்மனையில் தங்கள் பிதா அவர்களை அடிக்கடி கண்டிருக்கிறேன்.

ஸத்யகாமர் :— அசுவகோஷா! இப்போது எங்கே போகிறாய்?

ஹிரண்யநாபன் :— ஹரித்வாரத்துக்கு.

ஸௌர்யாயணி :— அப்படியா! நாங்களும் அங்கே தான் போகிறோம்.

ஹிரண்யநாபன் :—அடியேனுக்கும் தேவரீர்கள் கூடவர விருப்பம் இருக்கிறது. அனுமதித்தால் வருகிறேன். வழியில் வன விலங்குகளால் ஏதேனும் துன்பம் நேருமாயின் அதனை நீக்குவேன். வேறுவித மான சுச்ரூஷைகளையும் செய்யக் காத்திருக்கிறேன். ஸ்வாமி! உத்தரவு கொடுக்கவேண்டும். "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" (अहं सर्वं करिष्यामि) தயை பண்ணவேண்டும்.

எல்லோரும் :—பேஷாக வரலாம். எங்களுக்கு வழி காட்டியாக, மார்க்கபந்துவாக முன்னால் நடப்பாயாக.

பார்க்கவர் :— அசுவகோஷா! உன்னைப் போன்ற ஒரு க்ஷத்திரியன் வழித் துணைக்குக் கிடைத்தது எங்கள் பாக்கியமே!

கபந்தீ :—ஸுகேசரே! புஷ்பம் பறித்தது போதும்! புறப்படுவோம்!

ஸுகேசர் :— (அருகில் வந்து) நண்பர்களே! இது யார்? புதிதாகத் தெரிகிறதே!

ஸௌர்யாயணீ :— இவன் பெயர் அசுவகோஷன். கோஸல தேசத்திலிருந்து வருகிறன். அரண்மனை வேலையாம். ஹரித்துவாரத்துக்குப்போகிறனும்!

பார்கவர் :— நம்முடன் வருவதாகச் சொல்கிறன். சரியென்று சொல்லி விட்டோம்!

ஸுகேசர் :— அசுவகோஷா! கோஸல தேசத்து அரண்மனையில் இருப்பதால் உனக்கு ராஜகுமாரர் ஹிரண்யநாபரை நன்ருகத் தெரிந்திருக்குமே!

ஹிரண்யநாபன் :— ஸ்வாமீ! நன்ருக அறிவேன். அடிக்கடி உங்களைப்பற்றி சிலாகித்துப் பேசுவதையும் கேட்டிருக்கிறேன். (தனக்குள்) ஸுகேசர் என்னை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. ஆயினும் நான் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அவரிடம் அதிகமாக நெருங்கிப் பழகலாகாது. அடுத்துப்பேசினுல் அடையாளம் கண்டுகொள்ள ஏதுவாகும்.

ஸுகேசர் :—அரசகுமாரர் இப்போது அரண்மனையில் இருக்கிருரா? எல்லோரும் க்ஷேமம் தானே?

ஹிரண்யநாபன் :— எல்லோரும் ஸுகமே! ராஜ குமாரர் இப்போது அரசமாளிகையில் இல்லை. அவர் வெளியூருக்குப் போய் சுமார் ஒரு மாதத்திற்குமேல் இருக்கும். தங்களைப் பார்ப்பதற்குப் போனதாகச் சொன்னுர்கள். இன்னும் திரும்பி வரவில்லை.

ஸுகேசர் :— (பெருமூச்சுடன்) இன்னும் திரும்ப வில்லையா? என்னைப் பார்த்துவிட்டு உடனே நிற்காம லேயே போய்விட்டாரே! அவருடைய கேள்விக்கு

விடை காணவே நானும் ஹரித்வாரத்திற்குப் போகிறேன் இவர்களோடு.

ஹிரண்யநாபன் :— (தனக்குள்) எவ்வளவு உயர்ந்த நட்பு! தோழனிடத்தில் தயவு! இவரைப்போய் நான் ஸந்தேஹித்தேனே! என் புத்தியைச் சுடவேண்டும். (வெளிப்படையாக) ப்ராஹ்மணச்ரேஷ்டர்களே! நானும் அங்குவந்து ப்ரஹ்மஞானம் அடைய ஆசி வழங்குங்கள்.

கபந்தீ :—போவோம் வாருங்கள்; பேசிக்கொண்டே நடப்போம்.

பார்கவர் :—இங்கேயே ஸமித்துக்களும், தர்பைகளும் எடுத்துக்கொள்ளுவோமே!

கபந்தீ :— அப்படியே செய்வோம்.

(எல்லோரும் சேர்ந்து பலாசம் முதலிய ஸமித்துக்களைச் சேகரிக்கின்றனர்.)

ஹிரண்யநாபன் :— இங்கேயே எதற்காக ஸமித்து எடுத்துக்கொள்ளுகிறீர்கள்? நம் அனுஷ்டானத்துக்கு ஹரித்துவாரத்தில் எடுத்துக்கொள்ளமுடியாதா!

ஸௌர்யாயணீ :—அரசன், குரு, தெய்வம், இவர்களை பார்க்க வெறுங்கையாகப் போகக்கூடாது. நாம் ஹரித்துவாரத்தில் பகவான் பிப்பலாதரிடம் போகும்போது பாதகாணிக்கையாக ஸமித்துக்களை நிறையக் கொண்டு போகவேணும். அசுவகோஷா! நீயும் கொஞ்சம் தர்ப்பை, ஸமித்து முதலிய சாமான்களை எடுத்துக்கொள்.

ஹிரண்யநாபன் :— அப்படியே ஆகட்டும் ஸ்வாமி! இதற்கு உள் தத்துவம் ஏதாவது இருக்குமானால் விளக்கமாகக் கூறவேண்டுகிறேன்.

கபந்தீ :—குருவினுடைய அக்னியை வளர்ப்பதற்கு தினந்தோறும் தேவையான ஸமித்துக்கள் எடுத்துக் கொண்டுவந்து தரவேண்டியது சிஷ்யனின் கடமை! இந்த ஸமித்து ஈரமில்லாமல் காய்ந்திருப்பதுபோல்

சீடனுடைய மனம் ராகத்வேஷங்கள் என்கிற ஈரம் உலர்ந்துபோய் வைராக்கியம் அடைந்திருக்கவேண்டும்.

ஸுகேசர் :— என் பிதா சொல்லியிருக்கிறர் அதாவது அக்கினியிலிட்டதும் ஸமித்து தீப்பற்றிக்கொள்ளுவது போல் சீடன் மனமும் குருவின் உபதேசத்தைக் கேட்டதும் அதைப்பற்றிக்கொள்ளும் நிலையில் இருக்க வேண்டும்.

கௌஸல்யர் :— ஸமித்தை அக்கினியில் போடுவது போல், சிஷ்யன் தன்னை ஆசாரியனிடம் முழுவதும் அர்ப்பணம் செய்கிறன் என்பதையும் குறிக்கும்.

ஹிரண்யநாபன் :— ஆஹா ! இவ்வுலர்ந்த சுள்ளிகளை அள்ளிக்கொண்டு போவதில் இவ்வளவு தத்வார்த்தங்களா? ஆச்சர்யம் ஸ்வாமீ ?

ஸத்யகாமர் :— நமது ஸநாதன தர்மத்திலேயே இப்படித்தான். அரணிக்கட்டையில் அக்கினி அடங்கி இருப்பதுபோல் ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கியிருக்கும் எல்லாக் கர்மாக்களிலும்.

கபந்தீ :— பரஸ்பரம் வாதித்தும், மனனம் செய்தும், தவம் இயற்றியும், அறிந்த உண்மைகளை தீர்க்கதர்சிகளான ரிஷிகள் வெளியிடுகிறர்கள். நாட்டின் நன்மைக்காக, மக்கள் மாண்பு பெற. அசுவகோஷா ! நன்ருகத் தெரிந்துகொள் !

ஸுகேசர் :— ஆமாம் ! நாட்டுடன் நிறுத்த வேண்டாம். உலக க்ஷேமத்திற்காக என்று சொல்லும் !

கௌஸல்யர் :—அது தான் சரி! 'லோகாஸ் ஸமஸ்தா ஸ்ஸுகினே பவந்து' (लोकाः समस्ताः सुखिनो भवन्तु)

ஹிரண்யநாபன் :— ரிஷி குமாரர்களே, அஸ்தமனம் நெருங்குகிறது ? சீக்கிரமாகப் போவோம் !

எல்லோரும் :— அப்படியே செய்வோம் !

(ஸமித்துக் கட்டுகளைக் கையில் எடுத்துக்கொண்டு விரைவாக நடக்கிறார்கள்.)

(திரை விழுகிறது)

காட்சி 2

(திரை தூக்கப்பட)

[ஹரித்வாரத்தில் பகவான் பிப்பலாத மஹரிஷியின் விசாலமான ஆச்ரமம். ஒரு பர்ணசாலையில் பிப்பலாதரும் ஸுமந்துவும் உட்கார்ந்து உரையாடிக்கொண்டிருக்கின்றனர். பர்ணசாலைக்குள்ளிருந்து வேதமந்திரம் ஸுஸ்வரத்தில் உரத்த குரலில் கூறப்படுவது கேட்கப்படுகிறது.]

ओं भद्रं कर्णेभिः शृणुयाम देवाः । भद्रं पश्येमाक्षभिर्यजत्राः । स्थिरैरङ्गैस्तुष्टुवांसस्तनूभिः । व्यशेम देवहितं यदायुः । स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः । स्वस्ति नः पूषा विश्ववेदाः । स्वस्ति नस्तार्क्ष्योऽरिष्टनेमिः । स्वस्ति नो बृहस्पतिर्दधातु ॥

ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

(ஓம் பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா: I பத்ரம் பச்யேமாக்ஷபிர் யஜத்ரா: I ஸ்த்திரைரங்கைஸ்துஷ்டுவாம்ஸஸ் தநூபி: I வ்யசேம தேவஹிதம் யதாயு: I ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்த ச்ரவா: I ஸ்வஸ்தி ந: பூஷா விச்வ வேதா: I ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்ட நேமி: I ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது II)

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: I

பிப்பலாதர்:— நண்பரே! ஸுமந்து மஹரிஷியே! இன்று ஸுப்ரபாதம் சாந்தமாகவும் ஸந்தோஷமாகவும் விளங்குகிறது. நம் ஆச்ரமத்திற்கு அதிதிகளின் ஆகமனம் உண்டாகும்போல் தோன்றுகிறது. ஏனெனில் காலையிலிருந்தே காகம் கரைந்தவண்ணம் இருக்கிறது.

ஸுமந்து :—பகவான் பிப்பலாதரே! நானும் அதை கவனித்தேன். தவிர அதோ மந்தார மரத்திலிருந்த க்ரௌஞ்சபப்பறவை, பறந்து வந்து இந்த ஆசிரமத்து மாங்கிளையில் திரும்பத் திரும்ப ஏழுதரம் உட்காருவதை கவனித்தால் வருபவர்கள் ஏழு என்றும் தோன்றுகிறது.

பிப்பலாதர் :— ஜோதிஷத்தில் வல்லமையுடைய நண்பரே, ஆருடததினல் அவர்கள் யார்? எதற்கு வருகிறுர்கள்? என்று தெளிவு படுத்தலாமே!

ஸுமந்து :— அப்படியே ஆகட்டும். அந்த மாங் கிளையின் வர்ணத்தைக் கவனித்தால் அறுவர் ப்ராஹ் மணர்களாகவும், மற்றொருவர் க்ஷத்ரியராகவும் இருக்க வேண்டும். க்ரௌஞ்சப் பறவை வந்த திசையைக் கவனித்தால் ப்ரயாகையிலிருந்து அவர்கள் புறப்பட்டு வருகிறுர்கள் என்பதும் விளங்குகிறது. தங்கள் ஆச்ர மததிற்கு எதற்காக வருகிறுர்கள் என்று கண்டு பிடிப்பதற்கு ஜோதிஷ சாஸ்திர அறிவு தேவை யில்லையே. சின்னக் குழந்தைகூட சொல்லிவிடுமே!

பிப்பலாதர் :— அதென்ன! விபரமாகக் கூறுங்கள்.

ஸுமந்து :— குலபதியான பிப்பலாதரின் ஆச்ரமத் திற்கு எதற்கு வருவார்கள்? பாரத தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் கல்விகற்க சிஷ்யர்கள் வந்தவண்ண மிருக்கிறுர்கள். இன்றும் ச்ரோத்ரியனும் ப்ரஹ்மநிஷ்டனு மான குருவை (தங்களை) நாடி சிஷ்யவர்க்கம் வரப் போகிறது. தங்களுடைய மேதையையும், கற்பிக்கும் திறனையும், ஆச்ரமவாஸத்தில் சீடர்களுக்குக் கிடைக்கும் அனுபவங்களையும் பார்க்கும்போது எனக்கே இங்கு கொஞ்ச நாட்கள் குருகுலவாஸம் செய்ய ஆசை உண்டாகிறது.

பிப்பலாதர் :— போதும் புகழ்ச்சி! எனக்கு இப்போது ஞாபகம் வருகிறது. இரண்டு நாளைக்குமுன் இந்த வழியாக கங்கோத்ரிக்குப்போன அங்கிரஸர், பரத்வாஜர்

ஆச்ரமத்திலிருந்து மகரிஷியின் அனுமதியுடன் ஆறு ரிஷி குமாரர்கள் இங்கு வந்துகொண்டிருப்பதாகச் சொன்னர்.

ஸுமந்து :— எல்லாம் தெரிந்துகொண்டு தான் அடியேனைப் பரீக்ஷித்தீர்களா ?

(ஸுகேசர் முதலிய அறுவர்களும் ஸமித்பாணிகளாகப் பிரவேசிக்கின்றனர் ஹிரண்யநாபனும், தர்ப்பைக் கட்டு, விறகுக்கட்டுடன் நுழைகிருன். ஸமித்து முதலியவைகளை பகவான் பிப்பலாதர் முன்னுல் வைத்து ஒவ்வொருவராக அபிவாதயே சொல்லி நமஸ்காரம் செய்கிருர்கள். பின் ஸுமந்துவையும் வணங்குகிருர்கள்.)

கபந்தீ :— பஞ்ச பூதங்களில் செல்லும் மனதை பிரம்ம நிஷ்டையிற் செலுத்திய மகரிஷி பிப்பலாதருக்கு நமஸ்காரம். நான் கத்யருடைய குமாரன். என் பெயர் கபந்தீ.

பிப்பலாதர் :— திர்காயுஷ்மான் பவ ஸெளம்ய ! வா இப்படி உட்கார். உன் பிதா செளக்கியமாக இருக்கிருரா?

(ஆமாம் என்று சொல்லிவிட்டு கபந்தீ ஒரு பக்கத்தில் உட்காருகிருர்.)

கௌஸல்யர் :— பரிபூர்ண ஞானம், பலம், தேஜஸ், ஐசுவர்யம், சக்தி, வீர்யம் இவைகளை இயல்பாக உடைய பகவானே ! அநேக கோடி அபிவாதனங்கள். என் நாமம் கௌஸல்யன். அச்வலரின் குமாரன்.

பிப்பலாதர்:— சித்தம் அழகியவனே, வா, இப்படி உட்கார். உன் தந்தை சுகம் தானே !

(கௌஸல்யரும் ஆம் என்று கூறிவிட்டு அமருகின்ருர் ஒருபுறமாக.)

ஸுகேசர் :— பாரத தேசத்திலுள்ள எல்லா முனிவர்களாலும் போற்றப்படும் முனி புங்கவரே ! பிரயாகை பரத்வாஜ முனிவரின் புதல்வனுன ஸுகேசன் வணங்குகிறேன்.

பிப்பலாதர் :—ஸுகேசா! வா. உன் வரவு நல்வரவே! உன் தகப்பனுர் நலம் தானே. அக்னி ஹோத்ராதிகள் விதிப்படி நடக்கிறதல்லவா! இங்கே உட்கார்.

(ஸுகேசரும் ''எல்லாம் சரிவர நடக்கிறது'' என்று சொல்லிவிட்டு உட்காருகிருர்.)

பார்க்கவர் :— வேதத்தின் உண்மையை உணர்ந்த மஹானுபாவரே! அனேககோடி வந்தனங்கள். என் பெயர் பார்க்கவன். விதர்ப்ப நாட்டினன்.

பிப்பலாதர் :— வத்ஸா, வா இப்படி. அமர்வாயாக.

(சரியென்று பார்க்கவரும் பக்கத்தில் அமருகிருர்.)

ஸௌர்யாயணீ :— மஹான்களான மஹரிஷிகளுக்கு ஏற்படும ஸந்தேஹங்களையும் தெளிவிக்கவல்ல ஞான முடைய தேஜஸ்வியே! அடியேன் கார்க்யன். அநேக கோடி ப்ரணமங்கள். நான் ஸூர்யனின் பேரப்பிள்ளை.

பிப்பலாதர் — அப்பா கார்க்யா! இப்படி அருகில் வா. இங்கே அமர்ந்துகொள்வாயாக.

(அப்படியே ஆகட்டுமென்று சொல்லி ஸௌர்யாயணியும் உட்காருகிருர்.)

ஸத்யகாமர் :— ஆத்மஞானத்திற் சிறந்த மஹிமை உள்ளவரே! அஞ்ஜலி செய்கிறேன். என் பெயர் ஸத்யகாமன். சிபியின் குமாரன்.

பிப்பலாதர் :— குழந்தாய் வா! உன் தகப்பனுர் க்ஷேமம்தானே! இங்கே உட்கார்.

(ஆம் சுகமே என்று சொல்லிவிட்டு ஸத்யகாமர் உட்காருகிருர். தூரத்தில் நின்றே வணக்கம் செய்யும் ஹிரண்ய நாபனைப் பார்த்து பிப்பலாதர் வினவுகிருர்.)

பிப்பலாதர் :— ஒதுங்கி நிற்பவன் யார்? உங்கள்கூட வந்தவன்தானே!

கபந்தீ :— ஸ்வாமீ! அவன் க்ஷத்திரியன். பெயர் அசுவகோஷன். வழித்துணைக்கு அழைத்துவந்தோம். தேவரீரை தரிசனம் செய்ய வந்திருக்கிருன்.

பிப்பலாதர் :— அப்படியா, ரொம்ப சந்தோஷம். இப்படி அருகில் வா அசுவகோஷா! (ஹிரண்யநாபனும் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்துவிட்டு ஒரு புறத்தில் ஒதுங்கி நிற்கிருன்.) குழந்தைகளே! நீங்கள் எல்லோரும் சேர்ந்து திரண்டு இங்குவந்த காரணம் என்னவோ?

அறுவரும் சேர்ந்து:—பகவானை தரிசித்துத் தங்கள் அருளால் பிரம்மஞானம்பெறவே வந்திருக்கிருேம். கிருபை பண்ணவேண்டும்.

பிப்பலாதர் :—உங்கள் வரவு நல்வரவாகட்டும். முதலில் உள்ளேபோய் இளைப்பாறி உணவருந்திவிட்டுப் பின்பு வாருங்கள். (பிரம்மதத்தா என்று கூப்பிட ஒரு சீடன் ஓடிவருகிருன்.) இவர்களை அழைத்துப்போய் வேண்டிய உபசரணைகள் செய்வாயாக. (ஏழு பேர்களும் பிரம்மதத்தனுடன் பர்ணசாலைக்குள் போகின்றனர்)

ஸுமந்து :— நண்பரே! குமாரர்கள் எல்லோரும் நன்ருகப் படித்தவர்களாயும், விநயமுள்ளவர்களாயும் இருப்பதாகத் தெரிகிறது. நாளையிலிருந்தே உபதேசம் ஆரம்பம் செய்வீர்களல்லவா?

பிப்பலாதர் :— இல்லை. இவர்களுக்கு இன்னும் கர்மத்தில் வாஸனையிருக்கிறது. இந்த அறுவர்களும் அபரப்ரஹ்மபரர்கள். அபர ப்ரஹ்மநிஷ்டர்கள். பர ப்ரஹ்மத்தை அறிய வந்திருக்கின்றனர். இன்னும் கொஞ்ச காலம் இங்கு குருகுலவாஸம் செய்ய நியமிக்கலாம் என்று யோசிக்கிறேன்.

ஸுமந்து :— தாங்கள் சொல்லுவதுபோல் இந்த சிஷ்யர்கள் அபரவித்யையான ருக்வேதம் முதலிய நான்கு மறைகள், சிக்ஷை, கல்பம் முதலிய ஆறு சாஸ்திரங்கள் இவை எல்லாம் நன்ருகக் கற்றறிந்த

வர்கள். அதின்படி நிஷ்டையாக வாழ்க்கை நடத்திய வர்கள். கடமைகளை வழுவாமல் செய்தவர்கள். ஆயினும் அமைதி பெருமல் மேலான தத்துவத்தை அறியவிரும்பி இங்கு வந்திருக்கின்றனர். காலவிளம்பம் எதற்கு?

பிப்பலாதர் :— நண்பரே! தாங்கள் கூறுவது எல்லாம் சரியே! ஆயினும் உபதேசம் திடப்பட, கொஞ்ச நாட்கள் இங்கே வாஸம் செய்த பின்புதான் உபதேசம் செய்யவேண்டும். இதோ! அவர்களே வந்து விட்டார்கள் (கபந்தி முதலானவர்கள் வந்து உட்காரு கின்றனர்.) குழந்தைகளே! எல்லாம் சௌகர்யமாக இருந்ததா!

அறுவரும் :— தங்கள் ஆசீர்வாதத்தால் யாவும் ஸௌகர்யமே!

பிப்பலாதர் :— நீங்கள் அபேக்ஷித்தபடி உங்களை சீடர்களாக ஏற்றுக்கொண்டேன்.

அறுவரும் :— மிக்க ஸந்தோஷம். தன்யர்களானோம்.

பிப்பலாதர் :— ஆயினும் உபதேசம் பெறுமுன் ஒரு நிபந்தனை.

ஹிரண்யநாபன் :— (தனக்குள்) என் துரதிருஷ்டம் இங்கும் குறுக்கிடுகிறதே!

அறுவரும் :— குருநாதரே! அந்த நிபந்தனை என்னவோ? சொன்னவுடன் நிறைவேற்றுகிரோம்.

பிப்பலாதர் :—அப்படியொன்றும் பிரமாதமில்லை. ஒரு வருஷம் இங்கே வசிக்கவேண்டும். இந்த ஆசிரமத்தின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு பிரம்மசரிய விரதத் துடனும் மிகுந்த சிரத்தையுடனும் இங்கே இருந்து தவம் செய்யவேண்டும். ஒரு ஸம்வத்ஸரம் கழிந்தபின், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஸந்தேகங்களை-கேள்வி களைக்-கேளுங்கள். தெரிந்தவரைக்கும் விடை அளிக் கிறேன். எல்லாம் விபரமாகக் கூறுகிறேன்.

ஸுமந்து :— குழந்தைகளே! கவலைப்படாதீர்கள். ஒரு வருஷம் ஒரு விநாடியாகப்போய்விடும்.

அறுவர்களும் :— குருநாதரே! மகரிஷியே, தாங்கள் சொல்வதுபோல் செய்கிறோம். தங்கள் சித்தம் அடியோங்கள் பாக்கியம்.

ஸுமந்து :— பகவான் பிப்பலாதரின் அடக்கத்தைப் பார்த்தீர்களா! ரிஷி குமாரர்களே! மஹாதேஜஸ்வியான அவருக்குத் தெரியாத விஷயமும் உண்டோ! ஆயினும் தெரிந்தவரைக்கும் என்று அடைமொழியுடன் கூறியதை கவனித்தீர்களா! இப்படியே ஒரு வருஷம் இங்கு குருகுலவாஸம் செய்யும்போது அநேக படிப்பினைகளைத் தெரிந்துகொள்ளலாம் பிரபஞ்ச வாழ்க்கைக்குப் பயன்படும் விஷயங்களையும் தெரிந்துகொள்ளலாம்.

பிப்பலாதர் :— மஹரிஷியே, ஸூர்யனும் மலைவாயிலில் விழுந்துவிட்டான். நேரமாகிறது, அனுஷ்டானத்துக்குப் புறப்படலாமே

(எழுந்திருக்கிறார். எல்லோரும் உடன் எழுந்து நிற்கின்றனர்.)

ஸுமந்து :— நண்பரே! நானும் என் ஆச்ரமத்திற்குப் போகிறேன். விடை கொடுங்கள்.

பிப்பலாதர் :— ஆகட்டும். போய்வாருங்கள். அடிக்கடி இங்கு வந்து குழந்தைகளுக்கு உற்சாகம் ஊட்டுங்கள்.

ஸுமந்து:— ரொம்ப சரி. நான் வருகிறேன். ரிஷி குமாரர்களே! பக்கத்தில் தான் என் ஆச்ரமம் இருக்கிறது. நீங்களும் சாவகாசம் உள்ளபோது அங்கே வரலாம். போய் வருகிறேன். மங்களானி பவந்து.

அறுவரும் :— அப்படியே செய்கிறோம் ஸ்வாமி!

ஸுமந்து :— அசுவகோஷா, ஏன் சும்மா நிற்கிருய். நீயும் வரவேண்டும்.

ஹிரண்யநாபன் :— ஆகட்டும் (என்று சொல்லி வணங்குகிருன். ஸுமந்து போகிருர்.)

(திரை விழுகிறது)

காட்சி 3

(திரை தூக்கப்பட)

[ஸுமந்து மஹரிஷியின் ஆச்ரமம். மஹரிஷியும், கபந்தியும், ஸத்யகாமரும், கௌஸல்யரும் உட்கார்ந்து ஸம்பாஷித்துக் கொண்டிருக்கிருர்கள்.]

கபந்தீ :— ஸ்வாமீ, நாங்கள் ஏற்கனவே வ்ரதம், தவம் எல்லாம் ச்ரத்தையுடன் செய்துவந்திருக்கிறோம். மீண்டும் பகவான் உத்தரவிடக் காரணம் என்னவோ?

ஸுமந்து :— எல்லாம் உங்கள் நன்மைக்குத்தான். தங்கத்தைப் புடம் போட்டால் இன்னும் நன்ருகப் பிரகாசிக்குமே!

கௌஸல்யர் :— சாந்தி பாடத்தின் பொருளை விவரமாகத் தெரிவிக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

ஸுமந்து :— கூறுகிறேன், கவனமாகக் கேளுங்கள்.

"ஓம்! தேவர்களே, பூஜிக்கத்தக்கவர்களே, காதுகளால் நாங்கள் எப்போதும் நல்லதையே கேட்க வேண்டும். கண்களால் நாங்கள் நல்லதையே காண வேண்டும். திடமான உறுப்புக்களுடனும் சரீரங்களுடனும் தேவர்களைத் துதித்துப்போற்றிக்கொண்டு அவர்கள் உவப்புடன் அளித்துள்ள ஆயுள் முழுவதும் வாழ்வோமாக. பெரும்புகழ் வாய்ந்த இந்திரன் நமக்கு நன்மை அளிக்கட்டும். எல்லாவற்றையும் அறியும் சூரியன் நமக்கு நன்மை தரட்டும். பாம்பு முதலியவை

களால் ஏற்படும் துன்பங்களைத் தடுக்கும் கருடனும் நமக்கு நன்மை செய்யட்டும். பிருஹஸ்பதி நமக்கு நன்மை வழங்கட்டும்.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

கபந்தீ :— ஸ்வாமீ, பிரார்த்தனையில் நல்லது என்று கூறினீர்களே, அதன் பொருளைப் பூர்ணமாக விளக்க வேண்டும்.

ஸுமந்து :— நல்லது (பத்ரம்) என்ற பதத்திற்குப் பலவிதமாகப் பொருள் சொல்லலாம். ஸந்தர்ப்பத்தை ஒட்டி அதாவது காதுகளால் நாங்கள் எப்போதும் வேதமந்திரங்கள் உபநிஷதங்கள் இவைகளையே கேட்க வேண்டும். கண்கள் எப்போதும் யக்ஞம், பூஜை முதலிய சுபமான காட்சிகளையே பார்க்கவேண்டும்.

கௌஸல்யர் :— அதுபோல் ஸ்வஸ்தி என்பதற்கும் பல அர்த்தங்கள் உண்டல்லவா ?

ஸுமந்து :— ஆமாம், பழமையான பெரும் கீர்த்தியையுடைய தேவேந்திரன் வேதங்களையறியும் புத்தி சக்தியையும், அந்தக் கட்டளையின்படி நடக்க தீரமான மனதையும் தரவேண்டும். பிரபஞ்சத்தை போஷிக்கும் ஸூர்யன் நமக்கு மங்களத்தைச் செய்யட்டும். உபாஸனையில் விருப்பத்தையும் பூர்ண ஆரோக்யத்தையும் தரட்டும். தெய்வீகப்பறவையான கருடன் அரிஷ்டங்கள், கஷ்டங்கள், இடையூறுகள், இவைகளிலிருந்து நம்மைக் காப்பாற்றி நமக்கு பூஜை செய்யும் யோக்யதையையும் கொடுக்கட்டும். தேவகுருவான பிருஹஸ்பதி நமக்கு பிரம்மவர்ச்சஸ்ஸையும் சோபனத்தையும் அனுக்கிரஹிக்கட்டும்.

ஸத்யகாமர் :— ஸ்வாமீ, ஒரு சிறு வார்த்தையில் எவ்வளவு அர்த்தம் பொதிந்து இருக்கிறது? மிகவும் அற்புதம்,

ஸுமந்து :— குழந்தைகளே! இதை வெறும் பிரார்த்தனையாகக் கருதிவிடாதீர்கள். குருவும் சீடர்களும் சேர்ந்து பாடம் ஆரம்பிக்கும் முன் நடத்தும் கூட்டு வழிபாடு இது வித்யையின் அனுஷ்டானத்தில் விக்னம் வராமலிருக்க இந்தமாதிரி சாந்தி பாடம் சொல்லப்படுகிறது.

கபந்தீ :— இந்தப் பாடம் கல்வியைக் கசடறக் கற்கவும், கற்றபின் அதற்குத் தக நிற்கவும் — மிகவும் அவசியமே. ஆனால் 'ஓம் சாந்தி:' என்று ஒரு தடவை சொன்னால் போதாதா! மூன்று தடவை எதற்காகச் சொல்லவேண்டும்?

கௌஸல்யர் :— ஒரு தடவை சொன்னால் விக்கினம் விலகாது என்ற எண்ணமா?

ஸுமந்து :— கௌஸல்யா! நீ நினைப்பது தவறு எந்தக் காரியத்துக்கும் மூன்று விதமான விக்னங்கள் வரலாம். அவைகளைத் தனித்தனியே நிவாரணம் செய்ய மூன்று தடவை 'சாந்தி' என்று உச்சரிக்கப் படுகிறது.

ஸத்யகாமர் :— மூன்றுவிதமான இடையூறுகள் நீங்க மூன்று தடவை சொல்லவேண்டியது அவசியமே. ஸ்வாமீ, அந்த மூன்று இடையூறுகள் யாவை?

ஸுமந்து :— குழந்தைகளே! சிரத்தையாகக் கேளுங்கள். முதல் விக்னம் ஆதிதைவிகம். இரண்டாவது ஆதிபௌதிகம். மூன்றாவது ஆத்யாத்மிகம்.

கௌஸல்யர் :— நன்றாகப் புரியவில்லை. உதாரணத்துடன் விளக்கவேண்டும் மஹரிஷியே!

ஸுமந்து :— ஆதிதைவிகம் என்பது தைவத்தால் வருபவை, மின்னல், இடி, பூகம்பம் முதலியன. ஆதிபௌதிகம் பஞ்சபூதங்களால் வருபவை காட்டுத்தீ

பெருவெள்ளம், மலை இடிந்து விழுதல், பெருங்காற்று முதலியன. ஆத்யாத்மிகம் சரீரத்திற்குள் நிகழ்பவை. வியாதி, தூக்கம், சோம்பல், சிரத்தைக் குறைவு, அவநம்பிக்கை முதலியன.

கபந்தீ :— முனிபுங்கவரே! மூன்று விக்னங்களிலும் மூன்ருவது விக்னமே அதிக இடைஞ்சலை விளைவிக்கக் கூடியது. அது விஷயமாய் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

ஸுமந்து :— உங்களுடைய மற்ற நண்பர்கள் ஏன் இன்று வரவில்லை?

ஸத்யகாமர் :— ஸுகேசர் பகவானுடைய பூஜைக்காக புஷ்பம் கொண்டுவரப் போயிருக்கிருர். பார்க்கவர் பசுக்களை ஓட்டிக்கொண்டு கங்கைக் கரைக்குப் போயிருக்கிருர். அசுவகோஷன் எங்கே போனுன்? கௌஸல்யரே! உமக்குத் தெரியுமா?

கௌஸல்யர் :— எனக்குத் தெரியாது. காலையில் குருநாதர் அவனை அழைத்து என்னவோ கூறிக் கொண்டிருந்தார். எங்கேயாவது போகச்சொல்லி யிருக்கலாம். (கபந்தியை நோக்கி) நண்பரே! உமக்கு தெரியுமா?

கபந்தீ :— வருகிற அமாவாஸையன்று ஸூர்ய க்ரஹணம் வருகிறதல்லவா? அப்போது கங்கையில் ஸ்நானம் செய்யப் பெருங்கூட்டம் கூடுமல்லவா? அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டாமா? அந்தப் பொறுப்பை அசுவகோஷனிடம் தந்திருக்கிருர் குருநாதர்.

கௌஸல்யர் :— அவன் சரியான பேர்வழி அதை நிர்வஹித்து நடத்த.

ஸுமந்து :— ஸௌர்யாயணீ என்ன வேலையில் ஈடுபட்டிருக்கிருர்.

ஸத்யகாமர் :— ஆச்ரம வேலைகளில் குருபத்னிக்கு வேண்டிய உதவிகள் செய்துவருகிறார்.

ஸுமந்து :— அப்படியா! ரொம்ப ஸந்தோஷம். இந்த விஷயங்களையெல்லாம விவரமாக நீங்கள் அவர்களுக்கும் சொல்லவேண்டும்.

கபந்தீ :— ஆகட்டும் மஹரிஷியே! தங்களின் கட்டளைப்படி செய்கிறோம்.

ஸுமந்து :— இப்போது மாத்யாந்ஹிக ஸ்நானம் செய்யும் காலம் வந்துவிட்டது. நான் நதிக்குப் போகிறேன். நீங்களும் போய்வாருங்கள். பகவான் பிப்பலாதரிடம் என் வந்தனத்தைத் தெரிவியுங்கள். மங்களானி பவந்து.

(மூன்று ரிஷிகுமாரர்களும் அபிவாதனம் செய்துவிட்டுப் போகிறார்கள்.)

(திரை விழுகிறது)

இரண்டாவது அங்கம் முற்றும்.

மூன்றுவது அங்கம்

காட்சி 1

(திரை தூக்கப்பட)

(ஸுமந்து மஹரிஷியின் ஆச்ரமம். மஹரிஷியும், ஸுகேசர் முதலிய அறுவர்களும் உட்கார்ந்து உரையாடிக்கொண்டிருக்கின்றனர். ஹிரண்யநாபன் ஓடிவருகிருன். எல்லோருக்கும் அபிவாதனம் செய்துவிட்டுப் பரபரப்புடன கூறுகிருன்.]

ஹிரண்யநாபன் :— ஸ்வாமீ! இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகிறது. வருகிற வழியில் கஜபுஷ்பி பூத்துக் குலுங்குவதைப் பார்த்தேன். சென்ற வருஷம் வஸந்த காலத்தில் நாங்கள் இங்கே வந்தது என் ஞாபகத்துக்கு வந்தது. உடன் ஓடோடியும் வந்தேன் நண்பர்களுக்கு நினைவுபடுத்த.

கபந்தீ :— அசுவகோஷா! நாங்களும் மறந்துவிடவில்லை. அதுவிஷயமாகத்தான் மஹரிஷிவர்யரிடம் பேசிக்கொண்டிருக்கிறோம்.

கௌஸல்யர் :— கஜபுஷ்பீ பூத்ததை நம் ஸுகேசர் உனக்கு முன்னுலேயே பார்த்து, அந்த மலரைப் பறித்துக் கையிலும் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறுர். நீ அதை கவனிக்கவில்லையா ?

ஹிரண்யநாபன் :— நம் நண்பர் ஸுகேசர் இயற்கையில் எவ்வளவு இன்பம் காண்கிருர்! அது இருக்கட்டும். ரிஷிகுமாரர்களே! நீங்கள் ஏதோ பேசிக்கொண்டிருப்பதாகச் சொன்னீர்களே. அதில் நானும் கலந்து கொள்ளலாமோ ?

ஸௌர்யாயணி :— திவ்யமாக நீயும் சேர்ந்து கொள்ளலாம்.

ஸுகேசர் :— நீ எங்கள்கூட வந்ததே அதற்குத் தானே.

ஸுமந்து :— அசுவகோஷா! நீயும் இப்படி உட்காருவாயாக. நான் இவர்களுக்குத் தவம், பிரம்மசர்யம், சிரத்தை என்பவைகளைப்பற்றி விளக்கிக்கொண்டிருந்தேன். நீ இப்போது வந்திருப்பதால் ஆரம்பத்திலிருந்து மறுபடியும் சொல்லுகிறேன் கவனமாகக்கேள்.

ஹிரண்யநாபன் :— ஸ்வாமீ! தங்கள் சித்தம் அடியேன் பாக்கியம். ஜாக்கிரதையாகக் கேட்கிறேன்.

ஸுமந்து :— போனவருஷம் நீங்கள் இங்கே வந்தபோது பகவான் பிப்பலாதர் சொன்னது ஞாபகம் இருக்கிறதா?

ஹிரண்யநாபன் :— நன்ருக நினைவிலிருக்கிறது. மிகவும் மதிப்பிற்குரிய பிப்பலாதர் திருவாய்மலர்ந்து அருளினுர்கள்— "ஓராண்டு தவத்துடனும் ப்ரஹ்மசர்யத்துடனும், ச்ரத்தையுடனும் வஸிக்கவேண்டும்" என்று.

கபந்தீ :— அப்போது நாங்களும் விசனமடைந்தோம். பரப்ரஹ்மத்தை அறிய மிகுந்த பசி தாகத்துடன் வந்திருக்கும் எங்களுக்கு முட்டுக்கட்டை போடுகிருரே என்று.

கௌஸல்யர் :— அப்போது தாங்கள்தான் ஸமாதானப்படுத்தினீர்கள். இது முட்டுக்கட்டை இல்லை என்று.

ஸுமந்து :— ஆம்! நறுமணமுள்ள அழகான மலரைத்தேடி வண்டுகள் வருவதுபோல், தக்க ஆசானைத்தேடி நீங்களும் வந்தீர்கள். புலன்களை அடக்கி மிக ஆர்வத்துடன் கற்ருல்தான் ஆத்மவித்யையைப் பெறமுடியும். அதற்காகவே பகவானும் அப்படியொரு விதியை ஏற்படுத்தினுர்கள்.

ஸுகேசர் :— ஒரு சமயம் எங்கள் ஆச்ரமத்துக்கு வஸிஷ்ட பகவான் விஜயம் செய்திருந்தார், அப்போது

அவர் சொன்னர் – ''பாத்திரமறிந்துதான் பிச்சையிட வேண்டும். அதுபோல் சிஷ்யனின் தரமறிந்துதான் உபதேசம் செய்யவேண்டும். அதன்றிப் பிறருக்குச் சொல்லுவது பாலைவனத்தில் பாயும் புனலை ஒக்கும். நல்ல வளமுள்ள பூமியில் விதைத்த விதைதான் முளைத்துக் காய்த்து நல்ல பலன் தரும். ஊஷர பூமியில் விழுந்த வித்துக்கள் பயனற்றுப் போகும். ஆசையினல் உபதேசம் செய்யும்முன் சிடனைப் பரீக்ஷை செய்வது உத்தமம்'' என்று. அவர் அருள்வாக்கை இப்போது ஞாபகப்படுத்திக்கொள்கிறேன்.

ஸுமந்து :— ஸுகேசா, மிகவும் நன்று அதுதான் வித்தையை நட்டவனுக்கும் ச்ரேயஸ். பலனடைவோரும் பாக்யசாலிகளாய் க்ருதக்ருத்யராவார்கள். நிற்க, முதலில் தபஸை எடுத்துக்கொள்வோம். ப்ரஹ்மசாரிகளுக்கு குருஸேவையே சிறந்த தவம். பொய்பேசாதிருப்பது வாக்கினல் செய்யும் தவம். தீமையை மனதாலும்கூட நினைக்காமலிருப்பது மனதால் செய்யும் தவமாகும். அஹிம்ஸை கர்மாவினல் செய்யும் தவம். இந்தத் தவத்தைக் காட்டில்தான் செய்யவேண்டும் என்பதில்லை. நாட்டிலும் செய்யலாம்.

கௌஸல்யர் :— ஸ்வாமீ, தாங்கள் சொல்வது மிகவும் ஸுலபம்போல் தோன்றுகிறது. ஆனல் அநுஷ்டிக்கும்போதுதான் கஷ்டம் தெரியும்.

ஸத்யகாமர் :—மஹரிஷியே! பிரம்மசர்யத்தைப்பற்றியும் விபரமாகக் கூறவேண்டுகிறேன்.

ஸுமந்து :— காம உணர்ச்சியை அடக்குவது மட்டும்தான் பிரம்மசரியம் என்பதில்லை. அப்படி எண்ணுவது தவருகும். எல்லா இந்திரியங்களையும் அடக்கி வசப்படுத்துவதே உண்மையான பிரம்மசரியமாகும். அதை சரியானபடி அனுஷ்டிக்க எட்டுவிதமான காரியங்களையும் கைவிடவேண்டும்.

ஸெளர்யாயணீ:— குருநாதரே! எட்டுவிதமான காரியங்கள் என்னென்ன? விபரமாகக் கூறவேண்டும்.

ஸுமந்து:—1. காம விஷயத்தை நினைப்பது 2. அது பற்றிப்பேசுவது 3 நெருங்கிப் பழகுவது 4. அதைப் பார்ப்பது 5. அத்துடன் சம்பாஷிப்பது 6. அதற்கு விழைவது 7. பெறமுயற்சிப்பது 8. புணர்ச்சி ஸாதாரணமாக எல்லோரும் எட்டாவதான புணர்ச்சியை நீக்கிவிட்டால் பிரம்மசர்யம் என்று நினைத்துக் கொண்டிருக்கிருர்கள். இந்த எட்டும் ஒரே மாதிரி தீமை பயப்பனவே ஆகும். அவைகள் எல்லாவற்றையும் விலக்கவேண்டும். இரும்பைக் காந்தம் இழுப்பதுபோல் ஒன்று இருந்தாலும் மற்றவைகளையும் இழுத்துக் கொண்டு வந்துவிடும்.

கபந்தீ:— ஸ்வாமீ! மிகவும் தன்யர்களானோம்! சிரத்தையையும் விளக்கவேண்டும்.

ஸுமந்து:— முதலில் தன்னிடம் நம்பிக்கை வேண்டும். அதுபோல் குருவினிடமும் அவநம்பிக்கையில்லாத பூர்ண விசுவாசம் வேண்டும் தவிர, செய்யும் காரியத்திலும் விசுவாசமிருக்க வேண்டும். இவையெல்லாமிருந்தால் தான் பரிபூர்ண சிரத்தையாகும். லேசாகவாவது ஸம்சயம் இருந்தால் விநாசத்துக்கு ஹேதுவாகும்.

ஹிரண்யநாபன்:— இந்த விஷயங்களைக் கேட்க மிகவும் ஸந்தோஷமாக இருக்கிறது. மீண்டும் ஒரு ஆண்டு இங்கே இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

ஸத்யகாமர்:— எனக்கும் அப்படியேதான் தோன்றுகிறது. பக்தி ச்ரத்தையுடன் இந்திரியநிக்ரஹத்துடனும் குருஸேவை செய்துகொண்டு பாக்கி வாழ்நாட்களை இங்கேயே கழித்துவிடலாம் என்றுகூடத் தோன்றுகிறது.

ஸுகேசர்:— பின் நாம் வந்த கார்யம் என்னுவது?

கௌஸல்யர் :— ஸத்யகாமரே! ஆரியக் கூத்தாடினுலும் கார்யத்திலிருந்து கண்ணை எடுத்துவிடாதீர்!

ஸத்யகாமர் :— இப்புனிதமான கங்காநதிக்கரையில் பரமபவித்ரமான பகவான் பிப்பலாதரின் பிணைப்பில் இருப்பதைவிட மோக்ஷமென்று ஒன்று உண்டோ? ஆயினும் வந்த கார்யத்தை மறந்துவிடவேண்டுமென்று நான் சொல்லவில்லை.

கபந்தீ :— இப்புண்யமான சூழ்நிலைகள் நமக்கு மிகுந்த பலனையளித்திருக்கின்றன. ஆயினும் நாம் உபதேசம்பெற்று வீடு திரும்பவேண்டியதும் அவசியமே. என் பாட்டனுர் வ்ருத்தாப்ய வயதில் வருத்தத்துடன் வடக்கு நோக்கிப் பார்த்துப் பார்த்துக் கண்கள் பூத்த வண்ணமிருப்பார்கள். அவரைப் போய்க் காண வேண்டாமா?

ஸுமந்து :— ரிஷிகுமாரர்களே! நாளை ப்ரச்னம் கேட்கவேண்டுமே! யார் முதல் கேள்வி கேட்பதாக உத்தேசம்?

(ஆறுபேரும் தமக்குள் யோசித்துக்கொள்கின்றனர். பின்,)

கபந்தீ :— ஸ்வாமீ, நான் முதல் கேள்வி கேட்கப் போகிறேன்.

ஹிரண்யநாபன் :— என்ன கேள்வி? எதைப்பற்றி?

கபந்தீ :— நாளை ப்ராதக்காலத்தில் பகவான் பிப்பலாதரிடம் கேட்பேன். இப்போது எதற்காகச் சொல்ல வேண்டும?

ஸுமந்து :— பிப்பலாதர்முன் நாளை சொல்லலாம். ஆனுல் இப்போது உங்களுக்குள்ளே யோசிப்பதிலும் தவறு ஒன்றுமில்லை. அவரவர்களுக்குத் தோன்றும் ஸந்தேஹங்களை வெளிப்படையாகச் சொல்லி ஆராய்ந்து பார்த்து, பின் எஞ்சிநிற்கும் ஸம்சயத்தை குருநாதரிடம் கேட்பதே முறையாகும்,

கபந்தீ :— (என்ன கேட்பது என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிருர்.)

ஹிரண்யநாபன் :— ஸ்வாமி, எனக்கு ஒரு ஸந்தேகம்.

ஸத்யகாமர் :— அது என்ன?

ஸுமந்து :— அசுவகோஷா! உன் ஸந்தேஹம் நான் அறிவேன்! தவம், பிரம்மசரியம், சிரத்தை இவைகளைப்பற்றி விளக்கவுரை இப்போது எதற்காக? ஆரம்பத்தில் ஆண்டு துவக்கும் முன்பல்லவா சொல்லி யிருக்கவேண்டும்! என்பதுதானே!

ஹிரண்யநாபன் :— ஆமாம் ஸ்வாமீ!

ஸுகேசர் :—அதற்குச் சரியான காரணம் இருக்கிறது.

ஸுமந்து :— குழந்தாய் ஸுகேசா! உன் நண்பனின் ஸந்தேஹத்தை நீ நிவர்த்திப்பாய்.

ஸுகேசர் :— ஸ்வாமீ! அப்படியே செய்கிறேன். தவறு நேரிட்டால் திருத்தி ஆட்கொள்ளவேண்டும்.

கௌஸல்யர் :— ஸுகேசரே! காரணத்தைச் சொல்லும் விரைவில்.

ஸுகேசர் :— பகவான் பிப்பலாதரின் ஸன்னிதி விசேஷத்தாலேயே நமக்கு இந்த மூன்று ஸாதனங்களும் ஸித்திக்கும் என்பது திண்ணம். ஆகவே ஆரம்பத்தில் விளக்கம் வேண்டாம்.

ஹிரண்யநாபன் :— பின் இப்போது எதற்காக?

ஸுகேசர் :— இப்போது நாம் நம்மைச் சோதித்துத் தெரிந்துகொள்ளுவதற்காக. இந்த விளக்கத்தைக் கேட்டு, "நாம் அதில் எவ்வளவு தூரம் முன்னேறி யிருக்கிரேும், சரியானபடி நிறைவேற்றியிருக்கிரேுமா" என்று ஆத்ம பரிசோதனை செய்துகொள்ளவே இப்போது மகரிஷி உபதேசித்தார்கள்.

ஸுமந்து:— அன்பிற்குரியவர்களே! உங்களுக்கு ஸந்தேஹம் வேண்டாம். நீங்கள் பரீக்ஷையில் தேறி விட்டீர்கள் என்பதை உங்கள் முக தேஜஸ்ஸும் தேஹ காந்தியும் பறைசாற்றுகின்றன. நாளை அதிகாலையில் பகவானிடம் சென்று ஸந்தேஹங்களைக் கேளுங்கள். அப்போது நானும்கூட இருக்கிறேன்.

கௌஸல்யர் :– நண்பர் கபந்தீ வாய்மூடிய வண்ணம் மௌனத்தில் ஆழ்ந்துவிட்டாரே. மௌனம் கலைந்தால் தானே முதல் கேள்வி தெரிந்துகொள்ள முடியும்.

கபந்தீ :— என் ப்ரிய ஸ்நேஹிதர்களே! மிகவும் உத்ஸாஹத்துடன் கேளுங்கள். வெவ்வேருகத் தோன்றும் இந்த ப்ரபஞ்சத்தின் மூலகாரணத்தை அறியவேண்டாமா? இதன் ஸ்ருஷ்டி எப்போது யாரால் எதற்காக ஏற்பட்டது? இதன் அடிப்படைக் காரணத்தையறிய ஆவல் எனக்கு. இரட்டையாகத் தெரியும் இந்தக் காக்ஷி உண்மையிலேயே இரண்டு தானு? அல்லது ஒன்ரு? இக்கார்யத்தின் காரணத்தை நாம் அறியவேண்டும். தவிற, உபாஸனைக்கும் கர்மத் திற்கும் உள்ள தொடர்பு என்ன? அதையும் அறிந்து கொள்ள என் மனம் விரும்புகிறது உபாஸனை இல்லாமல் செய்யும் கர்மங்களின் பலன் யாது? பக்தியுடன் செய்யும் வினைகளின் பயன் என்ன? இக்கருத்துக்களை மையமாகக்கொண்டு நாளை ப்ரச்னம் பண்ணப்போகிறேன்.

ஸுமந்து:— குழந்தாய்! கபந்தீ! அழகாகவும் அறிவுடையதாகவும் இருக்கிறது உன் கருத்து. முதல் பிரச்னம் முதன்மையானதாக அமைந்துவிட்டது. எல்லாம்வல்ல இறைவன் உங்களுக்கு அனுக்கிரகம் செய்வான். நாளை பகவான் பிப்பலாதர் முன் சந்திப்போம். வேணும் அநேக ஆசீர்வாதம். (அறுபேர் களும் மஹரிஷியை நமஸ்காரம் செய்து விடைபெறுகின்றனர்.)

(திரை விழுகிறது)

காட்சி 2

[திரை விலகியதும் பிப்பலாதர் ஆச்ரமம் தென்படுகிறது. வெளியில் வடவ்ருக்ஷத்தின் நிழலில் தர்ப்பாஸனங்களில் பகவான் பிப்பலாதரும் ஸுமந்துவும் வீற்றிருக்கின்றனர். இருமருங்கும் ஆறு ரிஷிகுமாரர்களும் ஹிரண்யநாபனும் நிற்கின்றனர். திரைக்குள்ளிருந்து வேத ஒலி கேட்கிறது. சிஷ்யர்கள் அனைவரும் "ஓம் நம: பரமாத்மனே, ஹரி: ஓம்" என்று கூறி மஹரிஷியை அபிவாதனம் செய்துவிட்டு அவர்களின் அனுமதியுடன் உட்காருகின்றனர்.]

பிப்பலாதர் :— குழந்தைகளே! மங்களமுண்டாகட்டும் இந்த ஒரு வருஷ பிரம்மசர்யத்தினுல் உங்கள் மனதை நன்ருகக் கட்டுப்படுத்தியிருக்கிறீர்கள். தவத்தினுல் இந்திரியங்களை ஜயித்து விட்டீர்கள். சிரத்தையினுல் புத்தியையும் பக்குவப்படுத்தியிருக்கிறீர்கள். பிரம்ம உபதேசம் பெறத்தகுதியுள்ளவர்களாகி விட்டீர்கள்.

ஸுமந்து :— சித்தம் அழகியவர்களே! ஓஜஸ்ஸினுலும் தேஜஸினுலும் முகமண்டலம் ஒளிவிட, ஒரே ஸமயத்தில் ஏழு ஆதித்யர்கள் உதித்திருப்பதுபோல் ப்ரகாசித்துக்கொண்டிருக்கிறீர்கள். உங்கள் கேள்விகளை பகவான் பிப்பலாதரிடம் நீங்கள் இப்போது கேட்கலாம்.

பிப்பலாதர் :— ஒவ்வொருவராக அருகில் வந்து கேட்பது நலம்.

(கத்யரின் குமாரர் கபந்தீ அணுகி வந்து) ஸ்வாமீ! இன்று நான் பிரச்னம் பண்ண அனுமதி வேண்டுகிறேன் கிருபை பண்ணவேண்டும்! ஐயனே!

பிப்பலாதர் :— குழந்தாய்! தாராளமாகக் கேள். தெரிந்தமட்டும் விடை கூறுகிறேன்.

கபந்தீ :—(மற்றவர்கள் அவர் முகத்தை ஆவலோடு பார்த்திருக்க) ஹே பகவானே! இந்த பிரஜைகள் எதனிடத்தில் நின்றும் உற்பத்தியாயின? இதை விபரமாக விளக்கி அருளவேண்டும்.

ஸுமந்து :— சபாஷ்! கபந்தி! மிகவும் ஸாதுவான கேள்வி! பேதபுத்தி நீங்கி அபின்னமான பிரம்மத்தை அறியுமுன் இந்த பின்னமான பிரபஞ்சத்தின் தோற்றத்திற்குக் காரணம் அறிவதும் அவசியமே. நண்பரே! இந்த ஈ, எறும்பு முதலான பிராணிகளும், பிராமணர் முதலான எல்லா பிரஜைகளும் எங்ஙனம் தோன்றின? எதற்காக? எப்படி? எப்போது? எதனின்றும் சிருஷ்டி ஏற்பட்டது? என்று நம் க்ஷத்யரின் குமாரன் கபந்தீ கேட்கிறுன். விடை கூறுங்கள்.

பிப்பலாதர் :— பிரஜாபதியானவர், தான் மட்டும் தனியாக இருக்க விருப்பமில்லாமல், பிரஜைகளை ஸ்ருஷ்டிக்கவேண்டுமென்ற இச்சை கொண்டவராய், தவம் செய்தார். தவம் செய்து ரயி, பிராணன் என்கிற இரட்டையை உண்டுபண்ணினுர். இவைகள் இரண்டும் சேர்ந்து எனக்குப் பலவிதமான பிரஜைகளை உண்டுபண்ணித் தருவார்கள் என்று கருதி இந்த மிதுனங்களை ஸ்ருஷ்டித்தார்.

கபந்தீ :— குருநாதரே! பிரஜாபதி என்பவர் யார்? அவர் செய்த தவத்தின் விபரம் என்ன?

பிப்பலாதர் :— பிரஜாபதி என்ற பதத்திற்குப் பிரஜைகளின் பதி என்று பொருள். அதாவது ஸமஷ்டி வடிவினர். ஹிரண்யகர்ப்பர் என்றும் கூறுவார்கள். ஒரு சிறிய உதாஹரணம் கூறுகிறேன், நன்ருக விளங்கும். நம்மையே எடுத்துக்கொள்வோம். நம் மனது விழித்திருக்கும்போது அதன் நினைவுகள், வினைகள் இவைகளின் பிரதிபலிப்பே நாம் வெளியில் காணும் பிரபஞ்சம். மனது அடங்கினுல் வெளியுலகம் இல்லை. ஸமஷ்டியான மனதுதான் பிரஜாபதி என்பது. ஸமஷ்டி வ்யஷ்டியாக ஆகும்போதுதான் ஸ்ருஷ்டி ஏற்படுகிறது. வ்யஷ்டியாகவேணுமென்று எழுந்த நினைவே தவம். ஒவ்வொரு கல்பத்திலும் பிரளயத்தின் முடிவில் ஹிரண்யகர்ப்பர் ஸ்ருஷ்டி செய்ய நினைக்கிருர்.

"நானே ஸர்வாத்மாவாக இருந்து இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறேன்" என்று நினைத்துப் பூர்வகல்ப பாவனைகளை அனுஸரித்து, வேதங்களில் கூறப்பட்டு இருக்கும் ஞானரூபமான தவத்தைச் செய்தார். அதாவது அவைகளை ஸ்மரித்தார். இந்தக் கல்பத்தில் ஞாபகத்திற்குக் கொண்டுவந்தார். உத்பத்திக்குக் காரணமான மிதுனங்களை ரயி, பிராணன் என்ற இரட்டைகளை ஸ்ருஷ்டித்தார். போக்தாவும் போக்யமும் ஆன இவ்விரண்டும் சேர்ந்து நாநாப்ரகாரமுள்ள பிரஜைகளை உத்பத்தி செய்யும் என்று கருதினுர். தானே மிதுனங்களாக ஆனுர்.

கபந்தீ :—ரயி, பிராணன் இவைகளைப்பற்றி விளக்கமாகக் கூறவேண்டும். ஸ்வாமீ!

பிப்பலாதர் :—ரயி என்ருல் தனம், அதாவது போக்ய வஸ்து. அன்னம், தாஹ்யம், சந்தின் என்றும் சொல்லலாம். ஸ்தூலமோ, ஸூக்ஷ்மமோ, மூர்த்தமோ (வடிவுள்ளதோ), அமூர்த்தமோ (வடிவில்லாததோ) எல்லாம் ஏதாவது ஒரு விதத்தில் அன்னம் தான், ரயி தான். ஆகையால் இதுவும் ஸர்வாத்மாவாக இருப்பதால் ப்ரஜாபதியாக ஆகிறது. ப்ராணன் என்ருல் போக்தா, அக்னி, ஆதித்யன். பொதுவாக எல்லாவற்றையும் ரயி, அதாவது அன்னம் என்று சொன்னுலும் அதற்குள்ளும் வடிவுள்ளதை ரயி (அன்னம்) என்றும் வடிவில்லாததை பிராணன் (அத்தா) என்றும் சொல்லலாம். எல்லா அன்னங்களுக்கும் அதிஷ்டாதா சந்திரன். எல்லா பிராணன்களுக்கும் அதிஷ்டாதா ஆதித்யன். சுருங்கச் சொன்னுல் பிரஜாபதியானவர் சூரிய சந்திர மிதுனமாக ஆகி முறையாக இந்தப் பிரபஞ்சமாகத் தோற்றமளிக்கிருர்.

ஸுகேசர் :— ஸ்வாமீ! முதலில் சிருஷ்டியைப்பற்றிச் சொன்னீர்களே! முதலாவது ஸிருஷ்டி எப்போது ஏற்பட்டது?

கௌஸல்யர் :— பிரஜைகளின் உத்பத்தியைப்பற்றி என் பிதா வேறுவிதமாக விவரிக்கக் கேட்டிருக்கிறேன்.

ஸௌர்யாயணீ :— குருநாதரே, என் பிதாமஹரும் சிருஷ்டிக்கிரமத்தை மற்றொரு விதமாக வர்ணித்திருக்கிறார். இந்த வித்தியாசங்களுக்கு ஸமாதானம் சொல்ல வேண்டும்.

பிப்பலாதர் :— நண்பரே, குழந்தைகளின் இந்த ஐயப்பாடுகளை நீக்குவீராக!

ஸுமந்து :— வத்ஸா ஸுகேசா! சிருஷ்டி இன்ன கல்பத்தில் இன்ன யுகத்தில் குறிப்பிட்ட வருஷம், மாதம் திதியில் ஆரம்பிக்கப்பட்டது என்று சொல்லமுடியாது அது அநாதி. ஆதியில்லாதது பல உபநிஷத்துக்களில் பல ரிஷிகள், சிருஷ்டியைப்பற்றிப் பலவிதமாக விவரித்திருப்பது வாஸ்தவமே. அவர்கள் ஒன்றுக்கு மற்றொன்று முரணாகச் சொல்லுவதாக எண்ணக்கூடாது. ஒவ்வொரு ஆசிரியரும், தம்மை வந்தடைந்த மாணாக்கர்களின் பரிபக்குவம், சூழ்நிலைக்குத்தக்கபடி, அவர்களுக்கு நன்றாகப் புரியுமாறு பல யுக்திகளைக் கையாண்டு விவரித்திருக்கிறார்கள். அதை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது ஒருவர் சொல்லுக்கும், மற்றொருவர் மொழிக்கும், பிறிதொருவர் கூற்றுக்கும், வித்தியாசம் தோன்றுவது இயல்பே. தவிர இந்நிலைக்கு வேடிக்கையாகவும் ஒரு ஸமாதானம் கூறலாம். பேதஞானத்தை வெறுக்கும் அஜாதவாதத்தில் ஆழ்ந்திருக்கும் பிரம்மஞானிகள். இதில் தாத்பர்யமில்லாததால் இந்த சிருஷ்டியைப்பற்றிப் பலவிதமாக ஹாஸ்யமாகவும் சொல்லியிருக்கலாம்.

கபந்தீ :— உலகில் எல்லாம் அன்னமாக இருப்பதால் ரயியை ஸர்வாத்மாவான ப்ரஜாபதி என்று சொல்வது பொருத்தமே. பிராணனை அதாவது ஆதித்யனை ஸர்வாத்மாவான ப்ரஜாபதியாக எப்படிச் சொல்லலாம், இந்த விஷயத்தை விபரமாகச் சொல்லவேண்டும்.

பிப்பலாதர் :— கூறுகிறேன் குழந்தாய், கவனமாய்க் கேள். கதிரவன் உதயமாகி எதனாலே கிழக்கு திக்கிலுள்ள பிராணன்களையெல்லாம் பிரகாசப்படுத்துகிறாரோ அதனால் அந்த திக்கிலுள்ள அன்ன ரூபமான பிராணன்களை தன் கிரணங்களில் அடக்கி எல்லாவற்றையும் தன் ஸ்வரூபமாக ஆக்குகிறார். அப்படியே தெற்கு, மேற்கு, வடக்கு, கீழ், மேல், மூலை, இந்த எல்லா திசைகளிலுள்ளவர்களையும் மற்ற மூலை முடுக்கிலுள்ள எல்லாவற்றையும் பிரகாசப்படுத்துவதன் மூலம் தன் கிரணங்களில் அடக்கி தன் ஸ்வரூபமாக ஆக்கிவிடுகிறார். இதனால் இவரே ஸர்வாத்மா, விச்வரூபர் (ஸர்வ வடிவினர்) இவரே பிராணன் அக்னி. இவர் தினமும் உயரக் கிளம்புகிறார். இதே கருத்தை ரிக்வேத மந்திரமும் கூறுகிறது.

ஸுமந்து :— ஸூர்யன் ஒவ்வொரு திசையிலும் தன் கிரணங்களைச் செலுத்தி, ஸர்வ பிராணிகளையும் ஊடுருவிச் சென்று பிரகாசிக்கிறார். தன் பிரகாசத்தினால் எங்கும் வ்யாபித்து, எல்லா திசைகளிலும் இருக்கும் ஸர்வ பிராணிகளையும் தன் கிரணங்களால் ஸம்பூர்ணமாகத் தரித்துத் தத்தம் சேஷ்டிதங்களைச் செய்ய வைக்கிறார். ஆகவே அவர்தான் பிராணன். ஸமஷ்டியான ஜீவரும் அவரே.

கபந்தீ :— ரிக்வேத மந்திரத்தைக் கூறுங்கள் குருநாதரே !

பிப்பலாதர் :— ஸூர்யனை, "விசுவரூபராகவும், ஒளி பொருந்திய கிரணமுள்ளவராகவும், ஞானமுள்ளவராகவும், ஸர்வப்ராண ஆச்ரயராகவும், ஸர்வப்ராணிகளுக்கும் நேத்ரமாயும், ஏகராயும் பெரியோர்கள் பார்க்கிறார்கள். இவர் அநேக ஆயிரம் கிரணங்கள் உள்ளவர். நூற்றுக்கணக்கான பிராணி ரூபமாக இருப்பவர். உதயமாகும் ஸூர்யன் பிரஜைகளின் பிராணன்

கபந்தீ :— ஸ்வாமீ! சூரியனையும் சந்திரனையும் பிரஜாபதியாகக் காண்பித்தீர்கள். இவ்விருவரும் சேர்ந்து எப்படி பிரஜைகளை ஸிருஷ்டிக்கிருர்கள்? இதுபற்றி விபரமாகக் கூறவேண்டுகிறேன்.

பிப்பலாதர் :— ஸூர்ய சந்திரர்கள் ஸம்வத்ஸரத்தை ஸ்ருஷ்டித்தனர். இந்த ஸம்வத்ஸரமும் பிரஜாபதியே, அதாவது காலாத்மா ப்ரஹ்மம். அதற்கு மார்க்கங்கள் (அயனங்கள்) இரண்டு, தக்ஷிணாயனம், உத்தராயணம் என்று. எவர்கள் வருஷமாகிற காலாத்மாவை இஷ்டம், பூர்த்தம் இவைகளால் உபாசிக்கிருர்களோ அவர்கள் சந்திரலோகத்தை அடைகிருர்கள். நிச்சயமாக அவர்கள் மறுபடியும் திரும்பப் பிறக்கிருர்கள். பிரஜாகாமர்களாகிய இந்த ரிஷிகள் தாங்கள் செய்துள்ள இஷ்டாபூர்த்த கர்மாக்களை அனுஸரித்து தக்ஷிண மார்க்கத்தில் செல்கின்றனர். பித்ருயாணம் என்ற தக்ஷிண மார்க்கம் வழியாக அடையப்படும் சந்திரன் தான் ரயி என்பது.

கபந்தீ :— ஐயனே! இஷ்டம், பூர்த்தம் என்ருல் என்ன?

ஸுமந்து :— இஷ்டம் என்பது ச்ருதிகளில் விதிக்கப்பட்ட கர்மா. அதாவது அக்னிஹோத்ரம், தவம், ஸத்தியம், தேவபூஜை, அதிதி பூஜை, வைச்வதேவம். இவைகள் நித்திய நைமித்திக கர்மாக்களேயாகும். பூர்த்தம் என்பது ஸ்மிருதிகளில் கூறப்பட்டிருப்பது; அதிகம் காமிய கர்மாக்களேயாகும். அதாவது கிணறு, குளம், ஏரி வெட்டுவது, கோவில் கட்டுவது, அன்ன தானம் முதலியவை.

கபந்தீ :— ஸ்வாமீ! இஷ்டம் பூர்த்தம் என்ற இந்த கர்மாக்களைச் செய்பவர்கள் அடையும் பலனைப்பற்றியும் விளக்கவேண்டும். மோக்ஷ இச்சை உடையவர்கள் செய்யவேண்டிய கர்மாக்களையும் விவரிக்கவேண்டும்.

பிப்பலாதர் :— வத்ஸா ! இஷ்டம், பூர்த்தம் என்ற கர்மாக்களைச் செய்பவர்கள் தக்ஷிணாயன மார்க்கமாக சந்திர லோகத்தை அடைகிறார்கள், இகபர சுகங்களை நாடி, கர்மாக்களின் பலனை விரும்பி, அதில் மிகுந்த ஆசையுள்ளவர்களாய் கர்மம் செய்தவர்கள் இவர்கள். இவர்கள் இவ்வுலகத்தில் கீர்த்தி, ஸுகம் எல்லாம் துய்த்துப் பரத்திலும் நல்ல ஸ்வர்க்கபோகம் அனுபவித்துத் தீர்ந்தபின் பூர்வ ஜன்ம வாஸனைப்படிப் பிறவியெடுக்கிறார்கள். மோக்ஷ இச்சையுள்ள மற்றவர்கள் தபஸ்ஸினாலேயும், ப்ரஹ்மசர்யத்தினாலும், ச்ரத்தையினாலும், உபாஸனத்தினாலும் ஸூர்யனைப் பஜிக்கிறார்கள். அதன் பயனாய் உத்தராயண வழியாக ஆதித்யனைச் சென்று அடைகிறார்கள் அதுதான் ஸர்வ ப்ராணிகளுடைய கதி. இருப்பிடம். அதுதான் அமிருதம். அழிவில்லாதது. அபயம், பராயணம். அங்கே சென்றவர்கள் மறுபடியும் திரும்பமாட்டார்கள். ஆனால் இவ்விடத்தை அவித்வான்கள் அடையமுடியாது. அவர்களுக்கு இது தடையாக உள்ளது. இந்த ஸம்வத்ஸரத்தைப்பற்றிக் கூறும் மந்திரம் உள்ளது.

கபந்தீ :—ஸ்வாமி, மந்திரபாகத்தைச் சொல்லுங்கள் கிருபை செய்து.

பிப்பலாதர் :— எல்லோருக்கும் உத்தமகதியாக விளங்கும் ஸம்வத்ஸர ரூபியான ஆதித்யன், ஐந்து பாதங்கள் உள்ளவர். பன்னிரண்டுவிதமான ஆகிருதி உடையவர். எல்லோரையும் ஜனிப்பிக்கும் பிதா. தேவலோகத்துக்கும் மேலே-அதாவது எல்லாவற்றிற்கும் உயரே இருக்கும் இவரை ஜலத்தோடு கூடிய ஸூரியனாக காலத்தை யறிந்த சிலர் சொல்கிறார்கள். வேறு சிலர் ஸர்வக்ஞனான பரமாத்மாவாகச் சொல்லுகிறார்கள். ஏழு குதிரைகள் உள்ளதும், ஆறு அரங்கள் உள்ளதும் எப்பொழுதும் செல்லுகின்றதுமான இவருடைய ஸ்வரூபத்தில் உலகம் முழுவதும் நிலைத்து நிற்பதாகவும் கூறுகிறார்கள். எப்படியும் ஸர்வ ஜகத்துக்கும் ஆச்ரய

மான காலரூபியான ஸம்வத்ஸரமும் ப்ரஜாபதியே. இதுவும் சந்திராதித்யஸ்வரூபம் தான் சந்திரனால் ஏற்படும் இரவுகளும், சூரியனால் ஏற்படும் பகல்களும் பல சேர்ந்துதானே ஸம்வத்ஸரம் ஏற்படுகிறது.

ஸுமந்து :— நாம் கண்கூடாகக் காணும் ரவியை இதுபோல் அழகாய் வர்ணித்திருப்பது வேறு இலக்கியத்தில் இல்லவேயில்லை. ருதுக்களைப் பாதங்களாயும், மாஸங்களை அவயவங்களாயும் விவரித்திருப்பது பொருத்தமேயாகும். மழைக்கும் அவரே காரணபூதரானதால் உதகமுள்ளவராகக் கூறியிருப்பதும் சரியே.

கபந்தீ :— பாதங்கள் ஐந்து என்று சொன்னீர்களே ருதுக்கள் ஆறு உண்டல்லவா?

ஸுமந்து :— ஹேமந்தத்தையும் சிசிரத்தையும் ஒன்றுக கணக்கிட்டு ஐந்து பாதங்கள் என்று சொல்லப் பட்டது. அடுத்த வரியில் சக்கரத்திற்கு ஆரங்கள் ஆறு என்று விபரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வானவில்லில் தோன்றும் ஸப்த வர்ணங்களையே ஏழு குதிரைகளாக விவரித்திருக்கிறார்கள்.

பிப்பலாதர் :— வத்ஸா, கபந்தீ! இனி மாஸத்தைப் பிரஜாபதியாகப் பாவிக்கும் விதத்தைக் கூறுகிறேன். அதில் க்ருஷ்ணபக்ஷமே ரயி. வளர்பிறையே ப்ராணன். எல்லாம் ப்ராணஸ்வரூபம் தான். அவரைத் தவிற, வேறு ஒன்றும் இல்லை என்று ரிஷிகள் தியானம் செய்கின்றனர். இங்கு சுக்லபக்ஷம் ப்ராணனாகக் கூறப் பட்டுள்ளது. ஆகவே அந்த ரிஷிகளுக்கு எல்லாம் சுக்லபக்ஷம் தான். க்ருஷ்ணபக்ஷத்தையும் சுக்லபக்ஷ ரூபமான ப்ராணனாகத்தான் அவர்கள் தியானிக்கிறார்கள். சுக்லபக்ஷரூபமான ப்ராணனைத்தவிற, வேறு ஒன்றும் அவர்களுக்குத் தோன்றாது. ஆகையால் அவர்கள் க்ருஷ்ணபக்ஷத்தில் செய்த யாகமும் சுக்ல பக்ஷத்தில் செய்ததாகவே ஆகிறது. எவர்கள் இம் மாதிரியாக ப்ராணஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ள

வில்லையோ அவர்களிடம் அக்ஞான இருள் நிறைந்து இருப்பதால் அவர்கள் சுக்லபக்ஷத்தில் செய்த யாகமும் க்ருஷ்ணபக்ஷத்தில் செய்ததாகவே ஆகிறது.

இனி பகல் ராத்திரி சேர்ந்த ஒரு தினமும் பிரஜாபதியே ஆகும். அதில் பகல் ப்ராணனுகும். இரவு ரயியாகும். எவர்கள் பகலில் ரதிகாரணபூதயான ஸ்திரீயுடன் சேருகிருர்களோ, அவர்கள் பிராணனை வெளிக்கிளம்பிப்போகும்படி செய்கிருர்கள். அதாவது அல்பாயுஸ் உடையவர்களாய் போகிருர்கள். எவர்கள் இரவில் ஸ்திரீகமனம் செய்கிருர்களோ அவர்கள் பிரம்ம சாரிகளாகக் கருதப்படுவார்கள் கிருஹஸ்த ஆச்ரமத்தில் இருப்பவர்கள் முன் சொன்னபடி நடந்துகொண்டால் பிரம்மசரிய விரத பலன் சித்திக்கும். இது வேத மாதாவின் பரமகிருபையாகும். வத்ஸா! இனி உன் பிரச்னத்திற்கு நேர் விடை கூறுகிறேன் கேட்பாயாக! அன்னமே பிரஜாபதி! அதிலிருந்து ரேதஸ் உண்டா கிறது. அதினின்றும் இந்த பிரஜைகள் உண்டாகிருர்கள். எந்த கிருஹஸ்தர்கள் பிரஜாபதி விரதத்தை (ருது காலங்களில் ராத்திரியில் பார்யாகமனத்தை) செய் கிருர்களோ, அவர்கள் புத்திரன் புத்திரிகளை உண்டு பண்ணுகிருர்கள். இப்படியாக ஸம்ஸார சக்ரம் சுழலு கிறது. இவ்வாறு ஸிருஷ்டிக்கப்பட்ட இந்த பிரபஞ் சத்தை நாம் பார்க்கிருேம்.

ஸுமந்து :— குழந்தைகளே! ஸத்குரு உப தேசத்தைச் சுருக்கமாக அவருடைய அனுமதியுடன் கூறுகிறேன். கவனமாகக் கேளுங்கள். ப்ரஹ்மமே ப்ரஜாபதி. அதுவே ஸூர்ய-சந்த்ர மிதுனமாகிற ப்ராணனும் ரயியும். அதுவே வருஷம், மாஸம், தினம், அன்னம் எல்லாம். ஒரு தந்தையாகிற ப்ரஜாபதி, அன்னமாகிற ப்ரஜாபதியை உண்டு வளர் கிருர். ப்ரஜாபதியாகிற ரேதஸ்ஸும் ஸ்கலிதமாகிறது. தாய் ப்ரஜாபதி கருவுற்று மகவு பிறக்கிறது. அதுவும் ப்ரஜாபதியே.

பிப்பலாதர் :— ஸ்வர்ணத்தைக்கொண்டு சிறு வளையங்கள் செய்கிறோம். வளையங்கள் ஸ்வர்ணமே. பிறகு பல வளையங்களைச் சேர்த்து சங்கிலித் தொடராகப் பின்னுகிறோம். அதுவும் ஸ்வர்ணமே. எல்லாம் ஸ்வர்ணமே. அதுபோல் எல்லாம் பிரஜாபதியே. எவர்களிடத்தில் தபஸ்ஸும் ப்ரஹ்மசர்யமும் இருக்கிறதோ, எவரிடத்தில் ஸத்யம் பிரதிஷ்டிதமாக இருக்கிறதோ, அவர்களுக்கு அபரப்ரஹ்மலோகமாகிற சந்திரலோகம் (பித்ருலோகம்) கிடைக்கும். அதாவது கேவலம் கர்மிகளுக்கு சந்திரலோகம் ஸித்திக்கும். எவரிடத்தில் வக்ரபாவம், பொய், வஞ்சனை இல்லையோ அவர்களுக்கு சுத்தப்ரஹ்மலோகம், ஸூர்யலோகம் கிடைக்கும். அதாவது தேவயானம், ஞானத்துடன் கூடிய கர்மிகளுக்கு ஸூர்யலோகம் ஸித்திக்கும். ஓம் தத் ஸத். மங்களம் உண்டாகட்டும்.

(சிஷ்யர்கள் எழுந்து மஹரிஷிகளை வணங்கிவிட்டு ஒவ்வொருவராகப் போகிறார்கள்.)

(திரை விழுகிறது)

காட்சி 3

(திரை விலக, பகவான் பிப்பலாதர் ஆசிரமத்தில் எல்லோரும் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருக்கின்றனர்.)

ஸுமந்து :— குழந்தைகளே, மங்களானி பவந்து, இன்று யார் பிரச்னம் செய்யப்போகிறீர்கள்?

பார்க்கவர் :— (எழுந்து நமஸ்காரம் செய்து) நான் கேட்கலாமென்றிருக்கிறேன் ஸ்வாமீ!

பிப்பலாதர் :— வத்ஸா! அருகில் வா உட்கார், உன் இஷ்டப்படி வினவலாம். நான் பதில் கூறுகிறேன்.

பார்கவர்:— குருநாதரே! எத்தனை தேவதைகள் சரீரத்தைத் தாங்குகின்றனர்? இவர்களில் எத்தனை

பேர்கள் தங்கள் மஹிமையை வெளிப்படுத்திக் காட்டு கின்றனர்? இவர்களில் மிகச் சிறந்தவர் யார்?

ஸுமந்து :— ஸபாஷ், நல்ல பிரச்னை! முதல் கேள்விக்கு முற்றிலும் பொருத்தமானது இது. பிரஜாபதி யைப் பற்றியும், பிராணனையும் ரயியையும் பற்றியும், அவைகள் வெளி உலகில் எங்ஙனம் வியாபித்திருக் கின்றன என்பது பற்றியும், அறிந்தோம். இப்போது அந்த பிரஜாபதி எப்படி இந்த சரீரத்தில் இயங்குகிறது என்று அறியவேண்டாமா?

பிப்பலாதர் :— குழந்தாய்! ஆகாசம், வாயு, அக்கினி, ஜலம், பிருதிவி இந்த மஹா பூதங்கள் ஐந்து, கர்மேந் திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, அந்தக் கரணம் நான்கு ஆக 19 தேவர்கள் சரீரத்தைத் தாங்கு கிருர்கள். இவைகள் தத்தம் மகிமையை வெளிப்படுத் திக்கொண்டு, சரீர தர்மம் சரிவர நடக்க-தனுவின் தொழில் முடங்காமல் நடக்க-செயல் புரிகின்றனர். இவர்களில் யார் சிரேஷ்டன் என்ற கேள்விக்கு ஒரு கதை மூலம் பதில் கூறுகிறேன்.

ஸுமந்து :— குழந்தைகளே! கதை என்று சொன்னவுடன் கவனக்குறைவாய் இருந்துவிடாதீர்கள். ஒவ்வொரு வரியிலும் ஒரு முக்கிய தத்துவம் அடங்கி யிருக்கும். அதைச் சுலபமாக விளங்கவைக்கவே பகவான் ஒரு ஆக்யாயிகை (கதை) கூறுகிருர்.

பார்க்கவர் :— ஐயனே! மிகவும் ஜாக்கிரதையாகக் கேட்கிருேம்.

பிப்பலாதர் :— ஒருஸமயம் சரீரத்தில் வாஸம்செய்யும் இந்தத் தேவதைகளெல்லாம் ஒன்றுக்கொன்று சண்டை யிட்டுக்கொண்டன. ஒவ்வொன்றும் மிகுந்த கர்வம் அடைந்து "நானே சரீரத்தைத் தாங்குகிறேன். நானே சரீரத்தைத் தாங்குகிறேன்" என்று தன் தன் பெருமையைக் கூறி ஆர்ப்பரித்தன. இது கண்டு

முக்யப்ராணன் இவர்களைப் பார்த்து "அறியாமையால் இவ்வாறு வீணாகக் கர்வம் கொள்ளவேண்டாம். உண்மையில் நீங்கள் ஒருவரும் சரீரத்தைத் தாங்கவில்லை. நானே என் ஸ்வரூபத்தை ஐந்தாகப் பிரித்துக் கொண்டு சரீரத்தை நிலைநிறுத்தித் தாங்கிக்கொண்டிருக்கிறேன்" என்று எவ்வளவோ ஸமாதானமாகச் சொல்லிப் பார்த்தது. பிராணன் சொன்னதை அவை காதில் போட்டுக்கொள்ளவே இல்லை. தம் தம் பெருமைகளையே எண்ணிக்கொண்டு அலக்ஷ்ய புத்தியுடன் நடந்துகொண்டது.

பார்கவர் :— பின் என்ன நடந்தது?

ஹிரண்யநாபன் :— பகவானே! கதை ரொம்ப நன்றாக இருக்கிறது. மேலும் தொடர்ந்து சொல்லுங்கள்.

பிப்பலாதர் :— அப்போது அவர் (பிராணன்) அவர்களுக்குத் தக்கபடி பாடம் கற்பிக்க எண்ணம் கொண்டார். அதற்காக அந்த சரீரத்தை விட்டுத் தான் உயரக்கிளம்பிப் போய்விடுவதுபோல் பாசாங்கு செய்தார். அப்படிச் செய்த அளவில் தோள் கொட்டி ஆர்ப்பரித்த தேவதைகள் எல்லாரும் தத்தம் வலியிழந்து தாமும் பிராணனைப் பின்பற்றி உயரக்கிளம்பும்படி நேரிட்டது.

ஸுமந்து :— கர்வங்கொண்ட புலன்களின் கதியை கவனித்தீர்களா? குழந்தைகளே! அந்தப் பெருமை பிடித்த புலன்கள் தாங்கள் எல்லோரும் சேர்ந்து தாங்குவதாகக்கூடச் சொல்லவில்லை. ஒவ்வொன்றும் தானே தான் தாங்குவதாக அபிமானித்து வலுச்சண்டையிட்டுக்கொண்டன. முக்கிய பிராணன் எடுத்துக்கூறிய உண்மையையும் உணராமல் உதாசீனப்படுத்தின. இவைகள் இவ்வளவு கேவலமாக நடந்தும், பிராணனுக்குக் கோபத்தைவிட வருத்தமே அதிகம் ஏற்பட்டது. பொய்ச்சினம் காட்டி உடலை விட்டுவிடுவதுபோல் காண்பித்தது; அவ்வளவு தான். உண்மையாகவே அது

பிரிந்து போய்விட்டால் கதையே முடிந்துவிடுமே! இந்த உரையாடலுக்கே இடமிராதே!

பார்கவர் :— ஸ்வாமீ! அப்புறம் என்ன நடந்தது?

பிப்பலாதர் :— சரீரத்தை விட்டுக் கிளம்ப எண்ணிய பிராணன் அவைகள் மேல் கருணைகொண்டு சரீரத்தை விட்டுப்பிரியாமல் அதிலேயே நிலைபெற்றிருந்தது. அதனால் மற்றவைகளும் சரீரத்தில் நிலைபெற்றன. தத்தம் தொழில்களில் ஈடுபட்டன. தேனீக்கள் அவைகளின் அரசியைப் பின்பற்றுவது போல் நடந்துகொண்டன.

கௌஸல்யர் :— தேனீக்கள் எப்படி அரசியைப் பின்பற்றுகின்றன? விளக்கமாகக் கூறவேண்டும்!

பிப்பலாதர் :— தேன் கூட்டை உபேக்ஷித்து விட்டு ராணி ஈ வெளிக்கிளம்பினால், எல்லாத் தேனீக்களும் கூடச் சென்றுவிடும். பிறகு ராணி ஈ வேறு ஒரு கூட்டிலேயோ அல்லது அதே கூட்டிலேயோ பிரவேசித்தால் அவைகளும் அங்கு திரும்பி வந்துவிடும்.

ஸுமந்து :— அதுபோலவே சரீரத்தில் பிராணன் தங்கியிருக்கும்வரைதான் மற்றவைகளும் அங்கு இருக்க முடியும். பிராணன் வெளிக்கிளம்பிவிட்டால் அவைகளும் கிளம்பவேண்டியதுதான்; அங்கே இருக்க முடியாது. இந்த உண்மை வெட்ட வெளிச்சமாகத் தெரிந்ததும் பிராணனின் மஹிமைகளை அறிந்துகொண்டு அவைகள் கர்வத்தை விலக்கின.

ஹிரண்யநாபன் :— ஐயன்மீர்! இது போன்ற ஒரு கதை அரண்மனையில் வசிஷ்டர் சொல்லக்கேட்டிருக்கிறேன்.

ஸுகேசர் :— அப்படியா! அசுவகோஷா! அதை இப்போதே எங்களுக்குச் சொல்லுவாயாக!

ஸுமந்து :— குழந்தாய் அசுவகோஷா! எங்களுக்கும் ஆவல் உண்டு அதைக்கேட்க. உடன் கூறுவாய்.

ஹிரண்யநாபன் :— பெரியோர்களே! நண்பர்களே, வணக்கம். இந்தப்பெரிய ஸபையில் அடியேனுக்குப் பேச உரிமை ஏது? சக்தியேது? 'வசிஷ்டர் வாசகம்' ஆனதால் சிறிது தைரியத்துடன் கூறுகிறேன். ஒரு சமயம் கண் காது, மூக்கு, வாய், கை, கால் முதலிய கரணங்கள் எல்லாம் ஒன்று கூடி ஆலோசித்ததாம். "நாம் சிரமப்பட்டு உணவு தேடிக்கொண்டுவந்து கொட்டுகிறோம். இந்த வயிறு மட்டும் இருக்கிற இடத்தில் சோம்பேறியாக இருந்துகொண்டு எல்லாவற்றையும் தின்றுவிட்டு மேலும் மேலும் கொண்டு வாருங்கள் என்று கேட்கிறது. நாம் இனிமேல் இந்தப் பாழும் வயிற்றிற்காக உழைத்து ஓடாகப்போக வேண்டாம். இன்று முதல் தொழில் செய்வதை நிறுத்தி விடுவோம்" வயிறு எவ்வளவோ புத்திமதிகள் சொல்லியும் கேட்கவில்லை இனகர்வம் கொண்ட இந்திரியங்களின். வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றது. 2, 3 நாள்கள் கழிந்தன. வயிறு வாடியதால் எல்லாப் புலன்களும் க்ஷீணமடைந்தன. காலால் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை. கையை அப்புறம் இப்புறம் நகர்த்த முடியவில்லை. கண்கள் பஞ்சடைந்து போயின. இதுபோல் ஒவ்வொன்றும் தம் தம் சக்தியை இழந்து பரிதவித்தன. பிறகு புத்தி வந்து வயிற்றோடு செய்த வாதை விட்டு விட்டு, உடனுக்குடன் தம் தம் வேலையை அவை செய்துவந்தன.

கௌஸல்யர் :— நண்பா! கதை ரொம்ப சுவாரஸ்யமாக இருக்கிறது.

பார்கவர்:— பகவானே! அப்புறம் அந்த தேவதைகள் என்ன செய்தன?

பிப்பலாதர் :— "ஒரு மாளிகையைத் தூண்கள் தாங்குவதுபோல் நாமே இச்சரீரத்தை தாங்குகிறோம்

இவ்வுடல் கீழே விழுந்து நாசமடையாமல் நாமே காப்பாற்றுகிருேம்'' என்று கோஷித்த தேவதைகள், பிராணனுல் பாடம் கற்பிக்கப்பட்டு, அவரைத் துதித்தன.

ஸுமந்து :— அலக்ஷிய புத்தியும் அஹம்பாவமும், விலகினவுடன், ஸந்தோஷமும் நன்றியும் உண்டாவது ஸகஜமே. அதைத் தெரிவிக்க ஸ்தோத்திரத்தைவிடச் சிறந்த மார்க்கம் இல்லையே !

பார்கவர் :— எங்ஙனம் துதித்தன ? என்ன சொல்லிப் புகழ் பாடின ?

பிப்பலாதர் :— நீ கேட்ட கேள்விகளுக்கு விடை கூறிவிட்டேன். பிராணனே சிறந்தவன் என்ற உண்மையையும் இக்கதையின் மூலம் அறிந்திருப்பாய். ஆயினும் அந்த அறிவு திடப்படுவதற்காக, பிராணனுக்குச் சூட்டிய புகழ் மாலையைப் பாடுகிறேன் கேளுங்கள். மிகுந்த பக்தி விசுவாசத்துடன் தோத்திரம செய்கிருர்கள் புலன்கள்.

''ஹே பிராணு ! நீரே அக்கினியாக இருந்து தபிக்கிறீர் (எரிக்கிறீர்). நீரே ரவி, நீரே மேகம், நீரே இந்திரன், வாயு, பிருதிவி, சந்திரன் எல்லாம் நீர்தான். இருக்கிற வஸ்துவும் இல்லாத வஸ்துவும் உருப்படியாகத் தெரிவதும் அப்படித் தெரியாததும் நீர்தான். அழிவற்ற அமிருதமயமான பரம்பொருளும் நீர்தான்.''

ஸுமந்து :— முக்கிய பிராணன் தான், அக்கினிரூபமாக இருந்து எரிக்கிறது. ஆதித்தியனுகப் பிரகாசம் தருகிறது. பிறகு அதுவே மேகமாக இருந்து வர்ஷிக்கிறது. இந்திரனுக இருந்து பிரஜாபாலனம செய்கிறது. ஆஸுரசக்திகளை அழித்து நல்லோரைக் காக்கிறது. ஆவஹம், பிரவஹம், நிவஹம் முதலான வாயுவும் முக்கிய பிராணன் தான். இது பிருதிவியாக இருந்து கொண்டு எல்லாவற்றையும் தாங்குகிறது. இவரே ரயி,

(சந்திரன்) ஸம்பூர்ண ஜகத்துக்கும் போஷகரும் இவரே. ஸ்தூல ஸூக்ஷ்ம வடிவும் இவரே தான்.

பிப்பலாதர் :— குழந்தைகளே! துதியை மேலும் தொடர்ந்து சொல்லுகிறேன். ''சக்கரத்தின் குடத்தில் ஆரங்களைப்போல் உம்மிடத்தில் எல்லாம் பொருத்தப் பட்டிருக்கின்றன. ருக்வேதமும் நீர் தான் யஜுர்வேதம் ஸாமம், யக்ஞம், க்ஷத்ரம், பிரம்மம் எல்லாம் நீரே. நீர்தான் பிரஜாபதி. கர்ப்பத்திலிருப்பவரும் நீரே! வெளியில் பிறப்பவரும் நீரே. ஹே! ப்ராண! இந்த பிரஜைகள் உமக்கு பலியைக் கொண்டுவந்து கொடுக் கிறார்கள். நீரும் இந்திரியங்கள் ஸஹிதமாக விளங்குகிறீர்.''

ஸுமந்து :— இந்தத் துதியால் பிராணனின் ஸர்வா ச்ரயத்துவம் விளக்கப்பட்டது. ரதத்தின் நாபியில் ஆரங்கள் பிணைக்கப்பட்டிருப்பதுபோல் ஜகத்ஸ்திதி காலத்தில் ஸம்பூர்ணமான பதார்த்தங்களும் பிராண னிடத்தில் பொருத்தப்பட்டிருக்கின்றன. மூன்று வேதங் களும் அவைகளால் செய்யப்படும் யாகமும்; எல்லோரை யும் பாலனம் செய்யும் க்ஷத்திரியர்களும், யாகங்களை நடத்திவருகிற பிராஹ்மணர்களும், எல்லாம் இந்த பிராணனேயாகும் தேஹமும் தேஹியும் மாதாவும் பிதா வும், கர்ப்பமும், கருவும், சிசுவும் எல்லாம் பிராணன் தான். அவரே ஸர்வாத்மா! மனிதர் முதலான இந்த பிரஜைகள் கண், காது, மூக்கு, நாக்கு முதலிய இந்திரி யங்களின் வழியாக பிராணனுக்கு பலி பூஜை செய் கிறார்கள். இந்திரியங்கள் இழுத்துவரும் இன்பங்க ளெல்லாம் பிராணனுக்கு பலியிடுவதற்கேயாகும். அவைகள் செய்யும் பலியினால் (பூஜையினால்) திருப்தி யுடன் அவர்களை அணைத்துக்கொள்ளுகிறீர். அதில் மகிழ்ச்சி பெற்ற புலன்களும் திரும்பவும் பூஜைக்கு பிரயத் தினம் செய்வது நியாயமே. அது உசிதம்தானே. ஏனெனில் பிராணனே போக்தா! மற்றவையெல்லாம் போஜ்ய வஸ்துக்கள்தானே.

கபந்தீ :— குருநாதரே! என் கேள்விக்கும் இந்த விடைகள் விவரணம் தருகின்றன.

ஸுமந்து :— ஆமாம். உனது பிரச்னத்தின் தொடர்ச்சியே இரண்டாவது கேள்வி.

பிப்பலாதர் :— ஹே பிராணனே! நீர் உத்தம அக்கினியாக இருந்து தேவர்களுக்கு ஹவிஸ்ஸைக் கொண்டு கொடுக்கிறீர். பித்ருக்களுக்கும் அன்னத்தைக் கொண்டு செல்கிறீர். இந்திரியங்களுக்குத் தொழிலாயும் அதாவது தொழிலைச் செய்யும்படி ஏவுகிறவராயும் விளங்குகிறீர். ஹே பிராணு! தேஜஸ்ஸால் நீர் இந்திரன். உலகை ஸம்ஹாரம் செய்யும் ருத்ரனும் நீரே. ரக்ஷிப்பவரும் நீர். நீரே ஜோதிகளுக்கெல்லாம் பதியான ஸூர்யனுக ஆகாசத்தில் ஸஞ்சரிக்கிறீர். எப்போது நீர் மழையை வர்ஷிக்கிறீரோ அப்போது இந்த பிரஜைகள் யதேஷ்டமாக அன்னம் கிடைக்கும என்று ஆனந்தமடைகிருர்கள். எல்லாம் உன் கருணையின் விளைவே.

ஸுமந்து :— பிராணனில்லாவிடில் சரீரம் உலர்ந்து விடும். ஆகவே அங்கங்களுக்கு ரஸம் கொடுப்பதும் பிராணனேயாகும்.

பிப்பலாதர் :— ஸ்தோத்திரம் மேலும் தொடர்கிறது :— 'ஹே பிராணு! நீ வ்ராத்தியன். ஏகரிஷி என்ற பெயருடன் எல்லாவற்றையும் புஜிக்கும் அத்தா. ஜகத் திற்கு ஸத்பதி. நாங்கள் எல்லோரும் உமக்கு போஜ்ய வஸ்துக்களைக் கொடுப்பவர்கள். ஹே! வாயோ! நீர் எங்களுடைய பிதாவாயுமிருக்கிறீர் வாக்கிலும், ச்ரோத்ரத்திலும், நேத்ரத்திலும் மனத்திலும் நீர் சேர்ந்திருக்கிறீர். சேர்ந்து சரீரத்தைச் சிவமாக வைத் திருக்கிறீர். அது என்றும் மங்களமாகவே இருக்க வேண்டும். உயரக்கிளம்பிப் போகாமலிரும். நீர் பிரிந்து விட்டால் இந்த சரீரம் அமங்களமாகிவிடும். சவமாக மாறிவிடும். ஆகையினுல் கிருபை செய்யும். உடலை உதறித் தள்ளிவிட்டு உயரக்கிளம்பாமலிரும்.

பார்கவர் :—ஸ்வாமீ! வ்ராத்தியன் என்றால் என்ன?

பிப்பலாதர் :— வ்ராத்தியன் என்றால் ஸம்ஸ்காரங்கள் ஒன்றும் செய்யப்படாதவன். ஒவ்வொரு பிரஜையும் பிறந்தவுடன் சில ஸம்ஸ்காரங்கள் மாதாபிதாக்களால் செய்யப்பட்ட பிறகே சுத்தனாகிறான். பிராணனோ ஆதி பிரஜாபதி. அவருக்குப் பெற்றோர் ஏது? ஸம்ஸ்காரம் செய்யப்படாதவர் வ்ராத்தியன். இங்கே ஸ்வயமே சுத்தன் என்று தாத்பர்யம்.

பார்கவர் :— ஐயனே, பாமாலை மிகவும் அழகாகவும் அறிவு தரும் அருட்சொற்கள் நிறைந்தும் இருக்கிறது. மேலும் தொடர்ந்து கூறுங்கள்.

பிப்பலாதர் :— இந்த ஜகத் முழுவதும், இம்மையும் மறுமையும் எல்லாம் உம்வசமே. தாயைப்போல் எங்களை ரக்ஷியும். ஸம்பத்தையும் ஞானத்தையும் எங்களுக்குக் கொடும்— இந்த விதமாக தேவதைகள் முக்கிய பிராணனை துதித்தன.

பார்கவர் :— ஐயனே! ஸம்பத்து, ஞானம் இவை வேண்டும் என்று தேவதைகள் கேட்டதற்குத் தாத்பர்யம் என்ன? விவரமாகச் சொல்லவேண்டும்.

பிப்பலாதர் :-நண்பரே! குழந்தையின் ஸந்தேகத்தை நீக்குவீராக!

ஸுமந்து :— ஸம்பத்து என்றால் — நற்செல்வம். ஞானம் — நல்லுணர்வு. ஸத்விஷயங்களை நுகரும் திறமை — அவைகளைத் துய்க்கும் வாய்ப்பு — இவைகளையே நற்செல்வம் என்பர் நல்லோர். தீமைகளை விலக்கும் புத்திநுட்பம், கெட்டவைகளை நீக்கிவிடும் பண்பு — இதுவே கல்வி — நல்லுணர்வு — ஞானம். இப்படிப்பட்ட கல்விச் செல்வங்களைப் பெற்றால் இந்திரியங்கள் நல்ல வழியில் நடந்து வாழ்க்கையும் வெகு சீராக அமையும் அல்லவா!

கபந்தீ :— நாம் பாடத் தொடக்கத்தில் சாந்திபாடம் சொன்னோமே, அதே பொருள்தான்.

பார்கவர் :— நன்ருக நினைவிலிருக்கிறது. நல்லதையே கேட்கவேண்டும். நன்மையைக் காண வேண்டும் என்று ஆதியில் பாடினேமே!

ஸுமந்து :— குழந்தைகளே! இதன்பின் இந்த தேவதைகளுக்கு தங்கள் சக்தியிலும் புத்தியிலும் நம்பிக்கை போய்விட்டது,

கௌஸல்யர் :— அது ஸகஜமே. ஒருதரம் குட்டுப் பட்டாய்விட்டதே.

ஸுமந்து :— ஆகவே இப்போது ஸர்வ ஜாக்கிரதை யாக வரம் கேட்கின்றன. ஒரு தாய் தன் மக்களைக் காப்பதுபோல் எங்களைக் காப்பாற்றும் என்று பிராணனை வேண்டிக்கொள்ளுகின்றன. சாதாரணமாக நம்மை ரட்சிப்பவர் மூவர்—அரசன், அத்தன், அன்னை. இவர் களில் இருவர் கேட்டதைக் கொடுத்து கவனிப்பார்கள். அன்னை மட்டும் கேட்காமலேயே தருபவள். மற்ற இருவர் அன்பைவிடத் தாயின் அன்பே சாலச்சிறந்தது. தயை செய்வதில் தனக்கு உவமையில்லாதவள் தாய் ஆகவேதான் தாய்நாடு என்றும், வேதமாதா என்றும் புகழ்ந்து பேசுகிருேம் தேவதைகள் துதியின் கடைசி யில் கூறுகின்றனர் "நாங்கள் ஏதோ வேண்டுமென்று கேட்கிருேம். எங்களுக்கு அவை இதம் தருமாகில் கொடுப்பாயாக. பெற்றுப் பேணி வளர்க்கும் பெருமை மிக்க தாயைப்போல் ஆயிரக்கணக்கான அபராதங்களை யும் பொறுத்துக்கொள்ளும் அன்னையைப்போல் எங்களை ரட்சிக்கவேண்டும்".

பிப்பலாதர் :—குழந்தைகளே! நண்பரே! இத்துடன் இன்றைக்கு நிறுத்திக்கொள்ளுவோம்.

ஸுமந்து :—அப்படியே செய்வோம். மாத்யான்ஹிக காலமும் நெருங்கிவிட்டது, போவோம்.

(எழுந்து போகிருர்கள் திரை விழுகிறது)

காட்சி 4

[திரை தூக்கப் பட முன் காக்ஷியைப் போலவே பிப்பலாதர் முதலியோர் உட்கார்ந்து ஸம்பாஷித்துக் கொண்டிருக் கின்றனர்.]

கௌஸல்யர்:— ஸ்வாமீ. என்னை இன்று கேள்வி கேட்க அனுமதிக்கவேண்டும்.

பிப்பலாதர் :— குழந்தாய். தாராளமாக வினவலாம்.

கௌஸல்யர் :— குருநாதரே ! இந்தப் பிராணன் எங்ஙனம் உண்டாகிறது ? எதிலிருந்து பிறக்கின்றது ? இவ்வுடலினுள் எவ்விதம் வருகிறது ? தன்னைப் பிரித்துக் கொண்டு எங்ஙனம் நிலைபெறுகிறது ? எப்படி வெளிக் கிளம்புகிறது ? வெளி உலகை (அதிபூத அதிதைவங் களை) எப்படித் தாங்குகிறது ? உள் உலகை (அத்தியாத்மத்தை) எங்ஙனம் தாங்குகிறது ? தயவு செய்து விபரமாகக் கூறவேண்டும் ஐயனே !

பிப்பலாதர் :— வத்ஸா ! நீ மிகவும் கடினமான - சிக்க லான — கேள்வியை கேட்கிறாய். ஆயினும் நீ பிரம்ம நிஷ்டனாயும் அதிக ஆவலுள்ளவனாயும் இருக்கிறாய். நீ உத்தம அதிகாரி. உனது பிரச்னங்களுக்கு விளக்கமாகப் பதில் கூறுகிறேன் கேள்.

ஸுமந்து :— இரண்டாவது பிரச்னத்தில் பிராணனைப் பற்றிய புகழுரைகளைக் கேட்டோம். இந்த பிரச்னத்தில் அது இயங்கும் விதத்தைப் பற்றியும், விபாகம் செய்து கொண்டு வியாபிக்கும் தன்மையைப் பற்றியும், வெளிக் கிளம்பி அடையும் இடங்களைப் பற்றியும் அறியப் போகிறோம். நண்பரே ! இந்த மூன்றாவது பிரச்னம் மிகவும் பொருத்தமாக, முதலாவது பிரச்னத்தின் அனுபந்தமாகவே, அமைந்திருக்கின்றது.

பிப்பலாதர்:— இந்தப் பிராணன் ஆத்மாவினிடத் திலிருந்தே பிறக்கின்றது. மனித சரீரத்திலிருந்து நிழல்

எப்படி எழும்புகிறதோ, அப்படியே பிராணனும் ஆத்மா வினிடத்திலிருந்து உதிக்கின்றது. அது ஆத்மாவின் நிழல் போன்றது. மனதின் செய்கையால் அது உடலுக்குள் புகுகின்றது.

பார்கவர்:— ஆத்மா முக்காலத்திலும் மாறுதல் அடையாதது அல்லவா? அப்படியிருக்க அதிலிருந்து பிராணன் எப்படிப் பிறக்கமுடியும்?

ஸுமந்து:— குழந்தாய், பகவான் சொன்ன உதாரணத்தை நீ நன்ருகக் கவனிக்கவில்லையா! நிழல் தோன்றியதால் புருஷனுக்கு மாறுதல் உண்டாவதில்லையே; சூரியன் ஆகாயத்தில் இருக்கும் நிலையையும் அவனுக்கு நேர் மனிதன் நிற்கும் நிலையையும் அனுசரித்து நிழல்கள் உண்டாகி பெரியதும் சிறியதுமாகக் காட்சியளிக்கின்றனவல்லவா. அதுபோலவே ஒரே ஆத்மாவிடமிருந்து பிராணன்கள் தோன்றிப் பல உடல்களை அடைகின்றன.

கபந்தீ:—பிராணனின் உற்பத்தியில் மனது வகிக்கும் பங்கைப்பற்றி விபரமாகக் கூறவேண்டும் ஸ்வாமீ!

ஸுமந்து:—அப்பனே! பௌர்ணமி இரவில் சிறிதும் பெரியதுமாகப் பல பாத்திரங்களைத் தரையில் வைத்து ஜலம்விட்டு நிரப்பினுல் பூர்ணசந்திரன் அவை எல்லாவற்றிலும் பிரகாசிப்பான். சிறிய பாத்திரத்தில் சிறியவனும் பெரியதில் பெரியவனும், அசையும் பாத்திரத்தில் அசைபவனும் காட்சியளிப்பான். பிரதிபிம்பங்களில் ஏற்படும் மாறுதல்கள் ஆகாயத்திலிருக்கும் சந்திரனை அடைவதில்லை. சந்திரன் ஸ்தானத்தில் ஆத்மாவையும், உடல்களை பாத்திரங்களின் நிலையிலும், மனதை ஜலத்தின் ஸ்தானத்திலும் வைத்துச் சிந்தித்தால் உண்மை தெளிவாகும்.

ஸௌர்யாயணி:— ஸ்வாமி! தாங்கள் சொன்ன உதாரணத்தால் நன்ருகப் புரிந்து விட்டது.

கௌஸல்யர் :— ஐயனே, அக்ஷர பிரம்மத்திலிருந்து கிளம்பி மனிதனுடைய ஸங்கல்பத்தினாலும் இச்சையினாலும் உண்டான கர்மங்களின் விளைவாக இந்த உடலுக்குள் புகுந்த பிராணன் பின்னால் இயங்கும் விதத்தைச் சொல்லவேண்டும்.

பிப்பலாதர் :— சித்தம் அழகியவனே! பிராணன் உடலில் பிரவேசித்துத் தன்னை ஐந்தாகப் பிரித்துக் கொள்ளுகிறது. அபானன் என்ற பெயருடன் பாயுவிலும் உபஸ்தத்திலும் நிலைபெறுகிறது. முகம், நாசி இவைகளின் வழியாக வெளிவரும் பிராணன் கண்கள் செவிகள் இந்த இடங்களில் நிலைபெறுகிறது. இவ்விரண்டிற்கும் இடையில் ஸமானனாக இருக்கிறது நாபி பிரதேசத்தில் விளங்கும் இந்த ஸமானன், உண்ணும் உணவை அங்கங்களுக்குச் சமமாகக்கொண்டு செல்லுகிறது. அதனால் தான் ஏழு தீக்கொழுந்துகள் எழுகின்றன.

கபந்தீ :— ஏழு தீக்கொழுந்துகள் எவை?

ஸுமந்து:—கண் 2, காது 2, மூக்கு துவாரம் 2, வாய் 1 ஆக இந்த ஏழும் தீக்கொழுந்துகள். இந்த ஏழு துவாரங்களிலுள்ள இந்திரியங்கள் மூலம்தான் ப்ரகாசரூபமான பார்ப்பது, கேட்பது முதலிய ஞானங்கள் உண்டாகின்றன. ஜாடராக்னியில் வரும் அன்னத்தை எல்லா அங்கங்களுக்கும் ஸமானன் எடுத்துச்செல்வதால் தான் அந்தந்த இந்திரியங்கள் பலம் அடைந்து தர்சனம் முதலான ப்ரகாசம் ஏற்படுகிறது. உணவு இல்லாவிட்டால் எல்லாம் சோர்ந்து போய்விடும். இங்கு அன்னத்தை ஹவிஸ்ஸாகவும், ஜாடராக்னியை அக்னியாகவும் சாப்பிடுவதை ஹோமமாகவும் இந்திரிய ஞானங்களை ஜ்வாலைகளாகவும் கூறப்பட்டிருக்கிறது.

கபந்தீ :—இந்த வாயுக்களைப் பிரித்து அந்தந்த இடங்களில் நியமிப்பது யார்? நியமனத்தில் ஏதாவது தத்துவங்கள் உண்டா?

பிப்பலாதர் :— ஒரு அரசன் தனக்குப் பிரதிநிதிகளாகப் பல அதிகாரிகளை, இந்த இந்த கிராமத்தில் இன்னுர் இன்னுர் இருந்து அதிகாரம் செலுத்துங்கள் என்று நியமிப்பதுபோல், முக்கியப் பிராணன் மற்றப் பிராணன்களை, அதாவது தன் பிரிவுகளான பிராணுபானுதிகளையும் கண் முதலியவைகளையும் தனித்தனியே ஏவுகின்றது. முக்கியப் பிராணன், பிராணன் அபானன் ஸமானனுகப் பிரிந்து, வியாபித்து, இயக்கும் இடங்களைப் பற்றிக் கூறினேன். இனிமேல் மற்றப் பகுதிகளான வியானன், உதானனைப்பற்றிச் சொல்லுகிறேன்.

கபந்தீ :— குருநாதரே! அருளிச் செயல்களைக் கேட்கக் காத்திருக்கின்ருேம்.

பிப்பலாதர் :— இந்த ஜீவாத்மா இதயத்தில் உறைகின்ருன். இதயத்தில் நூற்றெரு முக்ய நாடிகள் உள்ளன. அவற்றுள் ஒவ்வொன்றும் நூறு நூருகப் பிரிந்து செல்கின்றன. அந்த ஒவ்வொரு கிளை நாடியும் மீண்டும் 72000 வேறு கண்ணி நாடிகளாகவும் பிரிகின்றன. இவைகளில் வியானன் வியாபித்துச் செல்லுகிறது. நூற்றெரு நாடிகளில் ஒன்று மேல் நோக்கிச் செல்லுகிறது. அதற்கு ஸுஷும்னு நாடி என்று பெயர். அதில் உதானன் உலவுகிறது. இந்த உதானனுலேயே இவ்வுடலிலிருந்து பிராணனுக்குப் பிரிவு ஏற்படுகிறது.

கௌஸல்யர் :— பிரிந்த உயிர் என்ன ஆகிறது?

பிப்பலாதர் :— புண்ணியம் செய்தவர்களை புண்ணிய லோகங்களுக்கு அழைத்துச் செல்லுகிறது உதானன். சாஸ்திரோக்தமான கர்மங்களைச் செய்தவர்கள் புண்ணியசாலிகள். அவர்களுக்கு தேவப்பிறவி கிடைக்கிறது. சாஸ்திர விருத்தமான கர்மாக்களைச் செய்தவர்கள் பாப லோகங்களை அதாவது, நரகத்தையும், பூச்சி, புழு, மிருகம் முதலிய கீழ்ப்பிறவிகளையும் அடைகிருர்கள். மிச்ரமான வினைகளைச் செய்தவர்கள் மனித

உலகத்தை அடைகிறார்கள். அந்தந்த இடங்களுக்கு அழைத்துச் செல்வது உதானனுடைய காரியமாகும்.

கௌஸல்யர்:— ஸ்வாமீ! பிராணனின் தோற்றமும், வரவும், இருப்பும், பிரிவும்பற்றி அறிந்தோம். வெளி உலகிலும், உள் உலகிலும் பிராணன் தாங்கும் விதம் பற்றி விபரமாகக் கூறவேண்டுகிறேன்.

பிப்பலாதர் :—வத்ஸர்களே! கவனமாய்க் கேளுங்கள் ஸமஸ்டி வடிவான வெளி உலகத்திலுள்ள பிராணனுக்கும் வியஷ்டி வடிவான உடலிலுள்ள பிராணனுக்கும் உள்ள உறவைக் கூறுகின்றேன். சூரியனே வெளியிலுள்ள பிராணன். இது கண்ணிலுள்ள பிராணனை இயக்குவித்துக்கொண்டு உதிக்கின்றது. அதிதைவதப் பிராணனாகிய சூரியன் அத்தியாத்ம பிராணனாகிய கண்களுக்கு அனுக்கிரகம் செய்கிறது. இவ்விதமே மற்ற வெளிப் பிராணன்களும் (அந்தந்த இந்திரியங்களின் அதிஷ்டான தேவதைகளும்) உடலிலுள்ள மற்றப் பிராணன்களை இயக்குகின்றன. பிருதிவியில் உள்ள தேவதை சரீரத்தில் உறையும் அபானனைப்பற்றி இயக்குகிறது. அபான வாயுவுக்குத் தானாகவே கீழ்நோக்கும் சக்தி இருக்கிறது. இதுவே பூமியின் ஆகர்ஷண சக்தியாகும். அதனால் தான் சரீரம் மேலே போகாமலும் கீழே விழாமலும் நிலைத்து நிற்கிறது. ஸ்வர்க்கத்துக்கும் பூமிக்கும் இடையிலுள்ள வானவெளியில் இருக்கும் வாயு சரீரத்திலுள்ள ஸமானனை இயங்கவைக்கிறது. வெளியில் ஸஞ்சாரம்செய்யும் காற்றே (வாயுவே) வியானனுக்கு அநுக்ரஹம் செய்கிறது. வெளியில் காற்று வியாபித்திருப்பதுபோல் உடலிலும் வியானன் வியாபித்திருக்கிறது. வெளியில் இருக்கும் தேஜஸ்ஸே சரீரத்திலுள்ள உதானவாயுவை இயக்குவிக்கிறது.

ஸுமந்து :—ரவிமண்டலம் வெளிப்பட்ட பிராணன், பூமண்டலம் வெளிப்பட்ட அபானன். அந்தரிக்ஷம்

வெளிப்பட்ட ஸமானன். வாயு வெளிப்பட்ட வியானன். நக்ஷத்திரம் மின்னல் முதலிய தேஜஸ்கள் வெளிப்பட்ட உதானன். இவ்விதமாகப் பஞ்சப் பிராணன்களும் உள் பிராணன்களுடன் தொடர்புகொண்டிருக்கின்றன வல்லவா நண்பரே!

பிப்பலாதர் :— ஆமாம், மகரிஷியே! உடலைவிட்டு உதானவாயு போனவுடனே தேஜஸ் போய்விட்ட தென்று சொல்லுகிருர்கள். (தேஜஸ் என்ருல் களை) உதானவாயு பிரிந்ததும் உயிர் போய்விட்டது. சரீரம் குளிர்ந்துவிடுகிறது. ப்ரேதம் என்று பெயர் பெறுகிறது. இந்த தேஜஸ்தான் மறுபடியும் ஜனிக்கிறது. மனஸில் அடக்கப்பட்ட வாக் முதலிய இந்திரியங்களுடன் மீண்டும் பிறப்பை எடுக்கிறது. மரண காலத்தில் எந்த சங்கல்பத்துடன் உயிரை விடுகிருனோ, அந்த எண்ணங் களுடன் முக்கிய பிராணனோடு சேருகிருன். உதானனுடன் சேர்ந்து அந்த பிராணன், ஜீவனுடன் கிளம்பி ஸங்கல்பிக்கப்பட்ட உலகத்துக்குப் போகிருன். அதாவது இறக்கும் சமயத்தில் ஏற்படும் எண்ணங்களுக் கேற்ப உலகங்களை அடைகிருன்.

ஸௌர்யாயணீ :— ஐயனே, வாழ்க்கை முழுவதும் நற்கருமங்கள் செய்து வாழ்ந்தவன், மரண சமயத்தில் வழுவினல் பாப உலகத்தைச் சேர்வானு? அதுபோல் கெட்ட வழிகளில் வாழ்க்கை நேரததை வீணடித்து விட்டு கடைசி காலத்தில் மட்டும் நல்ல நினைவுகள் கொண்டவன் புண்ணிய உலகங்களை அடையமுடியுமா? எனக்கு தர்மசங்கடமாகத் தோன்றுகிறது இந்த விஷயம்.

ஸுகேசர் :— ஸ்வாமீ, எனக்கும் இந்த ஐயம் எழு கிறது. கிருபை கூர்ந்து விளக்கம் செய்ய வேண்டு கிறேன்.

பிப்பலாதர் :— நண்பரே குழந்தைகளின் ஸந் தேகத்தை நிவர்த்திக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸுமந்து :— இறுதிக் காலத்தில் எப்பொருளை எண்ணிக்கொண்டு ஒருவன் உடலைவிடுகிறானோ, எப்பொழுதும் அப்பொருளைப் பாவிப்பவனாகிய அவன் அதையே அடைகிறான். இதில் ஸந்தேகத்துக்கு இடம் இல்லை. தொட்டிற் பழக்கமே சுடுகாடு மட்டும் வரும். சொப்பனத்தில் தோன்றுவது ஜாக்கிரதவஸ்தையில் நினைக்கப்பட்டதுதானே. வாழ்நாட்களில் எது ஆழ்ந்து நெடிது எண்ணப்பட்டதோ அதுதான் இறக்கும் தருவாயில் முன்னணியில் வந்து நிற்கும் அதற்கு மாறாக ஸௌர்யாயணி கூறுவதுபோல் நடவாது. மரண சமயத்தில் வரும் எண்ணமே புனர் ஜன்மத்தின் கருவாகும். மேல் வரும் பிறப்பானது அந்த எண்ணத்தின் ஸ்தூல அமைப்பு.

பிப்பலாதர் :—மிகவும் நன்றாகச் சொன்னீர்கள் மகரிஷியே! பிராணனை இந்தப்படி அறிந்தவனுக்கு-பிராணனுடைய உத்பத்திமுதல் இதுவரை கூறப்பட்ட எல்லா விஷயங்களையும் நன்கு உபாஸிப்பவனுக்கு-பிரஜைகள் குறையமாட்டா. அமிருதபதத்தை அடைவான். இந்த விஷயத்தில் மந்திரம் ஒன்று இருக்கிறது. அதாவது: ‘‘இப்படி ப்ராணனுடைய உற்பத்தியையும், வரவையும், இருப்பிடத்தையும், ஐந்துவிதமாகப் பிரிந்து ஆட்சி புரிவதையும் அத்தியாத்மத்தையும் யார் அறிகிறானோ அவன் சாகா நிலையை எய்துகிறான்; அவன் சாகாநிலையை எய்துகிறான்’’ என்று மந்திரம் கோஷிக்கிறது.

ஸுமந்து :— குழந்தைகளே! கௌஸல்யன் கேட்ட வினாவிற்கு பகவான் விடை அளித்துவிட்டார். உங்களுக்கு நன்றாகப் புரிந்திருக்குமென்று நினைக்கிறேன். என்ன கௌஸல்யா! நீ அறிந்த விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லுகிறாயா?

பிப்பலாதர் :— வத்ஸா, நான் உன்னை அனுக்கிரகிக்கிறேன். நீ பிரம்மவேத்தா! சுருங்கக்கூறி விளங்க வைப்பாயாக.

கௌஸல்யர்:— மகரிஷிகளே, நமஸ்காரம். தெரிந்த மட்டில் கூறுகிறேன். இந்த பிராணன் பரமாத்மாவினிட மிருந்து நிழல்போல் தோன்றிற்று. மனஸ் ஸங்கல்பத் தால் இந்த உடலில் உட்புகுந்து கண் காது முதலிய இந்திரியங்களில் இருப்பிடத்தை அடைந்தது. அவை களுக்கேற்ப கிராம அதிகாரிகளைப்போல் தொழிற் பட்டது. பிறகு மனஸ் ஸங்கல்ப்பங்கள் முடிந்தவுடன் ஸ்தூல சரீரத்தை உதறித் தள்ளிவிட்டு, ஸூக்ஷ்ம காரண சரீரங்களுடன் வெளியே கிளம்புகிறது. இறுதி யில் ஏற்படும் எண்ணங்களுக்கேற்ப மறு பிறப்பையும் அடைகிறது.

பிப்பலாதர்:— குழந்தாய், ரொம்ப நன்ருக விளக்கி விட்டாய். நீ ஒரு உத்தம அதிகாரி உன்னைப்போன்ற ஒரு சிஷ்யனை அடையப்பெற்றது பெரும் பாக்கியமாகும்.

கௌஸல்யர்:— தங்கள் சித்தம் அடியோங்கள் பாக்கியம். எல்லாம் தங்கள் அனுக்கிரஹம், ஸ்வாமி.

பிப்பலாதர்:—குழந்தைகளே! இத்துடன் உரை யாடலை இன்று நிறுத்திக்கொள்ளுவோம். என்ன நண்பரே!

ஸுமந்து:— அப்படியே ஆகட்டும் நண்பரே!

(சிஷ்யர்கள் எழுந்து அபிவாதனம் செய்கின்றனர். மகரிஷிகள் இருவரும் ஆசி வழங்குகிருர்கள்.)

திரை விழுகிறது

மூன்ருவது அங்கம் முற்றும்.

நான்காவது அங்கம்

காட்சி 1

(திரை விலக)

[பிப்பலாதர் ஆசிரமத்தில் பூஜை அறை. பால சிஷ்யர்கள் உட்கார்ந்து புஷ்பங்களை ஆய்ந்து பொறுக்கி எடுத்துத் தாம் பாளங்களிலும், மரத்தட்டுகளிலும் ஒழுங்காக வைத்துக் கொண்டிருக்கின்றனர். சிலர் மாலை தொடுக்கின்றனர். சிலர் தோத்திரங்கள் பாடுகின்றனர். சிலர் பாடிக்கொண்டே ஆடுகின்றனர். சிலர் அதற்கேற்பத் தாளம் போடுகின்றனர் ஒரு ஓரமாகக் குவித்து வைத்திருக்கும் புஷ்பங்களுக்கு இடையிலிருந்து 'உஸ்' என்று ஒரு சப்தம் கிளம்புகிறது. அதுகேட்ட ஒரு சிறுவன் உத்தரணியை வீசி எறிகிறான். ஒரு மஹா ஸர்ப்பம் சீறிக்கொண்டு வெளிவந்து படம் எடுத்து ஆடுகிறது. அதைப் பார்த்ததும் எல்லாரும் அலறிப் புடைத்துக்கொண்டு நாலாபக்கமும் ஓடுகின்றனர். குழப்பத்தில் பாம்பும் மிதிபடுகிறது. அதனால் கோபம்கொண்ட அந்த ஸர்ப்பம் சீறிக்கொண்டு எல்லோரையும் விரட்டுகிறது. அந்த சமயத்தில் ஹிரண்யநாபன் பிரவேசிக்கிறான்.]

ஹிரண்யநாபன் :— என்ன அமர்க்களம்? ஏன் இப்படி குடல்தெறிக்க ஓடுகிறீர்கள்?

ஒருவன் (நாக்குழற):— அதோ பார் அசுவகோஷர்! (பயத்தால் நடுங்குகிறான்.)

மற்றொருவன் :—(அழுதுகொண்டே) பயமாயிருக்கிறது சொல்ல. (மீண்டும் தேம்பித் தேம்பி அழுகிறான்)

மூன்றாமவன் :— அதோ பூஜை அறையில் பா... பா... பாம்பு படம்...பயம்.

ஹிரண்யநாபன் (பூஜை அறையை கவனித்து விபரம் தெரிந்து:)— அதுவா! ஒரு கம்பை எடுத்து அடித்து விட்டால் போதும். பயப்படாதீர்கள், உங்களுக்கு அபயம் தந்தேன்.

ஒரு சிறுவன் :—எப்படி அடிப்பது? கிட்டநெருங்கவே குலை நடுங்குகிறதே!

ஹிரண்யநாபன் :— பயம் வேண்டாம். நானே அடித்துவிடுகிறேன். (கீழேகிடந்த ஒரு கமண்டலத்தை எடுத்துக்கொண்டு உள்ளேபோக எத்தனிக்கிருன். அப்போது ஸுமந்து ஓடோடியும் வந்து அவன் கையைப் பற்றுகிருர்)

ஸுமந்து:— நில் நில் என்ன அசுவகோஷா? இது பகவான் பிப்பலாதரின் ஆசிரமம் என்பதை மறந்தனையா? இங்கே எக்காரணத்தை முன்னிட்டும் ஜீவஹிம்ஸை செய்யக்கூடாது நில். அரவத்தை அடிக்காதே!

ஹிரண்யநாபன் :— ஸ்வாமீ, தன்னைக் கொல்லவந்த பசுவையும் கொல்லவேண்டியதே நியாயம். இது நச்சுப் பாம்பு. இப்படியே விட்டுவிட்டால் இது இந்த சிறுவர்களைத் தீண்டிவிடும். அதனுல் பலர் இறந்து விடுவார்களே! பல உயிர்களைக் காப்பாற்ற ஒரு பிராணியை வதைப்பது நல்லதுதானே! தயவுசெய்து விலகி வழிவிடுங்கள்! கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்

(நல்லபாம்பு நன்ருகப் படம் விரித்து ஆடுகிறது. சீறிக் கொண்டு நாக்கை நீட்டுகிறது.)

சிறுவர்கள் (மிகுந்த அச்சத்துடன்):— அசுவகோஷா! தாமதம் செய்யாதே. இப்போதே எங்களுக்குப் பாதி பிராணன் போய்விட்டது. நேரம் செல்லச் செல்ல அரவம் தீண்டாமலேயே பயத்தாலேயே எங்கள் உயிர் போய்விடும்.

ஹிரண்யநாபன் :— ஸ்வாமீ தயவு செய்யுங்கள். இந்தக் குழந்தைகள் கூறுவதைக் கேட்டீர்களா? கிருபை வரவில்லையா உங்களுக்கு. என்னைத் தடுக்காதீர்கள் !

ஸுமந்து :— அசுவகோஷா! மனிதன் உயிர், பாம்பின் உயிர் இரண்டும் எனக்கு ஒன்றுதான். சமரஸ

நோக்கோடு பார்த்தால் இரண்டின் உயிரும் விலையுள்ளதுதான். ஒரே நிறை. ஒரே விலை. யோசித்துப் பார்த்தால் மனித உயிரைவிடப் பாம்பின் உயிரே மேலானது!

ஹிரண்யநாபன் :— ஆறு அறிவு படைத்த மனிதன் எங்கே? ஆளைக்கொல்லும் விஷம்படைத்த நாகம் எங்கே? என்ன புதிர்போடுகிறீர்களா? ஸ்வாமீ, என் கையை விடுங்கள்!

ஸுமந்து :— அசுவகோஷா! ஆத்திரப்படாதே. கையை விடமாட்டேன். (அவன் கைகளை கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுகிறார்).

ஹிரண்யநாபன் :— ஸ்வாமீ, மன்னிக்கவேண்டும். அபராதத்தை க்ஷமிக்கவேண்டும். நான் தங்களை மீறிச் செயலாற்றப் போகிறேன்!

(அவர் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ள முயல்கின்றான். குழப்பம் அதிகரிக்க குழந்தைகள் ஓலமிடுகின்றனர். பகவான் பிப்பலாதர் மாத்யான்ஹிக ஸ்னானத்தை முடித்துக்கொண்டு நதியிலிருந்து வந்துகொண்டிருக்கிறார். முகத்தில் பிரம்ம தேஜஸ் ஒளிவிடுகிறது. கருணை வழிந்தோடுகிறது. ஒரு கையில் தீர்த்த பாத்திரம், மற்றொரு ஹஸ்தத்தில் ஜபமாலை. அவரைக் கண்டதும் எல்லோரும் வழிவிடுகிறார்கள். ஸுமந்துவும் ஹிரண்யநாபனும் ஒதுங்கி நிற்கிறார்கள். ஆயினும் பிடியைத் தளர்த்தவில்லை ஸுமந்து)

பிப்பலாதர் :— இது ஆசிரமமா? அல்லது கேளிக்கை கிருஹமா? ஒரே இரைச்சலும் சப்தமுமாக இருக்கிறதே! என்ன விசேஷம் நண்பரே?

ஸுமந்து :— பூஜை வேளையில் கரடி என்பார்களே. அதுபோய் இப்போது பூஜை அறையில் பாம்பு வந்திருக்கிறது. சிஷ்யர்கள் நடுங்குகிறார்கள். அசுவகோஷன் கொல்லப்போனான், நான் தடுத்துக்கொண்டிருக்கிறேன்.

பிப்பலாதர் :— நீர் செய்தது ரொம்ப நல்லதாகப் போயிற்று. பிரம்மஞானிகளின் வாஸஸ்தானத்தில் பேதத்திற்கு இடமேது? பேதமில்லையேல் பகை ஏது? வைரமின்றி வதையேது? அசுவகோஷா! கமண்டலத்தை எறிந்துவிடு. நாகத்தை நான் கவனித்துக் கொள்ளுகிறேன்.

(ஹிரண்யநாபன் குருவின் கட்டளைப்படி கமண்டலத்தைக் கீழே வைத்து ஒதுங்கி நிற்கிறான்)

ஹிரண்யநாபன் :— எனக்கு என்னவோ இன்னும் பயமாகத்தானிருக்கிறது! விளைவு என்ன ஆகுமோ?

ஸுமந்து :— பயப்படாதே அப்பனே, ஒன்றும் விளையாது. நன்மையே உண்டாகும். பகவான் பிப்பலாதரின் பிரம்ம பலத்தை நீ இப்போது நிதர்சனமாகக்காண்பாய்.

பிப்பலாதர்:—(தன் பின்னால் வந்துகொண்டிருந்த சீடனை அழைத்து) ஹே வத்ஸா! என் தர்பாஸனத்தையும், தீர்தத பாத்திரத்தையும், அந்தப் பூஜை அறையில் கொண்டுபோய் வைப்பாயாக. (சீடன் தயங்கவே) ஸௌம்ய, பயம் வேண்டாம். தைரியமாகப்போ. உன்னை அரவம் தீண்டாது. (கொஞ்சம் தீர்த்தம் எடுத்து நல்லபாம்பினமேல் தெளிக்கிறார். அது அடங்குகிறது. சீடன் தர்ப்பாஸனத்தையும் கமண்டலத்தையும அதன பக்கத்தில் எதிரே வைக்கிறான். பிப்பலாதர் போய் அமர்ந்துகொள்ளுகிறார்)

பிப்பலாதர் :— ஹே நாகமே, நாகராஜன் தூதுவனே! ஆதிசேஷனின் அம்சாவதாரனே! வாசுகியின் வம்சத்துல் வந்தவனே. இந்த ஆச்ரமத்தில் பேதம் இல்லை. ஆகையால் கோபம், ஹிம்ஸை இல்லை. உனக்கு பயம் வேண்டாம். நாங்களும் உனக்கு எதிரியல்ல. நீயும் எங்களை விரோதிகளாகக்கருதாதே. சிறுவர்கள் சீற்றம் கண்டு அஞ்சுகிறார்கள். உன் படத்தைச் சுருக்கிக்கொள். சாந்தியை அடைவாய்!

(பிப்பலாதர் கவனமாக அதன்மேல் திருஷ்டியைச்செலுத்த அந்த அரவம் அதற்குப் பணிந்து அடங்குகிறது காண்போர் ஆச்சரியமடைகிருர்கள். பிப்பலாதர் தியானத்திலிருக்கிருர்).

ஸுமந்து :— பார்த்தாயா அசுவகோஷா! பிரம்ம ஞானியின் தேஜோபலத்தின் மகிமையை.

ஹிரண்யநாபன் :— ஸ்வாமீ, மன்னிக்கவேண்டும் என் குற்றங்களை!

ஸுமந்து :— உன்பேரில் குற்றமொன்றுமில்லையே. வேறு யாராலுைம் உன் நிலைமையில் அப்படித்தான் நடந்து கொண்டிருப்பார்கள்.

பிப்பலாதர் (தியானம் கலைந்து) :—ஹே நச்சுப்பாம்பே, நான் உன்னை நல்ல பாம்பாகவே எண்ணுகிறேன். ஹே ஸர்ப்பமே, உனக்கு மங்களம் உண்டாகட்டும். நீ பரந்தாமனின் படுக்கையாக இருக்கிருய். பரம சிவனுக்கு ஆபரணமாக விளங்குகிருய். பார்வதி தேவிக்குக் கணையாழியாகவும் இருக்கிருய். நீ இங்கே இருக்கவேண்டாம். போய்விடு. எல்லோரும் வழிவிடுங்கள். அரவம் அரவம் செய்யாமலே போய் விடும்.

(எல்லோரும் ஒதுங்கி நிற்க, அந்தப் பாம்பு, நெளிந்து நெளிந்து மஹரிஷியை வலம்வந்து வேலி வழியாக வெளியே போய் மறைந்துவிடுகிறது)

பிப்பலாதர் :— குழந்தைகளே! உரகம் சென்று விட்டது. உங்கள் காரியங்களை கவனிக்கலாம் இனிமேல். அசுவகோஷா, இங்கே எக்காரணத்தை முன்னிட்டும் ஜீவஹிம்ஸை கூடாது. சாந்தமாக உன் கடமைகளை ஆற்றுவாய் அப்பனே!

(உள்ளே போகிருர். ஸுமந்துவும் ஹிரண்யநாபனும் தவிர எல்லோரும் போகிருர்கள்).

ஸுமந்து :— ஹே அசுவகோஷா! எல்லாம் நன்மைக்கே. உன் பதட்டத்தினுலும் இன்று ஒரு

பெரிய நன்மை விளைந்தது. பகவான் பிப்பலாதரின் அமானுஷிய சக்தி வெளிப்பட்டது.

ஹிரண்யநாபன் :— நான் இன்று புது ஜன்மம் அடைந்தேன். ஸ்வாமீ! எனக்கு இது மிகவும் புதிய அனுபவம்.

ஸுமந்து :— என்ன அப்படிச் சொல்லுகிருய்? பசுவின் கன்றுக்கு புலி பால் கொடுத்ததும், ஆடும் புலியும் ஒரே துறையில் நீர் அருந்தியதும், கர்பிணியான தவளைக்கு பாம்பு குடை பிடித்ததும் இது முதலான சரித்திரங்களை நீ கேட்டதில்லையோ?

ஹிரண்யநாபன் :— கேட்டிருக்கிறேன். ஆனல் அவைகளில் நம்பிக்கை வரவில்லை. கவிகளின் கற்பனையாகக் கருதிவிட்டேன். இன்றே பிரத்யக்ஷமாகக் கண்டேன் ஸ்வாமி. விடை கொடுங்கள் மந்தாகினி தீரத்துக்குச் சென்று மிருகண்டு மகரிஷியை அழைத்துவரச்சொன்ஞர் குருநாதர். மரவுரியை எடுத்துப்போக உள்ளே வந்த சமயத்தில் தாமதம் ஏற்பட்டது. போய்வருகிறேன். ஐயனே.

ஸுமந்து :— ஜாக்கிரதையாகப் போய்வா! மிருகண்டுவிடம் என்னுடைய நமஸ்காரங்களைத் தெரிவித்து அவரது க்ஷேமத்தை நான் மிகவும் விசாரித்ததாகக் கூறுவாய்.

(ஹிரண்யநாபன் வணக்கம் செலுத்திவிட்டுப் போகிருன்)

ஸுமந்து :— என்ன ஆச்சரியம்! இந்த அசுவகோஷன் நடைதான் என்ன மிடுக்காக இருக்கிறது? யானை நடை, சிங்க நடை, ரிஷப நடை என்பார்களே! அவைபோல் என்ன கம்பீரமாகப் போகிருன்! அவன் சாதாரணமான ஒரு தேர்ப் பாகனல்ல. இது நிச்சயம். அவன் கைகளைப் பிடித்தேனே! என்ன பலம்பொருந்திய கைகள்! கடிவாளம் பிடித்த கரங்கள் அல்ல அவை. அஸ்திர சஸ்திரங்கள், ஆயுத விசேஷங்கள் அனேகம்

எடுத்துக் கையாண்டுத் தழும்பேறிய கைகள் அவை. அவன் நிச்சயமாக ஒரு க்ஷத்திரிய குமாரனேயாகும். எதற்காக இந்த வேஷம்? எல்லாம் போகப்போகத் தெரியும். கோசல தேசத்தைச்சேர்ந்த கௌஸல்யரிடம் விசாரிப்போம். அதுவரைக்கும் மௌனம் நல்லது.

(திரை விழுகிறது)

காட்சி 2

(திரை விலக)

[பிப்பலாத மஹரிஷியின் ஆசிரமம். பகவான் வடக்கு நோக்கி அமர்ந்திருக்க சீடர்கள் அறுவரும் அவருடைய முன்னிலையில் கிழக்குப் பார்த்து உட்கார்ந்திருக்கின்றனர். அவர்களுக்கு எதிரில் ஸுமந்துவும் வீற்றிருக்கிறார். உரையாடல் நடைபெறுகிறது.]

ஸுமந்து :— குழந்தைகளே! இன்று யார் கேள்வி கேட்கப்போகிறீர்கள்?

ஸுகேசர் :— நான் கேட்கலாமென்று நினைக்கிறேன்.

பிப்பலாதர் :— குழந்தாய்! இன்று அசுவகோஷன் இவ்விடத்தில் இல்லையல்லவா! அவன் வந்தபின் நீ கேட்கலாம். ஸௌர்யாயணியோ, அல்லது ஸத்ய காமனே இன்று கேட்கட்டும்.

ஸுகேசர் :— குருநாதரே! தங்கள் இஷ்டப்படிச் செய்கிறேன். (தனக்குள்) என் வினவிற்கும் அசுவ கோஷன் இருப்பதற்கும் என்ன ஸம்பந்தம்? ஒன்றும் விளங்க வில்லையே! தனிமையில் குருநாதரிடம் கேட்க வேண்டும்!

ஸௌர்யாயணீ :— ஸ்வாமி! தங்கள் உத்தரவுப்படி நான் இன்று கேள்வி கேட்கிறேன். தயவு கூர்ந்து விடை பகரவேண்டுகிறேன்.

ஸுமந்து :— குழந்தாய், காலவிளம்பம் வேண்டாம். உடன் கேட்பாயாக; பகவான் முதலிலேயே அனுமதி அளித்து விட்டாரே !

ஸத்யகாமர் :— நண்பரே, உம்முடைய வினவை அறிய நாங்கள் எல்லோரும் மிகுந்த ஆவலுள்ளவர் களாக இருக்கிறோம்.

ஸௌர்யாயணீ :— ஐயனே ! இந்தச் சரீரத்தில் எவை தூங்குகின்றன ? எவை விழித்துக்கொண்டிருக் கின்றன ? இவற்றுள் எவன் ஸ்வப்னம் காண்கிறான் ? ஸுஷுப்தி சுகம் எவனுக்கு ஏற்படுகிறது ? அப்போது யாரிடத்தில் எல்லோரும் ஒன்றாகக் கலந்து இருக் கிறார்கள் ? என்னுடைய இந்த ஐந்து கேள்விகளுக்கும் விடைகள் விளக்கமாகக் கூறவேண்டுகிறேன்.

ஸுமந்து :— சபாஷ் ! வத்ஸா ! அருமையான கேள்வி. உன் நண்பர்கள் இதற்கு முன் ஜாக்கிரா வஸ்தையில் உள்ளும் புறமும் நடக்கும் விஷயங்களைப் பற்றியும் அதை நடத்துபவனைக் குறித்தும் வினக்கள் எழுப்பினார்கள். நீ இப்போது கனவிலும் நித்திரை யிலும் அதற்கு அதீதமான நிலையிலும் நிகழும் நிகழ்ச்சி களைப்பற்றி வினவுகிறாய் ! இது பொருத்தமான கேள்வி !

பிப்பலாதர் :— வத்ஸா ! கார்க்கியா ! நீ கேட்ட முதல் கேள்வியை முதலில் எடுத்துக்கொள்ளுவோம் ! தலை, கை, கால், கண், காது முதலிய அவயவங் களுடன் கூடிய இந்தச் சரீரத்தில் எந்த எந்த இந்திரி யங்கள் தூங்குகின்றன? அதாவது தத்தம் வியாபாரத்தை நிறுத்திவிட்டு எங்கே உபரதியை அடைகின்றன ? இது தான் உன் முதல் கேள்வி. பதில் கூறுகிறேன் கவனமாகக்கேள்.

கார்க்கியர் :— (ஸௌர்யாயணீ) ஆகட்டும், ஸ்வாமீ !

பிப்பலாதர் :— எல்லா இந்திரியங்களும் உத்கிருஷ்ட மான தேவனாகிய (தத்வமாகிய) மனதிலே ஒன்றாகப்

போய்ச்சேருகின்றன. எப்படி சூரியனுடைய கிரணங்கள் அவன் அஸ்தமிக்கும் போது எல்லாம் சேர்ந்து சூர்ய மண்டலத்தை அடைகின்றனவோ அதுபோல் இந்திரியங்களும் மனதில் ஒன்றிவிடுகின்றன. எப்படி மறுபடியும் சூரியன் உதிக்கும்போது கிரணங்கள் பரவுகின்றனவோ, அப்படியே இந்திரியங்களும் திரும்பவும் வெளியாகி தொழில் படுகின்றன. எல்லாப் புலன்களும் மனதில் ஒன்றியிருக்கும் போது, இந்தப் புருஷன் கேட்பதில்லை, பார்ப்பதில்லை, முகருவதில்லை. ருசி பார்ப்பதில்லை, தொடுவதில்லை, பேசுவதில்லை, ஆனந்தப்படுவதில்லை. விடுவதில்லை, போவதில்லை. அப்பொழுதுதான் தூங்குகிறான் என்று சொல்லப்படுகிறது.

ஸுமந்து :— குழந்தைகளே ! விஷயத்தை நன்ருகப் புரிந்துகொள்ளுங்கள் அருக்கன் மலைவாயிலில் விழும்போது, அவனுடைய கிரணங்கள் எல்லாம் அவனுடைய தேஜோமண்டலத்தில் லயமாகின்றன. அதை நீங்கள் எல்லோரும் சாயங்காலம் ஸந்தியாவந்தனம் செய்யும் போது கவனித்திருப்பீர்களே! அதுபோலவே புருஷனும் நித்திரைக்குச் செல்லும்போது, விஷயங்களும் எல்லா இந்திரியங்களும் பரமசக்தி வாய்ந்த மனம் என்ற தத்துவத்தில் ஒடுங்குகின்றன. அச்சமயம் அவன் நித்திரையிலிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கபந்தீ :— ஸ்வாமீ! எனக்கு ஒரு ஸந்தேஹம்.

ஸுமந்து :— என்ன கேட்பாயாக.

கபந்தீ :— புலன்கள் தத்தம் தொழில்களை நடத்திவிட்டு, தனித்தனியாகவே ஓய்ந்திருக்கிறது என்று வைத்துக்கொள்ளலாமே. உதாரணமாக கோடாலியால் விறகை வெட்டுகிறோம். கத்தியால் இலைகளை நறுக்குகிறோம். கத்தியும் கோடாலியும் அதனதன் தொழிலைச் செய்துவிட்டுத் தனியாகவே விழுந்து கிடக்கின்றதேயன்றி கரத்தைச் சார்ந்திருப்பதில்லையே! ஆகவே

இந்திரியங்களும் மனதில் சென்று எதற்காக ஒடுங்க வேண்டும்.

பிப்பலாதர் :— கபந்தீ! உன் சங்கை ஸாதுவானது தான்! ஆனல் உதாரணம் சரியன்று கோடாலி முதலிய ஆயுதங்களுக்கு அவைகளை உபயோகப்படுத்தும் 'கரம்' என்ற வஸ்துவிலிருந்து பிரிந்து தனியான நிலை உண்டு. ஆனல் இந்திரியங்கள் எப்போதும் மனதிற்குக் கட்டுப் பட்டவையே. ஜாக்கிரத் அவஸ்தையிலும் அவைகள் மனதிற்குக் கட்டுப்பட்டே வினைகள் புரிகின்றன. ஆகவே நித்திரையிலும் அவைகள் மனதிலேயே ஒன்றிவிடுகின்றன. இங்கு மனதில் ஒன்றிவிடுவது என்பதை மனதில் லயமடைந்ததாக எண்ணக்கூடாது. ஏனெனில் இந்திரியங்களுக்கு மனம் ப்ரக்ருதியல்ல. ஆகவே தம்தம் வ்யாபாரத்தை நிறுத்திக்கொண்டு மனதிற்கு அடங்கி அதில் ஒன்ருகக் கலந்ததுபோல் இருக்கிறதென்று தெரிந்துகொள்ளவேண்டும்.

கௌஸல்யர் :— என் நண்பரின் கேள்வியும், குரு நாதரின் விடையும் எங்கள் எல்லோருடைய ஸந்தேகத் தையும் நீக்கி விட்டன.

பிப்பலாதர் :— இனி அடுத்த வினுவிற்கு வருவோம்! "தூங்கும்பொழுது எவை விழித்துக்கொண்டிருக் கின்றன?" நவத்வாரங்களுள்ள இந்தப் பட்டணத்தில் (அதாவது புருஷன் வசிக்கும் சரீரத்தில்) ஐந்து பிராணன்கள் மட்டுமே விழித்துக் கொண்டிருக்கின்றன. அவைகள் அக்னியைப்போல் எரிந்து கொண்டிருக் கின்றன. அதாவது தூங்கும் காலத்தில்கூட இந்த பஞ்சப்பிராணன்கள் மட்டும் அதன் அதன் வேலையைச் செய்துகொண்டிருக்கின்றன.

கார்க்கியர் :— பிராணன்களுக்கும் அக்னிக்கும் ஸாம்யம் சொன்னீர்களே. அதைக்கொஞ்சம் கூட விபரமாகக் கூறவேண்டும்.

பிப்பலாதர் :— அபானனே கார்ஹபத்யாக்கினி. பிராணனே ஆஹவனீயாக்கினி. வியானனே தக்ஷிணக்கினி.

ஸத்யகாமன் :— இப்படி அழைப்பதற்குக் காரணங்களையும் விளக்கவேண்டும் ஸ்வாமீ!

பிப்பலாதர் :— நண்பரே! குழந்தைகளின் ஸந்தேகத்தை நீக்கும்படிக்கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஸுமந்து :— ஆகட்டும் நண்பரே! கார்ஹபத்தியம் என்பது யஜமானனுக்குப்பின் வட்டவடிவமான குண்டத்தில் இருப்பது. இதிலிருந்தே மற்ற இரண்டு அக்கினிகளும் எடுக்கப்படும். ஆஹவனீயம் யஜமானனுக்கு முன் சதுரவடிவான குண்டத்தில் உள்ளது. அவனுக்குத் தென்புறம் இருப்பது தக்ஷிணக்கினி என்னும் 'அன்வாஹார்யபசனம்'. அபானன் பின் பக்கத்தில் இருப்பதால் கார்ஹபத்தியம் எனப்பட்டது. அதிலிருந்து பிராணன் பிரிந்து எழுவதால் ஆஹவனீயம் எனப்பட்டது. வியானன் இதயத்தின் வலது பக்க நாடியில் சஞ்சரிப்பதால் தக்ஷிணக்கினி எனப்பட்டது.

கார்க்கியர் :— எஞ்சியிருக்கும் இரண்டு பிராணன்களுக்கும் யாகத்தில் என்ன உத்தியோகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தாங்கள் சொல்லுவதைப்பார்த்தால் நித்திரையும் ஈசுவர வழிபாடாகிற யக்ஞமாகவல்லவா இருக்கிறது. மனஸின் வேலை என்ன? யக்ஞத்தின் பலன் என்ன?

ஸுமந்து :— ஆமாம் குழந்தாய்! மனிதன் செய்யும் ஒவ்வொரு கர்மமும் இறைவன் வழிபாடேயாகும். இதில் ஐயமே வேண்டாம்.

பிப்பலாதர் :— உச்வாஸ (காற்றை வெளியில் விடுவது) நிச்வாஸ (உள்ளேயிழுப்பது)ங்களே ஆஹுதிகள் அந்த இரண்டு ஆஹுதிகளையும் ஸமமாக நடத்துவிப்பதால் ஸமான வாயு ஹோதாவாயிருக்கிறது. மனஸ்தான்

யஜமானன். உதான வாயு யாகத்தின் பலன். இது தான் யஜமானனை (மனஸை) தினந்தோறும் தூங்கும் காலத்தில் பிரம்மத்தினிடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கிறது.

ஸுமந்து:— ஞானியைச் சோம்பேறியாக ஒரு போதும் எண்ணக்கூடாது. அவர் நித்திரையிலும்கூட யாகம் அனுஷ்டித்து உலக நன்மைக்காக உழைக்கின்றார் என்பது உறுதியாகிறது.

பிப்பலாதர்:— இனிமேல் கனவு காண்பவன் யார் என்பதை கவனிப்போம். உறங்கும்பொழுது இந்திரியங்கள் எல்லாம் மனதில் லயித்துவிடுகின்றன. அப்போது மனஸாகிற தேவன் ஸ்வப்னத்தில் மஹிமையை அனுபவிக்கிறான். எது எது (தன்னால் நனவில்) பார்க்கப் பட்டதோ அதையெல்லாம் திரும்பவும் காண்கிறான். எது எது கேட்கப்பட்டதோ அதையெல்லாம் கேட்கிறான். பல இடங்களிலும் பல திசைகளிலும் எது எது அனுபவிக்கப்பட்டதோ அவையெல்லாம் மீண்டும் மீண்டும் அனுபவிக்கிறான். கண்டதும் காணாததும், கேட்டதும் கேளாததும், அனுபவித்ததும் அனுபவியாதத்தும், உள்ளதும் இல்லாததும் ஆன அனைத்தும் தானே ஆகி அனைத்தையும் காண்கிறான்.

ஸுமந்து :—நண்பரே, கனவை இவ்வளவு அழகாக ஒருவர் வர்ணித்து நான் இதுவரை கேட்டதில்லை. ச்ரோத்ரம் முதலிய இந்திரியங்கள் உபரதி அடைந்த பின்னர், பஞ்ச பிராணன்களும் விழித்துக்கொண்டு இயங்கி வரவும், ஸுஷுப்திக்கு முன்னர் ஸ்வப்னம் உண்டாகிறது. இந்த மத்தியகால அவஸ்தையில் மனது நனவில் கண்ட, கேட்ட, அனுபவித்த, விஷயங்களின் வாசனை ரூபமான வடிவங்களை அறிகிறது. ஜாக்கிராவஸ்தையில் நடந்ததைப் போலவும், அதற்கு மேலும் வியாபாரங்களைச் செய்து அல்லற்படுகிறது.

கார்க்கியர் :— ஒரு ஸந்தேஹம், ஸ்வாமீ! கனவுகள் நனவில் கண்ட விஷயங்களின் வாசனையின் தொகுதி

யானுல், ஜாக்கிராவஸ்தையில் காணுத, கண்டிராத, காணமுடியாத வடிவங்களையும் கனவில் காண்கிருேமே! அப்படி நனவில் கேளாத, கேட்டிருக்க முடியாத விஷயங்களையும் கேட்கிருேமே! அது எப்படி ஸாத்திய மாகிறது?

பிப்பலாதர்:— அப்பனே! கார்க்கியா, உனது ஸந்தேகம் நியாயமானதுதான். அதை விளக்குகிறேன். செவி மடுப்பாய்! ஒருவன் விழித்துக்கொண்டிருக்கும் பொழுது தனது மித்திரன் அல்லது புத்திரனைக்கொண்டு அளவளாவிக் கொண்டிருந்த அனுபவத்தின் வாசனை யானது ஸ்வப்னத்தில் புத்திரன் அல்லது மித்திரனைக் கொண்டுவந்து பார்க்கவைக்கிறது. அதுபோலவே நனவில் இடியோசை, வேதகோஷம் குழந்தை அழும் குரல் இவைகளைக் கேட்டிருக்கலாம். அவ்வகளையே கனவில் திரும்பவும் வாஸனு பலத்தினுல் கேட்க முடிகிறது. அதுபோலவே மற்ற இந்திரியங்களினுல் தேசாந்தரங்களிலும் பல திசைகளிலும் அனுபவித்ததை யும், மீண்டும் அனுபவிக்க முடிகிறது. இந்த ஜன்மத்தில் ஜாக்கிராவஸ்தையில் பார்த்ததையெல்லாம் கனவிலும் கண்டுவிடுகிருன். அதுபோல் ஜன்மாந்தரங்களிலும் முன் எடுத்த பல ஜன்மங்களிலும் தான் நனவில் கண்டு கேட்டு அனுபவித்ததை மீண்டும் இந்த ஜன்மத்தில் கனவில் அனுபவிக்கிருன். அந்த அனுபவங்களைத் தான் நான் "காணுதது, கேளாதது" என்று குறித்தேன்.

ஸத்யகாமர்:— குரு நாதரே! ஆனுல் சில சமயங் களில் கற்பனையே பண்ணமுடியாத அஸம்பாவிதமான விஷயங்களையும் கனவில் காண்கிருேமே. அந்தப்படி இந்த ஜன்மத்திலோ பூர்வ ஜன்மங்களிலோ காண முடியாத அத்தியந்த அதிருஷ்டமான வஸ்துக்களையும் பார்க்கிருேமே! அதற்குக்காரணம் என்ன?

கௌஸல்யர்:— குருநாதரே! உதாரணமாக நான்கு கொம்புகளுள்ள சிவப்பு யானையை நான் கனவில்

கண்டேன். பல படங்களுள்ள ஒரு ஸர்ப்பத்துடன் அது சண்டை போட்டுக் கொண்டிருந்தது. ஒவ்வொரு படமாக பிய்த்துத் தின்றுகொண்டிருந்தது. வெள்ளை யானையையாவது புராணத்தில் படித்திருக்கிறோம். யானை ஒரு சாகபக்ஷிணி களிருவது கருநாகத்தைத் தின்னவாவது? ஆகவே இந்தக்கனவு பொய்த் தோற்றம் தானே! முன் ஜன்மங்களிலும் இதுமாதிரி பார்த்திருக்க முடியாதே!

ஸுமந்து:—மனம் காணும் ஸ்வப்னத்தில் ஸத்தான பதார்த்தம்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. ஜலம் முதலிய வாஸ்தவமான பதார்த்தங்களையும் கானல் நீர் போன்ற அஸத்தான பதார்த்தங்களையும் கனவில் காண லாம். முன் சொல்லப்பட்டதும் சொல்லப்படாததுமான எல்லா பதார்த்தங்களுமாகி ஸர்வ இந்திரியங்களின் லயஸ்தானமாகிய மனஸ் கனவுகளைக்காண்கிறது.

பிப்பலாதர்:—இப்படி அல்லற்படும் மனம் பின்னல் நித்திராவஸ்தையை அடைகிறது?

கார்க்கியர்:—இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்யும் மனம் எப்படி எதனுல் நித்திரை அடைகிறது.

பிப்பலாதர்:—எப்போது பித்த ஒளியால் மனம் ஆக்கிரமிக்கப்படுகிறதோ அப்போது அது ஸ்வப்பனங் களைப்பார்ப்பதில்லை. அப்போது இச்சரீரத்தில் இந்த ஸுஷுப்தி ஸுகம் ஏற்படுகிறது. அப்பனே! பறவைகள் எவ்வாறு தாம் வசிக்கும் மரத்தைச் சாருகின்றனவோ அவ்வாறே எல்லாம் ஆத்மாவிடம் அடங்குகின்றன.

ஸுமந்து:— சித்ருபமான பிரம்மமாகிற தேஜஸ் ஸினுல் எங்கும் பரவப்பட்டு, மனஸ் கனவுகள் கண்டு வந்த வாஸனை என்னும் பலகணி அடைக்கப்படுகிறது. அப்போது கனவுநிலை மறைந்து ஸுஷுப்தி நிலை வருகிறது. அது சமயம் அவித்யை, காமம், கர்மம் இவைகளால் உண்டான சரீரமும் அதன் இந்திரியங் களும் சாந்தமடைகின்றன. இவைகள் சாந்தமான

வுடன் எல்லாம் சாந்தமடைகின்றது. மறுபடியும் மறுநாள் காலை, பறவையானது விருக்ஷத்தை விட்டு வெளிக் கிளம்புவதுபோல் மனது வெளிவருகிறது.

கார்க்கியர் :— 'எல்லாம் சாந்தமடைகின்றது' என்று சொன்னீர்களே! விபரமாக விளக்கக் கோருகிறேன்.

பிப்பலாதர் :—அவைகளாவன — பிருதிவியும் அதன் காரணமான ஸூக்ஷ்மமான கந்ததன்மாத்திரையும், ஜலமும் ரஸ தன்மாத்திரையும், தேஜஸ்ஸும் ரூபதன் மாத்திரையும், வாயுவும் ஸ்பர்சதன்மாத்திரையும், ஆகாசமும் சப்ததன்மாத்திரையும், நேத்திரமும் ரூபமும் காதும் சப்தமும், க்ராண இந்திரியமும் கந்தமும் நாவும் ரஸமும் த்வக்கும் தொடப்படும் பதார்த்தமும், வாக்கும் சொல்லப்படும் பொருளும், கையும் எடுக்கப் படும் வஸ்துவும், உபஸ்தமும் ஆனந்திப்பதும், பாயுவும் தள்ளப்படுவதும், பாதங்களும் போகும் ஸ்தானங்களும், மனமும் மனனம் செய்யும் விஷயங்களும், புத்தியும் தீர்மானிக்கப்படும் விஷயமும், அஹம்காரமும் அதன் விஷயமும், சித்தமும் நினைக்கப்படும் விஷயமும், சரீர காந்தியும் அதன் விஷயமும், பிராணனும் அது தாங்கும் வஸ்துவும், இவைகள் எல்லாம் ஆத்மாவில் லயமடைகின்றன.

ஸுமந்து :—பஞ்ச பூதங்களும், அதன் அதன் ஸூக்ஷ்ம பூதங்களும், பத்து இந்திரியங்களும் (ஞானேந்திரியங்களும் கர்மேந்திரியங்களும்) அதன் அதன் விஷயங்களும், அந்தக்கரணத்தின் நான்கு வகைகளும் அதன் அதன் விஷயங்களும், இப்படி கார்யகரண ஸங்காதம் முழுவதும், ஜீவாத்மாவிடத்தில் போய்ச் சேருகின்றன. நித்ராவஸ்தையில் இப்படி எல்லாம் லயமடைகின்றன.

பிப்பலாதர் :— அப்போது இந்த ஜீவாத்மாவே உண்மையில் பார்ப்பவன், தொடுபவன், கேட்பவன், முகர்பவன், ருசிப்பவன், நினைப்பவன், அறிபவன், செய்பவன். இவனே விஞ்ஞானத்மா. இவன் அழி

வில்லாத பரமாத்மாவிடம் நிலைபெறுகிருன். அக்ஷர மாகிய பரபிரம்மத்தினிடம் இவன் பிரதிஷ்டிக்கப் பட்டிருக்கிருன்.

கார்க்கியர் :— நாங்கள் மிகவும் தன்யர்களானேம். விடைகளைக்கேட்டு மிகவும் நன்றியுள்ளவர்களாகவு மிருக்கிரேம்.

பிப்பலாதர் :— சித்தம் அழகியவனே! இந்த உப தேசத்தைக் கேட்டறிந்ததால் கிடைக்கும் பலனைப்பற்றிக் கூறுகிறேன் கேள். சூரியனின் பிரதிபிம்பம் பாத்திரத் தில் வைக்கப்பட்டிருக்கும் ஜலத்தில் தெரிகிறது. அந்த ஜலத்தை கீழே கொட்டிவிட்டால் ஜலரூபமாகிற உபாதி நீங்கினவுடன் அந்த பிரதிபிம்பம் ஆகாசத்தில் காணும் சூரியனிடம் ஒன்றிவிடுகிறது. அதுபோலவே சரீரத்தில் வசிக்கும் புருஷனும் கார்யகரண ஸங்காதமாகிற உபாதி நீங்கியவுடன், பரமாத்மாவில் லயமடைந்து விடுகிருன். எவன் இவரை (பரபிரம்மத்தை) அக்ஞானமில்லாதவனு யும், சரீரமற்றவனுயும் நிறமற்றவனுயும் சுப்ரனுயும், நாசரகிதனுயும் இருப்பதாக அறிகிருனே, அவன் பரபிரம்மத்தை அடைகிருன், ஸர்வக்ஞனுயுமாகிருன். எல்லாமாயும் ஆகிருன். இந்த விஷயத்தில் முக்கிய மான மந்திரமும் இருக்கிறது.

ஸுகேசர் :— அது என்ன மந்திரம் ஸ்வாமீ ?

பிப்பலாதர் :—விக்ஞானுத்மா (ஜீவாத்மா) எல்லா தேவர்களோடும், புலன்களுடனும் பூதங்களுடனும் எதனிடம் நிலைபெறுகின்றதோ, அந்த அழியாப் பொருளை எவன் அறிகிருனே அவன் ஸர்வக்ஞன் (எல்லாம் அறிந்தவன்) எல்லாவற்றிலும் பிரவேசித்து எங்கும் நிறைபவனுகிருன்.

ஸுமந்து :—குழந்தைகளே! சாயையில்லாத, சரீர மில்லாத, நிறமில்லாத சுப்ரமான அக்ஷரத்தைப்பற்றி நீங்கள் அறிந்துகொண்டீர்கள். அக்ஞானம் என்னும் சாயை இல்லை. அதாவது காரண சரீரம் இல்லை.

ஸூக்ஷ்ம சரீரமுமில்லை. நிறமில்லையென்பதால் ஸ்தூல சரீரமும் இல்லை என்று பொருள். சுப்ரம் என்றால் பரிசுத்தம். ஒருவிதமான மலமும் இல்லாதது. முன் சொன்ன விசேஷணங்கள் ஒன்றுமே இல்லாததால் பரபிரம்மம் அக்ஷரமாயும், ஸத்தியமாயும், சிவமாயும் சாந்தமாயும் மனதிற்கு எட்டாமலும் விளங்குகிறது. இதை இப்படி அறிபவன் ஸர்வக்ஞனாகிறான். அவனுக்குத் தெரியாத விஷயமே இல்லை. அவித்யை வசப்பட்டு அறியாமலிருந்தவன் பிரம்மவித்யையை அடைந்து ஸர்வரூபியாகவும் ஆகிறான்.

கௌஸல்யர் :—குருநாதரே! இன்று மிகவும் முக்கியமான உபதேசம் நடந்திருக்கிறது. அசுவகோஷர் வரவில்லையே என்று கொஞ்சம் வருத்தம் ஏற்படுகிறது.

ஸுகேசர் :—எனக்கும் மனவருத்தம் உண்டாகிறது. அசுவகோஷர் இல்லாததுபற்றி.

ஸுமந்து :— அசுவகோஷன் திரும்பிவந்தவுடன் உங்களில் யாராவது ஒருவர் விபரமாகக் கூறிவிடுங்கள்.

கார்க்கியர் :— நாங்கள் எல்லோரும் சேர்ந்து எவ்வளவு எடுத்துரைத்தாலும் குருநாதர் சொல்லுவது போல் ஆகுமா ?

பிப்பலாதர் :— குழந்தைகளே! உங்களுக்கு வருத்தம் வேண்டாம். நானே அசுவகோஷனுக்கு எல்லாம் தெரியும்படி அனுக்கிரஹம் செய்துவிடுகிறேன்.

கபந்தீ :— ஐயனே, மிகவும் ஸந்தோஷம்.

ஸுமந்து :— நண்பரே! இத்துடன் இன்றைய ஸம்பாஷணையை நிறுத்திக்கொள்வோமா!

பிப்பலாதர் :— அப்படியே செய்வோம்.

(எல்லோரும் எழுந்திருக்கிறார்கள்)

(திரை விழுகிறது)

காட்சி 3

(திரை விலக)

[ஸுமந்து மஹரிஷியின் ஆசிரமத்தில் ஸுமந்துவும் ஸுகேசரும் கௌஸல்யரும், ஸத்யகாமரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கின்றனர்]

ஸுகேசர்:- ஸ்வாமி! அன்று குருநாதர் சொன்னதை கவனித்தீர்களா?

ஸுமந்து:—குழந்தாய்! நீ எதைக் குறிப்பிடுகிறுய்?

ஸுகேசர்:—ஐயனே, நான் கேள்வி கேட்பதற்கு அனுமதி வேண்டியவுடன் அவர் கூறியதைத்தான் சொல்லுகிறேன்.

கௌஸல்யர்:—நானும் அதை கவனித்தேன்.

ஸுமந்து:—அசுவகோஷனைப்பற்றிச் சொன்னதைச் சொல்லுகிறுயா? பகவான் சொன்னதின் தாத்பரியம் எனக்கும் விளங்கவில்லை.

ஸுகேசர்:- ஸ்வாமி! பகவானிடமே நேரில் கேட்டால் என்ன?

ஸத்யகாமர்:—அசுவகோஷன் மிருகண்டு ஆசிரமத்திலிருந்து திரும்பிவராததால் நண்பர் ஸுகேசருக்குக் கேள்வி கேட்கும் ஸந்தர்ப்பம் நஷ்டமாயிற்று. அதற்கு நான் மிகவும் வருந்துகிறேன்.

கௌஸல்யர்:—இதற்கு வருத்தப்படுவானேன்! நீரும் கேள்வி கேட்டு முடிந்தபின், அசுவகோஷனும் திரும்பிய பிறகு, கடைசிக் கேள்வியாகக் கேட்டு விட்டால் போகிறது.

ஸத்யகாமர்:—ஆனலும் முதலில் நினைத்தவுடன் கேட்கமுடியாமல் போனதில் கொஞ்சம் ஏமாற்றம் இருக்கத்தானே செய்யும்;

ஸுகேசர் :— நண்பர்களே, உங்கள் ஆறுதல்களுக்கு வந்தனம். ஸ்வாமீ! நான் கேட்டதற்குத் தாங்கள் ஒன்றும் பதில் கூறவில்லையே!

ஸுமந்து :— (ஆலோசித்தபடி) வத்ஸா! நேரில் பகவானிடம் கேட்பது உசிதமில்லை. சமயம் வந்தவுடன் காரணம் விளங்கும். இல்லாவிடில் அவரே விளக்குவார். நாமாக முந்திக்கொள்ள வேண்டாம். இம்மாதிரி விஷயங்களில் பொறுத்திருப்பது நமது கடமையாகும்.

ஸுகேசர் :— அப்படியே ஆகட்டும், ஐயனே!

ஸுமந்து :— அசுவகோஷனைப்பற்றிக் கௌஸல்ய ரிடம் ஒரு விஷயம் கேட்கவேண்டுமென்றிருந்தேன். பின்னால் மறந்தேபோய்விட்டேன்.

கௌஸல்யர் :—ஸ்வாமி! என்னிடமா! உத்தர விடுங்கள். தெரிந்தால் சொல்லுகிறேன்.

ஸுமந்து :—அன்று ஆசிரமத்தில் அரவம் வந்து அமளி ஏற்பட்டதல்லவா! அப்பொழுது அசுவ கோஷனின் கைகளைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினேன் அல்லவா! அவன் கரங்கள் அரசகுமாரனுடையவை போல் இருந்தன. தேரோட்டியாகத் தோன்றவில்லை. கோஸல தேசத்திலிருந்து வருவதாக நீ சொன்னதால் உனக்கு அவனைத் தெரிந்திருக்குமோ என்று நினைத் தேன். என்ன! நீ அவனை அறிவாயா?

கௌஸல்யர் :—எனது தந்தைக்கு கோசலதேசமே தவிர நான் அதிகம் வசித்தது என் தாயாரின் நகர மாகிய மகதத்தில்தான். எனக்கு அசுவகோஷனைப் பற்றி ஒன்றும் தெரியாது.

ஸத்யகாமர் :—ஒருவேளை நண்பர் ஸுகேசருக்குத் தெரிந்திருக்கலாம்.

கௌஸல்யர் :—நண்பரே! அவருக்குத் தெரிவதற்கு என்ன ஹேது இருக்கிறது?

ஸத்யகாமர் :—ஸுகேசர் கோசலதேசத்து அரச குமாரன் ஹிரண்யநாபனின் நண்பர். அடிக்கடி அரண்மனைக்குப் போயிருக்கிருர். ஆகையினுல் அவருக்குத் தெரிந்திருக்கலாம் என்று சொன்னேன்.

ஸுமந்து:—குழந்தாய் ஸுகேசா! உனக்கு அவனைத் தெரியுமா? அப்படியானுல் என் ஸந்தேகத்தை நீக்குவாய்.

ஸுகேசர் :— அசுவகோஷன் என்னிடம் நெருங்கிப் பழகுவதேயில்லை. அருகில்போய் ஏதாவது கேட்டாலும் முகத்தைத் திருப்பிக்கொண்டு பதில் சொல்லிவிட்டு உடன் போய்விடுகிருன். ஆகையினுல் அவனிடம் நானும் உதாஸீனனுகவே பழகிவருகிறேன். சில சமயங்களில் அவனை எங்கேயோ பார்த்திருப்பதாகத் தோன்றும்? மனப்பிராந்தி என்று எண்ணங்களை அடக்கிவிடுவேன். அவனுடைய தோற்றமும், குரலும் மிகவும் நெருங்கிப் பழகிய நண்பனுடையதுபோலவே தோன்றுகிறது. ஆனுல் நிச்சயமாக ஒன்றும் தெரியவில்லை. சொல்லவும் முடியாமல் விள்ளவும் முடியாமல் அவதிப்படுகிறேன் ஸ்வாமீ!

ஸுமந்து :— உனக்கு யார்போல் தோன்றுகிறது?

ஸுகேசர் :— என் நண்பன் ஹிரண்யநாபனைப் போலவே தோன்றுகிறது. ஆனுல் என் ஆருயிர் சினேகிதன் என்னிடம் இப்படி உதாசீனமாகப் பழக என்ன காரணம்? ஒன்றுமில்லாததால் அவனுக இருக்க முடியாது என்று தீர்மானித்தேன். ஆனுல் தாங்கள் சொன்னதைக் கேட்டது முதல், என் சந்தேகம் வலுவடைகிறது.

ஸுமந்து :— (தனக்குள்) அவன் ஹிரண்யநாபனுகத்தான் இருக்கவேண்டும். (வெளிப்படையாக) எல்லாம் போகப்போகத் தெரியும். வீணுகக் கவலைப்பட வேண்டாம். நாளை என்ன கேள்வி கேட்கப்போகிருய் ஸத்யகாமா?

ஸத்யகாமர் :— அதுபற்றித்தான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன் ஸ்வாமி!

கௌஸல்யர் :— ஐயனே, நாங்கள் இங்கே பிரம்ம ஞானத்தை அடைய வந்தோம். கேள்விகள் கேட்டு ஸந்தேகங்களை நிவர்த்தி செய்துகொண்டோம். இனி கேட்பதற்கு ஒன்றுமில்லையென்றே நினைக்கிறேன்.

ஸுமந்து :— சபாஷ்! கௌஸல்யா! உன்னைப் பொறுத்தவரையில் அது சரியாக இருக்கலாம். ஆனால் ஸத்யகாமனுக்கு ஏதாவது ஸந்தேகங்கள் இருந்தால்—

ஸத்யகாமர் :— ஐயனே! மேலே கேட்கவேண்டுமானால், பிரம்மஞானத்தை அடைய வழிகள்-ஸாதனைகள்-பற்றித்தான் கேட்கவேண்டும்.

ஸுமந்து :— ரொம்ப சரி. அதையே கேட்டுவிடு. ஓங்கார உபாஸனையைப்பற்றியும், அப்படி உபாசிப்பதால் கிட்டும் பலன்களைப்பற்றியும் கேள்.

ஸத்யகாமர் :— அப்படியே ஆகட்டும். தாங்களும் தயவு செய்து கூட இருக்கவேண்டும்.

ஸுமந்து :— குழந்தைகளே! நானும் எப்போதும் அருகிலேயே இருப்பேன். இப்போது பூஜைக்கு நாழிகையாகிறது, நீங்கள் போய்வாருங்கள்.

(சிஷ்யர்கள் நமஸ்காரம் செய்துவிட்டு விடைபெறுகின்றனர்.)

(திரை விழுகிறது)

காட்சி 4

(திரை விலக)

[பகவான் பிப்பலாதர், தர்ப்பாஸனத்தில் வீற்றிருக்கிறார் இருமருங்கிலும் சுகேசர் முதலிய சீடர்கள் உட்கார்ந்திருக்கின்றனர். ஸுமந்து மஹரிஷியும் அமர்ந்திருக்க ஸம்பாஷணை நடக்கிறது.]

பிப்பலாதர் :— குழந்தைகளே! இன்றும் அசுவ கோஷன் வரவில்லை. ஆகையால் ஸத்யகாமனே இன்று

கேள்வி கேட்கட்டும். ஸுகேசன் கடைசியில் கேட்க வேண்டும். வத்ஸா, ஸத்யகாமா! உன் ஸந்தேகங்களைக் கேள்! விடையளித்து விளக்குகிறேன்.

ஸத்யகாமர்:— குருநாதரே! நமஸ்காரம். தாங்கள் கூறிய உபதேசங்களால் எல்லா ஸந்தேகங்களும் நிவர்த்தியாகிவிட்டன. ஓம்கார உபாஸனையின் பலனைப் பற்றி அறிய விரும்புகிறேன். ஐயனே! மனுஷ்யர்களுள் எவனொருவன் ஆயுள் முடிய ஓம்காரத்தை தியானம் செய்கிறானோ அவன் அதனால் எந்த லோகத்தை அடைகிறான்? அவன் எய்தும் நிலை என்ன?

ஸுமந்து:— ஸத்யகாமா! சிபியின் புதல்வா! ஸத்தியமான பொருளையே விரும்பி உன் நாமத்தை ஸபலமாக்கி விட்டாய்.

பிப்பலாதர்:—ஹே ஸத்யகாமா! எது ஓங்காரம் எனப்படுவதோ அதுவே பரபிரம்மமும், அபரபிரம்மமும் ஆகும். அதனால் அதை விடாமல் தியானம் செய்தவன் அவற்றில் ஒன்றை அடைகிறான். எவன் ஒருவன் இந்திரியங்களை வெளியில் செல்லவிடாமல் கட்டுப்படுத்தியும், சித்தத்தை ஏகாக்ரப்படுத்தியும், பக்தியுடன் தியானம் செய்கிறானோ அவன் கட்டாயம் நல்ல நிலையை அடைவான். ஸத்யம், பிரம்மசர்யம், அஹிம்ஸை, அபரிக்ரஹம், தியாகம், சௌசம், ஸந்தோஷம், கபடமின்மை முதலிய யம நியமங்களுடன் ஓம்காரத்தை தியானம் செய்யவேண்டும்.

ஸத்யகாமர்:— ஸ்வாமீ, தாங்கள் சொன்னவிதமே ஓங்காரத்தை தியானம் செய்பவர்களில் ஒருவன் பர ப்ரஹ்மத்தை அடைவதும், மற்றொருவன் அபர ப்ரஹ்மத்தை அடைவதும் எங்ஙனம்? ஓங்கார உபாஸகர்கள் யாவரும் ஒரேமாதிரியான பலனை அல்லவோ அடையவேண்டும்! பலனில் வித்யாஸம் ஏற்படுவதற்குக் காரணமென்ன?

பிப்பலாதர் :— குழந்தாய், நீ கேட்டது ஸரிதான். ப்ரஹ்மமென்பது அதீந்திரிய வஸ்து; மனதால்கூட அதையறியமுடியாது. ஆனாலும் ஸாளக்ராமத்தை விஷ்ணுவாக தியானிப்பதுபோல் ப்ரஹ்மத்தை தியானிப்பதற்கு நமக்குத் தெரிந்த பல வஸ்துக்களை ப்ரதீகமாக சாஸ்திரம் உபதேசிக்கிறது. இப்ப்ரதீகங்களுள் பரமாத்மாவுடன் நெருங்கியிருப்பதும், அவருடைய பெயராக அமைந்ததுமான ஓங்காரம் மிகச்சிறந்தது. இதைப் பரப்ரஹ்மமாக தியானிப்பவன் ப்ரஹ்மலோகம் சென்று க்ரமமாக முக்தியடைகிறான். இதற்கு சக்தியில்லாமல் ஓங்காரத்தை அபரப்ரஹ்மமாக தியானிப்பவன் முக்தியடைவதில்லை. அபர ப்ரஹ்மத்தையடைகிறான். ஆகவே இருவருக்கும் ஓங்காரம் ஒன்றாக இருந்தாலும் தியானம்செய்யும் வஸ்துவைப் பொறுத்துப் பலனிலும் வித்யாஸமிருக்கிறது. இதுமட்டுமா! ஓங்காரத்தை முழுவதும் உபாஸிக்காமல் அதில் ஓர் பகுதியை தியானித்தாலும் கூட நல்ல பலன் கிடைக்கும். நல்ல கார்யம் ஒருக்காலும் வீணாகாது.

ஸுகேசர் :— ஸ்வாமி, ஓங்காரத்தின் பகுதி உபாஸனையைப்பற்றி விளக்கமாகக் கூறவேண்டுகிறேன்.

பிப்பலாதர் :— ஓங்காரத்தில் அகாரம், உகாரம் மகாரம் என்று மூன்று மாத்திரைகள் உள்ளன. முழுவதையும் சேர்த்து தியானம் செய்யாமல் அகாரத்தை மட்டும் தியானம் செய்பவன் இந்த மனுஷ்ய லோகத்திலேயே உத்தம ஜன்மாவை அடைகிறான். அந்த பிரணவத்தின் முதல் மாத்ராஸ்வரூபமாகிற ருக்வேதம் அவனை மனுஷ்ய லோகத்தில் கொண்டுவந்து சேர்க்கிறது. அந்த தியான பலத்தால் மரணத்துக்குப்பின், கூடிய சீக்கிரத்திலேயே, அரிதான மானிடப்பிறப்பை அடைந்து தவத்தோடும், பிரம்மசர்யத்தோடும், ச்ரத்தையோடும் கூடியவனாக மனுஷ்யலோக போகங்

களை அனுபவிக்கிருன். இதுவே 'அ'காரத்தை தியானிப்பவனுக்குக் கிட்டும் பலன்.

ஸத்யகாமர் : :— பகவானே! இனி பிரணவத்தின் இரண்டாவது மாத்திரையான 'உகார' தியானத்தின் பலனை விளக்கவேண்டும்.

பிப்பலாதர் :— குழந்தாய்! கவனமாகக்கேள்! இரண்டாவதான உகாரத்தை மனஸிலே எவன் த்யானிக்கிருனே அவன் ஸோமலோகத்தை அடைகிருன். 'உகார'ஸ்வரூபமாகிற யஜுர்வேதம், அவனை மரணத்துக்குப்பின் அந்தரிக்ஷத்திலுள்ள சந்திரலோகத்துக்கு அழைத்துச் செல்லுகிறது. அங்கேயிருந்து அந்த லோகத்துக்குரிய ஐச்வர்யங்களை அனுபவித்துவிட்டு, மறுபடியும் திரும்புகிருன். தனது தியான பலன்—புண்ணியத்தின் குவியல் தீர்ந்தவுடன் திரும்ப மனுஷ்ய லோகத்தில் பிறக்கிருன். சொர்க்க சுகத்தைத் துய்த்த பின் மனிதப் பிறவியையடைகிருன் 'உகார'உபாஸகன்.

கபந்தீ :— மூன்ருவது மாத்திரையை தியானிப்பவன் அடையும் பலன் என்னவோ?

பிப்பலாதர் :— மூன்ருவது மாத்திரையான மகாரத்தைப் பிரதானமாகக் கொண்டு மூன்று மாத்திரைகளுடன் சேர்ந்த ஓங்காரத்தையே பரமாத்மாவாக தியானிப்பவன் ஸூர்யமண்டலத்தை அடைகிருன். சந்திரமண்டலம் சென்றவன் திரும்பிவருவதுபோல் இவன் திரும்பிவருவதில்லை. பாம்பு தோலை உரிப்பது போல் எல்லாப் பாபங்களினின்றும் இவன் விடுபட்டவனுகிருன். மகாரஸ்வரூபமான ஸாமவேதம் இவனை ப்ரஹ்மலோகத்திற்கு அழைத்துச்செல்கிறது. ப்ரஹ்மா தான் எல்லா ஜீவராசிகளுக்கும் ஸமஷ்டி வடிவினர். அதனுல்தான் இவரை ஜீவகனரென்று சொல்கிருர்கள். இவரே ஹிரண்யகர்ப்பர். இங்கு ஸுகத்தையனுபவித்துவிட்டு ஓங்காரத்யான மஹிமையால் ஹிரண்யகர்ப்பனுக்கும் மேல்பட்டதான உபாதிகளற்ற எல்லா சரீரங்

களிலும் ஸாக்ஷியாக விளங்கும் பரமபுருஷனை தன் ஸ்வரூபமாயறிந்து கர்மபந்தம் விலகி முக்தியையடைகிறான். ஓங்காரோபாஸனம் இப்பூவுலகில் முக்தியைத் தராவிட்டாலும், க்ரமமுக்தியை அதாவது உபாஸகனை ப்ரஹ்மலோகம் அழைத்துச்சென்று அங்கு தத்வ ஸாக்ஷாத்காரத்தையும் முக்தியையும் கொடுக்கவல்லது. இதை விளக்கும் இரு மந்திரங்கள் உள்ளன.

ஸத்தியகாமர் :—ஓம்காரத்திலுள்ள மூன்று மாத்திரைகளை மூன்று வேதங்களாகக் கூறினீர்கள். இம்மாத்திரைகளைப் பற்றிக் கொஞ்சம் விஸ்தாரமாக விளக்கவேண்டுகிறேன்.

ஸௌர்யாயணி :—பகவானே! தங்களுடைய வதநாரவிந்தத்திலிருந்து பெருகும் அமிருதவர்ஷத்தைக்கேட்டு கிருதார்த்தர்களானோம். மேலும் கிருபை செய்ய வேண்டும்.

பிப்பலாதர் :—நண்பரே! குழந்தைகளின் ஸந்தேகங்களை நிவர்த்திக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸுமந்து :— ஆகட்டும், நண்பரே. ஸத்தியகாமா, நீ கேட்டதுபோல் பிரணவத்திலுள்ள மூன்று மாத்திரைகளை விளக்கிக்கூறுகிறேன். பிரணவம் பிரம்மத்துக்கு பிரதீகம். அது ஒரே அக்ஷரம். அதில் அகாரம், உகாரம் மகாரம் என்று மூன்று மாத்திரைகள் உள்ளன. இந்த மூன்று மாத்திரைகளும் மூன்று வேதங்களின் ஸ்வரூபம். இவைகளே மூன்று நிலைகளும், முக்காலங்களும், மூவ்வுலகங்களும், முக்குணங்களும். ருக்வேதம் ஸ்துதிபரம் பரம்பொருளின் புகழைப் பாடுகிறது. யஜுர்வேதம் கிரியாபரம், பரம்பொருளை ஆராதிப்பதற்குள்ள கிரியைகளை விளக்குகிறது. ஸாமவேதம் ஞானபரமானது. ஞானத்தைப்புகட்டுவது இவ்வாறு உள்ளர்த்தம் உணர்ந்து ஓம்காரத்தை உபாஸிப்பவன் கிரமமுக்தியை அடைகிறான்.

பிப்பலாதர் :— இனி மந்திர சுலோகங்களின் கருத்தைக் கூறுகிறேன். கேளுங்கள். மேற்படி ஓங்காரத்தில் மூன்று மாத்திரைகளும் (தனித்தனியே) உபாஸிக்கப்பட்டால் அவை அழியும் பலனைத்தான் தரும். மூன்றும் சேர்ந்து உபாஸிக்கப்பட்டால் கிட்டும் பலன் அழியாது. அந்த மூன்று மாத்திரைகளும் ஆத்ம தியானத்தில் சேர்ந்தவை. ஒன்றுக்கொன்று ஸம்பந்த முள்ளவை. விட்டுப் பிரியாதவை நன்ருகச் சேர்க்கப் பட்டிருக்கிற வெளி, உள், நடு இவைகளிலுள்ள புருஷர்களுடன் அபேதமாக ப்ரணவ தியானம் செய்பவன் நடுங்கமாட்டான். அபர ப்ரஹ்மத்தை தியானிப்பவன் ருக்வேதத்தால் இந்த மனுஷ்யலோகத்தையும், யஜுர் வேதத்தால் ஸோம லோகத்தையும், ஸாமவேதத்தால் ப்ரஹ்மலோகத்தையும் அடைகிருன். இப்படியான ஓங்காரத்தின் மஹிமையைப் பெரியோர்கள் தெரிந்து கொள்கிருர்கள். அந்த ப்ரணவம் முழுவதையும் ப்ரதீகமாகக் கொண்டு பரப்ரஹ்மத்தை தியானிப்பவன் அந்த ஓங்காரத்தாலேயே சாந்தமாயும், அதாவ்து விழிப்பு முதலான நிலைகளற்ற துரீயமானதும், ஜராமரண மற்றதும், பயமற்றதுமான பரப்ரஹ்மத்தையடைகிருன். அபர ப்ரஹ்மமாக தியானிப்பதால் ஸ்வர்க்காதிலோகங்களைத் தருகின்ற ஓங்காரமே பரப்ரஹ்மமாக தியானிப்பதால் முக்தியைத் தருகின்றது.

ஸத்யகாமர் :— 'உள், நடு, வெளி' இவைகளை விளக்கும்படி விஞ்ஞாபிக்கின்றேன் ஐயனே!

ஸுமந்து :— உள் என்பது ஸுஷுப்தி, மகாரம். நடு-ஸ்வப்னம், உகாரம். வெளி என்பது ஜாகரம், அகாரம். 'அ'-விழிப்பு நிலை, ஸ்தூல தேஹம், வ்யஷ்டியில் விசுவன், ஸமஷ்டியில் வைச்வாநரன். 'உ'-சொப்பன நிலை, ஸூக்ஷ்மதேஹம், வ்யஷ்டியில் தைஜஸன், ஸமஷ்டியில் ஹிரண்யகர்ப்பன். 'ம'-ஸுஷுப்தி நிலை, காரண தேஹம் வ்யஷ்டியில் ப்ராஜ்ஞன், ஸமஷ்டியில் ஈசுவரன். இந்த நிலைகள்

தனித்தனியாகக் காணப்படினும் இவைகளில் விளங்கும் வ்யஷ்டி ஸமஷ்டி வடிவினரான விசுவன்—வைச்வா நரன், தைஜஸன்—ஹிரண்யகர்ப்பன், ப்ராஜ்ஞன்—ஈசுவரன் இவர்கள் எல்லோரும் தம் தம் நிலைகளோடும், ஆச்ரயமான சரீரங்களோடும் பரமாத்ம ஸ்வரூபமாக இருப்பவர்களே, அந்த பரமாத்மாதான் ஓங்காரம், என்று இவ்வாறு நன்கு தெரிந்து உபாஸிப்பவன் ஸர்வாத்மாவாக ஆய்விடுவான். இந்நிலையிலிருந்து அவன் நழுவுவதே இல்லை.

பிப்பலாதர் :— குழந்தைகளே! இனி சுருக்கமாகக் கூறுகிறேன், கேளுங்கள். ருக்வேதத்தால் இவ்வுலகும், யஜுர்வேதத்தால் சந்திரலோகமும், ஸாமவேதத்தால் மஹான்கள் உணரும் ப்ரஹ்மலோகமும் எய்தப்படும். இவையெல்லாம் ஓங்காரத்தை அபரப்ரஹ்மமாக தியானிப்பவர் அடையும் பலன்கள். இங்கு ஓங்காரத்திலுள்ள அகாரத்தை மட்டுமோ, அல்லது உகாரத்தை மட்டுமோ தியானிப்பதால் பலன் ஏற்படுவதாகக் கூறியிருப்பது ஓங்காரத்தின் மஹிமையைக் காட்டுவதற்காகவே தவிற, அதில் தாத்பர்யமில்லை. தனித்தனியாக உபாஸித்தால்கூட பலன் ஏற்படுமென்றால் சேர்ந்து உபாஸித்தால் எத்தனை சிறந்த பலன் ஏற்படுமென்று ஓங்காரத்தின் மஹிமையை விளக்குகிறது. ஆகவே சேர்ந்து ஓங்காரம் முழுவதையும்தான் உபாஸிக்கவேண்டும். அதிலும் அபரப்ரஹ்மத்தை தியானித்தால் பலன் கிடைத்தாலும் ஸம்ஸாரச் சுழலிலிருந்து வெளியேறமுடியாது. ஆகவே அகாரம் முதலான மாத்திரைகள், ஜாக்ரத் முதலான நிலைகள், விச்வன்–வைச்வாநரன் முதலான புருஷர்கள் ஸ்தூலம் முதலான சரீரங்கள் இவைகள் எல்லாவற்றையும் நன்கு தெரிந்து, எல்லாம் பரமாத்மாவின் ஸ்வரூபம், அவரே ஓங்காரம் என்று பரப்ரஹ்மத்தை தியானிப்பவன் ப்ரஹ்மலோகம் சென்று ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் பெற்றுத் துரீய நிலையை அதாவது பேரானந்த நிலையையடைகிறான்.

ஸுகேசர் :—பகவானே, இன்றும் முக்கியமான உபதேசங்கள் செய்திருக்கிறீர்கள். நண்பன் அசுவகோஷன் கேட்கவில்லையே என்று என் மனம் வருந்துகிறது.

ஸுமந்து :—வருத்தம் வேண்டாம். எல்லா விஷயங்களும் அவனுக்குத் தெரியும்படி குரு அனுக்கிரஹம் செய்வார். குழந்தைகளே ! பிரணவமில்லாத மந்திரத்திற்கு பிராணன் இல்லை. ஆகவே நீங்கள் குரு உபதேசித்தபடி பிரணவத்தை உபாஸித்து பலன் அடையுங்கள்.

சிஷ்யர்கள் :— அப்படியே செய்கிறோம் குருநாதரே. (எழுந்து இருவரையும் வணங்கிவிட்டுப் போகிறார்கள்)

(திரை விழுகிறது.)

நான்காவது அங்கம் முற்றும்

ஐந்தாவது அங்கம்

காட்சி 1

(திரை விலக)

[ஸுமந்த மஹரிஷியின் ஆசிரமம். மஹரிஷியும் ஸுகேசர் முதலிய அறுவரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கின்றனர்].

கௌஸல்யர் :— ஐயனே! இதுவரை அசுவகோஷன் வரவில்லையே! நாளை ஸுகேசர் பிரச்னம் கேட்க வேண்டாமா?

ஸுமந்து :— குழந்தாய், கவலை வேண்டாம். அசுவ கோஷன் இன்று கட்டாயம் வந்துவிடுவான். நாளை வத்ஸன் ஸுகேசன் கேள்வி கேட்கத் தடை ஒன்றும் இருக்காது.

ஸுகேசர் :—குருநாதரே! தங்கள் அமுத வசனத்தை கேட்டு மகிழ்ச்சியுறுகிறேன்.

ஸத்யகாமர் :—ஸ்வாமி எனக்கு ஒரு ஸந்தேகம்?

ஸுமந்து: —அது என்ன? சொல்லுவாயாக, உடன் தெளிவிக்கிறேன்.

ஸத்யகாமர் :— பகவான் பிப்பலாதர் உபதேசிக்கும் பொழுது 'இதற்கு ஒரு சுலோகம் இருக்கிறது' என்று அடிக்கடி அருளிச்செய்வதன் நோக்கம் என்ன?

கபந்தீ :— குருநாதரே, அடியேனுக்கும் இந்த ஸந்தேஹம் உண்டு. பகவானுடைய வாக்குக்கும்மேல் வாசகங்கள் உண்டா? அவர்கள் எதற்காக மேற் கோள்கள் சொல்லவேண்டும்?

ஸுமந்து :— குழந்தைகளே! உங்கள் ஸந்தேஹம் நியாயமானதுதான். ஆனல் அப்படி அருளுவதற்கும் ஸரியான காரணமிருக்கிறது.

(அசுவகோஷன் பிரவேசித்து எல்லோருக்கும் வணக்கம் செலுத்துகிறான். குரு உட்காரச்சொன்னபின் அமருகிறான்.)

ஸுமந்து:— வா அசுவகோஷா! உன் பிரயாணம் சுகமாயிருந்ததல்லவா!

அசுவகோஷன்:— ஐயனே! தங்கள் தயவினாலும், பகவானின் அனுக்கிரஹத்தினாலும் பயணம் இனிது நிறைவேறியது.

ஸுமந்து:— குழந்தாய், இப்போது இவர்கள் ஒரு ஸந்தேஹம் கேட்டார்கள். அதாவது பகவான் உபதேசிக்கும்பொழுது 'இதற்கு ஒரு மந்திரம் (சுலோகம்) இருக்கிறது' என்று சொல்கிறார்களே; அதன் தாத்பர்யம் என்ன? அதைத்தான் விளக்கத் துவக்கினேன். நீயும் வந்துவிட்டாய்.

அசுவகோஷன்:— ஸ்வாமீ! அடியேனும் இதைக் கேட்க ஆவலுள்ளவனாய் இருக்கிறேன்.

ஸுமந்து:—உபநிஷத்துக்களில் இருவகை உண்டு. ஒன்று பிராஹ்மணோபநிஷத், மற்றொன்று மந்திரோபநிஷத். மந்திரோபநிஷத ஸூத்திரங்களாக இருக்கும். பிராஹ்மணோபநிஷத் அவற்றிற்கு விரிவுரையாகும். அதர்வண வேதத்தைச் சேர்ந்த முண்டகோபநிஷத் மந்திரோபநிஷத்தாகும். இந்த பிரச்னோபநிஷத் அதே வேதத்தைச்சேர்ந்த ஒரு பிராஹ்மணோபநிஷத்தாகும். அந்த முண்டகத்தின் பூர்த்தியே இந்த உபநிஷத் என்று கூறலாகும். ஆகையினால்தான் பகவான் பிப்பலாதர் மந்திரோபநிஷத்திலிருந்து முக்கியமான மந்திரங்களை மேற்கோளாக உரைத்தார்.

கபந்தீ:— ஐயனே! எங்கள் ஸம்சயம் நிவர்த்தியாகி விட்டது.

ஸத்யகாமர்:— ஸ்வாமீ, மிகவும் நன்றி.

ஸௌர்யாயணி :— அசுவகோஷா, நீ போன இடத்துச் செய்திகளையெல்லாம் விபரமாகச் சொல்லுவாய்! அப்பனே!

அசுவகோஷன் :—(குருவின் உத்தரவுக்கு எதிர்பார்த்துத் தயங்குகிறான்.)

ஸுமந்து :— குழந்தாய், எல்லாம் விபரமாகக் கூறு.

அசுவகோஷன் :— குரு நாதரே! மிருகண்டுவின் ஆசிரமத்தில் பெரிய ஸத்ஸங்கம் சேர்ந்தது. மாண்பு மிக்க மஹான்கள் கூடினார்கள். வேதவேதாந்த சாஸ்திர விஷயங்களைப்பற்றிச் சர்ச்சைகள் நடந்தன. யாகங்களும் சிறப்பாக நடந்தன. பகவானின் அருளினாலும் பூர்வ புண்ணியத்தினாலும் அதில் பங்கு பெறும் பாக்கியம் அடியேனுக்கும் கிடைத்தது.

கபந்தீ :— அசுவகோஷா! நீ ஒரு அதிருஷ்டசாலி தான். மேலும் நடந்த விபரங்கள் சொல்லுவாய்.

அசுவகோஷன் :— அங்கே குழுமியவர் எல்லோரும் பகவான் பிப்பலாதரை மிகவும் புகழ்ந்து பேசினார்கள். நான் அவரது சீடன் என்று அறிந்தவுடன் எனக்கு உபசாரங்கள் மிகவும் அதிகமாகச் செய்தார்கள்.

ஸத்யகாமர் :— அப்புறம் என்ன நடந்தது?

அசுவகோஷன் :— யாகமண்டபத்தில் ஸ்ரீ ராமாயண காலக்ஷேபமும் நடந்தது. தேவலோகத்தில் சதகோடி சுலோகங்களாக விளங்கும் ஸ்ரீராமாயணத்தை, பூலோகத்தில் வால்மீகி பகவானுக்கு, நாரதரும் பிரம்மாவும் வந்து உபதேசித்தார்களாம். அதன்படி வால்மீகி முனிவரும் 24000 சுலோகங்களாகப் பெரிய காவியம் இயற்றியிருக்கிறார். அதன் காலக்ஷேபம் இடைவிடாமல் யாகசாலையில் நடந்தது. எல்லோரும் ஆதி காவியமாகிய இராமாயணத்தையும், வால்மீகி மகரிஷியையும்

அவரது சீடரான பரத்வாஜ மகரிஷியையும் மிகவும் புகழ்ந்து பேசினார்கள்.

ஸுகேசர் :— நாங்கள் இங்கே வரும்பொழுது என் தந்தை அருளியது ஞாபகத்துக்கு வருகிறது. அசுவ கோஷா ! மேலும் என்ன கூறினார்கள் ?

அசுவகோஷன் :— ரிஷி குமாரர்களே ! அந்த அமர காவியத்தைப் புகழ ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேஷனுலுமாகாதென்று பாராட்டிப் பேசினார்கள்.

ஸுமந்து :— இந்த ராமாயண ரசனையில் பரத்வாஜரின் பங்கு மிகவும் முக்கியமானது. ஸுகேசா ! உன் தந்தை வால்மீகிக்குச் சீடராகப்போய்த் தொண்டாற்றிப் பெரும் புகழ் பெற்றுவிட்டார்.

கபந்தீ :—ஐயனே ராமாயண கதையை எங்களுக்குச் சொல்லவேண்டும்.

ஸுமந்து :—குழந்தைகளே ! அசுவகோஷன் அதை உங்களுக்கு சாவகாசமாகச் சொல்வான். பின்னல் கேட்டுக்கொள்ளுங்கள். ராமாயணம் காலத்தால் அழியாத கதை. ஆசந்திரார்க்கம் விளங்கப்போகும் காவியம். மண்ணும் மலையும், ஆறும் ஆழ்கடலும் அழிந்தாலும் அழியாத காவியம். கோசல தேசத்துச் சக்கரவர்த்தியின் சரித்திரம் காலக்ஷேபம் நடந்தபோது கோஸல தேசத்தைச்சேர்ந்த நீ சென்றதும் ரொம்பப் பொருத்தமே அசுவகோஷா !

கௌஸல்யர் :— அப்பா அசுவகோஷா ! உனக்கு அந்த பாக்கியம் கிட்டிற்று, எனக்குக் கிடைக்கவில்லை.

ஸத்யகாமர் :—அசுவகோஷா ! நீ இல்லாத ஸமயத்தில் இங்கேயும் முக்கியமான நிகழ்ச்சிகள் நடந்தன.

அசுவகோஷன் :— (அவசரமாக) என்ன ? என்ன நடந்தது ? (தனக்குள்) ஸுகேசர் பிரச்னம் பண்ணி விடை தெரிந்துகொண்டுவிட்டாரா ?

கபந்தீ :— அச்சம் வேண்டாம். நீ இல்லாத சமயத்தில், ஸௌர்யாயணியும் ஸத்யகாமரும் கேள்வி கேட்டார்கள். விடை அளித்தார் நம் குருநாதர். அவ்வளவுதான்.

அசுவகோஷன் :— அந்த பிரச்னங்களும் உபதேசங்களும் எனக்கு அன்றே ஸ்புரித்துவிட்டன குருவின் அனுக்கிரஹத்தினுல்.

ஸுகேசர் :— நண்பா, அதை விபரமாகக் கூறு.

அசுவகோஷன் :— நான் ஒருநாள் காலையில் தியானத்தில் அமர்ந்திருந்தேன். அப்போது இங்கு நடந்த காரியங்கள் எல்லாம் கண் முன் தெரிந்தன. பேசுவது எல்லாம் ஸ்பஷ்டமாகக் கேட்டது. நேரில் இருந்து பார்த்து கவனிப்பதுபோல் எல்லாம் பார்த்தேன். வினுவும் விடையும் கேட்டேன். தன்யனுனேன்.

கபந்தீ :— அசுவகோஷா! நீ செய்த பாக்கியமே பாக்கியம். அந்தப் பெறற்கரிய பேறு இங்கு ஒருவருக்கும் கிடைக்கவில்லையே.

அசுவகோஷன் :— நண்பர் ஸுகேசர் இன்னும் பிரச்னம் கேட்கவில்லையா?

ஸுகேசர் :— நான் அன்றே கேட்க எண்ணினேன். ஆனுல் குருநாதர் அனுமதிதர மறுத்துவிட்டார்.

அசுவகோஷன் :— (தனக்குள்) அட துரதிர்ஷ்டமே! (வெளியில்) ஏன் மறுத்துவிட்டார்? இன்னும் வேறு யாரையாவது தேடிப்போய் அவரிடம் கேட்கச் சொன்னுரா?

ஸுமந்து :— அப்படியொன்றும் சொல்லவில்லை. சரியான காரணம் கூறித்தான் மறுத்தார்.

அசுவகோஷன் :— (பரபரப்புடன்) என்ன காரணம் கூறினுர்கள்?

ஸுகேசர் :—நீ இல்லாததால் அப்பொழுது அநுமதி கொடுக்கவில்லை. அசுவகோஷன் வந்தபின் கேள், விடை கூறுகிறேன் என்று சொல்லிவிட்டார்கள்.

அசுவகோஷன்:—(ஸந்தோஷமாக) அப்படியா சொன்னார்கள் என் குருநாதர்! நான் புண்ணியசாலி தான். தன்யன், தன்யன்.

(ஆடுகிருன் பாடுகிருன் மகிழ்ச்சி மிகுந்து எல்லோரையும் திரும்பத் திரும்ப வணங்குகிருன்)

ஸுமந்து :—(தனக்குள்) இவன் ஹிரண்யநாபன் தான் ஸந்தேகமில்லை. (வெளியே) அசுவகோஷா, போதும் நிறுத்து. விஷயம் தெரிந்தபின் சந்தோஷத்துக்குப் போக்குவிடவேண்டாமா? அமைதியுறுவாய்.

கபந்தீ :—நாங்கள் வந்து வெகுநேரமாகிவிட்டது. போகவேண்டாமா! நண்பர்களே.

ஸுமந்து :—சரி போய் வாருங்கள். நாளை காலை பகவான் ஆசிரமத்தில் சந்திப்போம்.

(எல்லோரும் எழுந்து வணங்கிவிட்டுப் போகிருர்கள்.)

(திரை விழுகிறது)

காட்சி 2

(திரை விலக)

[பகவான் பிப்பலாதரின் ஆசிரமத்தில் பிப்பலாதரும் ஸுமந்துவும் வீற்றிருக்கின்றனர். எதிரில் ஸுகேசர் முதலிய அறுவர்களும் உட்கார்ந்திருக்கின்றனர். அசுவகோஷன் விசிறியினுல் குருவுக்கு வீசிக்கொண்டு நிற்கிருன்.]

ஸுமந்து :— குழந்தாய் ஸுகேசா! இன்று நீ பிரச்னம் பண்ணலாமே!

பிப்பலாதர் :— வத்ஸா! அசுவகோஷனும் வந்துவிட்டான். தாராளமாக நீ கேட்கலாம் உன் ஸந்தேஹங்களை.

ஸுகேசர்:— ஹே பகவானே! கோஸல தேசத்தி லிருக்கும் ஹிரண்யநாபன் என்ற ராஜபுத்திரன் என் னிடம் வந்து "16 கலைகளுள்ள புருஷனை நீர் அறிவீரா" என்ற கேள்வியைக்கேட்டான். அதற்கு நான் "அந்தப்புருஷனைப்பற்றி எனக்குத் தெரியாது" என்று கூறினேன். என் வார்த்தையில் அவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. "மிகப் படித்தவரான உமக்குக்கூடவா தெரியாமலிருக்கும்?" என்றான் ராஜகுமாரன். "எனக்குத் தெரிந்திருக்குமானால் அந்தரங்க நண்பனான உமக்குச் சொல்லமாட்டேனா" என்று கூறினேன். இவ்வளவு சொல்லியும் நம்பிக்கை வராமல் "எனக்குச் சொல்லக்கூடாது என்பதற்காகத் தான் தாங்கள் தெரிந்தும் தெரியாது என்று மறைக் கிறீர்கள்" என்றான் அவன். உடனே நான் சபதம் செய்து கூறினேன். "உண்மையாகவே எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்து உன்னிடம் தெரியாது என்று சொல்வேனேயானால் அது பொய் வார்த்தை யாகும். பொய் வார்த்தை பேசுபவன் அடியோடு அழிந்து போவான். இவ்வுலகிலோ, மேல் உலகிலோ அவனுக்குச் சிறிதும் ஸுகம் கிடையாது. இது எனக்கு நன்றாகத்தெரியும். தெரியாதவன் பொய்சொல்லக் கூடும். பொய் பேசுபவனுக்குப் பின்னால் துக்கம் ஏற் படுவதை அறிந்த நான் எவ்வாறு பொய் சொல்வேன்? ஒரு நாளும் பொய் பேசமாட்டேன். என் வார்த்தையை நம்பு. உண்மையாக எனக்கு அந்த புருஷனைப்பற்றித் தெரியாது" என்று கூறினேன். இவ்வளவு சொன்ன பிறகுதான் அவன் நம்பினான். நம்மைப்போலவே தெரியாமலிருக்கும் இவரிடம் கேட்டுவிட்டோமே என்று வெட்கப்பட்டுக்கொண்டு தன் தேரில் ஏறிக்கொண்டு பேசாமலே சென்றுவிட்டான். அது முதல் அந்தக் கேள்வி முள்போல் என் மனதில் உறுத்திக்கொண்டிருக் கிறது. இதற்குப் பதில் தெரிந்தால்தான் என் மனம் சாந்தமடையும். இப்பொழுது அதே வினாவை ப்ரபோ! தங்களிடம் கேட்கிறேன். அந்தப் புருஷன் யார்?

அவர் எங்கு இருக்கிறார்? தயவு செய்து ஸமாதானம் கூறவேண்டுகிறேன்.

ஸுமந்து :— சித்தம் அழகிய செல்வனே! மிகவும் நல்ல கேள்வி. இதுவரை கேட்ட பிரச்னங்களுக்கெல்லாம் தலையாய கேள்வி ஸத்தியத்தை நிலைநாட்டுதலில் உனக்கு எத்தனை ஈடுபாடு! பொய் சொன்னால் அதில் தன்னுடைய ஸமூலமான அழிவைக்காண்கின்ற உத்தமனே! உன்னை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும்.

கபந்தீ :— அதுமட்டுமா! ஸ்வாமீ, தன் நண்பனுடைய கேள்விக்கு விடை காண்பதற்காக எவ்வளவு பிரயாஸை எடுத்திருக்கிறார் ஸுகேசர்! அவருடைய நட்பின் மாண்பே மாண்பு.

ஸத்யகாமர் :— ஸுகேசர் ஸத்தியத்தின் ஸ்வரூபம். நட்பின் உறைவிடம் சினேகிதனின் ஸந்தேக நிவர்த்திக்காக சிரமத்தைப் பாராட்டாமல் உழைத்த தியாகி.

அசுவகோஷன் :— ரிஷி குமாரர்களே! தயவு செய்து உரையாடலை நிறுத்திக்கொள்ளுங்கள். பகவானுக்கு விடையளிக்க ஸந்தர்ப்பமளியுங்கள்.

பிப்பலாதர் :— குழந்தைகளே! கவனமாய்க் கேளுங்கள். ஸுகேசா, நீ கேட்கும் புருஷன் பரமாத்மாவேயாகும். அந்த புருஷனிடத்திலேயே 16 கலைகளும் உண்டாயின. எந்தப் புருஷனிடத்தில் 16 கலைகளும் உண்டாயினவோ அந்த புருஷன் இச்சரீரத்துக்குள்ளேயே இருக்கிறார்.

ஸுகேசர்:—16 கலைகள் எவை? அவை எப்படி உண்டாயின? எந்த வரிசையில் உற்பவித்தன?

பிப்பலாதர் :—வத்ஸா, விபரமாகச் சொல்லுகிறேன். பரமாத்மாவாகிற அந்தப் புருஷன் பின் வருமாறு ஆலோசித்தார். 'சரீரத்தில் தங்கியிருத்தல், சரீரத்திலிருந்து வெளிக்கிளம்புதல் இந்தக் காரியங்களை யாரைக்

கொண்டு நடத்தலாம். இவைகளை நான் செய்ய முடியாது. வேறொருவரைக் கொண்டுதான் நடத்த வேண்டும். ஆனாலும் நானே நடத்துவதாக உலகில் வியவஹாரம் ஏற்படவேண்டும். இதற்குத் தகுந்தவர் யார்?" இவ்வாறு யோஜித்து ஸமஷ்டி பிராணனை ஸிருஷ்டித்தார். உலகில் அரசர்கள் தாங்களே நேரில் இருந்து எல்லாக் காரியங்களையும் நடத்துவதில்லை. ஸர்வாதிகாரியாக ஒருவரை நியமித்து விடுகிறார்கள். அவர்தான் எல்லாக்காரியங்களையும் செய்கிறார். ஆனால் உலகில் யாவரும் அரசன் செய்வதாக சொல்லுகிறார்கள். அதுபோல் பரமாத்மா ஒன்றும் செய்வதில்லை. சரீரத்திற்குள் நுழைவதோ, அங்கு தங்கியிருப்பதோ, பின்னால் வெளிக்கிளம்புவதோ எல்லாம் பிராணனுடைய கார்யம் தான். ஆனால் உலகில் ஆத்மா சரீரத்தில்இருப்பதாகவும், போய்விட்டதாகவும சொல்லிக்கொள்கிறார்கள். இவ்வாறு முதலில் பிராணனை ஸிருஷ்டித்த பிறகு கிரமமாக மற்ற 15 கலைகளையும் சிருஷ்டித்தார்.

கபந்தீ :— குருநாதரே! கலைகளின் பெயர்களை விபரமாகச் சொல்லவேண்டுகிறேன்.

பிப்பலாதர் :— பதினாறு கலைகளின் பெயர்கள் பின்வருமாறு— 1. பிராணன், 2. ஆஸ்திக்ய புத்தி என்னும் சிரத்தை 3. ஆகாயம் 4. வாயு 5. அக்கினி 6. ஜலம் 7. பிருதிவி 8. இந்திரியம் 9. மனம் 10. அன்னம் 11. பலம் 12. தபஸ்ஸு 13. வேதங்கள் 14. கர்மாக்கள் 15. ஸ்வர்க்காதி லோகங்கள் 16. நாமங்கள்.

ஸுகேசர் :— ஸ்வாமி! எங்கும் நிறைந்திருக்கும் பிரம்மத்தை சரீரத்திற்குள் இருப்பதாகச் சொன்னது சரியா? விளக்கவேண்டும்.

ஸௌர்யாயணீ ;— காரணமான வஸ்துவை காரிய வஸ்துவிற்குள் இருப்பதாகச் சொல்லுவது எங்ஙனம் பொருந்தும்?

அசுவகோஷன் :— ரிஷிகுமாரர்களே! மாமரத்துக்கு மாங்கொட்டை காரணமாகிறது. ஆனால் அந்த மாமரத்திலேயே காரிய வஸ்துவாகிய மாம்பழம் காரணமான கொட்டையுடன் இருக்கவில்லையா?

பிப்பலாதர் :—வத்ஸர்களே! உங்கள் ஸந்தேகங்கள் நியாயமானவைதான். ஏகசந்தக்ராஹிகளாயிருக்கும் உங்களைப்போன்ற சீடர்களை அடைந்ததில் நானும் பெருமை கொள்கிறேன். அசுவகோஷன் கூறிய திருஷ்டாந்தம் சரியல்ல. மாமரத்துக்கு மாங்கொட்டை காரணம்தான். ஆனால் பீஜமாகிற மாங்கொட்டை வேறு. அந்தக் கொட்டையிலிருந்து தோன்றிய மா மரத்தின் பழமும் கொட்டையும் வேறல்லவா! அதுவும் தவிர மரமும் கொட்டையும் ஒன்றுக்கொன்று அவயவ ஸம்பந்தமுள்ளவை. அவயவாவயவிபாவ ஸம்பந்தம் சொல்லவேண்டும். இங்கே புருஷனே அவயவம் இல்லாதவன். கலைகளும் சரீரங்களும் அவயவமுள்ளவை. ஆகையினால் சரீரத்துக்குள் இருக்கிறான் என்று சொன்னது 'சாகாசந்திரன்' என்ற நியாயத்தை அனுஸரித்து தெளிவாக்கக்கூறியதே.

ஸுகேசர் :— "சாகா சந்திர" நியாயம் என்றால் என்ன?

ஸுமந்து :— குழந்தாய்! இரவில் சந்திரனை சுட்டிக் காட்டும்போது, அதோ கிழக்கே தெரிகிறது! பார்; அந்த மரத்துக்குமேலே கொஞ்சம் வளைந்துபோகும் கிளைக்குப் பக்கத்தில் தெரிகிறது. அந்தக் கிளைக்கும் பக்கத்துக் கிளைக்கும் சற்று மேலே தெரிகிறது. என்றெல்லாம் குறிப்பிட்டுச் சொல்வதில்லையா! எங்கோ இருக்கிறது சந்திரன்; அவனுக்கும் மரக் கிளைக்கும் கிஞ்சித்தும் ஸம்பந்தமில்லை ஆனாலும் மரக்கிளை சந்திரனைக்காட்டுவதால் அதை அறிந்து கொள்ள மரக்கிளையை பயன்படுத்துகிறோம்! அதுபோல புருஷனுக்கும் சரீரத்திற்கும் ஸம்பந்தம் இல்லை. அவன் எங்கும் இருப்பதால் சரீரத்திற்குள் மட்டும் இருக்கிறான்

என்று சொல்லவும் முடியாது. ஆனல் சரீரத்தில்தான் ஆத்மா இருப்பது தெரிகிறது. மற்ற இடங்களில் ஆத்மா இருப்பது தெரிவதில்லை. இதைக்கொண்டு ஆத்மா சரீரத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. உண்மையாகப் பார்த்தோமானல் கிளையில் சந்திரன் இருப்பது போலத்தான் சரீரத்தில் ஆத்மா இருப்பதும்.

ஸுகேசர் :— ஸ்வாமீ! பதினறு கலைகளின் உற்பத்தியைப்பற்றி மேலும் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

பிப்பலாதர் :— நண்பரே, குழந்தைகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும்படி கோருகிறேன்.

ஸுமந்து :— அப்படியே ஆகட்டும் மஹரிஷியே! வத்ஸர்களே! கேளுங்கள். முதலில் எல்லாப் பிராணிகளின் கரணங்களுக்கும் ஆதார ஸ்வரூபமான ஸமஷ்டி பிராணனை சிருஷ்டித்தார். அந்த பிராணனிலிருந்து எல்லா பிராணிகளும் சுபகர்மங்களில் பிரவிருத்திப்பதற்கு ஹேதுவான சிரத்தையை உண்டாக்கினர். பிறகு பஞ்சபூதங்களை உண்டாக்கினர். அவைகளில் எல்லாவற்றிற்கும் முதலில் சப்தகுண விசிஷ்டமான ஆகாயத்தை சிருஷ்டித்தார். பிறகு சப்தம், ஸ்பர்சம் என்று இரண்டு குணங்களுள்ள வாயு உண்டாக்கப்பட்டது. பின் சப்தம், ஸ்பர்சம், ரூபம், என்ற மூன்று குணங்களுள்ள அக்கினி உண்டாயிற்று. அதிலிருந்து முன் குணங்களுடன் ரஸம் என்ற குணம் சேர்த்து நான்கு குணங்களுள்ள ஜலத்தை உண்டாக்கினர். அதன் பிறகு நான்கு குணங்களுடன் கந்தம் என்ற குணம் சேர்த்து ஐந்து குணங்களுள்ள பிருதிவியை சிருஷ்டித்தார். இந்தப்படியே ஞான இந்திரியங்கள் 5, கர்ம இந்திரியங்கள் 5, ஆக பத்து இந்திரியங்களும் உண்டாயின. அப்பால் இவைகளின் யஜமானனுக ஸங்கல்ப விகல்பங்களோடு கூடிய மனஸ்ஸை சிருஷ்டித்தார். பிராணிகளின் கார்ய கரணங்களை உண்டாக்கிய

பிறகு அவைகள் உண்டு வாழ்வதற்காக அன்னத்தை-நெல், கோதுமை முதலிய தானியங்களை சிருஷ்டித்தார். உண்ட அன்னத்திலிருந்து வீரியம்-பலம் உண்டாயிற்று. அந்த அன்னத்தினல் அனேக விதமான கர்மாக்களைச் செய்யும் ஸாமர்த்தியம் உண்டாயிற்று. அதன் பிறகு அந்த பிராணிகளின் முன்னேற்றத்துக்காக தவத்தை உண்டுபண்ணினர். தவத்தினல் உள்ளும் புறமும் சுத்தியடைந்த பிராணிகளுக்காக, கர்மஸாதன பூதமான ருக், யஜுஸ், ஸாமம் அதர்வாங்கிரஸ் என்ற வேத மந்திரங்கள் ஏற்பட்டன. பிற்பாடு அந்த மந்திரங்களை வைத்து யாகம், அக்னிஹோத்ரம் முதலிய கர்மாக்கள் செய்யப்பட்டன. அதன் பயன்களாக ஸ்வர்க்காதி லோகங்கள் சிருஷ்டிக்கப்பட்டன. புண்ணியம் செய்தவருக்கு ஸ்வர்க்கம், பாபிகளுக்கு நரகம், மிச்ரகர்மிகளுக்கு பூலோகம் இப்படியாக உண்டான லோகங்களிலிருக்கும் பிராணிகளுக்காக தேவதத்தன், யக்ஞதத்தன், பிரம்மதத்தன் முதலிய நாமாக்களும் உண்டாயின. பிறகு எல்லாம் புருஷனில் லயமடைகின்றன.

ஸுகேசர் :— அப்புரம் கலைகள் எப்படி புருஷனில் லயமடைகின்றன ?

பிப்பலாதர் :—எப்படி ஸமுத்திரத்திலிருந்து உற்பத்தியான இந்த நதிகள் பெருகிக்கொண்டு மறுபடியும் ஸமுத்திரத்தையடைந்து பெயர், ரூபம் இல்லாமல் கலந்து ஸமுத்திரமென்றே சொல்லப்படுகிறதோ, அப்படியே புருஷனிடத்திலே நின்றும் உண்டான இந்த பதினறு கலைகளும் மறுபடியும் புருஷனையே அடைந்து அதன் அதன் நாமரூபங்கள் நீங்கி பிறகு புருஷன் என்றே சொல்லப்படுகின்றன.

ஸுமந்து :— நண்பரே! ரொம்ப அழகான திருஷ்டாந்தம். வத்ஸர்களே, முதலில் எல்லாம் ஸமுத்திரம், பிறகு கதிரவன் காய்வதால் மேகமாக மாறுகின்றன. பின் மழையாகப் பெய்து கங்கை, யமுனை,

நர்மதை, காவேரி, கோதாவரி என்ற பல பெயர்களுள்ள நதிகளாக ஓடுகின்றன. கடைசியில் ஸமுத்திரத்தையே அடைந்து, அதனுள்ளே மறைந்து நாமரூபங்களை இழந்து பின்னுல் ஸமுத்திரமென்றே சொல்லப்படுகின்றன. அங்ஙனமே இங்கும் ஞான ஸ்வரூபியான ஆத்மாவின் 16 கலைகளும் புருஷனிடத்திலேயிருந்து உண்டாகி, புருஷனையே நோக்கிச் சென்று அவனையே அடைந்து உருவமும் பெயரும் ஒழிந்து பின்பு புருஷன் என்றே சொல்லப்படுகின்றன.

ஸுகேசர் :— குருநாதா! தங்கள் உபதேசம் எங்கள் மனதில் நன்ருகப் பதிய இந்த உதாஹரணம் மிகவும் உதவுகிறது.

பிப்பலாதர் :— திமிரரோகியின் கண்களுக்குப் புலப்படும் இரட்டைசந்திரன் எப்படி ரோகம் நீங்கியவுடன் மறைந்து போகிறதோ, அது போல் அவித்யையால் உண்டான கலைகளும் விபின்னமான நாமரூபங்களை விட்டு புருஷனில் லயமடைகின்றன. அவைகள் நாசமடைந்தும் எது நாசமில்லாமலிருக்கிறதோ அதையே பிரம்மவேத்தாக்கள் 'புருஷன்' என்று அழைக்கிருர்கள். அந்தப் புருஷன் அகலனுயும் அதாவது கலைகளொன்றுமில்லாதவனுயும்- அமிருதனுயும்- அதாவது மரணமில்லாதவனுயும் இருக்கிருன். இதற்கு ஓர் சுலோகம் இருக்கிறது.

அசுவகோஷன் :— ஸ்வாமீ, சுலோகத்தை உடனே சொல்லுங்கள். கேட்கக் கேட்கத் தெவிட்டாதது தங்களுடைய உபதேசம்.

பிப்பலாதர் :— ரதத்தின் சக்கரத்திலுள்ள குடத்தில் ஆரக்கால்கள் இருப்பதுபோல் இந்தக் கலைகள் எல்லாம் புருஷனிடத்தில் நிலைத்து நிற்கின்றன. அப்படிப்பட்ட புருஷனை அறியுங்கள். உங்களை மிருத்யு பீடிக்காமல் இருக்கட்டும். தேர்ச் சக்கரத்தின் குடத்தில் பொருத்தப்பட்டிருக்கும் ஆரங்களைப்போல் இந்த 16 கலைகளும்

புருஷனில் பொருத்தப்பட்டிருக்கின்றன. பிராணன், சிரத்தை முதலிய ஷோடச கலைகளும் தங்களுடைய உற்பத்தி, ஸ்திதி, லயம் மூன்றிலும் புருஷனைச் சார்ந்தே இருக்கின்றன. அக்கலைகளின் ஆத்மபூதனாய் அறியப்படவேண்டியவன் பரப்ரஹ்மம் எங்கும் பூர்ண மாயிருப்பதால் அல்லது சரீரமாகிற புரத்தில் வஸிப் பதால் புருஷன் எனப்படுகிறான். ஹே சீடர்களே, நீங்கள் அவனைத் தெரிந்துகொள்ளுங்கள். உங்களுக்கு மரணபயமில்லை. அந்தப் புருஷனை நீங்கள் அறியா விட்டால் நீங்கள் மிருத்யு பயத்தால் துக்கப்பட வேண்டியதுதான். ஆகையால் அந்தக் கஷ்ட நிவர்த்திக்காக இதை உங்களுக்கு உபதேசித்தேன்.

ஸுமந்து :— குழந்தைகளே, நீங்கள் இன்று கிருத கிருத்தியர்களாகிவிட்டீர்கள். அசுவகோஷா ! சுகேசா ! கேள்விக்கு விடை தெரிந்துவிட்டதா ! (அசுவகோஷன் மௌனம் சாதிக்கிறான்).

ஸுகேசர் :— குருநாதரே, நன்றாக விளங்கிவிட்டது. இன்னும் ஏதாவது—

பிப்பலாதர் :— குழந்தைகளே, இந்த பரபிரம்மத்தை இதுவரையில்தான் நான் அறிந்திருக்கிறேன்.

(சிஷ்யர்கள் ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்க்கிறார்கள்)

ஸுமந்து :— நண்பரே, தாங்கள் கூறியதை வத்ஸர்கள் வேறுவிதமாக அர்த்தப் படுத்திக்கொண்டு விட்டார்கள். இன்னும் வேறு யாரிடமாவது சென்று அடியைப்பிடிக்க உத்தரவோ என்று பயப்படுகிறார்கள். தங்கள் அபிப்பிராயத்தை தீர்மானமாக ஐயத்துக்கிட மின்றி கூறிவிடுங்கள்.

பிப்பலாதர் :— நான் பரம ரிஷிகளிடமிருந்து அறிந்தது இவ்வளவே. இதற்குமேல் அறியவேண்டியது ஒன்றுமில்லை. உங்களுக்கு ஒரு சங்கையும் வேண்டாம். இனிமேல் அறியப்படவேண்டியது ஒன்றுமில்லை. இதை

விட உத்கிருஷ்டமானதும் உணரவேண்டியதும் இல்லவே இல்லை.

ஓம் தத்ஸத்.

சிஷ்யர்கள் எல்லோரும் :—(எழுந்து மகரிஷிகளைப் பூஜித்து வணங்கிவிட்டு) 'எங்களை அவித்யையினின்றும் தாண்டுவித்து மோக்ஷமாகிற கரையில் சேர்ப்பித்த நீங்களே எங்களுக்குப்பிதா ' உங்களுக்கு மறுபடியும் மறுபடியும் வணக்கம் செலுத்துகிறோம்.

பிப்பலாதரும் ஸுமந்துவும் :— (எழுந்து நின்று) சீடர்களே ! நாம் எல்லோரும் சேர்ந்து மகோபகாரிகளான பிரம்மரிஷிகளுக்கு வந்தனம் செய்வோம்

नमः परमऋषिभ्यो नमः परमऋषिभ्यः ।

(நம: பரமரிஷிப்யோ நம: பரமரிஷிப்ய:)

'பரம ரிஷிகளுக்கு நமஸ்காரம், பரம ரிஷிகளுக்கு நமஸ்காரம். (எல்லோரும் சேர்ந்து பாடுகின்றனர்)

ओं भद्रं कर्णेभिः शृणुयाम देवाः । भद्रं पश्येमाक्षभिर्यजत्राः । स्थिरैरङ्गैस्तुष्टुवाꣳसस्तनूभिः । व्यशेम देवहितं यदायुः । स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः । स्वस्ति नः पूषा विश्ववेदाः । स्वस्ति नस्तार्क्ष्यो अरिष्टनेमिः । स्वस्ति नो बृहस्पतिर्दधातु ॥

ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

ஓம் பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா: 1 பத்ரம் பச்யேமாக்ஷபிர் யஜத்ரா: 1 ஸ்த்திரைரங்கைஸ் துஷ்டுவாம்ஸஸ் தனுபி: 1 வ்யசேம தேவஹிதம் யதாயு: 1 ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்தச்ரவா: 1 ஸ்வஸ்தி ந: பூஷா விச்வவேதா: 1 ஸ்வஸ்தி நஸ் தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி: 1 ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது ॥

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

(திரை விழுகிறது)

காட்சி 3

(திரை விலக)

[பிப்பலாதர் ஆச்ரமம் தெரிகிறது. கதவு மூடியிருக்கிறது. வெளியிலிருந்து ஸுகேசர் ஆச்ரமத்தை நோக்கி வருகிறார்.]

ஸுகேசர் :— வாழ்க்கையில் பெரிய அதிசயம் நடந்திருக்கிறது. இந்திரஜாலம்போல் அல்லவா நிகழ்ச்சிகள் நடக்கின்றன. எல்லாம் விசித்ரம். மஹரிஷி ஸுமந்து விபரமாகச் சொன்னபின்தான் அசுவகோஷனும் ஹிரண்யநாபனும் ஒருவர் என்ற தீர்மானத்திற்கு வந்திருக்கிறேன். (நடந்துகொண்டே) என்றால் நம்பவே முடியவில்லை. நான் முதலில் முகச்சாயலைக் கண்டு ஸந்தேஹப்பட்டது முடிவில் ஸரியாய்விட்டது. எல்லாம் எமையாளும் ஈசன் செயல். குருகுலவாஸம் முடிந்துவிட்டது அவப்ருதஸ்நானமும் இன்று செய்தாகிவிட்டது. ஆசார்யரிடம் விடைபெற்றுக்கொண்டு ஊருக்குக் கிளம்பவேண்டியதுதான் பாக்கி. அதற்கு முன் ஹிரண்யநாபனையும் பார்க்கவேண்டும். உள்ளே இருக்கிறான பார்ப்போம்!

(ஆச்ரமத்தின் கதவைத் திறந்துகொண்டு அசுவகோஷன் ஓடிவந்து ஸுகேசரின் காலில் விழுந்து வணங்குகிறான்.)

ஸுகேசர் :— அப்பனே அசுவ—ஹிரண்யநாபா! எழுந்திரு! (அணைத்துத்தூக்குகிறார்.)

ஹிரண்யநாபன் :— (எழுந்துகொண்டே) ரிஷிகுமாரரே! என்னை மன்னித்தேன் என்று ஒருதடவை சொல்லும். அந்த அமுதமொழியைக் கேட்டாலன்றி அடியேன் உள்ளம் அமைதியுறாது.

ஸுகேசர் :— நண்பா! நீ தவறுதல் ஒன்றும் செய்யவில்லையே, மன்னிப்பதற்கு! யார் யாரை மன்னிக்க? எல்லோரும் தப்பு செய்பவர்களே. குற்றமில்லாத குணக்கடல் குருநாதர் எல்லோரையும் மன்னித்து ஆசீர்வதிப்பார்.

ஹிரண்யநாபன் :— பகவான் பிப்பலாதரைப் பணிந்து மன்னிப்பும் மங்களாசாஸனமும் பெற்றுக்கொண்டு விட்டேன். நான் நடத்திய வஞ்சக நாடகத்திற்கு தாங்களும் என்னைக் கட்டாயம் மன்னிக்கத்தான் வேண்டும். இல்லாவிடில் தங்கள் காலை விடமாட்டேன். (மறுபடியும் காலில் விழ எத்தனிக்கிறான். ஸுகேசர் தடுத்து ''மன்னித்தேன்'' என்று சொல்கிறார். ஸுமந்துவும் மற்ற ஐந்து ரிஷிகுமாரர்களும் பிரவேசிக்கிறார்கள்.)

ஸுமந்து :— பார்த்தீர்களா! குழந்தைகளே, பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? ஹிரண்ய நாபனும், ஸுகேசனும் அளவளாவிக்கொண்டு இருப்பதைக் கவனித்தீர்களா?

கபந்தீ :— ஆம்! ஸ்வாமீ, கவனித்தேன் ஆருயிர் தோழர்களல்லவா!

கௌஸல்யர் :— அதுவும் இளமையிலிருந்தே இணை பிரியாத நண்பர்களல்லவா!

ஸத்யகாமர் :— அப்படியிருந்தும் ஸுகேசர் ராஜ குமாரனை அடையாளம் கண்டுகொள்ளாதது ஆச்சரியம் தான்.

ஸௌர்யாயணீ :— அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஹிரண்யநாபனின் நடிப்புத்திறமையைக் காட்டுகிறது அவ்வளவுதான்.

பார்க்கவர் :— ஒரு வருஷ காலத்திற்குமேல் நம் எல்லோரையும் ஏமாற்றிவிட்டானே. ஹிரண்யநாபன் சிறந்த நடிகன்தான்.

ஸுமந்து :— (சிரித்துக்கொண்டே) இந்த உலகமே நாடகமேடைதானே! நாம் எல்லோரும் நடிப்பவர்களே, உங்கள் சார்பாக ஹிரண்யநாபனுக்கு 'நடிகர் திலகம்' என்ற பட்டம் கொடுப்போமா!

கபந்தீ:— 'நாடககேஸரீ" என்ற பட்டம் பொருந்தும்.

ஸத்யகாமர் :— பிருத பிரதானம் பண்ணும் பணியை ஸுகேசருக்கே அளித்துவிடுவோம்.

(எல்லோரும் அருகில் நெருங்கி வந்து உரையாடுகின்றனர். ஹிரண்யநாபன் மற்றவர்களின் காலிலும் விழுந்து வணங்கி மன்னிப்புக் கோருகிருன்.)

ஸுமந்து :— ராஜபுத்திரா! உன்பேரில் ஒரு குற்றமும் இல்லை. அறிவு தேட முயன்றது குற்றமாகாதே! ஞானம்பெற முயற்சித்ததில் உன் தீவிரத்வத்தக்கண்டு நாங்கள் எல்லோரும் உன்னை மெச்சுகிருேம்.

(ஆசிரமத்துக்குள்ளேயிருந்து பகவான் பிப்பலாதரும் மற்ற சிஷ்யர்களும் வருகிருர்கள். ஒரு சீடன் தர்ப்பாஸனங்களைப் பரப்ப பிப்பலாதரும் ஸுமந்துவும் உட்காருகிருர்கள்.)

ஸுமந்து :— நண்பரே, குழந்தைகளின் குருகுலவாஸம் முடிந்துவிட்டதல்லவா. அவர்கள் விடைபெற்றுக்கொள்ளக் காத்திருக்கிருர்கள்.

பிப்பலாதர் :— வத்ஸர்களே, உங்கள் எல்லோருக்கும் மங்களமுண்டாகட்டும். நீங்கள் வாழ்க்கையில் ஒரு முக்கியமான திருப்பத்தில் இப்போது நிற்கிறீர்கள். உண்மையே பேசவேண்டும். தரும வழியிலேயே நடக்க வேண்டும். வேதம் ஓதுவதை விட்டுவிடாதீர்கள். இவைகளிலிருந்து மறந்தும் நழுவுதல் கூடாது. ஒவ்வொருவராக வந்து விடைபெற்றுக்கொள்ளுங்கள்.

ஸுகேசர் :— அவித்யையைத் தாண்டுவித்து அமர வாழ்வு தந்த அண்ணலே, அஞ்ஜலி செய்கிறேன். இதோ என் அன்புக் காணிக்கை. (குருதக்ஷிணையைப் பாதங்களில் ஸமாப்பித்து வணங்குகிருன்.)

கபந்தீ :— குருநாதரே! அந்தகாரத்தை விலக்கி ஞானஸூர்யனைக் காட்டித்தந்த கருணாமூர்த்தியே, வணங்குகிறேன். (தக்ஷிணை வைத்து நமஸ்காரம் செய்கிருன்.)

கௌஸல்யர் :— ஜன்மம், ஜரை, மரணம், ரோகம், துக்கம் என்ற முதலைகளால் பீடிக்கப்படாமல்

காப்பாற்றி ஸம்ஸாரஸாகரத்தைத் தாண்டுவித்த தயா நிதியே! தலையால் வந்தனம் செய்கிறேன். (காணிக்கை ஸமர்ப்பித்து அஞ்ஜலி செய்கிறான்.)

பார்க்கவர் :— வித்யார்த்திகளை வித்யை என்ற ஓடத்தில் ஏற்றி மோக்ஷமாகிற கரைசேர்த்த வள்ளலே, வணக்கம். (காணிக்கை வைத்து வணங்குகிறான்.)

ஸௌர்யாயணீ :— தாங்கள் எங்களுக்குப் பிதா. ஜன்மத்தைத் தரும் பிதாவைவிடச் சிறந்தவர். மிகவும் பணிவுடன் நமஸ்காரம் செய்கிறேன். (தக்ஷிணை ஸமர்ப்பித்து வந்தனம் பண்ணுகிறான்.)

ஸத்யகாமர் :— தங்கள் சரணாரவிந்தங்களில் புஷ்பங்களை அர்ச்சிக்கிறேன். அழியும் சரீரத்தைத் தந்த ஜனன பிதாவே லோகபூஜ்யர். தாங்களோ நித்யமான மரணமில்லாத அஜரமான பயமில்லாத ப்ரஹ்ம சரீரத்தை அருளியவர்கள் அல்லவா! ஆகையால் பிதாவைவிட பதின்மடங்கு சிறந்த பகவானே, அஞ்ஜலி செய்கிறேன். (காணிக்கை வைத்து நமஸ்காரம்செய்கிறான்.)

ஹிரண்யநாபன் :— கண் படைத்த பயனும், காது கிடைத்த பயனும் இன்றே அடைந்தோம். காலத்தை வென்றோம். குற்றங்குறைகளை க்ஷமித்து ஆசீர்வதியுங்கள். ஐயனே வணக்கம். (தக்ஷிணை ஸமர்ப்பித்து வந்தனம் செய்கிறான். பிறகு எல்லோரும் சேர்ந்து ஸுமந்து மஹரிஷியையும் மற்றும் பெரியோர்களையும் வணங்குகிறார்கள்.)

பிப்பலாதர் :— குழந்தைகளே! உங்களுக்கு ஒரு நற்செய்தி முதலில் சொல்லுகிறேன். கோசல தேசத்துக்கு முன்னமேயே உங்கள் பயணத்தைத் தெரியப் படுததிவிட்டேன். இன்னும் சிறிது நேரத்தில் ரதங்கள் வந்துவிடும். நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பரத்வாஜ ஆசிரமத்திற்குச் சென்று அவரையும் வணங்கி ஆசி பெற்றுக்கொண்டு தம் தம் ஊர்களுக்குச் செல்லுங்கள். யாவருக்கும் மங்களமுண்டாகட்டும். போய் வாருங்கள்.

சீடர்கள் :— அப்படியே செய்கிறோம். (பிப்பலாதரும் ஸுமந்துவும் உள்ளே போகிறார்கள். ரதங்கள் வந்து நிற்கின்றன. தேரோட்டி ஓடி வந்து ஹிரண்யநாபனை வணங்குகிறான். ஹிரண்யநாபனும் தன்னுடைய வேஷத்தைக் களைந்து ராஜ உடையைத் தரித்துக்கொள்ளுகிறான்).

ஸுகேசர் :— நண்பர்களே, குருவின் கட்டளைப்படி எல்லோரும் பிரயாகை செல்வோம்.

ஹிரண்யநாபன் :— ரிஷி குமாரர்களே, ரதங்களில் ஏறிக்கொள்ளுங்கள்.

கபந்தீ :—நடை மிச்சப்பட்டது. போகும் வழியில் ராமாயணமும் கேட்கலாம்.

கௌஸல்யர் :—எனக்கு வீடு வரைக்கும் போகலாம்.

ஹிரண்யநாபன் :—எல்லோருக்குமே அவரவர் ஆசிரமத்துக்குப்போக ஏற்பாடு செய்கிறேன். வேண்டிய ரதங்கள் வந்திருக்கின்றன.

ஸத்யகாமர் :—ரொம்ப சந்தோஷம்.

(ஆசிரமப் பெண்டிர் வந்து ஆரத்தி சுற்றுகின்றார்கள். சுகேசர் முதலியோர் ரதங்களில் ஏறிக்கொள்ள, அவைகள் மெதுவாக நகருகின்றன. ஆசிரமத்திற்குள்ளிருந்து பின்வரும் கீதம் கேட்கிறது.)

ओं पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே ।
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே ॥

(திரை விழுகிறது)

பிரச்னோபநிஷத் நாடகம் முற்றும்.

—*—

பிராண ஸ்துதி

एषोऽग्निस्तपत्येष सूर्य एष पर्जन्यो मघवानेष वायुः ।
एष पृथिवी रयिर्देवः सदसच्चामृतं च यत् ॥

अरा इव रथनाभौ प्राणे सर्वं प्रतिष्ठितम् ।
ऋचो यजूꣳषि सामानि यज्ञः क्षत्रं ब्रह्म च ॥

प्रजापतिश्चरसि गर्भे त्वमेव प्रतिजायसे ।
तुभ्यं प्राण प्रजास्त्विमा बलिं हरन्ति यः प्राणैः प्रतितिष्ठसि ॥

देवानामसि वह्नितमः पितृणां प्रथमा स्वधा ।
ऋषीणां चरितं सत्यमथर्वाङ्गिरसामसि ॥

इन्द्रस्त्वं प्राण तेजसा रुद्रोऽसि परिरक्षिता ।
त्वमन्तरिक्षे चरसि सूर्यस्त्वं ज्योतिषां पतिः ॥

यदा त्वमभिवर्षसि अथेमाः प्राण ते प्रजाः ।
आनन्दरूपास्तिष्ठन्ति कामायान्नं भविष्यतीति ॥

व्रात्यस्त्वं प्राणैकर्षिरत्ता विश्वस्य सत्पतिः ।
वयमाद्यस्य दातारः पिता त्वं मातरिश्व नः ॥

या ते तनूर्वाचि प्रतिष्ठिता या श्रोत्रे या च चक्षुषि ।
या च मनसि संतता शिवां तां कुरु मोत्क्रमीः ॥

प्राणस्येदं वशे सर्वं त्रिदिवे यत्प्रतिष्ठितम् ।
मातेव पुत्रान्रक्षस्व श्रीश्च प्रज्ञां च विधेहि न इति ॥

— ப்ரச்னோபநிஷத் 2-5 to 13.

உ

ஶ்ரீ குருப்யோ நம:

உபநிஷத் நாடகமாலா – 5

ஸத்யமேவ ஜயதே

அல்லது

முண்டகோபநிஷத்

(நாடகம்)

நாடக பாத்திரங்கள்

கோபதர்	— பிரம்மரிஷி
அங்கிரஸ்	— பிரம்மரிஷி
சௌனகர்	— மஹா கிருஹஸ்தர்
தேவதத்த ஸோமயாஜி பிரம்மதத்த வாஜபேயி	— சௌனகரின் நண்பர்கள்
யக்ஞஸேனீ	— சௌனகரின் பத்னீ

புரோஹிதர், ருத்விக்குகள், மற்றும் ஆச்ரம வாஸிகள் முதலியோர்.

ஸத்யமேவ ஜயதே

அல்லது

முண்டகோபநிஷத்

(நாடகம்)

முதலாவது அங்கம்

காட்சி I

(திரைக்குள்)

ओं भद्रं कर्णेभिः शृणुयाम देवाः । भद्रं पश्येमाक्षभिर्यजत्राः । स्थिरैरङ्गैस्तुष्टुवाँसस्तनूभिः । व्यशेम देवहितं यदायुः । स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः । स्वस्ति नः पूषा विश्ववेदाः । स्वस्ति नस्तार्क्ष्यो अरिष्टनेमिः । स्वस्ति नो बृहस्पतिर्दधातु ॥

ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

ஓம் பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா: I பத்ரம் பச்யேமாக்ஷபிர் யஜத்ரா: I ஸ்த்திரைரங்கைஸ் துஷ்டுவாம்ஸஸ் தனூபி: I வ்யசேம தேவஹிதம் யதாயு: I ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்தச்ரவா: I ஸ்வஸ்தி ந: பூஷா விச்வவேதா: I ஸ்வஸ்தி நஸ் தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி: I ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது II

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

என்று சாந்தி பாடம் கேட்கிறது.

(திரை விலக)

[சௌநகர், தன் நண்பர்களுடனும், புரோஹிதருடனும் உட்கார்ந்து ஸம்பாஷணை செய்துகொண்டிருக்கிறார்]

சௌனகர் :— புரோஹிதர் அவர்களே, தாங்கள் சிரமத்தைப் பொருட்படுத்தாமல் செய்த உதவியால் பல யாகங்கள் என்னால் செய்யப்பட்டுவிட்டன. தங்களுக்கு மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

புரோஹிதர் :— நண்பரே, எனக்கு ஒருவிதமான சிரமமும் கிடையாது. தங்களுடைய சிரத்தையினால் தான் எல்லா யாகங்களும் யதோக்தமாக நிறைவேறின.

ஸோமயாஜி :— நண்பர்களே, நானும் எவ்வளவோ இஷ்டிகளும் யாகங்களும் செய்திருக்கிறேன். பார்த்தும் இருக்கிறேன். ஆயினும் நண்பர் சௌனகரைப்போல் மிகுந்த சிரத்தையோடும், விதிவத்தாயும் யக்ஞங்களை வேறு யாரும் நடத்தியதாகத் தெரியவில்லை. 'ந பூதோ ந பவிஷ்யதி' யாகங்கள் செய்வதில் சௌனகருக்கு ஈடு இணையே கிடையாது. அவருக்கு நிகர் அவரேதான்.

வாஜபேயி :— இதில் என்ன ஸந்தேஹம்? இப்படி யாக ஆண்டுதோறும் சிறப்பாக யாகம் செய்வதால் தானே அவருக்கு 'மஹாசாலர்' என்ற பிருதம் கிடைத்திருக்கிறது.

புரோஹிதர் :—ஆம். ஆம்.

प्रत्यब्दं यज्ञकृत् सम्यक् महाशालः प्रकीर्तितः

(ப்ரத்யப்தம் யக்ஞக்ருத் ஸம்யக் மஹாசால: ப்ரகீர்த்தித:)

என்று பெரியோர் கூறுகிறார்கள். அவருக்கு புரோஹிதராக இருந்து யாகங்களை நடத்திவைப்பதைப் பெரும் பாக்கியமாக நான் கருதுகின்றேன்.

சௌனகர் :—நண்பர்களே, அதிகம் புகழ்ந்து பேச வேண்டாம். எல்லாம் தேவர்களின் கிருபையால்தான் நடக்கிறது. (சற்று யோசித்து) எனக்கு நிறைய செல்வம் இருக்கிறது. அன்புள்ள பத்னீ, கிழித்த கோட்டைத் தாண்டாத நற்குணமுடையவள். அனுகுணமான ஸந்தானங்களும் ஏராளம். எல்லா வசதிகளுடனும் போக போக்கியங்களுடனும் நான் வாழ்ந்து வருகின்றேன். நல்ல நண்பர்களின் துணையுமிருக்கின்றது. ஆகையினல் பாபங்களை விலக்கி புண்ய கர்மாக்களையே செய்து வருகின்றேன். அவைகளை—ஸத்கர்மாக்களை ஸம்யக் ஆக-நல்ல விதத்தில் செய்ய நல்ல புரோஹிதரும் இருக்கின்ருர். இப்படி எல்லாம இருந்த போதிலும் ஏதோ ஒன்று குறையாக-பாக்கியாக-பூர்ண மடைவதில் நிறைவு பெறுவதில்-ஒரு குறை-குறை யென்று சொல்லவும முடியவில்லை. விவரிக்க முடியாத ஒரு உணர்ச்சி ஒரு அதிருப்தி-இது என்ன வாழ்க்கை என்று அடிக்கடி தோன்றுகிறது.

வாஜபேயி :— நண்பரே, உமக்கு ஒரு குறைவும் இல்லை. குறையென்று நினைப்பது பிரமை. மனம் நோகவேண்டாம். அடுத்த யாகத்துக்கு வேண்டிய யத்னங்களைச் செய்வோம்.

ஸோமயாஜி :— அதுதான் ஸரி. சும்மாயிருக்கும் மனது ஏதாவதொன்றை கற்பனை பண்ணிக்கொண்டே இருக்கும். "कर्मण्येव अधिकारस्ते" (கர்மண்யேவ அதிகாரஸ்தே) என்றபடி நாம் எப்போதும் கர்மங்களைச் செய்துகொண்டேயிருக்கவேண்டும். செயல் இல்லாமல் ஒருகணமும் இருக்கமுடியாது.

புரோஹிதர் :— சௌனகரே, நண்பர்கள் கூறுவது ஸாதுவானது. யாகங்களைச் செய்கிருேம். ஸ்வர்க்க பலன் ஸித்தமாகிறது. நல்ல வழிகளில் பொருள் ஈட்டுகிருேம். இஹமும் பரமும் பொருளினல் கிடைக்கிறது. உமக்குப் பொருள் யதேஷ்டமாக இருக்கிறது.

வேதங்களில் விதிக்கப்பட்ட கர்மாக்களை வழுவில்லாமல் செய்துவருகிறோம். பலன் கட்டாயம் உண்டு. ஒன்றிற்கும் அஞ்சவேண்டாம். கவலையை விடும். அடுத்த யாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வோம்.

வாஜபேயி :— ஆமாம். நண்பரே, ஒரு இடத்தில் யாகம் செய்து முடித்ததும் அதன் ஸமீபத்திலேயே மற்றொரு யாகம் செய்யவேண்டும். பிறகு அதற்கு ஸமீபத்திலேயே மற்றொரு யாகம் செய்யவேண்டும். இப்படியாக பூமண்டலம் முழுவதும் யாகபூமியாகச் செய்துவிடவேண்டும். யக்ஞவராஹ மூர்த்தியின் அருள் அப்போது கிடைக்கும்.

ஸோமயாஜி :— அதுமட்டுமா! கிழக்கு நுனியாகப் பரப்பின தர்ப்பங்களால் இந்த பூமி முழுவதையும் நிரப்பிவிடவேண்டும்.

புரோஹிதர் :— அப்போது 'ப்ராசீன சௌனகர்' என்று நம் நண்பரை நாம் அழைக்கலாம்.

சௌனகர் :— நண்பர்களே, தாங்கள் கூறுவதும் சரிதான். யாகங்களால் தானே தேவதைகள் திருப்தி அடைகின்றார்கள். அவர்கள் திருப்தி அடைவதால் மழைபொழிகின்றது. நல்ல வளங்களும் உண்டாகி நிலம் செழிக்கின்றது. நாம் அவைகளை அனுபவிக்கின்றோம். அதற்குக் கைம்மாறாக நன்றிக்கடன் செலுத்தத்தானே யக்ஞங்கள் செய்வது. நன்றி மறப்பது நலமல்லவே. உய்வே கிடையாதே. திரும்பவும் யாகம் செய்யவேண்டியதுதான். புரோஹிதர் அவர்களே, அடுத்து என்ன யாகம் செய்யலாம்? நண்பர்களே! உங்கள் ஆலோசனைகளையும் கூறுங்கள். என்னுடைய பத்னியைக் கலந்துகொண்டு தினத்தைத் தீர்மானிப்போம்.

புரோஹிதர் :— அப்படியே செய்வோம். அதோ யாரோ வருகிறார்போல் தெரிகிறதே.

(ஒரு ஆசிரமவாஸி வந்து, 'பிரம்மரிஷி கோபதர் வருகிறார்' என்று சொல்கிறார். உடன் எல்லோரும் எழுந்து அவரை வரவேற்கப் போகிறார்கள். உள்ளேயிருந்து யக்ஞஸேனியும் அர்க்ய பாத்ய ஆசமனீய உபசாரங்களைச் செய்ய ஸாமக்ரிகளை எடுத்துக்கொண்டு உடன் செல்கிறாள். திரும்ப எல்லோரும் வருகிறார்கள். கோபதரை ஒரு உயர்ந்த ஆஸனத்தில் உட்காரவைத்து அவருடைய அனுமதிபெற்று எல்லோரும் உட்காருகிறார்கள். ஸம்பாஷணை தொடங்குகிறது.)

சௌனகர் :— ஸ்வாமீ! தங்கள் வரவால் நாங்கள் எல்லாரும் கிருதார்த்தர்களானோம். மிகப்பெரிய பிரம்மரிஷியாகிய தாங்கள் இந்த கிருஹஸ்தனுடைய குடிலுக்கு எழுந்தருளியது எங்கள் முன்னோர்கள் செய்த பாக்கியமேயாகும். எங்களுடைய சிறிய வந்தனோபசாரங்களை மனமுவந்து பெரிதாக ஏற்றுக்கொண்டதற்கு நன்றி.

புரோஹிதர் :— பிரம்மரிஷியே, தங்கள் வரவு நல்வரவாகுக. சரியான சமயத்தில் விஜயம் செய்திருக்கிறீர்கள். மஹாசாலர் சௌனகர் ஒரு யாகம் செய்ய வேண்டுமென்று சொன்னார். பலவிதமான யக்ஞங்கள் பண்ணியாய்விட்டன. இப்போது என்ன யாகம் பண்ணலாம் என்று ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். இச்சமயம் தாங்களும் வந்திருக்கிறீர்கள். ரொம்ப சுப சகுனம்.

வாஜபேயி :— மஹரிஷியே, தேடப்போன மூலிகை காலடியில் அகப்பட்டதுபோல் தங்கள் வருகை எங்களுக்கு மிகவும் ஸாதகமாக அமைந்திருக்கிறது. நல்ல ஸமயத்தில்—நல்ல தருணத்தில் தங்கள் நல்வரவு. எந்தவிதமான யக்ஞம் செய்யவேண்டுமென்று தாங்களே உத்தரவு கொடுக்கவேண்டும்.

சௌனகர் :— ஸ்வாமீ, கருணைகூர்ந்து தாங்கள் திருவாய்மலர்ந்தருள வேண்டுகிறேன். நான் இப்போது செய்யவேண்டியது என்ன?

ஸோமயாஜி :— நண்பரே ! யக்ஞங்கள் செய்ய வேண்டுமென்றுதான் தீர்மானமாய்விட்டதே. என்ன க்ரது ? எப்படிச் செய்யவேண்டும் ? இவைகளைப் பற்றித்தானே மஹரிஷியிடம் கேட்கவேண்டும் ?

கோபதர் :— ஸௌம்யர்களே, சிறிது நேரம் சௌனகரைப் பேசவிடுங்கள். அவர் முகத்தைப் பார்த்தால் மனம் குழப்பமடைந்திருப்பதாகத் தெரிகிறது அவருடைய ஸந்தேஹங்களை அவரே கேட்கட்டும். மற்றவர்கள் குறுக்கே பேசவேண்டாம். என்ன அப்படித்தானே ?

எல்லோரும் :— ஸரி ஸரி, அப்படியே.

கோபதர் :— சௌனகரே ! மஹாசாலரே ! கிழக்கு நுனியாகவே தர்ப்பைகளைப் பரப்பி பூமண்டலமுழுவதும் யக்ஞசாலையாக்கிய பெரும்புகழ் படைத்தவரே, தங்கள் இஷ்டப்படி கேளுங்கள். தெரிந்தவரையில் விடை கூறுகின்றேன்.

சௌனகர் :— ஸ்வாமீ, நமஸ்காரம். தன்யனுனேன். பல யாகங்களைச் செய்தும் என் மனது சாந்தியடையவில்லை. ஏதோ குறை—ஒரு அருப்தி. எல்லாவிதமான போகபோக்யங்கள், ஸௌபாக்யங்கள் இருந்தும் இன்னது என்று கூறமுடியாத — விவரிக்கமுடியாத — ஒரு அபூர்ணதை என் மனதை வாட்டுகிறது. யாகங்களைச் செவ்வையாகச் செய்யும்போது கொஞ்சம் நிம்மதி கிடைக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. ஆயினும் அது க்ஷணிகமே.

புரோஹிதர் :— நண்பரே, இது வெறும் பிரமை. தங்களைப்போல் சிரத்தையுடன் யாகம் செய்பவர்களே கிடையாது. யாரோ பொருமைக்காரர்கள் செய்த தீவினையோ அல்லது ஏவல் சூனியமோ அதனுல்தான் தங்கள் உள்ளம் இவ்வாறு குழப்பம் அடைந்திருக்கின்றது.

கோபதர் :— (கோபமாக) புரோஹிதரே! கொஞ்ச நேரம் மௌனமாக இருக்கும்படிக்கும் சௌனகரைப் பேசவிடும்படிக்கும் சொன்னேனல்லவா! அந்த வேண்டுதல் உங்களையும் சேர்த்துத்தான். சிறிது நேரம் அமைதியாக இருங்கள். சௌனகர் மனம்போல் உள்ளத்தைத் திறந்து அவருடைய அபிப்ராயங்களைக் கூறட்டும். அதற்குப்பின் நீங்களும் பேசலாம். மஹா கிருஹஸ்தரே, தைரியமாக விருப்பு வெறுப்பு இன்றி பயமில்லாமல் தோன்றிய ஸந்தேகங்களை வினவலாம்.

சௌனகர் :—ஸ்வாமீ! என் சந்தேகங்களை நான் முன்னமே கூறிவிட்டேன். குறைவற்ற செல்வத்துடனும் நிகரற்ற சௌக்கியத்துடனும் வாழ்ந்து வருகின்ற சமயத்தும் ஏதோ ஒரு குறைவு—தேவை—இருப்பதாகத் தோன்றுகிறது. இது உண்மையா! வீண் பிரமையா! உண்மையானுல் குறையை நீக்குவது எப்படி? என்ன செய்யவேண்டும்? கருணை கூர்ந்து உபதேசம் செய்ய வேண்டுகிறேன்.

கோபதர் :—சௌனகரே, இந்தக்குறை உண்மை யானதுதான். பலவாருக யக்ஞங்களை நடத்துகின்றீர். அதனுல் விசேஷமான நன்மை ஒன்றும் அடையப் போவதில்லை. உண்மையான ஞானத்தினுலேயே துக்கம் நிவர்த்தியாகும். சுகம் பெற முடியும். கேவலம் கர்மத்தினுல் சுகம்பெற முடியாது.

புரோஹிதர் :— ஸபையோர்களே, வேத வசனங்களுக்கு விரோதமாகக் கர்மத்திற்கு ஸுகம் தரும் பலன் இல்லையென்று சொல்வதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்.

ஸோமயாஜி-வாஜபேயி :— நாங்களும் வன்மையாகக் கண்டிக்கிருேம்.

சௌனகர் :— ஸ்வாமீ, தாங்கள் தொடர்ந்து கூறுங்கள். நண்பர்கள் கண்டிப்பதற்காக நிறுத்த வேண்டாம்,

கோபதர் :— நண்பரே! நான் நிறுத்தப்போவதில்லை. உம்முடைய மனம் கர்மங்களில் கட்டுப்பட்டிருந்தது. இப்போதுதான் நல்ல தருணம். விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல திருப்பம்.

சௌனகர் :— ஆம். தாங்கள் சொல்வதுபோல் நான் கர்மங்களில் மூழ்கிக்கிடந்தேன். எந்த நன்மையும் நான் அறியேன். கர்மங்களிலிருந்து மீள நான் என்ன செய்யவேண்டும்? தத்வங்களை உபதேசிப்பீர். பிரவ்ருத்தி தர்மங்கள் தொடர மேன்மேலும் ஸம்ஸாரம் வளர்கிறது. நான் என்ன செய்யவேண்டும்?

கோபதர் :— ஸ்வர்க்கலோக ஸுகத்தை விரும்பி இதுவரை நீர் செய்துள்ள ஏராளமான யாகங்களில் பல ஆயிரக்கணக்கான பசுக்களை வதைத்திருக்கிறீர் அல்லவா? அவைகள் நீர் செய்த ஹிம்ஸையை எண்ணி பழிவாங்குவதற்காக இவன் எப்போது மரணமடைவான் என்று எதிர்பார்க்கின்றன. இறந்தவுடன் அவைகள் கோபத்துடன் இரும்புபோன்ற கொம்புகளால் உம்மைக் குத்தி ஹிம்ஸை செய்யப்போகின்றன.

புரோஹிதர் :— (இரு செவிகளையும் பொத்திக்கொண்டு) இங்கே வேத நிந்தை, யாக நிந்தை, செய்யப்படுகின்றது. நான் இந்த ஸபையைவிட்டு வெளியேறுகின்றேன். (போகிறார் "நாங்களும் போகிறோம்" என்று சொல்லி ஸோமயாஜியும் வாஜபேயியும் போகிறார்கள்)

சௌனகர் :—ஸ்வாமீ! என் நண்பர்கள் போய்விட்டார்களே, என்ன செய்வது?

கோபதர் :—கேட்க இஷ்டமில்லாவிட்டால் போகிறார்கள். நாம் என்ன செய்யமுடியும்? நீர் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். மேலால் யாகங்கள் ஒன்றும் செய்யவேண்டாம். ஆத்மஸ்வரூபத்தை உணர முயற்சி செய்யவேண்டும்.

சௌனகர் :— ஸ்வாமீ, அப்படியே செய்கிறேன். யக்ஞங்களைச் செய்வதிலிருந்து விலகிக்கொள்கிறேன். ஆத்மஸ்வரூபத்தை உணர என்ன செய்யவேண்டும்?

கோபதர் :— யாகங்கள் செய்வதை விட்டுவிட்டு பிரம்ம ஞானம் அடைய முயலவேண்டும். மஹரிஷிகளைச் சென்று சரணடைய வேண்டும். அவர்கள் உபதேசிப்பார்கள்.

சௌனகர் :— ஸ்வாமீ! தாங்களே உபதேசிக்கலாகாதா? கையில் வெண்ணெய் இருக்கும்போது நெய்க்கு அலைவாருமுண்டோ? தாங்களே கிருபை செய்யவேண்டும்.

கோபதர் :— சௌனகரே, உமக்கு உபதேசிக்கும் அளவுக்கு கற்றவனாக-பக்குவமுடையவனாக-நான் இல்லை. அதற்குத் தகுதி வாய்ந்தவர் பிரம்மரிஷி அங்கிரஸ் ஒருவர்தான். ரிஷீகேசத்திலிருக்கும் அவருடைய ஆசிரமத்துக்கு வாரும். உம்முடைய குறை நீங்கிவிடும். (யக்ஞஸேனி வந்து வைசுவதேவம் செய்ய அழைக்கின்றாள். எல்லோரும் எழுந்து போகின்றனர்.)

(திரை விழுகிறது)

காட்சி 2

(திரை விலக)

[கோபதரும் சௌனகரும் வீற்றிருக்கின்றனர். அருகில் யக்ஞஸேனி பணிவுடன் நிற்கின்றாள். உரையாடல் நடக்கிறது.]

சௌனகர் :— ஸ்வாமீ! என்னுடன் ரிஷீகேசத்துக்கு பத்னியும் வர ஆசைப்படுகிறாள். தங்கள் அனுமதியுடன் அழைத்துவரலாமென்றிருக்கிறேன்.

கோபதர் :— மஹாசாலரே! யாகம் செய்த தம்பதிகள் பிரிந்திருப்பது சாஸ்திர ஸம்மதமில்லை. ஆயினும்

ப்ரஹ்மோபதேசம் பெறப்போகுமிடத்திற்கு பத்னியும் உடன் வருவது சரியாகத் தோன்றவில்லை. ஆகையால்-

யக்ஞஸேனீ :— ஸ்வாமீ, நான் வரலாகாதென்று கூறிவிடாதீர்கள். எட்டாவது வயதில் விவாஹமானதிலிருந்து நான் என் பதியைவிட்டுப் பிரிந்ததில்லை. கூட வருவதற்கு அனுமதி தாருங்கள்.

கோபதர் :— குழந்தாய், யக்ஞஸேனீ! உன் பதி பக்தியும் பதிவ்ரதா தர்மமும் சாலச்சிறந்தவை. எல்லோராலும் போற்றிப் பின்பற்றத் தக்கவை. ஆயினும் இந்த ஸந்தர்ப்பத்தில் பிடிவாதம் வேண்டாம்.

சௌனகர் :— பிரம்மரிஷியே, என் பத்னிக்கு பிரம்ம ஞானம் பெறுவதில் விருப்பமிருக்கிறது. அதற்குத் தடையொன்றுமில்லையே.

கோபதர் :— ஒருவிதமான தடையுமில்லை. ஸ்திரீகளுக்கும் பூர்ண அதிகாரமுண்டு. கார்க்கி, மைத்ரேயி முதலியவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டதில்லையா!

யக்ஞஸேனி :— ஸ்வாமீ! அங்ஙனமாயின் நானும் என் பதியுடன் கூடவந்து உபதேசம் பெறுகிறேன். நானும் வரலாமல்லவா.

கோபதர் :— தம்பதிகளே! உங்களுடைய பரஸ்பர அன்பையும் கடமையுணர்ச்சியையும் கண்ட எனக்கும் இல்லறத்தில் விருப்பம் உண்டாகிறது. அதிருக்கட்டும் ஸ்திரீகளுக்கு பிரம்மஞானம்பெற உரிமையுண்டு என்பதற்கும், கணவனுடன் கூட வரவேண்டும் என்பதற்கும் அஜகஜாந்தர வித்தியாசமுண்டு.

யக்ஞஸேனீ :—ஸ்வாமீ! வித்யாசம் விளங்கவில்லையே விபரமாகச் சொல்லுங்கள்.

கோபதர் :—பெண்கள் பிரம்மஞானம் பெற வேறொரு குருவைச்சென்று அடையவேண்டாம். தனது பதியிட

மிருந்தே பெற்றுக்கொள்ளலாம். இப்போது என்னுடன் சௌனகர் மட்டும் வரட்டும் அவர் உபதேசம் பெற்றுத் திரும்பிவந்து தன் பத்னிக்கு உபதேசம் செய்ய வேண்டும். இதுவே சரியான முறை. இல்லறத்திற்கு இலட்சியபூதர்களே! நன்ருக விளக்கிவிட்டதாக எண்ணுகின்றேன்.

தம்பதிகளிருவரும் :— ஸ்வாமீ, தங்கள் உத்தரவுப்படி நடக்கிரேும்.

கோபதர் :— சௌனகரே! இனி ப்ரயாணத்துக்கு வேண்டிய யத்னங்கள் செய்யவேண்டும்.

சௌனகர் — ப்ரஹ்மரிஷியே! என்று புறப்பட வேண்டும்?

கோபதர் :— நாளை மறுநாள் நல்ல தினம். அபிஜித் முஹூர்த்தத்தில் புறப்படலாம்.

சௌனகர் :— அப்படியே செய்வோம். அதற்குமுன் நான் செய்யவேண்டிய காரியங்களுக்கு ஆக்ஞையிட வேண்டுகிறேன்.

கோபதர் :— அதிமாக ஒன்றுமில்லை. ஏகரிஷி என்ற அக்னி ஹோமம் செய்யவேண்டும். பிறகு விதிப்படி சிரோ விரதம் அனுஷ்டிக்கவேண்டும். இந்த ஹோமத்தையும் விரதத்தையும் நாளை செய்து விடலாம். மறுநாள் புறப்படவும்செய்யலாம்.

சௌனகர் ;— எல்லா ஏற்பாடுகளும் செய்து விடுகிறேன். பிரியே யக்ஞஸேனீ! நாளைக்குச் செய்ய வேண்டிய ஹோமம், விரதங்களுக்கு ஆசிரம சீடர்களை வைத்துக்கொண்டு எல்லா ஏற்பாடுகளும் செய்வாயாக. (யக்ஞஸேனீ போகிருள். ஸோமயாஜி ஓடி வந்து கோபதர் காலில் விழுந்து நமஸ்காரம் செய்கின்ருர்.)

ஸோமயாஜி :— பிரம்மரிஷியே! நான் செய்த அபசாரங்களை க்ஷமித்து காப்பாற்ற வேண்டும். மன்னித்

தேன் என்று ஒரு வார்த்தையாவது கூறுங்கள் இல்லா விட்டால் என் ஜன்மம் வீணே.

கோபதர் :— நண்பரே, எழுந்திரும், நீர் அபசாரம் ஒன்றும் செய்யவில்லையே. நான் மன்னிப்பதற்குத் தாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லையே! புரியும்படி யாகச் சொல்லுங்கள்.

ஸோமயாஜி :— பிரம்மரிஷியே! தங்களுடைய பெருந் தன்மையான குணத்தினுல் குற்றங்கள் தெரியவில்லை. அன்று நான் கோஷமிட்டுக்கொண்டு வெளியேறியது பெரிய தவறல்லவா! அது பெரிய பாபமல்லவா! என் தவறை நான் உணர்ந்து வருந்துகின்றேன். அனுக் கிரகம் செய்யவேண்டும்.

சௌனகர் :—ஸ்வாமீ! என் நண்பர் ஸோமயாஜி எப்போதுமே உணர்ச்சிவசப்பட்டவர். திடீரென்று ஏதையாவது சொல்லிவிடுவார், செய்துவிடுவார். பிறகு தவறை உணர்ந்து வருந்துவார்.

கோபதர் :— ஸோமயாஜியே, நீர் தவறு ஒன்றும் செய்யவில்லை. பிடிக்காத விரும்பாத முரணுன விஷயங் கள் பேசப்படும் சபையிலிருந்து வெளியேற எல்லாருக் கும் உரிமையுண்டு. தங்களுக்கு அன்று சரியாகப் பட்டதை தைரியமாகச் செய்தீர்கள். இதில் குற்றமோ, பாபமோ ஒன்றுமில்லை. உபசாரத்துக்கு வேண்டுமானுல் நான் மன்னித்தேன் என்று சொல்லவேண்டும். அவ்வளவுதான்.

ஸோமயாஜி :—தாங்கள் மன்னித்தேன் என்று கூறினுல்தான் என் மனது சாந்தியடையும்.

கோபதர் :— உம்மை மனப்பூர்வமாக மன்னித்து விட்டேன். பக்கத்தில் உட்காரும். மனம் சாந்தியடை வதற்கு பிரம்மஞானம் பெறவேண்டும். நான் மன்னிப் பதினுல் மட்டும் பலன் ஒன்றுமில்லை. மந்திரத்தினுல் மாங்காய் விழுவதில்லை.

சௌனகர் :— நண்பரே, நான் ப்ரஹ்மரிஷியுடன் ரிஷீகேசம் போகிறேன், ப்ரஹ்மரிஷி அங்கிரஸ்ஸிடமிருந்து உபதேசம் பெற. அதற்கு வேண்டிய கார்யங்கள் நாளையதினம் நடக்கப்போகின்றன.

ஸோமயாஜி :— நானும் வருகிறேன். என்னையும் கூட அழைத்துக்கொண்டு போங்கள். நாளை நடக்க வேண்டிய கிரியைகளை நானும் செய்வதற்கு அனுமதி அளியுங்கள்.

கோபதர் :— ரொம்ப ஸந்தோஷம். ப்ரஹ்மரிஷி அங்கிரஸ்ஸின் ஆச்ரம வாயில்கள் எப்போதும் எல்லோருக்கும் திறந்தேயிருக்கும். உங்களைப்போன்ற கர்மானுஷ்டானமுள்ள சீடர்களையே அவர் வரவேற்கக் காத்துக்கொண்டிருக்கிறார். வேதாத்யயனம் செய்தவர்களுக்கும் உபதேசம் செய்ய எப்போதும் ஸன்னத்தராக இருக்கிறார். ஸோமயாஜியே, தாங்களும் எங்களுடன் வரலாம்.

சௌனகர் :— ஸ்வாமீ, ப்ரஹ்மரிஷி அங்கிரஸ்ஸின் பெருமையைப்பற்றி அறியத் துடிக்கிறது என் உள்ளம். கொஞ்சம் விஸ்தாரமாகவே கூற வேண்டுகிறேன்.

ஸோமயாஜி :— ஸ்வாமீ, தயவுசெய்து திருவாய் மலர்ந்தருளவேண்டும்.

கோபதர் :- கேளுங்கள், கூறுகிறேன். அங்கிரஸ்ஸின் பெருமை என்பது ப்ரஹ்மவித்யையின் பெருமைதான். ப்ரஹ்மவித்யையின் பெருமையை உணர்த்துவதன் மூலம் அங்கிரஸ்ஸின் பெருமையையும் அறிந்து கொள்ளலாம்.

சௌனகர் :— ஸ்வாமீ, அங்ஙனமாயின் ப்ரஹ்மவித்யையின் பெருமையை விரிவாகக் கூற வேண்டுகிறேன்.

கோபதர் :— கவனமாகக் கேளுங்கள்.

ॐ ब्रह्मा देवानां प्रथमः संबभूव
विश्वस्य कर्ता भुवनस्य गोप्ता ।
स ब्रह्मविद्यां सर्वविद्याप्रतिष्ठां
अथर्वाय ज्येष्ठपुत्राय प्राह ॥

ப்ரஹ்மா தேவாநாம் ப்ரதம: ஸம்பபூவ
விச்வஸ்ய கர்த்தா புவநஸ்ய கோப்தா ।
ஸ ப்ரஹ்மவித்யாம் ஸர்வவித்யாப்ரதிஷ்டாம்
அதர்வாய ஜ்யேஷ்டபுத்ராய ப்ராஹ ॥

ஓம்! உலகை படைத்தவர் பிரம்மா. புவனத்தை ரக்ஷிக்கின்றவரும் அவரே. அப்படிப்பட்ட பிரம்மதேவர் எல்லா தேவர்களுக்கும் முன் தோன்றியவர். அவரால் முதலில் உபதேசம் செய்யப்பட்டதே பிரம்மவித்யையாகும். அவர் தன்னுடைய முதல் மானஸபுத்திரனுகிய அதர்வாவுக்கு பிரம்மவித்யையை உபதேசித்தார். எல்லா வித்யைகளுக்கும் ஆதாரமானது பிரம்மவித்யை. எதை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகிறதோ அல்லது எல்லா வித்யைகளிலும் எது ஒன்றே அறியத்தகுந்ததோ அதுவே பிரம்மவித்யை. அதுவே எல்லா வித்யைகளுக்கும் ஆதாரம்.

ஸோமயாஜி:— அதற்கு பிரம்மவித்யை என்று பெயர் வைப்பானேன். ஏதாவது கருத்துக்களுண்டோ?

கோபதர்:—வேத வசனங்கள் பொருள் ஆழம் மிகுந்தவை. கருத்தில்லாத வார்த்தைகளே இதில் இராது. பிரம்மவித்யை என்ற பெயருக்கு இரண்டுவிதமான பொருள் கூறலாம். பிரம்மதேவரால் முதன் முதலில் உபதேசிக்கப்பட்ட வித்யை என்றும், பிரம்மத்தைப் பற்றிய வித்யை என்றும் கூறலாம்.

சௌனகர்:— முதன் முதலில் புத்திரருக்கு உபதேசித்ததிலும் ஏதாவது உள் கருத்து உண்டோ?

கோபதர் :— உண்டு. தன்னுடைய சொத்தையும் வித்யையையும் எல்லாவற்றையும் தன் புத்திரனுக்கே கொடுக்க விரும்புகிறன் ஒரு பிதா. தவிர பிரம்ம வித்யையின் ஸத்தியத் தன்மையை விளக்குவதற்கும் சான்ருக புத்திரனுக்கு உபதேசித்தார் என்றும் கொள்ளலாம். வேருெரு சீடனுக்கு உபதேசிக்கும் வித்யை ச்ரேஷ்டமானதாகவும் உண்மையானதாகவும் இருக்கவேண்டிய நிர்ப்பந்தமில்லை மேலெழுந்தவாரியாக உபதேசித்துவிடலாம். ஆனுல் தன் புத்திரனுக்கு உபதேசிக்கும்போது ஸத்வித்யையைத்தான் உபதேசிப்பார். சிரேஷ்டமானதைத்தான் உபதேசிப்பார். ஸுகம் தருவதைத்தான் உபதேசிப்பார். மங்களத்தையும் க்ஷேமத்தையும் கொடுக்கக்கூடியதைத்தான் பிள்ளைக்குச் சொல்லுவார்.

சௌனகர் :— ஸ்வாமீ, அப்புறம் அந்த சிரேஷ்டமான வித்யையைக் கற்றவர்கள் யாவர்?

ஸோமயாஜி :—ப்ரஹ்மரிஷி அங்கிரஸ் அதை எப்படிப் பெற்ருர்? விபரமாகக் கூறுங்கள்.

கோபதர் :— अथर्वणे यां प्रवदेत ब्रह्मा
अथर्वा तां पुरोवाचाङ्गिरे ब्रह्मविद्याम् ।
स भारद्वाजाय सत्यवहाय प्राह
भारद्वाजोऽङ्गिरसे परावराम् ॥

அதர்வணே யாம் ப்ரவதேத ப்ரஹ்மா
அதர்வா தாம் புரோவாசாங்கிரே ப்ரஹ்மவித்யாம் ।
ஸ பாரத்வாஜாய ஸத்யவஹாய ப்ராஹ
பாரத்வாஜோऽங்கிரஸே பராவராம் ॥

பிரம்மா அதர்வாவுக்கு எதை உபதேசித்தாரோ அந்த பிரம்மவித்யையை அதர்வா முதலில் அங்கிர் என்றவருக்குச் சொன்ஞர். அவர் பரத்வாஜவம்சத்தவரான ஸத்யவஹருக்கு உபதேசித்தார். இப்படி பரம்

பரையாக வந்ததும் பராவித்யை அபராவித்யை எல்லாம் அடங்கியதுமான பிரம்மவித்யையை ஸத்யவஹர் அங்கிரஸ்ஸுக்குச் சொன்னர்.

சௌனகர் :— ஸ்வாமீ ! ரொம்ப சந்தோஷம் இந்த வித்யை பிரம்மாவிடமிருந்து தோன்றி, அதர்வா முதலிய மகரிஷிகளால் போற்றி வளர்க்கப்பட்டு இப்போது அங்கிரஸ்ஸால் அடையப்பட்டுமிருப்பதைத் தெரிந்து மிக்க மகிழ்ச்சி. மேலும் தொடர்ந்து கூறவேண்டும்.

ஸோமயாஜி :—ஸ்வாமி ! பராவித்யை. அபராவித்யை என்ருல் என்ன ?

கோபதர் :— இனிமேல் நான் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை. நீங்கள் போய் அங்கிரஸ்ஸிடம் பிரச்னம் பண்ணினுல் முறைப்படி விவரமாக உபதேசிப்பார். மாத்யான்னிககாலம் வந்துவிட்டது. ஸ்னனத்துக்குப் போவோம். வாருங்கள்.

(திரை விழுகிறது)

காட்சி 3

(திரை விலக)

[ரிஷீகேசத்தில் கங்கைக்கரை மண்டபத்தில் தேவதத்த ஸோமயாஜியும் பிரம்மதத்த வாஜபேயியும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிருர்கள்.]

ஸோமயாஜி :— நண்பரே ! தாங்கள் இங்கு வந்ததும் ரொம்ப நல்லதுதான். நாங்கள் இங்கு வந்திருப்பது எவ்வாறு தெரிந்தது ? அவ்விடத்துச் செய்திகள் என்ன ? இங்கு வருவதற்கு என்ன காரணம் ? விவரமாகக் கூறும்படி வேண்டுகிறேன்.

வாஜபேயி :- தேவதத்தரே ! அன்று நாமெல்லோரும் கோபித்துக்கொண்டு ஸபையை விட்டு வெளியேறிய பின் எனக்கு ஸமாதானமேயில்லை. தனியாக அமர்ந்து

ஆலோசித்தும் மனதில் குழப்பம் அதிகரித்ததே தவிர, தெளிவு பிறக்கவில்லை. தங்களைக் காண விரைந்தேன்; தங்கள் வீட்டில் விசாரித்தேன். வெளியூர் போயிருப்பதாகச் சொன்னார்கள். பின் யக்ஞஸேனீ அம்மையாரிடம் கேட்டு எல்லா விவரங்களும் அறிந்து இங்கு வந்தேன். இதற்கு மத்தியில் புரோஹிதர் வந்து போகவேண்டாமென்று தடுத்தார். எவ்வளவோ நீதி நியாயங்களைச் சொன்னார். கேட்காமல் இங்கு வந்துவிட்டேன்.

ஸோமயாஜீ :— ரொம்ப சந்தோஷம். தங்களுடைய வருகை தெரிந்தால் சௌனகர் மிகவும் மகிழ்ச்சி அடைவார்.

வாஜபேயி :— ஒரே ஊரில் சிறுவயது முதல் நாம் ஒன்றாக வாழ்ந்து வருகிறோம். ஆகையினால் பிரிந்து இருப்பது சிரமம்தானே. இங்கே என்ன உபதேசம் நடக்கிறது? எனக்கும் அருள் பாலிக்க குருதேவரிடம் சொல்லவேண்டும். சௌனகர் மூலமாக சிபாரிசு செய்ய வேண்டும்.

ஸோமயாஜீ :— பிரம்மதத்தரே, நாங்கள் இங்கே வந்தது முதல் இரண்டு மூன்று தினங்கள் இயற்கைக் காக்ஷிகளைக் கண்டுகளித்தோம். நேற்றுத்தான் குருநாதர் பிரம்மரிஷி அங்கிரஸ்ஸை தரிசனம் செய்தோம். முகத்தில் பிரம்ம தேஜஸ் ஜ்வலிக்கின்றது. பார்த்தவுடனேயே ஸந்தேஹங்கள் நிவர்த்தியாகின்றன. இமயத்தின் கம்பீரமும், கங்கையின் தெளிவும், யமுனையின் ஆழமும் நிறைந்த வசனங்களைக் கேட்கக்கேட்க ஆனந்தமாயிருக்கின்றது.

வாஜபேயி :— எனது ஆவலைத் தூண்டிவிட்டீர். விவரமாக விளக்கமாகக் கூறுங்கள், நண்பரே.

ஸோமயாஜி :— நேற்று என்னையும் நண்பர் சௌனகரையும் ப்ரஹ்மரிஷி அங்கிரஸ்ஸிடம், கோபதர் அழைத்துச்சென்றார். விதிவத்தாக விரதங்களை

அனுஷ்டித்துவிட்டு கையில் ஸமித்துக்களை எடுத்துக் கொண்டு குருநாதர் ஸந்நிதிக்குச் சென்று அவரை வணங்கினோம். ஆசீர்வதித்து அன்புடன் அருகில் அமரச்செய்தார்.

வாஜபேயி :— பிறகு என்ன நடந்தது?

ஸோமயாஜி :— शौनको ह वै महाशालोऽङ्गिरसं विधिवदुपसन्नः पप्रच्छ । कस्मिन्नु भगवो विज्ञाते सर्वमिदं विज्ञातं भवतीति ॥

சௌநகோ ஹ வை மஹாசாலோऽங்கிரஸம் விதிவதுபஸந்ந: பப்ரச்ச । கஸ்மின் நு பகவோ விக்ஞாதே ஸர்வமிதம் விக்ஞாதம் பவதீதி ॥

மஹாசாலர் என்று புகழ்பெற்ற நமது நண்பர் சௌனகர் பகவான் அங்கிரஸ்ஸை சிஷ்ய முறைப்படி அணுகி நமஸ்காரங்கள் செய்து 'ஐயனே எதை உணர்ந்தால் இது எல்லாம் உணர்ந்ததாகும்? என்று கேட்டார்.

வாஜபேயி :— இந்தக்கேள்வியின் பொருள் எனக்கு சரியாக விளங்கவில்லையே!

ஸோமயாஜி :—சௌனகர் கேட்டதின் தாத்பர்யம் என்னவென்றால் நாம் இதுவரை வேதங்களை அத்யயனம் செய்து அதில் விதித்திருக்கும் கர்மாக்களை விதிப்படி செய்தோம். மனதிற்கு சாந்தி ஏற்படவில்லை. ஆகையினால் சாந்தி ஏற்பட என்ன செய்யவேண்டும்? எதை அறியவேண்டும்? அதை அறிந்தபின் மற்றொன்றை அறியவேண்டுமென்ற நிலை வரக்கூடாது. ஆகையினால் எந்த ஒன்றை அறிந்தால் மனிதன் ஸர்வக்ஞன் ஆகிறான்?

வாஜபேயி :— கேள்வியைப் பார்த்தால் எல்லாவற்றிற்கும் காரணவஸ்து ஒன்று இருக்கிறது என்ற தீர்மானத்தின்பேரில் கேட்பதுபோல் இருக்கிறது. அது ஸரிதானா? முதல் கேள்வி அப்படி ஒருபொருள்

உண்டா என்றல்லவா இருக்கவேண்டும்? எல்லா வித்யைகளையும் உள்ளடக்கிய வித்யை ஒன்று உண்டா? என்று கேட்டு, அது இருக்கிறது என்று தெரிந்து கொண்டு, அதன்பிறகுதானே இப்படிப் பிரச்னம் செய்யமுடியும்?

ஸோமயாஜி:— ஒருவிதத்தில் தாங்கள் சொல்வது சரிதான். ஆயினும் இந்த பிரச்னத்தில் தவறு ஒன்றுமில்லை. எதை உணர்ந்தால் எல்லாம் உணர்ந்ததாகும் என்ற கேள்வியில் 'எதை' என்ற சொல்லால் குறிப்பிடப்படும் பொருள் இருக்கிறதானல் என்ற அர்த்தம் தொக்கி நிற்கிறது. ஆகவே வினு ஸாதுவானதுதான். தங்கத்தினுல் பல ஆபரணங்கள் செய்கிறோம். பூஷணங்கள் பலவாருக இருந்தாலும் எல்லாம் தங்கம்தானே. அடிப்படையான காரணவஸ்து தங்கம்தானே. அது போல் வித்யைகள் பலவாருக இருந்தாலும் அவைகளை ஊடுருவி நிற்கும் அடிப்படையான வித்யை ஒன்று இருக்குமல்லவா? அது எது? என்று கேட்டார்.

வாஜபேயி:—சரி ஒப்புக்கொள்ளுகிறேன் குருநாதர் என்ன பதில் கூறினர்?

ஸோமயாஜி:— तस्मै स होवाच। द्वे विद्ये वेदितव्ये इति ह स्म यद्ब्रह्मविदो वदन्ति परा चैवापरा च ॥

தஸ்மை ஸ ஹோவாச I த்வே வித்யே வேதிதவ்யே இதி ஹ ஸ்ம யத் ப்ரஹ்மவிதோ வதந்தி பரா சைவாபரா ச II

சௌனகருக்கு அங்கிரஸ் சொன்னதாவது 'பரா' என்றும் 'அபரா' என்றும் தெரியவேண்டிய வித்யைகள் இரண்டு என்று பிரம்மஞானிகள் கூறுகின்றுர்கள்.

வாஜபேயி:— விடையிலும் ஸந்தேஹம் இருக்கிறது நண்பரே! சௌனகரின் பிரச்னத்துக்கு "இதை உணர்ந்தால் ஸர்வக்ஞன் ஆகலாம்" என்று விடை

அளிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். அதை விட்டுவிட்டு கேட்காத விஷயங்கள் பதிலாக வருகின்றனவே! விவரமாக ஸமாதானம் கூற வேண்டுகின்றேன்.

ஸோமயாஜி :— பிரஹ்மதத்தரே! இதில் தவறு ஒன்றுமில்லை. எதை அறியவேண்டுமென்று கேட்ட வினாவிற்கு விடையாக இரண்டு வித்யைகளை அறிய வேண்டுமென்றார். அதில் ஒன்றிற்கு 'பராவித்யை' என்றும், மற்றொன்றிற்கு 'அபராவித்யை' என்றும் பெயர்கள் வழங்கப்படுவதாகவும் சொன்னார். அதுவும் தாமாகச் சொல்லவில்லை. பரம்பரை பரம்பரையாக பிரஹ்மரிஷிகள் சொல்லிவந்திருக்கிறார்கள். அதையே தான் தாமும் சொல்வதாக அடக்கமாகக் கூறினார். இதில் என்ன தவறு? என்ன ஸந்தேஹம்? ஒன்றுமில்லை. கேள்வி ரத்னச்சுருக்கமாக அமைந்திருக்கிறது. பதில் விளக்கமாக விவரமாக இருக்கிறது. அவ்வளவுதான்.

வாஜபேயி :— தேவதத்தரே! ஸமாதானம் நன்றாக இருக்கிறது. ஆயினும் பிரச்னத்துக்கு உத்தரம் நீட்டிச் சுற்றிவளைக்கவேண்டாம் என்றே என் சிற்றறிவுக்குப் படுகிறது. இப்படிப்பட்ட விடைகள் மேலும் குழப்பத்தைத்தான் உண்டாக்கும்.

ஸோமயாஜி :- நண்பர் கூறுவதிலும் நியாயமில்லாமல் இல்லை. இருந்தபோதிலும் இந்தப்படி உத்தரம் கூறியதில் தவறு ஒன்றுமில்லை. ஒரு வினாவிற்கு ஒரே வார்த்தையில் பதில் இருக்கும். மற்றொன்றிற்கு பெரிய வாசகங்களை விடையாகக் கூறவேண்டியிருக்கும். இந்தப் பதில் மிகவும் கிரமமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிரஹ்மவித்யையை அறிய முதல் காலடி எடுத்து வைப்பவனுக்கு படிப்படியாகத்தான் உபதேசிக்க வேண்டும். நமக்கு இங்கு அறியவேண்டியது பராவித்யை. ஆனால் அதற்குமுன் அபரவித்யை இன்னது

என்று அறிந்து நிராகரணம் செய்யவேண்டும். பூர்பக்ஷ கண்டனம் செய்து ஸித்தாந்தம் செய்வதே முறை. அதற்காக வித்யை இரண்டு என்று கூறி அதில் ஒன்று அபரா, மற்ருென்று பரா என்றும் விளக்குகிருர்.

வாஜபேயி :— நண்பரே, எனது சந்தேகங்கள் நீங்கி விட்டன. மேலும் தொடர்ந்து கூறவேண்டுகின்றேன்.

ஸோமயாஜி :— பிரம்மதத்தரே, நேற்று இத்துடன் உபதேசம் நிறுத்தப்பட்டது. இனிமேல் நாளைதான் கூறுவார். நாளைக்குத்தான் தாங்களும் கூட வந்து கேட்கலாமே. !

வாஜபேயி :— தேவதத்தரே, மிகவும் மகிழ்ச்சி. தாங்கள் சொல்லும்போதே இவ்வளவு சிறப்பாக இருக் கின்றது. குருநாதர் கூறும்போது சொல்லவும் வேண்டுமோ ! எல்லாம் வேதமாதாவின் அனுக்கிரகம் தான். இப்போது நம் நண்பர் புரோஹிதர் இங்கே இல்லையே !

ஸோமயாஜி :— எல்லாம் குருநாதரின் கிருபைதான். பிரஹ்மரிஷி கோபதரின் அருள். சாப்பிடும் ஸமயத் தில் சாவேரியை நிணைப்பது நன்றல்லவே ! அதுபோல் இப்போது புரோஹிதர் ஞாபகம் வேண்டாம். ஆச்ரமத் திற்குப் போவோம்.

(திரை விழுகிறது)

முதலாவது அங்கம் முற்றும்.

இரண்டாவது அங்கம்

காட்சி 1

(திரை விலக)

[ரிஷிகேசத்தில் பிரம்மரிஷி அங்கிரஸ்ஸின் ஆசிரமம். புலித் தோல் ஆசனத்தில் அங்கிரஸ்ஸும் கோபதரும் அமர்ந்திருக்கின்றார்கள் இரு மருங்கிலும் சௌனகர், பிரம்மதத்தர் தேவ தத்தர் முதலிய சீடர்கள் நிற்கின்றார்கள். குருநாதரின் அனுமதி பெற்று எல்லோரும் அமர்ந்தபின் சாந்திபாடம் சொல்லப்படுகின்றது. அதன்பின் உரையாடல் ஆரம்பமாகிறது.]

அங்கிரஸ் :— சௌம்யர்களே, மங்களமுண்டாகட்டும் இதுவரைக்கும் கற்றதின் சுருக்கத்தை முதலில் சௌனகர் கூறட்டும்.

சௌனகர் :— ஐயனே ! தங்கள் உத்தரவுப்படிக் கூறுகின்றேன். எல்லாவற்றிற்கும் எல்லா தேவர்களுக்கும் பெரியவரான பிரம்மா முதலில் அதாவது இந்திராதி தேவர்களுக்கு முன் தோன்றினார். அவர் ஞானம், தர்மம், வைராக்கியம், ஐச்வர்யம் முதலான குணங்களில் மற்ற தேவர்களைவிட மஹானாக சிரேஷ்டராக விளங்கினார். அவர் நம்மைப்போல் கர்மத்துக்கு வசப்பட்டுத் தோன்றவில்லை. அவர் ஸ்வயமாக உண்டானார். அவரே ஸம்பூர்ண ஜகத்திற்கும் கர்த்தா, அதாவது எல்லா விசுவத்தையும் உண்டாக்கினார். தவிரவும் சிருஷ்டித்த புவனங்களை ரக்ஷிக்கிறவர். பரிபாலிக்கின்றவரும் அவரேதான். இவ்வளவு மஹத்துவமுள்ள பிரம்மா, பிரம்மவித்யையை முதலில் தன்னுடைய ஜ்யேஷ்ட புத்திரராகிய அதர்வாவுக்கு உபதேசித்தார்.

வாஜபேயி :— நண்பரே ! ஸனகாதி யோகிகள் பிரஹ்மாவிடம் முதலிலே உண்டானதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். தாங்கள் அதர்வா உண்டானதாகச் சொல்கிறீர்களே ?

சௌனகர் :— தாங்கள் சொல்வது ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில். வைவஸ்வத மன்வந்தரத்தில் அதர்வாதான் முதலில் உண்டானார். இவர் மூலமாக பிரவர்த்தித்தது அதர்வண வேதம்.

வாஜபேயி :— அப்படியா! தொடர்ந்து சொல்லுங்கள்.

கோபதர் :— சௌனகர் ரொம்ப அழகாக எடுத்து உரைக்கின்றார். மிகவும் ஸந்தோஷம்.

சௌனகர் :— அதர்வா தான் கற்ற பிரம்மவித்யையை அங்கிர் என்பவருக்குச் சொன்னார். அவர் பரத்வாஜ கோத்ரத்தைச் சேர்ந்த ஸத்யவஹருக்குச் சொன்னார். அவர் நம்முடைய குருநாதராகிய பிரம்மரிஷி அங்கிரஸ் ஸுக்குக் கூறினார். இப்படி குருசீட பரம்பரையாக இந்த பிரம்மவித்யை அவிச்சின்னமாய் விளங்கி வருகிறது. இப்போது நாம் குருநாதரை அணுகி உபதேசம் பெறப்போகின்றோம்.

அங்கிரஸ் :— ஸௌம்யரே, மகிழ்ச்சி. உபோத்காதம் மிகவும் அழகாய் அமைந்துவிட்டது.

ஸோமயாஜி :— நண்பரே, மேலும் தொடர்ந்து பாக்கி விஷயங்களையும் சொல்லுங்கள்.

வாஜபேயி :— என்போன்ற பின்னால் வந்த சிஷ்யர் களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கிறது இது அன்று தாங்கள் குருநாதரிடம் பிரச்னம் பண்ணினதும், அதற் குள்ள உத்தரமும் கூறும்படி வேண்டுகிறேன்.

சௌனகர் :— அப்படியே கூறுகிறேன் நண்பர்களே! "எது அறியப்பட்டால் இது எல்லாம் அறியப்படும்? பகவானே! அருள்புரியவேண்டும்" என்று கேட்டேன். குருநாதர் "பரா என்றும், அபரா என்றும் பிரஹ்ம ஞானிகள் சொல்லும் இரண்டு வித்யைகளையும் அறிய வேண்டும்" என்று உபதேசித்தார்கள்.

கோபதர் :— சௌனகர் மிகவும் சுருக்கமாகவும் ஆனால் ஒன்றுகூட விடாமலும் கூறிவிட்டார். நண்பர் அங்கிரஸ் அதைத் தொடர்ந்து உபதேசிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சிஷ்யர்கள் :— அவ்வண்ணம் நாங்களும் பிரார்த்திக்கிறோம். பரவித்யை எது? அபரவித்யை எது?

அங்கிரஸ் :— நண்பரே! ஸௌம்யர்களே, தொடர்ந்து கூறுகிறேன். கவனமாகக் கேளுங்கள்.

तत्रापरा ऋग्वेदो यजुर्वेदः सामवेदोऽथर्ववेदः शिक्षा कल्पो व्याकरणं निरुक्तं छन्दो ज्योतिषमिति । अथ परा यया तदक्षरमधिगम्यते ॥

தத்ராபரா ருக்வேதோ யஜுர்வேத: ஸாமவேதோ ऽதர்வவேத: சிக்ஷா கல்போ வ்யாகரணம் நிருக்தம் சந்தோ ஜ்யோதிஷமிதி । அத பரா யயா ததக்ஷரமதிகம்யதே ॥

இரண்டு வித்யைகள் சொன்னேனல்லவா! அவற்றுள் அபரா என்பது ருக்வேதம், யஜுர்வேதம் ஸாமவேதம், அதர்வ வேதம், சிக்ஷை, கல்பம், வியாகரணம், நிருக்தம் சந்தஸ் ஜ்யோதிஷம் இவை. அதாவது நான்கு வேதங்களும் ஆறு வேதாங்கங்களும் ஆகும். 'பரா' என்பது மேலே சொல்லப்போகிற அக்ஷரம் (அழிவில்லாதது) என்பதை அடைவிக்கும் வித்யையாகும்.

வாஜபேயி :— ஸ்வாமீ! வேதங்களும் வேதாங்கங்களும் அபரா வித்யையைச் சேர்ந்ததா? ஆச்சரியமும் ஏமாற்றமுமாக இருக்கின்றதே.

ஸோமயாஜீ :— வேதங்களை மிகவும் சிரேஷ்டமாக அல்லவா நினைத்திருந்தோம்.

கோபதர் :— ஸௌம்யர்களே, வேதங்களைப்பற்றிக் குறைவாக நினைக்க வேண்டாம். மற்ற வித்யைகளை விட அவை சிறந்தவைதான். பிரம்மவித்யையுடன் ஒப்பிடும்போதுதான் தாழ்ந்தவையே தவிர வேறில்லை. ஞான மார்க்கத்தை அபேக்ஷித்து ச்லாக்யமில்லை. அவ்வளவுதான்.

சௌனகர் :— விளக்கத்திற்கு நன்றி. பராவித்யை பற்றி நன்கு தெரிந்துகொள்வதற்காக அபரா வித்யை பற்றி இன்னும் கொஞ்சம் விபரமாகக் கூறவேண்டு கிறேன்.

கோபதர் :— அப்படியேயாகட்டும். எதனுல் இகபர சௌக்கியத்தைப் பற்றிய அறிவு உண்டாகிறதோ, அனுத்ம பதார்த்தங்களைப்பற்றிய அறிவு உண்டா கிறதோ, அதுவே அபரா வித்யையாகும். எல்லா ஸம்ஸாரமும், அபரா வித்யையின் விஷயமேயாகும். ஸம்ஸாரிகளின் பிரவிருத்தி அதை நோக்கியேயிருக்கும் அதனுல் அகண்டமான தத்வத்தின் ஞானம் உண்டா காது. ஐஹிக ஆமுஷ்மிகமான பலன்களைப்பற்றிய ஞானமே உண்டாகும. வாஸ்தவத்தில் அபராவித்யை என்பது அவித்யையேயாகும். வியவஹாரத்தில் உபயோகப்படுவதால் வித்யை என்று உபசாரமாகக் கூறப்பட்டது. அகண்டமான அவ்யயமான தத்வத்தை அறிய விரும்புவோர் அதைத்தள்ள வேண்டியதே.

சௌனகர் :— ஸ்வாமீ, இனி பராவித்யையைப்பற்றி யும் கொஞ்சம் விளக்கமாகக் கூறுங்கள்.

கோபதர் :— எதனுல் அகண்டமானதும், நாசம் அற்றதும், நிஷ்பிரபஞ்சமுமான பரமார்த்த தத்வம் அடையப்படுகிறதோ அதுவே பரவித்யையாகும். அதுவே ஸம்பூர்ண ஞானத்தின் அதிஷ்டானமாகும். அந்த ஞானம் வந்துவிட்டால் பிறகு அறியவேண்டியது வேறென்றுமில்லை.

வாஜபேயி :— குருநாதரே ! வேதங்களைப்பற்றியும் வேதாங்கங்களைப்பற்றியும் கொஞ்சம்கூட விவரமாக விளக்கமாகக்கூற வேண்டுகிறேன்.

அங்கிரஸ் :— ஸௌம்யர்களே ! கேளுங்கள், கூறுகிறேன். வேதவ்யாஸரிடமிருந்து ருக்வேதத்தைப் பைலரும், யஜுர்வேதத்தை வைசம்பாயனரும், ஸாம வேதத்தை ஜைமினியும், அதர்வவேதத்தை ஸுமந்துவும் பெற்றுக்கொண்டனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் சிஷ்யர்கள் பலர். அவர்கள்மூலம் பல சாகைகளாக வேதபாகம் பெருகிவந்தது. பிரஹ்மா தனது முதல் புத்ரராகிய அதர்வாவுக்கு பிரஹ்மவித்யையை உபதேசித்தார். அதைத்தான் இப்போது உங்களுக்கு நான் சொல்கிறேன். வேதங்களை ஸரிவரப் படிப்பதற்கும், அதிலுள்ள தத்வங்களை அறிவதற்கும் வேதாங்கங்கள் ஏற்பட்டன. அவை யாவன :— (1) சிக்ஷை —அக்ஷரங்களுடைய உத்பத்தி உச்சரிப்பு முதலியவற்றைப்பற்றிய சாஸ்திரம், (2) கல்பம் — கர்மாக்களைச் செய்யும் விதிகள், (3) வ்யாகரணம் — எழுத்துக்களையும் பதங்களையும் பற்றிக் கூறும் இலக்கணம், (4) நிருக்தம் — வேத வியாக்யானம், (5) சந்தஸ் — வேதங்களில் வரும் பாடல்களின் இலக்கணம், (6) ஜ்யோதிஷ சாஸ்திரம் - ஸூர்ய-சந்த்ராதிகளின் கதிகள் மூலம் காலத்தைப் பற்றிய அறிவு. இவைகளெல்லாம் அபராவித்யை தான். என் நண்பர் கோபதர் கூறியபடி அவித்யை என்றுகூடச் சொல்லலாம்.

சௌனகர் :— குருநாதரே, இனி பராவித்யையைப் பற்றி உபதேசிக்க வேண்டுகிறேன்.

அங்கிரஸ் :— எதனால் அக்ஷரமான பிரம்மம் அறியப் படுகிறதோ அதுதான் பராவித்யை.

வாஜபேயி :— அக்ஷரமென்றால் என்ன ?

அங்கிரஸ் :— அக்ஷரமென்றால் அழிவில்லாதது என்று ஒரு அர்த்தம். எங்கும் வியாபித்தது என்று மற்றொரு அர்த்தம்.

ஸோமயாஜி :— இரண்டு அர்த்தங்களும் இங்கே பொருந்துமா ?

அங்கிரஸ் :— பேஷாகப் பொருந்தும். பிரம்மம் அழிவில்லாதது. அது எங்கும் நிறைந்துள்ளது. ஆகவே அக்ஷரம் என்பது பிரம்மத்தைக் குறிக்கிறது.

சௌனகர் :— மேலும் தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகிறேன்.

வாஜபேயி :—குருநாதரே, ஒரு ஸந்தேஹம். நாங்கள் எல்லாரும் கர்மடர்கள். வேதத்திற்குப் புறம்பான விஷயங்களை நிஷ்பலமாகவும் நரகத்திற்கு ஹேதுவாகவும், கருதுகின்றவர்கள். வேதங்களை அபரா வித்யையில் சேர்க்கும்போது உபநிஷத்துக்களும் அதில் அடங்கிவிடுமா ? அல்லது உபநிஷத்துக்கள் வேதத்திற்கு பாஹ்யமா ? அப்போது அதில் சொல்லியிருக்கப்பட்ட ஞானமும் வேதத்திற்குப் புறம்பாக நிஷ்பலமாகப் போய்விடுமே! வேதங்களில் உபநிஷத் அடக்கம் என்றால் அதுவும் அபராவித்யையில் சேர்ந்துவிடுமே! அப்போது பராவித்யை எது ?

அங்கிரஸ் :— நண்பர் கோபதரை ஸமாதானம் கூறும்படி வேண்டுகிறேன்.

கோபதர் :— உபநிஷத்துக்கள் வேதங்களைச் சேர்ந்தவைதான். அதில் கூறப்பட்ட பிரம்ம ஞானத்தைப் பற்றித்தான் இங்கே சொல்லப்படுகிறது. உபநிஷத்துக்களால் உண்டாகும் ப்ரஹ்மஞானமே பராவித்யையாகும். ஆனால் கேவலம் உபநிஷத் வாக்கியங்களை அத்யயனம் செய்து அதிலிருந்து உண்டாகும் அர்த்தஞானம் (சப்தராசிகளின் அறிவு) எல்லோருக்கும் கிடைக்கும். அது பரவித்யையாகாது.

அத்யயனம் செய்தபின் வைராக்யம்பூண்டு முறைப்படி குருவையடைந்து சுசுரூஷை செய்து குருவின் உபதேசம் மூலம் அடையப்படுவதே பிரஹ்மவித்யை. அதைப் பிரித்துக் காட்டுவதற்காகவே, வேதம் முதலியவைகளை அபராவித்யை என்றும், பிரஹ்மதத்வ ஸாக்ஷாத்-காரத்தை பராவித்யை என்றும் விளக்கிச் சொன்னார்கள்.

சௌனகர் ;— ஸ்வாமீ! எங்கள் சந்தேகங்கள் நிவர்த்தியாகிவிட்டன. தொடர்ந்து உபதேசியுங்கள்.

அங்கிரஸ் :— இனி பராவித்யையைப்பற்றி விளக்கமாகக் கூறுங்கள்.

यत्तदद्रेश्यमग्राह्यमगोत्रमवर्णमचक्षुःश्रोत्रं तदपाणिपादम् । नित्यं विभुं सर्वगतं सुसूक्ष्मं तदव्ययं यद्भूतयोनिं परिपश्यन्ति धीराः ॥

யத் தத் அத்ரேச்யம் அக்ராஹ்யம் அகோத்ரம் அவர்ணம் அசக்ஷு:ச்ரோத்ரம் ததபாணிபாதம் 1 நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் ததவ்யயம் யத் பூதயோநிம் பரிபச்யந்தி தீரா: 11

அது ஒருவராலும் பார்க்கமுடியாதது. கிரஹிக்க முடியாதது. கோத்ரமில்லாதது. வர்ணமில்லாதது. தவிர, அதற்குக் கண்ணும் காதும் கிடையாது. கை கால்களும் கிடையாது. ஆனால் அது நித்ய வஸ்து. விபு, எங்கும் நிறைந்தது. அதிஸூக்ஷ்மமானது. குறைவற்றது. அதுவே ஸர்வபூதங்களுக்கும் காரணம். அதை ஞானிகள் எங்கும் எப்போதும் காண்கிறார்கள். இப்போது நான் சொன்னது மந்திரத்தின் பொருள்.

சௌனகர் :— குருநாதரே! தாங்கள் கூறும் விஷயம் மனதில் ஒரே குழப்பத்தை உண்டுபண்ணுகிறது. எங்களுக்குப் புரியும்படி தெளிவாக, விவரமாகக் கூறப் பிரார்த்திக்கிறோம்.

வாஜபேயி :— ஸ்வாமீ, கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல் இருக்கிறது. எங்கள் மூளைக்கு ஒன்றும் எட்டவில்லை. தயவுசெய்யவேண்டும்.

ஸோமயாஜி:— ஐயனே, ஓரிடத்தில் பார்க்க முடியாதது என்று சொல்கிறீர்கள். மற்றோரிடத்தில் நன்கு காண்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். முன்னுக்குப்பின் முரணாகத் தோன்றுகிறதே!

அங்கிரஸ்:— ஸௌம்யர்களே! ஒன்றும் முரண் கிடையாது. முதலில் அப்படித்தான் முரணாகவும் குழப்பமாகவும் தோன்றும். சிந்தித்தால் தெளிவு பிறக்கும். விவரித்துக் கூறுகின்றேன். கவனமாகக் கேளுங்கள். ஒவ்வொரு லக்ஷணமாக எடுத்துக் கொள்வோம்.

அத்ரேச்யம் பார்க்கப்படாதது என்றால் எல்லா ஞானேந்திரியங்களாலும் அறியமுடியாதது என்று பொருள் பிரம்மத்தை பஞ்ச ஞானேந்திரியங்களினாலும் அறியமுடியாது. அதாவது கண்ணால் பார்க்கமுடியாது, காதால் கேட்க முடியாது. மூக்கால் முகரமுடியாது. நாக்கால் சுவைக்க முடியாது, த்வகிந்திரியத்தால் தொடமுடியாது.

அக்ராஹ்யம் ஞானேந்திரியங்களால் அறியமுடியாவிட்டால் கர்மேந்திரியங்களால் கிரஹிக்கமுடியுமோ என்று சந்தேகிக்க வேண்டாம். கர்மேந்திரியங்களுக்கும் எட்டாதது.

அகோத்ரம்: என்றால் மூலமில்லாதது. பிரம்மத்திற்குக் காரணமான வஸ்து பிறிது ஒன்றில்லை.

அவர்ணம்: அதற்கு வர்ணமில்லை, அதை வர்ணிக்க முடியாது. வாக்குக்கு எட்டாதது குணங்கள் இல்லாதது. குணமிருந்தால்தானே வர்ணிக்கமுடியும், நெட்டை, குட்டை, பருமன், ஒல்லி, வெளுப்பு, கருப்பு முதலிய தர்மங்கள் ஒன்றும் இல்லாதது.

சௌனகர்:— நன்றாகப் புரிகிறது ஸ்வாமீ! தொடர்ந்து கூறுங்கள்,

அங்கிரஸ் :— முதலில் ச்ருதி கூறிற்று. அது ஞானேந்திரியங்களுக்கும் கர்மேந்திரியங்களுக்கும் எட்டாதது என்று. இப்போது உங்களுக்கு ஒரு எண்ணம் தோன்றலாம். பிறரால் அதை அறியமுடியாவிட்டாலும் அது எல்லாவற்றையும் அறியமுடிகிறதல்லவா! நம்மைப்போலவே அதற்கும் அறியும் கருவிகளான இந்திரியங்கள் இருக்குமல்லவா! என்று. ஆனால் உபநிஷத் பிரஹ்மத்துக்குக் கண்கள் காதுகள் முதலிய ஞானேந்திரியங்களும் இல்லை. கை கால் முதலிய கர்மேந்திரியங்களும் இல்லையென்று உறுதியாய்ச் சொல்கிறது. ஆகவே அது புலன்களால் அறியப்படுகிறதுமில்லை, புலன்களால் அறிகிறதுமில்லை. ஆனாலும் ஸ்வரூபசைதன்யத்தால் எல்லாவற்றையும் அறிகிறது. "பச்யத்யசக்ஷு: ஸ ச்ருணோத்யகர்ண:" அதனாலேயே அழிவில்லாமல் இருக்கிறது. நாநாவித பிராணி பேதங்களாகத் தோன்றுவதால் விபு என்று கூறப்பட்டது. எங்கும் நிறைந்தது. ஆகாசத்தைவிட ஸூக்ஷ்மமானது. குறைந்துபோவதில்லை. எப்படி ப்ருதிவியானது ஸ்தாவரஜங்கமங்களுக்குக் காரணமாகிறதோ அதுபோல் எல்லாவற்றிற்கும் காரணமாகிறது.

இப்படிச் சொன்னதால் அதை அறியவேமுடியாதென்று திகைக்கவேண்டாம். சிந்தித்துத் தெளிவு பெற்றால் பிரத்யக்ஷமாக அறியலாம். புத்திசாலிகளாகிய பெரியோர்கள் அதை ஸாக்ஷாத்தாக கண்டறிந்தார்கள். மின்னொளிபோல் தோன்றி மறைவதல்ல. அவர்கள் அதை எங்கும் நிரந்தரமாகக் காண்கிறார்கள். உங்களுக்கும் அது ஸாத்யமாகும்.

கோபதர் :— நண்பரே! இத்துடன் இன்றைய பாடத்தை நிறுத்திக்கொள்வோம். சிஷ்யர்கள் இதைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டு வரட்டும்.

அங்கிரஸ் :— அப்படியே செய்வோம்.

(சீடர்கள் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கிறார்கள்.)

(திரை விழுகிறது)

காட்சி 2

(திரை விலக)

[முன் காட்சிபோல் உரையாடல் ஆரம்பமாகிறது.]

கோபதர் :— ஸௌம்யர்களே, நேற்றுக் கற்றதை எல்லாம் கசடறச் சிந்தித்தீர்களா? ஏதாவது ஸந்தேகங்கள் உள்ளனவா? இருந்தால் கேளுங்கள்.

சீடர்கள் :— நன்றாய்ச் சிந்தித்தோம். ஸந்தேகம் ஒன்றுமில்லை.

சௌனகர் :— விளக்கமுடியாததைப்பற்றி விபரமாக விளங்க வைத்தீர்கள். பிரம்மமே பூதங்களுக்கு யோனி-காரண வஸ்து என்று கூறினீர்கள். அது எப்படி காரண பூதமாயிற்று? சிருஷ்டியின் தன்மைகளைப்பற்றி விவரிக்க வேண்டுகிறேன்.

அங்கிரஸ் :— ஸாதுவான கேள்வி. விடை கூறுகின்றேன்.

यथोर्णनाभिः सृजते गृह्णते च
यथा पृथिव्यामोषधयः संभवन्ति ।
यथा सतः पुरुषात्केशलोमानि
तथाऽक्षरात्संभवतीह विश्वम् ॥

யதோர்ணநாபி: ஸ்ருஜதே க்ருஹ்ணதே ச
யதா ப்ருதிவ்யாமோஷதய: ஸம்பவந்தி ।
யதா ஸத: புருஷாத் கேசலோமாநி
ததாऽக்ஷராத் ஸம்பவதீஹ விச்வம் ॥

எங்ஙனம் சிலந்திப்பூச்சி (வலையை) உண்டுபண்ணி இழுத்துக்கொள்கிறதோ, எப்படி பூமியில் செடி கொடிகள் உண்டாகின்றனவோ, எப்படி ஜீவபுருஷனிடம் கேசமும் ரோமங்களும் உண்டாகின்றனவோ,

அப்படி அக்ஷரபிர்ஹ்மத்தினிடமிருந்து இந்த உலகம் உண்டாகின்றது.

சௌனகர் :— உதாரணங்கள் மிகவும் சிறப்பாக இருக்கின்றன.

வாஜபேயி :— ஆயினும் கொஞ்சங் கூட விவரணம் தேவைப்படுகிறது அடியேனுக்கு விளங்க.

அங்கிரஸ் :—சிலந்திப் பூச்சியானது நூலினுல் வலையைப் பின்னிவிட்டுப் பிறகு தனக்குள்ளேயே இழுத்துக்கொள்ளுவதை பார்த்திருக்கிறேமே. அது போல் பிரம்மமும் இந்த பிரபஞ்சத்தைத் தன்னிடமிருந்தே உண்டாக்கி மறுபடியும் தனக்குள்ளேயே லயமடையச்செய்கிறது. ஒரு மண்குடத்தை செய்ய, ஒரு குயவனுக்கு மண் சக்கரம் முதலிய ஸாதனங்கள் தேவை. இங்கே அப்படியல்ல சிலந்தி வலைக்கூடுகட்ட வெளியில் நூலைத்தேடிச்செல்வதில்லை. தன் உடலிலிருந்தே நூலைத் தயார்செய்து அதைக்கொண்டே வலை கட்டி பின்னுல் தன் சரீரத்திற்குள்ளேயே அதை இழுத்துக்கொள்கிறது. இதுபோல பிரம்மமும் வேருென்றையும் எதிர்பாராமலேயேதான் ஒருவனுகவே இருந்துகொண்டு பிரபஞ்சம் முழுவதையும் ஸிருஷ்டித்து உபஸம்ஹாரமும் செய்கிறது. பிரபஞ்சத்திற்கு உபாதான காரணமும் நிமித்த காரணமும் பிரம்மமே.

ஸோமயாஜி :— அடுத்த உதாரணம் எதை விளக்குகிறது ?

அங்கிரஸ் :—சிலந்திப்பூச்சி சுயநலத்துக்காக வலையைக் (கூட்டை) உண்டாக்கியது சுயதேவைக்காக தான் வஸிப்பதற்காகச் செய்தது. இங்கே பிரம்மத்துக்கு சுயநலமோ தேவையோ ஒன்றும்கிடையாது என்பதைக் காட்ட இரண்டாவது உதாரணம். அதாவது பூமியிலிருந்து செடி கொடிகள் முளைப்பது பூமியின் சுயநலத்திற்கல்லவே. அதுபோல் பிரம்மமும் விசுவத்தை உண்டுபண்ணுகிறது. இந்த உதாரணத்துக்கு வேருெரு

விதமாகவும் அர்த்தம் சொல்லலாம். பூமியானது அந்தந்த விதைகளுக்குத் தக்கபடி செடிகளை உண்டாக்குவதுபோல், அதனதன் கர்மத்துக்குத் தக்கபடி ஜனனம் உண்டாகிறது. அதனால் ஈசுவரனுக்கு பக்ஷபாததோஷமில்லை.

ஸோமயாஜி :— மூன்ருவது உதாரணம் எதை வற்புறுத்துகிறது.

அங்கிரஸ் :— முன் உதாரணத்தில் ஜடமான ஓஷதிகளின் காரணமான பிருதிவியும் ஜடம். காரியமும் காரணமும் ஒரே ஸ்வபாவமாக உள்ளது. இந்தநியாயத்தால் காரியமான பிரபஞ்சம் ஜடமானதால் காரணமான பிரம்மமும் ஜடமோ என்ற ஐயம் வரலாம். அதை நீக்குவதற்காக மூன்ருவது உதாரணம் தரப்படுகிறது. எப்படி ஜீவனுள்ள புருஷனிடத்தில் விலக்ஷணமான ரோமம் உண்டாகி வளருகிறதோ அதுபோல் சேதனமான பிரம்மத்திலிருந்து அசேதனமான உலகம் தோன்றுகிறது.

கோபதர் :— நண்பரே, மிகவும் மகிழ்ச்சி. சிருஷ்டி எப்படி உண்டாயிற்று என்ற தத்துவத்தை ரொம்ப அழகாக அற்புதமாக வர்ணித்தீர்கள். இதுவரை நான் கேட்டதில்லை இவ்வளவு தெளிவாக வேருெருவர் கூறியதாக.

சௌனகர் :— சிருஷ்டி எப்படி உண்டாயிற்று என்பதை பலவிதமாக விளக்கினீர்கள். தன்யர்கள் ஆனேம். மேலும் தொடர்ந்து உபதேசிக்கவேண்டும்.

அங்கிரஸ் :— तपसा चीयते ब्रह्म ततोऽन्नमभिजायते ।
अन्नात्प्राणो मनः सत्यं लोकाः कर्मसु चामृतम् ॥

தபஸா சீயதே ப்ரஹ்ம ததோऽந்நமபிஜாயதே ।
அந்நாத் ப்ராணோ மந: ஸத்யம் லோகா:
கர்மஸு சாம்ருதம் ॥

இந்த மந்திரபாகத்தில் ஸ்ருஷ்டிக்ரமம் விளக்கப்படுகிறது. இலந்தைப் பழங்களை வீசி எறிவதுபோல் ஜகத் உண்டாக்கப்படவில்லை. ஆனல் படிப்படியாக, க்ரமமாகச் செய்யப்பட்டது என்று இந்த மந்திரங்கள் விவரிக்கின்றன. முதலில் பிரஹ்மம் தபஸ்ஸாகிற ஞானத்துடன் ஸம்பந்தப்பட்டு கொஞ்சம் பூரித்தது. அதிலிருந்து அன்னமுண்டாயிற்று. அன்னத்திலிருந்து பிராணன் உண்டாயிற்று. பிராணனிலிருந்து மனம், ஸத்யம், லோகம், கர்மம், அமிருதமான கர்மபலன் இவைகள் க்ரமமாக உண்டாயின.

வாஜபேயி :— பிரஹ்மத்திற்குத்தான் சரீரமில்லையே! அது எப்படி தபஸ் செய்தது?

கோபதர் :— தவமென்ருல் இங்கே காட்டில் போய் உட்கார்ந்து மூச்சையடக்குவதல்ல. ஏகாக்ரமான புத்தியுடன் இருப்பதே தவமாகும். உத்பத்தி செய்ய வேண்டுமென்று தீவிரமாக எண்ணுவதே பிரஹ்மத்தின் தவமாகும். உத்பத்தி செய்யவேண்டுமென்ற இச்சை உண்டானவுடனே நிர்குண பிரஹ்மம் ஸகுணமான பிரஹ்மமாகிவிடுகிறது. அதுதான் பூரிப்பு. நடைமுறையிலும் பிள்ளை பிறக்கப்போகும் தந்தை அதை எண்ணி ஆனந்தத்தால் பூரிப்பதை நாம் பார்க்கிருேம்.

சௌனகர் :— ஸகுணபிரம்மம் அப்புறம் எப்படி மாறிற்று.

கோபதர் :— அதில் நின்றும் அன்னம் உண்டாயிற்று. அன்னம் என்பது அவ்யாக்ருத தத்வம் அல்லது மாயா சக்தியை குறிக்கும். அதிலே நின்றும் பிராணன் என்ற ஹிரண்யகர்ப்பர் உண்டானுர். அவரிடமிருந்து மனஸ் உண்டாயிற்று. அதில் நின்று ஸத்யம் என்னும் பஞ்ச பூதங்கள் உண்டாயின. பஞ்ச பூதங்களிலிருந்து பூராதி ஏழு லோகங்களும் உண்டாயின. அவைகளில் மனிதர்களுக்குத் தகுந்த கர்மாக்கள் உண்டாயின. கர்மாக்களின் நிமித்தமாக ஸ்வர்க்கம் முதலான கர்ம

பலனுகிற அமிருதம் உண்டாயிற்று இப்படியாக பிரம்மத்திடமிருந்து விசுவம் உண்டாயிற்று.

வாஜபேயி:—கர்மங்களும் அவற்றின் பலன்களும் நச்வரமாயிருக்க அவைகளை அமிருதம்—அழிவில்லாதது என்று சொல்வது சரியா?

அங்கிரஸ்:—மனிதர்களின் வர்ணம் ஆசிரமத்துக்கேற்ப கர்மாக்கள் மாறுபடுகின்றன. அதன் பலன்களும் மாறுபடுகின்றன. எவ்வளவு வருஷங்கள் கழிந்தாலும் கர்மபலனை அநுபவிக்காமல் தப்பமுடியாது. கோடிக் கணக்கான ஆண்டுகள் கழிந்தாலும் கர்மம் விடாது. செய்த வினைக்குப் பயனை அனுபவித்துத்தான் தீர வேண்டும். கோடி கல்பங்கள் கழிந்தாலும் பலனை அனுபவிக்கும்வரை கர்மாக்கள் அழியாமல் பலனைத் தருவதற்காக இருந்துகொண்டிருப்பதால் அந்த கர்மாக்களின் பலன் அமிருதம் என்று கூறப்பட்டது.

வாஜபேயி:—குருநாதரே, நன்ருக விளங்கிவிட்டது. ஆனல்?

கோபதர்:-ஸௌம்யா! என்ன ஆனல்? சந்தேகத்தை கேள்.

வாஜபேயி:-ஸத்யம் என்ற பதத்திற்கு பஞ்சபூதங்கள் என்று சொன்னுர்களே. அது எவ்விதம் பொருந்தும்?

ஸோமயாஜி:—எனக்கும் அந்த ஸந்தேகம் தோன்றியது. தெளிவாக்கவேண்டும் ஸ்வாமீ!

கோபதர்:—இந்த நாமரூபமாகிற ஜகத் பஞ்சபூதங்களிலிருந்து உண்டாயின. காரியமான நாமரூபங்களை விட காரணமான பஞ்சபூதங்கள் நிலையானது நித்யமானது. மேலும் கண்களுக்குப் புலப்படும் ஸ்தூலமான பிருதிவி, ஜலம், தேஜஸ், இம் மூன்றுக்கும் 'ஸத்' என்று பெயர். கண்களுக்குப் புலப்படாத ஸூக்ஷ்மமான வாயுவுக்கும் ஆகாசத்திற்கும் 'த்யத்' என்று பெயர். இரண்

டுக்கும் சேர்ந்து 'ஸத்யம்' என்று பெயர். ஆகவே தான் அவைகளை ஸத்யம் என்று உபநிஷத் கூறுகிறது.

சௌனகர் :— குருநாதரே, மேலும் தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகிறோம்.

அங்கிரஸ் :— यः सर्वज्ञः सर्वविद्यस्य ज्ञानमयं तपः ।
तस्मादेतद्ब्रह्म नाम रूपमन्नं च जायते ॥

ய: ஸர்வக்ஞ: ஸர்வவித் யஸ்ய ஞாநமயம் தப: ।
தஸ்மாதேதத் ப்ரஹ்ம நாம ரூபமந்நம் ச ஜாயதே ॥

எந்த பிரஹ்மம் பொதுவாய் எல்லாவற்றையும் அறிகிறதோ, விசேஷித்து எல்லாவற்றையும் அறிகிறதோ, எதனுடைய தபஸ் ஞானமயமோ, அதிலிருந்து ஹிரண்யகர்ப்பரும், நாமமும், ரூபமும், அன்னமும் உண்டாயின. இதுவரை சொன்னவைகளின் ஸாரபூதமாகவும், சுருக்கமாகவும் இந்த மந்திரம் இருக்கிறது.

சௌனகர் :— குருநாதரே, நன்ருகத் தெளிவாக மற்றொரு முறை கூறவேண்டும்.

வாஜபேயி :— ஸர்வக்ஞ:, ஸர்வவித் என்னும் பதங்களின் அர்த்தத்தில் வித்தியாஸமுண்டா ?

அங்கிரஸ் :— பிரஹ்மமானது மாயையை உபாதியாகக்கொண்டு பிரபஞ்சத்தை ஸிருஷ்டிக்கிறது மாயையானது பொதுவானது. ஸமஷ்டி என்று பெயர். இந்த மாயை என்ற உபாதியைக்கொண்டு பிரபஞ்சத்தை அறிந்துகொள்கிறது என்பது ஸர்வக்ஞ பதத்தின் பொருள். இந்த பிரஹ்மமே ஜீவனுக ஆகி தனிப்பட்டு வெவ்வேருக உள்ள அவித்யை என்ற உபாதியால் பிரபஞ்சத்திலுள்ள விசேஷங்களை அறிந்து கொள்கிறது என்பது 'ஸர்வவித்' என்ற சொல்லின் பொருள். மாயையினுல் இவரிடத்தில் ஞானம் என்ற விகாரம் ஏற்பட்டு இதன் மூலம் சிருஷ்டிக்கப்போகும் எல்லா

பதார்த்தங்களையும் அறியும் நிலை (ஸர்வக்ஞத்வம்)தான் தவமென்பது மற்றவரைப்போல் இவருடைய தவம் சரீரத்தைக் கிலேசப்படுத்துவதல்ல. இந்த ஸர்வக்ஞனை ஈசுவரனிடமிருந்து கார்ய பிரம்மமாகிற ஹிரண்யகர்ப்பர் தோன்றுகிறார். அதிலிருந்தே தேவதத்தன், யக்ஞதத்தன் முதலிய நாமங்களும் வெளுப்பு, நீலம், முதலிய ரூபங்களும், நெல் கோதுமை போன்ற அன்னங்களும் உண்டாயின. பூர்வ மந்திரத்தின் சுருக்கமேயாகும் இந்த மந்திரம்.

ஸோமயாஜி:— குருநாதரே, தினந்தோறும் சாந்தி பாடம் சொல்கிறோமே; அதன்பொருள் ஸரியாக விளங்கவில்லை. தயவுசெய்து விவரமாக அருளிச் செய்யவேண்டும்.

அங்கிரஸ்: – அப்படியே ஆகட்டும். சாந்திபாடத்தை கூறுங்கள். அர்த்தம் சொல்கிறேன்.

(சீடர்கள் எல்லோரும் சேர்ந்து கூறுகின்றனர்.)

ओं भद्रं कर्णेभिः शृणुयाम देवाः । भद्रं पश्येमाक्षभिर्यजत्राः । स्थिरैरङ्गैस्तुष्टुवाꣳसस्तनूभिः । व्यशेम देवहितं यदायुः । स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः । स्वस्ति नः पूषा विश्ववेदाः । स्वस्ति नस्तार्क्ष्यो अरिष्टनेमिः । स्वस्ति नो बृहस्पतिर्दधातु ॥

ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

ஓம் பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா: I பத்ரம் பச்யேமாக்ஷபிர் யஜத்ரா: I ஸ்த்திரைரங்கைஸ் துஷ்டுவாம்ஸஸ் தனூபி: I வ்யசேம தேவஹிதம் யதாயு: I ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்தச்ரவா: I ஸ்வஸ்தி ந: பூஷா விச்வவேதா: I ஸ்வஸ்தி நஸ் தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி: I ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது II

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: II

அங்கிரஸ்:—ஓம்! தேவர்களே, செவிகளால் நாங்கள் மங்களத்தை (நல்லதை)க் கேட்கவேண்டும். பூஜைக்குரியவர்களே! கண்களால் நாங்கள் நல்லதைக்காண வேண்டும் திடமான அங்கங்களுடனும் சரீரங்களுடனும் உங்களை துதித்துப்பாடிக்கொண்டு நாங்கள் நெடுநாள் வாழவேண்டும். தேவர்களாகிய உங்களுக்கு எவ்வளவு பிரியமோ அவ்வளவு ஆயுளை நாங்கள் பெற வேண்டும். எங்கள் ஆயுள் தேவர்களுக்கு ஹிதமாகக் கழியவேண்டும். பெரும் புகழ் படைத்த (விருத்திர அசுரனைக் கொன்றதால்) இந்திரன் நமக்கு நன்மை அளிக்கட்டும் எல்லாவற்றையும் அறியும் சூரியன் நன்மை செய்யட்டும். தடைபடாத கதியையுடைய கருடன் நமது கஷ்டங்களை நீக்கி நலம் அளிக்கட்டும். பிருஹஸ்பதி நமக்கு நன்மை செய்யட்டும். அதாவது புகழும் நலமும் பலமும் புத்தியும் உண்டாகட்டும். ஓம் முவ்வகையிலும் சாந்தி நிலவுக. இறை, இயற்கை, இயல்பு இவைகளால் ஒருதடையும் ஏற்படாமல் அமைதி நிலவட்டும். இத்துடன் இன்று பாடத்தை முடிக்கின்றேன் (எழுந்திருக்கிறார்.)

(திரை விழுகிறது)

காட்சி 3

(திரை விலக)

[பிரம்மரிஷி அங்கிரஸ்ஸின் ஆச்ரமம். முன் காட்சிபோல் உபதேசம் நடக்கிறது.]

அங்கிரஸ்:- ஸௌம்யர்களே! இதுவரை கேட்டவைகளில் ஏதாவது ஸந்தேஹமிருந்தால் வினவலாம். விடை கூறியபின் அடுத்த பாடம் தொடங்கலாம்.

வாஜபேயி:— வேதங்கள் அபராவித்யையைச் சேர்ந்ததால் நாங்கள் இதுவரை செய்துவந்த யாகங்களும் மற்றும் கர்மாக்களும் வீண்தானா?

ஸோமயாஜி :— நாங்கள் பொன்போன்ற பிறவியை விருதாவாகவல்லவா இதுவரை கழித்துவிட்டோம். எங்கள் வாழ்நாட்களெல்லாம் அவமாய்ப் போயினவே. இதுபற்றிய ஸந்தேஹங்களை நீக்கவேண்டும் ஸ்வாமீ!

அங்கிரஸ் :— பொன் விலை உயர்ந்தது. வெள்ளி விலை குறைந்தது என்றால் வெள்ளிக்கு விலையேயில்லை என்று அர்த்தம்? இல்லையே! பொன்னைவிட வெள்ளி விலை குறைந்தது என்றுதானே பொருள். செம்பை விட வெள்ளி உயர்ந்ததுதானே. அதுபோல் பிரஹ்ம ஞானம் பராவித்யை என்றும், அது அபராவித்யையை விட உயர்ந்தது என்றும் பெரியோர்கள் கூறுகின்றனர். ஆனால் அபராவித்யை ஒருவிதமான உபயோகமும் அற்றது என்று ஒரு இடத்திலும் சொல்லவில்லையே. ஒன்றையபேக்ஷித்து மற்றது தாழ்ந்தது என்றுதான் பொருள். பிறருக்கு ஹிம்ஸையையும் சுயநலத்தையும் பேணும் எவ்வளவோ கர்மாக்கள் இருக்கின்றன. அவைகளைவிட யாகங்கள் எத்தனையோ மடங்கு மேல் தானே. ஆகையால் வேதங்களில் விதிக்கப்பட்ட கர்மாக்களைப்பற்றி உங்களுக்கு ஒருவிதமான ஐயப்பாடும் வேண்டாம்.

சௌனகர் :— குருநாதரே! தாங்கள் இப்போது கூறியதற்கு சுருதி வாக்யங்கள் இருக்கின்றனவா? அவைகளை உபதேசிக்கும்படி வேண்டுகிறோம்.

கோபதர் :—நண்பரே, முண்டகோபநிஷத் முதல் முண்டகத்தில் இரண்டாவது கண்டத்தை விவரித்துக் கூறினால் சீடர்களின் ஸந்தேஹம் பறந்துவிடும்.

அங்கிரஸ் :— நண்பரே. அங்ஙனமே செய்கிறேன். ஸௌம்யர்களே! கேளுங்கள்.

तदेतत्सत्यं मन्त्रेषु कर्माणि कवयो यान्यपश्यं-
स्तानि त्रेतायां बहुधा सन्ततानि ।

तान्याचरथ नियतं सत्यकामा

एष वः पन्थाः सुकृतस्य लोके ॥

ததேதத் ஸத்யம் மந்த்ரேஷு கர்மாணி கவயோ யாந்யபச்யம்-

ஸ்தாநி த்ரேதாயாம் பஹுதா ஸந்ததாநி l

தாந்யாசரத நியதம் ஸத்யகாமா

ஏஷ வ: பந்தா: ஸுக்ருதஸ்ய லோகே ll

இப்போது கூறுவது ஸத்யம், உண்மை. வேத மந்திரங்களில் குறிப்பிட்டுள்ள கர்மாக்களை மேதாவி களான வஸிஷ்டர் முதலான ரிஷிகள் கண்டார்கள். அவைகள் மூன்று வேதங்கள் ஸம்பந்தப்பட்ட காரியங் களால் பலவாருக விரிவு அடைந்துள்ளன. அவைகளி லிருந்து நிச்சயமேற்படும் பயனில் இச்சையுடன் எப்பொழுதும் கர்மாக்களைச் செய்யுங்கள். புண்யபலன் கிடைக்க இதுவே வழியாகும். இது மந்திரார்த்தம். இனி விபரமாகக் கூறுகிறேன்.

வாஜபேயி:— ஸ்வாமீ! அப்படியே உபதேசியுங்கள்.

அங்கிரஸ்:— எல்லாக் காலங்களிலும் மாருமல் அழியாமல் அக்ஷரமாக இருப்பதால் முன்பு ப்ரஹ்மத்தை ஸத்யமென்று சொன்னேம். இப்பொழுது கர்மாவை ஸத்யமென்று சொல்வது அந்தக் கருத்தில் அல்ல. கர்மாவைச் செய்தால் அதன் பலன் கட்டாயமாக ஏற்படும் என்ற கருத்தில் தான் இதை ஸத்யமென்று கூறுகிறது. கர்மமோ அதன் பலனே ப்ரஹ்மம் மாதிரி அழியாமலிருக்கக்கூடியதல்ல. ஞானிகள் வேதமந்திரங் களின் மூலமாய் பல கர்மாக்களைக் கண்டறிந்தனர். அவைகள் ருக், யஜுஸ், ஸாமம் என்ற மூன்று வேதங் களிலும் பலவாருக விவரிக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் கர்மபலன்களை நாடினுல் கர்மாக்களை எப்போதும் அனுஷ்டியுங்கள். நிச்சயமாக பலன் கிடைக்கும் புண்ய உலகங்களுக்குச் செல்ல இதுவே உங்களுக்கு சிறந்தவழி ஒரே மார்க்கம்.

சௌனகர் :— குருநாதரே! த்ரேதாயாம் என்ற பதத்திற்கு 'த்ரேதாயுகத்தில்' என்று பொருள் நினைத்தேன் நான். அதில் தவறு உண்டோ?

கோபதர் :— தவறு ஒன்றுமில்லை. ஹோதாவின் கர்மாக்கள் ருக்வேதத்திலும், அத்வர்யுவின் கார்யங்கள் யஜுர்வேதத்திலும், உத்காதாவின் கார்யங்கள் ஸாம வேதத்திலும் விதிக்கப்பட்டிருக்கின்றன. இதைக் கொண்டுதான் மூன்று பிரகாரமான வேதங்களில் என்று பொருள் கூறினர் நண்பர். நீர் சொல்வது போல் திரேதாயுகம் என்று பொருள் கொண்டால், திரேதாயுகத்தில் கர்மங்கள் பலவிதமாய் விருத்தி அடைந்து விஸ்தாரமாகச் செய்யப்பட்டன என்ற அர்த்தம் வரும். அதிலும் தப்பில்லை.

ஸோமயாஜி :— வேதங்களில் சொல்லப்பட்ட கர்மங்கள் அவசியம் செய்யத்தகுந்தவை என்றும், அவையே பலனில் இச்சையுடையவர்களுக்குப் புண்ய லோகங்களை அடையச்செய்யும் ஒரே வழி என்றும் தெரிந்துகொண்டோம். மேலும் தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகிறேன்.

அங்கிரஸ் :—ஸௌம்யர்களே, கர்மாக்களைச் செய்வது மிகவும் சிரமம். செவ்வையாகச்செய்தால்தான் நல்ல பலன் கிடைக்கும். ஏதாவது குறையோ தவறோ ஏற்பட்டால் நல்ல பலன் கிடைக்காது என்பதுவுமன்றி தீயபலன் கிட்டும். ஆகவே ரொம்ப ஜாக்ரதையாக சிரத்தையாக கூடுதல் குறைவு இன்றி கர்மங்களை செய்ய வேண்டும். உதாரணமாக அக்னிஹோத்ரம் சாதாரண மான ஒரு கர்மா. அதையே ரொம்ப கவனமாகச்செய்ய வேண்டுமென்று ச்ருதி கூறுகிறது. பின் பெரிய யாகங்களைப்பற்றிச் சொல்வானேன்.?

ஸோமயாஜி :—அக்னிஹோத்ரம்பற்றி வேதம் என்ன கூறுகிறது? ஸ்வாமீ!

அங்கிரஸ் :— यथा लेलायते ह्यर्चिः समिद्धे हव्यवाहने ।
तदाज्यभागावन्तरेणाहुतीः प्रतिपादयेत् ॥

யதா லேலாயதே ஹ்யர்சி: ஸமித்தே ஹவ்யவாஹநே I
ததாஜ்யபாகாவந்தரேணாஹுதீ: ப்ரதிபாதயேத் II

புகைந்துகொண்டிருக்கும் அக்னியில் ஆஹுதி செய்யக்கூடாது. நன்ருக ஜ்வாலைவிட்டு எரியும்போது இரண்டு ஆஜ்ய பாகங்களுக்கும் மத்தியில் பிராதக் காலத்திலும் ஸாயங்காலத்திலும் ஆஹுதிகள் செய்யப் படவேண்டும்.

கோபதர் :— ஸௌம்யர்களே! அக்னயே ஸ்வாஹா என்று வடக்கிலும், ஸோமாய ஸ்வாஹா என்று தெற்கிலும் செய்யும் இரண்டு ஹோமங்கள் ஆஜ்ய பாகங்கள் எனப்படும். இந்த இடங்களுக்கு நடுவில் அக்னிஹோத்ர ஆஹுதிகள் செய்யப்படவேண்டும். சௌனகருக்கும் அவருடைய நண்பர்களுக்கும் இந்த விவரங்கள் நன்கு தெரிந்திருக்கும். மற்ற சீடர்களுக்காக விளக்கம் கூறினேன்.

சௌனகர் :— ஸ்வாமீ! இதுவிஷயம் எங்களுக்குத் தெரியும். மேலும் தொடர்ந்து உபதேசிக்கவேண்டும்.

அங்கிரஸ் :— यस्याग्निहोत्रमदर्शमपौर्णमास-
मचातुर्मास्यमनाग्रयणमतिथिवर्जितं च ।
अहुतमवैश्वदेवमविधिना हुत-
मासप्तमांस्तस्य लोकान्हिनस्ति ॥

யஸ்யாக்நிஹோத்ரமதர்சமபௌர்ணமாஸம்
அசாதுர்மாஸ்யமநாக்ரயணமதிதிவர்ஜிதம் ச I
அஹுதமவைச்வதேவமவிதிநா ஹுத-
மாஸப்தமாம்ஸ்தஸ்ய லோகாந் ஹிநஸ்தி II

அக்னிஹோத்ரம் செய்து வருபவன் பிராணன் உள்ளவரை அவசியம் செய்ய வேண்டியவைகளாக சில கர்மாக்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன அதாவது தர்சம், பௌர்ணமாஸம் என்ற அமாவாஸைக்கு மறுதினத்திலும் பௌர்ணமிக்கு மறுதினத்திலும் செய்யவேண்டிய இரண்டு இஷ்டிகள், சாதுர்மாஸ்ய யாகம், சரத் முதலான ருதுக்களில் செய்யும் ஆக்ரயணகர்மா, தினமும் செய்யும் அதிதி பூஜை, இவைகளைச் செய்யாமலும் உரிய காலத்தில் ஹோமம் செய்யாமலும் வைச்வதேவம் செய்யாமலும், முறைப்படி செய்யாமலுமிருந்துகொண்டு அக்னிஹோத்ரத்தை மட்டும் செய்து வந்தால் அது ஏழு லோகங்களையும் தடைப்படுத்தும். முறைப்படி சிறிதும் வழுவாமல் கர்மாக்களைச் செய்தால்தான் நிச்சயமாகப் பலனையடையலாம். சிறிது தவறினும் பலன் கிடைக்காது சிரமம்தான் மிச்சம். விதிப்படி செய்வது மிகவும் கஷ்டம்.

சௌனகர் :—நன்றாயிருக்கிறது, கர்மாக்களின் கதி ! கிணறுவெட்ட பூதம் புறப்பட்டதுபோல் அல்லவா இருக்கிறது. அக்னிஹோத்ரம் செய்வதற்கே இவ்வளவு சிரமமா ?

வாஜபேயி :—ஸ்வரம் மாறியதனால் கெடுதல் உண்டாயிற்று என்று புரோஹிதர் சொல்லியிருக்கிறார். இந்திரனைக்கொல்ல விருத்திரனை உண்டாக்கச்செய்த யக்ஞத்தில் ஸ்வரம் மாறியதால் இந்திரனால் கொல்லப் படத்தக்க விருத்திரன் தோன்றினனல்லவா !

ஸோமயாஜி :—ஆமாம், நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

சௌனகர் :—ஏழு லோகங்களையும் நாசப்படுத்தும் என்று கூறினீர்களே, ஏழு லோகங்கள் என்றால் என்ன ?

அங்கிரஸ் :—பூலோகம் முதல் ஸத்யலோகம் வரை உள்ள ஏழு லோகங்களின் புண்ணிய ஸுகத்தை இல்லாமலாக்கும். அல்லது, பிண்ட தானத்தால்

ஸம்பந்தப்பட்ட பிதா, பாட்டன், முப்பாட்டன் மூன்று, தான் ஒன்று, பின் புத்ரன், பௌத்ரன், ப்ரபௌத்ரன் மூன்று. ஆக ஏழு பேர்கள் மூலம் கிடைக்கும் உபகாரங்களையும் நாசப்படுத்தும. அக்னிஹோத்ர கர்மாவை சரிவர செய்யாவிட்டாலும் தீங்கு நமக்கு மட்டுமல்ல; முன் தலைமுறைகள் மூன்று, பின் தலை-முறைகள் மூன்று இவர்களுக்கும் தீமையேதான்.

काली कराली च मनोजवा च सुलोहिता या च सुधूम्रवर्णा।
स्फुलिङ्गिनी विश्वरुची च देवी लेलायमाना इति सप्त जिह्वाः ॥

காளீ கராளீ ச மநோஜவா ச
ஸுலோஹிதா யா ச ஸுதூம்ரவர்ணா ।
ஸ்புலிங்கிநீ விச்வருசீ ச தேவீ
லேலாயமாநா இதி ஸப்த ஜிஹ்வா: ॥

தவிரவும் அக்னிக்கு ஏழு நாக்குகள் உண்டு காளீ, கராளீ, மனோஜவா, ஸுலோஹிதா, ஸுதூம்ரவர்ணா, ஸ்புலிங்கினீ, விச்வருசீ என்பனவாம். இந்த ஜ்வாலைகள் பலவிதமான (நெய், ஹவிஸ் போன்ற) ஆஹுதிகளை கிரகிக்கின்றன.

வாஜபேயி :—அந்தப் பெயர்களின் பொருள்களை விளக்கவேண்டுகிறேன்.

கோபதர் :— அசைந்தாடும் ஏழு ஜ்வாலைகளுடைய பெயர்களின் விபரம் கேளுங்கள். காளீ-கருப்புநிறம், கராளீ-பயங்கரமானது, மனோஜவா-மனதைப்போல் வேகமாக கிளம்புவது, ஸுலோஹிதா-சிவப்புநிறமானது ஸுதூம்ரவர்ணா-புகைசூழ்ந்த நிறம், ஸ்புலிங்கினீ-தீப்பொறிகளுடன் கூடியது, விச்வருசீ பல ஒளியுள்ளது அக்னியின் ஜ்வாலையைப்பற்றி இவ்வளவு விரிவாகச் சொன்னது வேறு ஓரிடத்திலுமில்லை.

சௌனகர் ;— கர்மாக்களை சரிவரச் செய்யாவிட்டால் அடையும் பலனைப்பற்றிக் கூறினீர்கள் சரியாகச்

செய்தால் கிடைக்கும் பலனைப்பற்றியும் கூறவேண்டுகிறேன்.

அங்கிரஸ் :— एतेषु यश्चरते भ्राजमानेषु
यथाकालं चाहुतयो ह्याददायन् ।
तं नयन्त्येताः सूर्यस्य रश्मयो
यत्र देवानां पतिरेकोऽधिवासः ॥

ஏதேஷு யஸ்சரதே ப்ராஜமாநேஷு
யதாகாலம் சாஹுதயோ ஹ்யாததாயன் ।
தம் நயந்த்யேதா: ஸூர்யஸ்ய ரச்மயோ
யத்ர தேவாநாம் பதிரேகோऽதிவாஸ: ॥

முன் சொன்னபடி அக்னி நன்ருக ஜ்வலித்துக் கொண்டிருக்கும்போது அதில் யதாகாலத்தில் செய்யப்படும் ஆஹுதிகள், ஸூர்யகிரணங்கள் வழியாக யஜமானனைக் கொண்டுபோய் தேவராஜன் இந்திரன் இருக்கிற ஸ்வர்க்கத்தில் சேர்க்கின்றன.

வாஜபேயியும் ஸோமயாஜியும் :— ரொம்ப சந்தோஷம் தாங்கள் செய்த யாகங்கள் வீண்போகாது சௌனகரே, நாங்களும் கவலைப்படவேண்டாம். தங்களுக்கும் ஸ்வர்க்கவாஸம் நிச்சயம். தேவேந்திரன் பக்கத்திலேயே ஆஸனம் ஸித்தம்.

கோபதர் :- ஸௌம்யர்களே, இதுமட்டுமல்ல இன்னும் கேளுங்கள். அங்கு நடக்கும் வரவேற்பு வைபவத்தை.

அங்கிரஸ் :— एह्येहीति तमाहुतयः सुवर्चसः
सूर्यस्य रश्मिभिर्यजमानं वहन्ति ।
प्रियां वाचमभिवदन्त्योऽर्चयन्त्य
एष वः पुण्यः सुकृतो ब्रह्मलोकः ॥

ஏஹ்யேஹீதி தமாஹுதய: ஸுவர்சஸ:
ஸூர்யஸ்ய ரச்மிபிர் யஜமாநம் வஹந்தி ।

ப்ரியாம் வாசமபிவதந்த்யோऽர்சயந்த்ய
ஏஷ வ: புண்ய: ஸுக்ருதோ ப்ரஹ்மலோக: ॥

பிரகாசிக்கும் ஆஹுதிகள், "வருக, வருக, தங்களுடைய புண்ணிய கர்ம விசேஷத்தால் ஏற்பட்ட ஸ்வர்க்கலோகம் இதுவேயாகும்" என்று பிரிய வசனங்கள் கூறிக் கொண்டாடி யஜமானருக்கு உபசாரங்கள் செய்து ஸூர்யரச்மி வழியாக சுமந்து செல்கின்றன.

சௌனகர் :—சபாஷ். நல்ல வரவேற்பு வேதத்தில் விதித்த கர்மாக்களை இதுவரை வீணுகச்செய்து வந்தோமே, பலனற்று பழங்கதையாய் போய்விடுமோ என்று அஞ்சினேன் அதற்கும் பலன் இருக்கிறது என்று அறிந்து மகிழ்ச்சிதான்.

வாஜபேயி :—நல்ல வர்ச்சஸ் உள்ள ஆஹுதிகள் யஜமானனை வா, வா, என்று அழைத்து, சுமந்து செல்கின்றன. அன்பு மொழிகள் கூறுகின்றன. மரியாதை செய்கின்றன. இந்த ஸ்வர்க்கம் உங்களுடைய புண்யம் என்று சொல்லுகின்றன. இதைவிட வேறு என்ன வேண்டும்? புரோஹிதர் சொன்னதும் சரியாகத்தான் இருக்கிறது.

ஸோமயாஜி :— ஆயுள் பூராவும் இந்த கர்மாக்களை விதிப்படி பண்ணிக்கொண்டிருந்தால் நிரந்தரமாக ஸ்வர்க்க வாசம் ஸித்தமாய்விடுமே!

அங்கிரஸ் :— ஸௌம்யர்களே, மேலும் தொடர்ந்து உபதேசிக்கிறேன். இந்த கர்மாக்கள் நச்வரமானவை. ச்ருதி கூறுவதைக் கேளுங்கள். அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்து விடாதீர்கள்.

प्लवा ह्येते अदृढा यज्ञरूपा अष्टादशोक्तमवरं येषु कर्म ।
एतच्छ्रेयो येऽभिनन्दन्ति मूढा जरामृत्युं ते पुनरेवापि यन्ति ॥

ப்லவா ஹ்யேதே அத்ருடா யக்ஞரூபா
அஷ்டாதசோக்தமவரம் யேஷு கர்ம ।

ஏதத் ச்ரேயோ யேऽபிநந்தந்தி மூடா
　　ஜராம்ருத்யும் தே புநரேவாபி யந்தி ॥

18 பேர்களைச் சேர்த்துக்கொண்டு செய்யவேண்டியதாக உள்ள யக்ஞரூபமான இந்தக் கர்மா தாழ்ந்தது. இந்த யாகமாகிற படகுகள் திடமற்றவை. ஸம்ஸாரக் கடலில் மூழ்கிப்போய்விடும். இதில் ஏறியிருப்பவர்களையும் மூழ்கடித்துவிடும். இதையே பெரும்பேருக நினைத்து எவர்கள் மகிழ்ச்சியுறுகின்றார்களோ, அவர்கள் முழு மூடர்கள். அவர்கள் மீண்டும் மீண்டும் ஜனன மரணங்களை அடைகின்றார்கள்.

ஸோமயாஜி :— 18 பேர்கள் யாவர்?

கோபதர் :-ருத்விக்குகள் 16, யஜமானன் 1, பத்னீ 1. ஆக 18 பேர்களைக் கொண்டு செய்யப்படுவது யாகம். இந்த யாகங்களைச் செய்தவர்கள் புண்யத்தின் பலனை சிலநாட்கள் ஸ்வர்க்கத்தில் இருந்து அனுபவித்துப் பின் பிறப்பு இறப்பு என்ற ஸம்ஸாரத்தை அடைகின்றார்கள்.

அங்கிரஸ் :—

अविद्यायामन्तरे वर्तमानाः स्वयं धीराः पण्डितंमन्यमानाः ।
जङ्घन्यमानाः परियन्ति मूढा अन्धेनैव नीयमाना यथान्धाः ॥

அவித்யாயாமந்தரே வர்தமாநா:
　　ஸ்வயம் தீரா: பண்டிதம்மந்யமாநா: ।
ஜங்கந்யமாநா: பரியந்தி மூடா
　　அந்தேநைவ நீயமாநா யதாந்தா: ॥

அவித்யையின் மத்தியில் ஆழ்ந்தவர்களாக, அதாவது சிறிதும் விவேகமில்லாதவர்களாக இருந்தும் இவர்கள் பண்டிதர்களாகவும் ஞானவான்களாகவும் தம்மைத் தாமே எண்ணிக்கொண்டு ஏமாந்து போகின்றனர். இவர்களைப்போன்ற மூடர்களும்

உண்டோ? குருடன் பின்னால் போகும் குருடர்கள் முள்ளிலும் பள்ளத்திலும் விழுந்து தவிப்பதுபோல் ஞானமில்லாத கர்மிகளும் ஒருவருக்கொருவர் வழி காட்டிக்கொண்டு பிணி, மூப்பு, மரணம் நிறைந்த இந்த ஸம்ஸாரக் குழியில் விழுந்து துன்புற்று வெளியேறமுடியாமல் சுற்றிச்சுற்றி வருகிறார்கள்.

வாஜபேயி :— நாம் சற்று முன்பு இந்த நிலையில்தானே இருந்தோம்.

ஸோமயாஜி :—நமது நிலையை அப்படியே ஓவியமாகத் தீட்டிக்காட்டிவிட்டது வேதம்.

அங்கிரஸ் :— अविद्यायां बहुधा वर्तमाना
वयं कृतार्था इत्यभिमन्यन्ति बालाः ।
यत्कर्मिणो न प्रवेदयन्ति रागा-
त्तेनातुराः क्षीणलोकाश्च्यवन्ते ॥

அவித்யாயாம் பஹுதா வர்தமாநா
வயம் க்ருதார்த்தா இத்யபிமந்யந்தி பாலா: 1
யத்கர்மிணோ ந ப்ரவேதயந்தி ராகாத்
தேநாதுரா: க்ஷீணலோகாஸ்ச்யவந்தே 11

சிறுவர்கள்போல் அக்ஞானத்தில் அதிகமாய் ஆழ்ந்துபோன இவர்கள் தம்மை க்ருதார்த்தர்களாக மதித்துக்கொள்கின்றனர். காம்யகர்ம பலன்களில் பற்றுக்கொண்டு ஆசையால் தூண்டப்பட்டு கர்மாக்களைச் செய்யுமிவர்கள் உண்மையை உணர்வதில்லை. அக்காரணத்தால் துன்பமடைகின்றார்கள். அழியும் ஸ்வர்க்காதி லோகங்களையடைந்து புண்யம் தீர்ந்தவுடன் அங்கிருந்து கீழே நழுவி விழுகின்றனர். இன்ப நுகர்ச்சியிலும், உயர் பதவியிலும் ஆழ்ந்த பற்றுக்கொண்டதால் விவேகத்தை இழந்துவிடுகின்றார்கள். இவர்களுக்கு நிச்சயபுத்தியே உள்ளத்தில் உதிக்காது.

சௌனகர் :—குருநாதரே ! கர்மடர்களின் அவிவேக நிலையை அழகாக எடுத்துரைத்தீர்கள். மேலும் இவர்களைப்பற்றி ச்ருதி என்ன கூறுகிறது ?

அங்கிரஸ் :—

इष्टापूर्तं मन्यमाना वरिष्ठं नान्यच्छ्रेयो वेदयन्ते प्रमूढाः ।
नाकस्य पृष्ठे ते सुकृतेऽनुभूत्वा इमं लोकं हीनतरं वा विशन्ति ॥

இஷ்டாபூர்த்தம் மந்யமாநா வரிஷ்டம்
　　நாந்யத ச்ரேயோ வேதயந்தே ப்ரமூடா:
நாகஸ்ய ப்ருஷ்டே தே ஸுக்ருதேऽநுபூத்வா
　　இமம் லோகம் ஹீநதரம் வா விசந்தி ॥

இவர்கள் மஹா மூடர்கள். ஏனென்றால் வேதத்தில் சொல்லப்பட்ட 'இஷ்டம்' ஸ்மிருதிகளில் கூறப்பட்ட 'பூர்த்தம்' என்ற கர்மங்களையே ஸர்வோத்தமமாக எண்ணுகின்றனர். வேறொரு வஸ்துவையும் ச்ரேயஸ்கரமாக நினைப்பதில்லை. ஆகையினால் ஸ்வர்க்கத்தில் கர்மபலனாகிற இன்பங்களைத் துய்த்தபின்னர் மனித உலகிலோ இன்னுந்தாழ்ந்த பிறவியிலோ பிறக்கின்றனர்

ஸோமயாஜி :— இஷ்டாபூர்த்தங்களைப்பற்றி விவரிக்க வேண்டுகிறேன் ஸ்வாமி !

அங்கிரஸ் :— இஷ்டம், என்பது யாகாதி ச்ரௌத கர்மங்கள். பூர்த்தம் என்பது ஏரி கிணறு வெட்டுவது, தோட்டம்வைத்தல் முதலிய ஸ்மார்த்த கர்மங்கள். நாம் செய்ய நினைக்கும், செய்யும் நற்கர்மாக்கள் எல்லாம் இவையில் அடங்கும். இஷ்டா பூர்த்த கர்மாக்களே ச்லாக்யமென்றும், வேறு ஒன்றும் ச்லாக்யமில்லை என்றும் நினைக்கிற இந்த மூடர்கள் சிறிது காலம் கர்மபலனை ஸ்வர்க்கத்தில் அனுபவித்துப்பின் இவ்வுலகில் மனிதப் பிறவியையோ அல்லது இதனிலும் தாழ்ந்த பிறவியையோ அடைகின்றனர் இப்படி புனரபி ஜனனம் புனரபி மரணம் என்ற சுழலிற்சிக்கி அவதிப்படுகின்றனர்.

கோபதர் :— நண்பரே, இத்துடன் இன்றைய பாடத்தை நிறுத்திக்கொள்வோம், ஸௌம்யர்களும் கேட்டதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டு வரட்டும்.

அங்கிரஸ் :— அப்படியே செய்வோம்.

(திரை விழுகிறது)

காட்சி 4

[திரை விலக முன் காட்சிபோல்]

சௌனகர் :— குருநாதரே! வேதவிஹிதமான கர்மங்களை விதிப்படி சிரத்தையுடன் அனுஷ்டிப்பதால் உயர்ந்த புண்ய லோகங்களை அடையலாம் என்று அறிந்தோம் ஆனால் அந்த ஸுக்ருதங்களும் அழிவு உள்ளவைகள் என்று சொன்னீர்கள். அழிவு இல்லாத பிரஹ்மத்தை அறிய நாம் செய்யவேண்டியது என்ன? அதைப்பற்றி விவரமாகக் கூறவேண்டும்.

அங்கிரஸ் :— ஸௌம்யர்களே! தொடர்ந்து கூறுகின்றேன். கவனமாகக் கேளுங்கள். இதுவரை பிரவிருத்தி மார்க்கத்தில் செயலாற்றியவரின் பலன்களைப் பற்றிக் கூறப்பட்டது. இன்று நிவிருத்தி மார்க்கத்தில் செல்பவன் அடையும் கதியைப் பற்றிக் கூறுகிறேன்.

तपःश्रद्धे ये ह्युपवसन्त्यरण्ये शान्ता विद्वांसो भैक्षचर्यां चरन्तः ।
सूर्यद्वारेण ते विरजाः प्रयान्ति यत्रामृतः स पुरुषो ह्यव्ययात्मा ॥

தப: ச்ரத்தே யே ஹ்யுபவஸந்த்யரண்யே
சாந்தா வித்வாம்ஸோ பைக்ஷசர்யாம் சரந்த: ।
ஸூர்யத்வாரேண தே விரஜா: ப்ரயாந்தி
யத்ராம்ருத: ஸ புருஷோ ஹ்யவ்யயாத்மா ॥

அறிவுடையவர்கள் பிரவிருத்தி மார்க்கத்தைவிட்டு விடுவார்கள். அவர்கள் சாந்தர்களாகவும், ஆரண்ய

வாஸிகளாகவும் இருந்து பிக்ஷையால் கிடைக்கும் உணவை உண்டு காலம் கழிப்பார்கள். இப்படியாக வானப்ரஸ்த தர்மத்தையும் ஸன்யாஸ தர்மத்தையும் சிரத்தையுடன் அவலம்பித்துக்கொண்டு விரஜர்களாய் (புண்யபாபகர்மாக்களில்லாதவர்களாய்) மரணமடையும்போது ஸூர்யமண்டலம் வழியாக, எந்த இடத்தில் அமிருதராகவும் அவ்யயராகவும் உள்ள புருஷன் இருக்கிருனே அந்த இடத்திற்குப்போகிருர்கள்.

வாஜபேயி :— இதுதான் மோக்ஷமா ?

கோபதர் :— இதுதான் பிரம்மலோகம். மரணம் அடைந்தவர்கள் செல்லும் கதி இரண்டுவிதமாக கூறப்பட்டிருக்கிறது, ஒன்று தக்ஷிணமார்க்கம்; இதையே சந்திரமார்க்கம், பித்ருயாணம், தூமாதிமார்க்கம் என்றும் கூறுவார்கள் மற்றென்று உத்தரமார்க்கம், இதை ஸூர்யமார்க்கம், தேவயானம், அர்ச்சிராதி மார்க்கம் என்றும் கூறுவார்கள். இந்திரியங்களை அடக்கிச் சாந்தி எய்தியவர்களாய், அறிவு நிறைந்தவர்களாய் பிக்ஷயில் கிடைத்ததைக்கொண்டு திருப்தியடைந்து, காடுகளில் வாழ்ந்துகொண்டு தமது ஆச்ரம தர்மங்களையும் உபாஸநங்களையும் அனுஷ்டித்துவரும் வானப்ரஸ்தரும், ஸந்யாஸிகளும், ஹிரண்யகர்ப்பாதி உபாஸனங்களைச் செய்துவரும் கிருஹஸ்தர்களும் மாசுநீங்கிய மனத்தினராய் தேவயானம் வழியாகச் சென்று மரணமும் மாறுதலுமில்லாத ஹிரண்யகர்ப்ப புருஷனிருக்கும் பிரம்மலோகத்தை அடைகின்றனர். மஹாப்ரளயம்வரை இவருக்கு அழிவு கிடையாது. அதுவரை இவர்களும் திரும்புவதில்லை. ஆனல் இந்த லோகபிராப்தி மோக்ஷமன்று இங்கு சென்றவர் சுலபமாக முக்தி அடையலாம்.

வாஜபேயி :— பித்ருமார்க்கம் வழியாக யார் செல்கிருர்கள் ? அவர்களின் கதி என்ன ?

அங்கிரஸ் :— அவர்களைப்பற்றி முன் பாடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் திரும்பத்திரும்ப பிறந்தும், இறந்தும் உழல்கின்றனர்.

சௌனகர் :— குருநாதரே! அங்ஙனமாயின் மோக்ஷ இச்சையுள்ளவன் செய்யவேண்டியது என்ன?

அங்கிரஸ :—

परीक्ष्य लोकान् कर्मचितान् ब्राह्मणो निर्वेदमायान्नास्त्यकृतः कृतेन ।
तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत् समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम् ॥

பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதான் ப்ராஹ்மணோ
நிர்வேதமாயாந்நாஸ்த்யக்ருத: க்ருதேந ।
தத்விக்ஞானார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத்
ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் ॥

மோக்ஷத்துக்கு முக்யாதிகாரியாகிய பிராஹ்மணன் மேலே விவரித்தபடி கர்மாவினுல் ஸம்பாதிக்கப்பட்ட லோகங்களைப் பரீக்ஷித்துப் பார்த்து, இந்த ஸம்ஸாரத்தில் யதார்த்தம் ஒன்றுமில்லை என்று ஒழித்து வைராக்யத்தை அடையவேண்டும். பிறகு, அநித்யமான கர்மாக்களால் நித்யமான கூடஸ்தமான பிரஹ்மத்தையடைய முடியாதென்று தீர்மானித்து அதை (பிரஹ்மத்தை) அறியவேண்டியதற்காக ஸமித்பாணியாக, ச்ரோத்ரியராயும், பிரஹ்மநிஷ்டராயுமிருக்கிற குருவைப் போய் அடையவேண்டும்.

கோபதர் :— ஸௌம்யர்களே! இப்போது நீங்கள் இதைத்தான் செய்திருக்கிறீர்கள்.

வாஜபேயி :— குருவில்லாமல் ஸ்வதந்திரமாகப் பிரஹ்மவிசாரணை செய்தால் என்ன; ஞானம்தானே முக்யம்.

அங்கிரஸ் :— அப்படியல்ல. குருமேவ (गुरुमेव) என்ற பதத்தால் கட்டாயம் குருவை அண்டவேண்டும் என்று ச்ருதி கட்டளையிடுகிறது. குருவின் கிருபையில்லாமல் பிரம்மஞானத்தை அடையமுடியாது. தவிரவும் குருவையண்டிக் கற்காமல் தானே கற்றது (ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாததுபோல்) பிரகாசிக்காது. அப்படிப்பட்ட கல்வி ஜாரபுருஷனிடம் கருத்தரித்த ஸ்திரீயின் கர்ப்பம் போலாகும்.

கோபதர் :—இங்கே ச்ருதி குருவுக்கு இரண்டு இன்றியமையாத லக்ஷணங்களைக் கூறுகின்றது. கவனித்தீர்களா ?

சௌனகர் :—ஸ்வாமீ ! கவனித்தேன் குருவானவர் வேதங்களை நன்ருக அத்யயனம் செய்தவராகவும் பிரம்மநிஷ்டராகவும் இருக்கவேண்டும் என்பதை அறிந்தேன்.

கோபதர் :— ஸௌம்யரே ! நீர் அன்று என்னை உபதேசிக்கும்படிக் கூறியபோது நான் மறுத்ததின் காரணம் இதுதான். நான் ச்ரோத்திரியன் தான், ஆனுல் பிரம்மநிஷ்டன் என்று கூறிக்கொள்ளமுடியாது.

அங்கிரஸ்:—நண்பரே ! தாங்கள் பிரம்மநிஷ்டரில்லாவிட்டால் பின் யார்தான் அதற்கு யோக்கியதை உடையவர் ? ஒருவருமில்லை. அடக்கமாகச் சொல்லுகின்றீர்கள் நீங்கள்.

சௌனகர் :—குருநாதரே, மேலும் தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகிறேன்.

அங்கிரஸ்:—

तस्मै स विद्वानुपसन्नाय सम्यक् प्रशान्तचित्ताय शमान्विताय ।
येनाक्षरं पुरुषं वेद सत्यं प्रोवाच तां तत्त्वतो ब्रह्मविद्याम् ॥

தஸ்மை ஸ வித்வாந் உபஸந்நாய ஸம்யக்
ப்ரசாந்த சித்தாய சமாந்விதாய ।
யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம்
ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரஹ்மவித்யாம் ॥

இந்த மந்திரத்தில் சிஷ்யர்கள் எங்ஙனமிருக்க வேண்டுமென்று கூறப்படுகிறது. தன்னைத் தக்க முறையில் அணுகியவனும், நன்கு சாந்தி எய்திய மனமுடையவனும், கருவி கரணங்கள் அடங்கியவனும் ஆகிய சீடனுக்கு அந்த ஞானகுரு, எதனுல் ஸத்யமும் அக்ஷரமுமான பரமபுருஷனை அவன் அறிவானே அந்த பிரம்மஞானத்தை உள்ளபடி உணர்த்துவார்.

வாஜபேயி :— ஸமித்து எதற்காக சீடர் கொண்டு போகவேண்டும்? அதன் உட்கருத்து என்ன?

ஸோமயாஜி :— சிஷ்யர்களுக்கு என்ன என்ன யோக்கியதைகள் இருக்கவேண்டும்? விபரமாகக்கூற வேண்டும் ஸ்வாமீ!

அங்கிரஸ் :— குருவிற்குப்போல் சிஷ்யனுக்கும் இரண்டு லக்ஷணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. சாந்த சித்தமுள்ளவனாக இருக்கவேண்டும். கர்வம் முதலிய தோஷங்களில்லாமல் சித்தம் அமைதியாக இருக்க வேண்டும். தவிரவும், சமஸம்பன்னனாகவும் இருக்க வேண்டும். அதாவது, பொறிகளும் புலன்களும் அடங்கி ஸர்வத்திலும் விரக்தியுடையவனாகவும் இருக்க வேண்டும். நான் சாந்தியடைந்துவிட்டேன், சமத்தை எய்திவிட்டேன் என்று கூருமல் கூறுவதுபோல், கையில் உலர்ந்த ஸமித்துக்களைக்கொண்டு போக வேண்டும். ஸமித்துக்கள் உலர்ந்துபோயிருப்பதுபோல் சீடனின் நப்பாசைகள் உலர்ந்துவிட்டன என்பதைக் கையிலுள்ள ஸமித்துக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

கோபதர் :— இப்படியாக யோக்யதையுடைய சிஷ்யர்கள் பிரஹ்மநிஷ்டராகவும், ச்ரோத்ரியராகவும் உள்ள குருவை முறைப்படி அண்டி சரணடைந்து பிரச்னம் பண்ணினுல், அந்த ஸத்குரு, பிரஹ்ம ஞானத்தை உபதேசிக்கவேண்டும் என்று கட்டளை யிடுகிறது. இது விதி. தகுந்த சிஷ்யனுக்கு உபதேசிக்க முடியாது என்று குரு சொல்லக்கூடாது.

அங்கிரஸ் :— ஸௌம்யர்களே! இதுவரை அபரா வித்யையைப்பற்றி விவரமாகக் கூறினேன். இனி பரா வித்யையைப்பற்றி அதாவது பிரம்மத்தைப்பற்றி உபதேசிக்கவேண்டும். நீங்கள் ச்ருதி கூறியபடி தகுந்த யோக்கியதையுடைய சிஷ்யர்கள். உங்களுக்கு உபதேசம் செய்வதை பெரும் பேருகக் கருதுகின்றேன். ஸத்சிஷ்யர்களை அவித்யாஸாகரத்திலிருந்து கரையேற்ற வேண்டியது ஒரு குருவின் கடமையாகும். அதை நான்

எனக்குத் தெரிந்தவரையில் செய்கிறேன். செய்ய முயற்சிக்கின்றேன். அதில் வெற்றிபெற என்னுடைய அருமை நண்பர் கோபதரின் ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன்.

கோபதர் :—பழம் நழுவிப்பாலில் விழுந்தது போலவும் சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்தது போலவும் நல்ல குருவும் நல் சீடர்களும் கூடியிருக்கின்றீர்கள். இந்த ஸபையில் நான் பங்கு பெறுவதே பெரும் அதிருஷ்டமாகும்.

அங்கிரஸ் :—சீடர்களை அழைத்துவந்ததே, நண்பர் கோபதர்தானே. பெருமையும் சிறப்பும் எல்லாம் அவரையே சாரும். மாத்யான்ஹிக காலம் வந்து விட்டது. இத்துடன் பாடத்தை நிறுத்திக்கொள்ளுவோம்.

(திரை விழுகிறது)

இரண்டாவது அங்கம் முற்றும்.

மூன்ருவது அங்கம்

காட்சி 1

(திரை விலக)

[முன் காட்சிபோல் எல்லோரும் அமர்ந்து ஸம்பாஷித்துக் கொண்டிருக்கின்றனர்.]

கோபதர் :— நண்பரே! முறைப்படி தன்னை வந்து அடைந்த முக்யாதிகாரியான சீடனுக்கு ப்ரஹ்ம வித்யையை உபதேசிக்கவேண்டியது ஸத்குருவின் கடமையென்று நேற்று தாங்கள் கூறினீர்கள். சௌனகர் முதலியவர்கள் பண்பட்ட சிஷ்யர்கள். ப்ரஹ்மோபதேசம் பெற வந்திருக்கின்ருர்கள். ஏற்-கெனவே ப்ரச்னமும் பண்ணியாய்விட்டது. உபதேசங்களைத் திருவாய் மலர்ந்தருள வேண்டுகிறேன்.

அங்கிரஸ் :—நண்பரே! மதிப்புடைய மாண்புமிக்க, மதிநலம் நிறைந்த அன்பரே. அப்படியே செய்கிறேன். ஸௌம்யர்களே! கவனமாகக்கேளுங்கள். இதுவரை அபரா வித்யையைப்பற்றிய முழுவிபரமும் சொன்னேன். இந்த அஸாரமான ஸம்ஸாரத்தின் காரணமாகவும் ஸாரபூதமாகவும் இருப்பது பிரம்மம். அந்த அக்ஷரமான அழியாத பிரம்ம வஸ்துவிலிருந்து தோன்றியதே இந்த ஸம்ஸாரம். இது அதிலேயே தோன்றி அதிலேயே விளங்கி அதிலேயே லயமடைகின்றது. அந்த அக்ஷர பிரம்மமே ஸத்யம். அதை அறிந்துவிட்டால் எல்லாம் அறிந்தவனாகிருன். அப்படிப்பட்ட தத்வத்தை இன்று பலகோணங்களிலிருந்து பலவாருக, பல உதாரணங்களுடன் விளக்கிச் சொல்லுகின்றேன். ஏதாவது குறைகள் ஏற்படுவதை நிவர்த்திக்கும்படி நண்பர் கோபதரையும் கேட்டுக்கொள்ளுகின்றேன். இனி ச்ருதிக்கு வருவோம்.

तदेतत्सत्यं यथा सुदीप्तात्पावकाद्विस्फुलिङ्गाः सहस्रशः प्रभवन्ते सरूपाः ।
तथाक्षराद्विविधाः सोम्य भावाः प्रजायन्ते तत्र चैवापियन्ति ॥

தததேதத் ஸத்யம் யதா ஸுதீப்தாத் பாவகாத்
விஸ்புலிங்கா: ஸஹஸ்ரச: ப்ரபவந்தே ஸரூபா: ।
ததாக்ஷராத் விவிதா: ஸோம்ய பாவா:
ப்ரஜாயந்தே தத்ர சைவாபியந்தி ॥

அதாவது அது ஸத்யம். எப்படி மிகுந்த ஜ்வாலையுள்ள அக்னியிலிருந்து அநேகம் அக்னிப்பொறிகள் ஆயிரக்கணக்கில் கிளம்புகின்றனவோ, அப்படியே அக்ஷரப் பிரம்மத்திலிருந்து நாநாவிதமான ஜீவர்கள் உண்டாகின்றன. அதிலேயே அடங்குகின்றன.

கோபதர் :— ரொம்ப சிலாக்கியமான உதாரணம். கொழுந்துவிட்டு எரியும் நெருப்பிலிருந்து தீப்பொறிகள் வெளியே (காற்றடிக்கும்போது) பறக்கின்றன. கொஞ்சநேரம் பறந்துவிட்டு பின் சாம்பலாகி அந்தப் பெருந்தீயிலேயே விழுகின்றன. அதுபோல் மாயை என்னும் காற்று வீசும்போது பிரம்மத்திலிருந்து சிருஷ்டி ஏற்படுகிறது. ஸௌம்யர்களே நன்ருக விளங்கிவிட்டதல்லவா? ஏதாவது ஸந்தேகம் இருந்தால் கேளுங்கள்.

சௌனகர் :— ஸ்வாமீ! அபராவித்யைபற்றிக் கூறும் போதும் அது ஸத்யம் என்று சொல்லப்பட்டது. இப்போது அக்ஷரபிரம்மத்தைப்பற்றிச் சொல்லும் போதும் அதுவே ஸத்யம் என்று சொல்லுகிறீர்கள். ஒரே சமயத்தில் இரண்டும் எப்படி ஸத்யமாக இருக்கமுடியும்?

அங்கிரஸ் :— ஸபாஷ், சௌனகரே! ஸாதுவான கேள்வி. விடை கூறுகிறேன். எல்லோரும் கவனமாய்க் கேளுங்கள். அபராவித்யையின் கார்யமான ஸம்ஸாரம் எந்த அக்ஷரமாகிய மூலகாரணத்தினின்றும் உண்டாகியதோ, எதில் லயமாகிறதோ அந்த அக்ஷரபுருஷன்—பிரஹ்மம்-தான் ஸத்யம். அபராவித்யையின் விஷயமான ஸம்ஸாரம் ஆபேக்ஷிக ஸத்யம். பராவித்யையின் விஷயமான பிரஹ்மம் நிரபேக்ஷ ஸத்யம். அதாவது, 'ஸத்யஸ்ய ஸத்யம் பரமார்த்த ஸத்யம்' என்று பொருள். ஸம்ஸாரம் 'வியவஹார ஸத்யம்' இதுதான் வித்யாஸம்.

வாஜபேயி :— குருநாதரே! அங்ஙனமாயின் அபரா வித்யையின் விஷயமான கர்மபலன்களை (ஸம்ஸாரம்) ஸத்யமென்று எதற்காகச் சொல்லவேண்டும்?

அங்கிரஸ் :— நம்மேல் உள்ள கருணையினால் நாம் எல்லோரும் கடைத்தேறவேண்டுமென்ற உள்ளன்பால் தான் வேதமாதா இவ்விதம் கூறுகின்றாள். வர்ணாச்ரம முறைப்படியுள்ள கர்மங்களை ஸரிவர அனுஷ்டித்துத் தான்சித்தசுத்தி ஏற்பட்டு ஞானமார்க்கத்தை அணுக முடியும். அதில்லாமல் கர்மங்களையும், அதன் பலன் களையும் பொய் என்று சுருதி ஆரம்பத்திலேயே சொல்லி விட்டால் அவைகளை ஒருவரும் அனுஷ்டிக்கமாட்டார்கள். எல்லோரும் மோக்ஷத்திற்கு ஞானம்தானே வேண்டும் என்று தியானிப்பதாகச் சொல்லி உட்கார்ந்து கண்மூடி மௌனியாகித் தூங்கிவிடுவார்கள். அப்படியாகாமல் காப்பாற்றுவதற்காகப் படிப் படியாக ச்ருதி உபதேசிக்கிறது.

சௌனகர் :—ஸ்வாமீ! நன்றாக விளங்கிவிட்டது தொடர்ந்து உபதேசிக்கவேண்டுகிறோம்.

அங்கிரஸ் :—இப்போது பரம்பொருளின் — பிரம்மத் தின் பாரமார்த்திக ஸ்வரூபத்தை விளக்குகின்றேன்.

दिव्यो ह्यमूर्तः पुरुषः सबाह्याभ्यन्तरो ह्यजः ।
अप्राणो ह्यमनाः शुभ्रो ह्यक्षरात्परतः परः ॥

திவ்யோ ஹ்யமூர்த: புருஷ: ஸபாஹ்யாப்யந்தரோ ஹ்யஜ: I
அப்ராணோ ஹ்யமநா: சுப்ரோ ஹ்யக்ஷராத் பரத: பர: II

அந்த பிரஹ்மபுருஷன் திவ்யமான ஒளி நிறைந் தவன், உருவில்லாதவன். உள்ளும் புறமும் ஒருங்கே இருப்பவன். பிறவாதவன். பிராணனில்லாதவன். மனதுமில்லாதவன். பரிசுத்தன். அக்ஷரமாகிய அவ்யாக்ருதத்திற்கும் மேலானவன்.

ஸோமயாஜி :— ஐயனே! மந்திரங்களின் பொருளைக் கூறினீர்கள். கருத்தை விபரமாகக் கூறவேண்டும்.

வாஜபேயி :— ஒளி நிறைந்தவன், பரிசுத்தன் என்ற பதங்களுக்கு விசேஷ உரைகள் கூறப்பிரார்த்திக்கிறேன்.

சௌனகர் :— ஸ்வாமீ! அவ்யாகிருதத்திற்கும் மேற்பட்டவன் என்றால் என்ன? விபரமாகச் சொல்ல வேண்டும்.

அங்கிரஸ் :— திவ்யமான ஒளி என்றால் ஸ்வயம் பிரகாசமான வெளிச்சம். பிறிதொரு பொருளை (தீபம், ஸூர்யன், சந்திரன் போன்றவைகளை) அபேக்ஷிக்காமல் தான் பிரகாசமாயிருப்பது. அலௌகிகமான ஒளியுடன் கூடியவன். பரிசுத்தன் என்றால் உபாதிகளற்றவன். ஆகையால் சுத்தன். சிந்திப்பது, கார்யம் செய்வது முதலிய ஸகலவிதமான உபாதிகளும் இல்லாதவன். ஆகவே மனம், பிராணன் முதலியவைகளும் இல்லாதவன். மனம் என்ற பதத்தில் ஞானேந்திரியங்களும், பிராணன் என்ற பதத்தில் கர்மேந்திரியங்களும் அடங்குகின்றன. அவ்யாக்ருதம் என்பது சிருஷ்டிக்கு முன் வியக்தமாகாமல் இருக்கும் நிலை. அதற்கும் அப்பாற்பட்டவன் பிரம்மபுருஷன்.

வாஜபேயி :—புருஷ: என்ற பதத்தின் விரிவுரையையும் கேட்க ஆசைப்படுகின்றோம். கிருபை பண்ண வேண்டும்.

அங்கிரஸ் :— சித்தம் அழகியவர்களே, புருஷன் என்றால் பூர்ணன். சரீரமாகிற புரத்தில் ஹிருதயத்தில் இருப்பவன் என்றும் பொருள் கூறலாம். உள்ளும் புறமும் இருப்பதால் எங்கும் நிறைந்திருப்பவன். அந்த ஸர்வோத்கிருஷ்டமான புருஷன் அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்து ஒளி வீசிக்கொண்டு விளங்குகிறான்.

சௌனகர் :— குருநாதரே, மேலும் தொடர்ந்து உபதேசிக்கவேண்டுகிறேன்.

அங்கிரஸ் :—ஸௌம்யர்களே, முன் ருக்கில் அவனிடத்தில் மனம் பிராணன் இவைகள் இல்லை

யென்று சொல்லப்பட்டதல்லவா ? அதற்குக் காரணம் இந்த ருக்கில் வருகிறது

एतस्माज्जायते प्राणो मनः सर्वेन्द्रियाणि च ।
खं वायुर्ज्योतिरापः पृथिवी विश्वस्य धारिणी ॥

ஏதஸ்மாத் ஜாயதே ப்ராணோ மந: ஸர்வேந்த்ரியாணி ச ।
கம் வாயுர்ஜ்யோதிராப: ப்ருதிவீ விச்வஸ்ய தாரிணீ ॥

இவனிடத்திலிருந்தே பிராணன், மனம், மற்றும் எல்லா இந்திரியங்கள், ஆகாயம், வாயு, அக்னி, ஜலம், விச்வத்தைத் தாங்கிக்கொண்டிருக்கிற பூமி இவைகள் உண்டாயின.

வாஜபேயி :— ஐயனே ! இங்கே கொஞ்சம் குழப்பமாக இருக்கிறது. முதலில் பிராணன் முதலியவைகள் இல்லையென்று சொன்னீர்கள். இப்போது இவைகள் இவனிடமிருந்தே உண்டாயின என்று கூறுகிறீர்கள். நன்ருகப் புரியவில்லை. இவனிடமிருந்து இவைகள் உண்டாகுமானல் இவைகள் இல்லையென்று எப்படிச் சொல்லமுடியும் ?

கோபதர் :— ஸௌம்யா ! பிரம்ம புருஷனிடம் பிராணன் முதலியவைகளில்லை என்பது உண்மையே. நிருபாதிகமாய், அதாவது உபாதிகளில்லாமல் விசுத்தமாக விளங்கும்போது ஒரு விகாரமுமில்லை. ஆனல் மாயாஸம்பந்தம் ஏற்படுவதாக ஆரோபித்து இங்கே பிராணன் முதலியவைகள் உண்டானதாகக் கூறப்படுகிறது. அவ்வளவுதான். ஆகையால் அவித்யா விஷயமான மித்யையான பிராணன் உண்டாயிற்று என்பதால் பரப்பிரம்மத்துக்குப் பிராணன் உண்டு என்று ஸித்திக்காது.

அங்கிரஸ் :— ஆம் ஆம் நண்பர் சொல்வது ரொம்ப சரி. புத்திரனில்லாதவன், கனவில் புத்திரனைப் பெற்ருல் நனவில் புத்திரவானுக முடியாதல்லவா ?

இந்தப்படியாக ஸ்வப்ன புத்திரனைப்போல மனம், பிராணன், எல்லா இந்திரியங்களும் பஞ்சபூதங்களும் பிரம்ம புருஷனிடமிருந்து உற்பத்தியாயின. ஆகையினுல் மனம், பிராணன், முதலியவைகள் தோற்றத்துக்கு முன் அஸத்தாகவே இருக்கின்றன. லயமடைந்த பின்னும் அஸத்தாகவே ஆகிவிடுகின்றன. மத்தியில் கொஞ்ச நேரம் வேருகத் தோன்றுகின்றன, இவ்வளவுதான்.

சௌனகர்:— பிரம்ம புருஷனைப்பற்றி சுருக்கமாகக் கூறினீர்கள். மேலும் விஸ்தாரமாக கூறவேண்டுகிறேன்.

அங்கிரஸ் :— அப்படியே ஆகட்டும்.

अग्निर्मूर्धा चक्षुषी चन्द्रसूर्यौ दिशः श्रोत्रे वाग्विवृताश्च वेदाः ।
वायुः प्राणो हृदयं विश्वमस्य पद्भ्यां पृथिवी ह्येष सर्वभूतान्तरात्मा ॥

அக்நிர்மூர்த்தா சக்ஷுஷீ சந்த்ரஸூர்யௌ
திச: ச்ரோத்ரே வாக்விவ்ருதாஸ்ச வேதா: I
வாயு: ப்ராணோ ஹ்ருதயம் விச்வமஸ்ய
பத்ப்யாம் ப்ருதிவீ ஹ்யேஷ ஸர்வபூதாந்தராத்மா II

எவனுக்கு அக்னி தலையோ சந்திர சூரியர்கள் கண்களோ, திக்குகள் காதுகளோ, பிரசித்தமான வேதங்கள் வாக்கோ, வாயு பிராணனே, உலகம் உள்ளமோ, எவனுடைய பாதங்களிலிருந்து பூமி தோன்றியதோ, அவனே உலகிலுண்டான அனைத்துக்கும் அந்தராத்மா அவனன்றி வேறில்லை. இங்கே ச்ருதி விராட்புருஷனை வர்ணிக்கின்றது. இப்படியாக மூன்று உலகங்களையும் அவைகளிலுள்ள ஸமஸ்தமான பொருள்களையும் உபாதியாகக்கொண்டு பிரதம சரீரியான ஹிரண்யகர்ப்பனிடமிருந்து உண்டான விராட்புருஷன் ஸமஸ்த பூதங்களுக்கும் அந்தராத்மாவாக விளங்குகிருன். இவன் வேருகத்தோன்றினுலும் இவனும் முன் கூறிய பரம புருஷனே அவனிடமிருந்து தோன்றியவனே. இது

மட்டுமா? எல்லாவற்றிற்கும் காரணமான பிரம்ம புருஷனே, காண்பவனுகவும், கேட்பவனுகவும், எண்ணு பவனுகவும் அறிபவனுகவும் விளங்குகிருன்.

சௌனகர் :— உலகத்தை உள்ளமாகக் கூறிய தன் கருத்தை அறிய விரும்புகிறேன்.

அங்கிரஸ் :— மனதின் ஸம்பந்தமில்லாவிட்டால் ஒரு வியவஹாரமும் கிடையாது. ஆகவே பிரபஞ்சம் முழுவதும் மனதின் தோற்றம்தான். இந்தத் தோற்றங்கள் எல்லாம் தூங்கும்பொழுது மனதில் மறைந்து விழித்தவுடன் அக்னியிலிருந்து தீப்பொறிகள் கிளம்புவதுபோல் மனதிலிருந்தே கிளம்புகின்றன. ஆகையால் உலகம் உள்ளமாகிறது.

வாஜபேயி :— ஐயனே! கேட்கக்கேட்க அதிசயமாய் இருக்கிறது. மேலும் தொடர்ந்து கூறவேண்டுகிரேும்.

அங்கிரஸ் :—

तस्मादग्निः समिधो यस्य सूर्यः सोमात्पर्जन्य ओषधयः पृथिव्याम् ।
पुमान्रेतः सिञ्चति योषितायां बह्वीः प्रजाः पुरुषात्संप्रसूताः ॥

தஸ்மாதக்நி: ஸமிதோ யஸ்ய ஸூர்ய:
ஸோமாத் பர்ஜந்ய ஓஷதய: ப்ருதிவ்யாம் ।
புமான் ரேத: ஸிஞ்சதி யோஷிதாயாம்
பஹ்வீ: ப்ரஜா: புருஷாத் ஸம்ப்ரஸூதா: ॥

அவனிடமிருந்தே அக்னி உண்டாயிற்று. அதற்கு ஸமித் ஸூர்யன். அவனிடமிருந்தே சந்திரனும் அதனிடமிருந்து மேகமும் உண்டாயின. அதனிடமிருந்து (அதாவது) மழையினுல் பூமியில் ஓஷதிகளும் உண்டாயின. அவைகளை அருந்திய புருஷனிடமிருந்து வீர்யம் தோன்றுகிறது. அது ஸ்திரீயுடன் ஸம்பந்தப்பட்டு அநேக பிரஜைகள் உண்டாகின்றன. இப்படி பிரம்ம புருஷனிடத்திலிருந்து ஜீவர்கள் தோன்றுகிருர்கள். இப்படியாகக் கிரமமாக விகாரமற்ற

அக்ஷர புருஷனிடமிருந்து பலவாருன சிருஷ்டிகள் தோன்றின.

சௌனகர் :— அக்னிக்கு ஸூர்யன் ஸமித்து என்பதன் அர்த்தமென்ன ?

கோபதர் :— இங்கு அக்னி என்பது த்யுலோகம். ஸமித்துக்களால் அக்னி நன்கு ஜ்வலித்து பிரகாசிப்பது போல் ஸூர்யனுல் த்யுலோகம் நன்கு ஒளியுடன் விளங்குகிறது. அதனுல் ஸூர்யனை ஸமித்தாகக் கூறப் பட்டது. அந்த த்யுலோகத்திலிருந்து உண்டான சந்திரனிடமிருந்து இரண்டாவது அக்னியாகிய மேகம் உண்டாகிறது. அதனுல் மூன்ருவது அக்னியான பூமியில் செடி கொடிகள் உண்டாகின்றன. அவைகளி லிருந்து புருஷ வீர்யம் உண்டாகிறது. அதை ஸ்திரீ ரூபமாகிற ஐந்தாவது அக்னியில் சேர்த்தவுடன் பல விதமான பிரஜைகள் உண்டாகிருர்கள். த்யுலோகம், பர்ஜன்யம், பிருதிவி, புருஷன், ஸ்திரீ இவ்வைந்தையும் ஐந்து அக்னிகளாக பாவித்து இவற்றில் ஹோமம் செய்வதன் மூலமாக கிரமமாக பிரஜைகள் உண்டாவ தாக த்யானம் செய்வதற்கு பஞ்சாக்னி வித்யை என்று பெயர். மற்ற ச்ருதிகளிலும் இதுபற்றிக் கூறப்பட்டிருக் கின்றது. இந்த விதமாக தியானித்தால் சித்த சுத்தி உண்டாகும்.

அங்கிரஸ் :—பிரஜைகள் உண்டானபின் அவர்கள் சோம்பேறிகளாக இருக்கலாமோ? கர்மங்கள் செய்ய வேண்டாமா! அதற்கு வேண்டிய ஸாதனங்களும் அந்த கர்ம பலன்களும் பரமபுருஷனிடத்திலிருந்தே உண்டா கின்றன.

तस्मादृचः साम यजूंषि दीक्षा यज्ञाश्च सर्वे क्रतवो दक्षिणाश्च ।
संवत्सरश्च यजमानश्च लोकाः सोमो यत्र पवते यत्र सूर्यः ॥

தஸ்மாத் ருச: ஸாம யஜூம்ஷி தீக்ஷா
யக்ஞாஸ்ச ஸர்வே க்ரதவோ தக்ஷிணுஸ்ச]

ஸம்வத்ஸரஸ்ச யஜமானஸ்ச லோகா:
ஸோமோ யத்ர பவதே யத்ர ஸூர்ய: ||

அவனிடத்திலிருந்தே, ருக்வேதம், ஸாமவேதம், யஜுர்வேதம் தீக்ஷாவிதிகள், யக்ஞங்கள், க்ரதுக்கள், தக்ஷிணைகள், காலங்கள், யஜமானன் சூர்ய சந்திர லோகங்கள் இவைகள் உண்டாயின. பின்னும்

तस्माच्च देवा बहुधा संप्रसूताः साध्या मनुष्याः पशवो वयांसि ।
प्राणापानौ व्रीहियवौ तपश्च श्रद्धा सत्यं ब्रह्मचर्यं विधिश्च ॥

தஸ்மாச்ச தேவா பஹுதா ஸம்ப்ரஸூதா:
ஸாத்யா மநுஷ்யா: பசவோ வயாம்ஸி |
ப்ராணாபாநௌ வ்ரீஹியவௌ தபஸ்ச
ச்ரத்தா ஸத்யம் ப்ரஹ்மசர்யம் விதிஸ்ச ||

அவனிடமிருந்தே பல தேவர்கள் உண்டானார்கள். ஸாத்யகணங்கள் என்னும் தேவர்கள், மனுஷ்யர்கள், மிருகங்கள், பறவைகள், பிராண அபான வாயுக்கள், வ்ரீஹி யவம் என்ற தான்யங்கள், தவம், சிரத்தை, ஸத்யம், பிரம்மசர்யம், விதிகள் இவைகளும் உண்டாயின.

சௌனகர்:-பதவுரை நன்ருக தெரிந்துகொண்டோம் விரிவுரை கூறவேண்டுகிறோம்.

அங்கிரஸ் :— பிரஜைகள் தோன்றிய பின் கர்மாக்களில் முக்கியமான யாகங்கள் செய்வதற்கான மூன்று வேதங்களும், யக்ஞம் நடத்த விதிகளும், நியமங்களும் அக்னிஹோத்ரம் முதலான எல்லா யக்ஞங்களும், யூபத்துடன் கூடிய பெரிய க்ருதுக்களும், அந்த யாகங்களில் கொடுப்பதற்கு ஒரு பசு முதல் ஸர்வஸ்வதானபர்யந்தமான தக்ஷிணைகளும் உண்டாயின. கர்மத்துக்கு அங்கமான காலங்களும் யக்ஞ கர்த்தாவாகிற யஜமானனும், அவன் கர்மபலனை அனுபவிப்பதற்காக ஸ்வர்க்காதி லோகங்களும் உண்டாயின. அவரவர்கள் அனுஷ்டித்த

கர்ம உபாஸனங்களுக்குத்தக்கபடி முன் உபதேசங்களில் விவரித்த த்க்ஷிணுயன மார்க்கம், உத்தராயண மார்க்கம் என்னும் இரண்டு வெவ்வேறு வழிகளில் சென்று ஸ்வர்க்காதி லோகங்களையடைந்து பலனை அனுபவிக்கின்றனர். அந்த லோகங்களில் வசிக்கும் வஸு முதலிய தேவர்களும், ஸாத்யர்களும், கர்மங்களைச் செய்ய அதிகாரிகளான மனிதர்களும், கிராமத்திலும் காடுகளிலும் வசிக்கும் மிருகங்களும், பலவிதமான பக்ஷிகளும், மனிதன் மூச்சு இழுத்துவிடும் பிராண அபான வாயுக்களும், ஹவிஸ்ஸுக்கு வேண்டிய தான்யங்களும் உண்டாயின. இதுமட்டுமா? மனிதனை ஸம்ஸ்காரவானுக்கும் தவம், சிரத்தை, உண்மை வசனம், பிரம்மசர்யவிரதம் முதலியவைகளும் தோன்றின. இப்படியாக பலப்பிரகாரமான விதிகளும் நிஷேதங்களும் அவனிடமிருந்தே தோன்றின.

சௌனகர் ;— ஸ்வாமீ, தங்கள் உபதேசங்களால் எல்லாம் பிரம்மமே என்பது நன்கு தெரியவருகிறது. அதன் மஹிமை கேட்கக்கேட்க ஆச்சர்யமாயிருக்கிறது. தொடர்ந்து உபதேசிக்கவேண்டும்.

அங்கிரஸ் :—

सप्त प्राणाः प्रभवन्ति तस्मात् सप्तार्चिषः समिधः सप्त होमाः ।
सप्त इमे लोका येषु चरन्ति प्राणा गुहाशया निहिताः सप्त सप्त ॥

ஸப்த ப்ராணு: ப்ரபவந்தி தஸ்மாத்
ஸப்தார்ச்சிஷ: ஸமித: ஸப்த ஹோமா: 1
ஸப்த இமே லோகா யேஷு சரந்தி
ப்ராணு குஹாசயா நிஹிதா: ஸப்த ஸப்த 11

அவனிடமிருந்தே ஏழு பிராணன்களும், அவைகளின் ஏழு பிரகாசங்களும், ஏழு ஸமித்துக்களும், ஏழு ஹோமங்களும், ஏழு லோகங்களும் உண்டாயின. ஹ்ருதயத்தில் உறையும் இவை எவ்வேழாக ஒவ்வொரு பிராணியிடமும் உள்ளன.

வாஜபேயி :— ஸ்வாமீ, எங்களுக்கு ஒன்றும் விளங்க வில்லை. விவரமாகச் சொல்லவேண்டும்.

அங்கிரஸ் :— ஏழு பிராணன்கள் என்பது முகத்தில் உள்ள ஏழு இந்திரியங்களைக் குறிக்கின்றது. (அதாவது 2 கண், 2 காது, 2 மூக்கு, 1 நாக்கு ஆக ஏழு.) ஒவ்வொரு இந்திரியமும் ஒவ்வொரு விஷயத்தைப் பிரகாசப்படுத்துகின்றது. அப்படியாக ஏழு பிரகாசங் கள் என்பது இந்திரியங்களின் சக்தியைக் குறிக்கின்றது. ஸமித்துகள் என்பது விஷயங்கள் (எரிபொருள்) நாக்கு இந்திரியம். அதன் பிரகாசம் என்பது ருசிக்கும் தன்மை. விஷயம் என்பது பால் அல்லது பாயஸம். ஏழு ஹோமங்கள் என்பது விஷயஞானங்கள். ஒரு இந்திரியத்தால் மற்ருெரு இந்திரியத்தின் விஷயத்தை அறியமுடியாது. கண்ணுல் கேட்கமுடியாது. காதால் காணமுடியாது. ஆகவே விஷயஞானங்களும் வெவ் வேருகத்தான் இருக்கின்றன. அதுபோல் அந்தப் பொறிகள் இருந்து செயல்படும் இடங்களும் வெவ்வேறு ஆகும். அவைகளே ஏழு லோகங்கள் (இடங்கள்).

கோபதர் :— ஸௌம்யர்களே. இதுவரைக்கும் வித்வான்களின் கர்மமும் அவற்றின் பலனும் அக்ஞானி களின் கர்மமும் அவற்றின் ஸாதனங்களும் பலனும் எல்லாம் அந்த பரம புருஷனிடமிருந்து உண்டாயின என்று நாம் அறிந்தோம். மேல் உங்களுக்கு ஏதாவது ஸந்தேகம் இருந்தால் கேட்கலாம்.

வாஜபேயி :— குருநாதரே! இதுவரையில் ச்ருதி உயிருள்ள பிராணிகளின் உற்பத்தியைப்பற்றியே வெகு வாகக் கூறியது. நம் எதிரில் காணும் மலைகள், பக்கத்தில் ஓடும் நதிகள் இவைகளும் அந்த பரமபுருஷ னிடத்திலிருந்துதானே உண்டாயிருக்கவேண்டும்.

அங்கிரஸ் :— அதில் என்ன ஸந்தேஹம்? எல்லாம் அவனே. எல்லாவற்றிற்கும் உற்பத்திஸ்தானமும் லய ஸ்தானமும் அவனே.

अतः समुद्रा गिरयश्च सर्वेऽस्मात्स्यन्दन्ते सिन्धवः सर्वरूपाः ।
अतश्च सर्वा ओषधयो रसश्च येनैष भूतैस्तिष्ठते ह्यन्तरात्मा ॥

அத: ஸமுத்ரா கிரயஸ்ச ஸர்வே
　　அஸ்மாத் ஸ்யந்தந்தே ஸிந்தவ: ஸர்வரூபா: I
அதஸ்ச ஸர்வா ஓஷதயோ ரஸஸ்ச
　　யேநைஷ பூதைஸ்திஷ்டதே ஹ்யந்தராத்மா II

அவனிடமிருந்தே ஸமுத்ரங்கள், மலைகள், பலவித மான நதிகள், எல்லா செடிகொடிகள், அவற்றின் ரஸம் (ருசி) உண்டாயின.

கோபதர் :-ஸௌம்யர்களே, லவணம், க்ஷீரம் முதலிய ஸமுத்திரங்களும், ஹிமாலயம் போன்ற பர்வதங்களும், கங்கை, காவேரி போன்ற நதிகளும் அவனிடமிருந்தே தோன்றின. அவனிடமிருந்தே உணவுப்பொருளும் அவற்றின் அறுசுவைகளும் உண்டாயின. இப்படியாக எல்லாம் பரமபுருஷனிடமிருந்தே உற்பத்தியாயின சுவைகளை அனுபவிக்கத்தான் பஞ்சபூதங்களுடன் கூடிய ஸூக்ஷ்மசரீரம் ஆத்மாவிற்கும் சரீரத்திற்கும் நடுவில் ஆத்மாபோன்று விளங்கிக்கொண்டிருக்கிறது. இவைகள் எல்லாம் வாசாரம்பணம் விகாரோநாமதேயம் மாத்ரமே எல்லாம் மித்யை அந்த பரமபுருஷன் ஒருவனே ஸத்யம்.

அங்கிரஸ் :—

पुरुष एवेदं विश्वं कर्म तपो ब्रह्म परामृतम् ।
एतद्यो वेद निहितं गुहायां सोऽविद्याग्रन्थिं विकिरतीह सोम्य ॥

புருஷ ஏவேதம் விச்வம் கர்ம தபோ ப்ரஹ்ம பராம்ருதம் I
ஏதத் யோ வேத நிஹிதம் குஹாயாம் ஸோऽவித்யா
　　க்ரந்திம் விகிரதீஹ ஸோம்ய II

ஸௌம்யரே! சௌனகரே, நீர் முதலில் கேட்ட ப்ரச்னத்துக்கு இப்போது விடை கூறுகின்றேன். எதை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகும்? என்ற கேள் விக்கு எல்லாவற்றிற்கும் காரணமான பரமாத்மாவை

பரம புருஷனை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகும் என்பதே விடையாகும். அந்த பரமபுருஷனே இந்த உலகனைத்தும். கர்ம, தவம் எல்லாம் அவனே. அந்த ப்ரஹ்மமே சிறந்த அமிருதம். இருதய குகையில் உள்ள இவனை எவன் காண்கிறானோ அவன் அவித்யையாகிற சிக்கலை உடனே அவிழ்த்தவனாகிறான்.

கோபதர் :— அப்பனே, பரமபுருஷனே இந்த ஜகத். அவனுக்கு பின்னமாக, வேறாக உலகம் இல்லை. உம்முடைய கேள்விக்கு உத்தரம் கிடைத்துவிட்டது அவனை அறிவதே அறிவு. அவனை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகும்.

சௌனகர் :— குருநாதரே! தந்யர்கள் ஆனோம். மிகவும் நன்றி.

வாஜபேயி :— ஸ்வாமீ! இம்மந்திரத்தின் கருத்தை சற்று விளக்கிக் கூற வேண்டுகிறேன்.

அங்கிரஸ் :— கர்மமும் அவனே. தவம் என்றால் இங்கு ஞானம் என்று பொருள். தவமும் அவனே. அவனே பரமபுருஷன். அவனே அமிர்தரூபமான அழிவில்லாத பிரம்மம். அவனே எல்லாப்பிராணிகளின் அந்தக்கரணத்தில் இருக்கிறான். அப்படி அவனைத் தெரிந்துகொண்டவன், இந்த லோகத்திலேயே, (இறந்தபின் அல்ல), அவித்யையாகிற முடிச்சை அவிழ்த்துவிடுகிறான். பிரம்மஞானம் அடைந்து பிரம்ம மாகவே ஆகிறான். பிறவி மரணமில்லாத அமிருத நிலையை அடைகிறான். இத்துடன் இன்றைய பாடத்தை நிறுத்திக்கொள்வோமா?

கோபதர் :— ஏற்கெனவே நான் சொல்ல நினைத் தேன். காலம் அதிக்ரமித்துவிட்டது. நிறுத்திக்கொள் வோம். ஸௌம்யர்களும் கேட்டவைபற்றி நன்றாக மனனம் பண்ணி சிந்தித்துக்கொண்டு வரட்டும்.

(திரை விழுகிறது)

காட்சி 2

(திரை விலக)

[கோபதர் ஆச்ரமம். பிரம்மரிஷி கோபதரும் சௌனகரும் அவருடைய நண்பர்களும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கின்றனர்.]

கோபதர் :— சௌனகரே! நேற்று கற்றவைகளைப் பற்றிச் சிந்தித்தீரா? அதன் சுருக்கம் கூறலாமா?

சௌனகர் :— ஸ்வாமீ! அடியேனுக்குத் தெரிந்தவரையில் சொல்கிறேன். தவறு இருந்தால் திருத்தி ஆட்கொள்ளவேண்டும். பரமபுருஷன் ஒளி நிறைந்தவன். எனினும் உருவில்லாதவன். உள்ளும் புறமும் உறைபவனுலும் உண்டாகாதவன். பிராணன் இல்லாதவன். மனமில்லாதவன். பரிசுத்தன். அக்ஷரத்துக்கும் அப்பாற்பட்டவன். எல்லா பிராணிகளுக்கும் அந்தராத்மா! அவனிடமிருந்தே பெரிய தீ ஜ்வாலையிலிருந்து சிறு சிறு நெருப்புப்பொறிகள் உண்டாவது போல், மனிதர்கள், தேவர்கள் முதலான எல்லாப் பிராணிகளும் உண்டாயின. அவனை அறிய முயலும் தவமே நமது கர்மம். அவைகளும் அவன்தான். இந்தப் பிரம்ம புருஷனைத் தன் உள்ளத்திலே உறைவதாக எவன் உணர்கின்ருனே, அவன் உடனே, இப்பிறவியிலேயே அவித்யையினின்றும் விடுபடுகிருன்.

கோபதர் :—ஸபாஷ் ரொம்ப நன்ருகச் சொல்லிவிட்டீர் சௌனகரே! நீர் கேட்ட வினவிற்கு நண்பர் விடை கூறியாய்விட்டது. மேல் என்ன கேட்கப்போகிறீர்? அதுபற்றி ஆலோசிக்கவே நான் உங்களை இங்கே வரவழைத்தேன்.

வாஜபேயி :— ஸ்வாமீ! எங்களுக்கு என்ன தெரியும்? தாங்களே சொல்லுங்கள். அதைக்கேட்கிருேம்.

ஸோமயாஜி :—குருநாதரே, எங்களுக்கு எது நன்மை பயக்குமோ அதைக்கூறுங்கள். அந்த வினவைக் கேட்கிருேம்,

கோபதர் :— ஸௌம்யர்களே, நான் கூறுவது சரியல்ல நீங்களே யோசித்து மனதில் எது தோன்றுகிறதோ அதை கேட்கவேண்டும். சீக்கிரமாக யோசித்து ஒரு முடிவுக்கு வாருங்கள். நண்பர் அங்கிரஸ்ஸையும் இங்கே விஜயம் செய்யும்படி அழைத்திருக்கிறேன். அவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார். இன்றைய பாடம் இந்த ஆசிரமத்தில் வைத்து நடக்கும்.

சௌனகர் :— அப்படியா ரொம்ப சந்தோஷம் (தனக்குள்) என்ன கேட்பது? இதுவரையில் நாம் தெரிந்துகொண்டது என்ன? மேல் என்ன தெரிந்து கொள்ளவேண்டும்? வித்யை இரண்டு என்றும், நான்கு வேதங்களும் மற்றைய அறிவும் அபராவித்யையில் அடக்கம் என்றும், பராவித்யை தான் பிரம்மஞானம் என்றும் அறிந்தேன். பிறகு பிரம்மத்தைப்பற்றியும் அதற்கும் பிரபஞ்சத்துக்கும் உள்ள ஸம்பந்தத்தைப் பற்றியும் தெரிந்துகொண்டேன். இனி இப்படி அறிந்து கொண்ட பிரம்மத்தை நாடும் உபாயத்தைப்பற்றி வினா எழுப்பவேண்டும். அதுதான் சரி.

கோபதர் :— சௌனகரே! ஆலோசனை முடிந்து விட்டதா? இதோ நண்பர் வருகிறார். அழைத்து வருவோம்.

(அங்கிரஸ் பிரவேசம். எல்லோரும் எழுந்து சென்று உபசாரம் செய்து முகமன் கூறி அழைத்துவருகின்றனர். எல்லோரும் அவரவர் ஸ்தானங்களில் அமர்ந்தபின் உரையாடல் தொடங்குகிறது.)

அங்கிரஸ் :— நண்பரே! ஸௌம்யர்களே! இந்த ஆச்ரமமும் சுற்றியுள்ள பிரதேசங்களும் ரொம்ப சுத்தமாகவும், அழகாகவும், மனோரம்யமாகவும் இருக்கின்றன. இவ்வளவு ஸுந்தரமாக இருப்பதற்கு நமது நண்பர்தான் காரணம் என்று நினைக்கிறேன். என்ன நண்பரே, அப்படித்தானே!

கோபதர்:— விளையாட்டும் வேடிக்கையும் மனிதனை விட்டு என்றும் நீங்காது. எவ்வளவு வயதாய்விட்டாலும் ஹாஸ்யரஸம் அவனுடன் இருக்கத்தான் செய்யும். இதற்கு நம் நண்பர் அங்கிரஸ்ஸே ஸாக்ஷி.

அங்கிரஸ்:— நான் வேடிக்கையாக ஒன்றும் சொல்லவில்லையே. உண்மையைத்தானே கூறினேன். பட்டவர்த்தனமாகப் புகழ்வதை நண்பர் விரும்பவில்லையானல் நான் நிறுத்திக்கொள்கிறேன்.

கோபதர்:- ஆருயிர் நண்பரே, சிஷ்யர்கள் உபதேசத்திற்காக ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறுர்கள் உபதேசம் செய்யவேண்டுறேன்.

அங்கிரஸ்:— அப்படியே செய்கிறேன். ஸௌம்யர்களே, உங்களுடைய கேள்விகளையும் ஸந்தேகங்களையும் கேளுங்கள், விடை கூறுகின்றேன்.

சௌனகர்:— குருநாதரே, ரூபமில்லாத ஆனல் அருவத்திற்கும் அப்பாற்பட்ட அக்ஷர பிரம்மத்தைப் பற்றி விளக்கினீர்கள். அதை நாங்கள் அடைய என்ன செய்யவேண்டும்? அருளவேண்டுகிறேன்.

வாஜபேயி:— எந்தவிதமான ஸாதனைகள் செய்ய வேண்டும்? பிரம்ம ஸாக்ஷாத்காரத்துக்கு ஸாதகன் அனுஷ்டிக்க வேண்டியவைகளைப்பற்றி விவரமாகக்கூற வேண்டும் ஐயனே.

அங்கிரஸ்:— ஸௌம்யர்களே! பிரம்மத்தை—அது மனதிற்கும் எட்டாமலும், வாக்கிற்கும் பிடிபடாமலும் இருந்தபோதிலும், பாவனையினுலும் தியானத்தினுலும் ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். ஏன்! நன்ருகவே அறியலாம். ஐயம் ஒன்றும் வேண்டாம்

ஸோமயாஜி:— ஐயனே, எப்படியெல்லாம் பாவனை பண்ணவேண்டும்? தியானிக்கும் முறைகள் என்ன?

வாஜபேயி :—மந்திரஜபங்கள் ஏதாவது உண்டா ?

அங்கிரஸ் :—சொல்கிறேன், கவனமாகக் கேளுங்கள்.

आविः संनिहितं गुहाचरं नाम महत्पदमत्रैतत्समर्पितम् ।
एजत्प्राणन्निमिषच्च यदेतज्जानथ सदसद्वरेण्यं परं विज्ञानाद्यद्वरिष्ठं
प्रजानाम् ॥

ஆவி: ஸந்நிஹிதம் குஹாசரம் நாம
மஹத் பதமத்ரைதத் ஸமர்பிதம் ।
ஏஜத் ப்ராணந் நிமிஷச்ச யதேதத் ஜாநத
ஸதஸத் வரேண்யம் பரம் விக்ஞானாத்
யத்வரிஷ்டம் ப்ரஜானாம் ॥

அந்தப் பிரம்மம் பிரகாசமானது. மிக அருகில் எல்லோருடைய ஹ்ருதயத்திலும் நன்கு நிலைத்து இருப்பது குஹாசரம் என்னும் நாமத்தையுடையது. அதுவே மஹத்தான பதமாகும். அதில் இந்த ஜகத் பூராவும் வைக்கப்பட்டிருக்கிறது. அசைகின்றவைகளும், மூச்சுவிடும் பிராணிகளும், இமை கொட்டும் ஜந்துக்களும், இமை கொட்டாதவைகளும், எல்லாப் பொருள்களும் அதில் ஸமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஸத்தாகவும், அஸத்தாகவும், எல்லோராலும் பிரார்த்திக்கத்தகுந்ததாயும், பிரஜைகளுடைய லௌகிக அறிவுக்கு அப்பாற்பட்டதாயும் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் சிரேஷ்டமாக இருக்கிறதும் அதுவே. இப்படியாக அதையறிந்து பாவனைபண்ணவேண்டும்.

கோபதர் :— ஸௌம்யர்களே, உலகில் உணரும் பொருள்கள் தோறும் பிரம்மம் பிரகாசிக்கிறது எதிலும் எங்கும் அது இருக்கிறது, விளங்குகிறது. (அஸ்தி பாதி) அது தீபத்தைப்போல் தானே பிரகாசிக்கின்றது. மற்றவைகளையும் பிரகாசிக்கச் செய்கிறது. இந்த பாவனை ஆத்ம ஸாக்ஷாத்காரத்துக்குச் சிறந்த ஸாதனம் ஆகும்.

வாஜபேயி :— நன்ருகப் புரிந்துகொண்டோம். சில பதங்களுக்கு விரிவுரை வேண்டும்.

அங்கிரஸ் :— கேளுங்கள், கூறுகிறேன்.

வாஜபேயி :— ஸன்னிஹிதம், குஹாசரம் மஹத்பதம் என்பவைகளுக்கு விளக்கமாக உரை கூறவேண்டும்.

ஸோமயாஜி :— வரிஷ்டம் என்ருல் என்ன ?

அங்கிரஸ் :— ஸந்நிஹிதம் என்ருல் மிக அருகிலிருப்பது சுரோத்ரம் முதலான புலன்களாகிற கருவிகளால் சப்தம் முதலிய விஷயங்களை அறிபவன்போல் காண்கிறது. தர்சனம் (பார்ப்பது) சிரவணம் (கேட்பது) முதலானவை ஏற்படும்பொழுது அங்கு சைதன்யம் ஆவிர்பவித்ததுபோல் காணப்படுகிறது. மனம் என்னும் உபாதியுடன் சேர்ந்து அதன் ஸ்தானமான ஹிருதயத்தில் சஞ்சரிப்பதால் குஹாசரம் என்று கூறப்பட்டது. இங்கு குஹை என்பது ஹிருதயத்தைக்குறிக்கும். மஹத் என்பதற்குப் பெரியது என்று பொருள். ஆனல் இதற்கு ஒரு வரையரை கொடுக்காததால் எல்லாவற்றைக் காட்டிலும் பெரியது, இதைக்காட்டிலும் பெரியது வேறு ஒன்றுமில்லை எல்லாவற்றிற்கும் ஆச்ரயம். வண்டிச் சக்ரத்தின் நடுவிலுள்ள குடத்தில் ஆரக்கால்கள் பொருத்தப்பட்டிருப்பதுபோல் எல்லா வஸ்துக்களும் இதில் பொருத்தப்பட்டுள்ளன. இதனல் இது ‘ மஹத் ’ என்றும் ‘ பதம் ’ (ஆதாரம்) என்றும் கூறப்படுகிறது.

கோபதர் :— சலிக்கும் பறவைகளும், மூச்சுவிடும் மனிதன், பசு முதலியவைகளும், இமை கொட்டும் பிராணிகளும், இமை கொட்டாத பிராணிகளும். மற்றும் எல்லாப் பிராணிகளும் பிரம்மத்தில் ஸமர்பிதமாக இருக்கின்றன. ஆகவே மஹத்பதம். எல்லாம் அதையே ஆச்ரயித்து இருக்கின்றன. உருவமுள்ளது—ஸ்தூலமானது, உருவமில்லாதது—ஸூக்ஷ்மமானது, எல்லாம் அதுவே. அதற்குப் பின்னமாக வேறு ஒன்றும் இல்லை. லௌகிக விக்ஞானத்தால் அறிய முடியாதது. அது வரிஷ்டமானது, என்ருல் ஸம்பூர்ணமாக சிரேஷ்டம். சிரேஷ்டமான பதார்த்தங்கள்

எல்லாவற்றையும்விட சிரேஷ்டமானது. தோஷங்களும் மலங்களும் இல்லாததால் அத்யந்த சிரேஷ்டமானது பிரம்மம். நித்யமான அந்தப் பொருள்தான் எல்லோராலும் விரும்பத்தக்கது. அதையே உங்கள் ஆத்ம ஸ்வரூபமாக அறிந்துகொள்ளுங்கள் என்று ஆசார்ய உருவத்தில் வேதம் உபதேசிக்கிறது.

சௌனகர் :— குருநாதரே, தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகிறேன். மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது.

அங்கிரஸ் :—

यदर्चिमद्यदणुभ्योऽणु च यस्मिन् लोका निहिता लोकिनश्च ।
तदेतदक्षरं ब्रह्म स प्राणस्तदु वाङ्मनः ।
तदेतत्सत्यं तदमृतं तद्वेद्धव्यं सोम्य विद्धि ।

யதர்சிமத் யதணுப்யோऽணு ச
யஸ்மிந் லோகா நிஹிதா லோகிநஸ்ச 1
ததேதத் அக்ஷரம் ப்ரஹ்ம ஸ ப்ராணஸ்தது வாங்மந: 1
ததேதத் ஸத்யம் ததம்ருதம் தத் வேத்தவ்யம்
ஸோம்ய வித்தி 1

எது அதிக காந்தியுள்ளதோ அணுவைக்காட்டிலும் அணுவோ, எதில் இந்த லோகங்களும் ஜனங்களும் வைக்கப்பட்டிருக்கின்றனவோ, அதுவே அக்ஷரமான பிரம்மம். பிராணன், வாக், மனம், எல்லாம் அதுவே, எல்லாவற்றிற்கும் ஆச்ரயவஸ்து அது. அதை இப்படியாக பாவனை செய்து அறியவேண்டும். ஸௌம்யர்களே, பாவனையால் அறிந்துகொள்ளுங்கள்.

கோபதர் :—அது ஒன்றுதான் உண்மைப்பொருள். அதனால் முக்காலும் அழியாதது இந்த வஸ்துவை அம்பால் குறியை அடிப்பதுபோல் அடிக்கவேண்டும்.

வாஜபேயி :—குருநாதரே, ஆச்சர்யமாக இருக்கிறதே! அக்ஷர வஸ்துவை எப்படி அடிக்கமுடியும்? விவரமாகக் கூறவேண்டுகிறேன்.

அங்கிரஸ்:—

धनुर्गृहीत्वौपनिषदं महास्त्रं शरं ह्युपासानिशितं संदधीत ।
आयम्य तद्भावगतेन चेतसा लक्ष्यं तदेवाक्षरं सोम्य विद्धि ॥

தநுர்க்ருஹீத்வௌபநிஷதம் மஹாஸ்த்ரம்
சரம் ஹ்யுபாஸாநிசிதம் ஸந்ததீத 1
ஆயம்ய தத்பாவகதேந சேதஸா
லக்ஷ்யம் ததேவாக்ஷரம் ஸோம்ய வித்தி 11

அப்பனே, உபநிஷத்திலுள்ள பெரிய வில்லைக் கையில் பிடித்து உபாஸனையால் நன்கு தீட்டப்பட்ட பாணத்தை வில்லில் பூட்டி, இழுத்து லக்ஷ்யத்திலேயே முழுவதும் செலுத்திய மனதால் அக்ஷர ப்ரஹ்மம் என்னும் குறியை அடிக்கவேண்டும்.

சௌனகர்:—எது வில்? அம்பு எது? லக்ஷ்யம் எது? அக்ஷரத்தை எப்படி அடிப்பது? விவரமாக அருள வேண்டும்.

அங்கிரஸ்:—प्रणवो धनुः शरो ह्यात्मा ब्रह्म तल्लक्ष्यमुच्यते ।
अप्रमत्तेन वेद्धव्यं शरवत्तन्मयो भवेत् ॥

ப்ரணவோ தநு: சரோ ஹ்யாத்மா ப்ரஹ்ம தத்
லக்ஷ்யமுச்யதே 1
அப்ரமத்தேந வேத்தவ்யம் சரவத் தந்மயோ பவேத் 11

பிரணவமே வில், ஆத்மா அம்பு, குறி பிரம்மம். கவனமாக குறிபார்த்து அடித்து பாணம் லக்ஷ்யத்தில் உறைவதுபோல் பிரம்மத்தில் லயமாகவேண்டும் தியானத்தாலே.

வாஜபேயி:— கேட்பதற்கு மிகவும் நன்ருயிருக்கிறது. ஆனல் சரியாகப் பொருள் விளங்கவில்லை.

ஸோமயாஜி:— காவியங்களில் வருவதுபோல் உபமானங்களும் உபமேயங்களும் கேட்பதற்கு மகிழ்ச்சி

யும் உற்சாகமும் தருகிறது. ஆனால் உட்பொருள் தெரியவில்லை.

கோபதர் :— சித்தம் அழகியோனே! விவரமாக விளக்குகிறேன். உபநிஷத்தில் ஒரு மஹாஸ்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. ஸம்ஸாரமாகிற அவித்யை என்னும் ராக்ஷஸியைத் தொலைப்பதற்கு ஒரு உத்தமமான அஸ்திரம்–ஆயுதம்–உபநிஷத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதுதான் பிரணவம் என்னும் மஹாமந்திரம். அதுவே வில். அந்த ஓங்காரமாகிற வில்லை எடுத்துக் கொள்ளவேண்டும். அதில் கோர்க்கும் பாணம் ஜீவாத்மா. பிரம்மத்தை லக்ஷ்யமாகக்கொண்டு கவனக் குறைவில்லாமல் ஜாக்ரதையாக எய்யப்படவேண்டும். அதாவது நன்றாக தியானம் செய்யவேண்டும். அம்பு எப்படி லக்ஷ்யததுடன் ஒன்றுபட்டுப்போகிறதோ அது போல் ஆத்மாவும் பிரம்மத்தில் லயமாய்விடும்.

வாஜபேயி :— ஓம் என்ற பிரணவத்துக்கு இவ்வளவு மஹிமையா?

அங்கிரஸ் :— ஆம். பிரணவத்துடன் சேராத மந்திரம் பிராணன் இல்லாத மந்திரம்.

கோபதர் :—எல்லா பிராணன்களையும் (இந்திரியங்களையும்) பரமாத்மாவிடம் வணங்கச்செய்வது பிரணவம் சௌனகரே, நன்றாகப் புரிந்துகொண்டீரா?

சௌனகர் :— குருநாதர் கிருபையால் நன்றாகத் தெரிந்துகொண்டேன். தொடர்ந்து உபதேசங்களை வாரி வழங்க வேண்டும் ஸ்வாமீ!

வாஜபேயி :— ஒரு ஸந்தேகம் 'அப்ரமத்தேன' என்ற பதத்திற்கு விளக்கம் கூறவேண்டும்.

அங்கிரஸ் :—வெளி விஷயங்களில் மனதை அலைய விட்டும் விஷயானுகர்ச்சிகளில் இன்பதுன்பம் துய்த்தும் அவைகளில் கவர்ச்சியும் இல்லாத மன நிலையைத்தான்

'அப்ரமத்தேன' என்று ச்ருதி கூறுகிறது. நாம் சாதாரணமாக அம்பை விடும்போதே கை நடுங்கினுல் குறி தவறுமே. இங்கே கேட்கவா வேண்டும்? ஆகையினுல் ஜிதேந்திரியனுய் விரக்தியுடன் ஏகாக்ரமான சித்தத்தோடு பாணத்தை பிரயோகம் செய்யவேண்டும். அதாவது தியானிக்கவேண்டும்.

ஸோமயாஜி:— ஸ்வாமீ! அக்ஷர பிரம்மத்தை அறிவதும் தியானிப்பதும் ரொம்ப கடினமாக இருக்கிறது. ஆகையினுல் திரும்பவும் எங்களுக்கு மனதில் பதியும் படியாக உபதேசிக்க வேண்டுகிறேன்.

அங்கிரஸ்:— ஸௌம்யர்களே, அப்படியே திரும்பத் திரும்ப வேதமாதா கருணையுடன் கூறியிருக்கிருள். நானும் அதை ஆவர்த்திக்கிறேன்.

यस्मिन्द्यौः पृथिवी चान्तरिक्षमोतं मनः सह प्राणैश्च सर्वैः ।
तमेवैकं जानथ आत्मानमन्या वाचो विमुञ्चथामृतस्यैष सेतुः ॥

யஸ்மின் த்யௌ: ப்ருதிவீ ச அந்தரிக்ஷமோதம்
மந: ஸஹ ப்ராணைஸ்ச ஸர்வை: ।
தமேவ ஏகம் ஜாநத ஆத்மாநமந்யா
வாசோ விமுஞ்சதாம்ருதஸ்யைஷ ஸேது: ॥

வானுலகமும், பூவுலகும், இடையிலுள்ள அந்தரிக்ஷமும், எல்லா பிராணன்களுடன் கூடிய மனமும் எதில் கோர்க்கப்பட்டிருக்கிறதோ அந்த ஏகமான பரமாத்மாவையே அறிவீர்களாக. மற்ற வார்த்தைகளை விட்டுவிட வேண்டும். இதுவே மோக்ஷத்துக்குப் பாலம். என் அருமை சிஷ்யர்களே! அக்ஷர பிரம்மத்தில், மேல் உலகம், பூமி, மத்தியில் காணும் ஆகாயம் எல்லாம் ஸமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

கோபதர்:— நூல்களில் வஸ்திரம் இருப்பதுபோல் இவைகளெல்லாம் அக்ஷரபிரம்மத்தில் அமைந்திருக்கின்றன. நூல்களே வஸ்திரத்துக்கு ஆதாரம். நூல்களை

எடுத்துவிட்டால் வஸ்திரம் இல்லாமல் போய்விடுகிறது. உண்மையில் கவனித்துப் பார்த்தால் நூல்களேதான் குறுக்கும் நெடுக்குமாக அமைந்து வஸ்திரமாகக் காக்ஷியளிக்கின்றன. நூல்களைத் தவிர, வஸ்திரம் தனிப்பொருளில்லை. இதுபோல் பிரபஞ்சம் முழுவதற்கும் ஆதாரமாயிருப்பது அக்ஷரபிரம்மம். இதுவேதான் பிரபஞ்சமாகத் தோன்றுகிறது. பிரம்மத்தைத் தவிர, வேறான பிரபஞ்சம் கிடையாது. அது ஒன்றுதான் உண்மையாக இருக்கும் பொருள். மற்றவையெல்லாம் வெறும் தோற்றம்தான். இந்த அக்ஷரபிரம்மத்தை தன்னிலும் மற்றெல்லாப் பிராணிகளிலும் விளங்கும் ஆத்மவஸ்துவாக அறியவேண்டும். அபராவித்யை ரூபமான மற்ற அறிவுகளை உதறிவிடவேண்டும். தள்ள வேண்டியதைத் தள்ளிவிட்டு அழியாத மோக்ஷத்துக்குப் பாலமான ஆத்மஞானத்தை ஸ்வீகரித்துக்கொள்ளுங்கள். மிருத்யுவாகிற நதியைக் கடப்பதற்கு இதுவே சிறந்த பாலம். இதன்றி வேறு வழியில்லை.

சௌனகர் :— குருநாதரே, பிரணவ தியானத்தைப் பற்றி மேலும் கூறுமாறு வேண்டுகின்றேன்.

அங்கிரஸ் :— अरा इव रथनाभौ संहता यत्र नाड्यः
स एषोऽन्तश्चरते बहुधा जायमानः ।
ओमित्येवं ध्यायथ आत्मानं
स्वस्ति वः पाराय तमसः परस्तात् ॥

அரா இவ ரதநாபௌ ஸம்ஹதா யத்ர நாட்ய:
ஸ ஏஷோऽந்தஸ்சரதே பஹுதாஜாயமாந: ।
ஓமித்யேவம் த்யாயத ஆத்மாநம்
ஸ்வஸ்தி வ: பாராய தமஸ: பரஸ்தாத் ॥

ரத சக்கரத்தின் நாபியில் (குடத்தில்) ஆரங்கள் சேர்க்கப்பட்டிருப்பதுபோல் இதய ஸ்தானத்தில் எல்லா நாடிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அந்த இடத்

தில் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் மற்றும் பலவிதமாக புத்திக்கு ஸாக்ஷியாக ஆத்மா இருக்கிறது அந்தக்கரணத்தில் ஏற்படும் பலவித விருத்திகளால் அதனுடன் சேர்ந்துள்ள ஆத்மாவும் பலவித மாறுதல் களையடைவதுபோல் காண்கிறது. அந்த ஆத்மாவைத் தனியாகப் பிரித்து ஓம் என்ற பிரணவத்தால் தியானம் செய்யவேண்டும். அப்படி தியானம் செய்தால் அக்ஞானமாகிற தமஸை சீக்கிரம் தாண்டிவிடலாம். அதற்கு உங்களுக்கு விக்னம் ஒன்றும் வராமலிருக்க ஆசீர்வதிக்கிறேன் என்கிறது ச்ருதி.

கோபதர் :— ஸௌம்யர்களே, ச்ருதியின் ஸ்வஸ்தி வசனத்துக்கு ஆழ்ந்த பொருளுண்டு. ஆசார்யன் சிஷ்யர்களுக்கு உபதேசிக்கமட்டும்தான் செய்வார். சொல்ல வேண்டியதை தெரிந்துகொள்ள வேண்டியதை கூறுவதோடு, சுருங்கச்சொல்லி விளங்கவைப்பதோடு அவர் பணி முடிவடைந்துவிடும். இங்கே ஓங்காரத்தை தியானம் செய்யுங்கள் என்று சொல்வதுடன் அவர் கடமை முற்றுப் பெறுகிறது. அதற்குமேல் தியானம் செய்வதும் தொடர்ந்து விசாரணை செய்வதும் சிந்திப்பதும் சீடரின் கடமை. அதில் ஆசாரியனுக்கு பங்கு ஒன்றுமில்லை. ஆகையினுல் அவர் சீடர்களின் முன்னேற்றத்திற்கு விக்னங்கள் வராவண்ணம் ஆசீர்வாதம் செய்கிருர். 'மங்களானி பவந்து' என்று வாழ்த்துகின்ருர்.

சௌனகர் ;— ஸ்வாமீ ! மேலும் தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகிறேன்.

அங்கிரஸ் :— यः सर्वज्ञः सर्वविद्यस्यैष महिमा भुवि ।
दिव्ये ब्रह्मपुरे ह्येष व्योम्न्यात्मा प्रतिष्ठितः ॥

मनोमयः प्राणशरीरनेता प्रतिष्ठितोऽन्ने हृदयं संनिधाय ।
तद्विज्ञानेन परिपश्यन्ति धीरा आनन्दरूपममृतं यद्विभाति ॥

யः ஸர்வக்ஞः ஸர்வவித்யஸ்யைஷ மஹிமா புவி ।
திவ்யே ப்ரஹ்மபுரே ஹ்யேஷ வ்யோம்ந்யாத்மா
ப்ரதிஷ்டிதः ॥

மநோமயः ப்ராணசரீரநேதா
ப்ரதிஷ்டிதோऽந்நே ஹ்ருதயம் ஸந்நிதாய ।
தத்விக்ஞாநேந பரிபச்யந்தி தீரா
ஆநந்தரூபமம்ருதம் யத் விபாதி ॥

எவர் ஸர்வக்ஞரோ, ஸர்வவித்தோ எவருக்கு பூவுலகில் இப்படிப்பட்ட மகிமையிருக்கிறதோ, அவர் திவ்யமான பிரம்ம புரத்திலுள்ள தஹராகாசத்திலே பிரதிஷ்டிதராக இருக்கிறார். மனோமயர், பிராணனையும் சரீரத்தையும் நடத்துபவர். அன்னத்திலிருப்பவர், புத்தியை தஹராகாசத்தில் வைத்து சிறந்த அறிவினால் விவேகிகள் ஆனந்தரூபமாயும் அழிவற்றதாயுமுள்ள அக்ஷரப்ரம்மத்தை நன்றாகப் பார்க்கிறார்கள்.

வாஜபேயி :— மந்திரார்த்தம் சரியாக விளங்கவில்லை. விவரமாகச் சொல்லவேண்டும் ஸ்வாமீ !

அங்கிரஸ் :— ஸௌம்யர்களே, அக்ஷர பிரம்மம் எங்கும் பிரகாசிக்கின்றது என்று ச்ருதி கூறிற்று. அதை ஸாக்ஷாத்கரிக்க ஓம்கார தியானம் செய்யவேண்டும் என்றும் கூறியது. இப்போது தியானம் செய்தவர்கள் அதில் தேர்ச்சியடைந்தவுடன் எப்படிக் காண்கிறார்கள் என்பதை விளக்குகிறது. பிரம்மம் எல்லாவற்றையும் ஸாமான்யமாயும் விசேஷமாயும் அறிகின்றது. முன் விவரித்தபடி எல்லா மாண்புகளும் உள்ளது. அப்படி அண்டத்திலிருப்பதை பிண்டத்திலும் தியானத்தால் பார்க்கமுடியும். ப்ரஹ்மபுரம் என்பது சித்தத்தின் ஸ்தானமான இருதயகமலம். இங்கு ஏற்படும் மனோ விருத்திகள் ப்ரஹ்ம சைதன்யத்தால் ப்ரகாசிப்பதால் ப்ரஹ்மத்தின் அபிவ்யக்தி இங்கு ஏற்படுவதையொட்டி இருதயகமலம் ப்ரஹ்மபுரமாக வர்ணிக்கப்படுகிறது. இருதயகமலமத்தியிலுள்ள தஹராகாசத்தில் ஆத்மா

நன்கு நிலேத்திருப்பதுபோல் காணப்படுகிறது. மனோ விருத்திகள் மூலம் அவர் அறியப்படுவதால் அவர் மனோ மயர். மனம் அவருக்கு உபாதி. ஒரு ஸ்தூல சரீரத்தி லிருந்து மற்ருெரு ஸ்தூல சரீரத்திற்கு பிராணனேயும் சரீரத்தையும் இவரே அழைத்துச்செல்கிருர். சரீரத் திற்குள் உள்ள ஹிருதயத்தில் அவர் விளங்குவதால் அன்னத்தால் வளருகின்ற ஸ்தூல சரீரத்தில் இருப்ப தாகக் கூறப்படுகிறது. அன்னத்தில் இருப்பவர் என்பதற்கு இதுதான் பொருள். புத்தியை தஹரா-காசத்தில் செலுத்தி தியானம் செய்வதாலும் சமம், தமம், வைராக்யம் முதலிய ஸாதனங்களுடன் செய்யும் சிரவண மனனுதிகளாலும் ஆசார்ய உபதேசம் மூலம் ஏற்படும் ஆத்மதத்வ ஞானத்தால் சிறந்தவிவேகிகள் அழிவற்ற ஸச்சிதானந்த ரூபமான அக்ஷரபிரம்மத்தை நேரில் காண்கிருர்கள். இத்துடன் இன்றைய பாடத்தை நிறுத்திக்கொள்வோம்.

கோபதர் :— அப்படியே செய்வோம். ஆன்ஹிகங்களே முடித்துக்கொண்டு இங்கேயே போஜனம செய்யும்படி வேண்டுகிறேன்.

(திரை விழுகிறது)

காட்சி 3

[திரை விலக முன் காட்சிபோல் கோபதர் ஆச்ரமத்தில் உரையாடல் நடக்கின்றது.]

கோபதர் :— சௌனகரே! முன் பாடத்தின் சுருக்கத்தைக் கூறுமாறு அழைக்கிறேன்.

சௌனகர் :— குருநாதரே! நமஸ்காரம். அக்ஷரப் பொருளே அடைவதற்கு மார்க்கம் சொல்லப்பட்டது ஓங்கார வில்லே எடுத்து உபாஸனேயால் கூர்மைபெற்ற ஜீவனே அம்பாகத் தொடுத்து பிரம்மபாவனே நிறைந்த சித்தத்தால் அதை இழுத்து உய்யவேண்டும். லக்ஷ்ய மாகிற அக்ஷரபிரம்மத்தை நோக்கிப் பாய்ந்து அதனுள்

ஊடுருவி நிற்கவேண்டும் பாணத்தைப்போல். ஏக வஸ்துவான பிரம்மத்தை அறிவதே நமது கடமை. மற்றவைகளை விட்டொழிக்கவேண்டும். இதுவே மோக்ஷத்துக்குப் பாலம்.

வாஜபேயி:— ஐயனே! ஓங்கார தியானத்தைப் பற்றியும், தியானிப்பவர்கள் காணும் காக்ஷியையும் விவரித்தீர்கள். அடுத்தபடியாக அந்தக் காக்ஷியைக் கண்டவர்கள் அடையும் பயனைப்பற்றி விவரிக்க வேண்டுகிறேன்.

அங்கிரஸ்:— ஸௌம்யர்களே, உங்களைப்போன்ற உத்தம அதிகாரிகளுக்கு உபதேசம் செய்யச்செய்ய எனக்கும் உற்சாகம் உண்டாகிறது. சாஸ்திர உபதேசத்தாலும், ஆசாரியர் உபதேசத்தாலும் விவேகமடைந்த அறிவாளிகள், சமம், தமம், தியானம், ஸர்வத்தியாகம், வைராக்கியம் அடைந்து பெற்ற ஞானத்தால் பிரம்ம தத்வத்தை காண்கின்றனர். ஆமாம், தியானத்தில் உணருகின்றனர். அப்போது அதாவது பிரம்மஸாக்ஷாத்காரத்தின்போது என்ன நடக்கிறது என்று ச்ருதி கூறுகிறது.

भिद्यते हृदयग्रन्थिश्छिद्यन्ते सर्वसंशयाः ।
क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन्दृष्टे परावरे ॥

பித்யதே ஹ்ருதயக்ரந்திஸ்சித்யந்தே ஸர்வ ஸம்சயா: ।
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந்த்ருஷ்டே பராவரே ॥

அந்தப் பராபர வஸ்து பார்க்கப்பட்டதும், ஸாதகனுடைய ஹ்ருதய முடிச்சு அவிழ்கிறது. ஸந்தேஹங்களெல்லாம் ஒழிகின்றன. கர்மங்கள் எல்லாம் நாசமடைகின்றன.

வாஜபேயி:— ஒருதடவை பார்த்தவுடனேயே இந்த அற்புதங்களெல்லாம் நிகழ்ந்துவிடுமா? நம்பவே முடியவில்லையே!

அங்கிரஸ் :— ஏன் நடக்காது? நான் சொல்வதற்காக நம்பவேண்டாம். நீரே அனுபவத்தில் காண்பீர். பிரம்மஸாக்ஷாத்கார ஞானத்தால் ஞானியின் உள்ளத்தில் அக்ஞானத்தின் வேர் அறுந்துபோகிறது. மண்டி எரிகின்ற தீ விறகைச் சாம்பலாகச் செய்வதுபோல் ஞானத்தீ எல்லாக் கர்மங்களையும் சாம்பலாக எரித்துவிடும்

கோபதர் :— ஸௌம்யர்களே, அநேக வர்ஷங்களாய் இருள் மண்டிக்கிடந்த அறையில் ஒரு சிறு தீபத்தைக் கொண்டுபோனவுடன் எங்ஙனம் இருட்டு ஓடிப் போகிறதோ அதுபோல் அந்த பராபரவஸ்து (கார்ய காரணத்மா) பார்க்கப்பட்டவுடன் ஸகல கர்மங்களும் நசித்துப்போகின்றன. இதய முடிச்சு பிளந்துபோகிறது. ஸம்சயங்கள் நிவர்த்தியாகின்றன.

சௌனகர்:— குருநாதரே, மேலும் தொடர்ந்து உபதேசிக்க பிரார்த்திக்கின்ருேம்.

அங்கிரஸ் :— சீடர்களே, அங்ஙனமே யாகட்டும் அடுத்தபடியாக ச்ருதியில் முன்சொன்ன பொருள்களையே திரும்பவும் மனதில் பதியவைப்பதற்காக சுருக்கமாகக் கூறப்படுகிறது.

हिरण्मये परे कोशे विरजं ब्रह्म निष्कलम् ।
तच्छुभ्रं ज्योतिषां ज्योतिस्तद्यदात्मविदो विदुः ॥

ஹிரண்மயே பரே கோசே விரஜம் ப்ரஹ்ம நிஷ்கலம் ।
தத சுப்ரம் ஜ்யோதிஷாம் ஜ்யோதிஸ் தத்
யதாத்மவிதோ விது: ॥

நிர்மலமானதும் அவயவமற்றதும், ஜ்யோதிர்மயமான கோசத்தில் இருப்பதுமான பிரம்மம், பரிசுத்தமாகவும் ஜ்யோதிகளுக்கெல்லாம் ஜ்யோதிஸ்ஸாகவும் விளங்குகிறது அதை அறிபவர்கள் ஆத்மவித்துக்கள்.

சௌனகர்:— குருநாதரே, நாம் காணும் சூர்யன், மின்னல் முதலிய பிரகாசங்களைவிட பிரகாசமானதா அந்த பிரம்ம ஜ்யோதி?

அங்கிரஸ்:—ஆம். ச்ருதி அப்படித்தான் சொல்கிறது.

न तत्र सूर्यो भाति न चन्द्रतारकं नेमा विद्युतो भान्ति कुतोऽयमग्निः ।
तमेव भान्तमनुभाति सर्वं तस्य भासा सर्वमिदं विभाति ॥

த தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர தாரகம்
நேமா வித்யுதோ பாந்தி குதோऽயமக்நி: 1
தமேவ பாந்தமநுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி 11

அந்த ஆத்ம ஒளியின் முன்னே, சூர்யன் பிரகாசிக்காது. சந்திரனும் நக்ஷத்திரங்களும் பிரகாசிக்காது. அங்கே மின் ஒளியும் பிரகாசிக்கமாட்டாது. இந்த அக்னி எந்த மூலை? அதுவும் ஒளிவிடாது. ஏன் அவைகள் பிரகாசிக்காது என்பதற்கு ச்ருதியே காரணமும் கூறுகிறது. இந்த ஒளிகள் எல்லாம் பிரம்மத்தின் ஒளியாலேயே விளங்குகின்றன. அதனுலே தான் இந்த ஜகத்தும் விளங்குகின்றது.

கோபதர்:— பிரபஞ்சத்தில் பகலில் வெளிச்சம் கொடுக்கும் சூர்யனும் ஆத்மஸ்வரூபத்துக்குமுன் ஒளி இழந்து போகிருன். நமக்கு இரவில் வெளிச்சம் தரும் சந்திரனும் தாரகைகளும் அங்கே பிரகாசமற்றுப் போகின்றன. பட்டப்பகலில் பகலோன் பிரகாசிக்கும் போது ஒரு மின்மினியின் வெளிச்சம் எடுப்பாக இருக்குமா? அங்கே மின்னல் ஒளியும் பெரும் நெருப்பும் வெளிச்சம் தருவதில்லை. ஏனென்ருல் சூரியன், சந்திரன், தாரகை, மின்னல், அக்னிபோன்ற பிரகாசமுள்ள வஸ்துக்களுக்கு அனுத்ம பதார்த்தங்களைத்தான் பிரகாசப்படுத்த முடியும் பிரம்மத்தை பிரகாசப்படுத்த முடியாது. நமது கண்ணுல் இந்த கமண்டலத்தைப்

பார்க்கிறோம். ஆனால் இந்த கமண்டலத்தினால் கண்ணை பார்க்க முடியுமா? முடியாது. அதுபோல் எல்லா வற்றையும் பிரகாசப்படுத்துவது ஆத்மஸ்வரூபமான பிரஹ்மம் தவிரவும் சூரியன் முதலிய ஒளிகளுக்கு சுயமாக பிரகாசிக்கும் சக்தியும் கிடையாது. அப்படியே இந்த ஜகத்தும்.

ஸோமயாஜி :— இந்த ருக்கை நான் அடிக்கடி பூஜை வேளையில் கேட்டிருக்கிறேன். இப்பொழுதுதான் உண்மையான பொருள் தெரிந்துகொண்டேன்.

அங்கிரஸ் :—

ब्रह्मैवेदममृतं पुरस्ताद्ब्रह्म पश्चाद्ब्रह्म दक्षिणतश्चोत्तरेण ।
अधश्चोर्ध्वं प्रसृतं ब्रह्मैवेदं विश्वमिदं वरिष्ठम् ॥

ப்ரஹ்மைவேதமம்ருதம் புரஸ்தாத் ப்ரஹ்ம
பஸ்சாத் ப்ரஹ்ம தக்ஷிண தஸ்சோத்தரேண ।
அதஸ்சோர்த்வம் ச ப்ரஸ்ருதம் ப்ரஹ்மைவ
இதம் விச்வமிதம் வரிஷ்டம் ॥

பிரம்மத்தின் ஸர்வவ்யாபகத் தன்மையைப்பற்றி இம்மந்திரம் சொல்கிறது. நமக்கு முன்னால் வெவ்வேறாகக் காணப்படும் இந்த ஜகத்தும் அமிருதமான பிரஹ்மம் பின்னேயும் பிரஹ்மம். வலது பக்கமும் பிரஹ்மம், இடது பக்கமும் பிரஹ்மம். கீழும் பிரஹ்மம். மேலும் பிரஹ்மம். இப்பிரபஞ்சம் முழுவதும் பிரஹ்மம். அது எங்கும் பரவியிருக்கிறது. வரிஷ்டமானது.

கோபதர் :— சிஷ்யர்களே! பிரஹ்மம் எங்ஙனம் எல்லா இடத்தும் விளங்குகிறதென்பதை தெரிந்துகொண்டீர்களா?

வாஜபேயி :— எங்கும் பிரஹ்மம் என்பதையும், அது எல்லாவிடத்தும் நீக்கமற விளங்குகிறது என்பதையும் தெரிந்துகொண்டோம். ஆனால் அந்த தத்வத்தை

அனுபவத்துக்குக் கொண்டுவருவது சிரமமாகத் தோன்றுகிறது.

அங்கிரஸ் :—அதற்குத்தான் ச்ருதி அந்த அமிருத மயமான அழிவில்லாத பிரம்மத்தை அவித்யையில் மூழ்கியிருக்கும் நமக்கும் தெரியும்படியாக உபதேசிக்கின்றது. நம் கண் முன்னேயிருப்பதும், பார்ப்பதும் பார்க்காததும், பின்னே இருப்பதும், பார்சுவங்களில் காண்பதும், அதுபோல் மேலும் கீழும் எல்லா திசைகளிலும் இருப்பதும் பிரம்மமே என்று நாம் அறிய வேண்டும். கார்யரூபமான நாம உருவங்களுடன் கூடிய எல்லாவற்றிலும் காரணமான அந்த பிரம்மம் ஊடுருவிப் பரந்து நிற்கிறது. இந்த ஜகத் பூராவும் சிரேஷ்டமான பிரம்மமேயாகும். இந்த ஸம்பூர்ணமான ஜகத்தானது, பழுதையில் பாம்பு தோன்றுவதுபோல் பிரம்மத்தில் தோன்றுகிறது அவ்வளவுதான். நமது அவித்யையால் அக்ஞானத்தால் தான் அப்படித் தோன்றுகிறது. ஒரே வஸ்துவான பிரம்மம் தான் ஸத்யம். அதுவே பரமார்த்தம் வேறொன்றுமில்லை.

சௌனகர் :— ஐயன்மீர் ! இப்போது எல்லாம் நன்கு தெரிகிறது. படிப்படியாக தியானத்தினாலும் விசாரணையினாலும் அனுபவத்திற்கு வரவேண்டும்.

கோபதர் :— ஆமாம். "மரத்தை மறைத்தது மாமத யானை. மரத்தில் மறைந்தது மாமத யானை ; பரத்தை மறைத்தது பார்முதல் பூதம் ; பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே" என்று வயதான பெரியோர்கள் பழமொழியாகக் கூறுவார்கள். அதில் எவ்வளவு உண்மையிருக்கிறது ! ஒரு கைதேர்ந்த தச்சன், ஒரு யானையை மரத்தினால் செய்கிறான். தத்ரூபமாக யானையைப்போலவே இருக்கிறது. மதங்கொண்டு நம் முன் வருவதுபோல் இருக்கிறது. அதைக்கண்ட ஒரு பாலகன் மதயானை வருவதாகவே எண்ணுகிறான். அங்கே அவன் மரத்தைக் காணவில்லை. யானையைத்

தான் காண்கின்றான். ஆனால் அங்கே வரும் பெரியவர் யானையைக் காணவில்லை. மரத்துண்டைத்தான் பார்க்கின்றார். அதுபோல் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற ஐந்து பூதங்களாலான இப்பிரபஞ்சம் தோன்றும்போது பிரஹ்மம் தெரிவதில்லை. பிரஹ்மம் தெரியும்போது பிரபஞ்சம் தெரிவதில்லை.

சௌனகர் :— எவ்வளவு அழகான பழமொழிகள் வழங்கி வந்திருக்கின்றன. முதலில் அக்ஞான நிலையில் யானை மரத்தை மறைக்கின்றது. பார் (பிருதிவி) முதலிய பூதங்கள் பரத்தை மறைத்துவிடுகின்றன. ஞானவானான நிலையில் மரம் தெரிய யானை மறைந்து விடுகின்றது. பிரஹ்மம் தெரிய பிரபஞ்சம் மறைந்து போகின்றது. நன்றாக புரிந்துகொண்டோம் ஸ்வாமீ!

அங்கிரஸ் :— இதையே 'நாயைக் கண்டால் கல்லைக் காணவில்லை கல்லைக் கண்டால் நாயைக் காணவில்லை' என்றும் பெரியோர்கள் சொல்வார்கள்.

வாஜபேயி :— குருநாதரே, இந்த உபமானங்கள் மூலம் நன்றாகப் புரிந்துகொண்டோம். மேலும் தொடர்ந்து உபதேசிக்கவேண்டும்.

கோபதர் :— சீடர்களே, ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள். அதற்கு விடை கூறுகிறேன்.

ஸோமயாஜி :— பராபர வஸ்து பார்க்கப்பட்டவுடன் கர்மங்கள் எல்லாம் நசித்துவிடுவதாகச் சொன்னீர்களே. அந்த நிலையை எட்டியவர் செய்யும் கர்மங்களின் பலன் அவரை பாதிக்காதா?

கோபதர் :— பாதிக்காது. வறுத்த விதை முளைக்குமா? அதுபோல் அவர் செய்யும் காரியங்கள் அவரை அணுகாது. சூரியன் பிரகாசிக்கும்பொழுது ஒரு இடத்தில் யாகம் நடக்கிறது. மற்றொரு இடத்தில் கொலை நடக்கிறது. சூரியன் எப்படி இந்த இரண்டு கர்மாக்

களாலும் பாதிக்கப்படுவதில்லையோ அதுபோல் ஞானியும் பாதிக்கப்படுவதில்லை.

அங்கிரஸ் :—ஸௌம்யர்களே, பிரம்மத்தின் ஸர்வ வியாபகத்தன்மையை விளக்க மற்றொரு உதாரணம் கூறுகிறேன். இதோ இருக்கும் மண்குடத்தை எடுத்துக் கொள்வோம். மேலும் மண், கீழும் மண், வலப் பக்கமும் மண், இடப்பக்கமும் மண்ணே சுருங்கச் சொன்னால் குடம் பூராவும் மண்தான். மண் அன்றி வேறில்லை. வேறொன்றுமில்லை. குடம் மண்ணிலிருந்து உண்டானது. இப்பொழுதும் மண்ணாகவே இருக்கிறது. உடைந்த பின்னும் மண்ணாகவே ஆகிறது. மண்ணே அதன் காரணமும் காரியமுமாகும். குடம் மண்ணைத்தவிர வேறொன்றில்லை. அதுபோல் பிரம்மம் காரியமாகிற பிரபஞ்சத்தின் காரணம். அது எங்கும் வியாபித்து, எதிலும் ஊடுருவி, எல்லாமாய் காணும் இடம் தோறும், பார்க்கும் பொருள் தோறும் விளங்காநின்றது.

(கோபதரின் பத்னீ பிரவேசித்து தனது பர்த்தாவையும் அங்கிரஸ்ஸையும் வணங்கிவிட்டு ஒதுங்கி நிற்கிறாள்.)

கோபதர் :— நண்பரே! உங்கள் மதனியார் வந்த காரணம் தெரிகின்றதா?

அங்கிரஸ் :— தெரியவில்லை, கூறுங்கள்.

கோபதர் :— நாம் பாடம் சொல்வதில் ஆழ்ந்துபோய் காலம் கடந்துபோனதைக் கவனிக்கவில்லை. மாத்யாஹ்நிக ஸமயம் நெருங்கிவிட்டதையும், வைச்வதேவத்துக்கு எல்லாம் தயாராக இருப்பதையும் சொல்லவே வந்திருக்கிறாள்.

அங்கிரஸ் :— அப்படியா! ரொம்ப ஸந்தோஷம். இத்துடன் இன்றைய பாடத்தை நிறுத்திக்கொள்வோம். சீடர்களே! வருகிற மூன்று நாட்கள் அனத்யயன தினங்கள். அன்று பாடம் கிடையாது. நீங்கள் மூன்று

நாட்களும் ஓய்வெடுத்துக்கொண்டு இயற்கைக் காக்ஷிகளைக் கண்டு களியுங்கள். அதற்குப்பின் எனது ஆசிரமத்திலேயே பதிவுபோல் பாடம் தொடங்கப்படும்.

சௌனகர் :— குருநாதரே! தங்கள் உத்தரவுப்படி செய்கிறேம்.

(எல்லோரும் எழுந்திருக்கிருர்கள்)

(திரை விழுகிறது)

மூன்ருவது அங்கம் முற்றும்.

நான்காவது அங்கம்

காட்சி 1

[திரை விலக அங்கிரஸ் ஆச்ரமம். ஸம்பாஷணை நடக்கிறது.]

அங்கிரஸ்:— நண்பரே! ஸௌம்யர்களே! இதுவரையிலும் பலவிதமாக அக்ஷரபிரஹ்மத்தை ஸாக்ஷாத்காரம் செய்யும் விஷயமாகப் பேசப்பட்டது. பிரஹ்ம தத்வம் விளங்குவதற்கு மிகவும் கஷ்டமானதால் இன்று வேருெருவிதமாக தத்வத்தை விளக்க முயற்சிக்கிறேன்.

சௌனகர்:— குருநாதரே! தங்கள் சித்தம் எங்கள் பாக்யம். கவனமாகக் கேட்கிறோம்.

அங்கிரஸ்:—

द्वा सुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते ।
तयोरन्यः पिप्पलं स्वाद्वत्ति अनश्नन्नन्यो अभिचाकशीति ॥

த்வா ஸுபர்ணு ஸயுஜா ஸகாயா
ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே ।
தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி
அநச்நந்நந்யோ அபிசாகசீதி ॥

இணைபிரியாத, எப்பொழுதும் விட்டுப்பிரியாத அழகிய சிறகுடைய இரண்டு பக்ஷிகள் ஒரே விருக்ஷத்தை அடைந்திருக்கின்றன. ஸமானமான அந்தஸ்து உடையவை அந்த இரண்டு பறவைகள். அவற்றுள் ஒன்று பழங்களை ருசியோடு உண்கிறது. மற்றொன்று அப்படி புஜிக்காமல் பார்த்துக்கொண்டு இருக்கிறது.

ஸோமயாஜி:— ஸ்வாமீ! எனக்கு ஒன்றும் புரியவில்லை புதிர்போல இருக்கிறது.

வாஜபேயி:— குருநாதரே! எனக்கும் விளங்கவில்லை. விருக்ஷம் என்பது எதைக் குறிக்கிறது? பக்ஷிகள் யார்?

பழங்கள் என்றால் என்ன? விபரமாகச் சொல்ல வேண்டும்.

அங்கிரஸ் :— இங்கே பறவைகள் என்பது ஜீவனும் ஈசுவரனும். இருபறவைகள் சேர்ந்து ஒரே மரத்தில் வாஸம் செய்வதுபோல இங்கே ஜீவனும் ஈசுவரனும் சரீரமாகிற விருக்ஷத்தில் வஸிக்கின்றனர். ஆனால் இந்த இரு பறவைகளில் ஜீவன் ஒருவன்தான் இந்த சரீரமாகிற மரத்தில் பழுக்கும் பழங்களைத் தின்கிறான். மற்றொரு பறவையாகிய ஈசுவரன் ஜீவன் தின்பதை ஸாக்ஷியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார். தான் தின்பதில்லை.

சௌனகர் :— பழங்கள் என்பது முன் செய்த நல்வினை, தீவினைப் பயன்கள்தானே?

கோபதர் :— ஆம்.

வாஜபேயி :— ருசியோடு பழங்களை உண்கிறதாகச் சொல்லும்போது தீவினைப் பயனகளும் சேருமோ?

கோபதர் :— பழங்கள் என்பது கர்மத்தாலுண்டாகும் இன்பதுன்பங்கள். ருசியோடு புஜிக்கிறது என்றால் ருசியுள்ள பழத்தை மட்டும் உண்கிறது என்ற கருதது அல்ல. ருசயற்றதாயினும் ருசியுள்ளதெனக் கருதி உண்கிறது.

அங்கிரஸ் :— அவ்யக்தமாகிற மூலத்திலிருந்து தோன்றிய அசுவத்த விருக்ஷம் எல்லா பிராணிகளின் கர்மபலன்களுக்கும் ஆச்ரயமாக உள்ளது. இது ஆகாயத்தில் வேருடனும், கீழே நோக்கிய கிளைகளுடனும் விளங்குகிறது. அந்த விருக்ஷத்தில் அவித்யை, காமம், கர்மா, வாஸனை முதலியவைகளுக்கு ஆச்ரயபூதமான லிங்க சரீரத்தை உபாதியாகக்கொண்ட ஜீவனும், ஈசுவரனும் இரண்டு பறவைகளைப்போல் ஆலிங்கனம் செய்துகொண்டு வஸிக்கின்றன. அதில் ஜீவபக்ஷியானது தான் செய்த வினைகளால் பிராப்தமாகியிருக்கும்

சுகம் துக்கம் என்ற கனிகளை ருசித்து உண்கிறது. அதாவது ஜீவன் பிராரப்தகர்ம பலன்களை அனுபவிக்கிறது என்று அர்த்தம். ஆனால் ஈசுவரனுகிற மற்றப் பறவை பழங்களை புஜிக்கவில்லை. அவைகளை அனுபவிக்கவில்லை. சாக்ஷி ரூபத்தில் இருந்து போக்தாவுக்கும் போக்கியத்துக்கும் ப்ரேரகமாக விளங்கா நிற்கிறது. வேலையாட்கள் ஓடியாடி வேலைகள் செய்யும் போது பார்த்துக்கொண்டு வீற்றிருக்கும் ராஜாவைப் போல் விளங்குகிறுன் ஈசுவரன். ஈசுவரனுடைய பார்வையாலேயே உலகில் எல்லா காரியங்களும் நடைபெறுகிறது. இதற்காக அவர் ஒரு வியாபாரமும் செய்வதில்லை.

சௌனகர்:— ஜீவபக்ஷி எப்போதும் இப்படி புஜித்துக் கொண்டே இருக்கவேண்டியதுதானு? அதற்கு எப்போது விடுதலை கிட்டும்? பார்த்துக்கொண்டிருக்கும் ஈசுவர பக்ஷிக்குக் கருணையில்லையா?

அங்கிரஸ்:— ஜீவனுக்கு நிச்சயமாக விடுதலையுண்டு. அந்த ஸ்வதந்திரத்துக்கு பிறிதொருவரின் கருணை தேவையில்லை. 'தன் கையே தனக்கு உதவி' என்றபடி அதன் தாழ்வும் வாழ்வும் அதனுடைய கைகளிலேயே இருக்கின்றன. ச்ருதி சொல்வதைக் கேளுங்கள்.

समाने वृक्षे पुरुषो निमग्नोऽनीशया शोचति मुह्यमानः ।
जुष्टं यदा पश्यत्यन्यमीशमस्य महिमानमिति वीतशोकः ॥

ஸமாநே வ்ருக்ஷே புருஷோ நிமக்நோ
அநீசயா சோசதி முஹ்யமாந: 1
ஜுஷ்டம் யதா பச்யத்யந்யமீசம்
அஸ்ய மஹிமாநமிதி வீதசோக: 11

ஸமான வாஸஸ்தானமாக அதே மரத்தையுடையதாயினும் ஜீவன் தாழ்ந்த நிலையையடைந்து மதி மயங்கி, திறமையற்று துன்புறுகிறது. அது எப்பொழுது ஏற்றமுள்ளதும், ஆளுந்திறமை வாய்ந்ததுமான மற்ற

பறவையைப் பார்க்கிறதோ, அப்பொழுது அந்த மஹிமை தன்னுடையதே என்று கண்டு சோகத்தை விடுகிறது.

சௌனகர் :— இதை விளக்கமாகக் கூற வேண்டுகின்றேன்.

வாஜபேயி :— ஜீவன் எப்படியெல்லாம் துன்பப்படுகிறதென்று விவரமாக உபதேசிக்கவேண்டும் ஸ்வாமீ!

அங்கிரஸ் :— நண்பரே! ஜீவனின் நிலையை விவரிக்கும்படி வேண்டுகின்றேன்.

கோபதர் :— அப்படியே செய்கிறேன். ஸமான விருக்ஷம் என்றது முன்சொன்ன சரீரமாகிற மரம். ஜீவன் அக்ஞானம், ஆசை, வினைகள், விருப்பு, வெறுப்பு இவைகளின் கனத்த பாரத்தினல் ஸமுத்திரத்தில் மூழ்கும் படகுபோல் மூழ்கி தத்தளிக்கிருன். ஜீவன் தேகத்தையே தானுக எண்ணிக்கொண்டு 'நானே நான்! இன்னுருடைய புத்திரன், இன்னுரின் பேரன், இன்னுரின் தந்தை, இன்ன உறவு, சந்தோஷமாயிருக்கிறேன், துக்கமாக இருக்கிறேன், பருத்து இருக்கிறேன், இளைத்து இருக்கிறேன், என்றெல்லாம் பலப்பிரகாரமாக அலட்டிக்கொள்கின்ருன். இந்த சரீரத்தைத் தவிர வேறென்றுமில்லை என்ற முடிவுடன் பிறந்து, வாழ்ந்து, உற்ருர் உறவினருடன் அளவளாவி, மகிழ்ச்சியுற்று, பிரிந்து, துயரப்பட்டு, மூப்புற்று மரணமடைந்து இப்படியாக இன்ப துன்ப போகங்களை அனுபவித்துத் துன்பப்படுகின்றது.

அங்கிரஸ் :—இப்படியாக ஜீவன் பல பிரகாரமாக அவஸ்தைப்படும்போது தீனமான, தயனீயமான நிலைக்கு வருகிறது. தன்னுல் ஒன்றும் நடக்காது என்ற விவசமான நிலைக்கு வந்து மோகமுற்று சோகப்படுகிறது. இப்படியாக பிரேதம், விலங்கு, மனிதன் முதலிய பற்பல யோனிகளில் ஜன்மமெடுக்கிறது. பல ஜன்மங்களில் சிறிது சிறிதாக செய்த நல்வினைப்பயனுல் ஒரு ஸத்

குருவை அடைந்து அவருடைய கருணையினால் நல்வழிப்பட்டு, அஹிம்சை, ஸத்தியம், பிரம்மசர்யம், தியாகம் முதலிய கல்யாணகுணங்களால் மனத்தின் கண் மாசுகள் நீக்கப்பட்டு ஈசுவரனைப் பார்க்கின்றான். உபாதிகளற்ற விலக்ஷணமான ஈசுவரனைப்பார்த்தவுடன் சோக மோகங்கள் நீங்கி கிருதகிருத்யனாகிறான்.

வாஜபேயி :— ஸ்வாமீ! ஈச்வரனைப் பார்த்தமாத்திரத்தில் எப்படி சோகம் நீங்கும்?

கோபதர் :— ஈச்வரனைப் பார்த்தவுடன் என்றால் ஆளும் திறமையுடன் எல்லாவற்றிற்கும் அந்தராத்மாவாக இருக்கும் ஈச்வர மஹிமையை அறிந்தவுடன் என்று பொருள்.

அங்கிரஸ் :— அது மட்டுமல்ல. அந்த ஈச்வர ஸ்வரூபம் தானே என்ற முடிவுக்கும் வருகின்றான். ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் பேதமில்லை என்னும் நிலை எய்தியவுடன் சோக மோஹங்களுக்கு அங்கே இடமேது? அடுத்த ருக்கிலும் இவ்விஷயத்தை ச்ருதி விஸ்தாரமாகச் சொல்கின்றது.

यदा पश्यः पश्यते रुक्मवर्णं कर्तारमीशं पुरुषं ब्रह्मयोनिम् ।
तदा विद्वान्पुण्यपापे विधूय निरंजनः परमं साम्यमुपैति ॥

யதா பச்ய: பச்யதே ருக்மவர்ணம்
கர்த்தாரமீசம் புருஷம் ப்ரஹ்மயோநிம் ।
ததா வித்வான் புண்யபாபே விதூய
நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி ॥

எப்போது ஜீவன் ஜ்யோதிர்மயமாயும், கர்த்தாவாயும், ஈசனாயும், பிரஹ்மயோநியாயுமிருக்கிற புருஷனைப் பார்க்கிறானோ, அப்போது அந்த வித்வான் புண்ய பாபங்களை உதறிவிட்டு, நிர்லேபனாய் பரமஸாம்யத்தை அடைகின்றான்,

கோபதர் :— ஸௌம்யர்களே, இந்த ருக்கில் பக்ஷிகள் என்கிற உபமானத்தைவிட்டு நேரடியாகவே ச்ருதி விளக்குகிறது. பார்க்கிறவன் யார்? ஜீவன். ஸத்குருவின் கருணையினால் ஆட்கொள்ளப்பட்ட ஸாதகன், யோகி. அவன் ஸ்வயம்பிரகாசமான, ஸ்வர்ணம்போல் ஜ்வலிக்கும் நாசமற்ற ஒளியுடைய ஈசுவரனைக் காண்கிறான். ஸகல ஜகத்துக்கும் சிருஷ்டிகர்த்தாவான பிரம்மாவிற்கே காரணமாகவும் அறிகின்றான். எல்லாவற்றையும் அடக்கி ஆளும் ஈசனாகவும் அறிகிறான். இப்படிப்பட்ட அறிவு பெற்றவனே உண்மையான அறிவாளி என்று வேதம் அவனை வித்வான் என்று பெருமையாகப் பேசுகின்றது. இந்த அறிவு பெற்றவுடன் புண்யபாபங்களை அதாவது பந்தத்திற்குக் காரணபூதமான கர்மங்களை மூலத்தோடு (வேரோடு) களைந்துவிடுகிறான். அப்போது மாசற்றவனாய் மலங்கள் நீங்கியவனாய் அந்த பரமாத்மாவுடன் அத்வைதரூபமாகிற ஸாம்யத்தை அடைகிறான்.

அங்கிரஸ் :— கரியானது நெருப்புடன் சேர்ந்தால் உஷ்ணமும் ஒளியும்பெற்று நெருப்பாகவே ஆய்விடுவது போல் ஜீவாத்மா பரமாத்மாவுடன் மேலான ஸாம்யத்தை அதாவது இரண்டற்ற நிலையையடைகிறது.

சௌனகர் :— எப்படி எப்படியோ கிலேசமடைந்த ஜீவாத்மா முடிவில் உண்மை அறிவுபெற்று தன் சொந்த நிலையை அடைகிறது. குருநாதரே, மேலும் தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகிறேன்.

அங்கிரஸ் :—

प्राणो ह्येष यः सर्वभूतैर्विभाति विजानन्विद्वान्भवते नातिवादी ।
आत्मक्रीड आत्मरतिः क्रियावानेष ब्रह्मविदां वरिष्ठः ॥

ப்ராணோ ஹ்யேஷ ய: ஸர்வபூதைர் விபாதி
விஜாநந் வித்வாந் பவதே நாதிவாதீ ।
ஆத்மக்ரீட ஆத்மரதி: க்ரியாவான்
ஏஷ ப்ரஹ்மவிதாம் வரிஷ்ட: ॥

பிராணனுக்கும் பிராணனுகை உள்ள பரமேசுவரன் ஒருவனே ஸர்வ பூதங்களிலுமிருந்து கொண்டு எல்லா பிராணிகளுக்கும் ஆத்மாவாக விளங்குகிறுன். இவனைத் தனது ஆத்மஸ்வரூபமாக அறிந்த வித்வான் வீணுக அதிவாதம் பேசமாட்டான். ஆத்மாவினிடமே விளையாடுபவனுயும், ஆத்மாவினிடமே ஆனந்திப்பவனுகவும் அதையே கிரியையாகவும் உடையவனுய் பிரம்ம ஞானிகளிற் சிறந்தவனுய் விளங்குவான்.

கோபதர் :— ஆம். அறியவேண்டியதை அறிந்தவன் அதிவாதம் செய்யமாட்டான். அதிகம் பேசமாட்டான். அதிக பிரசங்கமும் செய்யமாட்டான். ஏனெனில் பிராணனுக்குப் பிராணனுன பரமாத்மா ஸகல பூதங்களிலும் உறைவதை அறிந்தபின் பேசுவதற்கு என்ன இருக்கிறது? எல்லாம் ஆத்மாதான் என்று அறிந்தபின் சிருஷ்டிகர்த்தாவான பிரம்மா முதல் ஸ்தாவரபர்யந்தம் எல்லாம் ஆத்மாவே, அதற்கு பின்னமாக வேறுபட்ட பொருள் ஒன்றுமில்லையென்று கண்டபின் எதை அதிக்கிரமித்து அவனுல் பேசமுடியும்? ஒன்றுக்கொன்று வேறுபாடும் முரண்பாடும் வேற்றுமையும் உயர்வு தாழ்வும் இருந்தால் அதை வைத்து ஒட்டியோ வெட்டியோ அதிவாதம் பேசலாம். ஆனுல் இங்கே ஆத்மாவைத்தவிர வேறு ஒன்றும் பார்க்கப்படவில்லை; ஒன்றும் கேட்கப்படவில்லை; ஒன்றும் அறியப்படவில்லை. ஆகையினுல் அவன் அதிவாதம் செய்யமாட்டான்.

சௌனகர் :— ஐயுன்மீர்! ஆத்மஞானி எப்படி வாய் மூடி மௌனியாயிருப்பான் என்பதையறிந்தோம்.

வாஜபேயி :— இனி ஆத்மாவிலேயே க்ரீடிக்கிருன். அதிலேயே ரமிக்கிருன் என்ற பகுதிகளையும் விளக்க வேண்டுகிறேன்.

அங்கிரஸ் :— ஸௌம்யர்களே! பிரஹ்மத்தை அறிந்தவன் அதிலேயே விளையாடுகின்ருன். வெளிப் பொருள்களில் அவன் நாட்டம் இல்லை. அதிலேயே

மிகுந்த விச்வாசத்துடன் ஆனந்தத்தையடைகிறுன். அவன் தனது மனைவி, மக்கள், சொத்து முதலியவை களில் க்ரீடை செய்வதில்லை. அது போலவே அவை களில் ஆனந்தமும் அடைவதில்லை. க்ரீடை என்பது வெளிப் பொருள்களிலிருந்து பெறும் இன்பம். ரதி என்பது அவைகளின் அபேக்ஷையின்றி தானுகவே பெறும் இன்பம். இரண்டும் அவனுக்கு ஆத்மாவே.

ஸோமயாஜி :— 'க்ரியாவான்' என்ருல் எப்போதும் லீலைகளைச் செய்பவன் என்றுதானே அர்த்தம்? அந்த கர்மங்களில் அக்னிஹோத்ரம், யாகம் முதலிய கர்மாக்கள் சேருமா?

அங்கிரஸ் :— அவைகள் சேராது. யாகம் முதலிய கர்மாக்களைச் செய்பவன் பாஹ்ய வினைகள் செய்பவனு கிருன். அதற்கும் பிரம்ம ஞானிக்கும் சம்பந்தமில்லை. பாஹ்யமான கர்மங்கள் செய்பவன் ஒருநாளும் ஆத்மா விலேயே கிரீடிப்பவனுகவும் அதிலேயே ரமிப்பவனுகவும் இருக்கமுடியாது. அவைகள் ஒன்றுக்கொன்று விருத்த மானவை. ஒளிக்கும் இருளுக்கும் உள்ள வித்தியாசம் அவைகளில் உண்டு. இரண்டும் எப்படிச் சேர்ந்திருக்க முடியும்? அவன் ஆத்ம ரதியைத்தவிர வேறு கிரியை இல்லாதவனுக பிரம்மஞானிகளிற் சிறந்தவனுகப் போற்றப்படுகிருன்.

கோபதர் :—இதனுல் ஆத்மஞானி சுத்த சோம்பேறி யாகவோ, தூங்குமூஞ்சியாகவோ இருக்கிருன் என்று எண்ணிவிடாதீர்கள். அவன் எப்போதும் கிரியாவா னுகவே இருக்கிருன். அவன் உள்ளே சுகத்தையும் களியாட்டத்தையும் ஒளியையும் காண்கிருன். ஞானத் தாலும் தியானத்தினுலும் ஆர்ய மர்யாதைக்கு உல்லங்கனம் செய்யாமலும் முற்றும் துறந்த ஸன்னியாசி யாக அவன் பெருந்துறவியாக வாழ்கிருன். வாழ்வாங்கு வாழ்கிருன் ஆகையினுல் வரிஷ்டமாக-வையத்துள் தெய்வமாக எண்ணப்படுகிருன். அப்படிப்பட்ட ஒரு

சிறந்த பிரம்மநிஷ்டனிட்மிருந்து உபதேசங்கள் பெற நாம் பாக்கியம் பெற்றிருக்கிறோம் இப்போது.

அங்கிரஸ் :— நண்பரே, இத்துடன் இன்றைய பாடத்தை நிறுத்திக்கொள்வோம்.

(திரை விழுகிறது)

காட்சி 2

[திரை விலக, முன் காட்சிபோல் உரையாடல் நடக்கிறது.]

கோபதர் :— நண்பரே! மேலும் தொடர்ந்து கூற வேண்டுகின்றேன்.

सत्येन लभ्यस्तपसा ह्येष आत्मा सम्यग्ज्ञानेन ब्रह्मचर्येण नित्यम् ।
अन्तःशरीरे ज्योतिर्मयो हि शुभ्रो यं पश्यन्ति यतयः क्षीणदोषाः ॥

ஸத்யேந லப்யஸ்தபஸா ஹ்யேஷ ஆத்மா
ஸம்யக்ஞாநேந ப்ரஹ்மசர்யேண நித்யம் ।
அந்த: சரீரே ஜ்யோதிர்மயோ ஹி சுப்ரோ
யம் பச்யந்தி யதய: க்ஷீணதோஷா: ॥

ஆத்மஞானம் பெறுவதற்கும், அதை நிலைத்திடச் செய்வதற்கும் ஸத்யமும், தவமும், பிரஹ்மசர்யமும் அவசியமாகின்றன. அதுவே இந்த ருக்கில் விஸ்தாரமாக கூறப்படுகின்றது. அந்த ஆத்மப்பொருள் அகண்டிதமான பிரம்மசரியத்தினுலும், தெளிந்த ஞானத்தாலும், இடைவிடாத தவத்தாலும், ஸத்தியத்தாலுமே அடையப்பெறும். முன் சொன்னபடி ஒருமுகப்பட்ட நிலையை அடைந்த யதிகள் அதாவது ஸன்னியாசிகள், சித்தமலம் நீங்கியவர்களாய் உடலுக்குள்ளேயே ஜ்யோதியாய் விளங்கும் ஆத்மப்பொருளை காண்கிறார்கள்.

கோபதர் :—ஸௌஸம்யர்களே, இந்த ருக்கில் நித்யம் என்ற பதம் முக்கியமானது. அது பிரம்மசர்யத்துக்கு

மட்டும் விசேஷணமில்லை. மற்ற எல்லாவற்றிற்கும் மத்ய வர்த்தி தீபிகா நியாயப்படி பொருந்தும்.

வாஜபேயி :—மத்யவர்த்தி தீபிகா நியாயம் என்றால் என்ன ?

கோபதர் :—இடைகழியில் வைத்த விளக்கு உள்ளுக்கும் வெளிக்கும் ஒளிதருவதுபோல் என்றர்த்தம். எப்போதும் ஸத்தியமே பேசவேண்டும். ஸர்வதா தவம் இயற்றவேண்டும். எப்போதும் நல்ல அறிவுடனிருக்க வேண்டும். இடைவிடாத பிரம்மசரியவிரதமும் அனுஷ்டிக்கவேண்டும். இவைகளை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் அனுஷ்டித்தால் போதாது.

ஸோமயாஜி :—உடலுக்குள் காண்கிறார்கள் என்றால் என்ன ? விளக்கவுரை செய்யவேண்டும்.

அங்கிரஸ் :—மேற்கூறிய ஸாதனைகளை எப்பொழுதும் கைக்கொண்டு சரீரமாகிற புரத்துக்குள் புண்டரீக ஆகாயத்தில் ஜ்யோதிர்மயமாய், ஸ்வர்ணவர்ணமாய், சுப்ரமாய் ஒளிவிடும் ஆத்மாவைக் காண்கிறார்கள். யார் காண்கிறார்கள் ? எல்லோரும் காணவில்லை. காமம், க்ரோதம் முதலிய மலங்கள் நீங்கியவர்கள், முன்கூறியபடி ஸத்யம் முதலியவைகளை நித்யஆசார மாகக் கொண்டவர்கள், ஸந்யாஸிகள் காண்கிறார்கள்.

சௌனகர் :— ஸத்யத்தின் மஹிமையே மஹிமை. மேலும் தொடர்ந்து உபதேசிக்கவேண்டும் ஐயனே !

அங்கிரஸ் :—

सत्यमेव जयते नानृतं सत्येन पन्था विततो देवयानः ।
येनाक्रमन्त्यृषयो ह्याप्तकामा यत्र तत्सत्यस्य परमं निधानम् ॥

ஸத்யமேவ ஜயதே நாந்ருதம்
ஸத்யேந பந்தா விததோ தேவயாநः ।
யேநாக்ரமந்தி ருஷயோ ஹ்யாப்தகாமா
யத்ர தத் ஸத்யஸ்ய பரமம் நிதாநம் ॥

ஸத்யமே ஜயிக்கும்; பொய்யன்று. ஆசைகள் பூர்த்திபெற்ற ரிஷிகள் ஸத்யத்தின் எல்லை நிலமான இடத்திற்கு எந்த மார்க்கத்தில் செல்கின்ருர்களோ, அந்த தேவயான மார்க்கம் ஸத்யத்தினுலேயே பரப்பப்பட்டுள்ளது.

ஸோமயாஜி :— பதவுரை புரிந்துகொண்டோம். விவரமாகக் கூற வேண்டுகிறேன் குருநாதரே.

அங்கிரஸ் :— ஸத்யவானே ஜயிப்பான். எதிலும் வெற்றி பெறுவான். பொய்யன் வெற்றியடையான். பிரஹ்மதத்வம் ஸத்யத்தின் பரமநிதானமாகும். அதை அடைவதற்கு ரிஷிகள் செல்லும் மார்க்கமும், ஸத்யமான தேவயான மார்க்கமாகும் ஆசைகள் அற்ற ரிஷிகள், ஆன்று அவிந்து அடங்கிய ஞானிகள் ஸத்யவான்கள். அவர்கள் சென்று அடைய விரும்புவது ஸத்யமாகிற மோக்ஷம். அவர்களுக்கு வேறு ஆசை ஒன்றுமில்லை. அவர்கள் செல்லவேண்டிய மார்க்கமும் ஸத்யமே.

சௌனகர் :— சுருங்கக் கூறினுல் ஸத்யவான்கள், ஸத்யமான பாதையில், ஸத்யவழி சென்று ஸத்யமான பிரஹ்மத்தை அடைகின்ருர்கள். இதுவே ஸத்யம். பொய்யல்ல.

கோபதர் :— ஸபாஷ், சௌனகரே! சுருங்கச் சொல்லி விளங்கவைப்பதில் நீர் ஒரு பெரிய நிபுணர் தான். அதில் ஸந்தேஹமில்லை.

ஸோமயாஜி :— ஆம், சௌனகர் ரத்னச்சுருக்கமாகப் பேசுவதில் நிபுணர். இது ஸத்யம். பொய்யல்ல.

அங்கிரஸ் :— மேலும் ஸத்யமான பிரஹ்மத்தைப் பற்றி வேதம் கூறுவதைக் கேளுங்கள்.

बृहच्च तद्दिव्यमचिन्त्यरूपं सूक्ष्माच्च तत्सूक्ष्मतरं विभाति ।
दूरात्सुदूरे तदिहान्तिके च पश्यत्स्विहैव निहितं गुहायाम् ॥

ப்ருஹச்ச தத் திவ்யமசிந்த்யரூபம்
ஸூக்ஷ்மாச்ச தத் ஸூக்ஷ்மதரம் விபாதி l
தூராத் ஸுதூரே ததிஹாந்திகே ச
பச்யத்ஸ்விஹைவ நிஹிதம் குஹாயாம் ll

அந்த பிரஹ்மம் பெரிது ஸ்வயம் பிரகாசமுள்ளது மனதால் சிந்திக்க முடியாத ஸ்வரூபமுள்ளது. ஸூக்ஷ்மங்களைக் காட்டிலும் மிகவும் ஸூக்ஷ்மமானது வெகுதூரத்தில் இருப்பது, ஸமீபத்திலுமிருப்பது. பார்ப்பவர்களின் இதய குகையில் வைக்கப்பட்டிருக்கிறது.

கோபதர் :— ஸத்யம், ஸம்யக்ஞானம், பிரம்மசர்யம் முதலியவைகளால் அடையப்படும் பிரஹ்மம் எங்கும் வியாபித்திருப்பதால் பெரிது என்று சொல்லப்படுகிறது. ஸ்வயம்பிரகாசமுள்ளதால் திவ்யம் என்று கூறப்படுகின்றது. மனதிற்கு எட்டாத்தால் அசிந்த்யம் (எண்ண முடியாதது) என்று கூறப்பட்டது. ஆகாயம் முதலிய சூக்ஷ்மமான பதார்த்தங்களைவிட சூக்ஷ்மதரமாக இருக்கின்றது. சூரிய சந்திரர்களைவிட மிகுந்த ஒளியுடன் பிரகாசிக்கின்றது. அக்ஞானிகளால் அறியமுடியாததால் அவர்களுக்கு வெகுதூரத்திலிருப்பதாகக் கூறப்படுகின்றது. ஞானிகளுக்கு—வித்வான்களுக்கு வெகு ஸமீபத்தில் இருக்கிறது. அவர்களுக்கு ஆத்மாவாகவே உடலுக்குள் பிரகாசிப்பதால் மிகவும் நெருங்கிய இடத்தில்விளங்குகிறது. அது யோகிகளால் அவர்களது புத்திரூபமாகிற குகையில் காணப்படுகிறது. வித்வான்கள் அங்கே கூடமாக வைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறார்கள். ஆனால் அக்ஞானிகளால், அவித்யையினால் மூடப்பட்டிருக்கும் அதைக்காண முடியவில்லை. எட்டிஎட்டிப் பார்ப்பவர்களுக்கு எட்டஎட்ட நிற்கிறது.

சௌனகர்:—புத்தி குகையில் இருக்கும் பிரம்மத்தைக் காண ஏதாவது சுலபமான வழியிருக்கின்றதா? தயவு செய்து அருளிச்செய்ய வேண்டுகின்றேன்.

அங்கிரஸ் :—முன்னமே சொன்னபடி சித்தமலங்கள் அழிய வேண்டும், பாதரஸம் தடவிய கண்ணாடியில்

ஒருவனுடைய முகம் நன்கு பிரதிபலிக்கும். அதுபோல் சக்தியையும் தூய்மையையும் பிரம்மசரியத்திலும் ஸத்யத்திலும் காப்பாற்றிக்கொண்டிருக்கிறவனுடைய புத்தி குகையில் பிரம்மத்தை எளிதில் பார்க்கமுடியும் வேறு வழியொன்றுமில்லை.

न चक्षुषा गृह्यते नापि वाचा नान्यैर्देवैस्तपसा कर्मणा वा ।
ज्ञानप्रसादेन विशुद्धसत्वस्ततस्तु तं पश्यते निष्कलं ध्यायमानः ॥

ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா
நாந்யைர் தேவைஸ் தபஸா கர்மணா வா ।
க்ஞான ப்ரஸாதேந விசுத்த ஸத்வஸ்
ததஸ்து தம் பச்யதே நிஷ்கலம் த்யாயமாநः ॥

அந்த பிரம்மத்தைக் கண்ணாலோ, வாய்ப் பேச்சாலோ, வேறு இந்திரியங்களாலோ, தவத்தாலோ கர்மங்களாலோ அறியமுடியாது. ஞானத்தெளிவால் பரிசுத்தமான மனமுடையவன் அந்த நிஷ்கலமான பிரம்மத்தைத் தியானத்தால் காண்கிறான்.

கோபதர் :—இது மிகவும் முக்கியமான மந்திரம். இதன் பொருளை நன்றாகச் சிந்தித்து மனனம் செய்ய வேண்டும். பிரம்மத்தை ஏன் கண்ணால் பார்க்க முடியாது? சொல்லுங்கள் பார்க்கலாம்.

சௌனகர் :—உருவமில்லாததால் கண்களால் பார்க்க முடியாது.

அங்கிரஸ் :—ஏன் வாய்ப்பேச்சால் அறியமுடியாது? வாஜபேயி அவர்களே, கூறுங்கள்.

வாஜபேயி :—(யோஜித்து) வந்து – வந்து – பிரம்மம் அவாச்யமானது. வாக்குக்கு எட்டாதது.

அங்கிரஸ்:—ஆம். பிரம்மம் வாக்கினால் மட்டுமல்ல. மற்ற இந்திரியங்களாலும் அறியமுடியாதது. தவத்தினால் எல்லாம் பெறலாம். ஆனால் தவத்தினால்கூட

பிரம்மத்தை கிரஹிக்க முடியாது. அக்னிஹோத்ரம் முதலிய வைதிக கர்மங்களைச் செய்வதினாலும் அறிய முடியாது.

ஸோமயாஜி :— ஐயனே! பின் எதனால் அறியலாம்? எப்படி அறியலாம்?

அங்கிரஸ் :— நம்மைப்போன்ற மந்தாதிகாரிகளுக்கு புரியவைக்கும் பொருட்டு ச்ருதி கருணையுடன் திரும்பத் திரும்ப ஆவர்த்திக்கிறது. ஞானப் பிரஸாதத்தினால் அறியலாம்.

கோபதர் :— கண்ணாலாவது, வாக்காலாவது, மற்ற இந்திரியங்களினாலாவது, தபஸினாலாவது, கர்மாவினாலாவது அறியமுடியாத பிரஹ்மத்தை ஞானத்தினால் பார்க்கலாம். புத்தியால் பார்க்கலாம். அந்த புத்தியும் பிரஸன்னமாக இருக்கவேண்டும். இதனால் அந்தக்கரணம் விசுத்தமாகி தியானம் செய்தால்தான் காணலாம்.

அங்கிரஸ் :- நமது புத்தி ஸ்வபாவமாகவே ஆத்மாவை அறிவிக்க வல்லது. ஆனால் வெளி விஷயங்களில் உண்டாகும் ராகத்வேஷங்களால் கலக்கம் அடைந்து தெளிவை இழந்து அசுத்தமாகிவிட்டதால் அருகில் இருந்தபோதிலும், ஆத்மாவை அறியும் வல்லமையை இழந்துவிட்டது. அழுக்கடைந்த கண்ணாடியில் முகத்தை பார்க்கமுடியுமா? அழுக்கைத் துடைத்துவிட்டால் பளிச்சென முகம் தெரியும். அதுபோல் நம் மனதில் உள்ள மாசுகள் நீங்கியவுடன் புத்தி தெளிவடைகிறது. இதுதான் ஞானத்தின் பிரஸாதம் என்பது. இந்த ஞானப் பிரஸாதத்தால் எவனுடைய அந்தக்கரணம் பரிசுத்தமாகிறதோ, அவனே பிரஹ்மத்தைப் பார்க்கத் தகுதியுள்ளவனாகிறான். இவ்வாறு ஸத்யம் முதலான ஸாதனங்களைக் கைக்கொண்டு புலன்களை அடக்கி, ஏகாக்ர மனமுடன் விசுத்தாந்தக்கரணத்தில் நிஷ்கலமான அவயவமில்லாத பிரஹ்மத்தை நேரில் காண்கிறான்.

கோபதர் :— இங்கு ஒரு உதாஹரணம் கூறினுல் பொருத்தமாக இருக்கும். சூரியன் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. மேகக்கூட்டம் வந்து பகலவனை மறைக்கின்றது. சூரியனைக் காணமுடியவில்லை. அப்போது காற்றடிக்கவே மேகம் கலைந்து போய்விட ரவி நன்ருகத் தெரிகிறது. இங்கே காற்ருனது புதிதாக சூரியனைக் கொண்டுவரவில்லை. ஏற்கெனவேயிருந்த சூரியன் தான். காற்றின் கைங்கர்யம் மேகத்தை விலக்கியதுமட்டுமே. அதுபோலவே இங்கேயும் தியானத்தாலும் மற்றும் ஸாதனங்களாலும் நாம் திரையை விலக்கி ஏற்கெனவே எங்கும் நிறைந்திருக்கும் பிரஹ்மத்தை அறிகின்ருேம் அவ்வளவுதான்.

வாஜபேயி :— ஐயன்மீர்! உதாரணத்தினுல் விஷயம் நன்ருக விளங்கிவிட்டது.

அங்கிரஸ் :— ஸௌம்யர்களே! நண்பர் சொன்னது போல் நானும் ஒரு உபமானம் கூறுகின்றேன். நெல்லைக் குத்தி அரிசியாக்குகிருேம். நெல் குத்துவதால் புதிதாக அரிசி உண்டாகிவிடுவதில்லை. அரிசியை மூடியிருக்கும் உமி நீக்கப்படுகின்றது அவ்வளவுதான்.

கோபதர் :— நான் சொன்ன உபமானத்தைவிட நண்பர் கூறியது மிகவும் சிறந்தது. இத்துடன் இன்றைய பாடத்தை முடிக்கலாமா!

அங்கிரஸ் :— இந்த ஒரு ருக்குகூட ஓதி பொருளும் கூறிவிட்டு நிறுத்துவோம். வருகின்றது விஷய தொடர்பு உடையது, கேளுங்கள்.

एषोऽणुरात्मा चेतसा वेदितव्यो यस्मिन्प्राणः पञ्चधा संविवेश ।
प्राणैश्चित्तं सर्वमोतं प्रजानां यस्मिन्विशुद्धे विभवत्येष आत्मा ॥

ஏஷோऽணுராத்மா சேதஸா வேதிதவ்யோ
யஸ்மின் ப்ராண: பஞ்சதா ஸம்விவேச ।
ப்ராணைஸ்சித்தம் ஸர்வமோதம் ப்ரஜாநாம்
யஸ்மிந் விசுத்தே விபவத்யேஷ ஆத்மா ॥

இந்த ஆத்மா அணு. எதில் பிராணன் ஐந்து விதமாகப் பிரவேசிக்கிறதோ, அந்த சரீரத்தில் சித்தத்தினுல் அறியத்தக்கது. பிரஜைகளின் சித்தமும், எல்லாப் பிராணன்களும் எந்த சைதன்யத்தினுல் வியாபிக்கப்பட்டுள்ளதோ, அந்த ஆத்மா எந்த விசுத்தமான சித்தத்தில் தன் ஸ்வரூபத்தை வெளிக்காட்டுகிறதோ, அந்த சித்தத்தால் ஆத்மா அறியத்தக்கது.

கோபதர் :—முந்தின ருக்கில் எங்கும் பரந்திருப்பதால் பிரம்மத்தை 'பெரிது' என்று ச்ருதி சொல்லிற்று. இப்போது எதிலும் ஊடுருவி நிற்கும் பிரம்மம் புலன்களால் அறியமுடியாதபடி ஸூக்ஷ்மமாயிருப்பதால் சிறியது (அணு) என்று சொல்லுகிறது. அது அணுவாயிருப்பதால் மிகவும் சூக்ஷ்மமாயிருப்பதால் விசுத்த ஞானத்தாலேயே அறியமுடியும் எந்த சரீரத்தில் பிராணவாயு, அபானவாயு முதலிய ஐந்து பிராணன்களும் ஸமமாக ஸஞ்சரிக்கின்றதோ அப்படிப்பட்ட சரீரத்தில் இதயகுகையில் காணமுடிகின்றது. பாலில் நெய் ஊடுருவியிருப்பது போலும் அரணிக்கட்டையில் அக்நி பரந்திருப்பதுபோலும், சித்தம் பிராணன்கள் எல்லாவற்றிலும் ஆத்மசைதன்யம் வியாபித்திருக்கிறது. அதனுல்தான் சித்தம் முதலியனவும் சேதனம்போல் தோன்றுகிறது. கிலேசங்கள் முதலான மலங்கள் ஒழிந்து சுத்தமான சித்தத்தில் பிரம்மம் தானே பிரகாசிக்கின்றது?

சௌனகர் :— கிலேசம் என்ருல் என்ன?

அங்கிரஸ் :— கிலேசங்கள் ஐந்து வகைப்படும். 1 அவித்யை, 2 அஹங்காரம், 3 ராகம், 4 த்வேஷம். 5 அபிநிவேசம் (அபிமானம்) ஸௌம்யர்களே இத்துடன் இன்றைய பாடத்தை நிறுத்திக்கொள்வோம். ஆயினும் அதற்கு முன் உங்களில் ஒருவர் சுருக்கமாக ஸாராம்சத்தை கூறவிரும்புகிறேன்.

வாஜபேயி :— சௌனகரே! சொல்லுங்கள்.

சௌனகர் :— வாஜபேயி நண்பரே, இன்று தாங்களே சொல்லவேண்டும்.

ஸோமயாஜி :— ஆம் இன்று வாஜபேயிதான் சொல்லவேண்டும்.

வாஜபேயி :— எனக்கு அதற்கு சாமர்த்தியமும் தகுதியும் வேண்டாமா ?

கோபதர் :— சொல்லிச் சொல்லித்தானே பழக வேண்டும் தைரியமாகச் சொல்லுங்கள்.

வாஜபேயி :— ஐயன்மீர்! தங்கள் உத்தரவுப்படிக் கூறுகிறேன். (யோசித்து) குற்றம் களைந்து குணம் பெய்து ஆசீர்வதியுங்கள். சரீரமாகிற விருக்ஷத்தில் ஜீவனும் ஈச்வரனும் இணைபிரியாத அழகிய இரண்டு பறவைகளைப்போல் உறைகின்றனர். ஜீவனுகிய பக்ஷி கசப்பும் தித்திப்புமான பழங்களை உண்டு மதிமயங்குகிறது. ஈச்வரன் உண்ணுமல் ஸாக்ஷியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது. பொன்போல் ஒளிவீசும் ஈச்வர பக்ஷியைப் பார்க்கும்தோறும் அதை நாடி ஜீவபக்ஷி முடிவில் புண்யபாபங்களாகிற பழங்களை உதறிவிட்டு அத்துடன் ஸமநிலையடைகிறது. அழியாத ஆத்மா அகண்டமான பிரஹ்மசர்யத்தினுலும், தெளிந்த ஞானத்தினுலும், தவத்தினுலும், ஸத்யத்தினுலுமே அடையப்பெறும் ஸத்யமே ஜயிக்கும்; பொய்யன்று. அதை வாய்ப்பேச்சாலோ, இந்திரியங்களாலோ கர்மங்களாலோ அறியமுடியாது. ஞானத்தெளிவால் பரிசுத்தமான சித்தம் உடையவன்தான் தியானத்தால் அறியலாம்.

மற்றவர்கள் :— ரொம்ப நன்ருக இருக்கிறது. பேஷ் பேஷ்.

(திரை விழுகிறது)

காட்சி 3

[திரை விலக முன் காட்சிபோல் ஸம்பாஷணை நடக்கிறது.]

அங்கிரஸ் :— ஸௌம்யர்களே! இன்று பிரஹ்ம ஞானியின் லக்ஷணமும், அவனைப் பூஜிப்பதால் உண்டாகும் பயனும், ஞானத்தின் பலனும் கூறுகிறேன்.

சௌனகர் :— குருநாதரே! தயாராக இருக்கிறோம் கேட்பதற்கு.

அங்கிரஸ்:—

यं यं लोकं मनसा संविभाति विशुद्धसत्त्वः कामयते यांश्च कामान् ।
तं तं लोकं जयते तांश्च कामांस्तस्मादात्मज्ञं ह्यर्चयेत् भूतिकामः ॥

யம் யம் லோகம் மனஸா ஸம்விபாதி
விசுத்த ஸத்வ: காமயதே யாம்ஸ்ச காமான் ।
தம் தம் லோகம் ஜயதே தாம்ஸ்ச காமான்
தஸ்மாத் ஆத்மக்ஞம் ஹ்யர்சயேத் பூதிகாம: ॥

தெளிந்த சித்தமுடையவன் ஆத்ம ஞானி. அவன் எந்த எந்த உலகத்தை மனதால் ஸங்கல்பிக்கிறானோ, எந்தெந்த போகங்களை அந்த அந்த லோகங்களில் விரும்புகிறானோ, அந்த லோகங்களையும் போகங்களையும் அடைகிறான். ஆகையினால் பெரும் பேறு வேண்டுபவன் அந்த ஆத்மஞானியைப் பூஜிக்கவேண்டியது.

கோபதர் :— நிர்மலமான சித்தத்தையுடையவன் ஆத்மஞானி. அவன் பித்ருலோகம் முதல் பிரம்மலோக பர்யந்தமான எந்த லோகம் வேண்டுமென இச்சிக்கிறானோ அதாவது ஸங்கல்பம் செய்கிறானோ அது உடன் பிராப்தமாகும். அதுபோலவே எந்த எந்தவிதமான போகங்கள், ஐச்வர்யங்கள், காமனைகள் வேண்டுமென ஆசைப்படுகிறானோ அவைகளும் உடன் கிட்டும். ஏன்? அவன் ஸத்யஸங்கல்பன். அவன் எண்ணமும் இச்சையும் ஒருபோதும் வீண்போவதில்லை. மேற்சொன்ன

லோகங்களையும் போகங்களையும் அவன் தனக்காக இல்லாமல் வேறொருவருக்காக வேண்டி அபிலாஷைப் படலாம். அப்போது அது மற்றவருக்கும் கிடைக்கிறது. ஆகையால் போகத்தில் விருப்பமுள்ளவன், ஐச்வர்யம் வேண்டுபவன், ஸ்வர்க்கம் முதலிய லோக ஸுகங்களை இச்சிப்பவன் ஆத்மஞானியைப் பூஜிக்கவேண்டும்.

வாஜபேயி :- குருநாதரே! எப்படி பூஜிக்கவேண்டும்?

அங்கிரஸ் :— ஆத்மஞானியை, பாதப்ரக்ஷாளனம், பாதபூஜை, நமஸ்காரம், பிக்ஷாவந்தனம், சுச்ரூஷை முதலியவைகளால் பூஜிக்கவேண்டும். அவன் ஸத்ய ஸங்கல்பமுடையவன். ஆகவே பூஜிக்கத் தகுந்தவன்.

சௌனகர் :— ஸ்வாமீ! பிரஹ்மஞானியை வழிபடும் மனிதர்களுள் விஷயங்களிலும் போகங்களிலும் விருப்பம் உடையவனுக்குக் கிடைக்கும் பலன்களைப்பற்றி விவரித்தீர்கள். நிஷ்காமியாக ஒன்றிலும் விருப்பமில்லாமல் பிரஹ்மஞானியைப் பூஜிப்பவன் எதை அடைகிறான்? கூறவேண்டும் ஐயனே!

அங்கிரஸ் :— ஸௌம்யர்களே! கூறுகின்றேன் கேளுங்கள்.

स वेदैतत्परमं ब्रह्म धाम यत्र विश्वं निहितं भाति शुभ्रम् ।
उपासते पुरुषं ये ह्यकामास्ते शुक्रमेतदतिवर्तन्ति धीराः ॥

ஸ வேதைதத் பரமம் ப்ரஹ்ம தாம
யத்ர விச்வம் நிஹிதம் பாதி சுப்ரம் ।
உபாஸதே புருஷம் யே ஹ்யகாமா:
தே சுக்ரமேதத் அதிவர்த்தந்தி தீரா: ॥

பிரம்மஞானியை, இச்சையற்ற எவர்கள் உபாஸிக்கிறார்களோ அவர்கள் சுக்ரத்தைத் தாண்டிவிடுகிறார்கள். அவர்கள் தீரர்கள். பரபிரம்மம் எல்லாவற்றிற்கும் இருப்பிடம். விசுவமே அதில் வைக்கப்பட்டிருக்கிறது. சுப்ரமாய் விளங்குகிறது. அப்படிப்பட்ட பிரம்மத்தை

அறிந்த பிரம்மஞானியை உபாஸிப்பவர்கள் மீண்டும் பிறப்பதில்லை பிறப்பிற்குக் காரணமான நரபீஜத்தை அவர்கள் அடைவதில்லை.

கோபதர் :— எல்லாக் காமங்களுக்கும் ஸம்பூர்ண ஜகத்திற்கும் ஆச்ரய பூதமான பிரம்மத்தை அறிபவரே பிரம்மஞானி. பிரம்மம் ஸ்வயமாக ஒளிவிட்டு பிரகாசிப்பதைக் காண்கிறார். நிஷ்காம பாவத்தோடு, ஐச்வர்யம், முதலியவைகளில் ஆசையின்றி, மோக்ஷ இச்சையோடு. பரமதேவனை உபாஸிப்பதுபோல் அந்த ப்ரம்ம ஞானியை வழிபட்டால், சரீரத்திற்குக் காரணமான பீஜமாகிய சுக்லத்தைச் சென்று அடையாமல் தாண்டி விடுவார்கள். பிறப்பை ஜயிக்கிறார்கள். திரும்பவும் யோனிகளில் பிரவேசிப்பதில்லை. ஆகையினால் ஆத்ம ஞானிகளை, பிரம்ம நிஷ்டர்களை காமனையில்லாமல் பூஜிப்பது மிகவும் சிலாக்கியமாகும்.

அங்கிரஸ் :— மோக்ஷம் வேண்டும், விடுதலைபெற வேண்டும் என்ற எண்ணமுள்ளவர்கள் எல்லாக் காமங்களையும் தியாகம் பண்ணவேண்டும். ஏனெனில் ச்ருதி கூறுகிறது.

कामान्यः कामयते मन्यमानः स कामभिर्जायते तत्र तत्र ।
पर्याप्तकामस्य कृतात्मनस्तु इहैव सर्वे प्रविलीयन्ति कामाः ॥

காமாந்ய: காமயதே மந்யமாந:
ஸ காமபிர் ஜாயதே தத்ர தத்ர ।
பர்யாப்த காமஸ்ய க்ருதாத்மநஸ்து
இஹைவ ஸர்வே ப்ரவிலீயந்தி காமா: ॥

எவன் விஷயங்களை மனதில் நினைத்துக்கொண்டு அவைகளை அடைய விரும்புகிறானோ அவன் அந்த விருப்பங்களோடு கூடவே பிறக்கிறான். ஆனால் பர்யாப்தகாமன் அதாவது காமங்களில் பூர்ணமான திருப்தியடைந்தவன், அவனே கிருதகிருத்யன் செய்ய வேண்டியவைகளை செய்து முடித்தவன். அப்படிப்பட்ட

தீரனுடைய காமங்கள் இவ்விடத்திலேயே இப்பிறப்பிலேயே நாசமடைகின்றன.

வாஜபேயி :—விஷயங்களின் கவர்ச்சியில் மனதைக் கொடுத்து அதன் குணங்களையே சிந்தித்துச்சிந்தித்து அவற்றையடைய விருப்பங்கொண்டவர் அந்த ஆசைகளுடனேயே பிறக்கின்றனர். இந்த ஆசையால் தூண்டப்பட்டுத்தான் மனிதன் தன் ஆசை நிறைவேற ப்ரவர்த்திக்கிருன். அதன்மூலம் விஷயங்களைப்பெற்று ஆசையை நிறைவேற்றிக்கொள்கிருன். எவன் எந்த எந்த விஷயத்தில் ஆசைகொள்கிருனே அந்தந்த விஷயம் கிடைக்குமிடத்தில் அந்தந்த ஆசையுடனேயே அவன் பிறக்கிருன். இதை அடிக்கடி புரோஹிதரும் சொல்லக்கேட்டிருக்கிறேன்.

சௌனகர் :— ஆசையுடன் கர்மாக்களைச் செய்யும் போது மறுபிறவிக்கு விதை ஊன்றுகிருேம். ஆகவே நாம் விஷயங்களில் நாட்டம் கொள்ளாமல் ஆத்மகாமனாக விளங்கவேண்டும். ஆத்மஞானி பூர்ணகாமன், அவனுக்கு அடையவேண்டிய பொருள் ஒன்றுமில்லாததால் ஆசையே ஏற்படாது.

ஸோமயாஜி :- ஆம் நண்பரே! அப்படி விருப்பங்களை வெற்றிகொண்டு விஜயஸ்ரீமானாக இருக்கப்பட்டவனே பர்யாப்தகாமன் என்னும் தீரன். அவனுடைய ஆசைகளெல்லாம் இங்கேயே (இந்த ஜன்மத்திலேயே) நசித்துப்போகின்றன. ஆகையால் மறுபிறப்பிற்குக் காரணமில்லை. மீண்டும் பிறவாதநிலையை எய்துகிருன்.

கோபதர் :— நண்பரே! பார்த்தீரா! சிஷ்யர்கள் நன்ருக விஷயத்தைப் புரிந்துகொண்டு தாங்களாகவே விளக்கம் கூறிக்கொள்கிருர்கள். ரொம்பவும் மகிழ்ச்சிக்கு உரியது இது.

அங்கிரஸ் :— ஒரு குருவிற்கு இதைவிட ஸந்தோஷம் தருவது வேறொன்றுமில்லை. இத்தகைய சீடர்களை அழைத்துவந்ததற்கு மிகவும் நன்றி நண்பரே!

சௌனகர் :— ஐயன்மீர்! தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகிறோம்.

அங்கிரஸ் :—

नायमात्मा प्रवचनेन लभ्यो न मेधया न बहुना श्रुतेन ।
यमेवैष वृणुते तेन लभ्यस्तस्यैष आत्मा विवृणुते तनूं स्वाम् ॥

நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ
 ந மேதயா ந பஹுநா ச்ருதேந ।
யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ்-
 தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் ॥

முன் சொன்ன ச்ருதி வசனங்களால் மற்ற எல்லா லாபங்களையும்விட ஆத்மலாபமே உத்க்ருஷ்டமானது என்று அறிந்தோம். அதை அடையவேண்டி எவ்வளவு பிரயத்னம் செய்தாலும் தகும். ஏனெனில் இதை அடைவது அவ்வளவு ஸுலபமல்ல என்று இந்த வேத வசனத்தில் கூறப்படுகின்றது. "இவ்வாத்மா வேதசாஸ்திரப் படிப்பினாலாவது அதிக ஞாபகசக்தியினாலாவது, அதிக கேள்வியினாலாவது, அடையத் தக்கதல்ல. இந்த வித்வான் அதாவது முமுக்ஷு எதை அடையவேண்டுமென்று இச்சிக்கிறானோ அந்த தீவ்ர இச்சையினால்தான் அந்த ஆத்மா அடையத் தக்கது. அந்த ஆத்மா இந்த வித்வானுக்குத் தன் நிஜஸ்வரூபத்தைப் பிரகாசப்படுத்துகிறது. அதாவது இவன் அறியும்படிச் செய்கிறது.

கோபதர் :— ஸௌம்யர்களே! இதனால் ஆத்ம ஞானத்திற்கு வேத அத்யயனமும், மேதையும், கேள்வியும் வேண்டாமென்று தவறுதலாக எண்ணிவிடாதீர்கள். இங்கே ச்ருதி கூற வந்தது என்னவென்றால் இவைகளையே எப்பொழுதும் அதிகமாகச் செய்வதினால் மட்டும் ஞானம்பெற முடியாது என்று வற்புறுத்திச் சொல்வதேயாகும். இவைகளைத் தவிர மோக்ஷம் அடையவேண்டும் விடுதலை பெறவேண்டும் என்ற தீவிரமான இச்சையும்

வேண்டும். அதனுல்தான் ஆத்மஞானம் பெறமுடியும். அப்படிப்பட்டவனுக்கே ஆத்மா தனது ஸ்வரூபத்தை வியக்தமாக்குகிறது. விளங்க வைக்கின்றது.

சௌனகர் :— குருநாதரே! நன்ருக விளங்கிவிட்டது. மேலும் உபதேசிக்க வேண்டுகின்றேன்.

அங்கிரஸ் :—

नायमात्मा बलहीनेन लभ्यो न च प्रमादात्तपसो वाऽप्यलिङ्गात् ।
एतैरुपायैर्यतते यस्तु विद्वांस्तस्यैष आत्मा विशते ब्रह्मधाम ॥

நாயமாத்மா பலஹீநேந லப்யோ
ந ச ப்ரமாதாத் தபஸோ வாऽப்யலிங்காத் ।
ஏதைருபாயைர் யததே யஸ்து வித்வான்
தஸ்யைஷ ஆத்மா விசதே ப்ரஹ்மதாம ॥

இந்த ஆத்மாவை பலஹீனனுல் அடையமுடியாது. பிரமாதத்தினுலும், ஸன்யாசமில்லாத தவத்தினுலும் அடையமுடியாது. எந்த வித்வான் இந்த உபாயங்களால் பிரயத்தினம் செய்கிருனே அவனுடைய ஆத்மா பிரம்ம ஸ்வரூபத்தில் பிரவேசிக்கின்றது.

வாஜபேயி :—ஒன்றும் விளங்கவில்லை. ஸ்வாமீ!

ஸோமயாஜி :— பலம் என்ருல் சரீரபலமா அல்லது மனே பலமா? இரண்டுமா? பிரமாதம் என்ருல் என்ன?

சௌனகர் :—ஸன்யாஸம் என்ருல் துறவுதானே! உள்ளத்துறவு போதாதா? வெளிவேஷம் வேண்டுமா?

கோபதர் :—ஸௌம்யர்களே! முதலில் ருக்கிற்கு விளக்கவுரை கூறிவிட்டு உங்கள் சந்தேகங்களை நிவர்த்திப்பார்.

அங்கிரஸ் :— இந்த ஆத்மாவைப் பலமில்லாதவன் அறியமுடியாது. ஓர் அளவுக்கு சரீரபலம் தேவை. ஆனுல் இங்கு சொல்லப்படுவது அதுமட்டுமல்ல. ஆத்ம

நிஷ்டையாலுண்டாகும் மனோவலிமைதான் இங்கு பலமென்று குறிக்கப்படுகின்றது. பிரமாதம் என்பது கவனக்குறைவு. மறதி அதாவது ஸம்ஸாரத்தில் உழன்று மனைவி மக்களிடத்தில் உள்ள பற்றினால், செய்யவேண்டியதைச் செய்யாமலிருப்பதும், செய்யத் தகாததை செய்வதும் பிரமாதத்தில் சேரும். தவிற ஸன்யாசத்தோடு கூடிய ஞானம் மிகவும் முக்கியம். உள்ளம் துறவு கொண்டிருக்கிறது என்பதை எப்படி அறிவது? அதற்குத் துறவியின் வெளிவேஷங்களும் அவசியமே. பயிருக்கு வேலி கட்டுவதுபோல், உள்ளத் துறவுக்கு, காவி உடை முதலியவைகள் பாதுகாப்பாக அமைகின்றன. அவைகளையே ச்ருதி லிங்கம் (ஸன்யாஸம்) என்று பெருமையாகக் கூறுகின்றது. ஆகையினால் ஆத்ம லாபம்பெற மூன்று உபாயங்கள் கூறப்படுகின்றன. முதலில் மனோவலிமை பின் அப்பிரமாதம் (கவனம்) கடைசியாக லிங்க (ஸன்யாஸ)த்துடன் கூடின ஞானம் இந்த வழியில் விவேகியான வித்வான் பிரயத்தினம் பண்ணவேண்டும். அவனுடைய ஆத்மா பிரம்மதாமாவில் பிரவேசிக்கின்றது.

வாஜபேயி :— ஆத்மஞானத்திற்கும் உபாயங்கள் தேவையா? ஞானம்தானே முக்யம்?

கோபதர் :— பத்யமின்றி ஔஷதம் பயன் தராது. ஆகையால் நியமநிஷ்டையும், வைராக்யமும் இல்லாத முயற்சி பலனை உண்டாக்காது.

சௌனகர் :— மனோவலிமை, திடசித்தம், சோர்வு இன்மை, ஸந்யாஸத்துடன் கூடிய ஞானம் இவைகளால் ஆத்மாவை அறியலாகும் என்று அறிந்தோம்.

ஸோமயாஜி :— அந்த வித்வான்களின் ஆத்மா பிரஹ்மத்தில் பிரவேசிப்பதாய் சொன்னீர்களே? அது பற்றி விளக்கவேண்டும். எப்படிப் பிரவேசிக்கின்றது? பர்ணசாலையோ, மாளிகையோ கட்டி க்ருஹப்ரவேசம் செய்கிறதா என்ன?

அங்கிரஸ் :— எங்கும் நிறைந்திருப்பது ஆத்மா. அது பிரவேசிக்கிறது என்பது உபசாரமாகச் சொல்லப் படுவதுதான். ச்ருதி கூறுவதைக் கவனமாகக் கேளுங்கள்.

संप्राप्यैनमृषयो ज्ञानतृप्ताः कृतात्मानो वीतरागाः प्रशान्ताः ।
ते सर्वगं सर्वतः प्राप्य धीरा युक्तात्मानः सर्वमेवाविशन्ति ॥

ஸம்ப்ராப்யைநம் ருஷயோ க்ஞானத்ருப்தா:
க்ருதாத்மாநோ வீதராகா: ப்ரசாந்தா: I
தே ஸர்வகம் ஸர்வத: ப்ராப்ய தீரா
யுக்தாத்மாந: ஸர்வமேவாவிசந்தி II

ஞானத்தால் திருப்தியடைந்தவர்களும் ஆத்ம மயமாய் தங்களை ஆக்கினவர்களும், ராகமில்லாதவர் களும், இந்திரியங்களை அடக்கி சாந்தமானவர்களும், நன்ருக செவ்வையாக ஆத்மாவை அறிந்து எங்குமுள்ள வஸ்துவை எங்குமடைந்து எல்லாவற்றிலும் பிரவேசிக்கிருர்கள்.

கோபத்ர் :— முன் சொன்ன வழிகளில் சென்ற ருஷிகள், ஞானதிருப்தியுடனும், விரக்தியுடனும் சாந்த மாயும், செய்யவேண்டியதையெல்லாம் செய்து கிருத கிருத்யர்களாகவும் விளங்குகிருர்கள். இந்தத் தீர புருஷர்கள் பிரஹ்மத்தை எங்கும் எதிலும் காண கிருர்கள். அந்தக் காலத்தில் பிரம்மத்துடன் இரண்டறக் கலந்துவிடுகின்ருர்கள்.

ஸோமயாஜி :— நன்ருக விளங்கவில்லை. விவரமாக உபதேசிக்கவேண்டும் ஸ்வாமீ !

அங்கிரஸ் :— இத்துடன் இன்றைய பாடம் நிறைவு பெறுகிறது. நீங்களும் நன்ருகச் சிந்தித்து மனனம் செய்து வாருங்கள். தொடர்ந்து நாளை உபதேசிக்கலாம்.

(எல்லோரும் எழுந்திருக்கின்ருர்கள்)

(திரை விழுகிறது)

காட்சி 4

[திரைவிலக முன்காட்சிபோல் உரையாடல் நடக்கிறது]

கோபதர் :— ஸௌம்யர்களே ! முந்திய பாடத்தின் சுருக்கத்தை ஒருவர்பின் ஒருவராகக் கூறுங்கள்.

ஸோமயாஜி :— ஆத்ம ஞானியை, போக இச்சையுடன் பூஜித்தால் போகங்களை அடையலாம். இச்சை இல்லாமல் நிஷ்காமமாய் வழிபட்டால் ஆத்ம ஞானத்தை அடையலாம். ஸம்ஸாரஸாகரத்தைத் தாண்டலாம். பிறப்பு, இறப்பு என்ற சுழலிலிருந்து விடுதலை அடையலாம்.

வாஜபேயி :— எவன் எந்த எந்த ஆசைகளை எண்ணி எண்ணி ஏங்குகின்றானோ, அவன் அந்த அந்த ஆசைகளை அனுபவிக்க அந்த அந்த இடங்களில் பிறவியடைகிறான். ஆனால் ஆத்ம ஞானியின் ஆசைகளெல்லாம் இங்கேயே நசித்துப்போகின்றன. அவனுக்குப் போக்குவரவு இல்லை. பிறப்பு இறப்பு இல்லை.

சௌனகர் :— ஆத்மஞானம் அடைவதற்கு திடமான சித்தம் அதாவது மனோவலிமை வேண்டும். நியம நிஷ்டைகளாலும் தூய ஆசாரங்கள், பழக்கவழக்கங்களாலும் மனோதிடம் உண்டாகும். உலக இச்சைகளை விட்டுவிட்டோம் என்ற பிரமை இருந்தால் போதாது. உண்மையாகவே அவைகளில் (மனைவி, மக்கள், மனை, மாடு இவைகளில்) ஆஸக்தி இல்லாமல் இருக்க வேண்டும். தவ வலிமையும் வேண்டும். அதற்கு ஸந்யாஸத்துடன் கூடிய ஞானமும் தேவை. இந்த உபாயங்களைக் கைக்கொண்டவன் தீரன். ஸாதாரண மானவர்களிலிருந்து வேறுபட்டவன் இவன். ஆகையால் தீரன். கோழையல்ல. இப்படிப்பட்ட அறிவாளியின் ஹ்ருதயத்தில் பிரஹ்மபுரத்தில் ஆத்மா விளங்குகிறது. இந்நிலையையடைந்த ரிஷிகள் எப்படி இருப்பார்கள் என்றும் ச்ருதி விவரிக்கின்றது. பற்று

ஒழிந்தவர்களாயும், சாந்தர்களாயும், இந்திரியங்களை அடக்கி ஆள்பவர்களாயும் இருப்பார்கள். அவர்கள் ஆத்மஞானத்திலேயே திருப்தி எய்திவிடுவார்கள். ஆத்மஸ்வரூபமாகவே ஆகிவிடுவார்கள். அவர்கள் எங்கும் நிறைந்த பரம்பொருளில் கலந்துவிடுகின்றார்கள். அவர்களது பெருமையே பெருமை.

அங்கிரஸ் :— ஸௌம்யர்களே! ஆத்ம நிஷ்டர்கள் மிகவும் பெருமை வாய்ந்தவர்கள். மேலும் அவர்களைப் பற்றி ச்ருதி கூறுவதை விவரிக்கின்றேன் கேளுங்கள்.

वेदान्तविज्ञानसुनिश्चितार्थाः संन्यासयोगाद्यतयः शुद्धसत्त्वाः।
ते ब्रह्मलोकेषु परान्तकाले परामृताः परिमुच्यन्ति सर्वे ॥

வேதாந்த விக்ஞான ஸுநிஸ்சிதார்த்தா:
ஸந்யாஸ யோகாத் யதய: சுத்தஸத்வா: ।
தே ப்ரஹ்மலோகேஷு பராந்தகாலே
பராம்ருதா: பரிமுச்யந்தி ஸர்வே ॥

வேதாந்த விஞ்ஞானத்தால் பரமாத்மாவை நிச்சயமாய் அறிந்தவர்கள், ஸன்யாஸிகள், சுத்தமான மனமுள்ளவர்கள். இப்படிப்பட்டவர்கள் பராந்தகாலத்தில் பிரஹ்மத்திடம் ஐக்யமாகி பந்தத்திலிருந்து விடுபடுகின்றார்கள்.

சௌனகர்: — ஸ்வாமீ! பதவுரை விளங்குகின்றது. விவரமாகச் சொல்ல வேண்டுகின்றேன்.

அங்கிரஸ் :— வேதாந்தத்திலிருந்து உண்டாகும் விஞ்ஞானம் வேதாந்த விஞ்ஞானம். அதாவது விஞ்ஞேயமான பரபிரஹ்மத்தைப் பற்றிய அறிவு. அதாவது வேதத்தின் அந்தத்தில் இருக்கும்—வேதத்திற்கு சிகரமாய் விளங்கும் உபநிஷத்துக்களில் சொல்லியிருக்கப்பட்ட மந்திரங்களின் ஸரியான பொருள். அதை நன்குயறிந்துகொண்டவர்கள் ஞானிகள். மேல் எழுந்தவாரியாகத் தெரிந்துகொண்டால் போதாது, நன்கு மனதில் பதியும்படியாக அறிந்துகொள்ள

வேண்டும். அதாவது குருமுகமாக வேதாந்தங்களை—உபநிஷத்துக்களைக் கற்று ச்ரவண மனன நிதித்யாஸன மூலம் வேதாந்தப் பொருளான பரபிரஹ்மத்தைப் பற்றிக் கிஞ்சித்தும் ஸந்தேஹமில்லாமல் உறுதியான அனுபூதி ஞானமிருக்கவேண்டும். இவர்களைத்தான் ச்ருதி 'வேதாந்த விஞ்ஞான ஸுநிஸ்சிதார்த்தா:' என்று பெரிய விசேஷணம் போட்டுக் கூறுகிறது.

கோபதர் :— நண்பரே! வ்யாக்யானம் ரொம்ப அத்புதமாயிருக்கிறது. ஸபாஷ். தொடர்ந்து கூறுங்கள்.

அங்கிரஸ் :— இப்படி வேதாந்தப் பொருளை அறிந்து கொண்டால் மட்டும் போதாது ஸன்யாஸியாகவும் வாழ்க்கையை நடத்தவேண்டும். இப்படிப்பட்ட உண்மையான அறிவு பெற்றதற்கு அடையாளமே-லிங்கமே-ஸந்யாஸமாகும். ஆகையினால் ஸர்வகர்ம பரித்தியாகம் மூலமாக ஸன்யாஸ யோகம் வழியாக. கேவலம் பிரம்ம நிஷ்டையிலேயே ஆழ்ந்து ஸமாதி யோக மூலமாக, யத்னம் செய்கிறவர்கள் வாழ்வாங்கு வாழ்பவர்கள் சித்தசுத்தியை அடைகின்றனர். அந்த சுத்தமான அழுக்கில்லாத, மலமில்லாத, சித்தமுடைய புருஷர்கள், பராந்த காலத்தில், பிரம்மலோகங்களில் அமரநிலையை அடைகின்றனர். அமிருதமான, பிரம்ம பூதமான அவஸ்தையை எய்ததும், எல்லாவற்றி லிருந்தும் விடுதலை பெறுகின்றனர். குடம் உடைந்ததும், கடாகாசம் எப்படி வெளியில் உள்ள பெரிய ஆகாசத்தில் சேர்ந்து விடுகிறதோ அதுபோல் ஞானியும் முக்தி அடைகின்றான்.

சௌனகர் :— ஸ்வாமீ! 'பராந்த காலம்' என்று கூறினீர்களே. அதன் அர்த்தமென்ன?

வாஜபேயி :— பராந்த காலம் என்றால் கடைசிக் காலம். அதாவது மரணம் எய்தும் சமயம் என்றுதானே பொருள்.?

ஸோமயாஜி :— அப்படி இராது. ஏனெனில் அப்பொழுது மரண காலத்தில்தான் மோக்ஷம் ஏற்படும் என்று ஆகிவிடும்.

சௌனகர் :— குருநாதரே, விவரமாக விளக்க வேண்டுகிறோம்.

அங்கிரஸ் :— ஸௌம்யர்களே! பராந்தகாலம் என்றால் மரணகாலம் என்று அர்த்தம் கொள்ள வேண்டாம். ஸாதாரண ஜனங்கள் இறக்கும் ஸமயத்தை அபராந்தகாலமென்று சொல்வார்கள். இங்கே ஞானிகளுக்கு ஸம்ஸாரம் முடிவுறும்போது அக்காலத்தைப் பராந்தகாலமென்று வேதம் கூறுகின்றது. ஸம்ஸாரம் முடிவுறும் காலம் மரணகாலமாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. அப்படிப் பொருள் கூறினால் ஜீவன்முக்தர் இருக்கமுடியாதே. ஞானிகளும் தேஹத்தை விடும்போதுதான் முக்தியடைகிறார்கள் என்று நினைக்கவேண்டாம். ஞானம் பெற்றவுடன் முக்தி. இதில் ஸந்தேஹம் வேண்டாம். இங்கே அந்த காலமென்று குறிப்பிடுவது வாஸனைகளின் அந்தம், அஹங்கார மமகாரங்களின் அந்தம், கர்மபலன்களின் அந்தம் என்று பொருள் கூறவேண்டும்.

கோபதர் :— நண்பர் சொல்வது, சாலவும் சிறந்தது. ஞானிகள் மரணமடைந்தபின் தான் மோக்ஷம் அடைவார்கள் என்ற கூற்று பொருந்தாது. ஜீவன் முக்தர்கள் இல்லாவிடில் யார் பிரம்ம ஞானத்தை உபதேசிப்பது? ஒரு ஸத்குரு நன்றாய் அத்யயனம் செய்தவனாகவும், பிரம்மநிஷ்டனாகவும் இருக்கவேண்டும் என்று முன் ருக்குகளில் ச்ருதி அறுதியிட்டுக் கூறியிருக்கிறது. அங்ஙனமிருக்க பிரம்மநிஷ்டை-மோக்ஷம்-மரணகாலத்தில்தான் ஏற்படுகிறது என்றால் உபதேசிக்க குருவே இருக்கமுடியாதல்லவா?

சௌனகர் :— பிரம்மஸ்வரூபம் ஒன்றே. அத்வைதம்-இரண்டற்றது. அங்ஙனமிருக்க 'பிரஹ்மலோகேஷு'

என்று பல லோகங்களைப்பற்றி ச்ருதி கூறுவதின் தாத்பர்யமென்னவோ ?

அங்கிரஸ் — பல சீடர்கள் அதாவது பல ஸாதகர்கள் உபதேசம் பெறுகின்றார்கள். ஒவ்வொருவரும் ஒன்றாக இருக்கும் பிரம்மத்தை தனக்குரியதாக, தனதாக பார்க்கிறார்கள். அப்படியே அடைகிறார்கள். ஆகையினால் பிரம்ம லோகங்கள் என்று பஹுவசனத்தில் கூறப்பட்டது. பிரம்ம லோகங்களில் என்றால் பிரம்மத்தில் என்றுதான் பொருள். தவிறவும் லோகங்கள் என்று அர்த்தம் கொண்டோமானால் தான் இருக்குமிடத்திலிருந்து சென்று அந்த லோகங்களை அடைகிறான் என்று சொல்லவேண்டும். இது பொருந்தாது. ஏனெனில் ப்ரஹ்மத்திற்கு தேசபரிச்சேதமோ காலபரிச்சேதமோ, வஸ்து பரிச்சேதமோ கிடையாது. அது எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் எல்லாமாகவும் இருக்கிறது. தான் இருக்குமிடத்திலேயே ப்ரஹ்மமாக ஆகிவிடுகிறான். எங்குமுள்ள ப்ரஹ்மத்தை அடைய வேறு இடத்திற்குச் செல்லவேண்டியதில்லை.

கோபதர் :— நண்பரே! மேலும் தொடர்ந்து உபதேசியுங்கள்.

அங்கிரஸ் :—

गताः कलाः पञ्चदश प्रतिष्ठा देवाश्च सर्वे प्रतिदेवतासु ।
कर्माणि विज्ञानमयश्च आत्मा परेऽव्यये सर्व एकीभवन्ति ॥

கதா: கலா: பஞ்சதச ப்ரதிஷ்டா
தேவாஸ்ச ஸர்வே ப்ரதிதேவதாஸு ।
கர்மாணி விக்ஞாநமயஸ்ச ஆத்மா
பரேऽவ்யயே ஸர்வ ஏகீபவந்தி ॥

முன் ருக்கில் சொன்னபடி முக்தியடையும் காலத்தில் பதினைந்து கலைகளும் அதனதன் இருப்பிடத்தை அடைகின்றன. இந்திரியங்களில் இருந்துகொண்டு அவைகளுக்கு உபகாரம் செய்துவந்த தேவர்களும் வெளியிலுள்ள தனது மூலஸ்வரூபத்தில் சேர்ந்துவிடு

கின்றனர். கர்மங்களும் விஞ்ஞானம்யமான ஆத்மாவும் எல்லாம் பிரஹ்மத்தினிடத்தில் ஒன்ருய்ச் சேர்ந்து போகின்றன.

வாஜபேயி :— பதினைந்து கலைகள் என்பது எவை? விவரமாகக் கூறவேண்டும் குருநாதரே!

கோபதர் :— இந்த ருக்கில் மோக்ஷ காலத்தில் நடக்கும் விவரங்களை ஓவியமாகத் தீட்டிக்காட்டு கின்றது. இந்த சரீரம் உண்டாவதற்குக் காரணமான கலைகள் மொத்தம் பதினைந்து. அவைகளாவன: 1. பிராணன், 2. சிரத்தை, 3. ஆகாசம், 4. வாயு, 5. அக்னி, 6. நீர், 7. பிருத்வி, 8. புலன்கள், 9. மனம், 10. உணவு, 11. பலம், 12. தவம், 13. மந்திரங்கள், 14. கர்மங்கள், 15. கர்மபலன்கள் இவைகள் எல்லாம் மோக்ஷகாலத்தில் அதனதனுடைய காரணத்தைச் சென்று அடைகின்றன. சரீரத்தில் இந்திரியங்களை ஆச்ரயித்திருந்த தேவர்களும் ஸ்வஸ்தானம் செல்கின்றனர். அதாவது கண்ணுக்கு உபகாரம் செய்த சூரியனுடைய அம்சம் சூரியனை அடைகிறது இதுபோல.

சௌனகர்:— கர்மங்கள் பலன் கொடுக்காமல் விடாதே. அதை எப்படித் தீர்க்கமுடியும்?

கோபதர் :—இங்கே சொல்லப்படும் கர்மங்கள் ஸஞ்சித கர்மங்களாகும். அவைகள் ஞானுக்னியினல் எரிக்கப்படுகின்றன. தேஹம் கர்மங்கள் போனபின், ஆத்மாவும் இதுவரைக்கும் அவற்றை தனதாகவும், தனது ஆச்ரயமாகவும் எண்ணி அவித்யையில் மூழ்கிக் கிடந்த நிலையைவிட்டு பரபிரம்மத்தில் ஒன்றிவிடு கின்றது. உபாதிகள் நீங்கியவுடன் அவ்யயமாயும், அக்ஷயமாயும், அஜமாயும், அஜரமாயும், அமிருதமாயும் அபயமாயும், அபூர்வமாயும், அனன்யமாயும், அனந்தர மாயும், அபாஹ்யமாயும், அத்வயமாயும் சிவமாயும், சாந்தமாயும், இருக்கும் பிரம்மத்தில் இரண்டறக்கலந்து

விடுகின்றது. ஐக்கியத்தை அடைகின்றது. ஜலத்தில் தெரியும் சூரிய பிம்பம் ஜலத்தை நீக்கியவுடன் எப்படி சூரியனில் சேர்ந்துவிடுகின்றதோ அதுபோல் சேர்ந்து விடுகின்றது.

வாஜபேயி :— உதாரணங்களால் விஷயத்தை நன்கு புரிந்துகொண்டோம். மேலும் தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகிறேன் ஸ்வாமீ !

அங்கிரஸ் :—

यथा नद्यः स्यन्दमानाः समुद्रेऽस्तं गच्छन्ति नामरूपे विहाय ।
तथा विद्वान्नामरूपाद्विमुक्तः परात्परं पुरुषमुपैति दिव्यम् ॥

யதா நத்ய: ஸ்யந்தமாநா: ஸமுத்ரே
அஸ்தம் கச்சந்தி நாமரூபே விஹாய ।
ததா வித்வான் நாமரூபாத் விமுக்த:
பராத்பரம் புருஷமுபைதி திவ்யம் ॥

எப்படி ஓடுகின்ற நதிகள், நாமரூபங்களை விட்டு ஸமுத்ரத்தில் மறைந்துவிடுகின்றனவோ, அப்படியே வித்வான் மோக்ஷ காலத்தில் நாமரூபங்களிலிருந்து விடுபட்டுப் பரத்தைக்காட்டிலும் பரமாயிருக்கிற திவ்ய புருஷனையடைகிறான்.

சௌனகர் :— முந்தி சொன்ன உதாரணத்தைவிட இது மிகவும் சிலாக்யமாக இருக்கின்றது.

கோபதர் :— நாம் சொல்வதைவிட ச்ருதி சொல்வது பொருத்தமாகத்தானே இருக்கும்! நமது சிற்றறிவு எங்கே? வேதத்தின் விஞ்ஞான மயமான பேரறிவு எங்கே? இது அஜகஜாந்தரமல்லவா ?

அங்கிரஸ் :— மாத்யான்னிக காலம் நெருங்கிவிட்டது. பாடத்தை நிறுத்தலாமென்று நினைக்கிறேன்.

கோபதர் :— நண்பரே! அதற்குமுன், அதாவது நிறுத்துவதற்கு முன் மாணவர்களை பாடத்தின் ஸாராம்சத்தைக் கூறச்சொல்லலாமே !

அங்கிரஸ் :— அப்படியே செய்வோம். ஸௌம்யர்களே! இன்றைய பாடத்தின் சுருக்கத்தைக் கூறுங்கள். ஸோமயாஜி கூறட்டுமே!

ஸோமயாஜி :- இன்று பிரம்மஞானிகளின் நிலையைப் பற்றி வர்ணித்தீர்கள். மோக்ஷ காலத்தில் ஒன்றிவிடும் தன்மையையும் விவரித்தீர்கள். நான் அறிந்துகொண்டதைச் சுருக்கமாகக் கூறுகிறேன். ஆசீர்வதிக்க வேண்டும். வேதாந்த அனுபவ ஞானத்தின் பயனாகிய ஆத்மஸாக்ஷாத்காரத்தில் திடநிச்சயம் எய்தியவர்கள் ஸந்யாஸ யோகத்தால் பரிசுத்தமான சித்தம் படைத்த யதிகள், இவர்கள் பராம்ருதமாகிய பிரம்மத்தில் நிலை பெற்றுப் பற்றுக்களிலிருந்து விடுபடுகின்றனர். மோக்ஷ காலத்தில் பதினைந்து கலைகளும் தத்தம் காரண ஸ்தானத்திற்குச் சென்றுவிடுகின்றன. இந்திரிய அதிஷ்டான தேவர்களும் தம்தம் மூலஸ்தானத்தைச் சேர்ந்துவிடுகின்றனர். எல்லாக் கர்மங்களும் விஞ்ஞான மயமான ஆத்மாவும் அழிவில்லாத பரம்பொருளில் ஒன்றுபடுகின்றன. எங்ஙனம் பெருகி ஓடும் நதிகள் நாமரூபங்களை இழந்து ஸமுத்ரத்தில் மறைகின்றனவோ, அங்ஙனமே ஞானியும் நாமரூபங்களை விட்டுவிட்டு உயர்ந்ததற்கெல்லாம் உயர்ந்த தேஜோமயமான புருஷனையடைகின்றான்.

கோபதர் :—ஸபாஷ்! ஸோமயாஜி! ரொம்ப நன்றாக விளக்கினீர்கள். நதியானது சமுத்திரத்தை நாடியோடி, முகத்துவாரத்தையடைந்து கடலுக்குள் புகுந்து, இரண்டறக்கலப்பதுபோல் ஞானிகளும் பிரம்மார்ப்பணம் செய்து பிரம்மஸ்பர்சம் பெற்று, பிராம்மீஸ்திதியை அடைந்து பிரம்ம நிர்வாணம் எய்துகிறார்கள்.

அங்கிரஸ் :—ஆம். நண்பரே! கடலில் இருக்கும் நீர் மேகமாக மாறி மழையாகப்பொழிந்து பலவிதமான பேர்களுடன் நதிகளாக ஓடி முடிவில் தங்களுடைய மூலஸ்தானமான சமுத்திரத்தையே சென்று அடைகின்றன.

நதிகளாக இருக்கும்போது கங்கை, காவேரி, கோதாவரி, யமுனை என்ற பெயர்கள். கடலில் கலந்தவுடன் எல்லாம் ஒரே நீர். ஸம்ஸாரம் பிரபஞ்சம் எல்லாம் இப்படித் தானே. எவ்வளவு பொருத்தம்! இத்துடன் இன்றைய பாடம் முடிவுபெறுகிறது.

(சிஷ்யர்கள் எழுந்து சாந்தி பாடம் சொல்லி நமஸ்காரம் செய்கின்றனர்.)

(திரை விழுகிறது)

நான்காவது அங்கம் முற்றும்.

ஐந்தாவது அங்கம்

காட்சி 1

(திரை விலக)

[முன் காட்சிபோல் அங்கிரஸ் ஆசிரமத்தில் உபதேசம் நடக்கிறது.]

அங்கிரஸ்:— ஸௌம்யர்களே! இன்றைய பாடத்துடன் உபதேசம் நிறைவுபெறும் கட்டத்தை அடைந்து விட்டோம். இன்றைய உபதேசம் தொடங்குவதற்கு முன் ஏதாவது ஸந்தேஹம் இருந்தால் கேளுங்கள்.

சௌனகர்:— குருநாதரே! நல்ல காரியங்களுக்கு விக்னங்கள் ஏற்படுவது ஸஹஜமாக இருக்கின்றது. இது எல்லோரும் அறிந்த பிரஸித்தமான விஷயம். ஆகையினுல் பிரம்ம ப்ராப்திக்கும் தேவதைகளாலோ மற்றவர்களாலோ விக்னங்கள் வரலாமல்லவா?

அங்கிரஸ்:— நூறு அசுவமேதங்கள் செய்தவர் இந்திர பதவி அடைவார் என்று கர்மகாண்டம் கூறுகிறது. ஆகையினுல் பொருமை கொண்ட இந்திரன் முதலிய தேவர்கள், தங்கள் பதவி போய்விடுமென்று அஞ்சி, யாகங்களுக்கு விக்னங்கள் செய்ய முற்படுவார்கள். இங்கே பிரம்ம ப்ராப்தியென்பது கர்மங்களால் வருவதல்லவே. கேவலம் ஞானத்தினுல்தான் வருவது. அந்த ஞானத்தினுலே ஸகல பிரதிபந்தங்களும் நிவர்த்திக்கப்படும். பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்துவிடுமோ என்ற பயம் வேண்டாம். தேவர்கள் இடைஞ்சல் பண்ணமாட்டார்கள்.

கோபதர்:— மோக்ஷத்திற்குப் பிரதிபந்தமாயுள்ளது அவித்யை ஒன்றே- அந்த அவித்யை ஞானத்தால் நீங்கிவிடும். ஆகையால் எவன் சிரேஷ்டமான பிரஹ்மத்தை "நான் தான்" என்று ஸாக்ஷாத்கரிக்கின்ருனே அவன் பிரஹ்மமாகவே ஆகிருன். வேறு

கதியையடைவதில்லை. தேவதைகள்கூட அவனுக்கு விக்னம் செய்வதில்லை.

ஸோமயாஜி :— ஏன் தேவதைகள் விக்னம் செய்வது இல்லை ?

கோபதர் :— பிரஹ்மத்தையடையும் விஷயத்தில் தேவதைகளாலும் விக்னம் செய்யமுடியாது.

வாஜபேயி :— எல்லாம்வல்ல தேவதைகளால் ஏன் முடியாது ? அவர்கள் நம்மைவிட சிரேஷ்டர்கள் ஆயிற்றே ! பலசாலிகளாயிற்றே !

அங்கிரஸ் :— தேவதைகள் நம்மைவிட சிரேஷ்டமானவர்கள்தான். ஆனால் பிரஹ்மஞானிக்கு மேம்பட்டவர்களல்ல. தேவதைகளுக்கும் இவனே ஆத்மாவாக இருக்கிறான். ஆகையால் பிரஹ்மத்தையறிபவன் பிரஹ்மமாகவே ஆகிறான். இனி வேதவசனம் கூறுகின்றேன். கேளுங்கள்.

स यो ह वै तत्परमं ब्रह्म वेद ब्रह्मैव भवति नास्याऽब्रह्मवित् कुले भवति । तरति शोकं तरति पाप्मानं गुहाग्रन्थिभ्यो विमुक्तोऽमृतो भवति ॥

ஸ யோ ஹ வை தத்பரமம் ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி நாஸ்யாऽப்ரஹ்மவித் குலே பவதி । தரதி சோகம் தரதி பாப்மாநம் குஹாக்ரந்திப்யோ விமுக்தோऽம்ருதோ பவதி ॥

எவன் அந்த பரப்பிரம்மத்தை அறிகிறானோ அவன் பிரம்மமாகவே ஆகிறான். அவன் குலத்தில் பிரம்மஞானமில்லாதவன் இருக்கமாட்டான். தவிரவும் அவன் சோகத்தைத் தாண்டுகிறான். பாபத்தைத் தாண்டுகிறான். இருதய முடிச்சுகளிலிருந்து விடுபட்டு அமிருதத்வத்தை அடைகிறான்.

கோபதர் :— சீடர்களே, உங்களுக்கு ஸந்தேஹம் ஒன்றும் வேண்டாம். வேதம் உறுதியாக கோஷிக்

கின்றது. பரப்பிரம்மத்தை அறிந்தவன்— அதாவது அந்த ஸாக்ஷாத் பிரம்மம் தானே என்று தெரிந்து கொண்டவன் வேறு அன்யமான கதியை அடைகிற தில்லை. அவன் பிரம்மமாகவே ஆகிருன். முதலில் பரோக்ஷமாய்த்தெரிந்துகொண்டு, பின்னுல் அபரோக்ஷமாய் அனுபவிக்கிருன். அவன் துயரத்திலிருந்து விடுபடுகிருன். இஷ்டவஸ்துக்கள் பிரியபந்துக்களின் பிரிவு, இழப்பு அவனை வாட்டுவதில்லை. அவைகளது வியோகத்தினுல் அவன் துன்புறுவதில்லை. மேலும் அவனது குலத்தில் அப்ரம்மவித்து ஜனிப்பதில்லை. அவனது வம்சத்தில் பிறப்போர் எல்லாரும் பிரம்ம ஞானிகளாகவே ஆகின்றனர்.

வாஜபேயி :— ஸ்வாமீ ! அது எப்படி ஸாத்யம் ஆகிறது ?

அங்கிரஸ் :— இதில் ஆச்சர்யப்படுவதற்கு ஒன்றும் இல்லை. பரம்பரையான நல்ல வம்சங்களில் நல்லோர் ஜனிப்பதும், கெட்ட குலங்களில் தீயோர் பிறப்பதும் கண்கூடு.

சௌனகர் :— ஆம். ஏதோ ஒன்றிரண்டு விதிக்கு விலக்காக நடந்திருக்கலாம். ஆகையால் நண்பரே ! இதில் ஸம்சயத்திற்கு இடமில்லை.

அங்கிரஸ் :— பிரஹ்மஞானி சோகத்தைத் தாண்டுவதுடன் பாபங்களையும் கடக்கிருன். பாபமென்பது புண்யத்திற்கும் உபலக்ஷணம். பாப புண்யங்களைத் தாண்டுவதால் பிறப்பு, இறப்பு ஒழிகின்றது. ஹ்ருதய க்ரந்திகள், வாஸனைகள் இவைகளிலிருந்து விடுபட்டு சாகாத் தன்மையையடைகின்ருன்.

கோபதர் :— முன் ருக் ஒன்றில் 'ஹ்ருதய முடிச்சு அவிழ்ந்துபோகிறது. ஸந்தேஹங்கள் ஒழிகின்றன. கர்மங்கள் நாசமடைகின்றன' என்று சொன்னது ஞாபகமிருக்கலாம். எங்கே யாராவது ஒருவர் அதைச் சொல்லுங்கள் பார்க்கலாம் ?

சௌனகர் :— (மற்றவர்கள் யோஜித்துக்கொண்டிருக்க)

भिद्यते हृदयग्रन्थिश्छिद्यन्ते सर्वसंशयाः ।
क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन् दृष्टे परावरे ॥

அங்கிரஸ் :— ஸபாஷ் சௌனகரே! ரொம்ப ஸந்தோஷம். உம்மைப்போல் சிஷ்யர்கள் கிடைப்பது அருமையிலும் அருமை.

கோபதர் :— ஆம் நண்பரே! "ந பூதோ ந பவிஷ்யதி"

சௌனகர் :— (வெட்கத்துடன்) ஐயன்மீர்! எல்லாம் தங்கள் அனுக்ரஹம்தான். மேலும் ஆசீர்வதியுங்கள்.

அங்கிரஸ் :— இனி இந்த ப்ரஹ்மோபதேசத்தைப் பெறும் அதிகாரி எங்ஙனமிருக்கவேண்டும் என்று கர்ம காண்டத்தில் கூறப்பட்டிருக்கும் மந்திரத்தை ச்ருதி கூறுகிறது.

तदेतदृचाऽभ्युक्तम्— ததேதத் ருசாऽப்யுக்தம்—

क्रियावन्तः श्रोत्रिया ब्रह्मनिष्ठाः स्वयं जुह्वत एकर्षिं श्रद्धयन्तः ।
तेषामेवैतां ब्रह्मविद्यां वदेत शिरोव्रतं विधिवद्यैस्तु चीर्णम् ॥

க்ரியாவந்த: ச்ரோத்ரியா ப்ரஹ்மநிஷ்டா:
ஸ்வயம் ஜுஹ்வத ஏகர்ஷிம் ச்ரத்தயந்த: ।
தேஷாமேவைதாம் ப்ரஹ்மவித்யாம் வதேத
சிரோவ்ரதம் விதிவத் யைஸ்து சீர்ணம் ॥

இப்போது சொன்ன விஷயம் மந்திரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது கர்மானுஷ்டானமுள்ளவர்களுக்கும் வேதாத்யயனம் செய்தவர்களுக்கும், பிரம்ம நிஷ்டர்களுக்கும் சிரத்தையுள்ளவர்களுக்கும், ஏகரிஷி என்ற அக்னியில் ஹோமம் செய்கிறவர்களுக்கும், விதிப்படி சிரோவிரதம் செய்தவர்களுக்கும் பிரம்ம வித்யையைச் சொல்லவேண்டியது.

கோபதர் :— ஸௌம்யர்களே, இங்கே சிஷ்யனுக்கு ஆறுவிதமான யோக்கியதைகள் கூறப்பட்டிருக்கின்றன.

1. கர்மானுஷ்டானம், 2. வேதாத்யயனம், 3. பிரம்ம நிஷ்டை, 4. சிரத்தை, 5 ஏகரிஷி என்ற அக்னியில் ஹோமம், 6. சிரோவ்ரதம்.

வாஜபேயி :— ஐயன்மீர், முதலிலேயே ஒரு சந்தேகம்.

கோபதர் :— அது வென்ன? உடன் கூறுவாய், முளையிலேயே கிள்ளி எறிகின்றேன்.

வாஜபேயி :— ஸாதாரணமாக வேதத்தில் கர்ம காண்டத்திலுள்ள வசனங்களைவிட . ஞானபாகமாகிற உபநிஷத்தின் வாக்கியங்களுக்குத்தானே அதிக மதிப்பு. அப்படியிருக்க இங்கே கர்மகாண்டத்தின் மந்திரத்தைப் பிரமாணமாகக் கூறுவானேன் ?

கோபதர் :— இதில் தவறு ஒன்றுமில்லை. ஒன்றுக்கு ஒன்று முரண்படும்போதுதான் எது உயர்வு? எது தாழ்வு? என்ற பிரச்னங்கள் எழும்பும். ஒட்டி வரும் போது துணையாக மந்திரங்களைச் சொல்வது நலம்தான். கர்மகாண்டத்திலேயே ஊறித்திளைத்த உங்களைப் போன்ற சீடர்களுக்கு நீங்கள் கேள்விப்பட்டிருக்கும் மந்திரங்களைச் சொல்வது பொருத்தமும் கூட.

சௌனகர் :—ஸ்வாமீ! இனி ஆறு யோக்யதாம்சங்களைப் பற்றியும் அவைகள் எப்படி பிரம்மபிராப்திக்கு உதவுகின்றன என்பது பற்றியும் விபரமாகக் கூற வேண்டுகிறேன்.

அங்கிரஸ் :- க்ரியாவான் - வேதத்தில் விதித்திருக்கும் கர்மங்களைப் பக்தியுடனும் பலத்தில் இச்சையில்லாமலும் செய்வதால் சித்தசுத்தி உண்டாகிறது. அவனது பண்புகள் உயர்கின்றன. சுயநலம் போன்ற தீய குணங்கள் நீங்குகின்றன. நன்றாக ஸம்யக் ஆக வேதங்களைப் படித்தல், உபநிஷத்தின் கருத்துக்களை ஆராய்தல், பிறகு பிரஹ்மதியானம் செய்யவேண்டும். இங்கு பிரஹ்மநிஷ்டை என்பது பிரஹ்மத்தையறிந்து அதில் நிலைத்திருப்பவன் என்ற பொருளில் கூறப்படவில்லை. பிரஹ்மத்தையறிய நிஷ்டை - தியானம் -

செய்பவன் என்றுதான் அர்த்தம். நான்காவதாக சிரத்தை மிகவும் முக்கியம். தவிர, சிரத்தையுடன் அதர்வவேதத்தில் சொல்லியிருக்கிற ஏகர்ஷி என்ற அக்னியில் ஹோமம் செய்யவேண்டும். மிகவும் முக்கியமாக சிரோவ்ரதம் அதாவது தலையில் அக்னியை தரித்துக்கொண்டிருப்பது, அதர்வவேதத்தில் புகழ்ந்து பேசப்பட்டிருக்கும் இந்த விரதம் அனுஷ்டிக்கப்பட வேண்டும். இப்படியாக சாஸ்திரோக்தப்படி யோக்யதையுள்ள அதிகாரிகளுக்கு இந்தப் பிரஹ்ம வித்யை சொல்லப்படவேண்டும்.

கோபதர் :— ஸௌம்யர்களே! நீங்கள் இந்த யோக்யதைகளில் பூர்ணமடைந்தவர்கள். உங்களுக்கு பகவான் அங்கிரஸ் உபதேசம் செய்திருக்கிறார். சிறு கை விளக்கில் கொளுத்திய பந்தம்போல், இந்த உபநிஷத்தாகிற விளக்கு ஒளி குறையாமல் பரம்பரை பரம்பரையாக விளங்கட்டும். நீங்கள் உங்களுடைய சொந்த ஊர்களுக்குச்சென்று தகுதியான சீடர்களுக்கு உபதேசம் செய்யவேண்டும். அப்போது ஸத்குரு சொன்னபடியுள்ள தகுதிகள் அவர்களுக்கு இருக்கிறதா என்று கூர்ந்து கவனிக்கவேண்டும்.

அங்கிரஸ் :— இத்துடன் இந்த பிரம்மோபதேசம் நிறைவு பெறுகிறது. நாளை நல்ல தினம். அவபிருத ஸ்நானம் பண்ணி விட்டு ஸ்நாதகர்களாய் நீங்கள் ஊர் திரும்பலாம். 'பத்ரம் தே' உங்களுக்கு எனது நல் வாழ்த்துக்கள். சீடபரம்பரை விருத்தியாகி, உபநிஷத ஞானம் தழைத்து ஓங்கி வளர பிரார்த்திக்கிறேன். ஆசீர்வதிக்கிறேன். குன்றின்மேல் வைத்த தீபம்போல் பிரகாசிக்கட்டும் உங்கள் ஞானம்.

கோபதர் :— சௌனகரே! நாம் பிரியும் தருணம் வந்துவிட்டது. உமது ஆசிரமத்தில் உமது பத்னீ ஆவலுடன் உமது வருகையை எதிர்நோக்கியிருப்பாள். நீர் உடன் சென்று அந்த உத்தமிக்கு, பதிவிரதா சிரோமணிக்கு பிரம்ம வித்யையை உபதேசம் பண்ண

வேண்டும். அதுபோல் ஸோமயாஜியும், வாஜபேயியும் புரோஹிதருக்கும் மற்ற யோக்கியதையுள்ள சீடர்களுக்கும் உபதேசிக்கவேண்டும்.

ஸோமயாஜி :— குருநாதரே! இன்றைய பாடத்தின் சுருக்கத்தை நான் கூறட்டுமா!

அங்கிரஸ் :— ரொம்ப மகிழ்ச்சி. தாராளமாகச் சொல்லலாம்.

ஸோமயாஜி :— எவன் அந்தப் பிரஹ்மத்தை அறிகின்ருனே அவன் பிரஹ்மமாகவே ஆகின்ருன். அவன் குடும்பத்தில் அப்ரஹ்மவித் இருக்கமாட்டான். சோகத்தை தாண்டுகிருன். பாபத்தை தாண்டுகிருன். ஹ்ருதய முடிச்சிலிருந்து அதாவது ஆசையிலிருந்து முக்தனுகிருன். அமிருதனுகிருன்.

சௌனகர் :— நான் பற்றெழிந்தவன் என்ற அஹங்காரம், யோகஸித்தியில் ஏற்படும் கர்வம், ஆசை, கோபம், உடைமை முதலியவைகளை ஒழித்தவன் பிரஹ்மமாகின்ருன். அவன் துக்கிப்பதில்லை. ஆசைப்படுவதில்லை. ஆகையால் பாபம் செய்யமாட்டான். எல்லா உயிர்களிடத்தும் ஸமமானவனுய் அவன் ஒப்புயர்வற்ற பிரஹ்மத்தையடைந்து சாகாத் தன்மையை அடைகிருன்.

வாஜபேயி :—இப்படி அருமையாகக் கற்றுக்கொண்ட சிரேஷ்டமான வித்யையை சாதாரணமாக எண்ணித் தகுதியில்லாதவர்களுக்கு உபதேசிக்கலாகாது. யோக்கியதை உள்ள அதிகாரிகளைப்பார்த்து உபதேசிக்க வேண்டும். ஸத்கர்மானுஷ்டானம், வேதாத்யயனம், பிரம்மநிஷ்டை, சிரத்தை இவைகளுடன் ஏகர்ஷி என்ற அக்னிஹோமமும், சிரோவிரதம் என்ற அதர்வவேதீய நோன்பும் செய்த சீடர்களே தகுந்த அதிகாரிகள். அவர்களுக்குத்தான் உபதேசிக்கவேண்டும்.

அங்கிரஸ் :— ஸௌம்யர்களே! ரொம்பவும் சந்தோஷம். உபனிஷத் ஞானம் உங்களால் நன்கு காப்பாற்றப்பட்டு பிரகாசமடையும். பிரசாரமுமடையும் பூர்ண ஆசீர்வாதம்.

(எல்லோரும் சேர்ந்து சாந்தி பாடம் சொல்கின்றனர். சிஷ்யர்கள் ஒவ்வொருவராக எழுந்து "அபிவாதயே" கூறி ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம்செய்ய, குரு ஆசீர்வதிக்கின்ருர்)

(திரை விழுகிறது)

காட்சி 2

(திரை விலக)

[சௌனகரின் ஆச்ரமம். சௌனகரும் அவரது தர்ம பத்னியும், நண்பர்களும், மற்றும் சீடர்களும் உட்கார்ந்து ஸம்பாஷித்துக்கொண்டிருக்கின்றனர்.]

வாஜபேயி :— நண்பர்களே! நாம் ரிஷீகேசத்திலிருந்து வந்து இன்றோடு ஒரு வருஷம் ஆகிவிட்டது ஆனல் நேற்றுப்போல் எல்லாம் ஞாபகத்திற்கு வருகின்றன.

ஸோமயாஜி :— முக்யமான விஷயங்களும், பிடித்தமான வ்யவஹாரங்களும் மனத்திரையை விட்டு லேசில் விலகாது. ஆகையால்தான் இந்த ஸம்பவங்கள் நினைவில் நிற்கின்றன.

சௌனகர் :— ஆம் நண்பர்களே! பிரஹ்மரிஷி கோபதர் இங்கு வந்து நம்மை ரிஷீகேசத்துக்கு அழைத்துச்சென்றதும், அங்கே பகவான் அங்கிரஸ் உபதேசம் செய்ததும் எல்லாம் நம் கண்முன்னே இன்று நடப்பதுபோல் பிரத்யக்ஷமாகவும் பிரகாசமாகவும் விளங்குகின்றன. எல்லாம் ஸத்குருவின் கருணை.

புரோஹிதர் :— என் ஆருயிர் நண்பரே!

तदेतत्सत्यमृषिरङ्गिराः पुरोवाच नैतदचीर्णव्रतोऽधीते । नमः परमऋषिभ्यो नमः परमऋषिभ्यः ॥

ததேதத் ஸத்யம் ருஷிரங்கிரா: புரோவாச நைத-தசீர்ணவ்ரதோऽதீதே I நம: பரம ருஷிப்யோ நம: பரம ருஷிப்ய: II

பரம்பொருளைப்பற்றிய இந்த ஸத்தியமான உபதேசத்தை அங்கிரஸ் ரிஷி தங்களுக்கு உபதேசித்தார். தாங்களும் மிகவும் கருணையுடன் என் போன்றவர்களுக்கு உபதேசித்தீர்கள். இந்த உபநிஷத்தை விரதமனுஷ்டிக்காதவன் பெறக்கூடாது. பரம ரிஷிகளுக்கு நமஸ்காரம், பரம ரிஷிகளுக்கு நமஸ்காரம்.

யக்ஞஸேனி :— ஆர்யபுத்ரா! ருக்கில் இரண்டு தடவை நமஸ்காரம் எதற்காகச் சொல்லப்பட்டிருக்கிறது?

சௌனகர் :—ப்ரியே, நமக்கு பிரம்ம உபதேசத்தை நல்கிய ரிஷிகளுக்கு கோடித்தடவை நமஸ்காரம் செய்தாலும் மிகையாகாது. ஆதரவையும் மதிப்பையும் காட்டுவதற்காக இரண்டுதடவை வணக்கம் கூறப்படுகின்றது. தவிரவும் முண்டகோபநிஷத் இத்துடன் நிறைவு பெறுகின்றது என்பதை சூசிப்பிக்கவும் இரண்டு தடவை வந்தனம் சொல்லப்படுகின்றது என்றும் கொள்ளலாம்.

புரோஹிதர்— முண்டகோபநிஷத் என்றால் என்ன பொருள்? விவரிக்கவேண்டும்.

வாஜபேயி :—புரோஹிதரே, கூறுகிறேன். கேட்பீராக. முண்டகம் என்றால் மொட்டைத்தலை. இது வைராக்யத்துக்கு அடையாளம். ஞானவாழ்க்கைக்கு தன் தலையை ஈடுவைத்தவர்களுக்கே இந்த உபநிஷத்தில் அதிகாரம். சிரோவிரதம் அனுஷ்டித்தால் தான் இதை அத்யயனம் செய்யத்தகுதி ஏற்படும். அதனால் இந்த உபநிஷத்துக்கு

முண்டகோபநிஷத் எனப் பெயர் வந்தது. இதில் மூன்று பாகங்கள் (முண்டகங்கள்) இருக்கின்றன. ஒவ்வொரு பாகத்திலும் இரண்டு கண்டங்கள் இருக்கின்றன.

யக்ஞஸேனீ :— அப்படியா! ரொம்ப சந்தோஷம் ஒவ்வொரு முண்டகத்திலும் என்ன என்ன விஷயங்கள் கூறப்படுகின்றன ?

சௌனகர் :— முண்டகோபநிஷத்திலுள்ள விஷயங்கள் பூராவும் உனக்கு முன்னமேயே உபதேசித்து விட்டேன். ஆயினும் பாகம் பாகமாக பிரித்துக் கூறவில்லை. இப்போது கூறுகின்றேன். முதல் முண்டகத்தில் வித்யை இரண்டு என்றும் நான்கு வேதங்களும் மற்றும் எல்லா அறிவும் அபரவித்யையில் அடக்கம் என்றும், பரவித்யை என்பது பிரம்ம ஞானம் என்றும் கூறப்படுகின்றது.

வாஜபேயி :— இரண்டாவது முண்டகத்தில் பிரம்மத்துக்கும் பிரபஞ்சத்துக்குமுள்ள ஸம்பந்தமும், பிரம்மத்தை நாடும் உபாயமும் சொல்லப்படுகின்றது.

ஸோமயாஜி :— மூன்ருவது முண்டகத்தில் பிரம்ம ஞானியின் லக்ஷணமும் ஞானத்தின் பலனும் விவரிக்கப் படுகின்றது.

யக்ஞஸேனீ :— ஐயன்மீர்! தன்யனுனேன். வைச்வ தேவத்துக்கு எல்லாம் சித்தம் செய்துவைக்கிறேன். மாத்யாந்ஹிக ஸ்நானம் முடித்துக்கொண்டுவாருங்கள். (எழுந்து உள்ளே போகிருள்)

சௌனகர் :— புரோஹிதர் அவர்களே! நதிக்குப் போவோமா ?

புரோஹிதர் :— நண்பரே! தாங்கள் அன்று மஹா சாலராக சிறப்புடன், மிகுந்த கீர்த்தியுடன் விளங்கினீர்கள். இன்று குலபதி சௌனகராக மிகுந்த புகழுடன் விளங்குகிறீர்கள். அன்று யாகம் செய்வதற்காகப் பலர் வருவார்கள். இன்று பிரஹ்மோபதேசம்

பெற சீடர்கள் வந்தவண்ணமிருக்கின்றார்கள். அன்று இல்லற தர்மத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினீர்கள். இன்று ஆச்ரம தர்மத்துக்கு குருகுலத்துக்கு ஒரு சிறந்த உதாரணமாகத் தங்களது ஆச்ரமம் விளங்குகிறது. தங்கள் பாக்யமே பாக்யம். பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறுவதுபோல், தங்களுடன் நட்புகொண்ட நாங்களும் பெருமையடைகின்றோம். தங்களுக்கு என்னுடையவும் மற்ற சீடர்களுடையவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாஜபேயி :— நண்பரே, தாங்கள் கூறியது அனைத்தும் உண்மை. சௌனகரின் பாக்யமே பாக்யம்.

ஸோமயாஜீ :— நானும் அதை ஆமோதிக்கிறேன். குலபதி சௌனகர் வாழ்க.

(எல்லோரும் சேர்ந்து 'குலபதி சௌனகர் வாழ்க! பிரஹ்ம ரிஷி சௌனகர் புகழ் ஓங்குக' என்று கோஷம் இடுகின்றனர்).

சௌனகர் :— நண்பர்களே, உணர்ச்சி வசப்பட்டும் என்பேரிலுள்ள அபிமானத்தினாலும் ரொம்பவும் புகழ்ந்து பேசுகின்றீர்கள். இதற்கு ஒன்றும் அடியேன் தகுதியுடையவனல்லன். எல்லாம் பிரஹ்மரிஷி கோபதர், அங்கிரஸ் இவர்களுடைய ஆசீர்வாதமும் அனுக்ரஹமுமேயாகும். அவர்களுக்கு நாம் பணிவாக நன்றியோடு அஞ்ஜலி செலுத்துவோம். அந்தப் பிரஹ்மரிஷிகள் முதலில் பிரஹ்மஸாக்ஷாத்காரத்தை எய்தினார்கள். அப்படிப்பட்ட சிறந்த முயற்சியில் ஈடுபட்டு வெற்றியடைந்த பரமரிஷிகளுக்கு நமஸ்காரம். அவர்கள் பிரஹ்மஞானமடைந்து சும்மா இருந்துவிடவில்லை. விதிப்படி தம்மையணுகிய சீடர்களுக்கு பரம்பரை பரம்பரையாக மிகுந்த கருணையோடு உபதேசித்தார்கள். அப்படிப்பட்ட கருணையுடைய பரமரிஷிகளுக்கு நமஸ்காரம். நாமும் அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்போம். நம்மை நாடும்

சீடர்களுக்கு உபதேசிப்போம். பசித்து உண்ட உணவே ஜீர்ணமாகும். அதுபோல் விரதத்தை அனுஷ்டித்த வனுக்கே பிரஹ்மவித்யை பலனைக்கொடுக்கும். ஆகவே தகுதியுடைய சீடர்களுக்கு உபதேசிக்கவேண்டும். இதுவே நாம் பிரஹ்மரிஷிகளுக்குச் செய்யும் வந்தன மும், செலுத்தும் நன்றிக்கடனுமாம். நண்பர்களே! சாந்தி பாடம் சொல்லிவிட்டு மாத்யாந்ஹிக ஸ்நானத் திற்குப் போவோம். மங்களம் உண்டாகட்டும்.

(எல்லாரும் சேர்ந்து சாந்தி பாடம் சொல்லுகின்றனர்).

ओं भद्रं कर्णेभिः शृणुयाम देवाः । भद्रं पश्येमाक्षभिर्यजत्राः । स्थिरैरङ्गैस्तुष्टुवा ँसस्तनूभिः । व्यशेम देवहितं यदायुः । स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः । स्वस्ति नः पूषा विश्ववेदाः । स्वस्ति नस्तार्क्ष्यो अरिष्टनेमिः । स्वस्ति नो बृहस्पतिर्दधातु ॥

ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

ஓம் பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா: । பத்ரம் பச்யேமாக்ஷபிர் யஜத்ரா: । ஸ்த்திரைரங்கைஸ் துஷ்டு வாம்ஸஸ் தனூபி: । வ்யசேம தேவஹிதம் யதாயு: । ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்தச்ரவா: । ஸ்வஸ்தி ந: பூஷா விச்வவேதா: । ஸ்வஸ்தி நஸ் தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி: । ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது ॥

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

(சீடர்கள் ஒவ்வொருவராக குலபதி சௌனகருக்கு 'அபிவாதயே' கூறி ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்கின்றனர். அவரும் 'தீர்க்காயுஷ்மான் பவ ஸௌம்ய' என்று ஒவ்வொரு வரையும் தனித்தனியாக வாழ்த்துகின்றார்.)

(திரை விழுகிறது)

முண்டகோபநிஷத் நாடகம் முற்றும்.

108 உபநிஷத்துக்கள்

ईशकेनकठप्रश्नमुण्डमाण्डूक्यतित्तिरिः ।
ऐतरेयं च छान्दोग्यं बृहदारण्यकं तथा ॥ १ ॥

ब्रह्मकैवल्यजाबालश्वेताश्वो हंस आरुणिः ।
गर्भो नारायणो हंसो बिन्दुर्नादशिरःशिखा ॥ २ ॥
मैत्रायणी कौषीतकी बृहज्जाबालतापनी ।
कालाग्निरुद्रमैत्रेयी सुबालक्षुरिमन्त्रिका ॥ ३ ॥
सर्वसारं निरालम्बं रहस्यं वज्रसूचिकम् ।
तेजोनादध्यानविद्यायोगतत्त्वात्मबोधकम् ॥ ४ ॥
परिव्राट् त्रिशिखी सीता चूडा निर्वाणमण्डलम् ।
दक्षिणा शरभं स्कन्दं महानारायणाह्वयम् ॥ ५ ॥
रहस्यं रामतपनं वासुदेवं च मुद्गलम् ।
शाण्डिल्यं पैङ्गलं भिक्षुमहच्छारीरकं शिखा ॥ ६ ॥
तुरीयातीतसंन्यासपरिव्राजाक्षमालिका ।
अव्यक्तैकाक्षरं पूर्णा सूर्याक्ष्यध्यात्मकुण्डिका ॥ ७ ॥
सावित्र्यात्मा पाशुपतं परं ब्रह्मावधूतकम् ।
त्रिपुरातपनं देवीत्रिपुरा कठभावना ।
हृदयं कुण्डली भस्म रुद्राक्षगणदर्शनम् ॥ ८ ॥
तारसारमहावाक्यपञ्चब्रह्माग्निहोत्रकम् ।
गोपालतपनं कृष्णं याज्ञवल्क्यं वराहकम् ॥ ९ ॥
शाट्यायनी हयग्रीवं दत्तात्रेयं च गारुडम् ।
कलिजाबालिसौभाग्यरहस्यऋचमुक्तिका ॥ १० ॥
एवमष्टोत्तरशतं भावनात्रयनाशनम् ।
ज्ञानवैराग्यदं पुंसां वासनात्रयनाशनम् ॥ ११ ॥

உ

ஸ்ரீ குருப்யோ நம:

உபநிஷத் நாடகமாலா – 6

மாண்டூக்யோபநிஷத்

(ஓரங்க நாடகம்)

நாடக பாத்திரங்கள்

வருண பகவான்	—	உபதேசிக்கும் ரிஷி
ஸத்யகாமர்	—	மேற்படியாரின் சிஷ்யர்
பிரம்மதத்தர்	—	இவரும் சிஷ்யர்
கோபதர்	—	பிரம்ம ரிஷி

மற்றும் நடிகர், ஸூத்ரதாரர், ஆசிரமவாஸிகள் முதலியோர். முதல் காட்சியும் கடைசி காட்சியும் சங்கர மடத்திலும், மற்றக்காட்சிகள் இமாலயப் பிரதேசங்களிலும் நடைபெறுகின்றன.

மாண்டூக்யோபநிஷத்

(ஓரங்க நாடகம்)

முதலாவது காட்சி

(திரைக்குள் சாந்தி பாடம் கேட்கிறது)

ओं भद्रं कर्णेभिः शृणुयाम देवाः । भद्रं पश्येमाक्षभिर्यजत्राः । स्थिरैरङ्गैस्तुष्टुवाँसस्तनूभिः । व्यशेम देवहितं यदायुः । स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः । स्वस्ति नः पूषा विश्ववेदाः । स्वस्ति नस्तार्क्ष्यो अरिष्टनेमिः । स्वस्ति नो बृहस्पतिर्दधातु ॥

ओं शान्तिः शान्तिः शान्तिः ।

[ஓம் பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா: । பத்ரம் பச்யேமாக்ஷபிர் யஜத்ரா: । ஸ்த்திரைரங்கைஸ் துஷ்டுவாம்ஸஸ் தனூபி: । வ்யசேம தேவஹிதம் யதாயு: । ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்தச்ரவா: । ஸ்வஸ்தி ந: பூஷா விச்வவேதா: । ஸ்வஸ்தி நஸ் தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி: । ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது ।

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

[திரை விலக சங்கர மடம் தென்படுகிறது. வலது பக்கத்திலிருந்து ஸூத்ரதாரரும் இடது பக்கமிருந்து நடிகரும் பிரவேசிக்கிறார்கள்.]

ஸூத்ரதாரர் :—வணக்கம், நண்பரே

நடிகர் :—வந்தனம் ஐயா

ஸூத்ரதாரர் :—சங்கர ஜயந்திக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்தாய்விட்டதா? தர்மாதிகாரி நாடகம் நடத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறாரா?

நடிகர் :—அநேகமாக எல்லா ஏற்பாடுகளும் செய்தாய்விட்டது. நாடக விஷயம் தங்களைக்கலந்து தீர்மானிக்கச் சொல்லியிருக்கிறார்.

ஸூத்ரதாரர் :— அப்படியா. ரொம்ப சந்தோஷம். அவர் இஷ்டம்போல் ஓர் சிறந்த நாடகம் நடத்தி விடுவோம்.

நடிகர் :— குறைந்த அவகாசத்தில் எந்த நாடகம் நடிக்க முடியும்?. நம் குழுவினர் முன் நடித்துக்காட்டிய நாடகங்கள் எல்லாம் 2 மணி நேரத்துக்குமேல் சமயம் எடுத்தனவே. இப்போது தர்மாதிகாரி சொல்கிறார். உபன்னியாசங்களும், மற்றும் பல நிகழ்ச்சிகளும் இருப்பதால் நாடகத்திற்கு அரைமணிக்குமேல் ஒதுக்க முடியும் என்று தோன்றவில்லை என்று.

ஸூத்ரதாரர் :— அரைமணி நேரம் கூட இந்தப் புதிய நாடகத்துக்கு வேண்டாம். அதற்குள்ளேயே முடித்து விடலாம். நடிகர்களும் அதிகம் தேவையில்லை. ஓர் அங்க நாடகமாயிருப்பதால் அதிகமான காட்சி ஜோடனைகளும் தேவையில்லை.

நடிகர் :— நண்பரே, உம்முடைய சாமர்த்தியமே சாமர்த்தியம் ரத்னச்சுருக்கமாகத் தயாரித்திருக்கும் நாடகத்தின் விபரங்களைக் கூறவேண்டுகிறேன்.

ஸூத்ரதாரர் :— ஆகட்டும், தோழரே. இந்த நாடகத்துக்குப் பெயர் "மாண்டுக்யோபநிஷத்". இது உபநிஷத்துக்களுக்குள் மிகச் சிறியதாயினும் அனைத்தினும் மிகப் பெருமை வாய்ந்தது. இது அதர்வ வேதத்தைச் சேர்ந்தது. மொத்தம் 12 மந்திரங்களைக் கொண்டது. வருணபகவானால் உபதேசிக்கப்பட்டது இதன் பெருமை சொல்லத்தரமன்று. முமுக்ஷுக்களின் விடுதலைக்கு மாண்டூக்யம் ஒன்றேபோதும் என்று பிரம்மஞானிகள் கூறுகின்றார்கள்.

நடிகர் :— ரொம்ப சந்தோஷம். அப்படிப்பட்ட சிறந்த உபநிஷத் நாடகத்தைத் தயாரித்ததற்கு நன்றி. இதற்கு 'மாண்டுக்யோபநிஷத்' என்று பெயர் வரக் காரணமென்னவோ ?

ஸூத்ரதாரர் :—பெயர் வந்த காரணம் பலவாருய்ச் சொல்லலாம். இந்த உபநிஷத்தின் ரிஷி வருண பகவான் மண்டுகரூபத்தில் வந்து இதை உபதேசித்ததால் இப்பெயர் வந்ததென்றும் கூறலாம். இதற்கு ஆதாரம் 'ஹரிவம்சம்' என்ற நூலில் உள்ளது. தவிரவும் யோகியின் மனம் மூன்று அவஸ்தைகளையும் தவளை (மண்டுகம்) போல் தாவிச்சென்று நாலாவது அவஸ்தையை அடையும் அனுபவத்தைக் கூறுவதால் இப்பெயர் வந்தது என்றும் சொல்லலாம்.

நடிகர் :— பெயர் எப்படியிருந்தாலென்ன ? பலாப் பழம், அதை எப்பெயர் வைத்து அழைத்தாலும் இனிக்கத்தானே செய்யும் ? அதுபோல் தாமரை மலரும் அதன் பெயரை மாற்றினும் மணம் கமழத்தானே செய்யும். நமக்கு வேண்டியது நல்ல கருத்துள்ள நாடகம். அது கிடைத்திருக்கிறது. நாம் எல்லோரும் ஒத்துழைத்து நடித்து ரசிகர்களின் அன்பையும் மதிப்பையும் ஆசியையும் பெறுவோமாக.

ஸூத்ரதாரர் :— நண்பரே, தங்கள் பிரியப்படியே செய்வோம். ரசிகர்கள் காத்திருக்கின்ருர்கள். தீபாராதனை நடக்கிறது. அது முடிந்தவுடன் ஜகத்குருவின் ஆசியுடன் நாடகத்தைத் துவங்குவோம்.

(போகிருர்கள். திரை விழுகிறது).

இரண்டாவது காட்சி

(திரை விலக)

[இமயத்தில் மானஸஸரோவர் தென்படுகிறது. கரையில் உட்கார்ந்துகொண்டு ஸத்யகாமர் ஆழ்ந்த சிந்தனையிலிருக்கிருர். பிரம்மதத்தர் பிரவேசிக்கிருர்.]

பிரம்மதத்தர் :— (உலாவிக்கொண்டே) இந்தப் பிரதேசம் எவ்வளவு ரமணீயமாக இருக்கிறது. மானஸ ஸரோவர் எவ்வளவு அழகாயிருக்கிறது. தபோதனர்களின் உள்ளங்கள்போல் ஜலம் சுத்தமாகவும் தெளிவாகவுமிருக்கிறது. இயற்கை அன்னை தனது ஒப்பற்ற பொலிவுடன் இங்கே கொலு வீற்றிருக்கின்ருள். அற்புதமான அழகு கம்பீரமான தோற்றம். ஹம்ஸங்கள்தான் எவ்வளவு அமைதியுடன் விளையாடிக் கொண்டிருக்கின்றன. வடக்கே கைலாஸபர்வதம் வெள்ளிமலை போல் பிரகாசிக்கின்றது. இதோ தெரியும் கொடி வழி, துவாபரயுகத்தில் பாண்டவர்கள் போன வழியாகத்தானிருக்கவேண்டும் கிழக்கே தூரத்தில் பசுபதி நாதம் தெரிகின்றது. தெற்கே நாராயண பர்வதம். அதைத் தாண்டிவிட்டால் கேதார்நாதம். மேற்கே தொலைவில் தெரிவது அமரநாதம். எங்கும் இறைக்காட்சிகள் மனதிற்கு நிம்மதியைக் கொடுக்கின்றது. உடலுக்கும் உள்ளத்துக்கும் ஒருங்கே ஆரோக்யம் தரும் அமைதியான இடம். இந்த ஸௌந்தர்யலஹரியில் திளைத்துவிட்டால் ஆனந்தலஹரியில் மூழ்க வேண்டியதுதானே மட்டற்ற மகிழ்ச்சி. ஸரோவரின் கரையில் அமர்ந்திருப்பது யார்? அவர்தான் ஸத்தியகாமரா? (அருகில் சென்று பார்க்கின்ருர்) என்ன தேஜஸ்ஸு! பிரம்மஞானம் ஒளிப்பிழம்பாக வதனத்தில் வழிகின்றது. தவத்தின் மகிமை, பிரம்மசர்ய விரதத்தின் பலம், வேத அத்யயனம் செய்த அறிவு எல்லாம் பிரகாசிக்க வீற்றிருக்கும் புண்ணியாத்மா, புண்ணிய சுலோகரான ஸத்தியகாமராகத்தான் இருக்கவேண்டும். சந்தேகமேயில்லை. எனது குருநாதர் கோபதர் சொல்லியது

தவருது. அருகில் சென்று வணங்கி குசலபிரச்னம் செய்வோம். 'ஸ்வாமீ, நமஸ்காரம். தாங்கள்தான் ஸத்ய காமர் என்று எண்ணுகின்றேன். அடியேன் பிரம்ம தத்தனை ஆசீர்வதியுங்கள்:' (நெருங்கிச்சென்று 'அபிவாதயே போ:'' என்றுசொல்லி நமஸ்காரம் செய்கிருர்)

ஸத்யகாமர் :—(திடுக்கிட்டுத் திரும்பி, குழப்பத்துடன்) தாங்கள்...... தாங்கள் என்னை எப்படித் தெரிந்து கொண்டீர்கள் ? தாங்கள் யார் ? நான் பகவான் பிப்பலாதரின் சீடனும் சிபிமகரிஷியின் புதல்வனுமான ஸத்தியகாமன்தான்.

பிரம்மதத்தர் :— நான் கோபதரின் சிஷ்யனுகிய பிரம்மதத்தன். அருகில் இருக்கும் கங்கோத்ரியில் மகரிஷி கோபதரின் ஆசிரமம் இருக்கிறது. அங்கே நேற்று வந்தேன். பிரணவத்தை உபாஸிக்கும் விஷயத்தில் மேலும் உயர்ந்த கருத்துக்களையும் விளக்கங்களையும் அறிந்துகொள்ள, என்னுடைய குருநாதர் மிகுந்த கருணையுடன் இங்கே இன்று அனுப்பியிருக்கிருர். 'ஸத்தியகாமர் வந்து ஒரு வருஷமாக மானஸ ஸரோவரில் அமர்ந்து தவம்செய்துகொண்டிருக்கிருர். அவரும் இதே விஷயமாகத்தான் வந்திருக்கிருர். அனேகமாக அவருக்கு இன்று உபதேசம் கிடைக்கலாம். நீயும் அங்கே போனுல் பலன் பெறலாம்' என்று கூறினபடியால் நான் இங்கு வந்தேன் தங்களை நேரில் காணும் பாக்கியம் பெற்றேன். கிருதார்த்தனுனேன்.

ஸத்யகாமர் :— (மகிழ்ச்சியோடு) மகரிஷி கோபதர் 'இன்று உபதேசம் கிடைக்கும்' என்று சொன்னதைக் கேட்டு மிகவும் சந்தோஷம். நான் சென்ற மாரிக்காலத்தில் இவ்விடம் வந்தேன். அடியேனுடைய குருநாதர் இடம் கேட்டபோது இங்கே போய் பகவான் வருணனை உபாஸிக்கும்படி கட்டளையிட்டார். அதை சிரமேற்கொண்டு இங்கு தவமியற்றி வருகிறேன், 'इमं मे वरुण

ஜுஹிஹ்' 'இமம் மே வருண ச்ருதீ ஹவம்' என்ற மந்திரத்தை அனவரதமும் ஜபித்து வருகிறேன். தாங்களும் வந்தது பற்றி மிகவும் மகிழ்ச்சி. என் பக்கத்தில் அமருங்கள். இருவருமாக ஜபிப்போம்.

(இருவரும் பாதபிரக்ஷாளனம், ஆசமனம் செய்துவிட்டு வடக்குநோக்கி இருந்துகொண்டு ஜபிக்கின்றனர். கோபதர் ஆசிரமவாஸியுடன் வந்து பார்த்துவிட்டு ஒரு தேவதாரு மரத்தின் பின்னால் மறைந்து நிற்கிறார். அவர் நிற்பதை இவர்கள் கவனிக்கவில்லை.)

பிரம்மதத்தர் :— நண்பரே, இதோ பார்த்தீரா! தவளைகள் அங்குமிங்குமாகத் தாவித்தாவிக் குதிக்கின்றன. சாதாரணமாக ஒரு ஜந்து ஒரு இடத்தை விடவேண்டுமானால் மற்றொரு இடத்தைப் பற்றிக் கொண்டுதான் விடும். ஆனால் மண்டுகம் அப்படியில்லை.

ஸத்யகாமர் :— ஆமாம். நானும் கவனித்திருக்கிறேன். ஒரு இலையிலிருக்கும் புழு மற்றொரு இலைக்குப் போகவேண்டுமானாலும் மெதுவாக நகர்ந்து, நிமிர்ந்து, நீண்டு புதிய இலையை லேசாகப் பிடித்துக்கொண்ட பிறகுதான் தான் இருந்த பழைய இலையை விடும். ஆனால் தவளைகள் அலட்சியமாகத் தாவிவிடுகின்றன. அதோ பாரும். ஒரு பெரிய மண்டூகம் ஸரோவருக்குள்ளிருந்து வருகிறது. அதைப்பார்த்து பயந்துதான் மற்ற மண்டூகங்கள் தாவுகின்றன.

பிரம்மதத்தர் :—ஆம் தோழரே, அந்த மிகப்பெரிய மண்டுகம் நம்மை நோக்கியே வருகிறது. வரவர பெரிதாகிக்கொண்டே வருகிறது. அதன் கண்களும் கால்களும் பார்ப்பதற்கு எவ்வளவு பயங்கரமாக இருக்கின்றன? தனது பெரிய நாவினால் சிறிய மீன்களையும் ஈக்களையும் மற்றும் ஜந்துக்களையும் உண்டுகொண்டு வருகின்றது.

ஸத்யகாமர் :— வரவரப் பெரிதாகத் தெரிகின்றது. அது தன்னுடைய உருவத்தைப் பெருக்கிக்கொள்வதாலா?

அல்லது கிட்ட நெருங்குவதாலா? ஏதானுலும் நம்முடைய ஜபம் கலைந்துவிட்டது. எழுந்து கவனிப்போம்.

(இருவரும் எழுந்து மண்டுகத்தை உன்னிப் பார்க்கின்றனர்.)

பிரம்மதத்தர்:—என் பிரிய நண்பரே, இது சாதாரணத் தவளையல்ல. அரக்கர்களின் சூழ்ச்சியே. நமது தவத்தை, ஜபயக்ஞத்தை, கெடுப்பதற்காக ஒரு ராட்சஸன்தான் இங்கு வந்துகொண்டிருக்கிறுன் இந்த மண்டுக ரூபத்தில். அதோ பாரும் வாயைப் பிளக்கும் போது எவ்வளவு பயமாக இருக்கின்றது. நாம் முந்திக்கொண்டு அவனை அழித்துவிடவேண்டும். பக்கத்தில் உள்ள தேவதாரு மரத்திலிருந்து கொப்புக்களை ஒடித்து அதனுல் அடித்து ஒழித்துவிடுவோம்.

கோபதர்:—(தனக்குள்) பிரம்மதத்தன் சந்தேகப் பேர்வழிதான், அவசரக்காரனும்கூட. உண்மையில் பகவான் வருணனல்லவா மண்டுக ரூபத்தில் வந்துகொண்டிருக்கிறுர். காரியத்தைக் கெடுக்குமுன் நாம் போகவேண்டும் அருகில். வேண்டாம். ஸத்தியகாமர் என்னசெய்கிறுர் பார்ப்போம்.

ஸத்யகாமர்:—நண்பரே, அவசரப்பட்டு முடிவுக்கு வந்துவிடாதீர்கள். 'ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு' என்பார்கள். 'எந்தப்புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதோ' என்று சொல்வார்கள். அதுபோல் இந்த மண்டுகம் வருண பகவானுகவும் இருக்கலாமே. நிதானத்தை இழக்காமலிருப்போம் பொறுத்திருந்து கவனிப்போம்.

பிரம்மதத்தர்:—நமக்கு உபதேசம் செய்ய வருபவர் இப்படி ஏன் வரவேண்டும்? திவ்யமான ரூபத்துடன் மகர வாகனத்தில் அல்லவா எழுந்தருளவேண்டும். எனக்கு சந்தேகம் ஒன்றுமில்லை. இது ராக்ஷஸன்தான் திமிங்கிலம்போல் பெரிதாகிக்கொண்டுவரும் தவளையைப் பார்த்தாலே பயமாக இருக்கின்றது. பகவான் குருநாதர்

தான் காப்பாற்றவேண்டும். நீர் வராவிட்டால் நின்று கொண்டிரும். நான் போய் தேவதாருக் கொப்புகளை ஒடித்துக்கொண்டு வருகிறேன்.

(மண்டுகம் வாய் பிளந்து நாவை நீட்டி கண்களை சுழற்றி பயங்கரமாக ஒலி எழுப்புகின்றது. பிரம்மதத்தர் கீழே விழப் போகிறார். ஸத்யகாமர் தாங்கிக்கொள்ளுகின்றார்.)

ஸத்யகாமர் :— அச்சம் வேண்டாம். நண்பரே! ஸந்தேஹப்பட்டவன் நாசமடைவான். ஸம்சயத்தை விட்டுவிடும். திரும்பவும் ஆசமனம் செய்துகொண்டு ஜபத்தைத் தொடருவோம். வரும் மண்டுகம் வருணனாக இருந்தால் கருணையுடன் அருகில் வந்து உபதேசிப்பார். ஒருஸமயம் நீ கருதியது உண்மையாக இருந்தால் அப்போதும் பகவான் வருணனைச் சரணாகதியடைந்து ஜபித்துக்கொண்டிருக்கும் நம்மைக் காப்பதும் அவர் கடமையாகும்.

பிரம்மதத்தர் :— தோழரே! உமது பிரியப்படியே செய்வோம்.

(இருவரும் கால்களையும் கைகளையும் முகத்தையும் கழுவிக்கொண்டு ஆசமனம் செய்துவிட்டு ஜபம்செய்கிறார்கள்.)

கோபதர் :— (தனக்குள்) ஸபாஷ். ஸத்யகாமர் மிகவும் கெட்டிக்காரர். எல்லாம் நல்லபடியாகச் செய்துவிட்டார். இனி வருணர் பிரத்யக்ஷமாக வரவேண்டியதுதானே. நாமும் ஜபிப்போம்.

(அவரும் ஆச்ரமவாஸியும் தேவ்தாரு மரத்தின் அடியில் அமர்ந்து ஜபிக்கின்றனர்.)

(அப்போது கோடிஸூர்யப் பிரகாசம்போல் மானஸ ஸரோவரில் ஒரு ஒளி உண்டாகிறது. பெரிய மண்டுகம் தன் உருவை மாற்றிக்கொண்டு மகர வாஹனத்தில் வருண பகவானாக விளங்குகிறது. எல்லோரும் இந்த அற்புதத்தைக் கண்டு ஆனந்தமடைந்து வணங்குகின்றார்கள். கோபதரும் மரத்தின் பின்னாலிருந்து அங்கு வருகிறார்.)

கோபதர் :— வருணபகவானே, வருக வருக உமது வரவு நல்வரவாகுக. திருவாய் மலர்ந்து சீடர்களுக்கு திவ்விய உபதேசம் செய்தருளவேண்டுகிறேன்.

ஸத்யகாமர் :— வருண தேவரே! நமஸ்காரம். மிகுந்த வினயத்துடன் வணங்குகிறேன். அடியேனது பிரார்த்தனைக்கு செவி சாய்த்தருள வேண்டுகிறேன். எங்களுடைய சந்தேகத்தை நீக்கவேண்டும். கிருபை செய்யவேண்டும். எங்களுக்கு உபதேசம் செய்து கிருதார்த்தர்களாகச் செய்யவேண்டும். தாங்கள் எங்களுடைய அபராதங்களை க்ஷமித்து அனுக்ரஹம் செய்யவேண்டும். தங்களுடைய அபரிமிதமான கருணைக்குப் பாத்திரர்களாகச் செய்யவேண்டும். ஸ்வாமீ! தங்களுக்குத் திரும்பத்திரும்ப நமஸ்காரம்.

பிரம்மதத்தர் :— தேவதேவரே, ஜகத்ரக்ஷகரே, நமஸ்காரம். எங்கள் அபராதங்களை மன்னித்து உபதேசம் செய்யவேண்டுகிறேன். சற்று முன்னல் நான் அறியாத்தனத்தால் புலம்பியதை எல்லாம் பொறுத்துக்கொள்ளவேண்டுகிறேன். பாபியான அடியேனைக் காப்பாற்றவேண்டும். பாசஹஸ்தரே, பக்தர்கள் மேல் பாசமுள்ளவரே, எங்களைக் காப்பாற்றும். தங்களைத் தவிர வேறு கதி எங்களுக்கு இல்லை. திரும்பவும் வணக்கம் செலுத்தி மன்னிக்கும்படி மன்ருடுகிறேன். ஸ்வாமி! புத்திரனின் அபராதத்தைப் பிதா பொறுத்து ரக்ஷிப்பதுபோல் எங்களைப் பாதுகாத்து அருளவேண்டுகிறேன்.

வருணர் :— வத்ஸர்களே, கவலைப்படவேண்டாம். உங்களுக்கு உபதேசம் செய்ய வந்திருக்கிறேன். மன்னிக்குமபடியாகப் பிழைகள் ஒன்றும் நேர்ந்துவிடவில்லையே. (கோபதரை நோக்கி) நண்பரே, வணக்கம். தியானம், ஸமாதி யோகங்கள் சரிவர நடந்துவருகின்றதா? தங்களுடைய ஆசிரமம் சீடர்களின் வரவுக்காக எப்போதும் திறந்துவைக்கப்பட்டிருக்கிறதா? யாவரும் க்ஷேமமா?

கோபதர் :— பிரியமுள்ள நண்பரே, பகவத் கிருபையாலும் தங்களது ஆசியினாலும் எல்லாம் சரியாக நடைபெறுகின்றன. பல திசைகளிலிருந்தும் ஏராளமான சிஷ்யர்கள் வந்தவண்ணமிருக்கின்றனர். தாங்கள் இவர்களுக்குச் செய்யும் உபதேசங்களை நமது ஆசிரமத்தில் வைத்து அனுக்ரஹிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். அங்கே இருக்கும் மற்ற சீடர்களுக்கும் அனுகூலமாயிருக்கும். தயவு பண்ண வேண்டும் அன்பரே.

வருணர் :— அப்படியே செய்வோம். பிரம்மரிஷியான கோபதரின் ஆசிரமத்தில் தங்கி உபதேசம் செய்வதைப் பெறற்கரிய பாக்கியமாகக் கருதுகின்றேன்.

கோபதர் :— ரொம்ப சந்தோஷம். வாருங்கள் எல்லோரும் ஆசிரமம் போவோம். (போகிறார்கள்).

(திரை விழுகிறது)

மூன்றாவது காட்சி

(திரை விலக)

[மஹரிஷி கோபதர் ஆச்ரமம் தென்படுகிறது. வடக்கு நோக்கிப் பகவான் வருணரும், மஹரிஷி கோபதரும் அமர்ந்திருக்கின்றனர். அருகில் ஸத்யகாமரும், பிரஹ்மதத்தரும், மற்றும் சிஷ்யர்களும் உட்கார்ந்திருக்கின்றனர். ஸம்பாஷணை தொடர்கின்றது]

வருணர் :— வத்ஸர்களே! இப்போது ஓங்காரத்தைப் பற்றி உங்களுக்கு உபதேசிக்கப்போகிறேன். கவனமாகக் கேளுங்கள். ஏதேனும் ஸந்தேஹமிருந்தால் உடனேயே கேளுங்கள். நிவர்த்திக்கின்றேன். நண்பரே! தாங்களும் செவிசாய்த்து ஏற்படும் பிழைகளைத் திருத்த வேண்டுகின்றேன்.

ओमित्येतदक्षरमिदꣳसर्वं तस्योपव्याख्यानं भूतं भवद्भविष्य-
दिति सर्वमोंकार एव । यच्चान्यत् त्रिकालातीतं तदप्योंकार एव ॥

ஓமித்யேததக்ஷரமிதகும் ஸர்வம் தஸ்யோபவ்யாக் யானம் பூதம் பவத் பவிஷ்யதிதி ஸர்வமோங்கார ஏவ யச்சாந்யத் த்ரிகாலாதீதம் ததப்யோங்கார ஏவ ||

இனி, பொருள் கூறுகின்றேன். 'ஓம்' என்ற இந்த அக்ஷரமே இது எல்லாம். அதன் விளக்கமாவது: சென்றது, நிகழ்வது, வரப்போவது என்ற எல்லாம் ஓங்காரமே. எது முக்காலத்திற்கும் அப்பாலுள்ளதோ, அதுவும் ஓங்காரமே.

ஸத்யகாமர் :— ஸத்குருவே இது எல்லாம் என்ருல் என்ன ? விளக்கம் விபரமாகக்கூற வேண்டுகிறேன்.

வருணர் :— இது எல்லாம் என்ருல் காணப்படுகிற பதார்த்தங்கள் எல்லாம் என்று பொருள் நம்மால் அறியப்படுகிற பதார்த்தங்கள் எல்லாம் ஓம் என்ற இந்த எழுத்தே ஆகும். அதாவது பிரணவத்தில் அடங்கிவிடுகிறது.

பிரம்மதத்தர் :— ஸ்வாமீ ! ஒரு பொருள் எழுத்தில் அடங்குவது என்ருல் புரியவில்லை விபரமாகச் சொல்ல வேண்டும்.

வருணர் :— இந்த பிரபஞ்ச சிருஷ்டியே பிரம்மத்தின் துடிப்பு ஆகும். பிரணவம் பிரம்மத்துக்கு பிரதீகமாகக் கூறப்படுகிறது. ஓம் என்ற நாதம் பிரம்மசரீரம் அதற்குள்ளிருக்கிற ஜ்யோதிஸ் பிரம்மம், ஓம் என்ற எழுத்திலிருந்து உலகத்தில் எல்லா சப்தங்களும் உண்டாயின. அந்த சப்தங்களால் எல்லாப் பதார்த்தங்களும் பெயரிடப்படுகின்றன. ஆகவே எல்லாப் பொருள்களும் பிரணவத்தில் நின்று உண்டான சப்தங்களால் பெயரிடப்பட்டிருப்பதால், பிரணவத்தில் அடக்கம் என்று வேதம் கூறுகின்றது.

கோபதர் :— ஆம், அற்புதமான விவரணம். ஓம் ஆகிற சப்தங்கள் வாசகங்கள். இந்த வாசகங்களால் குறிப்பிடப்படும் பொருள்கள் வாச்யங்கள் வாசகமும்

அதாவது சப்தமும் வாச்யமும் அதாவது பதார்த்தமும் பிரிக்கப்படாத ஒன்று என்று அறியவேண்டும்.

வருணர் :— நண்பர் கூறிய வியாக்யானத்துக்கு நன்றி. இதோ 'கமண்டலம்' இருக்கிறது. க. ம. ண். ட. ல. ம் என்ற எழுத்துக்கள் கூடி கமண்டலம் என்ற வாசகமாகி இந்த கமண்டலம் என்ற பொருளை உணர்த்துகிறது. இந்த கமண்டலம் என்ற பதார்த்தத் திடமிருந்து க. ம. ண். ட. ல. ம். என்ற எழுத்துக்களைப் பிரிக்க முடியாதல்லவா. ஆகவே சப்தமும் பதார்த்தமும் அபின்னம் ஆதலால் எல்லாம் 'ஓம்' என்று சொல்லப் பட்டது. இது முக்காலத்துக்கும் பொருந்தும். ச்ருதி மேலும் கூறுகிறது. கடந்தது அதாவது உண்டானது, இப்போது நிகழ்வது அதாவது இருப்பது. உண்டாகப்போவது அதாவது வருங்காலம் எல்லாம் ஓம்காரமே. தவிரவும் இந்த மூன்று காலத்தையும் தாண்டியிருப்பது எது உண்டோ அதுவும் ஓங்காரம் தான்.

ஸத்யகாமர் :— முக்காலத்துக்கும் அப்பாலுள்ளது எது?

வருணர் :— மூன்று காலத்தையும் தாண்டியிருப்பது அவ்யக்தமாயிருக்கும் பிரக்ருதியாகும்- இது காலம் முதலான எல்லாவற்றிற்கும் காரணமாயுள்ளது. அதுவும் ஓங்காரம்தான் என்று ச்ருதி கூறுகின்றது.

ஸத்யகாமர் :— காணப்படுகிற, அறியப்படுகிற பதார்த்தங்களெல்லாம் ஓங்காரத்திலிருந்து உண்டான சப்தங்களின் பொருளாக உள்ளபடியால் ஓங்காரம்தான் என்று கூறினீர்கள். இதனுல் எல்லாப்பொருள்களையும் அறிவதற்கு ஓங்காரம் உபாயமாகிறது இவ்வளவு தானே! இது ப்ரஹ்மத்தையறிய எவ்வாறு உபயோகப் படுகிறது?

வருணர் :— இதைப்பற்றி விளக்கமாகக் கூறுகிறேன். ஸர்வப் பிரபஞ்சமும் ஓங்காரம். ஓங்காரமே ஸர்வப்பிரபஞ்சம், வாசகமான பிரணவமும் வாச்ய

மான பிரபஞ்சமும் ஒன்றுதான். ஓங்காரமாத்ரமாகக் கூறப்பட்ட பிரபஞ்சம் என்பது பிரஹ்மமே. ஸர்வப் பிரபஞ்சத்தையும் ஓங்காரத்தில் அடக்கி அதையே பிடித்துக்கொண்டு அதையும் தாண்டிவிட்டால் ஏக மான ப்ரஹ்மத்தை ஸுலபமாக அறிந்துவிடலாம். இந்த ப்ரஹ்மம் நமக்குப் பரோக்ஷமாக எங்கேயோ இருக்கிறதென்று எண்ணவேண்டாம். அந்த ப்ரஹ்மம் தான் நம் சரீரத்தில் ப்ரத்யகாத்ம ஸ்வரூபமாக எப் பொழுதும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. அப்பேர்ப் பட்ட இந்த ஆத்மாவுக்கு நான்கு பாதங்கள் உண்டு.

सर्वं ह्येतत् ब्रह्म अयमात्मा ब्रह्म सोऽयमात्मा चतुष्पात् ॥

ஸர்வம் ஹ்யேதத் ப்ரஹ்ம அயமாத்மா ப்ரஹ்ம ஸோऽயமாத்மா சதுஷ்பாத் ॥

பிரம்மதத்தர் :—ஸத்குருவே, எல்லாம் அபேதம் என்று கூறிவிட்டு ஆத்மாவுக்கு நான்கு பாதங்கள் இருக் கின்றன என்று சொல்வதின் அர்த்தம் விளங்க வில்லையே.

வருணர் :—இந்த ஆத்மா அதாவது இந்த ஜீவனும் பிரம்மம். இந்த ஜீவன் நான்கு நிலைகளிலிருக்கின்றது. நான்கு நிலைகளைப்பற்றியும் ச்ருதி விவரமாக கூறுவதைக் கேட்போம். பிறகு ஸந்தேஹங்கள் இருந்தால் நிவர்த்திக்கிறேன்.

கோபதர் :— குழந்தைகளே, நான்கு பாதங்கள் என்றுல் பசுவிற்கு இருப்பதுபோல் நான்கு கால்கள் இருப்பதாக எண்ணவேண்டாம். கார்ஷாபணம் என்ற நாணயத்திற்கு நான்கு அம்சங்கள், பாகங்கள் இருப்பது போல் இங்கும் கொள்ள வேண்டும். நண்பரே, தொடர்ந்து உபதேசியுங்கள்.

வருணர்:— जागरितस्थानो बहिःप्रज्ञः सप्ताङ्ग एकोनविंशति-

मुखः स्थूलभुग्वैश्वानरः प्रथमः पादः ॥

ஜாகரிதஸ்தானோ பஹி: ப்ரக்ஞ: ஸப்தாங்க ஏகோநவிம்சதிமுக: ஸ்தூலபுக் வைச்வாநர: ப்ரதம: பாத: ॥

முதல் பாதம் ஸ்தூலத்தை அனுபவிக்கும் வைசுவானரன். அவனுக்கு ஏழு அங்கங்கள் பத்தொன்பது முகங்கள். வெளிப்பிரஞ்ஞை, இருப்பிடம் ஜாக்கிரம். இனி விளக்கமாக உரைகூறுகிறேன். நான்கு நிலைகளில் முதல் நிலை இதுவாகும் ஜாக்ரத் தசையில் இருக்கிறான். தன்னாத்மாவுக்கு வேறாக வெளியில் இருக்கிற விஷயங்களில் நாட்டமுடையவன். தலை, கண், பிராணன், உடல், மூத்ரஸ்தானம், பாதம், முகம் என்ற ஏழு அங்கங்களை உடையவன். தவிர ஞானேந் திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, பிராணன் ஐந்து, அந்தக்கரணம் நான்கு ஆக பத்தொன்பது முகங்களை உடையவன். இவற்றின் வழியாக உலகை உண்டனுபவிப்பதால் முகங்கள் எனப்பட்டன. வைசுவானரன் என்ற பெயரை உடையவன்.

ஸத்யகாமர் :— ஸ்வாமீ! வைச்வாநரன் என்னும் பதத்திற்கு விசேஷப் பொருள் உண்டாயின் கூற வேண்டும்.

வருணர் :— ஸ்தூல ஸமஷ்டியான விராட் புருஷன் எல்லா நரரூபமாகவும் இருப்பதால் வைச்வாநரன். அல்லது எல்லா நரர்களுக்கும் அவரவர்களின் கர்மாவையனுஸரித்து ஸுகதுக்கரூபமான கர்மபலனைக் கொடுப்பதாலும் வைச்வாநரன் என்று பெயர். இனி இரண்டாவது பாதத்தைப் பார்ப்போம்.

स्वप्नस्थानोऽन्तःप्रज्ञः सप्ताङ्ग एकोनविंशतिमुखः प्रविविक्तभुक् तैजसो द्वितीयः पादः ॥

ஸ்வப்நஸ்தானோऽந்த: ப்ரக்ஞ: ஸப்தாங்க ஏகோநவிம்சதிமுக: ப்ரவிவிக்தபுக் தைஜஸோ த்விதீய: பாத: ॥

இரண்டாம் பங்கு இருப்பிடம் ஸ்வப்னம். பெயர் தைஜஸன். உள் அறிவுள்ளவன். அதாவது வெளிப்

பிரக்ஞை இல்லாதவன். ஏழு அங்கங்களும் பத்தொன்பது முகங்களும் உடையவன் ஸூக்ஷ்ம வாஸனைகளை அனுபவிப்பவன்.

பிரமமதத்தர் :— தைஜஸனுக்கும் வைச்வாநரனுக்கும் அதிகம் வித்யாஸமில்லைபோலிருக்கிறதே ?

கோபதர் :— ஸாம்யங்களும் இருக்கின்றன. சில வித்தியாஸங்களும் இருக்கின்றன. இரண்டு பேருக்கும் அங்கங்கள் ஏழு, முகங்கள் பத்தொன்பது மற்றபடி எல்லாம் மாறுபட்டவைதான். வைசுவானரன் நினைவு நிலையில் இருந்து வெளியுலகைத் துய்க்க, தைஜஸன், கனவில் ஸூக்ஷ்ம உலகை அனுபவிக்கிருன். ஜாக்ரத்தில் எல்லா புலன்களின் வழியாகவும் அனுபவிக்க, சொப்பனத்தில் மனதினுலேயே அனுபவிக்கிருன்.

வருணர் :— இனி மூன்ருவது பாதத்தைப்பற்றி வேதம் சொல்வதைப் பார்ப்போம்.

यत्र सुप्तो न कञ्चन कामं कामयते न कञ्चन स्वप्नं पश्यति तत् सुषुप्तम् । सुषुप्तस्थान एकीभूतः प्रज्ञानघन एवानन्दमयो ह्यानन्दभुक् चेतोमुखः प्राज्ञस्तृतीयः पादः ॥

யத்ர ஸுப்தோ ந கஞ்சந காமம் காமயதே, ந கஞ்சந ஸ்வப்நம் பச்யதி தத் ஸுஷுப்தம் । ஸுஷுப்த ஸ்தாந ஏகீபூத: ப்ரக்ஞாநகந ஏவாநந்தமயோ ஹ்யாநந்தபுக் சேதோமுக: ப்ராக்ஞஸ்த்ருதீய: பாத: ॥

மூன்ரும் பாதம் ஆனந்தத்தையனுபவிக்கும் பிராஜ்ஞன்: சித்தம் முகம். ஒருவனுய் நிற்பவன். பிரஜ்ஞையே வடிவானவன். ஆனந்தமயன் இருப்பிடம் ஸுஷுப்தி தூங்குவோன். எந்நிலையில் விருப்பம் எதையும் விரும்புவதில்லையோ, கனவு எதையும் காண்பதில்லையோ அதுதான் ஸுஷுப்தி.

ஸத்யகாமர் :—ஸத்குருவே, நன்ருக விளங்கவில்லை. விரிவாக எடுத்துரைக்க வேண்டுகிறேன்.

கோபதர் :—குழந்தைகளே, நான் கூறுகின்றேன். கேளுங்கள். எந்தக்காலத்தில் ஒன்றையும் விரும்பாமலும், கனவு ஒன்றும் காணுமலும் அயர்ந்து உறங்குகிருனே அதுதான் ஸுஷுப்தி என்ற தசை. இது மூன்ருவது நிலையாகும். இவனுக்கு பிராஜ்ஞன் என்று பெயர். ஆனந்தமயன். ஆனந்தத்தைப் புஜிக்கிருன். சித்தத்தை முகமாகக்கொண்டவன். ஒன்ருய்ச்சேர்ந்து போனவன்.

ஸத்யகாமர் :— நன்ருய் உறங்கும் ஸமயம் காமனைகளும் கனவுகளும் இல்லையென்று தெரிந்துகொண்டேன். ஒன்ருய்ச் சேர்ந்துபோனவன், ஆனந்தமயன், சித்தத்தை முகமாகக்கொண்டவன் என்பவைகளுக்கும் விளக்கம் கூறவேண்டும்.

கோபதர் :— பகலில் காணப்படும் பொருள்கள், இரவு வந்தபோது இருளில் பிரித்தறியப்படாமல் ஒன்ருய் முழுகிப்போகிறது. ஆனுல் அவைகள் தங்கள் குணவிசேஷங்களை இழப்பதில்லை. உதாரணமாக நம் முன்னுல் பகல் வெளிச்சத்தில் தெரியும் கமண்டலம், தர்ப்பாஸனம், பலகை, பஞ்சபாத்ரம், பானபாத்ரம், செம்பு முதலிய பொருள்கள் இருட்டில் பிரித்து அறிய முடியாமல் ஒன்ருக ஆகிவிடுகின்றன. மறுபடியும் வெளிச்சம் வந்தவுடன் தனித்தனியாகத் தங்கள் குணவிசேஷத்துடன் தெரிகின்றன. அதுபோல ஜாகரத்திலும் ஸ்வப்னத்திலும் உள்ள வ்யவஹாரங்கள் ஸுஷுப்தியில் ஒன்ருய்விடுகின்றன. ஆனந்தம் என்ருல் துக்கமில்லாதவன் என்று அர்த்தம். காமனை இல்லாததால் துக்கமில்லை. துக்கமில்லையென்ருல் ஆனந்தம்தானே. ஆகவே ஆனந்தத்தையனுபவிக்கிருன். ஆகையால்தான் உறங்கி எழுந்ததும் ஆனந்தமாகத் தூங்கினேன் என்று கூறுகிருன். இதைத்தான் ச்ருதி ஆனந்தத்தைப் புஜிக்கிருன் என்று சொல்கிறது.

ஸத்யகாமர் :— பிரக்ஞையே வடிவானவன், சேதோமுகன் என்ருல் என்ன பொருள்?

கோபதர் :— சேதஸ் என்னும் சொல் ஸ்வப்ன ஜாகராவஸ்தைகளைக் குறிக்கும். அவைகளை குறித்து முகமாக த்வாரமாக இருப்பது ஸுஷுப்தம். ஜாக்ரத் ஸ்வப்னுவஸ்தைகளுக்கு ஸுஷுப்திதான் காரணம். ஸுஷுப்தி என்ற காரணுவஸ்தை இல்லாவிட்டால் ஜாக்ரத் ஸ்வப்னம் என்ற கார்யாவஸ்தைகளுமில்லை. அல்லது ஸுஷுப்தி நிலையிலிருந்து ஸ்வப்னத்திற்கும் அதன் மூலம் ஜாகரத்திற்கும் செல்வதற்கு சேதஸ்-சைதன்யம் தான் த்வாரம். இந்த ஸ்வரூப சைதன்யமாக இருப்பவன் நனவிலும் கனவிலும் அடைந்த அனுபவங்கள் எல்லாம் உறக்கத்தில் ஒன்றுய்விட, பிரக்ஞையாக மாத்திரம் கலப்பின்றி நிற்பவன். எல்லாக் கற்பனைகளுக்கும் ஆதாரமான பிரக்ஞை (ஞானம்) இருக்கிறது. தூக்கததில் ஞானமேயில்லை என்று சொல்லக்கூடாது. ஸுஷுப்தியில பிரகாசத்துடன் அக்ஞான விருத்தியும் சேர்ந்திருக்கிறது. இருட்டு வீட்டில் சிறு விளக்குள்ள சிறு இடம் பிரகாசிப்பது போன்றது அந்த பிரகாசம். அங்கே அஹங்காரம் மட்டும் மின்மினிப்பூச்சியைப் போல் ஒளியிடுகின்றது. மற்றென்றும் விளங்கவில்லை. ஆகையால் ச்ருதி ப்ரக்ஞையே வடிவானவன் என்று சொல்லிற்று.

வருணர் :—மேலும் ச்ருதி கூறுவதைக் கேட்போம்:

एष सर्वेश्वर एष सर्वज्ञ एषोऽन्तर्याम्येष योनिः सर्वस्य प्रभवाप्ययौ हि भूतानाम् ॥

ஏஷ ஸர்வேச்வர ஏஷ ஸர்வக்ஞ ஏஷோऽந்தர்யாம்யேஷ யோநி: ஸர்வஸ்ய ப்ரபவாப்யயௌ ஹி பூதாநாம் ॥

இவனே எல்லாவற்றையும் ஆளும் ஈசுவரன். இவனே எல்லாவற்றையும் அறிந்தவன். இவனே உயிரனைத்தையும் உள்ளிருந்து நடத்துபவன். இவனே அனைத்துக்கும் பிறப்பிடமும் உண்டானவற்றின் தோற்றமும் ஒடுக்கமுமாவான்.

கோபதர் :— மூன்ருவது அவஸ்தையிலுள்ள ப்ராக்ஞனைப்பற்றி ச்ருதி மேலும் கூறுகிறது. எல்லாவற்றிற்கும் காரணபூதமாயும், சிருஷ்டி, ஸ்திதி நாசம் முதலிய காரியங்களைச் செய்யும் ஈசுவரனுகவும், அந்தர்யாமியாகவும், எல்லாம் அறிந்தவனுகவும் பிராக்ஞனே விளங்குகிருன். எப்படி ஈசுவரனிடமிருந்து ஜகத் உற்பத்தியாகி, அவனிடமே நிலைபெற்று அவனிடத்திலேயே லய மடைகிறதோ அதுபோல, ஜாக்ரத்ஸ்வப்ன விவகாரங்களும் ஸுஷுப்தியிலிருந்தே தோன்றிப்பின் அதிலேயே லயமடைகின்றன.

வருணர் :—மூன்று நிலைகளைப்பற்றி இதுவரையிலும் இயம்பப்பட்டது. நான்காவது நிலையைப்பற்றி நாளை பாடம் சொல்லலாம். குழந்தைகளே, இன்று கேட்டதை நன்ருகச் சிந்தித்து உங்களுக்குள்ளேயே விசாரம்செய்து சந்தேகம் உள்ளதை நாளை கேளுங்கள். சரிதானே நண்பரே !

கோபதர் :—ரொம்ப சரி, மாத்யாஹ்னிககாலம் நெருங்கிவிட்டது. நதிக்குப் போவோம்.

(எழுந்திருக்கின்ருர்கள். திரை விழுகிறது)

நான்காவது காட்சி

(திரை விலக)

[முன் காட்சிபோல் எல்லோரும் அமர்ந்து உரையாடல் நடக்கிறது.]

வருணர்:- வத்ஸர்களே , நேற்று பாடம்கேட்டதைப் பற்றி நன்ருக மனனம் பண்ணினீர்களா ?

ஸத்யகாமர் :-ஸத்குருவே ! நன்ருகச் சிந்தித்தோம். பரஸ்பரம் விவாதிக்கவும் செய்தோம். ஒருவாறு உண்மையைப் புரிந்துகொண்டோம்.

கோபதர் :— தெரிந்துகொண்டதைச் சுருக்கமாகக் கூறுவாயாக.

ஸத்யகாமர் :— மனதிற்குள் எல்லாம் தெளிவாகத் தான் தெரிகின்றது. ஆனுல் அதை எப்படி விவரிப்பது? அதுதான் விளங்கவில்லை.

பிரம்மதத்தர் :— ஸ்வாமீ! எல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெரிகின்றது. ஆனுல் திரும்பச் சொல்லத் தெரியவில்லை தாங்கள்தான் தயவுசெய்து சுருக்கத்தையும் அருளிச்செய்யவேண்டும்.

கோபதர் :— குழந்தைகளே! கவலை வேண்டாம். நானே சுருக்கமாகச் சொல்லி விளங்க வைக்கிறேன். கவனமாகக் கேளுங்கள். எல்லாம் பிரம்மம். வாசகமும் வாச்யமும் பிரம்மம். ஒன்றிற்கு ஒன்று பேதமில்லை இந்த ஆத்மா அதாவது ஜீவனும் பிரம்மம் 'அயம் ஆத்மா பிரம்ம' என்னும் மந்திரம் அதர்வ வேதத்தின் சிரசு மகா வாக்யங்களில் ஒன்று. இந்த ஆத்மா, வைசுவானரன், தைஜஸன், பிராக்ஞன் என்ற வெவ்வேறு பெயருடன் விளங்குகிறது. வைசுவானரன் வெளி பிரக்ஞையுடையவன். முக்கியமாக வலது கண்ணில் இருக்கிறுன். இருப்பிடம் விழிப்பு நிலை. ஸ்தூலமான போகங்களை அனுபவிக்கிறுன். அவைகளால் திருப்தி அடைகிறுன். இதுதான் முதல் நிலை. இரண்டாவது நிலை கனவு தைஜஸன் உள்பிரக்ஞையுடையவன் மனத்தினுள் இருக்கிறுன். வாஸனு மயமான ஸூக்ஷ்ம போகங்களை அனுபவிக்கிறுன். அவைகளால் திருப்தி அடைகிறுன். இனி மூன்ருவது உறக்கம். இங்கே பிராக்ஞன் பிரக்ஞையே வடிவாக இருதய ஆகாசத்தில் இருக்கிறுன். பிராக்ஞன் ஒன்றையும் விரும்பவில்லை. ஆனந்தத்தை அனுபவிக்கிறுன். ஆனந்தத்தால் மட்டுமே திருப்தி அடைகின்றுன். வெவ்வேறு பெயருடனும், அனுபவங்களுடனும், வடிவுகளுடனும் இருந்தாலும் இவனே ஆத்மா. இவனே பிரம்மம். இந்த மூன்று நிலைகளையும் கடந்தது நான்காவதாக இருப்பது துரீயம் என்னும் ஸ்தானம். அதை அடைய ஸாதகமாய் உள்ளது ஓங்காரத்தின் உபாஸனை.

ஸத்யகாமர் :— ஸத்குருவே! நன்றாக விளங்கி விட்டது. இனி நான்காவது பாதத்தைப்பற்றிக் கூற வேண்டுகிறேன்.

பிரர்மதத்தர் :— நான்காவது நிலையைப்பற்றி அறிய ஆவலுடன் இருக்கிறோம். க்ருபை பண்ணவேண்டும் ஸ்வாமீ!

கோபதர் :— நண்பரே! உபதேசம் செய்யலாமே. சீடர்கள் கவனத்துடன் கேட்க இருக்கிறார்கள்.

வருணர் :— அப்படியே உபதேசிக்கிறேன்.

नान्तःप्रज्ञं न बहिःप्रज्ञं नोभयतःप्रज्ञं न प्रज्ञानघनं न प्रज्ञं नाप्रज्ञम् । अदृष्टमव्यवहार्यमग्राह्यमलक्षणमचिन्त्यमव्यपदेश्यमेकात्मप्रत्ययसारम् प्रपञ्चोपशमं शान्तं शिवमद्वैतं चतुर्थं मन्यन्ते स आत्मा स विज्ञेयः ॥

நாந்த: ப்ரக்ஞம் ந பஹி: ப்ரக்ஞம் நோபயத: ப்ரக்ஞம் ந ப்ரக்ஞாநகநம் ந ப்ரக்ஞம் நாப்ரக்ஞம் ! அத்ருஷ்டம் அவ்யவஹார்யம் அக்ராஹ்யம் அலக்ஷணம் அசிந்த்யம் அவ்யபதேச்யம் ஏகாத்ம ப்ரத்யயஸாரம் ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே ஸ ஆத்மா ஸ விக்ஞேய: ॥

நாலாவது பாதமாய்க் கருதப்படுபவன் உள் பிரக்ஞை இல்லாதவன்; வெளிப்பிரக்ஞை இல்லாதவன். இரண்டிற்குமிடையேயுள்ள பிரக்ஞை இல்லாதவன் பிரக்ஞையே வடிவானவனல்லன். அறிகிறவனுமல்லன். அசேதனனுமல்லன். காணமுடியாதவன். விவரிக்க முடியாதவன். கிரஹிக்கமுடியாதவன். லக்ஷணமொன்றுமில்லாதவன். நினைக்கமுடியாதவன். குறிப்பிட முடியாதவன். ஒன்றே ஆத்மா என்ற அறிவை அனுஸரித்து அறியத்தக்கவன். பிரபஞ்சமற்றவன். சாந்தன், சிவன். இரண்டற்றவன். அவனையே நான்காவதாக - துரீயமாகக் கருதுகின்றனர். அவனே ஆத்மா. அவனே அறியத்தகுந்தவன். இவ்வளவு உபதேசங்களும் அவனை அறிவதற்கே.

ஸத்யகாமர் :— பரமகுருவே, ஒன்றும் புரியவில்லையே.

பிரம்மதத்தர் :— எல்லாம் ஒரே குழப்பமாய்ப்போய் விட்டது. வாசாரம்பணமாகத்தான் தெரிகின்றது. விவரமாகப் பொருளுரைத்து அனுக்ரஹிக்கவேண்டும் ஸ்வாமீ !

கோபதர் :— துரீயஸ்தானம் எண்ணிக்கைக்கு விஷயமன்று. ஆயினும் மற்ற மூன்று நிலைகளைவிட வேருனதென்று காண்பிக்கவே நான்காவது என்று சொல்லப் பட்டது. ஓர் உதாஹரணம் கூறுகிறேன். உங்களுக்கு எளிதில் விளங்கிவிடும். மந்திரவாதி காட்டும் ஜால வித்தைகளைப் பார்த்திருப்பீர்களே ?

பிரம்மதத்தர் :— ஆம். பார்த்திருக்கிறேன். மிதிலா நகரத்துக்குப் போயிருந்தபோது அங்கே ராஜவீதியில் நடந்த வித்தைகளைப் பார்த்தேன்.

ஸத்யகாமர் :— நானும் பார்த்திருக்கிறேன். கும்ப மேளாவிற்கு ஒருஸமயம் என் தந்தையுடன் போயிருந்தேன். அங்கே பார்த்தேன்.

கோபதர் :— மந்திரவாதி வருகிருன். ஒரு கயிற்றை ஆகாசத்தில் வீசுகிருன். பல ஆயுதங்களை எடுத்துக் கொண்டு அதன்மேல் ஏறிச்செல்கிருன். பிறகு அந்த ஆயுதங்களால் வெட்டப்பட்டு பல துண்டுகளாகக் கீழே விழுவதைப் பார்க்கிருேம். கடைசியில் அவன் ஒரு காயமுமின்றி ஸுந்தரமாக எழுந்து வருகின்ருன். இது எல்லாம் மாயை மந்திரஜாலம் என்று நாம் முடிவுகட்டுகிருேம். மந்திரவாதி சும்மா நின்றுகொண்டு தான் இருக்கிருன், அவன் கயிற்றை ஆகாயத்தில் வீசுவது முதல், வெட்டப்படுவது,, கீழே பல துண்டங்களாக விழுவது, பின் எழுவது எல்லாம் செப்படி வித்தை. கண்கட்டு வித்தை. அதுபோல்தான் ஜாகரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்னும் இந்த அவஸ்தைகளும். நான்காவது ஸ்தானமே பரமார்த்த தத்வமாகும். ஜாகரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்னும் மூன்று நிலைகளும் நமக்குத் தெரிகிறது,

நான்காவது நிலை இவைகளிலிருந்தும் வேறுபட்டது. அது தெரியவில்லை. அதைக் காட்டுவதற்காகத்தான் 'நான்காவது' என்று உபநிஷத் கூறுகிறது. வ்யவஹாரத்திற்காகத்தான் 'துரீயம்' என்று பெயர். உண்மையில் மூன்று நிலைகளும் பொய்யானபடியால் 'துரீயம்' என்று கூறுவதும் ஸரியில்லைதான்.

ஸத்யகாமர் :—ஒருவாறு புரிந்துகொண்டேன். ஆயினும் நன்ருகத்தெரிந்துகொள்ள ஒவ்வொரு பதமாக விவரணம் கூறும்படி பணிவுடன் அபேக்ஷிக்கிறேன். தயவு செய்யவேண்டும் ஸத்குருவே !

வருணர் :—வத்ஸர்களே, அங்ஙனமே கூறுகின்றேன் नान्तःप्रज्ञ என்பதால் துரீயன் ஸ்வப்னஸ்தானனுன தைஜஸன் அல்ல என்று ச்ருதி கூறுகிறது न बहिःप्रज्ञ என்பதால் ஜாக்ரத்ஸ்தானனை விசுவனல்ல என்கிறது. न उभयतःप्रज्ञ என்பதால் ஜாகரம், ஸ்வப்னம் என்ற நிலைகளுக்கு இடையிலுள்ள நிலையும் நிஷேதிக்கப்படுகின்றது துரீயனுக்கு. न प्रज्ञानघन என்பது அவனுக்கு ஸுஷுப்தி அவஸ்தையும் இல்லை என்று கூறுகின்றது. न प्रज्ञ என்பதால் எல்லா விஷயங்களின் அறிவும் இல்லையென்று கூறுகின்றது. नप्रज्ञ என்றவுடன் ஜடம் என்று எண்ணிவிடக்கூடாது என்பதற்காக உடனே नाप्रज्ञ என்றும் கூறுகிறது. அதாவது துரீயன் அசேதனனுமன்று. மேலும் ச்ருதி கூறுவதைக் கவனிப்போம். நம்முடைய இந்திரியங்களாலும் மனதாலும் காணவோ அறியவோ முடியாதல்லவா? ஆகவே ஞானேந்திரியங்களால் காணப்படாதவன். கர்மேந்திரியங்களால் கிரஹிக்க முடியாதவன். அடையாளமில்லாததால் அனுமானிக்க முடியாதவன். மனதால் நினைக்க முடியாதவன். சப்தங்களால் சொல்லமுடியாதவன்.

பிரம்மதத்தர் :— இப்படியே அடுக்கிக்கொண்டு போனல் சூன்யத்தில் கொண்டுபோய் விடாதோ?

வருணர் :— குழந்தாய், சூனியமில்லை என்று அறுதியிட்டு ச்ருதி கூறுகின்றது 'ஏகாத்ம ப்ரத்யய ஸாரம்'

என்று. முன்னே விவரிக்கப்பட்ட ஜாக்கிரம் ஸ்வப்னம் ஸுஷுப்தி என்ற மூன்று நிலைகளிலும் ஊடுருவி நிற்பவன் ஒரே ஆத்மா என்ற ஞானத்தால் துரீயனை அறியலாம் பஞ்ச பூதங்களின் விரிவாகிய பிரபஞ்சம் இல்லாதவன்.

கோபதர் :— அந்தःப்ரக்ஞன் முதலியவர்களின் தர்மங்கள் துரீயனுக்கு இல்லை என்று முன்னர் கூறப்பட்டது. அந்த அவஸ்தைகளின் தர்மங்களும் துரீயனுக்கு இல்லை என்பதை ச்ருதி 'பிரபஞ்சோபசமம்' என்ற பதத்தால் கூறுகின்றது.

வருணர் :— ஆகையினால் அவன் சாந்தன். அதாவது விகாரங்கள் இல்லாதவன். ஆகவே அவன் அத்வைதன் அத்வைதன் என்றால் பேதமில்லை. மற்றொன்று இரண்டாவது இல்லை. ஆகவே அவன் சிவன் மங்கள ரூபி. அவனே ஆத்மா. நான்காவதாகச் சொல்லப் படுபவன், அவனையே அறியவேண்டும். இந்த உபதேசங்களும் அதற்காகத்தான்.

ஸத்யகாமர் :— ஸத்குருவே! ஒரு ஸந்தேஹம்.

வருணர் — குழந்தாய்! ஸந்தேஹம் எழுந்ததுபற்றி ஸந்தோஷம். முதலில் ஒன்றுமே விளங்கவில்லை என்றவுடன் துயரப்பட்டேன். இப்போது கொஞ்மாவது தெரிந்துகொண்டதால்தான் ஸந்தேஹம் உண்டாயிருக்கிறது. உடன் கேள். கூறுகின்றேன்:

ஸத்யகாமர் :— ஸ்வாமீ! 'सोऽयमात्मा चतुष्पात्' என்று உபதேசித்தீர்கள் நான்கு பாதங்கள் இருக்கின்றன என்று. மூன்று பாதங்களையும் விவரித்தீர்கள். ஆகவே, அம்மூன்றிற்கும் வேறுபட்ட நிலை நான்காவது பாதம் என்பது ஸித்தமாயிருக்க नान्तःप्रज्ञं என்ற விவரணம் எதற்கு? இப்படித் திரும்பவும் பிரதிஷேதம் வ்யர்த்தம்தானே?

வருணர் :—சித்தம் அழகியவனே, நல்ல ஸாதுவான கேள்வி. கயிறானது வெளிச்சக்குறைவால் பாம்பு, தடி, பூமியில் பிளவு முதலிய பல ரூபமாகத்தோன்றுகிறது.

இந்தப் பல உருவங்கள் கயிற்றைக் காட்டிலும் வேறு அல்ல. கயிறேதான் பல உருவமாகத் தோன்றுகிறது. இங்கு கயிறை கயிருக நாம் எப்படித் தெரிந்துகொள் கிறது? இது பாம்பு அல்ல, தடியல்ல பிளவல்ல என்று தெரிந்துகொள்வதாலேயே கயிற்றின் ஸ்வரூபத்தை அறிந்துகொள்கிருேம். 'எது பாம்பாகத் தோன்றியதோ அது பாம்பு அல்ல கயிறுதான்' என்று. இதுபோல் ஜாகரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்னும் மூன்று நிலை களிலும் விளங்கும் ஒரே ஆத்மாதான் துரீயம் என்ற உண்மையை உபதேசிக்கத்தான் உபநிஷத் விச்வன் இல்லை. தைஜஸன் இல்லை என்றவாறு கூறுகிறது. இந்த நிஷேதங்களாலேயே துரீயதத்வம் நமக்கு விளங்கி விடுகிறது. இப்படிக்கூருமல் விச்வன் முதலியவர்களைக் காட்டிலும் வேருக விலக்ஷணமாக உள்ளது துரீயம் என்றுமட்டில் கூறினுல் ஸ்வப்ரகாசமான அதை அறிய வேறு உபாயம் இல்லாததால் உபநிஷத்தின் உபதேசம் வ்யர்த்தமாகிவிடும்.

மேலும் அதை அறிய முடியாததால் அப்படி ஒரு தத்வமே இல்லையென்று சூன்யவாதத்தில் முடிந்து விடும். மூன்று நிலைகளும் உண்மையல்ல. மூன்று நிலைகளின் நிஷேதமுகமாகத்தான் அவற்றில் விளங்கும் துரீய தத்வத்தை அறிந்துகொள்ளவேண்டும் என்பதற் காகத்தான் ச்ருதி முதலில் ஆத்மாவின் மூன்று நிலை களையும் காட்டிப் பிறகு ஆத்மாவிற்கு மூன்று நிலை களும் கிடையாது என்று கூறுகிறது. எந்த ஆத்மா மூன்று நிலைகளுடன் விளங்குகிறதோ, அதே ஆத்மா மூன்று நிலைகளிலிருந்தும் விலகும்பொழுது துரீயமாகி விடுகிறது. ஆகையால் மூன்று நிலைகளின் தர்மங்களை விலக்குவதுதான் துரீயத்தை அறிவதற்கு உபாயம்.

ஸத்யகாமர் :— ஸத்குருவே, ஸந்தேஹம் நீங்கி விட்டது. தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகிறேன்.

பிரம்மதத்தர்: — ஸ்வாமீ, எனக்கும் ஒரு ஸந்தேஹம்.

வருணர் :— குழந்தாய், அதுவென்ன? கூறுவாய்.

பிரம்மதத்தர் :— ஒன்றுமில்லை வந்து-வந்து

வருணர் :— பயப்படாமல், கேள்.

பிரம்மதத்தர் :— எங்களுக்கு ஒன்றுமே விளங்கவில்லை என்றவுடன் நீங்கள் துயரப்பட்டதாகத் திருவாய் மலர்ந்தருளினீர்கள். எங்களது மடமைக்கு தாங்கள் ஏன் வருந்தவேண்டும்? இதுதான் என்னுடைய சம்சயம்.

வருணர் :— புத்திசாலியான சீடருக்கு உபதேசிப்பது ஒன்றும் பெரிதல்ல. அதற்கு சாமர்த்தியம் பாண்டித்யம் புத்தி கூர்மை ஒன்றும் அதிகமாகத் தேவையில்லை. ஒரு மந்த அதிகாரிக்கு உபதேசிப்பதற்குத்தான் குருவிற்கு மேதா விலாசம் தேவை. ஆனால் நீங்களோ, உத்தம சீடர்கள், பெரிய மஹான்களிடம் பாடம் கேட்டவர்கள். அப்படிப்பட்ட சிறப்புள்ள சிஷ்யர்களுக்கே பாடம் சொல்லி விளங்க வைக்க முடியவில்லை என்றால் எனது பாண்டித்யம் என்னுவது? என்னுடைய அவல நிலையை எண்ணித்தான் நான் துயரப்பட்டேன்.

கோபதர் :— நண்பரே! தங்களுடைய அடக்கமான பேச்சு என்னைப் புளகாங்கிதமடையச் செய்கிறது. தங்களைப்போல் உபதேசிப்பதற்கு யோக்யதையுள்ளவர்கள் ஒருவருமில்லை! 'ந பூதோ ந பவிஷ்யதி' ஆயினும் தாங்கள் கர்வமில்லாமல் விநயத்துடன் இப்படிக் கூறுகின்றீர்கள் நிறைகுடம் தளும்பாது. குறைகுடம் கூத்தாடும். குழந்தாய் ஸத்யகாமா! இன்று நீ தெரிந்துகொண்டதைச் சுருக்கமாகக் கூறுவாய்.

ஸத்யகாமர் :— ஸ்வாமீ! அப்படியே செய்கிறேன். துரீயன், தைஜஸனுமல்ல, வைச்வாநரனுமல்ல. இருவருக்கும் மத்தியிலுள்ள அவஸ்தையுள்ளவனும் அல்ல. பிராக்ஞனுமல்ல. பிரக்ஞையுடையவனுமல்ல. அப்ரக்ஞனுமல்ல. அவன் காணப்படாதவன். விவரிக்கமுடியாதவன். க்ரஹிக்கமுடியாதவன்.

அடையாளமில்லாதவன். நினைக்கப்படமுடியாதவன். குறிப்பிட்டுச் சொல்லப்படக்கூடாதவன். ஒரே ஆத்மா என்ற அறிவால் அறியத்தக்கவன். உலக வ்யவஹாரம் அற்றவன். சாந்தன். மங்களகரன். இரண்டற்றவன். இவன்தான் ஆத்மா. அறியப்படத் தகுந்தவன். குருமார்களே! பிழையிருந்தால் மன்னிக்க வேண்டுகிறேன்.

வருணர் :—வத்ஸா! ரொம்ப ரத்னச் சுருக்கமாகவும், ஆனால் ஒன்றுகூட விட்டுப்போகாமலும் ஒரு பிழையுமில்லாமலும் கூறினாய். ஸபாஷ் உன்னை மெச்சுகிறேன். இத்துடன் இன்றைய பாடம் நிறைவுபெறுகின்றது. மங்களானி பவந்து.

(எல்லோரும் போகிறார்கள். திரை விழுகின்றது)

ஐந்தாவது காட்சி

[திரை விலக. முன் காட்சிபோல் எல்லோரும் அமர்ந்து உபதேசம் நடக்கிறது.]

பிரம்மதத்தர் :— ஸத்குருவே, தூரீயனின் யதார்த்த ஸ்வரூபத்தை நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். அதற்காக வைசுவானரன், தைஜஸன், ப்ராக்ஞன் இவர்களின் தன்மைகளை நிருபணம் செய்யும்படி வேண்டுகிறேன்.

வருணர் :—ஸௌம்யா! நீ கேட்பது மிகவும் ஸாதுவானது. மற்ற மூவர்களின் தன்மைகளை நன்ருக நிருபணம் செய்துவிட்டால் துரீயனது நிலை ஸம்யக்காகப் பிரகாசிக்கும். விவரமாகச் சொல்கிறேன். கவனமாகக் கேளுங்கள். துரீயனைத் தெரிந்துகொண்டால் எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுதலை கிடைக்கிறது. ஏனெனில் அவன் பிரபு, ஆள்பவன். மாறுதல் இல்லாதவன். எல்லா வஸ்துக்களும் பொய்யானபடியால் உண்மைப் பொருள் இவன் ஒருவன்தான். ப்ரகாசமுள்ளவன். எங்கும் வ்யாபித்தவன். வைசுவாநரனும் தைஜஸனும் காரண கார்யங்களால் கட்டப்பட்டவர்கள். ப்ராக்ஞன்

காரணத்தால் மட்டும் கட்டப்பட்டவன். இந்தக்கட்டுக்கள் அதாவது காரியம் காரணம் இரண்டும் துரீயனிடத்தில் இல்லை.

பிரர்மதத்தர் :— ஸ்வாமீ! காரிய காரணங்களாகிற கட்டுக்களைப்பற்றியும் விவரிக்க வேண்டுகிறேன்.

வருணர் :— காரியம் என்பது பலன். காரணம் என்பது பீஜம். அதாவது கனியும் விதையும் எது செய்யப்படுகிறதோ அது கார்யம். அதாவது பலன். எது செய்கிறதோ அது காரணம், பீஜ பாவம். முதலில் உண்மை மறைகிறது. பிறகு அது மாருகக் காக்ஷிபளிக்கிறது. உண்மை தெரிந்துவிட்டால் விபரீத அறிவு ஏற்படாது. உண்மை தெரியாததால்தான் விபரீத ஞானம் ஏற்படுகிறது. ஆகவே உண்மை தெரியாமல் இருப்பது என்ற தத்வாக்ரஹணம் பீஜம், காரணம். அதனுல் ஏற்படும் விபரீத அறிவு என்ற அந்யதாக்ரஹணம் பலம், காரியம். ஜாகராவஸ்தையிலும் ஸ்வப்னுவஸ்தையிலும் உண்மை மறைந்து விபரீத அறிவும் இருப்பதால் விச்வன், தைஜஸன் இருவரும் காரணம் (தத்வாக்ரஹணம்), காரியம் (அந்யதாக்ரஹணம்) இரண்டினுலும் கட்டுப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகிறது. ஸுஷுப்தி நிலையில் உண்மை மறைந்து தெரியாமலிருக்கிறதே தவிற, விபரீத ஞானம் இல்லை. பீஜமான தத்வாக்ரஹணம்தான் இருக்கிறது. பலமான அந்யதாக்ரஹணம் ஸுஷுப்தியில் இல்லை. ஆகையால் ப்ராக்ஞன் காரணத்தால் மட்டும் பத்தன் காரிய பத்தனில்லை. துரீய நிலையில் உண்மை தெரிந்து விடுவதாலும் விபரீத ஞானம் இல்லாததாலும் காரணம் காரியம் இரண்டினுலும் துரீயனுக்கு பந்தமில்லை.

ஸத்யகாமர் :— ஸ்வாமீ! நன்ருக அறிந்துகொண்டோம். தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகிருேம்.

வருணர் :— ப்ராக்ஞன் தன்னேயோ, தனக்கு வேருனதையோ, மெய்யையோ, பொய்யையோ,

எதையும் அறிகிறதில்லை. ஏனெனில் அவன் நித்ராவஸ்தையிலிருக்கிறான். ஆகையால் ஸுஷுப்தியில் தத்வாக்ரஹணம் என்ற காரணம் இருக்கிறது. ஆகவே ப்ராக்ஞன் காரணபத்தன். பலனான விபரீத ஞானம் ஸுஷுப்தியில் இல்லாததால் ப்ராஜ்ஞன் கார்யபத்தன் இல்லை. ஆனால் துரீயன் ஸுஷுப்தியையும் கடந்தவனாதலால் எப்போதும் எல்லாவற்றையும் அறிகிறவனாக இருக்கிறான். எப்போதும் பிரகாசத்துடன் இருக்கும் ஸூர்யனிடத்தில் எப்படி அப்ரகாசமோ (ஒளியின்மை) விபரீதப்ரகாசமோ இராதோ, அதுபோல் எல்லாமாகவும், எப்பொழுதும் ஞானப்ரகாச ரூபமாகவும் இருக்கும் துரீயனிடத்தில் காரணமான தத்வாக்ரஹணம் பலனான அந்யதாக்ரஹணம் இரண்டுமே கிடையாது. துரீயனிடம் கார்யகாரண பந்தம் இல்லை. முதல் இருவரும் அதாவது வைச்வாநரனும், தைஜஸனும் ஒன்றை மற்றொன்றாகக் காணும் ஸ்வப்னம், தத்வ அக்ஞானம் என்ற நித்ரை இவ்விரண்டுடன் கூடியவர்கள் பிராக்ஞன் கனவில்லாத அக்ஞான நித்ரையோடுமட்டும் கூடியவன்: துரீய நிலையில் நித்ரையுமில்லை. கனவும் இல்லை. ஒன்றை மற்றொன்றாகக் கொள்பவன் கனவு காண்கிறான். தத்வத்தையறியாதவனுக்கு அக்ஞானமாகிற நித்ரை உண்டாகிறது. இவ்விரண்டும் நசிக்கும் போது நான்காவது நிலை அடையப்படுகிறது. ஸுஷுப்தி, துரீயம் இரண்டு நிலைகளிலும் விபரீத ஞானமில்லை. ஆனாலும் ஸுஷுப்தியில் அக்ஞான நித்ரை இருக்கிறது. துரீயத்தில் இதுவுமில்லை.

கோபதர்:—நண்பரே, தங்களது விளக்கம் அருமையாக அமைந்துவிட்டது. அநாதியான மாயையால் தூங்கும் ஜீவன் எப்பொழுது விழித்துக்கொள்கிறானோ அப்போது பிறப்பில்லாமலும் நித்திரை இல்லாமலும், ஸ்வப்னமில்லாமலும் இருக்கிற அத்வைத ஸ்வரூபமான துரீயத்தை அறிகிறான்.

வருணர்:—ஆம், நண்பரே, சிலகாலமாக ஸம்ஸாரத்தில் உழலுகின்ற ஜீவன் தனது நிலை அறியாது மயங்கி

உறங்கிக் கிடக்கிருன். ஜாக்கிரத்திலும் ஸ்வப்பனத்திலும் துயரப்படுகிருன். இவன் என் பிள்ளை, இவள் என் பெண், இவள் என் மனைவி, இவர் என் பெற்ருேர்: இது என் ஸொத்து, இது எனது வீடு, எனது பசு, என்று இப்படி பலவிதமாக தன்னை எண்ணிக்கொண்டு அதன் காரணமாக சுக துக்கங்களை அனுபவிக்கிருன். இப்படியாக அறியாமை என்னும் நித்திரையில் ஆழ்ந்து இருக்கிருன். எந்த ஸமயம் வேதாந்த தத்துவங்களை அறிந்த கருணை உள்ளம் படைத்த ஸத்குரு தோன்றி 'நீ காரண காரிய பாவத்துக்கு அப்பாற்பட்டவன்' என்று உபதேசிக்கின்ருரோ உடனே விழித்துக்கொண்டு போதம் பெற்று தன் உண்மை நிலையை அறிகின்ருன். அடைகின்ருன். ஆகின்ருன்.

பிரம்மதத்தர் :— ஐயன்மீர், நன்ருகத் தெரிந்து கொண்டேன். தொடர்ந்து உபதேசிக்க அபேக்ஷிக்கிறேன்.

வருணர்:— பிரிய சீடர்களே! இதுவரை பிரம்மத்தின் மூன்று நிலைகளைப்பற்றி விவரித்தேன். அம்மூன்று நிலைகளுக்கு அப்பாலுள்ள அவஸ்தையையும்பற்றிக் கூறினேன். உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஆரம்பத்தில் 'ஓம்' காரமே பிரம்மம் என்று சொன்னது. அப்படியானல் பிரம்மத்துக்குள்ள நான்கு நிலைகளும் ஓம்காரத்துக்கும் பொருந்தவேண்டுமல்லவா? அதுபற்றியே இப்போது உபதேசிக்கிறேன்.

सोऽयमात्माऽध्यक्षरमोंकारः अधिमात्रं पादा मात्राः मात्राश्च पादाः अकार उकारो मकार इति ।

ஸோऽயமாத்மாऽத்யக்ஷரமோங்காரः அதிமாத்ரம் பாதா மாத்ரா: மாத்ராஸ்ச பாதா: அகார உகாரோ மகார இதி ।

அந்த ஆத்மா (அதாவது பிரம்மம்) அக்ஷரத்தால் குறிக்கப்படும்போது 'ஓம்' காரம் என்ற அக்ஷரமாகும். ஓங்காரத்தை பாதமாகப் பிரிக்கும்போது

மாத்திரையாகும். அந்த அக்ஷரத்தின் மாத்ரைகளே ஆத்மாவின் பாதங்கள். ஆத்மாவின் பாதங்களே அகாரம், உகாரம், மகாரம் என்னும் மாத்ரைகள்.

ஸத்யகாமர் :— ஸரியாக விளங்கவில்லையே ஸ்வாமீ !

கோபதர் :— உத்தமாதிகாரிகளுக்கும் மத்யமாதிகாரிகளுக்கும் அத்யாரோபாபவாத ந்யாயம் மூலமாக ஆத்மாவின் உண்மை தத்வம் விளக்கிக் கூறப்பட்டது. இப்பொழுது முன் சொன்னபடி உண்மை தத்வத்தை அறிந்துகொள்ள புத்தி சக்தி இல்லாதவர்களுக்கு தியானம் செய்வதற்காக ஆரோபத்துடன் ஆத்ம தத்வம் கூறப்படுகிறது. ஓம் என்னும் பிரணவம் ஆத்மாவின் வாசகம். இது ஆத்மாவின் பெயர். வாச்யமும் வாசகமும் ஒன்று என்ற ந்யாயப்படி வாசகமான பிரணவமும் வாச்யமான ஆத்மாவும் வெவ்வேறல்ல, ஒன்றுதான் என்பது முதலிலேயே கூறப்பட்டது. ஓங்கார ரூபமான ஆத்மா என்பதில் வாச்யமான ஆத்மாவுக்கு பிராதான்யம் கொடுத்து ஓங்கார ரூபமான ஆத்மாவுக்கு நான்கு பாதங்கள் கூறப்பட்டன. இப்போது வாசகமான ஓங்காரத்திற்கு ப்ராதான்யம் கொடுத்து மாத்ராவிபாகம் கூறப்படுகிறது. ஆத்மாவுக்குத்தான் பாதங்கள். ஓங்காரத்திற்கு அகாரம், உகாரம், மகாரம் என்னும் மாத்ரைகள். ஆனாலும் ஆத்மாவும் ஓங்காரமும் வேறல்ல என்பதையொட்டி பாதங்களே மாத்ரைகள், மாத்ரைகளே பாதங்கள். ஆகவே ஓங்காரரூபமான ஆத்மாவுக்குப் பாதவிபாகம் கூறிவிட்டு இப்போது அதற்கே மாத்ரா விபாகம் கூறப்படுகிறது.

வருணர் :— வத்ஸர்களே, தொடர்ந்து உபதேசிக்கிறேன்.

जागरितस्थानो वैश्वानरोऽकारः प्रथमा मात्रा आप्तेरादिमत्त्वाद्वा आप्नोति ह वै सर्वान् कामानादिश्च भवति य एवं वेद ।

ஜாகரிதஸ்தாநோ வைச்வாநரோ ऽகார: ப்ரதமா மாத்ரா ஆப்தேராதிமத்வாத்வா ஆப்நோதி ஹ வை ஸர்வான் காமாநாதிஸ்ச பவதி ய ஏவம் வேத ।

முதல் மாத்திரையாகிற அகாரமே ஜாக்கிரத்தை இருப்பிடமாயுள்ள வைசுவானரன். ஏனெனில் இரண்டும் வ்யாபித்து இருக்கிறது. முதலிலுமிருக்கிறது. இவனை இப்படி எவன் அறிகிருனே அவன் எல்லா விருப்பங்களையும் முற்றும் அடைகிருன். அவனே நிச்சயமாக எல்லோருக்கும் முதல்வனுகவும் ஆகிருன். இனி அடுத்த மந்திரம் கூறுகிறேன்.

स्वप्नस्थानस्तैजस उकारो द्वितीया मात्रा उत्कर्षादुभयत्वाद्वा उत्कर्षति ह वै ज्ञानसन्ततिं समानश्च भवति नास्याब्रह्मवित्कुले भवति य एवं वेद ।

"ஸ்வப்நஸ்தானஸ்தைஜஸ உகாரோ த்விதீயா மாத்ரா உத்கர்ஷாத் உபயத்வாத்வா உத்கர்ஷதி ஹ வை ஞாநஸந்ததிம் ஸமாநஸ்ச பவதி நாஸ்ய அப்ரஹ்மவித் குலே பவதி ய ஏவம் வேத ।"

உயர்வாய் இருப்பதாலும் உபயஸம்பந்தம் இருப்பதாலும் இரண்டாவது மாத்திரையாகிய உகாரமே ஸ்வப்னத்தை இருப்பிடமாகவுடைய தைஜஸன். எவன் இங்ஙனம் அறிகிருனே அவன் ஞானப்பெருக்கை வளர்ப்பான். அன்றியும் எல்லோருக்கும் ஸமமாக இருப்பான். அவன் குலத்தில் பிரம்மஞானமில்லாதவன் பிறக்கமாட்டான்.

பிரம்மதத்தர்:—உபய சம்பந்தம், உயர்வு என்ற பதங்களுக்கு விரிவுரை கூற பிரார்த்திக்கிறேன்.

வருணர்:—குழந்தாய் பிரம்மதத்தா, மூன்ருவது மந்திரத்தையும் கூறிவிடுகிறேன். பிறகு நண்பர் கோபதர் எல்லாவற்றிற்கும் சேர்த்து விரிவுரை வழங்குவார். என்ன! நான் சொல்வது சரிதானே நண்பரே!

கோபதர் :—என் அருமைத் தோழரே, அப்படியே தங்கள் இஷ்டப்படியே கூறுகிறேன்-

வருணர் :— सुषुप्तस्थानः प्राज्ञो मकारस्तृतीया मात्रा मितेरपीतेर्वा मिनोति ह वा इदं सर्वमपीतिश्च भवति य एवं वेद ।

"ஸுஷுப்தஸ்தாந: ப்ராக்ஞோ மகாரஸ்த்ருதீயா மாத்ரா மிதேரபீதேர்வா மிநோதி ஹ வா இதம் ஸர்வமபீதிஸ்ச பவதி ய ஏவம் வேத!"

அளப்பதாலும் லயமடையச் செய்வதாலும் மூன்ருவது மாத்திரையாகிய மகாரமே ஸுஷுப்தியை ஸ்தானமாயுடைய பிராக்ஞன். எவன் இப்படி தெரிந்து கொள்ளுகிருனே அவன் எல்லாவற்றையும் அளவிடக் கூடியவனுகவும், எல்லாவற்றையும மறைத்துக்கொள்ள கூடியவனுகவும் ஆகிருன். மந்திரங்களையும் பொழிப் புரையையும் கூறிவிட்டேன். இனி நண்பர் விளக்கவுரை கூறுவார். கவனமாகக் கேளுங்கள்.

கோபதர் :— ஜாகரத்தை ஸ்தானமாக உடைய வைசுவாநரன் தான் 'அ' காரம் எப்படியென்ருல் ஓங்காரத்தின் முதல் மாத்திரை அ. அதுபோல் முதல் பாதமாக இருப்பது வைசுவாநரன். மேலும் ஸர்வ வியாபகத்துவம் இரண்டிற்கும் இருக்கிறது. 'அ' காரம் எல்லா வாக்கையும் வைசுவாநரன் எல்லா ஜகத்தையும் வியாபித்துக்கொண்டிருப்பதால் இரண்டிற்கும் ஸர்வ வியாபகத்துவம் ஸித்திக்கின்றது. தவிர இரண்டிற்கும் முதன்மை ஸ்தானமுள்ளது. எப்படியென்ருல் அகாரம் எல்லா அக்ஷரத்துக்கும் முதலில் உள்ளது. உச்சரிப் பதற்காக வாய் திறக்கப்பட்டவுடன் முதன் முதலில் வரும் ஒலி 'அ' தானே. அதுபோல் வைசுவாநரனும் எல்லா ஸிருஷ்டிக்கும் முதன்மையாக இருக்கிருன். உறக்கத்துக்கும் கனவுக்கும் முந்தியுள்ளதுதானே விழிப்பு நிலை- இவ்விதமாய் எவன் அறிகிருனே அவன் எல்லா விருப்பங்களையும் அடைகிருன். தவிரவும் மஹான்களில் முதல்வனுக ஆகிருன்.

பிரம்மதத்தர்:— ஸ்வாமீ! நன்ருகப் புரிந்துகொண்டேன் தைஜஸனைப்பற்றியும் 'உ' காரத்தைப்பற்றியும் கூறுங்கள்.

கோபதர்:— ஸ்வப்னஸ்தானத்தையுடைய தைஜஸன் தான் 'உ' காரம். தைஜஸன் இரண்டாவது பாதம். 'உ' காரம் இரண்டாவது மாத்ரை உத்கர்ஷம் இரண்டிற்கும் உண்டு. 'அ' காரத்தைவிட 'உ' காரம் மேலானது. வைச்வாநரனைவிட தைஜஸன் மேலானவன். மேலும் அகாரத்திலிருந்து உகாரம் மேலே கிளம்பியதுபோலும், வைச்வாநரனிடமிருந்து தைஜஸன் மேலே கிளம்பியதுபோலும் காண்கிறது. இதுவே உத்கர்ஷம். உபயத்வம் என்பதற்கு இரட்டையுடையது என்று அர்த்தம். 'உ' காரம், 'அ' காரத்திற்கும், 'ம' காரத்திற்கும் மத்தியில் இருப்பதால் இரட்டையுடையதாகிறது. அதுபோல் தைஜஸனும், வைச்வாநரனுக்கும், பிராக்ஞனுக்கும் மத்தியில் உள்ளதால் இரட்டையுடையதாக ஆகிருன். இவ்விதமாய் எவன் அறிகிருனே, அவன் ஞானக் கூட்டத்தை வ்ருத்திசெய்கிருன். அதாவது மஹாஞானியாக அதிக ஞானத்தையடைகிருன். எல்லோருக்கும் ஸமானனுக ஆகிருன். அதாவது ஒருவனுக்கும் இவன் சத்ருவாக ஆவதில்லை. தவிரவும் அவனுடைய குலத்தில் பிரம்ம ஞானமில்லாதவன் இருக்கமாட்டான். அதாவது பிரம்மவித்துக்களையே பெற்றுப் பரம்பரையாக அவர்களையே பெருக்குவான். வாழையடிவாழையாக அவன் குலத்தில் பிரம்மஞானிகளே பிறப்பார்கள். சிஷ்ய பரம்பரையும் அவிச்சின்னமாகத் தொடரும்.

ஸத்யகாமர்:— ஸத்குருவே, விசதமாக அறிந்துகொண்டோம். மூன்ருவது ஸ்தானமாகிற பிராக்ஞனையும் ம காரத்தையும் விவரமாகச் சொல்லுங்கள் ஐயனே.

கோபதர்:— ஸுஷுப்த ஸ்தானரான பிராக்ஞன் தான் ம காரம் பிராக்ஞன் மூன்ருவது பாதம். ம காரம் மூன்ருவது எழுத்து. பிரணவத்தை பல தடவை

உச்சரிக்கும்போது 'அ' 'உ' காரங்கள் 'ம' காரத்தில் முடிவை அடைவதைப்போலவும் பிறகு அதனின்றும் புறப்படுவதுபோலும் தோன்றுகிறது. வைசுவாநரனும் தைஜஸனும் பிராக்ஞனிடத்தில் ஒடுங்கி மறுபடியும் வெளிப்படுகிருர்கள். இதையே ச்ருதி அளப்பது (முதலில் இழுத்து பிறகு விடுவது) தானியத்தை மரக்காலால் அளப்பதுபோல் என்று கூறுகிறது. இனி லயப்படுவது 'அ' 'உ' காரங்கள் முடிவில் 'ம'காரத்தில் அடங்கிப்போய்விடுகின்றன. வைசுவாநரனும் தைஜஸனும் பிராக்ஞனிடத்தில் போய் அடங்கி ஒன்ருய்ப் போகிருர்கள். இது நாம் தினசரி கண்கூடாக பார்க்கிருேமே! விழிப்பு நிலேயும் கனவும் உறக்கத்தில் ஒன்றிப்போகிறதல்லவா. இவ்விதமாக எவன் அறிகிருனே அவன் ஜகத்தை முழுதும் அளக்கிருன். அதாவது உண்மையை அறிகிருன். ஜகத் காரண ஆத்மாவாக ஆகிருன்.

வருணர் :— ஸபாஷ் நண்பரே, விளக்கவுரைக்கு மிகவும் நன்றி. குழந்தைகளே, இத்துடன் இன்றைய பாடம் முடிவுபெறுகிறது. மீண்டும் நாளே சந்திப்போம்.

சிஷ்யர்கள்:— தங்கள் சித்தம். எங்கள் பாக்கியம்.

(திரை விழுகிறது)

ஆருவது காட்சி

[திரைவிலக முன்காட்சிபோல் ஸம்பாஷணே தொடர்கிறது.]

வருணர் :— வத்ஸர்களே! நண்பரே! ஆச்ரமவாஸிகளே! இன்றைய உபதேசத்துடன் இந்த உபநிஷத் முடிவடைகிறது. இங்கு எனக்கு எல்லா விதமான ஸௌகர்யங்களேயும் செய்து தந்தமைக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோபதர் :— அருமை நண்பரே! தங்கள் ஆச்ரமம் வேறு, இந்த ஆச்ரமம் வேறு என்று கருதவேண்டாம். நாங்கள் எல்லோரும் தங்களேச் சேர்ந்தவர்கள்.

இவ்வளவு க்ருபை செய்து அடியேனது வேண்டுகோளுக்கு செவிசாய்த்து இங்கு எழுந்தருளி உபதேசங்கள் செய்தது மிகவும் போற்றுதற்குரியது. பாராட்டப்படவேண்டியது. நாங்கள்தான் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்கள். தாங்கள் இதிலும் எங்களை முந்திக்கொண்டுவிட்டீர்கள்

ஸத்யகாமர் :— ஐயன்மீர், பெரியோர்கள் பேசும் போது குறுக்கிடுவதற்கு மன்னிக்கவேண்டுகிறேன். இரண்டு குருதேவர்களுக்கும் நாங்கள் அல்லவா நன்றி சொல்லவேண்டும்.

வருணர் :—சித்தம் அழகியவனே, இந்த உபநிஷத்தின் ஆழ்ந்த கருத்தின்படி (நாம் சரியாகப் புரிந்து கொண்டுவிட்டால்) குரு, சிஷ்யன், சாஸ்திரம் உபதேசம் எல்லாம் விகல்பமேயாகும். கல்பிக்கப் பட்டவையெல்லாம் நிவர்த்தியாகிவிடும். ஞானம் வந்தவுடன் குரு சீடன் என்ற இந்த வித்தியாசங்களெல்லாம் உபதேசத்தின் பொருட்டே. ஞானமடைந்தபின் துவைதமிருக்காது. பேதமுமில்லை, ஆகையினால் நன்றி சொல்லுவதற்கோ, பாராட்டுவதற்கோ இடமில்லை.

பிரம்மதத்தர்:-ஸ்வாமீ ! தொடர்ந்து உபதேசிக்கும்படி வேண்டுகிறேன். நான் ஞானத்தை அடையவில்லை. வியவஹாரதசையிலேயே இருக்கிறேன். கிருபை பண்ணவேண்டும் ஐயனே.

வருணர் :—ஸௌம்யர்களே, கேளுங்கள் கவனமாக.

अमात्रश्चतुर्थोऽव्यवहार्यः प्रपञ्चोपशमः शिवोऽद्वैत एवमोङ्कार आत्मैव संविशत्यात्मनात्मानं य एवं वेद ॥

அமாத்ரஸ்சதுர்த்தோऽவ்யவஹார்ய: ப்ரபஞ்சோபசம: சிவோऽத்வைத ஏவமோங்கார ஆத்மைவ ஸம்விசத்யாத்மநாத்மாநம் ய ஏவம் வேத 1

இரண்டற்றதாயும், சிவமாயும் பிரபஞ்சம் லயிக்கும் இடமாயும், வியவஹரிக்க முடியாததாயுமுள்ள நாலாவது

ஸ்தானம் மாத்திரையில்லாதது இங்ஙனமாக ஓங்காரம் ஆத்மாவே. எவன் இப்படி அறிகிருனே அவன் தன்னுல் தானுகிய ஆத்மாவையடைகிருன்.

ஸத்யகாமர் :— ஸத்குருவே, ஒருவாறு பொருள் தெரிகின்றது. விளக்கமாகக் கூறவேண்டுகிறேன்.

வருணர் :— இதுவரைக்கும் வைசுவானரன், தைஜஸன், பிராக்ஞன் இவர்களைப்பற்றியும், ஜாகரம், ஸ்வப்னம் ஸுஷுப்தி என்ற மூன்று நிலைகளைப்பற்றியும், 'அ, உ, ம' என்ற மாத்திரைகளைப்பற்றியும் விவரமாகக் கூறப்பட்டது. இனி துரீயனைப்பற்றியும் அவனது நிலையான நான்காவது ஸ்தானத்தைப்பற்றியும் மாத்திரையில்லாத தன்மையையும் இந்த மந்திரம் கூறுகின்றது. நான்காவது பாகமே அதாவது ஸ்தானமே ஆத்மா. அதற்கு மாத்திரையில்லை. அளவுக்கு எட்டாதது. வ்யவஹரிக்க முடியாதது. பிரபஞ்சத்துக்கு ஒழிவிடம். மங்களகரம், ஒன்று பட்டது. எவன் இப்படி அறிகிருனே அவன் ஆத்மாவினிடத்திலேயே ஆத்மாவாகக் கலந்து போய்விடுகிருன்.

கோபதர் :— ஓங்காரத்திலுள்ள மூன்று எழுத்துக்களுக்கும், ஆத்மாவின் மூன்று ஸ்தானங்களுக்கும் ஸாம்யம் கூறப்பட்டது. இங்கே மாத்ரையில்லாத முழு ஓங்காரத்திற்கும், ஆத்மாவுக்கும் ஸாம்யம் கூறப்படுகிறது. நான்காவது ஸ்தானம் என்பது எண்ணிக்கைக்கு உட்பட்டதல்ல. மற்ற மூன்று நிலைகளிலிருந்தும் வேருனது என்று குறிக்கவே நான்காவது என்று சொல்லப்படுகிறது.

ஸத்யகாமர் :— ஸத்குருவே! எல்லாம் நன்ருகப் புரிந்துகொண்டோம். ஆயினும் நன்ருக திடமாக மனதில் பதியவைக்கும்படி உதாரணங்களுடன் கூற வேண்டுகிறேன்.

பிரம்மதத்தர் :—ஐயனே, நானும் அவ்விதமே பிரார்த்திக்கின்றேன்.

கோபதர் :—குழந்தைகளே! அவ்விதமே கூறுகிறேன். கவனமாய்க் கேளுங்கள். முதலில் ஜாக்கிரத்தும் ஸ்வப்னமும் பொய் என்று அறிந்துகொள்ளவேண்டும். அந்த இரண்டு நிலைகளும் ஸத்தியமல்ல நித்தியமுமல்ல. பிறகு அவ்விதமே ஸுஷுப்தி அவஸ்தையையும் பொய் என்று அறிந்துகொள்ளவேண்டும்.

பிரம்மதத்தர் :—ஸ்வாமீ! கனவு நிலையைப் பொய் என்று அறிந்துகொள்வது எளிது. ஜாகரத்தை அப்படி எண்ணுவது சரியா? விபரமாகத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

கோபதர் :— சொப்பனத்தைப்போல் ஜாகரமும் பொய்யே. இரண்டு நிலைகளையும் தாரதம்மியப்படுத்தி கவனித்தால் உண்மை விளங்கும். முதலில் சொப்பனத்தை எடுத்துக்கொள்ளுவோம். கனவு நிலையில் எல்லாப் பொருள்களும் உடலுக்குள்ளேயே காணப்படுவதால் பொய்யே. கனவில் யானை, குதிரை, மாடமாளிகை, கூடகோபுரம், இமயமலை, கங்கோத்ரி, சதுரங்க சைன்யம், கும்பமேளாக்கூட்டம், எல்லாம் பார்க்கிறோம். அடைபட்ட இடத்துக்குள் நமக்குள் இந்தப் பலவிதமான பொருட்களின் காட்சி எப்படியிருக்க முடியும்? ஆகையினால் அவை பொய்தான். தவிரவும் கனவில், காசியிலிருந்து கன்யாகுமரி போய்விட்டுவந்ததாய் தோன்றுகிறது. உண்மையில் படுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஹிமயமலையைச் சார்ந்த ஆச்ரமத்தில் படுத்திருக்கும் ஒருவன் வெகு தூரத்திலுள்ள குமரிமுனை சென்று நீராடி அங்குள்ள பொருள்களைக் காண்கிறான் என்பது யுக்திக்குப் பொருந்தாது. காலத்தின் கட்டுப்பாடும் இல்லை. படுத்திருந்து கனவு காணும் நேரமோ சில நிமிஷங்கள்தான். பிரயாணகாலமோ பல வருஷங்கள் பிடிக்கும் விழித்தவுடன் கனவில் கண்டதனைத்தும் அங்கே இருப்பதும் இல்லை. கனவில் நண்பர், உறவினர், பகைவர் முதலியவர்களைக் கண்டு பேசியதாகப் பார்த்து, விழித்தவுடன் அங்கு கண்ட எவரையும்

இங்கு காண்பதில்லை. ஸ்வப்னத்தில் கண்ட எப்பொருளையும் விழித்துக்கொண்டவன் காண்பதில்லை. ஆகவே ஸ்வப்னத்தில் கண்டவை, நடந்தவை எல்லாம் பொய். அவைகள் ஜாகரத்திலும் காணப்படவில்லை. ஸுஷுப்தி நிலையிலும் இல்லை. கனவு நிலையில் மட்டுமே தோன்றுகின்றன. ஆகவே கனவில் சரீரம் பொய். இரண்டற்ற மனது ஸ்வப்னத்தில் இரண்டாய்க் காணப்படுகிறது. அதுவே கற்பனைகளையெல்லாம் செய்கிறது.

ஸத்யகாமர் :— ஸ்வாமீ! ஸ்வப்னுவஸ்தையைப் பற்றி நன்கு தெரிந்துகொண்டோம். இனி விழிப்பு நிலையைப்பற்றி விவரிக்க வேண்டுகிறேன்.

பிரம்மதத்தர் :— ஸத்குருவே, திருவாய்மலர்ந்தருள வேண்டும். ஜாக்கிரதையாகக் கேட்கிறோம்.

கோபதர் :— காணப்படும் பொருள்களெல்லாம் பாவனமையம். மனதுதான் காரணம். இந்த சராசரப் பிரபஞ்சம் மனதால் காணப்படுகிறது. பிறப்பற்றதாயும் நாமரூபங்கள் அற்றதாயும் விளங்கும் பிரம்மத்தை மனது பலவிதமான பொருள்களாகக் கற்பித்துக்கொள்கிறது. மனது ஸங்கல்பிக்க வில்லையானுல் அப்போது உணரப்படும் வஸ்து இல்லை. விழிப்பு நிலையிலும் கனவைப்போலவே பொருள்களை அறிகிரும். விஷயங்களை இந்திரியங்கள் நுகர்கின்றன. அறிவாளிகளுக்கு இரண்டு நிலைகளிலுள்ள தோற்றங்களும் சமமே. அவைகள் பொய்யே. ஏனெனில் எது ஆதியிலும் முடிவிலும் இல்லையோ அது நடுவிலும் இல்லைதான். ஒரு பொருள் ஸத்தியமாக, நித்தியமாக இருக்கவேண்டுமானுல் மூன்று நிலைகளிலும் காணப்படவேண்டும். ஜாக்கிரத்தில் காணப்படுவது சொப்பனத்தில் பயன்படவில்லை. அது உறக்கத்தில் இல்லவேயில்லை. அதுபோல் கனவில் காணப்படுவதும் ஜாக்கிரத்திலும் ஸுஷுப்தியிலும் காண்பதில்லை. ஆகையால் அவை எப்போதும் பயன்படுபவை அல்ல. ஆதியும் அந்தமும் உள்ள அவை பொய்யெனவே கருதப்படுகின்றன.

ஸத்யகாமர் :—இரண்டு நிலைகளிலும் உள்ள பொருள் கள் பொய்யாக இருந்தால் இவைகளைக் கற்பிப்பவன் யார் ?

வருணர் :— ஸ்வயம்பிரகாசமான ஆத்மா தன்னுடைய மாயையால் தன்னைத்தானே கற்பிக்கிருன் ஸர்வ வல்லமையுள்ள ஆத்மா உள்நோக்குடையவனுக பாவனைகளைச் சிருஷ்டிக்கும்போது கனவு உண்டாகிறது. அதுபோலவே வெளிநோக்குடையவனுக வெளியே பதார்த்தங்களை சிருஷ்டிப்பதே ஜாக்கிரம் எனப்படு கிறது. எவை சித்தத்தில் கற்பிக்கப்பட்ட காலத்தில் மட்டும் உள்ளே உள்ளனவோ, எவை இருகாலங் களிலும் வெளியே உள்ளனவோ, அவையெல்லாம் கற்பனைகளே. நித்தியமல்ல, ஸத்தியமல்ல எவை வெளிப்படையாக இல்லாமல் உள்ளே இருக்கின்றனவோ எவை வெளிப்படையாக வெளியே இருக்கின்றனவோ, அவையெல்லாம் கற்பனைகளே. ஆத்மா முதலில் ஜீவனைக்கற்பித்துப் பின் வெளியிலும் உள்ளும் உள்ள பலவிதமான பொருள்களைக் கற்பிக்கிருன். அறிவுக்குத் தகுந்த ஆசையும் ஆசைக்குத் தகுந்த அறிவும் மாறி மாறி வந்து கற்பனை பெருகுகிறது இப்படியாக மாறி மாறி ஜீவன் விழித்து, உறங்கி, கனவுகண்டு, மயங்கி அவஸ்தைப்படுகிருன். உறக்க நிலையும் மற்ற நிலைகளைப் போல் நித்தியமல்ல. அங்கு பெற்ற அனுபவமும் மற்ற நிலைகளில் இல்லாததால் அதுவும் பொய்யே.

பிரம்மதத்தர்: — ஸத்குருவே! ஜீவனுக்கு விடிவு காலம் எப்போது? அவனுக்கு விடிவெள்ளி எப்போது உதயமாகும் ?

கோபதர் :— அநாதி மாயையால் தூங்கும் ஜீவன் ஸத்குருவாகிய விடிவெள்ளி உதயமானவுடன் விழித்துக் கொள்கிருன். அப்போது பிறப்பில்லாமலும் நித்ரை இல்லாமலும் ஸ்வப்னமில்லாமலும் இருக்கிற அத்வைத ஸ்வரூபமான துரீயத்தை அடைகிருன். மூன்று அவஸ்தைகளிலும் எது ஒரே ஸமமாயுள்ளதோ அதை

நிச்சயமாக அறியவேண்டும். அகாரம் விசுவனிடம் அழைத்துச்செல்கிறது. உகாரம் தைஜஸனிடம் அழைத்துச்செல்கிறது. மகாரம் பிராக்ஞனிடம் அழைத்துச்செல்கிறது. மாத்ரையில்லாத ஓங்காரத்தினிடம் செல்லுதல் என்பது இல்லே. அதாவது கார்ய காரணங்கள், அடைகிறவன், அடைதல், விழிப்பு, கனவு, உறக்கம் என்பவைகளும் இல்லே.

வருணர் — வத்ஸர்களே! ஆகையால் மனதைப் பிரணவத்தில் சேர்க்கவேண்டும். பிரணவம் பயம் இல்லாத பிரம்மஸ்வரூபம். பிரணவத்தை எப்போதும் தியானிப்பவனுக்கு எவ்விடத்திலும் பயமில்லே. பிரணவமே அபரப்ரம்மம். பிரணவமே பரப்ரம்மம் என்றும் கூறப்படுகிறது.

ஸத்யகாமர் :— ஸ்வாமீ! நான் முன் படித்தது நிணேவுக்கு வருகிறது. பகவான் பிப்பலாதர் உபதேசித்ததும் இவ்வாறுதான்.

கோபதர் :— குழந்தாய்! அவர் கூறியதைக் கூறுவாய்.

ஸத்யகாமர் :— एतद्वै सत्यकाम परं चापरं च ब्रह्म यदोंकारः ।

ஏதத்வை ஸத்யகாம பரம் சாபரம் ச ப்ரஹ்ம யதோங்கார: 1

எது ஓங்காரம் எனப்படுகிறதோ அதுவே பரபிரம்மமும் அபரபிரம்மமும்.

பிரம்மதத்தர் :— ஸத்குருவே, தொடர்ந்து உபதேசியுங்கள்.

வருணர் .— பிரணவம் காரணமில்லாதது. காரியமில்லாதது. பிரிதொன்று இல்லாதது. வெளியொன்று இல்லாதது. நாசமில்லாதது. எல்லாப் பிராணிகளுடைய இருதயத்திலும் வீற்றிருக்கும் ஈசுவரனுகப் பிரணவத்தை அறியவேண்டும். அதை அறிந்தவன் துக்கப்படுவதில்லே.

கோபதர் :— எப்படி கனவும் மாயையும் பார்க்கப் படுகின்றனவோ, எங்ஙனம் கந்தர்வநகரம் பார்க்கப் படுகின்றதோ அவ்வாறே இவ்வுலகெல்லாம் ஞானி களால் பார்க்கப்படுகிறது. உண்மையில் உற்பத்தியும் இல்லை. அழிவுமில்லை. ஸாதகனும் இல்லை. முமுக்ஷு வும் இல்லை. கட்டுப்பட்டவனுமில்லை, விடுபட்டவனு மில்லை. பற்று, பயம், கோபம் இவைகளை விட்டு நிர்விகல்பமாயும், பிரபஞ்சமற்றதாயும், அத்வைத மாயுமுள்ள ஆத்மாவை அறியவேண்டும். அதை அறிந்து அத்வைதத்தில் நினைவை நிலைநிறுத்த வேண்டும். அந்தரங்கத்தில் ஆத்மதத்துவத்தை பார்த்து, அதே தத்துவத்தை வெளியேயும் பார்த்து தத்துவாகாரமாகி அதிலேயே பரமானந்தம்கொண்டு அந்த ஆத்மதத்துவத்தினின்றும் ஒருபோதும் நழுவாமல் இருக்கவேண்டும்.

வருணர் :— குழந்தைகளே! இத்துடன் உபதேசம் நிறைவுபெறுகிறது. கேட்டவுடன் புரியக்கூடிய விஷயமல்ல இந்த தத்துவம். நீங்கள் கேட்டதை யெல்லாம் நன்ருக மனனம் பண்ணி பரஸ்பரம் விவாதித்து தியான ஸமாதியில் இருந்து அறிந்து கொள்ளவேண்டும். ஸர்வ மங்களங்களும் உண்டாவ தாக ஆசீர்வாதம். அருமை நண்பரே! வத்ஸர்களே! ஆசிரமவாஸிகளே! விடைபெற்றுக்கொள்ளுகிறேன். பத்ரமஸ்து. (பகவான் வருணர் அந்தர்தானமடைகிருர்.)

கோபதர் :— குழந்தைகளே! பூர்வ ஜன்ம புண்ணிய வசத்தால் பகவான வருணர் வந்து உபதேசம் செய்யும் பாக்கியம் பெற்றீர்கள். ஜனக மஹாராஜரிடமிருந்து ஒரு வேதாந்த பரிஷத் நடப்பதாக அழைப்பு வந்திருக் கிறது. நாம் எல்லோரும் அங்கு போவோம். 'மாண்டூக்யோபநிஷத்தை'ப்பற்றி அங்கு உரை நிகழ்த் துவோம். ஸத்தியகாமர் சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறுவதில் நிபுணர். அவரைக்கொண்டே அங்கே சொல்ல ஏற்பாடு செய்யவேண்டும். சீடர்களே, உங்கள் கருத்து என்ன?

சிஷ்யர்கள் :— ஸத்குருவே, தங்கள் பிரியப்படியே நாங்களும் மிதிலைக்கு வருகிறோம். ஸத்தியகாமர் இப்போதே சுருக்கமாகக் கூறினால் வரமுடியாமல் ஆசிரமத்தில் தங்கும் ஆசிரமவாஸிகளுக்குப் பயன்படும் அல்லவா !

பிரம்மதத்தர் :—நானும் நினைத்தேன். ஸத்தியகாமர் இப்போது உடனே சொல்லவேண்டும் என்று நானும் விரும்புகிறேன்.

கோபதர் :— ஸத்தியகாமா, எல்லாருடைய விருப்பமும் இருப்பதால் உடனே கூறுவாய்.

ஸத்யகாமர் :— ஐயன்மீர் ! நண்பரின் விருப்பம், மற்றும் எல்லோருடைய ஆசை, அதற்கு மேலாக ஸத்குருவின் ஆணை. பயபக்தியுடன் அடக்கமாகக் கூற அருளவேண்டும். (நமஸ்கரித்து எழுந்து கைகூப்பி நின்றுகொண்டு வினயத்துடன் கூறுகின்றார்.)

சரீரத்தில் ஜீவனுக்கு, ஜாக்கிரம் ஸ்வப்னம், ஸுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளும் அவைகளை யெல்லாம் கடந்த துரீயம் என்ற நிலையும் உண்டு. ஜாக்கிரத்தில் ஜீவன் இந்திரியங்களின் வழியாக வெளி விஷயங்களை அறிகிறான். ஸ்வப்னத்தில் விஷய வாஸனைகளின் வடிவங்களை மனதால் அறிகிறான். உறக்கத்தில் விஷயங்களும் இல்லை. விஷய் வாஸனை களின் வடிவங்களும் இல்லை. இன்னதென்று விளக்க முடியாததான ஒரு ஞானமும் ஆனந்தமும் இருக் கின்றன. துரீயத்தில் ஜீவன் தன் உண்மை நிலையான ஆத்மஸ்வரூபத்தை அறிகிறான். உபாஸிப்பதற்கு ஓங்காரம் உயர்வான பிரதீகம். பிரம்மபுத்தியுடன் உபாஸிக்கப்பட்ட ஓங்காரம் பிரம்மத்தை அடைய ஸாதகமாயிருக்கிறது. ஸமாதியில் இருந்து ஓங்காரத்தை அனுஸந்தானம் செய்துகொண்டு ஸ்தூலமான அகாரத்தை ஸூக்ஷ்மமான உகாரத்திலும் அதைக் காரணமான மகாரத்திலும் அதைக் கார்யகாரண

அதீதமான பிரத்யகாத்மாவிடத்திலும் உபஸம்ஹாரம் செய்து பிரத்யகாத்மாவாகவே இருந்துவிடுகிருன். அதாவது ஸ்தூலமான அகாரத்தை (அது குறிக்கும் ஜாக்கிரத்துடன்) ஸூக்ஷ்மமான உகாரத்திலும் (அது குறிக்கும் ஸ்வப்னத்திலும்) அதைக் காரணமான மகாரத்திலும் (ஸுஷுப்தியிலும்) அனைத்தையும் காரணகார்ய அதீதமான துரீயத்திலும் (பிரத்யகாத்மாவில்) ஒடுக்கித் தானேயாகிய இரண்டற்ற நிலையை அடைகிருன். பிழை பொறுக்கவேண்டும். நமஸ்காரம்.

கோபதர் :-குழந்தாய், ரொம்ப நன்ருகச் சொன்னுய். மங்களமுண்டாகட்டும். மிதிலைக்குப் புறப்படுவோம்.

(திரை விழுகிறது)

ஏழாவது காட்சி

[திரை விலக, சங்கர மடம் தென்படுகிறது. ஸூத்ரதாரர் பிரவேசம், எதிராக நடிகர் பரபரப்புடன் வருகிருர்.]

ஸூத்ரதாரர் :—நடிகரே ! என்ன அவசரம் ? நாடகம் முடிந்தபிறகும் இந்தப் பரபரப்பு அவசியமா ?

நடிகர் :—நண்பரே, வணக்கம். தர்மாதிகாரி ஆள் அனுப்பினுர் உடன் வரவேணுமென்று. அதிருக்கட்டும். நாடகம் எப்படியிருக்கிறது ? திருப்திதானே ?

ஸூத்ரதாரர் :— திருப்திதானே என்ரு கேட்கிறீர் ? மிகவும் நன்ருயிருக்கிறது. அதி அற்புதமாக இருக்கிறது. பழைய பாணியில் சொல்லவேண்டுமானுல் பிரம்மானந்தமாக இருக்கிறது. எனது பாராட்டுக்கள் அனைவருக்கும்.

நடிகர் :— நண்பரே, பாராட்டுக்கு நன்றி. மிகவும் படித்தவரான, பண்டிதரான, பண்புகள் நிறைந்த தங்களுக்கு நாடகம் உயர்வாகப்படலாம். பொதுமக்கள் எப்படி ரசித்தார்களோ ?

ஸூத்ரதாரர் :— உமக்கு சந்தேகமே வேண்டாம். பொதுமக்களும் விரும்பி ரசித்தார்கள். அவர்களது மகிழ்ச்சி முகாரவிந்தங்களில் மலர்ச்சியாக வழிந்து ஓடியதைக் கவனித்தேன். நடுநடுவே கைத்தட்டல்களும், சபாஷ், ஜோர் என்ற ஒலியெழுப்பல்களும் என் கருத்தை ஊர்ஜிதம் செய்கின்றன.

(தர்மாதிகாரி வருகிருர்)

நடிகர் :— இதோ தர்மாதிகாரியே வந்துவிட்டார் தேடிப்போன மூலிகை காலில் அகப்பட்டதுபோல. நமஸ்காரம் ஐயா, தங்களைப் பார்க்கத்தான் வந்து கொண்டிருந்தேன்...

தர்மாதிகாரி :— நமஸ்காரம் நடிகரே, உங்களுடைய நாடகத்தைப் பார்த்து மஹாஸன்னிதானம் அவர்கள் ஆனந்தமடைந்து உங்களுக்கும் நாடக ஆசிரியருக்கும் ஸன்மானங்கள் வழங்க ஆணையிட்டிருக்கிருர்கள். அதைச் சொல்லத்தான் தங்களை அழைத்தேன்.

நடிகர் :— அப்படியா! மிகவும் மகிழ்ச்சி. ஸத்குருவின் ஆசியே ஆயிரமாயிரம் ஸன்மானங்களுக்கு மேலாகும். இருந்தபோதிலும் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோல் பாரிதோஷிகமும் கிடைக்கிறதென்ருல்—(ஸந்தோஷத்துடன் ஆடிப் பாடுகிருர்.)

ஸூத்ரதாரர் — நண்பரே! இனி அடுத்த நாடகம் எப்போது? என்ன நாடகம் நடிக்க உத்தேசம்?

நடிகர் :— எனக்கு அது தெரியாது. ஆசிரியரைத் தான் கேட்கவேண்டும்.

தர்மாதிகாரி :— ஸூத்ரதாரரே! உமது கேள்விக்கு நான் பதில் கூறுகிறேன். அடுத்த நாடகம் "தைத்திரீயோபநிஷத்" விரைவில் தயாராகிவிடும்.

ஸூத்ரதாரர் :— மிகவும் ஸந்தோஷம். தைத்திரீயம் என்ருல் பெரிதாக இருக்குமே, காட்சி ஜோடனை

களும் நடிகர்களும் அதிகமாக இருக்கும். இப்போது முதல் தயார்பண்ணவேண்டியதுதான்.

நடிகர் :— ஆமாம். இன்றே இப்போதே கார்யத்தில் இறங்கிவிடுவோம். பொதுமக்களின் ஆதரவும் அன்பும், நண்பர்களின் ஒத்துழைப்பும், ஸத்குருவின் ஆசியும் இருக்கும்போது என்ன கவலை? ஸாத்யமாகாததும் உண்டோ? நமஸ்காரம்.

ஸூத்ரதாரர் :— நமஸ்காரம்.

தர்மாதிகாரி :— நமஸ்காரம். நாம் பரஸ்பரம் நமஸ்காரம் செய்துகொண்டோம். பிரியும் முன்பு எல்லோரும் சேர்ந்து பார்வையாளருக்கும் படிப்போருக்கும் வணக்கம் செலுத்துவோம். இந்த உபநிஷத்தில் சொல்லப்பட்ட 'ஆத்மா' வுக்கும் வணக்கம் செலுத்துவோம். எல்லா நடிகர்களும் நாடக ஆசிரியரும் வரட்டும் அரங்கத்திற்கு. (அப்படியே எல்லாரும் மேடைக்கு வந்து கீழ்க்கண்டபடி பிரார்த்தித்து வணக்கம் தெரிவிக்கின்றனர்.)

प्रज्ञानांशुप्रतानैः स्थिरचरनिकरव्यापिभिर्व्याप्य लोका-
न्भुक्त्वा भोगान्स्थविष्ठान्पुनरपि धिषणोद्भासितान्कामजन्यान् ।
पीत्वा सर्वान्विशेषान्स्वपिति मधुरभुङ्मायया भोजयन्नो
मायासंख्यातुरीयं परममृतमजं ब्रह्म यत्तन्नतोऽस्मि ॥

यो विश्वात्मा विधिजविषयान्प्राश्य भोगान्स्थविष्ठा-
न्पश्चाच्चान्यान्स्वमतिविभवाञ्ज्योतिषा स्वेन सूक्ष्मान् ।
सर्वानेतान्पुनरपि शनैः स्वात्मनि स्थापयित्वा
हित्वा सर्वान्विशेषान्विगतगुणगणः पात्वसौ नस्तुरीयः ॥

—மாண்டுக்யோபநிஷத்காரிகா சாங்கரபாஷ்யம்
மங்களசுலோகம்

न कश्चिज्जायते जीवः संभवोऽस्य न विद्यते ।
एतत्तदुत्तमं सत्यं यत्र किंचिन्न जायते ॥

—மாண்டூக்யகாரிகை அலாத சாந்திப்ரகரணம் சு. 71.

தன்னுடைய சராசர வியாபகமான ஞானக்கதிர்களால் எங்கும் பிரகாசித்துக்கொண்டு, ஜாக்கிரதவஸ்தையில் ஸ்தூல விஷயங்களை அனுபவித்தும், ஸ்வப்ன அவஸ்தையில் புத்தியினுல் விளக்கப்பட்ட வாஸனு ஜன்யமான போகங்களை அனுபவித்தும், பின்னர் நித்ராவஸ்தையில் எல்லா விசேஷங்களும் மறைந்து ஆனந்தத்தை அனுபவித்தும் அகண்டமான அமிருதமான பிறப்பில்லாத துரீயமாக எது விளங்கா நின்றதோ அந்தப் பிரம்மத்துக்கு நமஸ்காரம். விழிப்பு நிலையில் பாபபுண்ய கர்மங்களின் பலனுகிய போகங்களை அனுபவித்து, பின் மனதினுல் கல்பிக்கப்பட்ட ஸூக்ஷ்ம விஷயங்களை, தன்னுடைய சொந்தப் பிரகாசத்தினுல் தெரிந்துகொண்டு கனவு நிலையில் அனுபவித்தும், பின்னர் மெதுவாக எல்லாவற்றையும் தனக்கு உள்ளே அடக்கி உறக்க நிலையில் துய்த்தும், பிறகு கடைசியாக எல்லாவற்றையும் உதறித்தள்ளி நிர்க்குண ரூபத்தில் நிலைபெற்றிருக்கும் துரீய பரமாத்மா நம்மை ரக்ஷிக்கட்டும்.

மூன்று அவஸ்தைகளையும் விட்டவரும், மூன்று நிலைகளிலும் ஊடுருவி நிற்பவரும், ஓங்காரத்தினுல் அறியப்படுபவருமான ஆத்மாவுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம். எந்த ஜீவனும் உண்டாவதுமில்லை. இவனுக்கு உண்டாகக் காரணமும் இல்லை. எதனிடத்தில் ஒன்றும் உண்டாவதில்லையோ அந்தப் பிரஹ்மம் உத்தமமான ஸத்தியம். அதற்கு வணக்கம்.

(திரை விழுகிறது)

மாண்டூக்யோபநிஷத் நாடகம் முற்றும்.

உ

ஸ்ரீ குருப்யோ நம:

உபநிஷத் நாடகமாலா – 7

தைத்திரீயோபநிஷத்

(நாடகம்)

நாடக பாத்திரங்கள்

வைசம்பாயனர்	—	மிதிலைக்கருகில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்யும் மஹரிஷி
வருணர்	—	ஹரித்துவாரத்தில் இருப்பவர் பெரிய பிரம்மவித், ப்ருகுவின் பிதா
போதாயனர்	—	வைசம்பாயனரின் சிஷ்யர்
மாஹாசமஸ்யர்	—	ஷை
த்ரிசங்கு	—	ஷை
வைகானஸர்	—	ஷை
ப்ருகு	—	ஷை வருணரின் புதல்வர்
ப்ராசீனயோக்யர்	—	ஷை பிருகுவின் நண்பர்

ரிஷிபத்னி, வேலைக்காரர்கள், ஆசிரமவாசிகள் தேரோட்டி முதலியவர்கள்.

இடம் :— மிதிலைக்குப் பக்கத்தில் உள்ள வைசம்பாயனரின் ஆசிரமத்திலும், ஹரித்துவாரத்தில் பகவான் வருணரின் ஆசிரமத்திலும், பக்கங்களிலும்.

தைத்திரீயோபநிஷத்

(நாடகம்)

முதலாவது அங்கம்

காட்சி I

(திரை விலக)

[மஹரிஷி வைசம்பாயனரின் ஆசிரமம் தென்படுகிறது. அவர் புலித்தோல் மேல் பத்மாஸனத்தில் வீற்றிருக்கிறார். போதாயனர் முதலிய ஆறு சிஷ்யர்களும் இருமருங்கிலும் அமர்ந்திருக்கின்றனர். எல்லோரும் சேர்ந்து சாந்தி பாடம் சொல்லுகின்றனர்]

ओं शं नो मित्रः शं वरुणः । शं नो भवत्वर्यमा । शं न इन्द्रो बृहस्पतिः । शं नो विष्णुरुरुक्रमः । नमो ब्रह्मणे । नमस्ते वायो । त्वमेव प्रत्यक्षं ब्रह्मासि । त्वमेव प्रत्यक्षं ब्रह्म वदिष्यामि । ऋतं वदिष्यामि । सत्यं वदिष्यामि । तन्मामवतु । तद्वक्तारमवतु । अवतु माम् । अवतु वक्तारम् ॥

ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

சம் நோ மித்ர: சம் வருண: I சம் நோ பவத்வர்யமா I சம் ந இந்த்ரோ ப்ருஹஸ்பதி: I சம் நோ விஷ்ணுருருக்ரம: I நமோ ப்ரஹ்மணே I நமஸ்தே வாயோ I த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி I தவமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்ம வதிஷ்யாமி I ருதம் வதிஷ்யாமி I ஸத்யம் வதிஷ்யாமி I தன் மாமவது I தத்வக்தாரமவது I அவது மாம் I அவது வக்தாரம் II

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: II

வைசம்பாயனர் :— வத்ஸர்களே! உங்களுக்கு ஸகல மங்களங்களும் உண்டாகட்டும். மாஹாசமஸ்யா!

புதிதாக நம் குருகுலத்தில் சேர்ந்திருக்கும், ப்ருகு, ப்ராசீனயோக்யன் இவர்களுக்கு சாந்தி பாடத்தின் பொருளை விளக்கிச் சொல்வாயாக.

மாஹாசமஸ்யர் :— (கைகூப்பி வணங்கிவிட்டு) அப்படியே கூறுகிறேன் குருநாதரே!

மித்திரன் எங்களுக்கு மங்களகரனுக பவிக்கட்டும். வருணனும் ஸுகத்தைக் கொடுக்கட்டும். அர்யமாவும் எங்களுக்கு மங்களகரனுக இருத்தல் வேண்டும். இந்திரனும் பிருஹஸ்பதியும் எமக்கு சுபத்தைச் செய்தல் வேண்டும். விஸ்தீர்ணக்ரமமுள்ள விஷ்ணுவும் எங்களுக்கு மங்களத்தைத் தரவேண்டும்.

வைசம்பாயனர் :— பொருள் நன்ருகக் கூறிவிட்டாய். மித்திரன் முதலிய தேவதைகள் எந்த எந்தக் கார்யங்களுக்கு அதிஷ்டான தேவதைகள் என்பதையும் கூறிஞல் தாத்பர்யம் நன்ருக விளங்குமல்லவா! போதாயன! அவைகளை நீ கூறுவாய்!

போதாயனர் :— (கைகூப்பி வணங்கிவிட்டு) ஸ்வாமீ! அங்ஙனமே செய்கிறேன். பகலுக்கும் பிராணனுக்கும் அதிஷ்டான தேவதை மித்திரன். அபான வாயுவுக்கும் இரவுக்கும் அபிமான தேவதை வருணன். ஸூர்யனுக்கும் கண்ணுக்கும் அதிஷ்டான தேவதை அர்யமா. இந்திரன் பலத்திற்கும், பிருஹஸ்பதி புத்திக்கும் வாக்குக்கும் அபிமான தேவதைகள். 'ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்ற வாக்கியப்படி எல்லாவற்றிற்கும் அதிஷ்டானமானவர் விஷ்ணு. த்ரிவிக்ரமாவதாரத்தில் பெரிய பாதம் கொண்டதால் அவர் உருக்ரமர். இவர்களைப் போற்றி வணங்கிஞல் நமக்கு ஸர்வமங்களங்களும் உண்டாகும்.

வைசம்பாயனர் :— குழந்தாய்! ப்ராசீனயோக்யா! வத்ஸா! ப்ருகுவே! எல்லாம் விளக்கமாகத் தெரிகிறதா?

ப்ருகு :— குருநாதரே! நன்ருகப் புரிந்து கொண்டேன்.

ப்ராசீனயோக்யன் :— ஐயனே! "எங்களுக்கு மங்களகரஞக இருத்தல் வேண்டும்" என்று பிரார்த்திப்பதில் 'எங்களுக்கு' என்பது சிஷ்யர்களைத்தானே குறிக்கின்றது?

வைசம்பாயனர் :— குழந்தாய்! அந்தப் பதம் சிஷ்யர்களையும் குருவையும் சேர்த்துத்தான் குறிக்கின்றது. பிரார்த்தனையில் கடைசி அடியில் இது விபரமாக விளங்கும். மாஹாசமஸ்யா! பாக்கியுள்ள சாந்தி பாடத்திற்கும் பொருள் கூறுவாய்.

மாஹாசமஸ்யர் :— உத்தரவுப்படிச் செய்கிறேன் குருவே. பிரம்மத்திற்கு நமஸ்காரம். வாயுவே உமக்கு வணக்கம். நீரே கண்கண்ட (பிரத்தியக்ஷமாயிருக்கிற) பிரம்மம். உம்மையே அவ்விதம் போற்றுகின்றேன். நீரே ருதம். நீரே ஸத்யம். ஸர்வாத்மகமான வாயு என்று பெயருள்ள அந்த பிரம்மமானது என்னையும் காப்பாற்றட்டும். அது ஆசாரியனையும் காப்பாற்றட்டும் (மீண்டும் அதுவே பிரார்த்திக்கப்படுகிறது). என்னை ரக்ஷிக்கட்டும். குருவையும் ரக்ஷிக்கட்டும். ஓம் சாந்தி என்று மூன்று தடவை கூறி பிரார்த்தனை முடிவடைகின்றது.

ப்ருகு :—நண்பரே! மூன்று தடவை கூறுவதின் பயன் என்ன?

மாஹாசமஸ்யர் :— தோழரே! வித்யா ப்ராப்திக்கு மூன்று விதமான விக்னங்கள் ஏற்படலாம். அவைகளை நீக்க மூன்று தடவை 'சாந்தி' ஜபிக்கப்படுகிறது.

ப்ராசீனயோக்யர் :—அப்படியா? மூன்று விதமான இடையூறுகள் எவை? விளக்கம் தேவை?

மாஹாசமஸ்யர் :—ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்று துன்பங்கள் மூன்று வகைப்படும்,

நம்மிடமே தோன்றும் வியாதி, சோம்பல் முதலியவை ஆத்யாத்மிகமான விக்னங்களாகும். மழை, இடி, காற்று முதலிய இடையூறுகள் சூழ்நிலையில் தோன்றுவன. நமது புலன்களுக்குத் தெரிபவை. இவைகள் ஆதி பௌதிகம் என்ற வகையில் சேரும். இந்த இரண்டு பாகுபாட்டில் அடங்காததும் நம்முடைய அறிவிற்கெட்டாத, அதிருஷ்டமான விக்னங்கள் ஆதி தைவிகமெனப்படும். இந்த இடையூறுகள் தைவத்தால் நிகழ்பவை. இப்படிப்பட்ட மூவகையான இன்னல்களும் அறவே ஒழிந்து முக்காலத்திலும் அமைதியும் இன்பமும் நிலவுக என்பதே பிரார்த்தனையின் முடிவு.

வைசம்பாயனர் :— குழந்தைகளே! பொருளும் விளக்கமாகக் கூறப்பட்டது புதிதாகச் சேர்ந்தவர்களும் நன்று புரிந்துகொண்டிருப்பார்களென்று நினைக்கிறேன்.

ப்ருகு :— ஐயனே! சாந்தி பாடத்தை சரியாக அறிந்துகொண்டேன். மேலும் பாடம் கேட்க அவா மிகுதியாக இருக்கின்றது. கிருபை புரியவேண்டும்.

வைசம்பாயனர் :— வத்ஸா! உன் பிதா வருணர் எனது அத்யந்த நண்பர். நாங்களிருவரும் ஆதியில் வேதவ்யாஸ பகவானிடமிருந்து வேதங்களைக் கற்றோம். பின்னல் ஜனகமஹாராஜனது வேண்டுகோளுக்குச் செவிமடுத்து நான் இங்கு வந்தேன். அவர் ஹரித்துவாரத்தில் தங்கிவிட்டார். அவர் பெரிய குலபதி. அப்படியிருந்தும் தன்னுடைய ஒரே மகனை எனது ஆசிரமத்திற்குக் குருகுலவாஸம் செய்ய அனுப்பியது ஆச்சர்யமாயிருக்கிறது.

ப்ராசீனயோக்யர் :— ஸ்வாமீ! கல்வி கற்பதற்குப் பெற்றோரை விட்டு அகன்று வஸிக்கவேண்டும் என்ற பெரிய உண்மையை வலியுறுத்தவே, ப்ருகுவை இங்கே அனுப்பியுள்ளார்கள். என்னையும் கூடத் துணைக்கு அனுப்பிவைத்தார்கள்.

ப்ருகு :— அதுவுமன்றி இங்கே கல்வியின் தரமும், கட்டுப்பாடும் உயர்வு என்பது பார் அறிந்த உண்மை ஆயிற்றே!

வைசம்பாயனர் :— காரணம் எதுவாகவோயிருக் கட்டும். உங்களிருவருக்கும் நல்வரவு கூறுகிறேன். எனது சிநேகிதர் அனுப்பியதில் பெருமைகொள்கிறேன். எனக்குத் தெரிந்தவற்றைச் சொல்லிவைக்கிறேன். நீங்கள் எல்லோரும் கவனமாகக்கற்று, மாத்ஸரிய மில்லாமல் ஒற்றுமையுடன் வாழவேண்டும்.

சிஷ்யர்கள் எல்லோரும் :— அப்படியே செய்கிறோம் குருநாதரே!

வைசம்பாயனர் :— குழந்தாய் த்ரிசங்கு, (தியானத்தில் இருந்த த்ரிசங்கு திடுக்கிட்டு விழித்து 'ஓம்' என்கிறார்), இன்று நீ நமது ஆசிரமத்திற்கு வந்திருக்கும் அதிதிகளை உபசரித்துப் பூஜிக்கவேண்டும். போதாயனா! நீ ப்ருகுவையும், ப்ராசீனயோக்யனையும் அழைத்துக் கொண்டு வனத்திற்குச் சென்று ஸமித்துகள், விறகு முதலியவை கொண்டுவரவேண்டும். புதிய சிஷ்யர்களுக்கு முதலில் அதிக சிரமம் கொடுத்துவிடாதே. படிப்படியாகப் பழகவேண்டும். தெரிந்ததா; மேலும் ப்ருகு மிகவும் செல்வமாக வளர்ந்தவன்.

போதாயனர் :- உத்தரவுப்படி செய்கிறேன் ஸ்வாமீ!

வைசம்பாயனர் :— மாஹாசமஸ்யா! நீ வெளியில் போகவேண்டாம். என் அருகில் இருந்து கவனித்து வா. அதுவே போதும். ஹே வைகானஸா!

வைகானஸர் :— ஸ்வாமீ! உத்தரவு கொடுங்கள்.

வைசம்பாயனர் :— குழந்தாய்! காலையில் உன்னிடம் கூறவில்லையா? அதன்படி பாகசாலையில் வேண்டிய கார்யங்களுக்கு ஒத்தாசையாயிருப்பாய். அதிதிகள் நிறைய வந்திருக்கிறார்கள். ஆகையினால் அங்கு வேலை அதிகமிருக்கும்,

வைகானஸர் :— அங்ஙனமே செய்கிறேன்.

வைசம்பாயனர் :— வத்ஸர்களே! இத்துடன் இன்றைய பாடத்தை நிறுத்திக்கொள்வோம். மாத்யான்ஹிக காலம் நெருங்கிவிட்டது. நாளை காலையில் பாடம் தொடங்குவோம்.

(எல்லோரும் சேர்ந்து சாந்தி பாடம் சொல்லுகிறார்கள்)

(திரை விழுகிறது)

காட்சி 2

(திரை விலக)

[வைசம்பாயனரின் ஆசிரமம். குரு, சிஷ்யர்களுக்குப் பாடம் சொல்லிவைக்கிறார்.]

ப்ருகு :— குருநாதரே! ஒரு ஸந்தேஹம்.

வைசம்பாயனர் :— அது என்ன? உடன் கூறு; தெளியவைக்கிறேன்,

ப்ருகு :— ஸ்வாமீ! நேற்று சாந்தி பாடத்திற்குப் பொருள் கூறும்போது, 'நீரே ருதம்', 'நீரே ஸத்யம்' என்று கூறப்பட்டது. ருதம் என்றால் என்ன? ஸத்யம் என்றால் என்ன? இரண்டுக்கும் பொருள் ஒன்றுதானே? விளக்கமாகக் கூற வேண்டுகிறேன்.

வைசம்பாயனர் :— நேற்றே நான் கவனித்தேன். ஒருவரும் பிரஸ்தாபிக்கவில்லை. பொருள் தெரியும் என்று எண்ணிவிட்டேன். போதாயனா! நீ அதன் விளக்கத்தைக் கூறுவாய்.

போதாயனர் :-குருநாதரே! வணக்கம். அப்படியே செய்கிறேன். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் ருதமும் ஸத்யமும் ஒன்றுபோலத்தான் தோன்றும். ஆனால் வேதம் அவசியமில்லாமல் ஒரே பொருளுக்கு இரண்டு பதங்களைக் கூறாது. கூர்ந்து கவனித்தால்

அர்த்த வித்தியாசம் விளங்கும். சாஸ்திரத்தில் கூறியுள்ள காரியத்தை அதில் சொல்லியுள்ளவிதமாகவே கிஞ்சித்தும் மாருமல் செய்வதாக மனதில் உறுதிப் படுத்திக்கொள்வதே ருதமெனப்படும். இவ்வாறு மனதில் தீர்மானித்துக்கொண்டபடி வாக்காலும் சரீரத்தாலும் அதை நடத்திக்காட்டுவது ஸத்யமெனப் படும். ருதமும் ஸத்யமும் உமது அதீனமே. உலகத்தில் காணப்படும் ஒழுங்கும் அழகும் சாஸ்திர விதிக்குக் கட்டுப்பட்டே விளங்குகிறது. அதுதான் ருதம். இந்த ஒழுங்கும் அழகும் இருப்பதற்கு ஆதாரம் ஒன்று உண்டல்லவா! அதுவே ஸத்யம்.

வைசம்பாயனர் :— வத்ஸர்களே! இனி பாடம் தொடங்குவோம்.

शीक्षां व्याख्यास्यामः । वर्णः स्वरः । मात्रा बलम् । साम सन्तानः । इत्युक्तः शीक्षाध्यायः ॥

சீக்ஷாம் வ்யாக்யாஸ்யாம: । வர்ண: ஸ்வர: । மாத்ரா பலம் । ஸாம ஸந்தான: । இத்யுக்த: சீக்ஷாத்யாய: ॥

(குரு முதலில் ஓத சீடர்கள் பின் ஓதுகின்றனர்.)

உபநிஷத்தில் அர்த்தஞானம்தான் பிரதானம். ஆனாலும் அதற்கு உபயோகமாக வர்ணாதி உச்சாரண லக்ஷணங்களை முன்னமே விளக்கிக் கூறியிருக்கிறேன். புதிதாக வந்தவர்களுக்காகவும் உங்களுக்கு நினைவு படுத்துவதற்கும் மீண்டும் சுருக்கமாகக் கூறுகிறேன். 1. வர்ணம், 2. ஸ்வரம், 3. மாத்திரை, 4. பலம், 5. ஸாமம், 6. ஸந்தானம். இப்படியாக சீக்ஷாத்தியாயம் பாகுபடுத்தப்பட்டிருக்கிறது. இவைகளைக் கட்டாயம் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். வைகானஸா! வர்ணம், ஸ்வரம் முதலியவைகளைப் பற்றி உன் நண்பர்களுக்கு விளக்கிக் கூறுவாய்.

வைகானஸர் :— ஸ்வாமியின் சித்தம் அடியேன் பாக்கியம். நண்பர்களே, கேளுங்கள். வர்ணம்—அகாரம்

முதலிய எழுத்துக்கள். ஸ்வரம் என்பது மூன்று வகைப் படும். உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம். ஸ்வரம் மாறினல் பொருளே மாறிவிடும்.

ப்ராசீனயோக்யர் :— ஆமாம் வருண பகவான் கூறி இருக்கிறர். விருத்திராஸுரன் கதையில் ஸ்வரம் மாறிய திஞல் விளைந்த தீமையைப்பற்றி.

வைகானஸர் :— மாத்திரை - அதுவும் முவ்வகைப் படும். ஹ்ரஸ்வம், தீர்க்கம், ப்ளுதம்

ப்ருகு :— பலம் என்ருல் என்ன ?

வைகானஸர் :— எழுத்துக்களை உச்சரிப்பதில் செய்யப்படும் ஸ்ப்ருஷ்டம் முதலான பிரயத்தின விசேஷமே பலம் என்பதாகும். எல்லாவற்றையும்விட முக்கியம் உச்சாரணம். அதுவே ஸாமம் என்பது. ஸந்தானம் என்பது வர்ணங்களின் சேர்க்கை. இந்த சீக்ஷாத்யாயம் மிகவும் முக்கியமாகும்.

ப்ராசீனயோக்யர் :— சிக்ஷா என்பதல்லவா சரியான பதம். எதற்காக 'சீக்ஷா' என்று தீர்க்கமாகச் சொல்லு கிறீர்கள் ?

(வைகானஸர் பதில் கூறமுடியாமல் விழிக்கிருர்.)

வைசம்பாயனர் :— போதாயனு ! உனது நண்பனின் கேள்விக்கு விடை தெரிந்தால் கூறுவாய்.

போதாயனர் :— தெரியவில்லை. சிக்ஷா என்ருலும் சீக்ஷா என்ருலும் பொருள் ஒன்றுதானே ?

வைசம்பாயனர் :— பொருளைப்பற்றிப் பிரச்னை இங்கு எழவில்லை. அந்த எழுத்தில் தீர்க்கம் உபயோகிக்கக் காரணம் என்ன ? மாஹாசமஸ்யா ! அவன் எங்கே காணேம் ?

ப்ருகு :— காலமே ஆசிரமத்துக்கு வந்த அதிதி களுடன் நதிக்கரைக்குச் சென்றிருக்கிருர்.

வைசம்பாயனர் :— மறந்துவிட்டேன். நாளை கார்த்திகை ஞாயிற்றுக்கிழமை வனபோஜனத்திற்கு ஏற்பாடுகள் செய்யச் சொல்லியிருந்தேன். அதற்காகப் போயிருக்கிறான். த்ரிசங்கு தியானத்தில் இருக்கிறான். விழித்தபின்தான் அவனிடம் கேட்கமுடியும். குழந்தாய் ப்ருகு ! உனக்குத்தெரிந்தால் கூறுவாய்.

ப்ருகு :— எனக்குக் கொஞ்சம் ஸந்தேஹமாயிருக்கிறது. என் பூஜ்யபிதாவிடம் வியாகரணம் படித்திருக்கிறேன்.

வைசம்பாயனர் :— ஆமாம். நீ நினைப்பது சரிதான். தைர்யமாகச் கூறுவாய்.

ப்ருகு :— பாஷை வியாகரணம் வேறு. வேத இலக்கணம் வேறு. வேத வியாகரணத்தில் இகாரத்திற்குப் பதில் ஈகாரம் உபயோகிக்கப்படும். வைதிக கிரமத்தை அனுஸரித்து தீர்க்கமாக 'சீக்ஷா' என்று கூறப்பட்டது. சரிதானே, குருநாதரே.

வைசம்பாயனர் :— ரொம்ப சரி, மிகவும் மகிழ்ச்சி. அந்தக்காலத்தில் நாங்கள் படிக்கும்போதும் உன் தந்தை புத்திசாலியாகப் பிரகாசித்தார். நீயும் அவரைப்போல இருக்கிறாய். நீ இங்கு கல்விகற்க வந்தது மிகுந்த பாக்கியமாகும். குழந்தைகளே! நீங்கள் எல்லோரும் இனிமேல் ப்ருகுவிடம் வியாகரணம் கற்றுக் கொள்ளுங்கள். ஸந்தேஹங்களை நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்.

சீடர்கள் :— அப்படியே செய்கிறோம்.

வைசம்பாயனர் :— பாடம் தொடங்குகிறேன். பிரார்த்தனையைக் கூறுங்கள்.

(சீடர்கள் ஓதுகின்றனர்.)

सह नौ यशः। सह नौ ब्रह्मवर्चसम्

ஸஹ நௌ யச: । ஸஹ நௌ ப்ரஹ்மவர்சஸம் ।

வைசம்பாயனர் :— வத்ஸர்களே! அர்த்தம் கூறுகிறேன்- கவனமாய்க் கேளுங்கள். "ஆசார்ய-அந்தேவாஸிகளாகிய நம் இருவரையும் சேர்ந்தே கீர்த்தி அடையட்டும். பிரம்ம தேஜஸ்ஸும் நமக்குச் சேர்ந்தே உண்டாகட்டும்". இதுவே பொருள். இனிமேல் ஸம்ஹிதோபநிஷத் சொல்லப்போகிறேன். ஸம்ஹிதை என்றால் அக்ஷரங்களின் சேர்க்கை, அதாவது சப்தங்கள். அர்த்த விசாரணைக்கு முன்னர் சப்தங்களை உபாஸிப்பது நல்லது. சப்தங்களை நன்றாக அறிந்தபின் அர்த்தஞான விஷயத்தில் பிரயத்தினம் செய்வது சுலபமாயிருக்கும். இப்படி வித்தியாப்யாஸம் செய்வதால் ஏற்படும் 'யசஸ்' அதாவது கீர்த்தி எங்களை அடையட்டும். தர்ம நிமித்தமாகக் கிட்டும் கீர்த்தியே யசஸ் எனப்படுகின்றது. வேதம் ஓதி வாழ்ந்ததின் பயனான பிரம்ம தேஜஸ்ஸும் எம்மை அடையட்டும்.

अथातः सꣳहिताया उपनिषदं व्याख्यास्यामः । पञ्चस्वधिकरणेषु । अधिलोकमधिज्यौतिषमधिविद्यमधिप्रजमध्यात्मम् । ता महासꣳहिता इत्याचक्षते ॥

அதாத: ஸம்ஹிதாயா உபநிஷதம் வ்யாக்யாஸ்யாம: । பஞ்சஸ்வதிகரணேஷு । அதிலோகமதிஜ்யௌதிஷமதி வித்யமதிப்ரஜமத்யாத்மம் । தா மஹாஸம்ஹிதா இத்யாசக்ஷதே ।

ஸம்ஹிதை என்றால் சந்தி அதாவது சேர்க்கை. அதிலோகம், அதிஜ்யௌதிஷம், அதிவித்யம், அதிப்ரஜம், அத்யாத்மம் என்று ஐந்துவிதமான ஆச்ரயங்களுண்டு. அவற்றிற்கு அதிகரணங்களென்று பெயர். லிங்கத்தை பரமசிவனாகவும், ஸாளக்கிராம சிலையை மஹாவிஷ்ணுவாகவும் பாவிப்பதுபோல் நாம் அக்ஷரங்களிலும் இதனடியிற் கூறப்போகிறபடி உபாஸிக்க வேண்டும். எழுத்துக்களின் வரிசையை ஒரு பிரதீக

மாகக்கொண்டு உபாஸிக்க வேண்டும். இப்பழக்கத்தால் ஸ்தூல வடிவங்களில் ஸூக்ஷ்மமான கருத்துக்களைக் காணும் திறன் ஏற்படும்.

போதாயனர் :— ஸ்வாமீ! பஞ்ச அதிகரணங்களைப் பற்றி இன்னும் விளக்கமாகக் கூறவேண்டும்.

வைசம்பாயனர் :— 1. அதிலோகம்–உலகஸம்பந்த முள்ளது. 2. அதிஜ்யௌதிஷம் – ஜ்யோதி ஸம்பந்த மானது. 3. அதிவித்யம் - வித்யாஸம்பந்தம். 4. அதி ப்ரஜம் - பிரஜாஸம்பந்தம். 5. அத்யாத்மம் - சரீர ஸம்பந்தம். இந்த ஐந்தும் மஹாஸம்ஹிதா (பெரிய சேர்க்கை) என்று பெரியோர்கள் கூறுவார்கள்.

இனிமேல் ஒவ்வொன்றிலுமுள்ள ரஹஸ்யமான விஷயங்களைச் சொல்கின்றேன். இதன்படி உபாஸனை செய்யவேண்டும்.

अथाधिलोकम् । पृथिवी पूर्वरूपम् । द्यौरुत्तररूपम् । आकाशः संधिः । वायुः संधानम् । इत्यधिलोकम् ।

அதாதிலோகம் I ப்ருதிவீ பூர்வரூபம் I த்யௌ ருத்தரரூபம் I ஆகாச: ஸந்தி: I வாயு: ஸந்தானம் I இத்யதிலோகம் I

உலகத்தைப்பற்றிக்கூறுமிடத்து பூமி முதல் எழுத்து வடிவம். ஸ்வர்க்கம் பின் எழுத்து வடிவம். ஆகாயம் சந்திக்குமிடம். வாயு சந்தியைச் செய்விப்பது. இங்ஙனம் அதிலோகம். ஏ போதாயன! நீ இதை உபாசித்து வருவாயாக.

போதாயனர் :— அங்ஙனமே ஆகட்டும் ஐயனே !

வைசம்பாயனர் :—

अथाधिज्यौतिषम् । अग्निः पूर्वरूपं । आदित्य उत्तररूपं । आपः सन्धिः । वैद्युतः सन्धानं । इत्यधिज्यौतिषम् ॥

அதாதிஜ்யெளதிஷம் । அக்னி: பூர்வரூபம் । ஆதித்ய உத்தரரூபம் । ஆப: ஸந்தி: । வைத்யுத: ஸந்தானம் । இத்யதிஜ்யெளதிஷம் ।

ஜ்யோதியைப்பற்றிக் கூறுமிடத்து அக்னி பூர்வ ரூபம். ஆதித்யன் உத்தரரூபம். இரண்டும் சந்திக்கு மிடம் ஜலம். ஸந்தியைச் செய்விக்கும் ஸந்தானம் மின்னல். இப்படி அதிஜ்யெளதிஷம். ஏ வைகானஸா, இங்ஙனம் நீ தியானித்துவருவாயாக.

வைகானஸர் :— அவ்விதமே செய்கிறேன் ஸ்வாமீ!

வைசம்பாயனர் :— இனி வித்யையைப்பற்றிக் கூறு கிறேன்.

अथाधिविद्यम् । आचार्यः पूर्वरूपं । अन्तेवास्युत्तररूपं । विद्या सन्धिः । प्रवचनꣳसन्धानं । इत्यधिविद्यम् ॥

அதாதிவித்யம் । ஆசார்ய: பூர்வரூபம் । அந்தே வாஸ்யுத்தரரூபம் । வித்யா ஸந்தி: । ப்ரவசனம் ஸந்தானம் । இத்யதிவித்யம் ।

குரு பூர்வரூபம், சிஷ்யன் உத்தரரூபம், ஸந்தி வித்யை, உபதேசிப்பது ஸந்தானம். குரு முதல் எழுத்து சீடன் பின் எழுத்து. இருவரும் சேருமிடம் வித்யை தானே. இந்த சேர்க்கையை வளர்ப்பது உபதேசம். இந்தப்படி ஒவ்வொரு சொல்லேயும், பொருளேயும், ஸ்தூலமாகவும், ஸூக்ஷ்மமாகவும் காரணமாகவும் ஆராய்ந்து பார்த்தால் படிப்படியாக உயர்ந்த தத்துவங் கள் விளங்கும் ஒவ்வொரு நிலேயிலும் பரம்பொருளேக் காணலாம். பிரியமான ப்ருகுவே, நீ இதை உபாஸிப்பாயாக.

ப்ருகு :— உத்தரவுப்படி உபாஸிக்கிறேன் குரு நாதரே!

வைசம்பாயனர் —

अथाधिप्रजं । माता पूर्वरूपं । पितोत्तररूपं । प्रजा सन्धिः । प्रजननꣳसन्धानम् । इत्यधिप्रजम् ॥

அதாதிப்ரஜம் । மாதா பூர்வரூபம் । பிதோத்தரரூபம் । ப்ரஜா ஸந்தி: । ப்ரஜநநம் ஸந்தானம் । இத்யதிப்ரஜம் ।

பிரஜையைப்பற்றிக் கூறுமிடத்து, தாய் முன் எழுத்து வடிவம். பிதா பின் எழுத்து வடிவம். பிரஜை (குழந்தை) சந்திக்குமிடம். பிறப்பு ஸந்தானம். ஏ ப்ராசீனயோக்யா! நீ இங்ஙனம் தியானித்துவர வேண்டும்.

ப்ராசீனயோக்யர் :— ஸ்வாமீ! அப்படியே செய்கிறேன். ஆயினும் ஒரு ஸந்தேஹம்.

வைசம்பாயனர் :— என்ன அது? உடனே கேள்.

ப்ராசீனயோக்யர் :—மஹத்தான உபநிஷத்தில் பிரம்மத்தைப்பற்றியும் அதன் பிரதீகங்களில் உபாசனை பண்ணவேண்டிய விதங்களையும் சொல்லும் தருணத்தில் பிரஜையைப்பற்றியும் பிரஜனனம்பற்றியும் கூறுவது சரியா?

மற்ற சிஷ்யர்கள் :— நாங்களும் இதுபற்றிக் கேட்க நினைத்தோம்.

வைசம்பாயனர் :—என் அருமைக் குழந்தைகளே, உங்கள் ஸந்தேகத்தை முதலிலேயே கேட்டது நல்லது. மனதில் வைத்துக்கொண்டு தத்தளிப்பதைவிட வெளியில் சொல்லித் தெளிவது நன்மை பயக்கும். நம் முன்னோர்கள் மஹரிஷிகள் ஒருநாளும் இல்லறத்தை வெறுக்கவில்லை. இல்லறத்தை நல்லறமாகவே பேணி வளர்த்தார்கள். பிரம்மசரியம், கார்ஹஸ்த்யம், வானப்பிரஸ்தம், ஸந்நியாஸம் என்று நான்கு ஆசிரமங்களாக வாழ்க்கையை வகுத்து மற்ற மூன்று ஆசிரமிகளுக்கும் ஆதரவுதர க்ருஹஸ்தாச்ரமியிடம் பணித்தார்கள்,

பெண்ணுக்கு மகத்தான ஸ்தானம் சமய வாழ்க்கையில் அளித்தார்கள். பத்தினியில்லாமல் யாகமே செய்ய முடியாது. வைதிக கர்மாக்கள் ஒன்றும் நடவாது மனைவி இல்லாவிடில். புருஷன் மனைவி ஸம்பந்தத்தை ஒரு புனிதமான காரியமாக எண்ணினார்கள் மஹரிஷிகள். பிரபஞ்ச வளர்ச்சிக்கு உறுதுணையாக பிரஜோத்பத்தியை கருதினார்கள்! சிற்றின்பத்தைப்பற்றி எல்லோருக்கும் எடுத்துரைத்து உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி பேரின்பம் காண வழிவகுத்தார்கள். மூடி மறைத்து வைத்து காம உணர்ச்சிகளைப் பெருகவிடாமல், விவாஹம் என்ற ஸம்பந்தத்தை ஏற்படுத்தி யௌவனத்தையும் தர்மத்தையும் காப்பாற்றினார்கள்.

(மாஹாசமஸ்யர் வந்து வணங்கிவிட்டு நிற்கிறார்.)

வைசம்பாயனர் :— வத்ஸா மாஹாசமஸ்யா! உட்கார். வனபோஜன ஏற்பாடுகள் எந்த நிலைமையில் இருக்கின்றன ?

மாஹாசமஸ்யர் :— ஸ்வாமீ! எல்லாம் ஸித்தமாய் இருக்கின்றன. (உட்காருகிறார்)

வைசம்பாயனர் :—

अथाध्यात्मं । अधरा हनुः पूर्वरूपं । उत्तरा हनुरुत्तररूपम् । वाक् सन्धिः । जिह्वा संधानम् । इत्यध्यात्मम् ॥

அதாத்யாத்மம் l அதரா ஹநு: பூர்வரூபம் l உத்தரா ஹநுருத்தரரூபம் l வாக் ஸந்தி: l ஜிஹ்வா ஸந்தானம் l இத்யத்யாத்மம் ll

அத்தியாத்மம் அதாவது தன் சரீரத்தைப்பற்றிக் கூறுமிடத்து கீழுதடு பூர்வரூபம், மேலுதடு உத்தரரூபம். வாக்கு ஸந்திக்குமிடம். ஸந்தியைச் செய்விப்பது நாக்கு. இதுவே அத்தியாத்மம். மாஹாசமஸ்யா, இப்படியாக நீ உபாஸித்து வருவாயாக.

மாஹாசமஸ்யர் :— அங்ஙனமே செய்கிறேன் ஜயனே!

வைசம்பாயனர் :—

इतीमा महासꣳहिताः। य एवमेता महासꣳहिता व्याख्याता वेद। सन्धीयते प्रजया पशुभिः। ब्रह्मवर्चसेनान्नाद्येन सुवर्ग्येण लोकेन ॥

இதீமா மஹாஸம்ஹிதா: I ய ஏவமேதா மஹா ஸம்ஹிதா வ்யாக்யாதா வேத I ஸந்தீயதே ப்ரஜயா பசுபி: I ப்ரஹ்மவர்ச்சஸேநாந்நாத்யேந ஸுவர்க்யேண லோகேந I

இவ்வாருக மஹாஸம்ஹிதைகள் என்னுல் உபதேசிக்கப்பட்டன. இவ்விதமாக எழுந்துக்கள் மேற்கூறப்பட்ட பிருதிவி முதலான பதார்த்தங்கள் என்று பாவித்துணரவேண்டும். விளக்கிக் கூறப்பட்ட மஹாஸம்ஹிதைகளை எவன் உபாஸிக்கிருனே அவன் பிரஜைகள், பசுக்கள், ப்ரஹ்மதேஜஸ், அன்னம், ஸ்வர்க்கலோகம் முதலிய போகங்களுடன் கூடியவன் ஆகிருன். உபாஸிப்பவர்களில் பலனை இச்சிக்கின்றவனுக்கு மேற்கூறியபடி பலன் கிடைக்கின்றது. இச்சியாமல் உபாஸிக்கின்றவனுக்கு பிரம்மவித்யையை அடைவதற்குரிய யோக்யதை கிடைக்கின்றது. வத்ஸர்களே! இத்துடன் இன்றைய பாடத்தை நிறுத்திக்கொள்வோம்.

(திரை விழுகிறது)

காட்சி 3

(திரை விலக)

[வைசம்பாயனரின் ஆசிரமம். யக்ஞசாலையில் த்ரிசங்குவும் வைகானஸரும் ஹோமகுண்டம் அமைக்கிருர்கள். கருட வடிவத்தில் ஹோமகுண்டம் அமைக்கப்படுகிறது. ''ஸ்ரீகாம'' ஹோமம் செய்வதற்கான ஆஜ்யம், ஹவிஸ் முதலிய ஸாமக்ரிகளை எடுத்துவைக்கிருர் போதாயனர், ரிஷிபத்னியும் அவருக்கு உதவியாகக் காரியங்கள் செய்கிருள். வைசம்பாயனர் மாஹாசமஸ்யருடன் பிரவேசிக்கிருர்.]

வைசம்பாயனர் :— ப்ரியே! ஹோமத்திற்கு எல்லாம் தயாராய்விட்டதா?

ரிஷிபத்னி :— ஆர்யபுத்ரரே! எல்லாம் ஸித்தமாகி விட்டது. நல்ல வேளையில் ஹோமம் தொடங்கலாம்.

வைசம்பாயனர் :— ப்ரியே! ஆகட்டும். இன்னும் ஒரு நாழிகை கழித்து ஆரம்பம் செய்யலாம். அதற்குள் ப்ருகு முதலியவர்கள் திரும்பிவிடுவார்கள்.

த்ரிசங்கு :— குருநாதரே! அவர்கள் எங்கே போயிருக்கிறார்கள்?

வைசம்பாயனர்:- வனபோஜனத்திற்கு வந்த முக்ய அதிதிகள் இன்று திரும்பிப் போகிறார்கள். அவர்கள் கூட சென்று—நதிக்கரையோரம்வரை போய்—வழி அனுப்பி வரச்சொன்னேன். ப்ருகுவும் ப்ராசீன யோக்யனும் போயிருக்கிறார்கள்.

வைகானஸர் :— ஸ்வாமீ, எல்லா அதிதிகளும் போய் விட்டார்களா?

வைசம்பாயனர் :— ரதீதாருடைய குமாரர் ஸத்ய வசஸ்ஸும், புருசிஷ்டரின் புத்திரர் தபோநித்யரும் இன்று போகிறார்கள். முத்கலர் பிள்ளை நாகரும் மற்றவர்களும் நாளை போகிறார்கள்.

போதாயனர் :— அவர்கள் மூவரும் சேர்ந்து வந்தார்களே! மஹான் நாகர் மட்டும் இப்போது பிரிந்து தனிமையில் நாளை போகக் காரணமென்னவோ?

ரிஷிபத்னி :— இது தெரியாதா உனக்கு! மஹாராஜர் ஜனகர் வேண்டுகோள்படி இன்று மாலை அவர் ஸதஸ்ஸில் பிரவசனம் செய்யப்போகிறார். அதற்காகத் தங்குகிறார்.

வைகானஸர் :— அப்படியா! ரொம்ப சந்தோஷம். நாமும் அங்கே போய்க் கேட்கலாமே?

வைசம்பாயனர் :- எல்லோரும் போவோம். ஹோம காரியங்களை கவனியுங்கள். ஹே போதாயனா, ஸமித்து போதாது. கொஞ்சம் கூடக் கொண்டுவை! ஹே ப்ரியே, ஆஜ்யம் கோவினுடையது தானே! ஹே வைகானஸா, இந்த தர்ப்பைக்கட்டை கொஞ்சம் இப்படி நகர்த்திவை. ஆஸனப் பலகையை அந்தப் பக்கத்தில் நகர்த்து. ஏ த்ரிசங்கோ! ரித்விக்குகளை அழைத்துவா.

(வைசம்பாயனர் யக்ஞசாலையைச் சுற்றி வந்து மேற்பார்வையிடுகிறார். பின்னர் ஆசிரமத்தின் ஒரு ஓரத்தில் போய் உட்காருகிறார்- கூடவே மாஹாசமஸ்யரும் போகிறார்.)

வைசம்பாயனர் :— வத்ஸா மாஹாசமஸ்யா! அருகில் வா. உனக்கு இப்போது ஒரு மந்திரம் கற்றுத்தரப்போகிறேன். இந்த மந்திரத்தை நீ நன்றாக ஜபித்து ஸித்திபெற்றபின், மற்ற சீடர்களுக்கு உபதேசிக்கவேண்டும்.

மாஹாசமஸ்யர் :— (அடிவணங்கி) குருநாதரே! தன்யோஸ்மி. தங்கள் சித்தம் அடியேன் பாக்யம்.

வைசம்பாயனர் :— அருகில் நெருங்கி உட்கார். (சீடர் அமர்கிறார்) சொல்லுகிறேன் கேள்.

यश्छन्दसामृषभो विश्वरूपः। छन्दोभ्योऽध्यमृतात् संबभूव। स मेन्द्रो मेधया स्पृणोतु। अमृतस्य देव धारणो भूयासम्। शरीरं मे विचर्षणं। जिह्वा मे मधुमत्तमा। कर्णाभ्यां भूरि विश्रुवम्। ब्रह्मणः कोशोऽसि मेधयापिहितः। श्रुतं मे गोपाय॥

யஸ்சந்தஸாம் ருஷபோ விச்வரூப: l சந்தோப்யோ ऽத்யம்ருதாத் ஸம்பபூவ l ஸ மேந்த்ரோ மேதயா ஸ்ப்ருணோது l அம்ருதஸ்ய தேவ தாரணோ பூயாஸம் l சரீரம் மே விசர்ஷணம் l ஜிஹ்வா மே மதுமத்தமா l கர்ணாப்யாம் பூரி விச்ருவம் l ப்ரஹ்மண: கோசோऽஸி மேதயாபிஹித: l ச்ருதம் மே கோபாய l

(ஆசார்யர் சொல்ல சீடனும் திரும்பச் சொல்லுகிறான்.)

வைசம்பாயனர் :— இனி பொருள் கூறுகிறேன் கேள். எது வேதங்களுள் சிறந்ததாக இருக்கிறதோ, ஸர்வரூபமாக இருக்கிறதோ, வேதமாகிய அமிருதத்தினின்றும் உண்டாயிற்றே அந்த ஓங்காரமானது எனக்கு ப்ரஜ்ஞையைக் கொடுக்கட்டும். ஹே தேவ! அமிருதத்துவத்துக்கு ஹேதுவான பிரம்மஞானத்தை நான் தரிக்கச்செய்யவேண்டும். அந்த ஞானத்தைப் பெறத் தகுதியுள்ளதாக பலமுள்ளதாகச் சரீரம் ஆகட்டும். என் நாக்கு தேன் போன்று இனியது ஆகட்டும். மதுரமான வார்த்தைகளையே எப்போதும் உச்சரிக்கட்டும். என் செவி நிறைய நல்ல விஷயங்களைக் கேட்கட்டும். ஹே ஓங்காரமே! நீ பிரம்மத்திற்கு பிரதீகமாக உறைபோல் விளங்குகிறாய். லௌகிக அறிவால் மூடப்பட்டிருக்கிறாய். பிரம்ம ஞானத்தைப்பற்றிய என் அறிவைக் காத்தருள்வாய். ஆத்மஞானார்த்தம் நான் கேட்டிருப்பதை ரக்ஷிப்பாய். அதாவது கேட்டதை மறவாமலிருக்கச் செய்வாய்.

மாஹாசமஸ்யர் :— ஸ்வாமீ, ஓங்காரம் என்று பொருள் கூறினீர்களே! அந்தப்பதமே மந்திரங்களில் வரவில்லையே.

வைசம்பாயனர் :— குழந்தாய், நீ கேட்பது மிகவும் ஸாதுவான கேள்வி விடைகூறுகிறேன் கேள். இந்திரன் என்ற பதம்தான் கூறப்பட்டிருக்கிறது. பசுக்கூட்டத்தின் நடுவில் ரிஷபம்போல் மந்திரங்களினிடை சிறந்து விளங்கும் இந்திரன், என்றால் ஓங்காரம் என்றுதான் அர்த்தம். விசுவரூபம், வேதங்களாகிற அமிருதத்தினின்றும் விசேஷமாய் எழுந்தது இது முதலான மற்றும் பல அடைமொழிகளாலும் ஓங்காரமே குறிக்கப்படுகிறதென்று நிச்சயமாகிறது. ஆகவே ஓங்கார ரூபியாகிய இந்திரன் ஸர்வகாமனைகளுக்கும் சுவாமி — எனக்கு மேதையைத் தரட்டும். நல்ல ஞாபக சக்தி வித்யார்த்திகளுக்கு மிகவும் அவசியம்.

மாஹாசமஸ்யர்:- ஓங்காரத்தை பிரம்மத்தின் உறையாகச் சொன்னீர்களே. சரியாகப் புரியவில்லை. விளக்கமாகக் கூறவேண்டுகிறேன்.

வைசம்பாயனர் :—பளபளப்பான வாளுக்கு கோசம் அதாவது உறைபோல் பரமாத்மா (பிரம்மம்) வுக்கு உறையாக பயன்படுகிறது ஓங்காரம். கோசம் எப்படி வாளுக்கு உபலப்தி ஸ்தானமோ அதுபோல் ஓங்காரமும் பிரம்மத்துக்கு பிரதீகம். ஓங்காரத்தை தியானிப்பதும் பிரம்மத்தை தியானிப்பதும் ஒன்றே. நாம் சாதாரணமாய் பேசுவதிலும் பிரதீகத்துக்கு மதிப்பு கொடுக்கிறோம். உதாரணமாக கமண்டலத்தில் ஜலம் வைக்கப்பட்டிருக்கிறது ஜலம் தேவையானால் கமண்டலத்தை எடுத்து வரச்சொல்லுகிறோமே. இங்கே ஜலம் என்பது பிரம்மம்; கமண்டலம் என்பது ஓங்காரம். ஓங்காரத்தினுள்ளில் பிரம்மம் அடங்கியிருக்கிறது. மூடப்பட்டிருக்கிறது. ஆகவே ஓங்காரத்தை தியானிப்பது சாலச்சிறந்தது. இந்த மந்திரங்களை கவனமாக ஜபித்து வருவாய்.

மாஹாசமஸ்யர் :— அப்படியே ஆகட்டும் ஸ்வாமீ!

வைசம்பாயனர் :— உடனே போய் வனபோஜனம் நடந்த நெல்லி மரத்தினடியில் அமர்ந்து ஒரு மண்டலம் ஜபிப்பாயாக. (மாஹாசமஸ்யர் போக எழுந்திருக்கின்றார்.) போகுமுன் நீ இப்போது கற்றதைச் சுருக்கமாகக் கூறிவிட்டுப் போய்வா.

மாஹாசமஸ்யர் :— ஆஞ்ஞைப்படி செய்கிறேன். இந்த மேதாகாமஜபம் ஓங்காரத்தைக் குறித்துச் செய்யவேண்டும். "மந்திரராஜனே! வேதமாகிய அமிர்தத்தின் ஸாரமாகப் பிரம்மாவினால் கண்டுபிடிக்கப்பட்டவரே! நான் அறிவிலும் ஆற்றலிலும் மேம்பட்டு விளங்கவேண்டும். அழியாச் செல்வமாகிய ஆத்மஞானத்தை நான் அடையவேண்டும். உடல் அதற்குத் தகுதியுள்ளதாக இருக்கவேண்டும். தேன் போன்று இனிமையாக நான் பேசவேண்டும். தேன் சொட்டிட

சொல்மாரி பொழியவேண்டும். கேள்விகளில் சிறந்து விளங்கவேண்டும். பெரியோர்கள் முன்னிலையில் அதிகம் பேசாமல் அவர்கள் கூறுவதைக் கேட்கக் காதுகளை எப்போதும் தீட்டி வைத்துக்கொள்ள வேண்டும். பிரம்மத்தைக் கோசம்போல் நீ மறைத்துக் கொண்டிருக்கிருய். எனக்குப் பிரம்மஞானத்தைத் தந்து காப்பாற்றுவாய். அதை மறக்காமலிருக்கவும் அருள்செய்வாய். ஓங்காரமே உனக்கு வணக்கம் ''

வைசம்பாயனர் :— சபாஷ், ரொம்ப நன்ருகச் சொல்லிவிட்டாய். கொஞ்சநாளில் பிரவசனம் செய்வதில் என்னையும் மிஞ்சிவிடுவாய். உன்னுல் நான் மிகவும் பெருமையை அடைகிறேன்.

(தன்க்குள்) என் சீடர்கள் எல்லோருமே அப்படித்தான். யாக்ஞுவல்க்யன் சென்ருனே, அவன் எவ்வளவு புத்திசாலி! த்ரிசங்குவும் ஸாமான்யமானவனு? மிகுந்த மேதாவி. இப்போது மாஹாசமஸ்யனும் முன்னேறிவிட்டான் ரொம்ப சந்தோஷம்.

வத்ஸா, இந்த மந்திரத்தின் ஜபத்தால் புத்தி சக்தியும் ஞாபகசக்தியும் உடலின் வலிமையும் வளரும். புத்தி இல்லாதவனிடம் சரீரபலம் அனர்த்தத்தையே விளைவிக்கும். ஆகையினுல் புத்தியைப் பிரார்த்தித்த பின்னுல்தான் உடல்வன்மை வேண்டப்படுகிறது. இவ்விரண்டிற்குப் பின்னரே ஐசுவரியம் வேண்டப்படுகிறது. போய் ஜபித்து ஸித்தியுடன் திரும்புவாய் ஆசீர்வாதம் பண்ணுகிறேன் போய்வா. (மாஹாசமஸ்யர் நமஸ்காரம் பண்ணிவிட்டுப் போகிருர். ப்ருகுவும் ப்ராசீனயோக்யரும் வருகிருர்கள். த்ரிசங்குவும் ரித்விக்குகளுடன் வருகிருர்).

வைசம்பாயனர் :— வாருங்கள் ஹோமம் ஆரம்பிக்கலாம். (ஹோமகுண்டத்தைச் சுற்றி வைசம்பாயனரும், ரித்விக்குகளும் உட்காருகிருர்கள். பக்கத்தில் சீடர்களும் ரிஷிபத்னியும் ஆசிரமப்பெண்டிரும் நிற்கிருர்கள். மஹரிஷி ஸங்கல்பம் செய்துகொண்டு ஹோமம் செய்ய ஆரம்பிக்கிருர்)

வைகானஸர் :— ஆஜ்யம் இதோ எல்லோருக்கும் தனித்தனியாக வைத்திருக்கிறேன்.

வைசம்பாயனர் :—

ओं आवहन्ती वितन्वाना । कुर्वाणाचीरमात्मनः । वासांसि मम गावश्च । अन्नपाने च सर्वदा । ततो मे श्रियमावह । लोमशां पशुभिः सह स्वाहा । आमायन्तु ब्रह्मचारिणः स्वाहा । विमायन्तु ब्रह्मचारिणः स्वाहा । प्रमायन्तु ब्रह्मचारिणः स्वाहा । दमायन्तु ब्रह्मचारिणः स्वाहा । शमायन्तु ब्रह्मचारिणः स्वाहा । यशो जनेऽसानि स्वाहा । श्रेयान् वस्यसोऽसानि स्वाहा । तं त्वा भग प्रविशानि स्वाहा । स मा भग प्रविश स्वाहा । तस्मिन् सहस्रशाखे । नि भगाहं त्वयि मृजे स्वाहा । यथापः प्रवता यन्ति । यथा मासा अहर्जरम् । एवं मां ब्रह्मचारिणः । धातरायन्तु सर्वतः स्वाहा । प्रतिवेशोऽसि प्र मा भाहि प्र मा पद्यस्व ॥

ஆவஹந்தீ விதந்வாநா l குர்வாணா சீரமாத்மந: l வாஸாம்ஸி மம காவஸ்ச l அந்நபாநே ச ஸர்வதா l ததோ மே ச்ரியமாவஹ l லோமசாம் பசுபி: ஸஹ ஸ்வாஹா l ஆமாயந்து ப்ரஹ்மசாரிண: ஸ்வாஹா l விமாயந்து ப்ரஹ்மசாரிண: ஸ்வாஹா l ப்ரமாயந்து ப்ரஹ்மசாரிண: ஸ்வாஹா l தமாயந்து ப்ரஹ்மசாரிண: ஸ்வாஹா l சமாயந்து ப்ரஹ்மசாரிண: ஸ்வாஹா l யசோ ஜநேऽஸாநி ஸ்வாஹா l ச்ரேயான் வஸ்யஸோऽஸாநி ஸ்வாஹா l தம் த்வா பக ப்ரவிசாநி ஸ்வாஹா l ஸ மா பக ப்ரவிச ஸ்வாஹா l தஸ்மின் ஸஹஸ்ரசாகே l நி பகாஹம் த்வயி ம்ருஜே ஸ்வாஹா l யதாப: ப்ரவதா யந்தி l யதா மாஸா அஹர்ஜரம் l ஏவம் மாம் ப்ரஹ்மசாரிண: l தாதராயந்து ஸர்வத: ஸ்வாஹா l ப்ரதிவேசோऽஸி ப்ர மா பாஹி ப்ர மா பத்யஸ்வ l

(ஸ்வாஹா என்று உச்சரிக்கும் போது ஆஜ்யத்தினால் ஹோமம் செய்கின்றனர்.)

முதல் ரித்விக்கு :—மகரிஷியே. இந்த மந்திரங்களின் பொருள் கூறவேண்டுகின்றேன்.

வைசம்பாயனர் :— குழந்தாய் போதாயனு, நீ இருந்து ஜயாதி முதலிய ஹோமங்களைச்செய்து யதாவத்தாகப் பூஜைகள் செய்து ஸமாப்தி பண்ணிவிடு. மற்றவர்கள் இப்படி வாருங்கள். கொஞ்சம் ஒதுங்கியிருப்போம். அர்த்தம் சொல்லுகிறேன்.

(அதன்படியே ஒதுங்கியிருந்துகொண்டு மஹரிஷி பொருளுரைக்கிருர்.)

வைசம்பாயனர் :— ஸம்பத்தை இச்சிக்கிறவன் செய்யவேண்டிய ஹோம கர்மா இது. ஸ்ரீகாமன் இந்த ஹோமத்தைச் செய்தால் எல்லா பாக்கியங்களும் அவனை வந்தடையும். ஸந்தேஹமே இல்லை. முதலில் மேதையும் அதாவது புத்தி பலமும், தேஹ பலமும் சம்பாதித்துக்கொண்டு தனத்துக்கு பிரார்த்திக்க வேண்டும். 'எனக்கு ஸௌபாக்கிய ஸ்ரீயை அருள்வாய். எந்த லக்ஷ்மி (சக்தி) வஸ்திரங்களையும், பசுக்களையும் அன்னபானுதிகளையும் விரைவில் தருவாளோ அந்த சக்தியை அருள்வாய். உரோமம் மிக்க ஆடு முதலிய மிருகங்களையும் கால்நடைகளையும் எப்போதும் அளித்து பெருக்கி மேல்மேலும் விஸ்தாரமாக வளரச் செய்வாளோ அந்த ஸ்ரீயை எனக்கு கோக்களுடன் கொடு. ஸ்வாஹா என்னும் சொல் ஹோமம் செய்யும்போது கூறவேண்டும். பிரம்மசாரிகள் என்னை நாடி வரவேண்டும். (என்று பிரார்த்தித்து ஹோமம் செய்கிறேன்) பிரம்மசாரிகள் யாதொரு தடையின்றி வரவேண்டும். பிரம்மசாரிகள் எல்லா திசைகளிலிருந்தும் தொலை தூரங்களிலிருந்தும் வரவேண்டும். இந்திரிய நிக்ரஹம் செய்யும் வன்மையுடைய பிரம்மசாரிகள் வரவேண்டும். சாந்தமான சுபாவமுடைய பிரம்மசாரிகள் வரவேண்டும். விசேஷமாகவும் அதிகமாகவும் பிரம்மசாரிகள் வரட்டும். ஜனங்களுக்குள் நான் கீர்த்தியுடையவனுகவும் மிகுந்த செல்வவந்தனுகவும் விளங்கவேண்டும். ஐயனே! (ஓங்காரமே) நான் உன்னிடத்தில்

பிரவேசிக்கிறேன். நீயும் என்னிடத்தில் பிரவேசி. அதாவது உன்னிடத்தில் நான் ஐக்யமடையவேண்டும். ஆயிரம் கிளைகளுள்ள உன்னிடம் நான் என்னை நீராட்டி மலங்களைப் போக்குகின்றேன் எவ்விதம் ஆழமான இடத்தை நோக்கி ஜலம் போகுமோ, எப்படி மாஸங்கள் சேர்ந்து வருஷத்தைப் பூர்த்தி செய்கின்றனவோ, அவ்விதமே, அனைத்தையும் தாங்கும் ஐயனே! நான்கு திக்குகளிலிருந்தும் பிரம்ம சாரிகள் என்னிடம் வரட்டும். அனைத்திற்கும் சார்விடம் நீயே. நீ எல்லா துக்கங்களையும் பாபங் களையும் போக்கும் ஸ்தானமாய் இருக்கிறாய். ஆதலால் எனக்கு உன் ஸ்வரூபத்தைப் பிரகாசப்படுத்து. என்னை வந்தடைந்து அனுக்ரஹம் செய்வாய். என்னை ஒளிவீசச்செய்து உன்மயமாக்கிக்கொள்வாய்.

முதல் ரித்விக்கு :- மஹரிஷியே, வணக்கம். மிகவும் அற்புதமான மந்திரங்கள். எவ்வளவு அழகாகக் கவிதா ரசமும் அர்த்த புஷ்டியும் பொருந்தியிருக்கின்றன.

ப்ருகு:- ஸ்வாமீ! ஆழமான இடத்தை-பள்ளத்தை நோக்கி ஜலம் பாய்ந்து ஓடிவருவதுபோல் சிஷ்யர்கள் குருவை நாடிவரவேண்டும் என்று அறிந்து கொண்டோம். அஹர்ஜரம் என்ற பதத்திற்கு அர்த்த மும் மாஸங்களைப்போல் சீடர்கள் வரவேண்டுமென்று கூறியதற்கு விளக்கமும் கூறவேண்டுகின்றேன்.

வைசம்பாயனர் :— வத்ஸா! கூறுகிறேன். கவன மாகக் கேள். மாதங்களாலேயே வருஷம் பூர்த்தி ஆவதுபோல் நல்ல சிஷ்யர்களாலேயே குருவின் வாழ்க்கை பூர்த்தியாகவேண்டும். மாதங்கள் வருஷத் திற்குள் அடங்கி வருஷத்தைவிட்டு விலகாதிருப்பது போல் சிஷ்யர்கள் குருவைவிட்டு விலகாதிருக்க வேண்டும். நல்ல புலனடக்கமுள்ள, சாந்த புத்தியுள்ள பிரம்மசாரிகளின் கூட்டுறவால் நல்ல காரியங்களில் முயற்சி ஏற்படும். அதனால் பாவம் தேய்ந்தொழியும். அதனால் ஞானம் ஏற்படும். அஹஸ் என்றால் பகல்,

அஹர்ஜரம் என்றால் ஸம்வத்ஸரம். பகல்—தினம் என்ற ரூபத்தில் லோகத்தை ஜீர்ணமடையச்செய்கிறது. ஆகையினால் வருஷத்திற்கு அஹர்ஜரம் என்ற பெயர் ரொம்பவும் பொருத்தமே.

ப்ராசீனயோக்யர் :— செல்வமும் பிரம்மசாரிகளும் சேர்ந்து வேண்டப்படுவதில் விசேஷ தாத்பர்யம் ஏதாவது உண்டோ?

வைசம்பாயனர் :— செல்வம் பிரார்த்திக்கப்படுவதே தனக்கு வேண்டி அல்லவே. சுயநலமே இங்கில்லை. பிரம்மசாரிகள் நிறைய வரவேண்டும். ஆசிரமத்தில் குருகுலவாசம் செய்து கல்விகற்று பிரம்மநிஷ்டர்களாகவும், ஜனகரைப் போன்ற கிருஹஸ்தாசிரம வாசிகளாகவும் விளங்கவேண்டும். அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்வதற்கே ஐசுவரியம் வேண்டப்படுகிறது. செல்வந்தர்களுள் சிரேஷ்டமான தனிகனாக ஆக வேண்டும் என்பதற்குப் பொருள் என்னவென்றால் நல்ல தர்மங்களுக்கு வாரிவழங்கும் வள்ளலாக வளர வேண்டும் என்பதே. தனம் கிடைப்பதற்காக இந்த ஹோமம். தர்மங்கள் செய்வதற்கு தனம் வேண்டும். தர்மமான கர்மாக்களைச்செய்து பாபங்களைத் தொலைக்க வேண்டும். பாபங்கள் க்ஷீணமடையும்போது ஞானம் உண்டாகும். இந்த அடிப்படையில்தான் இந்த ஹோமம் செய்யப்படுகிறது. கடைசியாக லோஹம் ரஸத்தில் கலந்து மாறுதல் அடைவதுபோல் நான் பிரம்மத்தில் கலந்து அபின்னமாக ஆகவேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டு மந்திரம் பூர்த்தியடைகிறது.

ரிஷிபத்தினி :— போஜன சமயம் நெருங்கிவிட்டது. எல்லோரும் உள்ளே வாருங்கள்.

போதாயனர் :—(எழுந்து வந்து) ஹோமம் ஸமாப்தி பண்ணிவிட்டேன் குருநாதரே.

வைசம்பாயனர்:- சரி உள்ளே போவோம் வாருங்கள்.

(எல்லோரும் போகிறார்கள்)

(திரை விழுகிறது)

காட்சி 4

(திரை விலக)

[வனபோஜன சாலையில் நெல்லி மரத்தினடியில் மாஹா சமஸ்யர் உட்கார்ந்து தியானத்திலிருக்கிறார். முகத்தில் தேஜஸ்ஸும் ஓஜஸ்ஸும் போட்டிபோட்டுக்கொண்டு ஒளி வீசுகின்றன. ப்ராசீனயோக்யரும், வைகானஸரும் பிரவேசிக்கிறார்கள்.]

ப்ராசீனயோக்யர் :— நண்பரே! அதிகாலையில் என்னை இங்கே அவசரமாக அழைத்துவந்த காரணம் என்னவோ?

வைகானஸர் :— மிகவும் முக்கியமானதுதான். நேற்றிரவு குருநாதர் என்னைத் தனிமையில் அழைத்து ஆக்ஞையிட்டார்.

ப்ராசீனயோக்யர் :— அது என்ன உத்தரவு? யாரைப்பற்றியது? எதைக் குறித்து?

வைகானஸர் :— எல்லாம் உம்மைப்பற்றித்தான்.

ப்ராசீனயோக்யர் :— அப்படியா! என்னைக் குறித்தா? சொல்லுங்கள் சீக்கிரம்; அதன்படி நடக்க ஸித்தமாகஇருக்கிறேன்.

வைகானஸர் :— அவஸரம் வேண்டாம். சொல்கிறேன். நண்பரே! வ்யாஹ்ருதிகள் எத்தனை? அவைகளின் பெயர் என்ன? உமக்குத் தெரியுமா?

ப்ராசீனயோக்யர் :— தோழரே! இது மிகவும் ஸாதாரணமான கேள்வி. விடை விபரமாகச் சொல்கிறேன்.

भूर्भुवः सुवरिति वा एतास्तिस्रो व्याहृतयः ।

பூர்புவஸ் ஸுவரிதி வா ஏதாஸ்திஸ்ரோ வ்யாஹ்ருதய: ।

வ்யாஹ்ருதிகள் மூன்று அவை பூ: புவ: ஸுவ: என்பது ரொம்ப பிரஸித்தமாயிற்றே.

வைகானஸர் :— நண்பரே, ரொம்ப சந்தோஷம். நான்காவது வ்யாஹ்ருதி ஒன்று இருக்கிறது. அதன் பெயர் மஹ: என்பது.

तासामु ह स्मैतां चतुर्थीं … … … मह इति ।

தாஸாமு ஹ ஸ்மைதாம் சதுர்த்தீம் … … மஹ இதி ।

ப்ராசீனயோக்யர் :— நான்காவதா? நான் கேட்டதில்லை. புதுமையாயிருக்கிறதே.

வைகானஸர் :— ஆமாம். புதுமைதான். சிலநாட்களுக்கு முன்தான் புதிதாகக் கண்டறியப்பட்டது.

ப்ராசீனயோக்யர் :— ரொம்ப சந்தோஷம். புதிதாக நான்காவது வ்யாஹ்ருதியைக் கண்டுணர்ந்து வெளியிட்ட மஹான் யாரோ? அவர் எங்கிருக்கிருரோ? அவரைக்கண்டு ஸேவை செய்து ஆசியும் உபதேசமும் பெற அலைகிறது என் உள்ளம்.

வைகானஸர் :— நீர் அதற்காக எங்கும் போக வேண்டாம். நம் நண்பர் ஒருவராலேயே அது கண்டு அறியப்பட்டது. அந்த விஷயத்தைத்தான் என்னிடம் நேற்றிரவு குருநாதர் கூறினர்கள்.

ப்ராசீனயோக்யர் :— நம் நண்பர்களில் ஒருவரா? ப்ருகுவா? அவரானல் முதலிலேயே என்னிடம் சொல்லியிருப்பாரே. ஒருவேளை த்ரிசங்குவாக இருக்குமோ? அவர்தான் எப்போதும் தியானத்தில் இருக்கிருர்.

வைகானஸர் :— நீர் சொன்ன இரண்டுபேர்களும் இல்லை. माहाचमस्यः प्रवेदयते । (மாஹாசமஸ்ய: ப்ரவேதயதே) மாஹாசமஸ்யர்தான் அந்த நான்காவது வ்யாஹ்ருதியைக் கண்டறிந்தவர். அதனுல் அதற்கு மஹ: என்று பெயரிடும்படி குருநாதரின் உத்தரவு

ப்ராசீனயோக்யர் :— ஆகா! ரொம்ப ஸந்தோஷம். மேதாகாம ஜபத்தின் மஹிமையே மஹிமை.

வைகானஸர் :- நண்பரே! நான் போய்வருகிறேன்.

ப்ராசீனயோக்யர் :— என்னை இங்கு அழைத்து வந்த காரணம் சொல்லவில்லையே! தனியே விட்டுச் செல்கிறீரே?

வைகானஸர் :— நண்பரே! இந்த விபரங்களைச் சொல்லி மாஹாசமஸ்யரிடம் உம்மை கொண்டுவிடும்படி தான் எனக்குக் குருவின் உத்தரவு. மற்ற விஷயங்களை மாஹாசமஸ்யர் உபதேசிப்பார். நான் வருகிறேன். (போகிருர்)

(ப்ராசீனயோக்யர் மாஹாசமஸ்யர் அருகில் சென்று வணங்கி நிற்கிருர் கைகூப்பி.)

மாஹாசமஸ்யர்:—(சிறிது நேரம் கழித்து கண்விழித்து) ப்ராசீனயோக்யரா! வாரும் உட்காரும்.

ப்ராசீனயோக்யர் :—(அமர்ந்து கொண்டு) ஸ்வாமீ, வ்யாஹ்ருதிகளைப்பற்றி உபதேசிக்கவேண்டும்.

மாஹாசமஸ்யர் :— ஆகட்டும்.

मह इति । तद्ब्रह्म । स आत्मा । अङ्गान्यन्या देवताः । भूरिति वा अयं लोकः । भुव इत्यन्तरिक्षम् । सुवरित्यसौ लोकः । मह इत्यादित्यः । आदित्येन वाव सर्वे लोका महीयन्ते ॥

மஹ இதி । தத் ப்ரஹ்ம । ஸ ஆத்மா । அங்காந்யந்யா தேவதா: । பூரிதி வா அயம் லோக: । புவ இத்யந்தரிக்ஷம் । ஸுவரித்யஸௌ லோக: ! மஹ இத்யாதித்ய: । ஆதித்யேந வாவ ஸர்வே லோகா மஹீயந்தே ।

பூ: புவ: ஸுவ: என்ற மூன்று வ்யாஹ்ருதிகள் பிரசித்தமானவை. நான்காவது மஹ: என்னும் வ்யாஹ்ருதி. அதுவே பிரம்மம். பிரஹ்மம்போல் மிகப் பெரியது அதுவே ஆத்மா, மற்றவைகளை வியாபித்து இருப்பது. மற்ற தேவதைகள் முதலானவை அங்கங்கள் போன்றவை. சரீரத்திலுள்ள அவயவங்களைவிடச்

சேதனனுன ஆத்மா எவ்விதம் மேலானவனே, அவ்வாறே மற்றெல்லா வியாஹ்ருதிகளைவிட நான்காவதான மஹ: என்னும் வியாஹ்ருதி சிரேஷ்டமானது. பூ: இந்த லோகம்; புவ: அந்தரிக்ஷம், ஸுவ: என்பது அந்த ஸ்வர்க்க லோகம்; சூரியனே மஹ: சூரியனுல் அன்றோ எல்லா உலகங்களும் மகிமையடைகின்றன. இப்படியாக அதிலோக நிலையில் வியாஹ்ருதிகளை உபாஸிக்கவேண்டும்.

ப்ராசீனயோக்யர் :— அதிஜ்யௌதிஷம் முதலிய மற்ற நிலைகளில் உபாஸனை செய்யவேண்டியவிதங்களைப்பற்றியும் விபரமாகக் கூற வேண்டுகிறேன்.

भूरिति वा अग्निः । भुव इति वायुः । सुवरित्यादित्यः । मह इति चन्द्रमाः । चन्द्रमसा वाव सर्वाणि ज्योती ँ षि महीयन्ते ॥

भूरिति वा ऋचः । भुव इति सामानि । सुवरिति यजू ँ षि । मह इति ब्रह्म । ब्रह्मणा वाव सर्वे वेदा महीयन्ते ॥

भूरिति वै प्राणः । भुव इत्यपानः । सुवरिति व्यानः । मह इत्यन्नम् । अन्नेन वाव सर्वे प्राणा महीयन्ते ॥

ता वा एताश्चतस्रश्चतुर्धा । चतस्रश्चतस्रो व्याहृतयः । ता यो वेद । स वेद ब्रह्म । सर्वेऽस्मै देवा बलिमावहन्ति ॥

பூரிதி வா அக்னி: l புவ இதி வாயு: l ஸுவரித்யாதித்ய: l மஹ இதி சந்த்ரமா: l சந்த்ரமஸா வாவ ஸர்வாணி ஜ்யோதீகும்ஷி மஹீயந்தே ll

பூரிதி வா ருச: l புவ இதி ஸாமானி l ஸுவரிதி யஜூகும்ஷி l மஹ இதி ப்ரஹ்ம l ப்ரஹ்மணு வாவ ஸர்வே வேதா மஹீயந்தே ll

பூரிதி வை ப்ராண: l புவ இத்யபாந: l ஸுவரிதி வ்யாந: l மஹ இத்யந்நம் l அந்நேந வாவ ஸர்வே ப்ராணு மஹீயந்தே ll

தா வா ஏதாஸ்சதஸ்ரஸ்சதுர்தா । சதஸ்ரஸ் சதஸ்ரோ வ்யாஹ்ருதய: । தா யோ வேத । ஸ வேத ப்ரஹ்ம । ஸர்வேऽஸ்மை தேவா பலிமாவஹந்தி ।

பூ: அக்னி; புவ: வாயு; ஸுவ: ஆதித்யன்; மஹ: சந்திரன், சந்திரனால் எல்லா ஜ்யோதிஸ்ஸுகளும் மஹிமையை அடைகின்றன. ருக்வேதம்-பூ:; ஸாம வேதம்-புவ:; யஜுர்வேதம்-ஸுவ: மஹ:-ப்ரஹ்மம் அதாவது ஓங்காரம் பிரணவத்தினாலன்றோ எல்லா வேதங்களும் மகிமை பெருகின்றன. பூ:-பிராணவாயு; புவ:-அபானவாயு; ஸுவ:-வியானவாயு; மஹ:-அன்னம் அன்னத்தினால் ஸகல பிராணன்களும் மஹிமையடைகின்றன. இந்நான்கு வியாஹிருதிகளே ஒவ்வொன்றும் நான்கு நான்காகப்பிரித்துக்காட்டப்பட்டன. அவற்றை எவன் அறிந்து உபாஸிக்கிறானோ அவன் பிரம்மத்தை அறிகிறான். இத்தகைமையடைந்தவனுக்கு தேவர்கள் பலி-கப்பம் கொண்டுவந்து படைப்பார்கள். அதாவது இவனுக்கு வேண்டியதை எல்லாம் தேவர்கள் காணிக்கையாகக் கொண்டுவருவார்கள்.

ப்ராசீனயோக்யர்:— ஸ்வாமீ! நான்கின் நான்கு என்று தொகுத்துச் சொன்னதை விஸ்தாரமாகக் கூறி விளக்கம் தரும்படி வேண்டுகின்றேன்.

மாஹாசமஸ்யர்:— அப்படியே செய்கிறேன். பூ: என்ற வ்யாஹ்ருதியை பூலோகமாகவும், அக்கினியாகவும் ருக்வேதமாகவும், பிராணவாயுவாகவும் சிந்திக்க வேண்டியது. புவ: என்பதை, அந்தரிக்ஷமாகவும், வாயுவாகவும் ஸாமவேதமாகவும், அபானனாயும் உபாசிக்கவும். ஸுவ: என்பதை ஸுவர்லோகமாயும், சூரியனாகவும், யஜுர்வேதமாகவும், வியானனாகவும் தியானிக்கவும். மஹ: என்ற வ்யாஹ்ருதியை ஆதித்யனாகவும், சந்திரனாகவும், பிரணவமாகவும், அன்னமாகவும் சிந்திக்கவேண்டியது. இந்த வ்யாஹ்ருத்யாத்மகமான ப்ரஹ்மத்தை ஹிருதய ஸ்தானத்தில் உபாஸிக்க வேண்டும்.

ப்ராசீனயோக்யர் :— இதைப்பற்றி விரிவாக விளக்க வேண்டுகின்றேன்.

மாஹாசமஸ்யர் :— அங்ஙனமேயாகட்டும்.

स य एषोऽन्तर्हृदय आकाशः। तस्मिन्नयं पुरुषो मनोमयः। अमृतो हिरण्मयः। अन्तरेण तालुके। य एष स्तन इवावलम्बते। सेन्द्रयोनिः। यत्रासौ केशान्तो विवर्तते। व्यपोह्य शीर्षकपाले। भूरित्यग्नौ प्रतितिष्ठति। भुव इति वायौ। सुवरित्यादित्ये। मह इति ब्रह्मणि। आप्नोति स्वाराज्यम्। आप्नोति मनसस्पतिम्। वाक्पतिश्चक्षुष्पतिः। श्रोत्रपतिर्विज्ञानपतिः। एतत्ततो भवति। आकाशशरीरं ब्रह्म। सत्यात्म प्राणारामं मन आनन्दम्। शान्तिसमृद्धममृतम्। इति प्राचीनयोग्योपास्स्व॥

ஸ ய ஏஷோऽந்தர் ஹ்ருதய ஆகாச:। தஸ்மிந்நயம் புருஷோ மநோமய:। அம்ருதோ ஹிரண்மய:। அந்தரேண தாலுகே। ய ஏஷ ஸ்தந இவாவலம்பதே। ஸேந்த்ரயோநி:। யத்ராஸௌ கேசாந்தோ விவர்த்ததே। வ்யபோஹ்ய சீர்ஷகபாலே। பூரித்யக்நௌ ப்ரதிதிஷ்டதி। புவ இதி வாயௌ। ஸுவரித்யாதித்யே। மஹ இதி ப்ரஹ்மணி। ஆப்நோதி ஸ்வாராஜ்யம்। ஆப்நோதி மநஸஸ்பதிம்। வாக்பதிஸ் சக்ஷுஷ்பதி:। ச்ரோத்ரபதிர் விக்ஞானபதி:। ஏதத் ததோ பவதி। ஆகாச சரீரம் ப்ரஹ்ம। ஸத்யாத்ம ப்ராணாராமம் மந ஆநந்தம்। சாந்தி ஸம்ருத்தமம்ருதம்। இதி ப்ராசீனயோக்யோபாஸ்ஸ்வ॥

பிராசீனயோக்யரே! இங்ஙனம் உபாஸிப்பாய். உள் இதயத்தில் ஆகாயமிருக்கிறது. அதில் மனோமயனாகவும் அழிவில்லாதவனாகவும் பொன்போன்று பிரகாசிப்பவனாகவும் உள்ள புருஷன் உறைகின்றான்.

இந்தப் புருஷனை உபாஸிப்பவன் பின்னால் பிரஹ்மத்தை அடையும் மார்க்கத்தைச் சொல்கிறேன்.

ஹிருதயத்திலிருந்து கிளம்பி இரு தாடைகளின் மத்தியில் தொங்கும் மாம்ஸபிண்டத்தின் (உள் நாக்கு) நடுவழியாக மேல்நோக்கி ஸுஷும்னு என்ற நாடி செல்கிறது. இது மூர்த்தாவையடைந்து கபாலங்களை இரு கூறுகளாக ஆக்கிக்கொண்டு மேலே வந்திருக்கிறது, இந்த ஸுஷும்னு நாடி வழியாகத்தான் உபாஸகன் பிரம்மத்தையடைகிருன். அதாவது ஹிருதயத்தில் விளங்கும் மனோமய புருஷனை உபாஸிக்கிறவன் அந்த்ய காலத்தில் ஹிருதயத்திலிருந்து கிளம்பி ஸுஷும்னு நாடி வழியாக மேல்நோக்கிச் சென்று மூர்த்தாவை பேதித்துக்கொண்டு வெளிக்கிளம்புகிருன்.

ப்ராசீனயோக்கியர்:—அற்புதமாயிருக்கிறது. மற்ற ஸ்தானங்களையும் விபரமாகக் கூறுங்கள்.

மாஹாசமஸ்யர்:-இங்ஙனம் வெளிப் புறப்பட்டு, பூ: என்ற வ்யாஹ்ருதி ரூபமாகவுள்ள அக்னியில் சேருகிருன். பிறகு புவ: என்ற வ்யாஹ்ருதிரூபமான வாயுவையும் ஸுவ: என்ற வ்யாஹ்ருதிரூபமான ஆதித்யனையும் சேருகிருன். அதன் பிறகு மஹ: என்ற வியாஹ்ருதிரூபமான பிரம்மத்தில் கலந்துவிடுகிருன். பிரம்ம ஸாக்ஷாத்காரம் பெற்று ஸ்வாராஜ்யத்தைப் பெற்றவனுகின்ருன். எல்லா மனங்களுக்கும் பதியாக ஆகிருன். வாக்கு; கண், காது, விக்ஞானம், இவைகட்கெல்லாம் பதியாகவும் ஆகின்ருன். அஃதாவது ஸர்வாத்மகமான ப்ரஹ்மஸ்வரூபமாக ஆகி எல்லா பிராணி ஸ்வரூபமாக இவன் விளங்குகிறபடியால் இந்திரியங்களேதும் தனக்காக தனியே இல்லாதவனுகவும் எல்லாருடைய இந்திரியங்கள் மூலமாய் அனைத்தையும் அறிபவனுகவுமாகின்ருன். இதற்கும் மேலாகவும் ஆகின்ருன். அது என்னவென்ருல், அழிவில்லாததும், அபரிமிதமான சாந்தி நிறைந்ததும், மனதுக்கு ஆனந்தமளிப்பதும், பிராணனுக்கு அமைதி தருவதும், ஸத்தியத்தையே ஸ்வரூபமாகவும், ஆகாசத்தையே சரீரமாகவும் கொண்ட பிரம்மமாகவே ஆய்விடுகிருன்.

ப்ராசீனயோக்கியர் :— ஸ்வாமி! தன்யனுனேன். உபதேசப்படி ஒழுகுகின்றேன்.

மாஹாசமஸ்யர் :— ரொம்ப சந்தோஷம். ஏதாவது ஸந்தேஹங்கள் இருந்தால் கேட்கலாம். தெரிந்த வரைக்கும் விடை கூறுகின்றேன். அறியாதவற்றை குருநாதரிடம் சென்று கேட்போம்.

ப்ராசீனயோக்யர் :— ஸ்வாமீ! மேதாகாம ஜபத்தில் பிரஹ்மத்தினுடைய பிரணவ சரீரம் சொல்லப்பட்டது. இப்போது வ்யாஹ்ருதி சரீரமும் பிரஹ்மத்தின் உபலப்தி ஸ்தானமும் அதை அடையும் மார்க்கமும் உபதேசிக்கப்பட்டன. விசேஷமாக சந்தேகம் ஒன்றும் இல்லை. ஆனல்—

மாஹாசமஸ்யர் :— அது என்ன ? ஆனல்!

ப்ராசீனயோக்யர் :— அதாவது “ तत्ब्रह्म स आत्मा ” (தத் ப்ரஹ்ம ஸ ஆத்மா) “அதுவே பிரம்மம், அதுவே ஆத்மா” என்று கூறிவிட்டு “ ता यो वेद स वेद ब्रह्म ” (தா யோ வேத ஸ வேத ப்ரஹ்ம) “எவன் அதை அறிகின்ருனே அவன் பிரம்மத்தை அறிகின்ருன்” என்று சொல்வது சரியா? சங்கை தொனிக்கும்படி கூறலாமா ?

மாஹாசமஸ்யர் :— அதில் தவறு ஒன்றுமில்லை. முதலில் நான்காவது வ்யாஹ்ருதி ரூபம் ப்ரஹ்மம் என்று மட்டும்தான் தெரிந்துகொண்டான். ஹிருதயத்தில் விளங்குவது, மனேமயம் முதலான சிறப்புகளைத் தெரிந்துகொள்ளவில்லை. இந்தச் சிறப்புகளுடன் கூட ப்ரஹ்மத்தை உபாஸிப்பவன்தான் பிரம்மத்தை அறிகிருன் என்று பின்னல் கூறப்படுகிறது.

ப்ராசீனயோக்யர் :—ஸ்வாமி, இந்த உபாஸனையின் மூலம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உண்மைப் பொருளைக் காட்டித்தந்தீர்கள். வணக்கம்.

மாஹாசமஸ்யர் :–ஆச்ரமத்துக்குப்போவோம் வாரும்.

(திரை விழுகிறது)

காட்சி 5

(திரை விலக)

[மஹரிஷி வைசம்பாயனரின் ஆசிரமம். மஹரிஷி சீடர்களுக்கு உபதேசம் செய்கிறார்.]

வைசம்பாயனர் :— குழந்தைகளே! உங்களுக்கு ஸர்வமங்களங்களும் உண்டாகட்டும். இதுவரையில் கற்பித்ததை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள், ஹே த்ரிசங்கோ! அவைகளைப் பற்றிச் சுருக்கமாய்ச் சொல்லுவாய்.

த்ரிசங்கு :— பகவானே! நமஸ்காரம். ஆரம்பத்தில் சிக்ஷாத்யாயம் ஓதப்பட்டது. அதன்பிறகு ஸம்ஹிதோபாஸனம். பின்னால் மேதாகாம ஜபமும் ஸ்ரீகாம ஹோமமும் விளக்கப்பட்டன. வ்யாஹ்ருத்யாத்மகமாகப் பிரம்மத்தின் உபாஸனத்தை உபதேசித்தீர்கள்.

வைசம்பாயனர் :—வத்ஸா, மிகவும் ரத்தினச் சுருக்கமாகவும் ஆனால் ஒன்றுகூட விடாமலும் கூறிவிட்டாய். ரொம்ப சந்தோஷம் இன்று அந்த பிரம்மத்துக்கே பாங்க்த ஸ்வரூபமாக உபாஸனம் சொல்லலாமென்று நினைக்கிறேன்.

த்ரிசங்கு :—ஐயனே! திருவாய் மலர்ந்தருளுங்கள். கேட்கத்தயாராகக் காத்திருக்கிறோம்.

ப்ருகு :—பாங்க்தம் என்றால் என்ன? விளக்க வேண்டும் குருநாதரே.

வைசம்பாயனர் :—குழந்தாய்! பங்க்தி என்ற சந்தஸ்ஸு ஐந்து அக்ஷரங்கள் கொண்டது. இதைக் கொண்டு ஐவகைப்பட்டது எல்லாம் பாங்க்தம் என்று சொல்லப்படுகிறது. பத்னி, யஜமானன், புத்திரன், ஞானம், தனம் இவ்வைந்துகளினாலேயே யக்ஞம் பூர்த்தியாகிறபடியால் யக்ஞத்தை பாங்க்தமென்று

சொல்லுகிறார்கள். இம்மாதிரியாகவே உலகில் ஐவகைப் பட்டது எல்லாம் பாங்க்தமாகவும் யக்ஞமாகவும் ஆகிறது. இப்பொழுது பாடம் சொல்கிறேன். சேர்ந்து சொல்லுங்கள்.

पृथिव्यन्तरिक्षं द्यौर्दिशोऽवान्तरदिशाः । अग्निर्वायुरादित्यश्चन्द्रमा नक्षत्राणि । आप ओषधयो वनस्पतय आकाश आत्मा । इत्यधिभूतम् ॥

ப்ருதிவ்யந்தரிக்ஷம் த்யௌர் திசோऽவாந்தரதிசா: 1 அக்னிர் வாயுராதித்யஸ் சந்த்ரமா நக்ஷத்ராணி 1 ஆப ஓஷதயோ வநஸ்பதய ஆகாச ஆத்மா 1 இத்யதிபூதம் 11

பூமி, அந்தரிக்ஷம், வானம், திசைகள், திசை மூலைகள்; அக்னி, வாயு, ஆதித்யன், சந்திரன், நக்ஷத்திரங்கள்; ஜலம், செடிகொடிகள், மரங்கள், ஆகாயம், ஆத்மா (விராட்) இங்ஙனம் அதிபூதம். அதாவது பிரபஞ்சத்தைப்பற்றிய விஷய பஞ்சகம். நாம் காணும் உலகில் பல கூறுகள் ஐந்தைந்தாகத் தொகுக்கப்பட்டுக் காண்கின்றன. அதுபோலவே அத்யாத்மத்திலும் ஐந்தைந்தாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. என்னவெனில் கூறுகிறேன். கேளுங்கள்.

अथाध्यात्मम् । प्राणो व्यानोऽपान उदानः समानः । चक्षुः श्रोत्रं मनो वाक्त्वक् । चर्म माँसँ स्नावास्थि मज्जा । एतदधिविधाय ऋषिरवोचत् । पाङ्क्तं वा इदँ सर्वम् । पाङ्क्तेनैव पाङ्क्तँ स्पृणोतीति ॥

அதாத்யாத்மம் 1 ப்ராணோ வ்யாநோऽபாந உதாந: ஸமாந: 1 சக்ஷு: ச்ரோத்ரம் மநோ வாக் த்வக் 1 சர்ம மாம்ஸம் ஸ்நாவாஸ்தி மஜ்ஜா 1 ஏதததிவிதாய ருஷிரவோசத் 1 பாங்க்தம் வா இதம் ஸர்வம் 1 பாங்க்தேனைவ பாங்க்தம் ஸ்ப்ருணோதீதி 11

அத்யாத்மத்திலும் (தன்னைப்பற்றிய விஷயபஞ்சகமாவது) பிராணன், வியானன், அபானன், உதானன்

ஸமானன்; கண், காது, மனம், வாக்கு, மெய்; தோல், மாம்ஸம், தசை, எலும்பு, மஜ்ஜை (எலும்புக்குள் இருக்கும் பசை) இவையும் ஐந்தைந்தாகவே விளங்குகின்றன. இவைகளில் நேத்திரம், சுரோத்திரம், மனஸ், வாக்கு, த்வக்கு இவ்வைந்தும் இந்திரிய பாங்க்தங்களாம். தோல், மாம்ஸம், எலும்பு முதலிய ஐந்தும் தாது பஞ்சகமாகும். முதலில் சொன்ன பிராணன், வியானன், அபானன், உதானன், ஸமானன் இவ்வைந்தும் வாயு பாங்க்தங்களாகும். இப்படியாக அத்யாத்மத்திலேயே மூன்று பாங்க்தங்களிருக்கின்றன.

வைகானஸர் :— அதிபூத பாங்க்தங்களிலும் இது போல் தொகுதியாகப் பிரித்துக் கூறவேண்டுகிறேன்.

வைசம்பாயனர் :— வத்ஸா! ஆகட்டும் அவ்விதமே கூறுகிறேன். பூமி, அந்தரிக்ஷம், ஆகாயம், நேர் திக்குகள் மூலை திக்குகள் இவ்வைந்தும் லோக பஞ்சகமாகும். அதுபோல் அக்கினி, வாயு, சூரியன், சந்திரன், தாரகைகள் இந்த ஐந்தும் தேவதா பாங்க்தமாகும். ஜலம், செடிகொடி, விருக்ஷம், ஆகாசம், ஆத்மா (விராட்ஸ்வரூபி) இவ்வைந்தும் பூதபாங்க்தங்களாகும். இந்தப்படி லோகபாங்க்தம், தேவதா பாங்க்தம், பூத பாங்க்தம் என்ற மூன்று தொகுதிகளும் அதிபூத பாங்க்தங்களென்று சொல்லப்படும்.

போதாயனர் :— ஸ்வாமீ! பாங்க்தங்களைப் பற்றி விரிவாகத் தெரிந்துகொண்டேன். பிரம்மமாக உபாஸிக்கும் விதத்தை விளக்கும்படி வேண்டுகிறேன்.

வைசம்பாயனர் :— வானிலுள்ள ஐந்தும், மண்ணிலுள்ள ஐந்தும், உடலிலுள்ள ஐந்தும் வைத்து வைத்துப் பார்க்க ஆனந்தபரவசம் ஏற்படும். வெளியில் இருக்கும் பாங்க்தங்களை அறிய அத்யாத்மத்தில் ஐந்து கூறுகள் இருக்கின்றன. அதிபூதத்தில் உள்ள ஸ்பரிசம் முதலிய ஐந்து விஷயங்களை அறிய உடலிலும் ஐந்து இந்திரியங்கள் இருக்கின்றன. இவ்வாற்றால்

அதிபூதமும் அத்யாத்மமும் ஒன்றேயென வெவ்வேறு நிலையில் உபாஸிக்கவேண்டும்.

ப்ராசீனயோக்யர் :— ஆமாம். அண்டத்திலும் பிண்டத்திலும் ஒன்றே விளங்குகின்றது.

வைசம்பாயனர் :—வெளியில் மூன்று பாங்க்தங்கள் உள்ளன லோகம், தேவதா, பூதம். இவ்வாறு உள்ளேயும் சரீரத்திலும் மூன்று பாங்க்தங்கள் உள்ளன வாயு, இந்திரியம், தாது. இவ்வாறு உள் பாங்க்தம்போல் வெளிப் பாங்க்தமும் மூன்ருகவே இருப்பதால் உள்ளேயுள்ள மூன்று பாங்க்தங்களால் வெளியிலுள்ள பாங்க்தங்கள் நிறைவுபெறுகின்றன. ஆகவே எல்லா பாங்க்தங்களும் ஒரே ஸ்வரூபமாகத் தோன்றுவதாலும் இந்த ஆறு பாங்க்தங்களில் உலகம் முழுவதும் அடங்கி விடுகிறபடியாலும் பாங்க்தமான ஜகத்ரூபமான ப்ரஹ்மமாக நான் இருக்கிறேன் என்று தியானம் செய்கிறவன் பிரஜாபதியாக ஆகிருன்

ப்ருகு :— குருநாதரே! எல்லாம் பாங்க்தம். (இதம் ஸர்வம் பாங்க்தம்) என்று அறிந்தவன் பிரஜாபதியாகவே ஆகிவிடுகிருன் என்று அறிந்தேன். மேலும் நாங்கள் அறியவேண்டியதை உபதேசிக்க வேண்டுகிறேன்.

வைசம்பாயனர் :- வத்ஸா! அப்படியே உபதேசிக்கிறேன். கவனமாய்க் கேளுங்கள்.

“ओमिति ब्रह्म । ओमितीदꣳ सर्वम् । ओमित्येतदनुकृति ह स्म वा अप्यो श्रावयेत्याश्रावयन्ति । ओमिति सामानि गायन्ति । ओꣳशोमिति शस्त्राणि शꣳसन्ति । ओमित्यध्वर्युः प्रतिगरं प्रति-गृणाति । ओमिति ब्रह्मा प्रसौति । ओमित्यग्निहोत्रमनुजानाति । ओमिति ब्राह्मणः प्रवक्ष्यन्नाह ब्रह्मोपाप्नवानीति । ब्रह्मैवोपाप्नोति ॥

ஓமிதி ப்ரஹ்ம 1 ஓமிதீதம் ஸர்வம் 1 ஓமித்யேததனுக்ருதி ஹ ஸ்ம வா அப்யோ ச்ராவயேத்யாச்ராவயந்தி 1

ஓமிதி ஸாமாநி காயந்தி। ஓம் சோமிதி சஸ்த்ராணி சம்ஸந்தி। ஓமித்யத்வர்யு: ப்ரதிகரம் ப்ரதிக்ருணாதி। ஓமிதி ப்ரஹ்மா ப்ரஸெளதி। ஓமித்யக்னிஹோத்ரமனு ஜாநாதி। ஓமிதி ப்ராஹ்மண: ப்ரவக்ஷ்யந்நாஹ ப்ரஹ்மோபாப்நவாநீதி। ப்ரஹ்மைவோபாப்நோதி॥

இப்போது எல்லா உபாஸனங்களுக்கும் அங்கமான ஓங்காரத்தின் உபாஸனம் கூறுகின்றேன். ஓங்காரத்தை பரப்பிரம்மமாக பாவித்து உபாஸிக்கவேண்டும். அது சப்த மாத்திரமாக இருந்தாலும் பரமாயும் அபரமாயும் உள்ள ப்ரஹ்மத்தை அடைவதற்கு ஸாதனமாக விளங்குகிறது. இனி பொருள் விளக்குகிறேன். 'ஓங்காரமே பிரம்மம். ஓங்காரமே இது எல்லாம். ஒருவன் இன்ன காரியத்தைச் செய்கிறேன் அல்லது தேவாலயத்திற்குப் போகிறேன் என்று அனுமதி கேட்டதற்கு மற்றவன் ஓம் என்று சொல்லித்தான் அனுமதி அளிக்கிருன்.

யாகசாலையில் யக்ஞம் நடப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். அங்கே இந்த ஓங்காரம் எப்படியெல்லாம் உபயோகப்படுகிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். 'ஓ ச்ராவய' என்று சொல்கிருர். இங்கு ஓங்காரத்திளுல்தான் ஆக்னீத்ரரைக் கூப்பிட்டு ஹவிஸ் கொடுக்கும் விபரத்தை தேவர்கள் காதில் படும்படி தெரிவிக்கச் சொல்கிருர். ஓம் என்று முதலில் சொல்லிக் கொண்டுதான் உத்காதாக்கள் ஸாமகானம் செய்கின்றனர். 'ஓம் சோம்' என்று சொல்லியே ருக்வேதத்திலுள்ள 'சஸ்த்ர' மந்திரங்களை ஓதுகின்ருர்கள். ஓம் என்றே அத்வர்யு 'ப்ரதிகரம்' எனும் மறுமொழியை ஹோதாவுக்கு அறிவிக்கிருர். பின்னும் ஓம் என்றே பிரம்மாவும் அனுமதி வழங்குகிருர். ஓம் என்னும் சொல்லைக் கூறியே அக்னிஹோத்ரம் செய்வதற்கு அனுஜ்ஞை (அனுமதி) கொடுக்கிருர் வேதத்தை க்ரஹிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் வேதம் பயில வந்த மாணவனும் முதலில் 'ஓம்' என்று

சொல்லியே அத்யயனம் செய்கிருன். இதனுல் இந்த மாணவன் நிச்சயமாக வேதத்தை ஸ்வாதீனம் செய்து கொள்கிருன். ப்ரஹ்மபாவத்தை அடைய விரும்பும் ஸாதகனும் அதற்கு உபாயமாக ஓங்காரத்தையே சொல் கிருன். இந்த ஓங்காரம் மூலமாக ஆத்மஞானம் பெற்று அவன் நிச்சயம் ப்ரஹ்மமாக ஆகிவிடுகிருன்.

த்ரிசங்கு :— ஸ்வாமீ! ஓங்காரத்தின் மஹிமையை அறிந்துகொண்டேன். ஓங்காரபூர்வமாய்த் தொடங்கப் படும் க்ரியைகள் யாவும் பலஸித்தியடைகின்றன என்றும் தெரிந்தேன். ஆகவே ஓங்காரத்தை ப்ரஹ்ம மாக உபாஸித்தால் கூடியசீக்கிரம் பலஸித்தி அடைவோமல்லவா!

வைசம்பாயனர் :— முன் அனுவாகத்தில் ஓங்காரம் பிரம்மத்துக்குக் கோசம்போல் உள்ளது என்று உப தேசிக்கப்பட்டது. இங்கே ஸர்வவிதமான உபாஸனை களுக்கும் ஓங்காரமே அங்கபூதமாக விளங்கிப் பலன் அடையச்செய்கின்றது என்று விவரித்தேன். அது சப்தமாத்திரமாக இருந்தாலும் அதுவே பிரம்மத்தின் பிடிப்பாக—இருப்பிடமாக இருக்கிறது.

மாஹாசமஸ்யர் :— இவ்வளவு மஹிமையுள்ள ஓங்காரத்தைப்பற்றிய பெருமைகளை மேலும் கேட்க விரும்புகின்றது என் உள்ளம். க்ருபைசெய்யவேண்டும் ஐயனே!

வைகானஸர் :— ஆமாம். எனக்கும் ஆவல் மிகுதியாக இருக்கிறது. பூர்த்திசெய்யவேண்டும் ஸ்வாமீ!

சீடர்கள் எல்லாரும் :— எங்களுக்கும் அப்படியே பகவானே!

வைசம்பாயனர் :— குழந்தைகளே! கல்வியில் உங்களுக்குள்ள ஆர்வத்தைப் பார்த்து மிகவும் ஸந்தோஷப்படுகிறேன். ஓங்காரத்தின் பெருமைகளைச் சொல்ல ஆதிசேஷனுலும் முடியாது. ஆயினும் குரு

மூலமாய் நான் அறிந்தவற்றை சுருக்கமாகக் கூறுகிறேன்.

ப்ருகு :—குருநாதரே,! மிகவும் கவனமாகக் கேட்கிறோம். ப்ராசீனயோக்கியரே, அங்கே என்ன பார்க்கிறீர்? அருகில் வாரும்.

ப்ரா்சீனயோக்கியர்:— நண்பரே, உள்ளேயிருந்து அம்மா அவர்கள் கூப்பிடுவதுபோல் தெரிந்தது. கொஞ்சம் கவனித்தேன், அவ்வளவுதான்.

வைசம்பாயனர் :- சித்தம் அழகியவர்களே! விளக்கமாகக் கூறுகிறேன். ஜாக்ரதையாகக் கேளுங்கள். 'ஓம்' என்ற இந்த அக்ஷரமே பிரம்மம். இந்த அக்ஷரமே எல்லாம். சென்றது, நடப்பது, வரப்போவது எல்லாம் ஓங்காரமே. எது முக்காலத்துக்கும் அப்பாலுள்ளதோ அதுவும் ஓங்காரமே. விழிப்பிலும், கனவிலும் உறக்கத்திலும் விளங்குவதும் ஓங்காரமே. அகாரம், உகாரம், மகாரம் என்ற மூன்று எழுத்துக்களின் சேர்க்கையே ஓங்காரம். அதற்கு பிரணவம் என்ற வேறொரு நாமமும் உண்டு.

ப்ருகு: — ஓங்காரத்தின் மகிமையே மகிமை. மேலும் உபதேசம் பண்ணுங்கள் ஸ்வாமீ!

வைசம்பாயனர் :— மனதை பிரணவத்தில் சேர்க்க வேண்டும். பிரணவம் பயமில்லாத பிரம்மஸ்வரூபம். பிரணவத்தை தியானிப்பதில் பயப்படவேண்டாம். ஓங்காரமே அபரபிரம்மம். பரபிரம்மமும் அதுவேயாகும். அதற்குக் காரணம் இல்லை. நாசமில்லை. உள்ளுமில்லை. வெளியுமில்லை. எல்லா ஜந்துக்களின் இதயத்திலும் பிரகாசிக்கும் பிரம்மமே ஓங்காரம். அது துவைதமற்றது. எங்கும் வியாபித்த பிரணவத்தை அறிந்த ஞானி துக்கப்பட வேண்டாம். நீங்களும் ஓங்காரத்தை உபாஸித்து பிரம்ம ஸாக்ஷாத்காரம் அடையுங்கள். உங்களுக்கு பூர்ணமாக ஆசீர்வாதம் பண்ணுகிறேன்.

(எல்லாச் சீடர்களும் எழுந்து 'அபிவாதயே' சொல்லி ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறார்கள். குருவும் தனித்தனியாக ஆசீர்வதிக்கிறார்.)

ரிஷிபத்னி :— (உள்ளேயிருந்து வெளியில் வந்து) ஆர்ய புத்ரரே! வைசுவதேவத்துக்கு எல்லாம் தயாராகி விட்டது. போஜன பதார்த்தங்களெல்லாம் இதற்குள் ஆறிப்போயிருக்கும். சூடோடு சாப்பிட்டால்தானே ருசியாக இருக்கும். வாருங்கள்.

வைசம்பாயனர் :- ப்ரியே! இதோ வந்துவிட்டேன். குழந்தைகளே! இத்துடன் இன்றைய பாடம் முடித்துக் கொள்வோம். சாப்பிடப்போவோம். ப்ரியே! ஆறிப் போனாலும் உன் கைப்பாகத்துக்கு ருசி ஒருநாளும் குறையாது. (சீடர்கள் உள்ளே போகிறார்கள்)

ரிஷிபத்னி :— கேலிப்பேச்சுக்குக் குறைச்சலில்லை. ஒரு விரதம், தீர்த்தாடனம், தேர் திருவிழா ஒன்றும் கிடையாது இந்தக்கட்டைக்கு. (பெருமூச்சு விடுகிறாள்)

வைசம்பாயனர் :— (அருகில் சென்று தடவிக்கொடுத்த படி) ப்ரியே! இப்போது நான் என்ன சொன்னேன் கோபப்பட? பாரததேசத்தில் பெயரும் புகழும் பெற்ற குலபதியின் மகளாகப் பிறந்தாய். புகுந்த இடமும் அப்படியொன்றும் மோசமான இடமாகத் தெரியவில்லையே?

ரிஷிபத்னி :—புகுந்த இடத்தை மோசமாக நான் சொல்லவில்லையே தினமும் விடிந்தால் பூஜை, புரஸ்காரம், அதிதி ஸேவை என்று ஒரேமாதிரியாக வாழ்க்கை நடத்தி அலுப்பு சலிப்பு ஏற்படாதா? தீர்த்தயாத்ரை மற்றும் ஏதாவது பூர்த்த கர்மாக்கள் செய்யக்கூடாதா என்று சொல்ல நினைத்தேன். அவ்வளவுதான். நீங்களே சொல்லுங்கள். நான் இந்த ஆசிரமத்துக்கு வந்து இரண்டு வியாழவட்டம் கழிந்துவிட்டது. மிதிலா நகரத்தைத் தாண்டிப் போயிருப்போமா?

வைசம்பாயனர் :— என்ன அப்படிச் சொல்கிறுய்? போன வருஷம்தானே காசி, ஹரித்வாரம் போய் வந்தோம். ஸூர்ய க்ரஹணம், மஹாளய அமாவாஸ்யை முதலிய புண்யதினங்களில் கங்கை, யமுனே, பல்குனி முதலிய புண்யநதிகளில் ஸ்நானம் செய்து வரவில்லையா ?

ரிஷிபத்னி :— பிராணநாதரே! போன வருஷமா! யாக்ஞவல்க்யன் இருக்கும்போது அழைத்துப்போனுன். அவன் பிரிந்து பத்து வருஷங்களிருக்குமே!

வைசம்பாயனர் :— ஆம் (கண்ணை துடைத்துக்கொண்டு) பத்து வருஷங்களாகிவிட்டன. ஆனுல் நேற்றுப்போல் இருக்கிறது. என்ன செய்வது? எல்லாம் விதிவசம். நானும் அவ்வளவு கோபப்பட்டிருக்கலாகாது!

ரிஷிபத்னி :— அவனும் அப்படி பிடிவாதம் பிடிக்கலாமா! நாரதர் கலகம் நன்மையை விளைவிக்கும் என்பார்கள். அப்படியே எல்லாம் நன்மையாகவே முடிந்து விட்டது. தைத்திரீயோபநிஷத் கிடைத்து விட்டதே அச்சம்பவத்தினுல்.

வைசம்பாயனர் :— ஆமாம். எல்லாம் நன்மையாகவே முடிந்துவிட்டது. ப்ருகுவும் ஸாமான்யமானவனில்லை. அவனைக்கொண்டு தீர்த்தயாத்ரைக்கு அழைத்துப்போகச் சொல்லுகிறேன்.

ரிஷிபத்னி :— சரி ஆகட்டும்; ஆனுல் தாங்களும் கூட வரவேண்டும்.

வைசம்பாயனர் :— அதற்கென்ன வந்துவிட்டால் போகிறது. எங்கே போகவேண்டும் முதலில்?

ரிஷிபத்னி :— புனிதமான காவிரியில் ஸ்நானம் செய்யவேண்டும். ஸ்ரீரங்கநாதரையும், ஸ்ரீராமநாதரையும் தர்சிக்கவேண்டும். தனுஷ்கோடிக்குப் போக வேண்டும்.

வைசம்பாயனர் :— அப்படியே செய்வோம். தை மாஸத்தில் அத்யயனம் பூர்த்திசெய்துவிட்டு தீர்த்-தாடனம் கிளம்புவோம். ஆடி அமாவாஸ்யைக்கு தனுஷ்கோடியில் இருப்போம். திருப்திதானே. (கனைத்தைக் கிள்ளுகிறார்)

ரிஷிபத்னி :— (விலகிக்கொண்டு) பிராணநாதரே! ரொம்ப ஸந்தோஷம். தங்கள் சித்தம் அடியாள் பாக்யம். சாப்பிட வாருங்கள். (போகிறார்கள்)

(திரை விழுகிறது)

முதலாவது அங்கம் முற்றும்

இரண்டாவது அங்கம்

காட்சி 1

(திரை தூக்கப்பட)

[வைசம்பாயனர் ஆசிரமம். ஒருபுறமாக த்ரிசங்கு பத்மாஸனத்தில் அமர்ந்து தியான ஸமாதியிலிருக்கிறார். மற்றொரு பக்கத்தில் வைசம்பாயனர் சீடர்களுக்கு உபதேசம் செய்கிறார்.]

வைசம்பாயனர் :— குழந்தைகளே! கவனித்தீர்களா த்ரிசங்குவின் நிலையை? ஒருமாதமாக இப்படியே தியானத்திலிருக்கிறான்.

ப்ருகு :— ஐயனே! பார்த்தோம். எங்களுக்கும் அந்த நிலை வர அருள்புரியவேண்டும்.

வைசம்பாயனர் :— வத்ஸா ப்ருகு, ரொம்ப ஸந்தோஷம். உனக்கும் ப்ரஹ்மஸாக்ஷாத்கார நிலை கிட்டும்: ஐயப்படவேண்டாம். உனக்குமட்டுமென்ன? என்னுடைய சீடர்களாகிய உங்கள் எல்லோருக்கும் கட்டாயமாகக் கிடைக்கும். அதுமட்டுமா! வேண்டி முயற்சிப்போர் எல்லோரும் அடைவது திண்ணம். ஸ்வாராஜ்யம் அதாவது ப்ரஹ்மநிலை நமது பிறப்புரிமை. அதை யாராலும் தடுத்து நிறுத்த இயலாது.

ப்ராசீனயோக்யர் :— குருநாதரே! விஞ்ஞானத்தி னுலேயே ஸ்வாராஜ்யம் வருமென்று முன்னமே கூறினீர் களே. ஆகையினுல் ச்ரௌதஸ்மார்த்த கர்மங்களைச் செய்யவேண்டாமல்லவா?

வைசம்பாயனர் :—சித்தம் அழகியவனே அது சரியல்ல. அந்தக் கர்மாக்களையும் அவசியம் செய்யத் தான் வேண்டும். அவைகளை அனுஷ்டிப்பதினுல் சித்த சுத்தி உண்டாகிறது. அப்படியாக அவைகளும் புருஷார்த்த ஸாதனமாக ஆகின்றன.

போதாயனர் :—ஸ்வாமீ, நாம் அனுஷ்டிக்க வேண்டிய முக்கியமான கர்மாக்களைப்பற்றித் தெளிவு படுத்தும்படி வேண்டுகிறேன்.

வைசம்பாயனர் :— அப்படியே செய்கிறேன். கவன மாய்க் கேளுங்கள்.

ऋतं च स्वाध्याय-प्रवचने च। सत्यं च स्वाध्याय-प्रवचने च। तपश्च स्वाध्याय-प्रवचने च। दमश्च स्वाध्याय-प्रवचने च। शमश्च स्वाध्याय-प्रवचने च। अग्नयश्च स्वाध्याय-प्रवचने च। अग्निहोत्रं च स्वाध्याय-प्रवचने च। अतिथयश्च स्वाध्याय-प्रवचने च। मानुषं च स्वाध्याय-प्रवचने च। प्रजा च स्वाध्याय-प्रवचने च। प्रजनश्च स्वाध्याय-प्रवचने च। प्रजातिश्च स्वाध्याय-प्रवचने च। सत्यमिति सत्यवचा राथीतरः। तप इति तपोनित्यः पौरुशिष्टिः। स्वाध्याय-प्रवचने एवेति नाको मौद्गल्यः। तद्धि तपस्तद्धि तपः॥

ருதம் ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச। ஸத்யம் ச ஸ்வாத்யாயப்ரவசனே ச। தபச்ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச। தமச்ச ஸ்வாத்யாயப்ரவசனே ச। சமச்ச ஸ்வாத்யாயப்ரவசனே ச। அக்நயச்ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச। அக்னிஹோத்ரம் ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச। அதிதயச்ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச।

மாநுஷம் ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச। ப்ரஜா ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச। ப்ரஜநச்ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச। ப்ரஜாதிச்ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச। ஸத்யமிதி ஸத்யவசா ராதீதர:। தப இதி தபோநித்ய: பௌருசிஷ்டி;। ஸ்வாத்யாய ப்ரவசனே ஏவேதி நாகோ மௌத்கல்ய:। தத்தி தபஸ் தத்தி தப:॥

ருதம் என்பது சாஸ்த்ர ரீதியாகவும் க்ரமமாகவும் நடக்கும்படியான நிச்சயபுத்தி. ஸ்வாத்யாயம் என்பது அர்த்தஞானத்துடன் வேதாத்யயனம் செய்வது. பிரவசனம் என்பது அத்யாபனம் அதாவது சிஷ்யனுக்குச் சொல்லிவைத்தல். பிரவசனத்தில் ப்ரஹ்மயக்ஞ க்ரியையும் அடங்கும். இந்த மூன்றும் அனுஷ்டிக்கப்படவேண்டும். ஸத்யமாய் நடத்தல் உண்மையாகப் பேசுதல் இவைகளும் கைக்கொள்ளப்படவேண்டும். தபஸ் அதாவது க்ருச்ரம், சாந்த்ராயணம் முதலிய வ்ரதங்கள் செய்யப்படவேண்டும். தமம் அதாவது வெளி இந்திரியங்கள் அடக்கப்படவேண்டும், சமம் அதாவது அந்தரிந்த்ரிய நிக்ரஹம் செய்யவேண்டும். அக்னி ஸம்பந்தமான க்ரியைகள் செய்யப்படவேண்டும். அக்னிஹோத்ரமும் அனுஷ்டிக்கப்படவேண்டும் அதிதிகளைப் பூஜிக்கவேண்டும். மாநுஷம் என்ற லௌகிக வ்யவஹாரம் அதாவது விவாஹம் முதலான ஸந்தர்பங்களில் பந்துக்களை உபசரிப்பது முதலான லௌகிக காரியங்களையும் நடத்தவேண்டும். குழந்தை பிறக்க இஷ்டி முதலிய கார்யங்களையும் செய்யவேண்டும். தர்மத்துக்கு விரோதமில்லாமல் ருது காலத்தில் மட்டும் பார்யையிடத்தில் செல்லவேண்டும். புத்ரனுக்கு விவாஹம் செய்வித்து பௌத்ரோத்பத்திக்கான கார்யங்களையும் நடத்தவேண்டும். இவைகளுடன்கூட ஸ்வாத்யாயமும் பிரவசனமும் கைவிடாமல் அனுஷ்டிக்கவேண்டும்.

ப்ருகு :—ஸ்வாத்தியாயமும் பிரவசனமும் மிகவும் முக்கியமானவை என்று காட்டுவதற்கே ஸத்யம் முதற்

கொண்டு ஒவ்வொன்றுடனும் 'ஸ்வாத்யாய ப்ரவசனே ச' என்று கூட்டி சொல்லப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

வைசம்பாயனர் :—ஆமாம் வத்ஸா, சாதாரணமாக வேதத்தில் 'கூறியது கூறல்' என்ற தோஷம் வரவே வராது. ஆனால் இதுமாதிரியான சந்தர்ப்பங்களில் முக்கியத்துவத்தையும் ஆதரவையும் காட்ட மறு முறையும் கூறப்படுகிறது.

வைகானஸர்:—மந்திரங்களில் வருகின்ற ராதீதரர், பௌருசிஷ்டி, நாகர் முதலிய பெயர்களை எங்கோ கேட்டது போலிருக்கிறதே!

போதாயனர் :—எனக்கும் பழக்கமான பெயராகத் தான் தோன்றுகிறது. ஞாபகம் வரவில்லை.

வைசம்பாயனர் :— குழந்தைகளே! அந்த ரிஷிகள் நமக்கு ரொம்பவும் பழக்கமானவர்கள். மற்றவர்களில் யாருக்காவது ஞாபகம் வருகிறதா!

ப்ருகு:— ஐயனே! பல மாதங்களுக்கு முன் வன போஜனத்திற்கு மூன்று ரிஷிகள் வந்திருந்தார்கள் அல்லவா. அவர்கள்தானே இவர்கள்!

வைசம்பாயனர் :- ஸபாஷ்! மெச்சினேன் உன்னை. அவர்கள்தான் இவர்கள்.

ப்ராசீனயோக்யர் :- இந்த ரிஷிகள் என்ன சொல்லு கிறார்கள்? பொருள்கூற வேண்டுகிறேன்.

வைசம்பாயனர் :— மாஹாசமஸ்யா! உன் நண்பர் களுக்குப் பொருள் தெளிவாகக் கூறுவாய்.

மாஹாசமஸ்யர்:- ஸத்திய வாக்கு உடைய ராதீதரர் ஸத்தியமே முக்கியம் என்றார். தவத்திலேயே நிலை பெற்ற பௌருசிஷ்டி தவமே முக்கியம் என்றார். முத்கலரின் புத்திரரான நாகர் ஸ்வாத்தியாயமும் பிரவசனமுமே முக்கியம் என்றார். வேதம் ஓதுதலும்

ஓதுவித்தலுமே சிறந்த தவம் என்பது அவர் கொள்கை ஆகவே 'அதுவே தவம் அதுவே தவம்' என்று கூறி இருக்கிறார்.

வைசம்பாயனர் :—வத்ஸர்களே! எந்த நிலையில் அல்லது எந்த ஆசிரமத்தில் இருந்தாலும் ப்ரஹ்ம நாட்டமுடையவன் ஸ்வாத்யாய ப்ரவசனங்களைக் கைவிடலாகாது. இதுவே சிறந்த தவம். சுருக்கமாகக் கூறினால் வாழ்க்கையை ருதமாயும் ஸத்யமாயும் நடத்தவேண்டும். வேதம் ஓதவேண்டும். ஓதுவிக்கவும் வேண்டும். ப்ரஹ்மயக்ஞமும் தவறாது செய்ய வேண்டும். இந்திரியங்களை ஜயித்து, சாந்தமாக அக்னி கார்யங்களையும், அதிதி பூஜைகளையும் அனுஷ்டிக்கவேண்டும். தவத்துடன் ஜனஸமூகக் கடமைகளையும் செய்யவேண்டும். மக்களைப் பெற்றுக் காத்து பௌத்ரர்கள் பிறந்தபின்னும்கூட ஸ்வாத்யாயத்தையும் பிரவசனத்தையும் விடாது காக்க வேண்டும். ராதீதரரைப்போல் ஸத்யத்தில் நாட்டம் உடையவர்கள் அதை விசேஷ தர்மமாகவும் அனுஷ்டிக்கலாம். பௌருசிஷ்டியின் உள்ளக்கிடக்கையை உகந்தவர்கள் தவத்தைச் சிறப்பாகச் செய்யலாம். மஹரிஷி நாகரின் கொள்கையில் பிரியமுள்ளவர்கள் ஸ்வாத்யாயத்தையும் பிரவசனத்தையுமே சிறந்த தவமாக அனுஷ்டிக்கலாம். எல்லாம் அவரவர் மனப் பண்பையும் ஸௌகர்யத்தையும் பொருத்தவிஷயங்கள்.

ப்ருகு :—ஐயனே! இந்தமாதிரி கர்மாக்களை அனுஷ்டித்து புருஷார்த்தத்தை அடைந்த மஹான்கள் இருக்கிறார்களா?

வைசம்பாயனர் :—குழந்தாய்! அதற்கென்ன சந்தேஹம்? கோடிக்கணக்கான மகரிஷிகள் இருக்கிறார்கள். குலபதிகள் எல்லாரும் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தானே. ஸ்வாத்தியாயத்தாலும் பிரவசனத்தாலும் தவத்தினாலும் மேன்மையடைந்த த்ரிசங்கு இதோ உங்கள் முன்னிலையிலிருக்கிறானே.

(த்ரிசங்கு ஸமாதி கலைந்து ஓம் என்று கூறி எழுந்து வந்து குருவை வணங்குகிறார்)

த்ரிசங்கு :— अहं वृक्षस्य रेरिवा। कीर्तिः पृष्ठं गिरेरिव। ऊर्ध्वपवित्रो वाजिनीव स्वमृतमस्मि। द्रविणं सवर्चसम्। सुमेधा अमृतोक्षितः॥

அஹம் வ்ருக்ஷஸ்ய ரேரிவா। கீர்த்தி: ப்ருஷ்டம் கிரேரிவ। ஊர்த்வ பவித்ரோ வாஜிநீவ ஸ்வம்ருதமஸ்மி। த்ரவிணம் ஸவர்சஸம்। ஸுமேதா அம்ருதோக்ஷித:।

குருநாதரே, அநேக கோடி நமஸ்காரம். போய் வருகிறேன். விடை கொடுங்கள்.

வைசம்பாயனர் :— அருமையான சிஷ்யனே, உனக்கு மங்களமுண்டாகட்டும். அதி உன்னத நிலையை அடைந்துவிட்டாய். பிரம்மத்துடன் இரண்டறக் கலந்து விட்டாய். பத்ரமாய்ப் போய்வா.

(த்ரிசங்கு எல்லோருக்கும் வணக்கம் செலுத்திவிட்டுப் போகிறார்.)

வைசம்பாயனர் :— (கண்களைத் துடைத்துக்கொண்டு தனக்குள்) குலபதியின் வாழ்க்கை சோகமுடையதே. பிரியமுள்ள சீடர்களைப் பிரியவேண்டியிருக்கிறதே !

போதாயனர் :— ஸ்வாமீ ! த்ரிசங்கு சொன்ன மந்திரங்களுக்கு அர்த்தம் கூற வேண்டுகிறேன்.

வைசம்பாயனர் :— इति त्रिशङ्कोर्वेदानुवचनम्॥

இதி த்ரிசங்கோர் வேதாநுவசனம் ॥

இது த்ரிசங்குவின் அனுபவத்திலேற்பட்ட அருள் வாக்கு. இதன் பொருள் பின்வருமாறு :—

'நான் விருக்ஷத்தின் உயிர்நிலை. மலையின் சிகரம் போன்று விளங்குவது என் கீர்த்தி. காரணமாயும் பரம பாவனமாயுமுள்ள பரப்ரம்மம் நானேயாகும். சூரிய

னிடத்தில் உள்ளதுபோன்ற ஆத்ம தத்துவமாக நான் இருக்கிறேன். பிரகாசம் பொருந்திய ஞானமே எனக்கு செல்வம். நல்ல புத்தியே குறையாத அமுதம்.

ப்ருகு :— த்ரிசங்குவானவர் பிரஹ்மானுபவத்தால் தான் பெற்ற பெரும் பேற்றை வாய்விட்டுக் கூறுவதைக் கேட்டோம். மனமகிழ்ந்தோம். விருக்ஷத்தின் உயிர் நிலை என்பதின் தாத்பர்யம் நன்ருகப் புரியவில்லை. விவரிக்க வேண்டும்.

வைசம்பாயனர் :—வத்ஸர்களே, கேளுங்கள். இங்கு விருக்ஷம் என்று குறிப்பிட்டது ஸம்ஸார விருக்ஷம் மேலே வேருள்ளதும் கீழே கிளைகளுள்ளதுமான அசுவத்த மரமாக ஸம்ஸாரத்தை உலகத்தை-வர்ணிப்பது வேதமரபு. ஆகவே பரபிரம்மமாக இருக்கும் நிலையில் இந்த மந்திரங்களை த்ரிசங்கு கூறியிருக்கிருன். மாஹாசமஸ்யா! உரை கூறுவாய்.

மாஹாசமஸ்யர் ;— பிரம்மமாகிய நான் இந்த ஸம்ஸார விருக்ஷத்தின் பிரேரகன் அதாவது அந்தர் யாமியாயிருந்து நடத்துகிறவன். மலையின் உச்சிபோல் என்னுடைய கீர்த்தி உயர்ந்திருக்கிறது. பரிசுத்தமாயும் காரணமாயும் உள்ள ப்ரஹ்மஸ்வரூபமாக நான் இருக்கிறேன். ஸூரியனிடம்போல் என்னிடமும் ஆத்ம தத்வம் விளங்குகிறது. அதேதான் நான். நான் பிரகாசமுள்ள தனமாகவும் சோபனமான புத்தியாகவும் விளங்குகின்றேன். மரணதர்மம் எனக்கு இல்லை. குறைவற்றவனுகவும் இருக்கிறேன். ஆத்மா ஒன்று என்னும் அறிவை அடைதற்குரிய வசனம் இதுவாகும்.

வைசம்பாயனர் :— வத்ஸர்களே! இம்மந்திரத்தை நீங்கள் தினசரி தவருமல் ஜபிக்கவேண்டும். ப்ரஹ்ம வித்யார்த்திகள் ஜபித்தால் ப்ரஹ்மஸாக்ஷாத்காரம் ஸித்திக்கும். மற்றவர்களுக்கு வேதாத்யயனம் செய்த பலன் கிடைக்கும். சித்தசுத்தியும் உண்டாகும்.

ப்ருகு :— ஜபனே! தங்கள் கட்டளைப்படி த்ரிசங்கு கூறியதை நாங்களும் அனுஸந்தானம் செய்கிறோம்.

வைகானஸர் :- அப்படிச் செய்து ஆத்மப்ராப்தியை அடைகின்றோம்.

வைசம்பாயனர் :— சீடர்களே! நீங்கள் இடைவிடாமல் ஜபித்தால் ஞானக்கண் திறக்கும். ப்ரஹ்மத்தை அறிந்த-ப்ரஹ்மத்தில் லயித்த-தரிசங்குவின் வேதானுவசனத்தை ஜபிப்பவர்கள் எல்லோரும் ப்ரஹ்மஞானத்தை அடைவார்கள். இதில் ஐயமே வேண்டாம். தினசரி வேத அத்யயனம் செய்த பலனை இந்த மந்திர ஜபத்தினாலேயே அடையலாம்.

ரிஷிபத்னி :- (ப்ரவேசித்து) ஓதுவிக்கும் சுவாரஸ்யத்தில் காலம்போனது தெரியவில்லையோ! மாத்யான்ஹிக ஸமயம் அதிக்ரமிக்கிறது. வாருங்கள்.

வைசம்பாயனர் :— ப்ரியே, இதோ வருகிறேன். குழந்தைகளே! இன்று பாடம் நிறுத்திக்கொள்வோம்.

(திரை விழுகிறது)

காட்சி 2

(திரை விலக)

[வைசம்பாயனரின் ஆசிரமம். மஹரிஷி சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்கிறார்]

வைசம்பாயனர் :- குழந்தைகளே! வேதாத்யயனம் முடிந்துவிட்டது. இப்போது சில முக்கியமான உபதேசங்களைச் சொல்லுகிறேன்.

वेदमनूच्याचार्योऽन्तेवासिनमनुशास्ति ॥

வேதமநூச்யாசார்யோऽந்தேவாஸிநமநுசாஸ்தி ॥

கவனமாய்க் கேளுங்கள்.

सत्यं वद। धर्मं चर। स्वाध्यायान्मा प्रमदः। आचार्याय प्रियं धनमाहृत्य प्रजातन्तुं मा व्यवच्छेत्सीः। सत्यान्न प्रमदितव्यम्। धर्मान्न प्रमदितव्यम्। कुशलान्न प्रमदितव्यम् भूत्यै न प्रमदितव्यम्। स्वाध्यायप्रवचनाभ्यां न प्रमदितव्यम्॥

ஸத்யம் வத। தர்மம் சர। ஸ்வாத்யாயான் மா ப்ரமத:। ஆசார்யாய ப்ரியம் தநமாஹ்ருத்ய ப்ராஜா தந்தும் மா வ்யவச்சேத்ஸீ:। ஸத்யாத் ந ப்ரமதி தவ்யம்.। தர்மாத் ந ப்ரமதிதவ்யம்। குசலாத் ந ப்ரமதிதவ்யம்। பூத்யை ந ப்ரமதிதவ்யம்। ஸ்வாத்யாயப்ரவசநாப்யாம் ந ப்ரமதிதவ்யம்॥

உண்மை உரைப்பாய். தர்ம வழியில் நட. ஸ்வாத்யாயத்தினின்றும் நழுவுதல் அடையாதே. அஃதாவது அத்யயனம் செய்யாமல் இருக்காதே. மேலும் அத்யயனம் செய்து அறிந்த வேதத்தை ஒருக்காலும் மறக்காதே. தினமும் ப்ரஹ்மயக்ஞத்தில் வேதபாராயணம் செய். குருவிற்குப் பிரியமான தக்ஷிணையைக் கொணர்ந்து கொடுக்கவும். பிறகு அவரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் ஸந்தான பரம்பரை விட்டுப் போகும்படி நடக்காதே. அதாவது விவாஹம் செய்து கொண்டு கிருஹஸ்தாசிரமத்தில் பிரவேசித்து பிரஜோத்பத்தி செய்யாமலிருக்காதே. ஸத்தியத்திலிருந்து மறந்தும் நழுவக்கூடாது. தர்மத்திலிருந்தும் மறந்தும் நழுவாதே. சரீரத்தைக் காப்பாற்றும் காரியங்களிலிருந்து நழுவுதல் கூடாது. ஐசுவர்யத்தையும் மங்களங்களையும் தரும் காரியங்களினின்றும் நழுவாதே. ஸ்வாத்யாய பிரவசனங்களிலிருந்தும் மறந்தும் நழுவுதலடையாதே.

ப்ராசீனயோக்யர் :— ஸ்வாமீ! ஆத்மஞானியாகப் போகிறவனுக்கு கிருஹஸ்தாச்ரமம் முக்கியமா?

ப்ருகு :—ஐயனே! நைஷ்டிக பிரம்மசாரியாக இருக்க விரும்புகிறவனுக்கு 'प्रजातन्तुं मा व्यवच्छेत्सीः' (ப்ரஜாதந்தும் மா வ்யவச்சேத்ஸீ:) என்ற கட்டளை எங்ஙனம் பொருந்தும்? விளக்கம் கூறவேண்டுகிறேன்.

வைசம்பாயனர் :—குழந்தைகளே! உங்கள் ஸந்தேகம் ஸாதுவானதுதான். விடை கூறுகிறேன். ஜனஸமூகத்துக்கு நாமும் நம்முடைய குலமும் செய்ய வேண்டிய கடமை உண்டு. மூன்றுவிதமான கடன்களுடன் நாம் பிறக்கிறோம். தேவர் கடன், ரிஷி கடன் பிதிருகடன் என்பவைகளே அந்த மூன்று ருணங்கள். தவம் யக்ஞம் முதலியவைகளால் தேவர் கடனைத் தீர்க்கிறோம். ஸ்வாத்யாய பிரவசனங்களால் ரிஷி கடனைச் செலுத்துகிறோம். நல்ல பிரஜைகளை உண்டு பண்ணி குடும்ப விருத்தி செய்வதன் மூலம் பிதிரு கடன்களையும் நிறைவேற்றுகிறோம். நல்ல ஸந்ததிகளை உண்டாக்கிக் காப்பாற்றிப் பயிற்சி அளித்துக் கொடுக்க வேண்டியது நமது கடமை. அதுவே நாம் முக்கியமாக ஜனஸமூகத்துக்குச் செய்யும் உத்தமமான ஸேவை. அதை செய்யாவிட்டால் நாம் மனித இனத்துக்குப்பட்ட கடனைத் தீர்க்காதவர்களாவோம். புத்திரன் மூலம் மனித இனத்துக்கு நன்மை ஏற்படுவதுடன் பித்ரு ருணமும் நீங்கிவிடுவதால் எவ்வித இடைஞ்சலுமின்றி ஸுலபமாக மோக்ஷ மார்க்கத்தில் செல்லமுடியும். ஆனால் நைஷ்டிக பிரம்மசாரியாக இருக்க விருப்பமுள்ளவன் கிருஹஸ்தாசிரமத்தில் புகவேண்டாம். ஸந்ததியைத் தயாரிக்காவிட்டாலும் நல்ல சிஷ்ய பரம்பரையைத் தயாரித்துக் கொடுக்கவேண்டியது அவன் கடமை. அவன் விஷயத்தில் பிரஜா தந்து என்பது நல்ல சீடபரம்பரையைக் குறிக்கும்.

போதாயனர் :— ஐயனே! ஸந்தேஹம் தீர்ந்து விட்டது. ஆனால் ஒருவனுக்கு விவாஹம் செய்த பின்னும் ஸந்ததி உண்டாகவில்லையானல் அவன் என்ன செய்வான்? பாவம் இரக்கத்திற்குரியவன்,

வைசம்பாயனர்:— வத்ஸா! புத்ரோத்பத்தி உண்டாகவில்லையென்று வாளா இருத்தல் கூடாது. எப்பாடுபட்டாயினும் புத்ரகாமேஷ்டி முதலிய கர்மாக்களைச் செய்தாவது ஸந்தானமடைய முயற்சி செய்ய வேண்டும்.

வைகானஸர்:— மேலும் நாங்கள் செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி உபதேசிக்கவேண்டும் குருநாதரே!

வைசம்பாயனர்:— ஆகட்டும். ஜாக்கிரதையாகக் கேளுங்கள்.

देव पितृकार्याभ्यां न प्रमदितव्यम् । मातृदेवो भव । पितृदेवो भव । आचार्यदेवो भव । अतिथिदेवो भव । यान्यनवद्यानि कर्माणि । तानि सेवितव्यानि । नो इतराणि । यान्यस्माकँ सुचरितानि । तानि त्वयोपास्यानि । नो इतराणि ॥

தேவபித்ருகார்யாப்யாம் ந ப்ரமதிதவ்யம் I மாத்ருதேவோ பவ I பித்ருதேவோ பவ I ஆசார்யதேவோ பவ I அதிதிதேவோ பவ I யாந்யநவத்யாநி கர்மாணி I தாநி ஸேவிதவ்யாநி I நோ இதராணி I யாந்யஸ்மாகம் ஸுசரிதானி I தாநி த்வயோபாஸ்யானி I நோ இதராணி II

தேவ பித்ரு காரியங்களினின்று மறந்தும் நழுவுதல் கூடாது. தாயைத் தெய்வமாகக்கொண்டு உபாஸி. தந்தையை தெய்வமாகக்கொண்டிரு. குருவையும் தெய்வமாக உபாசிப்பாய். அதிதியை தெய்வமாக பாவித்து உபாஸி. குற்றமற்ற கர்மாக்கள் எவையோ அவைகளையே நீயும் அனுஷ்டிக்கவேண்டும். இகழப்படாத கருமங்கள் யார் செய்தாலும் அவைகள் கைக்கொள்ளத்தக்கன. மற்ற கர்மாக்களைச் செய்யற்க. எங்களிடம் நன்னடத்தைகள் எவையோ அவையே உன்னால் பின்பற்றத்தக்கவை; மற்றவை அன்று. ஒரு காரியம் குரு செய்கிறார் என்பதால் மட்டும் அனுஷ்டிக்கத்

தகுந்தது ஆகாது. கர்மா நல்லதா அல்லது இகழத் தக்கதா என்று ஆராய்ந்து நல்லவைகளைப் பின்பற்றவும் இல்லாவிடில் கைக்கொள்ளவேண்டாம்.

ப்ருகு :— சீடனுக்கு உகந்த உத்தமமான நல்வழி தரும் உபதேசங்களைக் கேட்டு தன்யனானேம். மேலும் திருவாய்மலர்ந்தருள வேண்டுகின்றேன்.

வைகானஸர் :— நாட்டில், வீட்டிற்குள் நடக்க வேண்டிய வழியையும், ஸமூஹத்திற்குச் செய்ய வேண்டிய கடமையையும் பற்றிக் தெளிவாகக் கூறினீர்கள். பெரிய ஸதஸ்ஸில் மஹான்களின் முன்னிலையில் நாங்கள் நடக்கவேண்டிய கிரமங்களை உபதேசிக்க வேண்டுகிறேன் ஐபனே!

வைசம்பாயனர் :— எனது பிரிய சிஷ்யர்களே! சொல்லுகிறேன். கேளுங்கள்.

ये के चास्मच्छ्रेयांसो ब्राह्मणाः । तेषां त्वयाऽऽसनेन प्रश्वसितव्यम् ॥

யே கே சாஸ்மத் ச்ரேயாம்ஸோ ப்ராஹ்மணா: 1 தேஷாம் த்வயாஸநேந ப்ரச்வஸிதவ்யம் 11

ஒரு ஸபையில் எங்களைக்காட்டிலும் சிரேஷ்டர்களான பிராம்மணர்கள் வந்தால் அவர்கள் வீற்றிருக்க ஆஸனம் கொடுத்து உபசரிக்கவேண்டும். அவர்கள் முன்னிலையில் நின்றுகொண்டு அவர்கள் சொல்வதை கவனமாகக் கேட்கவேண்டும். நீ பேசக்கூடாது. மூச்சுக்கூட விடக்கூடாது. பக்தியும் வினயமும் இரண்டு பாதரக்ஷைகள் போல். அவைகளை இளம் வயதிலேயே அணிந்துகொள்ளவேண்டும்.

போதாயனர் :— ஸ்வாமீ! தான தர்மங்கள் செய்யும்போது இருக்கவேண்டிய மனநிலையைப்பற்றியும் கூறவேண்டுகிறேன்.

வைசம்பாயனர்:—உபகாரம் செய்வது உயர்ந்த குணமாகும். ஆனல் அஹங்காரத்துடன் செய்வது அதமமாகும். வேதமாதா கூறுவதை விவரிக்கிறேன்.

ப்ருகு:—கவனமாகக் கேட்கிறோம் குருநாதரே!

வைசம்பாயனர்:—श्रद्धया देयम् । अश्रद्धयादेयम् । श्रिया देयम् । ह्रिया देयम् । भिया देयम् । संविदा देयम् ॥

ச்ரத்தயா தேயம் I அச்ரத்தயாதேயம் I ச்ரியா தேயம் I ஹ்ரியா தேயம் I பியா தேயம் I ஸம்விதா தேயம் II

கொடுப்பதை மிகுந்த சிரத்தையுடன் கொடுக்க வேண்டும். அசிரத்தையுடன் கொடுக்கக்கூடாது. தனது செல்வத்திற்குத் தக்கபடி தாராளமாகக்கொடுக்க வேண்டும். லஜ்ஜையுடன் கொடுக்கவேண்டும். பயத்துடன் கொடு. சினேகத்துடன் கொடு.

போதாயனர்:- சிரத்தையுடன் கொடுக்கவேண்டும், தாராளமாகக் கொடுக்கவேண்டும் என்பதைப் புரிந்து கொண்டோம். கொடுக்கும்போது எதற்காக வெட்கப் படவேண்டும்? எதற்காக பயப்படவேண்டும்?

வைசம்பாயனர்:— குழந்தாய் மாஹாசமஸ்யா! உன் நண்பனின் கேள்விக்கு விடை பகர்வாய்.

மாஹாசமஸ்யர்:- ஆகட்டும் ஐயனே! ஒருவனுக்கு தாராளமாகக் கொடுக்கும் ஸமயத்திலும் அதிகமாகக் கொடுக்கவில்லையே என்று எண்ணி வெட்கப்பட வேண்டும். இது போதுமோ, போதாதோ என்ற தயக்கத்துடன் கொடுக்கும்போது வெட்கம் தானே உண்டாகும். தாதாவென்கிற அகந்தையும் விலகி விடும். நாம் கொடுப்பது ஸரிதானு, தக்க இடத்தில் கொடுக்கிறோமா என்ற விஷயங்களைப்பற்றியும் யோசிக்க வேண்டும். அப்போது பாத்திரத்தின் உயர்வு, தானத்தின் அளவு, கொடுப்பவனின் சிறுமை இவைகளைப்

பற்றி நோக்கும்போது பயம் உண்டாகும். ஆகவே ஆடம்பரமும் படாடோபமும் இல்லாமல், விநயமாகவும் வெட்கத்துடனும் கொடுக்கத்தக்க இடத்தில் கொடுக்காமலிருப்பது தவறு என்ற பயத்துடனும், நல்ல ஸ்நேஹ மனப்பான்மையுடனும் கொடுக்கவேண்டும். இதுவே சிறந்த தானமாகும். இது கொடுப்பவனையும் வாங்குபவனையும் கைதூக்கிவிடும் புண்யகர்மமாகும்.

வைசம்பாயனர் :— ஸௌம்யா! மாஹாசமஸ்யா? ரொம்ப அழகாக விவரித்துவிட்டாய். மிகவும் மகிழ்ச்சி. மேலும் உபதேசம் பண்ணுகிறேன். கேளுங்கள்.

अथ यदि ते कर्मविचिकित्सा वा वृत्तविचिकित्सा वा स्यात् । ये तत्र ब्राह्मणाः सम्मर्शिनः । युक्ता आयुक्ताः । अलूक्षा धर्मकामाः स्युः । यथा ते तत्र वर्तेरन् । तथा तत्र वर्तेथाः । अथाभ्याख्यातेषु । ये तत्र ब्राह्मणाः सम्मर्शिनः । युक्ता आयुक्ताः । अलूक्षा धर्मकामाः स्युः । यथा ते तेषु वर्तेरन् । तथा तेषु वर्तेथाः ॥

அத யதி தே கர்மவிசிகித்ஸா வா வ்ருத்தவிசிகித்ஸா வா ஸ்யாத் I யே தத்ர ப்ராஹ்மணா: ஸம்மர்சிந: I யுக்தா ஆயுக்தா: I அலூக்ஷா தர்மகாமா: ஸ்யு: I யதா தே தத்ர வர்தேரன் I ததா தத்ர வர்த்தேதா: I அதாப்யாக்யாதேஷு I யே தத்ர ப்ராஹ்மணா: ஸம்மர்சிந: I யுக்தா ஆயுக்தா: I அலூர்க்ஷா தர்மகாமா: ஸ்யு: I யதா தே தேஷு வர்த்தேரன் I ததா தேஷு வர்த்தேதா: II

செய்யவேண்டிய காரியத்திலோ அல்லது நடக்கவேண்டிய முறையிலோ ஸந்தேஹம் ஏற்பட்டால், அக்காலத்தில் அந்த தேசத்தில் கர்மாக்களையும் ஆசாரங்களையும் சரிவர நடத்திக்கொண்டு சிறப்புடன் விளங்குபவர்களும் குரூர மதியற்றவர்களுமான பிராம்மணர்கள் எங்ஙனம் ஒழுகுகிறார்களோ அங்ஙனமே நீயும் நட. அந்த பிராம்மணர்கள் தீர விசாரித்து உணரும் திறமை வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் பிறருடைய ஏவுதலுக்குட்படாதவர்களாகவும்

பணத்திற்கோ புகழுக்கோ ஆசைப்படாமல் தெய்வத்திற்கு பயந்து கர்மாவைச் செய்கிறவர்களாயும் தருமத்தில் திடமான பற்றுள்ளவர்களாயுமிருக்க வேண்டும். அவர்கள் நடப்பதைப்போல் நீயும் நடக்க வேண்டும். தவிர குற்றவாளியாக ஸந்தேஹிக்கப் படுபவர்களிடம் நீ நடந்துகொள்ளவேண்டிய விதமும் அவ்விதமேயாகும். அபக்கியாதி ஏற்பட்டவர்களிடம் நடந்துகொள்ளும் விஷயத்திலும் முன் விவரித்த குண நலன்களுள்ள பிராம்மணர்கள் எப்படி நடந்து கொள்கிருர்களோ அவ்விதமே நீயும் நடந்துகொள்ள வேண்டும்.

ப்ருகு; — சாஸ்திர பிரமாணங்களின்படி நடக்க வேண்டும் என்று கூருமல் பிராம்மணர்களின் ஆசாரத்தின்படி நடக்கவேண்டும் என்று கூறக்காரணம் என்னவோ ?

வைசம்பாயனர் :— வத்ஸா ப்ருகு! வாழ்க்கையில் சிக்கலான நிலையில் ஐயங்கள் எழுவது சகஜம். தர்ம ஸங்கடமான நிலைகள் வரும்போது ஸந்தேகங்களைத் தீர்ப்பதற்கு பிரமாணம் நல்லோர் வாழ்க்கையேயாகும். நமது தேசம் பெரிய தேசம். பலவிதமான ஆசாரங்களும் அனுஷ்டானங்களும் தேசத்தின் பல பகுதிகளில் பலவாருகக் காணப்படுகின்றன. தர்க்கம் நிலை கொள்ளாதது. சுருதிகள் வேறுபாடுடையன. பிரமாணங்கள் கூறும் ரிஷிகளும் பலர். தர்மத்தின் தத்வம் புத்தி குஹையில் மறைந்துள்ளது. மஹா புருஷர்கள் எவ்வழியில் சென்ருர்களோ அதுவே சிறந்த மார்க்கம். தர்மப்பற்றும் தயையுங்கொண்ட அந்தணர்களின் வாழ்க்கை முறையைப் பார்த்து ஐயங்களை நீக்கிக்கொள்ளவேண்டும். கேட்டு அறிவது மட்டும் போதாது. அவர்கள் செய்வதைப்போல் செய்யவேண்டும்.

வைகானஸர் :— உயர்ந்த உபதேசங்களை உத்தமமான குருவிடம் கேட்டோம். மேலும் நாங்கள்

கடைத்தேறவேண்டிய மார்க்கங்களை உபதேசிக்க வேண்டுகிறோம்.

வைசம்பாயனர்:— एष आदेशः । एष उपदेशः । एषा वेदोपनिषत् । एतदनुशासनम् । एवमुपासितव्यम् । एवमुचैतदुपास्यम् ॥

ஏஷ ஆதேச: l ஏஷ உபதேச: l ஏஷா வேதோப நிஷத் l ஏததநுசாஸனம l ஏவமுபாஸிதவ்யம் l ஏவமுசைதது பாஸ்யம் l

என் அருமைக் குழந்தைகளே! நாம் இந்த வல்லியின் கடைசி கட்டத்துக்கு வந்துவிட்டோம். வேறு உபதேசம் ஒன்றுமில்லை. இதுவே கட்டளை. இதுவே உபதேசம். இது வேத ரஹஸ்யம். இதுவே ஈசுவர ஆக்ஞை. இவ்வாறே அனுஷ்டிக்கவேண்டியது. இவ்விதமே செய்யததக்கது. வதஸா மாஹாசமஸ்யா! இன்று நடந்த பாடங்களின் ஒரு ரத்னச்சுருக்கத்தை உன் நண்பர்களுக்குக் கூறுவாய்.

மாஹாசமஸ்டர் :— ஐயனே, கட்டளைப்படிக் கூறு கிறேன். வேதாத்யயனம முடிந்த பிறகு குருகுலத்தைத் விட்டுப் போகும்முன், அர்த்தங்களையும் நன்ருக க்ரஹித்துக் கொள்ளவேண்டும். பிரம்மவிக்ஞானத் துக்குமுன் ச்ரெளத ஸ்மார்த்த கர்மாக்களை நியமமாகச் செய்தாலே - கர்மாக்களால் ஸம்ஸ்காரம் செய்யப் பட்டாலே-சித்த சுத்தி ஏற்பட்டு விசுத்தமான ஸத்வ புத்தியுண்டாகும். அவனுக்கே ஆத்மஞானமுண்டாகும் இங்கு ஏழுவிதமான உபதேசங்கள் தரப்பட்டன. (1) தன்னைபபற்றி (2) பிறருடன் ஸம்பந்தப்படும்போது செய்யவேண்டியது (3) உலகத்தில் நல்ல நடத்தை யுடன் வாழ (4) மஹான்களிடத்தில் நடக்கும் விதம் (5) தானம் செய்யும் கிரமம் (6) சிஷ்டாசாரம் எப்போது பிரமாணமாகிறது (7) முன்சொன்ன உபதேசங்களை ஈசுவர ஆக்ஞையாக-வேத ரகஸ்யமாக எல்லாரும் உபாஸிக்கவேண்டும். இதுவே உபாஸ்யம் என்று கூறி நிறைவுபெறுகிறது வேதம்.

வைசம்பாயனர்:— வத்ஸர்களே! இனி சாந்தி பாடம் சொல்லுவோம்.

(எல்லோரும் சேர்ந்து சொல்லுகின்றனர்.)

शं नो मित्रः शं वरुणः । शं नो भवत्वर्यमा । शं न इन्द्रो बृहस्पतिः । शं नो विष्णुरुरुक्रमः । नमो ब्रह्मणे । नमस्ते वायो । त्वमेव प्रत्यक्षं ब्रह्मासि । त्वामेव प्रत्यक्षं ब्रह्मावादिषम् । ऋतमवादिषम् । सत्यमवादिषम् । तन्मामावीत् । तद्वक्तारमावीत् । आवीन्माम् । आवीद्वक्तारम् ।

ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

சந்நோ மித்ர: சம் வருண: 1 சந்நோ பவத்வர்யமா 1 சந்ந இந்த்ரோ ப்ருஹஸ்பதி: 1 சந்நோ விஷ்ணுருருக்ரம: 1 நமோ ப்ரஹ்மணே 1 நமஸ்தே வாயோ 1 த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி! த்வாமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாவாதிஷம் 1 ருதமவாதிஷம் 1 ஸத்யமவாதிஷம் 1 தந்மாமாவீத் 1 தத்வக்தாரமாவீத் 1 ஆவீன் மாம் 1 ஆவீத் வக்தாரம் 1

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: 11

வைசம்பாயனர்:— குழந்தாய் ப்ருகு! சாந்தி பாடத்தின் பொருள் நன்றாக விளங்கிவிட்டதா?

ப்ருகு:— ஆமாம் ஐயனே!

வைசம்பாயனர்:— சொல்லுவாய், கேட்க ஆசைப்படுகிறேன்.

ப்ருகு:— மித்திரன் எங்களுக்கு சுபகாரனாகவும், வருணன் எமக்கு மங்களகாரனாகவும், அர்யமா எங்களுக்கு நலம் அருளுவோனாகவும் இருத்தல் வேண்டும். இந்திரனும் பிருஹஸ்பதியும் மங்களத்தை செய்ய வேண்டும். அனைத்தையும் அளவிடும் அடிகளையுடைய

விஷ்ணு சுபகரனகவும் இருத்தல் வேண்டும். பிரம்மத்திற்கு நமஸ்காரம்! வாயுவே உன்னை வணங்குகிறேன். நீயே கண்கண்ட பிரம்மமாக இருக்கிருய். உன்னையே கண்கண்ட பிரம்மமாகப் போற்றினேன். ருதம் எனப் போற்றினேன். ஸத்தியமெனப் போற்றினேன். அது என்னைக்காக்க வேண்டும். அது (பிரம்மம்) ஆசாரியனையும் காக்கவேண்டும். மீண்டும் பிரார்த்திக்கிறேன். என்னைக் காப்பாற்றவேண்டும். ஆசாரியனையும் காப்பாற்றவேண்டும். ஓம் மூவ்வகையிலும் சாந்தி நிலவுக.

வைசம்பாயனர் :— குழந்தாய்! ப்ருகு! நன்ருகப் பொருள் கூறிவிட்டாய். வேதங்களுக்கும் உரையெழுதும் ஆற்றல்—அறிவுத்திறன்—உனக்குப் பின்னெரு காலத்தில் கிட்டும். பெரிய உரை ஆசிரியனுக வருங் காலத்தில் கீர்த்தியுடன் வாழ்வாயாக. (அப்போது அவசரமாக ஆசிரமவாஸி ஒருவர் வந்து குருநாதரிடம் ரகசியமாக ஏதோ கூறுகின்ருர்) குழந்தைகளே! உங்களுக்கு ஒரு நல்ல சுபமான செய்தி கூறப்போகிறேன். வத்ஸா ப்ருகு! உனக்கும் அதிப்பிரியமான இனிப்பான வார்த்தையாகும் இது.

எல்லாச்சீடர்களும் :—(ஆவலுடன்) அது என்ன? அது என்ன?

வைசம்பாயனர் :— நமது ஆசிரமத்துக்கு வருண பகவான் நாளை எழுந்தருளப்போகிருர். நம்மைக் கண்டு அளவளாவுவதற்கும், புத்ரனைக் காண்பதற்கும், உங்களுக்கு அரிய உபதேசங்களைக் கூறுவதற்கும் அவர் இங்கு கருணையுடன் வருகிருர். அவருக்குத் தகுந்தமுறையில் மரியாதையும், பூஜையும், வரவேற்பும் அளிக்கவேண்டும். நீங்கள் எல்லோரும் ஒற்றுமையுடன் காரியங்களைச் செய்து அதிதி பூஜையை "ந பூதோ ந பவிஷ்யதி" என்ற முறையில் மிகவும் சிறப்பாக நடத்தவேண்டும்.

சீடர்கள் :— உத்தரவுப்படி செய்கிறோம். கரும்பு தின்னக் கூலியோ ! ஸ்வாமீ ! தங்கள் சித்தம் எங்கள் பாக்கியம்.

வைசம்பாயனர் :- நல்லது. போவோம். வாருங்கள்.

(திரை விழுகிறது)

காட்சி 3

(திரை விலக)

[வைசம்பாயனர் ஆசிரமத்தில் யாகசாலை. வைசம்பாயன மஹரிஷியும் பகவான் வருணரும் வீராஸனத்தில் வீற்றிருக்கின்றனர். உரையாடல் நடக்கிறது.]

வருணர் :— நண்பரே ! தங்களுடைய அதிதி ஸத்காரத்திற்கு மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன். ரொம்பச் சிறந்த முறையில் பூர்ணகும்ப வரவேற்பு அமைந்திருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக தாங்களும் ஆசிரமவாஸிகளும் காட்டிய பேரன்பு என்னை ஆனந்த ஸாகரத்தில் ஆழ்த்தி விட்டது. மீண்டும் ஒருமுறை பணிவன்புடன் நன்றி கூறுகிறேன்.

வைசம்பாயனர் :— பகவான் வருணரே ! அப்படி அதிகமாகப் புகழும்படியாக ஒன்றும் நாங்கள் செய்து விடவில்லை. ஏதோ எங்கள் கடமையைச் செய்தோம். குற்றம் குறைகளைப் பார்க்காமல் பெரிதாக மதிப்பது தங்களுடைய பெருங்குணத்தையே எடுத்துக்காட்டுகிறது. நாம் குருகுலவாஸம் செய்யும்போது ப்ருஹஸ்பதி பகவான் விஜயம் செய்த ஸமயம் நடந்த அதிதி பூஜை ஞாபகமிருக்கிறதா ?

வருணர் :— ஞாபகமிருக்கிறதா என்று கேட்கிறீரா ? மறந்துபோனால்தானே நினைவுபடுத்துவதற்கு ? அன்று வேதவியாஸர் செய்த வரவேற்புக்கு ஒன்றும் குறைந்து விடவில்லை இங்கு எனக்குக் கிடைத்த மரியாதை.

வைசம்பாயனர் :— நண்பரே! அந்தக் காலத்தை ஒருநாளும் மறக்கமுடியாது. பொன்னேடுகளில் பொறிக்கவேண்டிய ஸம்பவங்கள்.

வருணர் :— அன்று நாம் வேதம் பயின்றபோது, பைலர் என்ன, ஜைமினி என்ன, ஸுமந்து என்ன இன்னும் எத்தனையோ பேர்கள் நம்முடன் சேர்ந்து கற்றார்கள். அன்று ஒரே குலமாக, ஒரே குடும்பமாகச் சேர்ந்து வாழ்ந்தோம். இன்று பல இடங்களில் சிதறிக் கிடக்கிறோம். அந்த நாட்கள் இனித் திரும்ப வருமா! (பெருமூச்சு விடுகிறார்)

வைசம்பாயனர் :— ஏன் வராது? ஸம்பவங்கள் ஒரேமாதிரியாகத்தான் நடந்துகொண்டு வருகின்றன. கதாபாத்திரங்கள் தான் வேறுபடுகின்றனர். சீதோஷ்ண நிலை, காலதேச வர்த்தமானங்கள் இவைகளை ஒட்டி சில நிகழ்ச்சிகள் மாறலாம். ஆனால் பொதுப்படையாக உலகம் ஒரே மாதிரியாகத்தான் சுழன்றுகொண்டிருக்கிறது. உலகம் என்ற அரங்க மேடையில் நாடகம் நடந்தவண்ணமாகத்தானிருக்கும். நடிகர்கள் தான் மாறிக்கொண்டிருக்கிறார்கள். அன்று வேத வியாஸர் குலபதியாக இருந்தார்கள். ஜைமினி, பைலர் முதலியவர்கள் பாடம் கற்றார்கள். இன்று வருணர் குலபதியாக இருக்கிறார். வேறு மாணவர்கள் வேதம் கற்கிறார்கள். அவ்வளவுதான்.

வருணர் ;— நண்பரே, தாங்கள் சொல்லுவதும் சரிதான். ஆனாலும் எனக்குப் பழைய காலமே சிறந்ததாகத் தோன்றுகிறது. அதிருக்கட்டும் அபிப்பிராய வித்தியாசம் இருக்கத்தான் செய்யும். தாங்களும் மதனியாரும் தீர்த்த யாத்திரை போகப்போவதாக ப்ராசீன யோக்கியன் இன்று காலையில் சொன்னான். எப்போது புறப்பட உத்தேசம்? எங்கு எல்லாம்? திரும்புவது எப்பொழுது?

வைசம்பாயனர் :— நண்பரே! தீர்த்தயாத்திரை போகவேண்டியதுதான். ரொம்ப காலமாக நிர்ப்பந்தம்

இருந்து வருகிறது. ஆஷாட அமாவாஸ்யைக்கு ராமேசுவரம் போகவேண்டும் ஒரு ஸம்வத்ஸரம் யாத்திரை. ஆனால் தாங்கள் இரண்டு வரங்கள் கொடுத்தால்தான் எங்களால் உடன் புறப்பட முடியும்.

வருணர் ;— அது என்ன? புதிர் போடுகிறீர்களே! கைகேயி தேவிபின் வரங்களைப்போல் இரண்டு வரங்கள் கேட்கிறீர்களே. தந்தேன். கூறுங்கள் வரத்தை.

வைசம்பாயனர் :— என் ஸஹதர்மிணிக்கு குழந்தை ப்ருகுவையும் கூட அழைத்துப்போக அவா இருக்கிறது. நான் எவ்வளவோ தடுத்துச் சொல்லியும் கேட்கவில்லை. முதல் வரம் ப்ருகுவை எங்களுடன் அனுப்ப இசைவது.

வருணர் :— சபாஷ்! தசரதரிடமிருந்து பிரித்தது போல் முதல் வரம் குழந்தை ப்ருகுவை என்னிடமிருந்து பிரிக்கிறது. எனக்குச் சம்மதம்தான். ஆனால் அவனைக் கேட்க வேண்டாமா?

வைசம்பாயனர் :— அவபிருத ஸ்நானம் முடியு மட்டும் அவன் எங்கள் குழந்தைதானே! அவனையும் கலந்தாய்விட்டது. பூர்ண சம்மதம் கொடுத்து விட்டான். ஒரு நிபந்தனை போடுகிறான்.

வருணர் :— அது என்ன நிபந்தனை?

வைசம்பாயனர் :— வேறொன்றுமில்லை. ப்ராசீன யோக்யனும் உடன் வரவேண்டுமாம். நாங்களும் ஸரி என்று சொல்லிவிட்டோம்.

வருணர் :— ராமனுடன் தம்பி லக்ஷ்மணன் சென்றதுபோல்! ஸரி அப்புறம் இரண்டாவது வரம்! யாருக்கு மகுடாபிஷேகம் பண்ணப்போகிறீர்கள்?

வைசம்பாயனர் :— ஏன் தங்களுக்குத்தான்! நாங்கள் திரும்ப வரும்வரைக்கும் இந்த ஆசிரமத்தின் குலபதியாகத் தாங்கள் ஆட்சி நடத்தவேண்டும். மாஹாசமஸ்யன், போதாயனன், வைகானஸன்

இன்னும் மற்றுமுள்ள சீடர்களுக்குப் பாடம் சொல்லி வைக்க வேண்டுகிறேன். மறுக்காமல் ஒப்புக்கொண்டு கிருபை பண்ணவேண்டும்.

வருணர் :— ஸரியான வேலை ஐயா! கொஞ்சநாள் ஓய்வு எடுத்துக்கொண்டு மகனுடன் கொஞ்சிக் குலாவிவிட்டுப் போகவேண்டுமென்று வந்தால் ஸரியான பாடம், சுமை தந்துவிட்டீர்களே! தசரதரைப் போல் வரங்களை முன் பின் யோசியாமல் தந்து விட்டேனே! ஒப்புக்கொண்டுதானே ஆகவேண்டும்! திருப்திதானே நண்பரே!

வைசம்பாயனர் :— ரொம்ப சந்தோஷம். என்னுடைய நண்பர் என்னைக்கைவிடமாட்டார் என்பது எனக்கு நன்ருகத்தெரியும் பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாமா!

வருணர் :— ஆஹா அப்படியே துரிதமாகச் செய்யலாம்; எனக்கும் இங்கே இருக்கக் கிடைக்க வேண்டுமே! அடிக்கடி ஜனக மஹாராஜனை சந்தித்து உரையாடலாம். ஹரித்துவாரத்தில் யார் இருக்கிருர்கள் அவதூதர்களைத்தவிர ?

வைசம்பாயனர் :— நண்பரே, தாங்கள் இவ்வளவு எளிதாக இசைவீர்கள் என்று நான் கனவிலும் கருத வில்லை. ஆனுல் என் ஸஹதர்மிணி மட்டும் சம்மதம் கிடைக்கும் என்று நிச்சயமாகக் கூறினுள். போஜனத் துக்குப்போவோம். (போகிருர்கள்)

(திரை விழுகிறது)

காட்சி 4

(திரை விலக)

[ஸ்ரீ வைசம்பாயனரின் ஆசிரமம். மஹரிஷி பத்மாஸனத்தில் உட்கார்ந்திருக்கிறார். பக்கத்தில் சிஷ்யர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். ஆசிரமத்துக்குள் ஸாமான்கள் அங்குமிங்குமாகப் புரட்டிக் கட்டும் சப்தம் கேட்கிறது.]

வைசம்பாயனர் :— குழந்தாய் ப்ருகு! வத்ஸா ப்ராசீனயோக்யா! நீங்கள் இருவரும் உள்ளே சென்று உங்கள் ஸாமான்களை எடுத்துவைத்துக்கொள்ளுங்கள். என்னுடைய பூஜா பாத்திரங்கள், கமண்டலம் முதலியவைகளை ஞாபகமாக எடுத்துவைக்கும்படி அம்மாவிடம் சொல்லுங்கள். அபிஜித் முஹூர்த்தத்தில் புறப்படவேண்டும். (ப்ருகுவும் ப்ராசீனயோக்யரும் எழுந்து வணங்கிவிட்டு, "அப்படியே செய்கிறோம்" என்று கூறிவிட்டுப் போகின்றனர்.) சித்தம் அழகியவர்களே! இங்கே பகவான் வருணர் இருந்து பாடம் சொல்லுவார்கள். நீங்கள் கவனமாகப் படித்துவாருங்கள். நான் அன்று சொன்ன உபதேசம் ஞாபகமிருக்கிறதா? அதன்படி நடக்கவேண்டும்.

வைகானஸர் :— உபதேசம் நன்றாக ஞாபகமிருக்கிறது. மிகவும் வினயத்துடன் நடந்துகொள்ளுவோம்.

வைசம்பாயனர்:-போதாயனா! அந்த உபதேசத்தை சொல்லு பார்க்கலாம்.

போதாயனர் :— அப்படியே ஆகட்டும் ஐயனே!

ये के चास्मच्छ्रेया ᳪसो ब्राह्मणाः। तेषां त्वयासनेन प्रश्वसितव्यम् ।

யே கே சாஸ்மச்ச்ரேயாம்ஸோ ப்ராஹ்மணா: I தேஷாம் த்வயாஸநேந ப்ரச்வஸிதவ்யம் I

வைசம்பாயனர் :— ரொம்ப சந்தோஷம். குழந்தைகளே! இதுவரை நான் உங்களுக்கு பிரம்மஞானத்தை

அடைய அதன் பிரதீகங்களை உபாஸிக்கும் முறைகளை விவரித்தேன். சித்த சுத்தி உண்டாவதற்காக ச்ரௌத ஸ்மார்த்த கர்மாக்கள் செய்யவேண்டியதின் அவசியத்தையும் வற்புறுத்தினேன். மேலும் முறையாக அனுஷ்டிக்கவேண்டிய கர்மங்களைப்பற்றியும் உபதேசித்தேன். இனிமேல் பிரம்மத்தின் உண்மை நிலையை அறிய அதன் லக்ஷணம், ஸ்வரூபம், முதலியவைகளைப் பற்றி பகவான் வருணர் உபதேசிப்பார்.

போதாயனர் :—ஐயனே ஒரு விண்ணப்பம்

வைசம்பாயனர் :—வத்ஸா ! அதுவென்ன கூறு.

போதாயனர்:—பகவான் வருணர் அந்த விஷயமாக உபதேசிப்பதற்குமுன், முகவுரையாகத் தங்கள் வாயிலாக அறிய ஆசைப்படுகிறேன். கிருபை செய்ய வேண்டும்.

மாஹாசமஸ்பரும் வைகானஸரும்:—நாங்களும் அவ்விதமே பிரார்த்திக்கிறோம்.

வைசம்பாயனர் :- உங்கள் எல்லோருடைய விருப்பமும் அங்ஙனமாயின் சுருக்கமாகச் சொல்லுகிறேன். ஒரு தததுவத்தை அறிய அதன் லக்ஷணத்தை அறிய வேண்டும. அது இரண்டுவிதப்படும. (1) ஸ்வரூப லக்ஷணம (2) தடஸ்த லக்ஷணம் இரண்டாவது வகை மேலும் இரண்டாகப் பிரியும. அதாவது (அ) உப லக்ஷணம், (ஆ) உபாதி. ஸ்வரூப லக்ஷணமென்பது அந்தப் பொருளுடன் எப்பொழுதும் சேர்ந்துள்ள இயற்கையான குணவிசேஷங்கள். உபலக்ஷணம் என்பது இயற்கையான குணங்கள்ல்ல் தாற்காலிகமாக அதனுடன ஸம்பந்தப்பட்டுச் சிறிது காலத்துக்குப் பிறகு மறைந்துவிடுகிறது.

வைகானஸர்:—குருநாதரே, ஒரு உதாரணம் கூறி விளக்கவேண்டுகிறேன்.

வைசம்பாயனர் :—மிதிலா நகருக்குப் புதிதாக அயலூரிலிருந்து ஒருவன் வருகிறுனென்று வைத்துக் கொள்வோம். எப்படியோ ராஜ வீதிக்கு வந்துவிட்டான் அவ்வீதியிலுள்ள ஒரு பிரபுவின் வீட்டுக்குச் செல்ல வேண்டும். ஊருக்குப்புதிதானபடியால் அவ்வீடு அவனுக்குத் தெரியவில்லை. அப்பொழுது அங்கு வந்த ஒரு மனிதனிடம் மந்திரியின் வீடு எது என்று கேட்கிறுன். அதற்கு அவன் ''அதோபார், கூரையில் குயில் இருக்கிறது. வாசலில் வாழைமரம் கட்டியிருக் கிறது. பார்த்தாயா? தவிர அந்த வீட்டிற்கு எதிரில் ஒரு உஞ்சவிருத்தி பிராமணர் நின்று ''பவதி பிக்ஷாம் தேஹி'' என்று யாசகம் கேட்கிறுரே பார்த்தாயா! அந்த வீடுதான்'' என்று அடையாளங்கள் சொல்லிக் காட்டுகிறுன். இந்த அடையாளங்கள் தாற்காலிகமாக ஸம்பந்தப்பட்டவை. அவைகள் வீட்டைச்சேர்ந்த நிரந்தரமான பொருள்கள் அல்ல. கூரையில் இருந்த குயிலும் வாழைமரங்களும், உஞ்சவிருத்திபிராமணனும் உபலக்ஷணங்கள். வீட்டை அடையாளம் காண்பிப் பதற்காக சிறிது நேரம் பயன்பட்டன. அவ்வளவுதான். முன்னால் தொங்கும் துதிக்கை யானைக்கு ஸ்வரூப லக்ஷணம்.

மாஹாசமஸ்யர்:—ஸ்வரூப லக்ஷணம் என்றுல் என்ன வென்பதும், உபலக்ஷணம் என்பது யாது என்பதும் புரிந்துகொண்டோம். உபாதியைப்பற்றியும் விளக்கமாகச் சொல்லவேண்டுகிறேன்.

வைசம்பாயனர் :— ஸெளம்யா! கவனமாய்க் கேட்பாய் உபாதியென்பது பொருளுடன் இயற்கை யாகவோ தாற்காலிகமாகவோ ஸம்பந்தப்படுவதில்லை. அப்படி இருநதும் அதை உபயோகப்படுத்தி தத்துவத்தை உணர்ந்துகொள்ளுகிறும்.

மாஹாசமஸ்யர்:—ஐயனே அது எங்ஙனம் ஸாத்திய மாகும்?

வைகானஸர் :—உதாரணம் கூற பிரார்த்திக்கிறேன்.

வைசம்பாயனர்:—வத்ஸா! ஜனக மஹாராஜாவின் அரண்மனை கோபுரம் அதோ தொலை தூரத்தில் தெரிகிற தல்லவா. அதை ஒரு குழந்தைக்குக் காண்பிக்க என்ன செய்கிறோம் ''குழந்தாய் அங்கே பார் அதோ ஒரு ஆலமரம் தெரிகிறது பார்த்தாயா! அதற்குப் பக்கத்தில் ஒரு அசுவத்த விருக்ஷம் இருக்கிறது பார்த்தாயா அந்த மரங்களின் கிளைகளுக்கு நடுவே கொஞ்சம் உயரத்தில் ஒரு சிறு ஸ்தூபி தெரிகிறது பார்த்தாயா! அதுதான் மஹாராஜாவின் அரண்மனைக் கோபுரம். உண்மையில் கோபுரத்துக்கும் விருக்ஷங் களுக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை. இது உண்மை யல்லவாயினும் இந்த பொய் வர்ணனை கோபுரத்தைக் காட்ட உதவுகிறது.

போதாயனர்:-ரொம்ப நன்ருக புரிந்துகொண்டோம் ஸ்வாமீ?

வைசம்பாயனர் :— இதுபோல் பிரம்ம தத்துவத்தை யும் ஸ்வரூப லக்ஷணம், உபலக்ஷணம், உபாதி என்ற மூன்று விதமான உபாயங்களால் புரிந்துகொள்ள வேண்டும். ஸாதாரணமாக வேதங்களில் தடஸ்த லக்ஷணங்களின் வாயிலாகவே பிரம்ம தத்துவம் தெளிவாக்கப்படும். ஆனல் பகவான் வருணர் ஸ்வரூப லக்ஷணங்களையும் கூறி உங்களுக்கு விளங்கவைப்பார். இது ஒரு அரிய சந்தர்ப்பம். நழுவ விடாதீர்கள். இந்த வித்யையில் அவர் மிகவும் ஸமர்த்தர்.

சீடர்கள் :— குருநாதரே! ரொம்ப நன்றி. தங்கள் ஆசியால் நாங்கள் பெரும் பேறு அடையப்போகிருேம். நமஸ்காரம்.

(ஜனகமகாராஜாவின் தேரோட்டிவந்து வணங்குகிருன்.)

தேரோட்டி:— ஸ்வாமீ! ரதம் தயாராக இருக் கிறது. சாமான்கள் எல்லாம் ஏற்றியாய்விட்டது. தீர்த்தயாத்திரை புறப்படலாம்.

வைசம்பாயனர் :—முதலில் நீ சென்று உணவருந்தி இளைப் பாறிக்கொள். குதிரைகளுக்கும் தீவனம் வைப்பாய்! அவைகளையும் கொஞ்ச நேரம் நதியின் மணலில் புரளவிடு அபிஜித் முகூர்த்தத்தில் புறப் படுவோம். குழந்தைகளே உள்ளே போவோம்.

(போகிறார்கள். திரை விழுகிறது)

இரண்டாவது அங்கம் முற்றும்

மூன்றாவது அங்கம்.

காட்சி 1

[திரைக்குப்பின்னால் ''ஓம் சந்நோ மித்ர: சம் வருண…..அவது வக்தாரம்'' என்ற சாந்தி பாடம் ஜபிக்கப்படுகிறது. ஜபம் முடிந்ததும் திரை தூக்கப்படுகிறது. மகரிஷி வைசம் பாயனரின் ஆசிரமத்தில் சிடர்கள் போதாயனர், மாஹா சமஸ்யர்; வைகானஸர் முதலியவர்கள் உட்கார்ந்து உரையாடிக்கொண்டிருக்கின்றனர்]

வைகானஸர் :— நண்பர்களே, நம் குருநாதர் சென்று ஒருவாரம் தான் கழிந்து இருக்கிறது. ஆனால் ஒரு ஸம்வத்ஸரம் கழிந்ததுபோல் தோன்றுகிறது!

போதாயனர் :— ஆம். பிரிவுத் துன்பம் காலத்தை தீர்க்கமாகக் காட்டும். பகவான் வருணர் இன்று முதல் பாடம் தொடங்குவதாகச் சொல்லியிருக்கிறாரல்லவா!

மாஹாசமஸ்யர் :— ஆமாம். அதிகாலையில் கொஞ்சம் தியாஜ்யமான வேலை இருக்கிறது. அது கழிந்ததும் வருகிறேன் என்று சொன்னார்கள். நம்மை யும் இங்கு வந்து காத்திருக்கும்படி கூறினார்கள். இப்போது வந்துவிடுவார்கள்.

போதாயனர்:— ஆம். தோழரே! காலடிச் சப்தம் கேட்கிறதே. பகவான் தான் வருகிறாரா! (திரும்பிப் பார்த்து) அதோ பார்த்தீர்களா யார் வருகிறார்களென்று?

(எல்லாரும் திரும்பி நோக்கி எழுந்து ஓடுகிருர்கள்.) நமது நண்பர் த்ரிசங்கு வருகிருர். மிகவும் சந்தோஷம். (ஓடிச்சென்று தழுவிக்கொண்டு அழைத்து வருகிருர்கள்)

வைகானஸர் :— நண்பரே! எங்களைப் பிரிந்து சென்று ரொம்ப நாட்களாகி விட்டனவே. இப்போதாவது நினைத்துக்கொண்டு வந்தீரே! மிகவும் சந்தோஷம்.

மாஹாசமஸ்யர் :—ஆருயிர்த்தோழரே, அமருங்கள். நம் குருநாதர் குடும்பத்துடன் தீர்த்த யாத்திரை போயிருக்கிருர்.

போதாயனர் :— ப்ருகுவும், ப்ராசீன யோக்யனும் கூடச்சென்றிருக்கிருர்கள். பகவான் வருணர் வந்திருக்கிருர்.

வைகானஸர் :— இப்போது நமது 'ஆசிரமத்தின் குலபதி அவர் தான்.

த்ரிசங்கு:— நண்பர்களே! உங்களைப் பார்க்க மிக்க மகிழ்ச்சி. எல்லா விஷயங்களும் எனக்குத் தெரியும்.

சீடர்கள் :— (ஆச்சரியத்துடன்) எப்படி? ஞான திருஷ்டியா? அல்லது அதிருஷ்டமா!

த்ரிசங்கு :—ஞானதிருஷ்டியுமில்லை. அதிருஷ்டமுமில்லை. எல்லாம் குருநாதர் அனுக்ரஹம்தான்.

போதாயனர் :— அதுவென்ன? விளங்கவில்லையே!

த்ரிசங்கு :—நான் வருகிற வழியில் நம் குருநாதரையும் பரிவாரங்களையும் பார்த்தேன். பிரயாகையில் தீர்த்தாடனம் செய்துவிட்டு நைமிசாரண்யத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். எல்லா விஷயங்களையும் விளக்கினுர்கள். பகவான் வருணர் உபதேசங்கள் தரப்போவதாகவும் என்னையும் ஓடிப் போய்க் கலந்துகொண்டு கற்கவும் ஆணையிட்டார்கள். அடியேனும் ஓடோடி வந்தேன். பகவான் வருணரைக்

கண்டு வணங்கினேன். இப்போது உங்களையும் காண வந்திருக்கிறேன்.

மாஹாசமஸ்யர் :— முக்கியமான உபதேசங்கள் பெறும்போது நண்பர் இல்லையே என்று கொஞ்சம் வருத்தம் இருந்தது. அதுவும் இப்போது நீங்கிவிட்டது

போதாயனர் :— "ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத" (एकः स्वादु न भुञ्जीत) என்கிறபடி ரஸமுள்ளதைத் தான் ஒருவனைக அனுபவிக்கக்கூடாது என்று நம் நண்பர் விரும்பியதும் நியாயமே.

வைகானஸர்:—அதற்காகவே பக்கத்து ஆசிரமத்திலிருந்தும் சீடர்களை அழைத்து வந்திருக்கிறார்.

த்ரிசங்கு :— அப்படியா! ரொம்ப சந்தோஷம். உரையாடலை நிறுத்துங்கள். பகவான் வருணர் அதோ வந்து கொண்டு இருக்கிறார்கள்.

(எல்லோரும் எழுந்து நிற்க, பகவான் வருணர் பிரவேசிக்கிறார். முதலில் சீடர்கள் வணங்கி பின் அர்க்கியம் பாத்யம் முதலிய உபசாரங்கள் செய்கிறார்கள். பகவான் வருணரும் புலித்தோல் ஆசனத்தில் அமர்ந்து கொள்கிறார். மற்றவர்களும் அவருடைய அனுமதியுடன் இருமருங்கிலுமாக உட்காருகிறார்கள்,

வருணர் :— வத்ஸர்களே, உங்களுக்கு ஸர்வ மங்களங்களும் உண்டாகட்டும் உபதேசம் தொடங்குவதற்கு முன்னால் சாந்தி பாடம் சொல்லுவோம்.

ओं सह नाववतु । सह नौ भुनक्तु । सह वीर्यं करवावहै । तेजस्विनावधीतमस्तु मा विद्विषावहै । ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

ஸஹ நாவவது । ஸஹ நௌ புநக்து । ஸஹ வீர்யம் கரவாவஹை । தேஜஸ்வி நாவதீதமஸ்து மா வித்விஷாவஹை । ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

(முதலிச் குரு சொல்ல சீடர்கள் சேர்ந்து சொல்லுகிறார்கள்.)

வருணர் :—குழந்தைகளே! முதலில் சாந்தி பாடத்துக்குப் பொருள் கூறுகிறேன். (குரு சீடர்களாகிய) நம் இருவரையும் சேர்த்து (பிரம்மம்) காப்பாற்றட்டும். உணவு தந்து போஷிக்கட்டும். நாம் இருவரும் சேர்ந்து வீரியத்துடன் பாடுபடுவோமாக. நம்முடைய கல்வி அதாவது பிரம்ம வித்யை பிரகாசமுள்ளதாகவும் கூர்மையுள்ளதாகவும் ஆகட்டும். நம்முள் ஒருவருக்கொருவர் துவேஷபுத்தியுண்டாகாமல் இருக்கட்டும். முவ்வகையிலும் சாந்தி நிலவட்டும். எங்கும் அமைதியாக இருக்கட்டும்.

போதாயனர் :—குருநாதரே, ஒரு சந்தேஹம்.

வருணர் :—வத்ஸா! போதாயனு! அதுவென்ன? உடன் கேட்பாயாக.

போதாயனர் :—சாந்தி பாடம் நன்ருகப் புரிந்து கொண்டேன். ஆனல் கடைசியில் குருவுக்கும் சீடனுக்கும் துவேஷ புத்தி உண்டாகாமல் இருக்க வேண்டும் என்று பிரார்த்தித்தது அவசியமா? கல்வியின் பொருட்டு குருவை நாடி வந்த வித்யார்த்திக்கு ஆசாரியனிடம் துவேஷம் வரக்காரணமில்லையே. அதுபோல தன்னை நம்பித் தன்னையே சரணமடைந்திருக்கிற மாணவனிடம் குருவிற்கும் வெறுப்பு ஏற்பட ஹேதுவில்லையே.

வருணர்:— ஸபாஷ்! ஸௌம்யர்களே! நல்ல ஸாதுவான கேள்வி தான். நானும் ஜாக்கிரதையாகப் பாடம் சொல்லித்தரவேண்டும் என்ற படிப்பினையைத் தெரிந்து கொண்டேன். மகரிஷி வைசம்பாயனரின் சீடர்களல்லவா! கேள்விக்கு விடை கூறுகிறேன். பாடம் நடக்கும்போது துவேஷம் உண்டாவதற்குக் காரணங்களுண்டு. முதலாவதாக ஆசாரியன் ஸர்வக்ஞனுக இல்லாமல் கற்பிக்கும் துறையில் வழுவலாம். சொல்லிக்கொடுப்பது அபூர்ணமாக இருக்கலாம். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும்

திறன் இல்லாமலிருக்கலாம். சீடர்களின் லௌகிக அந்தஸ்தை ஒட்டி விருப்பு வெறுப்பு ஏற்படலாம். இத்யாதி குருவின் பக்கம் தவறுதல்கள் ஏற்படக்கூடும். சிஷ்யர்கள் பக்கம் பரஸ்பர விதண்டாவாதங்கள் ஏற்படலாம். பொறாமை காரணமாக ஸஹ மாணவனிடமும் அவன் மூலம் ஆசாரியனிடமும் குரோதம் உண்டாகலாம் புத்திக் குறைவினால் கற்கமுடியாமல் கால விளம்பம் செய்யலாம். இப்படியாக சிஷ்யர்களிடமும் பல குற்றங் குறைகள் இருக்கலாம். இவைகள் காரணமாக பரஸ்பரம் துவேஷமுண்டாகலாகாது என்று பிரார்த்திக்கப்படுகிறது. அல்ப விஷயங்களில் புத்தியையும் காலத்தையும் வீணாக்காமல் முக்கிய விஷயமான பிரம்ம ஞானத்துக்கு உதவ இப்பிரார்த்தனை செய்யப்படுகிறது. முடிவான தாத்பர்யம் என்னவென்றால் குருவும் சீடனும் ஒரு பிராணிகளிடத்தும் துவேஷம் பாராட்டக் கூடாது. இதுதான் முக்கியமான அர்த்தமாகும்.

போதாயனர் :— குருநாதரே, நன்றாக விளங்கி விட்டது. மேல் உபதேசிக்க வேண்டுகிறேன்.

வருணர் :— குழந்தைகளே! நீங்கள் இதுவரை கற்ற விஷயங்களைச் சுருக்கமாகக் கூறுங்கள்.

மாஹாசமஸ்யர் :— ஐயனே, உத்தரவுப்படிக் கூறுகிறேன். கர்மாக்களுக்கு விரோதமில்லாத ஸம்ஹிதா முதலிய விஷயங்களைப்பற்றிக் கற்றோம். உபாதியுடன் கூடின ஆத்மாவைப்பற்றியும் வியாஹிருதிகளைப்பற்றியும் படித்தோம்.

போதாயனர் :— ஓங்காரத்தின் உபாஸனையும் தெரிந்துகொண்டோம். இன்னும் பிரம்ம வித்யோத்பத்தி நிமித்தமான ஜபங்களும் அறிந்தோம்.

வருணர் :— இப்போது உங்களுக்கு ஸம்ஸாரத்தை அடியோடு ஒழிக்கவும், உபாதியற்ற ஆத்ம தர்சனத்தின் பொருட்டும் உபதேசிக்கிறேன். பிரம்ம வித்யைக்குப்

பிரயோஜனம் அக்ஞான நிவிருத்தி. பிறகு ஸம்ஸார நாசம். ஒரு வித்யையில் பிரவிருத்தி ஏற்படவேண்டு மானுல் அதனுடைய பலன் தெரியவேண்டும். அதற்காக முதலிலே பிரம்ம வித்யையின் பலனைக் கூறுகின்றேன். பிறகு படிப்படியாக உபதேசித்து பிரம்மத்தை கரதலாமலகம்போலத் தெளிவாக அறிவிக்கிறேன்.

ओं ब्रह्मविदाप्नोति परम्

ஓம் ப்ரஹ்மவிதாப்நோதி பரம்

அதாவது பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மநிலை எய்துகிருன். எல்லாவற்றிற்கும் பெரிது, ஆகையினுல் பிரம்மம் என்று பெயர். அதை யார் நன்ருக அறிகின்ருனே அவன் பிரம்மவித் எனப்படுகிருன். அந்த பிரம்மவித்-பிரம்மத்தை அறிந்தவன், பரமான-நிரதிசயமான-பிரம்மத்தையே அடைகின்ருன்.

த்ரிசங்கு :— ஐயனே! ப்ரஹ்மம் எங்கும் நிறைந் திருக்கின்றது. அங்கு இங்கு எனுதபடி எங்குமாய் நிலவியிருப்பது. அப்படியிருக்க பரிச்சின்னமான மற்ருெரு பொருளை அடைவதுபோல் 'அடைகிருன்' என்று சொல்வது எங்ஙனம் பொருந்தும்?

போதாயனர் :— ஸ்வாமீ! இதோ கமண்டலம் இருக்கிறது. நான் இதைக் கமண்டலமென்று நன்ருகத் தெரிந்துகொள்ளுகிறேன். இந்த அறிவினுல் நான் கமண்டலமாக மாறிவிடவில்லையே!

வைகானஸர் :— இந்த ஸூத்ரத்திற்கு நன்ருக விளக்கம் கூறவேண்டும். உதாஹரணங்கள் கூறித் தெளிவாக்கவேண்டும்.

வருணர் :— உங்களைப் போன்ற சீடர்களுக்கு உபதேசம் பண்ணுவதில் பெரும் மகிழ்ச்சி கொள்ளு கிறேன். ஒவ்வொரு கேள்வியாக ஸமாதானம் கூறு கிறேன். கவனமாகக் கேளுங்கள்.

மாஹாசமஸ்யர் :— ஐயனே! ஆக்ஞைப்படி கேட்கிறோம். திருவாய்மலர்ந்து அருளிச்செய்யவேண்டும்.

வருணர் :— ஒரு சிறிய கதையின் மூலம் உங்கள் வினாக்களுக்கு விடை கூறுகிறேன். பத்து பிரயாணிகள் சேர்ந்து ஒரு நதியைக்கடந்து போகவேண்டியிருந்தது. நதியில் இறங்கி அதைத் தாண்டிய பின் பத்துபேர்களும் கரை சேர்ந்தோமா என்று எண்ணிப்பார்த்தார்கள். எண்ணியவன் ஒவ்வொருவனும் தன்னை விட்டு எண்ணியதால் எண்ணிக்கை ஒன்பது வந்தது. திரும்பத் திரும்ப அந்த விதமே எண்ணியும் ஒன்பதே மறுபடியும் மறுபடியும் வந்தது. தம்முள் ஒருவர் ஆற்றோடு போய்விட்டதாகவே தீர்மானித்துவிட்டனர். சோர்ந்து போய் உட்கார்ந்து அவர்கள் மிகவும் வருத்தமுற்றனர். அப்போது அங்கே வந்த புத்திசாலி ஒருவன் விஷயத்தைக்கேட்டு அவர்களை வரிசையாக நிறுத்தி ஒரு சிறு தடியினால் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, என்று ஒவ்வொருவராகத் தொட்டுக் காண்பித்து எண்ணினான். அவர்களும் பத்தாவது மனிதன் திரும்பி வந்துவிட்டது போல் எண்ணி சந்தோஷமடைந்தார்கள். பத்தாவது நபர், எண்ணிய மனிதன் தான் என்ற உண்மையை உணர்ந்தார்கள். பிரமம் நீங்கிவிட்டது. மற்றவர்களை எண்ணுவதில் மனம் பதிந்துத் தன்னை எண்ணுவதை மறந்ததையும் உணர்ந்தார்கள். அதுபோல் ஜீவனும் அவித்தை வசப்பட்டு பிரம்மத்தை அறியாமலிருந்தான். பின்னால் குருவினால் உபதேசிக்கப்பட்டு ஞாபகமடைந்து பிரம்மத்தை அறிகிறான். எப்போதும் பிரம்மஸ்வரூபமாயிருந்தாலும் முன்னால் தெரிந்துகொள்ளவில்லை. பின்னால் தெரிந்துகொள்ளுகிறான். பத்தாவது மனிதன் எப்போதும் இருக்கத்தான் இருக்கிறான். புத்திசாலி வருமுன் அவர்கள் அவனைத் தெரிந்துகொள்ளவில்லை. பின்னால் அறிந்துகொள்ளுகிறார்கள். இதுவே த்ரிசங்குவின் கேள்விக்கு விடை.

த்ரிசங்கு :— ஐயனே! நன்றாக உரையைப் புரிந்துகொண்டேன்.

போதாயனர் :— என்னுடைய ஸந்தேஹத்திற்கும் ஸமாதானம் விளக்கமாகக் கூறவேண்டும்.

வருணர் :— நாம் காண்பது எல்லாம் ப்ரஹ்மமே. மனிதனைகவும், கமண்டலமாகவும் மற்றும் பலவித உருவ நாம வேறுபாடுகளாவும் காணப்படுவது எல்லாம் ப்ரஹ்மமே. ஆகவே மனிதனிலும் கமண்டலத்திலும் ப்ரஹ்மவித் ப்ரஹ்மத்தையே காண்கிருன். அக்ஞானி மனிதனையும் கமண்டலத்தையும் வெவ்வேறு பொருள்களென நினைக்கிருன். ஞானியோ எல்லாம் ப்ரஹ்மமாக அறிகிருன்.

போதாயனர் :— ஐயனே! ஐயம் நீங்கிவிட்டது. மேலும் தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகிறேன்.

வருணர் :— तदेषाऽभ्युक्ता । सत्यं ज्ञानमनन्तं ब्रह्म । यो वेद निहितं गुहायां परमे व्योमन् । सोऽश्नुते सर्वान् कामान् सह । ब्रह्मणा विपश्चितेति ॥

தத்ேஷாऽப்யுக்தா। ஸத்யம் ஞானமனந்தம் ப்ரஹ்ம। யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமன்। ஸோऽச்நுதே ஸர்வான் காமான் ஸஹ। ப்ரஹ்மணு விபஸ்சிதேதி ॥

ப்ரஹ்மத்தைப்பற்றி 'ஸத்யம், ஞானம், அனந்தம்' என்ற ருக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஸத்யமாயும், ஞானமாயும், அனந்தமாயும் இருக்கின்ற வஸ்துதான் ப்ரஹ்மம். மேலான ஹ்ருதயாகாசத்தில் உள்ள புத்தி குஹையில் விளங்குகின்ற இந்த ப்ரஹ்மத்தை எவன் அறிகின்ருனே அவன் அந்த ஸர்வக்ஞமான ப்ரஹ்மமாகவே ஆகி எல்லாப் போகங்களையும் அனுபவிக்கின்ருன்.

த்ரிசங்கு :— குருநாதரே! ஸத்யம், ஞானம், அனந்தம் என்ற பதங்களுக்கு விளக்கமாக உரை கூற வேண்டுகிறேன்.

வருணர் :— எக்காலத்தும் மாருமல் இருக்கும் வஸ்து ஸத்ய வஸ்துவாகும். அது எக்காலத்தும் மாறுதல் அடையாமல் இருப்பதுடன் எவ்விதத்திலும் மாருமலும் இருக்கும். ப்ரஹ்மம் ஏகவஸ்துவாய், எக்காலத்தும் எவ்விதத்தும் மாறுதல்கள், விகாரங்கள் அடையாமல் இருப்பதால் ப்ரஹ்மமே ஸத்ய வஸ்துவாகும். ஞானம் என்பது அறிவு. தீபத்தில் வெளிச்சம் போலவும், உஷ்ணம் போலவும் பிரிக்கமுடியாமல் அறிவு ப்ரஹ்மத்துடன் சேர்ந்தே இருக்கும். வாஸ்தவத்தில் ப்ரஹ்மம் ஞானஸ்வரூபம்தான் அனந்தம் என்ருல் எது ஓரிடத்திலும் பிரிக்கப்படாமல் இருக்கின்றதோ அந்த வஸ்து. அஃதாவது எது காலத்திலைாவது, தேசத்திலைாவது, வஸ்துவிலைாவது அளக்கப்படாமல் அளவற்றதாயும், முடிவற்றதாயும் இருக்கிறதோ அந்த வஸ்துதான் அனந்தம். ஸத்யம், ஞானம், அனந்தம் என்ற மூன்று பதங்களும் ப்ரஹ்மத்துக்கு விசேஷணங்களாகும்.

மாஹாசமஸ்யர் :— உதாஹரணம் சொல்லி விளங்க வைக்கவேண்டும் ஸ்வாமீ !

வருணர் :— இதோ மண் குடம் ஒன்று இருக்கிறது. தவிர மண்ணுல் செய்யப்பட்ட தட்டும் இதோ இருக்கிறது. ஒன்றிற்குக் குடம் என்றும், மற்ருென்றிற்குத் தட்டு என்றும் நாமங்களும் உருவங்களும் வெவ்வேருக இருக்கின்றன. குடம், தட்டு முதலான கார்யங்களின் நாம ரூபங்கள் மாறிக்கொண்டிருப்பதால் அவை அந்ருதம். ஆனல் அவைகளிலிருக்கும் காரணமான மண் அம்மாதிரி மாறுபாடடையாமலிருப்பதால் அது ஸத்யம்.

" வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்"

(वाचारम्भणं विकारो नामधेयं मृत्तिकेत्येव सत्यम्)

இதுபோலவே உலகிலுள்ள எல்லா வஸ்துக்களின் நாமங்களும் உருவங்களும் மாறிக்கொண்டிருப்பதால் அவைகளெல்லாம் அந்ருதம். ஸர்வகாரணமான ப்ரஹ்மம் எப்பொழுதும் ஒரே மாதிரியாக மாறுதல் அடையாமலிருப்பதால் அதுவே ஸத்யம். இங்கு மண்ணை திருஷ்டாந்தமாகக் கூறியிருப்பதால் மண் போல் ப்ரஹ்மமும் ஜடம் என்று சிலர் நினைக்கக்கூடும். அதைப்போக்கத்தான் 'ஞானம்' (ज्ञानं) என்று கூறப் படுகிறது. ப்ரஹ்மம் ஞானஸ்வரூபம் ஜடமன்று. உலகில் உள்ள ஞானம் முடிவுபெறுவதால் ஞானரூபமான ப்ரஹ்மத்துக்கும் முடிவு உண்டோ என்று தோன்றலாம். அதற்காக 'அநந்தம்' (अनन्तम्) என்று கூறப்படுகிறது. முடிவு என்பது காலத்தினுலும் ஏற்படலாம். தேசத் தினுலும் ஏற்படலாம். வஸ்துவினுலும் ஏற்படலாம். இந்த மூன்று விதமான முடிவும் ப்ரஹ்மத்திற்குக் கிடையாது. எல்லா தேசங்களிலும் எல்லாக் காலங் களிலும் எல்லா வஸ்துவாகவுமிருப்பது ப்ரஹ்மம். இது 'அநந்த' பதத்தின் பொருள்.

போதாயனர்:— குருநாதரே, நன்ருக அறிந்து கொண்டோம். மற்றப்பகுதிக்கும் விளக்கமான பொருள் உரைக்க வேண்டுகிறேன்.

வருணர்:— ஸௌம்யர்களே, கவனமாகக் கேளுங்கள். பிரம்மானந்தமே எங்கும் நிறைந்துள்ளது. அதனுடைய ஒரு அணுமாத்திரமான பாகமே அவ்வப் போது உலகத்தில் விஷயங்களில் ஆனந்தமாய் அனுபவிக்கப்படுகிறது. ஆகையினுல் தன் இருதய ஆகாசத்தில் புத்தி குகையில் பிரகாசிக்கும் பிரம்மத்தை எவன் அறிகின்ருனே அவன் ஸர்வக்ஞமான ப்ரஹ்ம மாக ஆகி எல்லா இன்பங்களையும் ஒரே சமயத்தில் அனுபவிக்கிருன்.

வைகானஸர்:— விஷயங்களில் அனுபவிக்கும் ஆனந்தம் ப்ரஹ்மானந்தத்தின் ஒரு பாகமென்பது விளங்கவில்லையே ஸ்வாமீ! அனுக்ரஹிக்கவேண்டும்.

வருணர் :— ஆனந்தம் என்பது வெளி வஸ்துக் களில் இல்லை. ஏனெனில் எந்த வஸ்துவும் எல்லோருக்கும் ஒரேவிதமான ஆனந்தத்தைக் கொடுப்பதில்லை. ஒருவனுக்கு அப்பத்தில் பிரியமிருக்கிறது. மற்றொருவனுக்கு சர்க்கரைப் பொங்கலில் ஆவல். இன்னொருவருக்கு கங்கையில் நீந்துவதில் ஆசை. வேறொருநபருக்கு பானகத்தில் விருப்பம். ஆகவே பொருளில் இன்பமில்லை. அதை நுகருவோனிடத்தே இன்பம் இருக்கின்றது என்பது கண்கூடு. நுகரும் இன்பங்கள் எல்லாம் சேர்ந்தது ப்ரஹ்மானந்தம் என்பது.

மாஹாசமஸ்யர்;— குருநாதரே, தன்யர்களானோம். மேலும் எங்களுக்குத் தெரியவேண்டியதை உபதேசிக்க வேண்டுகிறோம்.

வருணர் :— குழந்தைகளே, காலம் அதிக்கிரமித்து விட்டது. இன்றைய பாடத்தை இத்துடன் நிறுத்திக் கொள்ளுவோம். சிரவணம் மட்டும் போதாது நன்றாகச் சிந்தனை செய்யவேண்டும். பசுக்கள் தீனி தின்றுவிட்டு ஒரு மூலையில் உட்கார்ந்து அசை போடுவதைப் பார்த்திருப்பீர்களே. அதுபோல் நீங்களும் ஏகாந்தமாய் இருந்து கேட்டவைகளை மனதிற்குக் கொண்டுவந்து நன்றாக விசாரணை செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏதாவது சந்தேகங்கள் உண்டானால், மறுநாள் பாடம் நடக்கும்போது கேட்கவேண்டும். புதியவர் என்ற சங்கோசம் வேண்டியதில்லை. உங்களுக்குப் பாடம் சொல்வதையே பரம ச்ரேயஸ்ஸாகக் கருதி வந்திருக்கிறேன்.

சீடர்கள்:— ஐயன்மீர்! அங்ஙனமே செய்கிறோம்.

(திரை விழுகிறது)

காட்சி 2

[திரை விலக, பகவான் வருணரும், சிஷ்யர்களும் அமர்ந்து ஸம்பாஷித்துக்கொண்டிருக்கின்றனர்.]

வருணர் :— குழந்தைகளே! இதுவரை கற்றதை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். பார்க்கட்டும் ஒவ்வொருவராகச் சொல்லுங்கள்.

மாஹாசமஸ்யர் :- முதலில் ப்ரஹ்மத்தையறிந்தவன் பரவஸ்துவையேயடைகிறான் என்று உபதேசித்தீர்கள்.

வைகானஸர் :— பிறகு ஸத்யமாயும், ஞானமாயும், அனந்தமாயும் இருக்கிறது ப்ரஹ்மம் என்று அருளினீர்கள்.

போதாயனர் :— எங்கும் வியாபித்திருக்கும் பிரம்மத்தைத் தன் புத்தியாகிற இருதய குகையில் காண்பவன் பிரம்ம ஸ்வரூபமாகி எல்லா இன்பங்களையும் அனுபவிக்கிறான் என்று கூறி முடித்தீர்கள்.

வருணர் :— வத்ஸர்களே, மிகவும் சந்தோஷம். ரொம்ப கவனமாகக் கேட்டிருக்கிறீர்கள். நன்றாகச் சிந்தனையும் செய்திருக்கிறீர்கள். மேல் தொடர்ந்து கூறுவதையும் கவனமாகக் கேளுங்கள்.

சிஷ்யர்கள் :— ஐயன்மீர்! உத்தரவுப்படி கேட்கிறோம்.

வருணர் :— तस्माद्वा एतस्मादात्मन आकाशः संभूतः । आकाशाद्वायुः । वायोरग्निः । अग्नेरापः । अद्भ्यः पृथिवी । पृथिव्या ओषधयः । ओषधीभ्योऽन्नम् । अन्नात्पुरुषः । स वा एष पुरुषोऽन्नरसमयः । तस्येदमेव शिरः । अयं दक्षिणः पक्षः । अयमुत्तरः पक्षः । अयमात्मा । इदं पुच्छं प्रतिष्ठा । तदप्येष श्लोको भवति ॥

தஸ்மாத் வா ஏதஸ்மாதாத்மந ஆகாச: ஸம்பூத: I ஆகாசாத் வாயு:! வாயோரக்நி: I அக்நேராப: I அத்ப்ய: ப்ருதிவீ I ப்ருதிவ்யா ஓஷதய: I ஓஷதீப்யோ

அந்நம் 1 அந்நாத் புருஷ: 1 ஸ வா ஏஷ புருஷோ அந்நரஸமய: 1 தஸ்யேதமேவ சிர: 1 அயம் தக்ஷிண: பக்ஷ: 1 அயமுத்தர: பக்ஷ: 1 அயமாத்மா 1 இதம் புச்சம் ப்ரதிஷ்டா 1 ததப்யேஷ ச்லோகோ பவதி ll

(சுட்டுவிரலைத் தூக்கிக் காட்டி) அதே ப்ரஹ்மமாகிற (தன் நெஞ்சைத் தொட்டுக்காட்டி) இந்த ஆத்மாவிடமிருந்து சப்தகுணமுள்ளதும், மூர்த்த திரவியங்களுக்கு இடம் கொடுப்பதுமான ஆகாசம் உண்டாயிற்று. அந்த ஆகாசத்தினின்று சப்தம், ஸ்பரிசம் என்ற இரண்டு குணங்களுள்ள வாயு உண்டாயிற்று. வாயுவிலிருந்து சப்தம், ஸ்பரிசம், ரூபம், என்ற மூன்று குணங்களுள்ள அக்நி தோன்றியது. அந்த அக்நியினின்று சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம் என்ற நான்கு குணங்களுள்ள அப்பு (ஜலம்) உண்டானது. அப்புவினின்றும் சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்ற ஐந்து குணங்களுள்ள ப்ருதிவி உண்டாயிற்று. ப்ருதிவியினின்றும் ஓஷதிகள் அதாவது மரம் செடி கொடி முதலியவை உண்டாயின. செடிகொடிகளிலிருந்து அந்நம் உண்டாயிற்று. அந்நத்திலிருந்து புருஷ வீர்யம் உண்டாயிற்று. அவற்றிலிருந்து மனிதன் தோன்றினன். தலை, கை, கால், பார்சுவங்கள் முதலிய அவயவங்களுடன் கூடிய மனிதன் அன்னரஸமே உருவாகியவன். அவனுக்கு (தன் தலையைத் தொட்டுக்காட்டி) இதுவே சிரஸ். இது (வலது கை) வலது இறகு. இது (இடது கை) இடது இறகு. இது (மத்யபாகம்) ஆத்மா இது (தொப்புளின் கீழ் பாகம்) ஆதாரமான புச்சம் இந்த விஷயத்தில் அடியில்கண்ட சுலோகம் சொல்லப்பட்டிருக்கிறது.

மாஹாசமஸ்யர்:—அன்னமயமான உருவத்தை பக்ஷியின் வடிவில் வர்ணிப்பதற்குக் காரணம் என்ன?

வருணர்:— நமக்கு முன்னுல் இதோ கருடனது வடிவத்தில் ஹோம குண்டம் போட்டிருக்கிறது பார்த்தீர்களா! அதைப் பார்த்துக்கொண்டு சொன்னேன் தவிரவும் ஸம்ஸாரமாகிய மரத்தில் இருந்துகொண்டு

புண்ணியம் பாபம் என்கிற பழங்களை புஜித்துக்கொண்டு இருப்பதால் ஜீவனைப் பறவையாக வர்ணிப்பது மரபு.

போதாயனர்:— தாங்கள் கூறிய உரை நன்ருகப் பதியும்படி விரிவாக விளக்க வேண்டுகிறேன்.

வருணர்:—யாக சாலையில் வைத்திருக்கும் செம்பினாலாகிய இந்திரன் சிலையை பார்த்திருக்கிறீர்களல்லவா. களிமண்ணுல் முதலில் உருவம் செய்து அதன் மேல் செம்பை உருக்கிவிட்டு செப்பு பிரதிமை செய்வதுபோல் இங்கு பிரம்மத்துக்கு ஐந்து விதமான கோசங்கள் கற்பிக்கப் படுகின்றன. 5 உறைகள், அதாவது ஐந்து சட்டைகள். முதலில் அதிகம் ஸ்தூலமாக நமது ஊனக் கண்ணுல் பார்க்கக்கூடிய அன்னமயகோசம் வர்ணிக்கப் பட்டது. இனிமேல் படிப்படியாக பிராணமய, மனோமய, விக்ஞானமய, ஆனந்தமய கோசங்கள் நான்கும் முறையே வர்ணிக்கப்படும். கவனமாகக் கேட்டு வாருங்கள். சந்தேகங்களைக் கடைசியில் கேளுங்கள்.

வைகானஸர்:— ஐயனே, அப்படியே ஆகட்டும்.

த்ரிசங்கு:— குருநாதரே, தொடர்ந்து உபதேசம் செய்யுங்கள்.

வருணர்:— अन्नाद्वै प्रजाः प्रजायन्ते । याः काश्च पृथिवीँ-श्रिताः । अथो अन्नेनैव जीवन्ति । अथैनदपियन्त्यन्ततः । अन्नँ हि भूतानां ज्येष्ठम् । तस्मात्सर्वौषधमुच्यते । सर्वं वै तेऽन्नमाप्नुवन्ति । येऽन्नं ब्रह्मोपासते । अन्नँ हि भूतानां ज्येष्ठम् । तस्मात्सर्वौषधमुच्यते । अन्नाद्भूतानि जायन्ते । जातान्यन्नेन वर्धन्ते । अद्यतेऽत्ति च भूतानि । तस्मादन्नं तदुच्यत इति ॥

அந்நாத் வை ப்ரஜா: ப்ரஜாயந்தே 1 யா: காஸ்ச ப்ருதிவீம் ச்ரிதா: 1 அதோ அந்நேநைவ ஜீவந்தி 1 அதைநதபியந்த்யந்தத: 1 அந்நம் ஹி பூதாநாம் ஜ்யேஷ்டம் 1 தஸ்மாத் ஸர்வௌஷதமுச்யதே 1 ஸர்வம் வை தேऽந்நமாப்நுவந்தி 1 யேऽந்நம் ப்ரஹ்மோ

பாஸதே l அந்நம் ஹி பூதாநாம் ஜ்யேஷ்டம் l தஸ்மாத் ஸர்வௌஷதமுச்யதே l அந்நாத் பூதானி ஜாயந்தே l ஜாதாந்யந்நேந வர்த்தந்தே l அத்யதே அத்தி ச பூதாநி l தஸ்மாதந்நம் ததுச்யத இதி l

ப்ருதிவியில் அதாவது பூமியில் உள்ள மக்கள் எல்லாம் அன்னத்திலிருந்தே உண்டாகின்றனர். பிற்பாடு அதே அன்னத்திலேயே வாழ்கின்றனர். முடிவில் அன்னமாகவே முடிகின்றனர். உண்டாய பொருள்களுக்கெல்லாம் அன்னம் பிரதானமாக இருக்கின்றது. அதுவே முதலில் உண்டானதால் காரணமாயிருக்கிறது. ஆகையினால் அது எல்லோருக்கும் ஔஷதமாக (பசி மருந்து) இருக்கிறது. எவர்கள் அன்னத்தை ப்ரஹ்மமாக உபாஸிக்கிறார்களோ, அவர்கள் எல்லா அன்னத்யையும் அடைகின்றார்கள்.

மாஹாசமஸ்யர்:— ஸத்குருவே, அன்னத்தை அதாவது உணவுப்பொருளை பிரம்மமாக உபாஸிப்பது எப்படி?

வருணர்:— நாம் அன்னத்திலிருந்து உண்டானோம். அதனையே உண்டு வாழ்கின்றோம். கடைசியில் அதிலேயே செல்லப்போகிறோம் என்று கருதி அன்னத்தை பிரம்மமாக உபாஸிக்கவேண்டும்.

போதாயனர்:— ஐயனே! நாம் அன்னத்திலிருந்து உண்டானோம் என்பதும் அன்னத்திலேயே முடியப் போகிறோமென்பதும் சரியாக விளங்கவில்லை. தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

வருணர்:— ஸௌம்யா! ஒரு மனிதன் அன்னம் புஜித்து வளர்கிறான். இதில் ஒரு சந்தேகமுமில்லையே. அவன் உண்ட அன்னமானது சுக்லமாகமாறி மற்றொரு பிரஜையைத் தோற்றுவிக்கின்றது. ஆகையினால் பிரஜைகள் அன்னத்திலிருந்து உண்டாகின்றன என்பது ஸ்பஷ்டமாகின்றது. பிறகு அப்புருஷன் இறக்கும்போது புதைக்கப்படுகிறான் அல்லது எரிக்கப்படுகிறான். அவன்

சரீரமானது பூமியில் கலந்து உரமாக மாறி அன்னமாக பரிணமிக்கிறது. ஆதலால் பிரஜைகள் முடிவில் அன்ன மாக ஆகின்றன என்பதும் தெரிகின்றது. இனியொரு உதாரணம் கூறுகிறேன். இதோ மண்குடம் இருக்கிறது. முதலில் இது மண்ணுகவே இருந்தது. இப்போது குட மாக ஆகியிருக்கிறது. குடம் மண்ணிலிருந்து உண்டா யிற்று. மண் குடமாக இருப்பதால் அதாலேயே உஜ்ஜீவிக்கின்றது. குடத்தை உடைத்து விட்டால் மீண்டும் மண்ணுகவே ஆய்விடுகிறது. அதாவது கடைசியில் மண்ணிலேயே போய்ச்சேருகிறது.

சிஷ்யர்கள் :— நன்ருக் விளங்கிவிட்டது. தொடர்ந்து உபதேசியுங்கள்.

வருணர் :— எவர்கள் ப்ரஹ்மத்தை அன்னம் என உபாஸிக்கிருர்களோ, அவர்கள் ஸகல அன்னத்தையும் அடைகின்ருர்கள். அதுவல்லவா உண்டானவற்றிற் கெல்லாம் முன்னல் தோன்றி ஸர்வௌஷதம் எனப் படுகிறது. அன்னத்திலிருந்து பிராணிகள் உண்டா கின்றன. உண்டானவை அன்னத்தால் வளர்கின்றன. பிராணிகளால் உண்ணப்படுவதும் அதுவே. பிராணி களை உண்பதும் அதுவே. அத்யதே என்ருல் புஜிக்கப் படுவது, அத்தி என்ருல் புஜிப்பது. ஆகவே அது அன்னம் என்ற காரணப்பெயரால் குறிக்கப்படுகிறது.

வைகானஸர் :— மற்ற கோசங்களைப் பற்றியும் விவரிக்க வேண்டுகிறேன் பிரபோ!

வருணர் :— வத்ஸர்களே!

तस्माद्वा एतस्मादन्नरसमयात् । अन्योऽन्तर आत्मा प्राणमयः । तेनैष पूर्णः । स वा एष पुरुषविध एव । तस्य पुरुषविधताम् । अन्वयं पुरुषविधः । तस्य प्राण एव शिरः । व्यानो दक्षिणः पक्षः । अपान उत्तरः पक्षः । आकाश आत्मा । पृथिवी पुच्छं प्रतिष्ठा । तदप्येष श्लोको भवति ॥

தஸ்மாத் வா ஏதஸ்மாதந்நரஸமயாத் l அந்யோ அந்தர ஆத்மா ப்ராணமய: l தேனைஷ பூர்ண: l ஸ வா ஏஷ புருஷவித ஏவ l தஸ்ய புருஷவிததாம் l அந்வயம் புருஷவித: l தஸ்ய ப்ராண ஏவ சிர: l வ்யாநோ தக்ஷிண: பக்ஷ: l அபாந உத்தர: பக்ஷ: l ஆகாச ஆத்மா l ப்ருதிவீ புச்சம் ப்ரதிஷ்டா l ததப்யேஷ ச்லோகோ பவதி ll

முன்சொன்ன அன்னரஸ மயமான கோசத்தின் உள்ளில் இருப்பது பிராணமயமான ஆத்மா. பிராணமய கோசம் அன்னமயகோசத்தினின்றும் வேறுபட்டது. அதாவது அதைவிட சூக்ஷ்மமானது. இந்த அன்னமய சரீரம் அந்த பிராணமய ஆத்மாவினுல் பூர்ணமாயிருக்கிறது. துருத்தி காற்றினுல் நிரம்பி இருத்தல்போல் இந்த அன்னமயம் பிராணமயத்தினுல் நிரம்பி இருக்கிறது. அந்த பிராணமய சரீரமும் அன்னமய ஆகிருதியை அநுஸரித்து புருஷாக்ருதியை அடைந்துவிடுகிறது. அதற்கு வேருக தனியாக சொந்தமாக உருவமில்லை. அந்த புருஷ வடிவுக்கு பிராணன் தலை, வியானன் வலதுபக்கம் இறக்கை, அபானன் இடது பக்கம் இறகு. ஆகாசமென்ற ஸமானன் நடுவுடல். பிருதிவீதேவதை அடிப்பாகம் (வால்) அதைப்பற்றி ஒரு மந்திரமும் உள்ளது.

போதாயனர் :— ஸத்குருவே! இப்படிக் கற்பனையாக விவரித்துக்கொண்டு போனுல் எங்கு சென்று முடியுமோ?

வைகானஸர் :— நண்பரே! பயம் வேண்டாம். எல்லாம் குருநாதர் விளக்கித்தருவார்கள். பொறுமையுடன் கேட்போம்.

வருணர் :- ஹ்ருதய குஹையிலுள்ள ப்ரஹ்மதத்வம் ஒரு கோவிலின் கர்ப்பக்ருஹத்திலுள்ள மூலவிக்ரஹம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதைச்சுற்றி 5 பிராகாரங்கள் இருப்பதுபோல் 5 கோசங்கள் இருப்பதாக

வும் வைத்துக்கொள்ளுங்கள். அன்னமய கோசம் வெளியிலிருக்கும் பிராகாரம். இரண்டாவது பிராகாரம் பிராணமய கோசம். நாம் இப்போது இரண்டாவது கட்டிற்கு வந்திருக்கிருேம். மற்ற மூன்று பிராகாரங்களையும் கடந்து மூலவிக்ரஹத்தைக் காணவேண்டும். அவஸரம் வேண்டாம். ஐபமும் வேண்டாம்.

போதாயனர் :— பிராணமய கோசம் பற்றியதான சுலோகத்தைக் கூறி உரையும் கூறுங்கள்.

வருணர் :— प्राणं देवा अनुप्राणन्ति । मनुष्याः पशवश्च ये । प्राणो हि भूतानामायुः । तस्मात्सर्वायुषमुच्यते । सर्वमेव त आयुर्यन्ति । ये प्राणं ब्रह्मोपासते । प्राणो हि भूतानामायुः । तस्मात्सर्वायुषमुच्यत इति ॥

ப்ராணம் தேவா அநுப்ராணந்தி । மநுஷ்யாः பசவஸ்ச யே । ப்ராணோ ஹி பூதாநாமாயு: । தஸ்மாத் ஸர்வாயுஷமுச்யதே । ஸர்வமேவ த ஆயுர் யந்தி । யே ப்ராணம் ப்ரஹ்மோபாஸதே । ப்ராணோ ஹி பூதாநாமாயு: । தஸ்மாத் ஸர்வாயுஷ முச்யத இதி ॥

சுலோகத்திற்கு பொருள் கூறுகிறேன் கேளுங்கள். அக்கினி முதலிய தேவர்கள் வாயுவை அனுஸரித்தே தத்தம் தொழிலைச் செய்கின்றனர். அத்யாத்மமாகப் பொருள்படும் பொழுது தேவர்கள் என்பதற்கு இந்திரியங்கள் என்று அர்த்தம். புலன்கள் வாயு ரூபியாகிய பிராணனை அனுசரித்தே செயல்படுகின்றன. மனிதர்களும் பசுக்களும் அங்ஙனமே தான். பிராணன் பிராணிகளுடைய ஆயுள். ஆகவே ‘ஸர்வாயுஷம்’ (எல்லாவற்றின் ஆயுள்) என்று கூறப்படுகிறது. எவர்கள் பிராணனை பிரம்மம் என்று உபாஸிக்கின்ருர்களோ அவர்களுக்கு பூர்ண ஆயுளுண்டு. அபமிருத்யு இல்லை. பிராணனே ஸர்வ பிராணிகளின் ஆயுளாக இருக்கிறது.

த்ரிசங்கு :—ஸத்குருவே, இந்த பிராணமய கோசத்திற்குள்ளிருக்கும் கோசத்தை விவரிக்க வேண்டுகின்றேன்.

வருணர் :— तस्यैष एव शारीर आत्मा। यः पूर्वस्य। तस्माद्वा एतस्मात्प्राणमयात्। अन्योऽन्तर आत्मा मनोमयः। तेनैष पूर्णः। स वा एष पुरुषविध एव। तस्य पुरुषविधताम्। अन्वयं पुरुषविधः। तस्य यजुरेव शिरः। ऋग्दक्षिणः पक्षः। सामोत्तरः पक्षः। आदेश आत्मा। अथर्वाङ्गिरसः पुच्छं प्रतिष्ठा। तदप्येष श्लोको भवति। यतो वाचो निवर्तन्ते। अप्राप्य मनसा सह। आनन्दं ब्रह्मणो विद्वान्। न बिभेति कदाचनेति ॥

தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா। ய: பூர்வஸ்ய। தஸ்மாத் வா ஏதஸ்மாத் ப்ராணமயாத்। அந்யோந்தர ஆத்மா மநோமய:। தேனைஷ பூர்ண:। ஸ வா ஏஷ புருஷவித ஏவ। தஸ்ய புருஷவிததாம்। அந்வயம் புருஷவித:। தஸ்ய யஜுரேவ சிர:। ருக் தக்ஷிண: பக்ஷ:। ஸாமோத்தர: பக்ஷ:। ஆதேச ஆத்மா। அதர்வாங்கிரஸ: புச்சம் ப்ரதிஷ்டா। ததப்யேஷ ச்லோகோ பவதி। யதோ வாசோ நிவர்த்தந்தே। அப்ராப்ய மநஸா ஸஹ। ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான்। ந பிபேதி கதாசநேதி ॥

இந்த பிராணமயகோசம் முந்திய அன்னமய சரீரத்துக்கு ஆத்மா இந்த பிராணமயத்தைக்காட்டிலும் சூக்ஷ்மமாக ஒரு கோசம் இருக்கிறது. அது பிராணமயத்தினின்றும் வேறுபட்டது. ஆனால் அதற்கு அந்தர்கதமானது. அதுவே மனோமயகோசம் மனோமயத்தினால் பிராணமயம் நிரம்பி இருக்கிறது. ஆகையினால் அதற்கும் புருஷ வடிவு கிடைக்கின்றது. இந்த மனோமயமான கோசத்திற்கும் தலை, பக்கங்கள் நடுப்பாகம் அடிப்பாகம் கூறப்படுகின்றன. இந்த மனோமய புருஷ உருவத்திற்கு யஜுர்வேதமே தலை. ருக்வேதமே வலது பக்கம். ஸாம வேதமே இடது பக்கம், ஆதேசம் என்னும்

ப்ராஹ்மண பாகம் மத்திய பாகம் அதர்வண வேதம் அடிப்பாகம். அதைப்பற்றி பின்வரும் மந்திரமும் உளது. 'எதனைக்கடக்க முடியாமல் வாக்குகள் மனதுடன் திரும்பி வந்துவிட்டனவோ அந்த பிரம்மத்தின் ஆனந்தத்தை அறிந்தவன் ஒருபோதும் பயப்படமாட்டான். (சிஷ்யர்கள் ஆச்சரியத்துடன் ஒருவரை ஒருவர் பார்க்கிருர்கள்). குழந்தைகளே, இப்போது நாம் மிகவும் முக்கியமான கட்டத்திற்கு வந்திருக்கிரேம். இந்த மந்திரத்தின் பொருளை மறு முறையும் கூறுகிறேன். "எதனை எட்டிப்பிடிக்க முடியாமல் வாய்ச்சொற்கள் திரும்புகின்றனவோ மனதும் கூடச்சென்று முயன்று தோற்றுகூட திரும்பிவிடுகின்றதோ அந்த பிரம்மானந்த நிலையை அறிந்தவன் எவ்விடத்தும் அஞ்சமாட்டான்". இதை நன்ருகச் சிந்தியுங்கள். இத்துடன் இன்று நிறுத்திக்கொள்வோம். (எழுந்திருக்கிருர்)

(திரை விழுகிறது)

காட்சி 3

[திரை விலக, மஹரிஷி வைசம்பாயனரின் ஆசிரமத்தில் பகவான் வருணர் சிடர்களுக்கு உபதேசம் செய்யும் காட்சி தென்படுகிறது.]

வருணர் :— குழந்தாய் போதாயனு! முன்தினம் விட்ட இடத்திலிருந்து இன்று பாடம் துவக்கவேண்டும். எதில் நிறுத்திஞேம் சொல்லுவாய்?

போதாயனர் :— ஸ்வாமீ! "யதோ வாசோ நிவர்த்தந்தே। அப்ராப்ய மநஸா ஸஹ। ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான்। ந பிபேதி கதாசநேதி।" என்ற சுலோகம் கூறிப் பொருளும் கூறினீர்கள்.

வருணர் :— வத்ஸா! மிகவும் ஸரி.

மாஹாசமஸ்யர் :—பொருள் எங்களுக்குச் சரியாக விளங்கவில்லையே! மறுபடியும் கொஞ்சம் விபரமாகக் கூறும்படி வேண்டுகிறேன் ஐயனே!

வருணர் :—குழந்தைகளே! அப்படியே ஆகட்டும். கவனமாகக் கேளுங்கள். முதலில் அன்னமயகோசம் வர்ணிக்கப்பட்டது. அதை பிரம்மமாக உபாஸித்தால் கிட்டும் பலனும் கூறப்பட்டது. பின்பு பிராணமயகோசம் விவரிக்கப்பட்டது. அதையும் பிரம்மமாக உபாஸித்தால் கிடைக்கும் பலனும் உரைக்கப்பட்டது.

அதற்குப் பின் மனோமயகோசம்பற்றி விளக்கினேன். அதை பிரம்மமாக உபாஸித்தால் பெறும் பயனை விளக்குவதே இந்த சுலோகம். அதாவது பிரம்மம் வாக்குக்கும் மனதிற்கும் எட்டாதது. அது ஆனந்த ஸ்வரூபம். அதை உபாஸித்து அறிந்தவன் ஒருபோதும் பயப்படமாட்டான்.

த்ரிசங்கு :— குருநாதரே! "ப்ரஹ்மம் மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாதது" என்றால் அதையறிவது எப்படி?

வைகானஸர் :— ஐயனே! ஏதாவது ஒன்றை அறிவது-சுயமேயறிவது-மனதினால்தானே? பிறரால் அறிவது வாக்குகளால். அவை இரண்டின் துணை இல்லாமல் எப்படி அறியமுடியும்?

வருணர் :— குழந்தைகளே! இப்படி ஸாதுவான கேள்விகள் கேட்பதுபற்றி மிகவும் ஸந்தோஷம். முதலில் மனதினால் அறியமுடியாமல் போனதற்குக் காரணம் கூறுகிறேன். மனதால் அதை எண்ண முடியாது. ஏனென்றால் ப்ரஹ்மத்தினாலேயே மனது எண்ணப்படுகிறது. மனது விஷயீகரிக்கப்படுகிறது. உன்னுடைய மனது, என்னுடைய மனது, அவனுடைய மனது என்கிறோம். அப்போது மனதுக்கு உடையவன் வேறொருவனிருக்கிறான் என்பது திண்ணமாகிறது. அதுவே ப்ரஹ்மம். ஆகவே ப்ரஹ்மத்தை மனதாலும் அறியமுடியாது. ப்ரஹ்மத்திற்கு மனதும் சரீரம் போன்றதே. மனதின் உள்ளே இருந்துகொண்டு ஆள்வதும் ப்ரஹ்மமே. மனோமயமாய் விளங்குவது, மனதிற்கும் மனதாயிருப்பது ப்ரஹ்மமேயாகும்.

ஆதலால் மனதும், எட்டிஎட்டிப் பார்த்துவிட்டுத் தோற்றுத் திரும்பிவிடுகிறது. தனியாகப் பின்வாங்க வில்லை. 'அறிவேன்' என்று மார்தட்டிப் போர் முழக்கிச் சென்ற வாக்குகளுடன் திரும்புகிறது.

வைகானஸர்:- வாக்குகள் பின்வாங்கிய படலத்தை யும் விஸ்தாரமாகக் கூறவேண்டும்.

வருணர்:— ஸௌம்யர்களே! கூறுகிறேன். ஜாக்கிரதையாகக் கேளுங்கள். ராணுவ அதிகாரி தன் கீழிருக்கும் போர் வீரனை யுத்தகளத்துக்கு முதலில் அனுப்பிவிட்டுத் தான் பின்னுல் போவதுபோல் வாக்குகளை முதலில் அனுப்பித் தானும் பின்போனது மனது. இரண்டுபேரும் தோற்றுத் திரும்பினுர்கள். அதிகாரிக்குள்ள கௌரவத்தை ஒட்டி முதலில் அவர் (மனது) தோல்வி வர்ணிக்கப்பட்டது. இப்போது வசனங்கள் திரும்பிய விதம் விவரிக்கிறேன். வாக்குகளை நான்கு விதமாகப் பிரிக்கலாம்.

1. ஜாதியைக் குறிப்பது— அதாவது மனிதன், பசு, மரம், கமண்டலம், தானியம் வகையரு.

2. குணம்—நன்மை, தீமை, கருமை, நீலம், கோபம், சாந்தம் முதலியன.

3. கிரியை—சமைத்தல், ஓடுதல், குளித்தல், உபதேசித்தல், தானம் வழங்குதல், சிரித்தல் இத்தியாதி.

4. ஸம்பந்தம்—தந்தை, குரு, கணவன் இப்படி யாக.

பிரம்மத்தை இந்த நான்கு விதமான சொற்றுெடர் களால் விவரிக்க முடியாதே. அதற்கு ஜாதியேது? குணம் ஏது? கிரியை (செயல்) தான் ஏது? தானுகத் தனித்து விளங்குவதால் ஸம்பந்தம் தான் ஏது? இவ்விதம் நான்கு பிரிவுகளுக்குள்ளும் அடங்காததால் வாக்குகளாலும் அறிய முடியவில்லை. அதுவும் தோல்வி யுற்று மடங்கியது.

த்ரிசங்கு :— குருநாதரே! ரொம்ப அதிசயமாக அபூர்வமாக விவரித்தீர்கள். நன்ருகப் புரிந்து கொண்டோம், தொடர்ந்து உபதேசம் செய்ய வேண்டு கின்ரேம்.

மாஹாசமஸ்யர் :— ஸத்குருவே, மனதால் அதை அறிய முடியாதென்றும், மனம் அதற்கு சரீரம் போன்றது என்றும் அறிந்துகொண்டோம். வாக்காலும் மனதாலும் விளக்கப்பெருமல், அவைகளையே தூண்டுவது பிரம்மம் தான் என்றும் அறிந்தோம்.

போதாயனர் :— ஐயனே, அடியோங்கள்பால் கிருபை கூர்ந்து தொடர்ந்து உபதேசிக்க் வேண்டு கிரேம்.

வருணர் :— ஆகட்டும் வத்ஸர்களே.

तस्यैष एव शारीर आत्मा। यः पूर्वस्य।

தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா ! ய: பூர்வஸ்ய !

முன் கூறப்பட்ட அந்த பிராணமயனுக்கு இந்த மனோமய கோசமே சரிரத்திற்குள்ளிருக்கும் ஆத்மா ஆகும்.

तस्माद्वा एतस्मान्मनोमयात्। अन्योऽन्तर आत्मा विज्ञानमयः। तेनैष पूर्णः। स वा एष पुरुषविध एव। तस्य पुरुषविधताम्। अन्वयं पुरुषविधः। तस्य श्रद्धैव शिरः। ऋतं दक्षिणः पक्षः। सत्यमुत्तरः पक्षः। योग आत्मा। महः पुच्छं प्रतिष्ठा। तदप्येष श्लोको भवति॥

தஸ்மாத் வா ஏதஸ்மான் மநோமயாத் ! அந்யோ அந்தர ஆத்மா விஜ்ஞாநமய: ! தேனைஷ பூர்ண: ! ஸ வா ஏஷ புருஷவித ஏவ ! தஸ்ய புருஷவிததாம் ! அந்வயம் புருஷவித: ! தஸ்ய ச்ரத்தைவ சிர: ! ருதம் தக்ஷிண: பக்ஷ: ! ஸத்யமுத்தர: பக்ஷ: ! யோக ஆத்மா ! மஹ: புச்சம் ப்ரதிஷ்டா ! ததப்யேஷ ச்லோகோ பவதி !

மனோமய கோசத்தைக் காட்டிலும் வேருயும் அந்தர்கதமாகவுமிருப்பது விக்ஞானமய ஆத்மா. அதனல் இந்த மனோமயகோசம் நிரம்பியிருக்கிறது. ஆகவே இதனுடைய வடிவும் முன்போலவே புருஷ வடிவாகிறது. இதற்கு சிரத்தை சிரஸ், ருதம் என்ற ஒழுங்கு வலது பக்கம், உண்மை இடது பக்கம், யோகம்-நடுவுடல், மஹத் தத்வம் அடிப்பக்கம். இவ்விஷயமாக பின்வரும் சுலோகமுள்ளது.

போதாயனர் :— யோகம், மஹத்தத்துவம் என்ருல் என்ன ? விக்ஞானம் என்ருல் என்ன ?

வருணர் :— விக்ஞானத்துடன் கர்மாக்கள் செய்ய வேண்டும். அக்கர்மாவுக்கு சிரத்தை முக்கியம். ஆகையால் சிரத்தையே தலையாக-முதன்மையாக கூறப் பட்டது. கர்மாக்கள் ஒழுங்காகவும் உண்மை உணர் வுடனும் செய்யப்படவேண்டும். ஆகவே அவைகள் புருஷனின் இரு பக்கங்களாக-இறக்கைகளாக வர்ணிக் கப்பட்டன. யோகம் என்பது அடக்கம். நிலை நிறுத்துதல். மனோமயகோசம் வேத ரூபமாக விவரிக்கப் பட்டதல்லவா ! வேதங்களின் பொருள்களை அறியும் நிச்சயமான புத்தியே இங்கு விக்ஞானமாகக் கூறப் படுகிறது. மஹத் என்பது பிரம்மத்திலிருந்து முதன் முதலில் உண்டான தத்துவம். எல்லாவற்றிற்கும் ஆதாரமானது.

வைகானஸர் :- ஐயனே, விக்ஞானமய கோசத்தை விளக்கும் சுலோகமும் பொருளும்கூறப் பிரார்த்திக் கிறேன்.

வருணர் :— विज्ञानं यज्ञं तनुते । कर्माणि तनुतेऽपि च । विज्ञानं देवाः सर्वे । ब्रह्म ज्येष्ठमुपासते । विज्ञानं ब्रह्म चेद्वेद । तस्माच्चेन्न प्रमाद्यति । शरीरे पाप्मनो हित्वा । सर्वान्कामान्समश्नुत इति । तस्यैष एव शारीर आत्मा । यः पूर्वस्य ॥

விக்ஞாநம் யஜ்ஞம் தநுதே । கர்மாணி தநுதேऽபி

ச। விஜ்ஞாநம் தேவா: ஸர்வே। ப்ரஹ்ம ஜ்யேஷ்ட முபாஸதே। விக்ஞாநம் ப்ரஹ்ம சேத் வேத। தஸ்மாச்சேந் ந ப்ரமாத்யதி। சரீரே பாப்மநோ ஹித்வா। ஸர்வான் காமான் ஸமச்நுத இதி। தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா। ய: பூர்வஸ்ய।

விக்ஞானமே யாகத்தைச் செய்கின்றது. மற்றக் கர்மாக்களையும் செய்கின்றது. தேவர்கள் எல்லோரும் விக்ஞானத்தையே முதலில் தோன்றிய பிரம்மமாக உபாஸிக்கின்றனர். அவ்விதமறிந்து அந்த பிரம்மத்தி னின்றும் நழுவாமலிருக்கும் ஒருவன் பாபங்களை யெல்லாம் போக்கடித்து எல்லா இன்பங்களையும் அடை கின்றான். முற்பட்டதற்கு இந்த விக்ஞானமே ஆத்மா! மனோமயகோசம் சரீரம். விக்ஞானம் அதனுடைய ஆத்மா.

போதாயனர் :— கர்மாக்களைச் செய்யும்போது புண்ணிய பாபங்கள் ஏற்படத்தானே செய்யும். அதை நீங்குவது எங்ஙனம்?

வருணர் :— சரீர அபிமானத்தினாலேயே எல்லாப் புண்ணிய பாபங்களும் ஏற்படுகின்றன சரீர அபிமானம் நீங்கியபோது எல்லாக் கருமங்களும் நிஷ்காமிய வினை களாக மாறும். அப்போது எல்லா புண்ணிய பாபங் களும் நாசமடைகின்றன.

வைகானஸர் :— மேலும் தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகின்றோம் ஐயனே!

வருணர் :— ஸௌம்யர்களே! கேளுங்கள்.

तस्माद्वा एतस्माद्विज्ञानमयात्। अन्योऽन्तर आत्मानन्दमयः। तेनैष पूर्णः। स वा एष पुरुषविध एव। तस्य पुरुषविधताम्। अन्वयं पुरुषविधः। तस्य प्रियमेव शिरः। मोदो दक्षिणः पक्षः। प्रमोद उत्तरः पक्षः। आनन्द आत्मा। ब्रह्म पुच्छं प्रतिष्ठा। तदप्येष श्लोको भवति ॥

தஸ்மாத் வா ஏதஸ்மாத் விஜ்ஞாநமயாத்। அந்யோந்தர ஆத்மாநந்தமய:। தேநைஷ பூர்ண:। ஸ வா ஏஷ புருஷவித ஏவ। தஸ்ய புருஷவிததாம்। அந்வயம் புருஷவித:। தஸ்ய ப்ரியமேவ சிர:। மோதோ தக்ஷிண: பக்ஷ:। ப்ரமோத உத்தர: பக்ஷ:। ஆநந்த ஆத்மா। ப்ரஹ்ம புச்சம் ப்ரதிஷ்டா। ததப்யேஷ ச்லோகோ பவதி॥

விக்ஞானமயத்தைக் காட்டிலும் வேருனதும் அதனுள் இருப்பதுமே ஆனந்தமய ஆத்மா. ஆனந்தமய ஆத்மாவினல் முன் விவரிக்கப்பட்ட விக்ஞானமய கோசம் நிரம்பி இருக்கிறது. இதன் வடிவும் முந்திய புருஷ வடிவை அனுஸரித்திருக்கின்றது. அந்த ஆனந்தமய புருஷனுக்கு பிரியமே தலை. மோதம்-வலது பக்கம். பிரமோதம்-இடது பக்கம். ஆனந்தம் மத்தியபாகம். ஆதாரமான பிரம்மம் அடிப்பாகம் (வால்) அந்த பிரம்மத்தைப் பற்றிப் பின்வரும் மந்திரமும் உள்ளது.

மாஹாசமஸ்யர் :— பிரியம், மோதம், பிரமோதம் என்ற பதங்களின் பொருள்களிலுள்ள வேற்றுமையைக் கூற பிரார்த்திக்கிறேன் ஸ்வாமி!

வருணர் :— எல்லாப் பதங்களும் மகிழ்ச்சியை குறிக்கின்றன. ஆனல் அளவில் வித்யாசப்படுகின்றன. தான் விரும்பிய பொருளை நேரில் காணும்பொழுது உண்டாகும் மகிழ்ச்சி பிரியமாகும். அவ்வஸ்து தனக்குக் கிடைத்தவுடன் ஏற்படும் சந்தோஷமே மோதம். பிரமோதம் என்ருல் அதிகமான மகிழ்ச்சி அதாவது கிடைத்த வஸ்துவை அனுபவிக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சிக்கு பிரமோதம் என்று பெயர். முன் விவரித்த மூன்று விதமான மகிழ்ச்சிகளிலும் ஊடுருவி நிற்பதே ஆனந்தமாகும். தவம், பிரம்மசரியம், உபாஸனை, சிரத்தை, வேதாத்யயனம், முதலியவற்ருல் அந்தக்கரணம் தெளிவடைகிறது. எவ்வளவுக்கெவ்வளவு அது தெளிவடைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஆனந்தம்

பெருகுகிறது. இந்த ஆனந்தம் பிரம்மானந்தத்தின் ஒரு பகுதியேயாகும். ஆனந்தமய ஆத்மா ஸம்ஸாரியான ஜீவன். புச்சமாக அதாவது ஆதாரமாகச் சொல்லப் பட்டது பரமாத்மாவான பிரம்மம். அதற்கு ஆதாரம் வேறென்றும் இல்லை

குழந்தைகளே, இன்று கேட்டதை நன்ருகச் சிந்தியுங்கள். இத்துடன் பாடம் நிறுத்துகின்றேன். மாத்யான்ஹிகம் செய்யும் சமயம் நெருங்கிவிட்டது. போவோம் வாருங்கள். (எல்லோரும் எழுந்து போகின்றனர்)

(திரை விழுகிறது)

காட்சி 4

[திரை தூக்கப்பட வைசம்பாயனரின் ஆசிரமத்தில் பகவான் வருணரும் சீடர்களும் அமர்ந்திருக்கிருர்கள்.]

வருணர் :— வத்ஸர்களே! நேற்று உபதேசித்த பாடங்களை நன்ருய் மனனம் செய்து சித்தித்தீர்களா? ஏதாவது ஸந்தேகங்கள் உண்டா? சங்கோசமில்லாமல்-பயமில்லாமல்-கேளுங்கள் தீர்த்துவைக்கின்றேன்.

த்ரிசங்கு :—குருநாதரே, சந்தேகமின்றித் தெரிந்து கொண்டோம். மேலும் தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகின்ருேம்.

வருணர் :—சரி உபதேசிக்கிறேன். கவனத்துடன் கேளுங்கள்.

असन्नेव स भवति । असद्ब्रह्मेति वेद चेत् । अस्ति ब्रह्मेति चेद्वेद । सन्तमेनं ततो विदुरिति । तस्यैष एव शारीर आत्मा । यः पूर्वस्य ।

அஸந்நேவ ஸ பவதி। அஸத் ப்ரஹ்மேதி வேத சேத்। அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத। ஸந்தமேநம் ததோ விதுரிதி। தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா। ய: பூர்வஸ்ய।

எவன் பிரம்மம் இல்லை என்று எண்ணுகின்றுனோ, அவன் அஸத் ஆகிருன். அதாவது பிரம்மத்தை இல்லை என்று கருதுகிறவன் கெட்டொழிந்தவனுகிருன். உண்டு என்று ஸத்தாக பிரம்மத்தை நினைப்பவன் ஸத்தாக அதாவது ப்ரஹ்மமாக ஆகிருன். ப்ரஹ்மம் உண்டு என்று கருதுகிறவனை ஸத்தான ப்ரஹ்மம் என்று பிரம்மவித்துக்கள் கருதுகின்றனர். முற்பட்ட விக்ஞானமய சரீரத்துக்கு இந்த ஆனந்தமயமே சரீரம் படைத்த ஆத்மாவாகிறது.

போதாயனர் :—பொருளைக்கேட்டால் நன்ருகப் புரிந்ததுபோல் தோன்றுகிறது. ஆனுல் தெளிவாகவும் தெரியவில்லை. கொஞ்சம் கூட விளக்கிக் கூறும்படி வேண்டுகிறேன்.

வருணர் :—உலகில் வாஸ்தவமாக இருக்கும் பொருள் ப்ரஹ்மம் ஒன்றுதான். இந்த ப்ரஹ்மத்தை அறிவதன் மூலம்தான் மோக்ஷம் என்ற புருஷார்த்தத்தை அடைகிருன். இந்த ப்ரஹ்மத்தை இல்லை என்று ஒருவன் தீர்மானிப்பானேயாகில் அவன் ஒரு நாளும் ப்ரஹ்மத்தை அறிய முயற்சிக்கமாட்டான். அவன் எப்படி ப்ரஹ்மமாக ஆகமுடியும்? ப்ரஹ்மமாக ஆவதுதான் சிறந்த புருஷார்த்தம். இதை ஒரு நாளும் இவன் அடையமுடியாது. இதற்கு மாருக ப்ரஹ்மம் இருக்கிறது என்று ஒருவன் அறிவானேயாகில் அவன் ஸத்தான அந்த ப்ரஹ்மமாக ஆகிவிடுவான். ப்ரஹ்ம வித்துக்கள் இவனை ஸத்தான ப்ரஹ்மமாகத் தெரிந்து கொள்வார்கள். ஸத்பதத்திற்கு ப்ரஹ்மம் என்ற பொருளைக்கொண்டு இவ்வாறு கூறப்பட்டது. ஸத்பதத்திற்கு ஸாது என்றும் அஸத்பதத்திற்கு அஸாது என்றும் பொருள் கொண்டால் மற்ருெரு விதமாகவும் கூறலாம். அதாவது எவன் ப்ரஹ்மத்தை இல்லை என்று தீர்மானிக்கிருனோ அவன் ப்ரஹ்மத்தை அறிவதற்கு வழியான (உபாயமான) வர்ணுச்ரமதர்மம் முதலியவைகளையும் இல்லையென்றே கூறுவான். அதில் அவனுக்கு

நம்பிக்கை இருக்காது. ஆகவே நாஸ்திகனான அவனை பெரியோர்கள் 'அஸாது' என்று கூறுவார்கள். இதற்கு மாறாக எவன் ப்ரஹ்மம் ஸத்-இருக்கிறது-என்று தீர்மானிக்கிறானோ அவன் சிரத்தையுடன் ப்ரஹ்மத்தை அறியும் ஸாதனமான வர்ணாச்ரமாதி தர்மங்களைக் கைக்கொள்வான். ஆஸ்திகனான இவனை மஹான்கள் 'ஸாது—நல்வழியில் செல்கிறவன்' என்று கூறுவார்கள். ஆதலால் உயர்ந்த புருஷார்த்தத்தை அடையவும் உலகில் ஸாது என்று பெயர் எடுக்கவும் அடிப்படையாக ப்ரஹ்மம் இருக்கிறது என்று உறுதி கொள்ளவேண்டும். வாக்குக்கும் மனதிற்கும் எட்டாததாயிருப்பதால் அறிவாளிகள்கூட ப்ரஹ்மத்தை இல்லை என்று தீர்மானித்து விடுவார்கள். அதற்காகத்தான் வேதம் ப்ரஹ்மம் உண்டு என்பதை வற்புறுத்திக் கூறுகிறது.

த்ரிசங்கு :— ஐயனே! இனி இதை அநுசரித்த கேள்விகள் கேட்கலாமா?

अथातोऽनुप्रश्नाः ।

அதாதோநுப்ரச்நா:

வருணர்:— குழந்தாய்! தாராளமாகக் கேட்கலாம்.

த்ரிசங்கு :—उताविद्वानमुं लोकं प्रेत्य । कश्चन गच्छती ३ । आहो विद्वानमुं लोकं प्रेत्य । कश्चित्समश्नुता ३ उ ।

உதாவித்வானமும் லோகம் ப்ரேத்ய I கச்சந கச்சதீ 3 I ஆஹோ வித்வாநமும் லோகம் ப்ரேத்ய! கச்சித் ஸமச்நுதா 3 உ I

பிரம்மத்தை அறியாதவன் சரீரத்தை விட்டபின் அந்த உலகை (பரமாத்மாவை) அடைவனா? தவிர பிரம்மத்தை அறிந்தவன் சரீரத்தை விட்டபின் அந்த உலகை (பரமாத்மாவை) அடைவனா?

வருணர் :— சபாஷ் த்ரிசங்கோ! நல்ல சாதுவான கேள்விகள். இந்தக் கேள்விகளை இன்னும் பிரித்துக்

கேட்கலாம். மாஹாசமஸ்யா! நான்காகப் பிரித்துச் சொல்வாய்!

மாஹாசமஸ்யர் :— குருநாதரே, அவ்விதமே செய்கிறேன். (1) அவித்வானுன பிரம்மஞானமில்லாதவன் இங்கிருந்துபோய் அந்த லோகத்தை (ப்ரஹ்மத்தை)ச் சேருகின்ருனு? (2) அல்லது அந்த அக்ஞானி சேரவில்லையா? (3) வித்வான் பிரம்மஞானியானவன் பரமாத்ம லோகத்தைச் சேருகின்ருனு? (4) அல்லது அவனும் சேரவில்லையா?

வருணர் :—குழந்தைகளே! இந்தக் கேள்விகளுக்கு விடை 'இல்லை' அல்லது 'உண்டு' என்று சில சொற்களில் கூற நான் விரும்பவில்லை. விவரமாக, தெளிவாகக் கூற விரும்புகிறேன். தவிர பாடம் தொடங்கிய முதல் நாளே விடையும் கூறியிருக்கிறேன். ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். இப்போது மிகவும் தெளிவாகக் கூறுகிறேன், கவனமாகக் கேளுங்கள்.

போதாயனர் :— ஐயனே! அப்படியே ஆகட்டும்.

வருணர் :—सोऽकामयत। बहु स्यां प्रजायेयेति। स तपोऽतप्यत। स तपस्तप्त्वा। इदꣳसर्वमसृजत। यदिदं किंच। तत्सृष्ट्वा। तदेवानुप्राविशत्। तदनुप्रविश्य। सच्च त्यच्चाभवत्। निरुक्तं चानिरुक्तं च। निलयनं चानिलयनं च। विज्ञानं चाविज्ञानं च। सत्यं चानृतं च सत्यमभवत्। यदिदं किं च। तत्सत्यमित्याचक्षते। तदप्येष श्लोको भवति।

ஸோ஽காமயத। பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி। ஸ தபோ஽தப்யத। ஸ தபஸ்தப்த்வா। இதகும் ஸர்வமஸ்ருஜத। யதிதம் கிம் ச। தத் ஸ்ருஷ்ட்வா। ததேவாநுப்ராவிசத்। ததநுப்ரவிச்ய। ஸச்ச த்யச்சாபவத்। நிருக்தம் சாநிருக்தம் ச। நிலயனம் சாநிலயனம் ச। விக்ஞாநம் சாவிக்ஞாநம் ச। ஸத்யம்

சாந்ருதம் ச ஸத்யமபவத் I யதிதம் கிம் ச I தத்ஸத்ய மித்யாசக்ஷதே I ததப்யேஷ ச்லோகோ பவதி I

அந்த பரமாத்மா-ஆகாசம் முதலியவைகளுக்குக் காரணமான பிரம்மம்-வெகுவாக விரிந்து வளரவேண்டும் என்று ஸங்கல்பித்தது. அதற்காகத் தவத்தைச் செய்தது. தவம் செய்து இங்கு எதெது உண்டோ—எல்லாவற்றையும் சிருஷ்டித்தது. அப்படி சிருஷ்டித்து அதனுள் புகுந்தது. சிருஷ்டியுள் நுழைந்து உருவாகவும் அருவாகவும் அதுவே ஆயிற்று. ஸகுணமாயும் நிர்க்குணமாயும், இடமுடையதாகவும், இடமில்லாததாகவும், சித்தாயும், அசித்தாயும், உண்மையாகவும், பொய்யானதாயும் ஆயிற்று. இங்கு எதெது உண்டோ அது எல்லாமாக அந்த ஸத்தியமே ஆயிற்று. ஆகையினுல் ஸத்தியத்திற்கும் ஸத்தியம் என்று அதற்குப் பெயர். அதைப்பற்றி பின்வரும் மந்திரமும் உளது.

த்ரிசங்கு :—ஸ்வாமீ! மிகுதியாக ஆவேன் என்று இச்சித்த பிரம்மம் எப்படிப்பட்ட தவம் செய்தது? அந்தத் தவம் யாரைக் குறித்து? விளக்கவேண்டும்.

வருணர் :—தவம் செய்தது என்ருல் நம்மைப்போல் தவம் செய்வது என்ற பொருள் இல்லை. ஆகையால் ஒருவரைக் குறித்து தவம் என்ற கேள்வி எழவில்லை. தவம் செய்தது என்ருல் ஞான ஒளியைப் பரப்பிற்று. சிருஷ்டிக்கிரமத்தையும், சிருஷ்டிக்கப் படவேண்டிய ஜகத்தை உண்டுபண்ணுகிற விதம் முதலானவைகளைப் பற்றியும் தீவிரமாக ஆலோசித்தது என்றுதான் அர்த்தமாகும். அப்படி ஆலோசித்து இதோ காணப்படுகின்றவை, இன்னும் எவை, எவை உண்டோ அவை அனைத்தையும் சிருஷ்டித்தது. பிராணிகளுடைய கர்ம பலன்களுக்கு அனுரூபமாக இந்த ஜகத்தை உண்டு பண்ணியது.

மாஹாசமஸ்யர் :—குருநாதரே! பிரம்மத்தினுல் ஏற்பட்ட சிருஷ்டியைப் பற்றி அறிந்துகொண்டோம்.

அது ஸர்வ வியாபக வஸ்துவாகவிருப்பதால் சிருஷ்டித்து அதனுள் புகுந்தது என்பது சரியல்லவே. அது தன் சுயரூபத்தில் புகுந்ததா? அல்லது வேறு அன்னிய உருவிலா?

வைகானஸர் :— உள்ளே இல்லாமல் வெளியே இருக்கும் பொருள்தான் உள்ளே நுழையக்கூடும். ஏற்கனவே உள்ளே இருக்குமாகில் அந்தவஸ்து உள்ளே நுழைகிறது என்று எப்படிக் கூறமுடியும்? ப்ரஹ்மமே தான் ஜகத்தாகப் பரிணமித்திருக்கிறது அந்த ஜகத்துக் குள்ளும் வெளியிலும் எங்கும் எப்பொழுதும் நிறைந்து உள்ளது ப்ரஹ்மம். இப்படிப்பட்ட ப்ரஹ்மம் உள்ளே நுழைந்தது என்று கூறினுல் அது எப்படிப் பொருந்தும்? உள்ளே நுழைவதற்கு முன்னுல் உள்ளே ப்ரஹ்மம் இல்லை என்று கூறவேண்டும். அப்பொழுது ப்ரஹ்மம் வியாபகமில்லை என்று ஆகிவிடும்.

வருணர் :— ஜகத் வேறு பிரம்மம் வேறு அல்ல. வீடு கட்டி ஒரு மனிதன் கிருஹப்பிரவேசம் செய்வது போல் பிரம்மம் ஜகத்தை சிருஷ்டித்து அதனுள் நுழைந்ததாக அர்த்தம் இல்லை. நிர்மலமான தடாக ஜலத்தில் ஸூர்ய பிரதிபிம்பத்தைப் பார்க்கும் போது அதில் பகலவன் பிரவேசித்திருப்பதாக நினைக்கிருே மல்லவா. அதுபோலவே தான் இங்கும். உண்மையில் இல்லை. பிரவேசித்தது போல் தோன்றுகிறது அவ்வளவு தான் ஸர்வ விகல்பங்களுக்கும் அதாவது சிருஷ்டிக்கும் காரணம் பிரம்மம். அது நிர்விகல்பமாயிருந்தும் தனது சுய சங்கற்பத்தினுல் எல்லாமாகவேண்டி பலவித நாம ரூபங்களை எடுத்துக்கொண்டது. அவ்யக்தமாக இருந்தது பல நாம ரூப பேதாத்மகமான—வியக்தமான —ஜகத்தாக பரிணமித்தது. பரிணமித்து பிராணிகளின் இதய குகையில் பிரகாசிக்கின்றது. இந்த பாரமார்த்திக ஸத்யமான பரம்பொருள் மூர்த்த வஸ்துக்களாயும் (உருவுடையவை) அமூர்த்த வஸ்துக்களாயும் (அருவங்கள்) குறிப்பிடக்கூடிய பொருள்களாகவும்,

குறிப்பிடமுடியாத பொருள்களாகவும், ஆசிரய வஸ்துக்களாகவும், ஆசிரயமில்லாத வஸ்துக்களாவும், புத்தியுள்ளவைகளாகவும், இல்லாதவைகளாகவும், வியவஹார ஸம்பந்தமான ஸத்ய வஸ்துக்களாயும், வியவஹார ஸம்பந்தத்தில் பொய்யான பொருள்களாயும், மற்றுமுள்ள யாவையுமாகிவிட்டது. இதுவே ஸத்வஸ்து. இதன் விஷயத்தில் ஒரு மந்திரமும் உள்ளது.

த்ரிசங்கு :—குருநாதரே, ஜகத் சிருஷ்டியையும், பிரம்மமே எல்லாமாக ஆனதையும் புரிந்துகொண்டோம் தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகின்றேன்.

போதாயனர் :— ஸ்வாமீ! தன்யனுனேன். ஆகாசாதிகளுக்குக் காரணமான அந்த பிரம்மம், காரிய வர்க்கங்களை சிருஷ்டித்து, புத்தி ரூபமாகிற குகையில், காண்பவன் போலவும், கேட்பவன் போலவும் மற்றும் சகலவிதமாகவும் தோற்றமளிப்பதையும் அறிந்தோம். ஆனால் ஒரு ஸந்தேகம்.

வருணர் :—அதுவென்ன! வத்ஸா! உடன் கேள்

போதாயனர் :—ஐயனே! வியவஹார ஸத்யம், வியவஹாரத்தில் பொய், பாரமார்த்திக ஸத்தியம் என்று சொன்னீர்களே! அது நன்ருகப் புரியவில்லை. விபரமாகச் சொல்லவேண்டும்.

வருணர் :—பாரமார்த்திக ஸத்யம் என்பதுதான் பிரம்மம். எப்போதும் எங்கும் உண்மையாக இருக்கும். ரஜ்ஜு ஸர்ப்பம் (கயிற்றில் தோன்றும் பாம்பு) சுக்தி ரஜதம் (சிப்பியில் தோன்றும் வெள்ளி) இது முதலானவை பொய். வியவஹாரத்திலும் பொய்தான். அவைகளைக் காட்டிலும் வேருன உண்மைப் பாம்பும் உண்மை வெள்ளியும் இருக்கின்றனவல்லவா! அவைகளும் ஒரு விதத்தில் பொய்தான். ஆனுலும் வியாவஹாரிக ஸத்தியம்.

வைகானஸர் :— ஐயனே! மந்திரங்களைக் கூறி பொருள் கூற வேண்டுகிறேன்.

வருணர் :— असद्वा इदमग्र आसीत् । ततो वै सदजायत । तदात्मानं स्वयमकुरुत । तस्मात्तत्सुकृतमुच्यत इति । यद्वै तत्सुकृतम् । रसो वै सः । रसं ह्येवायं लब्ध्वानन्दी भवति । को ह्येवान्यात्कः प्राण्यात् । यदेष आकाश आनन्दो न स्यात् । एष ह्येवानन्दयाति । यदा ह्येवैष एतस्मिन्नदृश्येऽनात्म्येऽनिरुक्तेऽनिलयने-ऽभयं प्रतिष्ठां विन्दते । अथ सोऽभयं गतो भवति । यदा ह्येवैष एतस्मिन्नुदरमन्तरं कुरुते । अथ तस्य भयं भवति । तत्त्वेव भयं विदुषोऽमन्वानस्य । तदप्येष श्लोको भवति ।

அஸத் வா இதமக்ர ஆஸீத் । ததோ வை ஸதஜாயத । ததாத்மாநம் ஸ்வயமகுருத । தஸ்மாத் தத் ஸுக்ருதமுச்யத இதி । யத் வை தத் ஸுக்ருதம் । ரஸோ வை ஸ: । ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி । கோ ஹ்யேவாந்யாத் க: ப்ராண்யாத் । யதேஷ ஆகாச ஆநந்தோ ந ஸ்யாத் । ஏஷ ஹ்யேவாநந்தயாதி । யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நத்ருச்யேऽநாத்ம்யேऽநிருக்தேऽநிலயநேऽபயம் ப்ரதிஷ்டாம் விந்ததே । அத ஸோऽபயம் கதோ பவதி । யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நுதரமந்தரம் குருதே । அத தஸ்ய பயம் பவதி । தத்த்வேவ பயம் விதுஷோऽமந்வாநஸ்ய । ததப்யேஷ ச்லோகோ பவதி ॥

ஸிருஷ்டிக்கு முன் ஆதியில் இப்பிரபஞ்சமெல்லாம் அஸத்தாக—நாமரூப வேற்றுமையற்றதாக—பிரம்மமாக இருந்தது. அந்த ப்ரஹ்மத்திலிருந்து ஸத்தான—நாமரூப வேற்றுமையுள்ள—பிரபஞ்சம் உண்டாயிற்று. அந்த அஸத்தான ப்ரஹ்மம் தானாகவே தன்னை பலவாகச் செய்து கொண்டது. ஆகையினால் அது ஸுகிருதம் என்று கூறப்படும். ஸுகிருதமென்றால் ஸ்வயம் கர்த்தா. எல்லாமாக ஆகியுள்ள ப்ரஹ்மமே புண்யரூபமாக

இருந்து நமக்குப் பலனைத் தருகிறது. அதனால்தான் புண்யத்திற்கும் ஸுகிருதம் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. நித்யமாயும் சேதனனுயுமுள்ள ஜகத்காரணப் பொருள் ஒன்று இருப்பதால்தான் ஸுகிருதம் பலனைத் தருகிறது. எது ஸ்வயம் கர்த்தாவோ அதுவே ஆனந்த ரஸம். அந்த ரஸத்தை அடைந்தவன் ஆனந்தமுள்ளவன் ஆகிறுன். அது அவனுடைய இதய ஆகாசத்தில் ஆனந்த ரூபமாக பிரகாசிக்கிறது. போக ஸாதனப் பொருள் ஒன்றுமில்லாவிடினும் ஞானிகள் இருந்த நிலையிலேயே ஆனந்தமாயிருப்பதற்குக் காரணம் அவர்கள் மனதில் குடிகொண்ட பிரஹ்மம் ஆனந்த ரஸம் என்பதுதான். மேலும் அது இல்லாமலிருந்தால் எப்படி பிராணுபான வாயுக்களின் சேஷ்டை இயங்கும்? சரீரத்தில் அவயவங்கள் செயல்படுவதே அவனிருப்பதால்தான். அதுவே உலகத்திற்கு எல்லா ஸுகத்தையும் கொடுக்கிறது. எப்போது ஒரு ஸாதகன், இத்தகைய உருவும் உடலும் குறியுமிடமும் மாறுபாடும் இல்லாத பரம்பொருளில் நிலைபெறுகிறுனே அவன் பயமற்ற நிலையை எய்துகிறுன். இப்பரம்பொருளில் சற்றேனும் பேதத்தைக் காண்பானுயின் அவனுக்கு பயமுண்டு. தான் வேறு ஆத்மா வேறு என்ற பேத புத்தி உண்டானதும் அங்கே பயம் உடனே தோன்றுகிறது. வித்வானுக இருந்தபோதிலும் ஐக்யத்தைப் பாராமல் வேருகப் பார்ப்பவனுக்கு பயத்துக்குக் காரணமாயிருப்பதும் பிரம்மமேயாகும். அதைப்பற்றி பின்வரும் மந்திரமும் உள்ளது.

த்ரிசங்கு:— ஸத்குருவே, மந்திரத்தையும் பொருளையும் கூறுங்கள்.

வருணர்:— भीषाऽस्माद्वातः पवते। भीषोदेति सूर्यः। भीषाऽस्मादग्निश्चेन्द्रश्च। मृत्युर्धावति पञ्चम इति।

பீஷாऽஸ்மாத் வாத: பவதே। பீஷோதேதி ஸூர்ய:। பீஷாऽஸ்மாதக்நிஸ்சேந்த்ரச்ச। ம்ருத்யுர் தாவதி பஞ்சம இதி।

இந்த பிரம்மத்தினிடம் பயத்தினுல் காற்று வீசுகிறது. பயத்தினுலேயே சூரியன் உதிக்கின்ருன். அக்கினியும் இந்திரனும் அவ்விதமே பயந்து தம் தம் தொழில்களைச் செய்கின்றனர். ஐந்தாவதான யமனும் பயத்தினுலேயே ஓடுகிருன். எல்லாவற்றிற்கும் காரணம் பிரம்மமே. நியந்தாவும் பிரம்மமே. வாயு, சூரியன் முதலியவர்கள் ஸ்வயம் ஈசுவரர்களாகவே இருந்தாலும் ஒரு பயத்தால் ஏவப்பட்டு தம் தம் வினைகளை–பணிகளை வழுவாமல்-காலம் தாழ்த்தாமல் புரிகின்ருர்கள். அப்பயத்துக்குக் காரணம் பிரம்மமே யாகும். அவனே யஜமானன்.

த்ரிசங்கு:—குருநாதரே அனுப்பிரச்னங்களுக்கு விவரமாக விடை கூறவேண்டுகிறேன்.

வருணர்:— எங்கும் நிறைந்திருக்கும் — எல்லாமா யிருக்கும் பிரம்மம். அதுவே ஆனந்தமான பரம் பொருள். ஸ்வயம்கர்த்தா. ஸுக்ருதமும்கூட. அதுவே ரஸம். உயிருடனிருக்கும் போதும் அதற்குப்பின்னும் ஒவ்வொருவனும் ஒவ்வொருகணமும் அதை அடைந்த வனுகவேயிருக்கிருன். ஒவ்வொரு மூச்சிலும் ஒவ்வொரு செயலிலும், ஒவ்வொரு எண்ணத்திலும், ஒவ்வொரு வசனத்திலும் குடிகொண்டிருக்கிறது இந்த ஆனந்த ரஸம். அதில்லாவிட்டால் யார் எதைத்தான் செய்ய முடியும்? அவித்வானுக்கும் வித்வானுக்கும் பிரம்மம் ஸமம். சரீரத்தை விட்டபின் அவித்வானும் அடை கிருன் அவன் சேரவில்லையோ என்ற சந்தேகம் வேண்டாம். வித்துவானும் அடைகின்ருன். வித்தியாச மென்ன வென்ருல் வித்துவான் இதை அறிகிருன். அவித்வான் அறிவதில்லை. சரீரத்தை விட்டபின் என்ருல் இறப்பு என்றர்த்தமில்லை. சரீரசம்பந்தமான காரியங்களை—ஸம்ஸார விஷயங்களைத் துறந்தபின்— விட்டபின் என்றே பொருள் கொள்ளவேண்டும். அதாவது ஜீவன் முக்தி நிலை.

போதாயனர் :— அக்ஞானி அறிவதில்லை. ஞானி அறிகின்றான். என்று கூறுகிறீர்கள். அடையும் ஆனந்தம் ஒன்றே என்று தானே கூறுகிறீர்கள் ஸ்வாமீ!

வருணர் :— ஆமாம்! குழந்தாய்!

போதாயனர் :— அங்ஙனமாயின் பஞ்ச பூதங்கள் மற்றும் தேவர்கள் அச்சமடைகின்றனர் என்று சொன்னீர்களே அதன் தாத்பர்யம் என்னவோ? தேவர்கள் ஞானிகள் தானே?

வருணர் :— குழந்தாய்! தேவர்கள் சிறந்த அறிவுள்ளவர்கள் தான். ஆனாலும் எப்போது தனக்கும் பிரம்மத்துக்கும் பேதத்தைப் பார்ப்பதில்லையோ அப்போதுதான் அவர்களுக்கும் அபய பிரதிஷ்டை என்ற நிலை ஸித்திக்கிறது. சகல சாஸ்திர பாரங்கதனாக இருந்தாலும்–பரமாத்ம வஸ்துவிடத்து ஒரு சிறிதேனும் பேதம் கற்பித்தால் அவன் முக்தி நிலையை அடைய முடியாது. ஞானிகளுக்கு எல்லா பயங்களையும் போக்குவது பிரம்மமே. அதுவே அவித்வானுக்கும் பேதபுத்தியுள்ள வித்வானுக்கும் பயத்தை விளைவிக்கிறது. பேதத்தைக் காணும்வரை பயத்தைக்காண்பான். பயத்தைக் காணும்வரை பிரம்மத்தை அடையாமல் வித்வானும் எட்டித்தான் நிற்பான்.

வைகானஸர் :—ஸர்வகாரணனும், எங்கும் நிறைந்து பிரகாசிப்பவனும், பயப்படுத்துவோனும் பயத்தைப் போக்குபவனும, பயத்துக்குக் காரணமானவனும் எல்லாம் பரமாத்மாவே என்று அறிந்தோம்

வருணர் :—வத்ஸர்களே! அபேதத்தில் அபயம், அபயத்தில் ஆனந்தம். அதுவே ரஸம். இதுவே ரத்ன சுருக்கமான உபதேசம். இந்த ஆனந்தத்தின் அளவுபற்றி நாளை கூறுகிறேன். போவோம் வாருங்கள்.

(எல்லோரும் எழுந்திருக்க திரை விழுகிறது.)

காட்சி 5

[திரை விலக, வைசம்பாயனரின் ஆசிரமத்தில், பகவான் வருணர், சிடர்களுக்கு உபதேசம் செய்துகொண்டிருக்கிருர்.]

த்ரிசங்கு:— ஐயனே! பிரம்மானந்தத்தின் அளவு பற்றி இன்று சொல்லுவதாக அருளினீர்களே, கிருபை பண்ணவேண்டும்.

வருணர்:— குழந்தைகளே! பிரம்மானந்தத்தைப் பற்றிக் கூறும் முன் லௌகிகமான ஆனந்தத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். பிரசித்தமான, நம்மால் எளிதில் புரியக்கூடியதான, லௌகிக ஆனந்தத்தை முதலில் அறிந்துகொள்ளுவோம்.

மாஹாசமஸ்யர்:— ஸ்வாமீ! அடியேனுக்கு ஒரு ஸந்தேகம்.

வருணர்:— அதுவென்ன?

மாஹாசமஸ்யர்:— லௌகிக மகிழ்ச்சி இந்திரியங்களுக்கு கோசரம். வெளிப்பொருள்கள் மூலம் ஏற்படுவது. இதை அறிவதால் பிரம்மானந்தத்தை அறிய முடியுமா?

வருணர்:— வத்ஸா, முடியும். ஏனெனில் இதுவும் பிரம்மானந்தத்தின் ஓர் அம்சமேயாகும்.

வைகானஸர்:— குருநாதரே! தொடர்ந்து உபதேசிக்கவேண்டுகிறோம்.

வருணர்:— கூறுகிறேன், கவனமாய்க் கேளுங்கள்.

सैषानन्दस्य मीमांसा भवति । युवा स्यात् साधुयुवाऽध्यायकः । आशिष्ठो दृढिष्ठो बलिष्ठः । तस्येयं पृथिवी सर्वा वित्तस्य पूर्णा स्यात् । स एको मानुष आनन्दः । ते ये शतं मानुषा आनन्दाः । स एको मनुष्यगन्धर्वाणामानन्दः । श्रोत्रियस्य चाकामहतस्य ।

ஸைஷாநந்தஸ்ய மீமாம்ஸா பவதி । யுவா ஸ்யாத் ஸாது யுவாத்யாயக: । ஆசிஷ்டோ த்ருடிஷ்டோ பலிஷ்ட: । தஸ்யேயம் ப்ருதிவீ ஸர்வா வித்தஸ்ய பூர்ணு ஸ்யாத் । ஸ ஏகோ மாநுஷ ஆநந்த: । தே யே சதம் மாநுஷா ஆநந்தா: । ஸ ஏகோ மனுஷ்யகந்தர் வாணுமாநந்த: । ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய ॥

மகிழ்ச்சியை நிர்ணயிக்க ஒரு அளவு வேண்டும் அல்லவா? இந்த ஆனந்தத்தின் நிர்ணயம் பின் வருமாறு—யௌவனம், ஸாதுத்தன்மை, வேதாத் யயனம், உரிய காலத்தில் ப்ரவர்த்திக்கும் திறமை, தைரியம், பலம், எல்லாச் செல்வங்களும் நிறைந்த இப்பூமி முழுவதையும் ஆளும்படியான சக்தி இவ்வளவும ஒருவனுக்குப் பூர்ணமாக இருக்கும்போது அவன் அடையக்கூடிய ஆனந்தம் ஒரு மனித ஆனந்தம். இதை ஒரு படிக்கல்லாக, அளவுகோலாக வைத்துக்கொண்டு மேலும் மேலும் உத்கிருஷ்டமான ஆனந்தங்களை விசாரிப்போம். இந்த ஆனந்தத்தின் நூறு மடங்கு கொண்டது மனுஷ்ய கந்தர்வனுடைய ஆனந்தம்.

போதாயனர்:—மனுஷ்ய கந்தர்வன் என்றுல் யார்? விளக்கமாகக் கூறவேண்டும், குருநாதரே.

வருணர்:—ஸௌம்யா, மனிதனுக இருந்து, சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள கர்மாக்களையும், உபாஸனங்களையும் அனுஷ்டித்து கந்தர்வப் பிறவி அடைந்தவன், மனுஷ்ய கந்தர்வன் எனப்படுவன். கந்தர்வ ஜாதிக்கு இயற்கையாக உள்ள அந்தர்தான சக்தி, அதாவது பிறர் கண்களுக்கு புலப்படாமல் மறைந்திருக்கும் தன்மை இவனுக்கு உண்டு. இவனது சரீரம் மிகவும் ஸூக்ஷ்மமாக இருக்கும். ஆகையால் சீதோஷ்ணுதித் துன்பங்கள் இவர்களின் சரீரத்தை எளிதில் அணுகாது. சில சமயத்தில் சிறிது துன்பம் ஏற்பட்டாலும் அவைகளைப் போக்கும் திறமை உண்டு. மேலும் ஸுகஸாதனப் பொருள்கள் இவனிடம் நிறைந்

திருக்கும். சிறந்த வேஷம்கொண்டு எப்பொழுதும் பாட்டிலும் நாட்டியத்திலும் ஈடுபட்டிருப்பார்கள். இந்தக் காரணங்களால் இவர்களின் ஆனந்தம் மனுஷ்யானந்தத்தைவிட நூறுமடங்கு அதிகம். முதலில் கூறப்பட்ட மனுஷ்யானந்தமே முதல் அளவு. இதை ஒப்புநோக்கி, பெருக்கிப் படிப்படியாக மற்ற ஆனந்த பரிமாணங்களை அறியவேண்டும். முதற்கண் குறித்த ஆனந்தத்தின் நூறு மடங்கு எதுவோ—அது னிமத கந்தர்வர்களின் ஆனந்தத்தின் அளவு. வேதார்த் தத்தை அறிந்தவனும், பாபம் செய்யாதவனும், மனுஷ்யானந்தத்தில் ஆசையைத் துறந்தவனுயு மிருக்கிற சுரோத்ரியனுக்கும் இந்த ஆனந்தமுண்டு.

வைகானஸர்:— இந்த சுரோத்ரியனுக்கு முதலில் சொன்ன மனித ஆனந்தம் உண்டு என்று சொல்ல வில்லையே. ஏன்?

வருணர்:— மனுஷ்யானந்தத்தில் சிறிதும் ஆசை யில்லாத சுரோத்ரியனுக்கு மனிதப் பிறவியிலேயே மனுஷ்யானந்தத்தைக் காட்டிலும் நூறு மடங்கு அதிக மான ஆனந்தம் கிடைக்கிறது என்பதைக் காட்டுவதற் காகத்தான் அல்பமான மனுஷ்யானந்தம் உண்டு என்பதைச்சொல்லவில்லை. ஆயிரம் ரூ. பெற்று அனுப விக்கும் ஆனந்தத்தில் நூறு ரூபாயால் பெறும் ஆனந்தம் அடங்கியதுதானே. ஆனாலும் இவனுக்கு மனுஷ்ய கந்தர்வாநந்தத்தில் ஆசை நீங்கவில்லை. அதனால் அதை மட்டும் தான் பெறுகிருன். அதற்கு மேற்பட்ட ஆனந்தம் இவனுக்கு இல்லை. மனுஷ்யகந்தர்வாநந்தத் தில் ஆசையற்ற சுரோத்திரியனுக்கு இவ்வுலகிலேயே அதைவிட நூறு மடங்கு அதிகமான தேவகந்தர்வா னந்தம் ஏற்படுகிறது. அந்தந்தப் பிறவிகளைப் பெற்று அடையும் ஆனந்தத்தை அப்பிறவிகளை அடையாம லேயே இவ்வுலகில் சுரோத்ரியன் அததற்குக் கீழ்பட்ட ஆனந்தங்களில் மட்டும் ஆசையைத் துறப்பதால் பெறுகிருன். இவர்கள் முற்றும் ஆசையைத் துறக்காத

தால் அந்நிலைக்கு மேற்பட்ட ஆனந்தம் கிடைப்பதில்லை. முற்றும் துறந்த ப்ரஹ்மவித்துக்கு எல்லா ஆனந்தமும் கிடைக்கிறது. காமனையில் தாரதம்யமிருந்தபோதிலும் எல்லோரும் வேதமறிந்தவராகவும் பாபமற்றவராகவும் இருக்கவேண்டும். இவ்வாறே ஒவ்வொரு நிலையிலும் காமத்தின் தாரதம்யத்தால் ஆனந்தத்திலும் தாரதம்யம் ஏற்படுகிறது

போதாயனர் :— ஐயனே, தொடர்ந்து உபதேசியுங்கள்.

வருணர் :—ते ये शतं मनुष्यगन्धर्वाणामानन्दाः । स एको देवगन्धर्वाणामानन्दः । श्रोत्रियस्य चाकामहतस्य । ते ये शतं देवगन्धर्वाणामानन्दाः । स एकः पितृणां चिरलोकलोकानामानन्दः । श्रोत्रियस्य चाकामहतस्य । ते ये शतं पितृणां चिरलोकलोकानामानन्दाः । स एक आजानजानां देवानामानन्दः । श्रोत्रियस्य चाकामहतस्य ।

தே யே சதம் மனுஷ்யகந்தர்வாணுமாநந்தா: । ஸ ஏகோ தேவ கந்தர்வாணுமாநந்த: । ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய । தே யே சதம் தேவகந்கர்வாணுமாநந்தா: । ஸ ஏக: பித்ருணும் சிரலோக லோகாநாமாநந்த: । ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய । தே யே சதம் பித்ருணும் சிரலோகலோகாநாமாநந்தா: । ஸ ஏக ஆஜாநஜாநாம் தேவாநாமாநந்த: । ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய ॥

மனிதகந்தர்வனின் ஆனந்தத்தின் நூறு மடங்கு தேவகந்தர்வர்களுடைய ஆனந்தத்தின் ஒரு அளவாகும். அந்த ஆனந்தம் மனுஷ்யகந்தர்வானந்தத்தில் ஆசை நீங்கிய சுரோத்ரியனுக்கும் கிடைக்கின்றது. தேவகந்தர்வர்களுடைய ஆனந்தத்தின் நூறு மடங்கு நீண்டகாலம் இருக்கும் உலகங்களிலுள்ள பிதிருக்களின் ஆனந்தத்தின் ஒரு அளவு. வேதாத்யயனம் செய்து காமங்களில் கட்டுப்படாத சுரோத்திரியனுக்கும் இந்த

ஆனந்தம் கிடைக்கும். இதைப்போல் நூறு மடங்கு தேவலோகத்தில் பிறந்த தேவர்களின் மகிழ்ச்சியின் ஒரு அளவு. இந்த மகிழ்ச்சியும் முன் சொன்னபடியான சுரோத்திரியனுக்குமுண்டு.

மாஹாசமஸ்யர்:—மனித கந்தர்வருக்கும் தேவ கந்தர்வருக்கும் வித்தியாசம் என்ன? அருளுமாறு வேண்டுகின்றேன்.

வருணர்:— இந்தக் கல்பத்தின் நடுவில் மனுஷ்யனுக இருந்து கர்மாக்களைச் செய்து அதன் பயனுக கந்தர்வப் பிறவிபெற்று சிலகாலம் அங்கு இருந்து திரும்பிவருபவர்கள் மனுஷ்யகந்தர்வர்கள். முன் கல்பத்திலேயே சிறந்த கர்மாக்களைச் செய்து அதன் பயனுக இந்தக் கல்பத்தின் ஆரம்பத்திலேயே கந்தர்வசரீரம் பெற்று இக்கல்பம் முழுவதும் அங்கேயே இருப்பவர்கள் தேவகந்தர்வர் எனப்படுவர். வத்ஸர்களே, மேலே சொல்கிறேன். கவனமாகக்கேளுங்கள்.

ते ये शतमाजानजानां देवानामानन्दाः । स एकः कर्मदेवानां देवानामानन्दः । ये कर्मणा देवानपि यन्ति । श्रोत्रियस्य चाकामहतस्य । ते ये शतं कर्मदेवानां देवानामानन्दाः । स एको देवानामानन्दः । श्रोत्रियस्य चाकामहतस्य । ते ये शतं देवानामानन्दाः । स एक इन्द्रस्यानन्दः । श्रोत्रियस्य चाकामहतस्य ।

தே யே சதமாஜாநஜாநாம் தேவாநாமாநந்தா:। ஸ ஏக: கர்மதேவாநாம் தேவாநாம் ஆனந்த:। யே கர்மணா தேவாநபியந்தி। ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய। தே யே சதம் கர்மதேவாநாம் தேவாநாமாநந்தா:। ஸ ஏகோ தேவாநாமாநந்த:। ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய। தே யே சதம் தேவாநாமாநந்தா:। ஸ ஏக இந்த்ரஸ்யாநந்த:। ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய ॥

ஆஜானஜ தேவர்களின் ஆனந்தத்திலும் நூறு மடங்கு கொண்டது கர்மதேவர்களின் ஆனந்தம் இம்

மகிழ்ச்சி முன் சொன்னபடியான வேதவித்துக்குமுண்டு. கர்ம தேவர்களின் ஆனந்தத்திலும் நூறு மடங்கு கொண்டது ஹவிர் பாகம் பெற உரிமையுள்ள தேவர்களின் ஆனந்தம். இதுவும் சுரோத்ரியனுக்குக் கிட்டுகின்றது. மேற்படி தேவர்களின் ஆனந்தத்தின் நூறு மடங்கு அவர்களுடைய பதியான இந்திரனின் ஆனந்தத்தின் ஓர் அளவாகும். அந்த மகிழ்ச்சியையும் சுரோத்திரியன் அடைகின்ருன்.

த்ரிசங்கு :—ஸ்வாமீ! ஆஜானஜ தேவர்கள், கர்ம தேவர்கள், தேவர்கள் என்ற தேவர் கூட்டத்தின் வித்தியாசத்தை விவரிக்க வேண்டுகிறேன்.

வருணர் :— ஸ்மார்த்த கர்மாக்களைச் செய்து புண்ணியம் சம்பாதித்து தேவலோகத்தில் பிறந்தவர்கள் ஆஜானஜ தேவர்கள் எனப்படுபவர். அக்னிஹோத்ராதி வைதிக கர்மங்களால் தேவத்தன்மை அடைந்தவர்கள் கர்மதேவர்கள். யாகத்தில் ஹவிர்ப்பாகம் வாங்கிப் புஜிக்கும் தேவர்களே, முக்கியமான தேவசப்தத்தால் குறிக்கப்படுகிருர்கள். இவர்கள் படிப்படியாக உத்கிருஷ்டமானவர்கள்.

வைகானஸர் :— ஹவிஸ்ஸு புஜிக்கும் தேவர்கள் யாவர்?

வருணர் :— அஷ்ட (8) வசுக்கள், ஏகாதச (11) ருத்திரர்கள், துவாதச (12) ஆதித்தியர்கள், இந்திரன் பிரஜாபதி ஆகிய முப்பத்து மூவர்.

ते ये शतमिन्द्रस्यानन्दाः । स एको बृहस्पतेरानन्दः । श्रोत्रियस्य चाकामहतस्य । ते ये शतं बृहस्पतेरानन्दाः । स एकः प्रजापतेरानन्दः । श्रोत्रियस्य चाकामहतस्य । ते ये शतं प्रजापतेरानन्दाः स एको ब्रह्मण आनन्दः । श्रोत्रियस्य चाकामहतस्य ।

தே யே சதமிந்த்ரஸ்யாநந்தா:। ஸ ஏகோ ப்ருஹஸ்பதேராநந்த:। ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய। தே யே சதம் ப்ருஹஸ்பதேராநந்தா:। ஸ ஏக: ப்ரஜாபதே

ராநந்த:। ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய। தே யே சதம் ப்ரஜாபதேராநந்தா:। ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த:। ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய ॥

இந்திரனுடைய ஆனந்தத்திலும் நூறு மடங்கு கொண்டது இந்திரனுடைய குருவான பிருஹஸ்பதியினுடைய ஆனந்தத்தின் ஒரு அளவு. இதுவும் அகாமஹத சுரோத்திரியனுக்கு உண்டு. இதைவிட நூறு மடங்கு உள்ளது பிரஜாபதியின் (விராட் புருஷனின்) ஆனந்தம். இதையும் சுரோத்திரியன் அடைகின்றான். பிரஜாபதியின் ஆனந்தத்தின் நூறு மடங்கு கொண்டது பிரம்மாவின் (ஹிரண்யகர்ப்பரின்) ஆனந்தத்தின் ஒரு அளவு இந்த ஆனந்தமும் மனுஷ்யானந்தம் முதல் ப்ரஜாபத்யானந்தம் வரை உள்ளவற்றில் ஆசை நீங்கிய சுரோத்திரியனுக்கும் கிடைக்கின்றது. மனுஷ்யானந்தம் முதல் கொண்டு ஜீவர்கள் அனுபவிக்கும் விஷயாநந்தத்தில் ப்ரஹ்மாவின் ஆனந்தமே மிகவும் உயர்ந்தது. அவருக்குத் தனக்குக் கீழ்பட்ட ஆனந்தத்தை அடைவதில் ஆசை கிடையாது. இதுபோலவே விராட் புருஷனின் ஆனந்தம்வரை எல்லா ஆனந்தங்களிலும் ஆசையைத் துறந்த பாபமற்ற வேதார்த்தமறிந்த சுரோத்திரியனும் இவ்வுலகிலேயே ஹிரண்யகர்ப்பரின் ஆனந்தத்தையடைகிறான். மிக உயர்ந்த இந்த ப்ரஹ்மாவின் ஆனந்தமும் ஸமுத்திரத்தின் ஓர் திவிலை போன்று ப்ரஹ்மானந்தத்தின் லவலேசம் தான். ஆகவே ப்ரஹ்மானந்தத்தை யாரும் அளவிடமுடியாது. இதைக்காட்டுவதற்காகத்தான் இங்கு ஆனந்த விசாரம் செய்யப்பட்டது.

வைகானஸர் :— ஆனந்தத்தின் விசாரணை மிகவும் அற்புதமாக இருக்கிறது. மேலும் தொடர்ந்து உபதேசிக்குமாறு வேண்டுகிறேன் ஸ்வாமீ.

வருணர்:—स यश्चायं पुरुषे । यश्चासावादित्ये । स एकः । स य एवंवित् । अस्माल्लोकात्प्रेत्य । एतमन्नमयमात्मानमुपसंक्रामति । एतं

प्राणमयमात्मानमुपसंक्रामति। एतं मनोमयमात्मानमुपसंक्रामति। एतं विज्ञानमयमात्मानमुपसंक्रामति। एतमानन्दमयमात्मानमुपसंक्रामति। तदप्येष श्लोको भवति।

ஸ யஸ்சாயம் புருஷே | யஸ்சாஸாவாதித்யே | ஸ ஏக: | ஸ ய ஏவம்வித் | அஸ்மாத் லோகாத் ப்ரேத்ய | ஏதமந்நமயமாத்மாநமுபஸங்க்ராமதி | ஏதம் ப்ராண மயமாத்மாநமுபஸங்க்ராமதி | ஏதம் மநோமயமாத்மாந முபஸங்க்ராமதி | ஏதம் விக்ஞாநமயமாத்மாநமுப ஸங்க்ராமதி | ஏதமாநந்தமயமாத்மாநமுபஸங்க்ராமதி | ததப்யேஷ ச்லோகோ பவதி ||

அந்த பிரம்மம் புருஷனின் இதய குகையிலும் இருக்கின்றது. ஆகாயத்தில் விளங்கும் ஆதித்யனிடத்திலும் விளங்குகிறது. அதாவது இருதய குகையில் உள்ளவனும் சூரியனிடம் உள்ளவனும் ஒருவனே. அதுவே பிரம்மம் இப்படி அறிந்தவன் முதலில் இந்த லோகத்தை விட்டு அதாவது பிரபஞ்சத்திலுள்ள எல்லா விஷயங்களிலும் பற்றுதலைவிட்டு தீவ்ர வைராக்யம் கொண்டு அன்னமயமான ஆத்மாவைக் கடக்கிறான். அப்படியே பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் இவைகளைக் கடக்கிறான். இவ்விஷயத்தில் அடியிற்கண்ட சுலோகமும் உள்ளது.

போதாயனர் :—குருநாதரே, ஆனந்தத்தின் விசாரணையைப்பற்றி அறிந்துகொண்டோம். பிறகு கூறியது ஒன்றும் புரியவில்லை. விவரமாகக் கூற வேண்டுகின்றோம்.

வருணர் : — ஸௌம்யா! அங்ஙனமேயாகட்டும். 'பரமவ்யோம' என்ற இதயகுகையில் பிரகாசிக்கும் பிரம்மமே ஆகாசம் முதல் அன்னமயம் வரை உள்ள காரிய உலகை சிருஷ்டித்தது. அதுவே அதனுள் பிரவேசித்தது. அது எல்லையில்லாத ஆனந்த வடிவம். அது ரஸமாயிருந்து அதன் லவலேசத்தால் உலகத்திற்கு மகிழ்ச்சியூட்டுகின்றது. அதுவே சூரிய ஒளிக்கும்

மனிதனுடைய புத்திவிருத்திக்கும் ஒரே காரணமாக விளங்குகின்றது. அதுவே ஸத்தியம், ஞானம், அனந்தம் என்ற பிரம்மம். பரம்பொருள். இப்படியாக நாம் அறிந்துகொண்டோம். படிப்படியாக ஆனந்தத்தைப்பற்றி விசாரணை செய்தோம். இந்த பிரம்மானந்தம் முன் சொன்ன ஆனந்தங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டது. இதை இங்ஙனம் அறிந்தவன் உலக நாட்டங்களை உதறித்தள்ளிவிட்டு அந்ந மயாத்மாவை அடைகிருன். பிறகு அதைத்தள்ளிவிட்டு பிராணமயனையும் பிறகு மனேமயனையும் பின்னர் விக்ஞானமயனையும் பிறகு ஆனந்தமயனையும் அடைகிருன்.

வைகானஸர் :— ஏகமான அத்விதீயமான பிரம்மம் ஒவ்வொரு கோசமாய் அடைந்தது, பின் விட்டுவிட்டு அடுத்த கோசத்தை அடைந்தது என்று சொல்வது சரியாகத்தோன்றவில்லையே? அந்நியமான வஸ்து இருந்தாலல்லவா, அடைவதற்கும், விடுவதற்கும் வேருென்றை அடையவும் சாத்தியமாகும்?

வருணர் :— 'ஸங்க்ரமண' பதத்திற்கு பிராப்தி, அடைவது என்று பொருள் இருந்தாலும் இங்கு அதைக் கொள்ள முடியாது. அன்னமயனுகவே இருக்கும் ஆத்மா எப்படி அன்னமயனை அடைய முடியும்? ஆகையால் உண்மை தெரிவதன் மூலம் ப்ரமம் நீங்குவது தான் ஸங்க்ரமணம். பிரம்மத்திற்கு அன்னியமான வஸ்துவே இல்லை. ஆகவே அனேகமாவது, சிருஷ்டியில் பிரவேசிப்பது, ஆனந்தத்தை அடைவது, அபயம் தருவது. படிப்படியாக கோசங்களை அடைவது எல்லாம் கற்பனையாகக் கூறப்பட்டதேயாகும். உண்மையில் நிர்விகல்பமான பிரம்மத்தில் ஒருவிதமான விகல்பமோ, விகாரமோ, மாறுதலோ ஏற்படாது. ஆகவே விசாரம் செய்யும் முமுக்ஷுவானவன் முதலில் பரிச்சின்னமான வியஷ்டி சரீராபிமானத்தை விட்டு ஸமஷ்டி வ்யஷ்டி ஸ்தூலசரீராபிமானியான விராட் புருஷனை ஆத்மாவாகத் தெரிந்துகொள்கிருன். பிறகு

இதைவிட்டு ஸமஷ்டி பிராணமயனையும் இவ்வாறே மனோமயன், விக்ஞானமயன் ஆநந்தமயன் இவர்களையும் வியஷ்டி அபிமானத்தைவிட்டு ஸமஷ்டியாகத் தெரிந்துகொள்கிறான். பிறகு ஆநந்தமயனுக்கும் ஆதாரமாக உள்ள ஸத்யஞானானந்த லக்ஷணமான ப்ரஹ்மத்தை அறிகிறான். அந்த ப்ரஹ்மமாகவே ஆய்விடுகிறான். மாத்யான்ஹிககாலம் நெருங்கிவிட்டது. இத்துடன் இன்றைய பாடத்தை நிறுத்திக்கொள்ளுவோம்.

(எழுந்திருக்கிறார். சீடர்களும் எழுந்து வணங்குகிறார்கள்.)

(திரை விழுகிறது)

காட்சி 6

[திரை விலக, மகரிஷி வைசம்பாயனரின் ஆசிரமம் தென்படுகிறது. பகவான் வருணரும் த்ரிசங்கு முதலிய சீடர்களும் உட்கார்ந்திருக்கின்றனர்.]

வருணர் :—குழந்தைகளே, இதுவரை கற்ற பாடங்களைப்பற்றி நன்றாகச் சிந்தித்தீர்களா? சுருக்கமாக ஆனால் தெளிவாக அதைக் கூறமுடியுமா? ஹே போதாயனா! சொல்லுவாய்! பார்ப்போம்.

போதாயனர் :— நன்றாகப் பாடம் கேட்டோம். சிந்தித்தோம். புரிந்துகொண்டோம். ஆனால் பிறருக்கு எடுத்துச் சொல்லும் அளவுக்கு நான் பாண்டித்யம் பெறவில்லை ஸ்வாமீ!

வருணர்:-அப்படியா! நிறைகுடம் ததும்பாது நீ அடக்கமாகப் பேசுகிறாய்! சந்தோஷம். ஹே த்ரிசங்கோ! நீயே கூறுவாய்.

த்ரிசங்கு :— ஐயனே! உத்தரவுப்படி செய்கிறேன். பார்க்கும் அனைத்தும் பிரம்மத்திடமிருந்தே தோன்றியுள்ளது. ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், பிருதிவி, செடிகொடிகள், அன்னம் இவையெல்லாம் படிப்படியாக பிரம்மத்திடமிருந்தே தோன்றின. அன்னத்தின் ஸாரமான இந்த சரீரம் ஆத்மாவிற்கு ஒரு உறைபோன்று இருக்கிறது இதற்கு அன்னமயகோசம் என்ற பெயர்

குறிப்பிடப்பட்டது. அன்னமயகோசத்திற்கும் சூட்சும மாக பிராணமயகோசம் அதனுள் அடங்கியிருப்பதாக வர்ணிக்கப்பட்டது. கிரமமாக அதனுள் மனோமயம், அதனுள் விஞ்ஞானமயம், அதனுள் ஆனந்தமயம் இருப்பதாக விவரிக்கப்பட்டது. மற்ற எல்லாக்கோசங் களையும்விடப் பெருமையுடையது ஆனந்தமயகோசம். ஆராய்ந்து சிந்தித்தால், இந்த ஐந்து கோசங்களையும் தாண்டி பிரகாசிக்கும் அனைத்துக்கும் ஆதாரமான பிரம்மத்தை அறியலாம். பழத்துக்குள் விதை இருப்பது போல் கோசங்களுக்குள் உறையும் பிரம்மத்தை அறிய வேண்டும். பிரம்மம் ஒன்றே ஸத்தியம். வேறு ஒன்றும் இல்லை. இப்படி அறிகிறவன் ஸத்து (நல்லவன் — இருப்பையுடையவன்) இதை அறியமாட்டாமல் பிரம்மம் இல்லை என்கிறவன் அஸத்து (கெட்டழிந்தவன் — இருப்பு இல்லாதவன்) பிரம்மமே தன் ஸங்கல்பத்தால் அனைத்திலும் புகுந்துறைகின்றது. வாழ்க்கையில் ரஸமும் அதாவது இன்பமும் அதுவே. பிரம்மமே உருவாகவும் அருவாகவும், ஸகுணமாயும், நிர்க்குண மாயும், சித்தாகவும், அசித்தாகவும், நிலையுள்ளதாயும், நிலையில்லாததாயும் ஆயிற்று. சிறு பூச்சி முதல் பிரஹ்மாவரையிலுள்ள ஸகல பிராணிகளும் பிரம்மத்தில் கல்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆனந்த ஸ்வரூபம் ஒவ்வொருவனுடைய மூச்சிலும், செயலிலும் தென் படுகிறது. அதை ஒவ்வொருவனும் ஒவ்வொரு கணமும் அடைந்தே இருக்கிருன். பிறகு பிரம்மானந்தத்தை அறிய அளவும் கூறினீர்கள்.

வருணர் :—ஸபாஷ் த்ரிசங்கோ! ரொம்ப அழகாக விஸ்தாரமாகச் சொல்லிவிட்டாய். மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுக்கும் ஒரு சந்தோஷமான சமாசாரம் சொல்ல விரும்புகிறேன்.

சீடர்கள் :—(ஆவலுடன்) அதுவென்ன?

வருணர் :—தீர்த்த யாத்திரை சென்ற நண்பர் வைசம்பாயனரும் பரிவாரங்களும் நாளை இங்கு

வருவதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. கொஞ்சம் முன்னுல் ராஜசேவகன் வந்து சொன்னுன்.

மாஹாசமஸ்யர்:—ஸ்வாமீ, ரொம்ப சந்தோஷம். தொடர்ந்து பாடம் சொல்லவேண்டுகின்ருேம்.

வருணர்:—வத்ஸர்களே, கவனமாகக் கேளுங்கள். இன்றைய பாடம்தான் எனது கடைசிப் பாடமாக இருக்கும். நாளை நண்பர் வந்தவுடன் அவரிடம் நான் விடைபெற்று யதாஸ்தானம் போகவேண்டும்.

यतो वाचो निवर्तन्ते । अप्राप्य मनसा सह । आनन्दं ब्रह्मणो विद्वान् । न बिभेति कुतश्चनेति ।

யதோ வாசோ நிவர்த்தந்தே । அப்ராப்ய மநஸா ஸஹ । ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வான் । ந பிபேதி குதஸ்சநேதி ॥

எங்கேயிருந்து அதாவது முன்னுல் விவரிக்கப்பட்ட பிரம்மானந்தத்தின் எல்லையிலிருந்து அதை அடைய முடியாமல்-எட்டிப்பிடிக்கக்கூட முடியாமல்-வாய்ச் சொற்களும், மனதும் திரும்பிவிடுகின்றனவோ அப்படிப் பட்ட பிரம்மானந்தத்தை அறிந்த ஞானி எக்காரணத் தாலும் பயப்படுவதில்லை.

வைகானஸர்:—இதே ருக்குகளை முன்பும் கேட்ட தாக ஞாபகமிருக்கிறதே, குருநாதரே.

வருணர்:—ஆமாம். முன்பும் சொல்லியிருக்கிறேன் வேறொரு பிரகரணத்தில். குழந்தாய் மாஹாசமஸ்யா! அந்த பிரகரணம் என்ன? அதற்கும் இதற்குமுள்ள வித்தியாசம் தெரிகிறதா?

மாஹாசமஸ்யர்:—ஐயனே! மனோமய கோசத்தைப் பற்றிக்கூறும் போதும் சொன்னீர்கள். வித்தியாசங்கள் தெரியவில்லை. தெளிவாகக் கூறவேண்டுகிறேன்.

வருணர்:— ஆகட்டும்! வத்ஸா! அப்பொழுது சொன்ன ருக்குகளைச் செல்லுவாய்.

மாஹாசமஸ்யர் :— यतो वाचो निवर्तन्ते । अप्राप्य मनसा सह । आनन्दं ब्रह्मणो विद्वान् । न बिभेति कदाचनेति ।

யதோ வாசோ நிவர்த்தந்தே। அப்ராப்ய மநஸா ஸஹ। ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வான்। ந பிபேதி கதாசநேதி। சரிதானே!

வருணர் :— சரிதான். இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தைப்பற்றிக் கூறுகிறேன். கவனமாகக் கேளுங்கள். அப்போது कदाचनेति (கதாசநேதி) என்ற பதம். இப்போது कुतश्चनेति (குத்ச்சநேதி) என்ற பதம். வத்ஸா, வைகானஸா! பதங்களுக்கு பொருள் கூறுவாய்.

வைகானஸர் :— कदाचनेति (கதாசநேதி) என்ருல் ஒருபோதும் என்பதும், कुतश्चनेति (குதச்சநேதி) என்ருல் எக்காரணத்தாலும் என்பதும் ஸாமான்ய அர்த்தங்களாகும்.

வருணர் :— குழந்தாய். சரியாகவே சொல்லி விட்டாய் மனோமய கோச பிரகரணத்தின் போது உபசாரத்திற்காக உதாரணமாக மனோமயமான பிரம்மத்தை அறிந்தவன் ஒரு போதும் பயப்பட மாட்டான் என்று கூறப்பட்டது ப்ரஹ்ம ஞானத்திற்கு மனமே முக்ப ஸாதனமாக இருப்பதால் அந்த மனதில் பிரம்மத்தை ஆரோபித்து அங்கே சொல்லப்பட்டது. முக்யமான நிருபாதிகமான ப்ரஹ்மத்தைச் சொல்லும் இந்த பிரகரணத்தில் முக்யமாகவே எக்காரணத்தாலும் பயமில்லை. ஒருவரிடமிருந்தும் ஒன்றிலிருந்தும் பயம் இல்லை என்று கூறப்படுகின்றது. அங்கு பொதுவாக பயமில்லை என்பது மட்டும் கூறப்பட்டது. இங்கு பயத்திற்குக் காரணமொன்றுமே இல்லாததால் பயமில்லை என்று கூறப்படுகின்றது. தன்னைத்தவிற வெருெரு அன்னிய வஸ்து இருந்தாலல்லவா பயம் உண்டாகும் பிரபஞ்சம் முழுவதையும் ஆத்ம ஸ்வரூபமாகப் பார்க்கும் ப்ரஹ்ம ஞானிக்கு தன்னை தவிற வேறு பொருளில்லாத

தால் எப்படி பயமுண்டாகும் ? மனதாலும் சொற்களாலும் விவரிக்கவொண்ணாத பிரம்மத்தின் ஸ்வரூபானந்தத்தை அறிந்த ச்ரோத்திரியன் — பாபமில்லாதவன் — ஆசையில்லாதவன்–அப்படிப்பட்ட ஞானி ஒருபோதும் எக்காரணங்கொண்டும் பயப்படமாட்டான். திமிரரோகம் பிடித்த கண்களுடையவனுக்கு சந்திரன் இரண்டாகத் தெரியும். அந்த ரோகம் நிவர்த்தியானவுடன் சந்திரனை ஒன்றுகவே காண்பான். அதுபோல் அக்ஞானம் ஞானத்தால் அழிந்தவுடன் அக்ஞானகாரியமான வேற்றுமை என்னும் பயகாரணமும் நீங்கிவிடுகிறபடியால் ஞானிக்கு எவ்விதத்தும், எதிலிருந்தும் பயம் இல்லை.

போதாயனர் :— சுபகர்மங்கள் செய்யாததாலும் பாபகர்மங்கள் செய்வதாலும் ஏற்படக்கூடிய பயம் ஞானிக்கு உண்டாகாதா ?

வருணர் :— வத்ஸா ! அந்த அச்சமும் அவனுக்கு இல்லை.

एतꣳह वाव न तपति। किमहꣳसाधु नाकरवम्। किमहं पापमकरवमिति। स य एवं विद्वानेते आत्मानꣳस्पृणुते। उभे ह्येवैष एते आत्मानꣳस्पृणुते। य एवं वेद। इत्युपनिषत्॥

ஏதம் ஹ வாவ ந தபதி। கிமஹம் ஸாது நாகரவம்। கிமஹம் பாபமகரவமிதி। ஸ ய ஏவம் வித்வானேதே ஆத்மாநம் ஸ்ப்ருணுதே। உபே ஹ்யேவைஷ ஏதே ஆத்மாநம் ஸ்ப்ருணுதே। ய ஏவம் வேத। இத்யுபநிஷத்॥

“நான் நல்லதை ஏன் செய்யாது போனேன் ? நான் ஏன் பாபத்தைச் செய்தேன் என்ற எண்ணம் அக்ஞானியைப்போல் ஞானியை அலட்டுவதில்லை. ஏனெனில் ஆத்மஞானி அந்தப் புண்ணிய பாபங்களையும் தனது ஆத்மாவாகவே பார்க்கிருன். ஆத்மஞான பலத்தால் அவை வீர்யமிழந்து விட்டபடியால் இவனைத் துன்புறுத்துவதில்லை. இதுதான் உபநிஷத் ரஹஸ்யம்.

வைகானஸர் :— குருநாதரே! ரொம்பவும் ஆச்சரியமாயிருக்கிறதே.

வருணர் :— இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லையே! எந்த மனிதன் ஆத்மாவிலேயே இன்புற்று ஆத்மாவிலேயே திருப்தியடைந்து ஆத்மாவிலேயே ஸந்தோஷத்தைப் பெறுகின்ருனே அவனுக்குச் செய்ய வேண்டிய பணி ஒன்றுமில்லை. அவனுக்கு இங்கே ஒரு கர்மத்தைச் செய்தாலும் பலன் இல்லை செய்யாததாலும் தோஷம் இல்லை. இதுவே பிராஹ்மீ ஸ்திதி என்னும் நிலை. இதை அடைந்தவன் புண்ணியம் பாபம் என்ற மோஹத்தில் அழுந்த மாட்டான்.

வைகானஸர் :—இப்படி அவன் தர்மத்திற்குப் புறம்பாக ஆசார ஒழுக்கங்களுக்கு விரோதமாக ஏன் இருக்க வேண்டும்?

வருணர் :— அவனுக்கு தர்மமேது? ஆசாரமேது ஒழுக்கமேது? புண்ணிய பாபங்களுக்கு ஆத்மா கர்த்தாவும் இல்லை. ஸ்வர்க்க நரகங்களில் ஆசையுமில்லை. ஏன்! முக்தியிலும் கூடத்தான் விருப்பமில்லை.

போதாயனர் :— முக்தியிலும்கூட விருப்பமில்லையா? இப்பந்தத்தினின்றும் விடுதலைபெற வேண்டாமா? ஸ்வாமீ?

வருணர் :— அறிவு என்பதும் அக்ஞானம் என்பதும் அவனை பொறுத்தவரையில் இல்லை. புத்தியும் ஜகத்தும் இல்லை. பந்தமும் மோக்ஷமுமில்லை. எல்லா வியவஹாரங்களும் இரண்டற்ற ஸத்தியமான அவனிடத்தில் கல்பிக்கப்பட்டவைகளேயாகும். அவன் புண்ணிய பாபங்களில் பற்றுதல் துன்பத்திற்கு காரணம் என்றும், ஆத்மஞானம் துன்பத்தை துடைப்பது என்றும் அறிந்து அந்த ஞானத்தால் புண்ணிய பாபங்களை த்வம்ஸஞ் செய்கிருன். அவன் ஆத்மாவையே போற்றுகிருன். இதுதான் உபநிஷத்தின் ஸாரமான உபதேசமாகும்.

த்ரிசங்கு :- (எழுந்திருந்து வணங்கி) ஐயனே, மிகவும் தன்யர்களானேம். எனக்கு ஸம்ஸார பந்தம் கிடையாது. மோக்ஷமும் கிடையாது. சாஸ்திரமும் கிடையாது. குருவும் கிடையாது. இவையெல்லாம் மாயையினுலேயே தோன்றுகின்றன. நான் மாயாதீதன் இரண்டற்றவனுயிருப்பவன். வருகிறேன். ஸ்வாமீ! (மற்றவர்களிடமும் விடைபெற்றுக்கொண்டு போகிருர்.)

வருணர் :— குழந்தைகளே! த்ரிசங்கு பெரிய ஆத்மஞானி. அவனைப்போன்ற பக்குவநிலை எல்லோருக்கும் எளிதில்-சுலபத்தில் கிடைப்பது அரிது.

வைகானஸர் :— உபநிஷத் என்ற பதத்திற்குப் பொருள் கூற வேண்டுகிறேன்.

வருணர் :— வத்ஸா மாஹாசமஸ்யா! உனக்குத் தெரிந்தவரையில் பொருள் கூறுவாயாக!

மாஹாசமஸ்யர் :— அங்ஙனமே கூறுகிறேன். ப்ரஹ்மவித்யைக்கு 'உபநிஷத்' என்று பெயர். அதை மூன்று பதங்களாக பிரிக்கலாம். உப-நி-ஸத் என்று. உப-ஆசார்யரின் உபதேச மூலமாக ப்ரஹ்ம ஞானத்தை அடைந்து, நி-அதிலேயே நிலைத்து நிற்பவர்களுக்கு நிதித்யாஸனம் செய்பவர்களுக்கு ஸத்-அவித்யை நீங்கி விடுவதால் ப்ரஹ்ம வித்யை உபநிஷத்தாகும்.

வருணர் :— ரொம்ப சரியாகச் சொல்லிவிட்டாய். கடைசியிலுள்ள பதமான 'ஸத்' என்பதற்கு மூன்றுவித மான அர்த்தங்கள் சொல்லலாம். அவைகளாவன:—

(1) விசரணம் :- சிதறிப்போவது அக்ஞானத்தினுல் ஏற்படும் பேத எண்ணங்கள், பயங்கள் எல்லாம் தவிடு பொடியாக்கப்படுகிறது.

(2) அவஸாதனம் :— அத்யந்தநாசம் அதாவது ஸம்ஸாரம் அடியோடு நசிப்பது. பிறவித்துன்பமும் இறப்புத்துயரும், சரீர சம்பந்தமான வருத்தங்களும் அறவே ஒழிகின்றன.

(3) கதி:— வழிகாட்டியாக லட்சியத்துக்கு அழைத்துச்செல்லுகிறது.

சுருங்கக்கூறிஞல் உபநிஷத் நமது அக்ஞானங்களை தகர்த்து, ஸம்ஸாரத்தை அழித்து, அத்வைத ப்ரஹ்மத்தினிடம் அழைத்துப்போகின்றது.

போதாயனர்:— நாங்கள் மிகவும் பாக்கியசாலிகள். தங்கள் வாயிலாக அரிய பெரிய உபதேசங்கள் பெற்ருேம். நன்றியை ஒரு நாளும் மறவோம்.

வைகானஸர்:— ஸ்வாமி! எது உபதேசிக்கத் தக்கதோ, எதை அறியப் பலர் ஊர் ஊராய்ச் சென்று அலைகிருர்களோ, அப்படிப்பட்ட ஆத்ம ரகஸ்யத்தை-பிரம்மஞானத்தை எங்களைத்தேடிவந்து உபதேசித்தீர்கள்! தங்கள் கருணையே கருணை. அது கடலிலும் பெரிது. மீண்டும் மீண்டும் வணங்கி எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிருேம்.

(சீடர்கள் எல்லோரும் எழுந்து ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கிருர்கள்.)

வருணர்:— வத்ஸர்களே! உங்களைப்போலொத்த சீடர்களுக்குப் பாடம் சொல்லுவதை பெரிய பாக்கியமாகவே கருதுகின்றேன். இந்த வேதாந்த விளக்கு இனிமேல் ஒருபோதும் அணைந்து போகாது. பரம்பரையாக ஒளி கொடுத்துக்கொண்டேயிருக்கும். காலத்தைக் கடந்த சூரியன், மிகவும் புராதனமான சூரியன் தினந்தோறும் புதிதாக தோன்றுவது போல் உபநிஷத்தும் என்றும் புதிதாகவும் பொதுவாகவும் இருக்கும். இன்று போல் என்றும் அழிவில்லாத, மாறுபாடில்லாத உண்மையை பரம்பொருளை விளக்கிக்கொண்டிருக்கும். குழந்தாய் மாஹாசமஸ்யா! இத்துடன் இன்றைய பாடமும்—ஏன்? எனது உபதேசமும் நிறைவடைகின்றது. இன்று கற்றதை சுருக்கமாகக் கூறு பார்ப்போம்.

மாஹாசமஸ்யர் :— அங்ஙனமே சொல்லுகிறேன். ''எதனிடத்திலிருந்து வாக்குகள் மனத்துடன் (விஞ்ஞானத்துடன்) எட்டாமல் திரும்பி விடுகின்றனவோ. அந்த பிரம்மத்தை அறிந்த வித்வானுக்கு எதிலிருந்தும் பயமில்லை. இப்படிப் பட்டவனை புண்ணியம் செய்யாமையும் பாபம் செய்தலும் அவதிக்குட்படுத்தமாட்டா! ஏனெனில் வித்வான் புண்ணியம் பாபம் இவ்விரண்டையும் தன்னுத்மா வாகவே காண்கிறுன். அதாவது தான் மாத்திரம் எஞ்சி நின்று மேற்படி இரண்டையும் த்வம்ஸஞ்செய்கிறுன்.

வருணர் :— குழந்தாய் மிகவும் அழகாகக்கூறி விட்டாய். இனி மேல் சாந்தி பாடம் சொல்ல வேண்டியதுதான் பாக்கி.

போதாயனர்:— நானை ப்ருகுவும், ப்ராசீன யோக்கியரும் வந்து ஏமாற்றமடைவார்கள். நல்ல அரிய சந்தர்ப்பத்தை இழந்து விட்டார்கள்! அதை நினைக்க எனக்கு வருத்தமாயிருக்கின்றது.

வைகானஸர் :— எனக்கும் அப்படியே வருத்தமாக இருக்கிறது. என்ன செய்வது?

மாஹாசமஸ்யர் :— நண்பர்களே! வருத்தம் வேண்டாம். கருணுமூர்த்தியாகிய குருநாதர் அவர் களுக்கு ஊருக்கு போய் உபதேசிப்பார். இதில் ஐயமோ, பயமோ வேண்டாம்.

வருணர் :—நன்ருகச் சொன்னுய். மாஹாசமஸ்யா! நான் அவர்களுக்கு மட்டுமா உபதேசிப்பேன். யார் வந்து கேட்டாலும் பாடம் சொல்லுவேன். என் குழந்தையென்று நினைத்து ப்ருகுவுக்கு தனிச்சலுகைகள் ஒன்றும் கிடையாது. மற்ற சிஷ்யர்களைப்போல் அவனும் என்னை அடைந்து உபதேசம் பெற விரும்பினுல் மிகுந்த மட்டற்ற மகிழ்ச்சியுடன் உபதேசிப்பேன். உபதேசிப்பதே என் உயிர்த்தொழில் பாடம் சொல்லுவதையே பெரிய

பாக்கியமாகக் கருதுகிறேன் நான். அதிலும் உங்களைப் போன்ற உத்தம சிஷ்யர்கள் கிடைத்துவிட்டால் ஊண் உறக்கமின்றி உபதேசம் செய்யத்தயாராக இருக்கிறேன்.

வைகானஸர் :— நண்பர் ப்ருகு பெரிய மேதாவி ஆயிற்றே. அவர் உத்தமோத்தமமான சீடராய் விளங்குவார்.

போதாயனர் :— மேலும் தீர்த்த யாத்திரை வேறு போய்வந்திருக்கிருர். ஸ்புடம்போட்ட தங்கம்போல் பிரகாசிப்பார்.

வருணர் :— வத்ஸர்களே, சாந்தி பாடம் சேர்ந்து சொல்லுவோம். வேதமாதா உங்களுக்கு ஸகல மங்களங்களையும் தருவாள். மங்களானிபவந்து

(எல்லோரும் சேர்ந்து சாந்தி பாடம் சொல்லுகின்றனர்.)

ओं सह नाववतु । सह नौ भुनक्तु । सह वीर्यं करवावहै । तेजस्विनावधीतमस्तु मा विद्विषावहै ॥

ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

ஓம் ஸஹ நாவவது । ஸஹ நௌ புநக்து । ஸஹ வீர்யம் கரவாவஹை । தேஜஸ்விநாவதீதமஸ்து மா வித்விஷாவஹை ॥

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி ॥

(திரை விழுகின்றது)

மூன்ருவது அங்கம் முற்றும்.

நான்காவது அங்கம்

காட்சி 1

[ஹரித்வாரத்தில் பகவான் வருணரின் ஆசிரமம். புலித் தோல் ஆஸனத்தில் வருணர் வீற்றிருக்கிறார். அவர் புதல்வர் பிருகு பிரவேசிக்கின்றார். "அபிவாதயே..." சொல்லி ஸாஷ்டாங்கமாக வணங்குகிறார். புத்திரனை வாரி எடுத்து, உச்சி முகந்து அணைத்துக் கொள்ளுகின்றார் வருணர். பிறகு பிருகு பக்கத்தில் உட்கார உரையாடல் நடக்கிறது.]

பிருகு :— அப்பா !

வருணர் :— வத்ஸா !

பிருகு :— அப்பா ! ஒரு ஸந்தேகம்.

வருணர் :— குழந்தாய் தயக்கமேன் ? கேள்.

பிருகு :— தந்தையே, மிதிலையிலிருந்து வந்தது முதல் கேட்கவேண்டுமென்றிருந்தேன். ஸோமயாகத்துக்கு வந்தவர்கள் கூட்டம் அதிகமாக இருந்ததால் உடன் ஸந்தேகம் தெளிய மார்க்கமில்லாமல் போய்விட்டது.

வருணர் :— அப்படியா ஸௌம்யா ! இப்போதே கேள். கூறுகின்றேன்.

பிருகு :— ஐயனே ! பிரம்மத்தைப்பற்றி எனக்கு எடுத்துரைக்கவேண்டும்.

வருணர் :— (சிரித்துக்கொண்டு) குழந்தாய் ! உனக்கு வைசம்பாயனர் கற்றுத்தரவில்லையா ? அவர் பகர்ந்ததைவிட நான் என்ன அதிகமாகச் சொல்லப் போகிறேன் ?

பிருகு :— அப்பா ! மிதிலையில் பல நாட்கள் பாடம் கேட்டோம். பல அரிய உபதேசங்கள் பெற்றோம், ஆயினும் கடைசியாக தங்கள் உபதேசங்களைக்கேட்க

வாய்ப்புக்கிடைக்கவில்லை. தீர்த்தயாத்திரைபோய் வந்தேனல்லவா! நாங்கள் இல்லாத சமயத்தில் தாங்கள் திருவாய்மலர்ந்தருளிய வசனங்களைக்கேட்க ஆவலுள்ளவனாக இருக்கிறேன்.

வருணர் :—குழந்தாய், மிக்க மகிழ்ச்சி. பிரம்மத்தைப் பற்றி உபதேசம் செய்யுமுன் சீடனின் தகுதியைப்பற்றி அறிந்துகொள்ளவேண்டும் நீ என் குமாரன், எனக்கு நன்றாகத் தெரிந்தவன், என்பதனால் மட்டும் உபதேசிப்பது தவறு. தகுதியான ஆசாரங்களும் பழக்க வழக்கங்களும் இருக்கவேண்டும். நல்லொழுக்கமும் ப்ரம்மசர்யமும் வேண்டும். பிரம்ம வித்யையைப் பயில ஆர்வமும் இருக்கவேண்டும். உனக்கு எல்லாவிதமான யோக்கியதைகளும் இருக்கின்றன. தடையன்னியில் உபதேசிக்கிறேன்.

பிருகு :—பூஜ்யபிதாவே, மிகவும் நன்றி. அன்றொரு நாள் காயத்ரீ மந்திரத்தை உபதேசித்து அடியேனை த்விஜனாக்கினீர்கள். இன்று மட்டில்லாத கருணையோடு பிரம்மத்தைப்பற்றி கூறப்போகின்றீர்கள். மீண்டும் தங்களுடைய பாதாரவிந்தங்களில் வணங்குகிறேன். (எழுந்து நமஸ்காரம் செய்கிறார்.)

வருணர் :—'மங்களானி பவந்து, தீர்காயுஷ்மான் பவ ஸௌம்ய' நீ மிதிலையில் கற்றதை சுருக்கமாகக் கூறுவாய்.

பிருகு :-ஐயனே! சீடன் குருகுலத்தில் அத்யயனம் செய்யவேண்டிய முறையும், செய்யவேண்டிய உபாஸனைகளும், ஓங்காரத்தின் தியானமும், குருகுலத்தை விட்டபின் உலகில் நடந்துகொள்ளவேண்டிய வழியும் போதிக்கப்பட்டது. இப்போது தாங்கள் தயவுசெய்து பிரம்மத்தை உபதேசித்தருள்க.

வருணர்:-வத்ஸா! நான் ஒரு கோடி காட்டுகிறேன் நீயே விசாரணை செய்து அறிய முயல்வது நலம். பிரம்ம

வித்தையில் ச்ரவணமும் மனனமும் ரொம்பவும் முக்கியமாகும். இவை இரண்டு கண்களுக்கொப்பாகும்.

பிருகு :— தங்கள் சித்தம் அடியேன் பாக்கியம்.

வருணர் :— குழந்தாய் பிருகு! கவனமாகக் கேட்பாயாக. அன்னம், பிராணன், கண், செவி, மனம், வாக்கு முதலியன பிரம்மத்தையறியும் வழிகள். மேலும் பிரம்மத்தின் லக்ஷணம் பற்றியும் கூறுகிறேன். இந்த சதுர்முக பிரம்மாதி ஸ்தம்ப பரியந்தமுள்ள பூதங்கள் எதனின்று உண்டாயினவோ, உண்டானவை எதில் நிலேத்திருக்கின்றனவோ, நாசமடையும்போது எதனிடஞ்சென்று லயமடைகின்றனவோ அதுவே, பிரம்மம். இப்படிப்பட்ட பிரம்மத்தை நான் முன்கூறிய அன்னம் முதலிய வாயில்கள் வழியாக நீ அறிந்து கொள்ளவேண்டும்.

(திரைக்குள்ளிருந்து ரிஷிபத்னியின் குரல்,) “ஹே பிருகு, வைசுவதேவத்துக்கு எல்லாம் ஸித்தமாக வைத்திருக்கிறேன், உன் அப்பாவிடம் சொல்லு”.)

வருணர் :— குழந்தாய்! நான் உள்ளே போகிறேன். நான் கூறியவற்றை சிந்தித்து அறிவாயாக.

(வருணர் போகிறுர்.)

பிருகு :—(நடந்துகொண்டே) அப்பா புதிர்போட்டு விட்டுப்போய்விட்டார். எல்லாம் தோன்றுகின்றன. எதிலிருந்து? (யோசிக்கின்ருர்) இதோ இந்த சரீரம் இருக்கிறதே—ஆம் அன்னத்திலிருந்தே உண்டானது. பின் நிலேத்திருப்பதும் அன்னத்தில்தானே. இதில் சந்தேகமில்லே. பின் நாசகாலத்தில் என்னவாகிறது? (யோசனே—நடக்கின்ருர்.) புதைக்கப்படுகிறது - அல்லது எரிக்கப்படுகிறது. (மீண்டும் ஆலோசனே) கடைசியில் அன்னமாகவே மாறுகிறது. அதிலேயே லயமடைகிறது. இதிலும் ஐயமில்லே. அப்படியாளுல் அன்னமே பிரம்மம். நான் அறிந்துவிட்டேன். (மகிழ்ச்சியுடன் கூத்தாடுகின்ருர்.)

பாடல்

அன்னமே பிரம்மம் அதுவே தோற்றுவாய்
அன்னமே காப்பதும் அதுவே அழிவாம்
அன்னமே பிரம்மம் அதுவே எல்லாம்

(பிருகு உட்கார்ந்துகொண்டு மீண்டும் சிந்தனை செய்கிறார்.) அனைத்தும் அன்னத்திலிருந்து உண்டாகி, அன்னத்திலேயே நிலைபெற்று, அன்னத்திலேயே மறைந்தொடுங்குவதால், அன்னமே பிரம்மம் என்ற முடிவு கிட்டியிருக்கின்றது. இது சரியா? தவறா? இனியொரு சந்தேகம்! அன்னம் நச்வரமான வஸ்து. அது எப்படி அழிவில்லாத பிரம்மமாக முடியும்? நமது தீர்மானம் சரியல்லவென்றே தோன்றுகிறது. எதற்கும் பிதாவிடம் கேட்போம் அதற்கு முன் தவம் செய்தால் என்ன? காயக்கிலேசத்தினாலும், இந்திரிய நிக்ரகத்தினாலும், மனதை ஒருமுகப்படுத்தி சிந்தனை செய்வோம். அதுவே சிரேஷ்டமான தவம். தவத்தால் அடைய முடியாததும் உண்டோ? நண்பர் ப்ராசீன யோக்கியரையும் அழைத்துக்கொண்டு ரிஷீகேசம் போய் தவம் செய்து வெற்றியுடன் வருவோம். நல்ல பிரச்னம், நல்ல விடை யோசித்துப்பார்க்க பார்க்க சிக்கல்கள் அதிகமாகின்றன. விடை—விசாரணையில் தான்—இருக்கின்றது ஏகாக்ர சித்தமுடன் தவம் செய்து ஸித்தி பெறுவோம். அருமைத் தந்தையே வந்தனம் (திக்கு நோக்கி வணங்குகிறார்.) இன்றே-இப்போதே-செல்லுகிறேன்-(போகிறார்.)

(திரை விழுகிறது)

காட்சி 2

(திரை விலக)

[கங்கைக்கரையில் ஸந்தியாமண்டபம். ப்ராசீனயோக்கியரும் இரண்டு ஆசிரமவாஸிகளும் உட்கார்ந்து ஸம்பாஷித்துக்கொண்டிருக்கின்றனர்.]

முதல் ஆசிரமவாசி:- நண்பரே! தாங்கள் ரிஷீகேசத்திலிருந்து என்று வந்தீர்கள்? ப்ருகு வந்து விட்டாரா?

ப்ராசீனயோக்யர் :— நான் நேற்று வந்தேன். ப்ருகு நாளை வருகிறார்.

இரண்டாவது ஆசிரமவாஸி :—பகவான் வருணரும் பரிவாரங்களும் எப்போது வருகிறார்கள் ?

முதல் ஆசிரமவாஸி :— பகவான் எங்கே போயிருக்கின்றார் திரும்ப வருவதற்கு ?

இரண்டாவது ஆசிரமவாஸி :— உமக்குத் தெரியாதா ? பக்கத்து ஆசிரமவாஸியாயிருந்தும் தகவல் தெரியாமலிருப்பது ஆச்சரியமே !

முதல் ஆசிரமவாஸி :- இதில் என்ன ஆச்சரியமிருக்கிறது ? நான் உண்டு, என் அனுஷ்டானங்களுண்டு என்று நிம்மதியாக இருக்கின்றேன். உம்மைப்போல் வம்பு பேசப்போனால்தானே ஊர் சமாசாரங்கள் தெரியும்

இரண்டாவது ஆசிரமவாஸி :— என்ன சொன்னீர்? நீர் ரொம்ப அமைதியாக அடக்கமாக வாழ்கின்றீர். நான் வம்பு பேசவும் வலுச் சண்டை செய்யவும் போவதாக சொல்லுகின்றீர் இருக்கட்டும், அதுவும் அல்லாமல் உம்மைவிட நான் ஆசார அனுஷ்டானங்களில் குறைந்தவன் என்றும் பொருள்பட பேசுகின்றீர், இது உமக்குத் தகாது. நியாயமில்லை.

முதலாவது ஆசிரமவாஸி :— உண்மையைச் சொன்னால்—

ப்ராசீனயோக்யர் :—நண்பர்களே ! சாந்தி, சாந்தி. அமைதியடையுங்கள். நானும் ப்ருகுவும் ரிஷீகேசம் சென்ற மறுநாளே பகவான் வருணரும் பரிவாரங்களும் அங்கே வந்துவிட்டனர். எல்லோரும் கபிலருடைய ஆசிரமத்தில் தான் இவ்வளவு நாட்களும் தங்கினோம் வேனிற்காலத்தில் கங்கை மிகவும் கம்பீரமாகவும் களிப்புடனும் பிரவஹித்தாள். உஷ்ணத்தினால் பனிக் கட்டிகள் உருகி அதிகமான பிரவாஹம். மனதிற்கு

ரம்மியமான காட்சி. நாளை அவர்கள் திரும்புகின்றார்கள்.

முதல் ஆசிரமவாஸி:— அப்படியா! சந்தோஷம். கங்கை எங்கே தான் ரம்மியமாக இல்லை? இங்கேதான் அவள் அழகுக்கு என்ன குறைவு? இப்போது மழை காலமானாலும் மனதிற்கு மகிழ்ச்சியை ஊட்டுகின்றாள். அதோ போகிற ஓடங்களைப் பார்த்தீரா? ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டும் பக்திப்படகுகளாக உருவகப் படுத்தலாம்.

இரண்டாவது ஆசிரமவாஸி:—வித்தியாகர்வம் கொண்டு வினயமில்லாமலிருப்பவனின் மனம்போல் கங்கை கலங்கி ஓடுகின்றாள். தூய வெண்மையான நிறம் சேறால் சிவந்து காண்கிறது; முன் கோபியின் முகம்போல்.

ப்ராசீன யோக்யர்:— எந்த ருதுவானாலும் கங்கா தேவி அமைதியாக, அலட்சியமாகத்தான் செல்கிறாள். நாம் தான் அவள் கரையில் வசித்தும், வணங்கியும் பூஜித்தும், அவளுடைய புனித தீர்த்தத்தை உட்கொண்டும், சாந்தி பெறாமல் இருக்கின்றோம்.

முதல் ஆசிரமவாசி:—இதில் கங்காமாதாவின் குற்றமொன்றுமில்லை. நமது குற்றமேயாகும். அது இருக்கட்டும், ரிஷிகேசத்தில் நடந்த விருத்தாந்தங்களை அறிய ஆவலாயிருக்கிறது, விவரமாக தயவு செய்து கூறவேண்டும்.

இரண்டாவது:—நண்பரே, நானும் கேட்க விரும்புகின்றேன். சொல்வீராக.

ப்ராசீன யோக்யர்:—பிரியமான தோழர்களே, அங்ஙனமே நவில்கின்றேன். கவனமாகக்கேளுங்கள்.

भृगुर्वै वारुणिः। वरुणं पितरमुपससार। अधीहि भगवो ब्रह्मेति। तस्मा एतत्प्रोवाच। अन्नं प्राणं चक्षुः श्रोत्रं मनो वाचमिति।

तꣳ होवाच । यतो वा इमानि भूतानि जायन्ते । येन जातानि जीवन्ति । यत्प्रयन्त्यभिसंविशन्ति । तद्विजिज्ञासस्व । तद्ब्रह्मेति । स तपोऽतप्यत । स तपस्तप्त्वा ॥

ப்ருகுர் வை வாருணி:। வருணம் பிதரமுபஸஸார। அதீஹி பகவோ ப்ரஹ்மேதி। தஸ்மா ஏதத் ப்ரோவாச। அந்நம் ப்ராணம் சக்ஷு: ச்ரோத்ரம் மநோ வாசமிதி। தம் ஹோவாச। யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே। யேந ஜாதாநி ஜீவந்தி। யத் ப்ரயந்த்யபிஸம்விசந்தி। தத் விஜிஜ்ஞாஸஸ்வ। தத் ப்ரஹ்மேதி। ஸ தபோ-ऽதப்யத। ஸ தபஸ்தப்த்வா ॥

நமது உத்தம நண்பராகிய பிருகு தன் தந்தை வருணரிடம் சென்று 'ஐயனே, பிரம்மத்தை உபதேசித்தருள்க' என்றார். அவரும் பின்வருமாறு பிருகுவுக்குச் சொன்னார். 'அன்னம் பிராணன், கண், காது, மனம், வாக்கு இவைகள் பிரம்மத்தை அறிவதற்கு துவாரங்கள்' மேலும் கூறினார்—'தோன்றியிருக்கும் பிராணிகளெல்லாம் எதனிடமிருந்து உண்டாயினவோ, உண்டான பின் எதனிடம் உயிர் வாழ்கின்றனவோ, முடிவுறும்போது எதனிடம் புகுந்து மறைகின்றனவோ அதை ஆராய்ந்து அறிய முயற்சி செய்வாய். அதுவே பிரம்மம்' இந்த உபதேசங்களை கருத்தில் கொண்டு பிருகுவும் தவஞ் செய்தார். தவஞ் செய்து—

முதலாவது:—நண்பரே, சுலோகத்திற்குப் பதவுரை கூறினீர்கள். விளக்கவுரை விவரமாகச் சொல்லுங்கள்.

ப்ராசீனயோக்யர்:—பிரம்மத்தை அறிய ஆவலுள்ள தன் மகனுக்கு, விதிவத்தாக வினவிய பிருகுவுக்கு, பகவான் வருணர் சொன்னார். ''குழந்தாய்! ஸ்தூலமாகக் காணும் உலகைக்கொண்டே ஸூக்ஷ்மத்தை அறிய முற்படவேண்டும். அன்னம் அதாவது அன்னத்தினாலான இந்த சரீரம், அதனுள்ளிருக்கும் பிராணன், விஷயங்களை அறிவதற்கான ஸாதனங்

களாகிற கண், காது, மனம், வாக்கு முதலியவைகள் பிரம்மத்தை அறிவதற்கான ஸாதனங்களாம். ஸர்வ பிராணிகளும் எதிலிருந்து உண்டாயினவோ, தோன்றியபின் எதனை ஆச்ரயித்து வாழ்ந்து வளருகின்றனவோ, பின் விநாசகாலத்தில் எதனைச் சென்று அடைகின்றனவோ அதுவே பிரம்மம். தாத்பர்யம் என்னவென்றால் உத்பத்தி, ஸ்திதி, லய, காலங்களில் எதனுடைய ஸ்வரூபத்தை விட்டு விலகாமல் இருக்கின்றனவோ, அதுவே பிரம்மம். இதுதான் பிரம்ம லக்ஷணம். அதை விசேஷமாக கவனமாக அறிய முயலவேண்டும். அதாவது பிராணனுக்கு பிராணனாகவும், கண்ணுக்குக் கண்ணாகவும், செவிக்குச் செவியாகவும், அன்னத்திற்கு அன்னமாகவும், மனதின் மனஸ்ஸாகவும் இருப்பதை அறியவேண்டும்.

இரண்டாவது:—பிரிய சிநேகிதரே! பின்னர் பிருகு என்ன செய்தார்?

ப்ராசீனயோக்யர்:— பிறகு அவர் பிரம்ம ஸாக்ஷாத்காரத்திற்காகத் தவம் செய்தார்.

முதலாவது:— தவம் செய்யும்படி தந்தை சொல்லவில்லையே! பின் எதற்காகச் செய்யவேண்டும்?

ப்ராசீனயோக்யர்:— பிதா சொல்லவில்லையென்பது வாஸ்தவமே ஸத்குருநாதராகிய வருணர் சிஷ்யனிடம் தன் அபிப்பிராயங்கள் முழுவதையும் திணிக்க விரும்பவில்லை லக்ஷணங்களை உபதேசித்து முயற்சி செய்யச் சொல்லி தன் போக்கில் விட்டுவிட்டார். அந்தக் காலத்தில் சிரேஷ்டமான ஸாதனமாகிய தவத்தை பிருகு தேர்ந்தெடுத்துக்கொண்டார். மற்ற எல்லா ஸாதனங்களையும் விட சிறந்ததாயும், ஸித்தி தரக்கூடியதாகவும் உள்ள தவத்தைச் செய்தார்.

இரண்டாவது:— என்னவிதமான தவம் செய்தார்?

முதலாவது:— கங்கோத்ரீ, கேதார் முதலிய பிராந்தியங்களுக்குச் சென்றாரா?

ப்ராசீனயோக்யர் :—எங்கும் போகவில்லை. இருந்த இடத்திலேயே இருந்தார். பாஹ்ய இந்திரியங்களைக் கட்டுப்படுத்தி அந்தக்கரணத்தில் லயமடையச் செய்தார். மனதையும் புலன்களையும் அடக்கி ஒருமுகமாக்கினர். ஸமாதியில் இருந்து சிந்தித்தார். இதுவே அவர் இயற்றிய தவம்.

முதலாவது :— எனக்கு இது கடும் தவமாகத் தோன்றவில்லை. பலன் என்ன?

ப்ராசீனயோக்கியர் :— பலனில் சந்தேகமா! கைமேல் கிட்டியது.

अन्नं ब्रह्मेति व्यजानात् । अन्नाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते । अन्नेन जातानि जीवन्ति । अन्नं प्रयन्त्यभिविशन्तीति । तद्विज्ञाय । पुनरेव वरुणं पितरमुपससार । अधीहि भगवो ब्रह्मेति । तꣳहोवाच । तपसा ब्रह्म विजिज्ञासस्व । तपो ब्रह्मेति । स तपोऽतप्यत । स तपस्तप्त्वा ॥

அந்நம் ப்ரஹ்மேதி வ்யஜாநாத் । அந்நாத்த்யேவ கல்விமாநி பூதாநி ஜாயந்தே । அந்நேந ஜாதாநி ஜீவந்தி । அந்நம் ப்ரயந்த்யபி ஸம்விசந்தீதி । தத் விக்ஞாய । புநரேவ வருணம் பிதரமுபஸஸார । அதீஹி பகவோ ப்ரஹ்மேதி । தம்ஹோவாச । தபஸா ப்ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ । தபோ ப்ரஹ்மேதி । ஸ தபோ-ऽதப்யத । ஸ தபஸ் தப்த்வா ॥

பிருகு தவம் செய்து அன்னத்தை பிரம்மம் என்று அறிந்தார். அன்னத்திலிருந்தன்றோ இப்பிராணி வர்க்கங்களெல்லாம் உண்டாகின்றன. தோன்றியவை அன்னத்தாலேயே ஜீவிக்கின்றன. முடிவில் அன்னத்திலேயே மறைகின்றன. இவ்வாறு தந்தை சொன்ன ப்ரஹ்ம லக்ஷணம் அன்னத்திலிருப்பது கண்டு அதையே ப்ரஹ்மமாகத் தெரிந்து கொண்டார். ஆனாலும் மீண்டும் பிதாவாகிய வருணரை நாடினர்.

முதலாவது :— பிரம்மத்தை அறிந்தபின் எதற்காக மீண்டும் பிதாவிடம் சென்றூர்.

இரண்டாவது :— நன்றி தெரிவிக்கவா !

ப்ராசீனயோக்யர் :— இல்லை நண்பரே! அன்னம் பிரம்மம் என்று அறிந்த பின்னும் பிருகுவுக்கு சந்தேகம் தெளியவில்லை. அன்னத்திற்கு உற்பத்தியும் நாசமும் இருக்கிறதே. அவை பிரம்மத்திற்குக் கிடையாதே. அன்னத்திற்கும் பிரம்மத்திற்கும் அஜகஜாந்தரம் வித்தியாசமிருக்கிறதே. மீண்டும் பிதாவை அணுகி ஐயம் தெளிவேன் என்று எண்ணி தந்தையை நாடி ''ஐய்னே ! பிரம்மத்தை உபதேசித்தருளவேண்டும்'' என்று கேட்டு நடந்தவைகளை விவரமாகக் கூறினூர். வருணரும் கருணையுடன் ''குழந்தாய் உன் தீர்மானம் தவறல்ல. முதல் படியில் அன்னம் பிரம்மம் என்று அறிந்ததும் சரிதான். இன்னும் தவத்தால் மேலே மேலே போகவேண்டும். தவத்தாலேயே பிரம்மத்தை ஆராய்ந்தறிய முயல்வாயாக. தவமே பிரம்மம். வத்ஸா பிருகு! நீ செல்லும் பாதை சரியானதே. மேலும் அதே வழியில் முயற்சி செய்வாய். ஸித்தி அடைவாய்'' என்று ஊக்கமளித்து உபதேசித்தார். அதன்படி பிருகுவும் மேலும் தவஞ்செய்தார். தவஞ் செய்து—

முதலாவது :— மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது. நண்பரே, தொடர்ந்து கூறுங்கள்.

இரண்டாவது :— தந்தைக்கேற்ற தனயன். சம்பாஷணையும் தாங்கள் கூறும் விதமும் அற்புதமா யிருக்கிறது. மேலும் விவரமாக விளக்கமாகச் சொல்லுங்கள்.

ப்ராசீனயோக்யர் :—प्राणो ब्रह्मेति व्यजानात्। प्राणाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते। प्राणेन जातानि जीवन्ति। प्राणं प्रयन्त्यभिसंविशन्तीति। तद्विज्ञाय। पुनरेव वरुणं पितरमुपससार।

अधीहि भगवो ब्रह्मेति। तंहोवाच। तपसा ब्रह्म विजिज्ञासस्व। तपो ब्रह्मेति। स तपोऽतप्यत। स तपस्तप्त्वा॥

ப்ராணோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத்। ப்ராணாத்த்யேவ கல்விமாநி பூதாநி ஜாயந்தே। ப்ராணேந ஜாதாநி ஜீவந்தி। ப்ராணம் ப்ரயந்த்யபிஸம்விசந்தீதி। தத் விஜ்ஞாய। புநரேவ வருணம் பிதரமுபஸஸார। அதீஹி பகவோ ப்ரஹ்மேதி। தம் ஹோவாச। தபஸா ப்ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ। தபோ ப்ரஹ்மேதி। ஸ தபோ ऽதப்யத। ஸ தபஸ்தப்த்வா॥

பிராணன் பிரம்மம் என்று அறிந்தார் பிருகு பிராண சக்தியாலன்றோ இப்பூதங்களெல்லாம் உண்டாகின்றன. உண்டான பின் பிராணனாலன்றோ உயிர் வாழ்கின்றன. முடிவுறும்போதும் பிராண சக்தியிலன்றோ லயமடைகின்றன. ஆகையினால் பிராணனே பிரம்மம் என்ற தீர்மானத்திற்கு வந்தார். பிராண சக்தி ஜடமாயிருப்பதால் அதற்கு சுதந்திரமில்லையன்றோ, அதற்கு வேறொரு நியாமகனிருக்கவேண்டும். ஆகவே பிராணன் பிரம்மம் என்பதும் முற்றிலும் சரியல்ல. சந்தேகம் நீங்க மீண்டும் தந்தையை அடைந்து, 'பகவானே, பிரம்மத்தைப்பற்றி உபதேசிக்கவேண்டும்'' என்று வினயத்துடன் வேண்டினார். பிதாவும் புத்திரன் சரியான மார்க்கத்தில் முன்னேறிக்கொண்டிருப்பதைக் கண்டு சந்தோஷம் கொண்டு, 'தவத்தாலேயே பிரம்மத்தை அறியவேண்டும். தவமே பிரம்மம்' என்று உபதேசித்தார். பிருகுவும் பிதாவின் கட்டளைப்படி மறுபடியும் தவம் செய்தார். அதாவது, பரியாலோசனை செய்தார். தீவிரமாகச் சிந்தித்தார். சிந்தித்து —

முதலாவது :— என்ன முடிவுக்கு வந்தார்?

ப்ராசீனயோக்யர் :— मनो ब्रह्मेति व्यजानात्। मनसो ह्येव खल्विमानि भूतानि जायन्ते। मनसा जातानि जीवन्ति। मनः प्रयन्त्यभिसंविशन्तीति। तद्विज्ञाय। पुनरेव वरुणं पितरमुपससार।

अधीहि भगवो ब्रह्मेति । तꣳहोवाच । तपसा ब्रह्म विजिज्ञासस्व । तपो ब्रह्मेति । स तपोऽतप्यत । स तपस्तप्त्वा ॥

மநோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத்। மனஸோ ஹ்யேவ கல்விமாநி பூதாநி ஜாயந்தே। மனஸா ஜாதாநி ஜீவந்தி। மந: ப்ரயந்த்யபிஸம்விசந்தீதி। தத் விஜ்ஞாய। புநரேவ வருணம் பிதரமுபஸஸார। அதீஹி பகவோ ப்ரஹ்மேதி। தம் ஹோவாச। தபஸா ப்ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ। தபோ ப்ரஹ்மேதி। ஸ தபோऽதப்யத। ஸ தபஸ்தப்த்வா ॥

ஆராய்ந்து மனம் பிரம்மம் என்று அறிந்தார். மனதின் சக்தியினாலன்றோ இந்தப் பிராணிகளெல்லாம் உண்டாகின்றன. உண்டானபின் மனதினாலேயே ஜீவிக்கின்றன. கடைசியில் மனதிலேயே சென்று லயமடைகின்றன. ஆகவே மனம்தான் பிரம்மம். என்று பிருகுவுக்குத் தெரிந்தது. இங்ஙனம் அறிந்தபின் அது சரியல்லவென்றும் தோன்றியது. மீண்டும் பிதாவை நாடி "ஸ்வாமி! எனக்கு பிரம்மத்தைப்பற்றி உபதேசிக்கவேண்டும்" என்று கேட்டார். வருணரும், "வத்ஸா! தவமே பிரம்மம். மீண்டும் தவம் செய்து பிரம்மத்தை அறிய இச்சிப்பாயாக" என்று அருளினார். பிருகுவும் அங்ஙனமே தவம் செய்தார். தவஞ்செய்து—

முதலாவது :— நண்பரே! விசுவநாதர் கோவில் உச்சிக்காலச் சங்கு ஒலிக்கின்றது. எனக்கு உடன் போக வேண்டும். இல்லாதவரை போஜனம் கிடைக்காது. நாளை சந்திப்போம்.

இரண்டாவது :— எனக்கும் அவசர வேலை இருக்கின்றது. மற்ற விஷயங்களை நாளை வந்து கேட்கின்றோம். தயவுசெய்து இந்த இடத்திற்கு நாளையும் வந்து தெரிவிக்கவேண்டுகின்றோம்.

ப்ராசீனயோக்யர் :— நண்பர்களே! பேச்சு சுவாரஸ்யத்தில் சமயம் போனதே தெரியவில்லை.

விஷயத்தின் ரஸமும் அப்படி. தங்களிஷ்டம்போல் நாளைக்கு சந்திப்போம். வணக்கம்.

மற்ற இருவரும் :— வந்தனம் நன்றி. (போகிறார்கள்)

(திரை விழுகிறது)

காட்சி 3

(திரை விலக)

[முன் காட்சிபோல் கங்கைக் கரையில் ஸந்தியா மண்டபத்தில் ப்ராசீனயோக்யரும் இரு ஆசிரமவாஸிகளும் அமர்ந்து உரையாடுகின்றனர்.]

முதலாவது ஆசிரமவாஸி :— நண்பரே! நேற்று பிருகு படிப்படியாக, அன்னம் பிரம்மம் என்றும், பிராணன் பிரம்மம் என்றும், மனம் பிரம்மம் என்றும் அறிந்ததாகக் கூறினீர்கள். அப்போதும் ஸந்தேகம் நீங்காமல், பிதாவிடம் சென்று கேட்டதாகச் சொன்னீர்கள். அவர் கட்டளைப்படி தவம் செய்தபின் என்ன முடிவுக்கு வந்தார்? தயவு செய்து விளக்கமாகக் கூறவேண்டும்.

இரண்டாவது ஆசிரமவாஸி:- எனக்கும் கேட்பதற்கு ஆவலாக இருக்கின்றது. ஆசிரமத்தில் செய்ய வேண்டிய அவசர வேலைகளைக்கூட ஒதுக்கிவைத்து விட்டு ஓடோடியும் வந்திருக்கிறேன். கிருபை பண்ண வேண்டும்.

ப்ராசீனயோக்யர் :— பிருகு தவம் செய்து உண்மையைக் கண்டார். அதுபோல் நீங்களும் அறியலாம். சந்தேகமே வேண்டாம். பிருகு அறிந்ததைப் பற்றித் தொடர்ந்து சொல்லுகிறேன். கேளுங்கள்.

विज्ञानं ब्रह्मेति व्यजानात् । विज्ञानाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते । विज्ञानेन जातानि जीवन्ति । विज्ञानं प्रयन्त्यभि-

संविशन्तीति । तद्विज्ञाय । पुनरेव वरुणं पितरमुपससार । अधीहि भगवो ब्रह्मेति । तꣳहोवाच । तपसा ब्रह्म विजिज्ञासस्व । तपो ब्रह्मेति । स तपोऽतप्यत । स तपस्तप्त्वा ॥

விஜ்ஞாநம் ப்ரஹ்மேதி வ்யஜாநாத்। விஜ்ஞாநாத்த்யேவ கல்விமானி பூதானி ஜாயந்தே। விஜ்ஞாநேந ஜாதாநி ஜீவந்தி। விஜ்ஞாநம் ப்ரயந்த்யபிஸம்விசந்தீதி। தத்விஜ்ஞாய। புநரேவ வருணம் பிதாமுபஸஸார। அதீஹி பகவோ ப்ரஹ்மேதி। தகும் ஹோவாச। தபஸா ப்ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ। தபோ ப்ரஹ்மேதி। ஸ தபோऽதப்யத। ஸ தபஸ்தப்த்வா ॥

விஜ்ஞானம் பிரம்மம் என்று ஆராய்ச்சியில் அறிந்து கொண்டார். ஏனெனில் விஜ்ஞானத்தின் சக்தியினால் அன்றோ இப்பிராணிகளெல்லாம் உண்டாகின்றன. உண்டானவைகள் விஜ்ஞானத்தினாலன்றோ உயிர் வாழ்கின்றன. கடைசியில் விஜ்ஞானத்திலேயே மறைந்தொடுங்குகின்றன. ஆகவே விஜ்ஞானமே பிரம்மம். இங்ஙனம் அறிந்த பின்னும் சந்தேகம் நீங்காமல் மீண்டும் பிதாவை அடைந்து "எனக்கு பிரம்மத்தை உபதேசிக்கவேண்டும்" என்று கேட்டார். பகவான் வருணரும் 'தவத்தாலேயே பிரம்மத்தை அறிய வேண்டும். தவமே பிரம்மம்' என்று அருளினார். அந்தப்படி பிருகு தவம் மேற்கொண்டார். செம்மையாக யோசித்துப் பார்த்தார்.

இரண்டாவது :— அப்போது அவருக்கு என்ன தோன்றியது?

முதலாவது :— உண்மையை எட்டினாரா?

ப்ராசீனயோக்யர் :— ஆம்! பிரம்மத்தை அறிந்தார். எப்படியென்று சொல்லுகிறேன். கேளுங்கள்.

आनन्दो ब्रह्मेति व्यजानात् । आनन्दाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते । आनन्देन जातानि जीवन्ति । आनन्दं प्रयन्त्यभि-

संविशन्तीति । सैषा भार्गवी वारुणी विद्या । परमे व्योमन् प्रतिष्ठिता । य एवं वेद प्रतितिष्ठति । अन्नवानन्नादो भवति । महान् भवति प्रजया पशुभिर्ब्रह्मवर्चसेन । महान् कीर्त्या ॥

ஆநந்தோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத். ஆநந்தாத்-த்யேவ கல்விமாநி பூதானி ஜாயந்தே। ஆநந்தேன ஜாதாநி ஜீவந்தி। ஆநந்தம் ப்ரயந்த்யபிஸம்விசந்தீதி। ஸைஷா பார்கவீ வாருணீ வித்யா। பரமே வ்யோமன் ப்ரதிஷ்டிதா। ய ஏவம் வேத ப்ரதிதிஷ்டதி। அந்ந வாநந்நாதோ பவதி। மஹான் பவதி ப்ரஜயா பசுபிர் ப்ரஹ்ம வர்ச்சஸேந। மஹான் கீர்த்யா॥

ஆனந்தம் ப்ரஹ்மமென்று அறிந்தார். இப்பிராணிகளெல்லாம் ஆனந்தத்தினுலேயன்றே உண்டாகின்றன. ஆனந்தத்தினுலன்றே ஜீவிக்கின்றன. முடிவுறும்போது ஆனந்தத்தில் சென்று லயமடைகின்றன. இங்ஙனம் அறிந்தபின் பிருகு ஸந்தேஹம் தெளிந்தார். ஆனந்தமய கோசத்தையடைந்து அதனுள் விளங்கும் ப்ரஹ்மத்தைக் கண்டதும் ஸாதகனுக்கு ஸம்சயம் நீங்கிற்று. எவனெருவன் பிருகுவைப் போல் இங்ஙனம் தவத்தால் ஆராய்ந்தறிகிருனே, அவன் ப்ரஹ்மத்தில் நிலைபெறுவான்.

முதலாவது :- நண்பரே! மிகவும் மகிழ்ச்சி. அதிசயமான உபதேசங்களையறிந்தோம். தொடர்ந்து விளக்க உரை கூற வேண்டுகின்றேம்.

ப்ராசீனயோக்கியர்:—இங்ஙனம் என்னுல் விவரிக்கப் பட்ட இந்த வித்யைக்கு 'பார்க்கவீ வித்யை' என்று பெயர். இதுவே வருணர் உபதேசிக்க பிருகு உணர்ந்த வித்யை. இது பரம ஆகாசத்தில் முடிவுபெறுகின்றது. பிருகுவும் பிரம்மத்தில் நிலைபெற்ருர். இதில் எல்லோருக்கும் உரிமையுண்டு. எவனெருவன் இங்ஙனம் தவத்தால் பிருகுவைப்போல் விடாமுயற்சியுடனும் மிகுந்த

சிரத்தையுடனும் ஆராய்கிருனே அவன் பிரம்மத்தில் நிலைபெறுகிருன். குறைவற்ற அன்னம் படைத்தவனுக இம்மையில் வாழ்கிருன். நன்ருக அன்னத்தை உண்டு களிப்பவனுகவும் ஆகின்ருன். மக்களாலும் பசுக் களாலும் ஞான ஒளியாலும் சிறப்படைகின்ருன். கீர்த்தியால் மஹானுகிருன்.

முதலாவது :— நண்பரே! ''பரமே வ்யோமன்'' என்பதற்குப் பொருள் விளக்கமாகக் கூறவேண்டு கின்றேன்.

ப்ராசீனயோக்யர் :— தோழரே, ''வ்யோம'' என்ருல் ஆகாசம். அது மூன்று வகைப்படும். நாம் வெளியில் காண்பது மஹாகாசம். (இது ஸ்தூலம்). கனவிலும் நனவிலும் மனத்தில் உள்ளே காண்பது சித்தாகாசம் (ஸூக்ஷ்மம்). சித்தத்தின் ஸாக்ஷி உறையுமிடமாகிய புத்தி குஹையிலுள்ளது சிதாகாசம். இதுவே ''பரமே வ்யோமன்'' என்று இங்கே கூறப் பட்டது.

இரண்டாவது :— ஹிருதய ஆகாச குகையில் ப்ரதிஷ்டிதமாயிருக்கிறது என்று சொல்லக் கேட்டிருக் கிறேன். தாங்கள் புத்தி குகை என்று கூறுகின்றீர்களே!

ப்ராசீனயோக்யர் :— இரண்டும் ஒன்றுதான். ஹிருதய ஆகாசத்திலுள்ள புத்தி குகையில் பிரதிஷ்டித மாயிருக்கும் ஆனந்தரூபமான பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மமாகவே ஆய்விடுகின்ருன். தவிர மிகுந்த அன்ன முள்ளவனுகவும், அன்னத்தை புஜிக்க தீப்தாக்னியுள்ள வனுகவும், மஹா புருஷனுகவும், பசுக்கள், பிரஜைகள், புகழ் இவைகளுடன் கூடியவனுகவும் ஆகிவிடுகிருன்.

முதலாவது :— நண்பரே! சில ஸந்தேஹங்கள் தோன்றுகின்றன. கேட்கலாமா?

இரண்டாவது :— எனக்கும் ஐயப்பாடுகள் உண்டு. தெளிவிக்கவேண்டும் தோழரே!

ப்ராசீனயோக்யர் :- ஒவ்வொருவராகக் கேளுங்கள். தெரிந்தமட்டில் சொல்கிறேன். இல்லாதவரை பிருகுவிடம் அழைத்துக்கொண்டு போகிறேன். வேண்டி வந்தால் பகவானிடம் சென்று கேட்போம். ஸாதாரண விஷயங்களில்கூட ஸம்சயத்தை விட்டுவைக்கக்கூடாது. ஸந்தேஹமறத் தெரிந்துகொள்ளவேண்டும். "ஸம்சயாத்மா விநச்யதி" (संशयात्मा विनश्यति) என்பது பழைய வசனம். அதிலும் ப்ரஹ்மவித்யையில் ஐயமே இருக்கலாகாது. முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும். நண்பரே! முதலில் உமது ஸந்தேஹம் என்ன?

முதலாவது :— பிருகு, முதலில் அன்னம் ப்ரஹ்மம் என்று அறிந்தார். அது நச்வரமானது. ஆகையினால் ப்ரஹ்மமாக இருக்கமுடியாதென்றும் அறிந்துகொண்டார் என்று தாங்கள் கூறினீர்கள். அதுபோல் பிராணனும் மனமும் விக்ஞானமும் முறையே ப்ரஹ்மமென்று தெரிந்துகொண்டு பின்னல் அவைகள் ப்ரஹ்மமாய் இருக்க இயலாது என்று அறிந்தார் என்றும் சொன்னீர்கள். அதற்குக் காரணம் கூறவேண்டுகிறேன்.

ப்ராசீனயோக்யர் :— ஸாதுவான கேள்விதான். அன்னம் நச்வரமானது. அது பிரம்மமில்லை. அன்னத்தை ஆட்டிவைக்கும் பிராண சக்தி பிரம்மமாயிருக்குமோ என்று முதலில் நினைத்தார். அதுவுமில்லை ஏன்? அன்னத்தைக் காட்டிலும் பிராணன் சூக்ஷ்மமாக இருந்தாலும் அதுவும் நச்வரமே. பிராணனை வைத்தே வாழ்க்கை தொடங்குகிறது. அதிலேயே தொடர்கின்றது. பின் அதிலேயே முடிவும் பெறுகின்றது ஆயினும் பிராணன் ஜடமே. அது காரணமல்ல. அதற்கும் ஆதியும் அந்தமும் இருக்கிறது. ஆகையினல் அது பிரம்மம் இல்லை. அதுபோலவே மனமும். ஏனெனில் மனது, பிராணனை விட ஒருபடி மேலேயிருந்தாலும், அதுவும் ஓர் அங்கமே. அங்கியல்லவே. மற்ற இந்திரியங்களைப்போல் அதுவும் ஒரு புலன் போலவே

செயல்படுகிறது. அதனுடைய அறிவும் ''புத்தி'' யிடமிருந்து கடன் வாங்கியதாகும். மனதில் சிந்தனைகள் உண்டாகின்றன. சிறிது நேரத்தில் அவை மாறுபடுகின்றன. பின் இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிடுகின்றன. ஆகவே மனதும் பிரம்மம் அல்ல. பின் விக்ஞானம் இருக்கிறது. அது மிகவும் சக்தி வாய்ந்தது. மனதையும், பிராணனையும் சரீரத்தையும் அடக்கி ஆள்கின்றது. ஆயினும் அதற்கும் உத்பத்தியும் விநாசமும் ஏற்படுவதாகத் தெரிகிறது. ஆகையால் அதுவும் பிரம்மம் அல்ல. நமது நண்பர் பிருகு படிப்படியாக அன்னமய கோசம், பிராணமய கோசம் முதலியவைகளைக் கடந்து ஆனந்தமய கோசத்தை அடைந்து பிரம்மத்தை அறிந்தார். அவர் போலவே நாமும் தவம்செய்து, அதாவது பிராணாயாமம், பிரம்மசர்யம், மௌனம், விரதம், தியானம், முதலியவைகளைச் செய்தால் அந்த அறிவு நமக்கும் கிடைக்கும்.

இரண்டாவது :- ஐந்து கோசங்களையும் கடப்பதற்கு தான் திரும்பத்திரும்ப ஐந்து முறை தவம் செய்தார் என்று சுருதி சொல்கிறதல்லவா?

ப்ராசீனயோக்யர் :— அப்படியும் எடுத்துக்கொள்ளலாம். உம்முடைய ஸம்சயம் என்ன தோழரே?

இரண்டாவது :— ஆரம்பத்தில் '' அன்னம், பிராணன், சக்ஷுː, ச்ரோத்ரம், மனம், வாக்கு இவைகள் ப்ரஹ்மத்வாரங்கள்'' என்று கூறினீர்கள் அல்லவா! அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம் இவைகளைத் தெளிவாகக் குறிக்கப் பதங்களிருக்கின்றன. விக்ஞானமயகோசத்தைப்பற்றி இங்கே ஒன்றும் சொல்லப்படவில்லையே?

ப்ராசீனயோக்யர் :— மநː என்ற சொல்லே மனோமயம் விக்ஞானமயம் என்ற இரண்டு கோசங்களையும் குறிக்கும். சக்ஷுː, ச்ரோத்ரம், வாக் இவை மற்ற

இந்திரியங்களுக்கும் உபலக்ஷணமாகும். இவை அந்தந்த கோசங்களில் அடங்கும்.

முதலாவது :— ஸரி, நண்பரே! எங்கள் ஸந்தேகங்கள் நிவர்த்தியாகிவிட்டன. மேலும் தொடர்ந்து உபதேசிக்கவேண்டும்.

ப்ராசீனயோக்யர் :— தொடர்ச்சி எனக்கே தெரியாது. நாளை குருநாதர் சொல்வதாகக் கூறியிருக்கிறார். நீங்களும் வந்து கேளுங்கள்.

இரண்டாவது :— நாங்கள் வரலாமா? எதற்கும் முன்கூட்டியே தாங்கள் சிபாரிசு செய்துவையுங்கள்.

ப்ராசீனயோக்யர் :— எல்லோரும் தாராளமாய் வரலாம். சிஷ்யர்களுக்காக எங்கள் ஆசிரமத்தின் வாயில்கள் எப்போதும் திறந்தேயிருக்கும். யார் வந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். தராதரப்படி யோக்யதைக்குத் தக்கபடி உபதேசமும் பெறலாம். வாருங்கள். நாளை காலமே ஸந்திப்போம்.

முதலாவது :— நாங்களிருவரும் கட்டாயம் வருகிறோம். இருந்தாலும், பிருகுவிடமும், குருநாதர் பகவான் வருணரிடமும் முன்கூட்டியே கொஞ்சம் சொல்லிவையுங்கள்.

இரண்டாவது :— "வாசா தர்மமவாப்நுஹி" (वाचा धर्ममवाप्नुहि) கொஞ்சம் தயவுசெய்யவேண்டும் நண்பரே! நாங்களும் ஸமித்துக்கள் எடுத்துக்கொண்டு வருகிறோம்.

ப்ராசீனயோக்யர் :— தோழர்களே! ரொம்ப சந்தோஷம். நல்ல காய்ந்த ஸமித்துக்களாகப் பொறுக்கிக்கொண்டு வாருங்கள். நாங்கள் ஆசிரமத்தில் இல்லாத சமயம் மழையில் ஸமித்துகள் நனைந்து விட்டன. ஓர் சிறிய இஷ்டி செய்தாலும் ஒரே தூம மண்டலமாக ஆய்விடுகிறது. ஆகவே உலர்ந்த

ஸமித்துத் தேவை. நானே சொல்லவேண்டுமென்று நினைத்தேன். நீங்களே கொண்டுவருவதாகச்சொன்னது பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் ஆயிற்று. நாளை சந்திப்போம் வணக்கம்.

முதலாவது :— அப்படியே வருகிறோம்.

இரண்டாவது :— வணக்கம்.

(போகிறார்கள் வெவ்வேறு திசைகளில்)

(திரை விழுகிறது)

காட்சி 4

[திரை விலக, பகவான் வருணரின் ஆசிரமம் தென்படுகிறது. பகவான் வருணர் புலித்தோல் ஆசனத்தில் வீற்றிருக்கின்றார். இரு மருங்கிலும் பிருகு, ப்ராசீன யோக்யர் முதலிய சிஷ்யர்களும், ஆசிரமவாஸிகளும் அமர்ந்திருக்கின்றனர். ஸம்பாஷணை நடக்கிறது]

வருணர் :— எல்லோருக்கும் ஸ்வாகதம். குழந்தைகளே, இன்று சில அபூர்வ விஷயங்களும் உபாஸனைகளும் கூறப்போகிறேன். கவனமாகக் கேளுங்கள்.

பிருகு :— அப்பா, அப்படியே செய்கிறோம். எதைப் பற்றிச் சொல்லப்போகிறீர்கள்.

வருணர் :— வத்ஸா! பிரம்மத்தின் முதல் துவாரமான அன்னத்தைப்பற்றித்தான். அன்னம் மிகவும் முக்கியமானது அன்னத்தால் பிராணனையும், பிராணனால் பலத்தையும், பலத்தால் தவத்தையும், தவத்தால் சிரத்தையையும், சிரத்தையால் புத்தி கூர்மையையும், புத்தி கூர்மையால் மனோ திடத்தையும், அதனால் சாந்தியையும், சாந்தியால் சித்தத்தையும், சித்தத்தால் ஞாபகத்தையும், ஞாபகசக்தியால் ஸ்திதப் பிரக்ஞையையும், ஸ்திதபிரக்ஞையால் விக்ஞானத்தையும், விக்ஞானத்தால் பிரம்மத்தையும் பெறமுடிகின்றது. சுவர் வைத்துத்தானே சித்திரம் எழுதமுடியும்.

அன்னத்தைக் கொடுப்பதால் மேற்சொன்ன எல்லா வற்றையும் கொடுத்ததாகிறது. ஆகவே அது பற்றிய உபதேசம் இன்று தொடங்குகிறேன்.

अन्नं न निन्द्यात् । तद्व्रतम् । प्राणो वा अन्नम् । शरीरमन्नादम् । प्राणे शरीरं प्रतिष्ठितम् । शरीरे प्राणः प्रतिष्ठितः । तदेतदन्नमन्ने प्रतिष्ठितम् । स य एतदन्नमन्ने प्रतिष्ठितं वेद प्रतितिष्ठति । अन्नवानन्नादो भवति । महान् भवति प्रजया पशुभिर्ब्रह्मवर्चसेन । महान् कीर्त्या ॥

அந்நம் ந நிந்த்யாத் । தத் வ்ரதம் । ப்ராணோ வா அந்நம் । சரீரமந்நாதம் । ப்ராணே சரீரம் ப்ரதிஷ்டிதம் । சரீரே ப்ராண: ப்ரதிஷ்டித: । ததேததந்நமந்நே ப்ரதிஷ்டிதம் । ஸ ய ஏததந்நமந்நே ப்ரதிஷ்டிதம் வேத ப்ரதிதிஷ்டதி । அந்நவாநந்நாதோ பவதி । மஹான் பவதி ப்ரஜயா பசுபிர் ப்ரஹ்மவர்சஸேன । மஹான் கீர்த்யா ॥

ப்ராசீனயோக்யர் :— ஸ்வாமீ! பதவுரை விளக்கமாகக் கூறவேண்டுகின்றேன்.

வருணர் :— அன்னத்தை இகழவே கூடாது. அது உபாஸகனுக்கு ஒரு விரதம். பிராணன்தான் அன்னம். சரீரம் அன்னாதம். பிராணனில் சரீரம் ஒடுங்கி நிற்கும். சரீரத்தில் பிராணன் ஒடுங்கி நிற்கும் இப்படியாக அன்னம் அன்னத்தில் ஒடுங்கி நிற்கின்றது. எவனொருவன் இந்த உண்மையை அதாவது அன்னம் அன்னத்தில் நிலைபெறுவதை அறிகின்றானோ அவன் நிலையான பதவியை எய்துகிறான். அன்னம் படைத்தவனாகவும், அன்னத்தை உண்டு களிப்பவனாகவும் ஆகின்றான். பிரஜைகளாலும் பசுக்களாலும் பிரம்மஞான ஒளியினாலும் சிறப்பை யடைகிறான். கீர்த்தியாலும் மஹான் ஆகின்றான்.

முதல் ஆசிரமவாஸி :— ஐயனே, அன்னம் என்றால் உண்ணப்படும் பொருள் என்று தெரிகிறது. ஆனால் அன்னாதம் என்றால் என்ன ?

இரண்டாவது ஆசிரமவாஸி :- அன்னத்தை இகழக் கூடாது என்பது சரிதான். அது எப்படி விரதமாகும் ?

வருணர் :— அன்னாதம் என்றால் உண்பவர். எது அன்னத்தை உட்கொள்கின்றதோ, அதற்கு அன்னாதம் என்று பெயர். அன்னத்தை இகழக்கூடாது என்பதை ஒரு முக்கியமான ஆதேசமாக, உபதேசமாகக் கொள்ள வேண்டும். கட்டாயமாக சிரத்தையுடன் விரதம் போல் எப்பொழுதும் இதை அனுஷ்டிக்கவேண்டும். இந்த நியமத்தை ஒருக்காலும் கைவிடக்கூடாது. ஒரு சமயத்திலும் அன்னத்தை இகழாமல் இந்த நியமத்தை மிகுந்த ஜாக்கிரதையுடன் காப்பாற்றி வரவேண்டும்.

ப்ராசீனயோக்யர் :— ஸ்வாமீ, தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகின்றேன்.

வருணர் :—अन्नं न परिचक्षीत । तद्व्रतम् । आपो वा अन्नम् । ज्योतिरन्नादम् । अप्सु ज्योतिः प्रतिष्ठितम् । ज्योतिष्यापः प्रतिष्ठिताः । तदेतदन्नमन्ने प्रतिष्ठितम् । स य एतदन्नमन्ने प्रतिष्ठितं वेद प्रतितिष्ठति । अन्नवानन्नादो भवति । महान् भवति प्रजया पशुभिर्ब्रह्मवर्चसेन । महान् कीर्त्या ॥

அந்நம் ந பரிசக்ஷீத । தத் வ்ரதம் । ஆபோ வா அந்நம் । ஜ்யோதிரந்நாதம் । அப்ஸு ஜ்யோதி: ப்ரதிஷ்டிதம் । ஜ்யோதிஷ்யாப: ப்ரதிஷ்டிதா: । ததேதந்நமந்நே பரதிஷ்டிதம் । ஸ ய ஏததந்நமந்நே ப்ரதிஷ்டிதம் வேத ப்ரதிதிஷ்டதி । அந்நவாநந்நாதோ பவதி । மஹான் பவதி ப்ரஜயா பசுபிர் ப்ரஹ்ம வர்ச்சஸேன । மஹான் கீர்த்யா ॥

அன்னத்தை ஒருபோதும் எறியக்கூடாது. இதையும் ஓர் நியமமாகக் கைக்கொள்ளவேண்டும். ஜலமே அன்னம். ஜ்யோதி அன்னாதம். ஜலத்தில் நெருப்பும், நெருப்பில் ஜலமும் பிரதிஷ்டிதமாயிருக்கின்றன. ஒன்றுக்கொன்று ஆதாரமாயிருக்கின்றது. இங்ஙனமாக

அன்னம் அன்னத்தில் பிரதிஷ்டிதமாயிருக்கிறது. இப்படியறிந்தவன் முன் சொல்லப்பட்டதுபோல் மக்கள், பசு, புகழ் இவகளுடன் மஹானாக விளங்குகிறான்.

ப்ராசீனயோக்யர் :— குருநாதரே! நீர்-அன்னம்; நெருப்பு அன்னாதம் என்பது சரியாக விளங்கவில்லை. விவரமாகக் கூற வேண்டுகிறேன்.

வருணர் :— குழந்தாய் பிருகு! உன் நண்பனின் ஸந்தேஹத்தை நிவர்த்திப்பாய்.

பிருகு :— பூஜ்யபிதாவே! தங்களுடைய ஆசீர்வாதத்தால் விளக்கம் கூறுகிறேன். ஸூர்ய வெப்பமும் வயிற்றிலுள்ள ஜாடராக்னியும் நீரை உண்பதால் ஜலம் அன்னம், உஷ்ணம் அன்னாதம். ஸூர்ய வெப்பத்தாலேயே மழையும் வியர்வையும் உண்டாகிறது. மழையாலும் வியர்வையாலும் சூடு தணிகிறது. ஆகையினால ஒன்றிலொன்று ஒடுக்கம். இந்த ஆசிரமத்தின் கதவுகள், தூண்கள், கூரை முதலியவை எப்படி ஒன்றிற்கொன்று ஆதாரமாயிருக்கிறதோ, அது போலவே சரீரமும் பிராணனும், நீரும் நெருப்பும ஒன்றிலொன்று ஒடுக்கமாயும், ஒன்றிற்கு மற்றொன்று ஆதாரமாயும் இருக்கிறது.

ப்ராசீனயோக்யர் :— தோழரே! ஐயம் நீங்கி விட்டது. நன்றி.

வருணர் :— अन्नं बहु कुर्वीत । तद्व्रतम् । पृथिवी वा अन्नम् । आकाशोऽन्नादः । पृथिव्यामाकाशः प्रतिष्ठितः । आकाशे पृथिवी प्रतिष्ठिता । तदेतदन्नमन्ने प्रतिष्ठितम् । स य एतदन्नमन्ने प्रतिष्ठितं वेद प्रतितिष्ठति । अन्नवानन्नादो भवति । महान् भवति प्रजया पशुभिर्ब्रह्मवर्चसेन । महान् कीर्त्या ॥

அந்நம் பஹு குர்வீத। தத் வ்ரதம்। ப்ருதிவீ வா அந்நம்। ஆகாசோऽந்நாத:। ப்ருதிவ்யாமாகாச:

ப்ரதிஷ்டித:। ஆகாசே ப்ருதிவீ ப்ரதிஷ்டிதா। தடேதததந்நமந்நே ப்ரதிஷ்டிதம்। ஸய ஏதததந்நமந்நே ப்ரதிஷ்டிதம் வேத ப்ரதிதிஷ்டதி। அந்நவாநந்நாதோ பவதி। மஹான் பவதி ப்ரஜயா பசுபிர் ப்ரஹ்ம வர்ச்சஸேன। மஹான் கீர்த்யா॥

அன்னத்தை மிகுதியாக உற்பத்திசெய்யவேண்டும். அது விரதம். பூமியும் ஆகாசமும் அன்னமும் அன்னதமுமாகின்றன. பூமியில் ஆகாசம் ஒடுங்கி நிற்கும். ஆகாசத்தில் பூமி ஒடுங்கி நிற்கும். இப்படி யறிந்தவன் நிலையான பதவியை எய்துகிருன். மிகுதியான உணவுபடைத்தவனுகவும், அதை உண்டு களிப்பவனுகவும் ஆகிருன். குறைவற்ற மக்களாலும், பசுக்களாலும், ஞான ஒளியாலும் சிறப்பு எய்துகிருன். கீர்த்தியால் மஹானுகிருன்.

முதலாவது :— அன்னத்தை நிந்திக்கலாகாது. தள்ளக்கூடாது. அன்னத்தை மிகுதியாக உண்டாக்க வேண்டும். இவைகள் எல்லாம் ஸாதாரணமாக உலகத்தோர் யாவரும் தெரிந்துகொண்டுள்ள ஸாமாந்ய விஷயங்கள்தானே! ப்ரஹ்மத்தை உபதேசிக்கும் பிரகரணத்தில் இவற்றை எடுத்துச்சொல்லும்படியாக அப்படி உயர்ந்த தத்துவம் இதில் என்ன இருக்கிறது? குருநாதரே! ஐயத்தை நீக்கவேண்டும்.

இரண்டாவது:—உணவு அருந்தும்போது ஆகாரத்தைப் பழிப்பதோ, இகழ்வதோ, நிந்திப்பதோ, சந்தேகித்தலோ குறை கூறுதலோ, ஆரோக்கிய முறையாகாது. உண்ணும்போது இந்த உணவு ரொம்ப நல்லது. ஆரோக்கியம் தரும். சுகம் தரும். பலம் தரும். உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் என்ற நல்லெண்ணங்களுடன் ஆகாரம் சாப்பிடவேண்டும் என்று வைத்திய சாஸ்திரம் கூறுகிறது. தவிரவும் உணவை வீணுக எறியக்கூடாது என்பதும் எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. இந்த அன்னம் நன்ருயில்லை என்று சொல்லி எறியக்கூடாது. நன்ருய்

இருப்பதையும் அதிகமாக பரிமாறிக்கொண்டு பின் தள்ளக்கூடாது. உயிரைக்காப்பாற்றும் உணவு அருமையான பொருள். அதை அதிகமாக விளைவிக்கவேண்டும். தன் தேவைக்கு மட்டுமின்றி பூமியில் அனைவருக்குமாக ஏராளமாக உண்டாக்கவேண்டும். இந்தக்கொள்கைகள் சாதாரணமான தத்துவங்கள் தானே. இங்கே குறிக்கப் படும் சம்பந்தம்—தொடர்பு—அடியேனுக்குப் புரியவில்லையே. தயவு செய்து சந்தேகங்களைத் தீர்க்க வேண்டும் ஸ்வாமீ!

வருணர் :— குழந்தைகளே, உங்களுக்குத் தோன்றிய சந்தேகங்களிலிருந்து நீங்கள் கவனமாகக் கேட்டு வருகிறீர்களென்று தெரிகிறது. இந்த ருக்கையும் கூறி ஐயங்களைத் தெளிவிக்கிறேன்.

பிருகு :— அப்பா! தொடர்ந்து கூறுங்கள்.

வருணர் :— न कञ्चन वसतौ प्रत्याचक्षीत । तद्व्रतम् । तस्माद्यया कया च विधया बह्वन्नं प्राप्नुयात् । अराध्यस्मा अन्नमित्याचक्षते । एतद्वै मुखतोऽन्नꣳ राद्धम् । मुखतोऽस्मा अन्नꣳ राध्यते । एतद्वै मध्यतोऽन्नꣳ राद्धम् । मध्यतोऽस्मा अन्नꣳ राध्यते । एतद्वा अन्ततोऽन्नꣳ राद्धम् । अन्ततोऽस्मा अन्नꣳ राध्यते । य एवं वेद ॥

ந கஞ்சந வஸதௌ ப்ரத்யாசக்ஷீத। தத் வ்ரதம்। தஸ்மாத் யயா கயா ச விதயா பஹ்வன்னம் ப்ராப்நுயாத்। அராத்த்யஸ்மா அந்நமித்யாசக்ஷதே। ஏதத் வை முகதோऽந்நம் ராத்தம்। முகதோऽஸ்மா அந்நம் ராத்யதே। ஏதத்வை மத்யதோऽந்நம் ராத்தம்। மத்யதோऽஸ்மா அந்நம் ராத்யதே। ஏதத் வா அந்ததோந்நம் ராத்தம்। அந்ததோऽஸ்மா அந்நம் ராத்யதே। ய ஏவம் வேத॥

வீட்டில் தங்க வந்த எவரையும் போ என்று சொல்லக்கூடாது. அது விரதம். வந்த விருந்தினரைப் போற்றி உபசரிப்பது பெரிய ஒழுக்கமாகும். ஆகையினால்

அதற்காக எவ்விதத்திலாவது மிகுதியான அன்னத்தை சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டும். எந்த சமயத்தில் அதிதிகள் வந்தாலும் இல்லை என்று பெரியோர்கள் சொல்லமாட்டார்கள். அன்னம் ஸித்தமாயிருக்கிறது என்றே அவர்கள் சொல்வார்கள். வந்தவர்களை நன்கு உபசரித்து சிறந்த முறையில் அன்னம் கொடுப்பவர்கள் அதே முறையில் தாங்களும் உபசாரத்துடன் அன்னம் பெறுவார்கள். மத்யமமான முறையில் அன்னம் கொடுத்தால், இவனுக்கும் மத்யமமான முறையில் உணவு கிட்டும். அதமமான முறையில் கொடுத்தால் அதே முறையில்தான் அன்னம் கிட்டும். தான் கொடுக்கும் முறையில்தான் தனக்கும் கிடைக்கும் இவ்விதம் அறிந்தவன் முன் அனுவாகத்தில் சொல்லப்பட்டபடி மிகுந்த அன்னம் படைத்தவனுகவும், அன்னத்தை உண்டு களிப்பவனுகவும் ஆகிருன். மக்களாலும், பசுக்களாலும், ஞானத்தாலும், கீர்த்தியாலும் மஹானுக விளங்குகிருன்.

பிருகு :— அன்னத்தை அற்பமாக எண்ணினேம். அதில் எவ்வளவு தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன!

வருணர் :— குழந்தாய் பிருகு! உன் நண்பர்களுக்கு ஏற்பட்ட ஸந்தேஹத்தை நீக்க முயல்வாய்.

பிருகு :— இல்லை அப்பா! தாங்களே நிவர்த்தி செய்யவேண்டும். தாங்கள் கிருபைகூர்ந்து திருவாய் மலர்ந்தருளினுல் அதற்கு மதிப்பே தனியல்லவா! தயவுசெய்து தாங்களே கூற வேண்டுகிறேன்.

மற்றவர்கள் :- ஐயனே! தாங்களே ஸந்தேஹத்தை நிவர்த்திக்கும்படி வேண்டுகிருேம். கிருபை பண்ண வேண்டும்.

வருணர் :— வத்ஸர்களே! எல்லோருடைய விருப்பமும் அதுவானுல் அங்ஙனமேயாகுக. ஆசிரம வாஸிகள் சொன்னதுபோல் இவைகள் ஸாதாரணமான தத்துவங்கள்தான். ஆனுல் உபாஸனை என்பது

ஸாதாரணமான பொருளில் விசேஷமான ஞானத்தை பாவிப்பதுதான் ஒரு சிறிய லிங்கத்தில் பரமேசுவரனை தியானிப்பதுபோல்; ப்ரஹ்மத்தை ஸாக்ஷாத்கரிக்கு முன் முதற்படியில் அன்னத்தை உபாஸிக்கவேண்டும். அதற்காக இவ்வளவு பெருமை கூறப்பட்டது. ஒரு கோயிலுக்குள் நுழையுமுன் கோபுர வாசலில் வணங்குவதுபோல, ஸாதகன் ப்ரஹ்மஞானத்துக்குத் துவாரம்போன்ற அன்னத்தை இகழாமல் போற்ற வேண்டும். அதை எறிவதும், பழிப்பதும், வீணுக்கு வதும் தவருகும். உயிரைக் காப்பாற்றக்கூடிய உணவு ப்ரத்யக்ஷமான தெய்வம். அதை நிந்தியாமல் போற்றிப் பெருக்கவேண்டும் ஏராளமாக உண்டாக்க வேண்டும். வைத்திய சாஸ்திரமும் (ஆயுர்வேதம்) வேதாங்கம்தானே. வைத்திய நூலில் கூறப்பட்டதால் விதிகளுக்கு மதிப்புக் குறையவில்லை. வேதத்திலும் திரும்பச் சொல்லப்பட்டதால் அந்த விதிகளுக்கு மேலும் பெருமை ஏற்படுகிறது. ப்ரஹ்மத்தையடைய ஸாதனமாகப் பயன்படுவதால் அன்னம் துதிக்கப் பட்டது. ப்ரஹ்மவேத்தாவும் குருவுக்கு ஸமானமாக அன்னத்தை நினைத்துப் போற்றவேண்டும். அன்னமய கோசம் வழியாகத்தானே உள்ளே விளங்கும் ப்ரஹ்மத்தை எட்டவேண்டும். மந்தாதிகாரிகளுக்காக பலன்கள் மிகுதியாக உரைக்கப்பட்டன. இத்துடன் இன்றைய பாடம் முடிகின்றது.

(திரை விழுகிறது)

காட்சி 5

[திரை விலக முன் காட்சிபோல் எல்லோரும் உட்கார்ந்து இருக்கிருர்கள்.]

பகவான் வருணர் :—வத்ஸர்களே! இன்றைய பாடம் துவக்கும் முன் ஏதாவது ஐயம் உள்ளவர்கள் கேட்கலாம்.

ப்ராசீனயோக்யர் :- வந்த விருந்தினருக்கு அன்னம் கொடுப்பதை மூன்று விதமாக விவரித்தீர்களே!

உத்தமம் மத்தியமம் அதமம் என்று. இன்னும் கொஞ்சம் விவரமாகக் கூற வேண்டுகிறேன்.

வருணர் :— குழந்தாய்! நன்ருகத் தெரிந்து கொள்ளவேண்டிய முக்கியமான விஷயம்தான் இது. சொல்லுகிறேன் கேள். அன்னம் கேட்டவனுக்கு இல்லையென்று சொல்லவேகூடாது. ஸித்தமாக இருக்கிறதென்று சொல்லவேண்டும். சில லோபிகள் சொல்வதுபோல் விருந்தினரைப் பார்த்து, "போஜனம் செய்துவிட்டுத்தானே வந்தீர்கள்? போஜனத்துக்குத் திரும்ப வீட்டிற்குப் போய்விடுவீர்களல்லவா." என்று கேட்கக்கூடாது. அதிதிகளை உபசரிப்பது நமது கடமையாகும். உபசரிக்கப்படாமல் விருந்தினர் திரும்பினுல் அந்த கிருஹம் நரி வாழும் இடமாகும். வந்த விருந்தாளியை உபசரித்தால்-பகவானுக எண்ணிப் போற்றினுல்-ஸ்வர்க்கம் கிடைக்கும். எந்த விதத்திலும் நிறைய உணவு தேடி வைத்துக்கொள்ள வேண்டும்.

முதல் ஆசிரமவாஸி :— ஐயனே! எந்த விதத்திலும் என்ருல் கெட்ட வழிகளில்கூடவா?

வருணர் :— ஸௌம்யா! அப்படி அர்த்தமில்லை. நல்வழிகளில் மட்டுமே, பொருளீட்டி உணவைப் பெருக்கி வைத்துக்கொள்ளவேண்டும். தனக்கு மட்டும் அல்ல, எல்லோருக்கும் பயன்படுவதற்காக. எவ்விதம் எக்காலத்தில் தானம் செய்கிருனே அவ்விதம் அவ்வக் காலத்தில் அதற்குத் தகுந்த பலன், கொடுப்பவனுக்குக் கிடைக்கும். எப்படியென்ருல், பாலப்பருவத்தில் ஒருவன் கொடுத்தால், அப்படியே இவனுக்கு பாலப் பருவத்தில் திரும்ப கிடைக்கும். அங்ஙனமே மத்யம வயதில் கொடுப்பவனுக்கும், விருத்தாப்பிய வயதில் கொடுப்பவனுக்கும் பலன் அந்தந்தக் காலத்தில் கிடைக்கும் இந்த ஜன்மத்திலேயோ அல்லது பின்னுல் வரும் பிறவிகளிலேயோ பலன் கிட்டும். தவிர ஸாத்விகமான வழியில் உணவு கொடுத்தவனுக்கு ஸாத்விகமான

வழியில் கிடைக்கும் ராஜஸ, தாமஸ முறைகளில் ஈந்தவனுக்கு அதுபோல் ராஜஸ, தாமஸ முறைகளில் திரும்பக்கிடைக்கும்.

பிருகு :— அப்பா, தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகிறோம்.

ப்ராசீனயோக்யர் :— ஐயனே, ஐயங்கள் நீங்கி விட்டன. தொடர்ந்து உபதேசமொழிகளைக் கேட்க ஆவலுடன் காத்திருக்கின்றோம்.

வருணர் :— இனி அத்தியாத்ம உபாஸனையைப் பற்றிக் கூறுகிறேன். கவனமாகக் கேளுங்கள்.

क्षेम इति वाचि । योगक्षेम इति प्राणापानयोः । कर्मेति हस्तयोः । गतिरिति पादयोः । विमुक्तिरिति पायौ । इति मानुषीः समाज्ञाः ॥

க்ஷேம இதி வாசி । யோகக்ஷேம இதி ப்ராணாபானயோ: । கர்மேதி ஹஸ்தயோ: । கதிரிதி பாதயோ: । விமுக்திரிதி பாயௌ । இதி மாநுஷீ: ஸமாஜ்ஞா: ॥

(பிரம்மத்தை) வாக்கில் பாதுகாப்பாக உளதென்றும், பிராணாபான சக்திகளில் யோகமாயும் க்ஷேமமாயும், பிரதிஷ்டிதமாயிருக்கிறதென்றும், கைகளில் கர்மரூபமாயிருக்கிறதென்றும், கால்களில் நடையாகவும், பாயுவில் விஸர்ஜனமாகவும் உபாஸிக்கவேண்டும். இதுவே மானிட சரீரத்தைப்பற்றிய உபாஸனை. இந்த உபாஸனைகள் ஸாதகனுக்கு சித்தத்தை சுத்திசெய்ய உதவுகின்றன. பேச்சும், மூச்சுவிடுவதும், கை கால்களின் சேஷ்டிதங்களும், மலவிஸர்ஜனமும் சரீரத்தின் முக்கிய வேலைகளாகும். ஆகவே அவைகளிலேயே பிரம்மத்தை பாவனை செய்யும்படி ச்ருதி கூறுகிறது.

பிருகு :— பூஜ்யபிதாவே! மனித சரீர ஸம்பந்தமான உபாஸனங்களைப் புரிந்துகொண்டோம். மேலும் எங்களுக்குத் தெரியவேண்டியதை உபதேசிக்க வேண்டுகிறோம்.

வருணர் :- சீடர்களே ! இல்லாததை ஸம்பாதிப்பது யோகம். கிடைத்ததைக் காப்பாற்றுவது க்ஷேமம். வாக்கினால் க்ஷேமம் ஏற்படுகிறது. பிராணபான பலத்தால் யோகக்ஷேமங்கள் நடைபெறுகின்றன. ஆனால் வாக்குக்கும் பிராணபானன்களுக்கும் அந்த சக்தியைத் தந்தது ப்ரஹ்மம்தான். ஆகவே வாக்கிலும் பிராணபானன்களிலும் ப்ரஹ்மம் நிலைபெற்றிருக்கிறது.

अथ दैवीः । तृप्तिरिति वृष्टौ । बलमिति विद्युति । यश इति पशुषु । ज्योतिरिति नक्षत्रेषु । प्रजातिरमृतमानन्द इत्युपस्थे । सर्वमित्याकाशे । तत्प्रतिष्ठेत्युपासीत । प्रतिष्ठावान् भवति । तन्मह इत्युपासीत । महान् भवति । तन्मन इत्युपासीत । मानवान् भवति । तन्नम इत्युपासीत । नम्यन्तेऽस्मै कामाः । तद्ब्रह्मेत्युपासीत । ब्रह्मवान् भवति । तद्ब्रह्मणः परिमर इत्युपासीत । पर्येणं म्रियन्ते द्विषन्तः सपत्नाः । परियेऽप्रिया भ्रातृव्याः । स यश्चायं पुरुषे । यश्चासा-वादित्ये । स एकः ॥

அத தைவீ: । த்ருப்திரிதி வ்ருஷ்டௌ । பலமிதி வித்யுதி । யச இதி பசுஷு । ஜ்யோதிரிதி நக்ஷத்ரேஷு । ப்ரஜாதிரம்ருதமாநந்த இத்யுபஸ்த்தே । ஸர்வமித்-யாகாசே । தத்ப்ரதிஷ்டேத்யுபாஸீத । ப்ரதிஷ்டாவான் பவதி । தந்மஹ இத்யுபாஸீத । மஹான் பவதி । தந்மந இத்யுபாஸீத । மாநவான் பவதி । தந்நம இத்யுபாஸீத । நம்யந்தேऽஸ்மை காமா: । தத்ப்ரஹ்மேத்யுபாஸீத । ப்ரஹ்மவான் பவதி । தத்ப்ரஹ்மண: பரிமர இத்யுபாஸீத । பர்யேணம் ம்ரியந்தே த்விஷந்த: ஸபத்நா: । பரியேऽப்ரியா ப்ராத்ருவ்யா: । ஸ யஸ்சாயம் புருஷே । யஸ்சாஸாவாதித்யே । ஸ ஏக: ॥

இனி 'அதிதைவ' உபாஸனை வருமாறு : அதாவது தேவதா ஸம்பந்தமான ஞானங்கள் சொல்லப்படுகின்றன. மழையில் திருப்தியாகவும், மின்னலில் மிகுந்த பலமாகவும் ப்ரஹ்மத்தை உபாஸிக்கவேண்டும்.

பசுக்களில் புகழாகவும், நக்ஷத்ரங்களில் ஜ்யோதியாக வும், உபஸ்தத்தில் ஸந்ததி ஸ்வர்க்கம் ஆனந்தம் இவை ரூபமாகவும், ஆகாசத்தில் ஸர்வமாகவும் பாவித்து உபாஸிக்கவேண்டும். ப்ரஹ்மத்தையே ஆதாரமெனக் கருதி உபாஸிந்தால் இவன் ஆதாரத்தை உடையவனுக ஆகின்ருன். மஹத்வ குணமுள்ளதாக உபாஸித்தால் இவன் மஹானுகிருன். அதை மனமாக வழிபட்டால் மனவலிமை பெறுகிருன். அதை 'நம:' என்று உபாஸித்தால் காமங்கள் இவனை வணங்கு கின்றன. அதை ப்ரஹ்மமாக உபாஸித்தால் ப்ரஹ்ம மாகவே ஆகிருன். அதை பரிமரமாக (நாச சக்தி) வழிபட்டால் சுற்றியுள்ள பகைவர்களும், ப்ரியமில்லாத விரோதிகளும் நாசமடைகிருர்கள். இந்தச் சரீரத்தில் உள்ளுறைபவன் எவனே அவனும், அந்த ஸூர்ய னிடத்தில் உறைபவன் எவனே, அவனும் ஒன்றே. அதுவே ப்ரஹ்மம்.

ப்ராசீனயோக்யர் :— ஐயனே! பதவுரை கேட் டோம். நன்ருகப் புரியவில்லை. விளக்கமாகக் கூற வேண்டுகிறேன்.

முதலாவது :— பரிமரம் என்ருல் என்ன ?

வருணர் :— அருமைச் சீடர்களே, விளக்கமாகக் கூறுகிறேன். பிரம்மம் எங்கும் நிறைந்திருக்கின்றது. அது இல்லாத இடமும் பொருளுமில்லை. அங்கு இங்கு எங்கு என்று கூறமுடியாதபடி எல்லாவிடத்தும் எல்லாப் பொருளிலும் நீக்கமற நிறைந்து எல்லாவற்றையும் இயக்குவிப்பது பிரம்மசக்தியே யாகும். இந்த உண்மையை நாம் அறிந்தால் மட்டும் போதாது. இடை விடாது சிந்தித்து உணரவேண்டும். பிரம்மஞானத்தை திடப்படுத்துவதற்காக இந்த உபாஸனைகள் கூறப் பட்டன. ஸாதகனின் சௌகர்யத்தைக் கருதி மிகுந்த கருணையுடன் வேதமாதா உபதேசிக்கின்ருள் உபாஸனை களைப்பற்றி. கைகளில் கருமமாகவும், கால்களில் நடை யாகவும், வாக்கில் க்ஷேமமாகவும், பாயுவில் விமுக்தி

ரூபமாகவும், உபாஸிக்கவேண்டும் என்று முன் ருக்கில் சொல்லப்பட்டது. இப்போது மழையில் திருப்தியாகவும், மின்னலில் பலமாகவும் விளங்குவது பிரம்மமேயாகும் என்று ச்ருதி கூறுகிறது. மழை குளிர்ச்சியையும் மகிழ்ச்சியையும் ஒருங்கே தருகிறது. மழையால் திருப்தி யடையாதவரும் உளரோ? இல்லவேயில்லை. பொருட் செல்வத்தைவிட அருள் செல்வமே முக்கியம் சிறந்ததும் கூட. அருள்பெற பசுக்கள் உபயோகப்படுகின்றன. ஆகவே புகழ்ச் செல்வத்தை பசுக்கள் தருகின்றன. தானங்களாலும் யாகங்களாலும் கீர்த்தியடைகின்றான் ஒருவன். அவற்றிற்கு பசுக்கள் இன்றியமையாதன என்பது தெரிந்த விஷயமே. மஹத்தென வழிபட்டால் மஹானாகிறான். ப்ரமரகீட நியாயப்படி எதை ஒருவன் சிந்திக்கிறானோ அதாகவே அவன் ஆகிறானல்லவா! ஆகவே பிரம்மமாகவே சிந்திப்பவன் பிரம்மமாகவே ஆகின்றான். நம: என்று சொல்லி வணங்கினால் எல்லாக் காமங்களும் இவனை வணங்கும். இவனுடைய ஏவலில் நிற்கும். அவாப்த ஸமஸ்தகாமனாய் (விருப்பங்கள் எல் லாம் நிறைவேறியவனாக) விளங்குவான். அவனுக்கு வேண்டுதலும் வேண்டாமையும் இல்லை. பிரம்மத்தின் அழிவு சக்திக்கு பரிமரம் என்று பெயர் அதாவது மறக் கருணை. மின்னல், மழை, சந்திரன், சூரியன், அக்கினி இந்த ஐந்தையும் அழிக்கும் வாயுவை பரிமரம் என்று கூறுவார்கள். வாயுவுடன் ஒன்றியிருப்பது ஆகாசம். ஆகாசத்தையே ப்ரஹ்மத்தின் நாசசக்தியாக வழிபட் டால் இவனை வெறுக்கும் எதிரிகள் நாசமடைவார்கள். தவிர இவனுக்கு பிரியமில்லாதவர்களும் அழிந்து போகின்றார்கள். இங்கு எதிரிகள் அழிவதாக அர்த்த மில்லை. விரோதம், பகை, அப்பிரியம் இவைகள் அழிவதாகத்தான் பொருள் கொள்ளவேண்டும்.

பிருகு:— அருமைத் தந்தையே! இங்ஙனம் வழி பட்டவன் எப்படி உலகில் தோற்றமளிக்கிறான்? என்ன பேசுகிறான்? மற்ற சாதாரணமானவர்களிடமிருந்து அவனை பிரித்தறிய முடியுமா? விவரிக்கவேண்டும் அப்பா!

வருணர் :— சீடர்களே, தொடர்ந்து உபதேசிக்கிறேன். பிருகுவின் கேள்விக்கும் அதில் விடை இருக்கும்.

स य एवंवित्। अस्माँल्लोकात्प्रेत्य । एतमन्नमयमात्मानमुपसंक्रम्य। एतं प्राणमयमात्मानमुपसंक्रम्य। एतं मनोमयमात्मानमुपसंक्रम्य। एतं विज्ञानमयमात्मानमुपसंक्रम्य। एतमानन्दमयमात्मानमुपसंक्रम्य। इमाँल्लोकान् कामान्नी कामरूप्यनुसञ्चरन्। एतत्साम गायन्नास्ते। हा३वु हा३वु हा३वु ॥

ஸ ய ஏவம்வித்। அஸ்மாத் லோகாத் ப்ரேத்ய। ஏதமந்நமயமாத்மாநமுபஸங்க்ரம்ய। ஏதம் ப்ராணமயமாத்மாநமுபஸங்க்ரம்ய। ஏதம் மநோமயமாத்மாநமுபஸங்க்ரம்ய। ஏதம் விஜ்ஞாநமயமாத்மாநமுபஸங்க்ரம்ய। ஏதமாநந்தமய மாத்மாந முபஸங்க்ரம்ய। இமான் லோகான் காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரன்। ஏதத் ஸாம காயந்நாஸ்தே। ஹா3வு ஹா3வு ஹா3வு ॥

இப்படி அறிந்தவன் அந்நமயம் பிராணமயம் முதலான பிரபஞ்சம் முழுவதையும் கடந்து, அதாவது அவித்யையால் ஆத்மாவாகத் தோன்றிக்கொண்டிருந்த இவற்றையெல்லாம் அநாத்மாவென உதறித் தள்ளிவிட்டு ப்ரஹ்மஸ்வரூபனுக ஸர்வ சுதந்திரனுக விளங்குகிருன். அனைத்தையும் கடந்து காமாந்நியாக அதாவது இஷ்டமுள்ளதை உண்பவனுயும் இஷ்டமான ரூபத்தை எடுப்பவனுயும் இவ்வுலகங்களில் ஸஞ்சரித்தும், அடியிற் கண்ட ஸாமத்தை கானம் பண்ணிக்கொண்டும் சுகமாய் இருக்கிருன். ஸாமம் என்ருல் ஸமம் அதாவது பிரம்மம். அந்த ஸாமகானம் என்னவென்ருல் 'ஹா (3) வு ஹா (3) வு ஹா (3) வு' 'ஆச்சரியம், ஆச்சரியம், ஆச்சரியம்' எவர்களுடைய மனது ஸமநிலையில் நிறுத்தப்பட்டதோ அவர்கள் பிரம்மத்திடம் நிலைபெறுகின்றனர். காணும் திசையெல்லாம் காண்பதெல்லாம் நானன்றி வேறில்லை என்று அறிந்தவுடன் ஆனந்தம் பொங்குகிறது. நோக்க

நோக்கக் களியாட்டம், மகிழ்ச்சி வழிந்தோடுகின்றது. ஆச்சரியம் ஆச்சரியம் ஆச்சரியம் என்று கூறுகின்றான். இசைக்கின்றான். அவனை மற்றவர்களிடமிருந்து பிரித்து அறிவது கடினமே.

(இச்சமயத்தில் வைசம்பாயனரின் சீடர்களான த்ரிசங்கு, போதாயனர், வைகானஸர், மாஹாசமஸ்யர் முதலியோர் பிரவேசிக்கின்றனர். வருண பகவானை ஸாஷ்டாங்கமாக வணங்கி ஆசி பெறுகின்றனர். பின்னர் ப்ருகு முதலிய நண்பர்களுடன் அளவளாவிக்கொண்டு, குருவின் அனுமதியுடன் எல்லோரும் உட்காருகின்றனர்.)

வருணர் :— (த்ரிசங்கு முதலியவர்களை நோக்கி) நீங்கள் இப்போது ஸரியான கட்டத்தில் வந்திருக்கிறீர்கள். ப்ருகு முதலியவர்கள் தீர்த்தாடனம் போயிருந்த ஸமயம் உங்களுக்கு உபதேசித்தவைகளை இப்போது இவர்களுக்குக் கூறிக்கொண்டிருக்கிறேன்.

த்ரிசங்கு :— குருநாதரே ! நாங்கள் பிரவேசிக்கும் போது 'ஆச்சர்யம்' என்ற பதங்கள் செவிகளில் விழுந்தன. அவைகளின் தாத்பர்யம் என்னவோ ?

வருணர் :— அந்நமயாதி கோசங்களை வரிசையாகக் கடந்து ப்ரஹ்மஞானியாகியவன் காமரூபியாகவும், எல்லாப் போகங்களும் அடைந்தவனாகவும் இந்தப் பூமி முதலிய உலகங்களில் ஸாமகானம் பண்ணிக்கொண்டு ஆனந்தமாக உலவுகிறான் என்று கூறினேன். அந்த ஸாமகானத்தின் முதல் அடிகளே "அஹோ ஆச்சர்யம் ஆச்சர்யம் ஆச்சர்யம்" என்பதாகும். அதிசய மேலீட்டால் மூன்றுதடவை சொல்கிறான்.

பிருகு :— ஐயனே ! தொடர்ந்து ஸாமத்தைக் கூறி பொருளும் உரைக்க வேண்டுகிறேன்.

வருணர் :— अहमन्नमहमन्नमहमन्नम् । अहमन्नादो३ऽहमन्नादो३ऽहमन्नादः । अहꣳ श्लोककृदहꣳ श्लोककृदहꣳ श्लोककृत् । अहमस्मि प्रथमजा ऋता३स्य । पूर्वं देवेभ्योऽमृतस्य ना३भायि ।

यो मा ददाति स इदेव मा ३ वाः । अहमन्नमन्नमदन्तमा ३ द्मि । अहं विश्वं भुवनमभ्यभवाम् । सुवर्न ज्योतीः । य एवं वेद । इत्युपनिषत् ॥

அஹமந்நமஹமந்ந மஹமந்நம். அஹமந்நாதோ 3 ஹமந்நாதோ 3 ஹமந்நாத: । அஹகும் ச்லோகக்ருதஹகும் ச்லோகக்ருதஹகும் ச்லோகக்ருத் । அஹமஸ்மி ப்ரதமஜா ருதா 3 ஸ்ய । பூர்வம் தேவேப்யோऽம்ருதஸ்ய நா 3 பாயி । யோ மா ததாதி ஸ தேவ மா 3 வா: । அஹமந்நமந்நமதந்த மா 3 த்மி । அஹம் விச்வம் புவநமப்யபவாம் । ஸுவர் ந ஜ்யோதீ: । ய ஏவம் வேத । இத்யுபநிஷத் ॥

நானே அன்னம், நானே அன்னம், நானே அன்னம். நானே அன்னுதன், நானே அன்னுதன், நானே அன்னுதன். நானே சுலோககிருத், நானே சுலோககிருத், நானே சுலோககிருத். நானே ஜகத்துக்கு முந்தி உண்டானவன். தேவர்களுக்கெல்லாம் முந்தினவன். அழியாப்பதவியின் நடுநிலை நான். எவன் (அன்னரூபியான) என்னைக் கொடுக்கிருனே அவன் அதனுல் ஆத்மரக்ஷணம் செய்தவனுகின்ருன் இப்படிச் செய்யாதவனை நானே உண்டுவிடுகின்றேன். நான் எல்லா புவனமாகவுமிருக்கின்றேன். ஆதித்யனுடைய ஜ்யோதி போன்றது என் பிரகாசம் இப்படியறிந்தவன் முன் சொன்னபடி பிரம்மமாகவே ஆகிருன். இங்ஙனம் உபநிஷத் விளக்கப்பெற்றது.

வைகானஸர் :— இந்த கானத்திற்கு விளக்கமாக உரை கூற வேண்டுகின்றேன்.

வருணர் :— முன் விவரித்ததுபோல் அன்னமயம் முதலிய ஐந்து கோசங்களையும் தாண்டி அவற்றிற்கு ஆதாரமாயும் அவைகட்கு அப்பாலுமுள்ள பிரம்ம நிலையை அடைந்தவன் எல்லா பந்தங்களினின்றும் விடுபெற்று ஆனந்தஸ்வரூபியாய் விளங்குவான். அவனது ஸ்வரூபம், குணம் எல்லாம் ஆனந்தமே. ஆகையினுல்

அவன் இஷ்டம்போல் உருவம் தாங்குவான். இஷ்டம் போல் போகங்களை நுகர்வான். எங்கும் ஸஞ்சரிப்பான். விருப்பும் வெறுப்பும், தேவையும் வேண்டாமையும், மற்ற துவந்துவங்களும் நீங்கியதேச்சையாகத்திரிவான். அப்போது அவன் இம்மாதிரியான ஸாமத்தை கானம் பண்ணுகின்ருன். இதன் மூலம் ஸர்வ ஸமமான ஸர்வா பிந்நமான ப்ரம்மத்தையே கானம் செய்கிருன். என்ன சொல்கிருன்? நானே எல்லாம் என்னைத்தவிற வேறென்றுமில்லை. தேவர்களுக்கும் முன்னவன் நான். எல்லாவற்றிற்கும் கேந்திர ஸ்தானம் நான் பிராணிகள் கடைசியில் அடையவேண்டிய அமிருத ஸ்வரூபம் என்னிடமே இருக்கிறது. உணவும் உண்பவனும் நானே. உணவுக்கும் உண்பவனுக்குமுள்ள உறவை உண்டாக்கும் சைதன்யமும் நானே. அழகும் ஒழுங்கும் கொண்ட இந்த பிரபஞ்சத்துக்கு முன்னுல் தோன்றினவன் நான். அதாவது ஹிரண்யகர்ப்பனும் நானே. எல்லாம் நானே என்று அறிந்து இறுமாந்து சுயநலம் மிகுந்து அன்னத்தைக் கொடுக்காதவன் அழிந்து போகிருன். கொடுப்பவன் ஆத்மாவை ரக்ஷித்தவனுகிருன். தெளிந்த சித்தமுடைய பிரம்ம ஞானி மனதால் ஸங்கல்பிக்கும் போகங்களையும் விரும்பும் உலகங்களையும் அடைகிருன் என்பது பொருள்.

போதாயனர்:— குருநாதரே! ரொம்ப அதிசய மான உபதேசங்கள். ஸரியான ஸமயத்தில் வந்தோம். கிருதார்த்தர்களானேம்.

மாஹாசமஸ்யர்:— ஜயனே! எங்கள் குருநாதரும் தங்கள் ப்ரிய நண்பருமான வைசம்பாயனர் கேதாரம் போயிருக்கிற விபரம் தாங்கள் அறிந்ததே நாங்களும் அங்கு போவதற்காக வந்தோம். வழியில் எதிர்பாராத விதமாக நல்லுபதேசம் பெற்ருேம். தேடிப்போன மூலிகை காலடியில் கிடைத்ததுபோல், ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தை உள்ளங்கை நெல்லிக்கனியெனப் பெற்ருேம். பிறந்த பேறு எய்திருேம். பிறவாமையும்

பெற்றோம். வாழ்வாங்கு வாழவும் வகையறிந்தோம். நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வருணர் :— என் அருமை சிஷ்யர்களே! இத்துடன் இந்த உபநிஷத் நிறைவுபெறுகிறது. குழந்தாய் ப்ருகு! நீயும் உன் நண்பர்களும் கற்றபடி ஒழுகவேண்டும். மற்றவர்களுக்கு உதாரணமாக நடந்து உயரிய உபநிடதக் கருத்துக்களை எங்கும் பரவச்செய்ய வேண்டும்.

(சிஷ்யர்கள் எல்லோரும் எழுந்து 'அபிவாதயே . அஸ்மி போ' சொல்லி ஒவ்வொருவராக பகவான் வருணர் முன்னால் சென்று ஸாஷ்டாங்கமாக வணங்குகிறார்கள். வருணரும் அவர்களை 'தீர்க்காயுஷ்மான் பவ ஸௌம்ய' என்று வாழ்த்துகின்றார். அச்சமயத்தில் அசரீரிவாக்கு பின்வருமாறு கேட்கிறது.)

("வேதமாதாவின் கருணையினால், வியாஸ பகவானின் அருளால் உங்கள் எல்லோருக்கும் இப்போதே ப்ரஹ்மநிலை கிட்டிவிட்டது. நீங்கள் எல்லோரும் ப்ரஹ்மநிலையை அடைந்துவிட்டீர்கள். பேரின்பநிலை எய்திவிட்டதால் விவரிக்கமுடியாத உன்மத்தநிலையில் ஆடுங்கள் பாடுங்கள் கூத்தாடுங்கள் வியப்புச் சொற்களைக் கூறிக்கொண்டு தன்வசமிழந்து அதிசயமான அபூர்வமான நிலையில் ஸஞ்சாரம் செய்யுங்கள்".)

மாற்றுக்காட்சி — Turning Scene

[இனி நிழற்காட்சியில் பகவான் வருணர் மையத்தில் நிற்க சீடர்கள் கைகளைக் கோர்த்துக்கொண்டு மண்டலாகாரமாய் அவரைச் சுற்றிவந்து ஆடுகிறார்கள். பாடுகிறார்கள். ராஸலீலையைப்போல் குருவும் சீடர்களும் வியப்புடன் விளையாடுகிறார்கள். அப்போது அவர்கள் பின்வருமாறு உணர்ச்சி வசப்பட்டு உரைக்கின்றார்கள்.]

வருணர் :— हा३वु हा३वु हा३वु । अहमन्नमहमन्नमहमन्नम् । अहमन्नादो३ऽहमन्नादो३ऽहमन्नादः ॥

ஹா 3 வு ஹா 3 வு ஹா 3 வு । அஹமந்நமஹமந்ந மஹமந்நம் । அஹமந்நாதோ 3 ऽஹமந்நாதோ 3 ऽஹமந்நாத: ।

பிருகு :—

கடல்ஞாலம் செய்தேனும் யானே !
கடல்ஞாலம் ஆவேனும் யானே !
கடல்ஞாலம் கொண்டேனும் யானே !
கடல்ஞாலம் உண்டேனும் யானே.

ப்ராசீனயோக்யர் :—

காண்கின்ற நிலமெல்லாம் யானே !
காண்கின்ற விசும்பெல்லாம் யானே !
காண்கின்ற வெந்தீயெல்லாம் யானே !
காண்கின்ற இக்காற்றெல்லாம் யானே !
காண்கின்ற கடலெல்லாம் யானே.

த்ரிசங்கு :—

கோலங் கொள் சுவர்க்கமும் யானே !
கோலமில் நரகமும் யானே !
கோலம் திகழ் மோக்கமும் யானே !
கோலம் கொள் தனிமுதல் யானே.

மாஹாசமஸ்யர் :—

கொடியவினை யாவேனும் யானே !
கொடியவினை செய்வேனும் யானே !
கொடியவினை தீர்ப்பேனும் யானே !
கொடியவினையாது இலானும் யானே.

போதாயனர் :—

செய்கின்ற கிருதியெல்லாம் யானே !
செய்வானின்றவைகளும் யானே !
செய்து முன்னிறந்தவும் யானே !
செய்கைப்பயனுண்பேனும் யானே.

வைகானஸர் :—

கற்கும் கல்வி யாவேனும் யானே !
கற்கும் கல்வி செய்வேனும் யானே !
கற்கும் கல்வி தீர்ப்பேனும் யானே !
கற்கும் கல்விச்சாரமும் யானே.

ஆசிரமவாஸிகள் :—

உரைக்கின்ற முக்கட்பிரான் யானே !
உரைக்கின்ற திசைமுகன் யானே !
உரைக்கின்ற அமரரும் யானே !
உரைக்கின்ற அமரர்கோன் யானே !
உரைக்கின்ற முனிவரும் யானே.

(திரை விழுகிறது)

(திரைக்குள்ளிருந்து சாந்திபாடம் கேட்கின்றது)

தைத்திரீயோபநிஷத் நாடகம் முற்றும்.

சுபம்.

உ

ஸ்ரீ குருப்யோ நம:

உபநிஷத் நாடகமாலா-8

ஐதரேயோபநிஷத்

அல்லது

கருவிலே திருவுடையார்

(நாடகம்)

நாடக பாத்திரங்கள்

மஹிதாஸ ஐதரேயர்	— பிரம்மரிஷி—ஸிந்துநதிக் கரையில் வசிப்பவர்
பைலர்	— பிரம்மரிஷி - ஸரஸ்வதீ நதி தீரத்தில் வசிப்பவர்
பைங்கி, காவஷேயர்	— ஷியாரின் நண்பர்கள், ரிஷிகள்
ஆசுவலாயனர், ஸத்யாயனர்	— மஹரிஷி ஐதரேயரின் சிஷ்யர்கள்
வாமதேவர்	— கருவிலேயே பிரம்மஞானம் அடைந்த ரிஷி

மற்றும் ஆசிரமவாஸிகள், ருஷி பத்னி முதலானோர்.

ஐதரேயோபநிஷத்

(அல்லது)

கருவிலே திருவுடையார்

(நாடகம்)

முதலாவது அங்கம்

(திரை தூக்கப்பட)

[நிழற்காட்சி. அடர்ந்த காட்டில் தேவதாரு விருக்ஷத்தின் அடியில் அமர்ந்து மஹரிஷி ஐதரேயர் தவம் செய்துகொண்டு இருக்கிறார். திரைக்குள்ளே பூஸூக்தம் ஜபிக்கப்படுகின்றது. பூதேவி பிரத்தியக்ஷமாகி மஹரிஷிக்கு தரிசனம் கொடுக்கிறாள். மஹரிஷி எழுந்து ஸாஷ்டாங்கமாக வணங்கி, நின்றுகொண்டு ஸ்தோத்திரம் செய்கின்றார்.]

ஐதரேயர் :— தேவி! அடியேன் பால் கருணை கொண்டு தர்சனம் தந்ததற்கு வணக்கம். பூதேவியே! விஸ்தாரத்தால் பரந்த மாநிலங்களாகவும், மேன்மையால் சுவர்க்கமாகவும், மஹிமையால் ஆகாசமாகவும் விளங்குகின்றீர்கள். அகண்டலோக ஸ்வரூபியே, உங்களுக்கு முன்னும் பின்னும் எல்லா பக்கங்களிலும் நமஸ்காரம் செய்கின்றேன். லோகமாதாவான உங்களைத்தானே சூரியன் வேகமாய்ச் சுற்றி வருகின்றான். உங்களையே தஞ்சமாக அடைந்தேன் அருள் புரியவேண்டும். அம்மா!

பூமிதேவி :— (மிகுந்த கருணையுடன் கடாக்ஷித்து) குழந்தாய் ஐதரேயா! உனது தவத்துக்கு மெச்சினோம். உனக்கு வேண்டும் வரங்கள் யாவை? கேட்டவுடன் தரச் சித்தமாயிருக்கிறோம். காலவிளம்பமின்றி கேட்பாய்! அப்பனே!

ஐதரேயர் :— தாயே, தங்களுடைய தரிசனத்தை விட வேறு வரமும் வேண்டுமோ? அதை விடச் சிறந்து

பலன் எதுவாயிருக்கமுடியும்? இல்லவேயில்லை எப்போதும் புறக்கண்ணாலும் அகக் கண்ணாலும் தங்களையே தரிசித்து தங்கள் புகழ்பாடும் பணியைத் தரவேண்டும். பிரகாசிக்கின்ற ரத்தினங்களை தரித்துக் கொண்டு ஜனங்களை போஷித்துக்கொண்டு விளங்கும் மேதினியே! எப்போதும் தாங்கள் என்னிடம் வஸிக்க வேண்டும். எப்போதும் தங்களை விட்டுப்பிரியாமல் பாதாரவிந்தங்களில் அண்டிக்கிடக்கும் பாக்கியத்தை எனக்கு அருளவேண்டும். கையில் வில்லையுடையவளே! தங்களையே உபாஸிக்கிறேன். ஸர்வகாரிய ஸித்தியைக் கொடுக்கும் தேவியை தியானிக்கிறேன். என்னை நல் வழியில் தூண்டுவீராக.

பூதேவி :— ஸௌம்யா! ஐதரேயா! எல்லாம் உனது விருப்பப்படியே தந்தேன். ஆயினும் நீ தவம் செய்தது ஒரு முக்கியமான குறிக்கோளை உத்தேசித்தே அல்லவா அதுவென்ன? தயக்கமின்றி சொல்வாய். உன்னுடைய துதியால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருக்கின்றேன்.

ஐதரேயர் : — லோகமாதாவே! தங்களுடைய பெருமையானது, பர்வதசிகரங்களிலும், யாகம் முதலிய ஸத் காரியங்களிலும் பிரகாசிக்கின்றது. வாயு முதலிய பஞ்சபூதங்களுக்கு ஆதாரமாக இருப்பவளே, பிறப் பற்றவளே, அழியாதிருப்பவளே, பிரம்மஞானத்தை அடையவேண்டியே அடியேன் தவமியற்றினேன். அறிவில்லாத எனக்கு அகண்டாகாரமாக விளங்கும் அம்மையே, வைராக்கியத்தையும், ஞானத்தையும் அருளவேண்டுகிறேன். தாங்களே எல்லாவற்றிற்கும் வாஸஸ்தானமாக இருக்கின்றீர். எல்லாவற்றையும் ஆதியில் பெற்று வளர்க்கின்றீர். முடிவில் எல்லா வற்றையும் அனுக்கிரகித்து தமக்குள்ளேயே ஒடுக்கிக் கொள்கிறீர். தாயே! எனக்கு எது நன்மைதரும் என்று தங்களுக்குத் தோன்றுகின்றதோ அதை அருள் செய்வீராக. நமஸ்காரம்.

பூதேவி:—குழந்தாய், உன் விருப்பப்படி ஞானம் தந்தோம். நீ சிறந்த பிரம்மஞானியாக விளங்குவாய். உனது பெயராலேயே பிராஹ்மணங்களும் ஆரண்யகங்களும் ருக்வேதத்தில் பிரசித்தியடையப் போகின்றன. குலபதியாக விளங்கி நாடிவரும் சிஷ்யர்களுக்கு வேத பாடம் சொல்லிவைத்துக் கொண்டு ஸிந்துநதி தீரத்தில் கீர்த்தியுடன் வாழ்வாயாக. உன்னிடம் கற்கவரும் மாணவர்களுக்கு, சூரியனைக்கண்ட பனிபோல், அக்ஞானம் விலகி ஞான ஒளி வீசும். மங்களானி பவந்து (அபயஹஸ்தத்தால் அனுக்கிரகம் செய்கிருள்)

ஐதரேயர்:-பூதேவியே! நான் மிகவும் தன்யனுனேன் கிருதார்த்தனுனேன். பரிசுத்தமான தங்களுடைய வசனங்களைக் கேட்டு புளகாங்கிதமடைந்தேன். மறுபடியும் மறுபடியும் தங்களை வணங்குகிறேன். என்னை ரக்ஷிக்கவேண்டும்.

பூதேவி:—ஸௌம்யா, இனிமேல் நீ மஹிதாஸ ஐதரேயர் என்ற சிறப்புப் பெயருடன் விளங்குவாய். உனக்கு எல்லா மங்களங்களும் உண்டாகக்கடவது. (தேவி அந்தர்தானமாகிருள்.)

ஐதரேயர்: (பரபரப்புடன் எழுந்து) என்ன தேஜஸ்ஸு! என்ன ஒளி! என்ன கருணை! தேவியின் பிரஸாதத்தால் நான் பெரும் பேறு பெற்றேன் பேரின்பம் அடைந்தேன். (நடந்துகொண்டே) நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம். இந்த ஆனந்தத்தை எல்லோருக்கும் பகிர்ந்து அளிப்பேன். அன்னையின் ஆணைப்படி ஸிந்து நதி தீரத்தில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு வரும் பிரம்மசாரிகளுக்கு உபதேசிப்பேன். எங்கும் அம்மையின் அருள் பிரகாசிக்கட்டும் புவியெங்கும் அவள் கீர்த்தி பெருகட்டும். பிரம்மஞானம் நமது பிறப்புரிமை, அதை நான் அடைந்துவிட்டேன். எல்லோரும் அதை அடைய வேண்டியவற்றைச் செய்வேன். அதுவே என்கடமை தாயின் கட்டளை. (போகிருர்.)

(திரை விழுகிறது)

காட்சி 2

(திரை விலக)

[ஸிந்துநதி தீரத்தில் மகரிஷி ஐதரேயரின் ஆசிரமம் தென்படுகிறது. ஐதரேயர் தர்ப்பாஸனத்தில் அமர்ந்திருக்கின்றார். வலது பக்கத்தில் ஆசுவலாயனரும் இடது பக்கத்தில் ஸத்யாயனரும் உட்கார்ந்திருக்கின்றார்கள். வேதாந்த பாடம் நடக்கிறது.]

ஐதரேயர் :—வத்ஸர்களே! முதலில் சாந்திபாடம் சொல்லுவோம்.

சிஷ்யர்கள் :—அங்ஙனமே செய்வோம், குருநாதரே

ஐதரேயர் :—முதலில் நான் ஓதுகின்றேன். அதைக் கேட்டு நீங்களும் திரும்பச் சொல்லவேண்டும். தெரிந்ததா!

சிஷ்யர்கள் :—அப்படியேயாகட்டும். ஸ்வாமீ!

ஐதரேயர் :— ओं वाङ्मे मनसि प्रतिष्ठिता। मनो मे वाचि प्रतिष्ठितम्। आविरावीर्म एधि। वेदस्य म आणीस्थः। श्रुतं मे मा प्रहासीः। अनेनाधीतेन। अहोरात्रान् संदधामि। ऋतं वदिष्यामि। सत्यं वदिष्यामि। तन्मामवतु। तद्वक्तारमवतु। अवतु माम्। अवतु वक्तारमवतु वक्तारम्॥

ओं शान्तिः शान्तिः शान्तिः॥

வாங் மே மனஸி ப்ரதிஷ்டிதா ǀ மநோ மே வாசி ப்ரதிஷ்டிதம் ǀ ஆவிராவீர் ம ஏதி ǀ வேதஸ்ய ம ஆணீ ஸ்த: ǀ ச்ருதம் மே மா ப்ரஹாஸீ: ǀ அநேநாதீதேன ǀ அஹோராத்ரான் ஸந்ததாமி ǀ ருதம் வதிஷ்யாமி ǀ ஸத்யம் வதிஷ்யாமி தன் மாமவது ǀ தத் வக்தாரமவது ǀ அவது மாம் ǀ அவது வக்தாரமவது வக்தாரம் ǁ

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ǁ

(சீடர்களும் திரும்ப ஓதுகின்றனர்.)

ஐதரேயர் :- குழந்தைகளே ! இனி சாந்தி பாடத்துக்கு பொருள் கூறுகின்றேன். கவனமாய்க்கேளுங்கள்.

ஓம் ! என் வாக்கு மனதில் நிலைத்து நிற்கவேண்டும். அதுபோலவே மனமும் வாக்கில் ஊன்றி உறுதியுடன் இருக்கவேண்டும். ஆத்ம ஜோதியே! என்னிடம் ஒளியுடன் விளங்குவாயாக. மனோ வாக்குகளே! என்னிடம் வேதத்தைக் கொண்டுவாருங்கள். எனது கேள்விச் செல்வம் என்னை விட்டு நீங்கலாகாது. இந்த அத்தியயனத்தினால் இரவையும் பகலையும் சேர்க்கிறேன். அதாவது எப்போதும் வேதம் ஓதுவேனாக. ருதத்தை போற்றுகிறேன். ஸத்தியத்தையும் போற்றுகிறேன். அது என்னைக் காப்பாற்றட்டும். ஆசாரியனைக் காப்பாற்றட்டும் என்னை ரக்ஷிக்கட்டும். குருவையும் ரக்ஷிக்கட்டும். ஓம் முவ்வகையிலும் சாந்தி நிலவட்டும்.

ஆசுவலாயனர் :— ஸத்குருவே. ஒரு ஸந்தேஹம்.

ஐதரேயர் :— வத்ஸா ! அது என்ன? கேள், உடனே நிவர்த்தி செய்கிறேன்.

ஆசுவலாயனர் :— "மனோவாக்குகள் வேதத்தைக் கொண்டுவரவேண்டும்" என்ற பிரார்த்தனையின் பொருள் விளங்கவில்லை.

ஸத்யாயனர் :— ஸ்வாமீ ! ருதம் என்றால் என்ன? ஸத்யம் என்றால் என்ன? விவரமாகக் கூறவேண்டுகின்றேன்.

ஐதரேயர் :— குழந்தைகளே ! விவரமாகச் சொல்லுகிறேன் கேளுங்கள். வாக்கு மனதில் நிலைக்கட்டும். மனம் வாக்கில் நிலைக்கட்டும். தத்வவித்யாப்யாஸம் செய்யும் என் மனது நினைப்பதையே வாக்கு சொல்லட்டும். வாக்கால் சொல்லவேண்டியதையே மனம் நினைக்கட்டும். மனம் வாக்கு இரண்டும் இணைந்து தத்வத்தை அறியும் விஷயத்தில் வலிமை பெற்றிருக்க வேண்டும். மனத்துடன் இணையாவிட்டால் கண்டதை

எல்லாம் வாக்கு பேசும். வாக்கில் வலிமையில்லாவிடில் எண்ணியதைச் சொல்லமுடியாது. ஆதலால் ஆத்ம தத்வ விஷயத்திலேயே இரண்டும் சேர்ந்து வலிமை பெற்றிருக்கட்டும் என்று வேண்டப்படுகிறது. அவித்யை என்னும் திரை நீங்கி தத்வம் பிரத்யக்ஷமாக மனதில் விளங்கும்படி ஸ்வயம்பிரகாசமான ஆத்மாவை வேண்டுகிறுர். மனதால் எண்ணி எண்ணி வாக்கால் சொல்லிச் சொல்லி தத்வமும் அதைக் காட்டும் வேதமும் தன்னிடம் விளங்கவேண்டும். இதுதான் மனேவாக்குகள் வேதத்தைக் கொண்டுவருவது என்பது. என்னுல் கேட்டு அறியப்பட்ட வேதத்தையும் அதன் பொருளேயும் நான் மறக்காமலிருக்கவேண்டும். சோம்பலன்னியில் இரவும் பகலும் தொடர்ந்து வித்யாப்யாஸம் செய்கிறேன். ருதமென்றுல் மானஸ மான உண்மை. ஸத்யம் என்ருல் வாசிகமான உண்மை. பரமார்த்தமான உண்மைத் தத்துவத் தையே மனதால் சிந்தித்துத் தீர்மானித்து வாக்கால் சொல்வேன்.

ஆசுவலாயனர் :— ஸ்வாமீ ! நன்ருகப் புரிந்து கொண்டோம். மற்றுமொரு ஸந்தேஹம். ‘என்னேயும் ஆசார்யனேயும் காப்பாற்றட்டும்’ என்பதை இருதடவை சொல்வதன்கருத்து என்ன? இந்த சாந்தி பாடத்தால் என்ன பயன் ஏற்படுகிறது. இதை விளக்கியருள வேண்டும்.

ஐதரேயர் :— ஆசுவலாயன ! சரியான கேள்வி. மிக்க மகிழ்ச்சியடைகிறேன். கேளுங்கள் சொல் கிறேன். ஆரம்ப தசையில் வேதாந்த வித்யாப்யாஸம் செய்யும்பொழுது ஆசார்யனுக்கு போதிக்கும் திறமையும் தனக்குப் புரிந்துகொள்ளும் சக்தியும் ஏற்படவேணு மென்று முதல் தடவை சிஷ்யன் பிரார்த்திக்கிருன், வித்யாப்யாஸம் முடியும் சமயம் தனக்கு ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டு அவித்யை நீங்கும்படியும், ஞானியான சிஷ்யனே அடைந்ததை எண்ணி குருவுக்கு

ஸந்தோஷமேற்படும்படியும் தங்கள் இருவரையும் காப்பாற்ற வேண்டும் என்று அதே மந்திரத்தால் மறுபடியும் பிரார்த்திக்கிருன். இந்த சாந்தி பாடத்தால் ஞானம் ஏற்படுவதற்கு உள்ள விக்னங்கள் எல்லாம் விலகுகின்றன. பின்னுல் அஸம்பாவனே முதலான தோஷங்களும் நீங்குகின்றன.

ஸத்யாயனர் :—ஸ்வாமி! மேலும் தொடர்ந்து பாடம் சொல்ல வேண்டுகின்ருேம்.

ஐதரேயர் :—வத்ஸர்களே! நேற்றுவரை நீங்கள் படித்ததை ஞாபகப்படுத்திக்கொண்டு சுருக்கமாக முதலில் சொல்லுங்கள். பிறகு பாடம் தொடர்ந்து நடத்தலாம்.

ஆசுவலாயனர் :—ஸ்வாமீ! அப்படியே சொல்கிருேம். தங்கள் சித்தம் அடியேன் பாக்கியம்.

ஐதரேயர் :—குழந்தாய் ஸத்யாயனு! இதுவரை பாடம் கேட்டதை ரத்னச் சுருக்கமாகச் சொல்லுவாய்.

ஸத்யாயனர் :—ஸ்வாமீ! கூறுகிறேன். அபர பிரம்மத்தின் உபாஸனேயைப் பற்றியும் உபாஸனேயோடு கூடிய கர்மாவைப் பற்றியும் விவரமாகச் சொன்னீர்கள்.

ஆசுவலாயனர் :— இந்தக் கர்ம ஸஹிதமான உபாஸனத்தால் அடையப்படும் சிறந்த பலனேப்பற்றிக் கூறி இதை உபஸம்ஹாரம் செய்தீர்கள்.

ஸத்யாயனர் :— ப்ராணன் என்ற ஒரே தேவதை தான் வாக், அக்னி முதலான பல தேவதைகளாகத் தோன்றுகிருன். ஆகவே அந்த பிராணனேத் தனது ஆத்மாவாக உபாஸிப்பவன் ஸர்வ தேவதாத்ம பாவத்தை அடைகிருன் என்று கூறி முடித்தீர்கள்.

ஐதரேயர் :— அவைகள் எல்லாம் மந்த அதிகாரிகளே உத்தேசித்துச் சொன்னவை. கேவலமான ஆத்ம ஞானமே மோக்ஷஸாதனம் என்று இப்போது உபதேசிக்கின்றேன். கவனமாகக் கேளுங்கள்.

ओं आत्मा वा इदमेक एवाग्र आसीत् नान्यत्किञ्चन मिषत् । स ईक्षत लोकान्नु सृजा इति । स इमाल्लोकानसृजत ॥

ஓம் ஆத்மா வா இதமேக ஏவாக்ரே ஆஸீத்। நாந்யத்கிஞ்சந மிஷத்। ஸ ஈக்ஷத லோகாந்நு ஸ்ருஜா இதி। ஸ இமான்லோகாநஸ்ருஜத।

ஆதியில் இது எல்லாம் ஒரே ஆத்மாவாகவே இருந்தது. வேறு எதுவும் இல்லை. உலகங்களைச் சிருஷ்டிக்க அது விரும்பியது. அது இவ்வுலகங்களை சிருஷ்டித்தது.

ஆசுவலாயனர் :— ருக்கின் பதவுரை தெரிந்தது. விளக்கவுரை கூறவேண்டுகிறேன் ஸ்வாமீ !

ஐதரேயர் :— ஆதி என்பதற்கு ஸிருஷ்டிக்கு முன் என்று அர்த்தம். பிரபஞ்சத்தின் ஸிருஷ்டியும் பிரளயமும் அனாதிகாலமாக மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே ஒரு ஸிருஷ்டி முடிந்து மறு ஸிருஷ்டி ஆரம்பிப்பதற்கு முன் நடுவில் பிரளயகாலத்தில் எல்லாம் ஆத்மாவாக இருந்தது என்று கருத்து. இப்போது நாமரூபங்களுடன் விகாரப்பட்டு காண்கின்ற இந்த ஜகத்தானது ஸிருஷ்டிக்கு முன்பு ஒரே ஆத்மாவாகத்தான் இருந்தது. ஆத்மாவைத் தவிர வேறொன்றுமில்லை. அந்த ஆத்மா லோகங்களை அதாவது பெயர், வடிவம் உள்ள பொருள்களை சிருஷ்டிப்போமென்று நினைத்தது. நினைத்தமாத்திரத்தில் இப்பிரபஞ்சம் முழுவதையும் ஸிருஷ்டித்தது.

ஆசுவலாயனர் :— ஸத்குருவே, ஒரு சந்தேகம். "ஆதியில் ஒரே ஆத்மாவாக இருந்தது" என்று கூறினீர்களே. அப்படியானால் இப்போது அப்படி இல்லையா ?

ஐதரேயர் :— ஆதியிலும் ஒன்றாகவே இருந்தது. இப்போதும் அப்படியே ஒரே ஆத்மாவாகத்தான் இருக்கிறது. பின்னாலும் அப்படியேதான் இருக்கப்

போகின்றது. காலங்களால் மாறப்போவதில்லை. ஆனாலும் கொஞ்சம் விசேஷம் இருக்கிறது.

ஸத்யாயனர் :— அதுவென்ன ?

ஐதரேயர்:— சிருஷ்டிக்கு முன்பு நாமரூப பேதங்கள் வியக்தமாகவில்லை. அப்போது ஆத்மா என்ற ஒரே சொல்தான். ஒரே அறிவுதான். ஸ்ருஷ்டிக்குப்பின் ஆத்மசப்த-ஞானங்களுடன் வேறு பல சப்தங்களும் அறிவுகளும் ஏற்பட்டுவிட்டன.

ஆசுவலாயனர் :— உதாரணம் கூறி விவரித்தால் நன்ருகப் புரிந்துகொள்வோம். கிருபை செய்ய வேண்டும் ஸ்வாமீ !

ஐதரேயர் :— குழந்தைகளே, உதாரணம் கூறுகிறேன் கவனமாகக்கேளுங்கள். கடலில் நுரை முதலியவை ஏற்படுவதற்கு முன் ஒரே ஜலமாகத்தான் இருந்தது அப்பொழுது ஜலம் என்று மட்டும்தான் சொல்கிரும். அப்படியேதான் அறிந்துகொள்கிருேம். பின்னுல் ஜலம், நுரை என்று பலவாருகப் பார்க்கிருேம். அப்படியே சொல்கிருேம். இதில் என்ன வேடிக்கை என்ருல் அந்த நுரை முதலியவற்றை ஜலத்தைக் காட்டிலும் வேறுபடுத்திச் சொல்கிருேம். அப்படியே பார்க்கிருேம். உண்மையில் இவை ஜலத்தைக்காட்டிலும் வேரு? இல்லவே இல்லை. இவை முன்னுலும் ஜலம்தான் இப்பொழுதும் ஜலம்தான், பின்னுலும் ஜலம்தான். ஆனுலும் இவை ஜலமாக இருந்தாலும் இப்பொழுது மட்டும் நுரையாகவும் தனியாகக் காக்ஷியளிக்கிறது. இதேபோல பிரபஞ்சமும் முன்னுல் ஆத்மமாத்ரமாக இருந்தது நாமரூபங்கள் வேருகத்தோன்றவில்லை. இப்பொழுது வேருன பிரபஞ்சமாக அக்ஞானத்தால் தோன்றுகிறது. உண்மையில் இப்பொழுதும் பிரபஞ்சம் ஆத்மமாத்ரம்தான் முக்காலத்திலும் ஆத்மா ஒன்றே வாஸ்தவமாக உள்ளது.

ஸத்யாயனர் :— குருநாதரே, கேட்கக்கேட்க அற்புதமாயிருக்கிறது. தொடர்ந்து உபதேசியுங்கள்.

ஐதரேயர்: — अम्भो मरीचिर्मरमापोऽदोऽम्भः परेण दिवं द्यौः प्रतिष्ठा अन्तरिक्षं मरीचयः पृथिवी मरो या अधस्तात्ता आपः ॥

அங்ஙனம் ஆலோசித்து சிருஷ்டித்த உலகங்கள் பின்வருமாறு. (1) அம்பஸ்ஸு (2) மரீசி (3) மர லோகம் (4) ஆபஸ். ஆகாசம் முதலான பஞ்ச பூதங்களை முதலில் சிருஷ்டித்துப் பிறகு அவைகளைக் கொண்டு இவ்வுலகங்களை சிருஷ்டித்தது. புத்திமானாகிய தச்சன், கொத்தன் முதலியவர் வீடுகள் கட்டும்போது இந்த மாதிரி கட்டவேண்டுமென்று யோசித்துத் தீர்மானம் செய்துகொண்டு கட்டுவதுபோல, ஆத்மாவும் உலகங்களைத் தோற்றுவித்தது. இது அகஸ்மாத்தாக ஏற்பட்டதல்ல.

ஆசுவலாயனர் :— வீடுகள் கட்டும் விஷயத்தோடு இதை ஒப்பிடலாமா? தச்சனும் கொத்தனும் செங்கல், சுண்ணும்பு மரக்கட்டை மற்றும் வேறு பல ஸாமக்ரி களைக்கொண்டு வீடு கட்டுகிறார்கள். ஆத்மாவின் சிருஷ்டித் தொழிலுக்கோ வேறு உபாதான காரணம் ஒன்றுமில்லையே, ஸ்வாமீ !

ஐதரேயர் :— அதில் தோஷமொன்றுமில்லை. சிலந்தி பூச்சி வலை பின்னுவதுபோல் தானே நிமித்த காரண மாகவும் உபாதானகாரணமாகவும் ஆத்மா விளங்கு கிறது. தவிரவும் ஒரு மந்திரவாதியைப் போல் மாயா ஜாலம் காட்டியதாகவும் கொள்ளலாம்.

ஸாத்யாயனர் :— ஆத்மா சிருஷ்டித்ததாகக் கூறும் உலகங்களைப் பற்றி அறியவிரும்புகிறோம். ரொம்பவும் ஆச்சரியமாக இருக்கிறது.

ஐதரேயர் :— அம்பஸ்ஸு என்பது ஸுவர்க்க லோகத்தையும் அதன் மேலுள்ள மஹஸ், ஜன, தபஸ், ஸத்யலோகங்களையும் குறிக்கும் மரீசி என்பது சூரிய கிரணங்களால் வியாபிக்கப்பட்ட அந்தரிக்ஷலோகம். பூலோகத்தையே மரலோகம் என்று குறிக்கிறது.

ஏனெனில் ஜீவர்கள் அடிக்கடி மரணமடைவதால் அந்தப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆபஸ் என்பது ஜலஸம்பந்தமான பூமிக்குக் கீழ்ப்பட்ட லோகங்களை குறிக்கும்.

ஸத்யாயனர் :—ஸ்வாமீ! சிருஷ்டிக்குப்பின் என்ன நடந்தது?

ஐதரேயர் :—स ईक्षतेमे नु लोका लोकपालान्नु सृजा इति । सोऽद्भय एव पुरुषं समुद्धृत्यामूर्छयत् ॥

ஸ ஈக்ஷத இமே நு லோகா லோகபாலான் நு ஸ்ருஜா இதி | ஸோZத்ப்ய ஏவ புருஷம் ஸமுத்த்ருத்ய அமூர்ச்சயத் ||

பிறகு சிருஷ்டித்த லோகங்களைக் கருணையோடு நோக்கி ஆலோசித்தது. நம்மால் உண்டாக்கப்பட்ட லோகங்கள் பரிபாலிக்கப்படாவிடின் நாசமுறும் ஆகவே லோகபாலர்களைச் சிருஷ்டிப்போமென்று யோசித்தது. அப்படி ஆலோசித்து ஜலத்திலிருந்து அதாவது பஞ்சபூதங்களி ஜலத்தை பிரதானமாகக்கொண்ட னின்றும் ஒரு புருஷாகாரமாக திரட்டி விராட் புருஷனை உண்டாக்கியது.

ஆசுவலாயனர் :—ஸத்குருவே, கற்பனைக் காவியத்தைவிட கேட்க இன்பமாயிருக்கிறதே. மேலும் தொடர்ந்து கூறுங்கள்.

ஐதரேயர் :—எப்படி குயவன் பூமியிலிருந்து ஈரமான மண்ணை எடுத்து பிண்டமாகச் செய்வானோ அதுபோல, ஆத்மாவும் பஞ்ச பூதங்களிலிருந்து விராட் புருஷனை ஸிருஷ்டித்தது.

तमभ्यतपत्तस्याभितप्तस्य मुखं निरभिद्यत यथाण्डम्। मुखाद्वाग्वाचोऽग्निर्नासिके निरभिद्येतां नासिकाभ्यां प्राणः प्राणाद्वायुरक्षिणी निरभिद्येतामक्षिभ्यां चक्षुश्चक्षुष आदित्यः कर्णौ निरभिद्येतां कर्णाभ्यां

श्रोत्रं श्रोत्राद् दिशस्त्वङ् निरभिद्यत त्वचो लोमानि लोमभ्य ओषधिवनस्पतयो हृदयं निरभिद्यत हृदयान्मनो मनसश्चन्द्रमा नाभिर्निरभिद्यत नाभ्या अपानोऽपानान्मृत्युः शिश्नं निरभिद्यत शिश्नाद्रेतो रेतस आपः ॥

தமப்யதபத் தஸ்யாபிதப்தஸ்ய முகம் நிரபித்யத யதா அண்டம் l முகாத் வாக் வாசோZக்நிர் நாஸிகே நிரபித்யேதாம் நாஸிகாப்யாம் ப்ராண: ப்ராணாத் வாயு: அக்ஷிணீ நிரபித்யேதாம் அக்ஷிப்யாம் சக்ஷு: சக்ஷுஷ ஆதித்ய: கர்ணௌ நிரபித்யேதாம் கர்ணாப்யாம் ச்ரோத்ரம் ச்ரோத்ராத் திச: த்வக் நிரபித்யத த்வசோ லோமாநி லோமப்ய ஓஷதிவநஸ்பதயோ ஹ்ருதயம் நிரபித்யத ஹ்ருதயாத் மநோ மநஸஸ்சந்த்ரமா நாபிர் நிரபித்யத நாப்யா அபாந: அபாநாத் ம்ருத்யு: சிச்நம் நிரபித்யத சிச்நாத் ரேதோ ரேதஸ ஆப: ll

அப்பிண்டத்தை உத்தேசித்துத் தவம் செய்தது, தவம் என்ருல் அதைக் குறித்து ஸங்கல்பம் செய்தது என்று பொருள். ஏனென்ருல் ஆத்மாவின் தவம் ஞானமயம் தானே. அந்த ஸங்கல்ப ரூபமான தவத்திஞல் அந்த பிண்டத்துக்கு முகம் உண்டாயிற்று. பக்ஷிகளின் முட்டை வெடிப்பது போல் விராட் பிண்டத்தில் முகமென்னும் த்வாரம் ஏற்பட்டது. அந்த முகத்தினின்று வாக் இந்திரியம் உண்டாயிற்று. அதனின்று அக்னி தேவதை உண்டாயிற்று. பிறகு நாசிகள் உண்டாயின. அவைகளிலிருந்து க்ராணேந்திரியம் உண்டாயிற்று. அதினின்றும் எங்குமுள்ள வாயு உண்டானது. பிறகு - கண்கள், அவைகளிலிருந்து சக்ஷுரிந்திரியம்- அதிலிருந்து ஆதித்ய தேவதை உண்டாயிற்று பின் காதுகள்-சுரோத்திரேந்திரியம், திக்தேவதை: பின்தோல் லோமங்களுக்கு ஆதாரமான ஸ்பர்சனேந்திரியம்-ஓஷதி வனஸ்பதிகள், பிறகு இருதயம் - மனது - சந்திர தேவதை. பிறகு நாபி (தொப்பூழ்)-பாயுவிந்திரியம்-மிருத்யு தேவதை பிற்பாடு

சிச்னம்-உபஸ்தேந்திரியம்-அப் தேவதை அதாவது வருணன். இவ்வாறு இந்திரியங்கள். அவைகளுக்கு ஆதாரமான ஸ்தானங்கள் (கோளகங்கள்), அபிமானி தேவதைகள் இவற்றை ஸிருஷ்டித்தார்.

குழந்தைகளே, இத்துடன் இன்றைய பாடம் நிறைவு பெறுகின்றது. நான் சொன்னவைகளை நன்ருகச் சிந்தனை செய்துகொண்டு வாருங்கள். பாடம் கேட்டால் மட்டும் போதாது. நன்ருக மனதில் மனனம் செய்து கொள்ளவேண்டும். அது மிகவும் முக்கியம்.

(சிஷ்யர்கள் எழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கிருர்கள். மகரிஷி ஆசீர்வாதம் செய்கின்ருர்.)

(திரை விழுகிறது)

காட்சி 3

(திரை விலக)

[முன் காட்சி போலவே குருவும் சீடர்களும் உட்கார்ந்து உரையாடல் நடக்கின்றது]

ஐதரேயர் :— ஸௌம்யர்களே, நேற்றுப்படித்தது ஞாபகமிருக்கிறதா ? ஆசுவலாயனு, சொல், பார்க்கலாம்.

ஆசுவலாயனர் :— ஸத்குருவே, ஆதியில் ஆத்மா தான் ஒருவனுகவே, வேருெரு பொருளுமின்றி இருந்ததும், பின்னுல் யோசித்து ஜகத்தை சிருஷ்டித்ததும், அதைப்பரிபாலிக்க லோகபாலரை உத்பத்தி செய்ததும் விளக்கப்பட்டன.

ஸத்யாயனர்:— ஸ்வாமி ! புலன்களும், பொறிகளும் அவைகளின் அதிஷ்டான தேவதைகளும் சிருஷ்டிக்கப் பட்ட விதம் பற்றிக் கூறினீர்கள்.

ஆசுவலாயனர் :— இந்திரிய கோளகங்களும் இந்திரியங்களும், அதன் தேவதைகளும் உண்டான

பின் நடந்தது என்ன? மனித சிருஷ்டி எப்படி உண்டாயிற்று? விவரிக்க வேண்டுகின்றேன்.

ஸத்யாயனர் :—எனக்கும் அதைப்பற்றி அறிய ஆவலாக இருக்கிறது, குருநாதரே.

ஐதரேயர்:—குழந்தைகளே, அவசரம் வேண்டாம், படிப்படியாக அனைத்தும் சொல்லுகிறேன்.

एता देवताः सृष्टा अस्मिन् महत्यर्णवे प्रापतन् । तमशनायापिपासाभ्यामन्ववार्जत् । ता एनमब्रुवन्नायतनं नः प्रजानीहि । यस्मिन् प्रतिष्ठिता अन्नमदामेति ॥

தா ஏதா தேவதா: ஸ்ருஷ்டா அஸ்மின் மஹத்யர்ணவே ப்ராபதன் । தமசநாயாபிபாஸாப்யாமன் வவார்ஜத் । தா ஏநமப்ருவன் ஆயதநம் ந: ப்ரஜாநீஹி । யஸ்மின் ப்ரதிஷ்டிதா அந்நமதாமேதி ।

மேற்கூறிய பிரகாரம் சிருஷ்டிக்கப்பட்ட அக்னி, வாயு முதலிய தேவதைகள் மஹத்தான ஸம்ஸார ஸாகரத்தில் விழுந்தார்கள். பிறகு அந்த புருஷாகாரமான பிண்டத்துடன் பசி தாகம் இவைகள் சேர்த்து வைக்கப்பட்டன. முதலில் ஸிருஷ்டிக்கப்பட்ட காரணமான பிண்டத்திற்கு பசி தாகம் ஏற்பட்டதால் அதன் கார்யமான அக்னி முதலான தேவதைகளுக்கும் பசி தாகம் உண்டாயிற்று அவர்கள் ஆத்மாவிடம் கேட்டார்கள். 'எங்களுக்கு ஆயதனம் அதாவது இருந்து அன்னம் உண்ண ஒரு இடம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். நாங்கள் அங்கே இருந்து அன்னத்தை சாப்பிட்டுப் பசி தாகம் தீர்த்துக்கொள்வோம்' என்று.

ஆசுவலாயனர் :— தேவதைகள் விரும்பியது நியாயம் தானே. பெற்றுவிட்டால் மட்டும் போதுமா? போஷித்து வளர்க்கவேண்டிய பொறுப்பும் உடன் உண்டாகிறதே.

ஸத்யாயனர் :—ஸம்ஸாரஸாகரத்தில் தேவதைகள் விழுந்ததாகக் கூறினீர்களே. ஸம்ஸாரஸாகரத்தைப் பற்றியும் விவரமாகக் கூறவேண்டுகிறேன் ஸ்வாமீ!

ஐதரேயர் —ஸமுத்திரத்தின் லக்ஷணங்கள் என்ன? தெரியுமானால் கூறுவாய்.

ஸத்யாயனர் :—நான் ஸமுத்திரமே பார்த்ததில்லை. என் நண்பர் மேற்கு ஸமுத்திரக்கரையிலிருந்து வந்திருப்பதால் அவருக்கு நன்றாகத் தெரிந்திருக்கும்.

ஐதரேயர் :—குழந்தாய் ஆசுவலாயனா! தெரிந்த வரை கடலின் லக்ஷணங்களைக் கூறுவாய்.

ஆசுவலாயனர் :—கடல் மிகவும் ஆழமான ஜலத்துடன் கூடியது. திமிங்கிலம், முதலை முதலான துஷ்ட ஜந்துக்கள் அதில் இருக்கும். இங்கிருந்து பார்ப்பவர்களுக்கு முடிவு அதாவது அக்கரை தெரியாது. பெருங் காற்று அடித்துக்கொண்டிருக்கும். அலைகள் வானளாவ உயர்ந்து பெருங்கூச்சலுடன் அடித்துக்கொண்டிருக்கும் சிறந்த ஓடங்களைப் பார்க்கலாம். கடலைக்கடக்க விரும்பும் மனிதர்கள் கட்டு சாதம் வைத்துக்கொண்டு ஓடங்களில் ஜாக்கிரதையாக பிரயாணம் செய்வதையும் பார்த்திருக்கிறேன்.

ஸத்யாயனர்:—நண்பர் கூறியதிலிருந்து ஸாகரத்தைப்பற்றி ஒருவாறு அறிந்துகொண்டேன். ஸம்ஸாரத்திலும் இவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றனவா? ஸ்வாமீ! இரண்டிற்குமுள்ள ஒற்றுமைகளைக் கூற வேண்டுகிறேன்.

ஐதரேயர் :—ஸௌம்யா! கவனமாய்க்கேள். ஸம்ஸாரத்திலும், அவித்யை, காமம், கர்மா இவைகளாலுண்டான துக்கமாகின்ற ஜலம் இருக்கின்றது. ரோகம், ஜரை, மரணம் இவைகளே முதலைகள். ஸம்ஸாரம் அநாதி. அந்தமில்லாதது. ஞானம் பெறுதவர் இதைத்தாண்டி அக்கரை போகமுடியாது.

பஞ்சேந்திரியங்களின் விஷயங்களில் உண்டாகும் ஆசையேபெரும் காற்று. அதனுலுண்டாகும் துன்பங்கள் அலைகள். துன்பப்படும் பிராணிகளின் அழுகைக் குரல்கள் பேரிரைச்சல். ஸத்யம், நேர்மை, தானம், தயை, அஹிம்ஸை, அடக்கம் முதலான ஆத்மகுணங் களாகிற கட்டு சாதத்தைக் கைக்கொண்டு ஞானம் என்னும் தோணியில் ஏறியமர்ந்து ஸத்ஸங்கம், ஸர்வ த்யாகம் என்னும் நல்வழியில் சென்ருல் ஸம்ஸார மென்னும் இப்பெரிய கடலைக்கடந்து மோக்ஷமென்னும் அக்கரையை அடையலாம்.

ஸத்யாயனர் :—ஸத்குருவே, மேலும் தொடர்ந்து உபதேசியுங்கள்.

ஐதரேயர் :— ताभ्यो गामानयत् ता अब्रुवन् न वै नोऽयमलमिति । ताभ्योऽश्वमानयत् ता अब्रुवन् न वै नोऽयमलमिति ॥

தாப்யோ காமாநயத் தா அப்ருவன் ந வை நோ-ऽயமலமிதி I தாப்யோऽச்வமாநயத் தா அப்ருவன் ந வை நோऽயமலமிதி II

அவர்களுக்கு ஆத்மா பசுவின் உருவைப்போல் ஒரு பிண்டத்தை சிருஷ்டித்துக் காட்டியது. தேவதைகள் இது எங்களுக்கு போதியதல்லவென்று சொன்னுர்கள். பிறகு ஒரு குதிரையைச் சிருஷ்டித்து காண்பித்தபோதும் இதுவும் போதாதென்ருர்கள்.

ஆசுவலாயனர்:-ஸ்வாமீ! பசுவின் உருவத்தையும் குதிரையின் உருவத்தையும் தேவதைகள் ஏன் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்கள்?

ஐதரேயர்:—அதற்குக் காரணம் யோனி வித்தியா சம்தான். ஒவ்வொருவரும் தம் தம் யோனி வடிவத் தையே விரும்புகின்றனர். ஆகவே ஆத்மாவும் அவர் களுடைய கருத்தை அறிந்துகொண்டு அவர்களுக்கு இருப்பிடத்தை உண்டாக்கிக்கொடுத்தது.

ताभ्यः पुरुषमानयत् ता अब्रुवन् सुकृतं बतेति । पुरुषो वाव सुकृतम् । ता अब्रवीत् यथायतनं प्रविशतेति ॥

தாப்ய: புருஷமாநயத் தா அப்ருவன் ஸுக்ருதம் பதேதி । புருஷோ வாவ ஸுக்ருதம் । தா அப்ரவீத் யதாயதநம் ப்ரவிசதேதி ।

அதன் பிறகு அந்த தேவதைகளுக்கு புருஷ உருவத்தை (மனித வடிவில்) உண்டாக்கிக் கொடுத்த போது அவர்களும் இது போதுமென்று சொன்னார்கள். இந்த வடிவம் நன்ருகச்செய்யப்பட்டிருக்கிறது. நிச்சய மாக இந்த புருஷாகாரம் ஸுந்தரமாக இருக்கின்றது. "அப்படியானல் அவரவருக்குத்தக்க இடத்தில் பிரவேசியுங்கள்" என்று ஆத்மா கூறியது.

ஸத்யாயனர் :— தேவதைகள் **सुकृतं** (ஸுக்ருதம்) என்று சொன்னார்கள். அதன் பொருளைக் கொஞ்சங்கூட விளக்கமாகக் கூறவேண்டும்.

ஐதரேயர் : — வத்ஸா! கவனமாகக் கேள். தங்களுடைய சொந்தமான யோனியைப்பார்த்தவுடன் தேவதைகள் துக்கத்தை விட்டு மகிழ்ச்சியடைந்து "இந்த அதிஷ்டானம் அழகாக செய்யப்பட்டிருக்கிறது" என்று கூறினார்கள். புண்ணியகர்மவசத்தினலேயே இத்தகைய புருஷாகாரம் கிடைத்திருக்கிறது. இந்த புருஷ சரீரத்தைக்கொண்டுதான் எல்லாப் புண்யங்களையும் ஸம்பாதிக்க முடியும். ஆகையால் புருஷ சரீரமே ஸுக்ருதம். மேலும் ஸுகிருதம் என்ற பதத்திற்கு ஸ்வயமாகவே செய்யப்பட்டது என்றும் பொருள் கொள்ளலாம். ஈசுவரன் தானுகவே செய்து கொடுத்தது. ஆத்மாவின் கட்டளைப்படி அக்னி முதலிய தேவதைகள் அவரவருக்குத் தகுந்த ஆயதனங்களில் பிரவேசித்தார்கள்.

ஆசுவலாயனர் : - அந்த தேவதைகள் பிரவேசித்த இடங்களைப்பற்றி விவரமாகக் கூறவேண்டுகின்றேன்.

ஐதரேயர்:— சொல்லுகிறேன். கவனமாகக் கேளுங்கள்.

अग्निर्वाग्भूत्वा मुखं प्राविशत् वायुः प्राणो भूत्वा नासिके प्राविशत् आदित्यश्चक्षुर्भूत्वाक्षिणी प्राविशत् दिशः श्रोत्रं भूत्वा कर्णौ प्राविशन् ओषधिवनस्पतयो लोमानि भूत्वा त्वचं प्राविशन् चन्द्रमा मनो भूत्वा हृदयं प्राविशत् मृत्युरपानो भूत्वा नाभिं प्राविशत् आपो रेतो भूत्वा शिश्नं प्राविशन् ॥

அக்நிர் வாக் பூத்வா முகம் ப்ராவிசத் வாயுः ப்ராணோ பூத்வா நாஸிகே ப்ராவிசத் ஆதித்யः சக்ஷுர் பூத்வா அக்ஷிணீ ப்ராவிசத் திசः ச்ரோத்ரம் பூத்வா கர்ணௌ ப்ராவிசன் ஓஷதிவநஸ்பதயோ லோமாநி பூத்வா த்வசம் ப்ராவிசன் சந்த்ரமா மநோ பூத்வா ஹ்ருதயம் ப்ராவிசத் ம்ருத்யுரபாநோ பூத்வா நாபிம் ப்ராவிசத் ஆபோ ரேதோ பூத்வா சிச்நம் ப்ராவிசன் ।

ஆத்மாவின் கட்டளையை சிரசா வகித்து, சக்கரவர்த்தியின் உத்தரவை அனுஸரித்து சேனைத்தலைவர்கள் நகரத்தில் பிரவேசிப்பதுபோல் தேவதைகள் புருஷ சரீரத்தில் பிரவேசித்தார்கள். அக்னி வாக் ரூபமாய் முகத்திலும், வாயு பிராணனாக நாசியிலும், ஆதித்யன் சக்ஷுரிந்திரியமாகக் கண்களிலும். திக் தேவதைகள் ச்ரோத்ரேந்திரியமாகக் காதுகளிலும் ஓஷதி வனஸ்பதிகள் ஸ்பர்சேந்திரியமாக தோலிலும், சந்திரன் மனஸாக இருதயத்திலும், மிருத்யு அபானனாக நாபியிலும் ஜலதேவதை உபஸ்தேந்திரியமாக சிச்னத்திலும் பிரவேசித்தார்கள். இப்படியாக அந்த அந்த இந்திரியங்களின் அபிமானி தேவதைகள் அதனதன் அதிஷ்டானமான அங்கங்களை அடைந்தார்கள். அங்கு இருந்து செயல்பட்டார்கள்.

ஸத்யாயனர்:— அத்புதமாக இருக்கிறது. அப்புறம் என்ன நடந்தது. விவரமாகக் கூறுங்கள்.

ஐதரேயர் :—இவ்விதமாக தேவதைகள் ஆச்ரய ஸ்தானங்களை அடைந்த பிறகு பசியும் தாகமும் சேர்ந்து கொண்டு ஒரு வேண்டுகோள் விடுத்தது.

ஆச்வலாயனர் :—ஸ்வாமீ! அவைகள் என்ன வேண்டுமென்று கேட்டன?

ஸத்யாயனர் :—தங்களுக்கும் ஆச்ரயஸ்தானம் வேண்டும் என்று தான் கேட்டிருக்கும்.

ஐதரேயர் :—குழந்தாய், நீ சொல்வது சரிதான்.

तमशनायापिपासे अब्रूतामावाभ्यामभिप्रजानीहीति। ते अब्रवी-देतास्वेव वां देवतास्वाभजामि एतासु भागिन्यौ करोमीति । तस्मा-द्यस्यै कस्यै च देवतायै हविर्गृह्यते भागिन्यावेवास्यामशनायापिपासे भवतः ॥

தமசநாயாபிபாஸே அப்ரூதாம் ஆவாப்யாமபிப்ரஜாநீஹீதி। தே அப்ரவீத் ஏதாஸ்வேவ வாம் தேவதாஸு ஆபஜாமி ஏதாஸு பாகின்யௌ கரோமீதி। தஸ்மாத் யஸ்யை கஸ்யை ச தேவதாயை ஹவிர் க்ருஹ்யதே பாகின்யாவேவ அஸ்யாமசநாயாபிபாஸே பவத: ॥

பசி தாகம் இவ்விரண்டும் எங்களுக்கு இருப்பிடம் ஏற்படுத்தவேண்டுமென்று ஆத்மாவைக் கேட்டன. அதற்கு ஆத்மாவும் "இந்த தேவதைகளுடன் சேர்ந்து இருங்கள். இந்த தேவதைகளுக்கு கிடைக்கும் ஆகாரத்தில் உங்களுக்கும் பாகமுண்டு" என்று கூறியது. ஆதலால் எந்த தேவதைக்கு ஹவிஸ் கொடுக்கப்பட்டாலும் அதில் பசி, தாகம் இவைகளுக்கும் பங்கு உண்டு.

ஸத்யாயனர் :—பொருள் நன்றாக விளங்கவில்லை. தெளிவாகக் கூறவேண்டும் ஸத்குருவே.

ஐதரேயர் :— ஸௌம்யா! கவனமாய்க்கேள். பசியும் தாகமும் வேறொரு சேதன வஸ்துவுடன் சேராமல்

தனித்திருக்கமுடியாது. ஆகவே அவைகள் தேவதைகளுடன் சேர்த்து வைக்கப்பட்டது. தேவதைகளுடன் சேர்ந்து அன்னத்தைப் பெறவும் வழி செய்யப்பட்டது. அதாவது பசி, தாகம் என்ற உணர்ச்சிகள் இந்திரிய தேவதைகளுக்கு ஏற்பட்டு அவர்கள் அன்னத்தைக் கிரஹிக்கிறார்கள்.

ஆசுவலாயனர் :— ஸ்வாமீ, மாத்யான்ஹிக காலம் நெருங்கிவிட்டதே! நேரம் போனதே தெரியவில்லை.

ஸத்யாயனர் :— ஆமாம் நண்பரே, கற்பனைக்கதை கேட்பதுபோல் சுவாரஸியமாக இருந்ததால் சமயம் போனதே தெரியவில்லை.

ஐதரேயர் :— சிஷ்யர்களே! நல்லவேளையாக ஞாபகப்படுத்தினீர்கள். இத்துடன் இன்றைய பாடத்தை நிறுத்திக்கொள்ளுவோம்.

(திரை விழுகிறது)

காட்சி 4

(திரை விலக)

[ஸிந்துநதி தீரத்தில் சமவெளியில் வடவிருக்ஷத்தின் கீழ் மகரிஷீ ஐதரேயரும், சிஷ்யர்களும் உட்கார்ந்திருக்கின்றனர். சாந்திபாடத்திற்குப்பின் உரையாடல் தொடங்குகிறது.]

ஆசுவலாயனர் :— ஸத்குருவே, தொடர்ந்து உபதேசிக்கவேண்டுகின்றேன்.

ஸத்யாயனர் :— ஸ்வாமீ, பிரபுக்கள் தம்மவர்களிடம் அன்புகாட்டி அருள் செய்வதுபோல், ஆத்மாவும் தன் படைப்பிடம் அன்பு காட்டவில்லையா? லோகத்துக்கும் லோகபாலருக்கும் எவ்விதமாக அனுக்கிரகம் செய்தது? கற்பனைக் கதைகளைவிட வேதக்கதைகள் சுவாரஸ்யமாக இருக்கின்றனவே. மேலே ஆத்மா என்ன செய்தது?

ஐதரேயர் :— வத்ஸர்களே, கூறுகின்றேன். கவனமாகக்கேளுங்கள்.

स ईक्षत इमे नु लोकाश्च लोकपालाश्च अन्नमेभ्यः सृजा इति ॥

ஸ ஈக்ஷத இமே நு லோகாஸ்ச லோகபாலாஸ்ச அந்நமேப்ய: ஸ்ருஜா இதி ॥

ஆத்மா மறுபடியும் சிந்தித்தது. இவ்விதம் நம்மால் லோகமும் லோக பாலரும் சிருஷ்டிக்கப்படுகின்றனர். பசி தாகங்களையும் ஏற்படுத்தியிருக்கின்ருேம். இவர்கள் அன்னமில்லாமல் எங்ஙனம் ஜீவிக்க முடியும்? ஆகையினுல் அவர்களின் உபயோகத்துக்காக அன்னத்தைச் சிருஷ்டிப்போமென்று.

ஆசுவலாயனர் :— சரியான யோஜனை தான். எவ்விதமான அன்னங்களை உண்டாக்கியது?

ஐதரேயர் :— सोऽपोऽभ्यतपत् ताभ्योऽभितप्ताभ्यो मूर्तिरजायत । या वै सा मूर्तिरजायतान्नं वै तत् ॥

ஸோZபோZப்யதபத் தாப்யோZபிதப்தாப்யோ மூர்த்திரஜாயத । யா வை ஸா மூர்த்திரஜாயத அந்நம் வை தத் ॥

ஜலத்தை நோக்கி ஸங்கல்பமாகிற தவத்தைச் செய்தவுடன் அபிதப்தமான ஜலத்திலிருந்து ஒரு உருவம் உண்டாயிற்று. அது கனரூபமாயும் கரங்களால் எடுக்கத்தக்கதாயும் சராசர ரூபமாகவுமிருந்தது அதுவே அன்னம்.

ஆசுவலாயனர் :— அப்புறம் நடந்தது என்ன?

ஐதரேயர் :— तदेनदभिसृष्टं पराङत्यजिघांसत् तद्वाचा अजिघृक्षत् तन्नाशक्नोद्वाचा ग्रहीतुम् । स यद्धैनद्वाचाग्रहैष्यदभिव्याहृत्य हैवान्नमत्रप्स्यत् ॥

ததேநதபிஸ்ருஷ்டம் பராங்த்யஜிகாம்ஸத் தத் வாசாஜிக்ருக்ஷத் தந்நாசக்நோத் வாசா க்ரஹீதும் । ஸ யத்தைநத் வாசாக்ரஹைஷ்யத் அபிவ்யாஹ்ருத்ய ஹைவாந்நமத்ரப்ஸ்யத் ॥

இங்ஙனம் உண்டாக்கப்பட்ட அன்னம் லோகபாலரின் முன்னின்றும் பின்பட்டு ஓடத்தொடங்கியது. அப்போது ஆதியில் சிருஷ்டிக்கப்பட்ட லோகபாலர் வாய்பேச்சால் அன்னத்தை கிரஹிக்க உத்தேசித்தார். முடியவில்லை. அது நடந்திருந்தால் ஒருவன் அன்னத்தைப்பற்றிப் பேசுவதினாலேயே திருப்தியடையக்கூடும்.

ஸத்யாயனர் :—அன்னம் பின்பட்டு ஓடக்காரணமென்ன ?

ஐதரேயர் :—அன்னம் நினைத்தது "நம்மை இவர்கள் பக்ஷித்துவிடுவார்கள். ஆகையால் இவர்கள் நமக்கு மிருத்யு. ஆகவே பிராணன் தப்பவேண்டுமானால் பலாயனம் செய்யவேண்டும்" இவ்வாறு எண்ணிக்கொண்டு பூனையைக்கண்டு பயந்து எலிகள் ஓடுவதுபோல் அன்னமும் ஓட நினைத்தது.

ஆசுவலாயனர் :—அன்னத்தால் தப்பமுடிந்ததா ? இல்லையேல் லோகபாலர் பிடித்துவிட்டார்களா ?

ஐதரேயர் :— तत्प्राणेनाजिघृक्षत्तन्नाशक्नोत्प्राणेन ग्रहीतुम् । स यद्धैनत्प्राणेनाग्रहैष्यदभिप्राण्य हैवान्नमत्रप्स्यत् । तच्चक्षुषाजिघृक्षत्तन्नाशक्नोच्चक्षुषा ग्रहीतुम् स यद्धैनच्चक्षुषाग्रहैष्यद् दृष्ट्वा हैवान्नमत्रप्स्यत् । तच्छ्रोत्रेणाजिघृक्षत्तन्नाशक्नोच्छ्रोत्रेण ग्रहीतु । स यद्धैनच्छ्रोत्रेणाग्रहैष्यच्छ्रुत्वा हैवान्नमत्रप्स्यत् ॥

தத் ப்ராணேனஜிக்ருக்ஷத் தத் நாசக்நோத் ப்ராணேந க்ரஹீதும் l ஸ யத்தைநத் ப்ராணேநாக்ரஹைஷ்யத் அபிப்ராண்ய ஹைவாந்நமத்ரப்ஸ்யத் l தத் சக்ஷுஷாஜிக்ருக்ஷத் தத் நாசக்நோத் சக்ஷுஷா க்ரஹீதும் l ஸ யத்தைநத் சக்ஷுஷாக்ரஹைஷ்யத் த்ருஷ்ட்வா ஹைவாந்நமத்ரப்ஸ்யத் l தத் ச்ரோத்ரேணஜிக்ருக்ஷத் தத் நாசக்நோத் ச்ரோத்ரேண க்ரஹீதும் l ஸ யத்தைநத் ச்ரோத்ரேணக்ரஹைஷ்யத் ச்ருத்வா ஹைவாந்நமத்ரப்ஸ்யத் ll

பின் லோகபாலர் அன்னத்தை பிராணனல் அதாவது க்ராணேந்திரியத்தைக்கொண்டு கிரகிக்க முயற்சி செய்தார். அதுவும் பயன்படவில்லை. அவ்வித மானல் முகர்தலினலேயே பசி தாகம் தீருமே! அது அஸம்பாவிதமன்றே. மீண்டும் கண்களாலும் செவிகளாலும் கிரகிக்க முயற்சித்தார். அதுவும் பலிக்கவில்லை. அன்னத்தைப் பார்ப்பதினலும் கேட்பதினலும் திருப்தி அடைய முடியாதல்லவா ?

ஸத்யாயனர் :— பின் லோகபாலர் என்ன செய்தார்? கேட்கக்கேட்க ஆச்சரியமாக இருக்கின்றது ஸ்வாமீ !

ஐதரேயர் :— तत्त्वचाजिघृक्षत्तन्नाशक्नोत्त्वचा ग्रहीतु । स यद्धैनत्त्वचाग्रहैष्यत्स्पृष्ट्वा हैवान्नमत्रप्स्यत् । तन्मनसाजिघृक्षत्त-न्नाशक्नोन्मनसा ग्रहीतुं । स यद्धैनन्मनसाग्रहैष्यद्ध्यात्वा हैवान्न-मत्रप्स्यत् । तच्छिश्नेनाजिघृक्षत्तन्नाशक्नोच्छिश्नेन ग्रहीतुं । स यद्धैनच्छिश्नेनाग्रहैष्यद्विसृज्य हैवान्नमत्रप्स्यत् ॥

தத் த்வசாஜிக்ருக்ஷத் தத் நாசக்நோத் த்வசா க்ரஹீதும் I ஸ யத்தைநத் த்வசாக்ரஹைஷ்யத் ஸ்ப்ருஷ்ட்வா ஹைவாந்நமத்ரப்ஸ்யத் I தன் மநஸாஜிக்ருக்ஷத் தத் நாசக்நோத் மநஸா க்ரஹீதும் I ஸ யத்தைநத் மநஸாக்ரஹைஷ்யத் த்யாத்வா ஹைவாந்நமத்ரப்ஸ்யத் I தத் சிச்நேநாஜிக்ருக்ஷத் தத் நாசக்நோத் சிச்நேந க்ரஹீதும் I ஸ யத்தைநத் சிச்நேநாக்ரஹைஷ்யத் விஸ்ருஜ்ய ஹைவாந்நமத்ரப்ஸ்யத் II

வாக், க்ராணம், சக்ஷுஸ், ச்ரோத்ரம் இவைகளால் கிரகிக்கமுடியாமல் போனவுடன், லோகபாலர் ஸ்பர்சன இந்திரியத்தால் கிரகிக்க முயற்சித்தார். அதிலும் தோல்வியே. ஏனென்ருல் அன்னத்தைத் தொடுவதனல் மட்டும் திருப்தியடையமுடியாதல்லவா? பிறகு மனத்தால் பிடிக்க உத்தேசித்தார். பயன் இல்லை.

அன்னத்தைப்பற்றி நினைப்பதால் பசி தாகம் தீராதன்றே. பின் சிச்னத்தால் அன்னத்தை கிரகிக்க முயற்சி, அதுவும் பயன்படவில்லை.

ஸத்யாயனர் :— ஐயோ பாவம்! லோகபாலர் பின் என்ன செய்தார்?

ஆசுவலாயனர் :— வெற்றி கிட்டியதா அல்லது லோக பாலர் பிராயோபவேசம் செய்தாரா?

ஐதரேயர் :— வத்ஸர்களே, ஜயம் கிடைத்தது கவன மாகக்கேளுங்கள். கூறுகின்றேன்.

तदपानेनाजिघृक्षत्तदावयत् । सैषोऽन्नस्य ग्रहो यद्वायुरन्नायुर्वा एष यद्वायुः ॥

ததபானேநாஜிக்ருக்ஷத் ததாவயத் । ஸைஷோऽந் நஸ்ய க்ரஹோ யத்வாயுரந்நாயுர் வா ஏஷ யத் வாயு: ॥

பிறகு அபானவாயுவால் அன்னத்தை க்ரகிக்க இச்சித்தபோது கிரகிக்கமுடிந்தது. இந்த வாயுவே அன்னத்தை கிரகிக்கத்தகுந்தது.

ஸத்யாயனர் — வாக், பிராணன், நேத்ரம், செவி, தோல் மனம், சிச்னம் முதலிய இந்திரியங்களால் கிரகிக்க முடியாத அன்னம், அபானவாயுவால் கிரகிக்கப்பட்டது ஆச்சரியமாயிருக்கிறது.

ஐதரேயர் :— ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆதி புருஷன் முகத்தில் இருக்கும் துவாரத்தின் வழியாக அபான வாயுவின் உதவியைக்கொண்டு அன்னத்தை பக்ஷித் தார். அதுபோல் நாமும் உண்டுவருகிறோம். அதனால் அபானனுக்கு அன்னாயு என்ற பெயர் சித்தித்தது. அதாவது அன்னத்தைக்கொண்டு ஜீவித்திருக்கின்றது என்பது பிரசித்தமாயிற்று.

ஆசுவலாயனர் :— குருநாதரே, மேலும் தொடர்ந்து உபதேசிக்கவேண்டும்.

ஐதரேயர் :— स ईक्षत कथं न्विदं मदृते स्यादिति स ईक्षत कतरेण प्रपद्या इति । स ईक्षत यदि वाचाऽभिव्याहृतं यदि प्राणेनाभिप्राणितं यदि चक्षुषा दृष्टं यदि श्रोत्रेण श्रुतं यदि त्वचा स्पृष्टं यदि मनसा ध्यातं यद्यपानेनाभ्यपानितं यदि शिश्नेन विसृष्टमथ कोऽहमिति ॥

ஸ ஈக்ஷத கதம் ந்விதம் மத்ருதே ஸ்யாதிதி ஸ ஈக்ஷத
ஸ ஈக்ஷத யதி வாசாபி
கதரேண ப்ரபத்யா இதி। ஸ ஈக்ஷத யதி வாசாபி
வ்யாஹ்ருதம் யதி ப்ராணேன அபிப்ராணிதம் யதி
சக்ஷுஷா த்ருஷ்டம் யதி ச்ரோத்ரேண ச்ருதம் யதி
த்வசா ஸ்ப்ருஷ்டம் யதி மநஸா த்யாதம் யத்யபாநே
நாப்யபாநிதம் யதி சிச்நேந விஸ்ருஷ்டமத கோऽஹமிதி॥

பிறகு ஆத்மா பின்வருமாறு ஆலோசித்தது. நமது படைப்பு வாக்கால் பேசுகின்றது. மூக்கால் முகர்கின்றது, கண்களால் பார்க்கின்றது. செவிகளால் கேட்கின்றது. தோலினுல் தொட்டு அறிகின்றது. மனதால் எண்ணுகின்றது. அபானத்தால் கிரகிக்கின்றது. சிச்னத்தால் விஸர்ஜனம் செய்கின்றது. இப்படியாக காரியகரண ஸங்காதம் ஒரு கூட்டாக இருக்கின்றது. ஆயினும் நம்மையன்றி இது நிலைபெற்றிருக்கக்கூடுமோ? நாம் இதனுள் பிரவேசிக்கவேண்டாமோ? எந்த மார்க்கமாக பிரவேசம் செய்யவேண்டும்? என்று பலபடியாக ஆலோசனை செய்தது.

ஆசுவலாயனர் :— ஐயனே! ஆத்மா எதற்காக அனுப்பிரவேசம் செய்யவேண்டும்?

ஸத்யாயனர் :— சிருஷ்டி செய்தாய்விட்டது. அன்னத்தையும் உண்டாக்கிக் கொடுத்தாய்விட்டது இந்திரியங்கள் ஏற்கனவே படைக்கப்பட்டு இருக்கின்றன அவைகளை அவைகளின் வியாபாரத்தில் விட்டுவிடலாமே. எதற்காக ஆத்மா பிரவேசம் செய்யவேண்டும்?

ஐதரேயர் :— அது எப்படி பொறுப்பைத் தட்டிக் கழிக்கமுடியும்? ரதத்தில் குதிரைகளைப் பூட்டிவிட்டால்,

சாரதியில்லாவிடில் எங்கோ இழுத்துச்சென்றுவிடுமே? சிருஷ்டியின் தத்துவம்-பயன்-கைகூடாதே. வானத்தில் மேக மண்டலமும், தாரகைகளும் மட்டும் இருந்தால் போதுமா? வான்மதி பட்டொளி வீசி நிலவைப் பரப்ப வேண்டாமா? ஒரு ராஜதானியில் நகரமும் நகரவாஸி களும், ரக்ஷகர்களும், அதிகாரிகளும் மட்டும் இருந்தால் போதுமா? அரசன் ஆணை செலுத்தவேண்டாமா? இங்கே லோகத்தை ஒருபுரத்துக்கும், இந்திரியங்களை நகரவாஸிகளுக்கும், லோகபாலரை ராஜாவின் அதிகாரி களுக்கும் ஒப்பிடலாம். ஆனல் ராஜா யார்? அரசன் இல்லையேல் அரசு இல்லையே! ஆத்மா அரசன். அது பிரவேசித்து கொலு வீற்றிருந்து, அதிகாரிகளை அடக்கி, குடிகளுக்கு பரம க்ஷேமத்தைச் செய்ய உத்தேசிக் கின்றது. பிரவேசித்தவுடன், உண்மையான விசுவாச முள்ள ஊழியர்களைப்போல, ராஜபக்தியுள்ள சேவகர் களைப்போல, ஆயுள் அடிமைகளைப்போல, இந்திரியக் கூட்டங்கள் தங்களது பரம ஸ்வாமியாகிய, எஜமான ணகிய, ராஜாவாகிய ஆத்மாவிற்கு ஸகலவிதமான உபசாரங்களும் செய்து பலன் அடைகின்றன. செயல் களின் செம்மையான பயன் பெறுகின்றன. ஸ்வாமி இல்லாவிடில் புரவாஸிகளின் காரியங்கள் எல்லாம் வீணுகப்போய்விடுகின்றன அல்லவா?

ஆசுவலாயனர் :— ஸத்குருவே, ஸந்தேகம் நீங்கி விட்டது. மேலும் தொடர்ந்து கூறுங்கள்.

ஐதரேயர் :— ஆத்மா பிரவேசித்ததற்கு வேறொரு காரணமும் கூறலாம். இந்திரியங்களை நாம் ஏவாவிடில் இவைகள் தத்தம் தொழில்களை எவ்வாறு நடத்தும்? ஒரு பொழுதும் நடத்தமுடியாது. அப்பொழுது என்னைப் பற்றி யாரும் தெரிந்துகொள்ள முடியாது. ஆனது பற்றி அவசியமாக நாம் பிரவேசித்தே ஆகவேண்டும். நான் உள்ளே பிரவேசித்தால் என் சக்தியால் இந்திரியங்கள் அததன் தொழில்களைச் செய்துவரும். இதைக்கண்டு இவைகளை அறியும் ஸாக்ஷியாக இவைகளினின்றும்

வேறுபட்டவனாக உள்ளே ஒருவன் இருக்கிறான் என்று என்னைப்பற்றி விசாரித்துத் தெரிந்துகொள்ளக்கூடும் இவ்வாறு தீர்மானித்தது. தலை, கால், இவ்விரண்டு மார்க்கங்களுள் எவ்வழியாக உள்ளே புகவேண்டும்? என்று ஆலோசித்தது.

स एतमेव सीमानं विदार्यैतया द्वारा प्रापद्यत । सैषा विदृतिर्नाम द्वास्तदेतन्नान्दनम् । तस्य त्रय आवसथास्त्रयः स्वप्नाः अयमावसथोऽयमावसथोऽयमावसथ इति ॥

ஸ ஏதமேவ ஸீமாநம் விதார்ய ஏதயா த்வாரா ப்ராபத்யத । ஸைஷா வித்ருதிர் நாம த்வாஸ்ததேதத் நாந்தநம் । தஸ்ய த்ரய ஆவஸதாஸ்த்ரய: ஸ்வப்நா: அயமாவஸதோऽயமாவஸதோऽயமாவஸத இதி ।

பிறகு ஆத்மா உச்சியைப் பிளந்து அதன் வாயிலாக உள்ளே நுழைந்தது. இதற்கு வித்ருதி அதாவது பிளப்பு துவாரம் என்று பெயர். அது ஆனந்தமயமான துவாரம். இவ்வழியாக உள்புகுந்த ஆத்மாவிற்கு மூன்று அவஸ்தைகளுண்டு. அதாவது நிலைகள் இம்மூன்றும் கனவுகளே.

ஸத்யாயனர் :—குருநாதரே, மூன்று நிலைகள் யாவை? அவைகளை ஸ்வப்னங்கள் என்று கூறுவானேன்?

ஐதரேயர் :- மூன்று நிலைகளாவன. முதலில் ஜாக்ரத வஸ்தையில் வலது கண். இரண்டாவதாக ஸ்வப்னா வஸ்தையில் உள் மனது, மூன்றாவதாக சுஷுப்தி அவஸ் தையில் இதயாகாசம். இந்த மூன்று இடங்களும் கனவுக்கு ஒப்பானவைகள்தான். ஏனென்றால் கனவில் உண்மை அறிவு (விழிப்பு) இல்லை. பொய்ப் பொருள்களைக் காண்கிறான். பரமார்த்தமான ஆத்மாவின் ஞானம் என்ற விழிப்பு ஜாக்ரத்திலும் இல்லை. இவன் காணும் பிரபஞ்சம் முழுவதும் பொய்யானவையே ஆகையால் ஜாக்ரத் நிலையும் ஸ்வப்னம்தான். உள்ளே

பிரவேசித்த ஆத்மா, புதுமனை புகுந்தோன் எப்படி பிரியத்துடன் வாழ்வானே அவ்வாறே அவித்யையில் மூழ்கி ஆயிரக்கணக்கான அனர்த்தங்களை அடைந்தும் அறிவு பெறுமல் அல்லற்படுகின்ருன்.

ஸத்யாயனர் :— குரங்கு ஆப்பு பிடுங்கிய கதையாக இருக்கின்றதே!

ஆச்வலாயனர் :- ஆத்மா கால் வழியாகச் செல்லாமல் மூர்த்தா வழியாகப் பிரவேசிக்க ஏதேனும் காரணம் உண்டா?

ஸத்யாயனர் :— மூர்த்தாவிலுள்ள த்வாரத்தை மட்டும் ஆனந்த ப்ரதம் என்று சொல்வானேன்? மூக்கு, வாய், செவி முதலிய பல துவாரங்கள் இருக்கின்றனவே. அவைகளாலும் ஆனந்தம் கிடைக்கத்தானே செய்கின்றது.

ஐதரேயர்—ஆத்மா நினைத்தது. ''ஸர்வகார்யங்களுக்கும் அதிகாரியாகிய நாம், எமது பிருத்யனை பிராணன் சென்ற கீழான கால்வழியாகப் போவது நலமன்று'' என்று. ஆகவே தலைவாசல் வழி அரசன் புகுவதுபோல் உச்சியைப்பிளந்து தனிவழியுண்டாக்கிக் கொண்டு பிரவேசித்தது மூக்கு முதலிய துவாரங்களால் சிற்சில இன்பங்கள் கிடைக்கின்றன. ஆனல் அவைகள் சேவகர்களான இந்திரியங்களின் மார்க்கங்கள். அவைகள் தரும் இன்பங்கள் துன்பம் கலந்தவைகளே. ஆகையினுல் அவைகளுக்கு ஆனந்த ப்ரதம் என்ற பெயரில்லை. மூர்த்தாவோ அப்படியன்று. மிகவும் உத்கிருஷ்டமானது. ஆத்மாவின் துவாரம் ஆத்மாவிற்கு மட்டும் உரித்தானது. பின்னுல் இந்த வழியே வெளியேறித்தான் புருஷன் உயர்ந்த ஸ்தானத்தை அடையப்போகிருன். ஆகவே அந்த துவாரம் ஆனந்த பிரதமானதுதான். அதில் சந்தேகமேயில்லை.

ஆசுவலாயனர் :— ஐயனே! செவிக்கினிய சொற்களால் மகிழ்ச்சிகொண்டு புளகாங்கிதமடைந்தேன். மேலும் தொடர்ந்து உபதேசிக்கவேண்டுகிறேன்.

ஐதரேயர்:— स जातो भूतान्यभिव्यैख्यत् किमिहान्यं वावदिषदिति । स एतमेव पुरुषं ब्रह्म ततममपश्यत् इदमदर्शमिती ३ ॥

ஸ ஜாதோ பூதாந்யபிவ்யைக்யத் கிமிஹாந்யம் வாவதிஷதிதி। ஸ ஏதமேவ புருஷம் ப்ரஹ்ம ததமம பச்யத் இதமதர்சமிதி 3 ॥

இப்படியாக சரீரத்துள் நுழைந்த ஜீவரூபமான ஆத்மாவானது காரியகரண கூட்டமாகிற உபாதிகளுடன் சேர்ந்து தாதாத்மிய பாவத்தை அடைகின்றது. பூதங்களில் வியாபித்துக்கொண்டு அஹங்காரமடைந்து சுகதுக்கங்களைத் தனதாக பாவித்து அல்லற்படுகின்றது. துன்பங்களாகிற சம்மட்டிகளால் அடிக்கப்பட்டும் விழிப்படையவில்லை. இவ்விதம் நீடுழிகாலம் அறியாமையால் உறக்கமுற்று அவதிப்படுகிறது. பிறகு ஒரு ஸமயம் பரமகிருபாநிதியாகிய குருவினுடைய உபதேசத்தால் விழிப்புற்று, "இங்கே என்னைத்தவிர வேறு என்ன இருக்கிறது? நான் என்னைக் கண்டுகொண்டேன்" என்று பிரம்மத்தை தன்னிடத்தில் தானாகவே பார்க்கிறது.

ஸத்யாயனர் :— பலவிதமாகத் தொடங்கிய பரபரப்பான கதை ஞானமாகிற முடிவைப் பெற்றது. ஸ்வாமீ, தங்களுடைய கடாக்ஷத்தால் நாங்கள் பல நீடுழிகாலம் அவதியுறாமல் வெகு சீக்கிரத்திலேயே ஞானம் அடைந்துவிடுவோம். மேலும் தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகிறோம்.

ஐதரேயர் :—குழந்தைகளே! ஸர்வமங்களங்களும் உண்டாகும். "அஹோ ஆச்சரியம். நானே எனது ஆத்ம ஸ்வரூபத்தை பரபிரம்ம ரூபமாகவே பார்க்கிறேன்" என்று ஆத்மா ஆனந்தமடைந்தது. அதுபோல் நீங்களும் இதைப்படிக்கும் ஒவ்வொருவரும் பிரம்ம ஸாக்ஷாத்காரமடைவீர்கள். இது திண்ணம்.

तस्मादिदन्द्रो नामेदन्द्रो ह वै नाम तमिदन्द्रं सन्तमिन्द्र इत्याचक्षते परोक्षेण । परोक्षप्रिया इव हि देवाः परोक्षप्रिया इव हि देवाः ॥

தஸ்மாதிதந்த்ரோ நாம இதந்த்ரோ ஹ வை நாம தமிதந்த்ரம் ஸந்தமிந்த்ர இத்யாசக்ஷதே பரோக்ஷேண 1 பரோக்ஷப்ரியா இவ ஹி தேவா: பரோக்ஷப்ரியா இவ ஹி தேவா: ॥

ஆதலால் இப்படிப்பார்த்த புருஷனுக்கு இதந்திரன் என்று பெயர். இந்த பிரம்மத்தைக்கண்டான் என்பது இதந்த்ர பதத்தின் பொருள். இந்த பிரஹ்மம் அபரோக்ஷமாக விளங்குவது. எல்லாவற்றிற்கும் உள்ளே இருக்கிறது. இதை தனது ஆத்மாவாகக் கண்டுவிட்டான். இதந்திரன் என்று சொல்லவேண்டியிருந்தும் அப்படிக் கூருமல் அவரை இந்திரனென்று பரோக்ஷமாகச் சொல்லுகின்ருர்கள். தேவர்கள் பரோக்ஷப்பிரியர்கள்.

ஸத்யாயனர் :– பரோக்ஷமாக ஏன் சொல்லவேண்டும். நேரடியாக சொல்லலாமே.

ஐதரேயர்: — பூஜ்யர்களின் பெயரை நேரில் கூறுவதைக்காட்டிலும் பரோக்ஷமாகச் சொல்லுவது மரியாதையாம். பூஜ்யர்களுக்கெல்லாம் பூஜ்யரான பரமாத்மாவை அங்ஙனம் மரியாதை செய்யவேண்டியது அவசியம்தானே.

ஸத்யாயனர் :— தேவர்கள் பரோக்ஷப்பிரியர்கள் என்று இரு தடவை சொல்வதின் தாத்பர்யம் என்னவோ?

ஐதரேயர் :– பிரகிருதமான பாடம் முடிவடைகின்றது என்பதை சூசிப்பிக்கவே ச்ருதி இரு தடவை சொல்லுகின்றது. வேருென்றும் விசேஷமான தாத்பர்யமில்லை. வத்ஸா ஆசுவலாயனு! நீ என்ன மௌனமாயிருக்கிருய்? ஒன்றும் சந்தேகம் கேட்கவில்லையே.

ஆசுவலாயனர்:- ஐயனே! தாங்கள் கடைசியாக பாடம் சொன்ன ருக்குகளின் பொருள் எனக்கு நன்றாக விளங்கவில்லை. சிருஷ்டிக் கிரமம், அஸம்பாவிதமான காரியங்கள், பிறகு முடிவில் தத்துவ போதனை இப்படியாக சுற்றி வளைத்துப் பேசுவானேன்? ஞான உபதேசம் மட்டும் செய்தால் போதாதா? ச்ருதியின் தாத்பர்யம் என்னவோ? விளக்கமாகச் சொல்ல வேண்டுகிறேன்.

ஐதரேயர்:— இத்துடன் இன்றைய பாடத்தை முடித்துக்கொள்வோம். நாளை உங்களுடைய சந்தேகங்களை எல்லாம் நிவர்த்தி செய்கின்றேன். நீங்களும் நன்றாக படித்தவற்றைப்பற்றி சிந்தனை செய்யுங்கள். (சிஷ்யர்கள் எழுந்து அபிவாதனம் செய்கின்றார்கள்) வத்ஸர்களே, ஒரு சந்தோஷகரமான செய்தி உங்களுக்கு. இன்னும் இரண்டு தினங்களில் மஹானாகிற வாமதேவர் என்கிற பிரம்மஞானி இங்கு எழுந்தருளப் போகிறார். அவர் தாயாரின் கர்ப்பத்தில் வஸிக்கும் போதே ஞானமடைந்தவர். ஆகையினால் அவருக்கு 'கருவிலே திருவுடையார்' என்ற சிறப்புப் பெயர் உண்டு. அம்மஹானும் உங்களுக்கு பலவிதமான உபதேசங்கள் செய்வார்.

சிஷ்யர்கள்:—குருநாதரே, ரொம்ப சந்தோஷம் எல்லாம் தங்களுடைய ஆசீர்வாத பலன்தான். வணக்கம். (சிஷ்யர்கள் போகிறார்கள். ஐதரேயர் எழுந்திருந்து நதியை நோக்கி நடக்கின்றார்).

(திரை விழுகிறது)

முதலாவது அங்கம் முற்றும்.

இரண்டாவது அங்கம்

காட்சி I

(திரை விலக)

[மகரிஷி ஐதரேயரின் ஆசிரமம் தென்படுகிறது. வடக்கு நோக்கி மகரிஷி ஐதரேயரும் கிழக்கு நோக்கி பிரம்மஞானி வாமதேவரும் அமர்ந்திருக்கின்றனர்கள். சிஷ்யர்கள் அபிவாதனம் செய்கின்றனர்]

ஐதரேயர் :—பூஜ்யரே, தங்களது நல்வரவால் நான் மிகவும் தன்யனுனேன். வரண்ட பூமி மழைகண்டு வளம்பெற்றதுபோல, நானும் எனது ஆசிரமவாசிகளும் சீடர்களும் தங்களது அருள்நோக்கால் அனைத்தும் அடைந்தோம். எங்களுடைய குடிசைக்கு எழுந்தருளி, எளிய பூஜையை ஏற்றுக்கொண்டதற்கு உளங்கனிந்த நன்றியை உவகையோடு உரைக்கின்றேன்.

வாமதேவர் :— நண்பரே, நான்தானே உங்களது உபசாரத்துக்கு நன்றிகூற வேண்டும். மிகுந்த பக்தியோடும், சிரத்தையோடும் உபசரித்தீர்கள். இதுபோல் அதிதி ஸத்காரம் ஒருவராலும் ஒருநாளும் செய்ய முடியாது. ''ந பூதோ ந பவிஷ்யதி''

ஐதரேயர் :—தாங்கள் பெரிய மஹான் கருவிலேயே பிரம்மஞானமடைந்து பரமாத்மாவின் பிரதிநிதியாய் விளங்குகின்றீர்கள். தேடப்போன மூலிகை, கையில் கிடைத்ததுபோல், தாங்கள் இங்கு விஜயம் செய்திருக்கின்றீர்கள். அமிருதமயமான வசனங்களால் எனக்கும் எனது சீடர்களுக்கும் வேண்டிய உபதேசங்கள் செய்யும்படி வேண்டுகின்றேன்.

வாமதேவர் :— நண்பரே! தங்களுக்கு நான் உபதேசிப்பதா! பூமா தேவியிடமிருந்தே நேரில் வரங்களும் உபதேசங்களும் பெற்ற மஹனீயரல்லவா தாங்கள். தங்களுக்குத் தெரியாத விஷயம் என்ன

இருக்கிறது? ஏதாவது இருந்தாலல்லவா எனக்குத் தெரிந்து நான் அதைக் கூறுவதற்கு! அறிவிலும் ஆராய்ச்சியிலும் ஆழ்கடல்போல் கம்பீரமாகவும், அணுக முடியாமலும் விளங்குகின்றீர்கள். தபஸ்ஸிலும் பக்தி யோகத்திலும் சிறந்தவர்கள். தாங்கள்தான் அடியேன் உய்யும் வழியைக் காட்டவேண்டும்.

ஜதரேயர்:— பூஜ்யரே! நான் கல்வி கேள்விகளில் சிறந்தவனாக இருக்கலாம். அறிவுமட்டும் இருந்தால் போதுமா? குங்குமப்பூ சுமக்கும் கோவேறு கழுதை போலத்தானே இருக்கமுடியும். ஆனல் தாங்களோ கருவிலேயே திருவை அடைந்தவர்கள். அநுபூதிமான். தாங்கள்தான் தயவுசெய்து உபதேசங்கள் வழங்க வேண்டும்.

வாமதேவர்:— நண்பரே! நன்று நன்று. நகைப்புக்கிடமான வார்த்தைகளைக் கூறுதீர்கள். கருவிலே திருவை யார்தான் அடையவில்லை! எல்லா ஜீவர்களும் கர்பத்திலிருக்கும்போது பகவத் கிருபையால் ஞானத்தைப் பெறுவதாய் கர்ப்போபநிஷத் கோஷிப்பதை அறியீரோ! ஆகவே எனக்குமட்டும் ஏற்றமும் சிறப்பும் என்ன இருக்கிறது!

ஜதரேயர்:— ஐயனே! கர்ப்போபநிஷத் வாசகங்களை நான் அறிவேன். ஆயினும் தாங்களே சிறந்தவர்கள். ஏனென்றல் மற்ற ஜீவர்கள் பிறக்கும்போது விஷ்ணு மாயையின் வாயுவால் தொடப்பட்டவுடன் எல்லாவற்றையும் மறந்து அஞ்ஞானத்துடனே பிறக்கின்றுர்கள். தங்களுக்கு மாத்திரம்தான் பிறந்த பின்னும் அந்த ஞானம் நழுவாமல் நிலைத்திருக்கின்றது. மற்றவர்களுக்கு நழுவிவிடுகிறது. ஆகவே தாங்கள்தான் பெரியவர், சிறந்தவர்; உபதேசிக்கத் தகுதியுடையவர். உபதேசிக்கும்படி பிரார்த்திக்கின்றேன்.

வாமதேவர்:—நண்பரே! அபிமானத்தினல் குறைகள் சிறிதாகவும், குணங்கள் பெரிதாகவும் தோன்றுவது

இயற்கை. அதுபோல் தாங்களும் என்னைப் புகழ்ந்து பேசுகின்றீர்கள். (யோசித்து) மேலும் இந்த வாதத்தைத் தொடர்ந்து நடத்த நான் விரும்பவில்லை. தாங்கள் கூறியபடி எனக்குத் தெரிந்தவரை சொல்ல தடையில்லை.

ஐதரேயர் :— மிகவும் மகிழ்ச்சி. நான் கிருதார்த்தனானேன். பிரிய சிஷ்யர்களே, பூர்வபுண்ணிய வசத்தினாலும் நிர்ஹேதுகமான கருணையினாலும் பிரம்மஞானி வாமதேவர் திருவாய்மலர இசைந்துள்ளார்கள். கவனமாய்க் கேளுங்கள். அருகில் அமருங்கள். (இதுவரை நின்றிருந்த சீடர்கள் உட்காருகின்றனர்)

வாமதேவர்:— நண்பரே! தாங்கள் குழந்தைகளுக்கு இதுவரை என்ன பாடம் சொல்லிவைத்திருக்கின்றீர்கள். விட்ட இடத்தில் தொட்டுத் துவக்கலாமல்லவா!

ஐதரேயர் :—அதுவே சரி ஐயனே! வத்ஸர்களே! நீங்கள் படித்த விஷயத்தை சுருக்கமாகக் கூறுங்கள்.

ஸத்யாயனர் :— குருமார்களே, நமஸ்காரம். உலகத்தை ஆக்கி அளித்து அழிப்பவன் பரமாத்மா. அவன் அஸம்ஸாரி, ஸர்வக்ஞன்; ஸர்வசக்தன். எல்லாம் அறிந்தவன். இந்த எல்லா ஜகத்தையும் யாதொரு உபாதானகாரணமுமின்றி ஆகாசாதி கிரமமாகத் தானே சிருஷ்டித்து, ஆயதனமும் ஏற்படுத்தி, அன்னத்தையும் உண்டுபண்ணிக் கொடுத்தான் பரமாத்மா.

ஆசுவலாயனர் :— பிறகு தனது ஆத்மாவைத் தானே அறிந்துகொள்ளும்பொருட்டு, ஸகல பிராணிகளின் சரீரங்களிலும் தானே பிரவேசித்தான். அப்படி பிரவேசித்து நானே பிரஹ்மம் என்று தனது ஆத்மாவை ப்ரஹ்மஸ்வரூபமாக அறிந்துகொள்ளுகின்றான்.

ஸத்யாயனர் :—ஆதலால் எல்லாச் சரீரங்களிலும் ஒரே ஆத்மாவேயன்றி வேறில்லை என்று அறிந்து கொண்டோம்.

வாமதேவர் :—வத்ஸர்களே, ரொம்ப சந்தோஷம். நன்ருகக் கற்றிருக்கின்றீர்கள். கற்றவைகளைக் களைந்து விடாமல் மனனம் செய்து சிந்தித்தும் இருக்கின்றீர்கள். இப்படிப்பட்ட உத்தமமான சீடர்களுக்குப் பாடம் சொல்லக் கிடைக்கவேண்டுமே.

ஐதரேயர் :- ஆசுவலாயனு! அன்று சில ஸந்தேகங் கள் தெளியவேண்டுமென்று சொன்னுயல்லவா. அவை களை இப்போது கேள். பிரம்மஞானி வாமதேவர் விடை கூறி ஸம்சயத்தை நீக்குவார்கள்.

ஆசுவலாயனர் :—ஐயன்மீர்! வணக்கம். சிருஷ்டிக் கிரமத்தில் அநேக விஷயங்கள் அஸம்பாவிதமாக இருக்கின்றன.

வாமதேவர் :—குழந்தாய்! விபரமாய்க் கேள்.

ஆசுவலாயனர் :—ஸ்வாமி! எங்கும் நிறைந்தது ஆத்மா. அது இல்லாத இடமேது? ஒரு மயிரிழையின் நுனியில் கூட அது இல்லாமலில்லை. அப்படியிருக்க மூர்த்தாவைப் பிளந்துகொண்டு எறும்பு பொந்தில் புகுவதுபோல், சரீரத்தில் அனுப்பிரவேசம் செய்தது என்று கூறுவது பொருத்தமாயில்லை. அதுபோலவே, ஆத்மாவிற்கு இந்திரியங்களே இல்லாமலிருக்க, அது எதனுல் ஆலோசித்தது? உபாதானங்கள் ஒன்றுமின்றி எவ்வாறு படைத்தது? ஜலத்திலிருந்து உருவம் உண்டாக்கியது எங்ஙனம்? தியானம் செய்து அதற்கு முகம் கொடுத்தது எப்படி? பிறகு அந்த முகத்திலிருந்து அக்னி முதலிய லோகபாலர்கள் தோன்றியதும், அவர்களுக்கு பசி தாகம் கொடுத்ததும், அவர்கள் இருப்பிடம் வேண்டும் என்று கேட்டதும், மற்றும் அன்னத்தின் உற்பத்தியும் அதன் ஓட்டமும், கடைசியில் பிடிபடுவதும் எல்லாம் ஆச்சரியமுண்டாக்கு கின்றன. தவிர அஸம்பாவிதமாகவுமிருக்கின்றன. ஞானத்தை போதிக்கவந்த வேதம் எதற்காக இந்த அல்ப விஷயங்கள்—அநாவசியமான விவரங்கள்—பற்றிக்

கூறவேண்டும்? இதுதான் அடியேனுடைய ஸந்தேகம். கருணை கூர்ந்து உபதேசிக்கும்படி வேண்டுகின்றேன்.

வாமதேவர் :— குழந்தாய், நன்ருக வினவினுய். ஸம்சயத்தை நீக்குகின்றேன் கேள். உன்னுடைய ஆக்ஷேபங்களுக்கு இரண்டு விதமாக ஸமாதானங்கள் கூறலாம். முதலாவது இவையெல்லாம் அர்த்தவாதம்.

ஆசுவலாயனர் :— அர்த்தவாதம் என்ருல் என்ன?

வாமதேவர் :— வத்ஸர்களே, அர்த்தவாதம் என்ருல் ஜகத்தின் லக்ஷணத்தை எளிதில் புரியவைப்பதற்காக, உலக வியவஹாரம்போல் ஒரு கட்டுக்கதையாக கூறுவதேயாகும். ச்ருதியின் முக்கிய தாத்பர்யம் சிருஷ்டிக் கிரமம் சொல்வது அல்ல. அது ஆத்மஞானத்தை உணர்த்தவே பிரவர்த்திக்கின்றது. ஆயினும் லோகத்தின் நிலையாமையும் அக்ஞானமும் நன்கு விளங்குவதற்காக ச்ருதி இப்படிப் பேசுகின்றது.

ஸத்யாயனர்—சுவாமி! இரண்டாவது ஸமாதானம் என்னவோ?

வாமதேவர் :— மாயாவியாகிய ஒரு மந்திரவாதி க்ஷண நேரத்தில் மாமரத்தை முளைக்கவைத்து மாங்கனி தருவதில்லையா! அதுபோல பெரிய மாயாவியாயிருக்கிற ஈசுவரனுக்கு யாதுதான் செய்ய இயலாது! மாயைக்கு யாதும் அஸம்பாவிதமில்லை. யாவும் கூடும். அவர் எல்லாம் வல்லவர் என்ற இரகசியத்தை ஸரளமாக போதிப்பிக்கவே இப்படியாக லௌகிக ரீதியில் ஒரு கற்பனைக் கதைபோல் கூறப்பட்டது தவிர வேறில்லை. இந்த கதையால்—இந்த கட்டுக்கதையின் ஞானத்தால்—ஒன்றும் பிரயோஜனமில்லை. ஆத்மாவை அறிவதற்கு சாஸ்திரோபதேசமே விதி. அதுவேதான் உபநிஷத்தின் உள்ளர்த்தமுமாகும்.

ஐதரேயர் :—குழந்தைகளே! மலச்சிக்கல் நீங்குவதற்கு நேர்வாளம் முதலிய கசப்புள்ள மருந்துகளை கொடுக்கும் தாய்மார்கள் முதலில் இனிப்புக்காக

தேனைத் தருவது வழக்கமல்லவா. அதுபோல, ஆத்ம ஞானத்தை எடுத்த எடுப்பிலேயே உபதேசித்தால் எளிதில் புரிந்துகொள்வது கடினமென்று உணர்கின்றுள் வேதமாதா. அதற்காகவே மிகுந்த கருணையோடுகூட அர்த்தவாதம் என்ற தேனை முதலில் நாக்கில் தடவி பின்னுல் ஹிதமான ஔஷதங்களைத் தருகின்றுள், ஸம்ஸாரச் சிக்கலை அகற்றுவதற்காக.

ஆசுவலாயனர் :—குருமார்களே! எனது ஸந்தேகம் நிவர்த்தியாகிவிட்டது. தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகின்றேன்.

வாமதேவர் :—வத்ஸர்களே! ஞானத்திற்கு அடிப் படை வைராக்கியம். ஸம்ஸாரத்தில் ஜீவன் பல பிறவிகள் எடுத்து உழல்வதைச் சிந்தித்தால் வைராக் கியம் தோன்றும். எதுவரைக்கும் தன் ஆத்மாவை அறியாமலிருக்கின்றுனே அதுவரை பிரமன் முதல் எறும்பு வரையுள்ள பற்பல ஜன்மங்களை அடைந்து அவித்யா கர்மவசத்தால் உழல்கின்றுன் அவன் படும் அல்லல் கொஞ்சநஞ்சமன்று. அடிக்கடி ஜனன மரண துக்கத்துடன் இடர்ப்படுகின்றுன்.

ஐதரேயர் :—பூஜ்யரே! மாத்யான் ஹிககாலம் நெருங்கிவிட்டது. ஆகையினுல் இத்துடன் இன்றைய பாடத்தை நிறுத்திக்கொள்வோமா?

வாமதேவர் :—நண்பரே! அப்படியே செய்வோம்

(சிஷ்யர்கள் எழுந்து அபிவாதனம் செய்கின்றனர். அதற்குப்பின் மகரிஷிகள் இருவரும் எழுந்திருக்கின்றனர்)

(திரை விழுகிறது)

காட்சி 2

(திரை விலக)

[முன் காட்சியில் கண்டபடி மகரிஷிகள் இருவரும் சீடர்களும் அமர்ந்து ஸம்பாஷணை நடந்துகொண்டிருக்கிறது]

வாமதேவர்:-நண்பரே, இந்த ஆசிரமம் ஸிந்துநதி தீரத்தில் நல்ல வாய்ப்பான இடத்தில் அமைந்திருக்கின்றது. அருமையான சீதோஷ்ண ஸ்திதியும் நல்ல தென்றலும் எப்போதும் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலான தங்களது விருந்தும் உயர்தரமாக இருக்கின்றது. தவிர உங்களது சீடர்களும் புத்திகூர்மையினுல் என் மனதைக் கவர்ந்து விட்டார்கள்.

ஐதரேயர் :—பூஜ்யரே, எல்லாம் தங்கள் ஆசீர்வாத பலன்தான். குழந்தைகள் ஆவலுடன் தங்கள் முகத்தையே பார்த்தவண்ணம் இருக்கின்றனர். தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகிறேன்.

வாமதேவர் :— நண்பரே, தங்கள் இஷ்டப்படியே செய்கிறேன். எனது வசனங்கள் வத்ஸர்களாகிய சகோரங்களுக்கு, சந்திரகிரணங்களாக பவிக்கட்டும் குழந்தைகளே, கவனமாகக் கேளுங்கள். ஜனன மரண துக்கங்களில் உழலும் புருஷனின் துன்பங்களைப்பற்றி மேலும் விவரிக்கின்றேன். ஜீவன், ஆத்மாவைப்பற்றிய ஞானத்தைப் பெருமல், அவித்யையால்—அக்ஞானத்தால்— தேஹாதி உபாதிகளையே ஆத்மாவாக எண்ணி அல்லல் படுகின்றது. பல பலவிதமான யோனிகளில் பிறக்கின்றது. ஒவ்வொரு தடவையிலும் அடைந்த தேகம் இந்திரியம் இவைகளின் கூட்டத்தை விட்டு விட்டு மற்ருெரு கூட்டத்தை பற்றிக்கொள்ளுகிறது, அட்டையைப்போல் வேறு தேகத்தைப் பிடித்துக் கொண்டு பழைய தேஹத்தை விடுகின்றது. இந்த ஜீவனுக்கு முக்கியமாக மூன்று அவஸ்தைகள் உண்டாகின்றன.

ஐதரேயர் :— பூஜ்யரே, அந்த அவஸ்தைகளைப் பற்றியும் விபரமாகக் கூறுங்கள்.

வாமதேவர் :— ஜீவன் அஹங்காரத்தால் அவித்யா காமவசனுகி யாகாதி கர்மாக்களைச் செய்கின்றது. நானே இவைகளைச் செய்தேன் என்றும், இன்னும் இது போன்ற புண்ணிய கர்மாக்களைச் செய்வேன் என்றும் அஹங்கார புத்தியுடன் நடந்து கர்ம பலன்களை அனுபவிக்க தூமாதி மார்க்கமாக சந்திரமண்டலத்தை அடைகின்றது. அங்கே போகங்களை அனுபவித்துவிட்டு புண்ணியம் குறைந்தவுடன் விருஷ்டியாதி கிரமமாக கீழே விழுகின்றது. அப்படி விழுந்த ஜீவன் பலவித அன்னங்களில் (தானியங்களில) விழுந்து அதை உண்ணும் புருஷனின் உதரத்தில் பிரவேசிக்கின்றது.

ஆசுவலாயனர் :— ஸ்வாமீ! ஆச்சரியமாக இருக்கின்றது ஜீவனின் பிரயாணம். அப்புறம் என்ன வாகின்றது?

வாமதேவர் :— पुरुषे ह वा अयमादितो गर्भो भवति यदेतद्रेतः । तदेतत् सर्वेभ्योऽङ्गेभ्यस्तेजः संभूतमात्मन्येवात्मानं बिभर्ति । तद्यदा स्त्रियां सिञ्चत्यथैनज्जनयति तदस्य प्रथमं जन्म ॥

புருஷே ஹ வா அயமாதிதோ கர்போ பவதி யதேதத் ரேத: 1 ததேதத் ஸர்வேப்யோZங்கேப்யஸ் தேஜ: ஸம்பூதம் ஆத்மந்யேவ ஆத்மாநம் பிபர்த்தி 1 தத் யதா ஸ்த்ரியாம் ஸிஞ்சதி அதைநத் ஜநயதி ததஸ்ய ப்ரதமம் ஜன்ம 1

அன்னத்தை சாப்பிடும் புருஷனிடம் முதலில் ஜீவன் கர்பமாக இருக்கின்றது. எப்படி யென்ருல், அன்ன மயமான தேகத்தின் எல்லா அங்கங்களினின்றும் ஸார மாக உண்டாகிற ரேதஸ் (சுக்லம்) ரூபமாக தனதாத்மாவை தன்னிடமே அந்த புருஷன் தரிக்கிருன். இதைத்தான் புருஷகர்பம் என்று மஹான்கள் சொல்லு கின்ருர்கள். அது சுமார் இரண்டுமாத காலமாகும்.

அந்த ரேதஸ்ஸை ஸ்திரீயினிடம் ஸம்யோக காலத்தில் விடுகின்ருன். அப்போது அந்த ஜீவனுக்கு முதல் ஜன்மம் உண்டாகின்றது. அஃதாவது முதலிலுண்டாகின்ற அவஸ்தை

ஸத்யாயனர் :— ஸ்வாமீ! கர்ப்பாதானத்தைப் பற்றி விவரமாக அறிந்துகொண்டேன். மேலும் தொடர்ந்து கூறவேண்டுகின்றேன்.

வாமதேவர் :— तत्स्त्रिया आत्मभूयं गच्छति यथा स्वमङ्गं तथा । तस्मादेनां न हिनस्ति । साऽस्यैतमात्मानमत्र गतं भावयति ।

தத் ஸ்த்ரியா ஆத்மபூயம் கச்சதி யதா ஸ்வமங்கம் ததா தஸ்மாதேநாம் ந ஹிநஸ்தி। ஸா அஸ்ய ஏதமாத்மாநம் அத்ர கதம் பாவயதி।

அந்த பெண்ணிடம் விடப்பட்ட ரேதஸ்ஸானது அவளையே சார்ந்ததாகிவிடுகின்றது. ஆகையினுல் அவளை அது ஹிம்ஸிக்கின்றதில்லை. அவள் இவ்விதம் உண்டான கர்பத்தை நன்கு பாதுகாக்கின்ருள்.

ஸத்யாயனர் :— குருநாதரே! வேற்றுடலிலிருந்து வந்த ரேதஸ் ஏன் துன்புறுத்தவில்லை?

வாமதேவர் :— அவளுடைய சொந்தமான ஸ்தனம் முதலிய அங்கங்கள் அவளுக்கு ஒத்து செயல்பட்டு துன்புறுத்தாமலிருப்பதுபோல் ரேதஸ்ஸும் அவளுடைய தேஹத்துக்கு ஒத்து, அவளுடைய சொந்த உறுப்பைப் போல் ஒன்றிவிடுகின்றது. ஆகவே அந்த ஸ்திரீயை அது இம்ஸிக்கிறதில்லை. அவளுடைய பாதுகாப்பால் அது வளர்கின்றது.

ஆசுவலாயனர் :— ஐயனே! அப்புறம் என்ன நடக்கிறது?

வாமதேவர் :— सा भावयित्री भावयितव्या भवति । तं स्त्री गर्भं बिभर्ति । सोऽग्र एव कुमारं जन्मनोऽग्रेऽधि भावयति । स

यत्कुमारं जन्मनोऽग्रेऽधिभावयत्यात्मानमेव तद्भावयत्येषां लोकानां सन्तत्यै । एवं सन्तता हीमे लोकास्तदस्य द्वितीयं जन्म ॥

ஸா பாவயித்ரீ பாவயிதவ்யா பவதி தம் ஸ்த்ரீ கர்ப்பம் பிபர்த்தி । ஸொZக்ர ஏவ குமாரம் ஜந்மநோZக்ரே Zக்ரேZதிபாவயதி । ஸ யத் குமாரம் ஜந்மநோZக்ரே அதிபாவயத்யாத்மாநமேவ தத் பாவயத்யேஷாம் லோகாநாம் ஸந்தத்யை । ஏவம் ஸந்ததா ஹீமே லோகா: । ததஸ்ய த்விதீயம் ஜந்ம ॥

அங்ஙனம் கர்ப்பத்தைப் பாதுகாக்கும் அப்பெண்ணும் காப்பாற்றப்படவேண்டியவள். அவளும் கர்ப்பத்தைத்தரித்து பத்தியம் இருந்து பரிபாலிக்கின்ருள். உலகில் ஒருவருக்கொருவர் உதவியும் பதிலுதவியும் செய்துகொள்வதன்மூலம்தான் ஒருவருக்கொருவர் தொடர்பு ஏற்படுகிறது. குழந்தை பிறந்தவுடன் ஜாதகர்மா முதலிய ஸம்ஸ்காரங்களால் பிதா குழந்தையை தன்னைப்போல போற்றுகின்ருன். பிதாவின் இந்த செயல்களினுல் உலகத்தில் தொடர்பு அற்றுப்போகாமல் நீடிக்கும். தொடர்பு அருமல் ஸந்ததி பெருகுவதற்கே இந்த மாதிரியான ஸம்ஸ்காரங்களை புருஷன் செய்கின்ருன். இவ்விதமாக மாதாவின் கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டு வருவது ஜீவனுடைய இரண்டாவது ஜன்மம் அதாவது இரண்டாவது அவஸ்தை.

ஐதரேயர் :—பூஜ்யரே, தந்தையிடமிருந்து தாயின் கருவில் புகுவது முதல் பிறப்பு. தாயிடமிருந்து உலகில் புகுவது இரண்டாவது பிறப்பு. மூன்ருவது ஜன்மத்தைப்பற்றிச் சொல்லும் முன் கர்ப்போபநிஷத்திலுள்ள தத்துவங்களையும் குழந்தைகளுக்கு விவரமாக போதிக்க வேண்டுகின்றேன்.

வாமதேவர் :—நண்பரே அங்ஙனமே செய்கிறேன். தாயின் ஜடரத்தில் நுழைந்த ஜீவன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக விருத்தியாகிக்கொண்டு

வருகின்றது. ஒரு பிண்டாகிருதியை பெற்று க்ரமமாக வளருகின்றது. ஐந்து தினங்களில் நீர்க்குமிழியின் உருவத்தை அடைகின்றது. அதற்குப் பிறகு ஏழு தினங்களில் மாம்ஸ ஸம்பந்தம் ஏற்படுகின்றது. ஒரு பக்ஷத்தில் உதிரம் உண்டாகிறது இருபத்தி ஐந்து நாட்களுக்குப் பிறகு கழுத்து, தலை, முதுகு, வயிறு முதலிய நடு அங்கங்கள் தோன்றுகின்றன. இரண்டு மாதங்களில் கை கால் முதலிய அவயவங்கள் உண்டாகின்றன. மூன்று திங்களில் ஸந்திகளும் நான்கு மாதங்களில் விரல்களும் ஐந்தாவது மாதத்தில் மூக்கு, கண், காது, பல், நகம் முதலிய உறுப்புக்களும் உண்டாகின்றன. ஆருவது மாதத்தில் லிங்கவித்தியாசம் ஏற்படுகிறது. எட்டாவது மாதத்தில் அங்கங்கள் பூர்ணமடைந்துவிடுகின்றன. நன்ருக வளரத் தொடங்குகின்றது. தொப்புள் கொடியினுல் தாயின் அன்ன ரஸத்தை க்ரஹித்துக் கொள்கின்றது. பத்தாவது மாதத்தில் வெளியில் வரத்தயாராக இருக்கின்றது. தான் தங்கியுள்ள கர்ப்பப்பையைக் கண்டு நடுங்குகின்றது. தாயின் உடலின் உஷ்ணம் தாங்காமல் தவிக்கின்றது. அந்நேரத்தில் பகவானின் தர்சனம் பெறுகின்றது.

ஆசுவலாயனர் :— குருநாதரே! பகவத் தர்சனத்தினுல் அந்த ஜீவன் ஞானம் பெறவில்லையா?

வாமதேவர் :— குழந்தாய், அந்த ஜீவன் ஞானம் பெறுகின்றது. அறிவு ஏற்பட்டு ஜாடராக்கினியின் தாபம் நரகவேதனையைவிட நூறு மடங்கு கொடுமையானது என்றும் புரிந்துகொள்கிறது. தன்னுடைய பாபங்களை எல்லாம் எண்ணி வருந்துகிறது. பகவானைப் பார்த்து கண்ணீர் விட்டுக் கலங்கி தவித்து பச்சாத்தாபத்துடன் கதறுகின்றது.

ஸத்யாயனர் :—ஜீவன் பகவானைக்கண்டு சரண் அடையவில்லையா? பிரார்த்தனை ஏதாவது செய்து கொண்டதா? கேட்பதற்கு அதிசயமாகவும் ஆனந்த

மாகவும் இருக்கின்றது. ஸ்வாமீ, விவரமாய்க் கூறுங்கள்.

வாமதேவர்:—வத்ஸர்களே! பகவானைப் பார்த்து ஜீவன் பின்வருமாறு கூறுகின்றது. "பரந்தாமா! நான் எத்தனையோ பிறவி எடுத்து துன்புற்றேனே. இது போதாதா? மேலும் இந்த அவலப்பிறப்பு தேவையா? இது ஒழிய அருளவேண்டும். எத்தனையோ விதமான யோனிகளில் ஆயிரக்கணக்கான ஜன்மங்களை அடைந்தேனே. பிறவிகளைக் கணக்கெடுத்தால் எனக்கு அன்னை எத்தனை, அப்பன் எத்தனை, மனைவி மக்கள் சுற்றம் எத்தனை, ஐயோ நினைக்கவே பயமா யிருக்கின்றதே. இந்த ஜடரத்தில் வாஸம் ஏன் ஏற்படுகின்றது? நான் செய்த குற்றம் என்ன? ஆமாம் இதுவெல்லாம் என் பாபத்தின் பலன்களே யாகும். வினை விதைத்தேன் இப்போது வினையை அறுக்கிறேன். குடும்ப நிர்வாகத்தின் பொருட்டு செல்வம் சேர்த்து பாசவலையில் சிக்கி பரிதவித்தேனே அன்றி பகவானே! உன் பாதாரவிந்தத்தை என்றுவது நினைத்தேனா? இல்லையே! ஸாதுக்களிடம் சென்று வணங்கி நல்லுரைகளைக் கேட்டேனா? இல்லவே இல்லை. ஒரு நொடிப் பொழுதேனும் தவப்பொழுதாய்க் கழித்தேனா? இல்லையே. எனக்கு இந்த தண்டனை வேண்டியது தான். இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும். தங்களுடைய நிர்ஹேதுக கிருபையால் இப்போதாவது பூர்வ ஜன்ம வாஸனைகளும் பாபங்களும் தெரிந்துகொண்டேன். இனிமேல் இவ்வாறு நடக்க மாட்டேன். புண்ணிய பாபங்களை உணர்ந்து கொண்டேன். நூற்றுக்கணக்கான இரும்புக் கோட்டைகள் போல் இந்த ஜன்மங்கள் என்னை அழுத்திக் கொண்டிருக்கின்றன. அவைகளிலிருந்து எனக்கு விடுதலை அளிக்கவேண்டும். பரம்பொருளே! உம்மை சரண் அடைந்தேன். இப்போது நான் ஒரு உயர்ந்த ஸங்கல்பம் செய்து கொள்கிறேன். இந்த சமயத்தில், கர்பத்திலிருந்து விடுபட்டு, பூமியில்

பிறந்தவுடன் நல்ல புத்தியுடன் நல்வாழ்வு வாழத் தீர்மானித்துவிட்டேன். வேதங்களில் சொல்லியபடி வாழ்க்கை நடத்துவேன். பிராணனை நேசிப்பதுபோல் பகவானை நேசிப்பேன். பக்தி செய்வேன். ஞானம் அடைந்த பெரியோர்களை அண்டி சுசுரூஷை செய்து ஆசியைப்பெறுவேன். அகண்டாகாரமாகிய பிரம்மத்தில் லயமடைவேன்.''

ஆசுவலாயனர் :—ஜீவன் பிறந்தபின் என்ன செய்கின்றது? ஸங்கல்பப்படி ஏதாவது நடக்கின்றதா!

வாமதேவர் :—பிரசவ சமயம் வந்தவுடன் பகவான் மறைந்து விடுகின்றார். விஷ்ணுமாயை வந்து சூழ்ந்து கொள்கின்றது. அதன் வாயுவால் உந்தப்பட்டு முன் பிறப்புக்களையும் புண்ணிய பாப கர்மங்களையும் மறந்து வெளியே வந்து விழுகின்றது அந்த அப்பாவி ஜீவன். பகவானின் தர்சனம் மட்டும் கனவு போல் நினைவில் திரையிட க்வ! க்வ! (எங்கே? எங்கே?) என்று கூவிக்கொண்டு பிறக்கின்றது. இதுவே ஜீவனின் இரண்டாவது அவஸ்தையாகும்.

ஐதரேயர்:— பூஜ்யரே, தத்ரூபமாக வர்ணித்தீர்கள் பண்டிதருக்கும் பாமரருக்கும் விளங்கும்படி இருக்கிறது தங்கள் விரிவுரை. மிகவும் மகிழ்ச்சி. குழந்தைகளே! பாடம் முக்கியமானது. கொஞ்சம் புரிவதற்கு கஷ்டமானதுங்கூட ஆகையினால் இதுவரை படித்ததை சுருக்கிக் கூறுங்கள். அதற்குமேல் பிரம்மஞானி உபதேசம் செய்வார் சரிதானே!

வாமதேவர் :— ஆமாம் தாங்கள் சொல்வது ரொம்பவும் சரி. அகலமாகப் படிப்பதைவிட ஆழமாகப் படிப்பதே மேல். வத்ஸா ஆசுவலாயனா, சுருங்கக் கூறுவாய்.

ஆசுவலாயனர் :— குருநாதரே! தெரிந்தமட்டில் கூறுகின்றேன். ஸம்ஸாரத்தில் ஜீவன் பல ஜன்மங்களை எடுத்து உழல்வதைப்பற்றி விரிவாக எடுத்துரைத்தீர்கள்.

அஹங்காரம் கொண்ட ஜீவன் எப்படி தகப்பனிட மிருந்து விந்து வடிவாய் தாயின் உதரத்தில் புகுகின்றது என்பது பற்றியும் கூறினீர்கள். பிறகு தாயின் உடலி லிருந்து உலகத்தில் ஜனிப்பது பற்றியும் விவரித்தீர்கள்.

ஸத்யாயனர்:—ஸ்வாமி! கடைசியில் இரண்டாவது ஜன்மம் எடுக்கும் முன் கர்பத்திலிருக்கும்போது நடக்கும் நாடகக் காட்சியையும் ஓவியமாகத் தீட்டினீர்கள். அற்புதமான விஷயங்களைப்பற்றி அமிருதமயமான உபதேசங்கள் கேட்டோம். தன்யர்களானோம்.

வாமதேவர்:— இத்துடன் இன்றைய பாடத்தை நிறுத்திக்கொள்ளுவோம். நாளை ஜீவனின் மூன்றாவது ஜன்மத்தைப்பற்றி விரிவாகக் கூறுகின்றேன்.

(திரை விழுகிறது)

காட்சி 3

(திரை விலக)

[மஹிதாஸ ஐதரேயரின் ஆசிரமத்தின் வெளிப்புறம் ஒரு வட விருக்ஷத்தினடியில் புலித்தோல் ஆஸனத்தில் வாமதேவர் அமர்ந்திருக்கிறார். அருகில் மான் தோல் ஆஸனத்தில் ஐதரேயர் உட்கார்ந்திருக்கிறார். இருவர் மருங்கிலும் சீடர்கள் உட்கார்ந்திருக்கின்றனர். உரையாடல் நடக்கிறது.]

ஐதரேயர்:— பூஜ்யரே! தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகிறோம். குழந்தைகள் வதனத்தைப் பார்த்தீர் களா? எவ்வளவு ஆவலாக இருக்கின்றார்கள்.!

வாமதேவர்:— இன்று ஜீவனின் மூன்றாவது பிறவியைப்பற்றிக் கூறுகின்றேன். வத்ஸர்களே, கவனமாகக் கேளுங்கள்.

सोऽस्यायमात्मा पुण्येभ्यः कर्मभ्यः प्रतिधीयते । अथास्याय-मितर आत्मा कृतकृत्यो वयोगतः प्रैति । स इतः प्रयन्नेव पुनर्जायते तदस्य तृतीयं जन्म ॥

ஸோऽஸ்யாயம் ஆத்மா புண்யேப்ய: கர்மப்ய: ப்ரதிதீயதே। அதாஸ்யாயமிதர ஆத்மா க்ருதக்ருத்யோ வயோகத: ப்ரைதி। ஸ இத: ப்ரயந்நேவ புநர் ஜாயதே ததஸ்ய த்ருதீயம் ஜன்ம ॥

தாயின் கர்ப்பத்திலிருந்து வெளியே வந்த புத்திராத்மா, தன் பிதாவிற்கு புண்ணிய கர்மாக்களைச் செய்ய பிரதிநிதியாகின்றது. அதாவது பிதாவுக்குப் பதிலாக புண்ணிய கர்மாக்களை செய்கின்றது. அப்பொழுது பிதாவினுடைய உடலிலுள்ள ஆத்மா வயோதிகத்தை அடைந்து கிருதகிருத்யனாக, செய்ய வேண்டியதை எல்லாம் செய்துவிட்டோம் என்ற திருப்தியோடு இறந்து போகின்றது. அப்படி தேகத்தை விட்டவன், கர்ம வசப்பட்டு வேறொரு தேகத்தை அடைகின்றது. இதுவே ஜீவனுடைய மூன்றாவது ஜன்மம். அஃதாவது மூன்றாவது அவஸ்தையாகும்.

ஐதரேயர் :— குழந்தைகளே! ஆத்மாவின் மூன்று பிறப்புகளையும் நன்கு புரிந்துகொண்டீர்களா? ஏதாவது ஸந்தேகம் இருந்தால் கேளுங்கள்.

ஸத்யாயனர்:— குருமார்களே, எல்லாம் நன்றாக தெரிந்துகொண்டோம். ஜீவன் தந்தையிடமிருந்து தாயின் கருவில் விந்துவாய் புகுவது முதல் ஜன்மம். பிறகு தாயிடமிருந்து உலகில் பிறப்பது இரண்டாவது ஜன்மம். இவ்வுலகைவிட்டு அதாவது இறந்துபோய், தந்தை வேறு பிறவியையடைவது மூன்றாவது ஜன்மம். இவ்வாறு ஜீவன் மீண்டும் மீண்டும் பிறந்து அல்லற் படுகின்றது.

ஆசுவலாயனர் :— இரண்டாவதாக பிறவி எடுத்த புத்திராத்மா மரணமடைந்து எடுக்கும் மறுபிறப்பை மூன்றாவது ஜன்மமாகக் கூறாமல், வயோதிகனான பிதா மரணமடைந்து எடுக்கும் மறு ஜன்மத்தை மூன்றாவது பிறவியாகக் கூறுவானேன்?

வாமதேவர் :-குழந்தாய், ஸாதுவான கேள்வி. உன் புத்திக்கு மெச்சுகிறேன். பிதாவும் புத்திரனும் ஒரே ஆத்மா தானே. அந்த புத்திராத்மாவும் தன் தந்தையைப் போலவே தனது மகனிடம் பாரத்தை ஒப்புவித்து விட்டு, இங்கேயிருந்து போய் வேறுடலில் புகத்தானே போகிருன். ஆகவே மூன்ருவது ஜன்மம் இரண்டு பேருக்கும் பொது. ஒன்றிற்கு சொன்னுல் அது மற்றென்றிற்கும் பொருந்தும். தவிரவும் பிதாவினுடைய விந்துவாக பிதாவே தாயுடலில் புகுவது முதல் பிறப்பாகவும், அது வெளியில் வருவது இரண்டாவது பிறவியாகவும் கூறப்பட்டது. அதை அனுசரித்து அந்த பிதாவினுடைய மறு பிறப்பை மூன்ருவது ஜன்மமாக தொடர்ந்து கூறப்பட்டது. இரண்டும் பொருத்தமே ஏனென்ருல் பிதாவும் புத்திரனும் ஏக ரூபம் தானே ''ஆத்மா வை புத்ரநாமாஸி''

ஆசுவலாயனர்:—ஸ்வாமி, ஸந்தேகம் நீங்கி விட்டது. தொடர்ந்து உபதேசிக்க வேண்டுகின்றேன்.

வாமதேவர்:-வத்ஸர்களே! நண்பரே! உங்களுக்கு உபதேசித்ததும் நான் கிருதகிருத்யனுகி விட்டேன். இதுவே எனது கடைசி உபதேசம். ஸரஸ்வதீ நதீ தீரத்தில் மகரிஷி பைலர் வித்வத் பரிஷத் ஒன்று நடத்தப் போகிருர். அடுத்த சுக்ல தசமியில் அது அவருடைய தலைமையில் ஆரம்பமாகிறது. குலபதி பைலர் தலைமையில் நடக்கும் பரிஷத்தில் கலந்து கொள்ள, பைங்கி, காவஷேயர் பிரம்மரிஷிகள் வருகை தருகின்ருர்கள். தாங்களும் கட்டாயம் சீடர்களை அழைத்துக் கொண்டு போகவேண்டும். மஹாவாக்யம் பற்றி சர்ச்சைகள் நடக்கும்.

ஐதரேயர் :— பூஜ்யரே, இன்னும் சில தினங்கள் இங்கே தங்கிவிட்டு எல்லோருமாக பரிஷத்துக்குப் போவோம். நம் சீடர்கள் போகிற வழியில் வேண்டிய சௌகர்யங்கள் செய்து தருவார்கள். சுச்ரூஷையும் நம் மனம்போல் செய்வார்கள். சேர்ந்தே போவோமே.

வாமதேவர் :— நண்பரே, நான் அங்கேபோவதாக உத்தேசமில்லை ஏதோ ஒரு சக்தியினல் தூண்டப்பட்டு உங்களுக்குத் தகவல் கொடுக்கவே இங்கு வந்தேன். வத்ஸர்களுக்கு தெரிந்ததை உபதேசித்தேன். நான் கிருதகிருத்யனுகி விட்டதாக தோன்றுகின்றது. ''வந்த வேலை முடிந்து விட்டது. போய்விடு. போய்விடு'' என்று என் மனதிற்குள் ஏதோ ஒன்று சொல்கின்றது. ஆகவே நான் விடைபெற்றுக் கொள்கிறேன் மங்களானி பவந்து. எல்லோருக்கும் ஆசீர்வாதம். கடாகாசம் மகாகாசத்தில் ஒன்ற வேண்டியதே போகிறேன் — ஆம் — வருகிறேன்

ஐதரேயர் :—பூஜ்யரே, தாங்கள் பிரிவதாகச் சொல்வதைக் கேட்க மிகவும் துயரமுண்டாகிறது. பிரம்ம ஞானியின் முன்னுல் துயரப்படுவது அசட்டுத்தனமல்லவா! கஷ்டத்துடன் மிகுந்த சிரமப்பட்டு கண்ணீரை அடக்கிக்கொள்கிறேன். பகவத் ஸங்கல்பம் அவ்வாருயின் என்னுல் என்ன செய்யமுடியும்? போய் வாருங்கள். குழந்தைகளே, பிரம்ம ஞானி வாமதேவருக்கு வணக்கம் செலுத்துங்கள்.

(சிஷ்யர்கள் எழுந்து அபிவாதயே சொல்லி ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கின்ருர்கள். வாமதேவர் ஆசீர்வதிக்கின்ருர். பிறகு ஐதரேயரும் வாமதேவரும் பரஸ்பரம் வணக்கம் செலுத்தி முகமன் கூறி விடைப்பெற்றுக்கொள்ளுகின்றனர். வாமதேவர் போகிருர். மற்றவர்கள் சிறிது தூரம் கூடச்சென்று விட்டு திரும்ப வந்து உட்காருகின்றனர்.)

ஐதரேயர் :—வத்ஸர்களே, பூஜ்யராகிய வாமதேவர் போய்விட்டார். அமரராக அகண்டாகார வெளியில் கலந்து விட்டார். அவருடைய பெருமையை அளவிட்டுக் கூற முடியாது. வேதங்களிலேயே அவர் புகழ் பேசப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட சிறந்த பிரம்ம ஞானி இங்கு எழுந்தருளி உபதேசம் செய்தது பாக்கியமே யாகும். எல்லாம் பூதேவியின் அனுக்கிரகம் தான்.

ஆசுவலாயனர் :— குருநாதரே! பிரம்மஞானியின் பெருமை பற்றிச் ச்ருதியில் என்ன கூறப்பட்டிருக்கிறது? விவரமாகக் கூறவேண்டுகிறேன்.

ஸத்யாயனர் :—ஸ்வாமீ, நானும் கேட்க ஆசைப் படுகின்றேன். கிருபை புரிய வேண்டும்.

ஐதரேயர் :—வத்ஸர்களே, கூறுகின்றேன் கேளுங்கள்.

तदुक्तमृषिणा-गर्भे नु सन्नन्वेषामवेदमहं देवानां जनिमानि विश्वा । शतं मा पुर आयसीररक्षन्नधः श्येनो जवसा निरदीयमिति । गर्भ एवैतच्छयानो वामदेव एवमुवाच ॥

ததுக்தம் ருஷிணு—கர்ப்பே நு ஸந்நன்வேஷாம் அவேதமஹம் தேவாநாம் ஜநிமானி விச்வா। சதம் மா புர ஆயஸீரரக்ஷன் அத: ச்யேநோ ஜவஸா நிரதீயமிதி। கர்ப்ப ஏவ ஏதத் சயாநோ வாமதேவ ஏவமுவாச ॥

வேதத்தில் மந்திரம் கூறுவதாவது — கர்ப்பத்தில் சயனித்திருக்கையிலேயே ரிஷி வாமதேவர் இதைக் கூறினர். அதாவது "தாயின் கருவிலிருக்கும்போதே நான் அக்னி, வாக் முதலிய தேவர்களின் ஜன்மங்கள் அனைத்தையும் அறிந்துகொண்டேன். நூற்றுக்கணக்கான இரும்புக் கோட்டைகள் என்னை அடக்கி ரக்ஷித்தன. வலையை அறுத்துக்கொண்டு கிளம்பும் பருந்துபோல் நான் வேகமாக வெளிக் கிளம்பி விட்டேன்" இப்படியாக பிரம்மஞானி கூறியதாக வேதமந்திரம் இருக்கின்றது.

ஆசுவலாயனர் :—இரும்புக் கோட்டைகள் என்றால் என்ன? புரியவில்லை ஸ்வாமீ.

ஸத்யாயனர் :—வாக் அக்னி முதலிய தேவர்களின் ஜன்மங்கள் பற்றியும் விவரம் கூறவேண்டும் ஐயனே.

ஐதரேயர் :— ஸௌம்யர்களே! கேளுங்கள். இரும்புக் கோட்டைகள் என்பது ஜீவன் மாறி மாறி எடுக்கின்ற சரீரங்களைக் குறிக்கும் இந்த பிறவிகளை விட்டுவிடுவது லேசான காரியமல்லவே. ஆகவே, அவைகள் தகர்க்க முடியாத இரும்புக் கோட்டைகளாக உருவகப் படுத்திக் கூறப்பட்டது. ஞானமடைந்து விடுதலை பெறவிடாமல் இந்த சரீரங்கள் தானே தடையாக இருக்கின்றன. ஞானம் வந்தவுடன் பக்ஷி ராஜனை பருந்து தான் விழுந்த வலையை அறுத்துக் கொண்டு வெளியில் தப்பி ஓடுவது போல், வாம தேவரும் தத்வ ஞானத்தினுலுண்டான ஸாமர்த்தியத் தினுல் ஸம்ஸாரத்தை பிளந்துகொண்டு போய்விட்டார்.

அக்னி வாக் முதலான தேவ ஜன்மங்களைப் பற்றி நான் முன்னமேயே பிரபஞ்ச சிருஷ்டியைப் பற்றிக் கூறும்போது விவரித்திருக்கிறேன்.

ஆசுவலாயனர் :— கருவிலேயே திருவுடைய வாமதேவர் ஆத்மஞானமடைந்த வரலாற்றைக்கேட்டு மிகவும் மகிழ்ச்சியுற்ருேம். அப்படிப்பட்ட மகானை தர்சித்து உபதேசம் பெற்றது தங்களுடைய ஆசீர்வாதத் தின் பயனேயாகும்

ஐதரேயர் :— ஸத்யாயனு, இன்று படித்ததை சுருக்கிக் கூறுவாய்.

ஸத்யாயனர் :— ஸ்வாமீ! பிரம்மஞானி வாமதேவர் ஜீவனின் மூன்ருவது பிறப்பைப்பற்றி விவரமாக எடுத் துரைத்தார்கள். கர்ப்பத்திலிருக்கும்போது இந்த ஜன் மங்களையெல்லாம் சிந்தித்துப் பார்த்து வாமதேவர் ஞானம் எய்தினர். "வலையை அறுத்துக்கொண்டு பறக்கும் பருந்துபோல் ஸம்ஸாரவலையை பேதித்துக் கொண்டு வெளிக்கிளம்பிவிட்டேன்" என்று பெருமிதத் தோடு வாமதேவர் ஜனனியின் ஜடரத்தில் சயனித்த வாறே கூறினர். என்னே அவரது பிரம்மஞானம்! வாமதேவரைப்போல் எல்லோரும் ஆத்மஞானமடைந்து உய்யவேண்டும்.

ஆசுவலாயனர் :— ஐயனே, நாங்களும் வாம தேவரைப்போல் ஞானமடைய ஆசீர்வதியுங்கள்.

ஐதரேயர்:— ஸௌம்யர்களே, எனது ஆசி உங்களுக்குப் பூர்ணமாக இருக்கிறது. நாம் எல்லோரும் ஸரஸ்வதி நதிக்கரையில் நடைபெறும் பரிஷத்துக்கு அவசியம் போகவேண்டும். வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அதிக நாட்கள் இல்லை. மிகவும் நெருங்கிவிட்டது.

ஆசுவலாயனர் :—மேலும் வாமதேவரைப்பற்றி அறிந்துகொள்ள எனது உள்ளம் ஆவலுடன் துடிக் கின்றது. தயவுபண்ணவேண்டும். ஐயனே

ஐதரேயர் :— स एवं विद्वानस्माच्छरीरभेदादूर्ध्वं उत्क्रम्या-मुष्मिन्स्वर्गे लोके सर्वान्कामानाप्त्वाऽमृतः समभवत्समभवत् ॥

ஸ ஏவம் வித்வான் அஸ்மாத் சரீரபேதாதூர்த்வம் உத்க்ரம்ய அமுஷ்மின் ஸ்வர்க்கே லோகே ஸர்வான் காமாநாப்த்வா அம்ருத: ஸமபவத் ஸமபவத் ॥

இவ்விதம் ஞானமடைந்த வாமதேவர் எல்லா விருப்பங்களின் பூர்த்தியும் அடைந்து நம்மை விட்டுப் பிரிந்துபோன உடனே சரீர பந்தத்தை உடைத் தெறிந்துவிட்டு உயர் நிலை சென்று பரமாத்மாவுடன் ஒன்ருகக் கலந்து ஆத்ம உலகில் அழியாத அமிருதமய மான பதவியை அடைந்தார்.

ஸத்யாயனர் :—எனக்கு ரொம்பவும் மனவருத்தமா யிருக்கின்றது. நமக்கு உபதேசம் செய்தபின் அவர் உடலைத் தியாகம் செய்துவிட்டாரா? கடைசியாக அவர் செய்த உபதேசம் நமக்குத்தாஞ ?

ஆசுவலாயனர் :— இதில் வருந்துவதற்கு ஒன்று மில்லை. பிரியும்போது அவர் சூசகமாகக் கூறவில்லையா! நமது குருநாதரும் வரப்போவதை அறிந்துதானே விடைகொடுத்தார்கள்,

ஐதரேயர் :—குழந்தாய் ஆசுவலாயனு நீ கூறுவது சரியே. போகும்போது பிரம்மஞானி வாமதேவர் மேல் நடக்கப்போவதைப் பற்றி கூடமாகச் சொல்லிவிட்டுத் தான் சென்ருர். ஞானமில்லாதவர்கள் இறந்தால் மறுபடியும் பிறவியெடுத்து அல்லற்படுவார்கள். ஞானியான வாமதேவர் எல்லாக் கர்மங்களும் நிறைவேறி விட்டதால் சரீரத்தைவிட்டுக் கிளம்பி பிறவிகளையே உதறித் தள்ளிவிட்டு ஸ்வர்க்கத்தில் பிறப்பற்ற அமிருத நிலையெய்தினுர்.

ஆசுவலாயனர் :— ஞானி எதற்கு ஸ்வர்க்கத்துக்கு போகவேண்டும்? ஸ்வர்க்க சுகமும் தடைகள் தானே. நரகம் இரும்பு விலங்கு என்ருல் ஸ்வர்க்கம் பொன் விலங்கு, இவ்வளவு தானே வித்தியாசம்.

ஐதரேயர்:-ஸ்வர்க்கம் என்ருல் ஸ்வர்க்கலோகமல்ல. ஸ்வபிரகாசமான லோகம். அந்த லோகத்தில் பிறப்பு இல்லை, மரணமில்லை, உள்ளும் புறமுமில்லை, பயமில்லை, அக்ஞானமில்லை, பேதமில்லை, ஆதியும் அந்தமுமில்லை. அங்கே ஒரே பிரகாசம் தான் அதுதான் ஞானமாகிய ஒளி. அங்கே சென்று தீபம் போல் பேரொளியில் கலந்தார் வாமதேவர். அவரது ஆத்மா தனது ஸ்வரூபமான பரமாத்மாவிடம் லயித்து அமிர்தமாயிற்று.

ஸத்யாயனர் :— எல்லா விருப்பங்களும் பூர்த்தியாயிற்று என்ருல் என்ன அர்த்தம்.

ஐதரேயர் :—முன்னமேயே கருவிலேயே ஞானமடைந்ததால் எல்லா காமங்களும் பூர்த்தியாகிவிட்டன அதாவது விருப்பங்களே இல்லையென்று பொருள் கொள்ளலாம். ஆசை தானே பிறப்புக்கு வித்து. அது அழிந்தவுடன் ஞானுக்கினியில் விருப்பம் என்னும் வித்து வறுபட்டவுடன் ஜன்மம் ஒழிந்தது. வறுத்த விதை முளைக்காதல்லவா? ஆத்மஞானத்தை அவர் அடைந்தார். பிரம்மஞானமடைந்து பிரம்மமாகவே

ஆனுர். பலனும் அவரே, உதாரணமும் அவரே அதற்காகவே அழியாத பதவியை அடைந்தார் என்று இரண்டு தடவை ச்ருதி சொல்லித் தலைக்கட்டுகிறது. இத்துடன் இன்று நிறுத்திக்கொள்வோம்.

(எல்லோரும் சாந்தி பாடம் சொல்கின்றனர்)

(திரை விழுகிறது)

மூன்ருவது அங்கம்

காட்சி 1

(திரை விலக)

[ஸரஸ்வதி நதிதீரத்தில் மகரிஷி குலபதி பைலருடைய ஆசிரமம் தென்படுகிறது. அங்கு வித்வத் ஸபை கூடியிருக்கிறது. ஸபையின் அத்யக்ஷராக மகரிஷி பைலர் வீற்றிருக்கின்ருர். அவருக்கு எதிரில் ஐதரேயர், பைங்கி, காவஷேயர் முதலிய ரிஷிகள் சிஷ்யர்களுடன் அமர்ந்திருக்கின்றனர். சாந்தி பாடம் சொன்ன பிறகு பரிஷத்தில் விவாதம் தொடங்குகிறது.]

மகரிஷி பைலர் :— மகரிஷிகளே, மஹநீயர்களே, நமஸ்காரம். மாணவர்களே, சிஷ்யர்களே, ஆசீர்வாதம்; எல்லோருக்கும் ஸ்வாகதம் உங்கள் வரவு நல்வரவாகுக. இந்த மஹத்தான ஸதஸ்ஸுக்கு பிரம்மரிஷி, கருவிலே திருவுடைய வாமதேவர் வந்து தலைமை தாங்குவார் என்று எண்ணியிருந்தோம். ஆனுல் அது கைகூட வில்லை. வாமதேவர் அமரராகி பிரம்மத்தில் லயமடைந்தது உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும் அவருடைய மறைவினுல் இந்த பரிஷத்துக்கு ஏற்பட்ட நஷ்டம் ஈடு செய்ய முடியாதது. என்ன செய்வது? அவர் இல்லாததால் இந்த ஸபைக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு அடியேனுக்கு ஏற்பட்டிருக்கின்றது. யோக்கியதையும் படிப்பும் அதிகமில்லாத எனக்கு இந்த கௌரவமான ஸ்தானத்தை நீங்கள் எல்லோரும்

சேர்ந்து ஒரே மனதாக அளித்திருக்கின்றீர்கள். தொடர்ந்து நடத்தும் சக்தியும் எனக்கு உண்டாகும்படி ஆசீர்வதித்து ஒத்துழைப்பையும் தர வேண்டுகின்றேன். மீண்டும் ஒருமுறை எல்லோரையும் வினயத்துடன் வரவேற்கிறேன்.

பைங்கி :—நண்பர் பைலருக்கும் மற்ற ரிஷிகளுக்கும் வணக்கம். நாம் இப்போது இங்கே முக்கியமான விஷயங்களைப் பற்றி சர்ச்சை செய்யக் கூடியிருக்கின்றோம். வாமதேவர் போன்ற ஞானிகளால் பிரகாசமாக்கப்பட்ட பிரம்மவித்யை பற்றி விசாரம் செய்ய இந்த பரிஷத் கூட்டப்பட்டிருக்கிறதல்லவா. ஆகவே முமுக்ஷுக்களான நாம் அமைதியாகவும், தலைவருடைய ஆஞ்ஞைகளுக்குக் கட்டுப்பட்டும் நடக்கவேண்டுமென்று நண்பர்களை பிரார்த்திக்கின்றேன். நமஸ்காரம்.

காவஷேயர் :—சகோதரர்களே ! நண்பர் பைங்கி சொல்வதை நானும் ஆமோதிக்கின்றேன். பரிஷத் நல்ல முறையில் நடந்து சிறப்பான முடிவுகளை எடுப்பதற்கு சாந்தமான சூழ் நிலையில் விருப்பு வெறுப்பு இன்றி விவாதங்கள் நிகழவேண்டும். ச்ருதிக்குப் புறம்பான வாதங்களை ஒருவரும் பேசமாட்டார்களென்று நினைக்கின்றேன்.

ஐதரேயர் :—மகரிஷிகளே ! வணக்கம். விவாதங்களில் கலந்துகொள்ள மாணவர்களுக்கும் சிஷ்யர்களுக்கும் உரிமையுண்டு என்று எண்ணுகின்றேன்.

பைலர் :— தாராளமாக உண்டு. ஆனால் ஒருவர் பின் ஒருவராக அமைதியாய் சந்தேகங்களைக் கேட்கலாம். தகுதியுடையவர்கள் விவாதங்களிலும் பங்கு கொள்ளலாம். தடையொன்றுமில்லை.

பைங்கி :-அத்யக்ஷரே, சிறுவர்களைப் பேசவிட்டால் கூட்டத்தில் குழப்பம் வந்துவிடுமென்று அஞ்சுகின்றேன்.

பைலர் :—நண்பரே, ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். இந்த பரிஷத்திற்கு பிரம்மரிஷி வாமதேவர் தோன்ருத்துணையாக இருந்து நடத்தித் தருவார்கள். அமைதிக்கு பங்கம் விளையாது. மாணவர்களுடைய உரிமையைப் பறித்தால்தான் கேடுவிளையும். இனிமேல் விவாதத்தைத் தொடங்கலாம். பகவான் ஐதரேயரை வாதம் தொடங்க அழைக்கின்றேன்.

ஐதரேயர் :—தலைவர் அவர்களே, உத்தரவுப்படி தொடங்குகிறேன்.

कोऽयमात्मेति वयमुपास्महे ।

கோZயமாத்மேதி வயமுபாஸ்மஹே I

ஆசுவலாயனர் :—(எழுந்து எல்லோருக்கும் வணக்கம் செலுத்தி) மாணவர்களுக்குப் புரியும்பொருட்டு உடனுக்குடன் விரிவான பொருளும் கூறவேண்டுகின்றேன்.

ஐதரேயர் :—வத்ஸர்களே, அப்படியே கூறுகின்றேன். (அயம் ஆத்மா) இது ஆத்மா என்று நாம் எதை உபாசிக்கின்ருேமோ அது எவ்வகைத்து? அதன் லக்ஷணங்கள் என்ன? அதனை எப்படி அறிவது?

பைங்கி :—**कतरः स आत्मा, येन वा पश्यति, येन वा शृणोति, येन वा गन्धानाजिघ्रति, येन वा वाचं व्याकरोति, येन वा स्वादु चास्वादु च विजानाति ॥**

கதர: ஸ ஆத்மா, யேந வா பச்யதி, யேந வா ச்ருணோதி, யேந வா கந்தாநாஜிக்ரதி, யேந வா வாசம் வ்யாகரோதி, யேந வா ஸ்வாது சாஸ்வாது ச விஜாநாதி I

எதனுல் உருவத்தை பார்க்கிருேமோ? எதனுல் ஓசையைக் கேட்கிருேமோ? எதனுல் வாசனையை முகர்கிருேமோ? எதனுல் வார்த்தையைப் பேசு

கிருேமோ? எதனுல் (ருசியை) இனிப்பையும், கசப்பை யும், உணர்கிருேமோ, அதுவா ஆத்மா?

காவஷேயர்:— நண்பர் கேட்பது இதுதானே! அதாவது சரீரத்தில் செய்கைக் கருவிகளாக இருப்பது ஆத்மாவா? அல்லது செய்பவனுகயிருப்பது ஆத்மாவா?

பைலர்:— நண்பர் காவஷேயரின் வசனம் ஸாதுவானது. அதற்கு விடைகூறி மேல் பிரவர்த்திக்க வேண்டுமென இந்த பரிஷத்தைக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஐதரேயர்:— தலைவரவர்களின் ஆக்ஞையின்படி விளக்கம் கூறுகின்றேன். நண்பருடைய கேள்வி என்ன? நாம் எவரை ஸாக்ஷாத்தாக ஆத்மாவென்று உபாஸிக்க வேண்டுமோ அவர் யார்? செய்கைக் கருவிகள், செய்பவர் இருவருக்குள் எவர் ஆத்மா? இதுதானே!

பைங்கி:— ஆம் எந்த ஆத்மாவை உபாஸித்து மஹாஞானி வாமதேவர் அமரத்வம் அடைந்தாரோ அதே ஆத்மாவை உபாஸிக்கவே நாம் இங்கு கூடியிருக்கின்ருேம். நாம் விஷயங்களை சந்தேகமில்லாமல் அலசித் தெரிந்துகொள்ளவேண்டும் சர்ச்சையே முக்கியம்.

ஐதரேயர்:—இந்த சரீரத்தில் இரண்டு வஸ்துக்கள் உபலப்தமாக இருக்கின்றன. ஒன்று இந்திரியங்கள் அவைகளே கருவிகள். மற்ருென்று கர்த்தா. இந்திரியக் கிராமங்களை அதாவது புலன்களை உபயோகித்து விஷயங்களை அறியும் கர்த்தா. இதில் எது ஆத்மா? என்பது கேள்வி. கருவிகளாக இருப்பது ஆத்மாவாக முடியுமா? முடியாது. சரீரத்திலிருக்கும் இரண்டாவது வஸ்து, அதாவது கர்த்தா—புருஷன்—அவர் எப்படி புலன்களால் விஷயங்களை அறிகின்ருர் என்ருல், கண்களால் உருவங்களைப் பார்க்கின்ருர் செவிகளால் சப்தங்களைக் கேட்கின்ருர். க்ராணேந்திரியத்தால் கந்தங்களை

முகர்கின்ருர். வாக் இந்திரியத்தால் பசு-குதிரை முதலிய நாமாக்களைச் சொல்லுகின்ருர் ; ரஸனேந்திரியத்தால் இது கெட்ட சுவை, இது நல்ல சுவை என்று அறிகின்ருர். அவர் யார் ?

यदेतत् हृदयं मनश्चैतत् ।

யதேதத் ஹிருதயம் மநஸ்சைதத் ।

ஹிருதயமெனப்படுவதும் மனது எனப்படுவதும் அந்த ஆத்மாதாஞ? ஹிருதயம் மனம் என்று உரைக்கப் படும் இவ்விரண்டு கரணங்களின் சேர்க்கை பிராணன் என்று சொல்லப்படும். இந்தக் கரண ஸம்ஹதியானது நாம் உபாஸிக்கவேண்டிய ஆத்மாவாகுமா ?

பைலர் :— ஆகாது. இந்திரியங்களும் ஆத்மாவல்ல புத்தியும் மனமும் ஆத்மாவல்ல. மற்று எது ஆத்மா ? தொடர்ந்து விவாதிக்கும்படி நண்பர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். மனம் என்ருல் என்ன ? ஹிருதயம் என்ருல் என்ன ?

ஐதரேயர் :— தீர்மானம் செய்யும் புத்தி ஹிருதய மாகும். ஸங்கல்ப விகல்பங்களைச் செய்வது மனம். இரண்டும் ஒன்றுதான் இந்த அந்தக்கரணமென்ற ஒரே கருவிதான் பல உருவங்கள் எடுக்கிறது. இதுவேதான் அந்தந்த இந்திரியங்கள் ரூபமாக பார்க்கிறது, கேட் கிறது, முகர்கிறது, உச்சரிக்கின்றது, சுவைக்கின்றது. ஸங்கல்பம் செய்கின்றது, நிச்சயம் செய்கின்றது.

காவஷேயர் :— ஆம். நண்பர் சொல்வது சரியே ப்ரக்ஞையால் வாகிந்திரியத்தில் ஏறிக்கொண்டு எல்லா நாமங்களையும் அது கேட்கிறது. ப்ரக்ஞையின் மூலம் சக்ஷுரிந்திரியத்தில் ஆரூடம் செய்து எல்லா ரூபங்களை யும் பார்க்கின்றது. மற்ற இந்திரியங்களிலும் அப்படியே. ப்ரக்ஞை ஏருவிட்டால் இந்திரியங்கள் இருந்தும் பிரயோஜனமில்லை. கேட்கவோ, பார்க்கவோ முகரவோ சுவைக்கவோ முடியாது.

பைலர் :—ஆமாம். புலன்களால் ஒன்றும் அறிய முடியாது. வேறு ச்ருதிகளும் அப்படியே கூறுகின்றன.

பைங்கி :—ஆம் தலைவர் அவர்களே ! மனதாலேயே கேட்கின்றது மனதாலேயே காண்கின்றது இத்தியாதி. ஆகவே, மனம்—இதயம் என்ற சப்தங்களால் குறிக்கப் படும் அந்தக்கரணத்தின் மூலமாகவே எல்லாம் நடக் கின்றன என்று அறிந்துகொண்டோம். பிராணன் என்றும் அதைச் சொல்லுவார்கள் அப்படித்தானே !

பைலர் :—ஆம் பிராணனே இந்திரியங்களின் ஸங்காதமாகும். இந்திரியங்களின் கூட்டமோ அல்லது மனது—இதயம் என்ற அந்தக்கரணமோ ஆத்மா வாகுமா ? சொல்லுங்கள். பார்க்கலாம். நண்பரே.

பைங்கி :—ஆகாது எல்லாம் அந்தக்கரணத்தின் பல உருவங்களேயாகும் ஆகவே இந்திரியங்களோ பிராணனோ, அந்தக்கரணமோ எப்படி ஆத்மாவாக முடியும் ? மேலும் தொடர்ந்து விசாரணை செய்ய வேண்டியதே.

ஐதரேயர் :— இந்த ஹ்ருதய-மனோ ரூபமான கரணத்தைக்கொண்டு எவன் உபலப்தியை அடை கின்றானோ அவன்தான் ஆத்மா ! இந்திரியங்களையும் அந்தக் கரணத்தையும் எவன் ஆட்டி வைக்கின்றானோ அவனே ஆத்மா அவனைத்தான் நாம் உபாஸிக்க வேண்டும். அந்த ஆத்மாவின் ப்ரகாசத்தைக்கொண்டு தான் இந்திரியங்களும் மனமும் விஷயங்களை பிரகாசப் படுத்துகின்றன.

பைலர் :- நாம் உம்முடைய முடிவை ஒப்புக்கொள்ளும் முன்னர், அவனை அறிய உபயோகப்படுகின்ற அந்தக் கரண விருத்திகளாயிருக்கின்ற கலைகளைப்பற்றிய ச்ருதி வாக்யங்களைக் கூறவேண்டுகின்றோம்.

ஐதரேயர் :— பாஹ்யமாகவும் ஆந்தரமாகவும் இருக்கும் விருத்திகளைப்பற்றிக் கூறுகின்றேன். சிஷ்யர் களே, கவனமாய்க்கேளுங்கள்,

संज्ञानमाज्ञानं विज्ञानं प्रज्ञानं मेधा दृष्टिर्धृतिर्मतिर्मनीषा जूतिः स्मृतिः संकल्पः क्रतुरसुः कामो वश इति सर्वाण्येवैतानि प्रज्ञानस्य नामधेयानि भवन्ति ॥

ஸம்ஜ்ஞானம் ஆஜ்ஞாநம் விஜ்ஞானம் ப்ரஜ்ஞானம் மேதா த்ருஷ்டிர் திருதிர் மதிர் மநீஷா ஜூதி: ஸ்ம்ருதி: ஸங்கல்ப: க்ரதுரஸு: காமோ வச இதி ஸர்வாண்யேவ ஏதாநி ப்ரஜ்ஞானஸ்ய நாமதேயாநி பவந்தி ।

ஸம்ஜ்ஞாநம் ஆஜ்ஞாநம் விஜ்ஞாநம் ப்ரஜ்ஞாநம் மேதா த்ருஷ்டிர் த்ருதிர் மதிர் மநீஷா ஜூதி: ஸ்ம்ருதி: ஸங்கல்ப: க்ரதுரஸு: காமோ வச இதி ஸர்வாண்யேவ ஏதாநி ப்ரஜ்ஞாநஸ்ய நாமதேயாநி பவந்தி ।

ஸம்ஜ்ஞானம், ஆஜ்ஞானம், விஜ்ஞானம், ப்ரஜ்ஞானம், மேதை, திருஷ்டி த்ருதி, மதி, மனீஷா, ஜூதி, ஸ்ம்ருதி, ஸங்கல்பம், க்ரது, அஸு, காமம், வசம் என்ற இவையெல்லாம் ப்ரஜ்ஞானத்தின் வெவ்வேறு பெயர்களேயாகின்றன, பதினாறு பெயர்கள்.

ஸத்யாயனர் :— ஸம்ஜ்ஞானம், ஆஜ்ஞானம், விஜ்ஞானம், ப்ரஜ்ஞானம் என்ருல் என்ன? விரிவாக விளக்கம் தேவை.

ஐதரேயர் :— ஸம்ஜ்ஞானம் என்ருல் உணர்வு சேதனபாவம் இந்த அறிவு உள்ளதை சேதனம் என்றும் இந்த அறிவு இல்லாததை ஜடம் என்றும் சொல்கிருேம் ஆஜ்ஞானம் என்ருல் ஆள்வது ஈசுவர பாவம். விஜ்ஞானம் என்ருல் கலைகளின் ஞானம் அதாவது லௌகிகஞானம் ப்ரஜ்ஞானம் என்ருல் அந்தந்த சமயத்திற்குத் தக்கபடி மனதில் தோன்றும் ப்ரதிபை.

ஆசுவலாயனர் :—மற்ற விருத்திகளின் பெயர்களுக்கும் பொருள் கூறவேண்டும். ஸ்வாமீ !

ஐதரேயர் :—ஸௌம்யா, கேள். மேதை என்ருல் அறிவின் கூர்மை. படித்ததை மறவாத ஸாமர்த்தியம்,

இந்திரியங்கள் மூலமாக எல்லாவற்றையும் அறிவது திருஷ்டியாகும் த்ருதி — தைரியம்—மனோதிடம். மதி என்றால் மனனசக்தி சிந்திப்பது மனீஷா என்றால் நிச்சய புத்தி மனம் தனக்கு அடங்கி வேலை செய்வது ஜூதி என்பது அதற்கு எதிரிடை மனக்கலக்கம் மனசுக்கு ரோகங்களால் வரும் துக்காவஸ்தையாகும். ஸ்ம்ருதி என்பது ஞாபகம் ஸங்கல்பம் என்றால் சிறந்ததாக எண்ணுதல் க்ரது என்றால் தீர்மானம் அஸு என்பது ஜீவித்துக்கொண்டிருக்க முயற்சி செய்ய எண்ணம். காமம் ஆசை அதாவது கிட்டாததில் ஆசை வைத்தல். வசம் – விஷயங்களில் கவர்ச்சி — ஸ்த்ரீ முதலியவர் களிடத்தில் இச்சை. இவைகளெல்லாம் பிரக்ஞானத்தின் (ஆத்மாவின்) பெயர்கள் ஆகும்.

காவஷேயர் :—சுத்த பிரஜ்ஞானமாக இருப்பதே பிரம்மம். அப்பிரம்மத்துக்கு மேற்கூறப்பட்ட அந்தக் கரணவிருத்திகள் நாமதேயங்கள். அதாவது உபாதி களாக இருக்கின்றன. இந்த உபாதிகளுடன் சேரும் போது நாமரூபாத்மகமான பிரம்மமாகிறது. சரிதானே தலைவரே.

பைலர் :— ஆம் பதினாறு கலைகளுடன் சித்தாகாசத் தில் பிரகாசிப்பவனே ஆத்மா பதினாறுகலைகளின் பெயர்களே ஸம்ஜ்ஞானம் முதல் வசம் வரை கூறப் படுகின்றன.

ஸத்யாயனர் :— குருமார்களே எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. கண்ணைக்கட்டி காட்டில் விட்டதுபோல் இருக்கின்றது. புரியவைக்கவேண்டும் ஸ்வாமி! வணங்கிக்கேட்கிறேன்

ஐதரேயர் :— ஸௌம்யா! ஆசுவலாயனா! உனக்குமா ஒன்றும் புரியவில்லை?

ஆசுவலாயனர் :— குருநாதரே, அடியேனுக்கும் ஏதோ கொஞ்சம் தெரிவதுபோல் இருக்கிறது இலை மறைவு காய் மறைவு என்று சொல்வார்களே அதுபோல,

உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்க தயவு பண்ண வேண்டும்.

பைலர்:– நண்பர்களே! ஸபையோர்களே! கேட்ட விஷயங்களைப் பற்றி நன்ருகச் சிந்திக்க-விசாரணை செய்ய-அவகாசம்வேண்டும். இத்துடன் ஸதஸ்ஸு கலைகின்றது. எல்லோரும் குறிப்பாக மாணவர்கள் நன்ருகச் சிந்தித்து-மனனம் செய்துகொண்டு வரவேண்டும். இதுவரை சபையை அமைதியாக நடத்தியதற்கு எல்லோருக்கும் நன்றி. நம: ஸதஸே!

(எல்லோரும் எழுந்து போகின்ருர்கள்)

(திரை விழுகிறது)

காட்சி 2

(திரை விலக)

[முன் காட்சியைப்போல் மகரிஷிகளும் சிஷ்யர்களும் அமர்ந்து உரையாடிக்கொண்டிருக்கின்றனர்.

பைலர்:— வேத வியுத்பன்னர்களே! முமுக்ஷுக்களே பிரம்மஜிக்ஞாஸுக்களே ஸ்வாகதம். இந்த பரிஷத்தில் கூடியுள்ள நாம் தத்வவிசாரணையில் முக்யமான கட்டத்திற்கு வந்திருக்கின்ருேம். அநித்ய மான ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு, கடைத்தேற பிரம்மஞானம் பெறவேண்டும். படிப்பதால்மட்டும் பிரயோஜனமில்லை. ‘கற்கக் கசடறக் கற்ற பின் நிற்க அதற்குத்தக’ என்றபடி கற்றபடி ஒழுகவேண்டும். இன்றுவரை நடந்த சர்ச்சைகளெல்லாம் பூர்வபக்ஷங் களாகவே இருக்கின்றன. இன்றுதான் நாம் ஸித்தாந்தம் செய்யவேண்டும்.

பைங்கி:— ஆமாம். தலைவரே! இன்றுதான் ஒரு தீர்மானம் பண்ணவேண்டும். முடிவு எடுக்கவேண்டும். அதுவும் ஏகமனதாக அபிப்ராய வித்தியாசமில்லாமல் இருக்கவேண்டும்.

காவஷேயர் :— பிரம்மஞானிகளே பிராமணோத்தமர்களே! ருக்வேத மஹாவாக்கியமான "प्रज्ञानं ब्रह्म" (ப்ரக்ஞாநம் ப்ரஹ்ம) என்னும் மஹாமந்த்ரம் பற்றி இன்று விவாதம் நடக்குமல்லவா?

பைலர் :— ஆம் நண்பரே, விவாதம் தொடங்கும்படி பகவான் ஐதரேயரை அன்புடன் அழைக்கின்றேன்.

ஐதரேயர் :—தலைவர் அவர்களே, தங்கள் ஆணையை சிரஸா வகித்து வாதம் தொடங்குகின்றேன். ஆனால்—

பைலர் :— நண்பரே, என்ன! ஆனால்!

ஐதரேயர் :— அப்படி முக்கியமான சமாசாரம் ஒன்றுமில்லை. ஸௌம்யன் ஆசுவலாயனன்கூட நன்றாக விளங்கவில்லையென்று கூறினனல்லவா அவைகளை விளக்கமாகக் கூறிவிட்டு மேல் விவாதம் தொடங்கலாம் என்று நினைத்தேன் அவ்வளவுதான்.

பைலர் :—விவாதம் தொடர்ந்து நடக்கட்டும் விளக்கவுரை கடைசியில் சொல்லிக்கொள்ளலாம்.

ஐதரேயர் :—தலைவர் அவர்கள் உத்தரவுப்படி

एष ब्रह्मैष इन्द्र एष प्रजापतिरेते सर्वे देवा इमानि च पञ्च महाभूतानि पृथिवी वायुराकाश आपो ज्योतींषीत्येतानीमानि च क्षुद्रमिश्राणीव ॥

ஏஷ ப்ரஹ்மைஷ இந்த்ர ஏஷ ப்ரஜாபதிரேதே ஸர்வே தேவதா இமாநி ச பஞ்ச மஹாபூதானி ப்ருதிவீ வாயுராகாச ஆபோ ஜ்யோதீம்ஷீத்யேதாநி இமாநி ச க்ஷுத்ர மிச்ராணீவ ||

இதுவே பிரம்மம். இதுவே இந்திரன். இதுவே பிரஜாபதி. தேவர்களெல்லாரும் இதுவே. நிலம், காற்று, ஆகாயம் நீர் நெருப்பு என்ற பஞ்சமஹாபூதங்களும் இதுவே அற்பமான பலவகை ஜந்துக்களும் இதுவே.

காவஷேயர் :— நண்பரின் கூற்று போற்றற்குரியதே இத்தகைய பிரக்ஞானரூபமாக இருப்பதே பிரம்மம். இவ்விதமான பிரம்மம் எல்லாச் சரீரங்களிலும் புகுந்து அந்தக்கரணமாகிற உபாதிகளிற் சேர்ந்து ஒவ்வொரு பிராணியிடத்தும் வெவ்வேருகக் காணப்படுகின்றது.

பைலர் :— ஆம் பலஜலாசயங்களில் ஒரே ஸூரியன் பல ஸூர்யபிம்பங்களாகத்தோன்றுவதுபோல் பிரம்மமும் பலவாகக் காணப்படுகின்றது.

பைங்கி: — ஆம் தலைவரே! இவரே அபரப்ரஹ்மம் அதாவது ஹிரண்யகர்ப்பர், இவரே இந்திரன் அதாவது இதந்திரன், இதைக்கண்டேன் என்று சொன்னவன், இவரே தேவராஜா, இவரே பிரஜாபதி அதாவது முதன் முதல் சரீரத்துடன் உண்டான விராட், இவரே அக்னி முதலான தேவர்கள். இவரே பிருதிவி முதலான பஞ்சபூதங்கள்

ஸத்யாயனர் :— எங்கள் குருநாதர் முன் உபதேசித்தது ஞாபகத்திற்கு வருகின்றது.

ஆசுவலாயனர் :— ஆம், எனக்கும் மனத்திரையில் அக்னி முதலிய தேவர்களின் உத்பத்தி மற்றும் விஷயங்கள் தென்படுகின்றன. நன்ருக நினைவுக்கு வருகின்றது.

பைலர் :— இவரே க்ஷுத்ர மிச்ரங்கள். அதாவது அற்பமான ஸர்ப்பாதி ஜந்துக்கள். முதுகெலும்பு இல்லாத பிராணிகள்.

ஐதரேயர் :— இதுமட்டுமா! மேலும் தொடர்ந்து கூறுகின்றேன்.

बीजानि इतराणि च इतराणि च अण्डजानि च जारुजानि च स्वेद्जानि चोद्भिज्जानि च अश्वा गावः पुरुषा हस्तिनो यत्किञ्चेदं प्राणि जङ्गमं च पतत्रि च यच्च स्थावरं सर्वं तत्प्रज्ञानेत्रं प्रज्ञाने प्रतिष्ठितम् ॥

பீஜாநி இதராணி ச இதராணி ச அண்டஜாநி ச ஜாருஜாநி ச ஸ்வேதஜாநி ச உத்பிஜ்ஜாநி ச அச்வா காவ: புருஷா ஹஸ்திநோ யத் கிஞ்சேதம் ப்ராணி ஜங்கமம் ச பதத்ரி ச யச்ச ஸ்தாவரம் ஸர்வம் தத் ப்ரஜ்ஞாநேத்ரம் ப்ரஜ்ஞாநே ப்ரதிஷ்டிதம்

வெவ்வேருகக் காணப்படும் எல்லா பீஜங்களும், அதாவது முட்டையில் உண்டாவன, கருப்பையில் வளர்வன, வியர்வையில் உண்டாவன, வித்திலிருந்து முளைப்பன; குதிரைகள், பசுக்கள், மனிதர்கள், யானைகள் மற்றும் பறக்கும் பக்ஷிகள் ஜங்கமம், ஸ்தாவரம் எல்லாம் பிரஜ்ஞையை நேத்ரமாக உடையது. பிரஜ்ஞானத்திலேயே நிலைபெற்றிருக்கின்றது.

ஸத்யாயனர் :— குருமார்களே, பிரஜ்ஞாநேத்ரம் என்ருல் பொருள் விளங்கவில்லையே ?

ஐதரேயர் :— குழந்தாய், கூறுகிறேன் விபரமாக. கவனமாய்க்கேள். நேத்திரம் என்ருல் நடத்துகிற நியந்தா என்று பொருள். அதாவது மேற்சொன்ன சிருஷ்டிகள் எல்லாம் ப்ரஜ்ஞையையே நேதாவாகக் கொண்டிருக்கின்றன. எல்லாம் அதிலேயே நிலை பெற்றும் இருக்கின்றன.

ஆசுவலாயனர் :— அப்படியா, மேலும் தொடர்ந்து உபதேசிக்கவேண்டுகிருேம் ஐயனே.

ஐதரேயர் :— प्रज्ञानेत्रो लोकः प्रज्ञा प्रतिष्ठा प्रज्ञानं ब्रह्म ॥

ப்ரஜ்ஞாநேத்ரோ லோக: ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டா ப்ரஜ்ஞாநம் ப்ரஹ்ம 1

உலகம் பிரஜ்ஞானத்தால் நடத்தப்படுகிறது. பிரஜ்ஞானத்தில் நிலைபெறுகிறது. ''பிரஜ்ஞானமே பிரம்மம்''

பைலர் :— '' பிரஜ்ஞானம் பிரஹ்ம '' என்றருக்வேத மஹாவாக்கியத்துக்கு விவரமாக, விளக்கமாக, உதாரணத்துடன் பொருள் கூறும்படி மஹரிஷிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

காவஷேயர் :— ஆம் விஷயம் ரொம்ப முக்யமானது. எல்லாருமே கலந்துகொண்டு அபிப்பிராயங்களைக் கூற வேண்டியது. எல்லா ஸ்தாவர ஜங்கமங்களும், எல்லாப் படைப்புக்களும் பிரக்ஜ்ஞையை நேத்ரமாக அல்லது நியந்தாவாக உடையன பிரஜ்ஞையே பிரம்மமாகும். எப்படியெனில் அதுவன்றி வேறு நியந்தாவில்லாததால். நியந்தா என்ருல் நயிப்பது-தலையாயிருப்பது உத்பத்தி, ஸ்திதி, லயம் என்ற மூன்று அவஸ்தைகளிலும் பிரஜ்ஞையிலேயே நிலை பெறுகின்றன. இதுபோல ஸகல லோகமும் பிரஜ்ஞையை ஆச்ரயமாக அடைகின்றன. ஆகவே அதுவே பிரம்மம்.

ஸத்யாயனர் :— மஹாவாக்கியம் என்ருல் என்ன?

பைலர் :- மோக்ஷத்திற்கு ஸாதனமான ஜீவப்ரஹ்மைக்ய ஞானத்தைத் தரும் வாக்யம் மஹாவாக்கியமாகும். இதனுல் ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை பெறலாம். மஹா வாக்கியம் ஒன்றிற்குத் தான் மோக்ஷ ஸாதனமான பிரம்ம ஞானத்தைத் தரும் சக்தியுண்டு. நண்பர்களே, தொடர்ந்து சித்தாந்தம் செய்வீர்களாக.

பைங்கி :- ஆகட்டும் தலைவர் அவர்களே, உபாதிகள் ஒன்றுமில்லாத, நித்யமான நிரஞ்ஜனமான நிர்மலமான, கிரியையில்லாத, சாந்தமான, ஒரேவஸ்து பிரம்மமாகும். அது ஒன்றைத் தவிர இரண்டாவது இல்லை. அதை அறிவது சுலபமல்ல. நேதி நேதி என்று எலலா விஷயங்களையும் வஸ்துக்களையும் நிராகரித்து விட்டு நாம் அதை அறிய முயலவேண்டும்.

ஆசுவலாயனர் :— ஸ்வாமீ! நேதி நேதி என்ருல் பொருள் என்ன?

பைங்கி :— இது அல்ல, இது அல்ல என்று ஒவ்வொரு வஸ்துவையும், பிரம்மத்தின் லக்ஷணங்கள் இல்லையென்று நீக்குவது.

ஸத்யாயனர் :— அப்படி விலக்கி விட்டு எஞ்சும் பொருள்தான் பிரம்மமா?

பைலர் :— அப்படியல்ல, எல்லாவற்றையும் நீக்குகின்றோம். விலக்குகின்றோம். அப்புறம் சப்த ஞானத்தால் அறியமுடியாதது என்று உணர்கின்றோம். ஏனெனில் அது ஸர்வபிரகாரமான அறிவிற்கும் விஷயமாகாதது. நம் அறிவிற்கு எட்டிவிட்டால் அது பிரம்மம் அல்ல. நேதி நேதி என்று தள்ளவேண்டியதே. எட்டி எட்டிப் பார்ப்பவர்க்கு எட்ட எட்ட நிற்கும் அது.

காவஷேயர் :— அந்த ப்ரஹ்மமே விசுத்தமான உபாதியுடன் சேரும்போது ஸர்வஜ்ஞுனை ஈசுவரனுகத் திகழ்கின்றது. அப்படி ஈசுவரனுக ஸகலத்தையும் ஆட்டிவைத்து அந்தர்யாமி என்ற பெயருடன் விளங்குகின்றது.

ஐதரேயர் :— அது மட்டுமா! விரிந்த ஜகத்தின் பீஜபூதமான ஸமஷ்டி புத்தியை உபாதியாகக்கொண்ட ஹிரண்யகர்ப்பனும் அதுவே. பிரம்மாண்டத்தின் உள்ளே எல்லாவற்றிற்கும் முதலில் உற்பவித்த சரீரியான விராட்பிரஜாபதியும் அதுவேயல்லவா!

பைலர் :— அவைகளிலிருந்து தோன்றிய அக்னி முதலிய தேவர்களும் அதுவே.

பைங்கி :— பிரம்மா முதல் சிறுபூச்சி பரியந்தமாக பலவிதமான சரீரங்களாகிய உபாதிகளுடன், பலரூபங்களையும், பலபெயர்களையும் பெற்று பின்னமாக காணப்படுவதும் அதுவே. ஆகவே அதை பலர் பலவிதமாகச் சொல்லுகின்றனர். ஒருவர் அக்னி என்று சொல்லுகின்ருர். மற்ருருவர் மனு என்று கூறுகின்ருர். இன்னொருவர் பிரஜாபதி என்றும், வேருருவர் இந்திரன் என்றும் உரைக்கின்ருர்கள். பிராணன் என்று சிலர் சொல்லுகின்றனர். பலர் ஸனுதன பிரம்மம் என்றும் சொல்லுகின்றனர். ஆம் அதுவே நாம் உபாஸிக்க வேண்டிய ஆத்மா.

ஐதரேயர் :— நமது விவாதம் நிறைவுபெறும் தருணத்துக்கு வந்து விட்டது. நாம் உபாஸிக்கவேண்டிய

ஆத்மா எது என்ற கேள்வியுடன் விவாதம் தொடங்கினோம். அதாவது ''कोऽयमात्मेति वयमुपास्महे'' என்று. பலவிதமான சர்ச்சைகள் செய்து प्रज्ञानं ब्रह्म என்ற முடிவுக்கு வந்திருக்கிருேம்.

காவஷேயர் :— இனி அத்யக்ஷரின் உபஸம்ஹார பிரசங்கம் நடக்கவேண்டும்.

ஐதரேயர் — அதற்குமுன் மாணவர்களின்—சீடர்களின் சந்தேகங்கள் நீக்கப்படவேண்டும்.

பைலர்: — ஆமாம் அப்படியே செய்வோம். சந்தேகங்களைக் கேட்கலாம். வத்ஸர்களே !

ஸத்யாயனர் :— உபதேசங்களின்-விவாதங்களின் விளக்கவுரை மட்டும் கூறினுல் போதும். தெரிந்து கொள்வோம்.

பைலர் :— ஸௌம்யர்களே, விளக்கம் கூறுகின்றேன். சுக துக்கங்களிலிருந்து அவைகளின் பற்றிலிருந்து விடுபடுவதுதான் முக்தி அல்லது மோக்ஷம் என்பது. இது உண்மை அறிவினுல் கைகூடும். உண்மை அறிவே பிரம்மம். மோக்ஷத்திற்குத் தடையாயிருப்பது அவித்யை அல்லது அக்ஞானம். எவனொருவன் பிரம்மத்தை நான்தான் என்று ஸாக்ஷாத்கரிக்கிருனோ அவன் வேறு கதியை அடைவதில்லை. பிரம்மத்தை அறிபவன் பிரம்மமாகவே ஆகிருன். தேவர்களாலும் பிரம்மத்தை அடையும் விஷயத்தில் அவனுக்குத் தடை செய்ய முடியாது. தேவதைகளுக்கும் அவனே ஆத்மாவாகிருன்.

ஆசுவலாயனர் :— வேறு கதியை அடைவதில்லை என்று சொன்னீர்களே. அந்தக் கருத்தையும் விளக்க வேண்டும்.

பைலர் :— வேறு கதியென்ருல் ஸ்வர்க்கம் முதலிய புண்ய லோகங்கள், நரகம் முதலிய பாப லோகங்கள், இகத்தில் வாழும் வாழ்க்கை எல்லாம் அந்த பதத்தில்

அடங்கும். பக்தியினாலும் கர்மத்தினாலும் கர்மத்தோடு சேர்ந்த ஞானத்தினாலும், ஞானத்தோடு சேர்ந்த கர்மத்தினாலும், கர்மம், ஞானம் இவைகளை சேர்த்து அனுஷ்டிப்பதாலும் இகபர ஸுகங்கள் கிடைக்கின்றன. ஆனால் முக்தி கிடைப்பதில்லை. மோக்ஷத்திற்கு கேவலம் ஞானம் மாத்திரமே வழி.

ஸத்யாயனர் :— உதாரணம் கூறும்படி வேண்டுகின்றேன்.

ஐதரேயர் :— ஞானம் வந்தாலொழிய அக்ஞானம் நீங்காது. அக்ஞானம் நீங்கினாலொழிய முக்தியில்லை. எப்படியென்றால், மாலை நேரத்தில் சுருண்டு கிடக்கும் கயிற்றைப் பாம்பாக நினைத்து பயந்துபோயிருக்கிறான். அச்சமயத்தில் விளக்கைக் கொண்டுவந்து அதன் உதவியால் நன்று உற்றுப்பார்த்து இது கயிறுதான் என்று தெரிந்துகொண்டுவிட்டால் அக்ஞானம் விலகும் உடன் பாம்பு என்ற பிரமமும் நீங்கி பயமும் விலகும் இதுபோல் ப்ரஹ்மத்தை அறியாததால் அதுவே பிரபஞ்சமாகத் தோன்றி பலவித ஸுக துக்கங்களை அனுபவிக்கிறோம். நானே ப்ரஹ்மம் என்ற ஞானம் ஒன்றினால்தான் அக்ஞானம் நீங்கி ஸம்ஸாரமும் விலகும். பஜனை ஜபம், யாகஹோமாதிகள் இவற்றைச் செய்வதால் அக்ஞானம் எப்படி விலகும்?

பைங்கி :— அதுவே கண்ணுக்குக்கண்ணாகவும், காதுக்குக் காதாகவும், மனதிற்கு மனதாகவும், வாக்குக்கு வாக்காகவும், பிராணனுக்குப் பிராணனாகவும் இருக்கின்றது. அது அறிந்த பொருள்களைவிட வேறு. அறியாத பொருள்களுக்கும் அப்பாற்பட்டது. அதுவே பிரம்மம்.

காவஷேயர் :— முன் விவரித்ததுபோல் "ஸம்ஜ்ஞானம் முதல் வசம்" வரை எல்லாம் பிரஜ்ஞானத்தின் பெயர்கள் அதாவது உபாதிகள். உண்மை அறிவு ஒளிவிடும் கரணங்கள் அந்த உண்மை அறிவே பிரம்மம். அதுவே ஆத்மா. அதுவே காண்பதும் கேட்பதும்

எல்லாம். காணும் உருவமும் அதுவே. காணுத அருவமும் அதுவே. இந்த எல்லா ஸம்ஸாரமும் அதிலேயே நிலைபெறுகின்றது. உலகத்தை உண்மை அறிவே நடத்துகிறது. பிரேரணை செய்வதும் அதுவே உலகின் ரூபநாமங்களும் அதுவே அறிவே ஆத்மா! உண்மை அறிவே பிரம்மம்.

ஆசுவலாயனர் :— ஐயன்மீர்! நமஸ்காரம். விளக்கவுரைக்கு நன்றி. சந்தேகமறத் தெரிந்து கொண்டோம்.

ஸத்யாயனர் :— குருமார்களே, வந்தனம். சந்தேகங்களெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் விலகிவிட்டன.

காவஷேயர் :— இனிமேல் அத்யக்ஷர் உபஸம்ஹாரம் செய்யவேண்டியதே.

ஐதரேயர் :— அதற்கு முன் கடைசி ருக்கைச் சொல்லி பொருள் கூறுகின்றேன்.

स एतेन प्रज्ञेनात्मना अस्माल्लोकादुत्क्रम्य अमुष्मिन् स्वर्गे लोके सर्वान् कामानाप्त्वाऽमृतः समभवत् समभवत् ॥

ஸ ஏதேந ப்ரஜ்ஞேநாத்மநா அஸ்மாத் லோகாத் உத்க்ரம்ய அமுஷ்மின் ஸ்வர்கே லோகே ஸர்வான் காமாநாப்த்வா அம்ருத: ஸமபவத் ஸமபவத் ||

அந்த வாமதேவர் இந்த ப்ரக்ஞான ரூபமான ப்ரஹ்மத்தை அறிந்து இந்த சரீரத்திலிருந்து கிளம்பி, அதாவது சரீராத்ம பாவத்தைத் துறந்து ஸர்வாத்ம பாவத்தை அடைந்து அடையவேண்டிய காமம் ஒன்றும் இல்லாததால் ஜீவன்முக்தி தசையில் ஆப்தகாமராக விளங்கி விதேஹ கைவல்யத்தில் அந்த ஸ்வர்க்க லோகத்தில் அதாவது ஆனந்தரூபமான பரப்ரஹ்ம ஸ்வரூபத்தில் நிலைத்துவிட்டார். வாமதேவர்போல் முயற்சி செய்து ப்ரஜ்ஞானப்ரஹ்மத்தை அறிபவர்

ஒவ்வொருவரும் அவர்போலவே ப்ரஹ்மாநந்த நிலையை அடையலாம்.

பைலர் :— நண்பர்களே, மிகவும் அழகாக, பண்டிதர்களுக்கும் பாமரர்களுக்கும் விளங்கும்படியாக விவாதங்களை நடத்தியதற்கு உங்கள் எல்லோரையும் வாழ்த்துகின்றேன். இந்த பரிஷத், பிரம்ம ஞானி கருவிலே திருவுடைய வாமதேவருக்கு ரொம்பவும் கடமைப்பட்டிருக்கின்றது. பரிஷத் நடத்தவேண்டுமென்று சொன்னவரும் அவரே. பகவான் ஐதரேயரையும் சிஷ்யர்களையும் இங்கு அனுப்பியவரும் அவரே. பகவான் வாமதேவருக்கு ஜயமுண்டாகட்டும் (எல்லோரும் சேர்ந்து மூன்று முறை ஜய ஜய கோஷங்கள் எழுப்புகின்றனர்) அடுத்தபடியாக ஐதரேயரும் மற்ற மகரிஷிகளும் விஜயம்செய்து விவாதங்களில் பங்கெடுத்துக்கொண்டு பெரும்பணி ஆற்றினுர்கள் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்கள் (ஜயகோஷம்) மாணவர்களுக்கும் சீடர்களுக்கும் எனது ஆசீர்வாதம்.

காவஷேயர் :— எங்ஙனம் பெருகியோடும் ஆறுகள் நாமரூபங்களையிழந்து ஸமுத்திரத்தில் கலந்து மறைகின்றனவோ அதுபோலவே ஆத்மஞானியும் நாமரூபங்களினின்று விடுபட்டு உயர்ந்த பிரம்மநிலையை அடைகின்ருன். இந்த பரிஷத்திற்குத் தலைமை தாங்கி, சிறந்த முறையில் நடத்தித்தந்த மஹரிஷி குலபதி பைலருக்கு எனது சொந்த நிலையிலும், இங்கு குழுமியிருக்கும் மஹான்கள் சார்பிலும் வந்தனங்களை வினயத்துடனும் அன்புடனும் தெரிவிக்கின்றேன்.

பைலர் :— நண்பர்களே, இப்போது இந்த மஹத்தான பரிஷத் நிறைவுபெறுகின்றது. ஓம் பிரம்மா முதல் பிரம்மவித்யா ஸம்பிரதாயத்தை அருளிச்செய்த வம்சரிஷிகளுக்கும், குருக்களுக்கும் நமஸ்காரம் வேதவியாசருக்கும் வாமதேவருக்கும் நமஸ்காரம் ஆதியில் பிரம்மாவைப் படைத்து, வேதங்களை உபதேசித்து, நமது புத்தியைத் தூண்டி பிரகாசிக்கச்செய்து, எல்லாப்

படைப்பிலும் புகுந்து நீக்கமற நின்று, அருளொடு விளங்கும் பரபிரம்மத்தை மோக்ஷத்தில் விருப்பமுடைய நாம் சரணமடைவோம். பரமரிஷிகளுக்கு நமஸ்காரம்.

மஹரிஷிகள் :- ஓம் ததாஸ்து அப்படியே ஆகட்டும் சரணமடைவோம். நமஸ்காரம் நமோ நம:

பைலர் :—எல்லோரும் சேர்ந்து சாந்தி பாடம் சொல்லுவோம்.

ओं वाङ्मे मनसि प्रतिष्ठिता। मनो मे वाचि प्रतिष्ठितम्। आविरावीर्म एधि। वेदस्य म आणीस्थः। श्रुतं मे मा प्रहासीः। अनेनाधीतेन। अहोरात्रान् संदधामि। ऋतं वदिष्यामि। सत्यं वदिष्यामि। तन्मामवतु। तद्वक्तारमवतु। अवतु माम्। अवतु वक्तारमवतु वक्तारम्।

ओं शान्तिः शान्तिः शान्तिः॥

வாங்மே மனஸி ப்ரதிஷ்டிதா I மநோ மே வாசி ப்ரதிஷ்டிதம் I ஆவிராவீர் ம ஏதி I வேதஸ்ய ம ஆணீஸ்த: I ச்ருதம் மே மா ப்ரஹாஸீ: I அநேநாதீதேன I அஹோராத்ரான் ஸந்ததாமி I ருதம் வதிஷ்யாமி I ஸத்யம் வதிஷ்யாமி I தன் மாமவது I தத் வக்தாரமவது II அவது மாம் I அவது வக்தாரமவது வக்தாரம் II

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: II

(எல்லோரும் எழுந்து அத்யக்ஷருக்கு வணக்கம்செய்து செல்கின்றனர்.)

(திரை விழுகிறது)

ஐதரேய உபநிஷத் நாடகம் முற்றிற்று.

Name of Hara encompass; World be Free from Sufferings
www.shaivam.org